Distr.: Restricted
செப்டம்பர் 16, 2015

**முதல் வரைவு**

**மனித உரிமைகள் பேரவை**

**முப்பதாவது அமர்வு**

நிகழ்ச்சிநிரல் விடயம் 2

**மனித உரிமைளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளரின் வருடாந்த அறிக்கை மற்றும் ஆணையாளர் அலுவலகம், செயலாளர் நாயகம் அலுவலகம் ஆகியவற்றின் அறிக்கைகள்**

# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான புலன் விசாரணை அறிக்கை (OISL)*** 

---

* பெற்றுக் கொண்ட விதத்தில் மீள உருவாக்கப்பட்டுள்ளது.

** இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்கள், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறுதல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துவது தொடர்பான மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும் (A/HRC/30/61).

-

## உள்ளடக்கம்


| | பந்திகள் | பக்கம் |
|---|---|---|
| **பாகம் 1** | | |
| I. அறிமுகம் | 1-13 | 5 |
| II. இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணை ஸ்தாபிக்கப்பட்டமை, அதன் ஆணைப்பத்திரம் மற்றும் முறைமையியல் | 14-46 | 9 |
| III. வரலாற்றுப்பின்புலம் | 47-103 | 19 |
| IV. அரசாங்கம், எல்ரீரீஈ இயக்கம் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்கள் தொடர்பான ஒரு பொதுநோக்கு | 104-170 | 37 |
| V. சட்ட ரீதியான சட்டகம் | 171-208 | 59 |
| **பாகம் 2 - தொனிப்பொருள் சார்ந்த அத்தியாயங்கள்** | | |
| VI. சட்டவிரோதமான கொலைகள் | 209–325 | 78 |
| VII. சுதந்திரம் பறிக்கப்பட்டமை தொடர்பான அத்துமீறல்கள் | 326–385 | 122 |
| VIII. ஆட்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் | 386–531 | 143 |
| IX சித்திரவதை மற்றும் ஏனைய குரூரமான, ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது இழிவுபடுத்தப்படும் விதத்தில் நடத்துதல் | 532–570 | 196 |
| X. பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை | 571–631 | 211 |
| XI. வயது வந்தவர்கள் கடத்தப்பட்டமை மற்றும் பலவந்தமான ஆட்சேர்ப்பு | 632–655 | 234 |
| XII. சிறுவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் போர் நடவடிக்கைகளில் அவர்கள் பயன்படுத்தப்பட்டமை | 656–727 | 242 |
| XIII. ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போதுபோர் நடவடிக்கைகள் பொதுமக்களின் மீதும் பொது வசதிகள் மீதும் எடுத்து வந்த தாக்கம் | 728-887 | 265 |
| XIV. நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் | 888–934 | 320 |
| XV. மனிதநேய நிவாரண உதவி மறுக்கப்பட்டமை | 935–1022 | 333 |
| XVI. மூடுண்ட முகாம்களில் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்களை வடிகட்டுதல் மற்றும் அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்டமை | 1023–1112 | 361 |
| **பாகம் 3** | | |
| XVII. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் புலன் விசாரணையின் முதன்மையான முடிவுகள் | 1113–1174 | 389 |
| XVIII. நீதி மற்றும் பொறுப்புக்கூறுதல் | 1175–1264 | 408 |
| XIX. முடிவுரைகள் மற்றும் பரிந்துரைகள் | 1265–1281 | 439 |
| **பின்னிணைப்புக்கள்** | | |
| குறிப்பு நியதிகள் | | 452 |
| சமர்ப்பணங்களுக்கான வேண்டுகோள் | | 458 |
| ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்த கடிதம் | | 460 |
| இலங்கையின் தேசப்படம் | | 465 |

# சொல்லகராதி

| | |
|---|---|
| ACF | Action Contre la Faim தொண்டு நிறுவனம் |
| AGA | உதவி அரசாங்க அதிபர் |
| CCHA | மனிதநேய உதவி தொடர்பான கலந்தாலோசனைக் கமிட்டி |
| CCP | குற்ற நடைமுறைக் கோவை |
| CDS | பாதுகாப்புப் படைகளின் பிரதானி |
| CFA | போர் நிறுத்த ஒப்பந்தம் |
| CGES | அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் |
| CID | குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் |
| CoI | விசாரணை ஆணைக்குழு |
| DIU | காணாமல் போனவர்கள் தொடர்பான புலன் விசாரணை அலகு |
| DMI | இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் |
| ENDLF | ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி |
| EPDP | ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி |
| EPRLF | ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி |
| EROS | ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பு |
| FDL | பாதுகாப்பு முன்னரங்க நிலை |
| GA | அரசாங்க அதிபர் |
| GoSL | இலங்கை அரசாங்கம் |
| HRC | மனித உரிமைகள் பேரவை |
| ICRC | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் |
| IDP | உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர் |
| IGP | பொலிஸ் மா அதிபர் |
| IIGEP | முதன்மை நபர்களின் சர்வதேச சுயாதீனக் குழு |
| ILO | சர்வதேச தொழில் தாபனம் |
| INGO | சர்வதேச அரசு சாரா அமைப்பு |
| IOM | குடியகல்வுக்கான சர்வதேச அமைப்பு |
| JOC | கூட்டுப் படைகளின் கட்டளைப் பீடம் |
| JOH | கூட்டுப் படைகளின் தலைமையகம் |
| JVP | மக்கள் விடுதலை முன்னணி |
| LLRC | கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ) |
| MOD | பாதுகாப்பு அமைச்சு |
| MRM | கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை |
| NFZ | யுத்த சூனிய வலயம் |
| NGO | அரசு சாரா அமைப்பு |
| NIB | தேசிய புலனாய்வுப் பணியகம் |
| OHCHR | மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் |
| PLOTE | தமிழீழ மக்கள் விடுதலை கழகம் |
| PTA | பயங்கரவாதத் தடைச் சட்டம் |
| PTK | புதுக்குடியிருப்பு |
| PTOMS | சுனாமிக்கு பிற்பட்ட முகாமைத்துவ கட்டமைப்பு |
| SFHQ | பாதுகாப்புப் படைத் தலைமையகம் |
| SLA | இலங்கை இராணுவம் |
| SLAF | இலங்கை விமானப்படை |
| SLMM | இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு |

-

| | |
|---|---|
| SLN | இலங்கை கடற்படை |
| SLP | இலங்கை பொலிஸ் |
| SRSG-CAAC | சிறுவர் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி |
| SSP | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் |
| STF | விசேட அதிரடிப்படை (பொலிஸ்) |
| TELO | தமிழீழ விடுதலை இயக்கம் |
| TID | பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு |
| TJ | நிலைமாற்றக் காலநீதி |
| TMVP | தமிழ் மக்கள் விடுலைப் புலிகள் |
| UAV | ஆளில்லா விமானம் |
| UNHCR | அகதிகளுக்கான ஐநா உயர்ஸ்தானிகர் |
| UNICEF | ஐநா சிறுவர் நிதியம் |
| UNOCHA | மனிதநேய விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐநா அலுவலகம் |
| UNRC/HC | ஐநா வதிவிட மற்றும் மனிதநேய ஒருங்கிணைப்பாளர் |
| UTHR | மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு |
| WFP | உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் |
| WS | சாட்சியின் வாக்குமூலம் |

# பாகம் 1

## I அறிமுகம்

1. மனித உரிமைகள் பேரவை 2014 மார்ச் மாதத்தில் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலம் "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் (LLRC)[1] கவனத்தில் எடுக்கப்பட்ட காலப்பிரிவின் போது, இலங்கையில் இரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பன தொடர்பாக மிகவும் விரிவான ஒரு புலனாய்வை மேற்கொண்டு, தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ளும் விதத்தில் குற்றச் செயல்களைப் புரிவதனை தவிர்த்துக் கொள்வதற்கும், பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் என நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அத்தகைய அத்துமீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பன தொடர்பான உண்மைகளையும், அவை நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் விசேட நடைமுறைகளை முன்னெடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்கள் ஆகியோரின் உதவியுடன் கண்டறியுமாறு" மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளர் அலுவலகத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

2. தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அதிகளவில் வெளிப்படுத்தப்பட்டு வந்த கரிசனைகளை அடுத்தே முழுமையான புலன்விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு வந்த கால கட்டத்தின் போது இலங்கை அரசாங்கத்தினாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினாலும் (எல்ரீரீஈ) நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் - போர்க் குற்றங்கள் மனித குலத்துக்கெதிரான குற்றச் செயல்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய – பரந்த அளவிலான கொடூரச் செயல்களைக் கையாள்வதற்கு நம்பகமான தேசிய பொறுப்புக் கூறும் செயன்முறை ஒன்று இல்லாதிருந்து வரும் விடயம் குறித்து இக்கரிசனைகள் எழுப்பப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், இப்புலனாய்வுக்கென வழங்கப்பட்டிருந்த ஆணைப்பத்திரம், போர் முடிவுற்ற கால கட்டத்துக்கு முன்னரும் பின்னரும் உள்ள காலப் பிரிவுகளை உள்ளடக்கும் விதத்தில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் 2011 ஆண்டு நவம்பர் மாதம் வரையிலான காலப் பிரிவினை உள்ளடக்கியிருந்தது.

3. மனித உரிமைகள் பேரவையின் இத்தீர்மானத்திற்கு வழிகோலிய இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நெருக்கடி அண்மைக் காலத்தில் தோன்றிய ஒரு நெருக்கடி அல்ல் மேலும், அது போரின் இறுதிக் கால கட்டத்துடன் மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு நெருக்கடியாகவும் இருந்து வரவில்லை. இந்த நெருக்கடி இலங்கை தொடர்பான சர்வதேச புலன் விசாரணை

[1] "2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி அமுலுக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்கு வழிகோலிய விடயங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பன குறித்தும், அதனையடுத்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 திகதி வரையில் இடம்பெற்ற நிகழ்வுகளின் ஒழுங்கு வரிசை குறித்தும் விசாரித்து அறிக்கையிடுவதற்கென" ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் 2010 ஆம் ஆண்டில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) ஸ்தாபிக்கப்பட்டது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை, நவம்பர் 2011. இந்த ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஜனாதிபதி அவர்களிடம் ஓர் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்ததுடன், அதன் இறுதி அறிக்கையை 2011 நவம்பர் மாதத்தில் சமர்ப்பித்தது.

ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த வருடங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாகவும் இருந்து வரவில்லை. இலங்கையின் அனைத்துச் சமூகங்களையும் பாதிக்கும் விதத்தில் பல தசாப்த காலமாக இடம்பெற்று வந்த மோதலின் விளைவாகத் தோன்றிய ஒரு நெருக்கடியாகவே இது இருந்து வருகின்றது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு உள்ளடக்கும் கால கட்டத்தின் துவக்கத்தைக் குறிக்கும். 2002 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம், பல வருட காலம் இடம்பெற்று வந்த ஆயுத மோதலினை அடுத்து ஓரளவுக்கு ஒரு அமைதிச் சூழலை அது எடுத்து வந்தது. ஆனால், அது சமாதானத்தை எடுத்து வரவில்லை; அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றின் போக்குகளுக்கு அது முற்றுப்புள்ளி வைக்கவுமில்லை. மேலும், இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் பாரபட்சம் காட்டுதல், பொருளாதார ரீதியில் புறமொதுக்கப்படுதல் மற்றும் நாசகரமான இனத்துவ அடிப்படையிலான அரசியல் போன்ற போருக்கான மூல காரணங்களையும் கவனத்தில் எடுத்திருக்கவில்லை.

4. இந்த அறிக்கை சட்டவிரோதமான கொலைகள், சுதந்திரத்தைப் பறிப்பதுடன் சம்பந்தப்பட்ட அத்துமீறல்கள், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல், சித்திரவதை, பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை, கடத்தல் மற்றும் வயது வந்தவர்களை பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் போர் நடவடிக்கைகளில் பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்து பயன்படுத்துதல் ஆகிய தொனிப்பொருள் சார்ந்த அத்தியாயங்களின் ஒரு தொடராக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து வரும் தொனிப்பொருள் அடிப்படையிலான அத்தியாயங்கள் போரின் இறுதிக் கால கட்டத்தின் போது போர் நடவடிக்கைகள் சாதாரண பொதுமக்கள் மீதும், பொதுச் சொத்துக்கள் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆவணப்படுத்துகின்றன. அதேபோல ஆட்களின் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் மனிதநேய உதவி மறுக்கப்பட்ட நிலை போன்றவற்றையும் அவை எடுத்துக் காட்டுகின்றன. அதன் பின்னர் அடுத்து வரும் ஒரு அத்தியாயம் இராணுவப் பாதுகாப்புடன் கூடிய மூடுண்ட முகாம்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கெடுபிடிப் பரிசோதனைகள் மற்றும் அவர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டமை போன்ற விடயங்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

5. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக்குழு மனித உரிமைகள் தொடர்பான புலன்விசாரணை ஒன்றையே நடத்தியது என்ற விடயத்தை இங்கு முக்கியமாக வலியுறுத்துதல் வேண்டும். குற்றவியல் புலனாய்வொன்றை அது நடத்தவில்லை. இப்புலன் விசாரணை கவனத்திலெடுத்த காலப்பிரிவு, அத்துமீறல்களின் அளவு, கிடைக்கக் கூடியதாகவிருந்து வந்த பாரிய அளவிலான தகவல்கள் மற்றும் இலங்கையை அணுகுவது தொடர்பான பிரச்சினை மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் புலனாய்வு எதிர்கொண்டு வந்த இடையூறுகள் பாரிய சவால்களை எடுத்து வந்திருந்தன. எவ்வாறிருந்தபோதிலும், இந்தப் புலன்விசாரணை அறிக்கை மோதலின் இறுதிக் கட்டங்களில் மட்டுமன்றி, இலங்கை தொடர்பான புலன் விசாரணை கவனத்தில் எடுக்கும் ஒட்டுமொத்த காலப் பிரிவின் போதும், அதற்கு முன்னரும் இடம்பெற்று வந்திருக்கும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பன தொடர்பான இடைவிடாத, பாரதூரமான அத்துமீறல்களின் போக்குகளை இனங்கண்டு கொள்வதற்கென ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளது.

6. இந்த நடத்தைப் போக்குகள் நீண்ட காலமாக இடம்பெற்று வந்திருந்த பாரிய அளவிலான சம்பவங்களை உள்ளடக்கியிருந்தன. அவற்றுக்கு வழமையாக கணிசமான அளவிலான வளங்கள், ஒருங்கிணைப்பு, திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்பு என்பன தேவையாக இருந்து வந்ததுடன், கட்டளை ஒழுங்கு வரிசைக் கட்டமைப்புக்குள்ளிருந்த பல்வேறு நபர்களினாலும் அவை இழைக்கப்பட்டிருந்தன. அத்தகைய முறைமைசார்ந்த செயல்கள் ஒரு நீதிமன்றத்தில்

நிரூபிக்கப்பட்டால், போர்க் குற்றங்களாக மற்றும் மனிதகுலத்துக்கெதிரான குற்றங்களாக கருதப்பட்டு, அக்குற்றச் செயல்களுக்கு தனிநபர்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலையை எடுத்து வர முடியும்.

7. இந்த அறிக்கையில் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் அத்துமீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பவற்றின் போக்குகள், இலங்கையில் இன்றுவரையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் பண்பினையும் கொண்டுள்ளன. அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் ஆகியோர் உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான தமது உரிமையை பிரயோகிப்பதை தடுத்து வந்திருக்கும் பொறுப்புக் கூறும் நிலை தொடர்பான பிரதான இடையூறுகளையும் இந்த அறிக்கை பகுப்பாய்வு செய்கின்றது.

8. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு அதன் பணியை ஆரம்பித்த பின்புலத்திலும் பார்க்க பெருமளவுக்கு வேறுபட்டதாக இருந்து வரும் பின்புலமொன்றில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. முதன்மைத் தகவல்களைச் சேகரிக்கும் கட்டத்தின் போது (ஆரம்பத்திலிருந்து டிசம்பர் 2014 வரையில்) புலன்விசாரணைக் குழுவுக்கு இலங்கையை அணுகக் கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. இலங்கை அரசாங்கம் இந்தப் புலன்விசாரணையை நிராகரித்ததுடன், இந்த அலுவலகம் தொழில்சார் தகைமையற்றது என்றும், பக்கச்சார்பு கொண்டது என்றும் குற்றஞ் சாட்டியது. அதேவேளையில், அரசாங்கம் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஏனையவர்களுக்கெதிராக பயமுறுத்துதல், துன்புறுத்துதல், கண்காணிப்பு, தடுத்துவைத்தல் மற்றும் ஏனைய அத்துமீறல்கள் என்பவற்றுடன் கூடியஒரு செயற்பாட்டை முன்னெடுத்தது. அது (எவரேனும் தரப்புக்கள்) இலங்கைக்கான புலன் விசாரணைக் குழுவுடன் - நேரடியாக அல்லது மறைமுகமாக - சம்பந்தப்படுவதை தெளிவாகவே தடுக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

9. 2015 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலையடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இந்தப் புலன்விசாரணையுடன் ஒத்துழைப்பது தொடர்பான நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை் புலனாய்வுக் குழுவை அது நாட்டுக்குள் அனுமதிக்கவுமில்லை. ஆனால், அந்த அரசாங்கம் ஆணையாளருடனும், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்துடனும் ஆக்கபூர்வமான விதத்தில் தொடர்புகளை மேற்கொண்டது. மேலும், மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக ஒரு சாதகமான தாக்கத்தை எடுத்து வந்திருந்த ஒரு சில மிக முக்கியமான வழிமுறைகளையும் அது மேற்கொண்டிருந்தது.

10. போரின் இறுதி மாதங்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறல்கள் மற்றும் பெருமளவுக்கு பரபரப்பை ஏற்படுத்தியிருந்த ஒரு சில சம்பவங்கள் என்பன தொடர்பாக பொறுப்புக் கூறும் நிலைக்கான தனது கடப்பாட்டினையும் புதிய அரசாங்கம் எடுத்துக்காட்டியிருந்தது. எவ்வாறிருப்பினும், இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் அத்துமீறல்கள் தொடர்பான போக்குகள் மற்றும் குற்றச்செயல்களை இழைத்திருப்பவர்கள் தொடர்ந்தும் தண்டனை விலக்குரிமையை அனுபவித்து வரும் நிலை என்பன, குறிப்பாக பாதுகாப்புப் படைகள் மற்றும் நீதித்துறை என்பன தொடர்பாக பாரியளவிலான சீர்திருத்தங்களை எடுத்து வர வேண்டிய தேவையை எடுத்துக்காட்டுகின்றன. அதேபோல, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயம் தொடர்பாக மிகப் பரவலான மாற்றங்களை எடுத்துவரும் விடயம் குறித்து ஒரே சீரான அரசியல் விருப்பு இருந்து வர வேண்டிய தேவையையும் அது சுட்டிக்காட்டுகின்றது.

11. 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலையடுத்து ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் மனித

-

உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் புதிய, நிலையான கலாசாரமொன்றை மலரச் செய்வதற்கென நிறுவனரீதியான சீர்திருத்தங்களை அறிமுகம் செய்துவைப்பதற்கான தனித்துவமான, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வாய்ப்பினைக் கொண்டுள்ளது. அந்தச் சீர்திருத்தங்கள் குற்றமிழைப்பவர்களுக்கு தற்பொழுது சாதகமாகவிருந்து வரும் சமநிலையை - ஒரு சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களை தண்டிக்கும் நிலையைக் கூட – மாற்றியமைக்க முடியும். அது ஒரு பாரிய பணியாக இருந்து வருவதுடன், அதற்கு அர்ப்பணிப்பு மட்டும் போதியதாக இருந்து வரவில்லை; நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பன தொடர்பாக இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் சர்வதேச ரீதியான உதவியும் அதற்குத் தேவைப்படுகின்றது.

12. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் "அனைவருக்கும் பொதுவான ஓர் எதிர்காலம் குறித்த ஒரு தூரநோக்கினை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டுக்கு ஒட்டுமொத்த சமுதாயமும் பங்களிக்க வேண்டிய தேவையிருந்து வருகின்றது" என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தது. சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் - பாதுகாப்புப் படையினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னைய ஆதரவாளர்களையும் உள்ளடக்கிய விதத்தில் - சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் இந்த அறிக்கையை, தமது அணுகுமுறைகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக – அதாவது, முற்றிலும் மறுக்கும் தற்போதைய உரையாடலை, நடந்ததை ஏற்றுக்கொள்ளும், ஆக்கபூர்வமான விதத்தில் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் உரையாடலாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக – நோக்க வேண்டுமென ஆணையாளர் அத்தரப்புக்களை வலுவாக ஊக்குவிக்கின்றார்.

13. இந்த அறிக்கையை மனித உரிமைகள் பேரவை, இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்கள் ஆகியோரிடம் சமர்ப்பிப்பதன் மூலம்,அது பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் அசலான செயன்முறை ஒன்றுக்கு ஆக்கபூர்வமான விதத்தில் பங்களிப்புச் செய்யுமென மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் நம்புகின்றது. அனைத்துக்கும் மேலாக, பெருந்தொகையான பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் ஆகியோரின் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகள் என்னபவற்றுக்கான உரிமைகள் நிறைவேற்றப்படுவதற்கு இறுதியில் அது பங்களிப்புச் செய்யும் என நம்பப்படுகின்றது. பேரதிர்ச்சிகளை அனுபவித்திருந்த நிலையிலும், அழுத்தங்கள் மற்றும் பயமுறுத்தல்கள் என்பவற்றுக்கு முகம் கொடுத்த நிலையிலும் கூட இந்தப் புலன் விசாரணைக்கு பங்களிப்புச் செய்தவர்களின் துணிச்சலுக்கு மனித உரிமை ஆணையாளர் தனது பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கின்றார். அவர்களுடைய வலுவான சாட்சியங்கள் மற்றும் இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவிடம் நேரடியாக சாட்சியமளிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காத பெருந்தொகையானோரின் சான்றுகள் என்பன, இந்த அறிக்கையின் பரிந்துரைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கத்தையும், சர்வதேச சமூகத்தையும் நிர்ப்பந்தித்தல் வேண்டும்.

## II. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான புலன்விசாரணையின் ஸ்தாபிதம்

14. மனித உரிமைகளுக்கான அப்போதைய ஆணையாளர் நவிபிள்ளை அவர்களினால் ஜெனீவாவில் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்ட விசேட புலன் விசாரணைக் குழு 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அதன் பணியை ஆரம்பித்தது.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட அதன் முதன்மை ஆளணியினர் ஆகஸ்ட் மாதம் நடுப்பகுதியளவில் முழுமையாக செயற்படத் தொடங்கியிருந்தார்கள். இந்தப் புலன் விசாரணை தொடர்பான குறிப்பு நியதிகள் (பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது) 2014 ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்தன. அது கால எல்லை, முறைமையியல், நிரூபணம் தொடர்பான தர நியமங்கள் மற்றும் புலன் விசாரணையின் ஏனைய முக்கியமான அம்சங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டியிருந்தது.

15. மேலும், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி திரு. மார்ட்டி அத்திசாரி, நியூசிலாந்தின் முன்னைய உயர் நீதிமன்ற நீதிபதி டேம் சில்வியா காட்றைட் மற்றும் பாகிஸ்தான மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் தலைவர் திருமதி அஸ்மா ஜெஹாங்கிர் ஆகிய தலைசிறந்த நிபுணர்களிடம் (இதனகத்துப் பின்னர் “நிபுணர்கள்” என அழைக்கப்படுவார்கள்) இந்தப் புலன் விசாரணைக்கு ஆதரவளித்து, ஆலோசனை வழங்கும் ஒரு பாத்திரத்தை வகிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். புலன்விசாரணைக் குழு 2014 செப்டெம்பர் 2015 ஜனவரி மற்றும் ஜீன் ஆகிய மாதங்களில் இந்த நிபுணர் குழுவைச் சந்தித்ததுடன், விசாரணை முழுவதிலும் அவர்களுடனான கிரமமான தொடர்புகளையும் பராமரித்து வந்தது.

16. மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் ஆணைப்பத்திரத்தை வைத்திருப்பவர்களும் இதற்கு உதவுவதற்கென தீர்மானம் 25/1 இன் பிரகாரம் அழைக்கப்பட்டதுடன், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்கென அது ஒரு சிறிய கமிட்டியை நியமனம் செய்தது. அந்தக் கமிட்டி முதலில் 2014 செப்டெம்பர் மாதத்தில் புலன்விசாரணைக் குழுவைச் சந்தித்தது. விசேட நடைமுறைகள் கமிட்டியினால் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் வழங்கப்பட்ட ஆவணங்கள், முன்னைய அரசாங்கங்கள் இது தொடர்பாக போதியளவில் ஒத்துழைப்பு வழங்காத விடயத்தை எடுத்துக்காட்டியிருந்தன. முறைப்பாடுகளுக்கு போதியளவில் எதிர்வினையாற்றுவதற்கு மீண்டும் மீண்டும் தவறியமை, சர்வதேச ஒப்பந்தங்களின் செல்லுபடியாகும் தன்மைக்கு சவால் விடுத்தமை மற்றும் பயணங்களுக்கான பல வேண்டுகோள்களை தாமதப்படுத்தியமை அல்லது அவற்றை கண்டு கொள்ளாதிருந்தமை என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. 2015 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற அரசாங்க மாற்றத்தையடுத்து உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமை தொடர்பான உத்தரவாதங்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்கான விசேட அறிக்கையாளர் 2015 மார்ச் மாதத்தில் இலங்கைக்கான ஒரு தொழில்நுட்ப விஜயத்தை மேற்கொண்டார். அதனையடுத்து, பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் அல்லது தமது விருப்பத்துக்கு மாறான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான செயல் குழுவின் (WGEID) நீண்ட காலமாக தாமதப்படுத்தப்பட்டிருந்த இலங்கை விஜயத்துக்கென இப்பொழுது திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்படும் காலப்பிரிவின் போது ஆணைப்பத்திரதாரர்களின் பணிகள் தொடர்பாக இந்த அறிக்கை முழுவதிலும் குறிப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## ஆணைப்பத்திரம்

17. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக்குழு அதற்கான ஆணைப்பத்திரத்தை மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 25/1 லிருந்து பெற்றுக்கொள்கின்றது. அந்த ஆணைப்பத்திரம் ‘‘கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுகவனத்தில் எடுத்த காலப்பிரிவின் போது இலங்கையில் இருதரப்பினராலும் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமைகள் தொடர்பான பாரதுாரமான மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பாகவும்,

-

சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாகவும் விரிவான புலன் விசாரணை ஒன்றை நடத்துமாறும், தண்டனையிலிருந்து தப்பிக் கொள்வதனை தவிர்க்கும் பொருட்டும், பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் விசேட நடைமுறைகள் ஆணைப்பத்திரதாரர்கள் ஆகியோரின் உதவியுடன், அத்தகைய உரிமை மீறல்கள் மற்றும் குற்றச்செயல்கள் என்பன தொடர்பான உண்மைகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் கண்டறியுமாறும்'' மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்திடம் கேட்டுக் கொண்டிருந்தது.

18. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு "இரு தரப்பினர்கள்" என்ற பதத்தைஇலங்கை அரசாங்கம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் (எல்ரீரீஈ) என வரைவிலக்கணம் செய்துள்ளது. உத்தியோகபூர்வமான பாதுகாப்புப் படைகளுடன் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அவை கொண்டிருந்த தொடர்பின் பின்னணியில் துணைப்படைக் குழுக்களும் இந்தப் புலன் விசாரணையின் ஆணைப்பத்திரத்துக்குள் வருவதாகக் கருதப்பட்டது.

19. இந்தப் புலன் விசாரணை கவனத்திலெடுக்கும் காலப்பிரிவு தொடர்பாக தீர்மானம் 25/1, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் உள்ளடக்கப்பட்ட காலப்பிரிவினைக் குறிப்பிட்டுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடக்கத்தில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி வரையிலான காலப்பிரிவை உள்ளடக்கியிருந்தது. எவ்வாறிருப்பினும், அந்த ஆணைக்குழுவின் அறிக்கை இலங்கை ஜனாதிபதிக்கு 2011 நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2011 அக்டோபர் வரையிலான தகவல்களை அது உள்ளடக்கியிருந்தது. எனவே, இந்த அறிக்கையும், ஒரே சீரான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும்பொருட்டு, அதே விதத்தில் நீடிக்கப்பட்ட காலப்பிரிவை உள்ளடக்குகின்றது. மேலும், இந்தக் காலப்பிரிவிற்கு வெளியே இருந்து வந்த போதிலும், நிகழ்வுகளை சிறப்பான விதத்தில் புரிந்து கொள்வதற்கு உதவக் கூடிய பின்புலம் சார்ந்த விவரங்களையும், ஏனைய சம்மந்தப்பட்ட தகவல்களையும் இந்த அறிக்கை கவனத்திலெடுக்கின்றது.

## முறைமையியல்

20. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் புலனாய்வு உள்ளடக்கும் காலப்பிரிவு தொடர்பான விரிவான ஆவணப்படுத்தல்கள் ஏற்கனவே கிடைத்து வரும் நிலையில், இக்குழு ஏற்கனவே இருந்து வரும் ஆவணங்கள் தொடர்பான மேசை மீளாய்வொன்றை முதலில் மேற்கொண்டது. இந்த ஆவணங்கள் இலங்கை அரசாங்கத்தின் வெளியீடுகள், சர்வதேச மற்றும் இலங்கை அரசு சாரா அமைப்புக்கள் (NGOs) / சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றின் அறிக்கைகள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஏனைய ஆணைக்குழுக்கள் என்பவற்றின் அறிக்கைகள், கட்புல செவிப்புல சாதனங்கள் மற்றும் செய்மதிப் படங்கள், ஐக்கிய நாடுகள் விசேட நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த அமைப்புகள் என்பவற்றின் அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

21. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அதன் பணியின்போது, இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான சம்பவங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்த அறிவைக் கொண்டிருக்கும் பல மூலாதாரங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டதுடன், தகவல்களை சேகரித்தது. மோதலுடன் சம்மந்தப்பட்ட தரப்பினர், அதே போல ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரிகள் மற்றும் ஆளணியினர், சிவில் சமூக அமைப்புக்கள், மருத்துவத் துறை மருத்துவர்கள்,

சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் வல்லுனர்கள் ஆகியோர் இந்த மூலங்களில் அடங்குகின்றனர். செய்மதிப் படங்கள் தொடர்பான பெறுமதி மிக்க பகுப்பாய்வினை UNOSAT வழங்கியது.

22. தகவல்கள் கிடைத்த மற்றொரு பிரதான மூலாதாரம் மர்சூக்கி தருஸ்மான் அவர்களின் தலைமையிலான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவாகும். இக்குழுவில் யஸ்மின் சூக்கா மற்றும் ஸ்ரீபன் ரட்னர் ஆகிய நிபுணர்கள் அடங்கியிருந்தனர். 2009 மே மாதத்தில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தினை அடுத்து, பொறுப்புக் கூறுதல் விடயம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி அவரிடம் தெரிவித்திருந்த கடப்பாடுகளை அமுலாக்குவது தொடர்பாக ஐநா செயலாளர் நாயகத்திற்கு அறிவுரை வழங்குவதற்கென இக்குழு 2012 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டிருந்தது. இக்குழுவின் ஆவணக் காப்பகத்தின் பொறுப்புதாரர் என்ற முறையில் மனித உரிமைகள் ஆணையாளர் இக்காப்பகத்தில் உள்ள ஆவணங்களை அணுகுவதற்கு இலங்கைக்கான புலன்விசாரணைக்குழுக்கு உத்தியோகபூர்வமாக அதிகாரம் அளித்தார். இரகசியத்தன்மை தொடர்பான வழிகாட்டுதல்களுக்கு கண்டிப்பான விதத்தில் இணங்கி ஒழுக வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த அனுமதி வழங்கப்பட்டது. இந்த ஆவணங்கள், போரின் இறுதிக் காலப் பிரிவுடன் சம்மந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக புலனாய்வுகளை முன்னெடுப்பதற்கான துப்புக்களை இனங்காண்பதற்கு முக்கிய மூலாதாரங்களாக இருந்து வந்தன. நிபுணர்குழுவின் முதன்மைக் கவனம், பொறுப்புக்கூறுதல் தொடர்பான விடயங்கள் குறித்து செயலாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்குவதாகவே இருந்து வந்தது. ஆனால், அந்தக் குழு அத்துமீறல்களின் இயல்பு மற்றும் அளவு என்பன தொடர்பான ஒரு மதிப்பீட்டைக் மேற்கொண்டதுடன், சர்வதேச சட்ட நியதிகளின் பிரகாரம் அவற்றை கவனத்திலெடுத்திருந்தது. இலங்கைக்கான புலன் விசாரணைக்குழு நிபுணர் குழுவின் பல உறுப்பினர்களைச் சந்தித்ததுடன், அவர்களுடைய நுண்ணறிவை பெரிதும் மெச்சியது.

23. 2002 ஆம் ஆண்டின் போர் நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தினைக் கண்காணிப்பதற்கென இலங்கையில் (2002 – 2007 காலப்பிரிவின் போது) செயற்பட்டுவந்த இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணங்களையும் விரிவான விதத்தில் அணுகக் கூடிய வாய்ப்பு இப் புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்தது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளிப்படையான மனித உரிமைகள் கண்காணிப்பு ஆணைப்பத்திரமொன்றை கொண்டிராவிட்டாலும் கூட, மனித உரிமை மீறல்கள் அல்லது துஷ்பிரயோகங்கள் என வகைப்படுத்தக்கூடிய சம்பவங்களையும் உள்ளடக்கிய விதத்தில் போர் நிறுத்த ஒப்பந்த மீறல்கள், போருடன் சம்பந்தப்பட்ட சட்டவிரோதமான கொலைகள், கடத்தல்கள் மற்றும் சிறுவர்களின் ஆட்சேர்ப்பு என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன. இது தொடர்பாக இந்த ஆவணங்களை அணுகுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கு ஆணையாளர் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றார்.

## இரகசியத்தன்மை

24. இரகசியத்தன்மை தொடர்பாக இலங்கை தொடர்பான, புலன் விசாரணைக் குழுவின் ஆவணக் காப்பகத்தில் சேகரமாக வைக்கப்பட்டிருக்கும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஏனைய இரகசிய ஆவணங்கள் என்பன, ஐநா வின் பாதுகாப்பு மற்றும் ஆவணப்படுத்தல் கொள்கையின் பிரகாரம் அதி

-

இரகசியமானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை ஆணையாளர் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறார்.[2]

25. இந்த அறிக்கையில் விவரிக்கப்படும் பெரும்பாலான சம்பவங்களில், பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தவர்கள் ஆகியோரின் அடையாளத்தை மறைக்கும் பொருட்டு பெயர்கள், திகதிகள் மற்றும் இடங்கள் போன்ற பாதிக்கப்பட்டவர்களின் அல்லது சாட்சிகளின் அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டக் கூடிய விவரங்கள் விடப்பட்டுள்ளன.

### நேர்காணல்கள், சாட்சியங்கள்

26. சாட்சியமளிப்பவர்கள் மற்றும் சான்றுகளுக்கான முக்கியமான மூலாதாரங்களாக இருந்துவரக் கூடியவர்கள் ஆகியோரை இனங்காண்பதும், பாதுகாப்பதும் ஒரு சிக்கலான காரியமாகும். அபாயமற்ற நிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளுடன் இணைந்த விதத்தில் இலங்கையை அணுகுவதற்கு வாய்ப்பில்லாத நிலை மற்றும் பழிவாங்கல்கள் குறித்த அச்சங்கள் என்பன சாட்சியமளிக்கக்கூடிய நபர்களை அணுகும் விடயத்தை மிகவும் மோசமான விதத்தில் வரையறுத்திருந்தன. நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அத்துமீறல்கள், துஷ்பிரயோகங்கள் என்பன ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு முன்னரும்,ஒருசில சந்தர்ப்பங்களில் 12 வருடங்கள் வரையில் முன்னரான காலப் பிரிவுகளிலும் இடம்பெற்றிருக்கும் நிலைமையும் சாட்சியங்களைக் கண்டுபிடிக்கும் விடயத்தில்- குறிப்பாக பழைய சம்பவங்களின் சாட்சியங்களைக் கண்டுபிடிக்கும் விடயத்தில் - சவால்களை எடுத்து வந்திருந்தது.

27. இந்த சவால்களுக்கு மத்தியிலும் கூட,இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சாத்தியமான சந்தர்ப்பங்களில் ஆட்களை நேருக்கு நேர் சந்தித்து உரையாடல் நடத்துவதன் மூலம் அல்லது ஏனைய நிலைமைகளில் கடபுல - செவிப்புல தொடர்பாடலுக் கூடாக முதற்தர சான்றுகளை சேகரிக்கும் விடயத்துக்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. எவ்வாறிருப்பினும், இந்தக் குழுவினருக்கு இலங்கைக்குச் செல்வதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. மேலும்,ஆபத்தற்ற நிலை மற்றும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் காரணமாக அது இலங்கைக்குள் தனிநபர்களுடன் நேரடி நேர்காணல்களை நடத்தவுமில்லை.

28. கண்டிப்பான விதத்தில் இரகசியத்தன்மையை பேணுவதன் மூலம் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியமை மற்றும் போதியளவிலான பாதுகாப்பு வழிமுறைகள் உறுதிப்படுத்தப்பட்டமை என்பன சாட்சியங்கள் தமது அனுபவங்களை எடுத்துக்கூறுவதற்கு பாதுகாப்பான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு அத்தியாவசியமாக இருந்துவந்தன. எனினும், நேர்காணலுக்குட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமது சொந்தப் பாதுகாப்பு மற்றும் அல்லது இலங்கையில் வசிக்கும் தமது குடும்பத்தினரின் பாதுகாப்பு என்பன தொடர்பாக தமது கரிசனைகளை இப்பொழுது தெரிவிக்கவில்லை.

29. மேலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஏனைய நம்பகமான மூலாதாரங்களிலிருந்து - அவ்வாறு செய்வதற்கு சாட்சிகள் தமது சம்மதத்தை தெரிவித்திருந்த சந்தர்ப்பங்களில் - விரிவான விதத்திலான எழுத்துமூலமான சான்றுகளையும் பெற்றுக்கொண்டது. ஒரு சில விடயங்கள் தொடர்பாக

---

[2] ஆவணக் காப்பகம் மற்றும் ஆவணங்களை வகைப்படுத்தல் குறித்த ஐநா கொள்கையை ST/SGB/2007/6 இல் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கைக்கான புலன் விசாரணைக் குழுவைச் சேர்ந்த விசாரணையாளர்கள் - நிலைமைகள் அனுமதிக்குமிடத்து - பின்னர் இந்த சாட்சியங்களை நேர்காணல் நடத்தினர். இது தொடர்பான தீர்மானத்தை மேற்கொண்ட பொழுது, ஆட்கள் மீண்டும் கடும் மன அதிர்ச்சிக்குள்ளாக்கப்படக் கூடிய அபாய நிலைமைகள் கவனத்திலெடுக்கப்பட்டிருந்தன.

## எழுத்துமூலமான சமர்ப்பணங்களுக்கான வேண்டுகோள்

30. பொதுமக்களிடமிருந்து எழுத்துமூலமான சமர்ப்பணங்களைக் கோரும் ஒரு வேண்டுகோள் 2014 ஆகஸ்ட் 4 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், அது மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டது. அதனையடுத்து மின்னஞ்சலுக்கூடாக மொத்தம் 1985 சமர்ப்பணங்கள் கிடைத்ததுடன், அவற்றில் 45 சமர்ப்பணங்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரத்திற்கு வெளியில் இருந்துவந்தன. தபால் மூலம் கிடைத்த 1197 சமர்ப்பணங்களில் 100 சமர்ப்பணங்கள் இவ்விதம் ஆணைப்பத்திரத்துக்கு வெளியிலிருந்து வந்தன. (ஒரு சில சந்தர்ப்பங்களில் சமர்ப்பணங்கள் தபால் மூலமும், அதேபோல மின்னஞ்சல் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன). தபால் மூலம் கிடைத்த தனிநபர்களின் சமர்ப்பணங்களில் 329 சமர்ப்பணங்கள் இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் சமர்ப்பணங்களாக இருந்துவந்தன.

31. விசாரணைக்குழுவுக்குக் கிடைத்த கால அவகாசம் மற்றும் இலங்கைக்குச் செல்ல முடியாத நிலை என்பவற்றின் பின்னணியில், கிடைக்கப்பெற்ற தனிநபர் சமர்ப்பணங்களில் ஒரு சில சமர்ப்பணங்கள் தொடர்பாக மட்டுமே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்துவந்தது. அவற்றில் சில, ஏனைய மூலாதாரங்களிலிருந்து கிடைத்த சம்பவங்கள் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்துபவையாக இருந்துவந்தன. எனினும், அது இத்தகைய சமர்ப்பணங்களின் மதிப்பை எந்த வகையிலும் குறைத்துவிடவில்லை. அவை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் இரகசிய ஆவணக் காப்பகத்தில் சேகரித்து வைக்கப்படும். அத்தகைய சமர்ப்பணங்கள், தமது உரிமைகள் அல்லது தாம் இழந்திருக்கும் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள் மீறப்பட்டதாகக் கருதும் பெரும்பாலானவர்களின் சாட்சியங்களை பதிவு செய்து மதிப்பிடுவதற்கென ஆணைப்பத்திரம், காலம் மற்றும் வளங்கள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் பொருத்தமான ஒரு பொறிமுறை இருந்து வர வேண்டிய தேவையை எடுத்துக் காட்டுகின்றன.

32. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிற்கு அனுப்புவதற்கென வெற்றுத்தாளில் கையொப்பமிடப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி,பொய்யான சான்றுகளை சேகரித்தகுற்றச்சாட்டின் பேரில் ஒரு நபர் 2014 அக்டோபர் மாத முடிவு அளவில் இலங்கையில் கைது செய்யப்பட்டார். இலங்கை தொடர்பான புலன் விசாரணை குறித்து அவதூறுகளை பரப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில், இலங்கை அரசாங்கத்தினால் இது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு எந்த ஒரு விதத்திலும் இந்தச்சம்பவத்துடன் சம்மந்தப்பட்டிருக்கவில்லை என்பதனையும், அதன் புலனாய்வுகளின் போது அல்லது முடிவுரைகளின் போது இந்த வகையைச் சேர்ந்த

எந்த ஒரு தகவலையும் பயன்படுத்திக் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தையும் ஆணையாளர் வலியுறுத்திக் கூற விரும்புகின்றார்.[3]

## தகவல்களை சரிபார்த்தல் மற்றும் மதிப்பிடுதல்

33. மனித உரிமைகள் தொடர்பான ஒரு புலன் விசாரணையை மேற்கொள்வதற்கான ஆணைப்பத்திரத்தையே இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பெற்றுக் கொண்டிருந்தது. ''நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருதல்'' என்ற தர நியமத்தின் அடிப்படையிலேயே அது முடிவுகளை மேற்கொண்டிருந்தது. சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் போதியளவில் நம்பகமானவையாக இருந்து வருமிடத்தும், ஊர்ஜிதப்படுத்தப்பட்டவையாக இருந்து வருமிடத்தும் குறிப்பிட்ட ஒரு சம்பவம் அல்லது அத்துமீறல்களின் ஒரு மாதிரி - இவற்றில் சில போர்க் குற்றங்களுக்கு இணையானவையாக இருந்து வர முடியும் - இடம்பெற்றிருந்தது என ''நம்புவதற்கு நியாயமான காரணங்கள்'' இருந்து வருகின்றன. சாட்சிகள் - குறிப்பாக மோதலின் தீவிரம் நிலவிய இறுதி வாரங்களின் போது இடம்பெற்ற சம்பவங்களை நினைவுபடுத்தி, சாட்சியமளித்த சாட்சிகள் - எல்லா சந்தர்ப்பங்களிலும் சரியான திகதிகளை நினைவுபடுத்திக் கொள்ள முடியாதவர்களாக இருந்துவந்தனர்.

34. ஒரு சில சந்தர்ப்பங்களில், திட்டவட்டமான அத்துமீறல் சம்பவங்கள் அல்லது துஷ்பிரயோகங்கள் அல்லது மாதிரிச் சம்பவங்கள் சம்பந்தமாக, அவற்றை நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்பட்ட நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு குற்றச்சாட்டுக்கள் கிடைத்திருந்தன. பல சம்பவங்கள் தொடர்பாகவும், அதேபோல விபரிக்கப்பட்ட சம்பவங்களின் மாதிரிகள் தொடர்பாகவும் இந்நபர்களுக்கெதிராக குற்றவியல் விசாரணைகளை அவசியப்படுத்தும் போதிய தகவல்கள் இருந்து வருகின்றன. இந்நபர்களின் குற்றவியல் பொறுப்பை மதிப்பிட்டுக் கொள்வதற்கும், அவர்கள் செய்த காரியங்கள் மூலம் அல்லது செய்யாமல் விட்ட காரியங்கள் மூலம் அவர்கள் நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்களா அல்லது கட்டளைப் பொறுப்பை ஏற்க வேண்டியவர்களாக இருந்து வருகின்றார்களா என்பதை கண்டறிந்து கொள்வதற்கும் இவ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

35. 1980கள் தொடக்கம் 1990கள் வரையில் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களை நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்பட்ட நபர்களின் இரகசியமான பெயர்ப் பட்டியல்களும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருந்தன. இந்தப் பட்டியல்கள் தொடர்பான மேலதிகத் தகவல்கள் "பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள்"என்ற தலைப்பிலான அத்தியாயம் VIII இல் தரப்பட்டுள்ளன. ஆட்கள் பலவந்தமான விதத்தில் காணாமல் போகச் செய்யப்படும் அத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக

[3] இதனையெழுதும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதுடன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு விசாரணை எதுவுமின்றி அவர் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதன் புலனாய்வின் மீது பக்கச் சார்பினை எடுத்து வரும் நோக்கத்துடன் ஏதேனும் ஒரு செயல் நிகழ்த்தப்பட்டிருப்பின், அதனைக் கண்டிக்கும் அதேவேளையில், இந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மை அல்லது ஏனைய நிலைமைகள் என்பன தொடர்பான ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ளாமல், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு இந்த தனிநபரின் விடயம் உடனடியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்றும், சட்டபூர்வமான ஒரு குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் மீது குற்றம் சாட்டப்பட வேண்டும் அல்லது அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றது.

இடம்பெறும் அத்துமீறல்கள் என மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அவை பலவந்தமாக காணாமல் போகச் செய்தலிலிருந்து ஆட்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரகடனத்துக்கு இணங்கிய விதத்தில், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரத்துக்குள் வருகின்றது. பொறுப்புக் கூறுதல் தொடர்பாக நிலவிவரும் இடையூறுகள் காரணமாக இச் சம்பவங்களில் ஒரு சில சம்பவங்களுக்கு மட்டுமே எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது. இந்தப் பட்டியல்கள், இக்குற்றச் சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் தகவல்களுடன் இணைந்த விதத்தில் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்றும், காணாமல் போதல் சம்பவங்களின் மாதிரிகளுக்குப் பொறுப்பாக இருந்து வரும் நபர்கள் தொடர்பான பரந்த அளவிலான புலன் விசாரணையின் ஒரு பாகமாக அது மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது.

## சவால்கள் மற்றும் இடையூறுகள்

### இலங்கை அரசாங்கம்

36. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் பணி எதிர்கொண்ட மிகப் பெரிய இடையூறு, இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் ஒத்துழைப்புக் கிடைக்காதிருந்தமையும், முன்னைய அரசாங்கம் இந்தப் புலன் விசாரணையை புறக்கணித்தமையும் ஆகும். மனித உரிமைகள் பேரவையின் ஆணைப்பத்திரத்துடன் கூடிய புலன் விசாரணையை அது "திட்டவட்டமாக நிராகரிப்பதாக" தொடக்கத்திலேயேஅரசாங்கம் கூறியிருந்தது. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மீண்டும் மீண்டும் விடுத்த வேண்டுகோள்களை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் நிராகரித்திருந்தது. ஜெனீவா ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி, இலங்கைக்கான புலன் விசாரணைக் குழுவின் ஒருங்கிணைப்பாளரை 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் சந்திப்பதற்கு மறுத்ததுடன், பின்னர் அப் புலன் விசாரணைக் குழுவின் நிபுணர்களில் ஒருவரான டேம் சில்வியா காட்றைட் அவர்களையும் சந்திக்க மறுத்தார். எவ்வாறிருந்தபோதிலும், மனித உரிமைகள் ஆணையாளர் 2014 செப்டம்பர் மாதத்தில் நியூயோர்க்கில் வெளி விவகார அமைச்சரைச் சந்தித்தார். மேலும், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் டிசம்பர் 4 ஆம் திகதி அனுப்பி வைத்த கடிதத்தின் மூலம் (பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது) விரிவான தகவல்கள் கேட்கப்பட்டிருந்த போதிலும், முறையான விதத்தில் அக் கடிதத்திற்கு பதிலளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருந்தது.

37. அதற்குப் பதிலாக, அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இலங்கை அரசாங்கம் இந்தப் புலன் விசாரணையை உதாசீனம் செய்வதற்கு முயற்சி செய்ததுடன், அதன் விருப்புவெறுப்பற்ற தன்மை, தொழிற்திறன் மற்றும் நாணயம் என்பன குறித்து கேள்விகளை எழுப்பி வந்தது. இலங்கை அரசாங்கம் 2014 நவம்பர் 4 ஆம் திகதிக்கும் டிசம்பர் 2 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது பல்வேறு ஊடக அறிக்கைகளை வெளியிட்டதுடன், கொழும்பிலிருந்து செயற்பட்டு வரும் ராஜதந்திரிகளுடன் மூன்று கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. மேலும், கொழும்பிலிருக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளருக் கூடாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் மீது குற்றம் சாட்டும் விதத்தில் (ராஜதந்திர ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்கும்) இரு அறிக்கைகளை வெளியிட்டது. இச்செயற்பாடு ‘‘பாரியளவிலான பொருத்தமற்ற தன்மைகளையும், முரண்பாடுகளையும் கொண்டிருப்பதாகவும், அது மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் நேர்மை மற்றும் நாணயம் என்பவற்றின் மீது கேள்விகளை எழுப்புவதாகவும்,அதன் தொழில்வாண்மை கடைக்கோடி மட்டம் வரையில் வீழ்ச்சியடைந்திருப்பதை காட்டுவதாகவும், குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.) இந்தக் குற்றச்சாட்டுக்கள் நடைமுறைரீதியான பிரச்சினைகளை - குறிப்பாக

சமா்ப்பணங்களை முன்வைப்பதற்கென இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு நிா்ணயித்திருந்த காலக்கெடுவினை - மையப்படுத்திய குற்றச்சாட்டுகளாக இருந்துவந்தன.

38. மனித உரிமைகள் ஆணையாளா் 2014 நவம்பா் 7 ஆம் திகதி வெளியிட்ட ஒரு ஊடக அறிக்கையில் "நடைமுறைகள் குறித்து இடையறாது கேள்வி எழுப்புவதன் மூலம்உண்மையான பிரச்சினைகளை மூடி மறைப்பதற்குப் பதிலாக, புலனாய்வின் கீழிருந்து வரும் அப்பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்துமாறு"[4] இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தாா். மோசடியான விதத்தில் வாக்குமூலங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன என்ற விதத்திலும், தகவல்களுக்கு பணம் வழங்கப்பட்டு வருகின்றது என்ற விதத்திலும் முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை ஆணையாளா் நிராகரித்தாா். ஜெனீவாவிலிருக்கும் இலங்கை நிரந்தர பிரதிநிதி ஆணையாளருடன் மேற்கொண்ட ஒரு சந்திப்பையடுத்து, 2014 டிசம்பர் 15 ஆந் திகதி வெளியிட்ட ஒரு கடிதத்தில் ஒத்துழைப்பு வழங்காமை தொடா்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியிருந்தாா்.

39. 2015 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் மனித உரிமைகளுக்கான ஆணையாளா் அலுவலகத்துடன் ஒத்துழைப்பு மற்றும் உறவுகளை பராமரிக்கும் விடயத்தில் உற்சாகமூட்டக் கூடிய அடையாளங்களைக் காட்டியதுடன், ஆணையாளருக்கும் வெளிவிவகார அமைச்சா் மங்கள சமரவீர அவா்களுக்கும் இடையில் பல கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றிருந்தன. எவ்வாறிருப்பினும், புதிய அரசாங்கம் இலங்கை தொடா்பான புலன்விசாரணையுடன் நேரடியாக ஒத்துழைக்கவில்லை. புலன் விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பது தொடா்பான அதன் நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. தகவல்களுக்கான வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்தும் விதத்தில் மாா்ச் 15 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்திற்கும் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூா்வமாக பதிலளிக்கவில்லை.

40. இவ்விதம் ஒத்துழைப்புக் குறைவாக இருந்து வந்த போதிலும்,மனித உரிமைகள் பேரவை, மனித உரிமைகள் கமிட்டி மற்றும் ஏனைய ஐநா பொறிமுறைகள் என்பவற்றுக்கு அரசாங்க அதிகாரிகள் வழங்கிய (பகிரங்கமாகக் கிடைக்கக் கூடியதாகவிருந்து வரும்) எழுத்துமூலமான மற்றும் வாய்மொழி மூலமான வாக்குமூலங்கள், அரசாங்க அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு வழங்கிய கையெழுத்துப் பிரதிகள்,"மனித நேயச் செயற்பாடு தொடா்பான விடயப் பகுப்பாய்வு, யூலை 2006 – மாா்ச் 2009" மற்றும் "இலங்கையின் மனிதநேய முயற்சி" போன்ற அரசாங்கத்தின் பகிரங்க அறிக்கைகள், அதே போல அரசாங்கத்தின் உத்தியோகபூா்வ இணையதளங்கள் என்பவற்றையும் இவ்விசாரணைக் குழு மீளாய்வு செய்தது. அதனையடுத்து, முன்னா் பிரசுரிக்கப்படாத பெருந்தொகையான உத்தியோகபூா்வ ஆவணங்களும் இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்தன. அவற்றின் அதிகாரபூா்வத் தன்மையை இப்பொழுது விசாரணைக் குழு மதிப்பீடு செய்து வருகின்றது.

[4] இலங்கை தொடா்பான ஐநா புலன் விசாரணைக்கு அபகீா்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் தொடா்ச்சியாக முன்வைக்கப்பட்டு வரும் பொய்ப் பிரச்சாரத்தை ஸெயிட் கண்டனம் செய்கின்றாா், OHCHR, நவம்பர் 7, 2014

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் (எல்ரீரீஈ இயக்கம்)**

41. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்கள் மோதலின் முடிவின் போது கொல்லப்பட்டிருந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைகள், செயற்பாடுகள் அல்லது அந்த இயக்கத்தால் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் துஷ்பிரயோகச் செயல்கள் என்பன தொடர்பான அவர்கள் தரப்பு நியாயங்களை முன்வைக்கும் நேரடியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அந்த இயக்கத்தின் பொறுப்பாளர்களை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் அணுகமுடியவில்லை. அரசாங்கப் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை மற்றும் ஏனைய மிக மோசமான அத்துமீறல்கள் என்பவற்றுக்கு ஆளாக்கப்பட்டிருந்த முன்னைய எல்ரீரீஈ போராளிகள் ஒரு சிலருடன் விசாரணையாளர்கள் நேர்காணல்களை நடத்தியிருந்தார்கள். இந்த நேர்காணல்களின் போது, ஒரு சிலர் விடுதலைப் புலிகள் நிகழ்த்திய கொடூரச் செயல்கள் அல்லது துஷ்பிரயோகங்கள் தொடர்பான தகவல்களை வழங்கியிருந்தார்கள். ஆனால், சர்வதேச சட்டத்துக்கு முரணானவையாக இருந்து வரக் கூடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடைமுறைகள் அல்லது கொள்கைகள் என்பவற்றை ஏற்றுக் கொள்ளவோ அல்லது அவை குறித்து கலந்துரையாடுவதற்கோ அவர்களில் பெரும்பாலானவர்கள் தயக்கம் காட்டினார்கள். அது தவிர, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் கிடைக்காதிருக்கும் நிலையில் ஒருசில நடைமுறைகளுக்கு எந்த மட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்ற விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கடினமாக இருந்து வந்தது. எவ்வாறிருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய பரந்த வீச்சிலான மூலாதாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் அந்த இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களின் மாதிரிகளை ஆவணப்படுத்தக் கூடிய ஆற்றலை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு வழங்கியிருந்தன.

**பழிவாங்கல்கள், துன்புறுத்தல், பயமுறுத்தல் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்கள் குறித்த அச்சம்**

42. புலன் விசாரணைக்குக்கெடுதி விளைவிப்பதற்கான முன்னைய அரசாங்கத்தின் முயற்சிகளின் தாக்கம், இலங்கைக்குள் வெளிப்படையாகவே பயம் மற்றும் அச்சுறுத்தல் என்பனவற்றுடன்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டதன் மூலம் மேலும் தீவிரமடைந்திருந்தது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு, அதன் பணி முழுவதிலும் அடிமட்ட செயற்பாட்டாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் சாட்சியம் அளிக்கக் கூடிய நபர்கள் ஆகியோர் இலங்கைக்குள் - குறிப்பாக, நாட்டின் வட பகுதியில் - பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பு, அச்சுறுத்தல், மிரட்டல், துன்புறுத்தல் மற்றும் விசாரணை என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டு வருவது குறித்து தொடர்ச்சியான அறிக்கைகள் கிடைத்துக் கொண்டிருந்தன.

43. இந்த அச்சுறுத்தல்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுடன் ஒத்துழைப்பவர்களை திட்டவட்டமான விதத்தில் இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படாவிட்டாலும் கூட, இந்தப் புலன் விசாரணை காரணமாக குறிப்பாக, 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் திகதி சமர்ப்பணங்களை முன்வைப்பதற்கான காலக்கெடு அண்மித்து வந்த சந்தர்ப்பத்தின் போது, இந்தத் துன்புறுத்தல் நிலைமைகள் மேலும் தீவிரமடைந்திருந்தமையை பல அறிக்கைகள் எடுத்துக் காட்டியிருந்தன. அவை விசாரணைக்கு ஒத்துழைப்பதனை தடுக்கச் செய்யும் விதத்தில் நேரடியாக முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் முன்னெடுக்கப்பட்டிராவிட்டாலும், இந்த அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்

என்பன இலங்கைக்குள் இருந்தவா்களைப் பொறுத்தவரையில் மிகவும் வலுவான ஒரு தடுப்புக் காரணியாக செயற்பட்டிருந்தது என்பது தெளிவாகும். அத்துமீறல்கள் தொடா்பான தகவல்களை வழங்க முன்வந்திருக்கக் கூடியவர்களை - ஒரு சில சந்தா்ப்பங்களில் இலங்கைக்கு வெளியில் இருந்தவா்களையும் கூட - தடுத்து நிறுத்திய ஒரு காரணியாக அது இருந்து வந்தது. விசாரணையாளா்கள் இலங்கையில் இருந்த தொடா்பு நபா்களுடன் தொடா்புகளை மேற்கொள்ளும் விடயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டாா்கள். அவா்கள் தமது தொடா்புகளை மிகக் குறைந்தபட்ச மட்டத்தில் வரையறுத்துக் கொண்டிருந்ததுடன், இலத்திரனியல் ஊடான கண்காணிப்பு அபாயத்தை வரையறுப்பதற்கான விசேட பாதுகாப்பு வழிமுறைகள் இருந்து வந்த சந்தா்ப்பங்களில் மட்டுமே அவா்கள் அவ்விதமான தொடா்புகளை மேற்கொண்டாா்கள். முன்னா் குறிப்பிடப்பட்டதைப் போல,இலங்கை தொடா்பான புலன்விசாரணைக்குழு இலங்கைக்குள்ளிருந்த தனிநபா்களிடமிருந்து எத்தகைய வாய்மூலமான சாட்சியங்களையும் பெற்றுக்கொள்ளவில்லை.

44. அது தவிர, பழிவாங்குதல் குறித்த ஆபத்துக்கள் காணப்பட்ட நிலையில், தனிநபா்களை அத்தகைய நிலைமைகளுக்கு ஆளாக்காமலிருக்கும் பொருட்டு - அதாவது, நோ்காணலுக்குட்படுத்தப்பட்ட நபா் இலங்கைக்கு வெளியிலிருந்து வந்தாலும் கூட இலங்கையில் வசித்து வந்த அவருடைய குடும்பத்தை அத்தகைய பழிவாங்கல் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

**மீண்டும் கடும் மன அதிர்ச்சிக்குள்ளாக்கப்படக்கூடிய ஆபத்துக்கள்**

45. பலா் தொடா்ச்சியாக அனுபவித்து வந்த கடும் மன அதிா்ச்சி நிலைமைகளும் சாட்சியங்கள் கிடைக்கக் கூடிய நிலையின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக, நோ்காணலுக்குட்படுத்தப்படுவதன் மூலம் நபா்கள் மீண்டும் ஒரு முறை கடும் மன அதிா்ச்சிக்குள்ளாக்கப்படக் கூடிய ஆபத்துக்கள் குறித்து விசாரணையாளா்கள் மிகவும் அவதானமாக இருந்து வந்தாா்கள். நோ்காணல்களை நடத்துவதற்கு முன்னா் விசாரணையாளா்கள் இத்தகைய ஆபத்து நிலைமைகள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொண்டதுடன், அந் நபா்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவிருக்கும் உளவளத்துணை மற்றும் உளவியல் ஆதரவு வகைகள் குறித்த மதிப்பீடுகளையும் மேற்கொண்டிருந்தாா்கள். ஒரு சில சந்தா்ப்பங்களில்,குறிப்பிட்ட சில நபா்களுடன் நேர்காணல் நடத்துவதில்லை என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. காலங்கடந்த நிலையிலும் கூட, பாதிக்கப்பட்ட நபா்கள் தொடா்ச்சியாக அனுபவித்து வரும் கடும் மன அதிா்ச்சி நிலைமையின் அளவு குறித்து உண்மையிலேயே இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவின் புலன் விசாரணையாளா்கள் ஆழமான விதத்தில் வருத்தமடைந்திருந்தாா்கள். திடசித்தத்துடன் சாட்சியமளிப்பதற்கு முன்வந்திருந்த நபா்களின் துணிச்சலுக்குப் பாராட்டுத் தெரிவிப்பது மிக முக்கியமாகும்.

46. மேலே எடுத்து விளக்கப்பட்ட இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட, இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்டு, ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் மனித உரிமைகள் மற்றும் சா்வதேச மனித நேயச்சட்டம் என்பன நீண்ட காலமாக, மிகவும் ஆழமாக வேரூன்றிய விதத்தில் மீறப்பட்டு, துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வந்திருப்பதற்கான வலுவான முடிவுகளை முன்வைக்கின்றது. இத்தகைய ஒரு சில சம்பவங்கள் சா்வதேச குற்றச் செயல்களுக்கு இணையானவையாக இருந்து வர முடியும்.

## III. வரலாற்றுப் பின்புலம்

### 1948– 2001: சுதந்திரம் தொடக்கம் போர்நிறுத்த ஒப்பந்தம் வரையில்

47. 1948 இல் நாடு சுதந்திரமடைந்ததனை அடுத்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடரான பல கொள்கைகள் சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு சாதகமானவையாக இருந்து வந்ததுடன், தமிழ்ச் சிறுபான்மையினரை அதிகரித்தளவில் ஓரங்கட்டி, அந்நியப்படுத்தியிருந்தன. காலனித்துவ ஆட்சியின் கீழ் சிங்கள மக்கள் அனுபவித்து வந்த பிரதிகூல நிலைமைகளுக்கு நிவாரணமளிக்கும் ஒரு வழிமுறையாக அரசாங்கம் இந்தக் கொள்கைகளை முன்வைத்திருந்தது. ஆனால், அவை அதிகரித்தளவில் இனத்துவ அடிப்படையிலான ஒரு பேரினவாத அரசியலை பிரதிநிதித்துவம் செய்தன. 1956 இன் பின்னர் நாட்டில் இனக்கலவரங்கள் வெடித்ததுடன், தமிழ்ச் சமூகத்தின் ஒரு பிரிவினர் மத்தியில் தீவிரவாத நிலைப்பாடுகள் வளர்ச்சியடைந்து வந்தன. ஒரு சில தமிழ்க் கட்சிகள் தொடர்ந்தும் பாராளுமன்ற அரசியலில் பங்கேற்று வந்த அதேவேளையில், 1970களின் நடுப்பகுதியில் அதிகரித்தளவில் தீவிரவாத நிலைப்பாடுகளைக் கொண்ட ஒரு சில குழுக்கள் நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு ‘‘தமிழீழ’’ தனியரசு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கின.

48. 1972 இல் தமிழ் புதிய புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டதுடன், அது 1977 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ) இயக்கமாக மாறியது. அடுத்து வந்த தசாப்தத்தின் போது அது அதற்கு எதிரான தமிழ்க் கட்சிகளுடனும், தீவிரவாதக் குழுக்களுடனும் போராட்டங்களில் ஈடுபட்டது. யாழ்ப்பாணதில் 1983 யூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்குதலில் 13 அரசாங்க சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இத் தாக்குதலையடுத்து நாடெங்கிலும் ஓர் இனக் கலவரம் வெடித்ததுடன், அது பின்னர் ‘‘கறுப்பு யூலை’’ என அழைக்கப்பட்டது. இக்கலவரங்களின் போது சுமார் 3000 தமிழர்கள் கொல்லப்பட்டதுடன், தமிழர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள், வியாபார நிலையங்கள் என்பன அழிக்கப்பட்டன. பெரும்பாலான தமிழர்கள் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களிலிருந்து வெளியேறினார்கள் அல்லது அதனையடுத்து நாட்டை விட்டு வெளியேறிச் சென்றார்கள். அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஒரு முழு அளவிலான ஆயுதப் போராட்டம் உருவாகியது.

49. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் ஈவிரக்கமற்ற, அசைக்க முடியாத ஒரு இராணுவ அமைப்பாக வளர்ச்சியடைந்ததுடன், வடக்கிலும் கிழக்கிலும் பாரியளவிலான நிலப்பரப்புக்களை அது தன்வசம் வைத்துக் கொண்டிருந்தது. முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களை அவர்கள் அங்கிருந்து வெளியேற்றியதுடன், நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இராணுவ இலக்குகளின் மீதும், சிவிலியன் இலக்குகளின் மீதும், படுகொலைகளையும், தாக்குதல்களையும் அந்த இயக்கம் நடத்தி வந்தது. இவ்விதம் நிகழ்த்தப்பட்ட மிக மோசமான கொடூரச் செயல்களில் ஒன்று, மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.[5] எல்ரீரீஈ இயக்கம் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்து வந்த தமிழ்ச் சமூகங்கள் மீதும் அதேபோல கணிசமான எண்ணிக்கையிலான புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மீதும், கட்டாய

[5] http://www.uthr.org/Reports/Report4/chapter2.htm

ஆட்சேர்ப்பு மற்றும் கப்பம் வாங்குதல் என்பவற்றுக்கு ஊடாக பாரிய அளவிலான செல்வாக்கையும், கட்டுப்பாட்டையும் பிரயோகித்து வந்தது. அடுத்து வந்த இரு தசாப்த காலப் பிரிவின் போது நாட்டில் இடம்பெற்ற மோதலின் பல்வேறு கால கட்டங்களிலும், அரசாங்கப் படைகளும், துணைப் படைக் குழுக்களாக செயற்பட்டு வந்த எதிர்தரப்பு தமிழ் குழுக்களும் தன்னிச்சையான தடுப்பு வைப்பு,சித்திரவதை மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆட்கள் சம்பவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பாக இருந்து வந்துள்ளன.

50. இதற்குப் புறம்பாக, இலங்கையின் தென்பாகம் மற்றொரு ஆயுத கிளர்ச்சியை எதிர்கொண்டது. மார்க்சிஸ்ட் மக்கள் விடுதலை முன்னணி இயக்கமே இந்தக் கிளர்ச்சியை நடத்தியது. 1971 இல் இடம்பெற்ற ஒரு குறுகிய கால கிளர்ச்சி மிக விரைவில் அடக்கப்பட்டது. ஆனால், 1987 ஆம் ஆண்டில் தமிழர் போராட்டத்தில் இந்தியத் தலையீடு இடம்பெற்றமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஜே.வி.பி. இயக்கம் அதன் இரண்டாவது கிளர்ச்சியை ஆரம்பித்தது. இக் கிளர்ச்சி பல வருட காலம் நீடித்தது. ஜே.வி.பி. இயக்கம் இராணுவ மற்றும் சிவிலியன் இலக்குகளின் மீது படுகொலைகள் மற்றும் தாக்குதல்கள் என்பவற்றை நிகழ்த்தியது. இந்த இயக்கம் ஒரு எதிர்க் கிளர்ச்சி செயற்பாட்டின் மூலம் கொடூரமான விதத்தில் அடக்கப்பட்டதுடன், அந்த செயற்பாட்டின் போது ஆயிரக்கணக்கான சட்டத்திற்குப் புறம்பான மரண தண்டனைகளும், பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றன.

51. ஒரே காலத்தில் கிளம்பிய இந்த வன்முறை இயக்கங்களுக்கான மிக முக்கியமான எதிர்வினைகளில் ஒன்று, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 1971 மார்ச் மாதத்தில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டமையாகும். அதனையடுத்து அவசரகால அதிகாரங்களும், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற ஏதேச்சாதிகார இயல்பிலான பாதுகாப்புச் சட்டவாக்கங்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டம் முதலில் 1979 ஆம் ஆண்டில் மூன்று வருடங்களுக்கென இயற்றப்பட்டது. பின்னர் அது 1982 இல் நிரந்தரமாக்கப்பட்டது. இந்தச் சட்டம் பரவலான தன்னிச்சையான தடுத்துவைப்புக்கள், சித்திரவதை மற்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் என்பவற்றுக்கான ஒரு பின்புலத்தை வழங்கியிருந்தது. அதுதவிர, 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் கீழ் மிதமிஞ்சிய அதிகாரங்களுடன் கூடிய நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், அது ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றின் மீது நீண்ட கால தாக்கங்களை எடுத்து வந்தது.

52. மோதலை தீர்த்து வைப்பதற்கான ஒரு முயற்சியாக 1987 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் முக்கியமான ஏற்பாடுகளை அமுல்படுத்தத் தவறியமை மேலும் ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது. இந்த ஒப்பந்தம் இந்திய அமைதிப் படையினர் இங்கு அமர்த்தப்பட்டதுடன் இணைந்த விதத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதுடன், அந்தச் சட்டம் நாடெங்கிலும் மாகாண மட்டத்திலான அரசாங்கத்துக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதை எதிர்பார்த்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முதலில் ஒரு தனி அலகாக இணைக்கப்பட்டதுடன், அந்த இணைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலித்தது. ஆனால், சிங்கள தேசியவாதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். 1990 ஆம் ஆண்டில் ஒருதலைப்பட்சமான சுதந்திர பிரகடனமாக அரசாங்கம் கருதிய ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில்,இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது.

53. நாட்டின் ஏனைய பாகங்களில் மாகாணசபைகள் தொடர்ந்து இயங்கி வந்த அதேவேளையில், வடக்கு கிழக்கு மாகாணங்கள் அப்பொழுது நேரடியாக கொழும்பிலிருந்து ஆளப்பட்டு வந்தன.[6] மோதல் மற்றும் அதனையடுத்த சமாதான முன்னெடுப்புக்களில் அதிகாரப் பகிர்வு தொடர்பான பிரச்சினைகள் மையத்தில் இருந்துவந்தன.

### 2002 – 2005: போர் நிறுத்தத்திலிருந்து உக்கிரமான போரை நோக்கிய நகர்வு

54. சுமார் இரு தசாப்த காலம் இடம்பெற்று வந்த போரையடுத்து 2002 பெப்ரவரி மாதத்தில் இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையில் ஓர் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதற்கு நோர்வே அரசாங்கம் அனுசரணை வழங்கியது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் இராணுவச் செயற்பாடுகளை முழுமையாக நிறுத்துதல், சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டுக் கோடுகளுக்குப் பின்னால் படைகளை வைத்தல் மற்றும் தமிழ் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைதல் என்பவற்றை எதிர்பார்த்தது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அமுலாக்கமும் நிறுத்தப்பட்டது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் மனித உரிமைகள் சட்டகமொன்றை[7]உள்ளடக்காவிட்டாலும் கூட, சம்பந்தப்பட்ட தரப்பினர் ''சர்வதேச சட்டத்தின் பிரகாரம் சித்திரவதை,மிரட்டல்,கடத்தல், கப்பம் வாங்குதல் மற்றும் துன்புறுத்தல் போன்ற செயல்களையும் உள்ளடக்கிய விதத்தில் குடிமக்களுக்கெதிரான பகைமைச் செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான'' தமது கடப்பாட்டினைத் தெரிவித்திருந்தனர். நடமாட்ட சுதந்திரத்தையும் உள்ளடக்கிய விதத்தில் சகஜநிலையை எடுத்து வருவதற்கான வழிமுறைகளை அறிமுகம் செய்து வைப்பதற்கும் இந்த ஒப்பந்தம் எதிர்பார்த்தது. ஐந்து நோர்டிக் நாடுகளைச் சேர்ந்த ஆளணியினரைக் கொண்ட இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இந்த ஒப்பந்தத்தைக் கண்காணிப்பதற்கும் ''ஒப்பந்த மீறல் தொடர்பான சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்கும்'' பணியில் அமர்த்தப்பட்டிருந்தது.

55. ஒரு புறத்தில், போர்நிறுத்த ஒப்பந்தம், மோதலுக்கு நிலையான சமாதான தீர்வொன்றினை எட்ட முடியும் என்ற நம்பிக்கையை துளிர்க்கச் செய்திருந்தது. இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு மத்தியில் ஒழுங்கற்ற விதத்திலான தொடரான பல சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. டோக்கியோவில் இடம்பெற்ற ஒரு பாரிய மாநாட்டில்[8]சர்வதேச கொடை வழங்குனர்கள் சமாதானச் செயன்முறைக்கும், போருக்குப் பிற்பட்ட மீள்கட்டுமானச் செயன்முறைக்கும் விரிவான விதத்தில் ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர்.

---

[6] வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டரீதியான வலுவைக் கொண்டிருக்கவில்லை என இறுதியில் 2006 அக்டோபர் மாதத்தில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது 2008 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சபைக்கென புறம்பாக தேர்தல் நடத்தப்படுவதற்கு வழிகோலியது.

[7] சமாதானச் செயன்முறையின் முதலாவது கட்டத்தின் போது மனித உரிமைகள் மற்றும் மனிதநேயக் கோட்பாடுகளின் குறைநிரப்புச் சட்டகம் ஒன்று தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கென எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

[8] 2003 ஆம் ஆண்டில் டோக்கியோ மாநாட்டில் சேர்த்துக் கொள்ளப்படாமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தற்காலிகமாக சமாதானச் செயன்முறையிலிருந்து வெளியேறியது.

56. எவ்வாறிருப்பினும், இந்த ஒப்பந்தம் தென்னிலங்கையில் சந்தேகங்களையும், அரசியல் பிரிவினைகளையும் தூண்டியிருந்தது. போா் நிறுத்த ஒப்பந்தம் நாட்டில் உண்மையான ஒரு பிரிவினையை ஸ்தாபிக்கும் ஒரு செயலாக இருந்து வருகின்றது என்றும், அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அதன் நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கான கால அவகாசத்தை வழங்குகின்றது என்றும் பலர் கருதினார்கள். புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றுக்கான யோசனையை முன்வைத்தமையும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் முக்கிய நகரங்களில் (போா் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்தவாறு) தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் அலுவலகங்களை திறந்து வைத்தமையும் இந்த அச்சங்களை மேலும் வலுப்படுத்தியிருந்தன. மீண்டும் மீண்டும் போா்நிறுத்த ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீறிவருவதாகக் குற்றம் சாட்டப்பட்டதுடன், பயமுறுத்திப் பணம் பறித்தல், இலக்கு வைத்துக் கொலை செய்தல் மற்றும் தொடர்ச்சியாக சிறுவர்களை ஆட்சோ்ப்புச் செய்தல் போன்றவற்றை அது மேற்கொண்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் போா் நிறுத்த ஒப்பந்தக் காலப்பிரிவு முடிவடைந்த பொழுது, இலங்கை போா் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் போா் நிறுத்தத்தை 3800 தடவைகள் மீறியிருப்பதாகவும், அரசாங்கம் 350 தடவைகள் மீறியிருப்பதாகவும் பதிவு செய்திருந்தது.

57. 2003 நவம்பா் மாதத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பாதுகாப்பு, உள்விவகாரம் மற்றும் ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களை ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திலிருந்து தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்து வந்ததாா். இதனையடுத்து 2004 ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்றத் தோ்தல் இடம்பெற்றதுடன், ஓா் அரசாங்க மாற்றமும் நிகழ்ந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சோ்ந்த மகிந்த ராஜபக்ஷ பிரதம மந்திரியாக நியமனம் செய்யப்பட்டாா்.

### கருணாவின் பிளவு

58. அதேவேளையில், 2004 மாா்ச் மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் ஒரு பாரிய பிளவு ஏற்பட்டது. கருணா அம்மான் என அழைக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் கிழக்குப் பிராந்தியத்தின் மூத்த தளபதி விநாயகமூா்த்தி முரளீதரன் இயக்கத்தை விட்டு வெளியேறியமையை அடுத்து இந்தப் பிளவு நிகழ்ந்தது. பெருந்தொகையான சிறுவா்களை உள்ளடக்கிய ஆயிரக்கணக்கான இயக்கப் போராளிகள் தமது வீடுகளுக்குத்திரும்பி வந்தனா். ஆனால்,கடந்த காலத்தில் அரசாங்கத்துடன் கூட்டாக இணைந்து ஒரு துணைப் படையாக செயற்பட்டு வந்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை (EPDP) ஒத்த ஒரு துணைப்படையாக[9] பிரிந்து சென்ற “கருணா குழு” எழுச்சியடைந்தது.

59. கருணா தன்னுடன் கணிசமான அளவிலான இராணுவப் புலனாய்வுத் தகவல்களையும், இராணுவ அனுகூலத்தையும் எடுத்து வந்தாா். அடுத்து வந்த வருடங்களின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும், இத்துணைப்படைக் குழுக்களும் ஒருவரை ஒருவா் இலக்கு வைத்து கொலைச் சம்பவங்களிலும்[10]

---

9 2007 ஆம் ஆண்டு தொடக்கம் கருணா குழு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்ற பெயரில் ஒரு அரசியல் கட்சியாக தன்னைப் பதிவு செய்து கொண்டது.

10 போா் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் இலங்கை அரசாங்கப் படைகள் என்பன மட்டுமே ஆயுதங்களை வைத்திருப்பதற்கு

அதேபோல கடத்தல்கள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றிலும் ஈடுபட்டன. கருணா குழு வெளிப்படையாகவே அரசாங்கத்துடன் கூட்டாக இணைந்து செயற்பட்டு வந்தது. சிறுவர் ஆட்சேர்ப்பினைத் தடை செய்து, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கும் சிறுவர்களை விடுவிப்பதற்கான யுனிசெப் முயற்சிகளுக்கு மத்தியிலும் கூட, இந்த இரு அணிகளும் உயர் அளவில் சிறுவர்களை படையணிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்து வந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் உள்ளூர் மட்டத்தில் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோர் மீதான தாக்குதல்களை முன்னெடுத்து வந்தது. ஆனால், இவை குறைந்த தீவிரத்தன்மை கொண்ட செயற்பாடுகளாக இருந்து வந்ததுடன், சிறிய ஆயுதங்கள் மற்றும் கிறனைற் என்பனவயே இத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. கருணாவிடமிழந்த பிராந்தியங்களை மீளக்கைப்பற்றும் நோக்கத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் வன்னியிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு புதிய படையணிகளை அனுப்பி வைத்தது. கருணா பிளவினை அடுத்து, தனது இராணுவ வல்லமையை மீண்டும் ஸ்தாபித்துக் கொள்வதற்கெனவே இது அவ்வாறு படையணிகளை அனுப்பி வைத்திருந்தது.

### சுனாமி - டிசம்பர் 2004

60. 2004 டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற இந்து சமுத்திர சுனாமி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பேரழிவை எடுத்து வந்ததுடன், 40,000 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் அதில் உயிரிழந்தனர். அதன் விளைவாக,சுமார் 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்ததுடன், அது தவிர ஏற்கனவே மோதல் நிலைமை காரணமாக 390,000பேர் இடம் பெயர்ந்திருந்தனர். சுனாமி நிவாரணப் பணிகள் சமாதானச் செயன்முறைக்குப் புத்துயிரூட்டுமென நம்பிக்கைகள் நிலவி வந்த போதிலும் - உதாரணமாக நிவாரணப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கென ஒரு கூட்டு முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டிருந்தது[11]- மீட்பு அரசியல் வெகுவிரைவில் அவநம்பிக்கை மற்றும் பகைமை என்பவற்றுக்கு வழிகோலின. சுனாமி நிவாரணப் பணிகள் முதன்மையாக, சுனாமியினால் பாதிக்கப்பட்ட தென் பிரதேசங்களுக்கு - பெரும்பாலும் சிங்கள மக்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்கே - வழங்கப்பட்டு வருகின்றன என்ற விதத்தில் தமிழ் மக்களுக்கு மத்தியில் மிகப் பெரிய ஒரு மனக்குறை நிலவி வந்தது. அதேவேளையில், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் தமிழர்கள் - விகிதாசார அடிப்படையிலான ஒரு பங்கினைப் பெற்றுக் கொள்ளவில்லை எனக் கருதப்பட்டது. வடக்கிலும் கிழக்கிலும் போரினால்

அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த இருஅமைப்புக்களும் மற்றவர்களின் பிராந்தியங்களில் ஆயுதங்களை வைத்துக் கொள்ள முடியாதிருந்தது. ஏனைய ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் அரசாங்கத்தினால் களையப்பட்டிருந்தன. அரசாங்கம் அதன் பிரதேசத்தில் செயற்பட்டு வந்த துணைப்படைக் குழுக்களின் ஆயுதங்களைக் களையும் விடயத்தில் தோல்வி கண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து செல்வதற்கு அது உதவிய கருணா குழுவும் இதில் அடங்கும். கருணா குழு போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாக இருந்து வராவிட்டாலும் கூட, இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு 2005 ஆம் ஆண்டு தொடக்கம் கருணா குழுவின் செயற்பாடுகளை போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களாக கருதத் தொடங்கியிருந்தது.

[11] சுனாமிக்குப் பிற்பட்ட செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை (PTOMS)ஸ்தாபிப்பதற்கான ஒரு உடன்பாடு 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி குமாரதுங்க அவர்களினால் அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் என்பவற்றின் பங்குபற்றுதலுடன் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தின் ஒரு சில சரத்துக்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் சவால் விடுக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து, அவை அரசியல் அமைப்புக்கு முரணானவை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததனையடுத்து நீக்கப்பட்டன

இடம்பெயர்ந்தவர்கள் பெரும்பாலும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களாக இருந்து வந்ததுடன், அவர்கள் தாம் ஓரங்கட்டப்பட்டிருப்பதாக உணர்ந்தார்கள்.[12]

**வெளிப்படையான போர் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டமை**

61. ஒரு முக்கியமான தமிழ் அரசியல்வாதியான வெளி விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தக் கொலையை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தென்னிலங்கையில் சமாதானச் செயன்முறை தொடர்பான மிக இறுக்கமான கடும் போக்கு நிலைப்பாடுகளை தூண்டியதுடன், அதிகரித்தளவிலான சர்வதேசரீதியிலான ஒரு தனிமைப்படுத்தலையும் எடுத்து வந்தது. இதனையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதுடன், புதிய அவசர கால ஒழுங்குவிதிகள் அறிமுகம் செய்யப்பட்டன. கைதுகள் தொடர்பாக உத்தரவிடுவதற்கும், தடுப்புக் காவல் தொடர்பான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கும் பாதுகாப்புச் செயலாளருக்குப் விரிவான அதிகாரங்களை அவை வழங்கின. 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் - இத்தேர்தலின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த பிரதேசங்களில் தேர்தல் பகிஷ்கரிப்பொன்றை விதித்திருந்தது – போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான விமர்சனங்களை முன்வைத்து, ஒற்றையாட்சியை பாதுகாப்பதாக வாக்குறுதிகளை அளித்திருந்த மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

62. 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் வீதியோர கிளேமோர் தாக்குதல்களின் வடிவில்[13] ஒரு புதிய வன்முறைச் சுற்றை ஆரம்பித்து வைத்தது. பாதுகாப்புப் படையினர் பிரதான இலக்காக இருந்து வந்த போதிலும்,இந்த வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்தளவில் சாதாரண பொதுமக்கள் மீது தாக்கங்களை எடுத்து வந்ததுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களாக இருந்து வந்தார்கள்.[14]தொடக்கத்தில் கண்ணிவெடிகளின் பாவனை யாழ்ப்பாணத் தீபகத்துக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தச் செயல் வெகுவிரைவில் வன்னியில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. குறிப்பாக, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்கள் பாதிக்கப்பட்டன.

63. தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம், போட்டி துணைப்படைக் குழுக்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோருக்கிடையிலான இலக்குக் கொலைகள் உச்ச மட்டத்தை எட்டியதுடன், முக்கியமான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் ஊடகவியலாளர்களும் இக்கொலைகளுக்கு இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தனர். மேலும், கொழும்பையும் உள்ளடக்கிய

[12] http://www.brookings.edu/research/speeches/2010/03/03-natural-disasters-ferris

[13] ஒரு கிளேமோர் குண்டு என்பது, தொலைவிலிருந்து கட்டுப்படுத்தப்படும், நேரடியான மறைந்திருந்து தாக்குவதற்கென மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகும். சரியாகச் சொல்வதானால் “Claymore” என்பது குறிப்பிட்ட ஒரு ஐக்கிய அமெரிக்க உற்பத்திப் பொறிமுறையின் வணிகச் சின்னமாகும். எவ்வாறிருப்பினும், இலங்கையின் பின்புலத்தில் “Claymore” என்ற பதம் தொலைவிலிருந்து இயக்கப்படும் வெடி கருவியையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

[14] கோப்பிலிருக்கும் சாட்சி வாக்குமூலம் Witness Statement (WS) on file; Humanitarian Operation Factual Analysis, July 2006 – March 2009, பாதுகாப்பு அமைச்சு (MOD), ஜூலை 2011

விதத்தில் படைகளால் நடத்தப்பட்ட ‘‘வெள்ளை வேன்’’ கடத்தல் சம்பவங்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் என்பனவும் அதிகரித்து வந்தன. அதேவேளையில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பொதுமக்கள் பயணம் செய்யும் புகையிரதங்கள் மற்றும் பேருந்துகள் என்பவற்றின் மீதும் தாக்குதல்களை நடத்தியது. குறிப்பாக, கிழக்கு மாகாணத்திலும், வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களை அண்டிய பகுதிகளிலும் இராணுவ மோதல்கள் இடம்பெறத் தொடங்கியிருந்தன. கருணா அணியிலிருந்து கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அலகுகள் பலப்படுத்தப்பட்டதுடன், எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் போய் அவை தாக்குதல்களை நடத்தின. தரப்புக்கள் அதிகரித்தளவில் ஒரு ‘‘கிளர்ச்சிப் போரில்’’[15]சிக்குண்டிருப்பதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் அபிப்பிராயம் வெளியிட்டிருந்தார்.

### 2006 – 2008: மேலும் உக்கிரமடைந்த போர் நடவடிக்கைகள்

64. 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கணிசமானளவு சிதறுண்டு போயிருந்தது. ஒட்டுமொத்த இராணுவ நிலைமை தீவிரமாக மோசமடைந்திருந்த நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி அப்போது இடம்பெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக் கொண்டது. ஒருசில நாட்களின் பின்னர் புலிகள் இயக்கம் கொழும்பில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்களை படுகொலை செய்வதற்கு ஒரு முயற்சியை மேற்கொண்டதுடன், அத்தாக்குதலில் அவர் படுகாயமடைந்தார். கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த சம்பூர் பிரதேசத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டதன் மூலம் இலங்கை விமானப்படை இதற்குப் பழிவாங்கியது.[16] 2006 டிசம்பர் மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கொழும்பில் மற்றுமொரு படுகொலை முயற்சியை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ அவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொண்டது.

65. 2006 ஏப்ரல் மாதத்தின் போது இலங்கை விமானப் படை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை குடாவின் தென்பகுதியில் அமைந்திருக்கும் சாம்பூர் பிரதேசத்தில் தாக்குதல்களை மேற்கொண்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ இலக்குகள் பொது மக்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்களை அண்டிய பகுதிகளில்அமைந்திருந்ததாகக் கூறப்பட்டது. இந்த விமானத் தாக்குதல்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல்களாக இருந்து வருகின்றன என இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்தது. எவ்வாறிருப்பினும்,‘‘பாடசாலைகள் மற்றும் தனியார் இல்லங்கள் என்பவற்றுக்கு அருகில் பொதுமக்கள் வாழும் இடங்களுக்கு மத்தியில் இராணுவ அல்லது அரசியல் இலக்குகளை வைத்திருப்பது மன்னிக்க முடியாத ஒரு செயலாகும்”[17] என அது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

### கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள்

[15] http://www.tamilguardian.com/article.asp?articleid=292

[16] http://www.crisisgroup.org/en/regions/asia/south-asia/sri-lanka/124-sri-lanka-the-failure-of-the-peace-process.aspx

[17] SLMM public press release, 20 April 2006, https://lankapage.wordpress.com/2006/04/30/slmm-rules-air-strikes-violation-of-truce

66. 2006 ஆம் ஆண்டு ூலை மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் திருகோணமலையின் தென்மேற்குப் பகுதியில் இருக்கும் மாவிலாறு பிரதேசத்தைக் கைப்பற்றியதுடன், கிழக்கு மாகாணத்துக்கு நீர் விநியோகம் செய்யும் முக்கிய ஒரு நீர்த்தேக்கமான, மாவிலாறு நீர்த்தேக்கத்தின் நீர் வெளியேற்றக் கதவுகளை மூடியது. அது திருகோணமலை கடற்படைத் தளம் மீதான தாக்குதல்களையும் ஆரம்பித்திருந்தது. அதேவேளையில்,வட பிராந்திய கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகிலும் அது புதிதாக தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது. இது யாழ்ப்பாண தீபகற்பத்தை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதற்கான ஒரு முயற்சியாக இருந்திருக்க முடியும். கிழக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்ட இராணுவ நடவடிக்கைகளை, "Operation Watershed" என்ற பெயரிலான தாக்குதலுடன் இலங்கை இராணுவம் ஆரம்பித்து வைத்தது.

67. வெலிகந்தையில் அமைந்திருந்த பாதுகாப்புப் படைகளின் கிழக்குப் பிராந்திய தலைமையகம், கொழும்பு கூட்டுப் படைகளின் தலைமையகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் போர் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.[18] கிழக்குப் பிராந்திய தலைமையகம் 22, 23 காலாட்படைப் பிரிவுகளை அதன் கீழ் வைத்திருந்ததுடன், இந்த இராணுவநடவடிக்கைக்கென கொமாண்டோ படையணியும், விசேட படைப்பிரிவுகள் படையணியும்[19]இணைக்கப்பட்டிருந்தன. இரண்டு வார காலப் பிரிவுக்குள் மாவிலாறு பிரதேசம் இலங்கை இராணுவத்தினால் மீளக் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் இலங்கை இராணுவம் வரையறுக்கப்பட்ட பிரதேசங்களை விடுவித்தது. அடுத்த இலக்கை நோக்கி நகர்வதற்கு முன்னர் அந்தப் பிரதேசத்தில் இரண்டாவது அணித் துருப்புக்களை வைத்து, அப்பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஓர் உத்தியைஅது முன்னெடுத்தது.

68. 2006 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவம் அடுத்துக் கைப்பற்றிய பிரதேசங்கள் சம்பூர் (ஆகஸ்ட் - செப்டம்பர்) வாகரை (அக்டோபர் 2006 – ஜனவரி 2007), கஞ்சிகுடிச்சியாறு (ஜனவரி – பெப்ரவரி 2007) மட்டக்களப்பு மேற்கு (ஏப்ரல் - ஜூலை 2007) என்பனவாகும். தொப்பிகல (ஜூலை 2007) பிரதேசமே கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இறுதிக் கோட்டையாக இருந்து வந்தது. கருணா குழுவினால் வழங்கப்பட்டிருந்த உள்ளூர் பிரதேசங்கள் குறித்த விவரங்கள் இந்த இராணுவ நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருந்துவந்தன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

69. புதிய அரசாங்கத்தினால் துவக்கிவைக்கப்பட்ட சீர்திருத்தங்களின் போது, இலங்கை இராணுவம் தொடர்பாக புதிய கோட்பாடுகள், ஒழுங்கமைப்பு மற்றும் தந்திரோபாயங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் இவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான ஒரு வாய்ப்பை இலங்கை இராணுவத்திற்கு வழங்கியிருந்தன. கிழக்கு மாகாணத்தை கைப்பற்றியதில் கற்றுக்கொண்ட பாடங்கள், பின்னர் வடக்கில் முன்னெடுக்கப்பட்ட இராணுவச் செயற்பாடுகளை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பது போல் தெரிகிறது. அது இராணுவ வெற்றிகள் குறித்து படைத்தளபதிகளுக்கு உயர் அளவிலான நம்பிக்கையை வழங்கியிருந்தது. வடக்கில் முன்னெடுக்கப்பட்ட

[18] நேரடியாக செயற்பாடுகளை கண்காணிப்பதற்கென பதில் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி இப்பிரதேசத்துக்கு வந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கொலை முயற்சியில் ஜெனரல் பொன்சேகா காயமடைந்த நிலையில், இராணுவத்தின் பிரதானியான மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி பதில் தற்காலிக இராணுவத் தளபதியாக நியமனஞ் செய்யப்பட்டிருந்தார்.

[19] முன்னர் யாழ்ப்பாணத்தில் 53 ஆம் படைப் பிரிவின் கீழ் இருந்தது.

இராணுவச் செயற்பாடுகளைப் போலவே கிழக்கு இராணுவச் செயற்பாட்டையும் ஒரு மனித நேயச் செயற்பாடாக அரசாங்கம் முன்வைத்திருந்தது. பொதுமக்களின் உயிரிழப்புக்கள் ஏற்படுவதனை தவிர்க்கும் நோக்கில் இந்த இராணுவச் செயற்பாடு வடிவமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டிருந்தது.[20]எவ்வாறிருப்பினும், அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேங்களுக்கு நிவாரண உதவிகளை எடுத்துவரும் விடயத்தில் மிகவும் கண்டிப்பான கட்டுப்பாடுகளை மீளவிதித்திருந்தது. உதாரணமாக, மனிதநேய நிவாரணப்பணிகளை முன்னெடுக்கும் முகவரகங்களுக்கு கிழக்கு மாகாணத்தில் வாகரைப்பகுதியில் வசித்து வந்த பொதுமக்களை அணுகுவதற்கு வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களே வழங்கப்பட்டிருந்தன. அரசாங்கம் வடக்கில் வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த பிரதேசங்களில் மனிதநேய நிவாரணப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் அதிகரித்தளவிலான கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கியிருந்தது.

70. இந்தக் காலப் பிரிவின் போது சாதாரண பொதுமக்களின் உயிரிழப்புக்கள்,போரின் இறுதி மாதங்களின் போது இடம்பெற்ற அளவுக்கு இடம்பெறாதிருந்திருக்கலாம். அதேவேளையில், மீண்டும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட போர் மற்றும் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை என்பன பொதுமக்களின் மீது தாக்கங்களை எடுத்துவந்திருந்தன. ஆட்டிலறி, றொக்கட் மற்றும் விமானத்தாக்குதல்கள் என்பவற்றையும் இவை உள்ளடக்கியிருந்தன. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு அத்தகைய பல தாக்குதல்களை ஆவணப்படுத்தியிருந்ததுடன், அவை போர்க் குற்றங்களாக இருந்து வருகின்றன என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன எனவும் கருதுகின்றது. போர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் உடனடி, சுயாதீனமான, விரிவான புலன் விசாரணை ஒன்றின் ஒரு பாகமாக அவை விசாரணைக்குட்படுத்தப்படுதல் வேண்டும்.

71. உதாரணமாக, 2007 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அதிகாலையில் இலங்கை விமானப் படை முல்லைத்தீவு மாவட்டத்தின் வடக்கில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வந்த வள்ளிபுனம் கிராமத்திற்கு அருகில் உள்ள ஒரு காட்டுப் பிரதேசத்தில் விமானத் தாக்குதலொன்றை நடத்தியது.[21]இத் தாக்குதலின் போது சுமார் 14 கொத்துக் குண்டுகள் போடப்பட்டதுடன்,செஞ்சோலை பெண்கள் அநாதை இல்லத்தில் வசித்து வந்த குறைந்தது 60 சிறுமிகள் அதில் கொல்லப்பட்டனர். மேலும் சுமார் 60 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட சிறுமிகள் அனைவரும் 16 - 19 வயதுப்பிரிவைச் சேர்ந்தவர்களாவார்கள். அது தவிர,தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போதனாசிரியர்களாக இருந்து வந்த மூன்று பெண்களும் இதில் கொல்லப்பட்டார்கள். இந்த அநாதை இல்லம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஒரு இராணுவப் பயிற்சி முகாமாக இருந்து வந்ததாக அரசாங்கம் குற்றம் சாட்டி வந்த அதேவேளையில், அதே தினத்தில் அந்த இடத்திற்கு விஜயம் செய்த இராணுவ அவதானிப்பாளர்கள் அந்த அமைவிடத்தில் இராணுவ உபகரணங்களோ, சீருடைகளோ அல்லது தளபாடங்களோ இருந்தமைக்கான எத்தகைய தடயங்களும் காணப்படவில்லை எனக் குறிப்பிட்டார்கள்.

72. இக்காலப் பிரிவின் போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஒன்றாக செஞ்சோலை தாக்குதல் இருந்து வருகின்றது. இதனையடுத்து, 2005 ஆகஸ்ட் 1

[20] Representation of Gotabaya Rajapaska to the LLRC, 17 August 2010

[21] WS on file

ஆந் திகதி தொடக்கம் இடம்பெற்றதாகக் கூறப்படும் மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து புலன் விசாரணைகளை மேற்கொண்டு, விசாரணை செய்வதற்கென 2006 ஆம் ஆண்டில் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு (உதலாகம ஆணைக்குழு) அமைக்கப்பட்டது. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு இந்த ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத முடிவுகளை பார்வையிடுவதற்கான வாய்ப்புக் கிடைத்ததுடன், அவை இந்த அறிக்கையின் பிந்திய பகுதிகளில் பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்றன.

73. செஞ்சோலைச் சம்பவம் தொடர்பாக, அந்த அநாதை இல்லம் ஒரு சட்டரீதியான ஒரு இராணுவ இலக்காக இருந்து வந்தது என்றும், இந்தச் சிறுமிகளின் மரணத்துக்கான பொறுப்பை விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் ஆணைக்குழு அதன் முடிவுரையில் தெரிவித்திருந்தது. கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் இராணுவம் இலக்காகக் கொள்ளக் கூடிய தொலைதூரப் பிரதேசம் ஒன்றில் விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சி ஒன்றில் பங்கேற்குமாறு பிள்ளைகளை பலவந்தப்படுத்தியதன் மூலம்,அந்த இயக்கம் வேண்டுமென்றே அவர்களுடைய பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவித்திருக்கின்றது என்பதனை நம்புவதற்கான நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்ற விடயத்தை புலன் விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது. மேலும், அச்சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் பிள்ளைகள் இருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை இலங்கை விமானப்படையினர் தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதனை நம்புவதற்கும் நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது. அவ்வாறு தெரிந்திருந்தும் கூட, விமானப் படையினர் முதன்மையான ஒரு சிவிலியன் இலக்குமீது ஒரு கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டிருப்பதுடன், பொதுமக்களின் உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு அல்லது குறைத்துக் கொள்வதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அது மேற்கொள்ளத் தவறியுள்ளது. அது எதிர்பார்க்கப்பட்ட, உறுதியான மற்றும் நேரடியான இராணுவ அனுகூலத்திலும் பார்க்க தெளிவான விதத்தில் மிதமிஞ்சிய அளவிலான ஒரு தாக்குதலாகவே இருந்து வருகின்றது.

74. 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முழுவதிலும், நவம்பர் மாதத் தொடக்கத்திலும் விடுதலைப்புலிகள் இயக்கமும் இலங்கை இராணுவமும் மட்டக்களப்பு நகரத்திற்கு வடக்கே வாகரைப் பிரதேசத்திலும்,அதனைச் சூழவுள்ளஇடங்களிலும் ஆட்டிலறி தாக்குதல்களை மாறி மாறி மேற்கொண்டிருந்தன.[22]உதாரணமாக, 2006 நவம்பர் 8 ஆந் திகதி இலங்கை இராணுவத்தினால் ஏவப்பட்ட ஒரு ஆட்டிலறிக் குண்டு கதிரவெளிப் பாடசாலையைத் தாக்கியது. அப்பாடசாலையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த சுமார் 1000 பேர் தஞ்சம் புகுந்திருந்ததுடன்,அத்தாக்குதலின் போது அவர்களில் பலர் மரணமடைந்தார்கள். இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அந்தப் பாடசாலையை அணுகுவதனை அன்றைய தினம் பின் மாலைப் பொழுது வரையில்இராணுவம் தடுத்தது.[23] அப்பாடசாலையில் விடுதலைப்புலிகளின் இராணுவ நிலைகள் இருந்து வந்ததற்கான சான்றுகளை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு காணவில்லை. சுமார் 2000 பொதுமக்கள் தமது பாதுகாப்புக்காகத் தப்பிச் செல்வதனை விடுதலைப் புலிகள் இயக்கம் தடுத்திருந்தது என்ற விடயத்தையும் அது அறிக்கையிட்டிருந்தது.

[22] இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

[23] SLMM, http://www.hrw.org/reports/2007/srilanka0807/4.htm

75. வட இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த கிளிநொச்சி நகரின் மருத்துவமனை வளவின் மீது நவம்பர் 02 ஆம் திகதி இராணுவம் குண்டுத் தாக்குதலொன்றை மேற்கொண்டதுடன், அத் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மேலும், மருத்துவமனையின் பிரசவப் பிரிவும் சேதமடைந்தது.[24]

76. ஏற்கனவே 300,000 ஆக இருந்து வந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை புதிதாக போர் மூண்டதையடுத்து, 2006 ஆம் ஆண்டின் முடிவில் ஆகக் குறைந்தது 520,000 ஆக அதிகரித்தது. இது மொத்த எண்ணிக்கையின் அடிப்படையிலும், இதே போல குடித்தொகையின் சதவீத அடிப்படையிலும், ஆசியாவின் மிகப் பெரிய இடப்பெயர்வு நெருக்கடிகளில் ஒன்றாக இருந்து வந்தது.[25] 1988 ஆம் ஆண்டின் பின்னர் முதற் தடவையாக 2008 ஆம் ஆண்டு மே மாதத்தில் கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. எவ்வாறிருப்பினும்,இந்த மாகாணம் இராணுவ ஆளுனர் ஒருவரின் கீழ் இருந்து வந்தது.

**வட பிரதேச இராணுவ நடவடிக்கைகள்**

77. 2008 ஆம் ஆண்டின் ஆரம்ப நாட்களில் போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதாக அரசாங்கம் அறிவித்தது.[26] போர் நிறுத்த ஒப்பந்த மீறல்கள்நீண்ட காலமாக ஒரு வழமையாக இருந்து வந்த நிலையில், அதனை இரத்து செய்ததன் உடனடித் தாக்கமாக இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் ஜனவரி 16 ஆம் திகதி தொடக்கம் முடிவுக்கு வந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதேஅரசாங்கத்தின் நோக்கமாக இருந்து வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டும் விதத்தில் ஒரு தெளிவான அறிக்கை வெளியிடப்பட்டது. போர் நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு வந்ததனை அடுத்து, பாதுகாப்பற்ற நிலைமையும், வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்தன. வன்னிப் பிரதேசத்திலும், அதேபோல தென்னிலங்கையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களும் இதில் அடங்கியிருந்தன.

78. இக்காலப்பிரிவின் போது இலங்கையின் இராணுவச் செலவுகள் 40 சதவீதத்தால் அதிகரித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டதுடன், இராணுவம் அதன் ஆளணியை ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சமாக மும்மடங்காகப் பெருக்கிக் கொண்டிருந்தது. பாதுகாப்புச் செயலாளரின் கூற்றின் பிரகாரம்[27] 2005 ஆம் ஆண்டுக்கும், 2008 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது மாதம் ஒன்றுக்கு மேலதிகமாக ஐயாயிரம் துருப்பினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் அதன் படைப் பலத்தையும், கட்டுப்பாட்டினையும் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் வன்னிக்கு வெளியில் மக்களின் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்தியதுடன், வயதுவந்தவர்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோரின் பலவந்தமான ஆட்சேர்ப்பினையும் முடுக்கிவிட்டிருந்தது. இது தமிழ்ச் சமூகங்களுக்கு மத்தியில் அதிகரித்தளவிலான கோப உணர்வைத் தூண்டியது.

---

24 http://www.un.org/press/en/2006/iha1240.doc.htm

25 IDMC, http://www.internal-displacement.org/assets/publications/2007/200709-ap-srilanka-civilians-in-the-way-of-conflict-country-en.pdf

26 BBC, Sri Lanka Timeline, 6 October 2010, http://www.bbc.co.uk/news/world-south-asia-12004081

27 www.defence.lk/new.asp?fname=20100429_05

79. அரசாங்கம் 2007 அக்டோபர் தொடக்கம் குறிப்பாக அதன் வட புல இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்தியது. 2008 ஏப்ரல் தொடக்கம் மன்னார் மாவட்டத்தின் மேற்குப் பிரதேசங்களில் தீவிரமாக சண்டைகள் இடம்பெற்று வந்தன. இக் காலப்பிரிவின் போது இராணுவத் தளபாடங்களை எடுத்து வந்த எல்ரீரீஈ இயக்கத்தின்கடற்புலிகளின் பல படகுகள்இலங்கை கடற் படையினரால் மூழ்கடிக்கப்பட்டன. 2007 நவம்பர் மாதத்தில் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஒரு விமானத் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைத் தலைவர் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார்.

80. 2008 ஏப்ரல் 24 ஆந் திகதி இலங்கை இராணுவம் மடுப் பிரதேசத்தைக் கைப்பற்றியது அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களை நோக்கிய அதன் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டியது. இதனையடுத்து அடம்பன் மற்றும் பெரிய மடு ஆகிய நகரங்கள் வீழ்ச்சியடைந்தன.[28]2008 யூலை மாதத்தில் இலங்கை இராணுவம் கடற்புலிகளின் ஒரு முக்கிய தளமான விடத்தல்தீவைக் கைப்பற்றியதுடன், 2008 செப்டம்பர் மாதமளவில் இராணுவத்தின் முன்நோக்கிய நகர்வுகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைநகர் எனக் கருதப்பட்ட கிளிநொச்சிக்கு அச்சுறுத்தலாக அமைந்தன. இது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை எடுத்து வந்திருந்தது.

81. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்திலிருந்து வெளியேறுமாறு 2008 செப்டெம்பர் 3 ஆந் திகதி அரசாங்கம் ஐக்கிய நாடுகள் முகவரகங்களுக்கும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கும் கட்டளையிட்டது. ‘‘விடுவிக்கப்படாத பிரதேசங்களில்’’ மனித நேயப் பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க முடியாது என்ற விடயத்தை கூட்டுப் படைகளின் தலைமையகம் ஐக்கிய நாடுகள் அமைப்புக்குத் தெரியப்படுத்தியது. மேலும், ஓமந்தைக்கு அப்பால் வன்னிப் பிரதேசத்துக்குள் பிரயாணம் செய்வதற்கு இனிமேல் அனுமதி வழங்கப்படமாட்டாது என்ற விடயமும் தெரிவிக்கப்பட்டது.[29]

82. வன்னியிலிருந்து பெரும்பாலான சர்வதேச அவதானிப்பாளர்கள் வெளியேறியதை அடுத்து, அப்பிரதேசத்தில் சாதாரண பொதுமக்கள் தொடர்பாக செயற்படுத்தப்பட்டு வந்த பாதுகாப்பு வேண்டுகோள்களுக்கு எதிர்வினையாற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மனித நேய நிவாரணப்பணி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. அந்த நிலையில், அப்பகுதியில் வாழும் மக்கள் இலங்கையின் பாதுகாப்புப் படையினர், அதேபோல எல்ரீரீஈ இயக்கத்தினர் ஆகிய இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களினால் எளிதில் பாதிக்கப்படக் கூடிய நிலையில் இருந்து வந்தார்கள். ஏனைய பல சிவிலியன்களைப் போலவே ஐக்கிய நாடுகள் அமைப்பின் தேசிய ஊழியர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரும் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் அனுமதி வழங்க மறுத்தது. அந்த நிலையில், சீர்குலைந்து வரும் மனித நேய நிலைமைகளுக்கு மத்தியில் அவர்கள் தமது நிவாரணப்பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வந்தார்கள்.

---

[28] மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, op.cit.

[29] WS on file,http://www.island.lk/2008/09/10/news16.html; Ministry of Disaster Management and Human Rights Press Release, 3 October 2008, http://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/AF5D1F3435536F42852574D70063A679-Full_Report.pdf

## ஜனவரி - மே 2009: ஆயுத மோதலின் இறுதிக் கட்டம்

83. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் இலங்கை இராணுவத்தினர் கிளிநொச்சி மற்றும் ஆனையிறவுப் பிரதேசங்களைக் கைப்பற்றியிருந்ததுடன், யாழ்ப்பாணத்தை நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கும் A9 நெடுஞ்சாலையை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் எடுத்து வந்திருந்தனர்.[30]இந்த இரு பிரதேசங்களும் மிக எளிதான விதத்திலும், இராணுவத்தரப்பில் குறைந்த அளவிலான உயிரிழப்புக்களுடனும் கைப்பற்றப்பட்டதுடன், விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் வலுவிழந்து வரும் நிலையை அச்சம்பவங்கள் எடுத்துக் காட்டின. எண்ணிக்கை தொடர்பான கருத்து முரண்பாடுகள் நிலவி வந்த போதிலும், சுமார் 300,000[31]பொதுமக்கள் - அவர்களில் பெரும்பாலானவர்கள் பன்முக இடப்பெயர்ச்சிகளை அனுபவித்தவர்கள் - இன்னமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த வன்னிப் பிராந்தியத்தின் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தனர்.

84. ஜனவரி நடுப்பகுதி வரையில் நிவாரணப் பணிகளை வழங்கும் முகவரகங்கள் சாலை வழிப் போக்குவரத்துக்கு ஊடாக பதினொரு வாகனத் தொடரணிகளை அப்பிரதேசத்துக்கு எடுத்துச் சென்றிருந்தன. அதனையடுத்து, போர் மற்றும் இரு தரப்புக்களாலும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என்பன நிவாரணப் பணிகளின் சாலை வழிப் போக்குவரத்தை சாத்தியமற்றதாக்கின.[32]வாகனத் தொடரணிகளுக்கு மிக அருகில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டமை காரணமாக அவற்றின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு அனுமதியளிப்பது தொடர்பான ஒப்பந்தம் பல தடவைகள் மீறப்பட்டது.

85. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையின் பிரகாரம், திருகோணமலை பிரதேசத்துக்கும் புதுமாத்தளன் பிரதேசத்துக்குமிடையில் வரையறுக்கப்பட்ட அளவிலான நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கெனஅது 2009 பெப்ரவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையில் கப்பல்களை ஏற்பாடு செய்திருந்தது. புதுமாத்தளன் பகுதியிலேயே இடம்பெயர்ந்திருந்த பெருந்தொகையான பொதுமக்கள் தரித்திருந்தார்கள். அதேவேளையில்,உடனடியாக மருத்துவ உதவி தேவைப்பட்ட சுமார் 12,000 பேர், அவர்களுடைய பராமரிப்பாளர்களுடன் இணைந்த விதத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தால் அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டார்கள். அரசாங்கமும் ஜனவரி மாத முடிவு வரையில் சாலை வழிப் போக்குவரத்துக் கூடாக வரையறுக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்திருந்தது.

86. 2009 ஜனவரி மாத முடிவின் போது, ஒரு படையணி என்ற வகையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பாரிய சரிவைஎதிர்கொண்டிருந்தது. கனரக ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்கள் என்பவற்றை அது இழந்திருந்ததுடன்,அதன் ஆளணியினர் தொடர்பாக நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு பயிற்றுவிக்கப்படாத புதிய போராளிகளிலேயே தங்கியிருக்க வேண்டிநேரிட்டது.

30 பிபிசி, இலங்கை Timeline, 6 அக்டோபர் http://www.bbc.co.uk/news/world-south-asia-12004081

31 மனிதநேய நிவாரண உதவிகளின் அளவைக் குறைப்பதற்கென அது முன்வைத்த வாதங்களின் போது, அரசாங்கத்தினால் 2009 தொடக்கத்தில் இப்புள்ளிவிபரங்கள் மறுக்கப்பட்டிருந்த போதிலும், மோதலின் இறுதிக் கட்டத்தில் சுமார் 300,000 பேர் மோதல் வலயத்திலிருந்து வெளியேறியிருந்தனர்.

32 Sri Lanka: 250,000 People in War Zone Need Food, WFP, 6 February 2009 - https://www.wfp.org/stories/sri-lanka-vanni

மோட்டார்கள், ஆட்டிலறிகள், மல்ரி பரல் ரொக்கட் லோஞ்சர்கள் மற்றும் வெடி பொருட்கள் என்பவற்றின் அடிப்படையில் இலங்கை இராணுவம் பெருமளவுக்கு வலிமை மிக்கதாக இருந்து வந்ததாக கூறப்பட்டது. வான் பரப்பு மீதான முழுமையான ஆதிக்கம் மற்றும் வான் கண்காணிப்பு என்பவற்றிலிருந்தும் அரசாங்கப் படைகள் உச்ச மட்டப் பயனைப் பெற்றுக் கொண்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கிளிநொச்சி மற்றும் ஆனையிறவு பாதுகாப்பு முன்னரங்க நிலைகளில் தமது கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் முன்னேறி வந்த இலங்கை இராணுவத்தினருக்கு ஈடுகொடுக்க முடியாது திணறிக் கொண்டிருந்தனர்.

87. அரசாங்கம் 2009 ஜனவரி மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த பிரதேசத்துக்குள், அந்த இயக்கத்துடன் எத்தகைய ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளாமல், மூன்று யுத்த சூனிய வலயங்களை ஸ்தாபிப்பதாக ஒரு தலைப்பட்சமாக அறிவித்தது. முன்னகர்ந்து வரும் இலங்கை இராணுவத்திற்கு எதிரில் புலிகள் இயக்கம் பின்வாங்கிச் சென்ற நிலையில், அதன் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த நிலப்பரப்பு வர வர சுருங்கிக் கொண்டு வந்த பின்னணியில் இப்பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒவ்வொரு வலயமும் அளவில் சிறியவையாக இருந்து வந்ததுடன், ஒவ்வொன்றும் முன்னையதிலும் பார்க்க அதிகளவுக்கு கிழக்குத் திசை நோக்கியதாகவும் இருந்து வந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை கரையோரப் பகுதிக்குப் பின்வாங்கச் செய்வதும், குடிமக்களில் பெருந்தொகையானவர்களை புலிகள் இயக்கக் கட்டுப்பாட்டிலிருந்து வெளியே எடுத்து வருவதுமே அரசாங்கத்தின் உத்தியாக இருந்து வந்தது போல் தெரிந்தது. இக்காலப்பிரிவின் போது அப்பட்டமான மனித உரிமை மீறல்களும், சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான பாரதூரமான மீறல்களும் பெருமளவில் இடம்பெற்றிருந்தன. பொதுமக்கள் மீதான தாக்குதல்கள்,நிவாரணப் பணிகள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள், வயது வந்தவர்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோர் விடுதலைப் புலிகளினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை, மோதல் இடம்பெறும் பிரதேசங்களிலிருந்து பொதுமக்கள் தப்பிச் செல்வதனைத் தடுத்து நிறுத்துவதற்கான பலவந்தமான வழிமுறைகள் என்பவற்றை இவை உள்ளடக்கியிருந்தன. இவை அறிக்கையின் பின்னைய அத்தியாயம் ஒன்றில் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

88. ஜனவரி பிற்பகுதி மற்றும் பெப்ரவரி ஆரம்ப நாட்கள் முழுவதிலும் இலங்கை இராணுவம் ஏ35 வீதியில் தொடர்ந்து கிழக்கு நோக்கி முன்நகர்ந்து சென்றது. அது புதுக்குடியிருப்பு மருத்துவமனையைச் நோக்கி நகர்ந்து சென்ற பொழுது கடுமையான சண்டை மூண்டது. முதலாவது யுத்த சூனிய வலயத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் மிகவும் செறிவான விதத்தில் இடம்பெற்றதுடன், பெருமளவுக்கு உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன. சாதாரண குடிமக்கள் அங்கிருந்து வெளியேறி கிழக்குக் கரையை நோக்கிச் சென்றார்கள். புதுமாத்தளன் பிரதேசத்துக்கு தென்பகுதியிலிருக்கும் தீவில் அவர்கள் ஒன்று கூடினார்கள்.

89. அரசாங்கம் 2009 பெப்ரவரி 12 ஆந் திகதி இரண்டாவது யுத்த சூனிய வலயத்தைப் பிரகடனம் செய்ததுடன்,உத்தியோகபூர்வமாக அதற்கு சிவிலியன் பாதுகாப்பு வலயம் என பெயரிட்டிருந்தது. வடக்கில் புதுமாத்தளனிலிருந்து தெற்கில் வெள்ளைமுள்ளிவாய்க்கால் வரையிலான 15 கிலோ மீற்றர் கரையோர நிலப்பரப்பினை இந்த வலயம் உள்ளடக்கியிருந்தது. பொதுமக்கள் முதலாவது யுத்த சூனிய வலயத்திலிருந்து புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களுக்கு செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு தெரிவு எதுவும்இருந்து வரவில்லை என்பதனை கிடைக்கும் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஷெல் தாக்குதல்களிலிருந்து அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்

நிலைகளிலிருந்து தப்பி,வெளியேறிச் செல்வதற்கான பாதுகாப்பான பாதைகள் இல்லாதிருந்த நிலையில், அவர்கள் வெளியேறிச் செல்ல விரும்பினாலும் கூட அவ்வாறு போக முடியாதிருந்தது.

90. இக் காலப்பிரிவின் போது போர் நடவடிக்கைகளை நிறுத்துமாறும், ஒரு மனித நேய இடைவேளையை அறிவிக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தும் விதத்தில் பல்வேறு சர்வதேச தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் 2009 மார்ச் 13 ஆம் திகதி ஓர் அறிக்கையை வெளியிட்டதுடன், போர் வலயத்தில் சிக்குண்டிருக்கும் சாதாரண பொதுமக்கள் குறித்த தனது கரிசனையை வெளியிட்டிருந்தார். போர்க் குற்றங்களும், மனித குலத்துக்கெதிரான குற்றச் செயல்களும் நிகழ்த்தப்பட்டிருக்க முடியும் என்றும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.[33]

91. ஏப்ரல்13 ஏப்ரல் 14 ஆகிய திகதிகளில் 48 மணி நேரத்துக்கு இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாக ஏப்ரல் 12 ஆம் திகதி ஓர் அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டது. ஏப்ரல் 20 ஆம் திகதி இலங்கை இராணுவம் கடல் நீரேரியைத் தாண்டி விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த மண் அணைக்குப் பின்னால் ஊடுருவிச் சென்றது. ஏப்ரல் மாதத்தின் கடைசிப் பத்து நாட்களில் சுமார் 100,000 பொது மக்கள் புதுமாத்தளன் பிரதேசத்தின் வடக்கே அமைந்திருந்த அரசாங்க கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த பிரதேசங்களுக்கு நகர்ந்து சென்றார்கள். ஏப்ரல் 26 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட்சமாக ஓர் போர் நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால், அரசாங்கம் அதனை நிராகரித்ததுடன்,அதற்குப் பதிலாக, புலிகள் இயக்கம் சரணடைய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது.[34]போர் நடவடிக்கைகள் அதன் முடிவை எட்டியிருப்பதாகவும்,‘‘பாரிய துப்பாக்கிகள், தாக்குதல் விமானங்கள் மற்றும் விமானத்தின் மூலம் பயன்படுத்தும் ஆயுதங்கள் என்பவற்றின் பாவனையை முடிவுக்குக் கொண்டுவருமாறு’’[35]பாதுகாப்புப் படைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக ஏப்ரல் 27 ஆந் திகதி அரசாங்கம் அறிவித்தது. எவ்வாறிருப்பினும்,ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை. ஒரு சில தகவல் வட்டாரங்களின் பிரகாரம் அவை மேலும் தீவிரமடைந்திருந்தன.

92. அதன் மூன்றாவதும், இறுதியானதுமான யுத்த சூனிய வலயத்தின் ஸ்தாபிதத்தை 2009 மே மாதம் 8 ஆந் திகதி அரசாங்கம் அறிவித்தது. முன்னைய இரண்டாவது யுத்த சூனிய வலயத்தின் நடுப்பகுதியில் எஞ்சியிருந்த ஒரு சிறு பகுதி இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இது கரையமுள்ளிவாய்க்கால், வெள்ளிமுள்ளிவாய்க்கால் என்பவற்றுக்கிடையில் அமைந்திருந்தது. வெள்ளிமுள்ளிவாய்க்காலுக்கு கீழிருந்த தீவின் தென்பகுதி இன்னமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த போதிலும்,படைகள் வட்டுவாகலிலிருந்து தாம்போதிப் பாலத்துக் கூடாக வடக்கு நோக்கித் தாக்குதல் நடத்துவதற்கு இடமளிக்கும் விதத்தில் அது யுத்த சூன்ய வலயத்திலிருந்து நீக்கப்பட்டது. இப்பொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்கொண்டு வந்த இலங்கை இராணுவத்தின் பலம் அநேகமாக 50,000

33 நவி பிள்ளை: இலங்கை மோதலில் சர்வதேச சட்டம் தொடர்பான பாரதூரமான மீறல்கள் இடம்பெற்றுள்ளன, மார்ச் 13, 2009

34 http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca200904/20090430no_time_for_ceasefire_president.htm

35 http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca200904/20090427combat_operations_reach_conclusion.htm

சிப்பாய்களையும் தாண்டியதாக இருந்து வந்தது. கனரக ஆயுதங்கள் மற்றும் வான்பரப்பு மேலாதிக்கத்தையும் அது கொண்டிருந்தது.

93. மே 13 ஆந் திகதி 58 ஆவது படைப்பிரிவு கரையோரப் பகுதியை நோக்கி முன்னகா்ந்து சென்றதுடன், அங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்வதே அதன் நோக்கமாக இருந்து வந்தது. 53 ஆவது படைப்பரிவு ஏ35 வீதிக்கூடாக கடல் நீரேரியை நோக்கி கிழக்குப் பகுதியில் நகா்ந்து சென்றது. 55 ஆவது படைப் பிரிவைச் சோ்ந்த துருப்புகள் புதுமாத்தளன் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி முன்னகா்ந்து சென்றன. அச்சந்தா்ப்பத்தில்,3 சதுர கிலோ மீற்றா் நிலப்பரப்புக்குள் 100,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிக்குண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டிருந்தது.

94. புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள் இலங்கை மற்றும் வெளிநாட்டு நடுவா்கள் முன்னிலையில் சரணடைவதற்கான தமது விருப்பத்தை மே 14 ஆம் திகதி தொடக்கம் தெரிவிக்கத் தொடங்கியிருந்தார்கள். மே 15 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கம் தனது தொடா்பாடல் உபகரணங்களை அழிக்கத் தொடங்கியது. மே 16 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் 58 ஆவது மற்றும் 59 ஆவது படைப்பிரிவுகள் கரையோரப் பகுதியில் ஒன்றிணைந்தன. 53 ஆவது படைப்பிரிவு நந்திக்கடல் கடல்நீரேரிக்கு ஊடாக தொடா்ந்தும் தெற்கு நோக்கி நகா்ந்து சென்றது. புலிகள் இயக்கத்தின் உயா்மட்டத் தலைவா்கள் மற்றும் 250 மிகச் சிறந்த போராளிகளையும் உள்ளடக்கிய எஞ்சியிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினா் வெள்ளைமுள்ளிவாய்க்காலில் சுமாா் 3 சதுர கி.மீ. நிலப்பரப்புக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். புலிகள் இயக்கப் போராளிகள், அரசியற் துறைபொறுப்பாளா்கள் மற்றும் எஞ்சியிருந்த பொதுமக்கள் ஆகியோா் இறுதியில் சரணடைந்தமை மற்றும் அரச படைகளின் கைகளில் அவா்களுக்கு நோ்ந்த கதி போன்ற விபரங்கள் இந்த அறிக்கையின் அடுத்து வரும் அத்தியாயங்களில் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

### மே 2009 – நவம்பா் 2011: ஆயுத மோதலுக்குப் பிற்பட்ட கால கட்டம்

95. மோதலின் இறுதிக்கட்டத்தின் போது தப்பிப் பிழைத்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இப்பொழுது அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனா். அவா்களில் சரணடைந்த அல்லது தொடா்ச்சியாக இடம்பெற்று வந்த வடிகட்டும் சோதனைச் செயன்முறைகளின் போது இனங்காணப்பட்டு, எடுத்துச் செல்லப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவா்கள் மற்றும் போராளிகள் ஆகியோரும் அடங்குகின்றனா். ஆயிரக்கணக்கான முன்னைய விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் அல்லது சிறுவா்களையும் உள்ளடக்கிய விதத்தில் புலிகள் இயக்கத்துடன் தொடா்புகளைக் கொண்டிருந்தார்கள் என சந்தேகிக்கப்பட்ட நபா்கள் வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்த பல்வேறு தடுப்பு முகாம்களிலும், புனா்வாழ்வு முகாம்களிலும் வைக்கப்பட்டிருந்ததுடன், அவா்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்தனா். ஒருசிலா் இன்று வரையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஏனையவா்கள் தொடா்பாக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. அவா்கள் வழக்கு விசாரணை எதுவுமற்ற மரணதண்டனைகளுக்கு இரையாகி இருக்க முடியும் அல்லது அடுத்து வரும் அத்தியாயங்களில் பரிசீலனைக்குட்படுத்தப்படும் பலவந்தமான காணாமல் போதல்களுக்கு ஆளாகியிருக்க முடியும்.

96. உள்நாட்டில் இடம்பெயா்ந்திருந்த சுமாா் 300,000 மக்கள் வவுனியாவுக்கருகில் மனிக்பாம் மூடுண்ட முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் வைக்கப்பட்டிருந்தார்கள். அந்த விடயமும் இந்த அறிக்கையில் பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்றது. நடமாட்டம் தொடா்பான கட்டுப்பாடுகளை அரசாங்கம் படிப்படியாகத் தளா்த்தத் தொடங்கியதுடன், 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதி தொடக்கம் முகாம்களிலிருந்த

மக்களை மீளக் குடியமர்த்தும் செயன்முறை ஒன்றை அது ஆரம்பித்து வைத்திருந்தது. இறுதியில் 2012 செப்டம்பர் மாதத்தில் மனிக்பாம் முகாம் மூடப்பட்டது. மீளக்குடியமர்த்தல் செயன்முறை இன்றுவரையில் பல சவால்களை எதிர்கொண்டு வருவதுடன், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இதுவரையில் நிலையான தீர்வுகள் கிடைக்கவில்லை.

97. அரசாங்கம் அதன் இராணுவ வெற்றியை மிகுந்த வெற்றிக்களிப்புடன் கொண்டாடியது. ‘‘மக்களின் அனைத்துப் பிரிவினராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தேசியத் தீர்வொன்றை’’ அபிவிருத்தி செய்தல் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு[36]அதிகாரத்தை பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புக்கள் வழங்கப்படும் என வாக்குறுதியளித்திருந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்செய்தல் என்பன தொடர்பாக,சீர்குலைவடைந்திருந்த அனைத்துக் கட்சி மாநாடுகள் மற்றும் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் என்பவற்றின் தொடரான பல நடவடிக்கைகளின் போது இந்த விடயம் தொடர்பாக சிறிதளவு முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் வடக்கில் முதற் தடவையாக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இறுதியில் வடமாகாணத்துக்கான மாகாணசபைத் தேர்தல் 2013 செப்டெம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட போதிலும், அண்மைக்காலம் வரையில் இம் மாகாணம் தொடர்ந்தும் இராணுவ ஆளுனர் ஒருவரின் நிர்வாகத்தின் கீழேயே இருந்து வந்தது. முன்னைய அரசாங்கத்துடனான மாகாண சபையின் உறவும்சிக்கலானதாகவே இருந்து வந்தது.

98. அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பவற்றுடன் கூடிய அபிலாஷைமிக்க நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல் செய்தது. ஆனால், இந்த நிகழ்ச்சித்திட்டம் வரையறுக்கப்பட்ட கலந்தாலோசனைகளுடன் கொழும்பிலிருந்து நெறிப்படுத்தப்பட்டது. ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷஅவர்களின் தலைமையில் செயற்பட்ட வடமாகாணத்தின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான ஜனாதிபதி செயலணியினால் அது முன்னெடுக்கப்பட்டது.[37]இப்பிரதேசத்தில் பெருமளவுக்கு இராணுவம் நிலைகொண்டிருந்ததுடன், வடக்கிலும் கிழக்கிலும் பரிசோதனைகள் மற்றும் கண்காணிப்புக்கள் என்பவற்றைக் கொண்ட ஒரு முறை தொடர்ந்து நிலவி வந்தது. மேலும், இராணுவம் கணிசமான அளவிலான காணிகளில் நிலை கொண்டிருந்ததுடன், இது மீள்குடியேற்றச் செயற்பாடுகளை மேலும் சிக்கலாக்கியிருந்தது. தமிழ்ப் பிரதேசங்கள் படிப்படியாக ‘‘சிங்களமயமாக்கப்பட்டு’’ வருவதாக உள்ளூர்ச் சமூகங்கள் முறைப்பாடு செய்திருந்தன. இப் பிரதேசத்துக்குள் வரும் சிங்களவர்களின் ஊடுருவல், வணிக நலன்கள், பௌத்த கோயில்களின் பெருக்கம், பெயர்ப் பலகைகள் மற்றும் இடப் பெயர்கள் போன்ற மொழிப் பிரச்சினைகள் என்பவற்றுக்கூடாக இது இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

99. ஜனாதிபதி இராணுவ வெற்றியைப் பயன்படுத்தி 2010 ஜனவரி மாதத்தில் உரிய காலத்திற்கு முன்னரேயே ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தார். எதிர்க்கட்சிகள் முன்னைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்களுக்குப் பின்னால் அணிதிரண்டிருந்தன. சரத் பொன்சேகா எதிர்க்கட்சி வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். தாம் ஓரங்கட்டப்படுவதாக உணர்ந்து 2009

[36] இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விஜயத்தின் முடிவின் போது, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகிய தரப்பினரால் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கை http://www.un.org/press/en/2009/sg2151.doc.htm

[37] http://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-president-appoints-new-task-force-rebuild-north

ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இராணுவ சேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தார். ஜனாதிபதி ராஜபக்ஷ இத்தேர்தலில் வெற்றிஈட்டியதுடன், ஆளும் கூட்டணி அதனையடுத்து 2010 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டியது. ஜெனரல் சரத் பொன்சேகா அவருடைய தோல்வியை அடுத்து ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், அவருக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.[38]

100. புதிய பாராளுமன்றம் 2010 செப்டம்பர் மாதத்தில் அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது. இது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய பதவிக் காலங்களின் எண்ணிக்கை தொடர்பான வரையறையை நீக்கியதுடன், (அப்பொழுது செயலற்றுக்கிடந்த) அரசியலமைப்பு சபைக்குப் பதிலாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் உள்ளடக்கிய நீதித்துறை மற்றும் ஏனைய சுயாதீனமான அமைப்புக்கள் என்பவற்றுக்கு நியமனங்களைப் பரிந்துரை செய்வதற்கெனசுயாதீனம் குறைந்த பாராளுமன்ற செயன்முறை ஒன்றை எடுத்து வந்தது.

101. இக் காலப்பிரிவின் போது இலங்கையின் ஆட்சிமுறை தொடர்ச்சியாக ஏதேச்சதிகார திசையை நோக்கி நகர்ந்து சென்றதுடன், அதிகரித்த எண்ணிக்கையிலான அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கக் கருமங்கள் என்பன ஜனாதிபதி மற்றும் அவருடைய குடும்பத்தினர் ஆகியோரை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தன. கருத்துச் சுதந்திரம் மற்றும் விமர்சனபூர்வமான விவாதம் என்பவற்றுக்கான வெளி மேலும் மூடப்பட்டதுடன், மனித உரிமைப்பாதுகாவலர்கள் தொடர்ச்சியான விதத்தில் துன்புறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளாக்கப்பட்டு வந்தார்கள். சட்டத்தரணிகள் மற்றும் நீதிபதிகள் ஆகியோரின் சுதந்திரத்தின் மீது தலையீடு மேற்கொள்ளப்பட்டதுடன், ஊடகவியலாளர்கள் மீதும், சுதந்திர ஊடகங்கள் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. பௌத்த பெரும்பான்மை மக்களில் ஒருசில பிரிவினருக்குள் ஒரு சிங்கள தேசியவாதமும், சமயத் தீவிரவாதமும் புத்துயிர்ப்படைந்தது.அவ்வித போக்குகள் தடுத்து நிறுத்தப்படவில்லை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசாங்கத் தலைவர்கள் அதற்கு அனுசரணை வழங்கினார்கள். இது சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராக - குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கெதிராக– புதிதாக வன்முறை வெடிப்பதற்கு வழிகோலியது.

102. இதே காலப்பிரிவின் போது, 2009 போரின் போது இருதரப்பினராலும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மிகப் பாரதூரமான உரிமை மீறல்கள் குறித்த வீடியோ சான்றுகளை உள்ளடக்கிய விதத்தில் சான்றுகளும் ஏனைய சாட்சிகளும் அதிகரித்தளவில் கிடைத்து வந்தன. 2009 மே மாதத்தில் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டு அறிக்கையில், ஜனாதிபதிராஜபக்ஷபோரின் காரணமாக தோன்றும் பொறுப்புக் கூறுதல் தொடர்பான பிரச்சினைகளைக் கவனத்திலெடுப்பதற்கு வழிமுறைகளை அமுல்செய்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார். இந்தத் துறையில் முன்னேற்றம் காணப்படாத நிலையில், 2010 யூன் மாதத்தில் இலங்கையில் பொறுப்புக் கூறும் நிலையை மேம்படுத்துவதற்கான வேறு தெரிவுகள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்குவதற்கென சுயாதீன நிபுணர்களின் குழு ஒன்றை நியமனம் செய்வதற்கு

[38] இரண்டு வருடத்தின் பின்னர் 2012 மே மாதத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா விடுவிக்கப்பட்டதுடன், 2015 ஜனவரி மாதத்தில் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் முடிவு செய்தார். திரு. மர்சூக்கி தருஸ்மான் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த நிபுணர்களின் குழு அதன் அறிக்கையை 2011 மார்ச் மாதத்தில் சமர்ப்பித்தது.[39]

103. அரசாங்கம் 2010 மே மாதத்தில் அதன் சொந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (LLRC) நியமனம் செய்தது. இந்த ஆணைக்குழு "போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்கு வழிகோலிய விடயங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள், அந்த நிகழ்வுகளிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் மற்றும் எதிர்காலத்தில் அத்தகைய நிலைமைகள் தோன்றுவதனை தவிர்க்கும் பொருட்டு முன்னெடுக்கப்படவேண்டிய நிறுவனரீதியான, நிர்வாகரீதியான மற்றும் சட்டவாக்கரீதியான வழிமுறைகள் குறித்து புலன் விசாரணைகளை நடத்துவதற்கும்மற்றும்அனைத்துச் சமூகங்களுக்கு மத்தியிலும் தேசிய ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்குமென" இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையை 2011 நவம்பர் 15 ஆம் திகதி ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தது. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 25/1 இன் பிரகாரம் முன்னெடுக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணை[40]கவனத்திலெடுத்தக் காலப்பிரிவை அது உள்ளடக்கியிருந்தது.

# IV. அரசாங்கம்,எல்ரீரீஈ இயக்கம் மற்றும் ஏனைய ஆயுதக் குழுக்கள் என்பன தொடர்பான ஒரு பொதுநோக்கு

104. இந்த அத்தியாயம் பாதுகாப்புப் படைகள்,அவற்றுடன் சம்பந்தப்பட்ட துணைப்படைக் குழுக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பவற்றின் கட்டமைப்பை எடுத்து விளக்குகின்றது. கட்டளைச் சங்கிலியை எடுத்து விளக்குவதில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பெயர்கள், இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்டிருக்கும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குறிப்பிட்ட அத்துமீறல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நேரடிப் பொறுப்பினை அல்லது கட்டளைப் பொறுப்பினை அல்லது மேல்மட்டப் பொறுப்பினை கொண்டிருக்கிறார்கள் என்பதனை குறிக்கவில்லை. அதேபோல, இந்த அறிக்கையின் அடுத்துவரும் அத்தியாயங்களில் திட்டவட்டமான அத்துமீறல்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் தனிநபர்களின் பெயர்கள், அவ்விதம் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் குற்றமற்றவர்கள் என்ற அனுமானத்துக்கு எத்தகைய பங்கமும் ஏற்படாத விதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், இந்த அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் குறிப்பிட்ட அத்துமீறல்கள் தொடர்பாக அவர்கள் நேரடிப் பொறுப்பினை அல்லது கட்டளைப் பொறுப்பினை அல்லது உயர் மட்டப் பொறுப்பினை கொண்டிருக்கிறார்கள் என்பதனை அது குறிக்கவில்லை. தனிநபரொருவரை ஒரு குற்றச் செயலுக்கு பொறுப்பாக்குவது, அவசியமான அனைத்துச் செயன்முறைகளுடனும்,உத்தரவாதங்களுடனும் கூடிய நீதிமன்றமொன்றின் மூலம் மட்டுமே நிர்ணயிக்கப்பட முடியும். இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் உடனடியாக, விரிவான விதத்தில் சுயாதீனமாக புலன் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியிருப்பதுடன், அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன்னால் எடுத்து வரப்படுதல் வேண்டும்.

---

39 http://www.un.org/News/dh/infocus/Sri_Lanka/POE_Report_Full.pdf. The Government of Sri Lanka did not afford any credence or legitimacy to the report of the Panel.

40 http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201112 /FINAL%20LLRC%20REPORT.pdf

-

## இலங்கைப் பாதுகாப்புப் படைகள் மற்றும் சம்மந்தப்பட்ட அமைப்புக்கள்

### ஜனாதிபதி/ ஆயுதப் படைகளின் பிரதம தளபதி

105. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கிய காலப்பிரிவின் போது இரு ஜனாதிபதிகள் பதவி வகித்து வந்துள்ளனர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (2005 வரையில்) மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (நவம்பர் 2005 தொடக்கம்). அரசியலமைப்பின் பிரகாரம் குடியரசின் ஜனாதிபதி ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாக இருந்து வருவதுடன், பல்வேறு படைகளின் தளபதிகளை அவர் நியமனம் செய்கின்றார்.

### பாதுகாப்பு அமைச்சு

106. இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறைமை என்பவற்றை பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கான உபாயங்களை வடிவமைத்து, நிறைவேற்றும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு[41]வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம்[42]பாதுகாப்பு அல்லது பந்தோபஸ்து பணிகளை மேற்கொண்டு வரும் அனைத்து முகவரகங்களுக்கும் இந்த அமைச்சு பொறுப்பாக இருந்து வருகின்றது. 2013 ஆகஸ்ட் மாதம் வரையில் பொலிஸ் திணைக்களத்தையும் உள்ளடக்கிய விதத்தில் பாதுகாப்புப் படைகளின் அனைத்துக் கிளைகளும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தன. பாதுகாப்பு அமைச்சு, இராணுவ நடவடிக்கைகளில் வகித்து வரும் வகிபங்குக்கு மேலதிகமாக, 2006 ஆம் ஆண்டு தொடக்கம் வன்னியில் செயற்படுத்தப்பட்டு வரும் அனைத்து மனிதநேயச் செயற்பாடுகளினதும் உயர்மட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் அந்த அமைச்சிலேயே நடத்தப்பட்டு வந்தன.

107. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவியேற்ற பின்னர் பாதுகாப்பு அமைச்சர் பதவியினையும் தானே பொறுப்பேற்றுக் கொண்டார். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சியின் போது 2001 - 2005 காலப்பிரிவில் திலக் மாரப்பன பாதுகாப்பு அமைச்சர் பதவியினை வகித்து வந்தார்.

### பாதுகாப்புச் செயலாளர்

108. பாதுகாப்புச் செயலாளர், ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட சிவில் உத்தியோகத்தர் ஆவார். ஜனாதிபதியின் சகோதரரான கோத்தபாய ராஜபகஷ் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாதுகாப்புச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டதுடன்,2015 ஜனவரி மாதம் வரையில்

---

[41] சுதந்திரம் தொடக்கம் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட அமைச்சின் பெயரில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து விவகாரங்கள் தொடர்பான பொறுப்புக்களை கொண்ட ஒரு அமைச்சு எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. அந்த அமைச்சு கொண்டிருக்கும் ஏனைய பொறுப்புக்களையும் பிரதிபலிக்கும் விதத்தில் அதன் பெயர் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்தது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்படும் பாதுகாப்பு / பந்தோபஸ்து அமைப்புக்களின் ஆறு அமைப்புக்கள் 2013 வரையில் பாதுகாப்ப அமைச்சின் பொறுப்பின் கீழ் இருந்து வந்துள்ளன. 2013 ஆம் ஆண்டில் பொலிஸ் திணைக்களம் சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழ் எடுத்து வரப்பட்டது.

[42] http://www.defence.lk/main_abt.asp?fname=mission

அப்பதவியை வகித்தார். 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் பாதுகாப்புச் செயலாளருக்கு மிதமிஞ்சிய அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதாவது, தேசிய பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட ஒரு நபரை கைது செய்வது அவசியமாக இருந்து வருகின்றது என "அவர் அபிப்பிராயப்பட்டால்" கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் என்பவற்றுக்கு கட்டளையிடும் அதிகாரங்களையும் அவர் கொண்டிருந்தார்.[43]இலங்கையிலிருந்து வெளிவரும்Bussines Today பத்திரிகை 2009 ஏப்ரல் மாதத்தில் பொலிஸ்மா பிரதானிகளுடன் நடத்திய தொடரான பல நேர்காணல்களில், ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பவற்றுக்கிடையில் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதிலும்,அதே போல புலன் விசாரணைகளை நெறிப்படுத்துவதிலும் பாதுகாப்புச் செயலாளர் வகித்து வரும் பாத்திரம் எடுத்து விளக்கப்பட்டிருந்தது.[44]

**தேசிய பாதுகாப்புச் சபை**

109. தேசிய பாதுகாப்புச்சபை அரசாங்கத்தின் நிறைவேற்று அமைப்பாக இருந்து வருவதுடன்,தேசிய பாதுகாப்பைபராமரித்து வரும் பொறுப்பை அது கொண்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 27 இன் ஏற்பாடுகளின் கீழ் இச்சபை 1980 களின் நடுப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து விவகாரங்கள் சம்பந்தப்பட்ட மூத்த அரசியல் தலைவர்களையும்,மற்றும் இராணுவத் தலைவர்களையும் அது ஒன்றாக எடுத்து வந்தது. இராணுவத்தின் பிரதம தளபதி என்ற முறையில் ஜனாதிபதி பாதுகாப்புச் சபைக்குத் தலைமை தாங்குகின்றார்.

[43] 2006 ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் திருத்தியமைக்கப்பட்ட இந்த ஒழுங்குவிதிகளின் கீழ், பொலிஸ் மற்றும் இராணுவம் என்பவற்றின் அனைத்துக் கிளைகளுக்கும் கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் என்பவற்றை மேற்கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

[44] கொழுப்பு குற்றவியல் பிரிவுப் பணிப்பாளர், பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், குற்றப் பிரிவு மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆகியோரிடம் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள். Business Today, April 2009.




**வரைபடம் 2: இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் கட்டளை கட்டமைப்புக்கள்**

**இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் பிரதான கிளைகள்**

110. மோதல் இடம்பெற்ற காலப் பிரிவின் போது இலங்கை பாதுகாப்புப் படைகள் மூன்று ஆயுதப் படைகளைக் கொண்டிருந்தன் இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை மற்றும் இலங்கை விமானப் படை 3 சிவிலியன் அமைப்புக்களையும் அது கொண்டிருந்தது - இலங்கைப் பொலிஸ், தேசிய புலனாய்வுப் பணியகம் (இப்பொழுது அரச புலனாய்வுச் சேவை) மற்றும் சிவில் பாதுகாப்புப் படைகள். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக்கான ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்படும் காலப் பிரிவில் அதிக காலம் இந்த ஆறு பிரிவுகளும் (2013 ஆம் ஆண்டு) வரையில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்துவந்தன. 2013 இல் இலங்கைப் பொலிஸ் திணைக்களம் புதிதாகஉருவாக்கப்பட்ட சட்டம் மற்றும்

ஒழுங்கு அமைச்சின் கீழ் எடுத்துவரப்பட்டது.[45]2006 ஆம் ஆண்டில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் உருவாக்கப்பட்டதுடன், முன்னர் இருந்து வந்த தேசிய ஊர்காவல் படை இதன் கீழ் மீள ஒழுங்கமைக்கப்பட்டது.

### *ஆயுதப் படைகளின் பாதுகாப்புத்துறை தலைமை அதிகாரி*

111. பாதுகாப்புத் துறை தலைமை அதிகாரி (Chief of the Defence Staff)ஆயுதப் படைகளின் சிரேஷ்ட தொழில்சார் இராணுவ அதிகாரியாக இருந்து வருவதுடன், அவர் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படுகின்றார். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாதுகாப்புத் துறை தலைமை அதிகாரி (எயார் சீப் மார்ஷல் டொனல்ட் பெரேரா) முக்கியமாக ஒரு ஒருங்கிணைப்புப் பாத்திரத்தை வகித்து வந்ததுடன், ஜனாதிபதியிடமிருந்தும், தேசிய பாதுகாப்புப் சபையிடமிருந்தும் வரும் பணிப்புரைகளை அமுல் செய்வதற்கு அவர் பொறுப்பாக இருந்து வந்தார். அந்தவகையில், மூன்று ஆயுதப் படைகளினதும் தளபதிகள் தமது சொந்த செயற்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள்.[46]

### *கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் (JOHN)*

112. ஆயுதப் படைகள் மற்றும் இலங்கைப் பொலிஸ் என்பவற்றுக்கிடையில் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கென கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் (Joint Operations Headquarters) 1985 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் மோதல் உச்ச கட்டத்தில் நிலவிவந்தது.[47] தேசிய பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை அமுல் செய்வதற்கான பொறுப்பினை அது கொண்டிருந்தது. கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் பாதுகாப்புத் துறை தலைமை அதிகாரியின் கட்டளையுடன் இயங்கி வந்ததுடன், அவர் பாதுகாப்புச் செயலாளருக்குப் பொறுப்புக் கூறவேண்டியவராக இருந்து வந்தார்.

### *இலங்கை இராணுவம்*

113. இராணுவத் தளபதி இராணுவத்திலிருக்கும் சிரேஷ்ட அதிகாரியாவார். இராணுவத்தின் பிரதம தளபதி என்ற முறையில் ஜனாதிபதி இராணுவத் தளபதியை நியமனம் செய்கின்றார். 2000 ஆகஸ்ட் தொடக்கம் 2004 யூலை வரையில் ஜெனரல் எல்.பி. பலகல்ல இராணுவத் தளபதியாக இருந்து வந்தார். அவரையடுத்து ஜெனரல் எஸ்.எஸ்.கோட்டேகொட இராணுவத் தளபதியானார். ஜெனரல் சரத் பொன்சேகா 2005 டிசம்பர் 06 ஆம் திகதி இராணுவத் தளபதியாக நியமனம் செய்யப்பட்டார். 2009 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஜெனரல் ஜகத் ஜெயசூரியா இராணுவத் தளபதியாக நியமனம் செய்யப்பட்டார்.[48]

114. *செயற்பாடுகள் பணிப்பாளர்* கூட்டுப் படைகளின் தலைமையகத்தில் செயற்பட்டு வரும் சிரேஷ்ட இராணுவ அதிகாரியாக இருந்து வருவதுடன், போர்க்கள முகாமைத்துவத்திற்கான நேரடிப் பொறுப்பினை அவர் கொண்டுள்ளார்.

[45] http://www.lawandorder.lk/index.php?option=com_content&view=article&id=78 &Itemid=491&lang=en

[46] 2006 யூலை மாதத்தில் பாதுகாப்பு ஆளணி தலைமை அதிகாரியின் பாத்திரம் ஆயுதப் படைகளை ஒருங்கிணைக்கும் அதிகளவுக்குச் செயற்பாட்டுப் பாத்திரமாக விரிவாக்கப்பட்டது. இந்தப் பணிகளுடன் செயற்பட்ட முதலாவது பாதுகாப்புத் துறை பிரதம அதிகாரி சரத் பொன்சேகா 2009 யூலை மாதத்தில் நியமனம் செய்யப்பட்டார்: www.ocds.lk/history.html

[47] http://www.ocds.lk/history.html

[48] www.army.lk

அவர் இராணுவத் தளபதியின் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டதுடன்,போரில் முனைப்பாக ஈடுபட்டிருக்கும் செயற்பாட்டு அலகுகளின் நடவடிக்கைகளை கண்காணித்து, ஒருங்கிணைக்கும் பணியை நிறைவேற்றி வந்தார்.

115. *பாதுகாப்புப்* படைகளின் *தலைமை அலுவலகம்* : மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையின் கீழிருக்கும் இப்பிரிவு குறிப்பிடப்பட்ட பூகோளப் பிரதேசம் ஒன்றுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. பல்வேறு போர்ப் படையணிகளும், ஆதரவளிக்கும் அலகுகளும் இதன் கீழ் செயற்பட்டு வருகின்றன. ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போது வன்னிப் பாதுகாப்புப் படைத் தலைமை அலுவலகம் மேஜர் ஜெனரல் ஜகத் ஜெயசூரியா தலைமையில் இயங்கி வந்தது. அவர் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச முகவரகங்கள் என்பவற்றுக்கிடையில் குறிப்பாக பாதுகாப்பு விடயம் தொடர்பான பேச்சாளராக செயற்பட்டு வந்தார். யாழ்ப்பாண பாதுகாப்புப் படைத் தலைமை அலுவலகம்2010 ஜனவரி 07 தொடக்கம் 2014 ஜனவரி 09 வரையில் மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் தலைமையில் இயங்கி வந்தது.

116. படைப்பிரிவு (*Division)*: இது 10 தொடக்கம் 20,000 வரையிலான சிப்பாய்களைக் கொண்ட சுயாதீனமாக போர்க்களச் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய,கூட்டாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு படைப் பிரிவாகும். இது இரண்டு நட்சத்திர ஜெனரல் ஒருவரின் தலைமையின் கீழ் இருந்து வருவதுடன், பல்வேறு படையணிகளையும் (Brigades) கொண்டுள்ளது. அதற்கு ஆதரவளிக்கும் அலகுகளும் இருந்து வருகின்றன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போது பின்வருவோர் படைப் பிரிவுகளின் தளபதிகளாக இருந்து வந்துள்ளனர்:[49]

53 ஆவது பிரிவு : மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன

55 ஆவது பிரிவு : பிரிகேடியர் பிரசன்ன சில்வா

57 ஆவது பிரிவு : மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ்

58 ஆவது பிரிவு : பிரிகேடியர் ஷவேந்திர சில்வா

59 ஆவது பிரிவு : பிரிகேடியர் நந்தன உடவத்த மற்றும் அதன் பின்னர் பிரிகேடியர் சகி கால்லகே

117. *படையணி* (*Brigade)*: ஒரு நட்சத்திர ஜெனரல் ஒருவரின் (பிரிகேடியர்) தலைமையில் செயற்பட்டு வரும் ஒரு பிரதான காலாட்படைப் பிரிவு. இதில் 3500 தொடக்கம் 6000 வரையிலான சிப்பாய்கள் இருந்து வருகின்றனர். இது போரில் ஈடுபடும் பல்வேறு பட்டாளங்களையும், ஏனைய ஏனைய ஆதரவளிக்கும் அலகுகளையும் கொண்டுள்ளது. பிரிவுகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் படையணிகள் தவிர, ஆட்டிலறிப் படையணியும் இதில் இருந்தது.[50]டெய்லி நியூஸ் பத்திரிகையில் 2009 யூன் 03 திகதி வெளியிடப்பட்ட ஒரு செய்திக் கட்டுரையின் பிரகாரம், ஆயுதமோதலின் இறுதிக் கட்டத்தின் போது பிரிகேடியர் பிரியந்த நாப்பாங்கொட ஆட்டிலறிப் படையணியின் தளபதியாக இருந்து வந்தார். விசேட படைகளின் படையணி கேர்ணல் அத்துல கொடிப்பீலியின் தலைமையில் இயங்கி வந்தது.

49 www.defence.lk/new.asp?fname=20090117_03

50 'The Grand Finale', lankanews.lk archives

118. *காலாட் படை பட்டாளம் (Battalion)*: லெப்டினன்ட் கேர்ணல் ஒருவரின் தலைமையின் கீழ் சுமார் 650 பேரைக் கொண்டிருக்கும் ஓர் காலாட்படைப் பிரிவாகும்.பல்வேறு சிப்பாய் குழுக்களைக் கொண்டிருப்பதுடன், ஆதரவளிக்கும் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அவை அனைத்தும் இந்தப் பட்டாளத்தின் உள்ளார்ந்த பாகமாக இருந்து வருகின்றன.

119. *அதிரடிப் படை (Task Force)*: இது குறிப்பிட்ட ஒரு பணியை நிறைவேற்றி வைப்பதற்கென அவ்வப்போது உருவாக்கப்படும் சிப்பாய்களைக் கொண்ட ஒரு குழுவாகும். இதற்கொரு புறம்பான கட்டளை அமைப்பு அவசியமாகின்றது. இதுகட்டளை வரிசையில் ஒரு படைப் பிரிவிற்கு இணையானதாக இருந்து வருகின்றது. ஆனால், வலுவான ஒரு படைப்பிரிவின்[51] அளவைக் கொண்டுள்ளது. இது ஏனைய அலகுகளிலிருந்து இரவல் வாங்கப்பட்டஅலகுகளையும், இலங்கை இராணுவத்தின் தீவிரமான விரிவாக்கத்தின் போது புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டபடையினரையும் கொண்ட ஒரு கலவையாக இருந்து வந்தது. பாதுகாப்பு அமைச்சினால் தொகுக்கப்பட்ட வரைபடங்களின் பிரகாரம்,அதிரடிப் படைகள் 2, 3, 4 மற்றும் 8 என்பன குறிப்பாக மோதலின் இறுதி வாரங்களின் போது இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. பாதுகாப்பு அமைச்சின் இணையதளத்தின் பிரகாரம், பின்வருவோர் அதிரடிப் படை தலைவர்களாக இருந்து வந்துள்ளார்கள் : பிரிகேடியர் றோகண பண்டார (அதிரடிப் படை 2) பிரிகேடியர் சத்தியபிரிய லியனகே (அதிரடிப் படை 3) கேர்ணல் நிஷாந்த வன்னியாராச்சி(அதிரடிப் படை 4)கேர்ணல் ஜி. வி. றவிப்பிரிய(அதிரடிப் படை 8).

120. *ஆளணியினர் (Staff)*: பட்டாள மட்டத்திலிருந்து மேலே செல்லும் ஒவ்வொரு அலகும், திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றுவதற்கு தளபதிக்கு உதவும் தொழில்சார் ஆலோசகர்களைக் கொண்ட ஒரு ஆளணியை உள்ளடக்குகின்றது.

[51] ஒரு நிரந்தர படைப் பிரிவு மூன்று படையணிகளைக் கொண்டிருந்தது ( ஒரு படையணியில் 3 பட்டாளங்கள் - மொத்தம் 9). அதிரடிப் படை இரு படையணிகளைக் கொண்டிருந்தது. (மொத்தம் 6 பட்டாளங்கள்)




**வரைபடம் 1: வன்னிப் போரின் போது இலங்கை இராணுவத்தின் படை அணிவரிசை**

**இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு**

121. இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு போரின் பின்புலத்தில் புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கும் அதன் வகிபங்குக்கு மேலதிகமாக, இராணுவச் சோதனைச் சாவடிகள்,வடிகட்டும் நிலையங்கள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களை அடையாளம் காணுதல் மற்றும் விசாரணை செய்தல் என்பவற்றிலும் அது ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்துள்ளது. மோதலின் முடிவுக் காலப் பிரிவின் போது மேஜர் ஹேந்தவித்தாரண அப்பிரிவுக்குத் தலைமை தாங்கினார்.

**இலங்கை கடற்படை**

122. இலங்கை கடற்படை இந்த மோதலில் பெருமளவுக்கு சம்பந்தப்பட்டிருந்ததுடன், குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகளுடன் சண்டையிடுதல் மற்றும் புலிகள் இயக்கத்தின் விநியோக மார்க்கங்களைத் தடுத்தல் என்பவற்றிலும் அது பங்குபற்றியிருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தப்பிச் செல்லும் சிவிலியன்களை கண்காணிப்பதிலும், வன்னியிலிருந்து புறப்பட்டுச் செல்லும் படகுகளைக் கண்காணிப்பதிலும் அது ஒரு பாத்திரத்தை வகித்து வந்தது.இராணுவத்திற்கு தரை வழிச் செயற்பாடுகளின் போது, கடற்படைத் துப்பாக்கிச் சூட்டு ஆதரவை வழங்கியதன் மூலமும் அது உதவியது. மேலும்,வன்னிக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் கப்பல்களுக்கு

சரக்குகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதல் என்பற்றை பரிசோதனை செய்வதிலும் அது ஈடுபட்டிருந்தது. கடற்படை தனக்குச் சொந்தமான புலனாய்வு சேவையையும் கொண்டிருந்தது.

123. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கிய காலப் பிரிவின் போது கடற்படையின் தளபதிகளாக பொறுப்பு வகித்தவர்கள் வருமாறு: அட்மிரல் டி. டபிள்யு. கே. சதகரி(ஜனவரி 2001 – செப்டம்பர் 2005),அட்மிரல் வசந்த கரன்னாகொட (செப்டம்பர் 2005 –யூலை 2009) அட்மிரல் ரீ.எஸ்.ஜி. சமரசிங்க(யூலை 2009 - 1 ஜனவரி 2011) அட்மிரல் டி. டபிளயு.எஸ். திசாநாயக்க (ஜனவரி 2011 – செப்டெம்பர் 2012).[52]

**இலங்கை விமானப்படை**

124. விமானப்படை மூன்று ஆயுதப்படைகளில் அளவில் மிகச் சிறிய படையாகும். இலங்கை விமானப் படை 13 விமானப் படையணிகளையும், ஒரு தரைப் படையணியையும் கொண்டுள்ளது. தரைப் படையணி விமானத் தளங்களின் பாதுகாப்புப் பொறுப்பை வகித்து வருகின்றது. இலங்கைத் தீவு ஒரு வான் பாதுகாப்புக் கட்டளைப் பிரதேசமாகவும், வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நான்கு வலய கட்டளைப் பிரதேசங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டளைப் பிரதேசமும் ( ஒரு நட்சத்திர அந்தஸ்தைக் கொண்ட) எயார் வைஸ் மார்ஷல் ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருகின்றது. வலயக் கட்டளை அதிகாரிகள் அனைத்து விமானப் படையணிகளையும், விமானத் தளங்களையும் கடடுப்படுத்தி வருவதுடன், விமானப்படைத் தலைமையகத்தில் செயற்பாடுகள் இயக்குனரகத்தினால் தீர்மானிக்கப்படும் விமானப்படைச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்து வருகின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இராணுவம் அல்லது கடற்படைச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் விதத்திலான பரந்த வீச்சிலான கருமங்கள் விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

- முக்கியமான இலக்குகள் மீது முன்னரே திட்டமிடப்பட்ட குண்டுத் தாக்குதல்களை நடத்துதல் (உட்கட்டமைப்பு வசதிகள் அல்லது உயர் மதிப்பு மிக்க தனிநபர்கள்) - இத் தாக்குதல்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உயர் வான் பரப்பிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

- மிக நெருக்கமான வான்வெளி ஆதரவு (தரைத் தாக்குதல் உதவி எனவும் அழைக்கப்படுகின்றது). இச்செயறபாட்டின் போது, தாழப் பறக்கும் விமானங்கள், காலாட்படை அல்லது கவச வாகன படைகளின் முன்னகர்வுகளின் போது நேரடி முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் உபாயரீதியான இலக்குகள் மீதான தாக்குதல்களைநடத்துகின்றன.

- வேவு பார்க்கும் விமானங்களை(ஆளில்லா விமானங்களையும் உள்ளடக்கிய விதத்தில்) பயன்படுத்துதல். இவை புகைப்பட மற்றும் வீடியோக் கமராக்களைக் கொண்டிருப்பதுடன், செயற்பாட்டு மற்றும் இலக்கு தொடர்பான தீர்மானமங்களுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்குகின்றன.

125. குறிப்பாக மூன்று விமானப் படை அணிகள் மோதலில் சம்பந்தப்பட்டிருந்தன:

[52] www.navy.lk

இல.10 படையணி - கட்டுநாயக்காவிலிருந்து கபீர் தரைத்தாக்குதல் விமானத்தை இயக்குதல்[53]
இல.12 படையணி - கட்டுநாயக்காவிலிருந்து மிக் 27 தாக்குதல் விமானத்தை இயக்குதல்
இல.111 படையணி - வவுனியாவிலிருந்து AIAஆளில்லாத புலனாய்வு விமானத்தை இயக்குதல்[54]

126. இலங்கைக்கான புலன் விசாரணைக் குழு கவனத்தில் எடுத்த காலப்பிரிவின் போது விமானப்படைத் தளபதிகளாக இருந்தவர்கள் வருமாறு: எயார் சீப் மார்ஷல் ஜி.டீ.பெரேரா (16 யூலை 2002 –யூன் 11 2006) எயார் சீப் மார்ஷல் டபிள்யு. டி. ஆர் .எம். ஜே. குணதிலக (யூன் 11, 2006 – பெப்ரவரி 27, 2011).[55]

**அரச புலனாய்வுச் சேவை**

127. அரச புலனாய்வுச் சேவை பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையிடுகின்றது. ஆயுதமோதலின் இறுதிக் கட்டத்தின் போது செயற்பட்டு வந்த பெருந்தொகையான அமைப்புக்களில் அரச புலனாய்வுச் சேவையும் ஒன்றாகும். 2009 ஏப்ரல் மாதத்தில் Business Today சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில்,அச்சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொலிஸ்மா அதிபரும் - குற்றவியல் புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பல்வேறு புலனாய்வு சேவைப் பிரிவுகள் பாதுகாப்புச் செயலாளருடன் நடத்திய வாராந்தக் கூட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் மிக நெருக்கமான ஒருங்கிணைப்புப் செயற்பாடுகள் குறித்து தெரிவித்திருந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ளும் பொருட்டு, பொலிஸ் புலனாய்வு பிரிவு, அரச புலனாய்வு சேவைகள் மற்றும் இராணுவ புலனாய்வு இயக்குனரகம் என்பவற்றையும் உள்ளடக்கிய புலனாய்வு அமைப்புக்கள் இவ்விதம் ஒருங்கிணைப்புடன் செயற்பட்டு வந்தன.[56]

**இலங்கைப் பொலிஸ்**

128. இலங்கைப் பொலிஸ் முதன்மையாக சட்டத்தை அமுல் செய்வதற்கு பொறுப்பாக இருந்து வருகின்றது. சட்டம் ஒழுங்கை பராமரித்து வருதல், குற்றச் செயல்களைத் தடுத்தல் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பாக புலனாய்வுகளை மேற்கொள்ளல் என்பன பொலிஸின் பொறுப்புக்களாக இருந்து வருகின்றன. பொலிஸ் திணைக்களம் 2013 ஆகஸ்ட் மாதம் வரையில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டு வந்தது. அதன் பின்னர், அது புதிதாக அமைக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் எடுத்து வரப்பட்டது.[57]இலங்கைப் பொலிஸ், பொலிஸ்மா அதிபரின் தலைமையின் கீழ்

---

53 வடபுல மோதல் பிரதேசத்திலிருந்து தோராயமாக 25 நிமிட விமானப் பயணம்

54 இலங்கை இரண்டாவது ஆளில்லாத விமானப் படையணியொன்றையும் கொண்டிருந்தது. அதுவும் சம்பந்தப்பட்டிருக்க முடியும் - No. 112 Sqn. Operating Emit Blue Horizon reconnaissance UAV. அது வீரவில விமானத் தளத்தில் நிலைகொண்டிருந்தது. வீரவில பகுதி நாட்டின் தென் கரையோரப் பகுதியில் அமைந்துள்ளது. அதன் காரணமாக அது விமான பயண பரப்புக்கு வெளியில் இருந்து வந்தது. அதன் விமானங்கள் வவுனியா தளத்திலிருந்து இயங்கும் விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்க முடியும்.

55 www.airforce.lk

56 www.businesstoday.lk archive, April 2009.

57 பொலிஸ் தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்து வரக் கூடாது என LLRC பரிந்துரை செய்ததன் பிரகாரம், இது மேற்கொள்ளப்பட்டது. LLRCஅறிக்கை, நவம்பர் 2011

செயற்பட்டு வருவதுடன், அவர் ஜனாதிபதியினால் தெரிவு செய்யப்படுகின்றார். பொலிஸ்மா அதிபர் தேசிய பாதுகாப்புச் சபையின் ஓர் உறுப்பினர் ஆவார்.

129. வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கும் ஒரு கட்டளைக்கூடாக இராணுவமும்,பொலிஸ் கருமங்களை மேற்கொண்டிருந்தது. அந்தக் கட்டளை மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டு வந்ததுடன், இறுதியாக 2015 பெப்ரவரி 02 ஆம் திகதி அது புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அது செயலிழந்தது. மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறு, பாதுகாப்புச் செயலாளர், அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழ், தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர் நடவடிக்கை என்பன தொடர்பாக ஆட்களை கைது செய்யுமாறு கட்டளையிடுவதற்கான நேரடி அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

130. தற்போதைய பொலிஸ்மா அதிபரான என்.கே. இளங்ககோன் 2011 யூலை மாதம் 4 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார். அவருக்கு முன்னர் மகிந்த பால சூரிய பொலிஸ்மா அதிபராக இருந்து வந்ததுடன், அவர் அப்பதவிக்கு 2009 நவம்பர் 3 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு முன்னர் ஜயந்த விக்ரமரத்ன ( நியமனம் யூலை 2008), விக்டர் பெரேரா ( நியமனம் அக்டோபர் 2006), சந்திரா பெர்னாண்டோ (நியமனம் அக்டோபர் 2004), இந்திரா டி. சில்வா (நியமனம் டிசம்பர் 2003), ரீ. ஆனந்தராஜா (நியமனம் 2002) ஆகியோர் இப் பதவியை வகித்து வந்தனர்.




**வரைபடம் 3: இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு**

131. இலங்கைப் பொலிஸ் ஐந்து சரகங்களைக் கொண்டுள்ளது: வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் கொழும்பு பிராந்தியம். ஒவ்வொரு சரகமும் (Range) பல பிரிவுகளை (Divisions) கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (SSP) ஒருவரின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இது மறுபுறத்தில் ‘மாவட்டங்களை’ கொண்டிருப்பதுடன், ஒவ்வொரு மாவட்டமும் பொலிஸ் அத்தியட்சகர் (SP) ஒருவரின் கீழ் இருந்து வருகின்றது. ஒவ்வொரு மாவட்டமும் இரண்டு அல்லது மூன்று பொலிஸ் நிலையங்களைக் கொண்டிருப்பதுடன்,ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் பிரதம பொலிஸ் பரிசோதகர் (CI) ஒருவரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது. ஒரு சில பொலிஸ் நிலையங்கள் சிறு காவல் நிலையங்களை கொண்டிருப்பதுடன், பொதுமக்கள் தமது உள்ளூர் பிரதேசங்களில் பொலிஸாரை அணுகுவதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு அந்த நிலையங்கள் புறநகர் பகுதிகளில் அல்லது மாவட்டங்களுக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ளன. பிராந்தியபொலிஸ் சரகங்கள் தவிர, பெருந்தொகையான கரும ரீதியான சரகங்கள் இருந்து வருகின்றன. அவை குறிப்பிடப்பட்ட ஒரு கருமம் தொடர்பான தேசிய ஆணைப்பத்திரத்தைக் கொண்டுள்ளன. இந்த அறிக்கையின் நோக்கத்துக்கென மிக முக்கியமான கருமரீதியான சரகங்கள் விசேட அதிரடிப்படை, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு (TID) மற்றும் குற்றவியல் புலனாய்வுத்

திணைக்களம்[58]என்பனவாகும். ஆணைப்பத்திரம் உள்ளடக்கிய காலப் பிரிவின் தொடக்கத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான புலனாய்வுப் பிரிவு ஒன்றும் (DIU) இருந்து வந்தது.

### விசேட அதிரடிப்படை (STF)

132. விசேட அதிரடிப் படை பொலிஸ் திணைக்களத்துக்குள் இருந்து வரும் மதிப்புமிக்க துணைப்படை அலகொன்றாகும். குறிப்பாக, கிழக்குப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பொருட்டு பொலிசுக்கு நேரடி ஆதரவை வழங்குவதற்கென 1983 ஆம் ஆண்டில் ஜனாதிபதியின் கட்டளை ஒன்றின் பிரகாரம் அது உருவாக்கப்பட்டது. விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களிலும் பார்க்க பெருமளவுக்கு இராணுவ உத்தியோகத்தர்களின் தோற்றத்திலேயே இருந்து வருகின்றார்கள். அவர்கள் பச்சைவட்டத் தொப்பிகளையும், வரிக்கோடிட்ட சீருடைகளையும் அணிகின்றார்கள். அதே போல இலங்கை விமானப்படையினால் பயன்படுத்தப்பட்டு வரும் AK–47 ரைபல் துப்பாக்கிகளையும் உள்ளடக்கிய விதத்தில் அவர்கள் சினைப்பர் துப்பாக்கிகள்,உந்துகனைகள், கிறைனைட் லோன்ஜர்கள், பிஸ்டல்கள் மற்றும் AR -15 றைபல்கள் போன்ற விசேட இயல்பிலான ஆயுதங்களைக் கொண்டுள்ளனர். விசேட அதிரடிப் படை பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படுகிறது.

133. விசேட அதிரடிப்படையின் தற்போதைய தலைமைக் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர். டபிள்யு. எம். சீ. ரணவன (நியமனத் திகதி மார்ச் 24, 2001) ஆவார். அவருக்கு முன்னர் (மார்ச் 24, 2008 இல் நியமனம் செய்யப்பட்ட) பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே. எம். எல். சரத்சந்திரவும், (செப்டெம்பர் 10, 2003 இல் நியமனம் செய்யப்பட்ட) பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் லிவ்கேயும், ( யூன் 01,1998 இல் நியமனம் செய்யப்பட்ட, பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் குணதிலக்கவும்.[59]இதன் கட்டளைத் தளபதிகளாக கடமையாற்றி வந்தனர்.

### குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் (CID)

134. குற்றவயில் புலனாய்வுத் திணைக்களம் பிரதானமாக பாரதூரமான குற்றச் செயல்கள் மற்றும் ஒழுங்கமைந்த குற்றச் செயல்கள் என்பன தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக இருந்து வருகின்றது. மேலும், அது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.[60] புலனாய்வுப் பொலிஸார் சீருடை அணியாத பொலிஸ் உத்தியோகத்தர்களாக இருந்து

58 Commanded by a Deputy Inspector General of Police.

59 www.police.lk

60 பொலிஸ் மா அதிபர், மேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களம், பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களம் மற்றும் கொழும்பு குற்றப் பிரிவு என்பவற்றின் தலைமை அதிகாரிகள் வழங்கிய விரிவான நேர்காணல்கள் 2009 ஏப்ரல் மாதம் 'Business today' சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இந்தக் கிளைகள் அனைத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கெதிரான பயங்கரவாத எதிர் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்தன என்பதனை இந்த நேர்காணல்கள் தெளிவுபடுத்துகின்றன. இதில் எந்தப் பிரிவு தெளிவான நிபுணத்துவத்தைக் கொண்டிருந்தது என்ற விடயம் தெளிவாக தெரிய வரவில்லை.

வருவதுடன், அவர்கள் கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் பகுப்பாய்வுப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக உள்ளனர். கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்தின் நான்காவது மாடியில் அமைந்திருக்கும் அதன் அலுவலகம் தடுப்புப் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பலர் விசாரணைக்கென எடுத்துச் செல்லப்படும் ஓரிடமாக குறிப்பாக நன்கு அறியப்பட்டுள்ளது (சித்திரவதை குறித்த பின்னைய அத்தியாயத்தைப் பார்கவும்). 2009 ஏப்ரல் மாதத்தில் குற்றப்புலனாய்த் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக சிசிர மெண்டிஸ் இருந்து வந்தார். 2009 ஏப்ரல் மாதத்தில் கொழும்பு குற்றப் பிரிவுக்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அநுர சேனானாயக்க தலைமை தாங்கியதுடன், குற்றச் செயல்கள் மற்றும் பயங்கரவாத எதிர் நடவடிக்கைகள் என்பன தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்வதிலும் அவர் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்து வந்தார்.

### பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (TID)

135. பயங்கரவாதப் புலனாய்வுப்பிரிவு 1980 களின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டதுடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டிருக்கும் பயங்கரவாதச் செயல்கள் தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்தி, அவற்றைத் தடுத்து, அவை தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்வது அப்பிரிவின் பொறுப்பாக இருந்து வருகின்றது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு என்பவற்றுக்கிடையில் பொறுப்புக்கள் பிரிக்கப்பபட்டிருக்கும் விதம்தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் கொழும்பு தடுத்து வைப்பு / விசாரணை நிலையம் பொதுவாக ஆறாவது மாடி என குறிப்பிடப்படுகின்றது. 2009 ஏப்ரல் மாதத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சி.என்.வாகிஷ்ட பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்து வந்தார்.[61]

### காணாமல் போனவர்கள் தொடர்பான புலனாய்வு அலகு (DIU)

136. காணாமல் போன பெருந்தொகையான நபர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கும், அவற்றுக்குப் பொறுப்பான நபர்களை சட்டத்தின் முன்னால் கொண்டு வருவதற்குமென காணாமல் போனோர் தொடர்பான வலய விசாரணை ஆணைக்குழுக்கள் 1990 களில் விசாரணைகளை நடத்தின.[62] இந்த வலய விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரையின் பேரில் 1997 ஆம் ஆண்டில் காணாமல் போனவர்கள் தொடர்பான புலனாய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது. பலவந்தமான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான அத்தியாயம்VIII இல் எடுத்து விளக்கப்பட்டவாறு, குறிப்பாக 2006 ஆம் ஆண்டின் பின்னர் இந்த அலகு படிப்படியாக வலுவிழந்து வந்தது.அதன் பின்னர் அது கலைக்கப்பட்டது.

### சிவில் பாதுகாப்பு திணைக்களம் (CSD)[63]

137. எல்ரீரீஈ இயக்கத்தின் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வந்த எல்லைக் கிராமங்கள் மற்றும் தொலைதூரக் கிராமங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு 1980 களின் நடுப்பகுதியில் ஒரு தொண்டர் சேவையாக இலங்கை தேசிய ஊர்காவற்படை ஸ்தாபிக்கப்பட்டது. அது தொடக்கத்தில் பொலிஸ்

---

61 நேர்காணல் Business Today, April 2009, www.businesstoday.lk.

62 மனித உரிமைகள் கமிட்டிக்கான இலங்கையின் நான்காவது பருவ கால அறிக்கை CCPR/C/LKA/2002/4, அக்டோபர் 18, 2002

63 http://www.csd.lk/index.php?option=com_content&view=article&id=52&Itemid=59

திணைக்களத்தின் கீழ் செயற்பட்டு வந்தது. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் இணையதளத்தின் பிரகாரம், 2006 செப்டம்பர் மாதத்தில் ஊர்காவற்படைச் சேவை ஜனாதிபதியின் கட்டளை ஒன்றின் மூலம் மீளமைக்கப்பட்டதுடன், பாதுகாப்பு அமைச்சின் கீழ் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனையடுத்து,இராணுவச் சீருடைகள் வழங்கப்பட்டதுடன், முன்னர் தொண்டர் அடிப்படையில் பணியாற்றியவர்களுக்கு சம்பளங்கள் வழங்கப்பட்டன. பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான கருமங்களில் பொலிஸாருக்கும், இராணுவத்துக்கும் உதவுவதே சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணியாகும். முதலாவது பணிப்பாளர் நாயகமாக 2006 ஆம் ஆண்டில் ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர நியமனம் செய்யப்பட்டார். 2009 ஆம் ஆண்டில் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார். தற்போதைய சிவில் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் 2015 பெப்ரவரி மாதத்தில் நியமனம் பெற்றதுடன், அவர் ஒரு சிவிலியனாக இருந்து வருகின்றார்.

## துணைப் படைக் குழுக்கள்

138. இங்கு கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் குழுக்கள் இலங்கை பாதுகாப்புப் படைகளுடனும், அதேபோல சுதந்திரமாகவும் பாதுகாப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பிரதான தமிழ் துணைப் படைக் குழுக்கள், கட்சிகள் என்பனவாகும். 'துணைப்படைக் குழுக்கள்' என்ற பதம் மேலே குறிப்பிடப்பட்ட ஊர்காவல் படை அமைப்பைக் குறிப்பிடுவதற்கும் சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஊர்காவல் படை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்தது. எவ்வாறிருப்பினும், ஊர்காவல் படையினரின் பாதுகாப்புப் படையினருடனான தொடர்புகள் உத்தியோகபூர்வமாக இருந்து வருகின்றன. ஆனால், கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் குழுக்களைப் பொறுத்தவரையில் அரசாங்கப் படைகளுடன் அவை கொண்டிருக்கும் தொடர்புகள் மறுக்கப்பட்டு வந்துள்ளன.

139. இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, வேறு பல விசேட அறிக்கையாளர்கள் மற்றும் ஏனையோர் ஆகிய தரப்பினரால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளவாறு, துணைப்படைக் குழுக்கள் அரச பாதுகாப்புப் படைகளுடன் கொண்டிருக்கும் தொடர்பு காலப்போக்கில் தெளிவாக தெரியவந்திருந்தது. நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான மரணதண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் 2008 மே 14 ஆம் திகதி வெளியிட்ட அவருடைய தொடர் நடவடிக்கை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் : "இந்தக் குழுக்கள் இனிமேலும் உண்மையில் சுயாதீனமான ஆயுதக் குழுக்களாக இருந்து வரவில்லை என்பதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளன. அதற்குப் பதிலாக அவை பாதுகாப்புப் படைகளின் பணிப்புரை மற்றும் உதவி என்பவற்றைப் பெற்று வருகின்றன."[64]அரசாங்கத்துக்கும், (குறிப்பாக பாதுகாப்புச் செயலாளருக்கும்),பாதுகாப்புப் படைகளுக்கும் மற்றும் துணைப் படைக் குழுக்களுக்குமிடையிலான (குறிப்பாக இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை)இணைப்புக்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினாலும், ஏனைய தரப்புக்களாலும் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட சாட்சியங்களினால் எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் கருணா அணி மற்றும் ஈபிடிபி என்பவற்றுக்குமிடையில் மிக நெருக்கமான தொடர்புகள் இருந்து வரும் விடயத்தை சாட்சிகள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

[64] A/HRC/8/3/Add.3, para 50

140. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டில் சமா்ப்பித்த அதன் இடைக்காலப் பரிந்துரைகளில் ‘‘ஆயுதக் குழுக்களினால் தொடா்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கப்பம் வாங்குதல், கடத்தல் மற்றும் ஏனைய குற்றச் செயல்கள் என்பவற்றின் காரணமாக மக்களுடைய மனங்களில் அச்ச உணா்வு நிலவி வருகின்றது’’ என்ற விடயத்தை வலியுறுத்தியதுடன், “உயா் முன்னுரிமைக்குரிய விடயமாக”[65] இந்த ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென பரிந்துரை செய்திருந்தது. இதே ஆணைக்குழு 2011ஆம் ஆண்டில் சமா்ப்பித்த அதன் இறுதி அறிக்கையில்,அது முன்வைத்திருந்த இடைக்காலப் பரிந்துரை தொடா்பாக நடவடிக்கை எடுக்கத் தவறியமை குறித்து கவலை தெரிவித்திருந்ததுடன், பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:“உண்மையைக் கண்டறியும் நோக்கத்துடனும், போதியளவு சாட்சியங்கள் இருந்து வரும் சந்தா்ப்பங்களில் குற்றமிழைத்தவா்களுக்கெதிராக குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கெனவும் சட்ட விரோதமான ஆயுதக் குழுக்களுக்கெதிராக முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் தொடா்பாக பொருத்தமான புலன்விசாரணைகள் நடத்தப்படுதல் வேண்டும்”.[66]

### கருணா குழு/தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் (TMVP)

141. கேர்ணல் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூா்த்தி முரளீதரன் தொடக்கத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக இருந்து வந்ததுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வந்தாா். 2004 ஆம் ஆண்டு கருணா விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலகியதுடன், அவருடன் பெருந்தொகையான போராளிகளையும் எடுத்துச் சென்று, ஒரு துணைப்படைக் குழுவை உருவாக்கினாா். அக்குழு பொதுவாக கருணா குழு என்று அழைக்கப்படுகின்றது. அந்தக் குழு குறிப்பாக,போா் நடவடிக்கைகள் தீவிரமடைந்த 2006 இன் போது அரசாங்கப் பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செயற்பட்டு வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

142. போா் நிறுத்த உடன்படிக்கையின் சரத்துக்களின் பிரகாரம், அரசாங்கத்தினால் கருணா குழுவின் ஆயுதங்கள் களையப்பட்டிருத்தல் வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பகிரங்க விசாரணைகளின் போது, 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி ஒரு அறிக்கையை சமா்ப்பித்த கோத்தாபய ராஜபக்ஷ கருணா குழுவின் (அதேபோல ஈபிடிபி, பின்னா் கருணா அணியிலிருந்து பிரிந்து சென்ற பிள்ளையான் குழு போன்ற துணைப்படைக் குழுக்களினதும்) ஆயுதங்கள் களையப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தாா். ஆனால்,‘‘கருணா நீண்ட காலமாக அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்திருப்பதாக” குறிப்பிட்ட அந்த அறிக்கை, அச்சந்தா்ப்பத்தில் அவா்கள் “தமது சொந்தப் பாதுாப்புக்கென ஆயுதங்களை வைத்திருக்க வேண்டிய நிலை நிலவி வந்தது” என்ற விடயத்தை ஏற்றுக் கொண்டிருந்தது.

143. பிளவின் பின்னா் விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்த புலனாய்வுத் தகவல்களை வழங்குவதில் கருணா குழு ஒரு முதன்மையான பாத்திரத்தை வகித்து வந்துள்ளது என்ற விடயம் தொடா்பாகவும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கெதிராகவும், புலிகள் இயக்கத்துடன் தொடா்புகளை வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் நபா்களுக்கெதிராகவும் அக்குழு மறைமுகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுஎன்ற விடயம் தொடா்பாகவும்இலங்கை தொடா்பான புலன்

65 https://llrclk.files.wordpress.com/2011/02/interim-recommendations.pdf

66 LLRC இறுதி அறிக்கை, பந்தி 9.73, பந்தி 9.74 http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201112/FINAL%20LLRC%20REPORT.pdf

விசாரணைக்குழு தகவல்களை திரட்டியுள்ளது. குறிப்பாக, இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை அல்லது குறிப்பாக விசேட அதிரடிப்படை என்பவற்றுடன் இணைந்து அல்லது என்பவற்றின் சார்பாக அந்தக் குழு செயற்பட்டிருப்பதாக் கூறப்படுகின்றது. ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போதும், அதனை உடனடுத்தும் ஆயுதங்களைக் ஒப்படைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளை அடையாளம் காட்டுவதற்கு கருணா குழு உறுப்பினர்கள் பாதுகாப்பு படையினருக்கு உதவியிருந்தார்கள். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வசித்து வந்த முகாம்களிலும் அவர்கள் இதே மாதிரியான ஒரு பாத்திரத்தை வகித்து வந்திருந்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் சடலத்தை முதலில் அடையாளம் காண்பதற்கென கருணா நந்திக்கடல் ஏரிக்கு எடுத்து வரப்பட்டிருந்தார்.

144. கருணா குழு அதனுடன் இணைந்த விதத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) என்ற பெயரில் ஒரு அரசியல் கட்சியை அமைத்ததுடன், அது 2007 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக பதிவு செய்யப்பட்டது. இக்கட்சி 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது. கருணா 2009 மார்ச் மாதத்தில் ராஜபக்ஷ அரசாங்கத்தில் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

145. சட்டவிரோதமான கொலைகள் மற்றும் பலவந்தமான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான இந்த அறிக்கையின் அத்தியாயங்கள் XIமற்றும் XIIIஎன்பன கருணா குழு உத்தியோகபூர்வ பாதுகாப்புப் படைகளுடன் கூட்டாக இணைந்து மேற்கொண்ட செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்களைப் பயன்படுத்துதல் என்பன தொடர்பான அறிக்கையின் இந்தப் பிரிவு கருணா குழு / TMVP சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான விபரங்களை எடுத்து விளக்குகின்றது. இதனையடுத்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பட்டியலில் இக்குழு உள்ளடக்கப்பட்டிருந்தது.

**பிள்ளையான் குழு**

146. தொடக்கத்தில் பிள்ளையான் கருணாவின் பிரதித் தலைவராக இருந்து வந்தார் ஆனால், 2007 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு பிளவு ஏற்பட்டதுடன், அவர் தனது சொந்தக் குழுவை அமைத்துக் கொண்டார். 2008 மே மாதத்தில் அவர் கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக நியமனம் செய்யப்பட்டார்.

**இனியபாரதி**

147. பத்திரிகைச் செய்திகளின் பிரகாரம்,இனியபாரதி என அழைக்கப்படும் கே.புஷ்பகுமார்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் 2011 ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டார். இனியபாரதியின் குழு சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக ஐ.நா பாதுகாப்புச் சபையின் 1612 நடைமுறையின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.[67]

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)**

---

[67] அவர் 2012 ஏப்ரல் மாதத்தில் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டார்: சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை, ஏப்ரல் 26, 2012, A/66/782-S/2012/261

148. ஈபிடிபி 1990 ஆம் ஆண்டில் பெருந்தொகையான தமிழ்க் குழுக்களிலிருந்துஎழுச்சியடைந்ததுடன், அது இன்று வரையில் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றது. அரசாங்க ஆதரவுடன் இணைந்த விதத்தில் ஈபிடிபி பெருமளவுக்கு அரசியல் நோக்கிலான ஓர் அமைப்பாக உருவாகியதுடன், 1994 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஒருசில பாராளுமன்ற ஆசனங்களை வென்று யாழ்ப்பாண மாவட்டத்தில் தன்னை நன்கு ஸ்தாபித்துக் கொண்டது. டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிகள் குமாரதுங்க மற்றும் ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக் காலங்களின் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சுப் பொறுப்புக்களையும் வகித்து வந்துள்ளார்.

149. ஈபிடிபியுடன் இணைந்த துணைப் படைக்குழு பழிக்குப் பழிவாங்கும் கொலைகள் மற்றும் ஏனைய வன்முறைச் சம்பவங்கள் என்பவற்றில் சம்பந்தப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டில் மோதல் முடிவுக்கு வந்த கட்டத்தின் போது,இராணுவத்தால் நடத்தப்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்தவர்கள் தங்கியிருந்த மூடுண்ட முகாம்களில் ஈபிடிபி செயற்பட்டு வந்ததாக அடிக்கடி குறிப்பிடப்பட்டது. முகாம்களில் ஈபிடிபி அனுபவித்து வந்த நடமாட்டச் சுதந்திரம், அவர்களுடைய பிரசன்னம் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றுக்கான உத்தியோகபூர்வமான ஒப்புதல் கிடைத்திருந்தது என்பதனை எடுத்துக் காட்டியது.

## தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்(LTTE)

150. எல்ரீரீஈ 1970 களில் ஒரு இராணுவ மற்றும் அரசியல் சக்தியாக எழுச்சியடைந்தது. தொடக்கத்தில் அது பல்வேறு தீவிரவாதக் குழுக்களில் ஒன்றாக இருந்து வந்தது. தமிழீழ விடுதலை அமைப்பு(TELO),ஈழபுரட்சிகர மாணவர் அமைப்பு(EROS),ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(EPRLF) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம்(PLOTE) என்பவற்றை உள்ளடக்கிய குழுக்களில் அதுவும் ஒன்றாக இருந்து வந்தது. காலப்போக்கில் அது தமிழ் மக்களின் ‘‘ஏக பிரதிநிதியாகவும் சட்டபூர்வமான பிரதிநிதியாகவும்’’, தனது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டது.

151. 1980 களில் எல்ரீரீஈ இயக்கம் இலங்கை இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தக் கூடிய ஆற்றலை அதிகரித்தளவில் எடுத்துக் காட்டியதுடன், பிரதேசங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. அதன் மூலம் வடபுலத்தில் அது தனது ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டதுடன், நாட்டின் கிழக்கு மாகாணத்திலும் பிரதேசங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. 2002 இல் போர் நிறுத்த ஒப்பந்தம் உருவாகிய காலப் பிரிவின் போது அது பொலிஸ், நீதிமன்றங்கள் மற்றும் தடுப்புக் காவல் நிலையங்கள் போன்ற அரை அரசு நிறுவனங்களையும் கூட பராமரித்து வந்தது.

152. கொழும்பு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர்கள் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசங்களில் தொடர்ச்சியாகப் பணியாற்றி வந்தமை ஓர் எதிர்முரண் நிலையாகும். மோதலின் முடிவு வரையிலும் கூட சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சேவைகளை வழங்கும் விடயத்தில் அவர்கள் செயற்பட்டு வந்தார்கள். மேலும், ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போது,எல்ரீரீஈகட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் நிவாரண உதவி தொடர்பான கட்டளைகளை வழங்குதல், அவற்றைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றுக்கான முக்கிய புள்ளிகளாகவும் அரசாங்க அதிபர்களே இருந்துவந்தனர்.

153. எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவப் பிரிவு காலப்போக்கில் பாரம்பரிய இராணுவம் ஒன்றுக்கு இணையான விதத்தில் தன்னை ஒழுங்கமைத்துக் கொண்டது.

சீருடையுடன் கூடிய துருப்புக்களைக் கொண்டபடையணிகள் உருவாக்கபட்டதுடன், அவர்கள் நிலையான அமைவிடங்களில் தரித்திருந்தனர். எவ்வாறிருந்தபோதிலும், மறைந்திருந்து தாக்கும் செயற்பாடுகளையும், நாடு முழுவதிலும் தற்கொலைத் தாக்குதல்களையும் அவ்வியக்கம் தொடர்ந்து முன்னெடுத்து வந்தது. 2009 ஆம் ஆண்டின் ஆயுத மோதலின் இறுதிக் கட்டம் வரையில் இந்நிலைமை நீடித்தது. ஆனால், 2002 மற்றும் 2005 காலப்பிரிவுக்கிடைப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஆரம்பகாலப் பிரிவின் போது இத்தாக்குதல்களில் ஒரு மந்த நிலைமை காணப்பட்டது.

154. ஐக்கிய அமெரிக்கா மீது இடம்ெற்ற 9/11 தாக்குதல்களை அடுத்தும், ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் 'பயங்கரவாதத்தின் மீதான போர்' நடத்தப்பட்டதையடுத்தும் சர்வதேச சமூகத்தின் சொல்லாடல்கள் மாற்றமடையத் தொடங்கியதுடன்,பெருந்தொகையான அரசுகள் எல்ரீரீஈ இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டிருந்தன. இருந்தபோதிலும், அந்த இயக்கம் பாரிய எண்ணிக்கையிலான புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களுக்கு மத்தியில் தொடர்ந்தும் நிதிகளைத் திரட்டியது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது குற்றச் செயல்கள் மற்றும் கப்பம் வாங்குதல் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது.[68] மேலும், எல்ரீரீஈ இயக்கம் உலகெங்கிலும் மிக வலுவான வர்த்தக மற்றும் ஊடகவளங்களைக் கொண்டிருந்ததுடன்,அது முன்வைத்து வந்த கோரிக்கைக்கு அவை பிரசார ஆதரவினை வழங்கியது.

155. எல்ரீரீஈ இயக்கம் ஒரு இராணுவப் பிரிவையும், அரசியல் பிரிவையும், சர்வதேச செயலகத்தையும் கொண்டிருந்தது. அதன் அரசியல் பிரிவும், சமாதானச் செயலகமும் அரசாங்கம் மற்றும் சமாதானச் செயன்முறையில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஆகிய தரப்பினருடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டன. மீளாய்வுக்குட்படுத்தும் இக் காலப்பிரிவின் போது சுப்பையா பரமு தமிழ்செல்வன் அரசியல் துறைத் தலைவராக இருந்துவந்தார். அவர் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் விமானத்தாக்குதலொன்றின் மூலம் கொல்லப்பட்டார். அதன் பின்னர் அந்த இயக்கத்தின் முன்னாள் பொலிஸ் தலைவரான பாலசிங்கம் நடேசன் அரசியல் பிரிவின் தலைவராகச் செயற்பட்டார். மேலும், அப்பிரிவு ஆட்சேர்ப்பு மற்றும் ஒரு சில சந்தர்ப்பங்களில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து வந்த பிரதேசங்களிலிருந்து வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்குதல் என்பவற்றையும் மேற்கொண்டு வந்தது. கஸ்ட்ரோ என அழைக்கப்பட்ட வீரகத்தி மணிவண்ணனின் கீழ் செயற்பட்டு வந்த சர்வதேச செயலகம் பிரச்சாரம், நிதி திரட்டுதல் மற்றும் வெளிநாடுகளில் பொருட் கொள்வனவு என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்துவந்தது. 2009 மே மாதம் போர் முடியும் வரையில் சீவரத்தினம் புலித்தேவன் சமாதானச் செயலகத்தின் தலைவராக இருந்துவந்தார்.

156. இந்தக் கட்டமைப்புக்களை மேற்பார்வை செய்வதற்கென மத்திய ஆட்சிக் குழு ஒன்று இருந்துவந்ததுடன், எல்ரீரீஈ இயக்கத்தின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் அதற்குத் தலைமை தாங்கினார். இராணுவப் பிரிவுக்கும் அவரே தலைவராக இருந்துவந்தார். அந்த இயக்கத்தின் பொலிஸ் பிரிவுக்கு 2007 நவம்பர் வரையில் பீ.நடேசன் தலைவராக இருந்துவந்ததுடன்,புலனாய்வுப் பிரிவு பொட்டு

[68] சட்ட விரோதமாக இராணுவ உபகரணங்களை பெற்றுக் கொள்ளல், கப்பம் வாங்குதல் அல்லது அத்தகைய ஏனைய விடயங்கள் மீது இந்தப் புலன் விசாரணை கவனஞ் செலுத்தவில்லை. அது தொடர்பாக சம்பந்தப்பட்ட நாடுகளில் புறம்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அம்மானின் தலைமையின் கீழ் இயங்கிவந்தது. (கேர்ணல் சூசை என இயக்கப் பெயரில் அழைக்கப்பட்ட) தில்லையம்பலம் சிவநேசன் கடற்புலிகள் இயக்கத்தின் தளபதியாகச் செயற்பட்டு வந்தார்.

157. எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவம் சாராத பிரிவுகள் குறித்துக் குறிப்பிட வேண்டி இருந்தாலும், இப்பாகம் முக்கியமாக இராணுவப் பிரிவு தொடர்பாகவே கவனம் செலுத்துகின்றது. சாத்தியமான சந்தர்ப்பங்களில், எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவப் போராளிகளுக்கும், நேரடியாக போர் நடவடிக்கைகளில் ஈடுபடாத இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்களுக்குமிடையில் ஒரு வேறுபாட்டினை எடுத்துக்காட்டுவதற்கு இந்த அறிக்கை முயற்சிக்கின்றது. அந்த இயக்கத்தின் இரகசிய இயல்பு காரணமாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு அதன் கீழ்மட்டக் கட்டமைப்பு குறித்த விபரங்களை வழங்க முடியாதுள்ளது.

**எல்ரீரீஈஇயக்கத்தின் இராணுவப் படைகள்**

158. எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவப் பிரிவு ஒரு நிரந்தரப் படை மற்றும் ஒரு ஒதுக்குப் படை என்பவற்றைக் கொண்டிருந்தது. நிரந்தரப் படை, தரை, வான் மற்றும் கடல் பிரிவுகளை (கடற்புலிகள்) கொண்டிருந்ததுடன், ஒரு புலனாய்வுப் பிரிவும், விசேட படைகள் அலகும் இருந்துவந்தன. இயக்கத்தில் இணைந்து கொள்ளுமாறு பெண்கள் ஊக்குவிக்கப்பட்டதுடன், இயக்கத்தின் ஒட்டுமொத்தப் படைப் பலத்தில் அவர்கள் ஒரு கணிசமான பாகமாக இருந்துவந்தனர்.

159. எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவப் பிரிவின் மொத்தப் போராளிகள் எண்ணிக்கை குறித்த துல்லியமான புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் வித்தியாசமானவையாக இருந்து வருகின்றன. அதில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தொடக்கம் 30,000 வரையிலான போராளிகள் இருந்துவந்ததாக வெவ்வேறு மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஆயுத மோதலின் இறுதி மாதங்களின் போது, மரணங்களும், விட்டுச் சென்றமையும் காரணமாக அதன் படைப்பலம் - குறிப்பாக இறுதி வாரங்களின் போது - மேலும் குறைவடைந்திருக்க முடியும். இது தொடர்பான நம்பகமான புள்ளி விபரங்கள் இருந்து வரவில்லை. சுயவிருப்பிலும்,அதேபோல பலவந்தமான விதத்திலும் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு அத்தியாயங்கள் XI மற்றும் XII என்பவற்றில் எடுத்து விளக்கப்பட்டிருப்பதுடன், வயது வந்தவர்கள் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை மற்றும் பிள்ளைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு,பயன்படுத்தப்பட்டமை என்பன தொடர்பான விபரங்களை அவை உள்ளடக்குகின்றன.

160. பிரபாகரன் ஒட்டு மொத்த எல்ரீரீஈஇயக்கத்தின் தலைவராக இருந்ததுடன், இராணுவப்பிரிவின் கட்டளைத் தளபதியாகவும் இருந்துவந்தார். மத்திய ஆட்சிக்குழு ஒரு இராணுவ செயலகத்தைக் கொண்டிருந்ததுடன், அது எல்ரீரீஈ படைப்பிரிவுகளை கட்டுப்படுத்தி, ஒருங்கிணைப்பினை மேற்கொண்டது. அது எல்ரீரீஈ இயக்கத்தின் ஏழு (பின்னர் ஆறு) இராணுவப் பிராந்தியங்களின் தளபதிகளையும் உள்ளடக்கியிருந்தது.

***தரைப்படைகள்***

161. தரைப்படை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவப்பிரிவின் மிகப் பெரிய கூறாக இருந்துவந்ததுடன், அது இரு கட்டளைப் பிரதேசங்களைக் கொண்டிருந்தது. வட மாகாண கட்டளைப் பிரதேசம் (தீபன் என்ற இயக்கப் பெயரில் அழைக்கப்பட்ட) வேலாயுதப்பிள்ளை பகீரதக்குமார் என்பவரின் தலைமையின் கீழ் செயற்பட்டது. அவர் 2009 ஏப்ரலில் கொல்லப்பட்டதனையடுத்து, கேர்ணல் பானு அப்பிரிவின் தலைவராக நியமனம் செய்யப்பட்டார்.கிழக்கு மாகாணக் கட்டளைப் பிரிவு தொடக்கத்தில் கருணாவின் தலைமையின் கீழ் இருந்துவந்ததுடன், கருணாவின் பிரிவின் பின்னர் (கேர்ணல் ரமேஷ் என இயக்கப்

பெயரில்அழைக்கப்பட்ட) கேர்ணல் தம்பிராசா துரைராசசிங்கம் என்பவரின் தலைமையின் கீழ் எடுத்து வரப்பட்டது. மேலும், இவை பல்வேறு பிராந்திய இராணுவங்களைக் கொண்ட ஏழு உப பிரிவுகளாக (கருணாவின் பிளவின் பின்னா் 06 உப பிரிவுகளாக) பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன: யாழ்ப்பாணம் வடக்கு கள முனை, மன்னாா், மணலாறு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் பிராந்தியத் தளபதி ஒருவா் தலைமை தாங்கினாா். தரைப் படை பெருந்தொகையான படையணிகளையும் (Brigades) படைப் பிரிவுகளையும் (Regiments) கொண்டிருந்தது. ஆனால், இவற்றில் இருந்து வந்த மொத்தப் போராளிகளின் எண்ணிக்கை தெளிவாகத் தெரியவில்லை. மேலும், இந்தப் படையணிகளின் உருவாக்கம் உண்மையில் அதன் அளவை பிரதிபலித்தனவா என்ற விடயமும் தெளிவாகத் தெரியவில்லை. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

***விசேட படைகள்***

162. கரும்புலிகள்: கரும்புலிகள் என அழைக்கப்பட்ட பிரிவு எல்ரீரீஈ இயக்கத்தின் உயர் மதிப்பு மிக்க ஒரு படைப் பிரிவாகும். விசேட துருப்புக்களாக பயிற்றுவிக்கப்பட்டு,முன்னிலைப்படுத்தப்பட்ட போதிலும், உண்மையில் அவா்கள் தற்கொலைக் குண்டுதாரிகளாகவே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தனா். கரும்புலிகள் பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்ததாக அறிவிக்கப்படுவதுடன், அவருக்கான தனிப்பட்ட பாதுகாப்பினையும் அவர்களே வழங்கினாா்கள்.[69] கரும்புலிகள் நிலத்திலும், கடலிலும் பாரம்பரியத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், கெரில்லா தாக்குதல்களிலும் படுகொலைகள் என்பவற்றிலும் சம்பந்தப்பட்டிருந்தாா்கள்.

*காலாட்படை அலகுகள்*

சாள்ஸ் அன்ரனி படையணி (வடபிரதேச துருப்புக்கள்)

ஜெயந்தன் படையணி (கிழக்குப் பிரதேச துருப்புக்கள்)
சிறுத்தைப் படையணி (சிறுவா்களைக் கொண்டது)
இம்ரான் பாண்டியன் படையணி
விநோதன் படையணி
பெண்கள் அலகுகள்
மாலைதீவு படையணி
சோதியாபடையணி
அன்பரசிப் படையணி (விமான எதிா்ப்பு அலகாகப் பயன்படுத்தப்பட்டது)

*ஆதரவளிக்கும் அலகுகள்*

விக்டா் படையணி (தாங்கி எதிா்ப்பு)
கிட்டு ஆட்டிலறி படையணி
குட்டி ஸ்ரீ மோட்டாா் படையணி
பொன்னம்மான் கண்ணி வெடி அலகு

*புலனாய்வு*

[69] ராதா (விமான எதிர்ப்பு) படையணி ஒரு மெய்ப்பாதுகாப்பு அலகாக இருந்து வருகின்றது எனக் கூறப்பட்டது. அநேகமாக அது ஏனைய மூத்த உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கியிருக்க முடியும். 1987 இலங்கை விமானப் படைத் தாக்குதலில் கொல்லப்பட்ட லெப்டினன்ட் கேர்ணல் ராதாவின் பெயரில் அது அழைக்கப்பட்டது.

163. புலிகள் இயக்கத்தின் பாதுகாப்புப் புலனாய்வுச் சேவை (TOSIS) புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் நிறுவனத்துக்குள் எதிர்ப் புலனாய்வுகளை நடத்துதல் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்துவந்தது. பொட்டு அம்மான் இந்தப் பிரிவின் தலைவராக இருந்துவந்தார். இது இரு கிளைகளைக் கொண்டிருந்தது: தேசிய புலனாய்வுச் சேவை (NIS) மற்றும் இராணுவப் புலனாய்வுச் சேவை (MIS). தேசிய புலனாய்வுச் சேவை இவை இரண்டிலும் மிகப் பெரியதாக இருந்துவந்ததுடன், களச் செயற்பாட்டாளர்களையும் கொண்டிருந்தது. இராணுவப் புலனாய்வுச் சேவை அலுவலகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், அரசாங்கப் பாதுகாப்புப் படைகளுக்குள் முகவர்களின் வலையமைப்பொன்றைப் பராமரித்து வந்தது. அது இலங்கை இராணுவம், இலங்கைக் கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை என்பவற்றுக்கென புறம்பான திணைக்களங்களைக் கொண்டது.

**கடற்படைப் பிரிவு**

164. கடற்புலிகள் தொடர்ந்தும் (கேர்ணல் சூசை என்ற பெயரில் அழைக்கப்பட்ட) தில்லையம்பலம் சிவநேசன்[70]என்பவரின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டு வந்ததுடன், அது எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவ வல்லமையின் மிகவும் முக்கியமான வினைத்திறனுடன் கூடிய ஒரு கூறாக இருந்துவந்தது. கடற்புலிகள் பெருந்தொகையான சிறிய நிலப்பரப்புக்களை வைத்திருந்ததுடன், நாட்டின் வடகிழக்குப் பிரதேசங்களில் முக்கியமாகச் செயற்பட்டு வந்தனர். ஒருசில கடற்புலிகள் வடமேற்குப் பக்கத்திலும் செயற்பட்டனர். கடற்புலிகள் ஒரு இராணுவ வகிபாகத்தையும், அதேபோல வர்த்தக வகிபாகத்தையும், வகித்து வந்தார்கள்.

165. இராணுவ வாகனத் தொடரணி சிறிய மற்றும் விரைந்து தாக்கக் கூடிய படகுகளைக் கொண்டிருந்ததுடன், அவை கடல் அல்லது நில இலக்குகளைத் தாக்குவதற்கென கரையை அண்டிய பகுதிகளில் செயற்பட்டு வந்தன. இந்தத் தொடரணிகள் வெடிபொருட்களுடன் கூடிய தற்கொலைப் படகுகள் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன. அத்தகைய படகுகள் இலங்கைக் கடற்படையின் கப்பல்களுக்குள் ஊடுருவிப் பிரவேசித்து, வெடிபொருட்களை வெடிக்கச் செய்து வந்தன.

166. வணிகப் படகுத் தொகுதி எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு கப்பல் மூலம் சரக்கு விநியோகம் செய்வதற்குப் பொறுப்பாக இருந்துவந்தது. இது இந்தியாவிலிருந்து பாக்குநீரிணைக்கூடாக கடத்தல்களை மேற்கொள்ளும் சிறிய படகுகள், கடலில் தொலைவில் காத்திருக்கும் பாரிய சமுத்திர சரக்குக் கப்பல்களிலிருந்து பொருட்களை கரைக்கு எடுத்து வரும் படகுகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. வணிக கப்பல் தொகுதி இலங்கைக் கடற்படையின் கண்காணிப்பிலிருந்து தப்பிக் கொள்ளும் பொருட்டு கடலின் வெகு தொலைவில் மிதக்கும் களஞ்சிய சாலைகளை, கொண்டிருந்தது.

167. கடற்புலிகள் துருப்புக்களை எடுத்து செல்லும் ஆற்றலையும்,விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தரைப் படைகளுடன் இணைந்து கூட்டு நடவடிக்கைகளில்ஈடுபடும் ஆற்றலையும் கொண்டுள்ளார்கள் என்பதனை எடுத்துக்காட்டும் விதத்தில் நீரிலும், நிலத்திலும் செயற்படும் ஆற்றலைக் காட்டியிருந்தார்கள்.

[70] இறுதிப் போரில் 2009 மே 18 ஆந் திகதி பிரபாகரனும் சேரத்து கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

168. எல்ரீரீஈ இயக்கம் தனது சொந்த விமானப் படை மற்றும் வான் புலிகள் அமைப்பு என்பவற்றைக் கொண்டிருந்த உலகின் ஒரேயொரு அரசு சாராத ஆயுதக் குழுவாக இருந்துவந்துள்ளது. அந்த இயக்கம் குண்டுகளை போடக் கூடிய விதத்தில் சீராக்கம் செய்யப்பட்டிருந்த ஆறு செக்கோஸ்லோவாக்கியசிறு ரக விமானங்களை இயக்கி வந்தது. இராணுவ அடிப்படையில் நோக்கும் பொழுது, வான் புலிகள் பொருட்படுத்தத்தக்க ஒரு படையாக இருந்து வரவில்லை. ஆனால், ஆகாயத்தில் பறந்து, அவர்கள் மேற்கொண்ட ஒரு சில நடவடிக்கைகள் எல்ரீரீஈஇயக்கம் தொடர்பான ஒரு பாரிய பிரச்சாரத்தை எடுத்துவந்ததுடன், கொழும்பில் வாழ்ந்து வரும் பொதுமக்கள் மத்தியில் பீதியையும் ஏற்படுத்தியிருந்தது.

### சிவில் பாதுகாப்புப் படை

169. சிவில் பாதுகாப்புப் படை இரண்டு கூறுகளைக் கொண்டிருந்தது:

- கிராமங்களில் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்து வருவதுடன், இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்பு அரணாகவும் ஊர்காவல் படை இருந்து வருகின்றது.

- இலங்கை இராணுவப் படைகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கு உதவும் எல்லைக் காவற்படை.

170. மோதலின் இறுதி வருடங்களின் போது, வயது முதிர்ந்தவர்களை உள்ளடக்கிய விதத்தில் அனைத்துக் கிராமங்களையும் சேர்ந்தவர்கள் ஒரு குறுகிய கால சிவில் பாதுகாப்பு பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஒருசில சந்தர்ப்பங்களில் பதுங்கு குழிகளை தோண்டுதல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு கிராமவாசிகள் அழைக்கப்பட்டார்கள். எவ்வாறிருப்பினும், சிவில் பாதுகாப்புப் படை சார்பு ரீதியில் நெகிழ்வான ஒரு கட்டமைப்பைக் கொண்டது போல் தெரிகிறது. கிராமவாசிகள் சிவில் பாதுகாப்புப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்ற விடயமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பார்வையில் அவர்கள் சிவில் பாதுகாப்புப் படைகளின் ஒரு பாகமாக இருந்து வந்திருக்கமுடியும் என்ற விடயமும்,வன்னியிலிருந்த அனைத்து சிவிலியன்களும் போர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்றார்கள் எனக் கருத முடியும் என்பதனை குறிக்கவில்லை.

## V. சட்ட ரீதியான சட்டகம்

171. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு அதன் புலன்விசாரணையை சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனித நேயச் சட்டம் மற்றும் சர்வதேசக் குற்றவியல் சட்டம் என்பவற்றின் சட்டகத்திற்குள் இருந்து மேற்கொண்டது.

### சர்வதேச மனிதஉரிமைகள் சட்டம்

172. அடிப்படை மனித உரிமைகள் ஒப்பந்தங்களில் ஒன்பது ஒப்பந்தங்களுக்கு இலங்கை ஓர் அரசு தரப்பாக இருந்து வருகின்றது: இனவாத இயல்பிலான அனைத்து வடிவங்களிலுமான பாரபட்சத்தை ஒழிப்பதற்கான சர்வதேச சமவாயம் (CERD), சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயம் (ICCPR) மற்றும் அதன் முதலாவது விருப்பத் தெரிவு ஏற்பாடு, பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயம் (ICESCR),சித்திரவதை மற்றும்

குரூரமான,மனிதாபிமானமற்ற செயல்கள் அல்லது இழிவுபடுத்தல் அல்லது தண்டனை என்பவற்றுக்கெதிரான சமவாயம் (CAT), பெண்களுக்கெதிரான அனைத்து வடிவங்களிலுமான பாரபட்சங்களை இல்லாதொழிக்கும் சமவாயம் (CEDAW), அனைத்துக் குடியகல்வுத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம் (CMW) மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பான சமவாயம் (CRC) மற்றும் பிள்ளைகளை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துதல் மற்றும் பிள்ளைகளை விற்பனை செய்தல், சிறுவர் விபச்சாரம் மற்றும் ஆபாச பிரசுரங்களில் சிறுவர்களைப் பயன்படுத்துதல் என்பன தொடர்பான ஏற்பாடுகள். இது தவிர உடல் ஊனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பான சமவாயத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது ஆனால், அது அதனை அத்தாட்சிப்படுத்தவில்லை.[71]

173. பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து ஆட்களைப் பாதுகாப்பது தொடர்பான பிரகடனம்,[72] உள்ளக இடப்பெயர்ச்சி தொடர்பான வழிகாட்டுதல் கோட்பாடுகள்,[73] சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களினால் பலவந்தம் மற்றும் சுடுகலன்கள் என்பவற்றைப் பயன்படுத்துல் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள்,[74] அதேபோல தண்டனையிலிருந்து விலக்குப் பெறும் நிலைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கூடாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவது தொடர்பான கோட்பாடுகளின் தொகுதி[75] ஆகிய ஆவணங்கள், சர்வதேச சட்டத்தின் கீழான குறிப்பாக - சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழான - தற்போதைய கடப்பாடுகளை அமுல் செய்வதற்கான வழிமுறைகள், நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பவற்றை இனங்காண்பதற்கான கருவிகளாக இருந்து வருகின்றன என்ற விடயத்தை இலங்கைக்கான விசாரணைக் குழு நினைவூட்டுகின்றது. மேலும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அப்பட்டமான மீறல்கள் மற்றும் 2005 இன் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை குறித்த அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறிப்பாகப் பொருந்துகின்றன என இலங்கைக்கான புலன் விசாரணைக்குழு கருதுகின்றது.[76]

---

71 இலங்கை பின்வரும் ஆவணங்கள் தொடர்பாக ஒரு தரப்பாக இருந்து வரவில்லை: பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம், சித்திரவதை ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் செயல்கள் அல்லது தண்டனை என்பன தொடர்பான சமவாயத்துக்கான மேலதிக ஏற்பாடு, பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்துக்கான மேலதிக ஏற்பாடு, மரணதண்டனை நீக்கம் தொடர்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்திற்கான மேலதிக ஏற்பாடு, அதேபோல தொடர்பாடல் நடைமுறை தொடர்பான சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் மேலதிக ஏற்பாடு.

72 பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து நபர்களைப் பாதுகாப்பது தொடர்பான பிரகடனம்.

73 உள்ளக இடப்பெயர்ச்சி தொடர்பான வழிகாட்டுதல் கோட்பாடுகள்.

74 சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்களினால் பலப் பிரயோகம் மற்றும் சுடுகலன்கள் பாவனை தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள்.

75 தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் நிலைக்கெதிராகப் போராடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கூடாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான கோட்பாடுகளின் தொகுதி.

76 சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மிக மோசமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட நபர்களின் நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான உரிமை தொடர்பான அடிப்படைக்

174. அதன் பிராந்தியத்துக்குள் வசித்து வருவதுடன், அதன் நியாயாதிக்கத்துக்குள் வரும் அனைத்து நபர்களினதும் மனித உரிமைகளை மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி, நிறைவேற்றி வைப்பதற்கான கடமையை இலங்கை கொண்டுள்ளது. (இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாதிருப்பதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்படுவதனையும் உள்ளடக்கிய விதத்தில்) உரிமைகள் மீறப்பட்டிருக்கும் நபர்களுக்குத் தாக்கமான நிவாரணம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை,அதேபோல குறிப்பிட்ட அத்துமீறல்களை இழைத்திருக்கும் நபர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, அவர்களை சட்டத்தின் முன் எடுத்து வரும் அரசின் பொறுப்பையும் உள்ளடக்குகின்றது.[77]மேலும்,வழக்காறு சார்ந்த சர்வதேச சட்டத்தின் ஒரு பாகமாக இருந்து வரும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கு இலங்கை இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

175. இலங்கை 2000 மே 30 ஆம் திகதியன்று அவசரகால ஒழுங்குவிதிகளின் பிரகடனம் ஒன்றை சமர்ப்பித்துள்ளது என்ற விடயத்தையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கவனத்தில் எடுக்கின்றது. அப்பிரகடனம் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயத்தின் உறுப்புரைகள்9(2)[78], 9(3)[79],

---

கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள், 2005 ஆம் ஆண்டின் டிசம்பர் 16 திகதியிட்ட 60/147 தீர்மானத்தின் பிரகாரம் ஐ.நா பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிரகடனம் செய்யப்பட்டது.

77 பார்க்கவும்: மனித உரிமைகள் கமிட்டி, சமவாயம் (2004) தொடர்பாக அரசு தரப்புகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் பொதுவான சட்டக் கடப்பாடுகளின் இயல்பு குறித்த பொதுக் குறிப்பு இல. 31, பந்திகள் 15 – 19. உள்நாட்டு அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றவியல் இயல்பைக் கொண்டதாக இருந்து வரும் உரிமை மீறல்கள் தொடர்பாகவும், சித்திரவதை மற்றும் அதனை ஒத்த கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவுபடுத்தும் செயல்கள் அதிரடி மற்றும் தன்னிச்சையான கொலைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் என்பன தொடர்பாகவும் குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டு வரும் கடமை உள்ளது என இப் பொதுக் குறிப்பில் மனித உரிமைகள் கமிட்டி குறிப்பிட்டிருந்தது. மேலும் பார்க்கவும்: சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அப்பட்டமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை குறித்த கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள், 2005 டிசம்பர் மாதத்தில் பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்டவை. மேலும், தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் நிலையை எதிர்த்துப் போராடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கூடாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான இற்றைப்படுத்தப்பட்ட கோட்பாடுகளின் தொகுதி (இவை 2005 இல் மனித உரிமைகள் தொடர்பான ஐ நா ஆணைக்குழுவின் ஏகமனதான தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டன).

78 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் உறுப்புரை 9(2) பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது: ‘‘கைது செய்யப்படும் எவரேனும் ஒரு நபருக்கு, கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவருடைய கைதுக்கான காரணம் தெரிவிக்கப்படும். மேலும், அவருக்கெதிரான ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவையும் உடனடியாக அவருக்குத் தெரிவிக்கப்படும்.’’

79 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 9(3) பின்வரும் ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது: “குற்றவியல் குற்றம் ஒன்றின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எவரேனும் ஒரு நபர் உடனடியாக ஒரு நீதவான் முன்னிலையில் எடுத்து வரப்படுதல் வேண்டும் அல்லது நீதி செலுத்துவதற்கென சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் எவரேனும் அதிகாரி ஒருவருக்கு முன்னர் எடுத்து வரப்படுதல் வேண்டும் அவருக்கு நியாயமான காலப் பிரிவுக்குள் ஒரு வழக்கை எதிர்கொள்வதற்கான உரித்தும், நியாயமான காலப் பிரிவுக்குள் விடுதலை பெறுவதற்கான உரித்தும் உள்ளது. வழக்கு முடியும் வரையில் காத்திருக்கும் நபர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படுவார்கள் என்பது ஒரு பொது விதியாக இருந்து வர முடியாது. எனினும், அந்நபர்களின் விடுவிப்பு, நீதிச் செயன்முறையின் ஏனைய

-

12(1)[80], 12(2)[81], 14(3)[82], 17(1)[83], 19(2)[84], 21[85] மற்றும் 22[86]. ICCPR[87]என்பவற்றை வலுவிழக்கச் செய்திருந்தன. இவ்விதம் வலுவிழக்கச் செய்யப்படுவதனை அடுத்து

எந்த ஒரு கட்டத்திலும் வழக்கு விசாரணைக்குப் பிரசன்னமாக வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மேற்கொள்ளப்பட முடியும்.

80 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 12(1) பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: "ஒரு அரசின் ஆள்புல எல்லைக்குள் சட்டரீதியாக இருந்து வரும் அனைத்து நபர்களும் அந்த ஆள்புல எல்லைக்குள் நடமாடுவதற்கான நடமாட்ட சுதந்திர உரிமையையும், தனது வசிப்பிடத்தைத் தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரத்தையும் கொண்டுள்ளார்".

81 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 12(2) பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: "எந்த ஒரு நபரும் தனது சொந்த நாட்டையும் உள்ளடக்கிய விதத்தில் நாட்டிலிருந்து சுதந்திரமாக வெளியேறிச் செல்ல முடியும்."

82 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 14(3) பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: "அவருக்கெதிரான ஏதேனும் குற்றவியல் குற்றத்தை நிர்ணயிக்கும் விடயத்தில், அனைத்து நபர்களும் முழுமையான சமத்துவத்துடன் பின்வரும் குறைந்தபட்ச உத்தரவாதங்களை பெற்றுக் கொள்வதற்கான உரித்தினைக் கொண்டுள்ளார்கள்:

a. அவருக்கெதிரான குற்றச்சாட்டின் இயல்பு மற்றும் காரணம் என்பன குறித்து உடனடியாக விபரமாக அவர் புரிந்து கொள்ளும் ஒரு மொழியில் அவருக்குத் தெரியப்படுத்தப்படுதல் வேண்டும்
b. தனது தரப்பு வாதங்களைத் தயாரித்துக் கொள்வதற்கும், தான் தெரிவு செய்யும் சட்டத்தரணியுடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் போதிய கால அவகாசத்துடன், வசதிகளும் இருந்து வருதல் வேண்டும்
c. அநாவசியமான கால தாமதங்களின்றி வழக்கு நடத்தப்படுதல் வேண்டும்
d. அவருக்கு முன்னிலையில் வழக்கு நடத்தப்படுதல் வேண்டும் அவர் தானே தனது தரப்பு வாதங்களை முன்வைக்க முடியும் அல்லது தான் விரும்பித் தெரிவு செய்யும் நபருக்கூடாக சட்ட உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் அவருக்கு சட்ட உதவி இல்லாது இருப்பின், இந்த உரிமை குறித்து தெரியப்படுத்துதல் வேண்டும் நீதியின் நலன் அவசியப்படுத்துமிடத்தும், அவரினால் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வசதியில்லாதிருக்கும் சந்தர்ப்பத்திலும் அத்தகைய எந்தக் கொடுப்பனவும் இல்லாமல் அவருக்கு சட்ட உதவியை பெற்றுக் கொடுத்தல்
e. அவருக்கெதிரான சாட்சியங்களை விசாரணை செய்தல், செய்வித்தல் மற்றும் அவருக்கெதிரான சாட்சியங்கள் தொடர்பான அதே நிபந்தனைகளின் கீழ் அவர் சார்பாக சாட்சியமளிக்கக் கூடியவர்களை வரவழைத்தல் மற்றும் விசாரணை செய்தல்
f. நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழி அவருக்கு புரியாதிருந்தால் அல்லது அம்மொழியை அவர் பேசாதவராக இருந்தால் உரை பெயர்ப்பாளர் ஒருவரின் இலவச உதவி வழங்கப்படுதல் வேண்டும்
g. தனக்கு எதிராகச் சாட்சியமளிப்பதற்கு அல்லது குற்றத்தை ஒப்புக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படாதிருக்கும் உரிமை"

83 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை17(1) பின்வரும் ஏற்பாட்டைக் பொண்டுள்ளது: "எந்த ஒரு நபரும் அவருடைய குடும்பம், அந்தரங்கம், இல்லம் அல்லது கடிதத் தொடர்பு என்பன தொடர்பான தன்னிச்சையான, அல்லது சட்ட விரோதமான தலையீட்டுக்கு உட்படுத்தப்படக் கூடாது. மேலும், அவரது கௌரவம் மற்றும் நன்மதிப்பு என்பவற்றின் மீது சட்டவிரோதமான விதத்தில் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடாது".

84 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை19(2) பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: "அனைவரும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள். இந்த உரிமை வாய்மூலம், எழுத்து மூலம் அல்லது அச்சு மூலம் கலை வடிவத்தில் அல்லது தான் விரும்பும் ஏனைய ஊடகங்களில் அனைத்து விதமான தகவல்களையும், கருத்துக்களையும் கேட்பதற்கும், பெற்றுக் கொள்வதற்கும், வழங்குவதற்குமான சுதந்திரத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இருந்து வருகின்றது".

85 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 21 பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: "சமாதானமாக ஒன்றுகூடுவதற்கான உரிமை அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இந்த உரிமையை அனுபவிப்பது தொடர்பான சட்டத்தின்

மேற்கொள்ளப்படும் வழிமுறைகள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு அவை இணங்கி ஒழுகும் வரைக்கும் சட்டுபூர்வமானவையாக இருந்து வருகின்றன. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 4 "தேச மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் எடுத்து வரும் பொது அவசரநிலைமைகளின் போது" இந்த ஒப்பந்தத்தின் கீழிருக்கும் ஒரு சில கடப்பாடுகளை தற்காலிகமாக கைவிடுவதற்கான வாய்ப்பினை நாடுகளுக்கு வழங்குகின்றது. எனினும், ஒருசில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் நிலையில் மட்டுமே அதனை மேற்கொள்ள முடியும். அத்தகைய வழிமுறைகள், நிலைமையின் அவசரத் தன்மையினால் அவசியப்படுத்தப்படும் தேவைகளுக்கு மட்டுமே கண்டிப்பாக வரையறுக்கப்படுதல் வேண்டும்.[88] மேலும், மனித உரிமைகள் தொடர்பாக தன்னிச்சையான விதத்திலும், விகிதாசார அளவை மிகைத்தவிதத்திலும் தலையீடுகளை மேற்கொள்வதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு போதிய ஏற்பாடுகள் இருந்து வருதல் வேண்டும்.[89] மேலும், அத்தகைய நடைமுறை தொடர்பான பாதுகாப்புக்கள், ரத்து செய்ய

---

மூலம் விதிக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் ஒரு ஜனநாயக சமூகத்தில் பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதார பாதுகாப்பு அல்லது ஒழுக்கங்களின் பாதுகாப்பு அல்லது ஏனையவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றின் பாதுகாப்பு என்பன தேவைப்படுத்துபவற்றைத் தவிர, இந்த உரிமைகளின் மீது எத்தகைய வரையறைகளையும் விதிக்க முடியாது."

86 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 22 பின்வரும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது: "ஒவ்வொருவரும் ஏனையவர்களுடன் ஒன்றுகூடும் சுதந்திரத்தை கொண்டுள்ளார்கள். தனது நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கென தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் இணைந்து கொள்வதற்கான உரிமையையும் இது உள்ளடக்குகின்றது. இந்த உரிமையை அனுபவிக்கும் விடயத்தில் சட்டத்தின் மூலம் விதித்துரைக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் ஜனநாயக சமூகமொன்றில் தேசிய பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கங்களின் பாதுகாப்பு அல்லது ஏனையவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றின் பாதுகாப்பு என்பன தொடர்பாக அவசியப்படும் வரையறைகளைத் தவிர, வேறு எந்த வரையறைகளையும் வலியுறுத்த முடியாது. இந்த உறுப்புரை பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் தமது உரிமைகளை அனுபவிப்பதில் சட்டபூர்வமான வரையறைகளை விதிப்பதனைத் தடை செய்யவில்லை."

87 இலங்கை 2010 யூன் மாதம் 9 ஆம் திகதி சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் பின்வரும் ஏற்பாடுகள் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிவித்தது: 9(2), 12, 14(3), 17(1), 19(2), 21 மற்றும் 22(1).

88 இந்தக் கடப்பாடு விகிதாசாரக் கோட்பாட்டினை பிரதிபலிக்கின்றது. இது அதிகாரங்களை நிறுத்துதல் அல்லது வரையறுத்தல் என்பவற்றுக்குப் பொதுவானதாகும். எனவே, அந்த வகையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு வழிமுறையும் நிலைமைக்கான உண்மையான ஒரு எதிர்வினையாக இருந்து வருதல் வேண்டும் அரசியல் யாப்பு ஒழுங்கு, மனித உரிமைகளுக்கான மரியாதை என்பவற்றினை மீள ஸ்தாபிப்பதனை நோக்கமாகக் கொண்டிருப்பதுடன், சந்தர்ப்ப சூழ்நிலைகள் அவற்றை முழுமையாக நியாயப்படுத்துதல் வேண்டும். எனவே, குறிப்பிட்ட ஒரு ஏற்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதானது நிலைமையின் அவசரத் தன்மையினால் நியாயப்படுத்தப்படுகின்றது என்ற விடயத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

89 மனித உரிமைகள் கமிட்டி, பொதுக் குறிப்பு இல.29 'அவசரகால நிலைமைகள் (உறுப்புரை 4)' ஐ நா ஆவணம்,CCPR/C/21/Rev.1/Add.11, para. 4.

முடியாத உரிமைகளின் பாதுகாப்பினை மீறக்கூடிய விதத்தில் ஒருபோதும் வரையறுக்கப்பட்டவையாக இருந்து வரக் கூடாது.[90]

176. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 4, சமவாயத்தின் ஏற்பாடுகளை வலுவிழக்கச் செய்யும் வழிமுறைகள் அரச தரப்பின் ‘‘சர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய கடப்பாடுகளுடன்’’முரண்படுபவையாக இருந்துவரக் கூடாது என்றும், குறிப்பாக, சர்வதேச மனித நேயச் சட்டத்தின் கீழ் அரச தரப்பு கொண்டிருக்கும் கடப்பாடுகளுடன் முரண்படக் கூடாது என்பதனை அவசியப்படுத்துகின்றது.[91]இது தொடர்பாக,நியாயமான வழக்கு விசாரணையொன்றுக்கான உரிமையின் ஒரு சில கூறுகள் ஒரு ஆயுதமோதலின் போது சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் தெளிவான விதத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன என்ற விடயத்தையும், அவசர நிலைமைகளின் போது இந்த உத்தரவாதங்கள் வலுவிழக்கச் செய்யப்படுவதனை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்ற விடயத்தையும் மனித உரிமைகள் கமிட்டி அவதானித்துள்ளது.[92]இது குறிப்பாக, சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, கூட்டுத் தண்டனைகளாகக் கருதப்படக் கூடிய செயல்கள் தொடர்பாகவும், சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கும்செயல்கள் தொடர்பாகவும் பொருந்துகின்றது.[93]

177. மேலும், ஏனைய பெருந்தொகையான செயல்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தடைசெய்யப்பட்டுள்ளன. எனவே, அவற்றை சட்டபூர்வமாக வலுவிழக்கச் செய்ய முடியாது. அவை பின்வருவனவற்றுக்கான தடைகளையும் உள்ளடக்குகின்றன: ஆட்களை பணயக் கைதிகளாக எடுத்தல், கடத்தல்கள் அல்லது உரியவர்களுக்கு அறிவிக்காது ஆட்களை தடுத்து வைத்தல் சம்பந்தப்பட்ட நபர்கள் சட்ட ரீதியாக வசித்து வரும் பிரதேசங்களிலிருந்து சர்வதேச சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் காரணங்கள் இல்லாமல், வெளியேற்றுவதன் மூலம் அல்லது ஏனைய பலவந்தமான வழிகளை மேற்கொள்வதன் மூலம் பலாத்காரமாக இடம் பெயரச் செய்யும் வடிவத்தில் மக்களை நாடு கடத்துதல் அல்லது பலவந்தமாக இடமாற்றம் செய்தல் பாரபட்சம் காட்டுதல், பகைமைச் செயற்பாடு அல்லது வன்முறை என்பவற்றைத் தூண்டக் கூடிய விதத்தில்

---

[90] இது அவசர நிலைமைகள் தொடர்பான பொதுக் குறிப்பு 29 மூலம் கமிட்டியினால் வலியுறுத்தப்பட்டுள்ளது (உறுப்புரை 4), ஐ நா ஆவணம் UN Doc. CCPR/C/21/Rev.1/Add.11 மற்றும் நபர்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன தொடர்பான பொதுக் குறிப்பு இல.35 (உறுப்புரை 9) UN Doc. CCPR/C/GC/35இந்தக் குறிப்பில் கமிட்டி ஆட்கொணர்வு மனு முறையை நிறுத்தி வைக்க முடியாது என்ற விடயத்தை தெட்டத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. (பந்திகள் 65 – 67)

[91] மனித உரிமைகள் கமிட்டி,‘அவசர நிலைமைகள் (உறுப்புரை 4)’ குறித்த பொதுக் குறிப்பு இல.29,UN Doc. CCPR/C/21/Rev.1/Add.11, பந்தி. 9.

[92] பொதுக் குறிப்பு இல.29: ‘அவசரகால நிலைமைகள் (உறுப்புரை 4)’,UN Doc. CCPR/C/21/Rev.1/Add.11 (2001), பந்தி. 16 இஸ்ரேல் தொடர்பான அதன் முடிவு அவதானிப்புக் குறிப்புக்களில் மனித உரிமைகள் கமிட்டி (1998, CCPR/C/79/Add. 93),தடுப்புக் காவல் தொடர்பான தாக்கமான நீதித் துறை மீளாய்வுத் தேவையிலிருந்து அரசு தரப்பு வெளியேறிச் செல்ல முடியாது என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தது.

[93] Jean Marie Henckaerts and Louise Doswald-Beck, Customary International Humanitarian Law, Cambridge, CUP, 2006, Rule 103. இந்த விதிமுறைகளும், இற்றைப்படுத்தப்பட்ட சம்பந்தப்பட்ட நடைமுறையும் இப்பொழுது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனையே இந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

போருக்கான பிரச்சாரம் அல்லது தேசிய இனவாத, மதவாத தெரிவிக்கப்படாமல் தடுத்து வைத்திருத்தல் என்பவற்றுக்கெதிரான தடைகளையும் நாட்டை விட்டு வெளியேற்றுதல் அல்லது சர்வதேச சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டிருக்கும் காரணங்கள் இல்லாமல் குடித்தொகையினரைப் பலவந்தமாக இடமாற்றம் செய்தல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. விரட்டியடித்தல் அல்லது ஏனைய பலவந்தமான வழிமுறைகள் மூலம் ஒரு பிரதேசத்திலிருந்து ஆட்களை பலவந்தமாக இடம்பெயரச் செய்தல் அல்லது துரத்துதல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது போருக்கான பிரச்சாரம் அல்லது தேசிய இனவாத, மதவாத வெறுப்பைத் தூண்டும் பரப்புரைகளை மேற்கொள்ளல் என்பனவாகும். அவை பாரபட்சம் காட்டுதல், பகைமைச் செயற்பாடு அல்லது வன்முறை என்பவற்றைத் தூண்டக்கூடியவையாக இருந்து வர முடியும்.[94]

178. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் சமாதான காலத்திலும், அதேபோல ஆயுத மோதல் இடம்பெறும் காலத்திலும் வலுவிலிருக்க முடியும்.[95] ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டி, ஆயுத மோதல் நிலைமைகளிலும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் பயன்படுத்தப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளது. ‘‘சமவாயத்தின் ஒரு சில உரிமைகள் தொடர்பாக, அவற்றுக்குப் பொருள்கோடல் வழங்கும் நோக்கங்களுக்கென, சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் திட்டவட்டமான விதிமுறைகள் குறிப்பாக பொருத்தமுடையவையாகும். இந்த இரு சட்டத் துறைகளும் ஒன்றுக்கொன்று குறைநிரப்புச் செய்கின்றன ஒன்றுக்கொன்று புறம்பானவையாக இருந்து வரவில்லை.[96]

179. ஆயுத மோதல் இடம்பெறும் நிலைமைகளில் சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றை ஒரே நேரத்தில் பிரயோகிப்பது, இந்த இரு சட்டவாக்கங்களினதும் ஏற்பாடுகளை முடியுமான வரையில் ஒன்றாக சேர்த்து வாசித்து, அவற்றை இணைக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனையே காட்டுகின்றது.

### சர்வதேச மனிதநேயச் சட்டம்

180. சர்வதேச மனிதநேயச்சட்டம் போர் நடவடிக்கைகளில் பங்கேற்காதவர்கள் அல்லது அவற்றில் இப்பொழுது நேரடியாகப் பங்கேற்காதவர்கள் ஆகியோரைப் பாதுகாப்பதன் மூலமும்,“ஒரு போராட்டம் எந்தக் காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், மோதலின் நோக்கங்களைச் சாதித்துக்

---

[94] பொதுக் குறிப்பு 29, பந்தி 13

[95] சர்வதேச நீதிமன்றம் அதன் அணுவாயுத ஆலோசனை அபிப்பிராயத்தில், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் பாதுகாப்பு, ஆயுத மோதல்கள் இடம்பெறும் நிலைமைகளில் இல்லாமல் போவதில்லை என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தது. நீதிமன்றம் பின்னர் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியதுடன், சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு குறித்த மூன்று சாத்தியமான நிலைமைகளை இனங்கண்டிருந்தது. ‘‘ஒருசில உரிமைகள் சர்வதேச மனித நேயச் சட்டத்தின் கீழ்வரும் பிரத்தியேகமான விவகாரங்களாக இருந்து வர முடியும் ஏனையவை மனித உரிமைகள் சட்டத்தின் கீழ்வரும் பிரத்தியேகமான விடயங்களாக இருந்து வர முடியும் ஆனால், ஏனையவை சர்வதேச சட்டத்தின் இந்த இரு கிளைகளின் கீழும் வர முடியும்’’.*Legal Consequences of the Construction of a Wall in the Occupied Palestinian territory*, Advisory Opinion, 9 July 2004, I.C.J. Reports 2004, பந்தி. 106.

[96] மனித உரிமைகள் கமிட்டி பொதுக் குறிப்பு 31, சமவாயத்துக்கான அரச தரப்புக்கள் கொண்டிருக்கும் பொதுவான சட்டரீதியான கடப்பாடுகளின் இயல்பு, U.N. Doc. CCPR/C/21/Rev.1/Add.13 (2004),பந்தி.11.

கொள்வதற்கு அவசியமான அளவில் - அதாவது, எதிரியின் இராணுவ ஆற்றலைப் பலவீனப்படுத்துவதற்கு மட்டும் அவசியமான அளவில்.[97] ஆயுதப் பிரயோகத்தை கட்டுப்படுத்திக் கொள்ளும்" நோக்கத்துடன் - போர் முறைகளையும், வழிமுறைகளையும் ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலமும் மோதலில் சம்பந்தப்பட்டிருக்கும் தரப்பினரின் நடத்தையை ஒழுங்குமுறைப்படுத்துகின்றது.

181. ஒரு ஆயுத மோதல் இடம்பெற்று வரும் நிலைமைகளில் அந்த மோதலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் சா்வதேச மனிதநேயச் சட்டத்தின் - அவை வழக்காறுச் சட்டங்களாக இருந்தாலும் சரி ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களாக இருந்தாலும் சரி – பிரயோகிக்கத்தக்கவிதிமுறைகளைப் பின்பற்ற வேண்டிய கடப்பாட்டினை கொண்டுள்ளன. 1949 ஆகஸ்ட் 12ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்ட நான்கு ஜெனீவா சமவாயங்களில் இலங்கைஒரு தரப்பாக இருந்து வருகின்றது.[98] மேலும், குறிப்பிட்ட சில பாரம்பரிய ஆயுதங்களை பயன்படுத்துவதைத் தடை செய்யும் 1980 இன் சமவாயத்திலும் மேலும் இந்த சமவாயத்தின் திருத்தப்பட்ட உறுப்புரை 1 மற்றும் கண்டுபிடிக்க முடியாத துணுக்குகள் தொடா்பான ஏற்பாடு I,கண்ணிவெடிகள், பொறி வெடிகள் மற்றும் ஏனைய கருவிகள் என்பவற்றை தடை செய்யும் திருத்தப்பட்ட ஏற்பாடு II, தீக்குண்டு ஆயுதங்களை தடை செய்யும் ஏற்பாடு IIIமற்றும்ஒளிக் கதிர்களை பாய்ச்சி குருடாக்கும் ஆயுதங்கள் தொடா்பான ஏற்பாடு IV[99]என்பவற்றுக்கும் இலங்கை ஒரு தரப்பாக உள்ளது. மேலும், அது மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் வாயுக்கள், நச்சு வாயுகள் மற்றும் பக்ரீறியா முறைகள் என்பன தொடா்பான ஜெனீவா ஏற்பாட்டினையும், உயிரியல் ஆயுதங்களைத் தடை செய்வது தொடா்பான சமவாயத்தையும், அதே போல கலாசார சொத்துக்களைப் பாதுகாப்பது தொடா்பான ஹேக் சமவாயத்தையும் அத்தாட்சிப்படுத்தியுள்ளது.

182. சா்வதேச இயல்பைக் கொண்டிராத மோதல்கள் சம்மந்தப்பட்ட நான்கு ஜெனீவா சமவாயங்களுக்கும் பொதுவான உறுப்புரை 3, இலங்கையின் நிலைமையில் பிரயோகிக்கக்கூடியதாக இருந்து வருகின்றது மோதலின் அனைத்துத் தரப்பினரும் சிவிலியன்கள் மற்றும் அங்கிருக்கும் போரில் நேரடியாக சம்பந்தப்படாத நபா்கள்[100]ஆகியோரை நடத்துவது தொடா்பான உத்தரவாதங்களுக்கு மதிப்பளிக்க

[97] Sassòli, M., Bouvier, A., Quintin A. (eds), How Does Law Protect in War?, (3rd edn., Geneva: ICRC, 2011), Vol. I, at 1.

[98] சா்வதேச ஆயுத மோதல்கள் மற்றும் சா்வதேசம் சாராத ஆயுத மோதல்கள் என்பவற்றினால் பாதிக்கப்படுபவா்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடா்பான மேலதிக ஏற்பாடுகள் I,II, III என்பவற்றை இலங்கை அத்தாட்சிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், மேலதிக தனித்துவமான குறியீடு ஒன்றை ஏற்றுக்கொள்ளும் ஏற்பாட்டினையும் அது அத்தாட்சிப்படுத்தவில்லை.

[99] இலங்கை 2004 செப்டெம்பா் 24 ஆம் திகதி இந்த ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தியுள்ளது. பாா்க்கவும்:https://www.icrc.org/applic/ihl/ihl.nsf/vwTreatiesByCountrySelected.xsp?xp_countrySelected=LK

[100] சா்வதேசக் குற்றவியல் நீதிமன்றம், நிக்ரகுவாவுக்கு எதிராக இடம்பெற்ற இராணுவ மற்றும் துணைப்படை நடவடிக்கைகள் தொடா்பான வழக்கு (நிக்ரகுவா எதிா் ஐக்கிய அமெரிக்கா), சா்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அறிக்கைகள், 1986 பக். 14, பந்தி 218. பொதுவான உறுப்புரை 3 இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் விதிமுறைகள் மனிதநேயம் தொடா்பான அடிப்படை விடயங்களை பிரதிபலித்துள்ளது என்ற விடயத்தை சா்வதேச நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது.

வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர். பொதுவான உறுப்புரை 3 போர் நடவடிக்கைகளில் நேரடியாக பங்கேற்காத நபர்கள், அதே போல (இனிமேலும் போரில் ஈடுபட முடியாத நிலையில் இருந்து வரும்) காயமடைந்தவர்கள் போன்ற நபர்கள் ஆகியோருக்கு கெடுதி விளைவிக்கும் நோக்குடன் அவர்களை பிரித்து, வேறுபடுத்தாது மோதலின் அனைத்துத் தரப்பினரும் குறைந்த பட்சம் அவர்களை மதித்து, மனிதநேயத்துடன் நடத்த வேண்டிய கடப்பாட்டினை கொண்டுள்ளார்கள்.[101]

183. அது தவிர, ஒரு மோதலின் தரப்புகளாக இருந்து வரும் அரசாங்கம் மற்றும் ஆயுதக் குழுக்கள் என்பன, சர்வதேச இயல்பினைக் கொண்டிராத ஆயுத மோதல்கள் தொடர்பாக பிரயோகிக்கத்தக்க சர்வதேச வழக்காற்றுச் சட்டத்தின் சம்மந்தப்பட்ட விதிமுறைகளினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

184. போர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்காத நபர்கள் மீதான நேரடித் தாக்குதல்களை சர்வதேச மனிதநேயச் சட்டம் தடை செய்கின்றது. அதேபோல, அது ''உயிருக்கும் நபருக்கும் எதிரான வன்முறை, குறிப்பாக அனைத்து விதமான கொலைகள், உறுப்புக்களைச் சிதைத்தல், கொடூரமாக நடத்துதல், சித்திரவதை" என்பவற்றையும், "தனிப்பட்ட கண்ணியத்தைக் குலைக்கும் நடவடிக்கைகள் குறிப்பாக, கேவலப்படுத்தும் விதத்திலும், சிறுமைப்படுத்தும் விதத்திலும் நடத்துதல்''[102]என்பவற்றையும் அது தடை செய்கின்றது. ஒரு மோதல் தரப்பினர் போர் நடவடிக்கைகள் முன்னெடுக்கும் பொழுது, அவர்களுக்குரிய கடப்பாடுகள் பிரித்து வேறுபடுத்தி அறிதல், விகிதாசாரத் தன்மை மற்றும் முன்னெச்சரிக்கை என்பவற்றைக் கொண்ட கோட்பாடுகள் மூலம் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஆளப்பட்டு வருகின்றன.[103]

---

101 பொதுவான உறுப்புரை 3 உயிர்ச் சேதம் மற்றும் ஆட்களுக்கெதிரான வன்முறை என்பவற்றை குறிப்பாக, அனைத்துவிதமான கொலைகள், உடல் உறுப்புக்களைச் சிதைத்தல், கொடூரமாக நடத்துதல், சித்திரவதை செய்தல், பணயக் கைதிகளாக எடுத்தல், தனிப்பட்ட கண்ணியத்தைக் குலைத்தல் மற்றும் முறையான விதத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நீதிமன்றம் ஒன்றின் மூலம் முன்னர் வழங்கப்பட்டிருக்கும் ஒரு தீர்ப்பு இல்லாத விதத்தில் தண்டனைகளை வழங்குதல் மற்றும் மரண தண்டனைகளை நிறைவேற்றுதல், நியாயமான வழக்கு நடைமுறை மற்றும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றல் என்பன தொடர்பாக பொதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் என்பவற்றை அது குறிப்பிடுகின்றது.

102 நான்கு ஜெனீவா சமவாயங்களுக்கும் பொதுவான உறுப்புரை 3 ஐ பாா்க்கவும்:

பிரித்து வேறுபடுத்தி அறிதல் தொடர்பான கோட்பாடு சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாகும். எதிரியின் இராணுவ வல்லமையைப் பலவீனப்படுத்தும் அளவுக்கு தேவையான விதத்தில் மட்டும் ஆயுத வன்முறை பயன்பாட்டை வரையறுத்துக் கொள்ள வேண்டுமென்ற சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கோட்பாட்டில் அது வேரூன்றியுள்ளது. இந்தக் கோட்பாட்டிலிருந்து இது திட்டவட்டமான விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவையாவன: பகைமைச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கேற்காத நபர்களை நேரடியாக இலக்காகக் கொள்வதனைத் தடை செய்தல் மற்றும் கண்மூடித்தனமான விதத்தில் தாக்குதல்களை ஆரம்பிப்பதனைத் தடை செய்தல் எனபனவாகும். மேலும், பிரித்து வேறுபடுத்தி அறிதல் கோட்பாடு ஒரு மோதலின் தரப்பினர் சாதாரண பொது மக்களுக்கும், பொதுமக்களின் சொத்துக்களுக்குமான சேதங்களை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும், சிவிலியன்களைப் பகைமைச் செயற்பாடுகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குச் சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் அவசியப்படுத்துகிறது. இது சர்வதேசம் சாராத ஆயுத மோதல்கள் தொடர்பாக பிரயோகிக்கத்தக்க வழக்காற்றுச் சட்டத்திலும் தெளிவாகப் பிரதிபலித்துள்ளது. பார்க்கவும் ICRC, Database on customary international humanitarian law, Chapter I: The Principle of Distinction, Rules 1-24.

185. **பிரித்து வேறுபடுத்தி அறிதல்** கோட்பாடு ஒரு மோதலின் தரப்பினர்,ஒரு புறத்தில் சிவிலியன்கள் மற்றும் சிவிலியன் இலக்குகள் என்பவற்றுக்கும், மறுபுறத்தில், சட்டரீதியான இராணுவ இலக்குகள் என்பவற்றுக்குமிடையிலான வேறுபாட்டை பிரித்தறிந்து கொள்ள வேண்டும் என்ற தேவையை எடுத்து வருகின்றது. பிந்திய இலக்குகளுக்கெதிராக மட்டுமே தாக்குதல்கள் நடத்தப்பட முடியும்.[104] இராணுவ இலக்குகள் என்ற வகைக்குள் வராத அனைத்து இலக்குகளும் சிவிலியன் இலக்குகளாகக் கருதப்படுவதுடன், அவை நேரடித் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படும், சிவிலியன்களும் நேரடித் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். எவ்வாறிருப்பினும், சிவிலியன்கள் போர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபற்றினால் அவ்வாறு பங்குபற்றும் சந்தர்ப்பங்களில் அத்தகைய பாதுகாப்பை இழக்க முடியும்.[105]

186. **விகிதாசார நிலை** தொடர்பான கோட்பாடு உயிரிழப்புக்கள், சிவிலியன்களுக்குக் காயம் ஏற்படுத்துதல், சிவிலியன்களின் பொருள்களுக்கு சேதம் விளைவித்தல் அல்லது அவற்றின் ஒரு கூட்டு என்பன, எதிர்பார்க்கப்படும் திட்டவட்டமான மற்றும் நேரடியான இராணுவ அனுகூலத்துடன் ஒப்பிடும் போது மிதமிஞ்சியவையாக இருந்து வரும் சந்தர்ப்பத்தில் அத்தகைய தாக்குதல்களை தடை செய்கின்றது.[106]

187. **முன்னெச்சரிக்கை** தொடர்பான கோட்பாடு, அனைத்துத் தரப்பினரும் சிவிலியன்களின் உயிரிழப்பு, சிவிலியன்கள் காயப்படுதல் மற்றும் சிவிலியன்களின் பொருள்களுக்கு சேதம் விளைவித்தல்.[107]என்பவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கும், குறைத்துக் கொள்வதற்கும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதனை அவசியப்படுத்துகின்றது. தாக்குதல்களின் விளைவுகளுக்கு எதிரான முன்னெச்சரிக்கைகள், மிக முக்கியமாக, செறிவாக மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுக்குள் அல்லது அவற்றுக்கு அருகில்

---

104 ஒரு வஸ்து அல்லது கட்டடம் ஒரு இராணுவ இலக்காகக் கருதப்படும் பொருட்டு, அது இரண்டு கூட்டு அளவுகோல்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவையாவன‘‘அதன் இயல்பு, அமைவிடம், நோக்கம் அல்லது பயன்பாடு இராணுவச் செயற்பாட்டுக்கு ஒரு தாக்கமான பங்களிப்பினை வழங்குகின்றது’’ மற்றும் அந்த வஸ்துவை ‘‘முழுமையாக அல்லது ஒரு பாகத்தை அழிப்பது, கைப்பற்றுவது அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளில் செயலிழக்கச் செய்வது திட்டவட்டமான இராணுவ அனுகூலங்களை வழங்குகின்றது.’’ பார்க்கவும் ICRC, *Database on customary international humanitarian law*, Rule 9.

105 பார்க்கவும் மேலதிக ஏற்பாடு II உறுப்புரை 13(3) மற்றும் 51(3) மேலதிக ஏற்பாடு I; ICRC, Database on customary international humanitarian law, Rule 6.

106 பார்க்கவும் ICRC, Database on customary international humanitarian law, Rule 14. See also Articles 51(5) and 57(2) Additional Protocol I.

107 ஒரு மோதலின் தரப்பினர் தாக்குதல்களைத் தொடுக்கும் பொழுது, தாக்குதல்களின் பாதிப்புக்கள் தொடர்பாகவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கடமையைக் கொண்டுள்ளனர். தாக்குதல்களின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: குறிப்பிட்ட இலக்கு ஒரு இராணுவ இலக்காக இருந்து வருகின்றது என்ற விடயத்தைச் சரிபார்த்துக் கொள்ளல் மற்றும் அந்தத் தாக்குதல் விகிதாசாரத் தேவைக்கு மதிப்பளிக்கின்றது என்பதனைத் தெரிந்து கொள்ளல் பொதுமக்கள் மீது உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதனைத் தவிர்க்கும் பொருட்டு அல்லது குறைத்துக் கொள்ளும் பொருட்டு தாக்குதல்களுக்கான ஆயுதங்கள் மற்றும் தாக்குதல் நடத்தப்படும் நேரம் என்பவற்றைத் தெரிவு செய்து கொள்ளல் சாத்தியமானவிடத்து, முன்னரேயே எச்சரிக்கைகளை விடுத்தல் ஒரு தாக்குதல விகிதாசாரக் கோட்பாட்டுக்கு மதிப்பளிக்கவில்லை என்ற விடயம் தெளிவாகத் தெரிய வரும் சந்தர்ப்பத்தில் தாக்குதலை இடைநிறுத்துதல்.

இராணுவ இலக்குகளை வைத்திருப்பதனை முடியுமான அளவுக்குத் தவிர்த்துக் கொள்வதற்கான கடப்பாடு மற்றும் மோதலின் ஒரு தரப்பினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரும் சாதாரண பொதுமக்களையும் மற்றும் பொதுச் சொத்துக்களையும் இராணுவ இலக்குகள் இருந்து வரும் பிரதேசங்களிலிருந்து அப்பால் எடுத்துச் செல்வதற்கான அனைத்துத் சாத்தியமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.[108]

188. ஒரு மோதலின் தரப்பினா் மருத்துவ அலகுகள், (மருந்துப் பொருள்) போக்குவரத்து, அதேபோல (மருத்துவ) ஆளணி தொடா்பாக மரியாதையைப் பராமரிக்க வேண்டிய கடப்பாட்டினையும் கொண்டுள்ளனா்அத்தரப்பினர் தாக்குதல்களுக்கான இலக்குகளாக கொள்ளப்படக் கூடாது. மருத்துவ அலகுகள் மற்றும் அவற்றைப் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் என்பவற்றுக்குரித்தான பாதுகாப்பு, அவை மனிதநேயச் செயற்பாட்டுக்கு வெளியில் போா் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டாலே ஒழிய இல்லாமல் போகாது. எவ்வாறிருப்பினும், ஓர் எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரும், பொருத்தமானவிடத்து, ஒரு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட்ட பின்னரும், அந்த எச்சரிக்கைக்கு செவிமடுக்காத பின்னரும் மட்டுமே அத்தகைய பொருட்கள் இப்பாதுகாப்பை இழக்கின்றன என்பதனை சர்வதேச மனிதநேயச் சட்டம் குறிப்பிடுகின்றது.[109]

189. சா்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ், மோதலின் ஒரு தரப்பினர் கொண்டிருக்கும் கடப்பாடுகள், எதிா்த் தரப்பினரின் நடத்தையின் மீது தங்கியிருந்து வரவில்லை அதாவது,சா்வதேச மனிதநேயச் சட்டத்துக்கு மதிப்பளிப்பதற்கான கடமை, பரஸ்பரம்இரு தரப்பும் அவ்வாறு செய்ய வேண்டுமென்ற நிபந்தனையைக் கொண்டிருக்கவில்லை.[110]மோதலில் ஒரு தரப்பு சா்வதேச மனிதநேயச் சட்டத்தை மீறியிருக்கும் நிலையை, எதிா்த் தரப்பும் அவற்றுக்கு இணங்கி ஒழுகாதிருப்பதனை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்த முடியாது.[111]அதேபோல, 1949 ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா சமவாயங்களின் பொதுவான உறுப்புரை 1 "ஒப்பந்தத்திலீடுபடும் அனைத்துத் தரப்பினரும்" அனைத்து சந்தா்ப்ப சூழ்நிலைகளிலும் நான்கு ஜெனீவா சமவாயங்களுக்கும் "மதிப்பளிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கடமையையும் கொண்டுள்ளன.[112]

---

[108] ICRC, *Database on customary international humanitarian law*, Rules 23-24. See also Article 57 Additional Protocol I.

[109] மேலதிக ஏற்பாடு II உறுப்புரைகள் 9-11,ICRC, வழக்காறு சாா்ந்த சா்வதேச மனிதநேயச் சட்டம், விதிமுறைகள் 25 – 26, 28 – 30.

[110] பார்க்கவும் ICRC இவழக்காறு சாா்ந்த சா்வதேச மனிதநேயச் சட்டம் தொடா்பான தரவுத் தளம், விதிமுறைகள் 23 - 24 மேலும் பாா்க்கவும்: மேலதிக ஏற்பாடு I, உறுப்புரை 57

[111] அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் உத்தரவாதங்கள் "அனைத்து சந்தா்ப்ப சூழ்நிலைகளிலும்" பிரயோகிக்கத் தக்கவை எனக் குறிப்பிடும் பொது உறுப்புரை 3 இன் வாா்த்தைப் பிரயோகம் ஏற்பாடு இக்கடப்பாட்டினை மேலும் வலியுறுத்துகின்றது.

[112] 'மரியாதையை உறுதிப்படுத்துவது' தொடா்பான கடப்பாடு அரசுகளின் சொந்த நடத்தைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை என சா்வதேச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. ஒரு மோதலின் தரப்பினா் சா்வதேச மனிதநேயச் சட்டத்தை மீறும் விதத்தில் நடந்து கொள்வதனை ஊக்குவிக்காதிருக்கும் கடமை வரையில் அது விரிவடைகிறது. ஜெனீவா சமவாயங்களை ஏற்றுக் கொண்டது தொடக்கம் அரசுகளின் நடைமுறை, பொது உறுப்புரை 1 இன் கடப்பாடுகள் ஆயுத மோதலில் ஈடுபட்டிருக்கும் அரசுகள் தொடா்பாக மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியள்ளது அதற்குப் பதிலாக, அனைத்து அரசுகளும் "சா்வதேச மனிதநேயச் சட்டத்தின் மீறல்களை நிறுத்தும் பொருட்டு தம்மால் முடியுமான அளவுக்கு அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்".

-

### சர்வதேசக் குற்றவியல் சட்டம்

190. சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை அப்பட்டமான விதத்தில் மீறும் செயல்கள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தை மிகவும் பாரதூரமான விதத்தில் மீறும் செயல்கள் தொடர்பாக – குறிப்பாக சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களாகக் கருதப்படக் கூடிய விடயங்கள் தொடர்பாக -பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்த வேண்டிய முதன்மையான கடப்பாட்டினை அரசுகள்கொண்டுள்ளன.[113] இந்தக் கடப்பாட்டுக்கு இணங்கி ஒழுகும் பொருட்டு, வழக்காற்றுச் சட்டம் மற்றும் ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்ட சட்டம் என்பவற்றின் பியோகிக்கத்தக்க கோட்பாடுகளின் பிரகாரம்,[114] உள்நாட்டு நீதி மன்றங்கள் அத்தகைய குற்றச் செயல்கள் தொடர்பாக உரிய நியாயாதிக்கத்தை மேற்கொள்வதற்கு இயலச் செய்யும் விதத்தில் தமது உள்நாட்டுச் சட்டவாக்கங்கள் தேவையான சட்ட அடிப்படையைக் கொண்டிருப்பதனை அரசுகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.உண்மையில் சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களை இழைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படுவதனையும், அவர்கள் அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் என கண்டறியப்பட்டால் அதற்குரிய தண்டனை வழங்கப்படுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அரசுகள் பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.[115]மேலும், இது தொடர்பாக அரசுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாக்கமான நிவாரணங்களை வழங்க வேண்டியிருப்பதுடன், அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக இழப்பீடுகளும் வழங்கப்படுதல் வேண்டும். அத்துமீறல்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிவதற்கான பராதீனப்படுத்த முடியாத உரிமையை அரசுகள் உறுதிப்படுத்த வேண்டியிருப்பதுடன் அத்தகைய அத்துமீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனை தடுப்பதற்குத் தேவையான வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.[116]

191. சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, இராணுவத் தளபதிகளும் உயர் மட்ட அதிகாரிகளும் தாங்கள் நேரடியாக இழைத்திருக்கும் குற்றச் செயல்கள், தம்மால் கட்டளையிடப்பட்ட, தூண்டப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக குற்றப் பொறுப்பினை ஏற்க வேண்டியிருக்கும் மேலும், தமது கட்டளையின் கீழ் அல்லது

---

பார்க்கவும் *சர்வதேச நீதிமன்றம் நிகாராகுவாவிலும் நிகாராகுவாவை சூழவும் இடம்பெற்ற இராணுவ மற்றும் துணைப்படை நடவடிக்கைகள் தொடர்பான வழக்கு* (நிகாராகுவா எதிர் அமெரிக்கா), சர்வதேச நீதிமன்றத்தின் அறிக்கைகள், 1986, பக்.14, பந்தி 220

113 அத்தகைய குற்றங்கள் போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கெதிரான குற்றங்கள், இன அழிப்பு, பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் சித்திரவதை என்பவற்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுகின்றது.

114 குற்றமிழைத்துவிட்டுத் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்வதற்கெதிராகப் போராடி, செயற்படுவதற்கூடாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான கோட்பாடுகளின் தொகுதி, கோட்பாடு 21.

115 வரையறைகள் தொடர்பான சட்டவாக்கங்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அப்பட்டமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பன தொடர்பாக பிரயோகிக்கப்படமாட்டா. அவை சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றச் செயல்களாக இருந்து வருகின்றன. போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கெதிரான குற்றங்கள் தொடர்பாக சட்டரீதியான வரையறைகளைப் பிரயோகிக்க முடியாத நிலை தொடர்பான 1968 இன் ஐ நா சமவாயம் நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள், பந்தி 06.

116 குற்றமிழைத்துவிட்டுத் தண்டனையிலிருந்து தப்புவதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கூடாக மனித உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கான கோட்பாடுகளின் தொகுதி, கோட்பாடு 1

தாக்கமான கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டு வந்த நபர்களினால் இழைக்கப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாகவும் - அத்தகைய செயல்கள் இழைக்கப்பட்டு வருகின்றன அல்லது இழைக்கப்படப் போகின்றன என்ற விடயத்தை அவர்கள் அறிந்திருந்த சந்தர்ப்பங்களிலும் அல்லது அறிந்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும் - அந்தச் செயல்களை தடுப்பதற்கு அல்லது தண்டிப்பதற்கு தேவையான அனைத்து நியாயமான வழிமுறைகளையும் மேற்கொள்ளாதிருக்கும் சந்தர்ப்பத்திலும் குற்றப் பொறுப்பினை அவர்கள் ஏற்க வேண்டியிருக்கும்.[117]

192. சர்வதேச குற்றங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குவதாகக் கருதப்படுகின்றது:

**போர்க் குற்றங்கள்**

193. போர் தொடர்பான சட்டங்கள் அல்லது வழக்காறுகள் என்பவற்றைப் பாரதூரமான விதத்தில் மீறும் செயல்கள் தொடர்பாக வழக்காற்றுச் சட்டத்தின் கீழ் அல்லது பாரம்பரியச் சட்டத்தின் கீழ்[118]தனிநபர்களை அக்குற்றச் செயல்களுக்குப் பொறுப்பாக்க முடியும். அவை போர்க் குற்றங்களாக இருந்து வருகின்றன. அவை ஏனையவற்றுக்கு மத்தியில் நான்கு ஜெனீவா சமவாயங்களின்[119] பொது உறுப்புரை 3 தொடர்பான மீறல்கள், போர் தொடர்பான சட்டங்கள்மற்றும் வழக்காறுகள் என்பன தொடர்பான ஏனைய பாரதூரமான மீறல்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

194. அத்தகைய செயல்கள் போர்க் குற்றங்களாகக் கருதப்படும் பொருட்டு, ஒரு ஆயுத மோதலுடன் அவை கொண்டிருக்கும் பிணைப்பு உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். இந்தப் பிணைப்பு தொடர்பான தேவை, குற்றவியல் நடத்தை போர் நடவடிக்கைகளுடன் மிகவும் நெருக்கமான விதத்தில் சம்மந்தப்பட்டிருந்தது என

117 ஐக்கிய இராச்சியம் வுப்பேற்றால் இராணுவ நீதிமன்றம், மேஜர் கால் ரூவர் மற்றும் ஏனையவர்கள் 6 பேருக்கெதிரான வழக்கு, பெப்ரவரி 18,1946, அறிவிக்கப்பட்ட வழக்கு இலக்கம் 23, ஐக்கிய நாடுகள் போர்க் குற்றங்கள் ஆணைக்குழு, தொகுதி IVஇலண்டன்,HMSO, 1948 (பந்தி 656) நூறம்பேர்க் இராணுவ விசாரணை, ஐக்கிய அமெரிக்கா எதிர் வில்ஹெல்ம் வொன்லீப், மற்றும் ஏனையோர் (The High Command Trial ) அக்டோபர் 27,1948, (பந்தி 657) மற்றும் நூரம்பேர்க் இராணுவ விசாரணை, ஐக்கிய அமெரிக்கா எதிர் பட்டியலில் குறிப்பிடப்பட்டோர் (பணயக் கைதிகள் வழக்கு), பெப்ரவரி 19,1948 (பந்தி 658) ஐக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்றம், யமாசிட்டா வழக்கு, 327 U.S.1(1946) (பெப்ரவரி 4,1946) (பந்தி 659) சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டவாக்கம் உறுப்புரை 28,ICTY சட்டவாக்கம் உறுப்புரை 7(2) மற்றும் ICTR சட்டவாக்கம் உறுப்புரை 6(2). மேலும் பார்க்கவும் ICRC, வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான தரவுத் தளம்,விதி 152.

118 நியாயாதிக்கம் தொடர்பான மேன்முறையீட்டுக்கான வாதம் குறித்த முடிவு,*Tadić* (IT-94-1-AR72), அக்டோபர் 2, 1995 பந்தி 94. பார்க்கவும் generally G Abi-Saab, ‘The Concept of “War Crimes”’, in S Yee and W Tieya (eds), International Law and the Post-Cold War World: Essays in Honour of Li Haopei (Routledge, 2001) 99, 112. See also Sivakumaran, S., *The Law of Non-International Armed Conflict*, (Oxford: Oxford University Press, 2012), 475– 8.

119 ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றம் தொடர்பான சட்டவாக்கம், உறுப்புரை 4, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், ரோம் சட்டவாக்கம் உறுப்புரை 2, சியாராலியோன் சிறப்பு நீதிமன்றம் தொடர்பான சட்டவாக்கம் உறுப்புரை 3. மேலும் பார்க்கவும்: நியாயாதிக்கம் தொடர்பான மேன்முறையீட்டுக்கான வாதம் குறித்த முடிவு,*Tadić* (IT-94-1-AR72) October 1995; Judgment, *Delalić, Mucić, Delić and Landzo*(Celebici Case), IT-96-21-A, 20 February 2001, para. 136.

பொருள் விளக்கமளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது, இக் குற்றம் மோதலின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் புரியப்பட்டிருத்தல் வேண்டும்அல்லது மாறாக ''இராணுவ செயற்பாட்டின் இறுதிக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கு ஏதோ ஒரு விதத்தில் பங்களிப்புச் செய்யும் நோக்கத்துடன் அல்லது குறைந்தபட்சம் இராணுவச் செயற்பாடுகளுடன் இணைந்த விதத்தில் அது மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்''.[120]

**மனித குலத்துக்கெதிரான குற்றங்கள்**

195. உடலுக்கு அல்லது உள அல்லது உடல் ஆரோக்கியத்துக்குப் பெருந்துன்பத்தை எடுத்து வரும் வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் குரூரமான செயல்கள், சாதாரண பொது மக்களுக்கெதிரான பரவலான, முறையாகத் திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதலின் ஒரு பாகமாக மேற்கொள்ளப்படுமிடத்து, அது மனித குலத்துக்கெதிரான குற்றச் செயல்களாக இருந்து வர முடியும்.

196. மனித குலத்துக்கெதிரான குற்றங்கள், 'உலகின் முதன்மைச் சட்டத் தொகுதிகளினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும், பொதுவாகப் பிரயோகிக்கத்தக்க சட்டத்தின் கீழ் அனுமதிக்க முடியாத நடத்தையுடன்' சம்மந்தப்பட்டிருப்பதுடன்,[121] அத்தகைய குற்றங்கள் தொடர்பாக நியாயாதிக்கத்தினை ஸ்தாபித்து நீதி வழங்குவதற்கான கடப்பாடு, ஒப்பந்தங்களின் கீழான கடப்பாடுகளிலிருந்து சுதந்திரமானதாக இருந்து வருகின்றது.

197. மனித குலத்துக்கெதிரான ஒரு குற்றம் இழைக்கப்பட வேண்டுமானால்,சிவிலியன்களின் ஒரு குடித்தொகை,'பரவலாக இடம்பெறும் அல்லது திட்டமிட்டு முறையான ஒழுங்கில் மேற்கொள்ளப்படும்' தாக்குதலொன்றின் இலக்காக இருந்து வருதல் வேண்டும். இந்த இரு நிபந்தனைகளும் கூட்டாக இருந்து வர வேண்டியதில்லைஅதாவது, இந்தத் தாக்குதல் குறிப்பிடப்பட்ட இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் இருந்து வரவில்லை. எந்தக் குடித்தொகையினருக்கெதிராக குறிப்பிட்ட தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றதோ அவர்கள் இயல்பில் முதன்மையாக பொதுமக்களாக இருந்து வரும் சந்தர்ப்பத்தில் 'சிவிலியன்கள்' எனக் கருதப்படுவார்கள். சிவிலியன்கள் என்ற வரைவிலக்கணத்துக்குள் வராத நபர்கள் ஒரு சிவிலியன் குடித்தொகையினருக்கு மத்தியில் பிரசன்னமாகியிருக்கும் நிலை, அந்தக் குடித்தொகையினரின் சாதாரண சிவிலியன் பண்பினை இல்லாமலாக்க முடியாது.[122]

198. 'பரவலான' என்ற பதம் பொதுவாக தாக்குதலின் பாரிய அளவிலான இயல்பைக் குறிப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் குறிக்கின்றது.[123] எவ்வாறிருப்பினும், ஒரு தாக்குதல் ''தொடரான பல குரூரச் செயல்களின் கூட்டுத் தாக்கம் அல்லது அசாதாரண அளவிலான ஒரு செயலின்

---

120 Cassese, போர் குற்றங்களுக்குத் தேவையான கூட்டுச் செயற்பாடு, J சர்வதேச குற்றவியல் நீதி (2012) 10 (5): 1395-1417, at 1397.

121 சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கான ரோம் சட்டவாக்கத்தின் குற்றவியல் குற்றக் கூறுகள், உறுப்புரை 7

122 Judgment, *Naletilić and Martinović* (IT-98-34), Trial Chamber, 31 March 2003, par. 235; Judgment, *Akayesu* (ICTR-96-4), Trial Chamber, 2 September 1998, para. 582; Judgment, *Jelisić* (IT-95-10-T), Trial Chamber, 14 December 1999, para. 54.

123 Warrant of Arrest for Omar Hassan Ahmad Al Bashir, Pre-Trial Chamber I, ICC-02/05-01/09, 4 March 2009, para. 81, Katanga, 30 September 2008, paras. 394-397

தனித் தாக்கம்'' என்பவற்றின் மூலம் பரவலான ஒரு தாக்குதலாக கருதப்பட முடியும்.[124]

199. 'முறையான ஒழுங்கிலான' தாக்குதல் குறித்த எண்ணக்கரு, வன்முறைச் சம்பவங்களின் ஒழுங்கமைந்த இயல்பினைக் குறிப்பதுடன், அவை எதேச்சையான விதத்தில் இடம்பெறக்கூடிய சாத்தியமில்லை என்பதனையும் குறிப்பிடுகின்றது.[125]அதே மாதிரியான குற்றவியல் நடத்தை ஒழுங்கான ஒரு மாதிரியை பின்பற்றி, எதேச்சையாகவன்றி மீண்டும் மீண்டும் இடம்பெறுவதனை இது கோட்பாட்டு ரீதியில் பிரதிபலிக்கின்றது.[126]

### இன அழிப்பு

200. இலங்கை,இன ஒழிப்பைத் தடுத்து, அதற்குத் தண்டனை வழங்கும் 1948 ஆம் ஆண்டின் சமவாயத்தின் ஒரு தரப்பாக இருந்து வருகின்றது. அதனை தாக்கமான விதத்தில் செயற்படுத்தும் நோக்கத்துடன் ஒப்பந்தங்களில் ஈடுபடும் உயர் தரப்பினர் தொடரான பல வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை இந்தச் சமவாயம் அவசியப்படுத்துகின்றது. இன அழிப்புச் செயலுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் நபர்களுக்குத் தாக்கமான விதத்தில் தண்டனைகளை வழங்குவதற்குத் தேவையான சட்டவாக்கங்களை உருவாக்குவதனையும் இது உள்ளடக்குகின்றது.[127] இனஅழிப்புக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நபர்கள் ''அந்தச் செயல் எந்தப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டதோ அந்தப் பிராந்தியத்தின் அரசினால் நியாயாதிக்கம் கொண்ட ஒரு விசாரணை மன்றத்தில் விசாரிக்கப்படுதல் வேண்டும் அல்லது அது தொடர்பான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் சர்வதேச தண்டனை விசாரணை நீதிமன்றமொன்றினால் விசாரிக்கப்படுதல் வேண்டும்''[128]

201. இந்தச் சமவாயமும், அதேபோல அதனுடன் இணையான சர்வதேச வழக்காற்று விதிமுறைகளும் இன அழிப்புக் குற்றம் என்ற பதத்தை, திட்டவட்டமான ஒரு நோக்கம் மற்றும் ஏனைய கூறுகள் என்பன தேவைப்படும் ஓர் விடயமாக வரைவிலக்கணம் செய்கின்றன.

202. நோக்கம் சார்ந்த கூறு, இரு வகையினதாகும். முதலாவது தடை செய்யப்பட்ட நடத்தை தொடர்பாக இந்தக் குற்றச் செயல் பின்வரும் வடிவங்களைக் கொண்டிருப்பது அவசியமாகும்: (அ) கொலை செய்தல், (ஆ) பாரதூரமான உடல், உள ரீதியான தீங்கினை இழைத்தல், (இ) குறிப்பிட்ட ஒரு குழுவின் உடல்ரீதியான அழிவை எடுத்து வரக் கூடிய வாழ்க்கை நிலைமைகளை அக் குழுவின் மீது திணித்தல், (ஈ) அந்தக் குழுவுக்குள் குழந்தைகள் பிறப்பதனை தடுக்கும் நோக்கத்துடன் விதிமுறைகளை விதித்தல் அல்லது (உ) அக்குழுவின்

---

124 Judgment, *Blaškić* (IT-95-14), Trial Chamber, 3 March 2000, para.206; Judgment, *Kordić and Čerkez* (IT-95-14/2-T), Trial Chamber, 26 February 2001, para.179 ;Judgment, *Kordić and Čerkez* (IT-95-14/2-A), Appeals Chamber, 17 December 2004, para. 94.

125 Warrant of Arrest for Omar Hassan Ahmad Al Bashir, Pre-Trial Chamber I, ICC-02/05-01/09, 4 March 2009, para. 81, Prosecutor v. Germain Katanga and Mathieu Ngudjolo Chui, Decison on the confirmation of charges, Pre-Trial Chamber I, ICC-01/04-01-/07, 30 September 2008, paras. 394-397

126 ஒமர் ஹசன் அகமட் அல் பீரை கைது செய்வதற்கான பிடியாணை,Pre-Trial Chamber I, ICC-02/05-01/09, 4 March 2009, para. 81, Katanga, Decison on the confirmation of charges, paras. 394-398

127 இன அழிப்பினை தடுத்து, அதற்குத் தண்டனை வழங்கும் சமவாயம் உறுப்புரை V

128 இன அழிப்பினை தடுத்து, அதற்குத் தண்டனை வழங்கும் சமவாயம் உறுப்புரை VI

பிள்ளைகளை மற்றொரு குழுவுக்குப் பலவந்தமாக மாற்றுதல்.[129] இரண்டாவது நோக்கக் கூறு, தடை செய்யப்பட்ட நடத்தையின் மூலம் இலக்காகக் கொள்ளப்படும் குழு ஒரு தேசிய, இனத்துவ, இனம் சார்ந்த அல்லது சமயக் குழுவாக இருந்து வருதல் வேண்டும்.

203. விடயக் கூறும் இருவகையானதாக உள்ளது. குறிப்பிட்ட குற்றச் செயல் தொடர்பாக குற்ற உள் நோக்கம் இருந்து வருவதை தவிர, இலக்காகக் கொள்ளப்பட்ட குழுவை முழுவதுமாக அல்லது அதன் ஒரு பாகத்தை அழிப்பதற்கான உள் நோக்கமும் இருந்து வருதல் வேண்டும்.

**சித்திரவதை**

204. சர்வதேச சட்டம், சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான,ஈவிரக்கமற்றசெயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் என்பவற்றைதிட்டவட்டமான விதத்தில், முற்றாக தடை செய்கின்றது. சித்திரவதை, ஏனைய கொடூரமான,ஈவிரக்கமற்றசெயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் தொடர்பான சமவாயம் (CAT) மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயம்[130] என்பவற்றில், ஏனையவற்றுடன், இந்த விடயமும் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்திரவதையிலிருந்து விடுதலை பெற்றிருக்கும் உரிமை எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழும் வரையறுக்கப்பட்டதாகவோ அல்லது விலக்களிக்கப்பட்டதாகவோ இருந்து வர முடியாது.[131]

205. சித்திரவதை, ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற செயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் தொடர்பான சமவாயம் சித்திரவதை என்பதை சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு புறம்பான குற்றச் செயலாக வரையறை செய்கின்றது.[132] அதற்குப் பின்வருவன தேவைப்படுகின்றன:

1. உடல்ரீதியாக அல்லது உளரீதியாக வேண்டுமென்றே கடுமையான துன்பத்தை அல்லது வேதனையை ஏற்படுத்துதல்

2. தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் அல்லது ஒரு குற்ற வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளல் போன்ற திட்டவட்டமான ஒரு நோக்கத்துக்காகஅல்லது தண்டனையாக அல்லது பயமுறுத்துத்தலாக அல்லது பலவந்தமாக அல்லது ஏதோ ஒரு வகையிலான பாரபட்சத்தை

[129] இன அழிப்பினை தடுத்து, அதற்குத் தண்டனை வழங்கும் சமவாயம் உறுப்புரை II

[130] இலங்கை இதற்கு முறையே 1980 மற்றும் 1994 ஆகிய ஆண்டுகளில் இணக்கம் தெரிவித்திருந்தது.

[131] சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் உறுப்புரை 4(2), சித்திரவதை, ஏனைய கொடூரமான,ஈவிரக்கமற்ற செயல்கள், இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் தொடர்பான சமவாயம் உறுப்புரை 2(2)

[132] சித்திரவதை ஒரு ஆயுத மோதல் தொடர்பாக மேற்கொள்ளப்படுமிடத்து, ஒரு போர்க் குற்றமாகவும் இருந்து வரும். அதேபோல, பொதுமக்களின் குடித்தொகை ஒன்றுக்கு எதிரான பரவலான அல்லது முறையாகத் திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதலின் பாகமாக மேற்கொள்ளப்பட்டால், அது மனிதகுலத்துக்கெதிரான ஒரு குற்றச் செயலாக இருந்து வரும். ஒரு நடத்தையை சித்திரவதையாக, போர் குற்றமாக அல்லது மனித குலத்துக்கெதிரான குற்றச் செயலாக வகைப்படுத்துவதற்கு, அது ஒரு அரசாங்க அதிகாரியினால் அல்லது உத்தியோகபூர்வ பதவியில் செயற்பட்டு வரும் நபரினால் அல்லது அவரது தூண்டுதலின் பேரில் அல்லது அவரது உடன்பாட்டினால் அல்லது அவரது உதவியுடன் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய அவசியம் இருந்து வரவில்லை.

அடிப்படையாகக் கொண்ட ஒரு காரணத்துக்காக இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

3. ஒரு அரசாங்க உத்தியோகத்தர் அல்லது உத்தியோகபூர்வமான பதவியில்செயற்பட்டு வரும் ஏதேனும் ஒரு நபரின் தூண்டுதலினால் அல்லதுதுாண்டுதலின் பேரில் அல்லது அவருடைய சம்மதத்துடன் அல்லது உடன்பாட்டுடன் மேற்கொள்ளப்படுதல்.[133]

சா்வதேச மனிதநேயச் சட்டம், போா் நடவடிக்கைகளில் முனைப்பான விதத்தில் பங்கேற்காத நபா்களை அல்லது தற்போதைய நிலையில் அவற்றில் பங்கேற்காத நபா்களை சித்திரவதை செய்தல் மற்றும் கொடூரமான விதத்தில் நடத்துதல் என்பவற்றை வெளிப்படையான விதத்தில் தடை செய்கின்றது.[134] அத்தகைய ஒரு நடத்தை ஒரு ஆயுத மோதலின் போது – ஒரு மோதலுடனான தொடா்பு நிரூபிக்கப்பட்டிருக்குமிடத்து - இடம்பெறும் சந்தா்ப்பத்தில் அது ஒரு போா்க் குற்றமாக இருந்து வருவதுடன், சிவிலியன்களுக்கெதிரான பரவலான விதத்தில் அல்லது முறையான ஒழுங்கில் மேற்கொள்ளப்படும் ஒரு தாக்குதலின் ஒரு பாகமாக அது இருந்து வருமிடத்து, மனிதகுலத்துக்கெதிரான ஒரு குற்றச் செயலாகவும் இருந்து வர முடியும்.

**பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல்**

206. பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களிலிருந்துஅனைத்து நபா்களையும் பாதுகாப்பதற்கான சா்வதேச சமவாயத்தில் இலங்கை ஒரு தரப்பாக இருந்து வரவில்லை.[135]அதேவேளையில், இந்த சமவாயத்தின் ஏற்பாடுகள் வலுவுக்கிடப்பட்டிருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடா்பான சா்வதேச சமவாயத்தில் இலங்கை ஒரு தரப்பாக இருந்து வருகின்றது.

207. ஆட்கள் காணாமல் போதல்பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடா்பான சா்வதேச சமவாயத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பல்வேறு உரிமைகள் தொடா்ச்சியான விதத்தில் மீறப்படுவதனை பிரதிநிதித்துவம் செய்யும் தனித்துவமான, ஒருங்கிணைந்த செயல்களின் ஒரு தொடராக இருந்து வருகின்றது. பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் தொடா்பான செயல்கள் மனித கண்ணியத்தின் மீது இழைக்கப்படும் ஒரு குற்றமாகக் கருதப்படுகின்றது. ஏனெனில், அவை பாதிக்கப்படும் நபா்களை சட்டத்தின் பாதுகாப்புக்கு வெளியில் வைத்திருப்பதுடன்,

133 சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற செயல்கள், இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் என்பவற்றுக்கு எதிரான சமவாயம், உறுப்புரை 1.

134 ஜெனீவா சமவாயங்களின் பொது உறுப்புரை 3

135 பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபா்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான சா்வதேச சமவாயத்தின் உறுப்புரை 2 பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் என்பதனை பின்வரும் விதத்தில் வரைவிலக்கணம் செய்கின்றது: 1) கைது, தடுத்து வைப்பு, கடத்தல் அல்லது சுதந்திரத்தைப் பறிக்கும் வேறேதேனும் வடிவத்திலான ஒரு செயல், 2) அரசின் முகவா்களால் அல்லது அரசின் அனுமதியுடன், ஆதரவுடன் அல்லது உதவியுடன் செயற்படும் நபா்கள் அல்லது நபா்களின் குழுக்களினால் மேற்கொள்ளப்படுதல், 3) சுதந்திரம் பறிக்கப்பட்டதனை ஏற்றுக் கொள்ள மறுத்தல் அல்லது அவருக்கு நடந்த கதியை மூடி மறைத்தல் அல்லது காணாமல் போன நபா் எங்கிருக்கின்றாா் என்பதனை தெரிவிக்க மறுத்தல், நபரை சட்டத்தின் பாதுகாப்புக்கு வெளியில் வைத்திருக்கும் நிலை.

அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பங்கள் மீதும் கடுமையான துன்பங்களை எடுத்து வருகின்றது.[136]பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல்,மனித உரிமைகளின் பன்முகப்பட்ட மீறல்களை உள்ளடக்குகின்றது. ஏனையவற்றுக்கு மத்தியில், சட்டத்தின் முன்னால் ஒரு நபர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை, சித்திரவதை ஏனைய குரூரமான ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது மிகவும் கேவலமான விதத்தில் நடத்தப்படுதல் அல்லது தண்டனை என்பவற்றுக்கு உள்ளாக்கப்படாதிருப்பதற்கான உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றுக்கான ஒரு நபரின் உரிமை, தன்னிச்சையான தடுத்து வைப்பிலிருந்து விடுபடும் உரிமை, தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அதன் சட்டபூர்வத் தன்மை குறித்த மீளாய்வுக்கென உரிய விதத்தில் நீதவான அல்லது அதிகாரி ஒருவர் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படுவதற்கான உரிமை, அந்தரங்கம், குடும்பம், இல்லம் மற்றும் கடிதத் தொடர்பு என்பனமதிக்கப்படுவதற்கான உரிமை, ஒருசில சந்தர்ப்பங்களில் உயிர் வாழ்வதற்கான உரிமை அல்லது உயிர் வாழ்வதற்கான உரிமையை அரசு பாதுகாக்கத் தவறுதல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.[137]

208. ஆட்கள் பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் மேற்கொள்ளாதிருப்பதனையும், அவற்றுக்கு இடமளிக்காதிருப்பதனையும் அல்லது அவற்றை சகித்துக் கொள்ளாதிருப்பதனையும் அரசுகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விடயத்தை சர்வதேச வழக்காற்றுச் சட்டம் அவசியப்படுத்துகின்றது. மேலும், அதன் நியாயாதிக்கத்துக்குள் வரும் எந்த ஒரு பிரதேசத்திலும் பலவந்தமான விதத்தில் ஆட்களை காணாமல் ஆக்கச் செய்யும் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கென அரசு தாக்கமான சட்ட, நிர்வாக, நீதி மற்றும் ஏனைய வழிமுறைகளை மேற்கொள்ளல் வேண்டும். பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுவதை ஒரு குற்றச் செயலாக கணக்கிடுவதும் இதில் அடங்குகின்றது.[138]

[136] பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான பிரகடனம் A/RES/47/133, 18 டிசம்பர் 1992, உறுப்புரை 1

[137] பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் பொதுமக்களின் குடித்தொகை ஒன்றுக்கு எதிரான, பரவலாக அல்லது முறையாகத் திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதலின் பாகமாக மேற்கொள்ளப்பட்டால், அது மனிதகுலத்துக்கெதிரான ஒரு குற்றச் செயலாக இருந்து வரும். பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான சம்பவங்களுக்கு எதிராக உள்நாட்டு சட்டத்தின் கீழும், குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் சர்வதேச சட்டத்தின் கீழும் குற்றச் செயல்களாக இருந்து வருவதுடன், அவற்றுக்கெதிராக வழக்குத் தொடர முடியும்.

[138] பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பது தொடர்பான பிரகடனம், உறுப்புரை 2 - 4

பாகம் 2

# VI. சட்டவிரோதமான கொலைகள்

## அறிமுகம்

209. இந்த அத்தியாயம், இரு தரப்பினராலும், அதே போல பாதுகாப்புப் படைகளுடன் சம்பந்தப்பட்ட துணைப் படைகளினாலும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சட்ட விரோதமான கொலைகள் தொடர்பான விரிவான மாதிரிகளை ஆவணப்படுத்துகின்றது. இக்கொலைகள் 2002 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப் பிரிவின் போது இடம்பெற்றுள்ளன.[139] இத்தகைய ஒரு சில கொலைகள், சட்ட விரோதமான கைதுகளை அல்லது கடத்தல் சம்பவங்களையடுத்து நிகழ்ந்துள்ளன ஏனையவை நீதிமன்ற விசாரணை நடமுறைக்கு புறம்பான கொலைகளாக அல்லது படுகொலைகளாக இருந்துவந்தன. மேலும், இக்காலப் பிரிவின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் மீண்டும் இடம்பெறத் தொடங்கியிருந்தன. அதே போல, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், இராணுவமும் கிளேமோர் குண்டுத் தாக்குதல்களை பயன்படுத்துவதற்கூடாக சட்ட விரோதமான கொலைகளுக்கு பொறுப்பாக இருந்துவந்துள்ளன என்ற விடயமும் அறிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இந்தப் பிரிவில் எடுத்துக் காட்டப்படும் சம்பவங்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் சட்டகத்திற்குள் - குறிப்பாக, வாழ்வதற்கான உரிமை என்ற சட்டகத்திற்குள் - பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

210. ஒரு சம்பவம் ஆயுத மோதலுடன் சம்பந்தப்பட்டதாக இருந்து வரும் சந்தர்ப்பங்களில், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு, ஒப்பந்தத்தின் சம்பந்தப்பட்ட விதிமுறைகள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் வழக்காறுகள் என்பவற்றையும் எடுத்துக் காட்டுகின்றது. இது குறிப்பாக, 1949 ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா சமவாயங்களுக்கு பொதுவான உறுப்புரை 3 ஐயும் உள்ளடக்குகின்றது. இந்த உறுப்புரை மனித வாழ்க்கையின் மீதான வன்முறையை தடை செய்கின்றது. அது குறிப்பாக,போர் நடவடிக்கைகளில் முனைப்பான விதத்தில் பங்கேற்காதிருக்கும் நபர்களை கொலை செய்தல் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் (*hors de combat* என அழைக்கப்படும்) “போருக்கு வெளியில் இருப்பவர்கள்” எனக் கருதப்படும் நபர்களை (அதாவது, எதிர்தரப்பின் அதிகாரத்தின் கீழ் இருந்து வரும் நபர்கள், மூர்ச்சையடைதல், காயங்கள் என்பவற்றின் காரணமாக தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்து வரும் நபர்கள், சரணடைவதற்கு வெளிப்படையாக தமது விருப்பத்தை தெரிவிக்கும் நபர்களைகொலை செய்தல் என்பவற்றை குறிப்பிடுவதுடன், போர் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வழக்காறு ரீதியிலான விதிமுறைகளையும் குறிப்பிடுகின்றது. அதாவது, ஒரு மோதலின் தரப்பினர் சாதாரண குடிமக்கள் மீது அல்லது சாதாரண குடிமக்கள் வாழும் இடங்கள் மீது நேரடித் தாக்குதல்களை நடத்துவதை தடை செய்து பிரித்து, வேறுபடுத்திப் பார்க்கும் கோட்பாட்டினையும் அது குறிப்பிடுகின்றது.

[139] இந்த அத்தியாயம் போர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது, ஏனைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நிகழ்ந்த கொலைகள் அல்லது மரணங்கள் என்பவற்றை உள்ளடக்கவில்லை அவை பின்னைய அத்தியாயம் ஒன்றிலும், நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகளை விளக்கும் அத்தியாயத்திலும் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

211. இந்தப் பிரிவு, போரின் இறுதிக் கட்டத்தின் போது பாதுகாப்புப் படையினரால் தமிழ் மக்களின் - குறிப்பாக பெண்களின் - உடல்கள் பாலியல் ரீதியாக சிதைக்கப்பட்டமை மற்றும் களங்கப்படுத்தப்பட்டமை என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்களையும் மீளாய்வு செய்கின்றது.

212. வழமையான குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேக நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் இடம்பெறும் மரணங்கள் இந்தப் புலன் விசாரணைக்குள்உள்ளடக்கப்படவில்லை. ஆனால், நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான, அதிரடியான அல்லது விசாரணைகள் எவையுமின்றி வழங்கப்படும் மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் 2006 ஆம் ஆண்டு தொடர்பான தனது அறிக்கையில், பொலிஸ் தடுப்புக் காவல் மரணங்கள் தொடர்பான ஒரு போக்கினையும், வழமையாக அந்த மரணங்கள் சித்திரவதையுடன் சம்பந்தப்பட்டிருப்பதனையும் குறிப்பிட்டுள்ளார்.[140]

213. மீளாய்வுக்குட்படுத்தப்படும் காலப் பிரிவின் போது இடம்பெற்ற சட்ட விரோதமான கொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் பாரிய எண்ணிக்கையின் பின்னணியில், ஊடகவியலாளர்கள், தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள், அதே போல முஸ்லிம் சமூகத்தைச் சேரந்த உறுப்பினர்கள் போன்ற பாதிக்கப்பட்ட ஒரு சில குழுக்களை எடுத்துக் காட்டும் விதத்தில் குறியீட்டுச் சம்பவங்கள் மீது இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனம் செலுத்தியுள்ளது. இந்தப் பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பெரும்பாலான குறியீட்டுச் சம்பவங்கள் தொடர்பாக குறிப்பாக இதுவரையில் புலனாய்வுகள் நடத்தப்படவில்லை அல்லது அவை இப்பொழுது புலனாய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. பொறுப்புக் கூறுவது தொடர்பாக நிலவி வரும் ஒரு சில பாரிய இடையூறுகளை அவை எடுத்துக் காட்டுகின்றன.

214. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அதன் புலனாய்வுகளின் ஒரு பாகமாக, இங்கு நிகழ்ந்ததாக கூறப்படும் கொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் அல்லது அவை இடம்பெற்ற சிறிது நேரத்தின் பின்னர் குறிப்பிட்ட இடங்களில் இருந்த நபர்கள் மற்றும் அக்கொலைகளின் பின்னர் அது குறித்துப் பேசியிருக்கும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போன்ற நேரடிச் சாட்சிகளுடன் நேர்காணல்களை நடத்தியிருந்தது. நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான, அதிரடியான, அல்லது விசாரணைகள் எவையுமற்ற மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் (2005, 2008, 2011)[141] மற்றும் சித்திரவதை தொடர்பான விசேட அறிக்கையாளர் (2007)[142] போன்ற அறிக்கையாளர்களின் அறிக்கைகள்,இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை எடுத்துக் காட்டுவதைப் போல, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அரசாங்கப் படைகள் மற்றும் துணைப் படைகள் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் கொலைச் சம்பவங்கள் தொடர்பான மாதிரிகளையும், சம்பவங்கள் தொடர்பான முக்கியமான தகவல்களையும் தருகின்றன. மேலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு, பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான வீடியோப் படங்கள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றையும், அதே போல பிரேத பரிசோதனை அறிக்கைகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்

[140] EiCN.4/20061531Add.5,மார்ச் 27, 2006 : நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான, அதிரடியான விசாரணைகள் எவையுமற்ற மரண தண்டனைகள், பிலிப் அல்ஸ்டன் பின்னிணைப்பு, இலங்கைக்கான தூதுக் குழு (நவம்பர் 28 - டிசம்பர் 6, 2005)

[141] Op.cit, A/HRC/8/3/Add.3 (2008); A/HRC/17/28/Add.1(ஜுன் 2011).

[142] A/HRC/7/3 Add.6

சம்பவங்கள் தொடர்பாக புலனாய்வு செய்து, விசாரிப்பதற்தென நியமனம்செய்யப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத அறிக்கையையும், அந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கென உருவாக்கப்பட்ட முதன்மை நபர்களின் சர்வதேச சுயாதீனக் குழுவின் (IIGEP) அறிக்கைகளையும் இலங்கைக்கான புலன் விசாரணைக் குழு மீளாய்வு செய்துள்ளது. இந்த ஜனாதிபதி ஆணைக்குழு 2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டதுடன், அதன் தலைவரின் பெயரில் அது உதலாகம ஆணைக்குழு என அழைக்கப்பட்டது.

215. 2009 ஆம் ஆண்டில் ஆயுத மோதல் முடிவடைந்ததையடுத்து, போரின் இறுதிக் கட்டத்தின் போது இடம்பெற்ற மனக்கலக்கமூட்டும் சம்பவங்களை சித்தரித்துக் காட்டும் வீடியோப் படங்கள் மற்றும் புகைப்படங்கள் என்பன வெளி வந்துள்ளன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு பாரிய எண்ணிக்கையிலான புகைப்படங்கள் மற்றும் வீடியோப் படங்கள் என்பன கிடைத்திருப்பதுடன், அவற்றில் பெரும்பாலானவை பொது மக்களால் பகிரங்கமாக பெற்றுக் கொள்ள முடியாதவையாகும். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு, இந்தப் புகைப்படங்கள் மற்றும் வீடியோப் படங்கள் என்பவற்றை சுயாதீனமான தடய அறிவியல் நிபுணர் ஒருவரின் உதவியுடன் பகுப்பாய்வு செய்துள்ளது. மேலும், 2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 17 ஆவது அமர்வின் போது, நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான, அதிரடியான அல்லது விசாரணைகள் எவையுமற்ற மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் கிரிஸ்டொப் ஹெய்ன்ஸ்[143] அவர்களினால் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கையையும் அது கவனத்தில் எடுத்திருந்தது. இந்த தொழில்நுட்ப அறிக்கை நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான விதத்தில் வழங்கப்பட்ட மரண தண்டனை ஒன்று தொடர்பான ஒரு சில வீடியோப் படக் காட்சிகளின் உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

### சட்ட விரோதமான கொலைகள் தொடர்பான போக்குகள்: 2002 – 2011

216. பொலிஸ், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை கடற்படை என்பவற்றை உள்ளடக்கிய அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள், அதே போல தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோதமான கொலைகள், மீளாய்வுக்குட்படுத்தப்படும் காலப் பிரிவுக்கு முன்னர் இடம்பெற்றிருந்ததுடன், அவை 2009 ஆம் ஆண்டு வரையிலும், அதன் பின்னரும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன. பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் ஒரு சில கொலைகள், போரின் பின்னரும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்கான ஆணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலப் பிரிவுக்குள் இடம்பெற்ற சட்ட விரோதமான கொலைகளின் எண்ணிக்கை தொடர்பான விரிவான, நம்பகமான புள்ளிவிபரங்கள் கிடைக்காதிருந்து வந்த போதிலும், நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான, அதிரடியான அல்லது விசாரணைகள் எவையுமற்ற மரண தண்டனைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் மற்றும் சித்திரவதை தொடர்பான விசேட அறிக்கையாளர் ஆகியோர் தமது இலங்கை விஜயத்தின் பின்னர் சமர்ப்பித்த அறிக்கைகளில் வாழ்வதற்கான உரிமைகள் மீறப்பட்டு வரும் மனக்கலக்கமூட்டும் ஒரு போக்கினை எடுத்து விளக்கியுள்ளார்கள். அத்தகைய போக்குகள் தண்டனை குறித்த எத்தகைய அச்சமுமில்லாத விதத்தில் தொடர்ந்து இடம்பெற்று வருவதனையும் அந்த

[143] A/HRC/17/28/Add.1

அறிக்கைகள் எடுத்துக் காட்டியுள்ளன. அது தவிர, இலங்கையின் சிவில் சமூக அமைப்புக்களும், சர்வதேச அரசு சாராத அமைப்புக்களும் நூற்றுக்கணக்கான இத்தகைய சம்பவங்களை ஆவணப்படுத்தி, அறிக்கையிட்டுள்ளன. இலங்கைக்கான கண்காணிப்புக் குழு போர் நிறுத்த உடன்படிக்கையின்[144] கீழ்வரும் பெருந்தொகையான கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்து, முடிவுகளை வெளியிட்டுள்ளது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் இருக்கும் தகவல்கள், இலங்கைக்கான போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, இலங்கையில் செயல்பட்ட 2002 ஆம் ஆண்டுக்கும், 2008 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப் பிரிவுக்குமிடையில், அக்குழுவுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட இத்தகைய கொலைச் சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. போர் நிறுத்த கண்காணிப்புக் குழு கொலைகளை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்திருந்தது.[145]

217. கிடைக்கும் தகவல்களின் பிரகாரம், இத்தகைய கொலைகளின் அளவு காலத்திற்கு காலம் வேறுபட்டிருந்தது. போர் நிறுத்தம் செயற்படுத்தப்பட்ட ஆரம்ப காலப் பிரிவின் போது நாடெங்கிலுமிருந்து ஒரு சில சம்பவங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டிருந்தன. எனினும், 2004 தொடக்கம் குறிப்பாக 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து அரசியல்வாதிகள்,தொண்டு நிறுவனப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை இலக்காகக் கொண்ட கொலைகளையும் உள்ளடக்கிய விதத்தில் சட்ட விரோதமான கொலைகள் தீவிரமாக அதிகரிக்கத் தொடங்கியிருந்தன. நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான கொலைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டன் 2005 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆந் திகதி தொடக்கம் டிசம்பர் 6 ஆம் திகதி வரையில் இலங்கையில் மேற்கொண்ட தனது விஜயத்தையடுத்து சமர்ப்பித்த அறிக்கையில், சட்ட விரோதமான கொலைகள் “மோதலை தீவிரமடையச் செய்வதில் மிக முக்கியமான தனித்த ஒரு கூறாக” இருந்துவந்துள்ளன என்ற விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.[146] அரசியல் கொலைகளின் எண்ணிக்கை 2005 ஆம் ஆண்டில் மட்டும் 300 க்கும் மேற்பட்டதாக இருந்துவந்ததனை “பெருமளவுக்கு நம்பகமான மதிப்பீடுகள்” காட்டுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.[147] அநேகமாக இவற்றில் எந்தவொரு

---

144 குறிப்பாக, இராணுவ நடவடிக்கைகள் குறித்த உறுப்புரைகள் 1.2 மற்றும் சாதாரண குடிமக்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகள் தொடர்பான உறுப்புரை 2.1 “1.2 எந்தவொரு தரப்பும் எத்தகைய ஒரு இராணுவத் தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டாது. இது அனைத்து விதமான இராணுவ நடவடிக்கைகளையும் முற்று முழுவதுமாக நிறுத்துவதை அவசியப்படுத்துகின்றதுஅது பின்வரும் செயல்களையும் உள்ளடக்கிய போதிலும், அவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை: அ. நேரடியான மற்றும் மறைமுகமான சுடுகலன்களை பயன்படுத்தி துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், ஆயுதம் தாங்கிய திடீர் தாக்குதல்கள், மறைந்திருந்து நிகழ்த்தப்படும் தாக்குதல்கள், படுகொலைகள், கடத்தல்கள், சாதாரண பொதுமக்களின் அல்லது இராணுவத்தின் சொத்துக்களை அழித்தல், நாச வேலை, தற்கொலை தாக்குதல்கள் மற்றும் ஆழ ஊடுருவும் அலகுகளினால் நிகழ்த்தப்படும் செயல்கள் ஆ. விமான மூலமான குண்டுத் தாக்குதல் இ. கடற்படை செயற்பாடுகள் மூலம் நிகழ்த்தப்படும் தாக்குதல்கள். 2.1 தரப்பினர் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் சாதாரண குடிமக்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும். இது சித்திரவதை, பயமுறுத்துதல், கடத்தல், கப்பம் வாங்குதல் மற்றும் துன்புறுத்தல் போன்ற செயற்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.”

145 இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இறுதி அறிக்கை, பக். 103, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செய்தி அறிக்கைகள், உதாரணமாக மே 2004, மார்ச் 2005 மற்றும் ஏப்ரல் 2006, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இறுதி அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

146 E/CN.4/20061531Add.5,மார்ச் 27, 2006 : நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான, அதிரடியான அல்லது விசாரணைகள் எவையுமற்ற மரண தண்டனைகள், விசேட அறிக்கையாளரின் அறிக்கை, பிலிப் அல்ஸ்டன் பின்னிணைப்பு, இலங்கைக்கான தூதுக் குழு (நவம்பர் 28 - டிசம்பர் 6, 2005)

147 E/CN.4/2006/53/Add.5, Op.cit.

கொலைச் சம்பவம் தொடர்பாகவும் தாக்கமான விதத்தில் புலன் விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கவில்லைஎன்றும், அவற்றின் விளைவாக, "மிகச் சில" குற்றத் தீர்ப்புக்களே வழங்கப்பட்டிருந்தன என்றும் அவர் தெரிவித்திருந்தார்.[148]

218. (வடமாகாணத்தில் சில காலமாக செயற்பட்டு வந்திருக்கும்) ஈபிடிபி போன்ற துணைப்படைக் குழுக்களுடன் இணைந்த விதத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற கருணா அணியின் எழுச்சி, பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படும் சம்பவங்களைப் போலவே, குறிப்பாக கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் இடம்பெறும் சட்டவிரோதமான கொலைகளின் அளவு மற்றும் இயல்பு என்பவற்றை மாற்றி அமைத்திருந்தது. கிழக்கு மாகாணத்தில் கருணாவின் பிளவை அடுத்து இடம்பெற்று வந்த கொலைச்சம்பவங்களின் கொடூரச் தன்மையின் விளைவாக சாதாரண பொதுமக்களுக்கு மத்தியில் ஓர் அச்ச உணர்வு நிலவி வந்தது என்ற விடயத்தை அவதானிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கையில் போர் நிறுத்தக் காலப் பிரிவுக்கு முன்னர் இத்தகைய ஓர் அச்ச உணர்வு நிலவி வரவில்லை என்பதனையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[149] நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் மேற்கொள்ளப்படும் கொலைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "பெருந்தொகையான ஆட்கள் - குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் - கருத்துச் சுதந்திரம், நடமாட்டச் சுதந்திரம்,அமைப்புக்களில் இணையும் சுதந்திரம் மற்றும் பொது விவகாரங்களில் பங்கேற்கும் சுதந்திரம் என்பவற்றை அனுபவிக்கும் விடயத்தில் நம்பகமான விதத்தில் மரண அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்."

219. இக்காலப் பிரிவின் போது இடம்பெற்று வந்த இராணுவம், துணைப்படைகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பவற்றின் மறைமுகமான செயற்பாடுகள் காரணமாகவும், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட விதத்தில் காணப்பட்ட ஒத்த தன்மைகள் காரணமாகவும் சட்டவிரோதமான கொலைகளுக்கு யார் பொறுப்பாக இருந்துவந்துள்ளார்கள் என்ற விடயத்தை நிர்ணயிப்பது சில சந்தர்ப்பங்களில் கடினமானதாக இருந்துவந்தது. புலன் விசாரணைகள் இல்லாத நிலை அல்லது அவற்றின் குறைபாடுகள் குற்றமிழைத்தவர்கள் பொதுவாக இனங்காணப்படாத ஒரு நிலையை எடுத்து வந்திருந்தன. புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட, சாட்சியமளிப்பதற்கு முன்வருவதற்கு சாட்சிகள் பெருமளவுக்கு அச்சமடைந்திருந்தனர். ஆயுத மோதலின் இரண்டு பிரதான தரப்புக்களும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இக்கொலைகள் தொடர்பாக பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டி வந்துள்ளனர். எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் பாதுகாப்புப் படைகள், அவற்றுடன் இணைந்த துணைப்படைக் குழுக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பன இலக்கு வைத்து நடத்தப்பட்ட கொலைச் சம்பவங்களில் நேரடியாக சம்மந்தப்பட்டிருந்தன என்பதை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

220. இக்காலகட்டத்தின் மற்றுமொரு முக்கியமான குணாம்சம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், அதிலிருந்து பிரிந்து சென்ற பல்வேறு குழுக்களுக்குமிடையில் பரஸ்பரம் பழிவாங்கல் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றமையாகும். இதன் மூலம் இக்குழுக்கள் ஒவ்வொன்றும் அடுத்த குழுவின் உறுப்பினர்கள் என, அவற்றுடன் இணைந்து செயற்படுபவர்களென அல்லது

148 E/CN.4/2006/53/Add.5, Op.cit.

149 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

அவற்றுக்குத் தகவல்களை வழங்குபவர்களென சந்தேகித்த நபர்களை இலக்கு வைத்திருந்தனர்.[150]நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் இலங்கை தொடர்பான தனது பயணத்தின் பின்னர் சமர்ப்பித்த அறிக்கையில் ''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் கருணா அணிக்குமிடையில் இடம்பெற்று வந்த தீவிரத் தன்மை குறைந்த மோதல்களின் விளைவாக கிழக்கில் பல சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்'' என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.[151]

221. பாதுகாப்புப் படைகளுடனும், கருணா குழுவுடனும் ஒத்துழைப்புடன் செயற்பாட்டு வருவதாக தாம் நம்பிய தனிநபர்களையும், அதேபோல அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் மிதவாதிகள் எனக் கருதப்பட்ட ஏனைய தமிழர்கள் ஆகியோரையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொலை செய்தது.[152] விசேட அறிக்கையாளர் தனது 2006 ஆம் ஆண்டு அறிக்கையில் ''தமிழ்ச் சமூகத்துக்குள்ளிருக்கும் தனது அரசியல் எதிரிகளை ''துரோகிகள்''என வகைப்படுத்தும் எல்ரீரீஈ இயக்கத்தின் செயல் மற்றும் கொலைகளை மேற்கொள்வதன் மூலம் அடிபணிய வைப்பதற்கான அதன் முயற்சிகள் என்பன அடிப்படையில் மனித உரிமைகளை மீறும் செயல்களாக இருந்து வருகின்றன" எனக் குறிப்பிட்டிருந்தார்.[153]

222. எல்ரீரீஈ இயக்கம் அத்தகைய கொலைகளைச் செயற்படுத்தும் விதம், குறிப்பாக, அதன் புலனாய்வுப் பிரிவில் இருந்து பெறப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ''பிஸ்டல் அணியை''பயன்படுத்துவதையும் உள்ளடக்கியிருந்தது (அத்தியாயம் IVப்; பார்க்கவும்). குறிப்பாகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள், தகவல்களை வழங்கும் தமிழர்கள் மற்றும் பகைமை தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள்[154] ஆகியோரைக்

---

150 A/HRC/8/3/Add.3 (2008): நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர், தொடர் அறிக்கை, பக். 99. இலக்குடன் கூடிய கொலைகளை முன்னெடுப்பதற்கென மேற்கொள்ளப்படும் மறைமுகமான இராணுவச் செயற்பாடுகள், இராணுவத்தின் பக்க பலத்துடன் கூடிய துணைப் படைகளுக்கும், எல்ரீரீஈ இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குமிடையிலான 'ஒரு நிழல் யுத்தத்துக்கு, இணையானதாக இருந்து வந்தது. மோதல் இடம்பெற்ற பிரதேசங்களில் தொடர்ந்தும் அதிகரித்த அளவில் இதே மாதிரியான ஒரு போக்கே நிலவி வந்தது. புலனாய்வுப் பிரிவுச் செயற்பாட்டாளர்கள் தீவிரம் குறைந்த ஒரு போரில் ஈடுபட்டிருந்தார்கள்.

151 E/CN.4/2006/53/Add.5, Op.cit.

152 மனிதநேயச் செயற்பாடு தொடர்பான விடய ரீதியான பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit

153 E/CN.4/2006/53/Add.5, Op.cit. நீதிமன்ற விசாரணைக்கு புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ''தற்பொழுது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அப்பாவிப் பொதுமக்களின் கொலைகளுக்கும், பயமுறுத்தல் செயல்களுக்கும், புலம்பெயர் சமூகம் நிதிப்படுத்தலை வழங்கி வரும் அளவுக்கு, அவர்கள் வாழ்ந்து வரும் அரசுகளின் அரசாங்கங்கள் இந்த அறிக்கையின் முடிவுகள் தொடர்பாகவும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதனை மேம்படுத்தும் விடயத்தில் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் தொடர்பாகவும் ஒரு உரையாடலில் ஈடுபடுதல் வேண்டும்.

154 SLMM இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்,ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ,ஈ.பி.டீ.பி மற்றும் புளொட் என்பவற்றையும் உள்ளடக்கிய பகைமை தமிழ் இயக்கங்கள்.

கொலை செய்வதற்காக இந்த பிஸ்டல் குழு பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அத்தகைய கொலைகள் மோட்டார் சைக்கிளில் வரும் இரண்டு ஆட்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன அதில் ஒருவர் கைத்துப்பாக்கி ஒன்றால் குறிப்பிட்ட நபரை நோக்கிச் சுடுவதுடன், உடனடியாக அங்கிருந்து இருவரும் தப்பிச் செல்வார்கள். பாதுகாப்புப் படையினர் மற்றும் துணைப்படைக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோரும் கொலைகளை மேற்கொள்வதற்கு இதே மாதிரியான முறையை பின்பற்றியதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய கொலைகள் பொதுவாக சாட்சியங்களுக்கு எதிரில் பட்டப்பகலில் இடம்பெறுகின்றன. ஆனால், அங்கு நின்ற சாட்சியங்கள் பொலிஸார், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மற்றும் ஏனையவர்களிடம் இந்தக் குற்றச் செயல்களை இழைத்தவர்களை தம்மால் அடையாளம் காணவோ அல்லது எப்படியானவர்கள் என்று எடுத்து விளக்கவோ முடியாதுள்ளதென மறுப்பது வழமையாகும். இந்தப் பிஸ்டல் குழுக்களின் உறுப்பினர்கள்,இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் குழுக்களுடன் இணைந்து செயற்படும் தகவல்களை வழங்கும் தமிழர்களையும் கொலை செய்ததாகக் கூறப்படுகின்றது. இராணுவத்தின் ஆழ ஊடுருவி தாக்குதல் நடத்தும் பிரிவு எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசச்திற்குள்ளேயே புலிகள் இயக்கத்தின் ஒரு சில தலைவர்களை கொலை செய்திருந்தது.[155]

223. எல்ரீரீஈ இயக்கத்தின் மற்றொரு தனித்த அடையாளம் மற்றும் அது பரவலாக மறுத்து வந்த ஓர் உத்தி தற்கொலைத் தாக்குதல்களாகும். இவை போர் நிறுத்த ஒப்பந்த காலத்திற்கு முன்னர் அடிக்கடி இடம்பெற்று வந்ததுடன், 2005 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் மீண்டும் இடம்பெறத் தொடங்கியிருந்தன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் காலப்பிரிவின் போது இடம்பெற்ற பெரும்பாலான தற்கொலைத் தாக்குதல்களில் ஒருசில தாக்குதல்கள் சிவிலியன்களை இலக்காகக் கொண்டிருந்த போதிலும், பெரும்பாலானவை பாதுகாப்புப் படையினரையே இலக்காகக் கொண்டிருந்தன. பொதுமக்களைப் பாதிக்கும் விதத்தில் எல்ரீரீஈ இயக்கத்தினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தற்கொலைத் தாக்குதல்களுக்கான ஓர் உதாரணம் 2008 பெப்ரவரி 3 ஆம் திகதி கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தில் நடந்த தாக்குதலாகும். இத் தாக்குதலின் விளைவாக 12 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் அவர்களில் பெரும்பாலானவர்கள் மாணவர்கள் ஆவார்கள். மேலும், இத் தாக்குதலின் போது நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர்.[156] நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பான அத்தியாயத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் மற்றுமொரு அத்தகைய தாக்குதல் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை பதிவு செய்யும் ஓர் இடத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலாகும். இத்தாக்குதலில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படை ஆளணியினர் ஆகியோர் 28 பேர் உயிரிழந்தனர்.

224. எல்ரீரீஈ இயக்கம் 2005 டிசம்பர் மாதத்தில் வீதியோரங்களில் மேற்கொள்ளப்படும் அதன் கிளேமோர் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியிருந்தது. இத்தகைய தாக்குதல்களின் முதன்மை இலக்காக பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் இருந்துவந்திருக்க முடியும்.[157] எனினும், அவற்றில் அதிகமான அளவுக்கு பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் சாதாரண பொதுமக்களே

[155] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

[156] மனிதநேயச் செயற்பாடுகள் குறித்த விடய ரீதியான பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு,Op.cit.

[157] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இறுதி அறிக்கை மனித நேயச் செயற்பாடுகள் குறித்த விடய ரீதியான பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு.

பாதிக்கப்பட்டார்கள். தொடக்கத்தில் கிளேமோர் குண்டுகளின் உபயோகம் யாழ்ப்பாணத்தீபகற்பத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருந்துவந்தது. எவ்வாறிருப்பினும், வெகுவிரைவில் வன்னியில் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்த பிரதேசங்களிலும் இத்தகைய தாக்குதலகள் நடத்தப்பட்டதுடன், குறிப்பாக, வவுனியா மன்னார் மவாட்டங்கள் இதனால் பாதிப்படைந்தன. இந்த அத்தியாயத்தின் இறுதியில் எடுத்து விளக்கப்படும் அத்தகைய சம்பவங்களில் ஒன்று கெப்பித்திகொல்லாவ பிரதேசத்தில் 150 பயணிகளை எடுத்துச் சென்ற பேருந்து ஒன்றின் மீது நிகழ்த்தப்பட்ட கிளேமோர் குண்டுத் தாக்குதலாகும். அத்தாக்குதலில் 64 பேர் கொல்லப்பட்டனர். 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதிக்கும் யூன் 15 ஆம் திகதிக்கும் இடையில் இந்த மாவட்டங்களில் 21 புறம்பான கிளேமோர் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பதிவு செய்திருந்தது. வன்னிப் பிரதேசத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலக்காகக் கொண்டு பாதுகாப்புப் படையினரும் கிளேமோர் தாக்குதல்களை மேற்கொண்டு வந்தார்கள் என்ற விடயத்தையும் அது முடிவாகக் குறிப்பிட்டிருந்தது.[158] அத்தகைய தாக்குதல்கள் 2007 ஆம் ஆண்டின் போது தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன.

225. எல்ரீரீஈ இயக்கம் சில சந்தர்ப்பங்களில் மக்கள் படை என அழைக்கப்பட்ட சாதாரண உடைகளிலிருந்த போராளிகளையும் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தி வந்தது என்ற விடயம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மக்கள் படை 2006 ஆம் ஆண்டின் போது முதன்மையாக பாதுகாப்புப் படை உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு கொலைகளை மேற்கொண்டது.[159]. இந்த அனைத்துக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

226. துணைப்படைக் குழுக்கள் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செற்படும் நிலை 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மிகவும் தெளிவாகத் தெரிய வந்திருந்தது. இதனை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும், விசேட அறிக்கையாளர்களும் ஆவணப்படுத்தியிருந்தனர். நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் 2008 மே 14 இல் வெளியிட்ட தனது தொடர் நடவடிக்கை அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "இந்த அணிகள் சுயாதீனமான ஆயுதக் குழுக்களாக இருந்து வரவில்லை என்ற விடயத்தை எடுத்துக்காட்டக் கூடிய வலுவான சான்றுகள் காணப்படுகின்றன. அதற்குப் பதிலாக அவை பாதுகாப்புப் படைகளிலிருந்து பணிப்புரை மற்றும் உதவி என்பவற்றைப் பெற்று வருகின்றன."[160](முதன்மையாக பாதுகாப்புச் செயலாளருக்கும்,பாதுகாப்புச் படைகளுக்கும்) (குறிப்பாக இலங்கை இராணுவம்,இராணுவ புலனாய்வுத் துறை மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை என்பவற்றுக்கும்) துணைப்படைக் குழுக்களுக்குமிடையில் தொடர்புகள் நிலவி வந்துள்ளன என்ற விடயத்தை பல மூலாதாரங்கள் எடுத்துக் காட்டியிருந்தன.[161]

227. பாதுகாப்புப் படைகள் மற்றும் துணைப்படைக் குழுக்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பாக, 2006 ஜனவரி மாதத்துக்கும் 2007 நவம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது "தகவலறிந்த மதிப்பீடொன்றின்" பிரகாரம் "பாதுகாப்புப் படைகள் யாழ்ப்பாணத்தில் மொத்தம் 700

---

158 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

159 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்,E/CN.4/2006/53/Add.5, Op.cit.

160 A/HRC/8/3/Add.3, Op.cit.

161 WS on file

நீதிமன்ற விசாரணை நடைமுறைகளுக்குப் புறம்பான மரண தண்டனைகளை நிறைவேற்றியிருந்தனர்" என்றும் மற்றும் "இத்தகைய பெருந்தொகையான சம்பவங்களில்"ஈபிடிபி அமைப்பு சம்மந்தப்பட்டிருந்தது என்றும் விசேட அறிக்கையாளர் குறிப்பிட்டுள்ளார்.[162] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால்மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம், சந்தேக நபர்கள் ஒருசில சந்தர்ப்பங்களில் இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை சோதனைச் சாவடிகள் அல்லது இராணுவ விசாரணைகள் என்பவற்றுக்கூடாக அடையாளம் காணப்பட்டடிருந்தனர். அதனையடுத்து, ஈபிடிபியினால் கொலை செய்யப்படும் ஆபத்தை எதிர்கொண்டார்கள்.[163]

228. சட்டவிரோதமான கொலைகளில் பாதுகாப்புப் படைகளும் துணைப்படைக் குழுக்களும் சம்பந்தப்பட்டிருந்தன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் காட்டுகின்றன. வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் கிழக்கு மற்றும் வட மேற்குப் பிரதேசங்களில் இராணுவத் தளங்களிலும், பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு அருகிலும் சாதாரண பொது மக்களைக் கொலை செய்யும் ஒரு நோக்கு பொதுவாக உருவாகியிருந்தது. இத்தகைய பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இக்கொலைகளுக்குப் பொறுப்பானவர்களாக இருந்துவந்தவர்கள் என நம்பப்பட்ட நபர்கள், கடுமையான பொலிஸ் மற்றும் இராணுவ பிரசன்னம் இருக்கும் நிலையில் தடுத்து நிறுத்தப்படாமல் இந்த இடங்களைக் கடந்து சென்றிருக்கின்றார்கள்.

229. பாதுகாப்புப் படைகள் மற்றும் துணைப்படைக் குழுக்கள் என்பன செயற்படும் விதம் "மோட்டார் சைக்கிள் கொலைகளையும்" உள்ளடக்கியிருந்தது. ஒரு மோட்டார் சைக்கிளில் வரும் சாதாரண உடை அணிந்த இரு நபர்கள் இலக்கு வைக்கும் நபர் அருகில் சென்று, அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள். பிரபல்யமான "வெள்ளைவான் கடத்தல்கள்" மற்றும் பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல்களுக்கு வழிகோலிய சட்டவிரோதமான கைதுகள் என்பவற்றின் பின்னர் ஏனைய கொலைகள் இடம்பெற்றுள்ளன. சில சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்த நபர்கள், பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்கு வந்து, அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்அல்லது அவர்களை அந்த இடத்திலிருந்து எடுத்துச் சென்று, வேறொரு இடத்தில் வைத்துக் கொலை செய்துள்ளனர். ஒரு சிலர் வேலைக்குச் செல்லும் பொழுது அல்லது வேலையிலிருந்து திரும்பி வரும்போது கொலை செய்யப்பட்டிருந்தனர். சில சந்தர்ப்பங்களில் இராணுவ முகாம்களுக்கு அல்லது பொலிஸ் நிலையங்களுக்கு எதிரில் இக்கொலைகள் நிகழ்ந்துள்ளன. உதாரணமாக, ஆவணப்படுத்தப்பட்ட ஒரு சம்பவத்தில், குற்றமிழைத்த நபர்கள் அருகிலிருந்த இராணுவத் தளத்துக்கு ஒரு மோட்டார் சைக்கிளில் வந்துள்ளனர் அவர்கள் பாதிக்கப்பட்டவரின் வீட்டுக்குச் செல்வதற்கு முன்னர் அருகிலிருந்த இராணுவச் சிப்பாய்களுடன் கதைத்துள்ளனர். பின்னர் அந்த நபரின் வீட்டுக்குச் சென்று, அவரை சுட்டுக் கொன்றுள்ளார்கள். பெரும்பாலான பாதிக்கப்பட்ட நபர்கள் தலையில் சுடப்பட்டிருந்தார்கள்.[164]

230. அரசாங்கப் படைகள் தொடர்பாகக் கிடைக்கும் தகவல்கள், ஆரம்ப வருடங்களில் ஆவணப்படுத்தப்பட்டிருந்த கொலை செய்யும் போக்குகள் தவிர,சண்டையின் பின் கைது செய்யப்பட்ட எல்ரீரீஈ போராளிகள் மற்றும் ஏனைய

162 A/HRC/8/3/Add.3, Op cit, para.19.

163 A/HRC/8/3/Add.3, Op.cit.; இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

164 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

-

நபர்கள் ஆகியோருக்கு நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான தொடரான பல மரண தண்டனைகளைஅரசாங்கப் படைகள் வழங்கி வந்துள்ளன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. இந்தச் சம்பவங்கள் இந்த அத்தியாயத்தில் பின்னர் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

### சட்டவிரோதமான கொலைகளுக்கு இரையானவர்கள்

231. இப்பிரிவு நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான விதத்தில் கொல்லப்பட்ட தனிநபர்களின் பல்வேறு வகையினரை எடுத்துக் காட்டுகின்றது. ஒரு தரப்பின் அல்லது மறு தரப்பின் விமர்சகர்களாக அல்லது ஆதரவாளர்களாக இருந்துவந்தவர்களெனக் கருதப்பட்ட மனிதநேயப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோரும் இதில் அடங்குவர். மிதவாதக் குரல்களை பிரதானமாக தைரியமிழக்கச் செய்வதும், அதேபோல அரசியல் அல்லது உபாயரீதியான இலாபத்துக்காக குடிமக்களை அடக்குவதும்,பிரித்து வைப்பதுமே இக்கொலைகளின் நோக்கமாக இருந்து வந்தது போல் தெரிந்தது[165] பாதுகாப்புப் படைகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கவனத்தை ஈர்த்திருந்த பல அரசியல்வாதிகள் கொல்லப்பட்டார்கள்.

232. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசித்து வந்த வறிய சமூகங்களைச் சேர்ந்த சாதாரண குடிமக்கள்,சில சந்தர்ப்பங்களில் கடுமையான சண்டை இடம்பெற்று வந்த பிரதேசங்களில் வசித்து வந்த மக்கள் இரு தரப்புப்புக்களுக்குமிடையில் அகப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் இரு தரப்புக்களில் ஏதேனும் ஒரு தரப்புக்கு தகவல்களை வழங்கி வருவதாக குற்றம் சாட்டப்பட்டதுடன், போர்க்கள இழப்புக்களுக்கான ஓர் பழிவாங்கலாக அல்லது அவர்களுடைய கருதப்பட்ட சார்புநிலை காரணமாக கொல்லப்பட்டனர். தகவல்களை வழங்குபவர்கள் மற்றும் எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் பிரிவு உறுப்பினர்கள் ஆகியோரும் இவ்விதம் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். குறிப்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து சென்ற பின்னர் இத்தகைய கொலைகள் நடந்துள்ளன. ஒருசில சந்தர்ப்பங்களில் தமது உறவினர்களின் அரசியல் சார்பு நிலைகள் குறித்த சந்தேகங்களின் அடிப்படையில் தனிநபர்கள் இலகு வைக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக, கிழக்கிலும் மற்றும் வட மாகாணத்தின் மேற்குப் பிரதேசங்களிலும் இந்நிலைமை காணப்பட்டது.

#### மனிதநேயப் பணியாளர்களின் கொலைகள்

233. 2013 ஆம் ஆண்டில் இலங்கை உலக அளவில் ஆகக்கூடிய எண்ணிக்கையில் மனிதநேயப் பணியாளர்கள் கொல்லப்படும் நாடுகளில் ஒன்றாக இருந்துவந்தது. 2006 ஜனவரி மாதத்துக்கும், 2007 டிசம்பர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் மனித நேயப் பணியாளர்களின் கொலைகள் மற்றும் காணாமல் போதல்கள் என்பவற்றை ஆவணப்படுத்தும் ஓர் இலங்கை அரசுசாரா அமைப்பு, குறிப்பாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு இச் சம்பவங்கள் கணிசமான அளவில் அதிகரித்திருந்ததாக அறிக்கையிட்டுள்ளது.[166.] அநேகமாக ஒவ்வொரு மாதத்தின் போதும் மனித நேயச் சேவைகளில் ஈடுபட்டுவரும் ஆகக்குறைந்தது ஒரு நபர் ஒன்றில் கொல்லப்பட்டதாக

---

165 E/CN.4/2006/53/Add.5,

166 Law and Society Trust, Under Fire: Persons in Humanitarian Service, A Preliminary Report on killings and disappearances of persons in humanitarian service in Sri Lanka January 2006-December 2007, 2008

அல்லது பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டதாக இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அது 60 திட்டவட்டமான சம்பவங்களையும் ஆவணப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட அமைப்புக்கள் Action Contre la Faim, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், நோர்வேஜியன் அகதிகள் பேரவை (NRC) என்பனவும் அடங்குகின்றன. நிவாரணப் பணியாளர்களுக்கெதிரானவன்முறைச் சம்பவங்களைப் பதிவு செய்யும் ஒரு உலகளாவிய கருத்திட்டம், இலங்கையில் 2002 க்கும் 2011க்கும் இடைப்பட்ட காலத்தின் போது 51 மனிதநேயப் பணியாளர்கள் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்ட 46 தனித்தனிச் சம்பவங்களை ஆவணப்படுத்தியுள்ளது.[167]2006 ஆம் ஆண்டில் இறுக்கமடைந்து வந்த அச்சச் சூழ்நிலையை நேரடியாக அவதானித்திருந்ததாக சாட்சிகளை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு சந்தித்தது. தேசிய மனிதநேயப் பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் ஆகியோருக்கு எதிராக பாதுகாப்புப் படை உறுப்பினர்களால் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்களை அவர்கள் அவதானித்திருந்தார்கள். [168]

234. இலங்கையில் மனிதநேயப் பணியாளர்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பான மிக முக்கியமான சம்பவம் 2006 ஆகஸ்ட் 1 ஆம் திகதி மூதூரில் ACF தொண்டு நிறுவனத்தின் 17 ஊழியர்கள் கொல்லப்பட்டமையாகும். இந்த ஊழியர்கள் மூதூர் பிரதேசத்தில் பொதுச் சுகாதாரம் மற்றும் நீர் விநியோக உதவி என்பவற்றை வழங்குவதில் ஈடுபட்டிருந்தார்கள். திருகோணமலையிலிருந்து நாளாந்தம் படகுச் சேவை மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, பணியிலமர்த்தப்பட்டிருந்த ACFஅமைப்பின் 17 உள்ளூர் ஊழியர்கள் இவ்விதம் கொலை செய்யப்பட்டார்கள்.இவர்களில் 16 ஊழியர்கள் தமிழர்களாக இருந்துவந்ததுடன், அவர்களில் ஒருவர் முஸ்லிம் ஆவார் ஐந்து பேர் பெண்களாவார்கள். அதே தினத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மூதூரைத் தாக்கியதுடன், மூதூர் நகரத்தைத் தற்காலிகமாக கட்டுப்பாட்டில் எடுத்திருந்தது. இக்காலப்பிரிவின் போது பாதுகாப்புப் படையினர் பொலிஸ் நிலையத்திற்கு அருகிலிருந்த பதுங்கு குழிகளையும் உள்ளிட்ட விதத்தில் குறிப்பிட்ட அமைவிடங்களில் தரித்திருந்தனர். அன்றைய தினம் திரும்பிச் செல்லும் படகு ரத்துச் செய்யப்பட்டதன் காரணத்தினால் ACF அமைப்பின் ஊழியர்கள் மூதூரிலே தங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். வெளியேறிச் செல்வதிலும் பார்க்க தங்களுடைய பணிமனை வளவுக்குள்ளேயே தரித்திருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பானதாக இருந்து வரும் என இலங்கை இராணுவம் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது. திருகோணமலை ACF தொண்டு நிறுவனம், 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 ஆம் திகதி காலை 7 மணியின் பின்னர் மூதூரில் பணியாற்றிய ஊழியர்களுடனான ரேடியோ தொடர்பினை இழந்தது. ஆகஸ்ட் 4 ஆம் திகதிக்கும் 6 ஆம் திகதிக்கும் இடையில் ACF நிறுவனம் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடன் இணைந்து மூதுருக்குள் பிரவேசித்து, அவர்களை வெளியில் எடுத்து வருவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், இலங்கை இராணுவம் தொடர்ந்தும் அவர்களுக்கு அனுமதி மறுத்து வந்தது. ஆகஸ்ட் 5 ஆம் திகதி ACF நிறுவனத்துக்கு அநாமதேயமான ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததுடன், அவர்களுடைய ஊழியர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என அந்த அழைப்பின் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்புப் படைஒருபோதும் எத்தகைய உத்தியோகபூர்வமான அறிவித்தல்களையும் வெளியிட்டிருக்கவில்லை. ACF நிறுவனத்தின் ஊழியர்களின் சடலங்கள் அந்த அலுவலக வளவுக்குள் காணப்பட்டதாக இலங்கை அரசுசாரா அமைப்பொன்று 2006 ஆகஸ்ட் 6 ஆந் திகதி

[167] The Aid Worker Security Database (AWSD); https://aidworkersecurity.org/incidents/report/country. Between 2006 and 2009 47 humanitarian aid workers were killed in Sri Lanka.

[168] WS on file

அறிவித்தது. உடல்கள் வரிசையாக கிடத்தப்பட்டிருந்ததுடன், பெரும்பாலானவை தலைகுப்புற வைக்கப்பட்டிருந்தன. தலையின் மீது துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகமோ அல்லது ஷெல் தாக்குதலோ இடம்பெற்றிருந்தன என்பதனைக் காட்டும் விதத்தில் கட்டிடத்துக்கு எத்தகைய சேதங்களும ஏற்பட்டிருக்கவில்லை.

235. 2006 ஆகஸ்ட் 7 ஆம் திகதி திருகோணமலை ACF அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் நகருக்குள் பிரவேசித்து, மரணித்திருந்த தமது சகாக்களின் சடலங்களைப் பெற்றுக் கொண்டார்கள். அந்தச் சடலங்கள் பெருமளவுக்கு அழுகிய நிலையிலிருந்து வந்த காரணத்தினால் தூரத்திலிருந்தே அவற்றிலிருந்து வரும் துர்நாற்றத்தை உணர முடிந்தது. பொலிஸாரும் மற்றும் இலங்கை இராணுவத்தினரும் இந்தக் குற்றம் இடம்பெற்ற இடத்தைப் பாதுகாப்பதற்கு எத்தகைய முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. 2006 ஆகஸ்ட் 29 ஆம் திகதி இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு “இந்தச் செயலுக்குப் பின்னால், பாதுகாப்புப் படைகளைத் தவிர, வேறு எந்த ஆயுதக் குழுக்களும் இருந்திருக்க முடியாது” என முடிவாகக் கூறியிருந்தது. ஆகஸ்ட் 4 ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் மூதூரின் மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர். ஆகஸ்ட் முதல் வாரத்தின் போது வெவ்வேறு காலங்களில் எல்ரீரீஈ இயக்கமும், பாதுகாப்புப் படைகளும் மூதூர் மீது தமது கட்டுப்பாட்டை வைத்திருந்தன.[169]

236. இந்தச் சம்பவம் குறித்து உரிய விதத்தில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இக் குற்றச் செயலை இழைத்தவர்கள் தண்டனையிலிருந்து விலக்குப் பெறும் உரிமையை முழுமையாக அனுபவித்து வந்தார்கள் என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது. மேலும், இலங்கையில் உள்நாட்டு மட்டத்தில் பொறுப்புக் கூறும் நிலையை முன்னெடுப்பதில் எதிர்கொண்டு வரும் சவால்களையும் அது எடுத்துக் காட்டியிருந்தது. சாட்சியங்கள் ஒன்றில் சேகரிக்கப்படவில்லை அல்லது அவை திரிக்கப்பட்டன அல்லது பொலிஸ் புலனாய்விலிருந்து காணாமல் போயிருந்தன. பாதுகாப்புப் படைகள் முந்திக் கொண்டு 2006 ஆகஸ்ட் 7 ஆம் திகதி இக் கொலைகளுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாக இருந்துவந்தனர் எனப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்ததன் மூலம் பக்கச்சார்பற்ற புலன்விசாரணைக்கானவாய்ப்பை இல்லாமல் செய்திருந்தனர். நிறைவேற்றுத் தரப்பு மரணவிசாரணையில் தலையீடுகளை மேற்கொண்டதுடன், ஒரு சிங்களப் பிரதேசத்தின் நியாயாதிக்கத்துக்குள் இந்தச் சம்பவம் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு நடைபெற்ற விசாரணைகளில் பங்கேற்பதில் தமிழர்கள் சிரமங்களை எதிர்கொண்டார்கள். முதலில் இந்த வழக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மாஜிஸ்ட்ரேட் நீதவான் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டார். இரண்டாவது பிரேத பரிசோதனை ஒன்றைக் கண்காணிப்பதற்கென நியமனம் செய்யப்பட்டிருந்த சர்வதேச தடய உடல்கூற்றுப் பகுப்பாய்வாளர் துன்புறுத்தப்பட்டதுடன், மரணமடைந்த ஒருவரின் முதுகெலும்பில் விசேட அதிரடிப் படையினர் பயன்படுத்தும் துப்பாக்கியின் ரவையொன்று எனக் கருதக் கூடிய ஒரு ரவை காணப்பட்டது என்ற தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

237. இந்தச் சம்பவம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் உதலாகம ஆணைக்குழு என்பவற்றினால் புலன் விசாரணை செய்யப்பட்டன. ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பல சாட்சிகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டதுடன், சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லாத

169 http://www.amnestyusa.org/pdf/srilanka2009.pdf

நிலையில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த ஆணைக்குழு,தலைசிறந்த நபர்களின் சர்வதேச சுயாதீன குழுவின் உதவியுடன் வெளிநாட்டிலிருந்த முக்கியமான சாட்சிகளின் சாட்சியங்களை வீடியோ இணைப்பின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தது. எவ்வாறிருப்பினும், ஒருசில வாக்குமூலங்கள் எடுக்கப்பட்ட பின்னர், ஆணைக்குழுவின் தலைவர் தலையிட்டு, வீடியோ இணைப்பு வாக்குமூலங்களைப் பயன்படுத்துவதனைத் தடுத்தார். சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் அவர் அவ்விதம் செய்திருந்தார். ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பொலிஸார் ACF தொண்டு நிறுவனம் அங்கிருந்த விடயம் தமக்குத் தெரியாது என்று கூறியிருந்ததுடன், ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற,முன்னுக்குப் பின் முரணான விபரங்களைக் கூறியிருந்தனர். “பொலிஸாருக்கு மத்தியில் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட ஒரு குருட்டுத் தனம் ஒரு தொற்று வியாதியாக நிலவி வந்தது” என அவதானிப்பாளர் ஒருவர் கூறியிருந்தார்.

238. ACF சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், குற்றவாளிகளுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட வேண்டும் என்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மிகவும் வலுவான விதத்தில் பரிந்துரைகளை முன்வைத்திருந்தது (பந்தி 9.120). விசாரணைகள் இன்னமும் நிலுவையில் இருந்து வருவதுடன், 2014 ஆகஸ்ட் மாதத்தில் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டிருந்தது. அது மீண்டும் ஒருமுறை இதில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற விடயத்தை மறுத்ததுடன், ACF அமைப்பே இதற்குப் பொறுப்பாக இருந்து வருகின்றது என குற்றம் சாட்டியிருந்தது. அதேபோல,அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக சர்வதேசத்தின் கவனம் ஈர்க்கப்படும் சந்தர்ப்பங்களில்,இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும், உள்ளூர் ACF ஊழியர்களும் மிகவும் மோசமான விதத்தில் பாதுகாப்புப் படையின்துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருந்தனர். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு தொகுத்துள்ள தகவல்களின் பிரகாரம், பாதுகாப்புப் படையினர் ACF அமைப்பின் ஊழியர்களை நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொலை செய்திருந்தார்கள் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. அரசாங்கத்தின் கருத்தின் பிரகாரம், குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் இது தொடர்பாக 2015 ஜனவரி தொடக்கம் 18 இராணுவ உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்திருப்பதுடன், மேலும் 22 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளனர். பிரான்சில் வாழ்ந்து வருவதாக நம்பப்படும் 2 பிரதான சாட்சிகளை நேர்காணல் நடத்துவதற்கு குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் விரும்புகின்றது. இது தொடர்பாக அது பிரான்ஸ் அரசாங்கத்தின் உதவியைக் கோரியுள்ளது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்ட ஏனைய சம்பவங்கள் வருமாறு:

239. 2006 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி 22 வயதான NRC ஊழியர் ஒருவர் வேலையின் பின்னர் சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த பொழுது 562 ஆவது படையணியினர் சேவையிலமர்த்தப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தின் வவுனியா சோதனைச் சாவடிக்கு அருகில் 200 மீற்றர் பிரதேசத்துக்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவத்துக்கு முன்னர், இலங்கை இராணுவத்துக்கு உதவுவதற்கு NRC உழவு இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு மறுத்தமை காரணமாக பாதுகாப்புப் படையினர் அவருடன் சண்டை பிடித்திருந்ததுடன், அவருக்கு அச்சுறுத்தலும் விடுத்திருந்தார்கள். இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ததுடன், இந்தக் கொலைக்குப் பெரும்பாலும் இராணுவமே பொறுப்பாக இருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தது. வவுனியா மாஜிஸ்ட்ரேட்

நீதவான்ஆரம்பத்தில் 4 சந்தேக நபர்களை இனங்கண்டிருந்த போதிலும், இந்த விசாரணை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டதாக நம்பப்படவில்லை.[170]

240. சுனாமிக்குப் பிற்பட்ட கட்டுமான கருத்திட்டமொன்றில் வேலை செய்து வந்த சிங்கள சிவிலியன்களான 6 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலம்பாவெளி என்ற இடத்தில் வைத்து 2007 ஏப்ரல் 1 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் 2004 இந்து சமுத்திர சுனாமியிலிருந்து உயிர் தப்பியவர்களுக்கென அநாதை இல்லக் கட்டிடமொன்றை கட்டும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்தத் தாக்குதலில் ஒரு சிங்களத் தொழிலாளியும், இரு தமிழ்த் தொழிலாளர்களும் காயமடைந்திருந்தனர். இந்தத் தாக்குதல் மயிலம்பாவெளி விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவிலுள்ள ஓர் இடத்தில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. அந்த இடம் மட்டக்களப்பு நகரிலிருந்து 8 கிலோமீற்றர்கள் வடக்கில் அமைந்துள்ளது. இந்தக் கொலைகள் தொடர்பாக அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது குற்றம் சாட்டியது. ஆனால், எல்ரீரீஈ இயக்கம் அதன் தொடர்பை மறுத்ததுடன், இந்தத் தாக்குதலின் பின்னணியில் கருணா குழு இருந்து வருவதாக குற்றம் சாட்டியது.[171] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குத் தெரிந்த வரையில், இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுமில்லை வழக்குத் தாக்கல் செய்யப்படவுமில்லை.

**அரசியல்வாதிகளின் கொலைகள்**

241. அறிக்கையிடும் காலப்பிரிவின் போது, இலக்கு வைக்கப்பட்டடு அரசியல்வாதிகள் கொலை செய்யப்பட்ட பல சம்பவங்களை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்துதல் மற்றும் கொலை செய்தல் என்பன தொடர்பான சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு பொறிமுறையைக் கொண்டிருக்கும் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் (IPU)“2004 செப்டம்பர் மாதம் தொடக்கம் 2008 ஆகஸ்ட் மாதம் வரையில் கிடைக்கப் பெற்றிருக்கும் சம்பவங்களின் எண்ணிக்கை குறித்தும், சம்பந்தப்பட்டிருக்கும் பாரதூரமான பிரச்சினைகள் குறித்தும்”[172] கரிசனைகளை எழுப்பியிருந்தது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இதில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாகவே இருந்துவந்தனர். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், அரசியல்வாதிகளின் கொலைகள் ஒருசில சந்தர்ப்பங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டவை, என்றும் ஏனைய சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினரால் ஒருசில சந்தர்ப்பங்களில் துணைப்படைக் குழுக்களுடன் இணைந்துமேற்கொள்ளப்பட்டவை என்றும் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

*வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்*

242. இவ்வாறு கொலை செய்யப்பட்ட மிக உயர்மட்ட அரசியல்வாதிகளில் ஒருவர் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆவார். அவர் 2005 ஆகஸ்ட் மாதத்தில் கொழும்பில் அவரது வீட்டில் வைத்து ஒரு சினைப்பர் தாக்குதலினால் படுகொலை

---

170 இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்; Law and Society Trust, *Under Fire: Persons in* Humanitarian *Service*;

171 Law and Society Trust, *Under Fire: Persons in Humanitarian Service*, மனித உரிமைகளுக்கான ஆசிய நிலையம் http://www.achrweb.org/Review/2007/164-07.htm

172 அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் இலங்கை விஜயம் தொடர்பான அறிக்கை, ஜுலை 2013, பக். 2

செய்யப்பட்டார். பூர்வாங்க பொலிஸ் விசாரணைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இக் கொலையைச் செய்திருந்ததாக குற்றம்சாட்டியிருந்த போதிலும், இக் கொலையைச்செய்த நபர் ஒருபோதும் இனங்காணப்படவில்லை.[173] 2008 மார்ச் மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் 5 பேர் மீது இந்தப் படுகொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டது.[174] அரசாங்க மூலாதாரங்களின் பிரகாரம், பல நபர்கள் கைது செய்யப்பட்டு, கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்கு மீண்டும் 2015 செப்டம்பர் 9 ஆம் திகதி விசாரிக்கப்படவிருந்தது.

***ஜோசப் பரராஜசிங்கம், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்***

243. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்[175]பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு புனித மேரி தேவாலயத்தில் நள்ளிரவு ஆராதனை ஒன்றில் பங்கேற்றிருந்த பொழுது 2005 டிசம்பர் 24 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார் அவருடைய மனைவியையும் உள்ளடக்கிய விதத்தில் இந்தத் தாக்குதலின் போது 8 பேர் காயமடைந்தார்கள். பாதுகாப்புப் படைகள் பெரும் எண்ணிக்கையில் நிலை கொண்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயமொன்றில் இராணுவ சோதனைச் சாவடிகளுக்கு இடையில் இந்தத் தேவாலயம் அமைந்திருந்தது. பரராஜசிங்கத்துக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த பொலிஸ் மெய்ப் பாதுகாவலர்கள் அவருடன் இருந்தார்கள். ஆனால், அவர்கள் அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தடுப்பதற்கோ அல்லது கொலைகாரர்களை மடக்கிப் பிடிப்பதற்கோ முயற்சிக்கவில்லை எனக் கூறப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலுக்கு ஒருசில நாட்களுக்கு முன்னர் அவருடைய வழமையான மெய்ப்பாதுகாவலர்கள் மாற்றப்பட்டிருந்தனர். அவருடைய முதுகுப் பக்கத்திலும் மார்புப் பக்கத்திலும் ஒன்பது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருந்தன. சற்று முன்னர் தான் அவர் ஆயரிடமிருந்து நற்கருணையைப் பெற்றிருந்தார். ஆராதனையில் பங்கேற்ற பெருந்தொகையான மக்களுக்கு மத்தியில், அதேபோல ஆயருக்கு அருகில் ஒரு தேவாலயத்திற்கு எதிரில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இந்தக் கொலைச் சம்பவத்தை நிகழ்த்திய இரு நபர்கள் சாதாரண உடையில் இருப்பதனை சாட்சிகள் பார்த்திருந்தார்கள். அவர்கள் அவரை சுட்டுக் கொன்ற அதேவேளையில், ஆராதனையில் பங்கேற்ற உறுப்பினர்கள் தரையில் படுத்துக் கொண்டார்கள். அந்த இடத்திலிருந்து தப்பிச் செல்லும் பொருட்டு அவர்கள் கூரையை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், அதனை அடுத்து, தேவாலயத்தைச் சூழவுள்ள மதிலில் ஏறி அவர்கள் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றார்கள். இந்தச் சம்பவத்தின் போது பெருந்தொகையான பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் அந்த இடத்தில் இருந்தனர் .[176]

173 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, பக். 26, மனிதநேயச் செற்பாடுகள் தொடர்பான விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, இருதரப்பும் எல்ரீரீஈ பொறுப்பாக இருந்து வந்தது என கூறுகின்றன, எவ்வாறிருப்பினும், இக்குற்றச் செயல் தொடர்பாக எல்ரீரீஈ இயக்கம் ஒருபோதும் பொறுப்பேற்கவில்லை. குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பொலிஸ் அறிக்கைகளும் எல்ரீரீஈ மீதே குற்றம்சாட்டி இருந்தன.

174 http://timesofindia.indiatimes.com/world/south-asia/Arrest-warrants-against-Prabhakaran-Pottu-in-Kadirgamar-case/articleshow/4525407.cms

175 ஜோசப் பரராஜசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்திருந்த மனித உரிமைகளுக்கான வட கிழக்கு செயலகத்தின் (NESOHR) ஓர் உறுப்பினராகவும் இருந்து வந்தார்.

176 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

244. தேவாலயம் பொலிஸ் காவலின் கீழ் இருந்துவந்தபோதிலும், கொலைகாரா்கள் எவ்வித இடையூறுமின்றி அங்கிருந்து வெறியேறிச் சென்றாா்கள். அவா்கள் அருகிலிருந்த இராணுவ முகாமை நோக்கி ஒரு வெள்ளைவானில் புறப்பட்டுச் சென்றதாகக் கூறப்படுகின்றது. கருணா எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து பிரிந்த பின்னா் அவருக்கு ஆதரவளிப்பதற்கு ஜோசப் பரராஜசிங்கம் மறுப்புத் தெரிவித்திருந்ததுடன், முன்னா் கருணா அணியின் உறுப்பினா்களினால் அவா் அச்சுறுத்தப்பட்டிருந்தாா். அவருடைய குடும்ப உறுப்பினா்கள் இத்தாக்குதலின் பின்னா் மேலும் அச்சுறுத்தல்களை எதிா்கொண்டிருந்ததுடன்,நாட்டை விட்டு வெளியேறினாா்கள்.[177]

245. கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில், கருணா குழுவே ஜோசப் பரராஜசிங்கத்தைக் கொலை செய்திருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்றும், அக்கொலைக்கு பாதுகாப்புப் படையினர் உதவியும் ஒத்தாசையும் வழங்கியுள்ளாா்கள் என்பதனை நம்புவதற்கும் நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்றும் இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு கருதுகின்றது. பூா்வாங்க பொலிஸ் விசாரணைகளின் போது, ஆயுதப்படைகளைச் சோ்ந்த இரு சந்தேக நபா்கள் இனங்காணப்பட்டதுடன், அவா்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனா்.[178] எனினும், இக் கொலைகள் தொடா்பாக பெருந்தொகையான நேரடிச் சாட்சிகள் இருந்துவந்தபோதிலும், சாட்சியமளிப்பவா்களிடமிருந்து போதிய சாட்சிகள் கிடைக்காத காரணங்களினால் அவா்கள் விடுவிக்கப்பட்டனா். இந்தக் கொலைச் சம்பவம் உதலாகம ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படுவதற்கென இருந்த சம்பவங்களில் ஒன்றாகும். ஆணைக்குழு அதன் அறிக்கையில் 'சாட்சியமளிப்பவா்கள் இல்லாத காரணத்தினாலும், காலம் தொடா்பான வரையறைகள் காரணமாகவும்' பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டிருந்தது.[179]

246. இக்கொலை தொடா்பாக விசாரணை செய்வதற்கென 2006 ஏப்ரல் மாதத்தில் ஓய்வுபெற்ற உயா் நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரத்ன அவா்களின் தலைமையில் ஒரு புறம்பான ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. இக்குழு 2007 மாா்ச் மாதத்தில் சமா்ப்பித்த அதன் இறுதி அறிக்கையில் இது ஒரு அரசியல் குற்றச்செயலாக இருந்திருக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்ததுடன், "புலன்விசாரணைகள் போதியளவில் மேற்கொள்ளப்படாமைக்கும், சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நடைமுறைக்கு முரணான விதத்தில் மேற்கொள்ளப்பட்டமைக்கும்" அது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைக் குறை கூறியிருந்தது. குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இரு சிப்பாய்களைக் கைது செய்திருந்த போதிலும், போதியளவு சாட்சியங்கள் இருந்து வரவில்லை. அடையாள அணிவகுப்பொன்றின் போது அவா்கள் அடையாளம் காணப்படவுமில்லை. இந்த அறிக்கை பிரசுரிக்கப்படாவிட்டாலும் கூட, இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழுவினால் அது மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

247. ஜோசப் பரராஜசிங்கத்தையும் உள்ளிட்ட விதத்தில் கொலை செய்யயப்பட்ட பெருந்தொகையான இலங்கை அரசியல்வாதிகள் தொடா்பாக விசாரணை

---

[177] பாராளுமன்ற உறுப்பினா்களின் மனித உரிமைகள் தொடா்பான கமிட்டி, கமிட்டியின் இலங்கைக்கான தூதுக் குழுவின் விஜயம் குறித்த அறிக்கை,யூலை 9 – 11, 2013, அனைத்து பாராளுமன்ற ஒன்றியம், அக்டோபா் 9,2013

[178] இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவினால் பாா்வையிடப்பட்ட இரகசிய குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அறிக்கைகள்

[179] பாா்க்கவும்: உதலாகம ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை

செய்வதற்கென அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் (IPU) 2013 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் இலங்கைக்கான ஒரு விஜயத்தை மேற்கொண்டது.[180] அவர்களின் விஜயத்தின் போது இக்கொலையில் கருணா குழு சம்பந்தப்பட்டிருந்தது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு போதிய சாட்சியங்கள் இருந்து வரவில்லை என பல அதிகாரிகள் அவர்களிடம் தெரிவித்திருந்தார்கள். ஆகவே, அந்த நிலையில் இக் கொலை தொடர்பாக ஒரு விசாரணைமுன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் அதன் அறிக்கையில் "பாதுகாப்புப் படையினரின் உடந்தை இல்லாமல் திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொலைகாரர்கள் தப்பிச் செல்வது எவ்வித்திலும் சாத்தியமாகியிருக்க முடியாது" எனக் குறிப்பிட்டிருந்தது.

248. இது தொடர்பாக மேலும் விசாரணைகளை நடத்துவதற்கென குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் 2014 டிசம்பர் மாதம் மட்டக்களப்புக்குச் சென்றதாகவும், அந்த விசாரணை "அண்மைக்காலத்தில் மீண்டும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது" என்றும் 2015 ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்க வட்டாரங்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு அறிவித்திருந்தன.

*நடராஜா ரவிராஜ், மனித உரிமைகள் சட்டத்தரணி மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்*

249. மனித உரிமைகள் சட்டத்தரணியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான நடராஜா ரவிராஜ் 2006 நவம்பர் மாதம் 10 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவரினால் கொழும்பு பிரதான வீதி ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதல் சம்பவம் பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு இடைப்பட்ட ஒரு பிரதேசத்தில், பாதுகாப்புப் படைத் தளமொன்றுக்கு அருகில் வீதியோரத்தில் இடம்பெற்றது.[181]

250. நடராஜா ரவிராஜ் தனது மிதவாதக் கருத்துக்கள்,தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அரசாங்கம் என்பன தொடர்பான தனது விமர்சனபூர்வமான அறிக்கைகள் என்பவற்றின் காரணமாக பரவலாக அறியப்பட்டிருந்தவராவார். குறிப்பாக அவருடைய கொலைச் சம்பவத்துக்கு முன்னரான வாரங்களின் போது அவர் இத்தகைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அவர் சிவில் கண்காணிப்புக் கமிட்டி என்ற பெயரில் ஒரு கமிட்டியை அமைத்திருந்ததுடன், அக்கமிட்டி கடத்தல்கள், பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் மற்றும் சட்டவிரோதமான கொலைகள் என்பவற்றுக்கு அரசாங்கமே பொறுப்பாக இருந்து வருகின்றது என குற்றம் சாட்டியிருந்தது. அவர் கொலை செய்யப்பட்ட தினத்துக்கு முந்தைய தினம் அவரும், ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினால் தமிழ்ச் சிவிலியன்கள் கொலை செய்யப்படுவதற்கு எதிராகவும், அதிகரித்து வரும் கடத்தல் சம்பவங்கள் மற்றும் நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான கொலைச் சம்பவங்கள் என்பவற்றுக்கெதிராகவும் எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு கொழும்பு ஐநா அலுவலகத்துக்கு எதிரில் நடத்தப்பட்ட ஆர்ப்பட்டமொன்றில் பங்குபற்றியிருந்தனர்.

251. உதலாகம விசாரணை ஆணைக்குழுவின் ஆணைப் பத்திரத்துக்குள் வந்த உயர்மட்டக் கொலைச் சம்பவங்களில் ரவிராஜ் அவர்களின் கொலைச் சம்பவமும்

[180] IPU report, Op.cit.

[181] WS on file; see also http://news.bbc.co.uk/2/hi/south_asia/6155362.stm.University for Teachers for Human Rights (UTHR) Special report. No 29

ஒன்றாகும். எவ்வாறிருப்பினும்,இந்தஆணைக்குவின் வெளியிடப்படாத ஆவணங்களை அணுகக்கூடிய வாய்ப்புஇலங்கைக்கான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்தது. போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் ரவிராஜ் கொலை தொடர்பாக ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என அந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன.[182] பரராஜசிங்கம் மற்றும் ரவிராஜ் ஆகியோரின் கொலைகள் தொடர்பாக விசாரணைகளில் எத்தகைய முன்னேற்றங்களும் காணப்படாமை குறித்து அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் ஆழ்ந்த கவலை தெரிவித்திருந்தது. "இக்கொலைகள் தொடர்பாக துணைப் படைகளின் சம்பந்தம் குறித்த சாத்தியத்தை மூலங்கள் தொடக்கத்திலிருந்தே சுட்டிக்காட்டியிருந்தன"[183]

252. பொலிஸ் விசாரணைகள் தொடக்கத்தில் எத்தகைய முன்னேற்றத்தையும் காட்டியிருக்கவில்லை. அவ்விசாரணைகள் முழுமையாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் தொடர்பாகவே கவனம் செலுத்தியிருந்தன. வன்னிப் பிரதேசத்தை அணுக முடியாதிருப்பதனால் அச் சந்தேக நபர்களை கைது செய்ய முடியாதுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், இக்கொலை தொடர்பாக 2015 மாரச் மாதத்தில் மூன்று கடற்படை உத்தியோகத்தர்களும், முன்னைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டு, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேலும் விசாரணைகளை நடத்தியதனையடுத்து, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இலங்கைக்கு வெளியில் இருந்து வருவதாக நம்பப்படும் ஒரு நான்காவது நபர் தொடர்பாக பிடி விறாந்தொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த வழக்கு இப்பொழுது கொழும்பு மாஜிஸ்ட்ரேட் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கின்றது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்ட மற்றொரு சந்தேக நபர் 2007 ஆம் ஆண்டில் இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்தப்பட்டதுடன், அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், அவர் எங்கிருக்கின்றார் என்ற விடயம் இதுவரையில் தெரியவில்லை.

*தியாகராஜா மகேஸ்வரன், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்*

253. ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரான தியாகராஜா மகேஸ்வரன் கொழும்பில் இந்துக்கோயில் ஒன்றில் தனது குடும்பத்தினருடன் சமயச் சடங்கொன்றில் பங்குபற்றிக் கொண்டிருந்த பொழுது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். கொலை செய்யப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்களில் ஈபிடிபி அமைப்பும், அரசாங்கமும் கூட்டாக இணைந்து செயற்பட்டு வரும் விடயத்தை தான் பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தப் போவதாக அவர் கூறியிருந்தார். அவருடைய மரணத்துக்கு சிறிது காலத்திற்கு முன்னர் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளும், அவருக்கென்று வழங்கப்பட்டிருந்த மெய்ப் பாதுகாவலர்களின் எண்ணிக்கையும் கணிசமானளவில் குறைக்கப்பட்டிருந்தது.

254. மகேஸ்வரனின் கொலைச் சம்பவம் தொடர்பாக 2012 ஆகஸ்ட் 27 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தினால் முன்னைய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளி ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. அந்த மரணதண்டனை தொடர்பான ஒரு மேன்முறையீடு நிலுவையிலிருந்துவருவதுடன்,

[182] பார்க்கவும்: உதலாகம ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை

[183] அனைத்து பாராளுமன்ற ஒன்றியம், ஆட்சிமன்றத் தீர்மானம் 2013 அக்டோபர் 9 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

2015 நவம்பர் மாதத்தில் அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகள் தொடர்பான அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் கமிட்டி ''இந்தக் குற்றச்செயல் திரு.மகேஸ்வரன் அரசாங்கம் குறித்து முன்வைத்த விமர்சனங்களுடன் சம்பந்தப்பட்டிருக்க முடியும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த கரிசனைகளின் பின்னணியில், குறிப்பாக, இந்தத் தீர்ப்பு, கொலைக்கான நோக்கத்தை நிரூபித்திருந்ததா என்பதனை தெரிந்து கொள்வதற்கு ஆர்வமாக இருப்பதாக"குறிப்பிட்டிருந்தது. மேலும், இக்கொலை ''அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் திடீரென குறைக்கப்பட்ட ஒரு பின்னணியில், அவருடைய அரசியல் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தில்'' நிகழ்ந்திருக்கின்றது என்ற விடயத்தையும் அது குறிப்பிட்டிருந்தது.[184]

*டி.எம். தசநாயக்க, சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சர்*

255. சிங்களப் பாராளுமன்ற உறுப்பினரும், தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சருமான டி.எம். தசநாயக்க 2008 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜாஎல பிரதேசத்தில் வீதி அருகில் மேற்கொள்ளப்பட்ட கிளேமோர் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டார்.[185] இதனை அடுத்துஎல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இந்தக் கொலை தொடர்பாக சந்தேகிக்கப்பட்ட எல்ரீரீஈ உறுப்பினர்களின் வழக்குகள் இடம்பெற்று வருவதுடன்,அச்சந்தேக நபர்களில் ஒருவர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் மாதத்தில் அவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்படடிருந்தது. ஆனால், திட்டவட்டமான குற்றச்சாட்டு என்ன என்ற விடயம் தெளிவாகத் தெரிய வரவில்லை. ஏனைய இருவர் தொடர்பாக நீர்கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதுடன், அரசாங்கத் தகவல்களின் பிரகாரம் அந்த வழக்கு 2015 செப்டம்பர் மாதத்தில் விசாரணைக்கு வரவிருக்கின்றது.

*ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, பாராளுமன்ற உறுப்பினர், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்*

256. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும், நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே 2008 ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வலிவேரியாவில் இடம்பெற்ற ஒரு மரதன் ஓட்டப் போட்டியின் போது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றினால் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்கான பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது சுமத்தப்பட்டது. இக்கொலை தொடர்பான விசாரணைகளின் முழு விபரங்களும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கவில்லை. பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் குற்றவியல் புலனாய்வு பிரிவு என்பவற்றின் விசாரணைகளை அடுத்து, அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், முன்னைய பொலிஸ் உத்தியோகத்தரையும் உள்ளடக்கிய விதத்தில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள். கொலை இடம்பெற்று ஏழு வருடங்களுக்குப் பின்னர் இந்த வழக்கு 2015 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கம்பகா உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவிருக்கின்றது.

[184] அமர்வு, ஜனவரி 2013

[185] அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் வழக்கு

**ஊடகவியலாளர்களின் கொலைகள்**

257. இலங்கையில் கொலை செய்யப்பட்ட பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறைப் பணியாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை உலக அளவில் உயர்வான எண்ணிக்கைகளிலொன்றாக இருந்து வந்திருப்பதுடன், கருத்துச் சுதந்திரத்தின் மீது கடுமையான கட்டுப்பாடுகளையும் அவை எடுத்து வந்திருந்தன. ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான கமிட்டி (CPJ), 2004 ஆண்டிற்கும் 2009 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது இலங்கையில் 13 ஊடகவியலாளர்களின் கொலைச் சம்பவங்களை ஆவணப்படுத்தியிருந்தது. ஊடகவியலாளர்களைக் கொலை செய்யும் நபர்கள் தண்டனையிலிருந்து தப்பிக் கொள்ளும் ஆகக்கூடிய விகிதங்களைக் கொண்டிருக்கும் உலகின் பத்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இருந்து வருகின்றது என அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.[186] எல்லைகளற்ற ஊடகவியலாளர்களின் அமைப்பு அதன் 2006 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய வருடாந்த பத்திரிகைச் சுதந்திரச் சுட்டெண்ணில், இலங்கையை மிக மோசமான சுட்டெண்ணைக் கொண்டிருக்கும் ஜனநாயக நாடுகளில் ஒன்றாக வரிசைப்படுத்தியிருந்ததுடன், 2005 ஆம் ஆண்டின் பின்னர் நிலைமை வர வர மோசமடைந்து வருகின்றது என்ற விடயத்தையும் குறிப்பிட்டிருந்தது.[187] தமது சொந்தப் பாதுகாப்பு, குடும்பத்தினரின் பாதுகாப்பு என்பன தொடர்பான அச்சம் காரணமாக அதிக அளவிலான இலங்கை ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுச் சென்றிருந்தனர். மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான கரிசனைகளை முன்வைத்த காரணத்தினால் தேசத் துரோகிகள் என அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு மரண அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருந்தன.[188] ஊடகவியலாளர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் விளைவாக பெருமளவுக்கு ஒரு சுயதணிக்கை நிலைமை காணப்பட்டதுடன், 2015 ஜனவரி மாதத்தில் புதிய அரசாங்கம் பதவிக்கு வரும் வரையில் அந்நிலை நீடித்தது.

258. பெருந்தொகையான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கும் விடயத்தை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் கவலையுடன் அவதானித்திருந்தது. “எவ்விதத் தாமதமுமின்றி குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் எடுத்துவரும் பொருட்டு, விசாரணைகளைத் துரிதமாக முடிப்பதற்கு படிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்” என அது பரிந்துரை செய்திருந்தது’’[189]

259. அச்சுறுத்தல்களின் பின்னர் நாட்டிலிருந்து வெளியேற வேண்டி நேரிட்ட பல ஊடகவியலாளர்களை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு சந்தித்தது. கொலை செய்யப்படுவதற்கு முன்னர், ஏனைய ஊடகவியலாளர்களுக்கு எவ்வாறு பல்வேறு விதமான மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன என்ற விடயத்தை

186 https://cpj.org/killed/asia/sri-lanka/,https://cpj.org/reports/road_to_justice2014-english.pdf

187 பார்க்கவும்: வருடாந்த பத்திரிகைச் சுதந்திரச் சுட்டெண், எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் http://en.rsf.org/press-freedom-index-2006,35.html

188 உதாரணமாக பார்க்கவும்: மனித உரிமைகள் துறையில் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் கூட்டாக இணைந்து செயற்படுபவர்கள் மீது பழிவாங்கல் செயற்பாடுகள் குறித்த செயலாளர் நாயகத்தின் அறிக்கைகள். A/HRC/14/19 and A/HRC/21/18

189 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, பந்திகள் 5.152-5.156

அவா்கள் பாா்த்திருந்தாா்கள்.[190] இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழுவுக்கு சாட்சிகளிலிருந்து – அவர்களில் சிலர் பாதுகாப்புப் படைகளுடன் நெருக்கமாக சம்பந்தப்பட்டிருந்தனா் - பெருந்தொகையான குற்றச்சாட்டுக்களும் கிடைத்திருந்தன. ஒருசில செயல்களில் பாதுகாப்புப் படையினா் மிக நெருக்கமாகச் சம்பந்தப்பட்டிருந்ததாகவும், ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளா்களுக்கெதிரான தாக்குதல்களில் பாதுகாப்புப் படையினா் நேரடியாகபங்கேற்றதாகவும் சிலசந்தா்ப்பகளில், துணைப்படைக் குழுக்களுடன் இணைந்து இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனா்.[191] காணாமல் போன கருத்துச் சித்திரக் கலைஞர் எக்னலிகொடவின் சம்பவம் தொடா்பாக அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் - பல இராணுவ வீரா்கள் கைது செய்யப்பட்டிருக்கும் நிலை - அத்தகைய சம்பவங்களில் இராணுவத்தின் தொடா்பினை எடுத்துக் காட்டுகின்றது (பாா்க்கவும்: பலவந்தமான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடா்பான அத்தியாயம்).

260. இலங்கையில் ஊடகவியலாளா்களுக்கெதிரான தாக்குதல்கள் பரவலான விதத்தில் இடம்பெற்றுள்ளன என்ற விடயத்யையும், நீண்டகாலமாக அவை இடம்பெற்றுள்ளன என்ற விடயத்தையும், இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப்பிரிவு முழுவதிலும், அதன் பின்னரும் அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்ற விடயத்தையும் விசாரணைக் குழு கவனத்திலெடுத்துள்ளது. அரசாங்கத்தின் கொள்கைகளை அல்லது அரசாங்கத்தின் நபா்களை விமா்சிப்பதாக திட்டவட்டமாகத் தெரிய வந்திருக்கும் ஊடக நிறுவனங்களே மீண்டும் மீண்டும் ஒரு திட்டமிட்ட விதத்தில் இலக்காகக் கொள்ளப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. பல சந்தா்ப்பங்களில் ஊடகவியலாளா்களுக்கெதிராக மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்த போதிலும், அவா்களுக்குப் போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய கொலைச் சம்பவங்கள் தொடா்பான விசாரணைகளிலும் சிறிதளவு முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது.

261. ஊடகவியலாளா்கள் மற்றும் ஊடக நிறுவன ஊழியா்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பின்வரும் கொலைச் சம்பவங்களை இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது:

*உதயன் மீதான தாக்குதல்கள்*

262. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் *உதயன்* பத்திரிகை பல்வேறு சந்தா்ப்பங்களில் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இத்தாக்குதல்கள் அண்மைக் காலம் வரையில் தொடா்ச்சியாக இடம்பெற்றுள்ளன.[192] 2006 மே 2 ஆம் திகதி மாலை தமிழ் பேசும் ஆயுதம் தரித்த துப்பாக்கிதாரா்கள் இப்பத்திரிகையின் யாழ்ப்பாண அலுவலகத்துக்குள் பிரவேசித்து, ரஞ்சித் குமாா் மற்றும் சுரேஸ் குமாா் ஆகிய ஊழியா்களைக் கொலை செய்ததுடன், மேலும் இருவரைக் காயப்படுத்தினா். அலுவலகத்திலிருந்த கணினிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பவற்றுக்கு அவா்கள் பாரிய சேதங்களை விளைவித்தனா். இந்தக் கொலைகளுக்கு முந்தைய

190 WS on file

191 WS on file

192 நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் குறித்த விசேட அறிக்கையாளா், குற்றச்சாட்டுக் கடிதம். ஆகஸ்ட் 2007 WS on file.

தினம் இப்பத்திரிகை ஈபிடிபி துணைப்படை அமைப்பின் தமிழ் தலைவரான டக்ளஸ் தேவானந்தா குறித்த ஒரு கருத்துப்படத்தை வெளியிட்டிருந்தது. கொலைகாரர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றதுடன், அந்த அலுவலகம் ஓர் இராணுவத்தளம் மற்றும் பாதுகாப்புப்படை சோதனைச் சாவடி என்பவற்றுக்குமிக அருகில் அமைந்திருந்த போதிலும், அவர்கள் தப்பிச் செல்ல முடிந்தது. இந்தக் கொலைச் சம்பவங்கள் இராணுவத்தை இதில் சம்பந்தப்படுத்தும் நோக்கத்துடனும், அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதனை புலன் விசாரணைகள் எடுத்துக் காட்டுவதாக தெரிவித்திருந்தது.[193] எவ்வாறிருப்பினும், இந்தத் தாக்குதல் யாழ்ப்பாணத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஈபிடிபி அமைப்பு என்பவற்றால் கூட்டாகத் திட்டமிட்டிருந்தது என்றும், ஈபிடிபி உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு குற்றச்சாட்டுக்கள் கிடைத்துள்ளன.[194]

263. அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், 5 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, 2006 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி யாழ்ப்பாண மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஈபிடிபி உறுப்பினர் ஒருவர் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பது தொடர்பான குற்றச்சாட்டுக்களை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் புலனாய்வு செய்தது. ஆனால்,“இச்சம்பவம் தொடர்பாக அவர் மீது குற்றஞ் சாட்டுவதற்கு எத்தகைய பயனுள்ள தகவல்களும் கிடைக்கவில்லை.”

264. 2007 ஏப்ரல் 29 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் நிருபரான செல்வராஜா ராஜீவ்ராம் யாழ்ப்பாணத்தில் சோதனைச் சாவடி ஒன்றுக்கு சுமார் 600 மீற்றர் தொலைவில் ஒரு சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.[195]நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான மரண தண்டனைகள் குறித்த விசேட அறிக்கையாளர் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்த தகவல்களை இலங்கை அரசாங்கத்திடமிருந்து கேட்டிருந்த போதிலும், அந்த வேண்டுகோளுக்கு அரசாங்கத்திடமிருந்து எத்தகைய பதிலும் கிடைக்கவில்லை. 2011 யூலை 29 ஆம் திகதி உதயன் பத்திரிகை ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த பொழுது படுகாயமடைந்தார். அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டில் இது தொடர்பாக இரு நபர்கள் கைது செய்யப்பட்டிருந்த போதிலும், 2013 பெப்ரவரி 4ஆம் திகதி அவர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்படாது அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

265. உதயன் பத்திரிகைக்கு எதிராக பல்வேறு தாக்குதல்கள் நடத்திய நபர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதேவேளையில், இந்தச் செயல் முன்னெடுக்கப்பட்ட விதம் மற்றும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கும் தகவல்கள் என்பன, பாதுகாப்புப் படைகளுடன் கூட்டாக இணைந்து செயற்பட்டு வரும் துணைப்படைக் குழுக்களினால் அவை மேற்கொள்ளபட்டிருந்தன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதனைக் காட்டுகின்றன.

193 நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் குறித்த விசேட அறிக்கையாளருக்கான இலங்கை அரசாங்கத்தின் பதில், நவம்பர் 21,2007

194 WS on file

195 CPJ http://cpj.org/killed/2007/selvarajah-rajeewarnam.php

*சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க*

266. அரசாங்கத்தின் வெளிப்படையான விமர்சகர்களில் ஒருவராக இருந்துவந்த சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க 2009 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி காலையில் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த பொழுது, கொழும்பு பிரதான வீதி ஒன்றில் வைத்துக் கொலை செய்யப்பட்டார்.[196] இந்த மரணத்துக்கான காரணம் ஒருபோதும் முறையாக நிர்ணயிக்கப்படவில்லை. விமான நிலையத்தின் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் அமைந்திருந்த சோதனைச்சாவடி ஒன்றுக்கு அருகில்,வாகனப் போக்குவரத்து மிகுந்த சந்தி ஒன்றில் வைத்து அவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார் என ஒரு சில சாட்சிகள் கூறுகின்றார்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக ஏனைய அறிக்கைகள் கூறுகின்றன. இப்பத்திரிகை ஆசிரியருக்கு பெருந்தொகையான மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்ததுடன், முன்னர் பல சந்தர்ப்பங்களிலும் அவர் தாக்குதல்களுக்கு இலக்காகியிருந்தார். அவரது மரணத்தின் பின்னர் சண்டே லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த ஆசிரியர் தலையங்கத்தில் அவர் இப்படி எழுதியிருந்தார்: ''சுதந்திரமாகச் செயற்பட்டு வரும் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முதன்மையாக கொலையையே ஒரு கருவியாக பயன்படுத்தி வருகின்றது…இறுதியில் நான் கொல்லப்படும் போது அரசாங்கமே அந்தக் கொலையைச் செய்திருக்கும்''.

267. இந்த வழக்குக்கு மீண்டும் புத்துயிரூட்டப்பட்டு, பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவிலிருந்து அது மீண்டும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவித்துள்ள போதிலும், இதுவரையில் இந்த விசாரணை தொடர்பாக சிறிதளவு முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. அடுத்த விசாரணைத் திகதி 2015 செப்டம்பர் 18 ஆம் திகதி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல இராணுவ உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்ட போதிலும், பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டவரை அடையாளம் காண்பதற்காக சிம் அட்டைகளை பயன்படுத்துவதையும் உள்ளடக்கிய விதத்தில் முதன்மையான சாட்சியங்கள் உரிய விதத்தில் கையாளப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் அவர்கள் அவ்விதம் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

268. திரு. விக்கிரமதுங்கவின் கொலையை அடுத்து, சண்டே லீடர் பத்திரிகையைச் சேர்ந்த மேலும் இரண்டு ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன. 2009 இல் இராணுவ நடவடிக்கைகளின் இறுதிக் கட்டங்களின் போது, தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளுக்கு இலங்கைச் சிப்பாய்கள் மரண தண்டனை வழங்குவதனைக் காட்டும் வீடியோக்கள் எனக் கூறப்பட்ட வீடியோக்கள் தொடர்பான தகவல்கள் குறித்த கட்டுரைகள் சண்டே லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பின்னரே அவர்களுக்கு இந்த மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன. சிவப்பு மையினால் கையால் எழுதப்பட்டிருந்த கடிதங்கள் பின்வரும் விடயத்தைக் குறிப்பிட்டிருந்ததாக கூறப்பட்டது: 'நீங்கள் இனிமேலும் எழுதினால் உங்களை நாங்கள் கொலை செய்வோம் உங்களைத் துண்டு துண்டாக்குவோம்'. திரு. லசந்த விக்கிரமதுங்கவும் அவருடைய மரணத்திற்கு முன்னர் இதேமாதிரியான சிவப்பு மையினால் எழுதப்பட்ட கையெழுத்துக் குறிப்பொன்றை பெற்றுக் கொண்டிருந்தார்.[197]

---

196 WS on file

197 நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் குறித்த விசேட அறிக்கையாளர், நவம்பர் 6, 2009

### சட்டவிரோதமான விதத்தில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டமை

269. 2002 போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கிழக்கில் அதன் செல்வாக்கினை பலப்படுத்திக் கொள்வதற்கு முயற்சித்துடன், இச்சந்தர்ப்பத்தின் போது முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் முருகல் நிலைமைகள் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பல்வேறு தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், சாதாரண பொதுமக்களின் சட்டவிரோத கொலைகளும் அதிகரித்திருந்தன.[198] 2004 ஆம் ஆண்டில் கருணா எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற பின்னர், மிகத் தீவிரமான அதிகாரப் போராட்டங்கள் இடம்பெற்றன. முஸ்லிம் சமூகத்தின் உறுப்பினர்கள் எல்ரீரீஈ இயக்கம் மற்றும் கருணா குழு ஆகியோரின் கொலைகளுக்கான இலக்குகளாக இருந்துவந்தார்கள். பாதுகாப்புப் படைகளும் இக்கொலைகளைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இச் சம்பவங்கள் தொடர்பான பின்வரும் உதாரணங்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தன.

270. 2005 நவம்பர் 18 ஆந் திகதி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுப் பள்ளிவாசல் மீது அதிகாலை தொழுகையின் போது கிறைனைட் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், சுமார் 30 பேர் காயமடைந்தனர். ஒரு சில நாட்களின் முன்னர், கருணா குழுவினருடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதாகக் கூறப்பட்ட இரு எல்ரீரீஈ போராளிகள் கொல்லப்பட்டிருந்தனர். இக்கொலைகளை முஸ்லிம்கள் செய்ததாகக் கூறப்பட்டது. முன்னர் குறிப்பிடப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கான பொறுப்பு ஒருபோதும் நிர்ணயிக்கப்படவில்லை. அந்தத் தாக்குதல் அநேகமாக முஸ்லிம் சமூகத்துக்கெதிராக எல்ரீரீஈ இயக்கம் மேற்கொண்ட ஒரு பழிவாங்கல் செயலாக இருந்திருக்க முடியும்.[199]

271. 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆந் திகதி பொத்துவில் விசேட அதிரடிப் படை முகாம் ஒன்றுக்கருகில் 10 முஸ்லிம் கூலித் தொழிலாளர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தனர். இத்தாக்குதல்களுக்கான பொறுப்பு குறித்து முரண்பட்ட கருத்துக்கள் இருந்துவந்தன. அநேகமாக விசேட அதிரடிப்படையினரே இக் கொலைகளைச் செய்திருக்க வேண்டுமென உள்ளூர் முஸ்லிம்கள் கருதினார்கள். அதேவேளையில் இக்கொலைச் சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்துக்கும், பாதுகாப்புப் படைகளுக்குமிடையிலான பிளவுகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அரசாங்கம் தெரிவித்தது.[200.] இக் கொலைச்சம்பவம் உதலாகம ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்ட சம்பவங்களில் ஒன்றாக இருந்துவந்தது. அந்த ஆணைக்குழு விசேட அதிரடிப்படைக்கு எதிரான குற்றச்சாட்டை நிராகரித்ததுடன்,அநேகமாக எல்ரீரீஈ இயக்கத்தவர்களே இந்தக் கொலைகளைச் செய்திருக்க வேண்டுமென அடையாளம் கண்டிருந்தது.

---

198 ICG report, Sri Lanka's Muslims: Caught in the Crossfire, 29 May 2007.

199 E/CN.4/2006/53/Add.5, 27 March 2006,மோதலுடன் சம்மந்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசேட அறிக்கையாளரின் அறிக்கை, மார்ச் 2006

200 WS on filè இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம் உதலாகம ஆணைக்குழு அறிக்கை மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு (UTHR), விசேட அறிக்கைகள் 23 மற்றும் 25; ICG report, Sri Lanka's Muslims: Caught in the Crossfire, 29 May 2007.

### திருகோணமலையில் இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் கொலை

272. 2006 ஜனவரி 2 ஆம் திகதி முன்மாலை நேரத்தில் திருகோணமலை கடற்கரைக்கு அருகில் இருக்கும் காந்தி சிலை என அழைக்கப்பட்ட ஒரு பொது இடத்தில் ஒன்பது தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள் கூடியிருந்தார்கள்.[201] இந்தப் பிரதேசம் கடற்படை, பொலிஸ் மற்றும் இராணுவம் என்பவற்றின் சோதனைச் சாவடிகளைச் சூழ அமைந்திருந்த ஒரு பிரதேசமாக இருந்துவந்தது. பிற்பகல் சுமார் 7.30 மணியளவில் பச்சை நிற முச்சக்கரவண்டியொன்று அந்த இடத்துக்கு வந்ததுடன், அதிலிருந்த ஒருவர் கிறைனைட் ஒன்றை எடுத்து வீசினார். அத் தாக்குதலில் ஐந்து மாணவர்கள் காயமடைந்தனர். பின்னர் அந்த வாகனம் இலங்கை இராணுவத்தின் தலைமையகத்தை நோக்கி பாதுகாப்புப் படைச் சோதனைச் சாவடி ஒன்றைக் கடந்து கடற்கரை வீதியில் சென்றது. பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அந்த இடத்துக்கு வந்து,அம் மாணவர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர், மிக நெருக்கமாக நின்று அவர்கள் மீது பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறப்படுகிறது.ஐந்து சடலங்கள் பொலிஸாரினால் எடுத்து வரப்பட்டு,உள்ளூர் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டதுடன், ஏனைய ஐந்து மாணவர்களும் மரணித்தவர்கள் போல் நடித்ததன் மூலம் உயிர் தப்பினார்கள். அருகிலிருக்கும் சோதனைச் சாவடிகளிலிருந்து இந்த சம்பவத்தைப் பார்த்த, குடும்ப உறுப்பினர்களையும் உள்ளிட்ட விதத்தில் அந்த இடத்தில் பல சாட்சியங்கள் இருந்தார்கள். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், விசேட அதிரடிப்படை ஆட்களையும் உள்ளடக்கிய விதத்தில் பாதுகாப்புப் படையினர் இந்த ஐந்து மாணவர்களையும் கொலை செய்ததாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. இது நீதி மற்றும் பொறுப்புக் கூறுதல் என்பன தொடர்பான அத்தியாயத்தில் மேலும் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளதைப் போல, இலங்கையின் பின்புலத்தில் உள்ளூர் மட்டத்தில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பொறுப்புக் கூறலை எடுத்து வரும் விடயத்தில் இருந்து வரும் சவால்களை மீண்டும் ஒருமுறை இச் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

### எல்ரீரீஈ அரசியல் துறை உறுப்பினர்களை இலக்காகக் கொண்ட சட்டவிரோதமான கொலைகள்

273. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், 2004 ஆம் ஆண்டிற்கும் 2006 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் அரசியல் அலுவலகங்களில் பணியாற்றிய எல்ரீரீஈ அரசியல் பிரிவு உறுப்பினர்கள், பாதுகாப்புப் படைகளின் மறைமுகமான உடன்பாட்டுடன் மற்றும் ஒருசில சந்தர்ப்பங்களில் நேரடியான சம்பந்தத்துடன், கருணா அணியினரால் இலக்கு வைக்கப்பட்டிருந்தனர் என்பதை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. அத்தகைய சம்பவங்களில் பல சம்பவங்கள் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதுடன், அவை அரசியல் துறை உறுப்பினர்கள் வீதிகளில் கொலை செய்யப்பட்ட போக்கினை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இக் கொலைகள் மோட்டார் சைக்கிள்களில் வந்த நபர்களினால் அல்லது கெரில்லாப் பாணியில் மறைந்திருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்களினால் நிகழ்த்தப்பட்டிருந்தன. அவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களில் பயணித்துக்

201 WS on file; இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்.

கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே அக் கொலைகள் நடத்தப்பட்டிருந்தன. அவற்றில் மிக முக்கியமான சம்பவங்கள் பின்வருவனவாகும்:

274. 2004 யூலை 5 ஆம் திகதி சுமார் 09.15 மணியளவில் மட்டக்களப்பு எல்ரீரீஈ அரசியல் துறைத் தலைவர் சேனாதிராசா என அழைக்கப்படும் இராமலிங்கம் பத்மசீலன் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் உடனடியாக மட்டக்களப்புப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன், அதனையடுத்து காயங்கள் காரணமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நகரத்தின் சந்தடி மிகுந்த ஓரிடத்தில் இடம்பெற்றதுடன், பெருந்தொகையான சாட்சிகளும் அந்த இடத்தில் இருந்தார்கள். ஆனால், இக்கொலையைச் செய்தவர்கள் இனங்காணப்படவில்லை. ஒருசில பொலிஸ் விசாரணைகள் நடத்தப்பட்டதுடன், எவரும் அது தொடர்பாகக் கைது செய்யப்படவில்லை சாட்சியங்களும் சேகரிக்கப்படவில்லை. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கும் தகவல்கள், இக்கொலையைச் செய்தவர்கள் எனக் கருதப்படும் நபர்கள் கருணா அணியைச் சேர்ந்தவர்கள் என்பதைக் காட்டுகின்றன. அவர்கள் இக்கொலையைச் செய்வதற்கென மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்து வெளியில் வந்திருக்கின்றார்கள். இக் கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு கொண்டவர்கள் எனக் கூறப்படுவதுடன், ஆயுதங்களை வைத்திருப்பதற்கான அனுமதியையும் உள்ளடக்கிய விதத்தில் ஏனைய சிறைக் கைதிகளுக்கில்லாத பல சலுகைகளை அனுபவித்து வந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

275. 2005 பெப்ரவரி 7 ஆம் திகதி சுமார் 19.45 மணியளவில் எல்ரீரீஈ இயக்கத்தின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்[202]அரியநாயகம் சந்திரநேருவுடன் மட்டக்களப்பு - பொலன்னறுவை வீதியில் (அல்லது ஏ11 நெடுஞ்சாலையில்) டொயோட்டா ஹயஸ் வான் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தார். கௌசல்யன் எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து ஓமந்தைக்கூடாக மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் அருகிலுள்ள எல்ரீரீஈசோதனைச் சாவடிக்கு 5 அல்லது 6 கிலோ மீற்றருக்கு அப்பால் அவருடைய வாகனம் தாக்குதலுக்குள்ளாகியது. இத்தாக்குதலில் அவர் கொல்லப்பட்டதுடன், அரியநாயகம் சந்திரநேரு காயங்களுக்கு இலக்காகி பின்னர் உயிரிழந்தார். மேலும் 4 எல்ரீரீஈ இயக்கப் போராளிகளும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டிருந்தனர்.

**ஏனைய பொதுமக்களின் கொலைகள்**

*கெப்பித்திகொல்லாவையில் இடம்பெற்ற 64 பொதுமக்களின் படுகொலைச் சம்பவம்*

276. 2006 யூன் 15 ஆம் திகதி காலை சுமார் 7.30 மணியளவில் சுமார் 150 பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று, அநுராதபுரத்துக்கருகில் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்த பிரதேசமொன்றான கெப்பித்திகொல்லாவை நகரத்துக்கு அண்மையில் இரு கிளேமோர்குண்டுகள் மூலம் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது.[203]பெருந்தொகையான கிராமவாசிகள், வேலைக்கும்

[202] சந்திரநேரு எல்ரீரீஈ இயக்கத்துடன் இணைந்த மனித உரிமைகளுக்கான வட கிழக்குச் செயலகத்தின் ஓர் உறுப்பினராகவும் இருந்து வந்தார்.

[203] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

பாடசாலைக்கும் செல்வதற்கென அந்தப் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்ததுடன், ஒருசிலர் மரணவீடொன்றுக்குச் சென்றுகொண்டிருந்தனர். பொதுமக்களால் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த அந்தப் பாதை நெடுகிலும் இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், பொலிஸ் காவலரண்கள் அல்லது இலக்காகக் கொள்ளக்கூடிய இராணுவ நிலைகள் எவையும் இருந்து வரவில்லை. பேருந்திலிருந்த பயணிகள் அனைவரும் சிங்களவர்கள் ஆவார்கள். இத் தாக்குதல் சம்பவத்தில் 64 பேர் கொல்லப்பட்டதுடன், சுமார் 70 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் 14 பேர் பிள்ளைகளாவர். இக்கொலைச் சம்பவத்தை நிகழ்த்திய நபர்/நபர்கள் பேருந்து எதிரில் வருவதனைப் பாக்கக் கூடியதாக இருந்ததென்றும், ஆக உச்சமட்ட மரணங்கள் ஏற்படும் விதத்தில் துல்லியமான தருணத்தில் இந்தக் கிளேமோர் குண்டுகளை இயக்கச் செய்யக்கூடிய நிலையில் இருந்துவந்தார்கள் என்றும் அவதானிப்பாளர்கள் நம்பினர்.

277. இச்சம்பவம் தொடர்பாக தமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என எல்ரீரீஈ இயக்கம் பகிரங்கமாக மறுத்ததுடன், தமது இயக்கத்துக்கு அபகீர்த்தியை விளைவிக்கும் நோக்கத்துடன் ஏனைய ஆயுததாரிகள் இத்தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர் எனக் கூறியது. இலங்கை தொடர்பான புலனாய்வுக்குழுவுக்குக் கிடைக்கும் ஏனைய தகவல்கள், சிங்களப் பொதுமக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதல், வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அண்மையில் இடம்பெற்ற பொதுமக்கள் மற்றும் எல்ரீரீஈ போராளிகள் ஆகியோரின் கொலைச் சம்பவங்களுக்கு பழிவாங்கும் விதத்தில் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட ஒரு சம்பவமாக இருக்க முடியும் என்பதனைக் காட்டுகின்றன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யும் பொறுப்பு உதலாகம ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டதுடன், அது அதன் அறிக்கையில் பின்வரும் விதத்தில் முடிவாகக் கூறியிருந்தது:“இந்தச் சம்பவத்தை நிகழ்த்தியவர்கள் தொடர்பாக நேரில் பார்த்த சாட்சியங்கள் இல்லாவிட்டாலும் கூட, சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாட்சியங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இதில் சம்மந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற விடயத்தை பெருமளவுக்குச் சுட்டிக் காட்டுகின்றன.”

*மல்லாவிக்கு அருகில் 11 பேர் – பெரும்பாலானவர்கள் பெண்பிள்ளைகள் - கொல்லப்பட்டமை*

278. வன்னிப் பிரதேசத்தில் அம்புலன்ஸ் வாகனங்களில் பயணம் செய்து கொண்டிருந்த சாதாரண பொதுமக்கள் கிளேமோர் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய பல சம்பவங்கள் குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை செய்துள்ளது. 2007 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஒரு அம்புலன்ஸ் வண்டியில் 11 பேர் பிரயாணம் செய்து கொண்டிருந்ததுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் 14 – 17 வயதுப் பிரிவைச் சேர்ந்த பெண்பிள்ளைகளாக இருந்துவந்தனர். இந்த அம்புலன்ஸ் வண்டி தூரத்திலிருந்து இயக்கும் கிளேமோர் குண்டுகள் மூலம் மல்லாவிக்கு சுமார் 7.5 கிலோ மீற்றர் வடக்கில் வைத்து தாக்கப்பட்டது. ஒரு பொது நிகழ்வில் முதலுதவி வழங்குவதற்கென இக்குழுவினர் கிளிநொச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தனர். இத்தாக்குதலில் 8 பாடசாலை மாணவிகள் உள்ளிட்ட விதத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர். கிடைக்கும் தகவல்களின் பிரகாரம், இச்சம்பவத்தை நிகழ்த்தியவர்கள் ஆழ ஊடுருவித் தாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தின் விசேட படையைச் சேர்ந்தவர்களாக இருந்துவந்திருக்க முடியும்.[204]

[204] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

-

*கடற்றொழிலாளர்களின் கொலைகள் மற்றும் பேசாலை கிறிஸ்தவ ஆலயத்தின் மீதான தாக்குதல்*

279. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் வடமேல் மாவட்டங்களில் கடற்படைக்கும் எல்ரீரீஈ இயக்கத்துக்குமிடையில் 2005 இன் கடைசிப் பகுதியிலும், 2006 ஆம் ஆண்டிலும் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பெருமளவுக்கு சாதாரண பொதுமக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டார்கள்.[205] மன்னார் மாவட்டத்தில் பேசாலையைச் சூழவுள்ள பிரதேசத்தில் நிலைமை மோசமடைந்து வந்ததுடன், குறிப்பாக பொது மக்களுக்கும் அப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த கடற்படையினருக்குமான பதட்ட நிலைமைகள் அதிகரித்துக் காணப்பட்டன. கடற்படை உத்தியோகத்தர்கள் அயலில் உள்ள கிராமங்களுக்கு வந்து, அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தகவல்களை வழங்குகின்றார்களா எனக் கேட்டு அவர்களை அச்சுறுத்தி, தாக்கியதாக கூறப்படுகின்றது. ஒரு சம்பவத்தில், தமது முகங்களை மூடிக் கொள்வதற்கென கறுப்பு முகமூடிகளை அணிந்திருந்த இலங்கைக் கடற்படை உறுப்பினர்கள் வீடுகளுக்குள் புகுந்து குறிப்பிட்ட சில தனிநபர்களை விசாரணை செய்த விடயங்களை சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தனர்.[206]

280. 2006 யூன் 16 ஆம் திகதி அதிகாலையில் கடற்படைக்கும், எல்ரீரீஈ இயக்கத்தின் கடற்புலிகளுக்குமிடையில் பேசாலைக்கு அருகில் கடலில் சமர் மூண்டது.[207] கடற்புலிகளினால் கடற்படையைச் சேர்ந்த மூன்று படகுகள் மூழ்க்கடிக்கப்பட்டதுடன்,கடற்படையினருக்கு மத்தியில் பாரிய உயிர்ச் சேதங்களும் அத் தாக்குதலின் போது ஏற்பட்டன. ஒருசில மணித்தியாலங்களில் ஒரு பழிவாங்கல் செயல் எனக் கருதுக்கூடிய ஒரு நடவடிக்கையின் போது, கரைக்கருகில் ஒரு படகில் ஆறு உள்ளூர் கடற்றொழிலாளர்கள் இருந்து வரும் விடயம் கடற்படையினருக்கும்,பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தமது அடையாள அட்டைகளை பாதுகாப்புப் படையினர் பார்க்கக் கூடியதாக துாக்கிப் பிடித்தவாறு அவர்கள் கடற்கரையில் நடந்து வந்தார்கள். அவர்களில் 4 பேரை முழந்தாளிட்டு நிற்க வைத்து, அவர்களது வாய்களுக்கூடாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இச்சம்பவத்தை நிகழ்த்தியவர்கள் 2 கடற்படை வீரர்களும், 2 பொலிஸ் உத்தியோகத்தர்களும் எனக் கூறப்பட்டது.

281. பாதுகாப்புப் படைத் தரப்பிலிருந்து பழிவாங்கல் இடம்பெற முடியும் என்ற அச்சத்தில் சுமார் 2000 பொதுமக்கள் பேசாலை ஜெயமாதா கத்தோலிக்க ஆலயத்தில் ஒன்று கூடியிருந்தனர். கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம்,சுமார் 08:00 மணியளவில் கடற்படையினரும், பொலிஸ் உத்தியோகத்தர்களும் அந்த ஆலயத்துக்கு வந்து, அதன் சுவர்களுக்கு வெளியில் நிலை கொண்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் நான்கு பேர் (ஒருவர் குட்டை காற்சட்டை, ரீ-சேட் அணிந்திருந்ததுடன், மற்றைய மூவர் வரிச் சீருடையில் இருந்தனர்) ஆலய வளவுக்குள் பிரவேசித்து, ஆலயத்தின் சுவர்கள், கதவுகள் மற்றும் ஜன்னல்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர். பிரதான வாயில் மற்றும் தளம் என்பவற்றுக்கிடையில் திறந்திருந்த இடத்திற்கூடாக கடற்படையினர் ஆலயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன், ஆலயத்திற்குள் இருந்தவர்கள் அச்சந்தர்ப்பத்தில் தரையில் படுத்துக் கொண்டனர். அவர்களில் பலர் இத்தாக்குதலில் காயமடைந்தனர். அப்பொழுது கடற்படை வீரர்

---

[205] பார்க்கவும்: attack on Pesalai church, (Mannar), below.

[206] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

[207] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்,http://www.defence.lk/new.asp?fname=20060627_03

ஒருவர்ஜன்னல்களில் ஒன்றைத் திறந்து ஆலயத்திற்குள் இரண்டு கிறைனைட்டுகளை எறிந்தார். ஒரு கிறைனைட் கீழே விழுந்து ஜன்னலை சேதப்படுத்தியதுடன், மற்றையது ஆலயத்திற்குள் வெடித்தது. அதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 47 பேர் காயமடைந்தனர். அவர்களில் சிலர் படுகாயமடைந்திருந்தனர்.

282. தாம் எல்ரீரீஈ இயக்கத்தை இலக்காகக் கொண்டு தாக்குதலை நடத்தியதாக கடற்படையினர் கூறியஅதேவேளையில், ஆலயத்திற்குள்ளே எத்தகைய ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும், காயப்பட்டவர்களில் எவரும் எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகள் என இனங்காணப்படவில்லை. இச்சம்பவம் தொடர்பான குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை உள்ளடக்கிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்ததுடன், அவர்களின் பக்கச்சார்பற்ற நிலை மற்றும் நம்பகத்தன்மை குறித்துக் கேள்வி எழுப்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. இச்சம்பவத்தின் போது, அந்த இடத்தைச் சூழ பாரியளவில் பாதுகாப்புப் படையினர் பிரசன்னமாகியிருந்த போதிலும்,சம்பவம் இடம்பெற்ற பொழுது அங்கிருந்த எந்த ஒரு கடற்படை உத்தியோகத்தரையும் இதனுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சம்பந்தப்படுத்த முடியாதிருந்தது. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கென உதலாகம ஆணைக்குழுவுக்கு ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த அதேவேளையில், அது அதன் இறுதி அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது என்பதனை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு மேலும் குறிப்பிட விரும்புகின்றது: ‘‘போதிய கால அவகாசம் கிடைக்காமையினால் விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை’’[208]

*13 கிராமவாசிகளின் கொலை, ஊர்காவற்றுறை*

283. 2006 மே 13 ஆந் திகதி யாழ்ப்பாணத்துக்கருகில் தீவுப் பகுதியில் அல்லைப்பிட்டி, புளியங்கூடல் மற்றும் வங்கலடி ஆகிய கிராமங்களில் 6 தொடக்கம் 10 வரையிலான நபர்கள் பிரவேசித்து, இரு பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் 13 பேரைச் சுட்டுக் கொன்றனர். மூன்று சம்பவங்களிலும் இலங்கை கடற்படையினர் வீடுகளுக்குள் பிரவேசித்து, அவ்வீடுகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்தனர். மிகக் கொடூரமான சம்பவம் அல்லைப்பிட்டியில் இடம்பெற்றது. அங்கு இரு பிள்ளைகளையும் உள்ளிட்ட விதத்தில் 9 பேர் கொல்லப்பட்டிருந்தனர். புளியங்கூடல் கிராமத்தில் மேலும் மூவர் கொல்லப்பட்டதுடன், வங்கலடியில் ஒருவர் கொல்லப்பட்டார். பெருந்தொகையானோர் இத்தாக்குதல்களில் காயமடைந்தனர். கடற்படைப் படகுகளின் தொடரணி ஒன்றின் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடத்தி இரண்டு நாட்களின் பின்னரேயே இக்கொலைகள் இடம்பெற்றன. இத் தற்கொலைத் தாக்குதலில் 18 கடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இக்கொலைகள் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.[209]

*இளையதம்பி தர்சினி மீது நடத்தப்பட்ட பாலியல் தாக்குதல் மற்றும் அவருடைய கொலை*

284. யாழ்ப்பாண மாவட்டத்தில் மடத்துவேலி என்ற இடத்தில் 2005 டிசம்பர் 16 ஆந் திகதி பிற்பகல் இளையதம்பி தர்சினி (வயது 20) என்ற பெண் தனது

208 உதலாகம ஆணைக்குழு அறிக்கை

209 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம் Amnesty International, Op.cit.

மாமியின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார். மாமியின் வீடு அவரது வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் அமைந்திருந்தது. அவர் இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்பட்டு, அதன் பின் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. அவருடைய சடலம் ஊரதீவு முருகன் கோவிலுக்கருகில் ஒரு கிணற்றில் கண்டுபிடிக்கப்பட்டது.[210] பிரேத பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், அப் பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டிருந்ததுடன், அவரது உடலில் காணப்பட்ட காயங்கள் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றிருப்பதனைக் எடுத்துக் காட்டின. ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்ட பூர்வாங்க விசாரணைகளை அடுத்து, இந்த வழக்கு கொழும்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அது 2006 ஆம் ஆண்டில் பல தடவைகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கென அட்டவணைப்படுத்தப்பட்ட போதிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 2006 யூலை 12 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.[211] அதனை அடுத்து இடம்பெற்றிருக்கக்கூடிய வழக்கு விசாரணை விபரங்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் இந்த வழக்கு இன்னமும் நிலுவையிலிருந்து வருகின்றது.

**ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போது நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் மரண தண்டனைகள் வழங்கப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள்**

285. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு, பாதுகாப்பு படை உறுப்பினர்களினால் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான பெருந்தொகையான மரண தட்டனைகளை ஆவணப்படுத்தியுள்ளது. அவை மே 11 தொடக்கம் 18 வரையில் மோதலின் இறுதி வாரத்தின் போது இடம்பெற்றவை எனக் கருதப்படுகின்றது. ஆயுதமோதலின் இறுதி மாதங்கள் முழுவதிலும் பெருந்தொகையான எல்ரீரீஈ உறுப்பினர்கள் பாதுகாப்புப் படையினரால் பிடிக்கப்பட்டதாகவும், அவர்கள் ஒன்றில் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு மாற்றப்பட்டதாகவும் அல்லது ‘‘பாதுகாப்பான தங்குமிடங்கள் மற்றும் புனர்வாழ்வு நிலையங்களுக்கு’’ அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது. எவ்வாறிருப்பினும், கிடைக்கும் தகவல்களின் பிரகாரம், தமது ஆயுதங்களை ஒப்படைத்த எல்ரீரீஈ இயக்கத்தைச் சேர்ந்த பெருந்தொகையான போராளிகள் - அவர்கள் இனிமேலும் போர் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதநிலையில் இருந்து வந்த பொழுது நிராயுதபாணிகளாக பாதுகாப்புப் படைகளிடம் சரணடைந்த சந்தர்ப்பத்தில் - சட்டவிரோதமான விதத்தில் கொல்லப்பட்டுள்ளனர். என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்துவருகின்றன. எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் தொடர்ந்தும் போர் நடவடிக்கைகளில் பங்கேற்காதிருந்த ஏனைய தனிநபர்கள் -சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் - நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொல்லப்பட்டார்கள் என்பதனை நம்புவதற்கும் நியாயமாக காரணங்கள் இருந்து வருகின்றன.

286. சம்பந்தப்பட்ட நபர்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகளாக இருந்துவந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அல்லது இனியும் நேரடியாக

---

[210] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

[211] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணம்

போர் நடவடிக்கைகளில் பங்கேற்காத நபர்களாக இருந்துவந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட அவர்கள் ஆயுதப்படைகளினால் கைது செய்யப்பட்ட பின்னர், அந்த வித்தியாசம் பொருத்தமற்றதாக இருந்துவரும்.

287. ஆயுதமோதலின் இறுதி நாட்களின் போது, இருஇடங்களில் இடம்பெற்ற வெள்ளைக் கொடியேந்திய ‘‘சரணடைதல்’’ சம்பவங்கள் தொடர்பாக சாட்சிகளிடம் இருந்து இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இதில் ஒரு இடம் வெள்ளிமுள்ளிவாய்க்காலுக்கு வடக்கில் அமைந்திருந்த இடமாகும். அங்கு மக்கள் 53 ஆவது மற்றும் 59 ஆவது படைப்பிரிவுகளிடம் ‘சரணடைந்தனர்.’[212] மற்றைய இடம் வட்டுவாகல் பாலத்திற்கு தெற்கே அமைந்திருந்தது. அங்கு ஆட்கள் 58 ஆவது படைப்பிரிவினரிடம் சரணடைந்தார்கள். கீழே எடுத்து விளக்கப்படும் சம்பவங்கள் திட்டவட்டமான தனிபர்கள் அல்லது குழுக்கள் தொடர்பான சம்பவங்களாக இருந்துவருவதுடன், அவை தொடர்பாக இலங்கை குறித்த புலன் விசாரணைக்குழு சாட்சிகளிடம் இருந்து வலுவான உறுதிப்படுத்தும் தகவல்களை பெற்றுக் கொண்டுள்ளது.

***பாலசிங்கம் நடேசன், வினிதா நடேசன் மற்றும் சீவரத்தினம் புலித்தேவன்***

288. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒருபோதும் சரணடையப் போவதில்லை என்ற விதத்தில் முன்னா் விடுக்கப்பட்டிருந்த பகிரங்க அறிக்கைகளுக்கு மத்தியிலும்,[213] அந்த இயக்கத்தின் அதன் அரசியல் பிரிவின் உறுப்பினா்களும், இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இராணுவம் சாராத கருமங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட உறுப்பினா்கள் பலரும், போா் நடவடிக்கைகளில் நேரடியாக பங்கேற்காத ஏனைய நபர்களும் அரசாங்கத்துடனும், பல நடுவா்களிடமும் ‘சரணடைவது தொடா்பான’ பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனா்.

289. எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் துறைத் தலைவா்கள், எல்ரீரீஈ சமாதான செயலகத்தின் தலைவா் சீவரத்தினம் புலித்தேவன், எல்ரீரீஈ அரசியல் துறைத் தலைவா் பாலசிங்கம் நடேசன் ஆகியோா் தாம் சரணடைவதற்குத் திட்டமிட்டிருப்பது குறித்து நடுவா்களுக்குத் தெரிவிக்கத் தொடங்கியிருந்தா்கள்.[214]சரணடைவது தொடா்பான விபரங்கள் விரிவாக கலந்துரையாடப்படாவிட்டாலும் கூட, நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோருக்கு நெருக்கமான ஒருசில இயக்கத்தவா்கள், மே 13 ஆம் திகதி தொடக்கம் அது தொடா்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல்களையும், ஏனையவா்களுடன் இடம்பெற்ற தொடா்பாடல்களையும் அறிந்திருந்ததாக கூறப்படுகின்றது.[215] இச்சந்தா்ப்பத்தில் புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோா் வெள்ளமுள்ளிவாய்க்காலில் ஏனையவா்களுடன் இருந்தா்கள். அவா்களில் எல்ரீரீஈ பொலிஸ் தலைவா் இளங்கோ(ரமேஷ்), நடேசனின் மனைவி வினிதா, நடேசனின் பாதுகாப்புப் பிரதானிகாங்கன், ஏனைய அரசியல் பிரிவு உறுப்பினா்கள் மற்றும் அவா்களுடைய குடும்பத்தினா் ஆகியோா் இருந்தனா்.[216]

---

[212] பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

[213] WS on file ; http://www.livemint.com/Politics/hDu232kfgm0Dr1qvLoeeOO/LTTE-vows-no-surrender-to-Sri-Lankan-Army.html

[214] WS on file

[215] WS on file

[216] WS on file

290. எல்ரீரீஈஇயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த குழுக்கள் மற்றும் தனிநபா்கள் 'சரணடைவது' தொடா்பான தொடா்பாடல்களிலும், பேச்சுவாா்த்தைகளிலும் ஈடுபட்டிருந்தாா்கள் என்பதனைக் காட்டும் கணிசமான அளவிலான தகவல்களை இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு கொண்டுள்ளது. இவை கொழும்பிலும், வெளிநாட்டிலும் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தவா்களின் சாட்சியங்கள், சாட்சிகள் வழங்கிய விபரங்கள், SMS பதிவுகள், தொடா்பாடல்கள் மற்றும் பேச்சுவாா்த்தைகள் என்பவற்றைக் காட்டும் ஏனைய விடயங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

291. பல சாட்சிகளின் கூற்றுக்களின் பிரகாரம், மே 14 ஆந் திகதி நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோா் ஆயுதங்களை ஒப்படைத்து, சரணடைவதற்கான தமது விருப்பத்தினை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடுவா்களுக்குத் தெரிவித்திருந்தனா்.[217] இந்த விடயம் அதே தினத்தன்று ஜனாதிபதியின் சகோதரா் பசில் ராஜபக்ஷவுக்கும் தெரிவிக்கப்பட்டது.[218] நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோருடன் தொடா்புகளைப் பராமரித்து வந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினா்களும் எல்ரீரீஈ இயக்கம் ஆயுதங்களை களைந்து சண்டையை நிறுத்திக் கொண்டுள்ளது என்று பசில் ராஜபக்ஷவுக்கு அன்றைய தினம் மாலையில் அறிவித்தனா்.[219] மக்கள் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு இராணுவத்தை நோக்கி நடந்து வர வேண்டுமென கேட்டுக் கொள்ளும் அறிவித்தல்களை இராணுவம் ஏற்கனவே விடுத்து வருவதாகவும், துண்டுப் பிரசுரங்களைப் போட்டு வருவதாகவும் பசில் ராஜபக்ஷ அதற்குப் பதிலளித்தாா்.[220]

292. மே 16 ஆம் திகதிக்கும் 18 ஆம் திகதிக்கும் இடையில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், குறிப்பாக வெளி விவகார அமைச்சின் நிரந்தரச் செயலாளா் பாலித்த கொஹன்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகா் பசில் ராஜபகஷ், பாதுகாப்புச் செயலாளா் கோத்தபாய ராஜபகஷ் மற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ் ஆகியோருடன் தொடா்பாடலை ஏற்படுத்துவதில் பல வெளிநாட்டு நடுவா்கள் ஈடுபட்டிருந்தனா். இக் கட்டத்தில் சிரேஷ்ட ஐநா அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளா்கள் போன்ற ஏனையோருடனும் தொடா்பாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

293. சாட்சியங்கள் முன்வைத்திருக்கும் சான்றுகளின் பிரகாரம், திட்டமிட்டிருக்கும் சரணடைதல் பிரதேசத்துக்கு சுயாதீனமான சாட்சிகள் செல்வதற்கு வகை செய்வதற்கென இடைநடுவா்களினால் தொடா்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளுடனும், அதேபோல ஐநா வுடனும், சமாதானச் செயன்முறையை ஒருங்கிணைக்கும் செயலகத்துடனும் (SCOPP)[221] ஏனையவா்களுடனும் இது தொடா்பானபல்வேறு தெரிவுகள் குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. சரணடைவதனை சமாதானச் செயலக அதிகாரிகள் பாா்வையிடுவது குறித்த கருத்தினை எல்ரீரீஈஇயக்கம் நிராகரித்ததுடன், சுயாதீனமான சாட்சியங்கள் பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது. ஏனெனில், தாம் சுடப்படலாம் என அவா்கள் அச்சம் கொண்டிருந்தனா். 'சரணடைவதை' நேரில் பாா்ப்பதற்கு தயாா்

[217] WS on file

[218] WS on file

[219] WS on file

[220] WS on file

[221] SCOPP closed on 31 July 2009, http://www.peaceinsrilanka.lk/about-scopp

நிலையில் இருந்து வருமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்ததாகவும், ஆனால், அதற்கென ஒருபோதும் அது அழைக்கப்படவில்லை என்றும் சாட்சிகள் கூறினார்கள்.

294. மோதல் பிரதேசத்துக்குச் சென்று ‘சரணடைவதனை’ப் பார்வையிடுவதற்கு தமிழ் இடை நடுவர்களும் முன்வந்திருந்தார்கள். பாதுகாப்புக் காரணங்களை எடுத்துக்காட்டி அரசாங்கம் இதனை நிராகரித்ததுடன், சமயத் தலைவர்கள் அந்தப் பிரதேசத்துக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனால் இது தேவையற்றது என அது கருதியது.[222]இந்தத் தெரிவு ஒருபோதும் நிறைவேறவில்லை. எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகள் வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு, பாதுகாப்புப் படைகளை நோக்கி மெதுவாக நடந்து வர வேண்டும் என்றும், அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அரசாங்க அதிகாரிகள் இடைநடுவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தனர்.[223]

295. மே 16 ஆம் திகதி ஜனாதிபதி ராஜபக்ஷ இராணுவ வெற்றியை அறிவித்த அதேவேளையில்,எல்ரீரீஈ இயக்கம் “தற்போதைய படுகொலைகளை உடனடியாக நிறுத்துவதற்கு தேவையான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்வதற்கு தான் தயாராக இருப்பதாக” கூறி ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. மேலும், அது “நடுநிலையான சர்வதேச தரப்புக்களின் அனுசரணையுடன் கூடிய அரசியல் செயன்முறை ஒன்றுக்குள் பிரவேசிப்பது தொடர்பான தனது திட்டவட்டமான நிலைப்பாட்டை” தெளிவாக எடுத்துக்கூறியிருந்ததுடன்,“இனப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள விதத்திலான தீர்வை எடுத்து வருவதற்கான தனது நிலைப்பாட்டையும்” மீண்டும் வலியுறுத்தியிருந்தது.[224]

296. சாட்சிகளின் கூற்றுக்களின் பிரகாரம், மே 17 ஆந் திகதி உள்ளூர் நேரம் 06:00 மற்றும் 06:30 க்குமிடையில் நடேசன் பசில் ராஜபக்ஷவுடன் பேசியதுடன், எல்ரீரீஈ இயக்கப் போராளிகள் ஒரு வெள்ளைக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறு சரணடைவதற்கென முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை நோக்கி குறிப்பிட்ட ஒரு பாதையில் நடந்து வர வேண்டும் என்றும், ஏனைய சிவிலியன்கள் புறம்பாக வர வேண்டும் என்றும் அவருக்கு கூறப்பட்டது.[225] அச்சந்தர்ப்பத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் மூத்த தலைவர்களும், களத்திலிருந்த மூத்த இராணுவ அதிகாரிகளுடன் நேரடித் தொடர்புகளை பராமரித்து வந்திருக்க முடியும்.[226]

297. முதலில், பேச்சுவார்த்தைகள் எல்ரீரீஈஇயக்க உறுப்பினர்கள் மற்றும் சிவிலியன்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருந்தன. ஆனால், மே 17 மற்றும் 18 திகதிகளுக்கிடைப்பட்ட இரவின் போது,“40 சாதாரண உறுப்பினர்கள் மற்றும் 60 சிவிலியன்கள்”[227] உயர் மட்ட முக்கியஸ்தர்கள் மூவருடன் வந்து சரணடையும் எண்ணத்தை புலித்தேவன் எடுத்துக் கூறியிருந்தார். பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், அதன் காரணமாக அறிவுறுத்தப்பட்டவாறு ஒரு வெள்ளைக் கொடியுடன் தம்மால் வெளியில் வர முடியாதுள்ளது என்றும் நடேசனும், புலித்தேவனும் நடுவர்களிடம் கூறினார்கள்.

[222] WS on file

[223] WS on file

[224] http://www.tamilnet.com/art.html?catid=13&artid=29381

[225] WS on file

[226] WS on file

[227] WS on file

புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, பின்னணியில் ஆட்டிலறி சூட்டுச் சத்தங்களயும் உள்ளடக்கிய விதத்தில் கடும் சண்டை நிகழ்ந்து வரும் சத்தத்தை இடைநடுவர்கள் பல தடவைகள் செவிமடுத்திருந்தனர்.[228]

298. நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் சரணடைவதற்குத் தயாராக இருந்து வருகின்றார்கள் எனத் தெரிவித்து பெருந்தொகையான சர்வதேச இடைநடுவர்கள் மே 17 மற்றும் 18 ஆகிய திகதிகளிலும், மே 18 ஆம் திகதி அதிகாலையிலும் அரசாங்கத்தின் மூத்த உறுப்பினர்களுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பி வைத்திருந்தார்கள்.[229] குறிப்பாக, புலித்தேவன், நடேசன் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் துறையின் மூத்த தலைவர்கள் சரணடைவது நிச்சயம் என்ற விடயத்தை பாதுகாப்புப் படைகளுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மே 17 ஆம் திகதிக்கும் 18 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட இரவில் தெரிந்து வைத்திருந்தார்கள்.[230] மே 18 ஆம் திகதி அதிகாலையில் புலித்தேவனுடன் தான் மேற்கொண்ட உரையாடல்களின் பின்னணியில் கடுமையான துப்பாக்கி ஷெல் சத்தங்களை சாட்சிகள் செவிமடுத்திருந்தனர்.[231]சர்வதேச நடுவர்களுக்கும் புலித்தேவனுக்கும் இடையிலான கடைசித் தொடர்பு மே 18 ஆம் திகதி உள்ளூர் நேரம் 06:00 மணிக்குச் சற்றுப் பின்னர் இடம்பெற்றிருந்ததுடன், அச்சந்தர்ப்பத்தில் தான் நடேசனுடன் இருந்து வருவதாகவும், பங்கரிலிருந்து வெளியே செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் புலித்தேவன் கூறியிருந்தார்.[232]

299. எல்ரீரீஈ இயக்கத் தலைவர் பிரபாகரன் மற்றும் இயக்கத்தின் பல மூத்த தலைவர்கள் சண்டையில் கொல்லப்பட்டிருப்பதாக 2009 மே 18 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது எல்ரீரீஈ இயக்கத்தின் மீதான இராணுவ வெற்றியையும், முழு நாடும் தனது ஆள்புல கட்டுப்பாட்டுக்குள் எடுத்து வரப்பட்டிருக்கும் விடயத்தையும் இலங்கை அரசாங்கம் முறையாக அறிவித்தது. ஆயுதப்படைகளின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பிரகாரம், மே 18 ஆம் திகதி 58 ஆவது படைப் பிரிவுடன் இடம்பெற்ற சண்டையில் புலித்தேவன் மற்றும் நடேசன் (கேர்ணல்) ரமேஷ் உடன் இணைந்து) ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.[233]ஆனால், சம்பவங்கள் இடம்பெற்ற விதம் குறித்த இந்த விளக்கத்தை, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவாலும்,ஏனையவர்களாலும் சேகரிக்கப்பட்டிருந்த தகவல்கள் மறுதலிக்கின்றன. அவற்றின் பிரகாரம், பாதுகாப்பான விதத்தில் சரணடைய முடியும் என அரசாங்கத்தினால் உத்தரவாதங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், எல்ரீரீஈ இயக்கத்தின் ஒரு சில உயர் மட்டத் தலைவர்கள் அதிரடியான விதத்தில் கொல்லப்பட்டிருந்தனர்.

228 WS on file

229 WS on file

230 WS on file

231 WS on file

232 WS on file

233 http://www.defence.lk/new.asp?fname=20090518_11, http://www.defence.lk/new.asp?fname=20090518_09, http://www.defence.lk/new.asp?fname=20090621_02_TerrList

300. நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோா் நிராயுதபாணிகளாக (சிவில் உடைகளில் - அவா்கள் குறிப்பாக வெள்ளைச் சட்டைகள் மற்றும் சாரம் அணிந்திருந்தார்கள் என ஒரு சிலர் கூறுகின்றனா்), வெள்ளைத் துணி (அநேகமாக வேட்டியை) போர்த்திய கம்பங்களை ஏந்திக்கொண்டு பாதுகாப்புப் படைகளிடம் சரணடைவதைத் தாம் பார்த்ததாகக் கூறும் பெருந்தொகையான சாட்சியங்கள் இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்துள்ளன. அவர்கள் ஒவ்வொருவரும் சுயாதீனமாக அதனைத் தெரிவித்தனா். சரணடைந்த திட்டவட்டமான இடம் மற்றும் அது தொடா்பான விபரங்கள் ஓரளவுக்கு மாறுபடுகின்றன. 2009 மே 18 ஆம் திகதி காலையில் முள்ளிவாய்க்கால் பாலத்தின் வடக்கில் தாம் புலித்தேவனையும், நடேசனையும் பார்த்தாக ஆகக் குறைந்தது ஆறு சாட்சிகள் குறிப்பிடுகின்றார்கள். இந்த அமைவிடம் ஏ35 நெடுஞ்சாலையில் வட்டுவாகல் பாலத்தையொட்டி உள்ளது என்ற விபரங்களும் ஒரே சீரான விதத்தில் பொருந்துகின்றன.[234]

301. மூன்று சரணடையும் குழுக்கள் தொடா்பாக சாட்சிகள் விளக்கியிருந்தார்கள். முதலாவது குழு நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரின் தலைமையில் இருந்து வந்தது இரண்டாவது குழு எல்ரீரீஈ பொலிஸ் பிரிவுத் தலைவா் இளங்கோ ரமேஷ் (அடுத்து வரும் பிரிவில் குறிப்பிடப்படும் இராணவத் தளபதி கேர்ணல் ரமேஷ் என்ற பெயருடன் இதனைக் குழப்பிக் கொள்ளக்கூடாது), ஒரு சாட்சி மற்றும் ஏனைய இரு எல்ரீரீஈ உறுப்பினா்கள் மூன்றாவது குழு 4 உறுப்பினா்களைக் கொண்டிருந்தது.[235] அவா்கள் அனைவரும் நிராயுதபாணிகளாக இருந்து வந்ததுடன், வெள்ளைக் கொடிகளைப் பிடித்துக் கொண்டிருந்தனா். நடேசன் முதலாவது குழுவுக்காக கொடியை ஏந்தியிருந்ததுடன், இளங்கோ(ரமேஷ்) இரண்டாவது குழுவுக்காக கொடியை ஏந்தியிருந்தாா். ஒவ்வொரு குழுவுக்குமிடையில் 20 – 25 மீற்றா் தூரம் நிலவியது. நடேசன், நடசனின் மனைவி வினிதா, புலித்தேவன் மற்றும் அடையாளம் காணப்படாத மற்றொரு நபா் ஆகியோரை உள்ளடக்கிய முதலாவது குழு பாலத்துக்கு வடக்கில் வட்டுவாகல் பிரதேசத்தில் சரணடைவதையும்,இலங்கை இராணுவ சீருடையிலிருந்த சிப்பாய்கள் அவா்களை சூழ்ந்து கொள்வதனையும் சாட்சிகள் கண்டார்கள்.[236] மே 18 ஆம் திகதி பாலத்தின் தென்பகுதியில் புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோரின் சடலங்களைத் தாம் கண்டதாக மூன்று சாட்சிகள் சுயாதீனமாக குறிப்பிட்டிருந்தனா் (மரணித்தவா்களில் வினிதா நடேசன் இருப்பதனையும் ஒரு சாட்சி பார்த்திருந்தாா்.)[237]

302. மரணித்தவா்களின் குழு ஒன்றின் சடலங்களைக் காட்டும் துல்லியமான இலத்திரனியல் புகைப்படங்கள் இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழுவிடம் இருந்து வருகின்றன. அப்படங்களில் இருப்பவா்களில் புலித்தேவன், நடேசன் மற்றும் வினிதா நடேசன் ஆகியோரைத் தெளிவாக அடையாளம் காண முடிகின்றது. அதேவேளையில், அடையாளம் காணக்கூடிய ஆனால் இனந்தெரியாத ஒரு சில ஆண்களின் சடலங்களையும், (புகைப்படச் சட்டகத்துக்கு வெளியில் முகம் இருக்கும் விதத்தில்) இளம் பெண்ணின் சடலமொன்றையும் அவதானிக்க முடிகின்றது.[238] தடயவியல் உடற்கூற்று நிபுணரின் கருத்தின் பிரகாரம், வண்ணத்திலிருக்கும் இந்த டிஜிட்டல் புகைப்படங்கள் அனைத்தும்

234 WS on file

235 WS on file

236 WS on file

237 WS on file

238 புகைப்படத்தில் ஓர் இளம் பெண்ணின் தோற்றத்தின் ஒரு பாகம் தெரிகிறது

தொழில்முறைபுகைப்படக் கலைஞர்கள் அல்லாதவர்களால் எடுக்கப்பட்ட படங்களாக இருந்து வருவதுடன், அவை பெருந்தொகையான சடலங்களின் குவியல்களைக் காட்டுகின்றன. தனிப்பட்ட சடலங்களும், தலை மற்றும் தோள் பகுதி என்பவற்றைக் காட்டும் படங்களும் அதில் உள்ளன. அவற்றின் தொழில்முறை சாராத இயல்புக்கு மத்தியிலும் கூட, இந்தப் புகைப்படங்கள் பெருந்தொகையான காயங்கள், இரத்த ஓட்ட மாதிரிகள், ஆடைகள் குலைக்கப்பட்டிருக்கும் விதம் மற்றும் மரணத்தின் பின்னர் உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை துல்லியமாகக் காட்டுகின்றன. இந்தப் படங்களின் துல்லியத்தன்மை நிர்ணய நோக்கங்களுக்குப் பெருமளவுக்குப் போதுமானதாக இருந்து வருகின்றது. குறிப்பாக, ஒரே காட்சியைப் பல்வேறு கோணங்களில் எடுத்துக் காட்டும் புகைப்படங்களைப் பொறுத்தவரையில் இந்நிலைமை காணப்படுகின்றது. இந்தப் படங்கள் வழங்கும் தகவல்கள் தவிர்க்க முடியாத விதத்தில் பூர்த்தியற்றவையாகும் ஏனெனில், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சடலங்களில் காணப்படும் காயங்களை முழுமையாக ஆவணப்படுத்தும் விதத்தில் முழு உடலும் படமெடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், பார்க்கக்கூடிய விதத்தில் வெளியில் தென்படும் காயங்கள் தெளிவாக இருந்து வருவதுடன், அவற்றை மறுக்க முடியாமலும் உள்ளது.

303. இந்தப் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள், சுமார் ஒரு டசன் சடலங்கள் வரிசையில் வைக்கப்பட்டிருந்தன என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இந்நிலையும், அருகிலுள்ள தரையில் பிளாஸ்ரிக் தகடுகள் வைக்கப்பட்டிருப்பதும்,அது சடலங்களைச் சேகரிப்பதற்கென அமைக்கப்பட்ட ஒரு தற்காலிக இடம் என்பதனை ஊகிக்க முடிகின்றது. அதாவது, இந்த மரணங்கள் வேறொரு இடத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும்.சடலங்களில் ஒன்றின் (நடேசனின்) கீழ் விரிக்கப்பட்டிருக்கும் பாய், இந்த இடத்துக்குச் சடலத்தை எடுத்து வர பயன்படுத்தப்பட்டிருக்க முடியும். ஆண்சடலங்கள் அனைத்தும் உள்ளாடைகளுடன் வைக்கப்பட்டிருப்பதுடன், ஒரு சடலத்துக்கருகில் ஒரு செயற்கைக் கால் வைக்கப்பட்டிருந்தது.[239]பெருந்தொகையான வண்ணமயமான ஆடைகள் சடலங்களை ஓரளவுக்கு மூடியிருந்தன அல்லது சடலங்கள் சுற்றப்பட்டிருந்தன.

304. இந்தப் புகைப்படங்களின் அடிப்படையில் மரணம் சம்பவித்த சரியான நேரம் மற்றும் மரணத்துக்கான காரணம் என்பவற்றை திட்டவட்டமாக நிர்ணயித்துக்கொள்ள முடியாதிருந்த போதிலும், நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரின் சடலங்கள் தொடர்பாக் உத்தேசிக்கப்பட்டிருக்கும் தடயவியல் அவதானிப்புக்கள் பின்வரும் முடிவுகளை முன்வைத்துள்ளன: நடேசனின் சடலத்தைக் காட்டும் புகைப்படம், அவருடைய மரணத்துக்கான காரணம் ஆகக் குறைந்தது ஒன்று தொடக்கம் மூன்று வரையான துப்பாக்கிக் குண்டுகள் அவருடைய முன்னுடலைத் தாக்கியமை எனக் கூறமுடியும். புலித்தேவனைப் பொறுத்தவரையில், பல துப்பாக்கி குண்டுகள் அவரது முதுகுப்புறத்தில் நுழைந்து முன்பக்கத்தால் வெளியேறியிருப்பதனையும், அதேபோல் இரு கைகளிலும் துப்பாக்கிச் சுட்டுக் காயங்கள் இருப்பதனையும் இப்பகுப்பாய்வு இனங்கண்டிருந்தது. உடலில் காணப்பட்ட பெருந்தொகையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் முதுகுப் புறத்திலிருந்து முன்பக்கத்தை நோக்கி இருந்து வந்த நிலையில், வலது கை தொடர்பான இதே மாதிரியான காயம் முதுகுக்குப் பின்னால் வலது கை முறுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில் மட்டுமே ஏற்பட்டிருக்க முடியும் என்பதை தடய அறிவியல் பகுப்பாய்வு குறிப்பிடுகின்றது. மேலும், இடது மணிக்கட்டு தோல் காயம் ஒன்றுடன் இணைந்த விதத்தில் நார் ஒன்றினால் கட்டப்பட்டிருந்த அடையாளத்தைக் கொண்டுள்ளது என்ற விடயத்தையும் இப்பகுப்பாய்வு அவதானித்திருந்தது. அனைத்தையும் ஒன்றாக சேர்த்து நோக்கும் போது, புலித்தேவனின் முதுகில் பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம்

239 WS on file

மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை பகுப்பாய்வின் பிரகாரம்காயங்களின் மாதிரி காட்டுகின்றது. குறிப்பாக, அவருடைய கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டிருந்த நிலையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பது தெளிவாகத் தெரிகிறது. புகைப்படங்களின் இந்தத் தடயவியல் பகுப்பாய்வு, வீடியோப் படங்கள், சாட்சிகள் முன்வைத்த சான்றுகள் மற்றும் பகிரங்க மூலாதாரங்கள் என்பவற்றின் அடிப்படையில்,எல்ரீரீஈ இயக்கத்தின் மூத்த தலைவர்களான பாலசிங்கம் நடேசன் மற்றும் சீவரத்தினம் புலித்தேவன் ஆகியோரும், நடேசனின் மனைவியான வினிதா நடேசனும், மே 18 ஆம் திகதி 06:00 மணிக்கு[240] சிறிது நேரத்தின் பின்னர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு முடிவுக்கு வருகின்றது. எவ்வாறிருப்பினும், என்ன நடந்தது மற்றும் இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் யார் போன்ற விடயங்கள் தொடர்பான முழு உண்மைகளையும் கண்டறிந்து கொள்வதற்கு மேலும் விசாரணைகள் தேவைப்படுகின்றன.

305. எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல்துறை உறுப்பினர்கள் ‘சரணடைவதற்கான, தமது விருப்பத்தினை தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தனர். சாட்சிகளின் கூற்றுக்களின் பிரகாரம், அவர்கள் ஒரு வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு, சாதாரண ஆடைகளில், நிராயுதபாணிகளாக பாதுகாப்புப் படைகளை நோக்கி மெதுவாக நடந்து வரவேண்டுமென அரசாங்கம் வழங்கியிருந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்கி, அவ்விதம் செயற்பட்டனர். அவர்கள் சரணடைவதற்கான எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள் என்ற விடயம் குறித்த தேவையான அறிவையும், அவர்களுடைய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு இந்த விடயத்தை களத்திலிருந்த படையினருக்குத் தெரிவிப்பதற்கான கால அவகாசத்தையும் இலங்கை அரசாங்கம் கொண்டிருந்தது என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு மேலும் முடிவு செய்கின்றது. சரணடையும் சந்தர்ப்பத்தில் சுயாதீனமான சாட்சிகளுக்கு இடமளிக்குமாறு முக்கிய அரசாங்கத் தரப்புக்களிடம் கேட்டுக் கொள்வதற்கு நடுவர்கள் பல்வேறு முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த போதிலும் அவை நிராகரிக்கப்பட்டன.

### கேர்ணல் ரமேஷ் என அழைக்கப்பட்ட தம்பிராசா துரைராஜசிங்கம்

306. கேர்ணல் ரமேஷ் என அழைக்கப்பட்ட எல்ரீரீஈஇயக்கத்தின் தளபதியான தம்பிராசா துரைராஜசிங்கம் சாதாரண ஆடைகளில், நிராயுதபாணியாக வட்டுவாகல் பாலத்துக்கு வட திசையிலிருக்கும் பாதையில் ஒரு சிறிய குழந்தையைக் கையிலேந்திக் கொண்டு, பாலத்தைக் கடந்து நடந்து வந்ததை விளக்கும் பல சாட்சியங்களின் சான்றுகள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன.[241] மே 18 ஆம் திகதி 07.00 மணியளவில் கேர்ணல் ரமேஷ் தனது உறவினர் குழு ஒன்றுடன் சேர்ந்து,வட்டுவாகல் பாலத்தின் தென் பகுதியில் இலங்கை இராணுவத்தின் காவலரண்களைத் தாண்டிச் சென்றதாக சாட்சிகள் தெரிவிக்கின்றனர். அவர் ஆயிரக்கணக்கான ஏனைய பொதுமக்களுடன் சேர்ந்து பாலத்தின் பின் பகுதியிலிருந்த தடுத்து வைக்கும் பிரதேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார்.[242] இந்த இடத்தில் பாதுகாப்புப் படைகளுக்காக பணிபுரிந்து வந்த தமிழ் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர்கள் அவரை அணுகி இனங்கண்டு

[240] WS on file

[241] WS on file

[242] WS on file

கொண்டனர்.[243] இந்த இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்களில் ஒருவரை (முன்னர் எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து பின்னர் தகவல் வழங்குபவராக மாறியவர்) பெயரைவைத்து, இரு சுயாதீனமான சாட்சிகள் இனங்கண்டிருந்தனர்.[244] இந்தப் புலனாய்வு உத்தியோகத்தர் கருணா அணியைச் சேர்ந்தவர் என்றும், ரமேஷ் மற்றும் பிரபா ஆகியோரை நன்கு அறிந்துள்ளவர் என்றும், கேர்ணல் ரமேஷ் உடன் அதே குழுவில் பயணம் செய்யும் கிழக்கு எல்ரீரீஈஇயக்க உறுப்பினர் ஒருவர் என்றும் சாட்சி ஒருவர் கூறுகின்றார்.[245] இந்தப் புலனாய்வு உத்தியோகத்தர் பிரபாவின் முன்னாள் மெய்ப் பாதுகாவலர் என மற்றொரு சாட்சி குறிப்பிடுகின்றார்.[246] பிரபா மற்றும் ரமேஷ் ஆகியோரை இலங்கை இராணுவம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஆகியோரினால் அழைத்துச் செல்லப்பட்டனர் என இரு சாட்சிகளும் குறிப்பிடுகின்றனர்.[247] அவர்களுடன் மே 18 ஆம் திகதி பாலத்தைக் கடந்து சென்ற அவர்களுடைய உறவினர்கள் அந்த இருவரையும் அதன் பின்னர் ஒருபோதும் காணவில்லை.

307. சாட்சிகள் வழங்கிய சான்றுகள் தவிர, ரமேஷ் உயிருடன் இருப்பதையும், இலங்கை பாதுகாப்புப் படையினரால் விசாரணை செய்யப்படுவதனையும் காட்டும் புகைப்படங்கள் மற்றும் வீடியோப் படங்கள் என்பவற்றை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு பரிசீலனை செய்துள்ளது. மேலும், அவர் நீதிமன்ற நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொல்லப்பட்டார் என்பதனை தெளிவாக எடுத்துக் காட்டும் அவருடைய சடலத்தின் படங்களையும் இக்குழு பரிசீலனை செய்துள்ளது. இந்தப் புகைப்படங்கள் சுயாதீனமான தடய அறிவியல்நிபுணர் ஒருவரினால் மீளாய்வு செய்யப்பட்டிருந்தன.

308. கிடைக்கும் தகவல்களின் பிரகாரம், சம்பவங்களின் கால வரிசையை திட்டவட்டமான விதத்தில் ஸ்தாபித்துக் கொள்ள முடியாதிருந்து வந்த போதிலும், சிவில் ஆடைகளிலிருந்த கேர்ணல் ரமேஷ் தடுத்து வைக்கும் பிரதேசத்துக்குள் வைத்து, அவருடைய குடும்பத்திடமிருந்து பிரிக்கப்பட்டதையும், ஒரு இராணுவ வாகனத்தில் அவர் எடுத்துச் செல்லப்பட்டதையும், ஒரு கட்டத்தில் அவருடைய ஆடைகளை மாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதையும் காட்டும் வீடியோ மற்றும் புகைப்படத் தகவல்கள் இருந்து வருகின்றன. ஒருசில படங்களில் கேர்ணல் ரமேஷ் பச்சை நிற இராணுவ சீருடையில் இருக்கின்றார் ஏனையவற்றில் அவர் எல்ரீரீஈ இயக்கத்தின் வரிக் கோடிட்ட காற்சட்டைகளை அணிந்திருக்கிறார். பல்வேறு இடங்களில் பாதுகாப்புப் படையினர் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவரிடம் விசாரணை நடத்துவதனை வீடியோக் காட்சிகள் காட்டுகின்றன.ஒரு கட்டத்தில் அவர் சட்டை அகற்றப்படுவதுடன், அவரது வலது தோளில் மருத்துவக் கட்டொன்றுடன் கூடிய காயம் காணப்படுகின்றது.

309. மேலதிக படங்கள் பச்சை நிற சீருடையில் கேர்ணல் ரமேீன் சடலத்தைக் காட்டுவதுடன், அவருடைய தலையின் இடது பாகத்தில் துப்பாக்கிச் சன்னமொன்று பிரவேசித்த இரத்தம் கசியும் துளை தென்படுகின்றது. வலது புறத்தில் பாரிய ஒரு வெளியேற்றத் துளை தெரிகின்றது. அவருடைய சீருடையில் இரத்தமும், தசையும் சிதறுண்டு கிடக்கின்றன. தரையில் எத்தகைய இரத்தக் கறைகளும்

[243] WS on file

[244] WS on file

[245] WS on file

[246] WS on file

[247] WS on file

காணப்படவில்லை. இந்தப் படங்களில் உடல் வைக்கப்பட்டிருக்கும் நிலை, அவா் பிறிதொரு இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தாா் என்பதனையும், புகைப்படம் எடுத்த இடத்திற்கு அவா் இழுத்து வரப்பட்டிருந்தாா் என்பதனையும் காட்டுகின்றது. சுயாதீனமான தடய அறிவியல் நிபுணா் ஒருவரின் மதிப்பீட்டின் பிரகாரம், இந்தப் புகைப்படங்கள், தலைக்குத் தனியொரு துப்பாக்கிக் குண்டை தீா்ப்பதன் மூலம் மரண தண்டனை வழங்கும் பாணியில் கொலை செய்யும் முறையை காட்டுகின்றன. இதனுடன் சம்பந்தப்பட்ட தரவுகள் இப்புகைப்படம் 2009 மே 22 ஆம் திகதி எடுக்கப்பட்ட தென்பதனைக் காட்டுகின்றன. எவ்வாறிருப்பினும், இந்த விடயம் புலன் விசாரணை செய்யப்பட்டு, உறுதிப்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும்.

310. வீடியோ மற்றும் புகைப்பட சான்றுகளுடன் இணைந்த விதத்தில் சாட்சிகள் முன்வைத்த சான்றுகள்,

311. எல்ரீரீஈ கேர்ணல் றமேஷ் என அழைக்கப்பட்ட பி. துரைராஜசிங்கம் 2009 மே 18 ஆம் திகதி சாட்சிகள் அவரைக் கண்ட பின்னா்,உயிருடன் இருந்தாா் என்பதனையும், பாதுகாப்புப் படைகளின் கட்டுக்காவலில் இருந்து வந்தாா் என்பதனையும், 2009 மே 18 ஆம் திகதிக்கும் 22 திகதிக்கும் இடையில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அவா் நீதிமன்ற நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொலை செய்யப்பட்டது வரையில் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தாா் என்பதனையும் நம்புவதற்கு நியாயமான காரணங்களை உருவாக்கிக் கொள்வதற்கு நம்பகமான ஒரு தகவல் தொகுப்பினை வழங்குகின்றன என இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது.

**312. *பாலச்சந்திரன் பிரபாகரன்***

313. வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயது மகனான பிரபாகரன் பாலச்சந்திரன் இலங்கைத் துருப்புக்களின் கட்டுப்பாட்டின் கீழ் உயிருடன் இருப்பதனையும், ஒரு பங்கரில் அமா்ந்திருப்பதையும் காட்டும் புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆதாரங்கள் இலங்கை தொடா்பான புலன்விசாரணை குழுவின் வசம் இருந்து வருகின்றன. அதேபோல, அரை நிா்வாண நிலையிலிருந்து வந்த ஐந்து ஆண்களின் சடலங்களுக்கு அருகில் பாலச்சந்திரனின் சடலம் தரையில் கிடத்தப்பட்டிருப்பதனைக் காட்டும் புகைப்படங்களும் இருக்கின்றன. இந்தப் புகைப்படங்கள் குறித்த சுயாதீனமான தடயப் பகுப்பாய்வு நிபுணா் ஒருவரின் மதிப்பீட்டின் அடிப்படையில், பாலச்சந்திரன் மாா்பு நோக்கிச் சுடப்பட்ட ஐந்து துப்பாக்கி குண்டுகளினால் கொல்லப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. ஒரு துப்பாக்கிச் சூட்டுக் காயம், அந்த ஆயுதம் 60 – 90 சென்ரி மீற்றா் தூரத்திலிருந்து சுடப்பட்டது என்பதனைக் காட்டுகின்றது.[248]தான் பாலச்சந்திரன் உயிருடன் இருப்பதைப் பாா்த்ததாகவும், பின்னா் சூட்டுக் காயங்களுடன் அவருடைய சடலத்தைப் பாாத்ததாகவும் ஒரு சாட்சி குறிப்பிட்டாா் பாலச்சந்திரன் கொலை செய்யப்படுவதை அவா் பாா்க்கவில்லை.[249]

314. இரு தரப்புக்குமிடையில் நடந்த சண்டையில் சிக்குண்டு பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டாா் என இலங்கை அதிகாரிகள் கூறிவந்துள்ளாா்கள்.[250] பாலச்சந்திரன் பிரபாகரன் பாதுகாப்புப் படைகளால் கைது செய்யப்பட்டாா் அல்லது வேறு

[248] http://www.dailymail.co.uk/news/article-2113459/Sri-Lankan-government-executed-civilians-war-Tamil-Tigers.html

[249] WS on file

[250] http://www.defence.lk/new.asp?fname=Balachandran_on_Sale_20130221_09

விதத்தில் பிடிக்கப்பட்டார் என்பதனையும்,பின்னர் பாதுகாப்புப் படையினர் அவரை நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொலை செய்துள்ளார்கள் என்பதனையும் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு கருதுகின்றது.

**இசைப்பிரியா என அழைக்கப்பட்ட சோபனா தர்மராஜா**

315. நன்கு பிரபல்யமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா பல புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில் தோன்றுவதுடன், அவர் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, கொல்லப்பட்டுள்ளார் என்பதனை அவை காட்டுகின்றன. மே 18 ஆம் திகதிக்கு முன்னைய வாரத்தின் போது சாட்சிகள் அவரை பல தடவைகள் பார்த்திருந்ததோடு,[251]கடைசியாக அவர் உயிருடன் இருந்ததை மே 18 ஆம் திகதி காலையில் பார்த்தார்கள். அப்பொழுது இலங்கை இராணுவத்தின் சிப்பாய்கள் அவரை கடல் நீர் ஏரியிலிருந்து வெளியில் இழுத்து எடுத்து, தனியாக நிராயுதபாணியாக இருந்த அவரை வட்டுவாகல் பாலத்துக்கு வடகரையிலிருக்கும் நந்திக்கடல் ஏரியின் சேற்றுப் பகுதியில் வைத்து கைது செய்தார்கள்.[252] பாதுகாப்புப் படைகளின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பிரகாரம், இசைப்பிரியா மே 18 ஆம் திகதி 53 ஆவது படைப்பிரிவின் சிப்பாய்களால் கொல்லப்பட்டிருந்தார்.[253]

316. சாட்சிகள் கூறிய விடயங்களுடன் பொருந்திச் செல்லக் கூடிய விதத்திலான புகைப்படங்கள் மற்றும் வீடியோப் படங்கள் என்பவற்றை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு பார்வையிட்டிருப்பதுடன், அப்படங்கள் இசைப்பிரியா உயிருடன் நந்திக் கடலிலிருந்து உயிருடன் வெளியில் இழுத்தெடுக்கப்படுவதைக் காட்டுகின்றன. ஆனால், அச்சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு படையினர் அவரை பிரபாகரனின் மகள் என தவறாக அடையாளம் கண்டிருந்தனர்.[254] வீடியோப் படங்களில் இசைப்பிரியா காக்கி பச்சைக் காற்சட்டையையும், இளமஞ்சள் நிற மார்புக் கச்சையையும் அணிந்திருந்தார். இந்தப் படத்திலிருக்கும் சிப்பாய்கள் அவரின் உடலின் மேல் பாகத்தை மூடிக் கொள்வதற்காக அவருக்கு ஒரு வெள்ளைத் துணியை வழங்குவதுடன், பொதுவாக மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்கிறார்கள். ஏனைய புகைப்படங்கள் இசைப்பிரியா வெள்ளைத்துணியால் போர்த்தியவாறு அமர்ந்திருப்பதை அல்லது மற்றொரு இளம்பெண்ணுக்கு அருகில் படுத்துக்கிடப்பதைக் காட்டுகின்றன[255] இந்தப் படங்களுக்கு நேர்மாறான விதத்தில், மற்றொரு வீடியோவும் அதேபோல பெருந்தொகையான புகைப்படங்களும் ஆண்களின் சடலங்களின் குவியல் ஒன்றுக்கு மத்தியில் இசைப்பிரியாவின் சடலம் இருப்பதைக் காட்டுகின்றன. அந்தப் பெரும்பாலான சடலங்கள் நிர்வாணமாக, முதுகுக்குப் பின்னால் கைகள் கட்டப்பட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தன. இந்த வீடியோவில் இசைப்பிரியாவின் காற்சட்டை கீழே இழுக்கப்பட்டு, அவரது மேல் தொடைப்பாகங்கள், பிறப்புறுப்புப் பகுதி மற்றும் அடிவயிறு என்பன வெளியில் தெரிவதுடன்,அவர் அரை நிர்வாணக் கோலத்தில் இருக்கின்றார். அவருடைய நடு வயிற்றுப் பகுதி இரத்தம் கசியும் வெள்ளைத் துணி ஒன்றினால் போர்த்தப்பட்டிருப்பதுடன், அவருடைய மார்பகங்களை வெளியில் காட்டும் நோக்கத்துடன் மார்புக் கச்சை வேண்டுமென்றே அகற்றப்பட்டிருந்தது.

---

251 WS on file

252 WS on file

253 http://www.defence.lk/new.asp?fname=20090621_02_TerrList

254 Presented by Callum Mcrae and Channel 4, Isaipriya capture, No Fire Zone.

255 Source on record.

அவரது கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. ஏனைய நபர்கள் அணிந்திருந்த கண்கட்டும் புடைவையை ஒத்திருந்த துணி அகற்றப்பட்டிருந்ததுடன்,அது அவரது முகத்தை முழுவதுமாகக் காட்டுகின்றது.

317. இந்தப் புகைப்படங்கள், வீடியோப் படங்கள் என்பன தொடர்பான சுயாதீனமான தடய அறிவியல் பரிசோதனை, இசைப்பிரியா தலையில் சுடப்பட்டிருப்பதைக் காட்டுகின்றது. இந்தப் படங்களில் அவருடைய உடல் வைக்கப்பட்டிருக்கும் விதம், அவருடைய இடது புறத்திலிருக்கும் வெளிக்காயம் மட்டுமே தெரியக்கூடிய விதத்தில் இருக்கின்றது. முதுகெலும்புத் துண்டுகளையும், வெளியில் தள்ளிக்கொண்டிருக்கும் மூளையையும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. வீடியோப் படங்கள், புகைப்படங்கள் என்பவற்றையும், அதனுடன் இணைந்த விதத்தில் சாட்சிகள் முன்வைத்த சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு, பாதுகாப்புப் படையினா் இசைப்பிரியாவை உயிருடன் கைது செய்து, அதன் பின்னா் அவருக்கு மரணதண்டனை அளிக்கும் பாணியில் தலையில் துப்பாக்கியால் சுட்டு, அவரை கொலை செய்திருந்தார்கள் என்பதனை நம்புவதற்கு இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவுக்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. மேலும், இசைப்பிரியாவினதும், இன்னும் பல பெண்களினதும் சடலங்களைக் காட்டும் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு இசைப்பிரியாவின் சடலம் களங்கப்படுத்தப்பட்டிருந்தது என இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு நம்புகின்றது.

**நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான ஏனைய கொலைகள்**

318. இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் சடலங்களைக் காட்டும் பெருந்தொகையான புகைப்படங்களையும், வீடியோக்களையும் பார்வையிட்டுள்ளது. ஒருசில புகைப்படங்களிலிருப்பவா்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் சீருடையில் இருப்பதுடன், சிலா் கண்கள் கட்டப்பட்ட நிலையிலும், கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்ட நிலையிலும் உள்ளனா். ஒருசிலா் சாதாரண உடைகளுடன் இருப்பதுடன், பெருந்தொகையானோரின் உடல்கள் நிா்வாணமாகக் காணப்படுகின்றன. ஒருசில சடலங்கள் குறைந்த வயதுப் பிரிவினரின் சடலங்கள் போல் தென்படுகின்றன.

319. புகைப்படங்கள் தொடா்பான தடய பரிசோதனைகளின் பிரகாரம், இந்தச் சடலங்கள் ஒரே சீரான விதத்தில் தலைக்குத் துப்பாக்கி வேட்டுக்கள் தீா்க்கப்பட்டு கொல்லப்பட்டிருப்பதற்கான அடையாளங்களைக் காட்டுகின்றன. இத்தகைய சம்பவங்களின் பிரதிநிதித்துவ உதாரணங்களாக பின்வரும் மூன்று சம்பவங்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன: இச்சம்பவங்களில் பாதிக்கப்பட்டவா்கள், பாதுகாப்புப் படைகளின் கட்டுக் காவலில் இருக்கும் புகைப்படங்கள் அல்லது வீடியோக்களில் தென்படுகின்றார்கள் பல புகைப்படங்களில் அல்லது வீடியோக்களில் பாதிக்கப்பட்ட நபா்களின் சடலங்களுடன் பாதுகாப்புப் படையினா் இருப்பதைக் காண முடிகிறது சில வீடியோப் படங்கள், பாதுகாப்புப் படை உறுப்பினா்களினால் பாதிக்கப்பட்ட நபா்கள் உண்மையிலேயே சட்டவிரோதமான முறையில் கொலை செய்யப்படுவதைச் சித்தரித்துக் காட்டுகின்றன. அந்தப் பாதுகாப்புப் படை உறுப்பினா்களின் முகங்கள் தெளிவாகத் தெரிவதுடன், அவா்கள் இலங்கை இராணுவத்தின் உறுப்பினா்கள் போல் தென்படுகின்றார்கள்.

320. சம்பவம்1: பல புகைப்படங்களில் பாலச்சந்திரனின் சடலத்துக்கருகில் ஐந்து ஆண்கள் கிடத்தப்பட்டிருப்பதனைப் பார்க்க முடிகிறது. அவர்களில் மூன்று போ் உள்ளாடைகளுடன் இருப்பதுடன், ஒருவா் சாறன் மற்றும் ரீ-சேட் அணிந்திருக்கிறார், ஒருவா் குட்டை காற்சட்டை அணிந்திருக்கின்றார். இவா்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. (சடலங்களுக்குக் கீழ் இரத்தம் காணப்படுவதுடன், உடல்களில் வெளியில் தென்படக்கூடிய வேறு காயங்கள்

இருந்து வரவில்லை). இந்த ஆண்களின் கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டிருப்பது போல் தெரிவதுடன், புகைப்படங்கள் எடுப்பதற்கு முன்னா் அந்தக் கயிறுகள் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு சடலத்தில் கண்ணைக் கட்டியிருந்த துணி விலகி முகத்துக்குக் கீழே இருப்பதுடன், அனைத்துச் சடலங்களும் குப்புறக் கிடத்தப்பட்டுள்ளன.

321. சம்பவம்2:பெருந்தொகையான புகைப்படங்களும், வீடியோக் காட்சிகளும் வயது வந்த நபா்களுக்கு மத்தியில் அடையாளம் தெரியாத பதின்ம வயது இளைஞா் ஒருவரைக் காட்டுகின்றன (அவருடைய வயதை நிச்சயமாகக் கூறமுடியாது. எனினும்,அதே புகைப்படத்திலும், வீடியோ காட்சிகளிலும் காட்டப்பட்டிருக்கும் ஏனைய நபா்களிலும் பாா்க்க அவா் கணிசமானளவு சிறியவராக இருந்து வருவதனால் அவா் ஒரு பராயமடையாதவராகவே இருந்து வர வேண்டும்.) ஒரு புகைப்படத்தில் அவா் உஷாலினி என அடையாளம் காணப்பட்ட இளம் பெண்ணொருவருக்கருகில் அமா்ந்திருக்கிறாா். அதே படத்தில் ஆண்கள் குழு ஒன்று அரை நிா்வாணமாக மணல் பள்ளம் ஒன்றில் அமா்ந்திருக்கின்றனா் அல்லது படுத்துக்கிடக்கின்றனா். ஏனைய படங்கள் அவரது முதுகுக்குப் பின்னால் கைகள் கட்டப்பட்டிருப்பதனையும், தலையில் ஒரு பாரிய காயத்துடன் அவரது உயிரற்ற சடலம் வைக்கப்பட்டிருப்பதனையும் காட்டுகின்றன. இந்த இளம் பையனை புகைப்படங்களில் எளிதில் அடையாளம் காண முடிகின்றது. அவருடைய நீண்ட காற்சட்டைகள் மற்றும் நீல நிறச் சட்டை அல்லது அவரது இடது கையைச் சூழக் கட்டப்பட்டிருந்த பட்டி என்பவற்றின் மூலம் அடையாளம் காண முடியும். அவருடைய சடலத்தையும் அவரைச் சித்தரித்துக் காட்டும் பல படங்களிலிருந்து அடையாளம் கண்டுகொள்ள முடியும். அது ஒரு பெண்ணின் சடலத்துக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றது. அவரது கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டுள்ளன. கண்கள் கட்டப்பபட்டிருந்த நீல நிறத் துணி அநேகமாக துப்பாக்கி வேட்டுக் காயத்தினால் ஏற்பட்ட அதிா்ச்சி காரணமாக விலகியிருக்க முடியும். ஏனைய புகைப்படங்களில் இனங்காணப்படாத ஒரு சிறு பையனாக இருந்து வரக்கூடிய மற்றொருவருடைய சடலம் காணப்படுவதுடன், ஒரு ட்ரக் வாகனத்தில் ஏற்றப்பட்டிருக்கும் குவியலான நிா்வாண சடலங்களுக்கு மத்தியில் அது வைக்கப்பட்டிருந்தது. இந்தப் புகைப்படங்களில் இந் நபா் நிா்வாணமாக இருந்து வருவதுடன், ஒரு நீலக் கைப்பட்டி மங்கலாகத் தெரிகின்றது.

322. சம்பவம்3:சாட்சி ஒருவரினால் எல்ரீரீஈ கேர்ணல் வசந்தன் என அடையாளம் காணப்பட்ட ஒரு நபா்,[256] புகைப்படங்களில் நிா்வாணமாகவும், முதுகுக்குப் பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையிலும், பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட நிலையிலும் இருக்கின்றாா். நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான மரண தண்டனைகள் குறித்த விசேட அறிக்கையாளருக்கென சுயாதீனமான நிபுணா்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த இத்தகைய அதிரடியான மரணதண்டனை ஒன்றைக் காட்டும் வீடியோப் படமொன்றில் வரிச்சீருடையிலிருக்கும் ஒரு சிப்பாய், கேர்ணல் வசந்தன் என நம்பப்படும் அடையாளம் காணப்படாத நபரை ஏற்கனவே கொல்லப்பட்டிருக்கும் ஆட்களுக்கு அருகில் கமெரா ஒன்றுக்கு முன்னால் ஒரு கயிற்றினால் இழுத்துச் செல்கின்றாா். அவா் அங்கு உட்கார வைக்கப்படுவதுடன், சிப்பாய் ரி – 56 துப்பாக்கியினால் அவரின் தலையின் பின்பக்கத்தில் மிகவும் அருகில் நின்று சுடுகின்றாா். கேர்ணல் வசந்துடன் சேர்த்து அடையாளம் காணப்படாத நபா்கள் நிா்வாணமான நிலையில், கண்கள் கட்டப்பட்டு, கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்ட நிலையில் கொலை செய்யப்படுவதனைக் காட்டும் வீடியோப் படங்களுடன் கூடிய சான்றுகள்,[257]அநேகமாக

[256] http://white-flags.org/

[257] WS on file

எல்ரீரீஈஉறுப்பினர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான நபர்கள் ஆயுதமோதலின் இறுதித் தினங்களின் போது பாதுகாப்புப் படைகளினால் நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொல்லப்பட்டிருந்தனர் என நம்புவதற்கு நியாயமான காரணங்களை முன்வைக்கின்றன.[258]

323. இனங்காணப்பட்ட மற்றும் இனங்காணப்படாத பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான மேலே காட்டப்பட்ட அனைத்துச் சம்பவங்களிலும், இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்டிருந்தசாட்சிகள் முன்வைத்த சான்றுகள், புகைப்படங்கள், வீடியோப் படங்கள் மற்றும் ஏனைய ஆதாரங்கள் என்பன இந்நபர்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதனையும், அதனை அடுத்து அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதனையும், காட்டுகின்றன. பல சம்பவங்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள், இந்நபர்கள் மிக அருகில் வைத்து சுடப்பட்டார்கள் என்பதனையும், அவ்விதம் அவர்கள் கொலை செய்யப்பட்ட பொழுது அவர்களது கண்கள் கட்டப்பட்டும், கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டுமிருந்தன என்பதனையும் காட்டுகின்றன. இச்செயல்கள் நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான தூக்குத் தண்டனைக்குக்கு இணையானவைகளாக இருந்து வருவதுடன், வாழ்வதற்கான உரிமையை தெளிவான விதத்தில் மீறும் செயல்களாகவும் இருந்து வருகின்றன. அவை தவிர, இச்செயல்கள் ஆயுதமோதலுடன் சம்பந்தப்பட்டிருப்பதால், இத்தகைய கொலைகள் 1949 ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா சமவாயங்களுக்குப் பொதுவான உறுப்புரை 3 ஐ மீறும் செயல்களாகவும் இருந்து வருகின்றன. அந்த உறுப்புரை உயிருக்கு சேதம் விளைவிப்பதைக் குறிப்பாக, யுத்த நடவடிக்கைகளில் நேரடியாக பங்கேற்காத நபர்களைக் கொலைசெய்வதனை அல்லது தடுத்து வைப்பதன் மூலம் இனியும் போர் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருப்பவர்களை கொலை செய்வதனைத் தடை செய்கின்றது. சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படுமிடத்து, அத்தகைய கொலைகள் போர்க் குற்றங்களுக்கு இணையானவையாக இருந்து வர முடியும்.

### மோதலின் பின்புலத்தில் பாலுறுப்புக்களைச் சிதைத்தல்/உடல்களைக் களங்கப்படுத்துதல்

323. ஆடைகள் அகற்றப்பட்டு அல்லது மார்புக் கச்சைகள் மேலே இழுக்கப்பட்டு, காற்சட்டைகள் மற்றும் உள்ளாடைகள் கீழே இழுக்கப்பட்டு குறிப்பிட்ட நபர்களின் மார்பகங்களை அல்லது பிறப்புறுப்புப் பிரதேசங்களை முழுமையாக வெளியில் தெரியச் செய்யும் விதத்தில் பெண்ணுடல்கள் மானக் கேடாக நடத்தப்படுவதனைக் காட்டும், சிப்பாய்களால் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் மனக்கலக்கமூட்டும் புகைப்படங்களையும், வீடியோப் படங்களையும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு பார்வையிட்டுள்ளது. இசைப்பிரியாவின் சம்பவம் அத்தகைய தனிமனித கண்ணியத்தை களங்கப்படுத்தி, குரூரம் விளைவிப்பதற்கான தெளிவான உதாரணங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. மேலும், இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு இனங்காணப்படாத பெண்களின் சடலங்களைக் காட்டும் பெருந்தொகையான ஏனைய புகைப்படங்களையும், வீடியோப் படங்களையும் பார்த்துள்ளது. அவையும் மேலே குறிப்பிடப்பட்ட அதே மாதிரியையே எடுத்துக் காட்டுகின்றன. அவர்களில் ஒரு சிலர் அரைகுறை சீருடையிலிருந்து வரும் எல்ரீரீர் இயக்கத்தின் போராளிகள் என்ற விடயம் தெளிவாகத் தெரிகிறது அல்லது அகன்ற கால்களைக் கொண்ட

[258] WS on file

காற்சட்டைகள் மற்றும் கோடு போட்ட ஆண்களின் சட்டைகள் என்பவற்றை அணிந்திருந்ததுடன், ஏனையவர்கள் சாதாரண உடையில் இருந்தனர். அனைவருடைய மார்பகங்களும், பிறப்புறுப்புக்களும் வெளியில் தெரியும் நிலையில் இருந்தன. ஒருசில சம்பவங்களில் கால்கள் அகலமாக விரிக்கப்பட்டிருந்தன. ஒருசிலருடைய கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டிருந்ததுடன், அவர்களுடைய மரணத்திற்கு முன்னர் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதனை அது காட்டுகின்றது. ஏனையவர்களின் மார்பின் முன்பகுதியில் பல துப்பாக்கி வேட்டு அடையாளங்கள் தென்பட்டன. வீடியோக்களைப் பொறுத்தவரையில் கமெராக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிறப்புறுப்புப் பிரதேசங்களில் அலைந்து கொண்டிருக்கின்றன. அதேவேளையில், அங்கிருக்கும் சீருடை அணிந்த சிப்பாய்கள் பாலியல் ரீதியான சொற்பிரயோகங்களை பயன்படுத்துவதனை பார்க்கவும், கேட்கவும் முடிகின்றது. இந்த வீடியோவுடன் இருக்கும் விவரணம் குறிப்பாக அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. நிர்வாணமாக இருக்கும் பெண்களின் சடலங்கள் தொடர்பாக சிப்பாய்கள் மிகவும் நுணுக்கமான, அசிங்கமான, புண்படுத்தக் கூடிய பாலியல்ரீதியான வார்த்தைகளை பயன்படுத்துவதைக் கேட்க முடிகின்றது. ஒரு வீடியோவில் பெண்களின் அரை நிர்வாண சடலங்கள் மரணித்தவர்கள் தொடர்பாக எத்தகைய கண்ணியமும் இல்லாத விதத்தில் லொறி ஒன்றில் ஆங்காங்கே வீசியெறியப்பட்டிருந்தன.

324. அதே மாதிரியான ஒரு வீடியோவில் சிப்பாய்கள் தமது வெற்றியைக் கொண்டாடி மகிழ்வதனைக் காணமுடிகின்றது. அவர்கள் சிரித்துக் கும்மாளமடிப்பதுடன், மரணித்திருக்கும் நிர்வாணமான தமிழ்ப் பெண்களின் பிறப்புறுப்புக்ளையும், மார்பகங்களையும் படம் பிடிக்கின்றனர். மரணமடைந்திருக்கும் ஒரு பெண் இடுப்புப் பகுதியிலிருந்து கீழே நிர்வாணமாகக் காட்டப்பட்டிருப்பதுடன், அப்பெண்ணின் வயிற்றில் பல ஆயுதங்கள் ஓர் அலங்கார வடிவில் வைக்கப்பட்டுள்ளன. சிப்பாய்கள் இப்படிச் சொல்கின்றார்கள்: "அப்பெண் இயக்கத்தில் (எல்.ரீ.ரீ.ஈ) புதிதாக சேர்ந்து கொண்ட ஒருவரைப் போல் தெரிகின்றார்!""அவர் யாரோ ஒருவரின் எழுதுவினைஞர் போல் இருக்கின்றார் - அவரிடம் எத்தனை பேனாக்கள், பென்சில்கள் இருக்கின்றன என்பதனைப் பாருங்கள்!""உண்மையில் அப்பெண்ணின் மார்பகங்களை வெட்டி எறிய வேண்டும் என விரும்புகிறேன் - நீங்கள் இந்த இடத்தில் இல்லாவிட்டால்…"

325. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் உயிருடன் இருந்தபொழுது அவர்கள் இழிவுபடுத்தப்பட்டு, சிறுமைப்படுத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்ட பரவலான ஒரு பின்புலத்திலேயே இந்த வீடியோப் படங்களை நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். இது பின்னொரு அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்படுகின்றது. அதேபோல சேகரிக்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான சாட்சிகளின் வாக்குமூலங்கள், நிர்வாணமான பெண்கள் மற்றும் இளம்பெண்கள் ஆகியோரை சிப்பாய்கள் தமது கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி படம்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கின்றன. இவை நிரூபிக்கப்பட்டால், இத்தகைய செயல்கள் போர்க்குற்றச் செயல்கள் மற்றும் தனிப்பட்ட கண்ணியத்தைக் குலைத்தல் குற்றம் என்பவற்றுக்கு இணையானவையாக இருந்து வர முடியும்.

## VII.சுதந்திரம் பறிக்கப்பட்டதுடன் சம்மந்தப்பட்ட உரிமை மீறல்கள்

### அறிமுகம்

326. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் ‘‘கைதுகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் அல்லது விருப்பத்துக்கு மாறாக காணாமல் செய்யப்படுதல் மற்றும் தன்னிச்சையாக தடுத்து வைத்தல் என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான குற்றச்சாட்டுக்கள் குறித்து திடுக்கிட்டதாக’’ குறிப்பிட்டிருந்தது.[259] இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு அதன் புலன்விசாரணைகளின் போது பாதுகாப்புப் படைகளினாலும், சம்பந்தப்பட்ட துணைப்படைக் குழுக்களினாலும் நிகழ்த்தப்பட்ட தடுத்து வைப்புடன் சம்பந்தப்பட்ட பரவலான விதத்திலான அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை ஆவணப்படுத்தியுள்ளது.

327. சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான கைது, தடுத்து வைப்பு என்பன தொடர்பான போக்குகள் குறித்த பாதுகாப்புப் படைகளின் வழமையான நடைமுறைகளை இந்த அத்தியாயம் மீளாய்வு செய்கின்றது. எந்த ஒரு நபரினதும் சுதந்திரத்தைப் பறிப்பதுடன் சம்பந்தப்பட்ட சர்வதேச சட்டரீதியான பாதுகாப்புக்களை தெளிவான விதத்தில் மீறும் வகையிலான நடைமுறைகளுக்கு இலங்கையின் அரைச்சட்ட சட்டகம் எவ்வாறு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது என்பதனை அது எடுத்து விளக்குகின்றது. மேலும், இந்த அத்தியாயம் தனிநபர்களை அல்லது குழுக்களை திட்டவட்டமான விதத்தில் இலக்குவைத்து, மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பரிசீலனை செய்கின்றது. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் விசாரணைக் காலத்திற்கு முன்னரும், காலத்தின் போதும், அதற்கு அப்பாலும் அச்சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததுடன், அவை பெரும்பாலும் ‘‘வெள்ளைவான்’’ சம்பவங்கள் எனக் குறிப்பிடப்பட்டு வந்தன. மேலும், இந்த அத்தியாயம் மோதலின் முடிவின் போது இடம்பெற்ற பாரியளவிலான தடுத்து வைப்புக்களுடன் சம்பந்தப்பட்ட அத்துமீறல்களையும் ஆவணப்படுத்துகின்றது.

328. எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள்,“கடத்தல்,வயது வந்தவர்களை பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்தமைமற்றும் ஆயுதக் குழுக்களினால் சிறுவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டமை” தொடர்பான அடுத்து வரும் அத்தியாயங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

### அவசர காலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம்

329. இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் குற்றவியல் நடைமுறைக் கோவை என்பன தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைப்பு என்பவற்றிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான ஏற்பாட்டைக் கொண்டுள்ளது. அது பொலிஸ் தடுப்புக் காவல் தொடர்பாக சட்டரீதியான கால வரம்பொன்றை விதிப்பதுடன், எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நபர் ஒருவரை பிடியாணை இல்லாது கைது கைது செய்தால் அது குறித்து மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்ற தேவையையும் கொண்டுள்ளது. மேலும், அவ்விதம் கைது செய்யப்படும் நபர்களுக்கு அவர்கள் கைது செய்யப்படுவதற்கான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதனையும் அது அவசியப்படுத்துகின்றது.[260]

330. எவ்வாறிருப்பினும், இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்படும் காலப் பிரிவு முழுவதும் அமுலில் இருந்து

[259] கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, பந்தி 5.34

[260] இலங்கையின் அரசியலமைப்பு, உறுப்புரை 13,CCP உறுப்புரைகள் 37இ 38 மற்றும் 53.

வந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் வெளியிடப்படும் அவசரகால ஒழுங்குவிதிகளினால் உதாசீனம் செய்யப்பட்டிருந்தன. அவசரகால ஒழுங்குவிதிகள் 2011 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தன. அவை கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் என்பவற்றுக்கு கட்டளைகளை வழங்குவதற்கும், அத்தகைய கைதுகளை மேற்கொள்ளுமாறு இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு கட்டளை வழங்குவதற்கும் பாதுகாப்புச் செயலாளருக்கு விரிவான அதிகாரங்களை வழங்கியிருந்தன.ஒரு சில அவசரகால ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் ஏற்பாடுகளை மீறுபவையாக இருந்து வந்தன.

331. பயங்கரவாதத் தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன், அது இன்றுவரை அமுலில் இருந்து வருகின்றது. அச்சட்டம் ''தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய விதத்தில் அல்லது பொது ஒழுங்கை பராமரிப்பதற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய விதத்தில் நடந்து கொள்வதாக'' சந்தேகிக்கப்படும் நபர்களை பிடிவிறாந்து இல்லாது கைது செய்வதற்கான அதிகாரத்தை இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்குகின்றது[261] அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஒரு நபருடன் அல்லது குழுவுடன் ''ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களை'' நடத்தியிருப்பாதக சந்தேகிக்கப்படும் நபர்களையும் அவ்விதம் கைது செய்ய இடமளிக்கின்றது. மேலும், கைது செய்யப்படும் நபர்களை ஒரு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தாமல் 18 மாதங்கள் வரையில் தடுப்புக் காவலில் வைத்திருக்கவும் முடியும்.[262]

332. இச்சட்டத்தின் கீழ் தனிநபர்களை புலன்விசாரணைக்கென அல்லது ஒரு தடுப்பு வழிமுறையாக தடுப்புக் காவலில் வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சர் கட்டளை பிறப்பிக்க முடியும்.[263] அத்தகைய நபர்களை முதல் முறையாக குறிப்பிட்ட இடத்தில், அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக, மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பிரிவுக்குத் தடுத்து வைப்பதற்கு, அமைச்சர் கட்டளையிட முடியும். எவையேனும் அத்தகைய கட்டளைகள், ஒரு தடவையில் மூன்று மாதங்களுக்கு மேல் மேற்படாத ஒரு காலப்பிரிவுக்கு, காலத்துக்குக் காலம் நீட்டிக்கப்பட முடியும். தனிநபர்களை நீண்ட காலப் பிரிவுக்கு நிர்வாகத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதன் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டம் உரிய நடைமுறை மற்றும் தன்னிச்சையான விதத்தில் தடுத்து வைக்கப்படாதிருப்பதற்கான உரிமை என்பன தொடர்பான பெருந்தொகையான சர்வதேச தர நியமங்களை மீறுகின்றது. குறிப்பாக, தடுப்புக் காவலின் சட்டபூர்வத் தன்மை குறித்த மீளாய்வுக்கான உரிமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு பின்வரும் விதத்தில் பொறுப்பேற்க வேண்டும்:

333. "வலுவிழக்கச் செய்ய முடியாத உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு, தடுப்புக் காவலின் சட்டபூர்வ தன்மை குறித்து தாமதமின்றி நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு இயலச் செய்யும் விதத்தில், ஒரு நீதிமன்றத்தில் வழக்கு

---

[261] அவசரகால ஒழுங்கு விதிகள் (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்),EMPPஒழுங்கு விதிகள், இல 1 2005, ஆகஸ்ட் 13, 2005 பாகம் 4, ஒழுங்கு விதி 19

[262] பயங்கரவாதத் தடைச் சட்டம் 1971, பாகம் II,பந்திகள் 6(1), 9(1)

[263] சட்டத்தின் பிரிவு 9(1)

நடைமுறைகளை முன்னெடுக்கும் உரிமை, சமவாயத்திலிருந்து விலகிக் கொள்வதற்கான அரச தரப்பின் முடிவினால் குறைக்கப்பட முடியாது."[264]

334. இங்கு முக்கியமாக கரிசனைக்குரிய பிரிவு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 7.3a ஆகும். அது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு புலன்விசாரணையை மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் "அத்தகைய நபரை அணுகுவதற்கான உரிமையையும், அவரிடம் விசாரணை செய்யும் நோக்கத்துக்கென நியாயமான காலப் பிரிவுகளின் போது அவரை எந்த ஒரு இடத்துக்கும் எடுத்துச் செல்லும் உரிமையையும், புலன் விசாரணை நோக்கங்களுக்கென அவரை இடத்துக்கிடம் எடுத்துச் செல்லும் உரிமையையும் கொண்டிருப்பார்." கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றில் இந்த ஏற்பாடுகளின் சட்டவிரோதமான தன்மையை ஏற்றுக் கொள்ளும் அதேவேளையில், பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:"தடுத்து வைத்திருக்கும் அனைத்து இடங்களும், தடுத்து வைப்புக்கான அதிகாரமளிக்கப்பட்ட, முறையாக குறித்துரைக்கப்பட்ட இடங்களாக இருந்து வருதல் வேண்டும். தடுத்துவைப்பதற்கென அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் அத்தகைய இடங்களல்லாத ஏனைய இடங்களில் எந்த ஒரு நபரும் தடுத்து வைக்கப்படக் கூடாது. நபர்களைத் தடுப்புக் காவலுக்கு எடுக்கும் பொழுது, சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகள் கைது குறித்த முறையான ஒரு பற்றுச்சீட்டை வழங்குதல் மற்றும் தடுத்து வைத்திருக்கும் இடம் குறித்த விபரங்களை வழங்குதல் போன்ற கண்டிப்பான சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும்."

335. அவசரகால ஒழுங்கு விதிகள் 2011 ஆம் ஆண்டிலேயே நீக்கப்பட்டன. எனினும், அதன் ஒருசில ஏற்பாடுகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான ஏற்பாடுகளாக இன்னமும் அமுலில் இருந்துவருவதுடன், முன்னர் நீக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணையானவையாகவும் உள்ளன.

336. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 2005 ஆகஸ்ட் மாதத்தில் படுகொலை செய்யப்பட்டதனை அடுத்து, அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) ஒழுங்கு விதிகள் இல. 1, 2005 என்ற தலைப்பில் புதிய ஒழுங்கு விதிகள் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டன. ஏனையவற்றுக்கு மத்தியில், தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய ஒரு செயலைத் தடுப்பதற்கு அல்லது பொது ஒழுங்கினைப் பாராமரிப்பதற்கு ஒரு நபரைத் தடுப்புக் காவலில் வைப்பது அவசியமாக இருந்து வருகின்றது என "பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அபிப்பிராயப்பட்டால்" கைதுகளையும் நிர்வாகரீதியான தடுப்புக் காவல்களையும் கட்டளையிடுவதற்கான பரவலான அதிகாரங்களை அவை அவருக்கு வழங்கியிருந்தன.

337. மேலும், அவசரகால ஒழுங்கு விதிகளின்(20(1)) கீழ் "எவரேனும் ஒரு அரசாங்க உத்தியோகத்தர், இலங்கை இராணுவம், இலங்கைக் கடற்படை அல்லது இலங்கை விமானப் படை என்பவற்றின் எவரேனும் ஒரு உறுப்பினர் அல்லது ஜனாதிபதியால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் வேறு எவரேனும் ஒரு நபர்"

---

[264] பொதுக் குறிப்பு இல. 29: (உறுப்புரை 4) அவசர கால நிலையின் கீழ் நிறுத்தி வைத்தல்கள், ஐ நா ஆவணம். CCPR/C/21/Rev.1/Add.11 (2001), பந்தி 16. மனித உரிமைகள் கமிட்டி இஸ்ரேல் தொடர்பான அதன் முடிவு அவதானிப்பு குறிப்புக்களில் குறிப்பிட்டிருந்தது. (1998, CCPR/C/79/Add. 93), தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாக ஒரு தாக்கமான மீளாய்வை மேற்கொள்ள வேண்டிய தேவையிலிருந்து ஒரு அரசு தரப்பு விலகிச் செல்ல முடியாதென அது அந்தக் குறிப்பில் வலியுறுத்தியிருந்தது.

அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஒரு குற்றச் செயலைப் புரிவதாக தாம் சந்தேகிக்கும் ஒரு நபர் தொடர்பாக தேடுதல் நடத்த முடியும். அத்தகைய தேடுதலுக்கென தடுத்து வைக்க முடியும் அல்லது பிடிவிறாந்து இல்லாமல் அவரை கைது செய்ய முடியும். தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர் கைது செய்யப்பட்டு 30 நாட்களுக்குள் ஒரு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என இந்த ஒழுங்குவிதிகள் அவசியப்படுத்துகின்றன(21(1)).

338. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ்[265]"சரணடைந்தவர்கள்" எனக் கூறப்படும் நபர்களை 12 மாத காலத்துக்கு "புனர்வாழ்வு நிலையங்களில்" தடுத்து வைக்க முடியும் மேலும், அக்காலப் பிரிவை"புனர்வாழ்வளிப்பு" நோக்கங்களுக்கென குற்றச்சாட்டுக்கள் அல்லது வழக்கு விசாரணை இல்லாமல், மேலும் இரண்டு வருட காலப்பிரிவுக்கு நீடிக்க முடியும்.

339. அதனை அடுத்து, 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகள் - (பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவற்றை தடுத்தல் மற்றும் தடை செய்தல்) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் அவசரகால ஒழுங்குவிதி இல 07 - "பயங்கரவாத" குற்றங்கள் என்பவற்றுக்கு பெருமளவுக்கு தெளிவற்ற விதத்தில் வரைவிலக்கணம் வழங்கியது மட்டுமன்றி, இந்த ஒழுங்குவிதிகளை அமுல் செய்யும் நடவடிக்கையின் போது அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதிலிருந்தும் பரவலான விலக்குரிமைகளை அவர்களுக்கு வழங்கியிருந்தது.[266]

340. இலங்கையின் அரசியலமைப்பு (உறுப்புரை 141) ஆட்கொணர்வு மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்தும் அதேவேளையில், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் ஆகிய இரண்டின் கீழும், இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு நபரும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 9 மீறப்பட்டுள்ளது எனக் கூறி, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதனை நீதிமன்றங்களில் சவால் விடுப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை.[267] ஆட்கொணர்வு மனு உரிமை இவ்விதம் தாக்கமான விதத்தில் இடைநிறுத்தப்பட்டிருக்கும் விடயத்தை 1995 ஆம் ஆண்டில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் கமிட்டி கவனத்திலெடுத்திருந்தது: "பாதுகாப்புச் செயலாளரினால் கட்டளை பிறப்பிக்கக் கூடிய நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலப்பிரிவு இல்லாத விதத்திலான தடுப்புக் காவல் குறித்து கமிட்டி கரிசனை காட்டுவதுடன், அது சமவாயத்தை மீறும் ஒரு செயலாக உள்ளது[…] இதன் காரணமாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு நிவாரணத்தின் தாக்கத் திறன் குறித்து கமிட்டி கரிசனை கொண்டுள்ளது."[268]இது குறிப்பாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல்

---

[265] 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசர கால ஒழுங்குவிதிகள் சட்டத்தின் ஒழுங்குவிதி 22, 2006, 1462/8, அவசர கால ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டது.

[266] ஒழுங்குவிதி 19,(பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை தடுத்தல் மற்றும் தடை செய்தல்) ஒழுங்குவிதி இல. 07, 2006, டிசம்பர் 6, 2006

[267] பயங்கரவாத தடைச் சட்டம் 1971, பாகம் II, பந்தி 10, 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசர கால ஒழுங்குவிதிகள் சட்டம், பந்தி 19(10)

[268] ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டி, 1995 சமவாயத்தின் உறுப்புரை 4 இன் கீழ் அரச தரப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கைகளைக் கவனத்திலெடுத்தல், மனித உரிமைகள் கமிட்டியின் குறிப்புக்கள்: இலங்கை CCPR/C/79/Add.56, பந்தி 17

சம்பவங்கள் தொடர்பாக மிகவும் ஒரு பாரதூரமான ஒரு விடயமாக இருந்து வருகின்றது. ஏனெனில்,அவ்விதம் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், கடத்தப்பட்ட நபர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயத்தை உடனடியாகத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கென ஆட்கொணர்வு மனுக்களையே நம்பி இருந்து வருகின்றார்கள்(பார்க்கவும்: அத்தியாயம் VIII – பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல்).

341. பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வருபவர்கள் எனக் கருதப்படும் தனிநபர்கள் மற்றும் அரசாங்கத்தினால் "சரணடைந்தவர்கள்" எனக் கருதப்படும் தனிநபர்கள் தொடர்பாக பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகள் என்பன அவ்விதத்தில் தடுக்கும் விதத்திலான தடுப்புக் காவலுக்கு அனுமதியளித்ததுடன், தடுப்புக் காவலில் வைத்திருப்பவர்களை வசதி வெளியிடப்படாத இரகசிய இடங்களில் காவலில் வைத்திருப்பதற்கும் செய்து கொடுத்துள்ளன. ஆயுத மோதலின் முடிவின் போது கைது செய்யப்பட்ட முன்னைய எல்ரீரீஈ உறுப்பினர்களும் இவர்களில் அடங்குகின்றனர். தன்னிச்சையான தடுப்புக் காவல் தொடர்பான ஐக்கிய நாடுகள் செயல் குழுவின் பிரகாரம், இத்தகைய வடிவிலான தடுக்கும் இயல்பிலான தடுப்புக் காவல், இயல்பில் தன்னிச்சையானதாக இருந்து வருவதுடன், பயங்கரவாத எதிர் வழிமுறைகள்/ நடவடிக்கைகள் என்பவற்றின் பின்னணியிலும் கூட, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 9ஐ மீறுபவையாக உள்ளன.[269]

342. கைது செய்யப்பட்டிருக்கும்/அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான பணிப்புரைகளை ஜனாதிபதி ராஜபக்ஷ 2006 யூலை மாதம் மாதம் வெளியிட்டார். அப் பணிப்புரைகள் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை என்பவற்றின் தளபதிகளுக்கும், பொலிஸ்மாஅதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவை எந்த ஒரு நபரும் சட்டத்தின் பிரகாரமும், பொருத்தமான நடைமுறையின் பிரகாரமும் அல்லாமல் வேறு விதங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகள் என்பவற்றின் கீழ் கைது செய்யப்படவோ அல்லது தடுத்து வைக்கப்படவோ முடியாது என்ற விதத்திலான அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கியிருந்தன. மேலும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பிள்ளைகள் அல்லது பெண்கள் ஆயுதப் படைகளின் அல்லது பொலிஸாரின் பெண்கள் அலகொன்றின் காவலில் வைக்கப்படுதல் வேண்டும். ஒரு கைது இடம்பெற்று 48 மணிநேரத்துக்குள் அது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும். எந்த ஒரு தடுப்புக் காவல் நிலையத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களை சென்று பார்ப்பதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்குதல் வேண்டும்.[270] எவ்வாறிருப்பினும், இப்பணிப்புரைகள் புறம்பான சட்ட வலுவைக் கொண்டிருக்கவில்லை. பாதுகாப்புப் படையினரால் பின்பற்றப்பட்டு வரும் பெருந்தொகையான நடைமுறைகள் சர்வதேச தர நியமங்களை மீறியுள்ளன. சர்வதேச தர நியமங்களுக்கு இணங்கி ஒழுகுபவையும் கூட அதிகாரிகளினால் தொடர்ச்சியான அடிப்படையில் மீறப்பட்டு வருகின்றன.

[269] ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை,2009, தன்னிச்சையான தடுத்து வைப்புக்கள் தொடர்பான செயல் குழுவின் அறிக்கை A/HRC/10/21,பந்தி 54.

[270] கைது செய்யப்பட்டிருக்கும் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான ஜனாதிபதியின் பணிப்புரைகள்< http://www.defence.lk/new.asp?fname=20070425_02>

**பாதுகாப்புப் படைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த துணைப் படைக் குழுக்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான கைதுகள் தொடர்பான போக்குகள்**

343. புலனாய்வின் விசாரணைக் காலப்பிரிவின் போது, இலங்கையில் இடம்பெற்ற ஆயுத மோதலின் பின்புலத்தில் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டிருந்த அல்லது வேறு விதத்தில் தன்னிச்சையான விதத்தில் தமது சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்த நபர்களுடன் (அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்கள்) இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு 50 இற்கும் மேற்பட்ட நேர்காணல்களை நடத்தியது. மேலும், அது அத்தகைய சம்பவங்கள் தொடர்பான ஏனைய தகவல்களையும் மீளாய்வு செய்தது. அத்தகவல்கள் பாதுகாப்புப் படையினரால் சட்டவிரோதமான விதத்தில் கைது செய்யப்பட்ட பின்னர் இடம்பெற்றிருந்ததாகக் கூறப்படும் பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான சம்பவங்களையும் உள்ளடக்கியிருந்தன. தன்னிச்சையான, சட்டவிரோதமான கைது மற்றும் தடுத்து வைத்தல் என்பன அரசினால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதையும், அதேபோல அரச படைகளுக்கு ஆதரவளிக்கும் துணைப்படைக் குழுக்களினால் கைதுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்பதையும் சேகரிக்கப்பட்ட தகவல்கள் காட்டுகின்றன.

344. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் மிகப் பெரும்பாலான சம்பவங்களில் கைதுகள் மேற்கொள்ளப்பட்ட விதம் மற்றும் ஒருசில சம்பவங்களில் கடத்தல்கள் நடத்தப்பட்ட விதம் என்பன சர்வதேச தர நியமங்களுக்கு இணங்கி ஒழுகத் தவறியிருந்ததுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை குறித்து அறிவிக்கப்படவும் இல்லை. இச்சம்பவங்கள் அனைத்திலும் ஆட்கள் கைது செய்யப்பட்ட அல்லது கடத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் எத்தகைய பிடிவிறாந்துகளும் காட்டப்படவில்லை. தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஒருசிலர் தொடர்பாக மட்டுமே அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணங்கள் மற்றும் அவர்கள் எடுத்துச் செல்லப்படும் இடம் போன்ற விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஒரு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது அல்லது சட்டத்தரணி ஒருவரை அணுகுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அத்தகைய அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்களில் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் அல்லது அதன் அனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் - அதேபோல ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்,ஆகியோரும் அடங்கியிருந்தனர். மேலும், நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்த தமிழ் இனத்தைச் சேர்ந்த நபர்களைஅல்லது சுயவிருப்பில் அல்லது வெளிநாட்டில் தஞ்சம் மறுக்கப்பட்டதனை அடுத்து வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் திரும்பியிருந்த நபர்களை கைது செய்யும் ஒரு போக்கினையும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு ஆவணப்படுத்தியிருந்தது.[271]

*345. பாதுகாப்புப் படையினரின் வழமையான நடவடிக்கை முறை: ''வெள்ளைவான்'' கைதுகள்*

346. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பெரும்பாலான சம்பவங்களில் சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான கைதுகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களம், விசேட அதிரடிப்படை, இலங்கை இராணுவத்தின்

[271] WS on file

உறுப்பினர்கள் (குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு), மற்றும் இலங்கைக் கடற்படை ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் பாதுகாப்புப் படை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

347. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் தன்னிச்சையான கைதுகள் நாடெங்கிலும் உள்ள இடங்களில் நிகழ்த்தப்பட்டிருந்ததுடன், குறிப்பாக கொழும்பு விமான நிலையம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களையும் உள்ளிட்ட விதத்தில் கொழும்பிலும், குறிப்பாக 2009 ஆம் ஆண்டின் பின்னர் வவுனியாவைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் இடம்பெற்றிருந்தன.

348. பாதிக்கப்பட்ட நபர்கள் தமது வீடுகளுக்கு அல்லது பணியிடங்களுக்கு அருகில் அல்லது அவர்கள் சோதனைச் சாவடிகளுக்கு அல்லது விமான நிலையங்களுக்கூடாகச் சென்றுகொண்டிருந்த பொழுது கைது செய்யப்பட்டிருந்தனர். ஒருசில சந்தர்ப்பங்களில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்த சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டனர். ஒன்றில் சீருடையில் அல்லது சாதாரண உடையிலிருந்த இக் குற்றச் செயல்களை நிகழ்த்திய ஆயுதம் தாங்கிய நபர்கள், வழமையாக, பாதிக்கப்பட்ட நபர்களை இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்களின் பின் பகுதியில் ஒரேயடியாகப் பிடித்து, ஏற்றிக் கொள்வார்கள். அதன் பின்னர் அவர்கள் கட்டப்படுவார்கள். பொதுவாக "வெள்ளை வான்களே"பெருமளவுக்கு இதற்கென பயன்படுத்தப்பட்டன. கண்கள் கட்டப்பட்ட நிலையில் அவர்கள் எடுத்துச் செல்லப்படுவார்கள். அதன் பின்னர் தடுப்புக் காவலில் வைக்கும் இடத்துக்கு அவர்கள் வாகனத்திலெடுத்துச் செல்லப்படுவார்கள். அந்த அமைவிடம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவருக்குத் தெரியாததாக இருந்தது. தாம் எங்கிருக்கின்றோம் என்ற விடயம் குறித்து பாதிக்கப்பட்டவர்களைக் குழப்பும் நோக்கத்துடன் நேர்வழி அல்லாத வழிகளில் வழமையாக வாகனங்கள் எடுத்துச் செல்லப்படும்.[272]

349. 2009 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற தனது கைது குறித்து பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் எடுத்து விளக்கினார். அது இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் வழமையான கைதுகளைப் போலவே காணப்பட்டது: " நான் வீட்டில் எனது தாயாருடனும், சகோதரியுடனும் இருந்தேன். இரவு சுமார் 8 அல்லது 9 மணியளவில் வெளியில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. திருடர்கள் இருக்கின்றார்களா எனப் பார்ப்பதற்கு நான் வெளியில் சென்றேன். அப்போது நான் ரீ-சேட்டும், குறுங் காற்சட்டையையும் அணிந்திருந்தேன். காலில் சப்பாத்துக்கள் இருக்கவில்லை. வெளியில் மூன்று பேர் நின்றிருந்ததுடன், அவர்களில் இருவர் சாதாரண உடையில் இருந்தனர்.ஒருவர் பச்சை நிற இாணுவச் சீருடையில் இருந்தார். இருவர் கையில் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டிருந்ததுடன், அவர்களில் ஒருவர் எனது தாயார் மற்றும் சகோதரி ஆகியோர் மீது துப்பாக்கியை நீட்டினார். நான் கூக்குரலிட்டு, கதறத் தொடங்கினேன். சத்தம் போட வேண்டாம் என அந்த நபர் எனது தாயாரிடமும், சகோதரியிடமும் சொன்னதுடன், விசாரணை செய்யும் நோக்கத்துக்காக அவர்கள் என்னை எடுத்துச் செல்வதாகச் சொன்னார்கள். கைது செய்வதற்கான பிடிவிறாந்து தொடர்பாக எவரும் ஒன்றும் சொல்லவில்லை. இவையனைத்தும் வெகுவிரைவில் நிகழ்ந்தன. அவர்கள் என்னை வீட்டின்கேற்றுக்கு வெளியில் நிறுத்தியிருந்த வெள்ளைவான் ஒன்றில் ஏற்றினார்கள். அது ஒரு சாதாரண வெள்ளைவான் ஒரு இராணுவ வாகனம் அல்ல. அவர்கள் அந்த வாகனத்துக்குள் என்னை இழுத்துச் சென்று, பின்பக்கத்தில் தள்ளிவிட்டார்கள்.

[272] WS on file

அவர்கள் என்னை அடித்த போது நான் மூர்ச்சை ஆகினேன். எனக்கு நினைவு திரும்பிய போது தலையிலும், முதுகிலும் வலி இருப்பதை உணர்ந்தேன். என்னை ஒரு சிறிய அறையில் வைத்திருந்தார்கள். அறையின் மூலையில் ஒரு கழிப்பறை இருந்ததுடன், ஜன்னல்கள் எவையும் இருக்கவில்லை."[273]

350. பொதுவாக தன்னிச்சையான கைதுகள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சில காலம் குறித்த நபர் தொடர்பாகக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, அதனை அடுத்து, முன்னரே திட்டமிட்ட விதத்தில் அத்தகைய கைதுகள் மேற்கொள்ளப்பட்டன.[274] உதாரணமாக, தாம் கைது செய்யப்படுவதற்கு முன்னைய நாட்களில் வீதியில் சென்ற பொழுது ஆட்கள் தம்மைப் பின்தொடர்ந்ததாக அல்லது தமது வீடுகளுக்கு அல்லது பணியிடங்களுக்கு வெளியில் சந்தேகத்திற்கிடமான வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்ததைப் பார்த்ததாக பாதிக்கப்பட்ட பல நபர்கள் தெரிவித்திருந்தனர்.[275] பல சந்தர்ப்பங்களில் அவர்களுடைய கைதுக்கு சற்று முன்னர் அவர்களுடைய அடையாள ஆவணங்களை காட்டுமாறு கேட்கப்பட்டதுடன், குற்றச்செயலை நிகழ்த்தியதாகக் கூறப்படும் நபர்கள் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக தம் வசமிருந்த தகவல்களைக் கூறியிருந்தார்கள்.[276]பாதிக்கப்பட்ட ஒருவர் 2010 ஆம் ஆண்டில் வவுனியாவில் இடம்பெற்ற தன்னிச்சையான கைது சம்பவமொன்றுக்கு தாம் இரையாகிய விதத்தை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் எடுத்து விளக்கினார். அவர் அறிந்திராத நபர் ஒருவர் அவர் வேலை செய்யும் இடத்துக்கு வந்து, அவரைப் பற்றி விசாரித்து விட்டுச் சென்றிருக்கின்றார். அடுத்த நாள் பாதிக்கப்பட்ட நபர் அவருடைய அலுவலகத்திற்கு அருகிலிருந்த கடை ஒன்றில் இருந்துள்ளார். அப்பொழுது யாரோ ஒருவர் இவருடைய பெயரைச் சொல்லி அழைத்ததுடன், இரண்டாவது நபர் ஒரு றைபல் முனையினால் அவரது தலையில் அடித்திருக்கின்றார். அவர் ஒரு இருண்ட இடத்தில் கண் விழித்துப் பார்த்த பொழுது தான் நிர்வாணமாகவும், உடல் காயங்களுடன் இரத்தம் ஒழுகும் நிலையிலும் இருப்பதை உணர்ந்திருக்கிறார். ஏழு அல்லது எட்டு நபர்களைக் கொண்ட ஒரு குழு அவரிடம் விசாரணை செய்ததுடன், அவர்கள் இவரைத் தாக்கியிருக்கிறார்கள்.[277] தான் பாதுகாப்புப் படையினரால் ஆறு வார காலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பொழுது கடுமையான சித்திரவதைக்கும், வன்புணர்வுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்ததாக அவர் குற்றம் சாட்டுகின்றார்.

351. தன்னிச்சையான கைதுகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வன்முறை மிக்கவையாக இருந்து வந்திருப்பதுடன், தாம் தடுப்புக் காவலில் வைக்கப்படும் இடத்துக்கு வாகனத்திலெடுத்துச் செல்லப்படும் பொழுது தாக்கப்பட்டதாக பெருந்தொகையான பாதிக்கப்பட்ட நபர்கள் குறிப்பிட்டிருந்தனர். சாட்சிகளின் பிரகாரம், 2006 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில், 30 க்கும் மேற்பட்ட இலங்கை இராணுவத்தின் சிப்பாய்கள் இரவு 11.30 மணிக்கு ஒரு வீட்டுக்கு வந்துள்ளார்கள். பத்து சிப்பாய்கள் - அவர்களில் சிலர் இறுக்கமான தொப்பிகளை அணிந்திருந்தனர் - வீட்டுக்குள் நுழைந்தனர். அவர்கள் மிகவும் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதுடன், குடும்ப உறுப்பினர்களைத் தாக்கினார்கள். பாதிக்கப்பட்டவரின் மனைவி ஒரு கதிரையினால் தாக்கப்படடார். சிப்பாய்கள்

273 WS on file.

274 WS on file

275 WS on file

276 WS on file

277 WS on file

பாதிக்கப்பட்ட நபரின் கண்களைக் கட்டி, அவரது வாயில் துணியை திணித்து அவர் அலுறுவதை நிறுத்தினார்கள். அதன் பின்னர் வீதியில் அவரை இழுத்துச் சென்றுள்ளார்கள்.[278] இந்த அறிக்கை முடிவாக்கப்படும் சந்தர்ப்பம் வரையிலும் அவர் எங்கிருக்கின்றார் என்ற விடயம் தெரிய வரவில்லை.

**குற்றச் செயல்களை நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்பட்டவர்கள்**

352. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு சேகரித்திருக்கும் தகவல்களின் பிரகாரம், சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான கைதுகளை நிகழ்த்துவதில் இலங்கை பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகள் கூட்டாகச் செயற்பட்டிருப்பதுடன், உயரளவிலான ஒருங்கிணைப்பு[279] கூட்டுப் புலனாய்வு மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல் என்பவற்றுடன் கூடிய விதத்தில் கூட்டாகத் திட்டமிட்டு இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தடுத்து வைப்பு, விசாரணை, சித்திரவதை, விடுவித்தல் அல்லது சிறைக்கு மாற்றுல் என்பன இடம்பெற்ற காலப் பிரிவு முழுவதிலும் இக்கூட்டுச் செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்றுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், கைதுகளை மேற்கொண்ட பாதுகாப்புப் படையினர் பெரும்பாலான தருணங்களில் இலங்கை இராணுவம், பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களம் அல்லது குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் என்பவற்றின் உறுப்பினர்களாக இருந்து வந்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில் இலங்கை இராணுவத்தின் - குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் - ஆதரவுடன் இவை மேற்கொள்ளப்பட்டன. தகவல்களை வழங்குபவர்களுக்கூடாக திரட்டிக் கொண்டிருந்த தகவல்களை பாதுகாப்புப் படையினர்தம்வசம் வைத்திருந்தனர். எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் வழங்கிய தகவல்களும் இதில் அடங்கும். அவர்களில் ஒரு சிலர் தகவல் வழங்குபவர்களாக மாறுவதற்கு முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவார்கள். சித்திரவதை அல்லது சித்திரவதை தொடர்பான மிரட்டல் என்பவற்றுக்கூடாக அத்தகைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.

353. கருணா குழு, பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்பன ‘வெள்ளைவான்’ கைதுச் சம்பவங்களில் இணைந்து செயற்பட்டு வரும் விடயம் காலப் போக்கில் தெளிவாக தெரிய வந்திருந்தது.[280] கருணாகுழு தொடக்கத்தில் முழுவதும் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரவில்லை. ஆனால், காலப்போக்கில் பாதுகாப்புப் படைகளுடனான அதன் தொடர்புகள் அதிகரித்தளவில் வெளியில் தெரிய வந்தது. மேலும், அக்குழு தண்டனையிலிருந்து விலக்குரிமையை அனுபவித்து வந்ததுடன்,தனது சொந்தப் பொறுப்பில் அல்லது அரசாங்கப் படைகளின் சார்பில் நேரடியாக, சட்டவிரோதமான செயல்களை முன்னெடுக்கக்கூடியதாக இருந்து வந்தது.[281]

278 WS on file.

279 பார்க்கவும்: பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் நடத்திய நேர்காணல் Business Todayபத்திரிகை, ஏப்ரல் 2009, பயங்கரவாத எதிர்ப்பு புலன் விசாரணைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை திட்டமிடுவதற்கென நெருக்கமான ஒருங்கிணைப்பு இடம்பெற்று வந்ததாகவும், பாதுகாப்புச் செயலாளருடன் வாராந்த சந்திப்புக்கள் இடம்பெற்றதாகவும் அவர்கள் அந்த நேர்காணலில் கூறியிருந்தார்கள்.

280 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

281 WS on file

354. கருணாகுழு அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் முழுமையான நடமாட்ட சுதந்திரத்தைக் கொண்டிருந்ததுடன், சோதனைச் சாவடிகளுக்கூடாக சுதந்திரமாக தமது தளங்களுக்குச் சென்று வந்தனர். தமது தளங்களை அவர்கள் இராணுவ முகாம்களுக்கு அருகில் அமைத்துக் கொண்டிருந்தனர். கருணா குழு 2006 ஆம் ஆண்டளவில் வெலிகந்த இராணுவ முகாமிலிருந்து இலங்கை இராணுவம் மற்றும் இலங்கைக் கடற்படைப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து அல்லது அவர்களின் சார்பில் செயற்பட்டு வந்தது.'வெள்ளைவான்' கடத்தல்கள், கைதுகள் மற்றும் சட்டவிரோதமான கொலைகள் என்பவற்றை அது மேற்கொண்டு வந்தது.[282] கைதுகளை அடுத்து, அந்த வாகனங்கள் நிறுத்தப்படாது இராணுவ மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகளைத் தாண்டி, பல்வேறு அரச பாதுகாப்பு முகவரகங்களினால் நடத்தப்பட்டு வந்த தடுப்புக் காவல் நிலையங்களுக்குச் சென்றன. அவ்விதம் செல்லும் பொழுது சோதனைச் சாவடிகளில் அவை நிறுத்தப்படவில்லை.[283]

**இலங்கை இராணுவம்சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கைகைள மேற்கொண்ட போது இடம்பெற்ற சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான கைதுகள்**

355. இலங்கை இராணுவம்,குறிப்பாக கொழும்பு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் போன்ற பிரதேசங்களில் தமிழர்கள் பெருமளவுக்கு செறிந்து வாழ்ந்து வந்த இடங்களில் 'சுற்றி வளைத்து தேடுதல் நடத்தும்' நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டதுடன், அவற்றுக் கூடாக கைதுகளையும் மேற்கொண்டது. அத்தகைய கைதுகள் 2006 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளுக்கிடையிலும், மோதல் முடிவடைந்த பின்னர் தப்பிச் சென்றிருக்கக் கூடிய எல்ரீரீஈ உறுப்பினர்களை பாதுகாப்புப் படையினர் தொடர்ச்சியாக தேடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலும் பெருமளவுக்கு இடம்பெற்றிருந்தன.

356. இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் பொதுவாக "இலங்கை இராணுவத்தின் சுற்றி வளைப்புக்கள்" என அழைக்கப்பட்டன. வீடு வீடாக மேற்கொள்ளப்படும் தேடுதலுக்கு முன்னர் இராணுவத்தினர்கவச வாகனங்களில் வருவதுடன், சில சந்தர்ப்பங்களில் கறுப்பு கண்ணாடிகளைக் கொண்ட வான்களில் வந்து ஒரு கிராமத்தை சுற்றி வளைப்பார்கள். அங்கிருப்பவர்கள் வெளியில் செல்ல முடியாத விதத்தில் பாதைத் தடைகளை போடுவார்கள். பொதுவாக இந்தத் தேடுதல் நடவடிக்கை அருகிலிருக்கும் இலங்கை இராணுவ முகாம்களில் இருப்பவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும். 2008 ஆம் ஆண்டில் வவுனியாவில் இடம்பெற்ற மாதாந்த சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கை ஒன்று தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது. மனித உரிமைப் பாதுகாவலர்கள் இத்தகவலை வழங்கியுள்ளார்கள்.

357. "இலங்கை இராணுவத்தினரும், பொலிஸாரும் அதிகாலை 4 மணியளவில் கிராமங்களுக்குள் வந்து, அங்குள்ள மக்கள் அனைவரையும் ஒரு விளையாட்டு மைதானம் போன்ற பொது இடமொன்றில் கூடுமாறு கட்டளையிட்டார்கள். அதன் பின்னர் மக்கள் அவர்களுடைய வயதின் பிரகாரம் பிரிக்கப்பட்டார்கள் - 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், 10 வயதுக்குக் குறைந்தவர்கள், 10 – 18 வயதுப் பிரிவினர்கள் மற்றும் ஏனையவர்கள். 40 வயதுக்கு மேற்பட்டவர்களும், 10 வயதுக்குக் குறைந்தவர்களும் முதலில் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். 10 - 18 வயதுப் பிரிவினர் சோதனைக்குட்படுத்தப்பட்டார்கள். இறுதியில் ஏனையவர்கள் வழமையாக 18 – 25 வயதுப் பிரிவினர் சோதனை

282 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

283 WS on file

செய்யப்பட்டதுடன், சிலநேரங்களில் அவர்கள் கூட்டாக வீடியோப் படம் எடுக்கப்பட்டதுடன், தனித்தனியாக புகைப்படமும் எடுக்கப்பட்டனர். ஆண்களும் பெண்களும் புறம்பாக ஒன்று கூடியிருந்தனர். ஒருசில அடிகளுக்கப்பால் நிறுத்தப்பட்டிருக்கும் கவச வாகன டிறக் வண்டியை நோக்கி வரிசையாக நடக்குமாறு ஆண்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அந்த டிறக் வண்டி ஒரு நிறமூட்டப்பட்ட கண்ணாடி ஜன்னலைக் கொண்டிருப்பதுடன் அதற்கூடாக உட்பக்கத்தைப் பார்க்க முடியாது. இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் டிறக் வண்டியின் கூரையில் நின்று கொண்டிருப்பதுடன், கூரையிலிருக்கும் ஒரு திறந்த துவாரத்திற்கூடாக ட்றக் வண்டியின் கண்ணாடி ஜன்னலுக்கு முன்னால் நின்று கொண்டிருக்கும் நபரைப் பார்ப்பார். வரிசையாக நிறுத்தப்பட்டு,டிரக் வண்டியை நோக்கி நடந்து வருபவர்கள் எவரேனும் மேலும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமா என்பதனை பின்னர் அவர் சுட்டிக் காட்டுவார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிப்பாய்களுடன் இணைந்து, முகத்தை மறைத்துக் கொண்ட முகமூடியுடன் கூடிய நபர்கள் வருவார்கள்".

358. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட விபரங்களில் 2009 ஆம் ஆண்டில் ஆயுத மோதல் முடிவடைந்த பின்னர் இலங்கை இராணுவத்தினால் ஒரு ஒட்டுமொத்த கிராமமும் ஒரு நாள் முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டிருந்த சம்பவமும் அடங்குகின்றது. இராணுவ உத்தியோகத்தர்கள் வீடுவீடாகச் சென்று பிடிவிறாந்து இல்லாமல் எல்ரீரீஈ இயக்க அனுதாபிகள்என சந்தேகிக்கப்பட்ட நபர்களை கைது செய்தார்கள்.[284]அதற்கு சில வருடங்களுக்கு முன்னர் 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில், இராணுவ வாகனங்கள் வடக்கில் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்து, கிராமவாசிகள் அனைவரும் ஒரு பொதுக்கட்டடத்தில் ஒன்று கூட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர். எவரும் கிராமத்திலிருந்து வெளியேறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு சிப்பாய்கள் அக்கிராமத்தைச் சூழ நின்று கொண்டனர். எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என ஒருசில ஆண்களை இலங்கை இராணுவம் இனங்கண்டு கொண்டது. கிராமவாசிகளின் எதிர்ப்புக் காரணமாக அச்சந்தர்ப்பத்தில் அந்நபர்களை எடுத்துச் செல்லவில்லை. பின்னர் இராணுவ முகாமுக்கு வருமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது.[285] இளம் பெண்கள் அல்லது திருமணமாகாத பெண்கள் தமது சொந்தக் குடும்பத்திற்கு அல்லது மற்றொரு குடும்பத்துக்கு அருகில் நின்று கொள்வார்கள். குறிப்பாக, இலங்கை இராணுவத்தினரின் இரவு நேர விஜயத்தின் போது விசாரணையின் பின்னர் துன்புறுத்தப்படுதல் அல்லது பயமுறுத்தல் இடம்பெற முடியும் என்ற அச்சத்திலேயே அவர்கள் அவ்வாறு நின்று கொள்வார்கள்.

359. சில சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அடுத்த கிராமம் வரையில் அந்த வானை விரட்டிச் செல்வார்கள் என கிராமவாசிகள் கூறினார்கள். அவ்விதம் அவர்கள் அந்த வானை பின்தொடர்ந்து செல்லும் பொழுது தம்முடைய உறவினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என அவர்கள் கருதினார்கள்[286] அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கிராமவாசிகளிடம் உரையாடிய போது,நடு இரவில் சுற்றி வளைக்கப்படுவதன் காரணமாக அவர்கள் எதிர்கொள்ள நேரிடும் அச்சம் மற்றும் துன்பம் என்பவற்றை அம்மக்கள் எடுத்து விளக்கியிருந்தார்கள். அதேபோல, தமது

[284] WS on file

[285] WS on file

[286] WS on file

அன்புக்குரியவா்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அவா்கள் அனுபவிக்கும் துன்பத்தையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

**ஆயுதமோதலின் முடிவின் போது மேற்கொள்ளப்பட்ட பாரிய கைதுகள்/தடுத்து வைத்தல்கள்**

360. இந்த அறிக்கையின் அத்தியாயம் XVI மோதலின் இறுதி வாரங்களின் போது அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்த சுமாா் 300,000 பொதுமக்கள் வடிகட்டப்பட்ட செயன்முறை மற்றும் அவா்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலைமைகள் என்பன தொடா்பான விவரங்களை வழங்குகின்றது. இலங்கை தொடா்பான புலன்விசாரணைக் குழு, இப்பிரிவில் ஆயுத மோதலின் முடிவின் போது வடிகட்டும் இடங்களில் தெரிவு செய்யப்பட்டு, இராணுவம் மற்றும் பொலிஸாா் ஆகியோரினால் “புனா்வாழ்வுக்கெனவும்” மற்றும் /அல்லது எல்ரீரீஈ இயக்கத்துடன் அவர்கள் கொண்டிருந்த உண்மையான தொடா்புகள் காரணமாக அல்லது அந்த இயக்கத்துடன் தொடா்புகளைக் கொண்டிருந்ததாக சந்தேகிக்கப்பட்டதன் காரணமாக மேலும் விசாரணைக்கென தடுத்து வைக்கப்பட்டிருந்த “சரணடைந்தவர்கள்” (அவசரகால ஒழுங்குவிதிகளில் பயன்படுத்தப்படும் பதம்) தொடா்பாக கவனஞ் செலுத்துகிறது. ஒருசில நபா்கள் ‘‘வெள்ளைவான்’’ செயற்பாடுகளின் போது, உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்தவர்கள் வசித்து வந்த முகாம்களிலிருந்து கைது செய்யப்பட்டிருந்தனா்.

361. 2005 ஆம் ஆண்டின் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ்[287]‘‘சரணடைந்தவா்களை’’ 12 மாத காலப் பிரிவுக்கு ‘‘புனா்வாழ்வு நிலையங்களில்’’ தடுத்து வைத்திருக்க முடியும். “புனர்வாழ்வளிக்கும்” நோக்கங்களுக்கென அக்காலப் பிரிவை, குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படாமல் அல்லது வழக்குத் தொடுக்கப்படாமல் மேலும் இருவருட காலப் பிரிவுக்கு நீடிக்க முடியும். அரசாங்கத்தின் கூற்றின் பிரகாரம்,எல்ரீரீஈஇயக்கத்துடன் ‘‘பல்வேறு மட்டங்களிலான தொடா்புகளைக் கொண்டிருந்த’’ 11,696 நபா்களின் சட்டரீதியான அந்தஸ்து ஒருபோதும் தெளிவானதாக இருந்து வரவில்லை. 2010 செப்டம்பா் மாதமளவில் “சரணடைந்தவா்களில்” 6500 பேருக்கு குறுங்கால ரீதியில் புனா்வாழ்வளிக்கப்பட்டு வருவதாகவும் சுமாா் 3000 பேருக்கு நீண்ட காலரீதியில் புனா்வாழ்வளிக்கப்பட்டு வருவதாகவும், அரசாங்கம் தெரிவித்தது. “தீவிரமான எல்ரீரீஈ செயற்பாட்டாளா்கள் என இனங்காணப்பட்டிருந்த 1500 க்கும் குறைவானவா்களுக்கெதிராக மட்டுமே வழக்குத் தொடுக்கப்படும். அவா்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்கான நேரடிச் சாட்சியம் இருந்து வருகின்றது” என்றும் அரசாங்கம் கூறியது. அரசாங்கத்தின் ‘‘கொள்கை’’‘‘இழப்பீடு வழங்குவதிலும் பாா்க்க பழைய நிலையை மீள எடுத்து வருவதாகும்’’. குறுங்கால மற்றும் நீண்ட கால புனா்வாழ்வளிப்பு நடைமுறை, எத்தகைய சட்டரீதியான, கொள்கை ரீதியான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்ற விடயம் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை.

362. தடுத்து வைக்கப்பட்டிருந்தவா்கள் பெரும்பாலும் வட்டுவாகல் பாலம், முல்லைத்தீவு மற்றும் ஓமந்தை ஆகிய இடங்களில் பல்வேறு சோதனைச் சாவடிகளிலும், வடிகட்டும் இடங்களிலும் கைது செய்யப்பட்டிருந்தனா். மற்றவா்கள் ஏற்கனவே மனிக்பாம் முகாமில் உள்நாட்டில் இடம்பெயா்ந்தவா்களாகத் தம்மைப் பதிவு செய்து கொண்ட பின்னா் கைது செய்யப்பட்டிருந்தனா். இந்த அத்தியாயம் மோதலின் முடிவின் போது இடம்பெற்ற பாரிய அளவிலான தடுத்து வைத்தல்

[287] 2005 அவசர கால ஒழுங்குவிதி 22, 2006 இன் அவசர கால ஒழுங்குவிதி 1462/8 இனால் திருத்தப்பட்டது.

சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்திய போதிலும், முன்னரேயே அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களுக்குள் வந்திருந்தவர்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

363. ஆயுத மோதலின் முடிவின் போது தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் பல்வேறு வழிகளில் அடையாளம் காணப்பட்டிருந்தனர். எல்ரீரீஈ இயக்கத்துடன் ஒரு நாளாவது சம்பந்தப்பட்டிருந்தவர்கள் இருந்தால் அவர்கள் முன்வந்து அதனைக் கூறவேண்டும் என மீண்டும் மீண்டும் விடுக்கப்பட்ட அறிவித்தல்களை ஏற்று, சிலர் தாமாகவே முன்வந்து இலங்கைப் பாதுகாப்புப் படைகளிடம் உடனடியாக அல்லது விசாரணை மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் சரணடைந்திருந்தனர். குட்டையாக முடியை வெட்டியிருந்த இளம்பெண்கள் சிப்பாய்களினால் எல்ரீரீஈஇயக்கப் போராளிகள் என இலகுவில் அடையாளம் காணப்பட்டதுடன், அந்த நிலையில் அவர்கள் குறிப்பாக எளிதில் பாதிப்படையக் கூடியவர்களாக இருந்து வந்தனர். விசாரணைகளின் போது இளம் ஆண்கள் எச்சரிக்கப்பட்டதுடன், எல்ரீரீஈ இயக்கத்துடனான தமது தொடர்புகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் மிகக் கடுமையாக பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் எனக் கூறப்பட்டது.[288] சோதனை செய்யும் இடங்களில் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த எல்ரீரீஈஇயக்கத்தின் இராணுவப் போளிகளுக்கும், இராணுவ உறுப்பினர்கள் அல்லாதவர்களாக இருந்த ஏனையவர்களுக்கும் இடையில் இராணுவ அதிகாரிகள் பிரித்து வித்தியாசம் பாாக்கவில்லை. ‘‘சரணடைந்த சிறுவர்கள் முதலில் வயது வந்தவர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஆனால், இறுதியாக சிறுவர்களுக்கான விசேட புனர்வாழ்வு நிலையங்களுக்கு மாற்றப்பட்டார்கள் (சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் அவர்களை ஆயுதக் குழுக்களில் பயன்படுத்துதல் தொடர்பான அத்தியாயத்தைப் பார்க்கவும்).

364. முல்லைத்தீவிலும், ஓமந்தையிலும் வடிகட்டல் மேற்கொள்ளப்பட்ட தடுத்து வைக்கும் 3 பிரதேசங்களிலும் துணைப்படைக் குழுக்களின் உறுப்பினர்கள் அல்லது தகவல் வழங்குபவர்களாக மாறியிருக்கும் முன்னாள் எல்ரீரீஈ உறுப்பினர்கள் (ஒருசில உறுப்பினர்களின் முகங்கள் மூடப்பட்டிருந்தன), முன்னாள் எல்ரீரீஈஇயக்க இராணுவப் போராளிகள், எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் மற்றும் எல்ரீரீஈ இயக்கத்துக்குப் பல்வேறு உதவிகளை வழங்கியவர்கள் ஆகியோரை அடையாளம் காண்பதற்கு இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவினார்கள்[289] சரணடைந்திருந்த அல்லது மோதலுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்த ஒருசில முன்னாள் போராளிகள், இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் தமது முன்னாள் சகாக்களை அடையாளம் காட்டுவதற்கென தம்மை முல்லைத்தீவுக்கு அழைத்துச் சென்றதாக இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் உறுதிப்படுத்தினர்.[290][291]

365. மேலும், தகவல்களை வழங்குபவர்கள்,எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்களை அடையாளம் காணும் பொருட்டு இராணுவப்புலனாய்வு உத்தியோகத்தர்களுடன் அடிக்கடி மனிக்பாம் தொகுதியில் அமைந்திருந்த முகாம்களுக்குள் பிரவேசித்தனர்.[292] அவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்களுக்கு

288 WS on file

289 WS on file

290 WS on file

291 WS on file

292 WS on file

மத்தியில் நடந்து சென்று, ஆட்களை அடையாளம் காட்டுவார்கள். அதனையடுத்து அவ்விதம் அடையாளம் காட்டப்பட்ட நபர்கள் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்படுவார்கள். ஒருசிலர் அந்த இடம்பெயர்ந்த முகாம்களுக்குள்ளேயே இழுத்துச் செல்லப்பட்டதாகவும், அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.[293]அதே வேளையில், ஏனையவர்கள் இரவில் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.[294] முகாம்களுக்குள் வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான மோதல்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டும் நிலைமையை எடுத்து வந்திருந்ததாகவும், இடம்பெயர்ந்திருந்த ஒருசில நபர்கள் ஏனையவர்களை எல்ரீரீஈ உறுப்பினர்களென இராணுவத்தினரிடம் காட்டிக் கொடுத்ததாகவும் கூறப்படுகின்றது. அதன் பின்னர் அந்த நபர்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.[295] ஒருசில சந்தர்ப்பங்களில் தாம் எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து ஒருசில வருடங்களுக்கு முன்னர் வெளியேறியதாகவும், அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் கைது செய்யப்படவில்லை எனவும், ஆனால், மனிக்பாம் முகாமுக்கு அவர்கள் மாற்றப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்றும் ஒரு சிலர் ஓமந்தையில் இலங்கை இராணுவத்திடம் தெரிவித்தார்கள்.

366. முன்னைய அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்பட்டதைப் போல, சரணடைந்தவர்களில் ஒரு சிலருக்கு நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது எனக் கூறப்படுகின்றது. காணாமல் போனவர்கள் தொடர்பாக அவர்களுடைய உறவினர்கள் இன்னமும் உண்மையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் இராணுவ முகாம்களுக்குள் இருந்த தடுப்புக் காவல் நிலையங்களுக்கும், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்கள். அந்த இடங்களில் அவர்கள் வெளி உலகுடன் தொடர்புகொள்ள முடியாத நிலையில் வைக்கப்பட்டதுடன், சில சந்தர்ப்பங்களில் மாதக்கணக்கில் அவ்விதம் வைக்கப்பட்டிருந்தனர். இலஞ்சத் தொகை ஒன்றைச் செலுத்துவதன் மூலம் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் தெரிய வரும் வரையில் அல்லது அவர்கள் விடுவிக்கப்படும் வரையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவ்விதம் வெளி உலகுடன் தொடர்பில்லாத நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். சித்திரவதை, பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான அத்தியாயங்கள் IX மற்றும் X என்பன பெருந்தொகையான தடுப்புக்காவல் கைதிகள் நடத்தப்பட்ட விதம் குறித்து விளக்குகின்றன.

367. பெரும்பாலான சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் ஆட்களை விடுவித்த பின்னர், இலங்கை இராணுவ முகாம்களுக்கு அல்லது பொலிஸ் நிலையங்களுக்கு அவர்கள் அறிக்கையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தனர். உதாரணமாக, 2010 ஆம் ஆண்டில் பெண்மணி ஒருவருக்கு இலங்கை இராணுவத் தளபதி ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. கிளிநொச்சியில் அமைந்திருக்கும் இராணுவமுகாம் ஒன்றுக்கு வருமாறு அவர் அப்பெண்மணியைக் கேட்டுக் கொண்டார். அங்கு அப்பெண்மணி விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன், சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.[296] ஏனைய பல சம்பவங்களில் தம்மைத் தடுத்து வைப்பதற்கான சட்ட அடிப்படை எதுவும் இல்லாத சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட நபர்கள் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர் அல்லது அவர்கள் அடிக்கடி அங்கு ஆஜராக வேண்டும்

[293] WS on file

[294] WS on file

[295] WS on file

[296] WS on file

என்ற நிபந்தனையின் கீழ் புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர் - சாதாரணமாக வாரம் இருமுறை மாதாந்த அடிப்படையில் (பிரதேச தளபதியின் முடிவுக்கேற்ப) – அவர்கள் ஒரு பொலிஸ் அல்லது இராணுவத் தளத்தில் ஆஜராக வேண்டும். அந்த இடங்களில் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மீளக் கைது செய்யப்பட்டதுடன், சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தனர் மற்றும் / அல்லது பாலியல் வன்முறையை எதிர்கொண்டிருந்தனர்.[297]

### தடுத்துவைக்கப்பட்டிருந்த இடங்கள்

368. இலங்கை தொடர்பான, புலன்விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்களின் பிரகாரம்,"வெள்ளைவான்" கைதுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகால ஒழுங்குவிதிகள் என்பவற்றின் கீழ் இலங்கை பாதுகாப்புப் படைகளினால் கைது செய்யப்பட்டவர்கள் ஆகியோர் பல்வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இந்த இடங்களில் ஒருசில இடங்கள் உத்தியோகபூர்வமான வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்ட தடுத்து வைக்கும் இடங்களாக இருந்து வந்தன. சிறைச்சாலைகளை உதாரணமாகக் கூறமுடியும். அதேவேளையில் ஏனையவை அத்தகைய இடங்களாக இருந்து வரவில்லை.

369. கொழும்பில் பெருந்தொகையான தமிழர்கள் வெலிக்கடை (மகசின்) சிறைச்சாலை,[298] நீர்கொழும்புச் சிறைச்சாலை என்பவற்றிலும், வாழைத்தோட்டம் மற்றும் புதுக்கடை ஆகிய பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கிய விதத்தில் நகரின் பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் (சில சந்தர்ப்பங்களில் "6 ஆவது மாடி" என அழைக்கப்படும்) கொழும்பில் அமைந்திருக்கும் பயங்கரவாத புலனாய்வு நிலையத்திலும், (4 ஆவது மாடி என அழைக்கப்படும்) கொழும்பில் அமைந்திருக்கும் குற்றப்புலனாய்வுத் தலைமையகத்திலும் வைக்கப்பட்டிருந்தனர். கொழும்பின் தெற்கில் களுத்துறை சிறைச்சாலையும், காலியில் அமைந்திருக்கும் பூசா தடுப்பு முகாமும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அல்லது அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை தடுத்து வைக்கும் இடங்களாக பயன்படுத்தப்பட்டு வந்தன.

370. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட நபர்கள் அச்செழு, அச்சுவேலி, கச்சேரி, கொடிகாமம், தட்டாதெரு மற்றும் ஊரெழு ஆகிய இடங்களையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான இலங்கை இராணுவத் தளங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். தாம் கடற்படைத் தளங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக ஒருசிலர் சொன்னார்கள். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒருசிலர் இன்னமும் திருகோணமலையில் அமைந்திருக்கும் கடற்படையின் இரகசியத் தடுப்பு நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருப்பதாக 2015 ஆம் ஆண்டில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன – எனினும் இதனை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆனால், இது தொடர்பாக அவசர புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

---

297 WS on file.

298 விளக்கமறியல் நிலையமொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டவர்கள் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட தடுப்புக் காவல் கைதிகளாக இருந்து வந்ததுடன், அந்த நிலையில் அவர்கள் நீதிமன்ற மேற்பார்வையுடன் உத்தியோகபூர்வமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

371. வவுனியாவில் அமைந்திருந்த வன்னிப் பிரதேசத்துக்கான பாதுகாப்புப் படைகளின் தலைமையகமான ஜோசப் முகாம் அச்சந்தர்ப்பத்தில் மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரியவின் கட்டளைத் தலைமையின் கீழ் இருந்து வந்தது. அது தடுப்புக் காவல் கைதிகள் விசாரணைக்கென எடுத்துச் செல்லப்பட்ட இலங்கை இராணுவத்தின் மிக முக்கியமான முகாம்களில் ஒன்றாக இருந்து வந்தது (அவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்). அக் காலகட்டத்தில் அந்த முகாமில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு, அதேபோல குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களம் என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் பெரும் எண்ணிக்கையில் இருந்து வந்தனர்.

372. மோதலின் முடிவின் போது எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டிருந்த பெருந்தொகையான நபர்கள் பெரும்பாலும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ''பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள்'' பலவற்றில் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். மேலும், திருகோணமலை (கண்டக்கு இராணுவப் பண்ணை) மற்றும் மட்டக்களப்பு (திருகோணமடு விமானப் படைப் பண்ணை) என்பவற்றுக்கும் அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலவரங்கள் மாறுபட்டதாக இருந்து வந்துள்ளன எனக் கூறப்படுகின்றது. ஆனால், இந்த இடங்களில் பெரும்பாலானவை பெருமளவுக்கு தடுப்புக் காவல் நிலையங்களைப் போல இருந்து வந்தன என்பது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன. அந்த இடங்களில் அநேகமாக ஒருசில புனர்வாழ்வு நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன அல்லது அத்தகைய நடவடிக்கைகள் எவையும் இருந்து வரவில்லை. பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைத்திருப்பது என்பது,''சரணடைந்தவர்கள்'' பெரும்பாலானவர்களைப் பொறுத்தவரையில் நிர்வாகத் தடுப்புக் காவலுக்கு இணையானதாகவே இருந்து வந்தது. பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் என்பவற்றில் காணப்பட்ட நிலவரங்கள் அல்லது அவற்றின் நடவடிக்கைகள் என்பன குறித்து அந்த இடங்களில் வைக்கப்பட்டிருந்த தடுப்புக்காவல் கைதிகள் முன்வைத்த விபரங்களை மீளாய்வு செய்யும் சந்தர்ப்பத்தைத் தவிர, புலன் விசாரணை செய்வதற்கான வாய்ப்பு இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு கிடைக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு இவ்விதம் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான இடங்களில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை என்பன நிகழ்த்தப்பட்டன என்பது குறித்த குற்றச்சாட்டுக்கள் கிடைத்துள்ளன. ''சரணடைந்த'' ஏனைய பலர் இராணுவ முகாம்கள், உத்தியோகபூர்வமான தடுப்புக் காவல் நிலையங்கள் அல்லது பொலீஸ் நிலையங்கள் என்பவற்றுக்குள் இருந்து வந்த இரகசிய முகாம்கள் அல்லது தடுப்புக் காவல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

373. மோதலின் முடிவின் போது தற்காலிகத் தடுப்புக் காவல் நிலையங்களாக மாற்றப்பட்ட இடங்களில் பாடசாலைகளும் இருந்து வந்தன. 2009 மே மாதத்தில் ஓமந்தையில் தகவல் வழங்கும் ஒருவரினால் அடையாளம் காணப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்ட பெண்மணி ஒருவர், முதலில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த விதத்தை எடுத்து விளக்கியிருந்தார். இந்தப் புனர்வாழ்வு நிலையம் முன்னர் ஒரு தொழில்நுட்பப் பள்ளியாக இருந்து வந்ததுடன், இங்கு அமைந்திருந்த ஒரு பெரிய மண்டபத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் - பெரும்பாலும் முன்னைய எல்ரீரீஈஇயக்கப் போராளிகள் - இலங்கை இராணுவத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அந்த மண்டபத்தில் அங்கிருந்தவர்களுக்கு சாய்ந்து கொள்வதற்குக் கூட இடவசதி

இருந்து வரவில்லை. பின்னர் அப்பெண்மணி பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அது முன்னர் ஒரு விவசாயக் கல்லூரியாக இருந்து வந்ததுடன், சனநெரிசல் மிகுந்த ஒரு இடமாகக் காணப்பட்டது. அங்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் கூடாரங்களில் படுத்துறங்கினார்கள். அந்த இடத்தில் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு என்பவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பிரசன்னமாகியிருந்ததாகவும், விசாரணைகளை நடத்தியதாகவும் கூறப்படுகின்றது.[299] 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்கும் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் அவர் விடுவிக்கப்படுவதற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது நான்கு தடவைகள் அவர் வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததாக அப்பெண்மணி கூறினார்.[300]

374. பாதிக்கப்பட்ட இந்த நபரைப் போலவே, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் அடிக்கடி பல்வேறு தடுப்பு நிலையங்கள் மற்றும் பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் என்பவற்றுக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.[301] இந்தத் தொடர் இடமாற்றங்கள்[302] பாதுகாப்புப் படையின் பல்வேறு பிரிவுகளுக்குமிடையில் நிலவி வந்த நெருக்கமான ஒத்துழைப்பை எடுத்துக் காட்டுபவையாக இருந்து வருகின்றன. இந்த வழக்கம் தடுத்து வைத்திருப்பவர்களை கண்டுபிடிப்பதற்கு முயற்சித்து வரும் உறவினர்களுக்கு ஏற்படுத்திய சிரமங்களை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும்ஏற்றுக் கொண்டிருந்தது. ‘‘ஆணைக்குழு முன்னிலையில் எழுப்பப்பட்டிருந்த மிக முக்கியமான கரிசனைகளில் ஒன்று, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தமது குடும்ப உறுப்பினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதனை பெரும்பாலான மக்கள் அறிந்திருக்கவில்லை என்ற விடயமாகும். அவ்விதம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் தொடர்ச்சியாக ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமிற்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்தமையே இதற்கான காரணமாகும்’’ என அது குறிப்பிட்டிருந்தது. உதாரணமாக, 2009 மே மாதத்தில் வன்னிக்குள் பிரவேசித்த பொழுது கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் முதலில் இரண்டு தினங்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் 5 நாட்கள் பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டதாகவும், அதனையடுத்து கொழும்பிலிருந்த பயங்கரவாத புலன்விசாரணைப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், பின்னர் பூசாவுக்குத் திருப்பிக் கொண்டு வரப்பட்டதாகவும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் கூறினார். 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அவர் கொழும்பு வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலைக்கும் மாற்றப்பட்டார். சுமார் 4 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்படும் வரையில் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.[303] எவ்வாறிருப்பினும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த

299 WS on file

300 WS on file

301 அவசர கால ஒழுங்கு விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவரை தடுப்புக் காவல் கட்டளை ஒன்றின் பேரில் முதலில் 18 மாதங்களுக்கு வைத்திருக்க முடியும். பின்னர் இரண்டு வருட காலப் பிரிவுக்கு அவர் பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையம் ஒன்றுக்கு அனுப்பப்படுவார். அதனை அடுத்து, மற்றொரு தடுப்புக் காவல் கட்டளையின் அடிப்படையில் மீண்டும் அவர் தடுப்புக் காவல் நிலையமொன்றுக்கு எடுத்துச் செல்லப்படுவார்.

302 மோதல் முடிவடைவதற்கு முந்தைய வருடங்களிலும் அடிக்கடி பெருந்தொகையான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

303 WS on file

-

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியின் போது அல்லது முழுக்காலப் பகுதியின் போதும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் தாம் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற விடயத்தை அறியாதவர்களாக இருந்து வந்தார்கள்.

375. தமது உறவினர்கள் எங்கு வைக்கப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தை இறுதியில் கண்டறிந்து கொண்ட குடும்பங்களுக்கு அவ்விதம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் இடமாற்றம் செய்யப்படும் விடயம் அறிவிக்கப்படமாட்டாது. அவர்கள் ஒரு இடத்துக்குச் சென்று பார்க்கும் பொழுது மட்டுமே சம்பந்தப்பட்ட நபர் வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார் என்ற விடயத்தைத் தெரிந்து கொள்வார்கள்.

376. மேலே சுட்டிக் காட்டப்பட்டதைப் போல, அரசாங்கம் 2013 ஜனவரி 21 ஆம் திகதியிட்டு மனித உரிமைகள் கமிட்டியிடம் சமா்ப்பித்த அதன் ஐந்தாவது பருவகால அறிக்கையில் ‘‘தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து நபர்களும் தொடர்பான ஒரு தரவுத் தளம் உருவாக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ளது’’ எனக் கூறியிருந்தது. எவ்வாறிருப்பினும், அத்தகைய ஒரு தரவுத் தளம் இருந்து வந்தது என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று தொடர்பாக 2011 இல் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு ஒன்றின் பிரகாரம், தமது சுதந்திரம் பறிக்கப்பட்டவர்களாக இருந்து வரும் நபர்கள் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும்நெருங்கிய உறவினர்கள் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களை அணுக முடியும் என ஓர் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் அல்லது காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்கான ஓர் உத்தியோகபூர்வ பொறிமுறையாக இது இருந்து வருகின்றது என்ற விடயம் அந்த அறிவித்தலில் எந்த இடத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**தடுப்புக் காவலில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடங்களை அணுகமுடியாத நிலை**

377. பெருந்தொகையான தடுப்புக் காவல் நிலையங்களைப் பொறுத்தவரையில் சுயாதீனமான கண்காணிப்பாளர்கள் - குறிப்பாக இராணுவ முகாம்கள் போன்ற உத்தியோகபூர்வமற்ற தடுப்புக் காவல் நிலையங்களை- அணுகுவதற்கு சிறிதளவு வசதியே இருந்து வந்தது அல்லது அத்தகைய வசதி அறவே இருந்து வரவில்லை. சட்டத்தரணிகள் கூட இவ்விதம் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல இடங்களை அணுக முடியாதவர்களாக இருந்து வந்தனர். குறிப்பாக, தடுத்து வைத்திருக்கும் விடயம் ஏற்றுக்கொள்ளப்படாதிருக்கும் நிலையில் இந்நிலைமை காணப்பட்டது.

378. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான சட்டம், அந்த ஆணைக்குழு ‘‘ஒரு நீதிமன்றக் கட்டளையின் மூலம் அல்லது வேறு விதத்தின் மூலம், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை ஒழுங்கான முறையில் பரிசோதனை செய்வதன் மூலமும், தடுப்புக் காவலில் அவர்களுடைய நிலைமைகளை விருத்தி செய்வதற்குத் தேவையாக இருந்து வரும் பரிந்துரைகளை முன்வைப்பதன் மூலமும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் நலனோம்பலை கண்காணிக்க முடியும்’’ எனத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது. 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஜனாதிபதியின் பணிப்புரைகள் மூலம்,கைதுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும் என்றும், மனித உரிமைகள் ஆணைக்குழு அந்த இடங்களை அணுகுவதற்கு இடமளிக்க வேண்டும் என்றும் பாதுகாப்புப் படைகளுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தன. அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தடுத்து வைத்தல்

சம்பவங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஒழுங்கான அடிப்படையில் அறிவிக்கப்பட்டது குறித்தோ அல்லது உதாரணமாக இராணுவ முகாம்களில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களை மனித உரிமை ஆணைக்குழு அணுக முடிந்தது என்பது குறித்தோ இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு எத்தகைய தகவல்களும் கிடைத்திருக்கவில்லை.

**குற்றச்சாட்டுக்களோ வழக்கு விசாரணைகளோ இல்லாமல் நீண்டகாலம் தடுத்து வைத்தல்**

379. முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் தாம் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பிரிவுகளை குறிப்பிட்டிருந்தார்கள். அவை ஒருசில நாட்கள் தொடக்கம் மாதங்கள் வரையிலும், பல மாதங்கள் வரையிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டதாகவும் இருந்து வந்தன. அவசரகால ஒழுங்குவிதிகள், இரண்டு வருடங்கள் தொடர்பாகவே ஒரு நபரைத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்குகின்றன. ஆகவே, இது சர்வதேச தரநியமங்களை மீறும் ஒரு செயலாக உள்ளது. அரசாங்கத்தின் தகவல்களின் பிரகாரம், 2010 செப்டம்பர் மாதமளவில் 7382 பேர் இன்னமும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அது வரையில் 16 மாத காலம் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.[304]தொடக்கத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ''சரணடைந்தவர்கள்'' சுமார் 12,000 பேரில் சுமார் 5000 பேர் ''புனர்வாழ்வு நிலையங்களில்'' இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக 2011 ஜீலை மாதமளவில் கூறப்பட்டது. அவர்கள் ஒரு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படாமல் அல்லது நீதித்துறை அதிகாரத்தை செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் வேறு எவரேனும் அதிகாரி ஒருவரின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படாமல் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஒருசிலர் இன்றும் கூட அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும்,எத்தனை பேர் அவ்விதம் தடுத்து வைக்கப்ட்டுள்ளார்கள், அவர்கள் யார் அல்லது அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் போன்ற விடயங்களைக் காட்டும் உத்தியோகபூர்வமான பட்டியல் கிடைக்கவில்லை.

380. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் முன்வைத்த அதன் இடைக்காலப் பரிந்துரைகளில் ''குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் ஆட்கள் நீண்ட காலப்பிரிவின் போது தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பான தொடர்ச்சியான முறைப்பாடுகள்'' குறித்து குறிப்பிட்டிருந்ததுடன்,''அத்தகைய சம்பவங்களை தனித்தனியாகப் பரிசீலனை செய்வதற்கும், ஒவ்வொரு சம்பவம் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கும்'' ஒரு விசேட பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்திருந்தது. மேலும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்களைக் காட்டும் ஒரு பட்டியல் வெளியிடப்பட வேண்டும் என்றும் ''விடுவிக்கப்பட்டவர்களுக்கு" அது தொடர்பான ஒரு சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது. அவ்வாறு ஒரு சான்றிதழ் வழங்கப்படும் பட்சத்தில், புதிய சாட்சிகள் இல்லாதிருக்கும் நிலையில், அவர்களை மீண்டும் கைது செய்ய முடியாதிருக்கும் சம்பவங்கள் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு விசேட பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்ற இந்த ஆணைக்குழுவின் பரிந்துரை அச்சந்தர்ப்பத்தில் அமுல் செய்யப்படவில்லை.

[304] ராஜதந்திர வட்டாரங்கள் - கோப்பு

381. அந்த ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் கைதுகள் மற்றும் தடுத்து வைப்புக்கள் என்பன தொடர்பான பாதுகாப்புகளை வழங்குவதற்கென வலுவான பரிந்துரைகளின் தொடர் ஒன்றை வெளியிட்டிருந்தது. இது தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் ஒரு பட்டியலைக் கொண்டிருக்கும் மத்திய மயப்படுத்தப்பட்டிருக்கும் விரிவான ‘‘தரவுத் தளம்’’ ஒன்றை உருவாக்குவதனையும் உள்ளடக்கியிருந்தது. ‘‘அத்தரவுத்தளம் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். அதில் பெயர்கள், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம், அதேபோல இடமாற்றங்கள் தொடர்பான பதிவுகள் என்பன உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அந்த நிலையில், குடும்பங்கள் அத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.”மேலும்,‘‘பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பவற்றின் கீழ் எந்த ஒரு ஒழுங்குவிதியின் கீழும் கைது செய்யப்படும் நபர்களின் தடுப்புக்காவல் மற்றும் கைது என்பவற்றைக் கண்காணித்து, பரிசீலனை செய்வதற்கென’’ சுயாதீனமான ஆலோசனைக் கமிட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனவும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது (பந்திகள் 9.53 – 9.71).

382. மிக முக்கியமாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: ‘‘ஒரு கைது, தடுத்து வைத்தல், இடமாற்றம் என்பவற்றை பதிவு செய்வதற்கு அல்லது கடத்தல் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு பொலீஸார் மறுப்புத் தெரிவிப்பதும், அத்தகைய சம்பவங்கள் குறித்து புலன்விசாரணைகளை நடத்தத் தவறுவதும் ஒரு குற்றவியல் குற்றமாக இருந்து வருவதுடன், அத்தகைய தவறுகளை இழைக்கும் நபர்களுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.” (பந்தி 9.55). ஆணைக்குழுவின் இந்தப் பரிந்துரையும் அமுல் செய்யப்பட்டிருக்கவில்லை.

383. மேலே குறிப்பிடப்பட்டவாறு ‘‘சரணடைந்தவர்களை’’/தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை இறுதியில் தடுப்புக் காவலிலிருந்து விடுவிப்பதற்கான அளவுகோல் தெளிவானதாக இருந்து வரவில்லை. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் 16 சம்பவங்கள் தொடர்பாகவும் மற்றும் ஏனையவர்களினால் அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தடுத்து வைக்கப்பட்டிருப்பவரின் குடும்ப உறுப்பினர் ஒருவர் இடைத்தரகர்களுக்கூடாக பெருந்தொகையான இலஞ்சத் தொகை ஒன்றைச் செலுத்துவதன் மூலமே குறிப்பிட்ட நபர்களைவிடுவித்துக் கொண்டிருந்தார்கள். ஈபிடிபி கட்சியினர் பொதுவாக அத்தகைய இடைநடுவர்களில் ஒரு தரப்பாக இருந்து வந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.[305] தடுத்து வைத்திருப்பவர்களை விடுவிப்பதற்கு பணத்தொகைகளை ஏற்றுக்கொள்வது பரவலாக இடம்பெற்றிருப்பது போல் தெரிகிறது. இது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றார்கள் என அதிகாரிகள் கூறி வருவதற்கு நேர்மாறானதாக இருந்து வருகின்றது.

384. விடுவிக்கப்படும் பொழுது, தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தடுப்புக் காவலில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டது தொடர்பான சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் ஒழுங்கான அடிப்படையில் பாதுகாப்புப் படைகளிடம் போய் அறிக்கையிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட முடியும். மேலும், அவர்கள் தொடர்ச்சியான கண்காணிப்பு, துன்புறுத்தல் மற்றும் மீளக் கைது செய்யப்படுதல் குறித்த அச்சம்

305 WS on file

என்பவற்றையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.[306] இலங்கை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்து 2010 ஆம் ஆண்டில் தான் விடுவிக்கப்பட்ட பின்னர் தொடர்ந்தும் அச்சத்தில் வாழ்ந்து வந்ததாக பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தார். ஏனெனில், அவருக்கு அவரது விடுதலை தொடர்பான ஆவணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் 2011 நவம்பர் மாதம் வரையில் வாராந்த அடிப்படையில குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வரவேண்டும் என அவருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இறுதியில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டதுடன், மிகக் கடுமையாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.[307]

385. 2015 ஜனவரி மாதத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்வதாக வாக்குறுதி அளித்திருந்தது. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் முழுமையான பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொள்வதில் அரசாங்கம் சவால்களை எதிர்கொண்டு வருவது போல் தெரிவதுடன், இது தொடர்பாக அது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் மிக நெருக்கமாகப் பணியாற்றி வருவதாக கூறியிருந்தது.

## VIII. பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள்

### அறிமுகம்/பின்புலம்

386. பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான நிலைமைகள், ஆயுத மோதலின் அனைத்துக் கட்டங்களின் போதும், அதேபோல மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) முன்னைய கிளர்ச்சிகள் இடம்பெற்ற கால கட்டங்களின் போதும் பல தசாப்த காலமாக பல்லாயிரக்கணக்கான இலங்கை வாழ் மக்களை பாதித்துள்ளன. அச்சம்பவங்கள் அவர்களுடைய குடும்பங்கள் மீதும், அதேபோல பரந்த சமுதாயத்தின் போதும் அழிவுகரமான தாக்கங்களை எடுத்து வந்திருந்தன.

387. இலங்கையில் இடம்பெற்ற பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல் சம்பவங்களின் அளவு, நீண்ட காலமாக விதிவிலக்கானதாக இருந்து வந்துள்ளது. பலவந்தமாக அல்லது சுயவிருப்பின்றி காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான செயல்குழு (WGEID) அதன் அறிக்கையில், உதாரணமாக கடந்த பல வருடங்களின் போது ஆட்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டமை தொடர்பான மொத்தம் 12536 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது எனக்குறிப்பிட்டிருந்தது. இந்த செயல்குழு உலகில் செயற்பட்டு வரும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இது பட்டியலிடப்பட்டிருக்கும் இரண்டாவது ஆகக் கூடிய எண்ணிக்கையிலான காணாமல் போதல் சம்பவங்களாக இருந்து வருகின்றன.[308]சார்புரீதியில் இலங்கையின் சிறு எண்ணிக்கையிலான குடித்தொகையுடன் ஒப்பிடும் பொழுது, இது பெருமளவுக்கு முக்கியத்துவம்

[306] ராஜதந்திர வட்டாரங்கள் - கோப்பு

[307] WS on file

[308] பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான செயற் குழுவின் அறிக்கை, ஆகஸ்ட் 4,2014A/HRC/27/49

வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.[309] அது 2006 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திற்கு “காணாமல்போகும்” சம்பவங்கள் தொடர்பான அவசர வேண்டுகோள்களை, உலகில் எந்த ஒரு நாட்டிலும் பார்க்க அதிக எண்ணிக்கையில் இலங்கையிடம் முன்வைத்திருந்ததாக 2007 ஆம் ஆண்டில் அந்த செயற் குழு குறிப்பிட்டிருந்தது.[310]

388. இலங்கையில் ஆட்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டமை தொடர்பான சம்பவங்கள் நிகழ்வதற்கு வசதி செய்து கொடுத்திருந்த பல காரணிகள் முன்னைய அத்தியாயத்தில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டிருந்தன. இந்தப் பிரிவு இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப்பிரிவின் போது தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த பலவந்தமான காணாமல் போதல் சம்பவங்களை கவனத்தில் எடுக்கின்றது. ஒருசில சந்தர்ப்பங்களில் துணைப்படைக் குழுக்களுடன்கூட்டாக இணைந்து முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்புப் படை நடவடிக்கைகளின் போர்வையில் நிகழ்த்தப்பட்ட இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களையும் இது உள்ளடக்குகின்றது. மேலும், மோதலின் இறுதியில் இராணுவத்தினரிடம் தம்மை எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்களாக அல்லது அதன் கூட்டாளிகளாக அடையாளம் காட்டிய பின்னர் காணாமல் போன பெருந்தொகையான நபர்களின் சம்பவங்களையும் அது ஆவணப்படுத்துகின்றது. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரத்தின் காலம் முடிவடைந்த பின்னரும் கூட, பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான புதிய சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களும் கிடைத்திருந்தன.

389. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு அதன் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப்பிரிவுக்கு முந்தைய காலப்பிரிவின் போது காணாமல் போயிருந்த நபர்கள் தொடர்பான தனிப்பட்ட சம்பவங்கள் குறித்த ஒரு மீளாய்வை மேற்கொள்ளவில்லை. எவ்வாறிருப்பினும், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல் தொடர்ச்சியான ஒரு அத்துமீறலாக இருந்து வரும் காரணத்தினால், காணாமல் போயிருக்கும் தமது அன்புக்குரியவர்கள் தொடர்பாக தொடர்ந்து உண்மையையும், நீதியையும் தேடிக் கொண்டிருக்கும் குடும்பங்களிலிருந்து கிடைத்த தகவல்களை இக்குழு மீளாய்வு செய்திருந்தது. குறிப்பாக, இந்தப் பிரிவு தமது அன்புக்குரியவர்கள் எங்கிருக்கின்றார்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தீராத ஆவலுடன் இருந்து வரும் குடும்பங்கள் தொடர்பாகவும் எடுத்துக் காட்டுகின்றது.

390. மிக முக்கியமாக இந்த அத்தியாயம் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களில் பாதிக்கப்பட்ட நபர்களின் கோரிக்கைகளுக்கு – அச் சம்பவங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திர காலப்பிரிவுக்குள் இடம்பெற்றவையாக இருந்து வந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி – ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் வழங்கிய எதிர்வினைகளையும் பரிசீலனை செய்கின்றது. ஆயிரக்கணக்கான நபர்கள் காணாமல் போயிருப்பதுடன்,அச்சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கென பெருந்தொகையான தேசிய ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. எனினும், அவர்களில் ஒரு சிறு தொகையினர் தொடர்பான விபரங்கள் மட்டுமே முழுமையாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அதேபோல இக்குற்றச் செயல்களை இழைத்த நபர்களில் ஒருசிலர் மட்டுமே அவற்றுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளனர். காணாமல்

309 Op.Cit. p31

310 A/HRC/10/9, para 366.

போன நபர்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கென ஸ்தாபிக்கப்பட்டிருந்த பெரும்பாலான பொறிமுறைகள், காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதனைத் தெளிவுபடுத்துவதற்கோ அல்லது அவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வந்த நபர்களை சட்டத்தின் முன்னால் கொண்டு வருவதற்கோ பயனுள்ள எதிர்வினைகள் எவற்றையும் வழங்கவில்லை.

391. 'தலைமறைவாகியிருக்கும்' நபர்கள் தொடர்பான அனைத்துச் சம்பவங்களும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டோர் என்ற வரைவிலக்கணத்துக்குள் வரவில்லை. உதாரணமாக, போர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது "போரின் போது காணாமல் போயிருக்கும்" பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இந்த வரைவிலக்கணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், அத்தகைய நபர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதைக் கண்டறிந்து கொள்வதற்கும், காணாமல் போயிருப்பவர்களை கண்டுபிடிப்பதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் குறித்து குடும்பங்களுக்குத் தெரிவிப்பதற்கும், பொருத்தமானவிடத்து, அவர்கள் தமது குடும்பங்களுடன் மீள இணைவதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் அல்லது மரணமடைந்திருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் அந் நபரின் சடலத்தை ஒப்படைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதற்குமான கடமையை அரசாங்கம் கொண்டுள்ளது.

392. பலவந்தமான ஆட்சேர்ப்புப் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்களையும் உள்ளடக்கிய விதத்தில், எல்ரீரீஈ இயக்கம் மேற்கொண்ட கடத்தல் சம்பவங்கள் அத்தியாயம் XI இல் விளக்கப்பட்டுள்ளன.

393. பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல் சம்பவங்களின் சிக்கலான இயல்பு, பன்முகப்பட்ட கூறுகளை எடுத்துக் காட்ட வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. அவை சுதந்திரம் பறிக்கப்படுதல், அரசாங்க அதிகாரிகளின் தொடர்பு, சுதந்திரம் பறிக்கப்பட்ட விடயத்தை ஏற்றுக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்தல் அல்லது குறிப்பிட்ட நபருக்கு என்ன நடந்தது என்பதை மறைத்தல் அல்லது காணாமல் போன நபர் எங்கிருக்கின்றார் என்பதனை மறைத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட நபரை சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து வெளியில் வைத்தல் என்பவற்றையும் அது உள்ளடக்குகின்றது.

394. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்படுதல்கள் மற்றும் தண்டனை விலக்குரிமை என்பன குறித்த மாதிரிகளைக் காட்டும் ஒரே சீரான தகவல்களை திரட்டியிருந்தது. அதன் விசாரணைகளின் போது, சர்வதேச மற்றும் இலங்கை அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் அத்தகைய சம்பவங்களை விரிவான விதத்தில் ஆவணப்படுத்தியிருக்கும் பலவந்தமான, விருப்பத்துக்கு மாறான காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயற்குழு போன்ற ஏனைய பொறிமுறைகளினாலும் சேகரிக்கப்பட்டிருக்கும் பாரிய அளவிலான தகவல்களை அது மீளாய்வு செய்தது.[311]

[311] Human Rights Watch, அமைப்பு, மீண்டும் மீண்டும் இடம்பெறும் கடும் துன்பம். இலங்கையில் இடம்பெறும் "காணாமல் போதல்கள்" மற்றும் கடத்தல்கள் என்பவற்றுக்கான அரசின் பொறுப்பு, மார்ச் 2008 இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணங்கள் Human Rights Watch, The Legal Limbo. இலங்கையில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருக்கும் எல்ரீரீஈ சந்தேக நபர்களின் நிச்சயமற்ற தலைவிதி, 2010 Human Rights Watch International Crisis Group, *Complicit in Crime*, 2007; இலங்கையில் மனித உரிமைகளின் நெருக்கடி சர்வதேச மன்னிப்புச் சபை சித்திரவதையை நிறுத்தவும், 5 ஆண்டுகளாக தொடர்கின்றது. வெள்ளைக் கொடி சம்பவம் 2009 - 2014, 2014

காணாமல் போன நபர்களின் உறவினர்களுடன் நேரடியாகச் செயற்பட்டு வரும் அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்களையும், அதேபோல காணாமல் போனவர்களின் உறவினர்களையும், பாதிக்கப்பட்ட நபர் காணாமல் போயிருக்கும் சந்தர்ப்பத்தில் கைதுகள், தடுத்து வைப்பு அல்லது கடத்தல்கள் என்பவற்றுக்கான சாட்சிகளையும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு நேர்காணல் கண்டிருந்தது. உதாரணமாக, இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட பெருந்தொகையான முன்னைய தடுப்புக் கைதிகள், பின்னர் காணாமல் போன நபர்கள் இராணுவத்தின் தடுப்புக் காவலில் இருப்பதனைத் தாம் பார்த்ததாகக் கூறியிருந்தார்கள். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த எழுத்து மூலமான சமர்ப்பணங்களின் மீளாய்வுக் கூடாக அத்தகைய தகவல்கள் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

395. இது தவிர இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு காணாமல் போதல்கள் தொடர்பாக இலங்கையின் பல விசாரணை ஆணைக்குழுக்களின் பிரசுரிக்கப்படாத அறிக்கைகளையும், இலங்கைப் பொலிசாரிடமும் அதேபோல தகுதி வாய்ந்த ஏனைய தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களிடமும் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாடுகளின் பிரதிகளையும் மீளாய்வு செய்தது.

### பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கத்தின் எதிர்வினைகள்

396. இந்தப் பிரச்சினையின் பரிமாணத்தைப் பொருட்படுத்தாமல் இலங்கை அதிகாரிகள் நீண்ட காலமாக பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களை உதாசீனம் செய்ததுடன், அவற்றில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதனையும் மறுத்து வந்தார்கள். பலவந்தமாக காணாமல் போகும் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வருவதாக வாக்களித்து, 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க இதற்கு ஒரு விதிவிலக்காவார். அவர் பதவியிலிருந்த காலத்தில் இப்பிரச்சினையைக் கையாள்வதற்கென தொடரான பல வழிமுறைகளை மேற்கொண்டிருந்தார். எனினும், பின்னர் எடுத்து விளக்கப்படுவதைப் போல, பொறுப்புக் கூறும் நிலையை எடுத்துவருவதற்கான முயற்சிகள் பல இடையூறுகளை எதிர்கொண்டிருந்தன.

397. 2005 நவம்பர் மாதம் தொடக்கம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக தமக்கு எத்தகைய பொறுப்புமில்லை என அரசாங்க அதிகாரிகள் மீண்டும் மீண்டும் மறுத்து வந்தனர். உதாரணமாக, 2007 மாரச் மாதத்தில் அப்போதைய மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஆட்கள் காணாமல் போனமை தொடர்பான அறிக்கைகள், "சர்வதேச ரீதியில் இலங்கை தொடர்பாக ஒரு மோசமான சித்திரத்தை தீட்டிக் காட்டி, அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை எடுத்து வருவதன் மூலம் எமது திடசித்தத்தைப் பலவீனப்படுத்த[312]முயன்று வரும் ''ஒரு ஈவிரக்கமற்ற பயங்கரவாத அமைப்பினால்'' முன்னெடுக்கப்பட்டு வரும் ''பிரச்சார உத்தியின்'' ஓர் விளைவாகும்" எனக்

[312] "அனைத்தும் சகஜ நிலையில் இருந்து வருமென நீங்கள் எதிர்பார்க்க முடியாது" The Nation, மார்ச் 18, 2008, http://www.nation.lk/2007/03/18/inter3.htm

கூறியிருந்தார். தனது ஆட்சிக் காலத்தின் போது காணாமல் போனதாகக் கூறப்படும் நபர்களில் ''ஒருசிலர் தமது வீட்டுக்குத் தெரியாமல் தமது தேன்நிலவுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்''[313]என 2007 அக்டோபர் மாதத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே கூறியிருந்தார். ''காணாமல் போனோர் தொடர்பான இந்தப் பட்டியல்கள் வெறுமனே புள்ளிவிபரஙகள் மட்டுமே ஆகும் […] காணாமல் போதல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சம்பவங்கள் இருந்து வரவில்லை என நான் கூறவில்லை. ஆனால், அவற்றில் எந்த விதத்திலும் அரசாங்கம் சம்மந்தப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை இங்கு நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள வேண்டும்'' என அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.[314]

398. இதேமாதிரியான அறிக்கைகள் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் 2012 மே மாதத்தில் வெளியிடப்பட்டிருந்தன. காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாடு செல்வதற்காக இலங்கையை விட்டுச் சென்றிருப்பதாக கூறிய அவர், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இப்படிச் சொல்லியிருந்தார்: ''இலங்கை தொடர்பான ஒரு தவறான சித்திரத்தைக் காட்டுவதற்கென கூறப்படும் பொய்களாகும். வெளிநாட்டில் தங்கியிருந்து கொண்டு இலங்கையின் நற்பெயருக்கு அபகீர்த்திவிளைவிக்க முயன்று வரும் எல்ரீரீஈஇயக்கத்தின் எச்சங்களால் இலங்கை தொடர்பான ஒரு பிழையான சித்திரத்தை உருவாக்குவதற்கு இது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.''[315]சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயத்தின் கீழான மனித உரிமைகள் கமிட்டிக்கான அதன் ஐந்தாவது பருவகால அறிக்கையை 2014 இல் பரிசீலனை செய்த சந்தர்ப்பத்தில், ஆட்கள் காணாமல் ஆக்கப்படும் ஒரு வழிமுறையாக ''வெள்ளைவேன்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்ற பேச்சு,உண்மை நிலவரத்தை அப்படையாகக் கொண்டதாக இருந்து வரவில்லை என்றும், ஒருசில ஊடக அறிக்கைகளில் வெளியிடப்பட்டிருந்த பரபரப்பான குற்றச்சாட்டுக்களாக மட்டுமே அவை இருந்து வருகின்றன" என்றும் அரசாங்கம் கூறியிருந்தது. மேலும், பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்களில் இராணுவம் சம்பந்தப்பட்டிருந்தது என முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களையும் அரசாங்கம் திட்டவட்டமாக மறுத்திருந்தது.[316]

399. எவ்வாறிருப்பினும், காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக ஒரு சில அரசாங்க அதிகாரிகள் அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். 2007 பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள

313 இலங்கையில் என்னுடைய மேட்டுக் குடி இயல்பு சாராத தலைமைத்துவத்தை மேலைய வல்லரசுகள் வெறுக்கின்றன – மகிந்த ராஜபக்ஷ, The Asian Tribune, அக்டோபர் 4, 2007, http://www.asiantribune.com/node/7650

314 Ibid.

315 கோத்தாபய ராஜபக்ஷ: இலங்கையின் வடக்கு 'தமிழ் மக்களுக்கு மட்டுமான பிரதேசமல்ல' பிபிசி மே 28, 2012, http://www.bbc.com/news/world-asia-18207198

316 CCPR/C/LKA: மனித உரிமைகள் கமிட்டி, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் கீழ் இலங்கையின் பருவ கால அறிக்கையை பரிசீலனை செய்தல் அக்டோபர் 7 – 8, 2014 – முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் 'பிரச்சினைகளின் பட்டியல்' எழுத்து மூலம் வழங்கப்பட்ட பதிலுக்கு மேலதிகமாக, மனித உரிமைகள் கமிட்டி முன்வைத்த கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய தகவல்கள், இலங்கையின் தூதுவர் மற்றும் நிரந்தர பிரதிநிதி மாண்புமிகு ரவிநாத பி. ஆரியசிங்க அவர்களின் அறிமுக கூற்று, அக்டோபர் 7, 2014.

சமரவீர ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்த ஒரு கடிதத்தில் இலங்கையில் ''ஒவ்வொரு ஐந்து மணித்தியாலங்களுக்கும் ஒரு முறை ஒரு நபர் கடத்தப்படுவதாக'' கூறியிருந்ததுடன் அதனை ''யார் செய்வதாக இருந்தாலும் சரி ஒரு அரசாங்கம் என்ற முறையில் அதற்கு நாங்கள் பொறுப்பேற்க வேண்டும்''[317] என்றும் குறிப்பிட்டிருந்தார்.

400. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அதன் இடைக்கால அறிக்கையில் பந்தி 9.47 இல் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான சம்பவங்களை உடனடியாக தீர்த்து வைக்க வேண்டிய விடயத்தை வலியுறுத்தியிருந்ததுடன், அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டிருந்தது. அதன் விசாரணைகளின் போது பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் குறித்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும்,''சரணடைவதற்கூடாக அல்லது ஒரு கைதுக்கூடாக அரசாங்க அதிகாரிகளினால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு நபரினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொறுப்பினை அரசு கொண்டுள்ளது'' என்ற விடயத்தையும் அது வலியுறுத்தியிருந்தது.

### பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களின் மாதிரிகள்

401. இப்பிரிவில் தெளிவாக எடுத்துக் காட்டப்படுவதைப் போல, அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள், எதிர்க்கட்சி இயக்கங்களுக்கு ஆதரவாக இருப்பவர்கள் அல்லது ஆயுத மோதலில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் எனக் கருதப்படும் நபர்களை பலவந்தமாக காணாமல் போகச் செய்யும் நடைமுறையை ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் பயன்படுத்தி வந்துள்ளன. உதாரணமாக, பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான செயல் குழு அறிக்கைகள், அரசுசாரா அமைப்புக்கள் மற்றும் ஏனைய தரப்புக்களின் அறிக்கைகள் என்பவற்றின் பிரகாரம், 1971 ஆம் ஆண்டு மற்றும் 1987 – 1989 காலப் பிரிவுகளில் இடம்பெற்ற ஜேவிபி இயக்கத்தின் கிளர்ச்சிகளின் போது, பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் - குறிப்பாக சிங்கள ஆண்கள் - காணாமல் போயிருந்தனர். அரசாங்கப் படைகள் 1996 இல் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர், கைது செய்யப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கான தமிழ் ஆண்கள் காணாமல் போயிருந்தனர். மேலும், பலர் - பெரும்பாலும் தமிழர்கள் - எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளை கொண்டிருந்தவர்கள் எனக் கருதப்பட்ட நிலையில் காணாமல் போயிருந்தனர்.

402. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் விசாரணை உள்ளடக்கிய காலப்பிரிவு முழுவதிலும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களின் அளவு ஏற்ற இறக்கங்களுடன் இருந்து வந்தது. 2002 ஆம் ஆண்டின் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பாகமாக அதில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டின் பின்னர் இத்தகைய சம்பவங்கள் தீவிரமாக அதிகரித்து வந்திருப்பதனை பல்வேறு வட்டாரங்களிலிருந்து கிடைத்த ஒரே மாதிரியான

[317] அரசாங்கத்தின் ஊழலை வெளி விவகார அமைச்சர் அம்பலப்படுத்துகிறார். The Sunday Leader, ஜனவரி 28, 2007 , http://www.thesundayleader.lk/archive/20070128/news.htm

அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. நீதிமன்ற நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரணதண்டனைகள் தொடர்பான விசேட ஆணையாளர் 2005 நவம்பர் மாதத்தில் இலக்கைக்கு மேற்கொண்ட தனது விஜயத்தின் பின்னர் சமர்ப்பித்த அறிக்கையில் ‘‘கடந்த காலத்தில் இலங்கையை மிக மோசமாக பாதித்திருந்த பலவந்தமாக மற்றும் விருப்பத்துக்கு மாறாக காணாமல் ஆக்கப்படும் சம்பவங்களின் போக்குகள் மீண்டும் எழுச்சியடைந்து வருவதை காட்டும்’’ அறிக்கைகள் கிடைத்திருப்பதாகவும், அது குறித்து தான் ‘‘பெருமளவுக்கு மனக்கலக்கம்’’ அடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். “மோசமடைந்து வரும் பாதுகாப்பு நிலவரம், கடந்த காலத்தில் இடம்பெற்று வந்த துஷ்பிரயோக சம்பவங்கள் மீண்டும் தூண்டப்படுவதற்கு வழிகோல முடியும் என்றஎச்சரிக்கையை விடுக்கின்றதுஎன நான் குறிப்பிட விரும்புகின்றேன்.”[318] அதனையடுத்து ‘‘தடுத்து வைத்திருக்கும் நபர்கள் தொடர்பான தேவையான அனைத்துப் பாதுகாப்புக்களும் முழுமையாக பின்பற்றப்படுவதனை’’ உறுதிப்படுத்துமாறு விசேட ஆணையாளர் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தார்.[319]

403. பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயற்குழு அதன் 2006 ஆம் ஆண்டின் அறிக்கையில் ‘‘குறிப்பாக நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் புதிதாகத் தோன்றியிருக்கும் சண்டையின் பின்புலத்தில், அண்மையில் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்படும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படும்சம்பவங்களின் அதிகரிப்புக் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக’’[320] அது சுட்டிக் காட்டியிருந்தது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருந்த புள்ளிவிபரங்களின் பிரகாரம், 2005 டிசம்பர் தொடக்கம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 419 நபர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

404. 2007 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயற்குழுவுக்கு அறிக்கையிடப்பட்ட பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வந்திருந்தது. இக்குழு 2007 ஆம் ஆண்டில் இது தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. “நாட்டில் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்கள் அண்மையில் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து ஆழந்த கவலை கொண்டுள்ளோம்.” அதில் மேலும் இப்படிக் குறிப்பிட்டிருந்தது: ‘‘யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களுக்கு மேலதிகமாக, அண்மையில் கொழும்பிலிருந்து அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் குறிப்பாக கவலையூட்டும் ஒரு புதிய போக்கினை எடுத்துக் காட்டுகின்றன. அது நாட்டின் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான பரவலான ஒரு போக்கினை எடுத்துக் காட்டுவது போல் தெரிகின்றது.[321] மூன்று அரசு சாரா அமைப்புக்களினால் 2007 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி

---

[318] E/CN.4/2006/53/Add.5, மார்ச் 27, 2006, பந்தி 68.

[319] Ibid.

[320] பலவந்தமாக அல்லது சுய விருப்புக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்பகள் தொடர்பான செயல் குழுவின் அறிக்கை, ஜனவரி 25, 2007, A/HRC/4/41, பந்தி 396.

[321] பலவந்தமாக அல்லது சுய விருப்புக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்பகள் தொடர்பான செயல் குழுவின் அறிக்கை, ஜனவரி 10, 2008, A/HRC/7/2 பந்தி 344.

வெளியிடப்பட்டிருந்த ஒரு பட்டியலின் பிரகாரம், 2007 ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையில்[322] பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட 540 சம்பவங்கள் இருந்துள்ளன. இந்தப் பட்டியல் முழுமையானது அல்ல என்ற விடயத்தை அந்த அமைப்புக்கள் திட்டவட்டமாகக் கூறியிருந்தன.

405. மீண்டும் பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயற்குழுவும்அதன் 2008 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில், இலங்கையில் இடம்பெற்று வரும் பாரிய எண்ணிக்கையிலான பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்கள் குறித்து[323] ''மனக்கலக்கம் அடைந்திருப்பதாக'' குறிப்பிட்டிருந்தது. 2008 பெப்ரவரி மாதத்துக்கும் அக்டோபர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது காணாமல் போயிருந்த 43 நபர்கள் தொடர்பான சம்பவங்களை அதன் அவசரநிலை நடைமுறையின் கீழ் அனுப்பி வைத்திருந்தது என்றும் அது குறிப்பிட்டிருந்தது.[324] அக்குழு 2012 ஆம் ஆண்டில் வெளியிட்ட அதன் அறிக்கையில்[325]யாழ்ப்பாண மாவட்டத்தில் 2007 ஜனவரி மாதத்துக்கும் ஆகஸ்ட் மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது 500 க்கு மேற்பட்ட நபர்கள் காணாமல் போயிருப்பதாகவும், மன்னார் மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டுக்கும் 2009 க்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் சுமார் 100 நபர்கள் காணாமல் போயிருப்பதாக கூறப்படுவதாகவும் புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

406. ஆயுத மோதல் 2009 ஆம் ஆண்டில் முடிவடைந்ததனை அடுத்து, பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களில் ஒரு புதிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்த பின்னர், அறிவிக்கப்படும் சம்பவங்களின் எண்ணிக்கை இறுதியில் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுகவனத்தில் எடுத்த காலப்பிரிவின் முடிவின் பின்னர் காணாமல் போதல் தொடர்பாக ஒருசில சம்பவங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

407. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களைப் பொறுத்தவரையில், அவற்றின் மூலம் குறிப்பாக நாட்டில் ஒருசில பாகங்கள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், நாடு முழுவதிலும் அவை இடம்பெற்றிருந்தன. அதன் ஆணைப்பத்திர காலப்பிரிவின் போது ஆவணப்படுத்தப்பட்டிருந்த பெரும்பாலான சம்பவங்கள் வடமாகாணத்தில் - மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் - இடம்பெற்றிருந்தன. இம்மாவட்டங்கள் அனைத்தும் இறுக்கமான இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தவையாகும். இரண்டாவது மோசமாக பாதிக்கப்பட்டிருந்த பிரதேசம் கிழக்கு மாகாணம் ஆகும். குறிப்பாக, அரசாங்கப் படைகள் அங்கு எல்ரீரீஈ இயக்கத்தைத்

---

322 சிவில் கண்காணிப்புக் குழு, சுதந்திர ஊடக அமைப்பு மற்றும் Law and Society Trust இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முன்வைத்த இரண்டாவது சமர்ப்பணம், ஜனவரி – ஆகஸ்ட் 2007, http://lib.ohchr.org/HRBodies/UPR/Documents/Session2/LK/AFMD_LKA_UPR_S2_2008anx_LSTReportondisappearancesandkillings.pdf

323 பலவந்தமாக அல்லது சுய விருப்புக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்பகள் தொடர்பான செயல் குழுவின் அறிக்கை, பெப்ரவரி 25, 2009, A/HRC/10/9 பந்தி 366.

324 அதே அறிக்கை, பந்தி 351

325 பலவந்தமாக அல்லது சுய விருப்புக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்பகள் தொடர்பான செயல் குழுவின் அறிக்கை, மார்ச் 2, 2012, A/HRC/19/58/Rev.1, பந்தி 497

தோல்வியடையச் செய்திருந்த 2006 ஆம் ஆண்டுக்கும் 2008 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது இச்சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. கொழும்பில் இடம்பெற்ற பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்களும் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. அத்தகைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தனர்.[326]

408. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப்பிரிவின் போது பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் எனக் கருதப்பட்ட நபர்கள் ஆவார்கள். இளம் தமிழ்ப் பெண்கள் - அவர்கள் எல்ரீரீஈ இயக்கத்துடன் எவையேனும் தொடர்புகளைக் கொண்டிருந்தாலும் சரி கொண்டிருக்கா விட்டாலும் சரி – அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் குறிப்பாக பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்படும் நிலைக்கு எளிதில் இரையாகக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள். அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் காணாமல் போன ஏனையோர் மனித உரிமைப் பாதுகாவலர்கள், தேசிய மனித நேயப் பணியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்ற அரசாங்கத்தை விமர்சனம் செய்பவர்கள் எனக் கருதப்பட்ட நபர்கள் ஆவார்கள். பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயற்குழு 2008 ஜீன் 11 ஆம் திகதி வெளியிட்டிருந்த ஓர் ஊடக அறிக்கையில்,மனித நேயப் பணியாளர்கள் இவற்றுக்கு இலக்காகக் கொள்ளப்படும் விடயம் குறித்து தனது கவலையைத் தெரிவித்திருந்தது.[327] சட்டவிரோதமான கொலைகள் தொடர்பான அத்தியாயத்தில் இத்தகைய சம்பவங்களில் ஒருசில சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

409. இங்கு எடுத்து விளக்கப்பட்ட மாதிரிகளை எடுத்துக்காட்டும் ஒரு குறியீட்டுச் சம்பவம் லங்கா ஈ நியூஸ் இணையதளத்தில் பணிபுரிந்து வந்த கருத்துச் சித்திரக் கலைஞர் பிரகீத் ரஞ்சன் பண்டார எக்னலிகொட காணாமல் போன சம்பவமாகும். அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்து வந்த அவர் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்கள் இடம்பெற்று வந்த காலப்பிரிவின் போது 2010 ஜனவரி 24 ஆம் திகதி கொழும்பில் காணாமல் போனார். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம், ஒரு வெள்ளைவானில் பயணம் செய்து கொண்டிருந்த இனங்காணப்படாத ஆயுதம் தரித்த நபர்களினால் அவர் முதலில் 2009 ஆகஸ்ட் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். அதற்கு

326 மேல், தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் தமது விருப்பத்துக்கு மாறான விதத்தில் நபர்கள் எடுத்துச் செல்லப்பட்டமை அல்லது காணாமல் போன நபர்கள் தொடர்பான வலய விசாரணை ஆணைக்குழு 1997 இல் வெளியிட்டிருந்த அதன் இறுதி அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "ஆணைக்குழுவுக்கு முன்னால் முன்வைக்கப்பட்ட சாட்சியம், கொழும்பில் தமிழ் இனத்தைச் சேர்ந்த நபர்கள் தமது விருப்பத்துக்கு மாறான விதத்தில் எடுத்துச் செல்லப்படுதல்/காணாமல் போதல் தொடர்பான பிரச்சினை, தென்னிலங்கையில் இருந்து வரும் அத்தகைய சம்பவங்களின் பின்புலத்தில் மூடிமறைக்க முடியாதது என்பதை காட்டுகிறது." இது கொழும்பில் வாழ்ந்து வரும் தமிழர்கள் காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் தொடர்பாக இலக்கு வைக்கப்படுவது பல வருட காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்றது என்பதனைக் காட்டுகின்றது (As quoted in A Legacy to Remember: Sri Lanka's Commissions of Inquiry 1963-2002, Ed. Kishali Pinto-Jayawardena, The Law & Society Trust).

327 செய்தி வெளியீடு ஜுன் 11, 2008, "இலங்கையில் அண்மை காலத்தில் இடம்பெற்று வரும் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்களின் தொடர் நிகழ்வுகளை ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு கண்டிக்கின்றது" http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=9278&LangID=E

-

அடுத்த நாள் அவா் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், தொடா்ந்து அவருக்கு அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் வந்த வண்ணம் இருந்தன. தன்னை யாரோ பின்தொடா்கின்றார்கள் என அவா் நம்பினாா். திரு. எக்னலிகொட 2010 ஜனவரி 24 ஆம் திகதி தனது அலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றாா். ஆனால், ஒரு சகாவை சந்திப்பதற்கென குறிப்பிடப்பட்டிருந்த இடத்துக்கு அவா் வந்து சேரவில்லை. அன்று தொடக்கம் அவருக்கு என்ன நடந்தது என்பதும், அவா் எங்கிருக்கின்றாா் என்பதும் தெரியவில்லை. திரு. எக்னலிகொட காணாமல் போய் நான்கு நாட்களின் பின்னா் லங்கா ஈ நியூஸ் அலுவலகங்களில்விறாந்து எவற்றையும் முன்வைக்காமல் இனங்காணப்படாத நபா்களினால் தேடுதல் நடத்தப்பட்டிருந்தது.[328]

410. ஏனைய தரப்புக்களுக்கு மத்தியில், மனித உரிமைகளுக்கான ஆணையாளா், சித்திரவதைக்கு எதிரான கமிட்டி மற்றும் பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்படுதல் தொடா்பான செயல் குழு ஆகிய தரப்புக்களினால் எக்னலிகொடவின் சம்பவம் அரசாங்கத்திடம் எழுப்பப்பட்டிருந்தது. அவா் எங்கிருக்கின்றாா் என்பது தொடா்பான தகவல்களைக் கண்டறிவதற்கான முயற்சிகளும், அந்தச் சம்பவம் தொடா்பாக அண்மையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களும் கீழே விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

### பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னா் ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள்

411. பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களில் அரசாங்கத்தின் - குறிப்பாக, பாதுகாப்புப் படைகளின் - நேரடித் தொடா்பை உறுதிப்படுத்தும் பாரிய அளவிலான தகவல்கள் கடந்த பல வருடங்களின் போது மனித உரிமைகளுக்கான ஆணையாளா் அலுவலகம்,சித்திரவதைக்கு எதிரான கமிட்டி மற்றும் பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்படுதல் தொடா்பான செயல் குழு, ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் மற்றும் அரசுசாரா அமைப்புக்கள் என்பவற்றினால் திரட்டப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டில் கருணா குழு எழுச்சியடைந்ததை அடுத்தும், 2000 ஆவது ஆண்டுகளின் நடுப்பகுதியில் ஈபிடிபி அமைப்பின் தொடா்ச்சியான துணைப்படை நடவடிக்கைகளின் போதும் (இந்த இரு குழுக்களும் பாதுகாப்புப் படைகளுடன் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வந்தன) பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படும் சம்பவங்களைக் காட்டும் போக்குகள்,பல்வேறு குழுக்களுக்கிடையிலான குறைந்த தீவிரத்தன்மையுடன் கூடிய செயற்பாடுகளின் ஒரு பாகமாக உருவாகியிருந்தன.

412. பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடா்பான செயல் குழுவின் 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் பிரகாரம், ஆட்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட பெரும்பாலான சம்பவங்களுக்கு இலங்கை இராணுவம், பொலிஸாா் (குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு, விசேட அதிரடிப்படை) மற்றும் துணைப்படைக் குழுக்கள் என்பன பொறுப்பாக இருந்து வந்துள்ளன எனக் கூறப்பட்டிருந்தது. குறிப்பாக, இலங்கைக் கடற்படை யாழ்ப்பாணம் மற்றும் மன்னாா் ஆகிய இடங்களில் இடம்பெற்ற பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பாக இருந்து வந்துள்ளது.எவ்வாறிருப்பினும், வேறுபட்ட அமைப்புக்கள் பல்வேறு கட்டங்களில் கைதுகள், தடுத்து வைப்பு மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வந்துள்ளன எனக் கூறப்படுகின்றது. பாதுகாப்புப் படைகளின் பல்வேறு பிரிவுகளுக்கிடையில்

[328] WS on file

(அதேபோல துணைப்படைக் குழுக்களின் ஆதரவுடன்) கூட்டுச் செயற்பாடுகளும் ஒத்துழைப்பும் இடம்பெற்று வந்துள்ளது என்ற விடயமும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

413. திட்டவட்டமான சக்திகள் அல்லது அலகுகள் இந்தச் செயல்களைச் செய்திருக்க முடியும் எனக் குறிப்பிடுவதும், அதேவேளை, இச்செயல்களைச் செய்திருக்கும் தனிப்பட்ட நபர்களை அடையாளம் காண்பதும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சவால் மிக்க ஒரு பணியாக இருந்து வந்துள்ளது. ஏனெனில், பாதுகாப்புப் படைகள் - பொலிஸாக இருந்து வந்தாலும் சரி இராணுவத்தினராக இருந்து வந்தாலும் சரி – எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தம்மை அடையாளம் காட்டுவதில்லை. மேலும், தம்மால் ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற விடயத்தையும் மறுக்கின்றார்கள். அதன் காரணமாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இக்கைதுகள் தொடர்பாக சாட்சிகள் எவரும் இருந்து வருவதில்லை. மேலும், குடும்ப உறுப்பினர்கள் இச்செயல்களை நிகழ்த்தியவர்களின் அடையாளத்தை தெரிந்து வைத்திருந்த போதிலும், பழிவாங்குதல்கள் இடம்பெற முடியும் என்ற அச்சத்தில் அவர்களின் பெயர்களை வெளியிடுவதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தயக்கம் காட்டி வந்துள்ளார்கள் என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது.

414. இத்தகைய செயல்களை நிகழ்த்தும் நபர்களின் அடையாளத்தை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இலகுவாக கண்டுபிடிக்க முடியாதிருக்கும் அதேவேளையில், இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்ட விதம் ஒரேமாதிரியான இயல்பைக் கொண்டுள்ளது. தாம் ஒரு வெள்ளைவானுக்குள் இழுத்துச் செல்லப்பட்டதாகவும், தம்மைக் கடத்திய நபர்கள் அந்த வாகனத்தில் தம்மை எடுத்துச் சென்றதாகவும் அல்லது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இலக்கத் தகடுகள் இல்லாத அத்தகைய வான்களில் ஏனையவர்கள் எடுத்துச் செல்லப்படுவதைத் தாம் பார்த்ததாகவும் பெருந்தொகையான சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தார்கள். இச்சம்பவங்களை நிகழ்த்தியவர்கள் சிங்கள மொழியை மற்றும் /அல்லது தமிழ் மொழியைப் பேசியதுடன், சாதாரண உடைகளில் அல்லது சீருடைகளில் இருந்தனர். சிலநேரங்களில் அவர்களுடைய முகங்கள் மூடப்பட்டிருந்தன. பெருந்தொகையான சம்பவங்களில்,சம்பவத்தை நிகழ்த்தியவர்கள் பாதிக்கப்பட்ட நபரை எடுத்துச் செல்வதற்கு முன்னர் தாம் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என தம்மை வாய்மூலம் அடையாளப்படுத்திக் கொண்டிருந்தனர். கைது செய்யப்பட்டு அல்லது கடத்தப்பட்டு அதனையடுத்து காணாமல் போன நபர்கள்,கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், அல்லது கடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்கு இருந்த உறவினர்களிடம் அந்நபர்கள் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றார்கள் எனக் கூறப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இக் குற்றச் செயல்களை நிகழ்த்தியவர்கள் ஒரு முறையான பிடிவிறாந்தை சமர்ப்பிப்பதற்கோ அல்லது சம்மந்தப்பட்ட நபரை அவர்கள் எங்கு எடுத்துச் செல்கிறார்கள் என்பது குறித்த தகவல்களை வழங்குவதற்கோ தவறியிருந்தார்கள். அத்தகைய சம்பவங்களில், குறிப்பிட்ட நபர் தமது பாதுகாப்பின் கீழ் இருந்து வருகின்றார் என்ற விடயத்தை பொலிஸார் அல்லது பாதுகாப்புப் படையினர் மறுத்துள்ளனர்.

415. இப்போக்கை எடுத்துக் காட்டும் ஒரு சம்பவம் 2008 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு சம்பவமாகும். அதில் சாதாரண உடையிலிருந்த 5 பேர் வந்து ஒரு நபரை அவரது வீட்டிலிருந்து கைது செய்திருந்தார்கள். தாம் திருகோணமலையிலிருந்து வந்திருக்கும் பொலிஸ் குற்றவியல் புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் என அவர்கள் கூறியிருந்தார்கள்.[329] சம்பந்தப்பட்ட

[329] WS on file.

நபர் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றார் என்றும் குடும்பத்தினர் காலையில் பொலிஸ் நிலையத்துக்குச் செல்ல வேண்டும் என்றும் அந்த உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தினரிடம் தெரிவித்திருந்ததாக கூறப்படுகின்றது. அந்நபர் கைது செய்யப்பட்ட பின்னர், அவர் கடற்படைச் சோதனைச் சாவடிக்கூடாக எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால், இந்த விடயத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு கடற்படை உத்தியோகத்தர்கள் குடும்பத்தினருக்கு எத்தகைய தகவல்களையும் வழங்கியிருக்கவில்லை. அந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்ற விடயத்தை பொலிஸாரும் மறுத்திருந்தனர்.

416. மற்றொரு சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த சீருடையிலிருந்த இராணுவ உத்தியோகத்தர்களை எளிதில் இனங்காண முடிந்தது. ஆனால், பின்னர் தாம் இதில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என இராணுவத்தினர் மறுத்திருந்தனர். இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்ட 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில், நபர் ஒருவர் பிந்திய இரவு நேரத்தில் யாழ்ப்பாணத்தில் அவருடைய வீட்டில் வைத்து ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் கைது செய்யப்பட்டிருந்தார். அக்குழுவில் ஒருசிலர் இராணுவ சீருடையிலும் ஒருசிலர் சாதாரண உடையிலும் இருந்தனர்.[330]எல்ரீரீஈ இயக்கத்துக்கு உதவி செய்வதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. அக் குற்றச்செயலை நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்படும் நபர்கள் சிங்கள மொழியிலும்,கொச்சைத் தமிழிலும் பேசினார்கள். அந் நபர் அருகிலிருக்கும் இராணுவ முகாம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்படுவதனை சாட்சிகள் பார்த்ததாகக் கூறப்படுகின்றது. எனினும், அடுத்த நாள் அந்நபரைக் கைது செய்வதில் தாம் எவ்விதத்திலும் சம்மந்தப்பட்டிருக்கவில்லை எனக் கூறி இராணுவம் அதனை மறுத்திருந்தது[331] பொலிஸ் நிலையத்துக்கும் ஏனைய அமைப்புக்களுக்கும்இது தொடர்பாக முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பாதிக்கப்பட்ட நபர் எங்கிருக்கின்றார் என்பது தொடர்பாக எத்தகைய தகவல்களும் கிடைக்கவில்லை.

417. அரசாங்கப் பாதுகாப்புப் படைகளின் தொடர்பை எடுத்துக் காட்டும் காரணிகள்,காணாமல் போதல் சம்பவங்களுக்கு வழிகோலிய நடவடிக்கைகளின் அளவு மற்றும் இயல்பு என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. மேலும், இத்தகைய சம்பவங்களை நிகழ்த்தியவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களில் தண்டனை குறித்த எவ்வித அச்சமும் இல்லாமல் இவ்விதம் செயற்படக் கூடிய நிலைமை காணப்பட்டது என்பதனையும் அது எடுத்துக் காட்டுகின்றது. குறிப்பாக, இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை கடற்படை என்பவற்றின் சோதனைச் சாவடிகளுக்கருகில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இந்நிலைமை காணப்படுகின்றது. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பின்னரும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதற்கான ஒரு சிறந்த உதாரணம் 2007 டிசம்பர் மாதத்தில் இலக்கத் தகடு இல்லாத வெள்ளை நிற வான் ஒன்றில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இளைஞர் ஒருவரை கடத்திய சம்பவத்தினை மற்றவர்கள் பார்த்திருந்ததாகும். இந்த வாகனம் இலங்கை இராணுவத்தின் முகாம் ஒன்றின் திசையிலிருந்து வந்துள்ளது. அதன் பின்னர் அந்த வான் திரும்பவும் இராணுவ முகாமை நோக்கிச் செல்வதனை மக்கள் பார்த்துள்ளார்கள். எனினும்,அந்த நபர் கடத்தப்பட்டுள்ளார் என்ற சம்பவம் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என இலங்கை இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.[332]

330 WS on file

331 WS on file

332 WS on file

418. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு திருகோணமலையில் அதன் பகிரங்க அமர்வுகளை நடத்திய பொழுது, சாட்சிகள் முன்வைத்த சமர்ப்பணங்களின் எழுத்துப் பிரதிகள் பெரும்பாலும் 2007 மற்றும் 2008 ஆகிய வருடங்களில் தம்மைக் கடற்படையினர் என அடையாளப்படுத்திக் கொண்டிருந்த நபர்களினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பெருந்தொகையான ஆட் கடத்தல் சம்பவங்களை எடுத்துக் காட்டுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட நபர் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்படுகின்றார் என அவர்கள் கூறியுள்ளனர். பல சம்பவங்களில், ஒரு இலஞ்சத் தொகை செலுத்தப்பட்டால் அவர்களுடைய உறவினர் விடுவிக்கப்படுவார் எனச் சாட்சிகளிடம் கூறப்பட்டிருந்தது. ஆனால், இலஞ்சத் தொகை செலுத்தப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட நபர் விடுவிக்கப்படவில்லை.[333]

419. 2005 ஆம் ஆண்டில் மன்னார் மாவட்டத்தில் கிராமம் ஒன்றில் இருந்த தனது உறவினர் வீட்டுக்குச் செல்லும் பொழுது பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் கடற்படைத் தளம் ஒன்றைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அன்றைய தினம் மாலை நேரம் வீதி நெடுகிலும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் காவல் நடவடிக்கைகளும்இடம்பெற்று வருவதை சாட்சிகள் அவதானித்திருந்தனர். பாதிக்கப்பட்ட நபர் அன்றைய தினம் மாலையில் வீடு திரும்பாதிருந்த போது, அது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது கடற்படையினரே இந்தச் செயலை நிகழ்த்தியிருக்க வேண்டும் என அவர்கள் சந்தேகித்ததாக கூறப்படுகின்றது. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவின் தகவல்களின் பிரகாரம், இந்நபர் காணாமல் போய் மூன்று மாதங்களின் பின்னரும் கூட பொலிஸார் இது தொடர்பாக எத்தகைய புலன்விசாரணைகளையும் நடத்தியிருக்கவில்லை. ஆனால், சாட்சிகள் முன்வரும் வரையில் அவர்கள் வாளாவிருந்துள்ளனர்.[334]

420. 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் வடக்கில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த 8 பேர்களைக் கொண்ட ஒரு குழு ஒரு கோயிலில் தங்கியிருந்த பொழுது பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்டிருந்தனர். கோயில் திருவிழா ஒன்றின் பொழுது அவர்கள் அக்கோயிலில் இரவைக் கழித்திருந்தார்கள். அவர்கள் காணாமல போன சம்பவத்துக்கு இலங்கை இராணுவமே பொறுப்பாக இருந்து வந்தது என தாம் நம்புவதாக சாட்சிகள் குறிப்பிட்டிருந்தனர்.[335]அக்கோவிலைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் மூன்று இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. திருவிழா இடம்பெற்ற பொழுது அப்பிரதேசத்தில் இராணுவத்தினரின் நடமாட்டம் இருந்து வந்ததாக தகவல் மூலங்கள் தெரிவிக்கின்றன. அந்நபர்கள் காணாமல் போன இரவில் அப்பிரதேசத்தில் இராணுவத்தினர் அங்குமிங்கும் செல்வதையும், பார்த்ததாகவும் கோயில் இருந்த திசையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கும் சத்தம் கேட்டதாகவும் சாட்சிகள் கூறினார்கள்.[336]

---

[333] கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பகிரங்க அமர்வுகள், மாவட்ட செயலகம், திருகோணமலை, டிசம்பர் 3, 2010. தமது குடும்ப உறுப்பினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயத்தைக் கண்டறியும் பொருட்டு ஒவ்வொரு சம்பவத்தின் போதும் சாட்சிகள் மேற்கொண்டிருந்த பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களை இது வழங்குகின்றது. மேலும், அவர்கள் இது தொடர்பாக எதிர்கொண்ட இடையூறுகளையும் குறிப்பிட்டிருந்தனர். அத்தகைய இடையூறுகள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்ட ஏனைய பல சம்பவங்களில் காணப்பட்ட இடையூறுகளுடன் பொருந்துவனவாக இருந்து வருகின்றன.

[334]இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

[335] WS on file

[336] இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

421. அடுத்த நாள் காலையில் தரையில் பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன. அதேபோல பாதிக்கப்பட்ட நபர்களின் ஆடைகளும், ஒருசில அடையாள அட்டைகளும் தரையில் கிடந்தன. அன்று காலையில் இராணுவ வாகனங்கள் வெளியில் செல்வதை மக்கள் பார்த்திருந்தனர். அவர்கள் அருகிலுள்ள இராணுவ முகாம்களுக்குச் சென்ற போதிலும்,தாம் எவரையும் கைது செய்யவில்லை என அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்கள்கூறினார்கள். கிராமவாசிகள் யாழ்ப்பாண தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும், உள்ளூர் பொலிஸ் நிலையத்திலும் இது தொடர்பாக முறைப்பாடு செய்தனர். அச்சந்தர்ப்பத்தில் அச்சம்பவம் தொடர்பாக தாம் புலன்விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், அது தொடர்பாக மேலதிக தகவல்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் கூறினார்கள். இந்தக் காணாமல் போன சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் தினத்துக்கு அடுத்த தினம் இலங்கை இராணுவம் கிராமத்திலுள்ள வீடுகளில் தேடுதல் நடத்தியது. பலவந்தமாக அல்லது தமது விருப்பத்துக்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான செயல் குழு அதன் அவசரகால செயல் நடைமுறையின் கீழ் இச் சம்பவத்தை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருந்தது. அதற்குப் பதிலளித்த அரசாங்கம் அது தொடர்பாக புலன்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டிருந்தது.[337]

422. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காலப்பிரிவின் போது அல்லது முன்னைய அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்பட்டிருந்த விதத்தில் பாதுகாப்புப் படைகள் வழமையாகச் செய்யும் இரவுநேர சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஒருசில ஆட்கள் காணாமல் போயிருந்தசில சம்பவங்கள் தொடர்பாக சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனர்.[338] வவுனியாவில் 2008 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைத்து தேடுதல் நடத்தும் ஒரு நடவடிக்கையின் போது முதலில் 12 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 6 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர் 2008 அக்டோபர் மாதமளவில் ஏனைய 6 பேரும் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயம் தெரிய வரவில்லை. அச்சந்தர்ப்பத்தில் ஆட்களைத் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் முறைகள் தொடர்பாக 2008 ஆகஸ்ட் மாதத்தில் பாதுகாப்புப் படைகள் ஒருசில மாற்றங்களைச் செய்திருந்ததாக இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது, சுற்றிவளைத்து, தேடுதல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது ஆட்களைத் தடுத்து வைப்பதற்குப் பதிலாக, அடுத்த நாள் இரவில் வெள்ளைவான்களில் வரும் உத்தியோகத்தர்களினால் குறிப்பிட்ட நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். 2008 செப்டம்பர் மாதத்தில் 4 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், வவுனியாவில் ஒரு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இரவுக்கு அடுத்த நாள் அவர்கள் காணாமல் போனார்கள்.[339]

423. ஒருசில சம்பவங்களில் பாதிக்கப்பட்ட நபர்கள் இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்படுவதை அல்லது அவர்கள் காணாமல் போக முன்னர், அவர்களைத் தேடி வந்த நபர்கள் அவர்களை விசாரணை செய்து, அச்சுறுத்துவதை அல்லது துன்புறுத்துவதை மக்கள் பார்த்திருந்தனர். 2009 ஆம் ஆண்டு மே மாத நடுப்பகுதியில் கிழக்குப் பிரதேசத்திலிருந்த நகரமொன்றுக்கு வேலை

[337] A/HRC/4/41, paras 382 and 384

[338] அத்தியாயம் VII சுதந்திரத்தைப் பறிப்பது சம்பந்தப்பட்ட மீறல்கள்

[339] கிராமத்தின் பெயர் கோப்பில் உள்ளது.

செய்வதற்காகச் சென்ற நபர் ஒருவர் மீண்டும் திரும்பி வராத சம்பவம் ஒன்று தொடர்பான தகவல்கள் இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருந்தன. அவர் காணாமல் போன தினத்துக்கு முன்னைய தினம் இலங்கை இராணுவம் ஒரு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்ததுடன், அவர் காணாமல் போனதற்கு முன்னைய வாரத்தின் போது இலங்கை இராணுவத்தின் கப்டன் தர உத்தியோகத்தர் ஒருவர் அவர் குறித்து விசாரிப்பதற்கென மூன்று தடவைகள் அவருடைய வீட்டுக்கு வருகை தந்திருந்தார். இலங்கை இராணுவத்தின் சீருடையிலிருந்த இரு ஆண்களினால் அவர் விசாரணை செய்யப்படுவதனை ஆட்கள் பார்த்ததாகக் கூறப்படுகின்றது. அவரைத் தேடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அன்று தொடக்கம் அவருக்கு என்ன நடந்தது என்பது குறித்தோ அல்லது அவர் எங்கிருக்கின்றார் என்பது குறித்தோ எத்தகைய தகவல்களும் கிடைக்கவில்லை.[340]

**துணைப்படைக் குழுக்கள் சம்பந்தப்பட்டிருக்கும் ஆட்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள்**

424. குறிப்பாக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் துணைப்படைக் குழுக்களுடன் கூட்டாக இணைந்து செயற்படும் பாதுகாப்புப் படையினராலும், அதேபோல பாதுகாப்புப் படைகளுடன் கூட்டாக இணைந்து செயற்படும் துணைப்படைக் குழுக்களினாலும் ஆட்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. உண்மையிலேயே ஒருசில சந்தர்ப்பங்களில் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களுக்கு வழிகோலிய கடத்தல்கள் மற்றும் தன்னிச்சையான விதத்தில்சுதந்திரத்தைப் பறித்தல் என்பனதொடர்பான செயல்கள் 2004 ஆம் ஆண்டில் - குறிப்பாக, எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து கருணா அணி பிரிந்ததன் பின்னர் - கிழக்கு மாகாணத்தில் எழுச்சியடைந்தன என்பதனை அவதானிக்க முடிகின்றது.[341] உதாரணமாக, 2006 ஆம் ஆண்டில் போர் நடவடிக்கைகள் உக்கிரமடைந்து வந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவைச் சேர்ந்தவர்களினால் ஆகக் குறைந்தது 167 வயது வந்த நபர்கள் கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

425. அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் எல்ரீரீஈஇயக்கத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தல்கள், சிலசந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படைகளினாலும், கருணா குழுவினாலும் கூட்டாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.[342]இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கும் தகவல்களின் பிரகாரம், 2006 அக்டோபர் மாதம் தொடக்கம் மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் கருணா குழுவுக்கும், விசேட அதிரடிப்படை மற்றும் இலங்கை இராணுவம் என்பவற்றுக்கும் இடையில் கூட்டுச் செயற்பாடுகள் அதிகரித்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. மட்டக்களப்பில் 2005, 2006 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற பெருந்தொகையான சம்பவங்கள், கருணா குழு, இலங்கை இராணுவ முகாம்கள் அல்லது சோதனைச் சாவடிகள் என்பவற்றுக்கு எதிரில் இருக்கும் இடங்களிலிருந்து – சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் - ஆட்களைக் கடத்துவதற்காகத் தொடர்ச்சியாக வெள்ளை வான்களைப் பயன்படுத்தி

340 WS on file

341 கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம் மேலும் பார்க்கவும் Human Rights Watch, அமைப்பு, குற்றச் செயலில் உடந்தை – கருணா குழுவினால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் மற்றும் சிறுவர் ஆட்சேர்ப்பில் அரசின் உடந்தை, ஜனவரி 2007

342 WS on file

வந்திருப்பதனை சுட்டிக்காட்டுகின்றன. பின்னா் அவ்விதம் கடத்தப்பட்ட நபா்களுக்கு எச்சரிக்கை விடுத்து, அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழிருந்து வரும் பிரதேசங்களில் தம்மால் எந்தளவுக்குச் செயற்பட முடியும் என்பதனை எடுத்துக் காட்டும் விதத்தில் அவா்களை விடுவித்திருந்தார்கள்.[343] இலங்கை இராணுவ முகாம்களுக்கருகில் கருணா குழுவின் பெருந்தொகையான முகாம்கள் அமைந்திருந்தமை மற்றும் ஒருசில சந்தா்ப்பங்களில் இலங்கை இராணுவ முகாம்களுக்குள் அத்தகைய முகாம்கள் அமைந்திருந்தமை என்பனவும், இலங்கை இராணுவம் கருணா குழுவின் பிரசன்னத்தை முழுமையாக அறிந்திருந்தது என்பதனையும், கருணா குழுவினால் பெரும்பாலான சந்தா்ப்பங்களில் பகல் நேரத்தில் நடத்தப்பட்ட கடத்தல் சம்பவங்களை தெரிந்து வைத்திருந்தது என்பதனையும்[344] எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, வெலிகந்தையில் இலங்கை இராணுவத்தின் 23 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்துக்கு அருகிலும் இந்த முகாம்கள் அமைந்திருந்தன. இச்சம்பவங்கள் அனைத்தும் இலங்கை இராணுவத்தின் கவனத்திலிருந்து இலகுவில் மறைந்திருக்க முடியாது.

426. 2006 ஆம் ஆண்டில் ஆவணப்படுத்தப்பட்ட ஒரு சம்பவத்தில் கருணா குழுவைச் சோ்ந்தவா்கள் என நம்பப்படும் நபா்கள் இலங்கை இராணுவ முகாம் ஒன்றுக்கு அருகில் இளைஞா்களைக் கடத்திச் செல்வதனை ஆட்கள் பார்த்ததாகக் கூறப்படுகின்றது. அங்கு நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினா் அச் சம்பவத்தைத் தடுப்பதற்கு தலையிடவில்லை.[345]

427. மற்றொரு சம்பவத்தில் 2006 அக்டோபா் மாதத்தில் ஒரு நாள் காலை நேரத்தில் கிழக்கு மாகாணக் கிராமம் ஒன்றில் வீதியில் நின்று கொண்டிருந்த ஓர் இளைஞா் குழுவினர் ஒன்று இலங்கை இராணுவத்தின் சிப்பாய்களால் கைது செய்யப்பட்டனர். கிடைக்கும் தகவல்களின் பிரகாரம், சிப்பாய்கள் ஒரு தொலைபேசி அழைப்பை எடுத்ததுடன், அதனை அடுத்து சிறிது நேரத்தின் பின்னா் அந்த முகாமுக்கு கருணா குழுவின் உறுப்பினா்கள் வந்து, அந்த இளைஞா்களின் அடையாள அட்டைகளை எடுத்ததுடன்,அன்று மாலையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூா் அலுவலகத்துக்கு வருமாறு அவா்களுக்கு அறிவுறுத்தல் விடுத்திருந்தனா். பல சம்பவங்களில் கருணா குழுவினரால் தாம் கடத்தப்பட்டு, வெள்ளைவானில் எடுத்துச் செல்லப்பட்ட போது,இலங்கை இராணுவத்தின் பெருந்தொகையான சோதனைச் சாவடிகளை தாண்டிச் சென்றதாக பாதிக்கப்பட்ட நபா்கள் சா்வதேச அவதானிப்பாளா்களிடம் கூறியிருந்தார்கள். அச்சந்தா்ப்பங்களில் கருணா குழுவின் உறுப்பினா்கள் சிப்பாய்களுடன் உரையாடியிருந்ததுடன், அந்த இடத்தைத் தாண்டிச் செல்வதற்கு அவா்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.[346]

428. கருணா குழுவுக்கும், பாதுகாப்புப் படைகளுக்கும் - பொலிஸ் விசேட அதிரடிப் படைக்கும் - இடையிலும், அதேபோல ஒருசில சந்தா்ப்பங்களில் இராணுவப் பலனாய்வுப் பிரிவினருக்கும், கருணா குழுவுக்குமிடையிலும்[347] கூட்டுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதனைக் காட்டும் வலுவான சான்றுகள் அதிகரித்து

343 Op.cit.

344 WS on file

345 இலங்கைப் போா் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

346 இலங்கைப் போா் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

347 E/CN.4/2006/53/Add.5 27, March 2006.

வரும் விடயத்தினை 2006 அக்டோபர் மாதத்தில் நீதிமன்ற நடைமுறைகளுக்குப் புறம்பான மரணதண்டனைகள் தொடர்பான விசேட ஆணையாளர் மற்றும் சர்வதேச அவதானிப்பாளர்கள் ஆகியோர் கண்டறிந்திருந்தனர். அறிக்கைகளின் பிரகாரம்,கருணா குழுவினால் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள், விசேட அதிரடிப்படையினரிடம் அவர்கள் கையளிக்கப்படுவதற்கு முன்னர், பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அலுவலகமொன்றில் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்ததாக தெரிகிறது. 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில், மட்டக்களப்பு நகருக்கு மத்தியில் விசேட அதிரடிப் படையினர் ஒரு நபரை கைது செய்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் அந்நபர் இராணுவ புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், அவர்கள் அந்நபரை கருணா குழுவிடம் ஒப்படைத்திருந்தனர். சாட்சிகளின் வாக்குமூலங்கள் அதற்கு எதிரான விதத்தில் இருந்து வந்த போதிலும், விசேட அதிரடிப்படை சம்பந்தப்பட்ட நபரை தாம் விடுவித்திருப்பதாகக் கூறியது.[348]

### ஆயுத மோதலின் முடிவின் போது இடம்பெற்ற பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சம்பவங்கள்

429. அரசாங்கம் இடைவிடாது மறுப்புக்களை தெரிவித்து வந்திருந்த போதிலும்,[349] கணிசமான அளவிலான நபர்கள், குறிப்பாக தமது ஆயுதங்களை ஒப்படைந்திருந்த எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகள், எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவ நிலைகளை சாராத உறுப்பினர்கள், அவர்களுடைய சகாக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் இலங்கை இராணுவத்திடம்“சரணடைந்து”[350] வட்டுவாகல் பாலத்தை தாண்டிய பின்னர்[351]2009 மே 18 ஆம் திகதி காணாமல் போய்யுள்ளார்கள் என்பது குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய நம்பகமான பெருந்தொகையான தகவல்கள் கிடைத்துள்ளன.

430. இத்தகைய சம்பவங்களில் ஒருசில சம்பவங்கள் WGEID செயல் குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவை தொடர்பாக அக்குழுவின் 2012 மற்றும் 2014 ஆகிய வருடங்களுக்கான ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.[352] முன்னாள்

---

348 இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

349 போர் முடிவின் போது பாதுகாப்பு படைகளிடம் சரணடைந்த எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்களில் எவரும் காணாமல் போகவில்லை என அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ 2013 ஜனவரிமாதத்தில் தெரிவித்திருந்தார். அவர்கள் அனைவரும் பொருத்தமான ஒரு புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன். சமூகத்தில் மீள ஒருங்கிணைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் சொன்னார். Sri Lanka Brief, No LTTE surrendee went missing – Gotabaya Rajapaksa, 25 January 2013

350 ‘சரணடைதல்’ என்ற பதம் தம்மை ஒப்புக்கொடுக்கும் ஆயுதக்குழு ஒன்றின் உறுப்பினர்களுக்கு மட்டுமே பிரயோகிக்கதக்கதாகும். ஆனால், அந்தப் பதம் இங்கு தெளிவற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்கள் யார் என்பது –அவர்கள் இராணுவ அணியை சேர்ந்தவர்களா அல்லது அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்களா என்பது –தெளிவாககாட்டப்பட்டிருக்கவில்லை.

351 இந்தச் சம்பவங்கள் முன்னைய அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் நீதிமன்ற நடைமுறைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் மரண தண்டனைகளுடனும் சம்பந்தப்பட்டிருக்க முடியும்.

352 WGEID Annual report 2012, A/HRC/19/58/Rev.1pages1pages 111-113.

எல்ரீரீஉறுப்பினர்கள் சரணடைவதை அல்லது அதன் பின்னர் காணாமல் போயிருந்த சிவிலியன்கள் சரணடைவதை நேரில் பார்த்ததாக கூறப்படும் ஆட்களின் வாக்குமூலங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஏனைய சான்றுகளையும் பெற்றுக்கொண்டிருந்தது.[353] போரின் இறுதி நாட்களின் போது சரணடைந்த மொத்தம் 53 எல்ரீரீ உறுப்பினர்கள் அதன் அறிக்கை எழுதப்படும் சந்தர்ப்பத்தில் காணாமல் போயிருந்ததாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் பதிவு செய்திருந்தது.[354] இலங்கையின் சர்வதேச உண்மை மற்றும் நீதி கருத்திட்டம் 2009 மே 18 ஆம் திகதி அல்லது அதை அண்மித்த ஒரு திகதியில் இலங்கை இராணுவத்திடம் "சரணடைந்த"110 நபர்களின் பட்டியல் ஒன்றையும் பிரசுரித்திருந்தது.[355] இவ்விதம் இவர்கள் சரணடைவதை பலர் நேரடியாக பார்த்துள்ளனர்.

431. முல்லைத்தீவில் வேலியடைப்புக்குள் ஆட்களை தடுத்து வைக்கும் பிரதேசமொன்றில் நின்றிருந்த தமது குடும்ப உறுப்பினர்களை சிப்பாய்கள் அல்லது தகவல் வழங்கும் தமிழர்கள் அணுகி, அவர்களை எடுத்துச் சென்றார்கள் என சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர். எல்ரீரீ இயக்கத்துடன் தமக்குத் தொடர்பு இருந்து வருகின்றது என்ற விடயத்தை ஏற்றுக்கொண்ட நபர்கள், எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் அவர்களுடைய குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டு, புறம்பான வரிசைகளுக்கு நகர்த்தப்பட்டார்கள் எனவும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் கூறப்பட்டிருந்தது.

432. தம்மை அல்லது தம்மிடம் இருந்து பிரிக்கப்பட்டவர்களை எங்கு எடுத்துச் செல்லப் போகின்றார்கள் என்பது குறித்த தகவல்களை பாதுகாப்பு படையினர் தமக்குத் தரவில்லை என சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் கூறியிருந்தனர். (மனைவிமார், தாய்மார் மற்றும் பாட்டன், பாட்டி) ஆகியோரைக் கொண்ட) சாட்சிகள் தமது அன்புக்குரியவர்கள் எடுத்துச் செல்லப்படுவதை நேரில் பார்த்தார்கள். அவர்களில் இரண்டு வயது தொடக்கம் பத்து வயதிலான ஐந்து சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.

433. பெருமளவுக்கு ஆவணப்படுத்தப்பட்ட ஒரு சம்பவம் கத்தோலிக்க பிதா அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அவர்களின் தலைமையில் மே 18 ஆம் திகதி சரணடைந்த ஒரு குழு தொடர்பான சம்பவமாகும். அன்று காலையில் அருட்தந்தை பிரான்சிஸ், போரில் இருந்து ஒதுங்கியிருந்த எல்ரீரீ போராளிகள் எனத் தம்மை இலங்கை இராணுவத்திடம் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்த குழு

---

353 WS on file.இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கும் பெருந்தொகையான சமர்ப்பணங்கள் கிடைத்திருந்தன.

354 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, பந்தி 1.49: புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் தகவல்களின் பிரகாரம் 11,954 முன்னைய எல்ரீரீ இயக்கப் போராளிகளுக்கு, அவர்கள் சரணடைந்த பின்னர் அல்லது வேறு விதத்தில் கைது செய்யப்பட்ட பின்னர், புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் விடயம் ஆணைக்குழுவுக்கு தெரிய வந்திருப்பதாக கூறியிருந்தார்.

355 சர்வதேச உண்மை மற்றும் நீதி கருத்திட்டம் இலங்கை, இலங்கை : இன்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தடுப்புக் காவலில் இருக்கும் பொழுது காணாமல் போனவர்கள், மே 18, 2015, , http://tamilsforum.co.uk/wp-content/uploads/2015/05/Statement-18-May-2015-ITJP-SL-Disappearances.pdf

ஒன்றுடனும்,[356] இராணுவ அணியைச் சாராத[357] எல்ரீரீஈ உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்றுடனும் வட்டுவாகலில்தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரதேசத்தில் இருந்ததனையும் பெருந்தொகையான சாட்சிகள் பார்த்திருந்தார்கள்.[358]

434. எல்ரீரீஈ உறுப்பினர்கள் பாதுகாப்பு படை உறுப்பினர்களிடம் நேரடியாக ''சரணடைவதற்கு'' அவர் ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதை மக்கள் பார்த்திருந்தார்கள். அங்கிருந்த இராணுவ அதிகாரிகளில் "ஒருவரை சூழ பெருந்தொகையான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருந்தனர். அவருடைய சீருடையில் நிறைய பதக்கங்கள் இருந்தமையினால்" அவர் ஒரு சிரேஷ்ட பாதுகாப்பு துறை அதிகாரி என நம்பப்பட்டது.

435. சிறிது நேரத்தின் பின்னர், பாதுகாப்பு படையினர் அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களையும், அந்தக் குழுவையும் முல்லைத்தீவு வடிகட்டும் நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த முதலுதவி நிலையத்தின் இடதுபுறத்தில் இருந்த பாதைக்கு நடத்திச் செல்வதனை சாட்சிகள் பார்த்திருந்தார்கள்.[359] இறுதியாக தடுத்து வைத்திருக்கும் பிரதேசத்திற்கு கிழக்குப் பகுதியில் அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களும், எல்ரீரீஈ இயக்க உறுப்பினர் குழுவினரும் பேருந்துகளில் ஏறுவதனை ஒரு சில சாட்சிகள் பார்த்திருந்தார்கள்.[360] அதன் பின்னர் அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களையோ அல்லது அக்குழுவின் ஏனைய உறுப்பினர்களையோ எவரும் பார்க்கவும் இல்லை. அவர்களிடமிருந்து எத்தகைய தகவல்களும் வரவும் இல்லை.

436. அதன் பின்னர் (ஐந்து சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில்) இருபத்திரண்டு நபர்கள் சார்பில் 14 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வவுனியா உயர் நீதிமன்றம் -13(மார்ச் 20,2013-05, மார்ச் 22, 2013-07 மே 23, 2014 –01) மற்றும் 2015 யூன் மாதத்தில் மன்னார் உயர்நீதி மன்றத்தில் ஒரு மனு என இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அந்த இருபத்திரண்டு நபர்களும் வருமாறு: அருட் தந்தை பிரான்சிஸ் ஜோசப் முரளீதரன் நடேசு, அவருடைய மனைவி முரளீதரன் கிருஷ்ணகுமாரி மற்றும் இருபிள்ளைகள் (இளம்பரிதி என்றும் அழைக்கப்படும்) மகாலிங்கம் சின்னத்தம்பி, அவருடைய மனைவி மகாலிங்கம் சிவரஞ்சினி மற்றும் அச்சந்தர்ப்பத்தில் பத்து, எட்டு, மற்றும் மூன்று வயதில் இருந்த மூன்று பிள்ளைகள், சின்னத்துரை சசிதரன் (எழிலன்) செல்லையா விஸ்வநாதன்,பொன்னம்பலம் கந்தசாமி, உருத்திரமூர்த்தி கிருஸ்ணகுமார், கந்தசாமி துசிசங்கர், தியாகராஜா தினேஸ், நடேசமூர்த்தி விஷ்ணுகுமார், மகேந்திரன் முருகதாஸ், தங்கபாலசிங்கம் விஜயபாஸ்கர், சிவஞானம் கோபாலரத்தினம் மற்றும் அவருடைய மனைவி சிவலிங்கம் பத்மலோசின், காளிமுத்து சஞ்சீவன், மற்றும் வீ.பாலகுமார்.

437. இவர்களில் இருவரைத் தவிர, ஏனையவர்கள் அனைவரும் மே 18 ஆம் திகதி முல்லைத்தீவில் தடுத்து வைத்திருக்கும் பிரதேசத்தில் இருந்ததனை மற்றவர்கள் பார்த்திருந்தனர். ஒருவர் மே 18 ஆம் திகதி ஓமந்தையில் எடுத்துச்

[356] WS on file

[357] WS on file

[358] WS on file

[359] WS on file

[360] WS on file

செல்லப்படுவதனை மற்றவர்கள் பார்த்திருந்தனர். மற்றொருவர் காயமடைந்திருந்த காரணத்தினால் இரண்டு நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு தடுத்துவைத்திருக்கும் பிரதேசத்தில் உழவு இயந்திரம் ஒன்றில் எடுத்துச் செல்லப்படுவதனை ஆட்கள் பார்த்திருந்தனர். காணாமல் போன நபர்கள்இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொழுது கடைசியாக அவர்களை ஆட்கள் பாத்திருந்ததாக இந்த அனைத்து மனுக்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

438. இந்த மனுக்கள் தொடர்பாக பதிலளித்த இலங்கை இராணுவம் இந் நபர்களை தாம் கைது செய்யவோ தடுப்புக்காவலில் வைத்திருக்கவோ இல்லை எனக் கூறியது. ஒருசில சம்பவங்களில் “சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிருப்பதாகவும், இராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் வந்த சிவிலியன்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பல் என்பவற்றை உறுதிப்படுத்தியிருப்பதாகவும்” கூறி அது அவற்றுக்கு பதிலளித்திருந்தது. ஏனைய சம்பவங்கள் தொடர்பாக “எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கை பாதுகாப்பு படைகள் போர் தொடர்பாக பிரயோகிக்கப்படும் சர்வதேச தரநியமங்களை பின்பற்றியிருப்பதாக” பதிலளித்திருந்தது. காணாமல் போயிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கை இராணுவத்தினருடனான மோதலில் ஒன்றில் கொல்லப்பட்டுள்ளார்கள் அல்லது சட்ட விரோதமாக நாட்டிலிருந்து வெளியேறிச் சென்று, மேலைய நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள் என்று அது கூறியது.

439. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் “குறிப்பாக இறுதி நாட்களின் போது சரணடைந்த அல்லது இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டிருந்த எல்ரீரீஈ உறுப்பினர்கள் காணாமல் போயுள்ளார்கள் எனக் கூறப்படுவது தொடர்பாக கிடைத்திருக்கும் பெருந்தொகையான மகஜர்கள் குறித்து” அது“ஆழ்ந்த கவலையை” வெளிப்படுத்தியிருந்தது. “தாம் தமது கணவன்மாருடன் இணைந்து இராணுவ காவல் அரண்களுக்கு வருகை தந்தபொழுது, கணவன்மார் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட இருப்பதனால் அவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள் என தம்மிடம் கூறப்பட்டதாகவும், ஏனைய குடும்ப உறுப்பினர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் தங்கியிருந்த முகாம்களுக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் இந்நபர்களின் குடும்ப உறுப்பினர்கள் கூறினார்கள். ஏனைய ஒருசில சம்பவங்களில் தமது கணவன்மார் இலங்கை இராணுவத்திடம் சரணடைவதை அவர்களுடைய வாழ்க்கைத் துணைகள் கண்டிருந்தனர். மேலும், குடும்பங்கள் இராணுவத்திடம் சரணடையும் சம்பவங்கள் தொடர்பாகவும் ஆணைக்குழுவிடம் கூறப்பட்டிருந்தது. முன்வைக்கப்பட்ட மகஜர்களில் ஒரே சீராக காணப்படும் ஒரு விடயம், தமது கணவன்மாரை தாம் கடைசியாக பார்த்த சந்தர்ப்பம் அவர்கள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து, அவர்களால் தடுத்து வைக்கப்பட்ட சந்தர்ப்பம் என்பதாகும். அதன் பின்னர் அவர்கள் அந்நபர்களை பார்த்திருக்கவும் இல்லை அவர்களிடமிருந்து எந்த தகவல்களும் கிடைத்திருக்கவுமில்லை.”

440. “அத்தகைய திட்டவட்டமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தேவையான புலன் விசாரணைகளை நடத்துவது அரசின் தெளிவான கடமையாக இருந்து வருவதுடன், அத்தகைய புலன் விசாரணைகள் இராணுவத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களின் தரப்பில் எவையேனும் சட்ட விரோதமான செயல்கள் இடம்பெற்றிருப்பதாக சான்றுகளை முன்வைக்குமிடத்து, தவறிழைத்தவர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்து, அவர்களுக்கு தண்டனை வழங்குவதும் அதன் கடமையாக உள்ளது” என்ற விடயத்தை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வலியுறுத்தியிருந்தது. எனவே, இந்த நிலையில்

“இத்தகைய சம்பவங்கள் தொடர்பான முழுமையான புலன் விசாரணை ஒன்றை தொடக்கிவைப்பது தவிர்க்க முடியாததாகும்” என அது குறிப்பிட்டிருந்தது.[361]

441. எடுத்துச் செல்லப்பட்டிருக்கும் நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் போன்ற விடயங்களை தெளிவுபடுத்திக்கொள்ளும் பொருட்டு, இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக, அரசாங்கம் எவையேனும் நம்பகமான, முழுமையான, சுயாதீனமான புலன்விசாரணைகளை நடத்தியிருப்பதாக தெரியவில்லை. ஒருசில சம்பவங்களில் சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்படுவதனை சாட்சிகள் பார்த்திருந்த போதிலும், அவர்கள் போரில் கொல்லப்பட்டுள்ளார்கள் என அரசாங்கம் கூறியிருந்தது.

442. ஆயுதமோதலின் முடிவின் போது எத்தனை பேர் காணாமல் போயிருந்தார்கள் என்ற விடயம் தெளிவாகத் தெரியவில்லை. மோதல் பிரதேசங்களில் இருந்து வெளியில் வந்த நபர்களை பதிவுசெய்வது தொடர்பான விடயத்தில் வெளிப்படைத்தன்மை காணப்படாமையும், அதற்கான தெளிவான நடைமுறை இல்லாதிருந்தமையும், மேலும் அவ்விதம் வந்தவர்கள் பல்வேறு வகையினராக பிரிக்கப்பட்டமையும் - குறிப்பாக எல்ரீரீஈ உறுப்பினர்கள் மற்றும் சிவிலியன்கள் வேறாக பிரித்தெடுக்கப்பட்டமை - காணாமல் போன சம்பவங்களுக்கு வழிகோலிய ஒரு மேலதிக காரணியாக இருந்துவந்துள்ளது. ஆரம்ப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வடிகட்டல் செயன்முறை மற்றும் அதனையடுத்து தடுத்துவைக்கப்பட்டமை என்பன சுயாதீனமாக ஒரே சீரான விதத்தில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவில்லை. அதன் விளைவாக, புள்ளிவிபரங்கள் தெளிவற்றவையாக இருந்துவருவதுடன், மோதலின் இறுதிக்கட்டத்தின் போது கைதுசெய்யப்பட்ட ஏனையவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தொடர்பாக துல்லியமான கணிப்பீடுகளை மேற்கொள்ளமுடியாதுள்ளது.

443. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்திருக்கும் தகவல்களின் பின்புலத்தில், மோதலின் முடிவின் போது சரணடைந்த எல்ரீரீஈ உறுப்பினர்களில் கணிசமான எண்ணிக்கையினருக்கு நேர்ந்த கதி இதுவரையில் தெரியாதிருந்து வருகின்றது. தமது அன்புக்குரியவர்கள் காணாமல் போயுள்ளார்கள் என்ற விடயம் குறித்து பெருந்தொகையான சாட்சிகள் சாட்சியமளித்திருந்தனர். எனவே, அவர்களில் ஒவ்வொருவருக்கும், நேர்ந்த கதியையும் தெளிவுபடுத்திக்கொள்ளும் பொருட்டு,“சரணடைந்தவர்கள்”எனப் பதிவு செய்யப்பட்ட தனிபர்களின் பட்டியல் குறித்த சுயாதீனமான ஒரு மீளாய்வு மேற்கொள்ளப்படவேண்டும் என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது.

### உண்மையை கண்டறிவதற்கான நாட்டம்

444. பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தாமே காணாமல் போயுள்ளது மட்டுமன்றி அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் காணாமல் போயுள்ளனர். அத்தகைய பலவந்தமான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், அது அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு மத்தியில் “கடும் துயரத்தையும், மனவருத்தத்தையும்”[362]

[361] கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, பந்திகள் 4.318-4.319.
[362] பார்க்கவும்: பிரகடனத்தின் முகவுரை பந்தி 5

ஏற்படுத்தியுள்ளது. மேலும், அவர்களுடைய இந்தத் துன்பம் சித்திரவதை, கொடூரமான, ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் என்பவற்றுக்கு இணையானதாக இருந்து வருகின்றது.[363] சர்வதேச சட்டத்தின் கீழ் உண்மையை அறிந்துகொள்ளும் உரிமையை குடும்ப உறுப்பினர்கள் கொண்டிருப்பதுடன்,[364] காணாமல் போன நபருக்கு நேர்ந்த கதி அல்லது அவர் எங்கிருக்கின்றார் என்ற விடயம் என்பவற்றையும், அவர் காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், அக்குற்றச் செயலைப் புரிந்த நபர்களின் அடையாளம் தொடர்பான விபரங்களையும் தெளிவுபடுத்திக்கொள்வதற்கென சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை எடுத்துக்காட்டும் கடப்பாட்டினை அரசு கொண்டுள்ளது.[365] உண்மையை கண்டறிவதற்கான உரிமை மீதுவிதிக்கப்படும் கட்டுப்பாடுகள், உறவினர்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கும் இடையறாத துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதுடன், மேலும் நீடிக்கவும் செய்கின்றது.[366] ஒரு காணாமல் போன சம்பவத்தைப் பொறுத்தவரையில், காணாமல் போன நபருக்கு நேர்ந்த கதி மற்றும் அவர் எங்கிருக்கின்றார் என்பன போன்ற தகவல்களை அரசு மறைத்துக் கொண்டிருக்கும் வரையில் அது தொடர்ந்தும் ஒரு உரிமை மீறலாக இருந்துவருகின்றது.[367]

445. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் காணாமல் போதல் சம்பவங்கள், குறிப்பாக பெண்கள் மீது எடுத்துவரக்கூடிய தாக்கம் குறித்து கவனத்தை ஈர்த்திருந்தது: “காணாமல் போயிருக்கும் நபர்கள், ஆட் கடத்தல்கள், தன்னிச்சையான தடுத்து வைத்தல், நீண்டகாலமாக காலவரையறையற்ற விதத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருத்தல் மற்றும் தலைமறைவாகிய சம்பவங்கள் என்பன, பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்கள் மீது ஒரு நேரடித்தாக்கத்தை எடுத்துவருகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய கணவன்மார், மகன்மார், தந்தைமார் அல்லது சகோதரர்கள் ஆகியோரே அவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாரம்பரிய குடும்பங்களில் வருமானம் ஈட்டுவோர் என்ற முறையிலும், பாதுகாப்பு வழங்குவோர் என்ற முறையிலும் அவர்கள் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றார்கள். அந்த நிலையில், இப் பிரச்சினைகள் ஒரு முன்னுரிமை விடயமாக

---

363 பிரகடனத்தின் உறுப்புரை 1, பந்தி 2: “பலவந்தமாக காணாமல் ஆக்கப்படும் ஏதேனும் ஒரு செயல் சித்திரவதை, ஏனைய கொடூரமான,ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது இழிவான விதத்தில் நடத்தப்படுதல் அல்லது தண்டனை அளிக்கப்படுதல் என்பவற்றுக்கு உட்படுத்தப்படாதிருக்கும் உரிமையை உத்தரவாதப்படுத்தும் சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளை மீறுகின்றது.”

364 ஜெனீவா சமவாயத்தின் ஏற்பாடு I இன் உறுப்புரை 32 பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாக்கும் சர்வதேச சமவாயம் 2006, உறுப்புரை 24 பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதுதொடர்பான பிரகடனத்தின் உறுப்புரை 13 WGEID செயல்குழுவின் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக உண்மையை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான பொதுக் குறிப்பு.

365 WGEID, பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக உண்மையை அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான பொதுக் குறிப்பு.

366 Ibid.

367 WGEID, பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பது தொடர்பான பிரகடனத்தின் உறுப்புரை 17 தொடர்பான பொதுக் குறிப்புE/CN.4/2001/68

கவனத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், தமது அன்புக்குரியவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதனை அறிந்துகொள்ளும் உரிமையையும், இந்நாட்டின் சமமான பிரஜைகள் என்ற முறையில் உண்மையை அறிந்து, சட்டரீதியான நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையையும் இப்பெண்கள் கொண்டுள்ளார்கள் என்ற விடயம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்."[368]

446. தமது குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நேர்திருக்கின்றது என்பதைக் கண்டறிந்து கொள்வதற்காக தாம் பல்வேறு நடவடிக்கைகளையும், வழிமுறைகளையும் மேற்கொண்டதாக சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் தெரிவித்திருந்தனர். காணாமல் போன நபர்களின் குடும்ப உறுப்பினர்கள் பொலிஸ், இலங்கை இராணுவம், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பல்வேறு உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுக்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான நிறுவனங்களில் முறைப்பாடுகளை செய்துள்ளனர். ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனங்கள் அவர்களுடைய முறைப்பாடு கிடைத்தமையை மட்டுமே அறிவித்திருந்தன. அது தவிர, மேலதிக தகவல்கள் எதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.[369] அல்லது சம்பந்தப்பட்ட நபர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்ற விடயம் மறுக்கப்பட்டிருந்தது.

447. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த பெரும்பாலான சம்பவங்களைப் பொறுத்தவரையில், உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக தாம் ஒரு முறைப்பாட்டைச் செய்வதற்கு முயற்சித்த பொழுது, காணாமல் போன நபர் (நபர்கள்) தொடர்பான வாக்கு மூலத்தை பொலிஸார் சிங்கள மொழியில் பதிவு செய்தார்கள் என்றும், அந்த வாக்கு மூலங்களில் கையொப்பமிடுமாறு குடும்ப உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தனர். எனினும், சம்பந்தப்பட்ட ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருக்கின்றது என்பதனை புரிந்து கொள்ளாமலேயே வழமையாக அவற்றில் தாம் கையொப்பமிட்டிருப்பதாவும் அவர்கள்கூறினார்கள்.[370] ஆனால்,இந்தச் சம்பவங்கள் எவற்றிலும் அவர்களுடைய வாக்குமூலங்கள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.[371]

448. காணாமல் போயிருக்கும் தமது உறவினர்களுக்கு நேர்ந்த கதி குறித்தோ அல்லது அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது குறித்தோ எத்தகைய தகவல்களையும் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில், அவர்கள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இது இந்தத் தேடலை உளவியல் ரீதியாகவும், அதேபோல நிதி ரீதியாகவும் மிகவும் கடினமான

---

[368] கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, முதன்மை அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றின் சாராம்சம்

[369] Human Rights Watch, அமைப்பு மீண்டும் மீண்டும் இடம்பெறும் துன்பம். இலங்கையில் இடம்பெறும் "காணாமல் போகும் சம்பவங்கள்" மற்றும் கடத்தல்கள் என்பவற்றுக்கான அரசின் பொறுப்பு, 2008

[370] மேலும் பார்க்கவும்: இலங்கை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காணாமல் போன சம்வங்கள் தொடர்பான கமிட்டியின் அறிக்கையின் சாராம்சம், அக்டோபர் 28, 2003. பக். 8

[371] கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம். HRW, மீண்டும் மீண்டும் இடம்பெறும் துன்பம்….. Op.cit.

ஒரு செயற்பாடாக ஆக்கியிருந்தது. பல்வேறு அரசாங்க அலுவலகங்களுக்கு சென்றபொழுது ஒரு மொழிபெயர்ப்பாளரை அமர்த்த வேண்டியிருந்தது என்றும், அவருக்கு ஒரு கொடுப்பனவைச் செலுத்த வேண்டியிருந்தது என்றும் சாட்சியமளித்த பெண்மணி ஒருவர் கூறினார். காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்து அல்லது குற்றச்செயலை நிகழ்த்தியதாக கூறப்படும் நபர்கள் குறித்து குடும்ப உறுப்பினர்களிடம் ஒருசில தகவல்களே இருந்துவரும் சந்தர்ப்பத்தில் அல்லது எத்தகைய தகவல்களும் இல்லாத சந்தர்ப்பத்தில் அவர்கள் வழமையாக இடம்பெயர்ந்த பல்லாயிரக்காண தமிழ் மக்கள் வசித்து வந்த உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான பல்வேறு முகாங்களில் தமது உறவினர்களை தேடுவதற்கு முயற்சித்துள்ளார்கள்.[372]

449. காணாமல் போன நபர்களின் குடும்பங்களில் ஒருசில குடும்பங்களே தகவல்களை பெற்றுக் கொள்வதற்கென ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. அத்தகைய மனுக்கள் தொடர்பான விண்ணப்பங்கள், போதியளவிலான புலன் விசாரணைகள் நடத்தப்படாமை, தாமதங்கள், சாட்சிகளின் பாதுகாப்பு அலட்சியம் செய்யப்பட்டமை மற்றும் சான்றுகள் இல்லை என்ற அடிப்படையில் நீதிமன்றங்கள் தமது தற்றுணிபின் அடிப்படையில் வழக்குகளை தள்ளுபடி செய்தமை போன்ற பல்வேறு காரணிகளினால் பயனுள்ள நிவாரணத்தை பெற்றுத்தந்திருக்கவில்லை. உதாரணமாக, 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் சரணடைந்த ஒரு குழு காணாமல் போன சம்பவம் தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் வவுனியா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு இன்று வரையில் நிலுவையில் இருந்துவருகின்றது.

450. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு,காணாமல் போதல் தொடர்பாக அதற்கு கிடைத்திருந்த பெருந்தொகையான முறைப்பாடுகளுக்கு எதிர்வினையாற்றும் விதத்தில், தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நபர்கள் குறித்த மற்றும் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இடங்கள் குறித்த ஒரு மத்திய தரவுத்தளம் உருவாக்கப்படவேண்டுமென பரிந்துரை செய்திருந்தது. அப்பொழுது அந்த தரவுத்தளத்தை அவர்களின் குடும்பத்தவர்களும், அவர்களுடைய சட்டத்தரணிகளும் அணுகக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும். பல வருடங்களுக்கு முன்னர்,பலவந்தமாக அல்லது தமது விருப்பத்துக்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான (WGEID) செயல் குழுவும் இதே பரிந்துரையை முன்வைத்திருந்தது. ஆனால், அதன்மூலம் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. கமிட்டி மற்றும் மனித உரிமைகள் கமிட்டி என்பவற்றுக்கான அதன் பருவகால அறிக்கைகளில், அரசாங்கம், அத்தகைய தரவுத்தளங்கள் இருந்துவரும் விடயத்தை குறிப்பிட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இந்தத் தகவலின் உண்மைத்தன்மையை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் உறுதிப்படுத்திக்கொள்ளமுடியாதிருந்தது. இத்தரவுத்தளங்களை அணுகுவதற்கான வாய்ப்பும் அதற்கு வழங்கப்படவில்லை. தற்பொழுது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் பட்டியல் ஒன்றை தொகுப்பதில் புதிய அரசாங்கம் சிரமங்களை எதிர்கொண்டுவருகின்றது என்ற விடயம் இந்த தகவல்கள் முன்னர் முறையான ஒழுங்கில், வெளிப்படையான விதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதனையே எடுத்துக்காட்டுகின்றது.

---

372 WS on file

451. ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டதைப் போல, ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த இடங்கள் தொடர்பாக வெளிப்படைத்தன்மை காணப்படாத நிலை - போரின் இறுதி நாட்களின் போது பாரிய எண்ணிக்கையில் ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டமை மற்றும் மோதல் முடிந்து பல வருடங்களின் பின்னர் ஆட்கள் தடுப்புக்காவலுக்கு எடுக்கப்பட்டமை என்பன தொடர்பாகவெளிப்படையான தகவல்கள் இல்லாத தன்மை – மற்றும் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பான மத்திய பதிவேடு ஒன்று இல்லாத நிலை என்பன பலவந்தமாக ஆட்கள்காணாமல் ஆக்கப்படும் சம்பவங்களுக்கு வசதி செய்து கொடுத்திருப்பதுடன், குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களை தேடிக் கண்டுபிடிப்பதனையும் சாத்தியமற்றதாக்கியுள்ளன.

452. ஒருசில சம்பவங்களில் தமது அன்புக்குரியவர்கள் தொடர்பாகச் செய்திகளை தெரிந்துகொள்வதற்கு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்த உறவினர்களை, அடையாளம் காணப்படாத நபர்கள் தொடர்பு கொண்டிருந்ததுடன், அவர்களுடைய உறவினர் உயிருடன் இருக்கின்றார் என்றும், அவர்கள் இருக்கும்இடத்தை கூறுவதற்கு தமக்கு பணம் வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், அவ்விதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட பின்னர் மேலும் தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டில் வன்னியில் தனது மகள் காணாமல் போயிருந்த சாட்சி ஒருவர்,அவருடைய மகள் முகாம் ஒன்றில் இருப்பதாக அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று தனக்கு வந்ததாக கூறினார்.அவருக்கு மகளை காட்டுவதற்கு தனக்கு பணம் வழங்கப்படவேண்டும் என்றும் அந்த நபர் சொன்னார். மேலும், அவருடைய மகளை பார்ப்பதற்கும், அவருடன் பேசுவதற்கும் அவருக்கு அனுமதியளிப்பதாக வாக்குறுதியளித்து, அதற்கு தனக்கு மேலும் பணம் வழங்கவேண்டும் என அந்நபர் கேட்டிருந்தார். பாதிக்கப்பட்டவர் பெருந்தொகையான பணத்தை செலுத்தியிருந்தபோதிலும், தனது மகளை ஒருபோதும் பார்க்கக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை.[373]

453. தமது அன்புக்குரியவர்களை தேடிக்கொண்டிருக்கும் பெருந்தொகையானோரின் நிலைமையை பிரகீத் எக்னலிகொடவின் சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது. அவர் வீடு திரும்பத் தவறியிருந்த சந்தர்ப்பத்தில், முதலில் அது தொடர்பாக வழக்கை ஆரம்பிப்பதற்கு பொலிஸார் மறுப்புத் தெரிவித்திருந்தனர். பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்டிருந்த ஒரு கட்டளையை அடுத்து 2010 ஜனவரி 27 ஆம் திகதி மிரிஹான பொலிஸ் நிலையம் இது தொடர்பான புலன் விசாரணையை ஆரம்பித்திருந்தது. இந்தவழக்கு 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி குற்றவியல் புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், அண்மைக்காலம் வரையில் அது தொடர்பாக பெறுபேறுகள் கிடைத்திருக்கவில்லை.[374]

454. அவருடைய மனைவி சந்தியா எக்னலிகொடவும் 2010 பெப்ரவரி 19 திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓர் ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிசார் உடனடியாக விரிவான ஒருபுலன் விசாரணையை ஆரம்பிக்க வேண்டுமென அவர் அந்த மனுவில் கேட்டுக்கொண்டிருந்தார். எவ்வாறிருப்பினும், இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில், தமக்கு புலன்விசாரணைகளை மேற்கொள்வதற்கு மேலும் அதிக கால அவகாசம் தேவைப்படுகிறது எனக் கேட்டு பொலிசார் மீண்டும் மீண்டும் வழக்கை ஒத்திவைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர். பல வருட காலமாக நீதிமன்றங்களில் பொலிசாரினால் எந்த

373 பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

374 WS on file

ஆதாரங்களும் முன்வைக்கப்படவில்லை. இந்த வழக்கு மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதுடன், நீதவான் விடுமுறையில் இருந்து வந்த காரணத்தினால் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அது 2015 பெப்ரவரி 6ஆம் திகதி நீதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், நீதவான் விடுமுறையில் இருந்த காரணத்தினால் மார்ச் 26 ஆம் திகதிவரையில் ஒத்திவைக்கப்பட்டது. எக்னலிகொடவின் சம்பவம் பலவந்தமாக அல்லது தமது விருப்பத்துக்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான செயல் குழுவினால் அதன் அவசரகால நடைமுறையின் கீழும் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது.[375]

455. 2011 நவம்பர் 9 ஆம் திகதி அப்போதைய சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் கமிட்டியிடம் பின்வருமாறு தெரிவித்திருந்தார்: “ஊடகவியலாளர் எக்னலிகொட தொடர்பாக ... அந்த விடயத்தை நாங்கள்மிகவும் உன்னிப்பான விதத்தில் புலன் விசாரணை செய்துள்ளோம்.எமது தற்போதைய தகவல்... திரு. எக்னலிகொட ... வெளிநாடு ஒன்றில் தஞ்சம் புகுந்துள்ளார் என்பதாகும்....”[376] இந்த வாக்குமூலம் கமிட்டிக்கு எழுத்து மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதுடன், திருமதி எக்னலிகொட அதனை இந்த வழக்கை கையாளும் கொழும்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். அதனையடுத்து சட்டமா அதிபர் சித்திரவதைக்கு எதிரான கமிட்டியின் முன்னால் தான் குறிப்பிட்டிருந்த குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

456. அதன் பின்னர் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டிருந்ததுடன், அவை மனித உரிமைகள் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்ட[377] மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையில் எடுத்து விளக்கப்பட்டிருந்தன. 2015 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறுவதற்கு சற்று முன்னர் ஊடகவியலாளர் மற்றும் கருத்துச் சித்திரக் கலைஞர் பிரகீத் எக்னலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பாக இரண்டு லெப்டினன்ட் கேர்ணல்கள் மற்றும் முன்னாள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான இராணுவ ஆளணியினரை தாம் கைது செய்திருப்பதாக பொலிசார் அறிவித்தனர்.[378] இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட புலன் விசாரணைகள் எக்னலிகொட 2010 ஜனவரி 24 ஆம் திகதி கடத்தப்பட்டதனை அடுத்து வடமத்திய மாகாணத்தில் கிரிதலையில் அமைந்திருக்கும் இராணுவ முகாமொன்றுக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தார் என்பதனை எடுத்துக் காட்டியிருப்பதாக ஊர்ஜிதம் செய்யப்படாத ஊடக அறிக்கைகள் குறிப்பிட்டிருந்தன.[379] இது மிக முக்கியமான ஒரு மாற்றமாக இருந்து வந்த அதேவேளையில், இந்த புலன்விசாரணை கைதுமற்றும் காணாமல் போதல் தொடர்பான சந்தர்ப்ப சூழ்நிலைகளை மட்டுமன்றி,

---

[375] பலவந்தமாக அல்லது தமது விருப்பத்துக்கு மாறான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான செயல்குழுவின் அறிக்கை,A/HRC/16/48, 26 January 2011

[376] சித்திரவதைக்கு எதிரான கமிட்டியின் தலைவர் திரு. மொஹான் பீரீஸ் அவர்களை மேற்கோள் காட்டி முன்வைத்த கடிதம், மே 11, 2012, இந்தக் கடிதம் இந்த வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (திகதி தெரியாது). மேலும் பார்க்கவும்.CAT/C/SR.1033, 22 May 2012

[377] A/HRC/30/6/

[378] http://www.dailynews.lk/?q=police-legal/cid-arrests-four-army-officers, http://www.dailynews.lk/?q=local/sgt-major-confesses-grilling-ekneligoda

[379] http://www.dailynews.lk/?q=local/sgt-major-confesses-grilling-ekneligoda

ஏனைய பல சம்பவங்களைப் போலவே, மூடிமறைக்கப்பட்ட விடயங்களையும் மற்றும் கட்டளைச்சங்கிலி தொடர்பு போன்ற விடயங்களையும் தெளிவுபடுத்த வேண்டுமென இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது.

**மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை**

457. மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்திற்கு[380] 2010ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் "பயங்கரவாத அல்லது கிளர்ச்சி நடவடிக்கைகள் அல்லது உள்நாட்டு கலவரங்கள் என்பவற்றின் காரணமாக இலங்கையில் இடம்பெற்றிருந்த உள்நாட்டு குழப்பங்களின் போது" ஒரு வருடத்திற்கு மேல் காணாமல் போயிருப்பதாக அறிவிக்கப்படும் எவரேனும் நபர் ஒருவரை, அவர் மரணித்திருப்பதாக பதிவுசெய்வதற்கு குடும்பங்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

458. காணாமல் போன நபர்களின் உறவினர்கள் மரணச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பங்களை முன்வைப்பதற்கு இந்தச் சட்டம் இடமளிக்கும் அதேவேளையில், சம்பந்தப்பட்ட நபர் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான மற்றும் தன்னிச்சையான கைதையடுத்து காணாமல் போயுள்ளார் என்ற விடயத்தை அங்கீகரிக்கக்கூடிய எந்தவொரு நிலையையும் அது எடுத்து வரவில்லை அல்லது தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அது உறவினர்களுக்கு தெளிவுபடுத்தவும் இல்லை. மேலும், மரணச் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்வதானது, குறிப்பிட்ட நபர் காணாமல் போயிருக்கும் சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகளை நிறுத்துவதற்கு வழிகோல முடியும் என்ற கவலையையும் சாட்சிகள் தெரிவித்திருந்தனர்.

459. பணவடிவிலான நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மரணச் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்ட அல்லது அத்தகைய சான்றிதழ்களை ஏற்றுக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் சாட்சியங்களையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பெற்றுக்கொண்டுள்ளது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் சம்பவங்களில், உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்த சந்தர்ப்பங்களிலும் அல்லது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்ட சந்தர்ப்பங்களிலும் அதேபோல காணாமல் போன நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட பின்புலத்திலும் இந்த வழக்கம் இடம்பெற்றிருந்தது.[381]. மனித உரிமைகள் சட்டத்தின் பொதுவான கோட்பாடு என்றமுறையில் பலவந்தமாக காணாமல் போகச்செய்யப்பட்டிருக்கும் எந்தவொரு நபரும், அவருடைய குடும்ப

[380] இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றம், மரணங்களை பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள் ) சட்டம், இல. 19, 2010 http:// documents. gov.lk /Acts /2010 /Registration%20of%20Death%20Act%20No.%2019%; 1995 ஆம் ஆண்டில் அரசாங்கம் மரணித்தவர்கள் எனக் கருதப்படும் நபர்கள் தொடர்பாக மரணச் சான்றிதழ்களை வழங்கும் செயல்முறையை எளிமைப்படுத்துவதற்கும், துரிதப்படுத்துவதற்குமென 2 ஆம் இலக்க மரணங்களை பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இயற்றியது. 1998 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 58 ஆம் இலக்க மரணங்களை பதிவு செய்யும் ( தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இந்த நடைமுறை மேலும் எளிமையாக்கப்பட்டது.

[381] Source on file.

-

உறுப்பினர்கள் ஆட்சேபணைதெரிவிக்குமிடத்து, மரணித்தவராக கருதப்பட மாட்டார்.[382]

460. பொருளாதார காரணங்களினால் பெரும்பாலான குடும்பங்கள் மரணச் சான்றிதழ்களை ஏற்றுக்கொண்டுள்ளன. சொத்துக்களைக் கைமாற்றுதல், மறுமணம், நட்டஈட்டுக்கான விண்ணப்பங்கள், சமூக நலன்புரிச் சேவைகள் மற்றும் ஓய்வூதியங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்ளல் என்பவற்றுக்கு இடமளிக்கும் ஒரேயொரு சட்ட ரீதியான ஆவணமாக இச்சான்றிதழ்களே இருந்து வருகின்றன. கடந்த காலத்தில் ஒருசில சம்பவங்களில் அது நட்ட ஈட்டினை பெற்றுக்கொள்வதற்கும் சம்பந்தப்பட்டவர்களை இயலச் செய்துள்ளது.[383]

461. எவ்வாறிருப்பினும், நிரூபணம் இல்லாமல் தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான மரணச் சான்றிதழ்களை ஏற்றுக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த உறவினர்கள் பலரின் சாட்சிகளையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பெற்றுக் கொண்டிருந்தது.[384] கடைசியாக ஓமந்தை சோதனைச்சாவடியில் தனது மகளை பார்த்திருந்த ஒரு பெண்மணி அப்பிள்ளையின் மரணச் சான்றிதழை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்தார். தனது மகளின் மரணம் குறித்த சான்றுகள் எதுவும் இல்லாத நிலையிலும், அம்மகளை நல்லடக்கம் செய்ய முடியாத நிலையிலும் அச்சான்றிதழை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அப்பெண்மணி கூறியிருந்தார்.[385]

462. எவ்வாறிருப்பினும், மணரச்சான்றிதழ்களை வழங்குவதும், நட்டஈட்டுக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நேர்ந்த கதி மற்றும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விபரம் என்பன தொடர்பான உண்மையை கண்டறிவதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் கடப்பாட்டினை இல்லாமல் செய்துவிடவில்லை. மேலும், அவ்விதம் காணாமல் போன நபர்களின் உடல் எச்சங்களை குடும்பங்களிடம் கையளிக்கவேண்டிய கடப்பாட்டினையும் அரசு கொண்டுள்ளது. அந்த நிலையில் அவர்களால் அந்த உடல்களை தமது பாரம்பரியம் அல்லது சமயம்,தமது கலாசாரம் என்பவற்றுக்கு பொருந்தக்கூடிய விதத்தில நல்லடக்கம் செய்ய முடியும்.[386]

---

[382] WGEID, உறுப்புரை 19 குறித்த பொதுக் குறிப்பு (நட்ட ஈடு பெற்றுக் கொள்வதற்கான உரிமை) E/CN.4/1998/43, பந்தி 74; மேலும் பார்க்கவும் A/HRC/22/45, பந்தி 50

[383] 1995 ஆம் ஆண்டிற்கும் 1999 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கு சுமார் 15,000 மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நட்டஈடும் வழங்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களின் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டிருந்த விசாரணை ஆணைக்குழுக்கள், மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட வேண்டும் என முன்வைத்திருந்த பரிந்துரையை அடுத்து, இது இடம்பெற்றது. (கீழே பார்க்கவும்)

[384] WS on file

[385] Source on file

[386] WGEID, உண்மையை அறிந்து கொள்வதற்கான உரிமை குறித்த பொதுக்குறிப்பு... பந்தி 6: "நேர்ந்த கதி மற்றும் இருக்கும் இடம் என்பன தொடர்பான உண்மையை தெரிந்து கொள்வதற்கான உரிமை பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது: காணாமல் போன நபர் மரணித்திருப்பதாக எப்பொழுது தெரிய வந்தது, தமது அன்புக்குரியவரின் சடலத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான குடும்பத்தினரின் உரிமை, தமது பாரம்பரியம் சமயம் அல்லது கலாசாரம் என்பற்றின் பிரகாரம் அச் சடலம் தொடர்பாக இறுதிக் கிரிகைகளை புரியும் உரிமை குறிப்பிட்ட நபரின் சடலம் தெளிவாகவும், சர்ச்சைக்கு இடமளிக்காத

463. ஒரு நபர் தொடர்ச்சியாக காணாமல் போன நிலையில் இருந்துவரும் பொழுது, அவர் தொடர்பான மரணச்சான்றிதழ் ஒன்றினை ஏற்றுக்கொள்வது அந்த நபர் தொடர்பாக நீதியை பெற்றுக் கொள்வதற்கான ஒருதடையாக இருந்து வரவில்லை என்ற விடயத்தை தெளிவாக எடுத்துக் காட்டும் விதத்தில் சட்டமொன்றை உருவாக்கவேண்டுமென இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பரிந்துரை செய்கின்றது. மரணச்சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளாத காணாமல் போன நபர்களின் உறவினர்கள் அதன் விளைவாக தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

### காணாமல் போன நபர்களின் உறவினர்கள் மற்றும் பலவந்தமாக காணாமல் போகச்செய்யப்பட்டவர்கள் தொடர்பாக செயற்பட்டு வரும் மனித உரிமை பாதுகாவலர்கள் ஆகியோருக்கு எதிரான பழிவாங்கல் செயல்கள்

464. காணாமல் போன நபர்களின் உறவினர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இடைவிடாத, தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், கட்டுப்பாடுகள் மற்றும் துன்புறுத்தல்கள் என்பவற்றுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதுடன்,உண்மை,நீதி மற்றும் பொறுப்புக்கூறும் நிலை என்பவற்றை கோருவதில் இருந்தும் அவர்களை தடுக்கும் நோக்கத்துடன் அத்தகைய செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. கடந்த காலப் பிரிவின் போது (பிரதானமாக குற்றப் புலனாய்வு பிரிவு, பயங்கரவாத புலனாய்வு பிரிவு, விசேட அதிரடிப்படை என்பவற்றைக் கொண்ட) பொலிஸ் மற்றும் தமது அன்புக்குரியவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு முறைப்பாடுகளை முன்வைத்திருக்கும் நபர்கள் அல்லது அதற்கென பிரச்சாரம் செய்து வரும் நபர்கள் ஆகியோரின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்கு என செயற்பட்டுவந்ததாக கூறப்படும் இலங்கை இராணுவத்தின் அலகுகள் என்பன இந்த வழமையை பின்பற்றி வந்துள்ளன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பெருந்தொகையான சம்பவங்களைப் பொறுத்தவரையில், காணாமல் போன நபர்களின் உறவினர்களின் வீடுகளுக்குப் பாதுகாப்பு படையினர் சென்று, அவர்களிடம் விசாரணைகளை நடத்தியுள்ளனர் அல்லது அவர்களை விசாரணைக்கு வருமாறு அழைத்து, அங்கு அவர்களை மிரட்டியுள்ளனர். குறிப்பாக, இலங்கையில் காணாமல் போயிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாக இருந்து வருவதனால், இவ்விதம் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக உண்மை மற்றும் நீதி என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு முயலும் பெண்கள் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருந்து வந்தனர்.[387]

---

விதத்திலும் இனங்காணப்படுதல் வேண்டும். DNA பகுப்பாய்வுக்கு ஊடாக இனங் காணப்படுவதனையும் இது உள்ளடக்குகின்றது. அரசோ அல்லது வேறு ஏதேனும் அதிகார அமைப்போ உடலை அடையாளம் காணும் செயன்முறைக்கு பொறுப்பேற்கக் கூடாது மேலும், அந்த உடலை அந்த அமைப்புக்கள் நல்லடக்கம் செய்யவும் கூடாது. குடும்பத்தின் முழுமையான பங்களிப்பு இல்லாமலும்,அத்தகைய வழிமுறைகள் குறித்துப் பொது மக்களுக்கு முழுமையாக தகவல்கள் வழங்கப்படாத நிலையிலும் அந்த உடல்ளை அடக்கம் செய்யவும் கூடாது. அரசுகள் தமக்கு கிடைக்கும் வளங்களின் உச்ச மட்டத்தில் தடய நிபுணத்துவம் மற்றும் அடையாளம் காணும் விஞ்ஞான ரீதியான முறைகள் என்வற்றைப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். சர்வதேச உதவி மற்றும் ஒத்துழைப்பு என்பனவும் இதில் உள்ளடக்கப்படுகின்றன.”

[387] பலவந்தமாக அல்லது சுயவிருப்பற்ற விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான செயற்குழு, பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பெண்கள் குறித்த பொதுக் குறிப்பு A/HRC/WGEID/98/2,

465. கைது செய்யப்பட்ட பின்னர் -1990 களிலும், 2006, 2009 மற்றும் 2010 ஆகிய வருடங்களிலும் - காணாமல் போயிருந்தவர்களின் மனைவிமார் பெருந்தொகையினர் தாம் எவ்வாறு அச்சுறுத்தலுக்கும்,துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள் என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் எடுத்து விளக்கியிருந்தார்கள். ஒரு சம்பவத்தில், தனது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என இடைவிடாது விசாரணைகளை மேற்கொண்டுவந்த ஒருவர் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டிருந்தார். ஒருசில சம்பவங்களில் இலங்கை இராணுவம் இதனை மேற்கொண்டது என்றும்) ஏனைய சம்பவங்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றும், கூறப்படுகிறது.[388]

466. சர்வதேச பொறிமுறைகளைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறும் நிலையை வலியுறுத்திய குடும்ப உறுப்பினர்களும் இலங்கை அதிகாரிகளினால் துன்புறுத்தல்களை எதிர்கொண்டிருந்தனர். சந்தியா எக்னலிகொட ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் பேரவையின் 19ஆவது அமர்வில் உரை நிகழ்த்திய பின்னர், இலங்கை அரசாங்கத்தின் தூதுக்குழுவின் பெருந்தொகையான ஆதரவாளர்களினால் அச்சுறுத்தல்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டார். அவர் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து பணம் பெற்று, நாட்டிற்குத் துரோகமிழைப்பதாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.[389]ஜெனீவாவில் இருந்து நாடு திரும்பிய மறுநாள் திருமதி எக்னலிகொட தனது கணவன் காணாமல் போனமை தொடர்பான உயர் நீதிமன்ற வழக்கு விசாரணையொன்றுக்கு சமூகமளித்திருந்ததாக கூறப்படுகின்றது. அச்சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபரின் பிரதிநிதி அவரது கணவர் காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்து எதுவும் கேட்காமல்,மனித உரிமைகள் பேரவையில் அவர் பங்கேற்றமை தொடர்பான விடயங்கள் குறித்து ஒரு மணித்தியாலயத்திற்கு மேல் அவரிடம் கேள்விகளைத் தொடுத்திருந்தார்.

467. பலவந்தமாக அல்லது தமது விருப்பத்துக்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான செயல் குழு (WGEID) 2014 இல் அதன் இறுதி ஆண்டறிக்கையில், அறிக்கையிடும் காலப் பிரிவின் போது பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கும் நபர்களின் பிரச்சினை தொடர்பாக செயற்பட்டுவரும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிராக இடம்பெற்றதாக கூறப்படும் அச்சுறுத்தல் சம்பவங்கள் மற்றும் பழிவாங்கல்கள் என்பன தொடர்பாக நான்கு அவசர குற்றச்சாட்டுக் கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக கவலையுடன் குறிப்பிட்டிருந்தது.[390]

## பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நீதி மற்றும் பொறுப்புக் கூறுதல்

### பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களை புலன் விசாரணை செய்வதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகி பாத்திரம்

468. 1996 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு, அவசர கால ஒழுங்குவிதிகளின் கீழ் அல்லது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் எந்தவொரு நபரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும்

[388] WS on file

[389] பார்க்கவும்: ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை: சந்தியா எக்னலிகொட துன்புறுத்தப்பட்டார், 2012, http://www.humanrights.asia/news/ahrc-news/AHRC-STM-092-2012

[390] A/HRC/24/49, para 94

பொழுது அது தொடர்பாக அறிவிக்கப்படுதல் வேண்டும். அவ்விதம் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களைப் போய் பார்ப்பதற்கான உரித்தினையும் அந்த ஆணைக்குழு கொண்டுள்ளது.[391]

469. கைது செய்யப்பட்டிருக்கும் சம்பவங்கள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென ஆட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த பல இடங்களுக்கு இந்த ஆணைக்குழு 2006 ஆம் ஆண்டு வரையில் விஜயம் செய்தது. யாழ்ப்பாண பிரதேசத்தில் இடம்பெற்ற காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான கமிட்டி இந்த ஆணைக்குழுவினால் 2002 இல் அமைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1998 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற காணாமல் போன சம்பவங்களை கவனத்தில் எடுப்பதற்கும், நிவாரணம் மற்றும் உதவி என்பன தொடர்பான விசேட தேவைகளைக் கொண்டிருக்கும் முறைப்பாட்டாளர்களின் சம்பவங்களை இனங்கண்டு கொள்வதற்கும் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டது. 2003 அக்டோபர் மாதத்தில் முடிவாக்கப்பட்ட காணாமல் போதல் தொடர்பான இந்த கமிட்டியின் அறிக்கை, காணாமல் போன நபர்களின் பட்டியல்களையும் அதே போல அவற்றுக்கு பொறுப்பாக இருந்தவர்கள் எனக் கூறப்பட்ட நபர்களின் பட்டியல்களையும், உள்ளடக்கியிருந்தது. எவ்வாறிருப்பினும், இது தொடர்பாக மேற்கொண்டு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்பதனை எடுத்துக் காட்டுவதற்கு சிறிதளவான தகவல்களே இருந்து வருகின்றன.[392]

470. மனித உரிமைகள் ஆணைக்குழு 2005 இல் அதன் பங்காளர்களுடன் இணைந்து காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான தேசியத் தரவுத்தளம் ஒன்றை ஸ்தாபிக்கத் தொடங்கியது. ஆணைக்குழுவும் ஏனைய அமைப்புக்களும் சேகரித்திருக்கும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்களின் சம்பவங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் தொகுப்பதற்கென இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மேலும், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான சம்பவங்களைப் புலன் விசாரணை செய்வதற்கென அரசாங்கத்தினால் 1998 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த விசாரணை ஆணைக்குழுக்களில் ஒன்றான நாடளாவிய ஆணைக்குழுவிலிருந்து இந்த ஆணைக்குழுவுக்கு மீளாய்வுக்கென 16,000 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருந்தன (கீழே பார்க்கவும்).

471. மோதலுடன் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கெனஆணைக்குழு 2006 ஜனவரி 1 ஆம் திகதி ஒரு விசேட அறிக்கையாளரை நியமனம் செய்தது. இது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (TRO) ஐந்து ஊழியர்களும், அவர்களுடைய சாரதியும் 2006 ஜனவரி மாதத்தில் காணாமல் போன குறியீட்டுச் சம்பவத்தையும் உள்ளடக்கியிருந்தது.

---

391 கைது செய்யப்பட்டிருக்கும் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதியின் பணிப்புரைகள் < http://www.defence.lk/new.asp?fname=20070425_02>

392 இந்த ஆணைக்குழுவினால் உள்ளடக்கப்படும் காலப் பிரிவின் போது 1990 தொடக்கம் 1995 வரையில் யாழ்ப்பாணம் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது. அதனை அடுத்து வந்த காலப் பிரிவு முழுவதிலும் அது அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது. அறிக்கையின் பிரகாரம், புலன் விசாரணை செய்யப்பட்ட சம்பவங்களில் 256 சம்பவங்கள் தமிழர்கள் சம்பந்தப்பட்டவையாகும். அவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவத்தினரால் காணாமல் போகச் செய்யப்பட்டிருந்தனர் 25 முஸ்லிம்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்கள். A Legacy to Remember, என்ற பிரசுரத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு, Op cit.)

-

முகமூடி அணிந்திருந்த ஆயுதம் தாங்கிய நபர்களினால் 2006 ஜனவரி 29 ஆம் திகதி அவர்கள் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தை இந்தப் புலனாய்வு ஊர்ஜிதப்படுத்தியது. கடத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவர்கள் மட்டக்களப்பில் இருந்து கிளிநொச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை. அதேபோல, அதற்கு அடுத்த நாள் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தின்வேறு இரு உறுப்பினர்களும் அவ்வாறே காணாமல் போய்யுள்ளனர். அவர்களையும் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தச்சம்பவங்கள் தொடர்பாக விசேட அறிக்கையாளரினால் புலன் விசாரணை செய்யமுடியாது என்ற விடயம்தெரியவந்துள்ளது.[393]

472. எவ்வாறிருப்பினும், 2006 ஆம் ஆண்டின் அதன் தலைமை மாறிய பின்னர், ஆணைக்குழு பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான பணிகளை எத்தகைய பயனுள்ள விதத்திலும் முன்னெடுத்துச் செல்லவில்லை.[394]புதிய தலைவரான நீதிபதி இராமநாதன் மேற்கொண்ட முதலாவது வழிமுறைகளில் ஒன்று, காணாமல் போன நபர்கள் தொடர்பான தரவுத்தளத்தை உருவாக்கும் வேலையை நிறுத்துமாறு ஊழியர்களிடம் கேட்டுக் கொண்டமையாகும்.[395]அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் ஆணைக்குழு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான புலன் விசாரணைகளை நிறுத்தியுள்ளது என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு WGEID குழுவுக்குப் பதிலளிக்கும் விதத்தில் 2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், ஆணைக்குழு ஒரு சுயாதீனமான அமைப்பு என்றும், “அரசாங்கத்திடம்சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் மனுக்களைஉரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசாங்கத்தினால் அனுப்பிவைக்க மட்டுமே முடியும் என்றும்’’ கூறப்பட்டிருந்தது.[396]

473. ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான பணிகளை நிறுத்துவதற்கான முடிவு மற்றும் ஆணைக்குழுவுக்கான தலைவரும் ஏனைய உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்ட விதம் என்வற்றின் விளைவாக, மனித உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான தேசிய நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்பு கமிட்டி 2007 அக்டோபர் மாதத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை அதன் தற்போதைய "B" அந்தஸ்திலிருந்து தரமிறக்குவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது.காணாமல்போன நபர்கள் தொடர்பான 2000 சம்பவங்கள் குறித்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கும் விடயம் 2006 ஜூலை மாதத்தில் நிறுத்தப்பட்ட நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உண்மையான செயற்பாடு சமநிலைத் தன்மை கொண்டதாக, விருப்பு வெறுப்பற்றதாக மற்றும் அரசியல் சார்பற்றதாக இருந்து வருகின்றதா என்ற விடயம் தெளிவாக தெரியவரவில்லை” என இதற்கு காரணம் காட்டப்பட்டிருந்தது.[397]

---

[393] மோதலுடன் சம்பந்தப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசேட அறிக்கையாளரின் அறிக்கை, 2006

[394] International Crisis Group, இலங்கையின் மனித உரிமைகள் நெருக்கடி, ஆசிய அறிக்கை, இல. 135, ஜூன் 14, 2007, பக். 19, Human Rights Watch, மீண்டும் மீண்டும் இடம்பெறும் துன்பம். பக். 103-107.

[395] பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

[396] A/HRC/4/41, par. 382-398.

[397] மனித உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான தேசிய நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்பு கமிட்டி, உப கமிட்டியின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள், ஜெனீவா அக்டோபர் 22- 26 - 2007. 5.3

474. ஆணைக்குழுவின் முன்னாள் ஊழியர் ஒருவர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் உரையாடிய பொழுது, 1990 களில் முதலில் அவர் ஆணைக்குழுவில் பணிபுரியத் தொடங்கிய காலப் பிரிவில், பொலிஸாரினால் அல்லது இராணுவத்தினரால் எவரேனும் கைது செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு தன்னால் உடனடியாக குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது இராணுவ முகாமுக்கோ செல்லக்கூடியதாக இருந்தது எனக் கூறினார். பொருத்தமானவிடத்து, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபரை விடுவிப்பதற்கு தலையீடுகளை மேற்கொள்ளக்கூடிய நிலையிலும் தான் இருந்து வந்ததாக அவர் சொன்னார். ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் தலைமை மாற்றப்பட்டதை அடுத்து, இனிமேலும் அது சாத்தியமாகவில்லை என்று அவர் கூறியிருந்தார்.[398] நூற்றுக்கணக்கான பொதுமக்களினால் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதில் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தார்கள். பெருமளவுக்கு இராணுவமயப்படுத்தப்பட்டிருந்த சூழல் ஒன்றில், இத்தகைய சம்பவங்களை எழுப்புவதன் மூலம் தாம் பழிவாங்கப்படலாம் என்ற அச்சம் அவர்களுக்கு மத்தியில் நிலவி வந்தது.[399]

475. ஒரு கைது மற்றும் தடுத்துவைத்தல் என்பன தொடர்பான ஒரு முறைப்பாடு ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் பொழுது, அந்த விபரங்கள் அனைத்தும் அந்த நிறுவனத்தில் அச்செயலுக்கு பொறுப்பாக இருந்து வந்தவர்கள் எனக் கூறப்படும் நபர்களிடம் அனுப்பி வைக்கப்படுகின்றன என்ற விடயத்தை பெருந்தொகையான நம்பகமான சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் தெரிவித்திருந்தனர். அந்த நிறுவனங்கள் பொதுவாக அவற்றுக்கு எந்தப் பதிலையும் அனுப்புவதில்லைஅல்லது அப்படியான ஒரு நபர் கைது செய்யப்பட்டிருத்தல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருத்தல் என்பது தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்று மறுப்புத் தெரிவிப்பார்கள். அதன் பின்னர் அது தொடர்பாக மேற்கொண்டு எத்தகைய நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட மாட்டாது.[400]

### பலவந்தமாக காணாமல் போகச்செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக விசாரித்து, புலன் விசாரணை மேற்கொள்வதற்கான ஆணைக்குழுக்கள்

476. 1991 ஆம் ஆண்டிற்கும் 2013 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பலவந்தமாக காணாமல் போகச்செய்யப்பட்ட நபர்கள் தொடர்பாக பரிசீலனை செய்வதற்கெனபல்வேறு ஆணைப்பத்திரங்கள் மற்றும் கால எல்லைகள் மற்றும் ஆளணி என்பவற்றுடன் கூடிய விதத்தில் கணிசமான அளவிலான ஆணைக்குழுக்களை ஸ்தாபித்திருந்தன. அத்தகைய ஆணைக்குழுக்களில் பெரும்பாலானவற்றில் சுயாதீனம் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன இல்லாதிருக்கும் நிலை குறித்து விமர்சிக்கப்பட்டிருந்தன. அந்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர், முறையான ஒரு ஒழுங்கில் அவை தொடர்பாக ஒரு போதும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஒரு சில ஆணைக்குழுக்கள் குற்றச்செயல்கள் இழைத்திருப்பதாக கூறப்படும் நபர்களின் பட்டியல்களையும் தயாரித்திருந்தன. எவ்வாறிருப்பினும், ஒரு சில சம்பவங்கள்

[398] WS on file

[399] PEARL இலங்கையின் முதலாவது சர்வதேச பருவ கால மீளாய்வுக்கான சமர்ப்பணம், 2008

[400] WS on file

தொடர்பாக மட்டுமே அவற்றுக்குப் பொறுப்பாக இருந்த நபர்களுக்கு எதிராக விசாரணைகளின் பின்னர் குற்றத்தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

477. இத்தகைய பரிந்துரைகளில் ஒரு சில இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த காலப் பிரிவுக்கு முன்னைய காலப்பிரிவு சம்பந்தப்பட்டவையாக இருந்து வந்தன. எவ்வாறிருப்பினும், அந்த ஆணைக்குழுக்களின் முடிவுகளின் முக்கியத்துவம் மற்றும் இன்னும் காணாமல் போனவர்களாக இருந்துவரும் நபர்கள் குறித்த பணியை அந்த ஆணைக்குழுக்கள் முன்னெடுத்திருந்தன என்ற விடயம் என்பவற்றின் பின்னணியில் நோக்கும் பொழுது, அவர்களுடைய பணி குறித்து குறிப்பிடுவது மிக முக்கியமானது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கருதியது. அந்தப் புலன் விசாரணைகளின் பெறுபேறுகள் 2002 இன் பின்னர் முனைப்படைந்திருந்த நீதித்துறைப் பொறிமுறைகளுக்குள் எடுத்து வரப்பட்டிருந்தன.மேலும், அந்த ஆணைக்குழுக்கள் சேகரித்திருக்கும் தகவல்கள் இன்று வரையிலும் தொடர்ந்து பொருத்தப்பாடு கொண்டவையாக இருந்துவருகின்றன.

**ஜனாதிபதி ஆணைக்குழுக்கள்(1991, 1992,1993)**

478. காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான முதலாவது ஜனாதிபதி ஆணைக்குழு 1991 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களினால் நியமனம் செய்யப்பட்டது.[401] அதன் ஆணைப்பத்திரம் 1991 ஜனவரி 11 ஆம் திகதிக்கு பின்னர் “இனந்தெரியாத நபர்களினால் ஆட்கள் தமது வசிப்பிடங்களிலிருந்து பலவந்தமாக எடுத்துச் செல்லப்படுவது தொடர்பான” குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை செய்வதாகும்.[402] அந்த ஆணைக்குழு 1993 ஆம் ஆண்டில் அதன் கடமையை முடித்துக் கொண்ட பொழுது, சுமார் 140 சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைகளைப் பூர்த்தி செய்திருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது.[403]

479. அதனை அடுத்து 1992 மற்றும் 1993 ஆகிய வருடங்களில் மேலும் இரண்டு ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. இந்த ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆணைப்பத்திரம் 1993 ஆம் ஆண்டு ஜனாதிபதி டி.பீ. விஜேதுங்க அவர்களினால் ரத்துச் செய்யப்பட்டது எனக் கூறப்படுகிறது. அவர் 1993 ஆகஸ்ட் 23 ஆம் திகதி ஆட்கள் பலவந்தமாக அகற்றப்பட்டமை தொடர்பாக விசாரணைசெய்வதற்கான மற்றொரு விசாரணை ஆணைக்குழுவை நியமனம் செய்தார்.[404]காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த

---

401 இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி, இல. 644∴ 27, ஜனவரி 11,1991

402 அட்டணை ‘A’, அதி விசேட வர்த்தமானி இல. 644/ 27, ஜனவரி 11,1991

403 A Legacy to Remember; இலங்கையின் விசாரணை ஆணைக்குழுக்கள் 1963 – 2002, தொகுப்பாசிரியர் கிஷாலி பின்டோ – ஜயவர்தன, The Law and Society Trust.

404 இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி, இல. 784∴1 செப்டம்பர் 13, 1993. இந்த ஆணைக்குழுக்களை உருவாக்கிய ஆணைப்பத்திரங்களில் பலவந்தமாக “அகற்றுதல்” என்ற பதம் சர்வதேச சட்டத்தில் இருக்கும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல் குறித்த வரைவிலக்கணத்துடன் பொருந்தவில்லை. பார்க்கவும் ஆணைக்குழுக்களின் ஆணைப்பத்திரங்கள், வர்த்தமானி இல. 644/27, ஜனவரி 11,1991, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி இல. 697/5 ஜனவரி 13, 1992, வர்த்தமானி இல. 751/1, ஜனவரி 25, 1993, வர்த்தமானி இல. 784/1 செப்டம்பர் 13, 1993, ஆட்கள் பலவந்தமாக அகற்றப்படுதல் தொடர்பாக இவை அனைத்தும் ஒரே பதத்தை பயன்படுத்துகின்றன. மேலும் பார்க்கவும் A Legacy to Remember; Sri Lanka’s Commissions of Inquiry 1963-2002, Ed. Kishali Pinto-Jayawardena, The Law and Society Trust

முறைப்பாடுகளின்[405]“நம்பகத்தன்மை” தொடர்பாக விசாரித்தறிவதே அதன் ஆணைப்பத்திரமாக இருந்துவந்தது. அதற்கான காலப் பிரிவு 1991-1993 காலப்பிரிவாக வரையறுக்கப்பட்டிருந்தது. ஜேவிபி எழுச்சியுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் பாரியளவில் ஆட்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றதாக கூறப்பட்ட 1987 தொடக்கம் 1990 வரையிலான காலப் பிரிவு அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.[406]இந்த ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் என்பன ஒரு போதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

**வலய ஆணைக்குழுக்கள் (1994 மற்றும் நாடு தழுவிய ஆணைக்குழுக்கள் 1998)**

480. பலவந்தமாக ஆட்கள் எடுத்துச் செல்லப்பட்டமை அல்லது காணாமல் போகச் செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்தற்கான வலய ஆணைக்குழுக்கள் 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களினால் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஆணைக்குழுவும் திட்டவட்டமான ஒரு பூகோளப் பிரதேசத்தை உள்ளடக்குவதற்கான ஒரு ஆணைப்பத்திரத்தை கொண்டிருந்தது: மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் ஊவாக மாகாணங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மேல் மற்றும் தென், சபரகமுவ மாகாணங்கள். இந்த மூன்று ஆணைக்குழுக்களினதும் ஆணைப்பத்திரம் ஏனையவற்றுடன் “1988 ஜனவரி 1ஆம் திகதியின் பின்னர் எவரேனும் நபர் ஒருவர் தனது வசிப்பிடத்திலிருந்து பலவந்தமாக அகற்றப்பட்டிருந்தாரா அல்லது காணாமல் போயிருந்தாரா என்பது குறித்து” விசாரித்தறிவதும் உள்ளடக்கப்பட்டிருந்தது.[407] இந்த ஆணைக்குழுக்களினால் உள்ளடக்கப்பட்ட காலப் பிரிவு ஜேவிபி எழுச்சியுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் 1987 ஆம் ஆண்டில் இடம்பெற்றதாக கூறப்படும் பெருந்தொகையான காணாமல் போதல் சம்பவங்களை மீண்டும் உள்ளடக்கியிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இந்த ஆணைக்குழுக்கள் கணிசமான அளவிலான விசாரணைகளை நடத்தக்கூடியதாக இருந்து வந்தன. அவை திட்டவட்டமான ஒரு காலவரம்பை கொண்டிராத காரணத்தினால், அந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்ட பின்னரும் இடம்பெற்ற பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பான புலன் விசாரணைகளையும் அவை உள்ளடக்கியிருந்தன.

481. இந்த மூன்று வலய ஆணைக்குழுக்களும் அவை செயற்பட்ட மூன்று வருட காலப் பிரிவின் போது 27,526 முறைப்பாடுகளைப் பெற்று, அவற்றைப் பகுப்பாய்வு செய்திருந்தன. அவற்றில் 16,800 சம்பவங்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுக்கு இணையானவை என்ற விடயம் நிரூபிக்கப்பட்டிருந்தது. 1681 சம்பவங்களில்[408]“அவற்றுக்குப் பொறுப்பான நபர்களைக் குறித்துக்காட்டும்

405 A Legacy to Remember,Op.Cit p.22

406 சர்வதேச மன்னிப்புச் சபை, “உண்மை மற்றும் நீதி என்பவற்றுக்கான தருணம்:” கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்”, ஏப்ரல் 1995.

407 The Law and Society Trust, A Legacy to Remember; Sri Lanka’s Commissions of Inquiry 1963.2002: A Reference Guide to Commission Reports with a Tabulated List of Recommendations. September 2010, p. 20, http://www.lawandsocietytrust.org/PDF/a%20legacy%20to%20remember%3B%20sri%20lanka's%20commissions%20of%20inquiry.pdf

408 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டி, இலங்கை தொடர்பான நான்காவது பருவ கால அறிக்கை, CCPR/C/LKA/2002/4, 18/10/2002, பந்தி 156

நம்பகமான சான்றுகள் உள்ளன" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. குற்றச்செயல்களை நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்பட்ட நூற்றுக்கணக்கான நபர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியல்களையும் அவை தயாரித்திருந்தன. அவர்களில் பெரும்பாலானவர்கள் (இராணுவம்,கடற்படை மற்றும் விமானப்படை என்பவற்றைச் சேர்ந்த) ஆயுதப் படை உறுப்பினர்களாகவும், பொலிஸாராகவும் இருந்து வந்தனர். ஆனால், ஒரு சில அரசியல்வாதிகளும் இதில் அடங்கியிருந்தனர். உதாரணமாக,மத்திய,வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் செயற்பட்ட வலய ஆணைக்குழு, புலன் விசாரணை செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான திட்டவட்டமான முடிவுகள் மற்றும் சான்றுகள் என்பவற்றையும், அவற்றை நிகழ்த்திய நபர்கள் தொடர்பான விபரங்களையும் புறம்பான பின்னிணைப்புக்களில் உள்ளடக்கியிருந்தது.

482. மூன்று வலய விசாரணை ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகள் 1997 செப்டம்பர் மாதத்தில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவை முன்வைத்திருந்த அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பன பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதிலும், குற்றச் செயல்களை இழைத்திருந்த நபர்களின் பெயர்ப் பட்டியல்கள் அவ்விதம் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அவை பிரசுரிக்கப்படவும் இல்லை. எனினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அப்பட்டியல்களின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

483. குறிப்பிட்ட நபர்கள் பலவந்தமாக அகற்றப்பட்டமை மற்றும் காணாமல் போனமை என்பன தொடர்பாக விசாரணை செய்வதற்கென நாடு தழுவிய ஒரு விசாரணை ஆணைக்குழு 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த 10,136 முறைப்பாடுகள் தொடர்பாக மட்டும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு என அந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. ஆனால், மூன்று வலய ஆணைக்குழுக்களினால் விசாரணை செய்யப்பட்ட சம்பவங்களை அது புலன் விசாரணை செய்யவில்லை.[409] அந்த ஆணைக்குழு காணாமல் போனவர்கள் தொடர்பான 4473 முறைப்பாடுகள் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அதன் இறுதி அறிக்கையை 2001 ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. ஒரு சில சம்பவங்கள் தொடர்பான அதன் முடிவுகள், வலய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை அடுத்து உருவாக்கப்பட்டிருந்த (கீழே பார்க்கவும்: குற்றவியல் புலன்விசாரணை) பொலிஸ் திணைக்களத்தின் தலைமறைவாகியிருக்கும் நபர்கள் தொடர்பான அலகு மற்றும் காணாமல் போன நபர்கள் தொடர்பான புலன்விசாரணை அலகு என்பவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. நாடு தழுவிய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் என்பன பகிரங்கப்படுத்தப்பட்டன. ஆனால், குற்றச்செயல்களை இழைத்தவர்கள் எனக் கூறப்பட்டிருந்த நபர்கள் தொடர்பான அதன் தகவல்கள்

---

[409] பார்க்கவும்: "மேற்கு, தெற்கு மற்றும் சபரகமுவ மாகாணங்களில் ஆட்கள் சுய விருப்புக்கு மாறான விதத்தில் அகற்றப்பட்டமை அல்லது காணாமல் போனமை தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை", 1997, "வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆட்கள் சுய விருப்புக்கு மாறான விதத்தில் அகற்றப்பட்டமை அல்லது காணாமல் போனமை தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை", 1997, "ஒரு சில நபர்கள சுய விருப்புக்கு மாறான விதத்தில் அகற்றப்பட்டமை அல்லது காணாமல் போனமை தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை", (முழு நாடு), 2001.

பகிரங்கப்படுத்தப்படவில்லை. எவ்வாறிருப்பினும், நாடு தழுவிய ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த குற்றச்செயல்களை இழைத்ததாக கூறப்படும் 318 நபர்களின் இரகசியமான பெயர் பட்டியலை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பெற்றுக்கொண்டுள்ளது.

484. இந்த ஆணைக்குழு காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து சம்பவங்களையும் தீர்த்து வைக்கவில்லை அல்லது அத்தகைய சம்பவங்களுக்கு பொறுப்பாக இருந்துவந்த பெருந்தொகையான நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை. அதேவேளையில், அது காணாமல் போன சம்பவங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்டிருந்ததாக கூறப்படும் நபர்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவான விதத்திலான ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தது. இந்த ஆணைக்குழுக்களினால் சேகரிக்கப்பட்டிருக்கும் விரிவான தகவல்களும், சான்றுகளும் அதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் மற்றும் நீதித்துறை புலன் விசாரணைகளும், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்களின் சம்பவங்களின் அனைத்து விதமான மாதிரிகளும் தொடர்பாக எவையேனும் அனைத்துமடங்கிய புதிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பொழுது, அதன் ஒரு பாகமாக மீளாய்வு செய்யப்படவேண்டும் என்றும், அனைத்து பாதுகாப்பு படையினரையும் வடிகட்டும் செயன்முறையின் ஒரு பாகமாக அது பயன்படுத்தப்படவேண்டும் என்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது.

**கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள் என்பன தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு (செப்டம்பர் 2006) மற்றும் அதனை அடுத்து வந்த ஆணைக்குழு(மே 2007)**

485. 2005 ஆம் ஆண்டின் பின்னர் கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன என்பது குறித்து அதிகரித்தளவில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு எதிர்வினையாற்றும் வகையில், 2006 செப்டம்பர் மாதத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ கடத்தல்கள், காணாமல் போதல்கள் மற்றும் கொலைகள் என்பன தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமனம் செய்தார். முன்னாள் நீதிபதி மகாநாம திலகரத்ன அவர்களின் தலைமையில் இது உருவாக்கப்பட்டது.[410] அவருடைய இறுதி அறிக்கை 2007 மே மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அது பகிரங்கப்படுத்தப்படவில்லை. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பிரசுரிக்கப்படாத அறிக்கையின் பிரதி ஒன்றை மீளாய்வு செய்துள்ளது.

486. இந்த அறிக்கை ‘‘குறிப்பிட்ட சில அதிகாரமிக்க நபர்கள்’’ தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிஸார் தவறியமை குறித்தும், சாட்சிகளை அலட்சியம் செய்தமை குறித்தும் கடுமையாக விமர்சித்திருந்த அதேவேளையில்,பாதுகாப்பு படைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்த காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அது உதாசீனம் செய்திருந்தது போல் தெரிகிறது. அத்தகைய சம்பவங்கள் குற்றவாளிகளின் குற்றச்செயல்கள், குடும்பத் தகராறுகள்,‘‘இளம் பெண்களின் அன்பை பெறுவதற்கான … கடத்தல்கள்” போன்ற சம்பவங்களாகவும், ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாகி

[410] (அதி விசேட) வர்த்தமானி இல. 1462/30- 2006 மற்றும் (அதி விசேட) வர்த்தமானி இல. 1505/17-2007.

இருந்த நபர்களுக்கிடையிலான தகராறுகளாகவும் இருந்து வந்தன என்றும் குறிப்பிட்டிருந்தது.[411]பாதுகாப்பு படைகளின் தொடர்பு குறைத்துக் கூறப்பட்டிருந்தது: "ஒரு சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரும், பொலிஸ் உத்தியோகத்தர்களும் கூட கடத்தல் சம்பவங்களை நடத்தியிருக்கிறார்கள் என்ற விடயம் தெரியவந்திருந்தது. அவர்கள் ஒரு சட்டவிரோதமான செயலைச் செய்திருக்கும் நபர்களாக கருதப்படுதல் வேண்டும்."

487. நீதிபதி மகானாம திலகரத்ன அவர்களினால் முன்வைக்கப்பட்ட கூற்றுக்கள்,அவருடைய ஆணைக்குழு பாரதூரமான விதத்திலும், நம்பகமான விதத்திலும் புலன் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, 2007 மே மாதத்தில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்றுவரும் கடத்தல் சம்பவங்களில் ''ஒரு மறைமுக கரம்'' இருந்து வருவதாக அவரால் கூறப்பட்டதாகவும்,''இராணுவத்தில் அல்லது பொலிஸில் இருந்த எவருக்கு எதிராகவும் யாரும் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை'' என அவர் கூறியதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும்,''பெரும்பாலான கடத்தல் சம்பவங்கள் உண்மையிலேயே கடத்தல் சம்பவங்களாக இருந்துவரவில்லை (சம்பந்தப்பட்ட நபர்கள்) ஏனையவர்களுடன் ஏற்பட்ட தனிப்பட்ட குடும்பத் தகறாறுகள் போன்ற சில்லறை விடயங்களுக்காக தற்காலிகமாக தமது வீடுகளை விட்டுச் சென்றிருந்தனர்.[412]மேலும்,ஆணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டிருக்கும் சான்றுகளின் பிரகாரம், கடத்தப்பட்ட ஒரு சில நபர்கள் கடைசியாக காணப்பட்டபொழுது, தாம் அறிந்த நபர்களுடன், தமது சொந்த விருப்பில் சென்றிருக்கிறார்கள் போல் தென்பட்டது''.[413] ஒரு சில ஆட்கள் மட்டுமே பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தை இந்த அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

488. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத முடிவுகள், புலன் விசாரணைகளின் நம்பகத்தன்மை மற்றும் சுயாதீனம் என்பன குறைவாக இருந்துவந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன. காணாமல் போன நபர்கள் தொடர்பான சம்பவங்கள்,அரசாங்கத்திற்கு எதிரான ஒரு பிரச்சார கருவியாக பயன்படுத்தப்பட்டிருந்தன எனக்கூறுவதன் மூலம் ஆணைக்குழு இந்த நிலவரத்தை மிகக் குறைவாக மதிப்பிட்டிருந்தது. மேலும், தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள், அவசர கால ஒழுங்குவிதிகள் மற்றும் அரசியல் யாப்பு போன்ற சட்டத்தையும், ஒழுங்கையும் பராமரிக்கும் விடயங்கள் தொடர்பான உள்நாட்டு சட்ட ஏற்பாடுகள் குறித்த பொலிஸாரின் அனுபவம் குறைவாக இருந்து வரும் நிலை, இந்த ஆணைக்குழுவினால் பொருத்தமான விதத்தில் புலன் விசாரணைகளை

---

411 நாடெங்கிலும் இடம்பெற்ற கடத்தல் சம்பவங்கள், ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் மற்றும் மரணத்தை விளைவிக்கும் விதத்தில் சிவிலியன்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்பன குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை, மே 2007, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பெற்றுக் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் அதிகாரபூர்வமற்ற மொழிபெயர்ப்பு

412 International Crisis Group, இலங்கையின் மனித உரிமைகள் நெருக்கடி, ஆசிய அறிக்கை, இல. 135, ஜுன் 14, 2007

413 "கடத்தப்பட்டவர்களில்" பெரும்பாலானவர்கள் திரும்பி வந்துள்ளார்கள். https://lrrp.wordpress.com/2007/06/30/majority-of-%E2%80%9Cabductees% E2%80%9D-found-to-have-returned/)

மேற்கொள்ள முடியாதிருந்தமைக்கான ஒரு காரணமாக இருந்தது என்ற விடயம்ஆணைக்குழுவால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

489. திலகரத்ன ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதனை அடுத்து, அதே நீதிபதியின் தலைமையிலான மற்றொரு தனிநபர் ஆணைக்குழு ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களினால் 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் நியமனம் செய்யப்பட்டது. 2006 செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் உள்ள காலப்பிரிவின் போது, இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டுவந்து கடத்தல்கள்,ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள், கொலைகள் என்பன குறித்து புலன் விசாரணை செய்வதற்கென இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டிருந்தது. செப்டம்பர் 2006 தொடக்கம் நவம்பர் 2009 வரையிலான காலப்பிரிவை உள்ளடக்கும் அந்த ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத இறுதி அறிக்கை 2009 டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதி அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது இலங்கை தொடர்பான புலன் விசாணைக்குழுவுக்கும் கிடைத்திருந்தது.

490. முன்னைய ஆணைக்குழுவின் அறிக்கையைப் போலவே, காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை, நாட்டின் நற்பெயருக்கு அபகீர்த்தியை எடுத்து வரும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பிரச்சார நடவடிக்கைகளின் ஒரு பாகமாகக் கருதி, அவற்றை அலட்சியப்படுத்தி, நிராகரிக்கும் முதன்மையான நோக்கத்துடனையே இந்த அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருப்பது போல் தெரிகின்றது. அது காணாமல் போன சம்பவங்கள், தமிழ் பெண்கள் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டமை மற்றும் தமிழ் இளைஞர்கள் பாதுகாப்பு படையினரால் கொலை செய்யப்பட்டமை என்பன குறித்த அறிக்கைகளை ‘‘அடிப்படை எதுவுமற்ற பிரச்சாரம்’’ என விளக்கியிருந்தது. மேலும் ‘‘சிறு சம்பவங்கள் பரபரப்புக்காக பெரிது படுத்தப்பட்டிருந்தன’’ என்றும் குறிப்பிட்டிருந்தது.[414]

491. அறிக்கையின் பரிந்துரைகள் பட்டியலில் முதலாவதாக ‘‘சம்பந்தப்பட்ட நபர் அச்சந்தர்ப்பத்தில் எங்கிருக்கிறார் என்ற விடயத்தை நன்கு அறிந்திருந்த நிலையில், கடத்தல்கள் அல்லது காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக பொலிசாருக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைத்திருந்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்” என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. ‘‘பொலிசாரினால் வழங்கப்பட்ட அறிக்கைகள் (ஊடகங்களில்) வெளியிடப்பட்டிருந்த காணாமல் போன சம்பவங்கள் தொடா்பான செய்திகள் ஆதாரமற்ற, நம்பமுடியாத கதைகளாக இருந்து வந்தன என்பதைக் காட்டுகின்றன” என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டிருந்தது. இது தொடர்பான 90சதவீதமான சம்பவங்களில் குறிப்பிட்ட நபர்கள் குடும்பத் தகராறுகள், காதல் விவகாரங்கள், நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருக்கும் கைது தொடர்பான பிடிவிறாந்துகளை தவிர்த்துக் கொள்ளல், பயங்கரவாத அமைப்பொன்றில் இணைந்து கொள்ளல் போன்ற பல்வேறு

[414] இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் 2006 செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 2009 டிசம்பர் 25 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற அடையாளம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் சம்பவங்கள், காணாமல் போன சம்பவங்கள், கொலைகள் என்பன தொடர்பாக விசாரித்து, புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை, டிசம்பர் 2009 தேர்தெடுக்கப்பட்ட பகுதிகள், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் அதிகாரபூர்வமற்ற முறையில் மொழிபெயர்க்கப்பட்டன.

காரணங்களுக்காக தமது வீடுகளிலிருந்து வெளியேறிச் சென்றிருந்தார்கள் என ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற மொத்தம் 22,474 காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளில் 20,637 நபர்கள் ஒன்றில் திரும்பி வந்திருக்கின்றார்கள் அல்லது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள் என்றும், எஞ்சியிருக்கும் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும் இந்த அறிக்கை குறிப்பிட்டிருந்தது.

**2005 ஆகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்றதாக கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பங்கள் தொடர்பாக புலன் விசாரணை மேற்கொண்டு, விசாரணை செய்வதற்கென நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு**

492. உதலாகம ஆணைக்குழு என அழைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு 2006 நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டதுடன், 2005 ஆகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்றதாக கூறப்படும் 16 பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கென அது அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவங்கள் அக்காலகட்டத்தில் பெருமளவுக்கு பரபரப்பை ஏற்படுத்தியிருந்த பல சம்பவங்களையும் உள்ளடக்கியிருந்தன. அருட் தந்தை ஜிம் பிரவுண் மற்றும் உள்ளூர் பங்குத் தந்தையான அவருடைய உதவியாளர் வென்சிலோஸ் விமலதா ஆகியோர் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவமும் இதில் அடங்கியிருந்தது.[415] இந்த ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத அறிக்கையை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பார்வையிட்டிருந்ததுடன், அது அருட் தந்தை பிரவுண் காணாமல் போன சம்பவம் தொடர்பாக "போதியளவு சாட்சிகள் இல்லாத காரணத்தினால், மிக முக்கியமாக மரணித்தவர் எனக் கூறப்படுபவரின் சடலத்தை கண்டுபிடிக்க முடியாதிருந்தமையினால்" புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என குறிப்பிட்டிருந்தது.[416]

493. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால்சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஒரு தமிழ் கத்தோலிக்கரான அருட் தந்தை பிரவுண்,2006 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அல்லைப்பிட்டி பிரதேசத்தில் பாதுகாப்பு படைகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் மக்களுக்கு தனது தேவாலயத்தில் தஞ்சம் அளித்திருந்தார். அந்த ஷெல் தாக்குதல்களின் போது குழந்தைகளையும் உள்ளிட்ட பெருந்தொகையான சிவிலியன்கள் காயமடைந்திருந்ததுடன், கொல்லப்பட்டுமிருந்தனர்.[417] அருட் தந்தை பிரவுண் மற்றும் வென்சிலோஸ் விமலதா

415 ஆகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்றதாக கூறப்படும் பாாதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து, விசாரிப்பதற்கென நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, பக்கம் 8, மே 2009

416 Ibid.

417 இந்த வழக்கு தொடா்பாக மேலும் பாா்க்கவும்: Human Rights Watch, மீண்டும் மீண்டும் இடம்பெறும் துன்பம், cit. மாா்ச் 2008 பக். 66; மேலும் பாா்க்கவும்: கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பகிரங்க அமா்வுகளின் விசாரணைகள், திரு. ஏ. சந்தியாபிள்ளை முன்வைத்த சமா்ப்பணம், நவம்பர் 12, 2010, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு மன்னாா் கத்தோலிக்க மறை மாவட்டம் முன்வைத்த சமா்ப்பணம், ஜனவரி 8, 2011

ஆகியோர் 2006 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஊர்காவற்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். கடைசியாக அல்லைப்பிட்டி கடற்கரை சோதனைச் சாவடியில் அவர்களை மக்கள் பார்த்திருந்தனர். அதனைச் சூழவுள்ள பிரதேசம் இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்தது. இந்த இருவரும் காணாமல் போன சம்பவம் தொடர்பான ஒரு முறைப்பாடு பொலிசில் பதிவு செய்யப்பட்டதுடன், ஊர்காவற்றுறை பதில் நீதவான் புலன் விசாரணைகளை ஆரம்பித்தார். கடற்படை சோதனைச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட பதிவேட்டை பெற்றுக்கொள்வதற்கு அவர் எடுத்த முயற்சிகளுக்கு கடற்படையினரால் இடையூறு விளைவிக்கப்பட்டது. அடுத்த தினம்,மற்றொரு நீதவான் தனது பதவியை பொறுப்பேற்றிருப்பதாகவும், தான் வேறு கடமைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் அருட் தந்தை பிரவுண் காணாமல் போன சம்பவம் தொடர்பாக அவர் நடத்திய புலன் விசாரணை இடைநிறுத்தப்பட்டதுடன், அவர் அந்தப் பதவியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் அது தொடர்பாக எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.[418]

494. முதலாவது ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட குற்றப் புலனாய்வுத்துறையின் அறிக்கையின் பிரகாரம், 2006 ஆகஸ்ட் 30 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவு இந்த விசாரணையை பொறுப்பேற்றிருந்தது. 2006 நவம்பர் மாதம் அளவில், அப்புலன்விசாரணை தொடர்ந்து இடம்பெற்றுவந்த போதிலும், அந்த விசாரணையில் குறிப்பிட்ட காணாமல் போன சம்பவத்தின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை கண்டறிவதை விட்டுவிட்டு, அருட் தந்தை பிரவுண் எல்ரீரீஈ இயக்கத்திற்கு பதுங்கு குழிகளை தோண்டுவதற்கு உதவியிருந்தார் என்ற விதத்தில் கடற்படைத் தளபதி முன்வைத்திருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே பெருமளவுக்கு கவனம் செலுத்தப்பட்டு வந்து போல் தெரிந்தது. 2007 மார்ச் மாதத்தில் கடற்கரையில் தலையில்லாத ஒரு சடலம் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அது அருட் தந்தை பிரவுண்அவர்களுடைய சடலம் தானா என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கென DNA பரிசோதனைகள் நடத்தப்படவேண்டும் என நீதவான் கட்டளையிட்டார். அதனை அடுத்து, இந்த விடயத்தை DNA பரிசோதனைகள் நிரூபிக்கவில்லை என அரசாங்கம் அறிவித்திருந்தது.[419].எவ்வாறிருப்பினும், பரிசோதனைகள் நடத்தப்பட்டமையும், அவ்வாறு நடத்தப்பட்டிருந்தால் பெறுபேறுகள் வெற்றியளிக்காதிருப்பதற்கான காரணங்கள் என்ன என்பது குறித்தும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இந்த இருவரும் காணாமல் போன சம்பவம் தொடர்பாக தொடர்ச்சியாக புலன்

418 மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு (UTHR), விடேச அறிக்கை இல. 25, மே 31, 2007 இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் இந்த அறிக்கை பரிசீலனைக்குட்படுத்தப்படாவிட்டாலும் கூட, கடற் படையினால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்கு மத்தியிலும் கூட, அருட் தந்தை பிரவுண் அவர்களினாலும், அதேபோல உள்ளூர் மாஜிஸ்ட்ரேட் நீதவான் அவர்களினாலும் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பான விரிவான விபரங்களை அது தருகின்றது. .

419 'பொய் பிரச்சார இயக்கம் தொடர்பான DNA அறிக்கை' - கொழும்பு http://www.defence.lk/new.asp?fname=20070613_07

விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதனை காட்டுவதற்கான எத்தகைய தகவல்களும் இருந்துவரவில்லை.[420]

495. அருட் தந்தை பிரவுண் 2006 ஆகஸ்ட் 20 ஆம் திகதி காணாமல் போவதற்கு முன்னர் தாம் அச்சுறுத்தப்படுவதை உணர்வதாக இங்கை மனித உரிமைகள்ஆணைக்குழுவில் இரண்டு முறைப்பாடுகளை செய்திருந்தார்.[421] எல்ரீரீஈ இயக்கத்திற்கு அவர் ஆதரவளித்து வருவதாக இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் அவர் மீது குற்றம் சாட்டிவந்துள்ளனர். குறிப்பாக, உள்ளூர் கடற்படைத்தளபதி ஒருவரினால் தான் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதனை உணர்வதாக அவர் ஏனையவர்களிடமும் கூறியிருந்தார். இந்த காணாமல் போன சம்பவத்தில் இலங்கை கடற்படையைச் சேர்ந்த மூத்த கொமாண்டர் ஒருவர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதனையே அறிக்கைகள் காட்டுகின்றன.

**குற்றவியல் புலனாய்வுகள்**

496. இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையில் காணாமல் போதல் தொடர்பான திட்டவட்டமான குற்றச் செயலொன்று இல்லாதிருக்கும் நிலை புலன் விசாரணை, வழக்குத் தொடுத்தல் மற்றும் பலவந்தமாக ஆட்கள் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களுக்கு தண்டனை அளித்தல் என்வற்றுக்கான ஒரு இடையூறாக இருந்துவருகின்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, WGEID செயல்குழு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டி மற்றும் சித்திரவதைக்கு எதிரான கமிட்டி ஆகிய அனைத்து அமைப்புக்களும் காணாமல் போகும் சம்பவங்களை இலங்கை ஒரு குற்றச் செயலாக்கவேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளன.[422]

497. மனித உரிமைகள் கமிட்டியின் ஐந்தாவது பருவகால அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டிருந்த பிரச்சினைகளின் பட்டியல்கள் தொடர்பாக 2016 செப்டம்பர் மாதத்தில் பதிலளித்த பொழுது,அரசாங்கம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: “தண்டனை சட்டக்கோவையின் தற்போதைய பிரிவுகள் 350 தொடக்கம் 360 வரையான ஏற்பாடுகள் கடத்தல், பலவந்தமாக எடுத்துச்செல்லல் அல்லது காணாமல் போதல் என்பவற்றை உள்ளடக்குவதற்கு போதுமானதாகும்”.[423] எவ்வாறிருப்பினும், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான சம்பவங்களின் போது, வழக்குத் தொடுப்பதற்கென இந்த ஏற்பாடு அரிதாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அரசியல் விருப்பின்மை அல்லது பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்களில் பாதுகாப்பு படையினர்

---

420 ‘பொய் பிரச்சார இயக்கம் தொடர்பான DNA அறிக்கை’ - கொழும்பு http://www.defence.lk/new.asp?fname=20070613_07

421 WS on file

422 E/CN.4/2000/64/Add. 1, para. 63 ; CCPR/CO/79/LKA, para. 10; CAT/C/LKA/CO/3-4, para.9; LLRC Report para. 9.59

423 மனித உரிமைகள் கமிட்டி, இலங்கையின் ஐந்தாவது பருவ கால அறிக்கை தொடர்பான பிரச்சினைகளின் பட்டியல், பிற்சேர்க்கை – பிரச்சினைகளின் பட்டியலுக்கான இலங்கையின் பதில்கள், செப்டம்பர் 17, 2014, பந்தி. 62.

சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய நிலைமையை அம்பலப்படுத்துவதில் ஆர்வமின்மை என்பதே இதற்கான முக்கியமான இடையூறாக இருந்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

498. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் 2011 ஆம் ஆண்டின் அறிக்கையில் பந்தி 9.46 இல் ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: ‘‘பெரும்பாலான சம்பவங்களில் முறையான முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த விடயம் தெரியவந்துள்ளது. ஒரு சில சம்பவங்களில் முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களிடமும் மனுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும், காணாமல் போயிருக்கும் பெருந்தொகையான நபர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயம் இதுவரையில் தெரியவரவில்லை என நெருங்கிய உறவினர்கள் தொடர்ந்தும் முறைப்பாடு செய்து கொண்டிருக்கின்றார்கள்.எனவே இத்தகைய குற்றச்சாட்டுக்கள் உரிய விதத்தில் புலன் விசாரணை செய்யப்படுவதனையும், குற்றமிழைத்த நபர்கள் சட்டத்தின் முன்னால் எடுத்துவரப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டத்தை அமுல்செய்யும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்குவது அரசாங்கத்தின் கடமையாக இருந்துவருகின்றது’’. (பந்தி 9.46)

499. இலங்கையில் அறிவிக்கப்பட்டிருக்கும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட பெரும்பாலான சம்பவங்களில் மூன்று வலய ஆணைக்குழுக்கள் மற்றும் 1998 இல் நியமனம் செய்யப்பட்ட நாடு தழுவிய ஆணைக்குழு என்பவற்றின் தொடர் நடவடிக்கைகள் தவிர, இது தொடர்பாக எவையேனும் குற்றவியல் புலனாய்வுகளை மேற்கொள்ளும் விடயத்தில் அதிகாரிகள்ஒரு சில முயற்சிகளை மட்டுமே மேற்கொண்டுள்ளார்கள் அல்லது எந்த முயற்சியையும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதனை அறியமுடிகின்றது.

500. மேலே குறிப்பிடப்பட்ட வலய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1997 ஆம் ஆண்டின் முடிவில் ‘‘குற்றமிழைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு’’ அரசாங்கம் தீர்மானித்தது. இது தொடர்பாக குற்றவியல் புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும், நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும்மேலதிக சான்றுகளை சேகரிப்பதற்குமென குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் ‘‘காணாமல் போன நபர்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்யும் அலகு’’ என்ற பெயரில் ஓர் அலகு ஸ்தாபிக்கப்பட்டது. ஓர் அறிக்கையின் பிரகாரம், பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளைச் சேர்ந்த காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக குற்றங்களை இழைத்திருப்பவர்கள் எனக் கருதப்பட்ட 1560 நபர்களுக்கு எதிராக பொலிஸ் புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

501. அரசாங்கம் 1998 யூலை மாதத்தில் ‘‘தலைமறைவாகியிருக்கும் நபர்கள் அலகு’’ என்ற பெயரில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்குள் ஒரு புறம்பான அலகை ஸ்தாபித்தது.[424] அக்டோபர் 1999 இல் இலங்கைக்கு மேற்கொண்ட ஒரு விஜயத்தின் போது, WGEID குழுவுக்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், தலைமறைவாகியிருக்கும் நபர்களின் அலகு காணாமல் போன நபர்கள்

[424] Ibid.

தொடர்பான அலகிலிருந்து 890 காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொண்டிருந்தது. அதன் விளைவாக, 270 சம்பவங்கள் தொடர்பாக 480 நபர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு நடைமுறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தன.[425]

502. அரசாங்கம் சித்திரவதைக்கு எதிரான கமிட்டியிடம்[426] 2004 இல் சமர்ப்பித்த அதன் இரண்டாவது பருவகால அறிக்கையில், காணாமல் போன நபர்கள் தொடர்பான அலகு 3615 சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்தியிருப்பதாகவும், அவற்றில் 2462 விசாரணைகள் பூர்த்தியடைந்திருப்பதாகவும் தெரிவித்திருந்தது. இச்சம்பவங்களில் பெரும்பாலானவை சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் முடித்து வைக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்தின் தகவல்களின் பிரகாரம், உயர் நீதிமன்றத்தில் 376 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் சுமார் 300 வழக்குகள் கடத்தல் மற்றும் சட்டவிரோதமாக தடுத்துவைத்திருத்தல் என்பன தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 135 வழக்குகள் முடிக்கப்பட்டிருந்தன. ஆனால்,12 வழக்குகளில் மட்டுமே உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக குற்றத்தீர்ப்பு வழங்கியிருந்தது. முதலாவது குற்றத்தீர்ப்பு 1999 செப்டம்பர் 1 ஆம்திகதி வழங்கப்பட்டது. அதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடத்தல் சம்பவமொன்று தொடர்பாக குற்றவாளி ஆக்கப்பட்டிருந்ததுடன், அவருக்கு ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

503. வலய மற்றும் நாடு தழுவிய ஆணைக்குழுக்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரம், நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த பெரும்பாலான வழக்குகளில் குற்றமிழைத்ததாக கூறப்படும் சம்பந்தப்பட்ட நபர்கள் பொலிஸ் மற்றும்இராணுவம் என்பவற்றின் கீழ்மட்ட உத்தியோகத்தர்களாகவே இருந்து வந்துள்ளனர். காணாமல் போன நபர்கள் தொடர்பான அலகு பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்டே அமைக்கப்பட்டிருந்த காரணத்தினால், மேலதிகாரிகளுக்கு எதிராக புலன் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அது தயக்கம் காட்டிவந்தது என நம்பகமான வட்டாரங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் தெரிவித்திருந்தன.

504. வலய விசாரணை ஆணைக்குழுக்களின் புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், பொலிஸ்மா அதிபரினால் வெளியிடப்பட்டிருந்த ஒரு சுற்றறிக்கை, நாட்டின் அனைத்துப் பொலிஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகள் ஆணைக்குழுக்களின் புலன் விசாரணைகள் முடிவடையும் வரையில், இலங்கையில் பயங்கரவாதம் இடம்பெற்றுவந்த காலப்பிரிவு தொடர்பான அனைத்து ஏடுகளையும், பதிவுகளையும் பாதுகாத்து வைக்க வேண்டுமென பணிப்புரை வழங்கியிருந்தது. பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இந்தச் சுற்றறிக்கையை உதாசீனம் செய்யும் விதத்தில் சம்பந்தப்பட்ட பதிவேடுகளை அழித்திருந்த பல சம்பவங்களை இந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் குறிப்பிட்டிருந்ததாக கூறப்படுகின்றது. அதன்

---

[425] E /CN.4/2000/64/Add.1: பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயல் குழுவின் உறுப்பினர் ஒருவர் மேற்கொண்ட இலங்கை விஜயம் தொடர்பான அறிக்கை (அக்டோபர் 25-29 ,1999), டிசம்பர் 21, 1996 மனித உரிமைகள் கமிட்டி, நான்காவது பருவ கால அறிக்கை, CCPR/C/LKA/2002/4, பந்தி 156-162; சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் கமிட்டி, இரண்டாவது பருவக்கால அறிக்கை, CAT/C/48/Add. 2, பந்தி 63

[426] CAT/C/48/Add.2, 6 August 2004

மூலம் அவர்கள் காணாமல் போன சம்பவங்களுக்கு பொறுப்பாக இருந்துவந்திருக்கும் ஒரு சில பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்படக்கூடிய ஆதாரங்களை அழித்துள்ளார்கள். அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஆணைக்குழுக்கள் முன்வைத்திருந்த ஒரு பரிந்துரை உதாசீனம் செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது.

505. மேலும், வலய ஆணைக்குழுக்களினால் குற்றச் செயல்களைப் புரிந்தவர்கள் எனப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு சில உத்தியோகத்தர்களுக்கு, அதன் பின்னர், பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன என்றும் கூறப்படுகின்றது. உதாரணமாக, மத்திய வலய ஆணைக்குழுவின் ஏழாவது இடைக்கால அறிக்கையின் பிரகாரம், அச்சந்தர்ப்பத்தில் ஆனமடுவ பொலிஸ் நிலையத்தில் விசாரிக்கப்பட்டு வந்த பெரும்பாலான முறைப்பாடுகளில் குறிப்பிட்ட ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. மத்திய வலய ஆணைக்குழுவின் பிரகாரம், ஆணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளித்த ஒருசில சாட்சிகளை அந்த உத்தியோகத்தர் மிரட்டியிருந்தார் என்பதனைக் காட்டும் நம்பகமான ஆதாரங்கள் இருந்துவந்தன. ஆணைக்குழுவின் அறிக்கையில் அவருடைய பெயர் பகிரங்கமாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. கொழும்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் போன்ற பல பதவி உயர்வுகளை அவர் பெற்றுக் கொண்டிருந்தார். தற்பொழுது அவர் ஒரு பிரதி பொலிஸ்மா அதிபராக (DIG) கடமையாற்றி வருகின்றார்.

506. மற்றொரு சம்பவத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களின் அரசாங்கத்தால் திருகோணமலை மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்யப்பட்டிருந்த ஒருவரின் பெயர், தென் மாகாண வலய ஆணைக்குழுவினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காணாமல் போன சம்பவங்களை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்த நபர்களின் பெயர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

507. மற்றொரு சம்பவத்தில் கோப்பில் பெயர் சேர்க்கப்பட்டிருந்த லெப்டினன்ட் கேர்ணல் ஒருவர், 1996 மற்றும் 1997 ஆகிய வருடங்களில் யாழ்ப்பாணத்தில் ஒரு இராணுவ முகாமில் தளபதியாக இருந்த பொழுது இடம்பெற்றதாக கூறப்படும் காணாமல் போன சம்பவங்களை முதன்மையாக நிகழ்த்தியவர் என அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.[427] 1996 ஆம் ஆண்டில் கிராமவாசிகள் குழு ஒன்று காணாமல் போன சம்பவத்தையும் உள்ளடக்கிய விதத்தில் அவருக்கு எதிராககுற்றவியல் புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்பட்டது.[428] இந்த வழக்கை விசாரித்த யாழ்ப்பாண மேலதிக நீதவான் 2003- 2006 காலப்பிரிவில் அப்பதவியில் இருந்தார். அருட் தந்தை பிரவுண் அவர்களின் வழக்கில் நடந்ததைப் போல பெண்மணியான அந்த நீதவானுக்கு மிரட்டல்கள் வந்ததாக கூறப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டில் அவர் கொழும்புக்கு இடமாற்றம்

427 யாழ்ப்பாண பிரதேசத்தில் காணாமல் போன நபர்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட கமிட்டியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட கமிட்டி, 2003.

428 Wikileaks: யாழ்ப்பாணத்தில் 25 கிராமவாசிகள் காணாமல் போன சம்பவத்தை ஐ நா கவனத்தில் எடுத்து வருகின்றது. Colombo Telegraph, அக்டோபர் 15, 2012.

செய்யப்பட்டார். சம்பந்தப்பட்ட நபர் இராணுவத்தில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், தொடக்கத்தில் இராணுவ தலைமை அலுவலகத்தில் செயற்பாடுகள் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டார் என்றும், அதனை அடுத்து காலாட் படை பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டார் என்றும் குறிப்பிடும்[429]ஊர்ஜிதப்படுத்தப்படாத ஓர் ஊடக அறிக்கை 2015 பெப்ரவரி மாதத்தில் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்திருந்தது.

508. கடத்தல் குற்றச்சாட்டுக்களின் பேரில் அதிகாரிகளுக்கு எதிராக ஆரம்பித்து வைக்கப்பட்ட பெரும்பாலான வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள், திருப்திகரமான சான்றுகள் இல்லாத காரணத்தினால் பூர்த்தியடைந்திருக்கவில்லை என்ற விடயத்தை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல்வேறு மனித உரிமைகள் பொறிமுறைகள் கவனத்தில் எடுத்துள்ளன.[430]இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால், அதற்கு கிடைத்திருந்த கால அவகாசத்திற்குள் காணாமல் போன நபர்கள் தொடர்பான அலகு மற்றும் தலைமறைவாகியுள்ள நபர்கள் தொடர்பான அலகு என்பவற்றினால் நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிந்த வழக்குகள் தொடர்பான தகவல்களை சேகரித்துக் கொள்வதற்கோ அல்லது மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கோ முடியாது போய்விட்டது. ஆனால்,அந்த வழக்குகள் அனைத்தும் மீளாய்வு செய்யப்படவேண்டும் என அது நம்புகின்றது.

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு**

509. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 2011 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அதன் அறிக்கையில், பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினை குறித்து ஒரு வலுவான நிலைப்பாட்டை கொண்டிருந்தது. பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட நபர்கள் சம்பந்தமாக முன்னைய ஆணைக்குழுக்கள் முன்வைத்திருந்த பரிந்துரைகள் அமுல் செய்யப்படவில்லை என்ற விடயத்தை அது சுட்டிக்காட்டியிருந்ததுடன், அத்தகைய பரிந்துரைகள் ''இந்த பாரதூரமான பிரச்சினையை கவனத்தில் எடுப்பதற்கு உதவக்கூடியவையாக இருந்துவருவதனால் அவை உடனடியாக அமுல் செய்யப்படுதல் வேண்டும்'' என்றும் குறிப்பிட்டிருந்தது. ''கடந்த கால ஆணைக்குழுக்களின் அத்தகைய நிர்ணயகரமான பரிந்துரைகளுக்கு தொடர்ச்சியாக செயல்வடிவம் கொடுக்கத் தவறுவதானது, அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்படும் ஆணைக்குழுக்கள் தொடர்பான விமர்சனங்கள் எழுவதற்கும்,சந்தேக உணர்வுகள் தோன்றுவதற்கும் வழிகோலுகின்றது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இதற்கு விதிவிலக்கானது அல்ல" என அது மேலும் குறிப்பிட்டிருந்தது.

510. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒரு விசாரணை ஆணைக்குழுவாக அமைக்கப்பட்டிராவிட்டாலும்,அது காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாவிட்டாலும் கூட அதன் விசாரணைகளின் போது குறிப்பாக இராணுவம் மற்றும் கடற்படையினராலும்[431] அதேபோல ஆயுதக்

---

429 இராணுவ உயர் அதிகாரிகளின் இடமாற்றம் இலங்கையின் "உள்ளக பொறிமுறை" தொடர்பான சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. JDS, மார்ச் 4 , 2015.

430 CCPR/CO/79/LKA 2003, par.9

431 பார்க்கவும்: கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமர்வின் எழுத்துப் பிரதிகள் - உதாரணமாக முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை

குழுக்களினாலும் கைது செய்யப்பட்ட பின்னர்,காணாமல் போனதாக கூறப்பட்ட நபர்கள் தொடர்பான 1018 முறைப்பாடுகள் அதற்குக் கிடைத்திருந்தன.[432] கிடைத்திருந்த பாரிய எண்ணிக்கையிலான சமர்ப்பணங்களின் பின்னணியில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு "இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய விதத்தில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதனையும், குற்றமிழைத்த நபர்கள் சட்டத்தின் முன் எடுத்து வரப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்க வேண்டுமென" அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தது.[433] மேலும், தமது குடும்ப உறுப்பினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயம் தெரியாத நிலையில் கடும் துயரில் இருந்துவரும் குடும்பங்களுக்கு அரசாங்கம் உதவியளிக்க வேண்டும் எனவும் அந்த ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.[434]

511. "இந்தப் பிரச்சினையின் சிக்கலான தன்மை மற்றும் பரிமாணம் என்வற்றின் பின்னணியிலும், காணாமல் போனதாக கூறப்படும் நபர்களின் கணிசமான எண்ணிக்கையின் அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட புலனாய்வுகள் நீண்ட காலத்தை கொண்டிருக்கும் அடிப்படையிலும்இடம் பெற்றிருப்பதாக கூறப்படும் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக புலனாய்வுகளை மேற்கொள்வதற்கும்,பொருத்தமான விதத்தில் குற்றவியல் வழக்கு நடைமுறைகளை ஆரம்பித்துவைப்பதற்கு சட்டமா அதிபருக்கு தேவையான ஆதாரங்களை வழங்குவதற்கும் ஒரு விசேட புலன் விசாரணை ஆணையாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்" என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு திட்டவட்டமாக பரிந்துரை செய்திருந்தது.[435]

**காணாமல் போயிருக்கும் நபர்கள் தொடர்பான முறைப்பாடுகளை புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு (2013)**

512. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தம் என்பவற்றுக்கு எதிர்வினையாற்றும் விதத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ 2013 ஆகஸ்ட் 15 ஆம் திகதி காணாமல் போயிருக்கும் நபர்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து புலன் விசாரணை செய்வதற்கான ஒரு புதிய ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமனம் செய்தார். "1990 யூன் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 2009 மே 19 ஆம் திகதி வரையிலான காலப்பிரிவின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்து வந்த நிலையில், கடத்தப்பட்ட அல்லது தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து காணாமல் போன நபர்கள் தொடர்பான" சம்பவங்கள் குறித்து புலன் விசாரணைகளை மேற்கொள்வதே அந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமாக இருந்துவந்தது.[436]இந்த ஆணைக்குழுவில் நீதிபதி

432 LLRC Report, Annex 5.1

433 LLRC Report, para. 9.46

434 LLRC Report, para. 9.58

435 LLRC Report, para. 9.51

436 அதி விசேட (வர்த்தமானி)இல. 1823/42-2013. ஹரிஸ்சந்திர குணரத்ன, காணாமல் போன நபர்கள் தொடர்பான ஆணைக்குழுவின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது, அது அவசரமாக எதனையும் செய்யாது- தலைவர் நவம்பர் 27, 2013The Island, http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details & code _ title=92960. See National Plan of Action for the Implementation of LLRC Recommendations (November 2014)

-

பராக்கிரம பரணகம தலைவராக பெயர் குறிக்கப்பட்டிருந்ததுடன், அதில் மூன்று உறுப்பினர்கள் இருந்தனர். எனினும்,பின்னர் இரண்டு மேலதிக உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். இந்த ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரம் இரண்டு தடவைகள் நீடிக்கப்பட்டதுடன், அது 2015 ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் அதன் பணிகளை முடிக்க வேண்டியிருந்தது.[437]பிந்திய அறிக்கைகளின் பிரகாரம், இந்த ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரம் மேலும் நீடிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. ஆனால், அது இன்னமும் முறையாக வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்படவில்லை.

513. 2013 இல் மேற்கொண்ட இலங்கைக்கான தனது விஜயத்தின் பின்னர் ஆணையாளர் நவிப்பிள்ளை காணாமல் போன நபர்கள் தொடர்பாக ஒரு புதிய விசாரணைக்குழுவை நியமனம் செய்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் பொழுது, ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரத்தை பரவலாக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தார்: “துரதிஷ்டவசமாக இந்த ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டிற்கும் 2009 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற காணாமல் போன சம்பவங்களை மட்டுமே கவனத்தில் எடுக்கவுள்ளது. அதன் கருத்து அண்மைய வருடங்களில் கொழும்பிலும், நாட்டின் ஏனைய பாகங்களிலும் அறிவிக்கப்பட்ட பெருந்தொகையான வெள்ளை வான்களில், எடுத்துச் செல்லப்பட்டு காணாமல் போன சம்பவங்கள் அதன் பரப்புஎல்லைக்குள் வரமாட்டாது என்பதாகும்.”[438] நிபுணர்களும் இதே மாதிரியான கரிசனைகளை வெளியிட்டிருந்தனர். இந்த ஆணைக்குழு உள்ளடக்கப்படும் காலப்பிரிவு, 1990 யூன் 1 ஆம் திகதியில் இருந்து, 1983 ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2009 மே 19 ஆந் திகதி வரையிலான காலப் பிரிவை உள்ளடக்கும் விதத்தில் 2014 ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டது. 2014 யூலை 15ஆம் திகதி இந்த ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரத்தின் வீச்செல்லையும் விரிவாக்கப்பட்டதுடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பந்தி 4.359 இல் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக விசாரித்து, அறிக்கையிடுவதற்கும் அதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. இது விகிதாசாரம் மற்றும் பிரித்து வேறுபடுத்தி அறிதல் கோட்பாடுகளுக்கு மதிப்பளிப்பதுடன், தொடர்புபட்ட பிரச்சினைகளையும் உள்ளடக்குகின்றது. எல்ரீரீஈ இயக்கம் தொடர்பாக சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பிரயோகத்தன்மை மற்றும் அந்த இயக்கம் 2009 மே மாதத்தில் முடிவடைந்த ஆயுதமோதலின் பின்புலத்தில் “மனிதக் கேடயங்களாக” சிவிலியன்களைப் பயன்படுத்தியதற்கு ஊடாக சர்வதேச மனிதநேயச் சட்டத்தை அல்லது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறியிருந்த விடயம் என்பனவும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.[439] அதன் ஆணைப்பத்திரம் விரிவாக்கப்பட்டதனை அடுத்து, ஆணைக்குழுவுக்கு

[437] காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு மேலும் கால அவகாசம் http:// www.thesundayleader.lk/2015/02/08/more-time-for-probe-on-missing/,பெப்ரவரி 15, 2015.

[438] மனித உரிமைகள் பேரவை, இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை மேம்படுத்துவது தொடர்பான மனித உரிமை ஆணையாளரின் வாய் மூலமான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள், செப்டம்பர் 25, 2015, A/HRC/24/CRP.3/Rev.1, பந்தி 13, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1990 ஜூன் தொடக்கம் 2009 மே மாதம் வரையிலான காலப் பிரிவின் போது காணாமல் போன நபர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பான ஒரு குறிப்பு, மார்ச் 2014, பக். 5.

உதவுவதற்கென ஒரு சர்வதேச ஆலோசனை சபையும் நியமனம் செய்யப்பட்டது. அந்த ஆலோசனை சபையின் ஆணைப்பத்திரம் அண்மையில் காலாவதியாகியது.

514. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட பெரும்பாலான சாட்சிகள், தேசிய பொறிமுறைகள் குறித்து பரந்த அளவிலான அவநம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்த போதிலும், குடும்ப உறுப்பினர்கள் அனுபவித்த விரக்தி உணர்வுக்கு மத்தியிலும் கூட, இன்னமும் பலர் இது தொடர்பான முறைப்பாடுகளை ஆணைக்குழுவிடம் முன்வைத்துள்ளனர். (இதுவரையில் பிரசுரிக்கப்படாத, ஆனால்,அதன் ஒரு பிரதி இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கும்) 2015 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட அதன் இடைக்கால அறிக்கையில்,ஆணைக்குழு 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2009 மே 19 வரையிலான காலப்பிரிவின் போது 25 மாவட்டங்களில் இருந்தும் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக 13,378 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டிருந்தது.[440] பெரும்பாலான முறைப்பாடுகள் 2005 ஆம் ஆண்டிற்கும் 2009 ஆம் ஆண்டிற்கும் இடையில் பிரதானமாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகளாக இருந்துவந்தன. ஆணைக்குழு 2014 நவம்பர் மாதத்தில் சுமார் 1500 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக கூறியது. 2015 ஏப்ரல் மாதமளவில் ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சி, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, முல்லைத்தீவு. மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் மொத்தம் பதினொரு அமர்வுகளை நடத்தியிருந்தது.

515. ஆணைக்குழு அதன் இடைக்கால அறிக்கையில், பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு எதிராக ''முதற்தோற்ற சாட்சியங்கள்'' காணப்படும் பத்து சம்பவங்களின் ஒரு பட்டியலை அடையாளம் கண்டிருந்தது. பொதுமக்கள் பங்கேற்புடன் நடத்திய அமர்வுகளின் போது, காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக அந்த நபர்கள் பொறுப்பாக இருந்து வந்தார்கள் எனஅவர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அவர்களுக்கு எதிராக உள்நாட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.[441] நீதித்துறை நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யும் நோக்கத்துடன் ஆழமான புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கென அது 59 சம்பவங்களை இனங்கண்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது.[442]

516. காணாமல் போன சம்பவங்களில் மிகப் பெரும்பாலானவை,கைது செய்வதற்கான பிடிவிறாந்து இல்லாத நிலையில் கைதுகள் மேற்கொள்ளப்படும் வழக்கத்தின் விளைவாக இடம்பெற்றிருந்தன என்ற விடயத்தை ஜனாதிபதி ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது. மேலும், தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள், வைக்கப்பட்டிருக்கும் தடுப்புக்காவல் நிலையங்கள் தொடர்பாக அறிவிக்கப்படாததும் இதற்கான காரணம் எனக் கூறப்பட்டிருந்தது. சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், அகதி முகாம்கள் மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் என்பற்றில்

---

439 வர்த்தமானி 1871/18 (யூலை,14, 2014)

440 இடைக்கால அறிக்கை, காணாமல் போன நபர்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு, ஏப்ரல் 2015

441 இடைக்கால அறிக்கை, cit., பின்னிணைப்பு H

442 Id, பின்னிணைப்பு L

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் நபர்களின் பெயர்களை கொண்ட ஒரு பட்டியலை வெளியிட அது முன்வைத்த எழுத்து மூலமான வேண்டுகோள்களுக்கு இணங்கியொழுகுவதற்குபாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதி அமைச்சு என்பன தவறியிருப்பதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்தது. மேலும்,''அனைத்து தகவல்களை வழங்குமாறும் குறிப்பாக வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், ஓமந்தை ஆகிய இடங்களில் சரணடைந்த நபர்கள் தொடர்பான விபரங்களையும், அகதி முகாம்களிலிருந்து விசாரணைக்கு என எடுத்துச் செல்லப்பட்ட நபர்கள் காணாமல் போயிருந்த சம்பவங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்குமாறும் பாதுகாப்பு படைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கவேண்டுமென'' அரசாங்கத்திடம் அது மிக முக்கியமான சிபார்சுகளை முன்வைத்திருந்தது. ''எவரேனும் நபர் ஒருவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தால், அத்தகைய நபர்களின் குடும்பத்தினருக்கு அல்லது உறவினர்களுக்கு அந்த நபர் எங்கு வைக்கப்பட்டிருக்கின்றார் என்ற விபரங்கள் வழங்கப்படுதல் வேண்டும். மேலும்,அத்தகைய நபர்களின் உறவினர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு வருவதற்கு தேவையான வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும்'' எனவும் அது குறிப்பிட்டிருந்தது.

517. 2015 யூலை மாதத்தில் முன்வைக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடுத்து, ஒரு சில சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை தீவிரப்படுத்துவதற்கென ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரி ஒருவரின் கீழ் விசேட புலன் விசாரணைக்குழு ஒன்றை நியமனம் செய்வதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும், அந்த விசாரணைக்குழுவின் நிலை என்னவென்று விளக்கப்பட்டிருக்கவில்லை.[443]

518. இத்தகைய முக்கியமான முடிவுகளுக்கு மத்தியிலும் கூட,ஆணைக்குழுவின் பணி தொடர்பாக கணிசமான அளவிலான கரிசனைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் மதிப்பீட்டில், இந்த ஆணைக்குழு இதுவரையில் முழுமையான, சுயாதீனமான மற்றும் வெளிப்படையான ஒரு விசாரணையை நடத்தத் தவறியுள்ளது. மோதலுடன் சம்பந்தப்பட்ட பரவலான அத்துமீறல்கள் தொடர்பான புலன் விசாரணைகளை உள்ளடக்கும் விதத்திலும், குறிப்பாக எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களில் கவனம் செலுத்தும் விதத்திலும் விசாரணை ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரம் 2014 யூலை மாதம் விரிவாக்கப்பட்ட போதிலும், இது ஆணைக்குழுவின் முதன்மை பொறுப்பான காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கு உதவ வேண்டிய பொறுப்பிலிருந்து அது விலகிச்செல்லும் ஒரு நிலையை ஏற்படுத்தமுடியும் என்ற விதத்தில் மனித உரிமை நிறுவனங்களை சேர்ந்தவர்களும், குடும்ப உறுப்பினர்களும் கவலை தெரிவித்திருந்தனர்.[444]

519. ஆணைக்குழுவை அணுகிய குடும்ப உறுப்பினர்கள் பொதுவாக ''காணாமல்'' போன நபர் தொடர்பான விபரங்களை கொண்டிருக்கும் படிவம் ஒன்றை நிரப்புமாறு

---

443 http://www.pcicmp.lk/images/NewsEvents/Press%20Release%2024.07.15.pdf

444 சர்வதேச மன்னிப்புச் சபையின் செய்தி வெளியீடு: இலங்கை: காணாமல் போனவர்களின் தினத்தில் செயற்பாட்டாளர்களின் பாராளுமன்றத்திடம் மனு சமர்ப்பிக்கின்றனர், http://www.amnesty.org/en/for-media/press-releases/sri-lanka-activists-petition-parliament-day-disappeared-2014-10-27; மாற்று கொள்கைகளுக்கான நிலையம், காணாமல் போன நபர்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரத்தை விரிவாக்குவது தொடர்பான கரிசனைகள், ஜுலை 25, 2014

கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். மேலும், காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகளை எடுத்துக் கூறவேண்டும் என்றும், பின்னர் ஆணைக்குழு விசாரணைக்குழு ஒன்றை அனுப்பிவைக்கும் என்றும் அவர்களிடம் கூறப்பட்டிருந்தது. பெரும்பாலான சம்பவங்களில் இதுவரையில் எத்தகைய தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

520. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பொதுமக்களிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் அதேவேளையில், இந்த விசாரணை நடைமுறைகளின் தரம் ஆணைக்குழுவின் ஆணைப்பத்திரம் குறித்து குடும்ப உறுப்பினர்கள் அறியாதிருத்தல், விசாரணைகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் குறைந்த கால அளவு மற்றும் ஒரு சில சந்தர்ப்பங்களில் மோசமான மொழிபெயர்ப்புக்கள்[445] போன்ற பல்வேறு காரணிகளினால் பாதிக்கப்பட்டிருந்தது எனக் கூறப்பட்டது. குறிப்பாக, சுயாதீனமான அவதானிப்பாளர்கள் முன்வைத்திருக்கும் அறிக்கைகளின் பிரகாரம், ஆணைக்குழு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் போதிய எண்ணிக்கையிலான தமிழ்மொழி பேசும் உத்தியோகபூர்வ உரைபெயர்ப்பாளர்களை வழங்கியிருக்கவில்லை. வழங்கப்பட்ட உரைபெயர்ப்புக்கள் சில சந்தர்ப்பங்களில் சுருக்கமானவையாகவும், முழுமையற்றவையாகவும் அல்லது துல்லியத்தன்மை அற்றவையாகவும் இருந்து வந்துள்ளன. கேள்விகள் மற்றும் பதில்கள் என்பன பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தவறான விதத்தில் உரைபெயர்க்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

521. பொது விசாரணைகளுக்கென முறைப்பாட்டாளர்களை தெரிவுசெய்யும் முறையும் தெளிவான ஒரு அளகோலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனக் கூறப்பட்டிருந்தது. ராஜதந்திர வட்டாரங்களின் தகவல்களின் பிரகாரம், கிளிநொச்சியில் இடம்பெற்ற பொது விசாரணைகளின் போது தெரிவு செய்யப்பட்டிருந்த பெரும்பாலான சம்பவங்கள் அவற்றை நிகழ்த்தியதாக சந்தேகிக்கப்பட்டிருந்த நபர்கள் அரசு சாராத செயற்பாட்டாளர்களாக - பிரதானமாக எல்ரீரீஈ இயக்கத்தை சேர்ந்தவர்களாகவே - இருந்து வந்தனர். ஜனாதிபதி ஆணைக்குழு அதன் இடைக்கால அறிக்கை[446] தொடர்பாக வெளியிட்ட ஒரு செய்தி அறிக்கையில் வடமாகாணத்தில் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக கிடைத்த குற்றச்சாட்டுக்களில் 60 சதவீதமாவை எல்ரீரீஈ இயக்கத்திற்கு எதிராகவே முன்வைக்கப்பட்டிருந்தன எனக் குறிப்பிட்டிருந்தது. எவ்வாறிருப்பினும்,எழுத்துமூலமான முறைப்பாடுகள் குறித்த ஆணைக்குழுவின் பகுப்பாய்வு,பாதுகாப்பு படையினர் 19 சதவீதமான சம்பவங்களுக்கும், எல்ரீரீஈ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 17 சதவீதமான சம்பவங்களுக்கும், இனந்தெரியாத நபர்கள் அல்லது குழுக்கள் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட சம்பவங்களுக்கும் பொறுப்பாக இருந்து வந்துள்ளனர் என்பதனை காட்டுவதுடன், பொது விசாரணைக்கென உயர் விகிதத்திலான எல்ரீரீஈ சம்பவங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை, தெரிவு குறித்த சந்தேகங்களை எழுப்புகின்றன.

---

445 உதாரணமாக, 2014 பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் விசாரணைகள் இடம்பெற்ற முதலாவது தினத்தின் போது, பெரும்பாலான சம்பவங்களுக்கு சாரசரியாக 20-30 நிமிடங்களே வழங்கப்பட்டிருந்தன. இறுதி நாளின் போது ஒவ்வொரு சம்பவத்திற்கும் 10 நிமிடங்களே வழங்கப்பட்டிருந்தன.

446 காணாமல் போன நபர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு,செய்தி வெளியிடு –காணாமல் போன நபர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் சமர்ப்பணம்:http://www.pcicmp.lk/images/press%20release%20Interim%20Report.pdf

522. மேலும், காணாமல் போன சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு பின்புலம் சார்ந்த அறிவு இருந்து வரவில்லை என்ற விடயத்தை எடுத்துக்காட்டும் சான்றுகளை பெருந்தொகையான சாட்சிகள் முன்வைத்திருந்தார்கள். மேலும், ஆணைக்குழு அமர்வுகளின் போது கேட்கப்பட்ட ஒரு சில கேள்விகள் தெளிவற்றவையாகவும், பொருத்தமற்றவையாகவும் இருந்து வந்தன என்ற விடயத்தையும் சாட்சிகள் சுட்டிக் காட்டியிருந்தனர்.[447]

523. காணாமல் போயிருந்த நபர்களின் குடும்பத்தினர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னால் சாட்சியமளித்த பின்னர், பாதுகாப்புப் படையினரின் தலையீடு, மிரட்டல் மற்றும் கண்காணிப்பு என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருந்த சம்பவங்கள் குறித்த அறிக்கைகளும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன.[448] ஜனாதிபதி ஆணைக்குழு அதன் இடைக்கால அறிக்கையில், ஆணைக்குழுவின் முன்னால் தோன்றும் ஒரு சில நபர்கள் பாதுகாப்புப் படை ஆளணியினரால் துன்புறுத்தப்பட்டிருந்தார்கள் என செய்தி வெளியிட்டிருந்த‘‘ஊடகங்களின் குறிப்பிட்ட சில பிரிவுகள் மீது’’ குற்றம்சாட்டியிருந்தது. “ஆணைக்குழுவின் முன் தோன்றிய எந்தவொருநபரினாலும் தாம் பாதுகாப்பு படை ஆளணியினரால் துன்புறுத்தப்பட்டதாக எந்தவொரு முறைப்பாடும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை’’[449]என்றும் அது குறிப்பிட்டிருந்தது.

524. எவ்வாறிருப்பினும், சாதாரண உடையில் இருந்த பாதுகாப்புப் படை ஆளணியினர் விசாரணைகளில் பங்குபற்றும் நபர்களை உன்னிப்பாக கண்காணித்திருந்ததாகவும், குடும்பங்கள் மிரட்டப்பட்டிருந்ததாகவும், விசாரணைகளில் பங்குபற்ற வேண்டாம் என அவற்றிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும்[450]இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. ராஜதந்திர வட்டாரங்களின் தகவல்களின் பிரகாரம்,‘‘கணிசமான அளவிலான சாட்சிகள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் தலையீடுகளின் இயல்புகளை வெளிப்படுத்தியிருந்தார்கள். ஆனால், பயங்கரவாத புலனாய்வு பிரிவு, குற்றவியல் புலனாய்வு பிரிவு போன்ற காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து வந்திருக்கும் பல்வேறு அமைப்புக்கள் இருந்து வருவதாகவும், அதனால் சாத்தியமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் குடும்பங்கள் புலன் விசாணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்வதாகவும் தலைவர் கூறியிருந்தார’’.[451]

---

447 உதாரணமாக, ஒரு தொகுதி விசாரணைகளின் போது, பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கும் நபர்கள் தொடர்பான விசாரணை ஒன்றுக்கு பொருத்தமற்றதாக இருந்து வந்த கேள்விகளை ஆணையாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கேட்டிருந்தனர். அதாவது, இலங்கை இராணுவம் பிரசன்னமாக இருக்கும் நிலையில் குடும்பங்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனவா போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

448 கோப்பிலிருக்கும் சாட்சி வாக்குமூலம்: மேலும் பார்க்கவும் மனித உரிமைகள் பேரவை: விசேட கலந்தாலோசனை மன்றத்தைக் கொண்டிருக்கும் ஒரு அரசு சாரா அமைப்பான மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஆசிய மன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான சமர்ப்பணம் செப்டம்பர் 5, 2014. A/HRC/27/NGO/91

449 காணாமல் போயிருக்கும் நபர்கள் தொடர்பான முறைப்பாடுகளை புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு, இடைக்கால அறிக்கை, ஏப்ரல் 2015, பக்கம் 7

450 பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

451 பகிரங்க அமர்வு, முல்லைத்தீவு, வட மாகாணம் ஜுலை (5 - 8, 2014): பகிரங்க அமர்வு – மன்னார் வட மாகாணம் (ஆகஸ்ட் 8 – 11, 2014)

**சர்வதேச பொறிமுறைகள்: பலவந்தமாக அல்லது தமது விருப்பத்துக்கு மாறான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான (WGEID) செயற்குழுவின் வகிபாத்திரம்**

525. தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை தெரிந்து கொள்வதில் தொடர்ந்தும் இடையூறுகளை எதிர்கொண்டுவந்த நிலையில், குடும்ப உறுப்பினர்களும், அவர்களுக்கு ஆதரவளிக்கும் அரச சாரா அமைப்புக்களும் காணாமல் போனவர்களுக்கு நேர்ந்த கதியையும், அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதனைதெரிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்தச் செயற்குழுவிடம் பெருந்தொகையான சம்பவங்களை சமர்ப்பித்திருந்தார்கள். இச்செயற்குழு 1980 இல் ஸ்தாபிக்கப்பட்டது தொடக்கம்,காணாமல் போன நபர்கள் தொடர்பான 12,536 சம்பவங்களை மாறி மாறி வந்த இலங்கை அரசாங்கங்களுக்கு அனுப்பி வைத்திருந்தது. செயற்குழுவின் கடைசி வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த மிகச் சமீபத்திய புள்ளிவிபரங்களின் பிரகாரம்,இலங்கையில் நிலுவையில் இருந்துவரும் சம்பவங்களின் மொத்த எண்ணிக்கை 5731 ஆகும்.[452]

526. ஆட்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கச் செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பான அறிக்கைகளை பரிசீலனை செய்வதில் இந்தச் செயற்குழு முக்கியமான ஒரு வகிபாத்திரத்தை வகித்திருந்ததுடன், அத்தகைய குற்றச்சாட்டுகள் தொடர்பாக புலன் விசாரணைகள் நடத்துமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகித்திருந்தது. அது 1991, 1992 மற்றும் 1999 ஆகிய வருடங்களில் இலங்கைக்கான மூன்று களப்பயணங்களை மேற்கொண்டிருந்தது. அதன் பின்னர், தொடர் நடவடிக்கைகளுக்கென விஜயம் செய்யும் பொருட்டு மீண்டும் மீண்டும் வேண்கோள்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், இலங்கைக்கு வருவதற்கு அக்குழுவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

527. 2015 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம், அதனையடுத்து இத்தகைய விஜயமொன்றுக்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றது. முதலில் 2015ஆகஸ்ட் 3-12 திகதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருந்த பயணம், ஆகஸ்ட் 17 ஆம்திகதி பாராளுமன்றத் தேர்தல் அண்மித்து வந்த நிலையில்,அரசாங்கம் முன்வைத்திருந்த ஒரு வேண்டுகோளின் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது 2014 நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படும் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

528. செயற்குழு 1990 களில் இலங்கைக்கு மேற்கொண்ட அதன் விஜயங்களை அடுத்து, காணாமல் போன சம்பவங்களைத் தடுப்பதற்கும், அவை தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்குமென அரசாங்கத்திடம் பெருந்தொகையான பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.[453] அச்சந்தர்ப்பத்தில் அரசாங்கம் சம்பவங்கள் தொடர்பான கணிசமான அளவிலான தகவல்களை

[452] பலவந்தமான விதத்தில் அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான செயல்குழுவின் அறிக்கை, ஆகஸ்ட் 4, 2014, A/HRC/27/49, பக். 13

[453] பார்க்கவும்: E/CN.4/1992/18/Add.1; E/CN.4/1993/25/Add. 1; E/CN.4/2000/64/Add.1

வழங்கியதுடன்,[454] அதனை அடுத்து செயற்குழு, 2002 ஆம் ஆண்டு தெளிவுபடுத்தப்பட்டவாறு, 4390சம்பவங்களை கவனத்தில் எடுத்திருந்தது.[455]

529. பெருந்தொகையான சம்பவங்கள் தொடர்பாக மரணச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பதாக அல்லது நட்டஈடு வழங்கப்பட்டிருப்பதாக அல்லது நட்டஈடு வழங்கும் செயன்முறை முன்னெடுக்கப்பட்டுவருவதாக அரசாங்கம் பதிலளித்திருந்தது. தரப்பட்டிருக்கும் முகவரிகள் பிழையானவையாக அல்லது தெளிவற்றவையாக இருந்துவரும் காரணத்தினால் அல்லது குடும்பம் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறியிருக்கும் காரணத்தினால் எஞ்சியிருக்கும் சம்பவங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது என அரசாங்கம் கூறியிருந்தது. தரப்பட்ட முகவரியிலிருந்து எந்தவொரு நபரும் காணாமல் போயிருக்கவில்லை. வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்துவருகின்றன. குடும்ப உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கவில்லை அல்லது மரணச் சான்றிதழ்களை அல்லது நட்டஈடுகளை பெற்றுக்கொள்வதற்கு மறுத்திருக்கின்றார்கள். சம்பந்தப்பட்ட நபர்கள் உயிருடன் இருப்பதாக கூறப்படுகின்றது. காணாமல் போன சம்பவம் எந்தவொரு அரசாங்க அமைப்புக்கும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.[456]

530. எனினும்,1995 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்றிருக்கும் அனைத்து காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாகவும் புலன் விசாரணை செய்யும் பணியை முன்னெடுப்பதற்கென சுயாதீனமான அமைப்பொன்றை ஸ்தாபித்தல், பிரகடனத்தின் உறுப்புரை 10(3) இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் தொடர்பான மத்திய பதிவேடொன்றை தயாரித்தல், காணாமல் போவதை தடைசெய்யும் விடயத்தை இலங்கையின் அரசியல் யாப்பில் ஒரு அடிப்படை உரிமையாக உள்ளடக்குதல் போன்ற செயற்குழுவினால் முன்வைக்கப்பட்டிருந்த மிக முக்கியமான பரிந்துரைகளை அரசாங்கம் அமுல் செய்யத் தவறியிருந்தது.

531. நிலுவையில் இருந்து வரும் சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் WGEID செயற்குழுவுக்கு தொடர்ச்சியாக உயர் எண்ணிக்கையிலான பதில்களை வழங்கிவந்துள்ளது. எவ்வாறிருப்பினும், பெரும்பாலான விடயங்களைப் பொறுத்தவரையில் அந்த தகவல்கள், அச்சம்பவங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு

---

[454] பலவந்தமான விதத்தில் அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கச் செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான செயல்குழுவின் அறிக்கை, ஜனவரி 18, 2002 E/CN.4/2002/79, பக். 286

[455] A/HRC/27/49, பந்தி 287; இவ்விதம் பரிசீலனை செய்யப்பட்ட சம்பவங்களில் 6581 சம்பவங்கள் பலவந்தமாக அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்க செய்யப்பட்ட நபர்கள் தொடர்பான செயல் குழுவினால் (WGIED) தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலானவை அவர்கள் மரணமடைந்துள்ளார்கள் என அரசாங்கம் தெரிவித்த பின்னரேயே அவற்றில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. 1990 களின் பிற்பகுதியில் காணாமல் போயிருந்த நபர்களின் பெரும்பாலான உறவினர்கள் அவர்கள் தொடர்பாக மரணச் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்ற விடயத்தை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். ஆனால், அவ்விதம் பாதிக்கப்பட்டிருந்த நபர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற விடயம் அச்சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை (மேலே பார்க்கவும்: மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை).

[456] Ibid.

போதியவையாக இருந்துவரவில்லை எனக் கருதப்பட்டது.[457] அதுதவிர, இலங்கையில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் இடம் பெற்றிருந்த பலவந்தமான காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பான செயற்குழுவின் கரிசனைகளை எடுத்துவிளக்கும் பொதுவான குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கம் போதியளவில் பதிலளித்திருக்கவில்லை.[458]

# IX. சித்திரவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான ஈவிரக்கமற்ற, குரூரச் செயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல்

## அறிமுகம்

532. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அதன் முன்னுரிமை தலைப்புக்களில் ஒன்றாக அரசாங்க பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் சித்திரவதை மற்றும் ஏனைய வடிவங்களான ஈவிரக்கமற்ற, குரூரச் செயல்கள், அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை வழங்குதல் என்பன குறித்து கவனம் செலுத்தியது. இது தொடர்பாக கிடைத்திருந்த குற்றச்சாட்டுக்களின் அளவு மற்றும் பாரதூரமான தன்மை என்பவற்றின் காரணமாகவே அது அவ்வாறு செய்தது. கிடைத்த கால அவகாசத்தைப் பொறுத்து, அது மோதலுடன் சம்பந்தப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பாக முதன்மையாக புலன் விசாரணைகளை நடத்தியது. எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளைக் கொண்டிருக்கிறார்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்களைப் பாதுகாப்பு படையினர் தொடர்ந்தும் தடுத்துவைத்திருந்த மோதலுக்கு பிற்பட்ட காலப் பிரிவையும் இது உள்ளடக்கியது.

533. எவ்வாறிருப்பினும்,இங்கையின் பரவலான குற்றவியல் நீதி அமைப்பில் சித்திரவதை மற்றும் மோசமான விதத்தில் நடத்துதல் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயத்தையும், நாடெங்கும் இருக்கும் பொலிஸ் நிலையங்களிலிருந்து வழமையாக ஒரு சில சம்பவங்கள் அறிவிக்கப்பட்டு வரும் விடயத்தையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அறிந்துள்ளது. மேலும், நிகழ்த்தப்படுவதாகக் கூறப்படும் இந்த சித்திரவதைச் சம்பவங்கள் அனைத்தும் ஆயுத மோதலுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வரவில்லை. பொதுவாகக் குற்றவியல் நீதி அமைப்புக்குள் சித்திரவதை பரவலாக இடம்பெற்று வருகின்றது என்ற விடயத்தை அரசு சாரா அமைப்புக்களின் அறிக்கைகள் எடுத்துக்காட்டியுள்ளன. 1998 ஆம் ஆண்டிற்கும் 2011 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது, பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் தொடர்பாக 1500 சித்திரவதைச் சம்பவங்களை தமது அமைப்பு ஆவணப்படுத்தியிருப்பதாக ஓர் அரசு சாரா அமைப்பு அறிக்கையிட்டிருந்தது.[459]இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை

[457] A/HRC/21/45, para 506; A/HRC/16/48, para 444 ; A/HRC/WGEID/99/1, para 126; A/HRC/WGEID/100/para.95; A/HRC/WGEID/102, para 139; A/HRC/WGEID/103, para 156, A/HRC/WGEID/104 para 118;

[458] A/HRC/4/41 para. 337-340; A/HRC/19/58/Re v.1 par. 495-501

[459] ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, 2011, பொலிஸ் சித்திரவதை தொடர்பான 323 சம்பவங்கள் குறித்த அறிக்கை http://www.humanrights.asia/news/ahrc-news/AHRC-STM-085-2011>

பயன்படுத்தப்பட்டு வருவது தொடர்பாகப் புலன் விசாரணை செய்வதற்கும், அப்பிரச்சினையை கவனத்தில் எடுப்பதற்குமான பரந்த முயற்சியின் ஒரு பாகமாக இவையும், இவற்றையொத்த குற்றச்சாட்டுக்களும் இருந்து வருதல் வேண்டும். இழைக்கப்படும் சித்திரவதைச் சம்பவங்களின் குரூரத் தன்மை அவற்றின் மூலம் பாதிக்கப்படுபவர்கள் மீது நீண்டகாலத் தாக்கத்தை எடுத்து வந்திருந்தது என்ற விடயமும், அவர்கள் தொடர்ந்தும் உடல் ரீதியான, உளரீதியான வடுக்களை சுமந்து வந்திருந்தார்கள் என்ற விடயமும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நடாத்திய நேர்காணல்களிலிருந்து தெளிவாகத் தெரியவந்திருந்தன. அடுத்துவரும் அத்தியாயம் சித்திரவதையின் பின்னணியில் பாலியல் வன்முறை இடம்பெற்று வந்த போக்குகளை எடுத்துக்காட்டுகின்றது. இப் பாலியல் வன்முறை, அதனால் பாதிக்கப்பட்ட "**ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரை**" பொறுத்தவரையில் மிகவும் மனவேதனை ஊட்டும் ஒரு சித்திரவதை வடிவமாக இருந்து வந்தது.

534. 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆண்டில் மோதல் முடிவடைந்த காலப்பகுதி வரையிலான காலப் பிரிவின் போது எல்ரீரீஈ இயக்கத்தினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த நபர்களும் சித்திரவதைக்கு அல்லது மோசமான விதத்தில் நடத்தப்படுவதற்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தொடர்பான ஒரு சில அறிக்கைகளும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருந்தன. ஆனால், அத்தியாயம் II இல் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் முறைமை சார்ந்த தடங்கல்கள் காரணமாக இவை குறித்து புலன் விசாரணை செய்வதற்கு வரையறுக்கப்பட்ட ஒரு வாய்ப்பே கிடைத்தது.

**அரசாங்கப் பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைச் சம்பவங்களின் போக்குகள்**

535. பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் இந்த அறிக்கையினால் உள்ளடக்கப்படும் காலப்பிரிவுக்கு முன்னரும் இடம்பெற்றிருந்ததுடன், அதன் பின்னரும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்தன. 1998 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பூர்வாங்க அறிக்கையை கவனத்தில் எடுத்தசித்திரவதைக்கு எதிரான கமிட்டி (CAT)"குறிப்பாக, காணாமல் போகும் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட சித்திரவதை காரணமாக சமவாயம் பாரதூரமான விதத்தில் மீறப்படுவது தொடர்பான தகவல்களினால் ஆழ்ந்த கவலையடைந்திருப்பதாக" குறிப்பிட்டிருந்தது.[460] சித்திரவதை தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட அறிக்கையாளர் 2007 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மேற்கொண்ட ஒரு விஜயத்தை அடுத்து, சித்திரவதை நாட்டில்"பரவலாக பிரயோகிக்கப்பட்டு வருகின்றது" என்பதுதொடர்பான தகவல்கள் கிடைத்திருப்பதாக அறிக்கையிட்டிருந்தார்.[461]2014 ஆகஸ்ட் போன்ற அண்மைக்காலம் வரையில் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களின் சாட்சியங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன.[462]

---

460 சித்திரவதைக்கு எதிரான கமிட்டியின் அறிக்கை, ஐக்கிய நாடுகள், நிவ்யோர்க், 1998

461 சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனை என்பன தொடர்பான விசேட அறிக்கையாளரின் அறிக்கை, மன்ப்ரெட் நொவாக் இலங்கைக்கான விஜயம் < http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G08/111/35/PDF/G0811135.pdf?OpenElement>

462 WS on file

536. பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் மற்றும் ஏனைய ஈவிரக்கமற்ற, குரூரச் செயல்கள் அல்லது இழிவுபடுத்தும் விதத்தில் நடத்தப்படுதல் என்பவற்றின் மூலம் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருந்த 12 பெண்களையும் உள்ளடக்கிய விதத்தில் 23 வயது தொடக்கும் 58 வயது வரையிலான 48 இலங்கையர்கள் தொடர்பான விரிவான, விளக்கமான நேர்காணல்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நடத்தியது. இந்த இரகசியமான நேர்காணல்கள் ஆறு வெவ்வேறு நாடுகளில் நடத்தப்பட்டன. இந்த பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட நேர்காணல்களின் போது, சுயாதீனமான விதத்தில் வழங்கப்பட்ட விரிவான சாட்சிகளின் உயர் எண்ணிக்கை, கீழே தரப்பட்டுள்ள முடிவுகளை உறுதிப்படுத்துவதற்கான விரிவான தகவல்களை வழங்கியது.

537. சித்திரவதையினால் பாதிக்கப்பட்ட நபர்களுடன் பணி புரிந்துவரும் அமைப்புக்கள், அதேபோல (தமது மருத்துவக் கோப்புக்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுடன் பகிர்ந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்த) பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவக் கோப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய மூலதாரங்களுடனான நேர்காணல்களுக்கு ஊடாக சேகரிக்கப்பட்ட மேலதிக தகவல்கள் உள்ளன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்த எழுத்துமூலமான மனுக்கள் ஏனைய அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றுக்கு ஊடாக இந்த முடிவுகள் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

538. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட சித்திரவதையினால் பாதிக்கப்பட்ட அனைவரும் சுயவிருப்பிலேயே தமது சாட்சியங்களை வழங்கினார்கள். இது பலரைப் பொறுத்தவரையில் சொல்லொணாத் துன்பத்தை எடுத்துவந்திருந்த கடும் மன அதிர்ச்சியூட்டும் சம்பவங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக இருந்துவந்தது. அதன் காரணமாக ஓய்வு நேரங்களை வழங்குவதற்கென நேர்காணல்கள் இடைநிறுத்தப்பட்டதுடன், ஒருசில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்கள் தொடர்பான ஒரு சில விபரங்கள் ஆழமாகக் கேட்டறியப்படவில்லை. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட நபர்கள் மத்தியில் வெளிப்படையான உடல் ரீதியான வடுக்களும்,அதேபோல உளவியல் ரீதியான கடும் மன அதிர்ச்சி நிலைமைகளும் இருந்து வந்ததனை விசாரணையாளர்கள் அவதானித்திருந்தனர். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட மருத்துவ அறிக்கைகள் மற்றும் மருத்துவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள் என்பன, பல்லாண்டு காலம் நீடிக்கக்கூடிய உடல் வடுக்கள் இருந்துவரும் விடயத்தையும் கடும் மன அதிர்ச்சிக்குரிய நோய்க்குறிகள் இருந்துவரும் விடயத்தையும் எடுத்துக்காட்டியிருந்தன. தற்கொலை எண்ணங்கள், நித்திரையின்மை, உள்முகமான சிந்தனைகள், கவனம் செலுத்தமுடியாத நிலை, மன அழுத்தம் மற்றும் கடும் மன அழுத்தத்தை எடுத்துவரும் சம்பவங்களின் பின்னரான நோய்க்குறிகள் (PTSD) என்பவற்றையும் இவை உள்ளடக்கியிருந்தன.[463]

539. சித்திரவதையினால் பாதிக்கப்பட்ட நபர்களை நேர்காணல் நடத்துவதில் பல வருட கால அனுபவத்தைப் பெற்றிருந்த விசாரணையாளர்கள், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் சம்பவங்களின் குறிப்பான மிலேச்சத்தன்மை மற்றும் குரூரத்தன்மை என்பவற்றை அவதானித்திருந்தார்கள். நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெருந்தொகையானவர்கள் தம்மீது நிகழ்த்தப்பட்ட சித்திரவதைச் சம்பவங்களுக்கு மேலதிகமாக, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது தாம் பாலியல் வன்முறைக்கும் உள்ளடக்கப்பட்டதாக நினைவு கூர்ந்திருந்தனர்.

[463] WS on file

இக்குற்றச்சாட்டுக்கள் இந்த அறிக்கையின் அத்தியாயம் Xஇல் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

540. அரசாங்கப் படைகளினால் நிகழ்த்தப்பட்ட மோதல்களுடன் சம்பந்தப்பட்ட சித்திரவதைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக இலங்கை குறித்த புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது. அவ்விதம் பாதிக்கப்பட்டவர்கள் பொதுவாக தமிழர்களாக இருந்து வந்தனர். குறிப்பாக,பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்குவிதிகள் என்பவற்றின் கீழ் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் - கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழர்களாகவே அவர்கள் இருந்து வந்துள்ளனர்.

541. முன்னைய காலப் பிரிவு தொடர்பான முடிவுகள், சித்திரவதை, ஏனைய வடிவங்களிலான ஈவிரக்கமற்ற குரூரச் செயல்கள் அல்லது இழிவான விதத்தில் நடத்துதல் அல்லது தண்டனை என்பன தொடர்பான விசேட அறிக்கையாளரின் முடிவுகளை உறுதிப்படுத்துகின்றன. அவர் 2007ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்து இந்த அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: “ அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழான தடுப்புக்காவல் கட்டளைகள்,குறிப்பாக, எல்ரீரீஈ சந்தேக நபர்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருக்கும் கட்டளைகளின் பின்னணியில், நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட தடுப்புக்காவல் கைதிகளில் பெம்பாலானவர்கள் பரவலான சித்திரவதை முறைகள் குறித்து முறைப்பாடு செய்திருந்தனர். இவற்றில் ஒரு சில சித்திரவதை முறைகள் மிகவும் கொடூரமானவையாக இருந்து வந்துள்ளன. பல சந்தர்ப்பங்களில் இந்த குற்றச்சாட்டுக்கள் தடய மருத்துவ அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பயங்கரவாத புலன் விசாரணைப்பிரிவு மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினர் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்ட தெளிவாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சித்திரவதைச் சம்பவங்கள், பயங்கரவாத எதிர்ப்பு செயற்பாடுகளின் போது பொலிஸார்மற்றும் ஆயுதப்படையினர் ஆகிய இரு தரப்பினரையும் பொறுத்தவரையில் சித்திரவதை ஒரு வழமையான சம்பவமாக இருந்துவருகின்றது என முடிவு செய்வதற்கு அவரைத் தூண்டுகின்றது”.[464]

542. ஆயுத மோதலின் இறுதி நாட்களிலும், ஆயுதமோதலை உடனடுத்து வன்னியில் இருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் பிரவேசித்த பொதுமக்கள் மற்றும் முன்னாள் எல்ரீரீஈ போராளிகள் ஆகியோர் பெரும் எண்ணிக்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலும் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பரவலான விதத்திலும், முறையான ஒழுங்கிலும் அவர்கள் மீது பிரயோகித்து வந்த மிகக் கொடூரமான சித்திரவதைச் சம்பவங்கள் குறித்து இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது.

543. தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பிரிவு முழுவதிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட நபர்கள் மீண்டும் மீண்டும் சித்திரவதைக்கு உள்ளக்கப்பட்டிருந்தார்கள். தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பிரிவு ஒரு சில

[464] சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனை என்பன தொடர்பான விசேட அறிக்கையாளரின் அறிக்கை, மன்ப்ரெட் நொவாக் இலங்கைக்கான விஜயம் < http://daccess-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G08/111/35/PDF/G0811135.pdf?OpenElement >

வாரங்கள் தொடக்கம் பல வருடங்கள் வரையிலான காலப் பிரிவாக இருந்துவந்தது. புலன் விசாரணை நடத்தப்பட்ட காலப் பிரிவு முழுவதிலும் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள், குற்றமிழைத்த நபரின் காவலின் கீழ் இருந்து வந்த ஆட்கள் மீது மிகக் கடுமையான உடல் வேதனை மற்றும்அல்லது மன வேதனை அல்லது துன்பம் என்பவற்றை இழைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவை ஆகும். எல்ரீரீஈ போராளிகள் அல்லது அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களிலிருந்து தகவல்களை அல்லது ஒரு குற்றவாக்குமூலத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் விசாரணையின் ஒரு பாகமாக இச்சித்திரவதைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

544. இலங்கைப் பொலிஸ்[465], விசேட அதிரப்படை (STF)[466],குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம்(CID),[467]பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களம் (TID)[468]இலங்கை இராணுவம்[469] குறிப்பாக இராணுவத்தின் 53 ஆவது, 55ஆவது மற்றும் 58ஆவது படையணிகள்,[470]இராணுவப் பொலிஸ்,[471]இராணுவ புலனாய்வுப்பிரிவு[472] மற்றும் தேசிய புலனாய்வுப் பணியகம் (NIB)[473]ஆகிய அரச முகவரங்களினால் இச்சித்திரவதைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டு தொடக்கம் கருணாகுழுவினரால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் முகவர்களுடன் இணைந்து[474] இழைக்கப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் குறித்தும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பதிவு செய்துள்ளது. அரச முகவர்கள், தாம் குற்றப் புலனாய்வுத்திணைக்களம் அல்லது பயங்கரவாத புலனாய்வுத்திணைக்களம் என்பவற்றில் பணிபுரிந்துவருவதாக தம்மை அவ்வப்பொழுது அடையாளப்படுத்திக் கொண்டிருந்தனர். ஏனைய சந்தர்ப்பங்களில் குற்றமிழைத்த நபர்களின் சீருடைகள் அல்லது தாம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இடம் என்பவற்றின் அடிப்படையில்,சாட்சிகள், தம்மை சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் நபர்களை அடையாளம் காணக்கூடியதாக இருந்துவந்தது. பாதிக்கப்பட்ட நபர்களில் கணிசமான தொகையினர் பல்வேறு பாதுகாப்புப் படை முகவர்களினால் இவ்விதம் சித்திரவைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இந்நபர்களை மாறிமாறி விசாரணை செய்ததுடன், சித்திரவதையும் செய்தனர்.[475]

545. இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் “புனர்வாழ்வு முகாம்கள்” மற்றும் சிறைச்சாலைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய பல்வேறு இடங்களில்

[465] WS on file

[466] WS on file

[467] WS on file

[468] WS on file

[469] WS on file

[470] WS on file

[471] WS on file

[472] WS on file

[473] WS on file

[474] WS on file.

[475] WS on file

சித்திரவதைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு ஆவணப்படுத்தியுள்ளது. மோதல் முடிவடைந்த காலப்பிரிவின் போது பாதுகாப்புப் படையினர் துரித வேகத்தில் தடுப்பு முகாம்களை அமைத்துக் கொண்டனர். உதாரணமாக, பாடசாலை அல்லது கல்லூரி கட்டடங்களில் இவ்விதமான தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டதுடன், அந்த இடங்களில் வழமையான ஒழுங்கில் சித்திரவதை மேற்கொள்ளப்பட்டது. பின்வரும் அமைவிடங்களில் சித்திரவதை அல்லது மோசமாக நடத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது:

546. *இராணுவ முகாம்கள்:* அச்சுவேலி - அச்செழு இலங்கை இராணுவ முகாம், யாழ்ப்பாணத்திற்கு அருகில்[476]ஜோசப் இலங்கை இராணுவ முகாம், வவுனியா[477] குறிசுட்டகுளத்திற்கு அருகில் இருந்த ஒரு இராணுவத்தளம்[478],மன்னாருக்கு அருகில் இருந்த ஒரு கடற்படைத்தளம்[479]புளிநேர்வைக்கு அருகில் இருந்த ஒரு இலங்கை இராணுவத்தளம்.[480]

547. *தற்காலிக தடுப்புக்காவல் நிலையங்களையும் உள்ளடக்கிய ''புனர் வாழ்வு நிலையங்கள்''* செட்டிகுளம் முகாம், வவுனியாவின் ஒரு முன்னைய பாடசாலை[481]நெல்லுக்குளம், முன்னைய தொழில்நுட்பக்கல்லூரி, வவுனியா[482] ஓமந்தை மத்திய கல்லூரி[483] பம்பைமடுக் கல்லூரி, வவுனியா[484] பூந்தோட்டம் முகாம், முன்னைய கல்வி நிறுவனம், வவுனியா[485] இராமநாதன் (மெனிக்பாம்)[486] இரம்மைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா[487] வவுனியா இரண்டாம் நிலைப் பாடசாலை[488]

548. *சிறைச்சாலைகள்:* திருகோணமலை சிறைச்சாலை[489],வெலிக்கடைச் சிறைச்சாலை, கொழும்புக்கு அருகில்[490]

476 WS on file.

477 WS on file

478 WS on file

479 WS on file

480 WS on file

481 WS on file

482 WS on file

483 WS on file

484 WS on file

485 WS on file

486 WS on file

487 WS on file

488 WS on file

489 WS on file

490 WS on file

549. பொலிஸ் நிலையங்கள்: புதுக்கடை, கொழும்பு[491],கல்முனை, கடவத்தை[492]

550. குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம்: ‘‘நான்காவது மாடி’’ குற்றவியல் புலனாய்வு திணைக்கள நிலையம் கொழும்பு[493],வேப்பங்குளம் CID முகாம்.[494]

551. கொழும்பு விமான நிலையத்திற்கு அருகில் இருக்கும் பயங்கரவாத புலனாய்வுத் திணைக்கள (TID) நிலையம். அதேபோல ஏனைய TID நிலையங்கள்,[495]பூசா தடுப்பு முகாம் காலி.[496]

552. கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில்தடுப்புக்காவல் கைதிகளின் கண்கள் கட்டப்பட்டதுடன்,[497]அவர்கள் பல மணித்தியாலங்கள் வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். அந்த நிலையில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அவர்களால் அறிந்து கொள்ள முடியாதிருந்தது. எனினும்,ஒரு சிலர் உள்ளூர் அடையாளங்களைக் கொண்டு அல்லது தாம் விடுவிக்கப்பட்ட இடத்தைக் கொண்டு அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடங்களைதெரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருந்து வந்தார்கள்.[498] பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தடுப்புக் காவல் கைதிகள் பல்வேறு தடுப்பு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.[499]

553. (வவுனியாவுக்கான பாதுகாப்பு படை தலைமையகமான) வவுனியா ஜோசப் இராணுவமுகாம் அல்லது கொழும்பில் அமைந்துள்ள குற்ற புலனாய்வுத்திணைக்களத்தின் ‘‘நான்காவது மாடி’’ தடுப்பு நிலையம் போன்ற பொதுவாக பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு சில நிலையங்களில் சித்திரவதை உபகரணங்களுடன் கூடிய அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. இது இலங்கைப் பாதுகாப்புப் படைப் பிரிவுகளினால் முன்னரே திட்டமிட்டு, ஒழுங்கான ஒரு அடிப்படையில் சித்திரவதைச்சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கும் விடயத்தை எடுத்துக்காட்டுகின்றது.[500]இந்த அறைகள் அடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உலோக கம்பிகள் மற்றும் பொல்லுகள், நீரில் அமிழ்த்துவதற்கென பயன்படுத்தப்பட்ட தண்ணீர் பீப்பாய்கள் மற்றும் சந்தேக நபர்கள் தொங்கவிடப்பட்ட கம்பங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய பொருட்களைக் கொண்டிருந்தன. இந்த அறைகளின் சுவர்களில் அல்லது தரையில் இரத்தக் கறைகளை தாம் பார்த்ததாக பாதிக்கப்பட்ட நபர்கள் தெரிவித்துள்ளனர். சித்திரவதைக்கென பயன்படுத்தப்பட்ட பல்வேறு இடங்களில் ஏனைய நபர்கள்

491 WS on file

492 WS on file

493 WS on file

494 WS on file

495 WS on file

496 WS on file

497 WS on file

498 WS on file

499 WS on file

500 WS on file

சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதை தாம் பார்த்ததாக அல்லது தமக்கு அந்த சத்தம் கேட்டதாக சாட்சிகள் தெரிவித்திருந்தனர்.[501]

554. 2009 ஆம் ஆண்டில் ஓர் உள்ளக இடம்பெயர் முகாமில் வைத்து தான் கைது செய்யப்பட்ட விதத்தையும், பின்னர் ஒரு வானில் எடுத்துச் செல்லப்பட்ட விதத்தையும் பாதிக்கப்பட்ட ஒருவர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு எடுத்து விளக்கியிருந்தார்: "எங்கள் பயணம் நிறுத்தப்பட்டதுடன், ஒரு கழிப்பறையையும் ஒரு நீர்வாளியையும் கொண்டிருந்த சிறிய அறை ஒன்றுக்கு என்னை எடுத்துச் சென்றார்கள்.அறையில் நான் மட்டும் தனியாக இருந்தேன். அங்கிருந்த சிப்பாய்கள் யன்னல் கம்பிகளின் மீது உலோக கம்பிகளினால் சத்தம் எழுப்புவதன் மூலம் நாங்கள் தூங்குவதில் இருந்தும் எம்மைத் தடுத்தார்கள். மக்கள் கூக்குரலிடும் சத்தம் எனக்குக் கேட்டது". அடுத்த நாள் அந்நபர் அந்த அறையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டார்: "இரு உத்தியோகத்தர்கள் அங்கு வந்து, விசாரணைக்காக என்னை ஒரு பெரிய அறைக்குள் அழைத்து சென்றார்கள். அந்த அறையில் சித்திரவதைக்கு என பயன்படுத்தப்படும் பெருந்தொகையான கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. சுவரில் இரத்தக் கறைகள் இருப்பதனையும், ஒரு தண்ணீர் பிப்பாய் அங்கு வைக்கப்பட்டிருப்பதனையும் நான் பார்த்தேன்.[502]

555. இலங்கை தொடர்பாக புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்த பெருந்தொகையான சாட்சியங்களின் பிரகாரம், பல்வேறு விதமான சித்திரவதை முறைகள் பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. பாதிக்கப்பட்ட நபர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கட்டிவைக்கப்பட்டு ரைபிள், துப்பாக்கி முனைகள்,மணல் அல்லது கொங்ரீட் நிரப்பப்பட்ட குழாய்கள், அல்லது உலோகக் கம்பிகள் மற்றும் கம்புகள் என்பவற்றையும் உள்ளடக்கிய பல்வேறு பொருட்களினால் தாக்கப்பட்டனர்.[503] இறுதியில் மூர்ச்சையடையும் வரையில் அவர்கள் அடிக்கடி அவ்விதம் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.[504] முதுகுப்பகுதியில், தலையில், கால் மீது மற்றும் பாதங்கள் மீது அவ்விதம் தாக்கப்பட்ட பொழுது தாம் தலைகீழாக தொங்க விடப்பட்டிருந்ததாக அவர்கள் எடுத்துக்கூறியிருந்தனர்.[505]

556. தண்ணீரில் அமிழ்த்தும்[506] முறை அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் மூலம் பாதிக்கப்பட்ட நபர்கள் தலைகீழாக தொங்க விடப்படுவதுடன், அவர்களுடைய தலைகள் நீர் பிப்பாய்களுக்குள்

[501] WS on file

[502] WS on file

[503] WS on file

[504] WS on file

[505] சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் கமிட்டி அதன் 36 ஆவது அமர்வில் நீரில் அமிழ்த்துவது போன்ற விசாரணை செய்யும் உத்திகள் சித்திரவதை அல்லது கொடூரமான, ஈவிரக்கமற்ற செயல்கள் அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனை என்பவற்றை ஒத்ததாகும் எனக் குறிப்பிடுகின்றது.

[506] WS on file

அமிழ்த்தப்படுகின்றன.[507]பெற்றோலில் அமிழ்த்தப்பட்ட பிளாஸ்ரிக் பைகளை பயன்படுத்தி, ஓரளவுக்கு மூச்சடைக்கச் செய்தல் அல்லது அந்நபர்களின் தலைகளில் மிளகாய் தூளை தூவுதல் என்பனவும் பாதிக்கப்பட்டவர்கள் எடுத்துக்கூறிய சித்திரவதை முறைகளில் ஒன்றாக இருந்துவந்தது.[508]அதேபோல சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பிகளைக் கொண்டு அவர்கள் சுடப்பட்டனர் அல்லது அவர்கள் மீது "சூடுகோல்" போடப்பட்டது அல்லது எரியும் சிகரெட்டுக்களைக் கொண்டு அவர்கள் மீது சூடு போடப்பட்டது.[509] ஊசிகளைக் அல்லது குறடுகளைக் கொண்டு அவர்களுடைய கைவிரல் நகங்கள் மற்றும் கால்விரல் நகங்கள் அகற்றப்பட்டதுடன்,அத்தகைய உபகரணங்கள் அவர்களுடைய நகத்திற்கும் சதைக்கும் இடையில் புகுத்தப்பட்டன.[510] பல சந்தர்ப்பங்களில் பல்வேறு சித்திரதை முறைகள் கூட்டாக தம்மீது பிரயோகிக்கப்பட்டதாக சாட்சிகள் எடுத்துக் கூறியிருந்தனர். இந்த சித்திரவதை சம்பவங்ளை இழைத்த நபர்களிடம் தாம் அனுபவித்த கடுந் துன்பங்களை பெருந்தொகையான பாதிக்கப்பட்ட நபர்கள் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப் பிரிவின் போது சிறைச்சாலையில் வைத்து, மிகக் கடுமையான சித்திரவதைக்கும் பாலியல்துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டதாக ஒருவர் கூறினார். இந்தத் துன்பத்தில் இருந்து தனக்கு நிவாரணம் கிடைக்கும் பொருட்டு,தன்னை கொன்று விடுமாறு சித்திரவதை செய்தவர்களிடம் கேட்டுக் கொண்டதாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் அவர் கூறினார்.[511]பாதிக்கப்பட்ட மற்றொரு நபர், 2009 ஆம் ஆண்டில் கொழும்பு குற்றவியல் புலனாய்வுத் திணைக்கள நிலையத்தில் ''நான்காவது மாடியில்'' வைத்து அதிகாரிகள் தம்மை உதைத்ததாக கூறினார். ''பதினொரு விளையாட்டு வீரர்கள் உதைக்கும் ஒரு பந்து போல் நான் இருந்து வந்தேன்''. அவர் மீண்டும் மீண்டும் உதைக்கப்பட்டதுடன், பொல்லுகள் மற்றும் கம்பிகள் என்பவற்றால் தாக்கப்பட்டார். அவருடைய தலைமீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பெற்றோலில் அமிழ்த்தப்பட்டிருந்த ஒரு பிளாஸ்ரிக்பை பயன்படுத்தப்பட்டமை காரணமாக அவருக்கு ஓரளவுக்கு மூச்சடைப்பு ஏற்பட்டிருந்தது.[512]

557. 2009 மே மாதத்தில் ஓமந்தையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்த பின்னர் பாதிக்கப்பட்ட மற்றொரு நபர், உள்ளக இடம்பெயர் முகாமொன்றிலிருந்து ஜோசப் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மிகக் கடுமையான சித்திரவதைக்கும், பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டார். "கையில் அகப்படும் எந்தவொரு பொருளைக் கொண்டும் அவர்கள் என்னை அடித்தார்கள். சப்பாத்துக்கள், கம்புகள், கம்பிகள் என்பவற்றைக் கொண்டு அடித்தார்கள். எனது உடலில் அனைத்துப் பாகங்களிலும் அவ்விதம் நான் அடிவாங்கினேன். நாங்கள் ஒரு காட்டுப் பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன், அங்கு மிகக் கடுமையான சித்திரவதைகள் இடம்பெற்றன. ஏனைய ஆண்களும்,

507 WS on file

508 WS on file

509 WS on file

510 WS on file

511 WS on file

512 WS on file

-

பெண்களும் என்னுடன் இருந்தார்கள். எனது கண்கள் கட்டப்பட்டிருந்தமையினால் எத்தனை பேர் இருந்தார்கள் எனச் சரியாக என்னால் கூறமுடியாது''.[513]

558. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் மற்றொரு சம்பவத்தில் எல்ரீரீஈ போராளி என இலங்கை அதிகாரிகளால் சந்தேகிக்கப்பட்ட ஒரு நபர், 2010 ஆம் ஆண்டு அவர் வேலை செய்யுமிடத்திற்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், பின்னர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஆறு வார காலப் பிரிவின் போது, பல்வேறு தடவைகள் பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளினால் தான் விசாரணைக்கும், சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டதாக அவர் சொன்னார். சீமெந்து நிரப்பப்பட்ட குழாய்களினால் அவர் தாக்கப்பட்டார் தலைகீழாக அவர் தொங்க விடப்பட்டதுடன், தலை நீரில் அமிழ்த்தப்பட்டது. அவருடைய கால் நகங்கள் பிடுங்கி எறியப்பட்டன. இரண்டு நாட்கள் அவர் ஒரு குறுகிய முட்கம்பிக் கூட்டுக்குள் வைக்கப்பட்டிருந்ததுடன்,அந்த இடத்தில் அவரால் உட்காரக்கூட முடியாதிருந்தது. பெற்றோலில் அமிழ்த்தப்பட்ட ஒரு பிளாஸ்ரிக் பை அவரது தலையில் போடப்பட்டிருந்ததுடன், அவருடைய பிறப்புறுப்புக்களில் மிளகாய் தூள் தடவப்பட்டது. தான் பல தடவைகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், அந்த நபர் தெரிவித்தார். அவருடைய தந்தை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு ஒரு இலஞ்சத்தை வழங்கிய பின்னர்அவர்விடுவிக்கப்பட்டார்.[514]

559. சித்திரவதைச் சம்பவங்கள் தடுப்புக்காவல் கைதிகளின் மரணத்தை ஏற்படுத்திய நம்பகமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்த சாட்சியங்களின் சாட்சிகளையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு ஆவணப்படுத்தியிருந்தது.[515]இராணுவ முகாமில் தனது தடுப்புக்காவல் அறையில், இருந்த தனது சகா மீண்டும் மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர், உயிருக்கு போராடிக் கொண்டிருந்த விடயத்தை சாட்சி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். அவர் மரணித்த பின்னர் அவருடைய சடலம் அங்கிருந்து அகற்றப்படும் வரையில் அந்த அறையில் மூன்று நாட்கள் வைக்கப்பட்டிருந்தது.[516]

560. தடுப்புக்காவல் கைதிகள் இழிவுபடுத்தும் விதத்திலும் நடத்தப்பட்டார்கள். அதாவது, சிறுநீரை குடிப்பதற்கு பலவந்தப்படுத்துதல், தரையில் இருக்கும் இரத்தத்தை நக்கச் சொல்லுதல், அவர்கள் மீது சிறுநீர் கழித்தல் அல்லது ''ஒரு நாயைப் போல''[517] உணவை உட்கொள்ளச் சொல்லுதல் போன்ற விதத்தில் அவர்கள் படு கேவலமாக நடத்தப்பட்டிருந்தனர். பாதிக்கப்பட்ட நபர்கள் உடல் சாராத சித்திரவதைச் செயல்கள் மற்றும் துன்புறுத்தல் என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு ஆவணப்படுத்தியுள்ளது.[518] கொலை செய்வதாகக் கூறி அச்சுறுத்துவதையும் உள்ளடக்கிய அச்சுறுத்தல்கள், பாதிக்கப்பட்டவர்களை அல்லது அவர்களுடைய

[513] WS on file

[514] WS on file

[515] WS on file

[516] WS on file

[517] WS on file

[518] WS on file

குடும்ப உறுப்பினர்களை கொலை செய்வதாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள், குடும்ப உறுப்பினர்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற அச்சுறுத்தல்கள் அல்லது மற்றவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதனை பார்த்துக் கொண்டிருக்குமாறு பலவந்தப்படுத்துதல், அதே கதி தங்களுக்கும் ஏற்படமுடியும் என அச்சுறுத்துதல் போன்ற பல்வேறு முறைகளை இது உள்ளடக்கின்றது. மேலும் தடுப்புக்காவல் கைதிகள் அடிக்கடி அவர்களுடைய இனத்தை குறிப்பிட்டும் அவமானப்படுத்தப்பட்டார்கள். உதாரணமாக ‘‘தமிழ் நாய்’’ என அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.[519]

561. எல்ரீரீஈபோராளிகள் என அல்லது அவர்களுடைய ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் சாதாரணமாக சித்திரவதைகள் இடம்பெற்றுள்ளன. மூன்று அல்லது நான்கு அதிகாரிகளைக் கொண்ட குழுக்களினால் தாம் அறைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பாதிக்கப்பட்ட நபர்கள் கூறுகின்றனர். அந்தக் குழுவில் இருக்கும் ஒருவர் அல்லது இருவர் - அவர்கள் பொதுவாக சாதாரண உடையில் இருந்து வந்ததுடன் தாம் CID அல்லது TIDஐ சேர்ந்தவர்கள் என தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர் விசாரணையை முன்னெடுப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர் தொடர்பான ஒரு ‘‘கோப்பினை’’வைத்திருப்பார்கள். ஏனையவர்கள் பெரும்பாலும் இராணுவ அல்லது பொலிஸ் சீருடையில் இருப்பவர்கள் தான் சித்திரவதைச் சம்பவங்களை நிகழ்த்துவார்கள்.[520]இத்தகைய விசாரணைகள் சாதாரணமாக 30 நிமிடங்களுக்கும் 2 மணித்தியாலயங்களுக்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் மேற்கொள்ளப்படுவதுடன், இக்காலப்பிரிவின் போது பல்வேறு சித்திரவதை முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

562. ஒரு நபர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆரம்ப வாரங்கள் மற்றும் மாதங்களின் போது வாரம் ஒன்றுக்கு தினசரி அல்லது பல தடவைகள் இத்தகைய விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.[521]ஒவ்வொரு கேள்விக்குப் பின்னரும் அவர்கள் தன்னை அடித்ததாக சாட்சி ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.[522] காலப்போக்கில் விசாரணை மற்றும் சித்திரவதை என்பன குறைந்து வந்ததுடன்,அவற்றின் தீவிரத்தன்மையும் தணிந்து வந்ததாக சாட்சிகள் குறிப்பிட்டிருந்தார்கள்.[523] ஆயுதப் பொதிகளை வைத்திருக்கும் இடங்கள், தளபதிகள் அல்லது வெளிநாட்டு உதவி வலையமைப்பு தொடர்பான தகவல்கள் அல்லது திட்டமிடப்பட்டிருக்கும் தாக்குதல்கள் என்பன போன்ற எல்ரீரீஈ இயக்கத்தின் சந்தேகிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகள் இவ்விதம் இடம்பெற்றன.[524]எல்ரீரீஈ இயக்கத்தின் கடற்புலிகள் அல்லது புலனாய்வுச் சேவை போன்ற அலகுகளுடன் சம்பந்தப்பட்டிருந்த ‘‘உயர் மட்ட சந்தேக நபர்கள்’’ குறிப்பாக மிகக் கொடூரமான சித்திரவதைக்கென வேறாக, பிரித்தெடுக்கப்பட்டனர். பொய் சொல்வதாக அல்லது தகவல்களை மறைப்பதாக அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, அதனையடுத்து சித்திரவதை மேலும் தீவிரமாக்கப்பட்டது. முன்பே சிங்கள

519 WS on file

520 WS on file

521 WS on file

522 WS on file

523 WS on file

524 WS on file

மொழியில் எழுதி தயாரிக்கப்பட்டிருக்கும் ''குற்றவாக்குமூலங்களில்'' கையொப்பமிடுமாறு பாதிக்கப்பட்ட நபர்களை பலவந்தப்படுத்துவதற்கென பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சித்திரவதை பயன்படுத்தப்பட்டுள்ளது.[525]இந்த எழுதப்பட்ட வாக்குமூலங்களை பெரும்பாலானவர்களினால் புரிந்து கொள்ளமுடியாதிருந்தது. ஒரு சில சந்தர்ப்பங்களில் வெற்றுக் காகிதங்களில் கையொப்பமிடுமாறு பாதிக்கப்பட்ட நபர்கள் பலவந்தப்படுத்தப்பட்டுள்ளார்கள்.[526]

563. 2008 ஆம் ஆண்டில் வன்னியிலிருந்து வெளியேறிச் செல்லும் பொழுது இலங்கை இராணுவத்தின் சோதனைச் சாவடி ஒன்றைக் கடந்து சென்ற சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்ட ஒரு நபர், அதனையடுத்து ஜோசப் முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அந்த இடத்திற்கு வந்த பின்னர் தனது துன்பங்கள் தொடங்கியதாக அவர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் கூறினார். அவர் மீது நிகழ்த்தப்பட்ட உடல் ரீதியான சித்திரவதைச் செயல்கள் குறித்த விரிவான விளக்கங்களைக் கூறக்கூடிய நிலையில் அவர் இருந்து வரவில்லை. அந்த அளவுக்கு அவர் துயருற்றிருந்தார். ''என்னை ஒரு விசாரணை அறைக்கு எடுத்துச் சென்றார்கள். சுவரில் கரும்புள்ளிகள் இருப்பதனையும், உருக்குக் கம்பிகள் மற்றும் பொல்லுகள் போன்ற பொருட்கள் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருப்பதையும் நான் கண்டேன். ஒரு மணித்தியாலம் அந்த அறைக்குள் தனியாக என்னை அடைத்து வைத்திருந்தார்கள். அதன் பின்னர் அறைக்குள் இராணுவக் காற்சட்டைகள் மற்றும் ரீசேட்டுக்கள் என்பவற்றை அணிந்திருந்த மூன்று பேர் பிரவேசித்திருந்தார்கள். நான் பொய் சொன்னால் என்னைக் கொன்று விடுவதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். நான் எல்ரீரீஈ பிரதேசங்களில் இருந்து வெளியேறி வந்தது ஏன் என அவர்கள் என்னிடம் கேள்வி கேட்டார்கள். சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த ஆவணங்களில் கையொப்பமிடுமாறு என்னைப் பணித்தார்கள். அதில் என்ன இருக்கின்றது என்பது எனக்குப் புரியவில்லை. இரண்டு மணித்தியாலயங்களின் பின்னர் அவர்கள் அந்த அறையிலிருந்து வெளியேறியதுடன், வேறு நான்கு ஆட்கள் உள்ளே வந்தார்கள். அவர்களும் இராணுவ காற்சட்டைகளையும், வெள்ளை ரீசேட்டுக்களையும் அணிந்திருந்தார்கள். நான் பொய் சொல்லியிருப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். மிகக் கடுமையான சித்திரவதை எனக்கு நிகழ்த்தப்பட்டது. என்ன நடந்தது என்பதனை என்னால் வார்த்தைகளால் எடுத்து விளக்க முடியவில்லை. உருக்குக் கம்பிகளால் என்னை அடித்தார்கள் தலைகீழாக தொங்கவிட்டார்கள் சில சந்தர்ப்பங்களில் என்னுடைய தலையை நீர் வாளி ஒன்றிற்குள் அமிழ்த்தினார்கள். மிக கடுமையான வேதனையை நான் அனுபவித்தேன். ஒவ்வொரு கேள்வியின் பின்னரும் அவர்கள் இப்படிச் செய்தார்கள். நான் புலிகள் இயக்கத்தின் ஒரு போராளியாக இருந்துவருவதாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள். ஆனால், அவர்களிடம் எத்தகைய நிரூபணமும் இருக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் அவர்கள் ஒரே விதமான கேள்விகளை கேட்டு, பின்னர் என்னை அடித்தார்கள்.”[527]

564. மற்றொரு சம்பவத்தில் ஆண் ஒருவர் கைது செய்யப்பட்டு, இரண்டு மணித்தியாலங்கள் தெரியாத இடமொன்றுக்கு இருட்டில் அழைத்து செல்லப்பட்ட பின்னர், சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த மூன்று ஆவணங்கள் அவரிடம் வழங்கப்பட்டுள்ளன. அதில் என்ன இருக்கின்றது என்பது அவருக்குப் புரியவில்லை.

525 WS on file

526 WS on file

527 WS on file

வன்முறை அச்சுறுத்தலின் கீழ் அந்த ஆவணங்களில் கையொப்பமிடுமாறு அவர் பலவந்தப்படுத்தப்பட்டார். விசாரணை நடத்தப்பட்ட முதலாவது நாளின் போது, அவர் கையொப்பமிட்ட அந்தப் பத்திரங்கள், அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் அவர் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதை தெரிவிப்பதாக அவர்கள் சொன்னார்கள். எல்ரீரீஈ வலையமைப்புக்களுக்கான வெளிநாட்டு ஆதரவு மற்றும் அந்த இயக்கத்தின் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் என்பன தொடர்பாக இந்த விசாரணையின் போது முழுமையாக கவனம் செலுத்தப்பட்டது. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த முதல் எட்டு மாத காலப்பிரிவின் போது நாளாந்த அடிப்படையில் விசாரணையும்,சித்திரவதையும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்தன. ஒவ்வொரு விசாரணை அமர்வும் பல மணித்தியாலங்கள் நீடித்தது. தன்மீது பிரயோகிக்கப்பட்ட பல்வேறு சித்திரவதை நுட்பங்களையும் அவர் விளக்கியிருந்தார். ‘‘பெற்றோலில் அமிழ்த்தப்பட்ட ஒரு பையை கொண்டு எனது தலையை மூடுவார்கள். அவ்வாறு செய்யும்போது தான் மூர்ச்சையாகிவிடுவேன். என்னுடைய ஆடைகள் களையப்பட்டு, வாந்திவரும் வரையில் என்னை கூரையில் தலைகீழாக தொங்கவிடுவார்கள். இரும்புக் கம்பியினால் என்னை அடித்தார்கள். சிகரெட்டுக்கள் மற்றும் சூடாக்கப்பட்ட உருக்கு என்பவற்றைக் கொண்டு என்மீது சூடு வைத்தார்கள். வயிற்றிலும் முதுகிலும், கைகளிலும், கால்களிலும் என்னை அடித்தார்கள். தலைகீழாக தொங்கவிட்டு, தலையை தண்ணீரில் அமிழ்த்தினார்கள். கால்நகங்கள் பிடுங்கி ஏறியப்பட்டன. அதன் பின்னர், என்னுடைய பாதத்தின் மீது ஒரு கதிரை வைக்கப்பட்டு அதன் மீது ஒரு அதிகாரி அமர்ந்து கொள்வார். நான்கு ஆட்களை கொண்ட குழுக்கள் என்னை சித்திரவதை செய்தார்கள். ஒருவர் விசாரணையை முன்னின்று நடத்துவதுடன், அவர் சிவில் உடையில் இருப்பார். ஏனைய மூன்று பேரும் சீருடையில் இருப்பதுடன் அவர்கள் என்னை அடிப்பார்கள்’’. இந்த நபர் ஒரு காட்டுப் பகுதியில் அமைந்திருந்த முகாமொன்றில் இரண்டரை வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 2011 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன், அங்கிருந்து தனது குடும்பத்திற்கு ஒரு செய்தியை அனுப்பக்கூடிய ஆற்றல் அவருக்கு கிடைத்தது. அவரை விடுவித்துக் கொள்வதற்கென அவருடைய குடும்பத்தினர் ஒரு இலஞ்சத் தொகையை வழங்கினார்கள்.[528]

565. 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்த பின்னர், கைது செய்யப்பட்டதனை அடுத்து காட்டுப் பிரதேசம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்ட மற்றொரு நபர் தனக்கு நேர்ந்த துன்பத்தை எடுத்துவிளக்கினார். ‘‘ஒரு அடர்ந்த காட்டுப் பகுதியில் சுமார் இரண்டு மணித்தியாலம் நாங்கள் வாகனத்தில் பயணித்தோம். ஓரிடத்தில் வாகனம் நிறுத்தப்பட்டு, ஒரு சிறிய கட்டடத்திற்குள் என்னை அழைத்துச் சென்றார்கள். சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் சீருடையில் இருந்த ஐந்து அல்லது ஆறு நபர்கள் அறைக்குள் வந்து, அங்கிருந்தவர்களை அடிக்கத் தொடங்கினார்கள். நான் மூர்ச்சையாகி தரையில் விழுந்தேன். கடும் வேதனையை அனுபவித்ததுடன், அலறி கூக்குரலிடத்தொடங்கினேன். சுமார் 30 நிமிட நேரம் அவர்கள் என்னை அடித்தார்கள். என்னுடைய வயிற்றின் மீதும் அந்தரங்க உறுப்புக்களின் மீதும் ஏறி நின்றார்கள். வேதனை என்னால் தாங்கமுடியவில்லை. அடுத்த நாள் விசாரணை ஆரம்பமாகியது. நான் புலிகள் இயக்கத்தில் என்ன செய்தேன் என்பதனையும், இயக்கத்தின் எந்தப் பிரிவில் எவ்வளவு காலம் இருந்துள்ளேன் என்பதனையும்,

[528] WS on file

கூறுமாறு அவர்கள் என்னிடம் சொன்னார்கள். முதல் பத்து நாட்களின் போது ஒரே மாதிரியாகத்தான் அது நடந்தது: ஒரே மாதிரியான கேள்விகள், ஒரே மாதிரியான சித்திரவதைகள். ஆட்களை அடிப்பதற்காக அவர்கள் ஒரு உலோக குழாயை பயன்படுத்தினார்கள். சாதாரணமாக ஒருவர் கேள்விகளை கேட்பார் ஏனைய இருவர் அல்லது மூன்று பேர் அடிப்பார்கள். நான் 20 நாட்கள் முகாமில் இருந்ததுடன், அக்காலப்பிரிவின் போது ஒவ்வொரு நாளும் என்னை சித்திரவை செய்தார்கள்''. அதன் பின்னர் இந்நபர் மற்றொரு இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டதுடன், அங்கு மேலும் ஏழு மாதகாலம் தடுத்து வைக்கப்பட்டு, பல்வேறு விதமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். அவை நீரில் அமிழ்த்துதல். மின்சார வயர்களை உடல் மீது வைத்தல், தலையை சுவரொன்றில் அடிப்பதற்காக கழுத்தைச் சுற்றி கட்டியிருக்கும் கயிறொன்றை பயன்படுத்துதல் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன. தான் ஒரு எல்ரீரீஈ போராளி என்பதனை ஏற்றுக்கொண்டால் அவரை விடுவிப்பதாக அவர்கள் அந்நபரிடம் சொன்னார்கள்.[529]

## எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள்

566. எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைச் சம்பவங்கள் மற்றும் ஆட்கள் மோசமாக நடத்தப்பட்ட சம்பவங்கள் என்பவற்றை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு ஆவணப்படுத்தியுள்ளது. ஆனால், அரசாங்க பாதுகாப்புப் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய செயல்கள் ஆவணப்படுத்தப்பட்ட அளவுக்கு இணையான விதத்தில் அவை ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எல்ரீரீஈ இயக்கம் அதன் அதிகாரத்தின் கீழிருந்துவந்த பிரதேசங்களில் மிகக் கடுமையான சமூகக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. எல்ரீரீஈ ''பொலிசாரால்'' நிகழ்த்தப்பட்ட ஒரு சில கொடூரச் சம்பவங்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குற்றச்செயல்கள் நிகழ்த்தப்பட்டதாக கூறப்பட்டு, அது தொடர்பாக ஆட்கள் தாக்கப்பட்டமை போன்றவற்றை இவை உள்ளடக்கின்றன. குறிப்பாக,''துரோகிகள்'' எனக் கருதப்பட்ட ஆட்களுக்கு எதிராக எல்ரீரீஈ இயக்கத்தினால் மிகக் கடுமையான சித்திரவதைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதாவது, பிள்ளைகளை ஆட்சேர்ப்பு செய்வதனையும் உள்ளடக்கிய விதத்தில் கட்டாய ஆட்சேர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அல்லது இயக்கத்திலிருந்தும், சண்டையிடுவதிலிருந்தும் விலகிச் சென்றவர்கள் போன்ற நபர்கள் இவ்விதம் துரோகிகளாக கருதப்பட்டனர்.[530]

567. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்த சிறிய எண்ணிக்கையிலான மனுக்களும், ஏனைய தகவல்களும் எல்ரீரீஈஇயக்கத்தினால் சித்திரவதைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன. சூடு ஏற்றப்பட்ட உருக்கு கம்பிகளினால் சூடு போடுதல், அடித்தல், நீண்டநேரம் கடும் வெய்யிலில் உட்கார்ந்து இருக்குமாறு பலவந்தப்படுத்துதல் போன்றவற்றை இவை உள்ளடக்கின்றன. எல்ரீரீஈ இயக்கத்தின் சோதனைச் சாவடிகள், இராணுவத்தளங்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் புலனாய்வு முகாம்கள் மற்றும் ''Alpha 2''மற்றும் வல்லிபுனம் என்ற இடத்தில்

[529] WS on file

[530] WS on file

அமைந்திருந்த“Alpha 5”என அறியப்பட்ட சிறைக்கூடங்கள் ஆகிய இடங்களில் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.[531]

568. எல்ரீரீஈஇயக்கத்தினால் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர், அந்த இயக்கத்திலிருந்து 2005 ஆம் ஆண்டில் தப்பி வந்த ஒரு நபர் வல்லிபுனத்தில் இருந்த “Alpha 2”சிறைக்கூடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் எட்டு மாதங்கள் வைக்கப்பட்டிருந்தார். துரோகம் இழைத்திருப்பதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டதுடன், மணல் நிரப்பப்பட்ட குழாய்கள் மற்றும் மின்சார வயர்கள் என்பவற்றினால் அவர் மீது மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரு எல்ரீரீஈ போராளி என்ற முறையில் முன்னரங்கிற்கு மீண்டும் செல்வதற்கு இணக்கம் தெரிவித்த பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.[532]

569. எல்ரீரீஈஇயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் பல சித்திரவதைச் சம்பவங்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளமுடியவில்லை. பிரதானமாக சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட நபர்களை அணுக முடியாத நிலை மற்றும் ஏனைய இடையூறுகள் என்பனவே இதற்கான காரணங்களாகும். எனவே, எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்த பிரதேசங்களில் சித்திரவதை எந்த அளவுக்கு நிலவி வந்தது என்பதனை துல்லியமாக மதிப்பிட்டுக் கொள்வது சாத்தியமில்லை. இதற்கென மேலும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

570. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு, சேகரித்திருக்கும் தகவல்களின் அடிப்படையில், எல்ரீரீஈ இயக்கம் தான் பிடித்து வைத்திருந்த ஆட்களை சித்திரவதை செய்ததன் மூலமும், மோசமான விதத்தில் நடத்தியதன் மூலமும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் மீறல்கள் என்பவற்றை புரிந்திருக்கின்றது என நம்புவதற்கான காரணங்கள் இருந்து வருகின்றன. எவ்வாறிருப்பிறும், இத்தகைய செயல்கள் முறையான ஒழுங்கில், பரவலான விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதனை நிரூபிப்பதற்கு போதிய சாட்சிகள் இருந்து வரவில்லை. அவை மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல்களாக இருந்துவருகின்றனவா என்பதனை மதிப்பிட்டுக் கொள்வதற்கான சாட்சியங்களும் இருந்து வரவில்லை.

## X. பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை

### அறிமுகம்.

571. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் விசாரணை மூலம் கண்டறியப்பட்ட மிகவும் மனக் கலக்கமூட்டும் முடிவுகளில் ஒன்று, இலங்கை பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்டிருக்கும் பாலியல் வன்முறையின் அளவாகும். இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மிகவும் கொடூரமானதாக இருந்து வந்துள்ளது. இத்தகைய வன்முறைகளுக்கு ஆண்களும் அதேபோல பெண்களும் இரையாகியுள்ளனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் இடம்பெற்ற வன்புணர்வுச் சம்பவங்கள் குறிப்பாக அதிர்ச்சி ஊட்டுபவையாக இருந்து

531 Submissions on file with OISL

532 WS on file

வந்துள்ளன. எல்ரீரீஈ இயக்கம் பாலியல் வன்முறையை நிகழ்த்தியுள்ளது என்பதை எடுத்துக் காட்டும் விதத்திலான தகவல்கள் எவையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்குக் கிடைக்கவில்லை. பாலியல் துஷ்பிரயோகம் அல்லது பாலியல் வன்முறை என்பவற்றுக்கு எவரேனும் நபர்கள் பொறுப்பாக இருந்து வரும் விடயம் தெரியவந்தால், அவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் மிகக் கடுமையான தண்டனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனப் பல்வேறு வட்டாரங்களும் தெரிவித்தன.

572. இலங்கை தொடர்பான புலன் விசாரணை மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், பாதுகாப்புப் படையினரால் எல்ரீரீஈ இயக்கத்தினர் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு எதிராக பாலியல் வன்முறை பயன்படுத்தப்பட்டு வருவது தொடர்பாக அதிகரித்தளவிலான சாட்சிகள் கிடைத்துள்ளன.[533]இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அதன் ஆணைப்பத்திரத்தின் பின்புலத்தில் குறிப்பாக, ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போதும், அதன் பின்னரும் நிகழ்த்தப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவே முதன்மையாக கவனம் செலுத்தியிருந்தது. கீழே தரப்பட்ட பகுதிகள் விசாரணை அமர்வுகளின் போது இடம்பெற்ற பாலியல் சித்திரவதை சம்பவங்களையும், விசாரணை அமர்வுகளுக்கு வெளியில் இடம்பெற்றவை போல் தெரியும் வன்புணர்வுச் சம்பவங்களின் மாதிரிகளையும் எடுத்து விளக்குகின்றன. மேலும், இந்த அத்தியாயம் பொதுமக்கள், ஆயுதங்களை ஒப்படைத்த எல்ரீரீஈ இயக்க போராளிகளும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்துவந்த பிரதேசங்களுக்கு வந்தபொழுது இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளின் போது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் வன்முறை தொடர்பான அறிக்கைகளையும் கவனத்தில் எடுக்கின்றது. அதேபோல, மனிக்பாம் போன்ற உள்ளக இடப்பெயர்வு முகாங்களுக்குள்ளே இடம்பெற்ற அத்தகைய துஷ்பிரயோகச் சம்பவங்கள் குறித்த அறிக்கைகளையும் அது கவனத்தில் எடுக்கின்றது. இறுதிப்பிரிவு பாலியல் வன்முறை தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் நிலை என்பவற்றை பரிசீலனை செய்கின்றது.

573. தனது ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கும் காலப் பிரிவுக்கு வெளியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒரு சில பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்த குற்றச்சாட்டுகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன. மோதலின் பின்னர், இன்று வரையிலும் கூட, இராணுவமயமாக்கப்பட்டிருக்கும் வட பிரதேசத்தில் வாழ்ந்து வரும் பெண்கள் இராணுவத்தினால் வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவங்களிலான பாலியல்

533 உதாரணமாக பார்க்கவும்: “நாங்கள் உங்களுக்கு ஒரு பாடம் படிப்பிப்போம்” - இலங்கை பாதுகாப்புப் படையினரால் தமிழர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை -HRW, பெப்ரவரி 2013 “இலங்கையில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை 2009 – 2014”, யஸ்மின் ஸுகா, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் என்பவற்றின் மனித உரிமைகள் கமிட்டி, சர்வதேச உண்மை மற்றும் நீதி கருத்திட்டம், இலங்கை, மார்ச் 2014 சித்திரவதையிலிருந்து விடுதலை இலங்கை தொடர்பான 5 ஆவது பருவ கால மீளாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனித உரிமைகள் கமிட்டியிடம் சித்திரவதையிலிருந்து விடுதலை இற்றைப்படுத்தப்பட்ட சமர்ப்பணம், அக்டோபர் 2014 வடக்கிலும், கிழக்கிலும் பெண்களின் பாதுகாப்பற்ற நிலை, ICG, டிசம்பர் 20, 2011 “தண்டனை விலக்குரிமை பெற்ற தீவு”, “சர்வதேச குற்றச் செயல்கள் தொடர்பான சாட்சியங்கள் கருத்திட்டம், பெப்ரவரி 2014 “இலங்கையின் வட மாகாணத்தில் மனிதகுலத்திற்கெதிரான குற்றச் செயல்கள்”, சமாதானம் மற்றும் நீதி என்பவற்றுக்கான இலங்கை இயக்கம், மார்ச் 4, 2014.

வன்முறை அல்லது சுரண்டல் என்பவற்றுக்கு இலக்காகக்கூடிய நிலையில் இருந்து வருவதாக பெருந்தொகையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதும், அவற்றை கவனத்தில் எடுப்பதும் மிகவும் நுட்பமான ஒரு காரியமாக குறிப்பாக இலங்கையை அணுக முடியாத பின்னணியில் இருந்து வருகின்றது. அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக அறிக்கையிடும் பெண்கள் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்படக்கூடிய பாரிய ஆபத்தை கொண்டிருப்பதே இதற்கான காரணமாகும். குற்றம் இழைத்தவர்களை இனங்கண்டு, தண்டிப்பதற்கும், தடுப்பு வழிமுறைகளை மேற்கொள்வதற்குமென பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நிகழ்த்தப்படும் பரவலான ஒரு புலன் விசாரணையின் ஒரு பாகமாக இது இருந்து வருதல் வேண்டும்.

574. முன்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான நபர்களுடன், புலன் விசாரணைக் குழு நேர்காணல்களை நடத்தியது. தாம் 2005 ஆம் ஆண்டுக்கும் 2008 ஆம் இடைப்பட்ட காலப் பிரிவில் தடுப்புக் காவலில் வைத்து பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாக அவர்கள் கூறினார்கள். சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களுடன் 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் மிகவும் நெருக்கமான விதத்தில் செயற்பட்டு வந்திருக்கும் சாட்சியாளர் ஒருவர், பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்ட பெருந்தொகையான பாலியல் வன்முறைச் சம்பவங்களை தான் ஆவணப்படுத்தியிருப்பதாக விசாரணையாளர்களிடம் சொன்னார். ஆண் மற்றும் பெண் தடுப்புக் கைதிகளின் அந்தரங்க உறுப்புக்களில் தீக் காயங்கள், ஆண் தடுப்புக் கைதிகளின் ஆண் குறிகளுக்குள் மெல்லிய கம்பிகளை புகுத்தல், ஆண் மற்றும் பெண் தடுப்புக் கைதிகளின் பின் துவாரத்தில் பொருட்களை திணித்தல் பெண் தடுப்புக் கைதிகளின் அந்தரங்க உறுப்புக்குள் போத்தல்களை திணித்தல் பாலுறுப்புக்களில் மிளகாய் தூளை தூவுதல் அல்லது பால் உறுப்புக்குள் மிளகாய்த் தூளை போடுதல் என்பவற்றையும் இவை உள்ளடக்கின்றன. இவை அனைத்தும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பரிசீலனைக்கு உட்படுத்திய அண்மைய சம்பவங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் முறைகளாக இருந்து வந்துள்ளன. அத்தகைய நடைமுறைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

575. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் உள்ளடக்கப்படும் காலப் பிரிவுக்கு முன்னைய வருடங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த விசேட அறிக்கையாளர் போன்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆணைப்பத்திரதாரர்கள் போன்ற தரப்பினரின் அறிக்கைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கும் கால அவகாசத்திற்குள், முன்னைய பாலியல் வன்முறை மாதிரிகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவால் முடியாது போய்விட்டது. மேலும், மோதல் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த கைதிகள் அத்தகைய விதத்தில் நடத்தப்பட்டார்களா என்பதை அதனால் மதிப்பிட்டுக் கொள்ளவும் முடியவில்லை. இவையும் பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறை தொடர்பான பரவலான விசாரணை ஒன்றின் ஒரு பாகமாக அமைதல் வேண்டும்.

576. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அதன் விசாரணையின் ஒரு பாகமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட 30 பேருடன் நேர்காணல்களை நடாத்தியது. இச்சம்பவங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திர காலப் பிரிவுக்குள் இடம்பெற்றிருந்தன. இவர்களில் 18 பேர்

ஆண்களாக இருந்துவந்ததுடன், 12பேர் பெண்களாக இருந்து வந்தனர். ஏனைய மூலங்களில் இருந்தும் சம்பவங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் இக்குழுவுக்கு கிடைத்திருந்தன. விசாரணைக்குழு அதன் சொந்த நேர்காணல்களுக்கு ஊடாக திரட்டியிருந்த பொரும்பாலான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இத்தகவல்கள் உதவின. மேலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக (ஒன்றில் அவர்கள் அவற்றை கண்டிருந்ததன் காரணமாக, அத்தகைய சம்பவங்களை ஆவணப்படுத்துவது அவர்களுடைய பணியாக இருந்து வருவதன் காரணமாக அல்லது பாதுகாப்பு படையினருடன் அவர்கள் கொண்டிருந்ததாகக் கூறப்படும் தொடர்புகள் காரணமாக) மறைமுகமான தகவல்களைக் கொண்டிருந்த பல நபர்களையும் நேர்காணலுக்கு உட்படுத்தியது. அது தவிர, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு பாலியல் வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்திய வைத்திய அறிக்கைகளை (சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட நபர்களின் அனுமதியுடன்) பார்வையிடக் கூடிய வாய்ப்பும் கிடைத்தது.

577. பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக தகவல்களை சேகரிப்பது எப்பொழுதுமே குறிப்பாக சவால் மிக்க ஒரு காரியமாக இருந்து வருகின்றது. ஏனெனில், அத்தகைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவது தொடர்பான தடைகள் காரணமாகவும், அவற்றினால் பாதிக்கப்படும் நபர்கள் எதிர்கொள்ளும் மனத்தடை மற்றும் வெட்கம் என்பவற்றின் காரணமாகவும் இது ஒரு சவால் மிக்க பணியாக இருந்து வருகின்றது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட சாட்சிகளும், அதேபோல இச்சம்பவங்களிலிருந்து தப்பிப் பிழைத்த நபர்களும் தமது அனுபவங்களின் விளைவாக பாரதூரமான விதத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்ததுடன், மன அதிர்ச்சியின் பின்னரான நோய்க்குறிகள் தொடர்பான சிகிச்சைகளைப் பெற்று வந்தனர். பாலியல் துஷ்பிரயோகம் குறித்து விபரிக்கத் தொடங்கிய உடனேயே ஒரு சிலர் கதறி அழுதார்கள். அவமானம், சங்கடம் போன்ற உணர்வுகளை அவர்கள் உணர்ந்தார்கள். ஒருசாட்சி இப்படிக் கூறினார். ‘‘பாலியல் துன்புறுத்தல் என்பது உளவியல் ரீதியில் மிகவும் வேதனை மிக்க ஒரு செயலாகும். அது அடிப்பதைக் காட்டிலும் மோசமானதாகும்.’’[534]

578. சித்திரவதைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் நிறுவனம் ஒன்றிற்கென பணியாற்றிவரும் நிபுணர் ஒருவர், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் இப்படிக்கூறினார். ‘‘இந்த அனுபவம் மிகக் கடுமையான மற்றும் தொடர்ச்சியான உளவியல் சேதத்தை ஏற்படுத்தியிருப்பது போல் தெரிகிறது. இதனால் பாதிக்கப்பட்ட ஆண்களும், பெண்களும் கூறிய விபரங்களிலிருந்து இதனை அறியமுடிகின்றது. அவர்கள் தடுப்புக்காவலில்இருந்தபொழுது இந்தப் பாலியல் வன்முறை அவர்கள் மீது நிகழ்த்தப்பட்டிருந்தது’’. அச்சம்பவங்கள் நபர்கள் மீது நீண்டகால ரீதியாக உடலியல் மற்றும் உளவியல் தாக்கங்களை எடுத்து வரமுடியும் என்ற விடயத்தையும் அவர் வலியுறுத்தினார். ‘‘பாலியல் வன்முறையின் மூலம் ஏற்படுத்தப்படும் சேதம் மிகப் பாரதூரமானது என்பதும், அனைத்திலும் ஊடுருவிச்செல்கின்றது என்பதும் தெளிவானதாகும்.’’[535]

[534] WS on file

[535] WS on file

579. பாலியல் வன்முறை காரணமாக தோன்றும் கடும் மனஅதிர்ச்சி நிலை, பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இலங்கையில் தங்கியிருக்கும் குடும்ப உறுப்பினர்கள் குறித்த அச்சம் என்பவற்றினால் மேலும் அதிகரிக்கின்றது. அவர்களில் ஒரு சிலர் அதனையடுத்து அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் என்பவற்றை எதிர்கொண்டுள்ளனர். பல சம்பவங்களில் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தற்கொலை செய்துள்ளார்கள் அல்லது தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார்கள் என்ற விடயத்தையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அறிந்துள்ளது.[536]

580. தகவல்களை சேகரிப்பதில் எதிர்கொள்ள நேரிடும் சவால்களுக்கு மத்தியிலும், கிழே உள்ள பிரிவுகள் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறையின் பரவலான மற்றும் மிக கொடூரமான இயல்பினை எடுத்து விளக்குகின்றன.

### பாலியல் வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு அரசாங்கத்தின் எதிர்வினைகள்

581. பாலியல் வன்முறை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முழுமையாக விசாரணை செய்யப்பட்டு, எவரேனும் அது தொடர்பாக குற்றமிழைத்திருப்பின் சர்வதேச சட்டத்தின் கீழ் அவசியப்படுத்தப்பட்டவாறு, அவர்கள் சட்டத்தின் முன் எடுத்துவரப்படுவதனை உறுதிப்படுத்தப்படுத்துவதற்குப் பதிலாக, அரசாங்கம்,அதன் பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் வன்புணர்ச்சி மற்றும் ஏனைய பாலியல் வன்முறை வடிவங்களிலான குற்றச் செயல்களை தொடர்ச்சியாக மறுத்து வந்திருக்கின்றது[537] அல்லது அவற்றை உதாசீனம் செய்து வந்திருக்கின்றது.பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து அது அறிந்திருந்தது என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில், பாரியளவிலான துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன என்ற விடயத்தைஅரசாங்கம் மறுத்துள்ளது. மேலும் அத்தகைய செயல்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்களை அபகீர்த்திக்கு உட்படுத்தி, அவர்களை அது இழிவுபடுத்தியுள்ளது. அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரான ராஜீவவிஜயசிங்க 2009 டிசம்பர் மாதத்தில் பின்வருமாறு கூறியிருந்ததாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தது.''முகாம்களுக்குள் நிறைய பாலியல் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன''. ஆனால், பெரும்பாலான அத்தகைய அறிக்கைகள் சக தடுப்புக் கைதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் துஷ்பிரயோகங்கள் சம்பந்தப்பட்டவையாகவே இருந்து வருகின்றன என அவர் கூறியிருந்தார். ''எதுவுமே நடக்கவில்லை என நான் கூற மாட்டேன். ஏனென்றால், நான் அங்கு இருக்கவில்லை'' என அவர் சொன்னார். ''தனிப்பட்ட நபர்களின் பிறழ்வான நடத்தைகள் இடம்பெற்றிருக்கமுடியும். ஆனால், எங்களுடைய நிலைப்பாடு என்னவென்றால் "தயவுசெய்து அவற்றை எங்களிடம் சொல்லுங்கள். அவை உரிய

536 WS on file

537 ஓர் உதாரணம்: "நாட்டின் போர் வலயத்திலிருந்து தப்பி வரும் தமிழர்களுக்கென அமைக்கப்பட்டிருக்கும் இலங்கை முகாம்களில் பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு வருவதாக "ஸ்கை நியுஸ்" இடம் கூறப்பட்டது. அரசாங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் முகாம்களில் இடம்பெற்று வரும் பாலியல் தாக்குதல்கள் குறித்து பல அறிக்கைகள் கிடைத்து வருகின்றன. மேலும், இளம் ஆண்கள் சுற்றி வளைக்கப்பட்டு, எடுத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகின்றது".

விதத்தில் கவனத்தில் எடுக்கப்படும்." என்பதாகும். ஐக்கிய நாடுகள் முகவரகம் ஒன்றின் அறிக்கை குறித்து தான் அறிந்திருப்பதாக கூறிய விஜயசிங்க விடயங்களை நிரூபிப்பது பெருமளவுக்கு சிரமாக இருந்து வருகின்றது எனக் குறிப்பிட்டார். ''சிப்பாய் ஒருவர் இரவு 11.00 மணியளவில் ஓர் கூடாரத்திற்குள் சென்று, அதிகாலை 3.00 மணியளவில் வெளியே வந்ததாக எங்களுக்கு ஒரு அறிக்கை கிடைத்திருந்தது. அது சந்தோசத்திற்காக மேற்கொள்ளப்படும் பாலியல் செயற்பாடாக இருந்திருக்க முடியும் அல்லது உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பாலியல் செயற்பாடாக அல்லது புராதன கிரேக்க தத்துவம் குறித்த ஒரு கலந்துரையாடலாகக் கூட இருந்திருக்கமுடியும். எமக்குச் சொல்லத்தெரியாது.''[538]

582. பல வருடங்களின் பின்னர் 2013 பெப்ரவரி மாதத்தில் பாதுகாப்பு அமைச்சு பின்வருமாறு குறிப்பிட்டது:"2009 மே 19 ஆம் திகதிக்கும் 2011 டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவங்களை அரசாங்கத்தினால் நிரூபிக்க முடியும். வன்புணர்வு மற்றும் பாலியல் குற்றச்செயல்கள் தொடர்பான மொத்தம் 210 சம்பவங்களில் 20 சம்பவங்கள் மட்டுமே பொலிஸ் மற்றும் ஊர்காவற்படையினர் ஆகியோரையும் உள்ளடக்கிய இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.[539] இந்த பாதுகாப்புப் படை உறுப்பினர்களுக்கெதிரான வழக்குகள் ஏற்கனவே இடம்பெற்று வருவதுடன்,அவர்கள் விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றனர்." பாதுகாப்பு அமைச்சின் இணையதளம்2013 பெப்ரவரி மாதத்தில் இவ்வாறு கூறியிருப்பினும், பாதுகாப்பு அமைச்சினால்[540] வழங்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தரப்பட்டிருக்கும் புள்ளிவிபரங்களுடன் இது முரண்படுகின்றது. அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஓர் அட்டவணை இலங்கை இராணுவ உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட நான்கு வன்புணர்வுச்சம்பவங்கள் மற்றும் ஒரு பாலியல் துஷ்பிரயோக சம்பவம் மட்டுமே நீதிமன்றங்களில் விசாரணையில் இருந்து வருகின்றன அல்லது அதே காலப் பிரிவில் இலங்கை இராணுவத்தின் ஒழுக்காற்று விசாரணைகள் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டிருந்தது. (பாலியல் வன்முறை தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் குறித்த கீழே உள்ள பிரிவை பார்க்கவும்).

583. யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க 2013 டிசம்பர் 23 ஆம் திகதி அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு வழங்கிய ஒரு நேர்காணலில், கடத்தல், சித்திரவதை மற்றும் வன்புணர்வு தொடர்பான அறிக்கைகள் குறித்து குறிப்பிடப்பட்ட பொழுது, ஏளனமாக சிரித்தார். இந்த நேர்காணலை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவும் பார்த்தது. ''என்னுடைய சிரிப்பு இந்தக் கதையை சொல்லுகின்றது என நான் நம்புகின்றேன்'' என்றார் அவர். ''இவை எல்லாம் புனையப்பட்ட கதைகள். எந்த அடிப்படையும் இல்லை, எல்லாமே கதைகள் தான். ஏனெனில், அவர்கள் தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்தில் தங்கயிருக்கவே விரும்புகிறார்கள். அந்த நாடுகளில் தொடர்ந்து வாழ விரும்புகின்றார்கள். இவை எல்லாம் பொய்கள்.இவை எல்லாமே பொய்கள்."[541]

---

538 http://www.theguardian.com/world/2009/dec/20/tamil-tigers-sri-lanka-refugees.

539 பாதுகாப்பு அமைச்சின் இணையதளம், பெப்ரவரி 2013

540 மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit.(பக்.79)

541 இலங்கையின் தழும்புகள், அல் ஜசீரா அறிக்கை, 2013

584. அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையின் 24ஆவது அமர்வுக்கு சமர்ப்பித்த அதன் அறிக்கையில், 2007-2012 காலப் பிரிவை உள்ளடக்கும் ஒரு மதிப்பீட்டாய்வு வடக்கில் இடம்பெற்றதாக அறிவிக்கப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்களில் பெரும்பாலானவை நெருங்கிய உறவினர்கள்/அயலவர்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டவை என்ற விடயத்தையும், அவற்றில் ஒருசில சம்பவங்கள் மட்டுமே பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்பட்டிருப்பவை எனக் கூறப்படமுடியும் என்பதனையும் வெளிப்படுத்தியிருந்தது. பாதுகாப்புப்படை ஆளணியினர் சம்பந்தப்பட்ட அனைத்துச் சம்பவங்கள் தொடர்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும், சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளன என்ற விடயத்தையும் அந்த அறிக்கை குறிப்பிட்டிருந்தது. ‘‘இந்த நபர்களை ஒன்றில் விடுவிப்பதற்கு அல்லது அவர்களுக்கு ஏனைய தண்டனைகளை வழங்குவதற்கு இராணுவம் கடுமையான விதத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும்,ஒரு சில வழக்குகள் சிவில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இன்னும் ஒரு சில வழக்குகள் நீதிமன்றங்களிலும், சட்டமா அதிபர் திணைக்களத்திலும் நிலுவையாக இருந்துவருகின்றன’’ மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் பேரவைக்கு 2014 மார்ச் மாதத்தில் சமர்ப்பித்த அறிக்கைக்கு பதிலளித்த அரசாங்கம் ‘‘வடக்கில் உள்ள பெண்கள் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடிய நிலை, அங்கு பாதுகாப்புப் படையினர் பிரசன்னமாக இருக்கும் நிலையினாலேயே ஏற்பட்டுள்ளது என ஆணையாளர் தெரிவித்திருந்த கரிசனைகளுக்கு எந்த ஆதாரமும் இருந்து வரவில்லை” என்பதனை வலியுறுத்தியிருந்தது. “பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் ஆகியோருக்கு எதிரான அனைத்து விதமான வன்முறைகளையும் அரசாங்கம் கண்டிப்பதுடன்,அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக திட்டவட்டமான விதத்தில் நடவடிக்கை எடுத்திருப்பதுடன், தொடர்ந்தும் அவ்வாறு செய்துவரும்.”[542]

585. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் சலோகா பெயானி அவர்களால் எழுப்பப்பட்ட கரிசனைகள் தொடர்பாக பதிலளித்த அரசாங்கம் அத்தகைய வன்முறை ‘‘மோதலின் ஒரு எச்சமாக இருந்து வருகின்றது எனக் குறிப்பிட்டிருந்தது.’’‘‘உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெண்களின் மனித உரிமைகள், பாலியல் வன்முறையையும் உள்ளிட்ட விதத்தில் அப்பட்டமான விதத்தில் மீறப்பட்டு வருவது தொடர்பாக - (விசேட அறிக்கையாளரின்) அறிக்கையில் உள்ள குறிப்புக்கள் ஆதாரமற்றவையாகவும், தவறானவையும் ஆகும். பாலியல் வன்முறையைத் தடுத்து நிறுத்துவதற்கு கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெண்களின் மனித உரிமைகள் அப்பட்டமான விதத்தில் மீறப்படுவது தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் இருந்துவரவில்லை.’’[543]

---

[542] இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை மேம்படுத்துவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் வரைபு அறிக்கை தொடர்பான இலங்கை நிரந்த பிரதிநிதி அலுவலகத்தில் இருந்து கிடைத்த குறிப்புக்கள். (A/HRC/26/31/Add.6,)(A/HRC/25/23), para 14.

[543] A/HRC/26/33/Add.6, விசேட அறிக்கையாளரின் அறிக்கை குறித்த அரசின் குறிப்புக்கள், பந்தி 36 – 37

## இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் ஆவணப் படுத்தப்பட்டிருக்கும் பாலியல் வன்முறைப் போக்குகள்

### தனிநபர்களை இலக்காகக் கொண்ட கடத்தல் சம்பவங்கள் அல்லது பாரிய எண்ணிக்கையிலான ஆட்களைத் தடுத்து வைத்திருத்தல் என்பவற்றை அடுத்து இடம்பெறும் பாலியல் வன்முறை

586. மேலே எடுத்துக்காட்டப்பட்டதைப் போல இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் நம்பகமான தகவல்களை வழங்கக்கூடிய ஏனைய மூலாதாரங்கள் ஆகிய தரப்புக்களுடன் நிகழ்த்திய நேரடி நேர்காணல்களுக்கூடாக பெருந்தொகையான தகவல்களை திரட்டிக் கொண்டுள்ளது. இத்தகவல்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு எதிராக மிகக்கொடூரமான ஒரு சித்திரவதை வடிவமாக அல்லது மோசமாக நடத்தப்படும் ஒரு செயலாக மற்றும் பாலியல் துன்புறுத்தல் வடிவமாக பாலியல் வன்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு சில சந்தர்ப்பங்களில் கூட்டு வன்புணர்வுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் பெண்களைப் போலவே, ஆண் தடுப்புக்காவல் கைதிகளும் இத்தகைய பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படக் கூடியவர்களாக இருந்து வந்துள்ளனர்.

587. பல சம்பவங்களில் குற்றச்செயல்களை நிகழ்த்தியதாகக் கூறப்படும் நபர்களின் மனப்பாங்குகள், சாட்சிகள் எடுத்து விளக்கியவாறு, பாதிக்கப்பட்ட நபர் தொடர்பாக அடக்குமுறைகளுடன் கூடிய மற்றும் இழிவுபடுத்தும் விதத்திலான ஒரு நடத்தையை எடுத்துக்காட்டியிருந்தது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் ‘‘தமிழ் நாய்கள்’’ என அழைக்கப்பட்டுள்ளனர். இந்த நபர்களின் உள்நோக்கம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபரை உணர்வு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்பினை எதிர்கொள்ளச் செய்வதாகும். அறிக்கையிடப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் 2009 ஆம் ஆண்டிற்கும் 2010 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் இடம்பெற்றிருந்தன. 2005 ஆம் ஆண்டிற்கும் 2008 ஆம் ஆண்டிற்கும் இடையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னைய காவல் கைதிகளின் சாட்சியங்கள், பின்னர் அறிவிக்கப்பட்டசம்பவங்களைப் போலவே பாலியல் வன்முறை தொடர்பான அதே போக்குகள் மற்றும் முறைகள் என்பவற்றை எடுத்துக்காட்டியிருந்தன.

588. பாலியல் வன்முறைக்குப் பொறுப்பாக இருந்து வந்தவர்கள் என பாதுகாப்புப் படையினரின் பரந்த வீச்சிலான தரப்புக்களை உள்ளடக்கிய விதத்தில் அனைத்துப் பிரிவினரும் குறிப்பிடப்பட்டிருந்தனர்: பொலிஸ் உத்தியோகத்தர்கள் (குற்றப் புலனாய்வுத்திணைக்களம், பயங்கரவாத புலனாய்வுத்திணைக்களம்) தேசிய புலனாய்வு பணியகம், இராணுவ புலனாய்வுப் பிரிவு, இலங்கை இராணுவத்தின் சிப்பாய்கள் மற்றும் கடற்படை வீரர்கள். இவ்விதம் குற்றச் செயல்கள் நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்பட்ட நபர்களின் தரங்கள் குறைந்த தரத்திலான காவற் சிப்பாய்களிலிருந்து சிரேஷ்ட அதிகாரிகள் என நம்பப்பட்ட தனிநபர்கள் வரையில் பரந்த வீச்சில் காணப்பட்டது. இக்குற்றச் செயல்களை இழைத்தவர்களாகக் கூறப்படும் பெரும்பாலான ஆட்கள், ஆண்களாக இருந்து வந்ததுடன், ஒரு சில சம்பவங்களில் பெண் உத்தியோகத்தர்களும் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுப்பட்டதாக சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தன.

589. முன்னைய அத்தியாயம், சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட தடுப்புக்காவல் கைதிகள் வைக்கப்பட்டிருந்த இடங்களின் பட்டியலை வழங்கியிருந்தது. பாலியல்

வன்முறை இடம்பெற்ற தடுப்புக்காவல் இடங்கள் உத்தியோகபூர்வமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தடுப்புக் காவல் நிலையங்களையும், இராணுவத் தளங்களுக்குள்ளே இருந்து வந்த உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படாத தடுப்புக்காவல் நிலையங்களையும் கொண்டிருந்தன. உதாரணமாக ஜோசப் முகாம், மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரியாவின் கீழ் செயற்பட்டு வந்த வவுனியா பாதுகாப்புப் படைகளின் தலைமை அலுவலகம் (இந்த இடத்திலேயே இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அமைந்திருந்தது. ஆனால், விசாரணைகள் மற்றும் சித்திரவதை என்பவற்றில் குற்றவியல் புலனாய்வுத்திணைக்களம் மற்றும் பயங்கரவாதப் புலனாய்வுத் திணைக்களம் என்பவற்றின் உத்தியோத்தர்களும் பங்குபற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.) ஏனைய இடங்கள் கொழும்பிலும், வேப்பங்குளத்திலும் அமைந்திருக்கும் பயங்கரவாத புலனாய்வுத்திணைக்களம் மற்றும் குற்றவியல் புலனாய்வுத்திணைக்களம், பூசா தடுப்பு முகாம், ஓமந்தை மத்தியகல்லூரி, பூந்தோட்ட முகாம், புளிர்நேவா முகாம், வெலிக்கந்தை புனர்வாழ்வு நிலையம்.

590. வெள்ளைவான் செயற்பாட்டின் ஒரு பாகமாக, தனிப்பட்ட முறையில் கைது செய்யப்பட்ட ஒரு சில நபர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பாலியல் வன்முறைக்கும், ஏனைய சித்திரவதை வடிவங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். ஆயுத மோதலின் முடிவின் போது பெருந்திரளாக தடுத்து வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏனையவர்கள் அத்தகைய பாலியல் வன்முறைகளை எதிர்கொண்டார்கள். வடிகட்டும் இடங்களில் அவர்கள் புறம்பாக பிரித்தெடுக்கப்பட்ட பின்னர் அல்லது இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாங்களிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் அவர்கள் இந்த வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். மோதலின் முடிவின் போது சரணடைந்து, அதன்பின் விடுவிக்கப்பட்ட ஒரு சில தனிநபர்களும், பின்னர் மீளக் கைது செய்யப்பட்டு, இரண்டாவது தடுப்புக்காலப் பிரிவின் போது சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.[544]

591. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டிருக்கும் அனைத்து தகவல்களும் பாலியல் வன்முறை தொடர்பான சம்பவங்கள் தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் அல்ல என்பதனையும், (தகவல்களை பெற்றுக் கொள்வதற்காகவும், பயமுறுத்துவதற்காகவும், அவமானப்படுத்துவதற்காகவும்,அச்ச உணர்வை ஏற்படுத்துவதற்காகவும்) வேண்டுமென்றே மேற்கொள்ளும் சித்திரவதையின் ஒரு பாகமாக இருந்துவந்தது என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. இந்த செயற்பாட்டுகள் ஒரே மாதிரியில் இடம்பெற்றுள்ளன. தடுத்துவைக்கப்பட்ட பல்வேறு இடங்களில் பல்வேறு காலகட்டங்களில் பாதுகாப்புப் படையினரால் ஒரே விதமான கருவிகளே இதற்கென பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.அது இச்செயற்பாடு பாதுகாப்புப் படைகளுக்குள் இருந்து வந்த நிறுவன ரீதியான கொள்கையின் ஒரு பாகமாக இருந்தது என்ற முடிவை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கின்றது.

[544] கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம்: முன்னைய தடுப்புக் காவல் கைதிகள் இராணுவ முகாம்கள், குற்றவியல் புலனாய்வு திணைக்களம் அல்லது பயங்கரவாத புலனாய்வுத் திணைக்களம் என்பவற்றுக்கு ஒழுங்கான அடிப்படையில் அறிக்கையிட வேண்டியிருந்தது மற்றும் எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளை கொண்டிருப்பவர்கள் அல்லது எல்ரீரீஈ இயக்கம் தொடர்பான தகவல்களை கொண்டிருப்பவர்கள் என அவர்கள் கருதிய எவரையும் பொலிஸாரும், புலனாய்வுக் குழுவைச் சேர்ந்தவர்களும் தொடர்ந்து கண்காணித்து வந்தார்கள்.

**விசாரணையின் போது ஒரு சித்திரவதை வடிவமாக அல்லது ஈவிரக்கமற்ற, குரூரமான செயலாக மற்றும் இழிவுபடுத்தும் விதத்தில் நடத்தும் ஒரு செயலாக அல்லது தண்டனையாக பாலியல் வன்முறை**

592. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட முன்னைய தடுப்புக்காவல் கைதிகளில் பெரும்பாலானவர்கள் அவர்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் சரி உள்ளாக்கப்பட்டிராவிட்டாலும் சரி தாம் எவ்வாறு பலவந்தமாக முழுமையாக அல்லது அரைவாசி அளவுக்கு நிர்வாணப்படுத்தப்பட்டனா் என்பதனை எடுத்து விளக்கியிருந்தனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் தடுப்புக்காவல் நிலையம் ஒன்றுக்கு வரும் பொழுதும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விசாரணை அமர்வுகளின் பொழுதும் அவர்கள் இவ்வாறு தாம் நிர்வாணப்படுத்தப்பட்டதாக கூறியிருந்தனர். காட்டுப் பிரதேசம் ஒன்றில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் நிர்வாணமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தடுப்புக்காவல் கைதி ஒருவர் இப்படிக் கூறினார். ‘‘தம்மை தாக்கவேண்டாம் என பெண்கள் மன்றாடிக் கேட்டுக் கொள்வதனை என்னால் கேட்கமுடிந்தது. அதிலும் பார்க்க செத்துப் போவது நல்லது என அவர்கள் கூறினார்கள். அவர்கள் பாலியல் ரீதியில் தாக்கப்பட்டார்கள் என நான் நம்புகின்றேன். ஒரு மனிதர் இன்னொரு மனிதருக்கு இப்படியான காரியங்களைச் செய்யமுடியும் என்பதனை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை’’. சித்திரவதையில் தப்பிய மற்றொருவர் தான் நிர்வாணமாக தொங்கவிடப்பட்டதாகவும், இரத்தம் கசியும் வரையில் தன்னை அடித்ததாகவும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தார்.[545]

593. பலவந்தமாக முழுமையாக நிர்வாணப்படுத்துதல் அல்லது ஓரளவுக்கு நிர்வாணப்படுத்துதல் அவமானப்படுத்தும், சிறுமைப்படுத்தும் ஒரு நடத்தை எனக்கருதப்படமுடியும். இவ்விதம் நடத்தப்படுவதன் தாக்கம், அந்த இடத்தில் பிரசன்னமாகிருக்கும் பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் மோசமான பேச்சுகளின் மூலம் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றது. இது தவிர, நிர்வாணப்படுத்தப்பட்டிருந்த பெண் மற்றும் ஆண் தடுப்புக்காவல் கைதிகளை இராணுவத்தினர் புகைப்படம் எடுத்ததாக அல்லது வீடியோ படம் எடுத்ததாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பட்டிருந்தன. ஒருசிலர் பொருத்தமற்ற விதத்தில் தமது மார்பகங்களில் அல்லது பிறப்புறுப்புக்களில் தம்மைத் தொட்டதாக கூறியிருந்தனர். முன்னைய தடுப்புக்காவல் கைதி ஒருவர் தான் நிர்வாணமாக்கப்பட்டு, தனது பிறப்புறுப்பு மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அச்சந்தர்ப்பத்தில் தன்னைப் பிடித்து வைத்திருந்தவர்கள் அதனை பார்த்து சிரித்ததாகவும் கூறினார். நிர்வாணமாக இருக்கும்பொழுது தன்னை குத்துக்கரணம் இடுமாறு கேட்டுக்கொண்டதாக மற்றொருவர் குறிப்பிட்டிருந்தார். தடுப்புக்காவல் கைதிகள் நிர்வாணமாக இருக்கும் பொழுது, தமது தலைகளில் கதிரைகளை வைத்துக்கொண்டு நடனமாடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாக மற்றொருவர் குறிப்பிட்டார்.[546]பெருந்தொகையான முன்னாள் தடுப்புக் காவல் கைதிகள்,தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பெண்கள் நிர்வாணமாக அல்லது அரை நிர்வாணமாக இருப்பதை தாம் பார்த்ததாக தெரிவித்திருந்தனர். ஒருசில சம்பவங்களில் கடும் மனவேதனையில் தாம் மேலதிகமான துஷ்பிரயோக வடிவங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

545 WS on file

546 WS on file

594. விசாரணை அமர்வுகளின் போது தாம் பாலியல் வன்முறைச் செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டதாக முன்னாள் தடுப்புக்காவல் கைதிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் எடுத்து விளக்கியிருந்தனர். அது தமக்கு சொல்லொணாத வேதனையை எடுத்து வந்ததாகவும் அவர்கள் சொன்னார்கள். தடுப்புக்காவல் கைதியின் உடல் மீது கால்கள் வைக்கப்பட்டு பிறப்புறுப்புக்கள் நசுக்கப்பட்டன, பிறப்புறுப்புக்கள் மற்றும் தொடையின் உள்பாகங்கள் அடித்து உதைக்கப்பட்டன் பிறப்புறுப்புகளில் மிளகாய்த் தூள் போடப்பட்டது ஆண்குறிக்குள் உலோகங்கள் அல்லது வயர்கள் திணிக்கப்பட்டன, மார்பகங்களில் தீப் புண்கள் ஏற்படுத்தப்பட்டன, மார்பகங்களை கசக்குவதற்கு குறடுகள் பயன்படுத்தப்பட்டன, பின் துவாரத்தில் ஐஸ் கட்டிகள் புகுத்தப்பட்டன குற்றமிழைத்த நபர்களின் கைகளினால் ஆண்களின் பிறப்புறுப்புக்கள் நசுக்கப்பட்டன. பல சம்பவங்களில் வேதனை காரணமாக தாம் மூர்ச்சையடைத்ததாக சாட்சிகள் கூறினர்.[547] தனது ஆண்குறி ஒரு மேசை இழுப்பறையில் வைக்கப்பட்டு,பின்னர் அது மூடப்பட்டதாக ஒருவர் சொன்னார். பல சம்பவங்களின் போது, வேதனையை பொறுத்துக் கொள்ள முடியாமல் தாம் மூர்ச்சையடைத்ததாக சாட்சிகள் கூறினார்கள்.

595. பல மாத காலம் ஜோசப் முகாமில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வந்த சாட்சி ஒருவர் தனக்கு நடந்த சம்பவங்களை பின்வருமாறு எடுத்து விளக்கியிருந்தார்: ‘‘எனது ஆடைகளை அகற்றுமாறு என்னிடம் சொல்வார்கள்.எனது ஆண் உறுப்பை மேசை மீது வைக்குமாறும் சொல்வார்கள். பின்னர் கம்புகளை கொண்டு எனது ஆண் உறுப்பின் மீது அடிப்பார்கள்’’. கொழும்பில் அமைந்திருக்கும் குற்றவியல் புலனாய்வுத்திணைக்களத்தின் நான்காவது மாடிக்கு மாற்றப்பட்ட பின்னர் தான் மீண்டும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக அவர் சொன்னார். நான் எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதாககுற்ற வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் முயற்சித்த வேளையில், ஏனைய சித்திரவதை வடிவங்களுக்கும் தன்னை உள்ளாக்கியதாக அவர் குறிப்பிட்டார்.[548]

596. நிர்வாணப்படுத்தப்பட்டு, தரையில் படுக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுத்தப்பட்ட பின்னர் இருவர் தன்னை பிடித்துக்கொண்டிருந்ததாகவும், மற்ற நபர் தனது பிறப்புறுப்பை நசுக்கியதாகவும் மற்றொரு தடுப்புக்காவல் கைதிகூறியிருந்தார். அதன் பின்னர் அவரை மறுபக்கம் திருப்பி அவருடைய பின் துவராத்திற்குள் ஒரு வஸ்துவை சொருகினார்கள். அதனை வெளியில் எடுப்பதும், உள்ளே அனுப்புவதுமாக தொடர்ந்து செய்தார்கள்.

597. பல்வேறு சாட்சியங்களின் போதும் எடுத்து விளக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான பாலியல் சித்திரவதை முறைகளில் ஒன்று, பின்தூவாரத்திற்குள் புகுத்தப்படும் குழாய் ஒன்றுக்கு ஊடாக முட்கம்பிகளை அனுப்புவதாகும். முதலில் அந்த குழாய் வெளியில் எடுக்கப்படுவதுடன், பின்னர் அந்த முட்கம்பி,‘‘தாங்க முடியாத வலியையும் இரத்தப் போக்கினையும் ஏற்படுத்துகின்றது.’’[549]தன்னை பிடித்து வைத்திருக்கும் நபர்களுடன் பாலுறவில் ஈடுபடுவதற்கு மறுத்த பொழுது இவ்விதத்தில் தான் நடத்தப்பட்டதாக (ஆண்) சாட்சி ஒருவர் எடுத்து விளக்கியிருந்தார்.[550]‘‘மீண்டும் ஒரு முறை குழாய்க்குள்

547 WS on file

548 WS on file

549 பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

550 WS on file

முட்கம்பியை சொருகி, அவர் உள்ளே அனுப்பினார். அந்த நபர் குழாயை வெளியில் இழுத்து எடுத்தவுடன், முட்கம்பி எனக்குள்ளே தங்கியிருந்தது. நான் கடுமையான வலியை அனுபவித்ததுடன்,இரத்தப் போக்கும் ஏற்பட்டது''. தடுப்புக் காவிலில் வைக்கப்பட்டிருந்த பொழுது பல சந்தர்ப்பங்களில் வாய்மூலமாக பாலுறவுகொள்வதற்கு தான் நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும், பலதடவைகள் கும்பல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார். இதேமாதிரியான சம்பவம் குறித்து இலங்கை தொடர்பான புலன் விசாணைக்குழுவுக்கு நம்பகமான ஒரு மூலாதாரத்திலிருந்து தகவல்கள் கிடைத்திருந்தன. அந்தச் சம்பவம் ஜோசப் முகாமில் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது. இலங்கைக்கு வெளியில் எடுத்துச் செல்லப்பட்ட ஒரு மருத்துவ - சட்ட அறிக்கை, அந்நபரின் பின்துவாரத்தில் இரத்தப்போக்கு இடம்பெற்றதாகவும், பாலியல் சித்திரவதை காரணமாக தொடர்ச்சியாக வேதனை ஏற்படுத்தும் குறிகள் தென்பட்டதாகவும் பதிவு செய்திருந்தது. இத்தகைய செயல்களின் விளைவாக, பாதிக்கப்பட்ட நபர்களின் குடல்கள் வெளியில் வந்த சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதாக மற்றொரு மூலாதாரம் இலங்கை தொடர்பான புலன் விசாணைக்குழுவிடம் தெரிவித்திருந்தது. ஆனால்,அந்த பாதிக்கப்பட்ட நபர்கள் உயிர் தப்பவில்லை.[551]

598. தம்மை பிடித்துவைத்திருந்தவர்கள் நிர்வாணமான அல்லது அரை நிர்வாண நிலையில் இருந்த எல்ரீரீஈ போராளிகளின் புகைப்படங்களை அல்லது வீடியோப் படங்களை தமக்கு பெருமையுடன் காட்டியதாக பெருந்தொகையான முன்னாள் தடுப்புக் காவல் கைதிகள் குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு சில படங்களில் இந்தப் போராளிகள் மரணமடைந்திருந்ததுடன், ஏனையவற்றில் அவர்கள் உயிருடன் இருந்தார்கள். நிர்வாணமான நிலையில் அழுது கொண்டிருந்த எல்ரீரீஈ போராளிகள் குழுஒன்றின் வீடியோ படம் ஒன்று தனக்கு காட்டப்பட்டதாக சாட்சி ஒருவர் சொன்னார். அவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக சிப்பாய் ஒருவர் சிரித்துக்கொண்டு அவரிடம் சொல்லியிருந்தார். மற்றொரு சம்பவத்தில் உயிருடன் இருக்கும் பெண்களின் நிர்வாண வீடியோப் படம் தனக்கு காட்டப்பட்டதாகவும், அதனையடுத்து உயிரிழந்து இருக்கும் தமிழ்ப்பெண்களின் நிர்வாணப்படம் தனக்கு காட்டப்பட்டதாகவும் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.[552]ஆகக்குறைந்தது இரு தடுப்புக்காவல் கைதிகளுக்கு பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வீடியோப் படங்கள் காட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. ஒரு படத்தில் ஒரு தமிழ் பெண் நிர்வாண நிலையில் சிப்பாய்களினால் பிடித்து வைக்கப்பட்டு, வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். மற்றொரு சம்பவத்தில் பாதிக்கப்பட்டிருந்த பெண்னே தன்னை துஷ்பிரயோகம் செய்துகொண்டிருந்தார். தன்னை பிடித்துவைத்திருந்த நபர்களில் ஒருவர்,''தரையில் கிடத்தப்பட்டிருக்கும் மரணமடைந்த பெண்களின் பெருந்தொகையானநிர்வாணப்படங்களை எனக்குக் காட்டினார் பெரும்பாலான சந்தரப்பத்தில் அந்தப் படங்கள் மார்பகங்கள் மற்றும் பெண் குறிகள் என்பவற்றை மிக நெருக்கமாக காட்டின. மேலும், எல்ரீரீஈ இயக்கத்தின் பெண் போராளிகள் இயக்கத்தின் போர் காற்சட்டைகளை அணிந்து, தரையில் அமர்ந்திருக்கும் படங்களும் இருந்தன.ஆனால், அவர்களுடைய உடலின் மேல்பாகம் நிர்வாணமாக இருந்தது. அவர்களுடைய கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப்பட்டிருந்தன...'' என மற்றொருவர் சொன்னார்.[553]

551 WS on file

552 WS on file

553 WS on file

599. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு இந்த வீடியோப் படங்களை பார்த்திருக்கவில்லை. எனவே, அவ்வாறான படங்கள் இருந்து வருகின்றன என்பதனை அதனால் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. ஆனால், படமெடுப்பதற்கென பாதுகாப்புப்படை ஆளணியினரால் கைத்தொலைபேசிகள் பயன்படுத்தப்படுவது, இழிவுபடுத்தும் விதத்தில் ஆட்களை நடத்துவதற்கு இணையான ஒரு செயலாக இருந்துவருகின்றது என அது நம்புகின்றது. மேலும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு அத்தகைய வீடியோக்களையும், புகைப்படங்களையும் காட்டுவது உளவியல் ரீதியான சித்திரவதைக்கு இணையானதாகும்.

**பரவலான வன்புணர்வுகள் குறித்த குற்றச்சாட்டுக்கள்**

600. பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட 30 பேரில் 18 பேர் (8ஆண்கள் மற்றும் 10 பெண்கள்) உடல் உறுப்புக்களில் வன்புணர்வு நிகழ்த்தப்பட்டதாகவும் மற்றும்/அல்லது தமது பின்துவாரத்திற்குள் வஸ்துக்கள் புகுத்தப்பட்டதாகவும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனர். ஏனைய தரப்புக்கள் பெற்றுக்கொண்டிருக்கும் வாக்குமூலங்களும் தடுப்புக் காவலில் உயர் விகிதங்களில் இடம்பெற்றுவந்திருக்கும் வன்புணர்வுகளை எடுத்துக் காட்டுகின்றன. எடுத்து விளக்கப்பட்ட வன்புணர்வுச் சம்பவங்களில் பெரும்பாலானவை விசாரணை அமர்வுகளின் பின்புலத்தில் இடம்பெற்றிருப்பது போல் தெரியவில்லை. ஒரே சீரான விதத்தில் முன்வைக்கப்பட்ட பல சாட்சியங்களின் பிரகாரம், ஆண் மற்றும் பெண் தடுப்புக்காவல் கைதிகள், தம்மை பிடித்து வைத்திருந்த நபர்கள், வாய்வழி புணர்ச்சியை மேற்கொள்வதற்கு நிர்பந்தித்ததாகவும், அவர்களுடைய வாயில் அல்லது உடல் மீது விந்தை வெளியேற்றியதாகவும் கூறியிருந்தார்கள்.

601. ஒருசில சந்தர்ப்பங்களில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் பல வார காலமாக அல்லது பல மாதகாலமாக ஒரே நபர்களினால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். …. ஆகக்குறைந்தது, ஒரு சம்பவத்தில் சிரேஷ்ட தளபதி ஒருவர் சம்பந்தப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது. ‘‘நான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு வருட காலப்பிரிவின் போது பல தடவைகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டேன் எத்தனை தடவைகள் அது நிகழ்ந்தது என்பதனை என்னால் ஞாபகப்படுத்திப் பார்க்க முடியவில்லை வாரத்திற்கு நான்கு அல்லது ஐந்து தடவைகள் அவை நிகழ்ந்ததுடன்,பல மாதங்கள் தொடர்ந்தன. நான் இன்னும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதுடன், சிகிச்சையும் பெற்று வருகின்றேன். ஒவ்வொரு தடவையும் ஒரே அதிகாரியே என்னை வன்புணர்வு செய்தார்… தாக்குதல் தொடுத்த நபர் இராணுவ சீருடையில் இருந்தார். அவர் அந்தஸ்துடன் கூடிய ஒரு சிரேஷ்ட அதிகாரியாக இருந்துவந்தார் என நான் நம்புகின்றேன். ஏனைய சிப்பாய்கள் அவருக்கு மரியாதை செலுத்துவார்கள். இத்தாக்குதல்கள் மிகவும் உக்கிரமானவையாக இருந்து வந்தன. நான் பலவீனமடைந்து, கையறுநிலையில் இருந்துவந்தேன். என்ன நடக்கின்றது என்பதை நான் எவரிடமும் சொல்லவில்லை. எனது பின்தூவாரத்திற்கு ஊடாக இரத்தம் கசிவது ஏன் என தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தஏனையவர்கள் என்னிடம் கேட்பார்கள் - ஒரு பொல்லைக் கொண்டு என்னைத் தாக்கினார்கள் என நான் அவர்களுக்கு பதிலளிப்பேன்.’’[554]

602. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்களும், பெண்களும் தமது காவல் அறைகளில் வைத்து வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாக அல்லது இரவு

554 WS on file

நேரங்களில் வெளியில் எடுத்துச் செல்லப்பட்டு ஏனைய அறைகளில் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டாக தெரிவித்திருந்தனர். சில சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் அவர்கள் அவ்விதம் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதுடன்,ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் அவற்றை செய்திருந்தார்கள். ஒருசில சம்பவங்களில் வன்புணர்வை செய்த நபர்களின் மூச்சில் மதுபான வாடை வீசியதாக சாட்சிகள் தெரிவித்திருந்தனர். இலங்கை இராணுவத்திற்கு மிக நெருக்கமான ஒரு நபர், மனிக்பாம்முகாமில் இருந்து பெண்களை தெரிவுசெய்து, ஜோசப் முகாமிற்கு எடுத்துவருமாறு தனக்கு பல தடவைகள் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததாகவும், அந்த இடத்தில் வைத்து பெண்கள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.[555]

603. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட பெருந்தொகையான முன்னாள் தடுப்புக்காவல் கைதிகள் விசாரணைகளின் போது ஏதோ ஒரு வகையிலான பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த அதேவேளையில், வன்புணர்வுக்கும் உட்படுத்தப்பட்டிருந்தனர். பல சம்பவங்களில் வன்புணர்வின் உண்மையான நோக்கம் நேரடியாக தகவல்களை பெற்றுக்கொள்வதாக இருந்து வரவில்லை. ஆனால், பாலியல் திருப்தி, பாதிக்கப்பட்ட நபர்களை இழிவுபடுத்துதல்,சிறுமைப்படுத்துதல் என்பவற்றின் ஒரு கூட்டாகவே அது இருந்து வந்துள்ளது. தம்மை பிடித்து வைத்திருப்பவர்களின் தயவின் கீழ் இருந்துவந்த தடுப்புக்காவல் கைதிகளை கேவலப்படுத்தும் விதத்தில் துஷ்பிரயோகம் செய்வதன் ஊடாக,அவர்களுடையஉள்ளத்தில் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாக இருந்து வந்துள்ளது. ஏனெனில், அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான வலிமையை கொண்டிருக்கவில்லை. அவமானப்படுத்தும் செயற்பாடு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் தொடர்ந்தும் மிகவும் மோசமான விதத்தில் நடத்தப்பட்டதன் மூலம் முன்னெடுக்கப்பட்டது. பாலியல் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் ‘‘தமிழ் நாய்கள்’’ என அழைக்கப்பட்டமை போன்ற சம்பவங்களை இங்கு குறிப்பிட முடியும். மேலும், இத்தகைய வன்புணர்வுச் சம்பவங்கள், தகவல்களை வழங்குமாறும் மற்றும்/அல்லது ‘‘குற்றவாக்குமூலங்களின்’’ கையொப்பமிடுமாறும் தடுப்புக்காவல் கைதிகள் மீது தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தத்திற்கு மேலும் வலுவூட்டின.

604. மூன்று வெவ்வேறு தடுப்பு நிலையங்களில் இடம்பெற்ற குறைந்தது மூன்று சம்பவங்களில் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்கள்- ஒரு ஆண், இரு பெண்கள் -அவர்கள் மூர்ச்சையடைந்திருந்த சந்தர்ப்பத்திலேயே வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள். தமது அந்தரங்க உறுப்புக்களில் கடுமையான வேதனையுடன் தாம் விழித்து பார்த்ததை ஒவ்வொருவரும் தனித்தனியாக எடுத்து விளக்கியிருந்தனர். அவர்களில் ஒருவர் தாம் மூர்ச்சையாகும் வரையும் மது அருந்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாக கூறியிருந்தார். இறுதியில், அவர் விழித்துப் பார்த்த பொழுது அவரால் நடக்கக்கூட முடியாதிருந்தது. இரண்டாவது சாட்சி அரை நிர்வாண நிலையில் விழிப்புற்றதுடன், அவருடைய பெண் உறுப்பில் இருந்து இரத்தம் கசித்ததுடன், மார்பகத்தில் பல் அடையாளங்கள் காணப்பட்டன.

605. விசாரணை அமர்வுகளின் போது தொடர்ச்சியாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட மூன்றாவது சாட்சி ஒருவர், தான் ஒரு அறைக்குள் எடுத்துச்

[555] WS on file

செல்லப்பட்டதாகவும்,அங்கு சீருடையில் இரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள்இருந்ததாகவும் கூறினார். பெற்றோல் வாசனையுடன் கூடிய ஒரு பிளாஸ்ரிக் பை தலைக்கு மேலால் போடப்பட்ட பொழுது, தான் மூர்ச்சையாகியதாகவும் அவர் கூறினார். விழித்தெழுந்து பார்த்தபொழுது அவர் நிர்வாணமாக இருந்தார். ‘‘என்னுடைய பெண் உறுப்பில் இருந்து பெருமளவுக்கு இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. பெண் உறுப்பின் உட்பகுதியிலும், வெளிப்பகுதியிலும் கடுமையான வலியை தான் அனுபவித்தேன்’’. பல மாதங்களுக்கு பின்னர், இராணுவச் சீருடையில் இருந்த இரண்டு நபர்களினால் அவர் இரவில் மீண்டும் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார். அவர் அந்தச் சந்தர்ப்பத்தில் மாறி மாறி மூர்ச்சை அடைந்தார். மூன்றாவது தடவை இரவில் அவர் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பொழுது, ஆகக்குறைந்தது மூன்று இராணுவ உத்தியோகத்தர்கள் ஒருவர் பின் ஒருவராக அவரை வன்புணர்வுக்கு உட்படுத்துவதற்கு முன்னர், அவருடைய கால்கள் சிகரெட்டுகளினால் சுடப்பட்டன. மீண்டும் அவருக்கு இரத்தப்போக்கு ஏற்பட்டது. அச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் அவர் தனது கூடாரத்திற்கு வருவதற்கு முன்னர், கழிப்பறைக்குப் போய் தன்னை கழுவிக் கொண்டார். இரவில் அதே கட்டடத்தில் இருந்து வேறு பெண்கள் வெளியில் வருவதனையும், தமது கூடாரங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு முன்னர், நேரே அவர்கள்கழிப்பறைக்குச் செல்வதனை தான் பார்த்ததாகவும் அவர் சொன்னார். அதே முகாமில் இடம்பெற்ற வன்புணர்வுச் சம்பவங்கள் குறித்த ஏனைய அறிக்கைகளும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்திருந்தன.[556]

606. ஓர் இராணுவ முகாமில் ஆஜரான பொழுது மீளக் கைது செய்யப்பட்ட முன்னைய தடுப்புக்காவல் (ஆண்) கைதி ஒருவர், இரகசிய தடுத்து வைக்கும் இடமொன்றிற்கு தான் எடுத்துச் செல்லப்பட்டதாகவும்,அங்குவைக்கப்பட்டிருந்த மூன்று வார காலப்பிரிவின் போது ‘‘பல தடவைகள்’’ வாய் வழிப் புணர்ச்சியை மேற்கொள்வதற்கு நிர்பந்திக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார்.[557]குற்றவியல் புலனாய்வுத்திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு முன்னாள் தடுப்புக்கைதி தான் பல தடவைகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், எத்தனை தடவை என்பதனை தன்னால் நினைவுபடுத்திக் கொள்ள முடியவில்லை என்றும் கூறினார். பாலியல் துன்புறுத்தலை அடுத்துகடும் ஏச்சுக்களையும், இன ரீதியாக புண்படுத்தும் விதத்திலான வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்க நேரிட்டதாக அவர் சொன்னார். பாலியல் வன்முறை மற்றும் ஏனைய வடிவங்களிலான சித்திரவதை என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட பெருந்தொகையாக நபர்களைப் போலவே அவரும் இந்தச் சம்பவங்கள் அடிக்கடி நினைவில் வருவதாக கூறினார். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் நேர்காணல்கள் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், பாலியல் வன்முறை தொடர்பாக குறிப்பிட்ட பொழுது தான் பெருமளவுக்கு மனக்கலக்கம் அடைந்ததாக அவர் சொ்னனார்.[558]

556 WS on file

557 WS on file

558 WS on file

-

**ஆட்களை சோதனை செய்யும் செயன்முறைகளின் போது மனிக்பாம் முகாமிற்கு உள்ளே இடம்பெற்ற பாலியல் துன்புறுத்தல் மற்றும் ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறை**

607. மோதலின் இறுதி வாரங்களின் போது ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்களும், அதேபோல ஆயுதங்களை ஒப்படைத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களுக்குள் வந்தார்கள். அவர்கள் அவ்விதம் வந்த பொழுது வட்டுவாகல் பாலத்திற்கும், முல்லைத்தீவு மற்றும் ஓமந்தை ஆகிய இடங்களுக்குமிடையில் தாண்டிச் செல்லவேண்டியிருந்த வடிகட்டும் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் என்பன அத்தியாயம் XVIஇல் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

608. இந்த வடிகட்டும் இடங்களில் பாலியல் துன்புறுத்தல், இழிவுபடுத்துதல் மற்றும் பயமுறுத்துதல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றதாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்பு நோக்கங்களுக்கு என ஆட்களை வடிகட்டும் செயன்முறைகள் சட்டபூர்வமான ஒரு செயற்பாடாக இருந்து வரமுடியும் என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அங்கீகரிக்கும் அதேவேளையில்,அந்த இடங்களைத் தாண்டிச் செல்லும் நபர்களின் உரிமைகளை மீறாத விதத்தில் அவை மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிட விரும்புகின்றது. 2009 பெப்ரவரிமாதத்தில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் பதிவுசெய்யும் இடமொன்றில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெண் தற்கொலைப் போராளி ஒருவர் குண்டை வெடிக்கச் செய்ததை அடுத்து, ஆடைகளை களைந்து சோதனை செய்யும் நடைமுறை சாதாரணமாக இடம்பெற்றுவந்துள்ளது என்பதனை அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆடைகளை களைந்து சோதனை செய்யும் நடைமுறையை ஓரளவு வரையில் நியாயப்படுத்த முடியும். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்களின் படி, அத்தகைய சோதனை முறை குறிப்பாக, பெண்கள் ஆடைகளை முழுவதுமாக களையுமாறு அல்லது ஓரளவுக்கு களையுமாறு நிர்ப்பந்திக்கப்படும் பொழுது அது துஷ்பிரயோகத்திற்கான பெருந்தொகையான வாய்ப்புக்களை வழங்குகின்றது என்ற விடயம் தெளிவாக தெரியவருகின்றது.

609. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களில் ஒருசிலர் மணல் மூட்டைகளைக் கொண்டு[559] அல்லது பனையோலைகளால் அமைக்கப்பட்டிருந்த காவலரண்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன்,[560]ஏனையவர்கள் மற்றவர்களுக்கு தென்படக்கூடிய விதத்தில் அமைந்திருந்த ஓரிடத்தில் ஆடைகளை களையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். தாம் ஆண் சிப்பாய்களினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அல்லது ஆடைகளை களைந்த பொழுது அந்த மறைப்புக்களுக்கு மேலாக ஆண் சிப்பாய்கள் தம்மைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும், தமது கையடக்கத் தொலைபேசிகளில் நிர்வாண நிலையில் பெண்களின் புகைப்படங்களை எடுத்ததாகவும் இடம்பெயர்ந்திருந்த பல பெண்கள் கூறியிருந்தனர். இத்தகைய துஷ்பிரயோகங்கள் இலங்கை இராணுவத்துடன் சம்பந்தப்பட்ட நபர்களினாலும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் எடுத்து விளக்கப்பட்டிருந்தன.[561]

559 WS on file

560 WS on file

561 WS on file

பலவந்தமாக நிர்வாணப்படுத்தப்படுதல் - குறிப்பாக பெண்கள் மற்றம் பெண் பிள்ளைகள் அவ்விதம் நிர்வாணப்படுத்தப்படுதல் - பாதுகாப்புச் தேவைகளுக்கும் அப்பாற்பட்ட செயல்களாக இருந்து வருகின்றன. அது வன்னியிலிருந்து தப்பிச்செல்லும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை மோசமாக நடத்தும் மற்றும் இழிவுபடுத்தும் செயன்முறையின் ஒரு பாகமாக இருந்துவந்தது.

610. பெண்கள் அல்லது பெண்பிள்ளைகள் நிர்வாணப்படுத்தப்பட்ட நிலையில் அல்லது அரை நிர்வாண நிலையில் இருக்கும் பொழுது ஆண் சிப்பாய்கள் எட்டிப் பார்த்ததாகவும்,பொருத்தமற்ற விதத்தில் அவர்களை தொட்டுப் பார்த்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சோதனைச் சாவடிக்குள் செல்வதற்கு தான் மறுத்த காரணத்தினால் பெண் இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் தன்னை அடித்து, பலவந்தமாக அந்த சாவடிக்குள் எடுத்துச் சென்ற விதத்தினை பெண் சாட்சி ஒருவர் விளக்கியிருந்தார். அவருடைய ஆடைகள் பலவந்தமாக களையப்பட்டன. மணல் மூட்டைகளில் இருந்த துவாரங்களுக்கு ஊடாக ஆண் சிப்பாய்கள் துப்பாக்கி முனைகளை புகுத்தி சிறுமைப்படுத்தும் விதத்தில் தனது மார்பகங்களை தொட்டதாகவும் அவர் கூறினார்.[562] தான் நிர்வாணப்படுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பொழுது “தன்னை ஒரு பிணம் போல உணர்ந்ததாக” மற்றொருவர் குறிபிட்டார்.[563] சிப்பாய் ஒருவர் தனது கையடக்கத்தொலைபேசியில் இருந்த வீடியோ ஒன்றை தனக்கு காட்டியதாகவும், அதில் அவர் முழுவதுமாக நிர்வாணமாக இருந்த பெண்களின் வீடியோ படங்களை எடுப்பதுகாட்டப்பட்டிருந்ததாகவும் சாட்சி ஒருவர் சொன்னார். அப்பெண்களின் உடல்கள் குறித்த பாலியல் ரீதியான சொற் பிரயோகங்களை சிப்பாய்கள் பயன்படுத்தினார்கள். கட்டளை அதிகாரிகளுக்கு முன்னிலையில் இச் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், ஆனால், அவற்றை நிறுத்துவதற்கு அவர்கள் எதனையும் செய்யவில்லை என்றும் பல சாட்சிகள் கூறினார்கள்.

611. ஆடைகள் களைப்பட்டு, சோதனை செய்யப்பட்ட பொழுது தாம் சங்கடப்படுத்தப்பட்டதாகவும்,கேவலப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக அத்தகைய சம்பவங்களை அடுத்து இழிவுபடுத்தும், அவமானப்படுத்தும் வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். ஷெல் தாக்குதல்கள், உணவுத்தட்டுப்பாடு, இருப்பிட வசதியின்மை மற்றும் பாதுகாப்பு படைகள் குறித்த அச்சம் என்பன காரணமாக கடும் மனஅதிர்ச்சிகளை எதிர்கொண்டு, மிகவும் பலவீனமான நிலையில் இருந்து வந்த ஒரு மக்கள் தொகையினர் மீது இந்தக் தாக்கம் மேலும் மோசமான விளைவுகளை எடுத்துவந்தது.

612. பெண்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசத்திற்கு வந்தபொழுது பாலியல் துஷ்பிரயோகம் செய்வதற்கென சிப்பாய்கள் அவர்களை‘‘காட்டுக்குள்’’ எடுத்துச்சென்றதாக பல சாட்சிகள் கூறினார்கள். அவர்கள் அலறும் சத்தம் தமக்குக் கேட்டதாக ஒருசிலர் சொன்னார்கள். உதாரணமாக, பெண் போராளி ஒருவர் இரு சிப்பாய்களினால் காவலரணுக்கு பின்புறம் எடுத்துச் செல்லப்படுவதனை பார்த்ததாக சாட்சி ஒருவர் விளக்கியதுடன், சுமார் 20 நிமிடங்களுக்கு பின்னர் அவர் வெளியில் எடுத்து வரப்பட்டபொழுது திகிலடைந்து, அழுது புலம்பிக்கொண்டிருந்ததாகவும் அவர் சொன்னார். மற்றொரு சம்பவத்தில்

[562] WS on file

[563] WS on file

சிப்பாய்கள் இளம் பெண்களை புதருக்குள் இழுத்துச் செல்வதனையும், அதன் பின்னர் அலறல் ஒலிகள் கேட்டதனையும் ஒருவர் நினைவு கூர்ந்தார். மேலும் அப்பிரசேத்தில் இருந்து துப்பாக்கிச் சத்தங்கள் வருவதனை தான் கேட்டதாகவும் அவர் சொன்னார். ‘‘புதர்களில் அழுது புலம்பிக் கொண்டிருந்த” நான்கு அல்லது ஐந்து பெண்களின் குரல்களை தான் கேட்டதாக சாட்சியமளித்த மற்றொரு பெண்மணி கூறினார். காவலரணை நெருங்கிய பொழுது தன்னை பாதுகாக்கவேண்டும் என அவர் கூக்குரல் இட்டதாகவும் அவர் சொன்னார்.அவர்கள் பாலியல் ரீதியான தாக்குதல்களை எதிர்கொண்டிருக்கமுடியும் என தான் அஞ்சியதாகவும், தொடக்கத்தில் ஆடைகளை களைந்து தேடுதல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் அவர் சொன்னார்.[564]

613. தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பாலியல் வன்முறையின் அளவு மற்றும் மோதலின் முடிவின் போது இடம்பெற்ற பாலியல் ரீதியான சிறுமைப்படுத்தல் மற்றும் உடல்கள் சிதைக்கப்படுதல் என்பவற்றின் அளவு என்பவற்றின் பின்னணியில், பல்வேறு இடங்களிலும், சோதனைச் சாவடிகளிலும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் தாக்குதல் என்பன இடம்பெறுவதற்கு கணிசமான அளவிலான வாய்ப்புக்கள் காணப்பட்டுள்ளன என்றும், அத்தகைய துஷ்பிரயோகங்களின் அளவு மற்றும் இயல்புஎன்பவற்றை தெரிந்து கொள்வதற்கும், அங்கு சமூகமளித்திருந்த எவரேனும் தளபதிகளை உள்ளடக்கிய விதத்தில் அவற்றுக்கு பொறுப்புக் கூறவேண்டிய நபர்கள் யார் என்பதனை தெரிந்துகொள்வதற்கும் மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது.

614. முறையான ஒழுங்கில் ஆடைகளை களைந்து தேடுதல் நடத்தப்படும் முறை அறிமுகம் செய்து வைக்கப்படுவதற்கு முன்னர், 2009 பெப்ரவரி மாதத்தின் தொடக்கத்தில் சோதனை செயன்முறை ஒன்றை எதிர்கொண்ட பெண்மணி ஒருவர், ஆடைகளை களையவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படாவிட்டாலும் கூட, ஒரு பெண் சிப்பாய் தனது மார்பகங்களை தடவியதையும், கசக்கியதையும் தனது தொடைகள் மற்றும் பிட்டங்கள் என்பவற்றை தடவியதையும் குறிப்பிட்டிருந்தார். அத்தகைய நடத்தை ‘‘கேவலப்படுத்தும் மற்றும் சீரழிக்கும் ஓர் அனுபவமாக’’ இருந்துவந்ததாக அவர் விபரித்தார்.[565]

615. முன்னைய சோதனைகளின் போது தாம் எத்தகைய ஆயுதங்களையோ அல்லது குண்டுகளையோ வைத்திருக்கவில்லை என்பதனை பொதுமக்கள் ஏற்கனவே எடுத்து காட்டியிருந்த போதிலும், தொடரான பல வடிகட்டும் இடங்களிலும், சோதனைச் சாவடிகளிலும் அவர்கள் தொடர்பான தேடல்கள் மேற்கொள்ளப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் உண்மையான பாதுகாப்பு கரிசனைகளுக்காகவன்றி, ஆட்களை அவமானப்படுத்தி, சீரழிப்பதற்காகவே சோதனை மேற்கொள்ளப்படுகிறது என்ற முடிவுக்கு இது வலுவூட்டுகிறது. சோதனை செயன்முறைகளின் போது இடம்பெற்ற பாலியல் ரீதியான சிறுமைப்படுத்துதல்கள் பொதுமக்கள் மற்றும் போர் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருந்த எல்ரீரிஈ போராளிகள் ஆகியோர் நடத்தப்பட்ட மனதாபிமானமற்ற, இழிவுகரமான ஒட்டுமொத்த முறையுடன் நோக்கப்படுதல் வேண்டும். மேலும், இன அடிப்படையிலான வசைச்

564 WS on file

565 WS on file

சொற்கள் மற்றும் இழிவுபடுத்தும் சொற்கள் என்பவற்றின் பயன்பாடு என்பவற்றையும் இது உள்ளடக்குகிறது.

616. மனிக்பாம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் அல்லது தமது பணியின் ஒரு பாகமாக அந்த முகாமிற்கு விஜயம் செய்திருந்த பல்வேறு தரப்புக்களையும் சேர்ந்த நபர்கள் கேள்வி அறிவின் அடிப்படையில் முன்வைத்த குற்றச்சாட்டுக்களும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருந்தன. முகாம்களுக்குள்ளே வன்புணர்ச்சிச் சம்பவங்கள் அல்லது பாலியல் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்தததனை தாம் கேள்விப்பட்டதாக அவர்கள் கூறியிருந்தார்கள். உதாரணமாக, மனிக்பாம் முகாமில் பெண்களும் இளம் பெண்களும் குளிக்கும் பொழுது அல்லது விறகு எடுக்கும் பொழுது இவை இடம்பெற்றிருப்பதாக கூறப்படுகின்றது; பெண்களை துஷ்பிரயோகம் செய்வதற்கென சிப்பாய்கள் இரவு நேரத்தில் கொட்டகைகளுக்குள் சென்றதாக அல்லது சிப்பாய்களால் பெண்கள் எடுத்துச் செல்லப்பட்டதாக கூறப்பட்டது. அவ்விதம் சிப்பாய்களால் வெளியில் எடுத்துச் செல்லப்பட்ட பெண்கள் பின்னர் கடும் மனக் கிலேசமடைந்தவர்களாக திரும்பி வந்ததாக அவர்கள் தெரிவித்தார்கள்.[566]குளிக்கும் இடங்கள் எவ்வாறு திறந்த நிலையிலும், சிப்பாய்கள் பார்க்கக்கூடிய நிலையிலும் இருந்துவந்தன என்பதனையும் பெண்கள் குளிக்கும் பொழுது சிப்பாய்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்பதனையும் பெருந்தொகையான சான்றுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

617. மனிக்பாம் முகாமில் தங்க எவைக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் உணவை பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்து நின்றபொழுது, பச்சை சீருடையில் இருந்த ஐந்து ஆண்களால் தான் அழைக்கப்பட்டதாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் தெரிவித்தார். முகாமில் எங்கோ ஓரிடத்தில் அமைந்திருந்த ஓர் அறைக்கு தான் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கு மிகுந்த மூர்க்கத்தனத்துடன் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு,அடித்து, கடித்து, உதைக்கப்பட்டதாகவும்,உடலில் நகக் கீறல்கள் பதிந்திருந்ததாகவும் அவர் கூறினார். மீண்டும் தனது கூடாரத்திற்கு வருவதற்கு அவருக்கு அனுமதியளிப்பதற்கு முன்னர், அவருடைய கணவன் எல்ரீரீஈ இயக்கத்தில் இருந்து வருகின்றாரா என அவரிடம் கேட்டார்கள். முகாமில் இருக்கும் ஏனைய பெண்களுக்கும் இது நடக்கின்றது என தான் நினைப்பதாக அவர் சொன்னார். ஆனால் ‘‘எவரும் அது குறித்துப் பேசுவதில்லை.” தான் அத்தகைய நிலை ஒன்றை அனுபவித்து, திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது ஏனைய இருபெண்கள் அவ்விதம் எடுத்துச் செல்லப்படுவதை தான் பார்த்ததாக அவர் சொன்னார்.

618. மனிக்பாம் முகாமிற்குள் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட விதத்திலான வன்புணர்வு அல்லது ஏனைய பாலியல் துஷ்பிரயோக வடிவங்கள் என்பன தொடர்பான நேரடிச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை. எவ்வாறிருப்பினும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறை மற்றும் மனிக்பாம் முகாமிற்குள் நிலவிவரும் இராணுவ மயப்பட்ட இயல்பு, பாதுகாப்புப் படைகள், துணைப்படைகள் என்பன நிரந்தரமாக அங்கு பிரசன்னமாகி இருக்கும் நிலை மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்படும்

[566] WS on file

துஷ்பிரயோகம் என்பன தொடர்பாக மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இக்குழு நம்புகின்றது. மேலும், இந்த முகாமில் வசித்துவரும் பெரும்பாலான குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக இருந்து வருவதனால் குறிப்பாக அவை எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையிலும் இருந்து வருகின்றன.

619. இருட்டிய பின்னர் மனிக்பாம் முகாமின் பல்வேறு பிரிவுகளில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊழியர்களோ அல்லது அரசு சாரா அமைப்புக்களோ இல்லாதிருந்துவரும் நிலை, ஏதேனும் ஒருவகையிலான சுயாதீனமான கண்காணிப்புக்கு தடையாக இருந்து வந்ததுடன், உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படக்கூடிய ஆபத்தை அதிகரித்திருந்தது.

620. மோதலின் முடிவின் போது மனிக்பாம் வளாகத்திற்குள் அமைந்திருந்த முகாம்களில் வடிகட்டுதல் மற்றும் சுதந்திரம் பறிக்கப்பட்டமை என்பன தொடர்பாக அத்தியாயம் XVIஇல் எடுத்து விளக்கப்பட்டவாறு, மருத்துவப் பராமரிப்பை பெற்றுக்கொள்ளும் வசதி பெருமளவுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும், பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மட்டுமே மருத்துவ உதவி வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இராணுவம், பொலிஸ் மற்றும் துணைப்படைகள் என்பவற்றின் நிரந்தப் பிரசன்னம் மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகச் சம்பவங்கள் குறித்த அதீத அச்சம் மற்றும் நம்பகமான விதத்தில் சிகிச்சைக்கு அனுப்பிவைக்கும் ஒருமுறை இல்லாதிருந்த நிலை என்பன இடம்பெற்றிருக்கக் கூடிய சம்பவங்கள் அறிவிக்கப்படாதிருப்பதற்கான காரணத்தை எடுத்து விளக்குகின்றன. பகல் நேரங்களில் அரசு சாரா அமைப்புக்களும், ஏனையோரும் இந்த முகாம்களுக்கு விஜயம் செய்த போதிலும் இதனைமேற்கொள்ள முடியவில்லை. மேலும்,மனிதநேயப் பணியாளர்கள் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்களுடன் இரகசியமான விதத்தில் பேசுவதும் தடைசெய்யப்பட்டிருந்தது. உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்கள் வசித்து வந்த முகாம்களுக்குள் அரசு சாரா அமைப்புக்கள் உள - சமூகஉதவிகளை வழங்கும் விடயமும் சமூகச் சேவைகள் அமைச்சினால் தடைசெய்யப்பட்டிருந்ததாக கூறப்பட்டிருந்தது. காலப்போக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆதரவைப்பெற்றிருந்த ஒருசில பொறிமுறைகள் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கென உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால்,இவை கணிசமான அளவிலான தடங்கல்களுக்கு மத்தியில் செயற்பட்டுவந்தன.

### பாலியல் வன்முறை குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நீதி விசாரணைகள்

621. பாலியல் வன்முறையை மறுக்கும் விதத்தில் அல்லது பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சம்பவங்கள் குறித்து வழக்குத் தொடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் உறுதியான விதத்தில் கூறிவந்தபோதிலும், அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் வழங்கியிருக்கும் தகவல்கள் தொடர்பான ஒரு மீளாய்வு, அது அவ்வாறிருந்து வரவில்லை என்பதனையும்,இத்தகைய குற்றச்செயல்களை புரிந்தவர்கள் தொடர்ந்தும் தண்டனை விலக்குரிமையை அனுபவித்து வருகிறார்கள் என்பதனையும் காட்டுகின்றன. அரசாங்கம் 2014 செப்டம்பர் மாதம் மனித உரிமைகள் கமிட்டியிடம் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில், பாதுகாப்பு படையினரால் நிகழ்த்தப்பட்ட 39 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாக

குறிப்பிட்டிருந்தது. அதனையடுத்து, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள்,இச்சம்பவங்கள் பெரும்பாலானவை சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்டவை என்பதனைக் காட்டுகின்றன. இந்த வழக்குத் தொடர்பாக கூட ஏதோ ஒரு விதத்தில் விசாரணைகள் நடத்தப்படுவது சாதகமாக இருந்து வரும் அதேவேளையில், இந்த வழக்குகளில் கூட பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரும் குற்றவாளியாக்கப்பட்டிருக்கவில்லை.[567]

622. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கும் தகவல்களின் பிரகாரம், 2015 மே மாதமளவில் வடமாகாணத்தில் 19 வழக்குகளும், கிழக்கு மாகாணத்தில் 20 வழக்குகளும் விசாரிக்கப்படவுள்ளன. தகவல்களின் பிரகாரம், பாதிக்கப்பட்டவர்கள் 40 பேரில் 31பேர் 18வயதிற்கு குறைந்தவர்களாக இருந்து வருவதுடன், ஆகவயது குறைந்தவர்கள் நான்கு, ஆறு, எட்டு, பத்து ஆகிய வயதுகளைக் கொண்டவர்களாக இருந்துவருகின்றனர்; ஏனையவர்களில் பெரும்பாலானவர்கள் 18 வயதிற்கு குறைந்தவர்களாகவும்,13உம் 15 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவும் இருந்துவருகின்றனர். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்கள் ஆவார்கள். தமிழர் 12, முஸ்லிம் 2. 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்களில் ஒன்று கும்பல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு பெண்மணி குறித்த சம்பவம் ஆகும். சம்பந்தப்பட்ட குற்றத்தைஇழைத்த நபர்கள் இனங்காணப்பட்ட போதிலும், இந்த வழக்கு நீதிமன்றத்தினால் மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

623. குற்றச் செயல்களை இழைத்ததாக கூறப்படும் 58 நபர்களுக்கு எதிராக 39 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டிருப்பதுடன், 5வழக்குகள் ஒன்றுக்குமேற்பட்ட குற்றச்சாட்டுக்களை கொண்டுள்ளன. இலங்கை இராணுவத்தின் 32 உறுப்பினர்கள்; 13பொலிஸ் உத்தியோகத்தர்கள் (இவர்களில் 5 பேர் பின்னர் விடுதலை செய்யப்பட்டு குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்) பொலிஸ் விசேட அதிரப்படையை சேர்ந்த ஒருவர், இலங்கை கடற்படையை சேர்ந்த ஒருவர்; சிவில் பாதுகாப்புப் படை–11 பேர் (இவர்களில் 9 பேர் விடுக்கப்பட்டுள்ளனர்).

624. குற்றம் சாட்டப்பட்டிருந்த 58 பேரில் ஒருவர் மட்டுமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் ஏனையவர்கள் ஒன்றில் குற்றம் நிரூபிக்கப்படாது விடுவிக்கப்பட்டுள்ளனர் அல்லது பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். 39 வழக்குகளில் 8 வழக்குகள் மட்டுமே விசாரணைக்கட்டத்தில் இருந்துவருவதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை அனைத்தும் வட மாகாணத்தைச் சேர்ந்த வழக்குகளாகும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 20 வழக்குகளில் எந்த வழக்கும் விசாரணைக்கட்டத்தில் இருந்துவருவதாக பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 10 வழக்குகளில் 4 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் (அனைவரும் சிவில் பாதுகாப்புப் படை அல்லது பொலிஸை சேர்ந்தவர்கள்) விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய வழக்குகள் தீர்க்கப்படாதவை, நிலுவையில் இருந்துவருபவை,பிடிவிறாந்து அனுப்பப்பட்டிருப்பவை அல்லது சட்டமா அதிபர் திணைக்கள மட்டத்திலிருந்து வருபவை என அறிவிக்கப்பட்டுள்ளன.

625. இந்த 39 சம்பவங்களில் 26 சம்பவங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப்பிரிவின் போது இடம்

[567] CCPR/C/LKA/Q/5/Add.1, 2 September 2014

பெற்றிருந்தன: 2007 மூன்று சம்பவங்கள், 2008 – ஒன்பது சம்பவங்கள், 2009- இரண்டு சம்பவங்கள், 2010 - ஆறு சம்பவங்கள், 2011– ஆறு சம்பவங்கள். இது மீண்டும் ஒரு முறை வழக்கு நடைமுறைகளின் மந்த கதியை எடுத்துக்காட்டுகின்றது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக தனக்கு வழங்கப்பட்ட விவரங்களை தவிர, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு மேலதிக விவரங்களை கொண்டிருக்கவில்லை. அதேவேளையில், இந்தப் புள்ளிவிபரங்கள் பாதுகாப்புப் படை உறுப்பினர்களால் பிள்ளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான குற்றச்செயல்கள் தொடர்பாகவும் கூட அவர்கள் தண்டனை விலக்குரிமை அனுபவித்து வருகிறார்கள் என்ற முடிவுகளுக்கு மேலும் வலுவூட்டுகின்றன. மேலும், பாதுகாப்புப் படையினரால் - ஆண்களுக்கு எதிராகவும் பெண்களுக்கு எதிராகவும் - மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறை போக்குகளை கவனத்தில் எடுப்பதற்கென முனைப்பான விதத்தில், போதியளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதனையும் இவை எடுத்துக்காட்டுகின்றன.

626. மோதலுடன் சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறை தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்தின் மார்ச் 23,2015 அறிக்கையில் அவர் ''தேசிய ஆயுதப் படைகள் மற்றும் பாதுகாப்புப் படைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பாலியல் வன்முறை தொடர்பாக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை புதிதாக தேர்தெடுக்கப்பட்டிருக்கும் இலங்கை அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டுமெனவும், அத்தகைய சம்பவங்களில் இருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு இழப்பீடுகள் மற்றும் ஆபத்தான நிலையில் இருந்துவரும் பெண்களுக்கான பொருளாதார வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், போர் விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பல்துறைசார் சேவைகளை வழங்கவேண்டும் என்றும்'' கேட்டுக்கொண்டிருந்தார்.[568]

627. சாட்சிகள் பழிவாங்குதல் குறித்த அச்சமின்றி சாட்சியமளிக்கக்கூடிய முழுமையான, விரிவான விசாரணைகள் இன்றி, தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் விசாரணை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களிலும், சித்திரவதை நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்பட்ட பாலியல் வன்முறையின் அளவை மதிப்பிடுவது சாத்தியமற்றதாகும். மேலும், விசாரணை அமர்வுகளுக்கு வெளியில் இடம்பெற்ற வன்புணர்வு,ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறை என்பவற்றையும் மதிப்பிடுவது கடினமானதாகும். எவ்வாறிருப்பினும், பாலியல் வன்முறைதமக்கு நிகழ்ந்துள்ளது என்பதனை ஏற்றுக் கொள்வதுடன், சம்பந்தப்பட்டிருக்கும் சமூக புறமொதுக்கல் நிலை மற்றும் கடும் மனஅதிர்ச்சி என்பவற்றின் பின்னணியிலும், பெரும்பாலானவர்கள்தொடக்கத்தில் இரகசியமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தமை, அவர்கள் சட்டத்தரணிகளை அல்லது வெளிக் கண்காணிப்பாளர்களை அணுக முடியாதிருந்துவந்த நிலை, அதன் காரணமாக பெருமளவுக்கு ஊறுபடத்தக்க நிலையில் இருந்து வந்தமை என்பவற்றின் பின்னணியிலும்,இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் அல்லது வேறு ஏதேனும் அமைப்பினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் அளவிலும்பார்க்க பாலியல் வன்முறை பெருமளவுக்கு உயர்வாக இருந்திருக்கும் என அவதானிக்க முடியும். ஆயுதமோதல் சம்பந்தப்பட்ட விதத்தில் இடம்பெற்ற பாலியல்

568 S/2015/203

வன்முறையை நிகழ்த்திய எந்தவொரு குற்றவாளிக்கும் இதுவரையில் தண்டனை வழங்கப்பட்டிருக்கவில்லை.

628. பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை இல்லாதொழிக்கும் கமிட்டி இலங்கை தொடர்பான அதன் ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது பருவகால அறிக்கைகளின் முடிவு அவதானிப்புக் குறிப்புகளில் 2011 இல் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: ‘‘மோதலின் இறுதிக்கட்டங்களின் போதும், மோதலுக்கு பிற்பட்ட கட்டத்தின் போதும் பெண்கள் வன்முறை மற்றும் பாரபட்சம் என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை என்ற அரசதரப்பின் விளக்கத்தை கவனத்தில் எடுக்கும் அதேவேளையில், இரு தரப்புக்களையும் சேர்ந்த, குறிப்பாக தமிழ் சிறுபான்மை குழுவைப் பொறுத்தவரையில் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த பெண்கள், முன்னைய பெண் போராளிகள் ஆகியோரின் மனிதஉரிமைகள் அப்பட்டமான விதத்தில் மீறப்படுவது தொடர்பான அறிக்கைள் குறித்து கமிட்டி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. ஆயுதப்படையினர், பொலிஸார் மற்றும் தீவிரவாதக் குழுவினர் ஆகிய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறித்த அறிக்கைகள் தொடர்பாகவும் குறிப்பாக கமிட்டி கவலை கொண்டுள்ளது’’. அது ஏனையவற்றுக்கு மத்தியில், பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ‘‘உடனடியாக விசாரணை செய்து வழக்குத் தொடுத்து, தண்டனை வழங்கவேண்டும்’’ என அதிகாரிகளிடம் கேட்டுக கொண்டது.[569]

629. சித்திரவதைக்கு எதிரான சமவாய கமிட்டி (CAT) 2011 டிசம்பர் 8 ஆந் திகதி சமர்ப்பித்த அதன் இறுதி அவதானிப்புக்களில் ‘‘போர்க்காலத்தில் இடம்பெற்ற வன்புணர்வுச் சம்பவங்கள் மற்றும் மோதலின் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்ற ஏனைய பாலியல்வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான தகவல்களை கமிட்டிக்கு வழங்குமாறும், அவற்றுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பன தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய விதத்தில் அத்தகைய வழக்குகளின் பெறுபேறுகள்[570]குறித்த தகவல்களை வழங்குமாறும்’’ அரசாங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தது.

630. பாலியல் வன்முறை தொடர்பான குற்றச்சாட்டு குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்படவேண்டிய தேவை இருந்து வருகின்றது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது. இக்குழுவுக்கு அல்லதுஏனைய அமைப்புக்களுக்கு அறிக்கையிடப்பட்ட அளவிலும் பார்க்க இத்தகைய சம்பவங்கள் பெருமளவிற்கு பரவலாக இடம்பெற்றிருக்கக்கூடிய வாய்ப்பு இருந்துவருகின்றது என அது நம்புகின்றது. மேலும், படைத்தளபதிகளை உள்ளிட்ட விதத்தில் இச்சம்பவங்களுக்கு பொறுப்பான நபர்கள் -அவர்கள் அவற்றில் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி துஷ்பிரயோகத்தை தெரிந்து அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காதிருந்தாலும் சரி அல்லது அவற்றை தெரிந்திருக்கவேண்டிய போதிலும்,தெரியாதிருந்தாலும் சரி-பொறுப்புக்கூறல்களுக்கு உள்ளாக்கப்படவேண்டும் என அது நம்புகின்றது.

569 CEDAW/C/LKA/CO/7, paras. 40 and 41

570 CAT/C/LKA/CO/3-4, 8 December 2011

631. மேலும் ஏதேனும் ஒருவிசாரணையை ஸ்தாபிப்பதில்-உண்மையை கண்டறியும் செயன்முறையின் அல்லது ஏனைய வழிமுறைகளின் ஒரு பாகமாக நீதி விசாரணையாக இருந்துவந்தாலும்-அத்தகைய வழக்குகளில் சாட்சியம் அளிக்கக்கூடிய-பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய–அனைவருக்கும் விசேட பாதுகாப்பு வழிமுறைகளும்,ஆதரவு வழிமுறைகளும் ஸ்தாபிக்கப்படுதல்வேண்டும். மேலும், அந்த வழிமுறைகள் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் மனஅதிர்ச்சி நிலைகளை எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் தொடர்பாகவும் கவனத்தில் எடுத்தல்வேண்டும். அதேபோல, இலங்கையிலும் அத்தகைய துஷ்பிரயோகங்களை அனுபவித்த நிலையில் இலங்கைக்குவெளியில் கணிசமான அளவில் அகதிகளாக மக்கள் வாழ்ந்து வரும் நாடுகளிலும் உள சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்கள் அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய தேவையும் இருந்துவருகின்றது. பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விரிவான சான்றுகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைக்காவிட்டாலும் கூட, அது வெளிப்படையாக நிகழ்ந்துவரும் பின்னணியில், உருவாக்கப்படும் எந்தவொரு விசாரணைப் பொறிமுறையும் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான வலுவான வழிமுறைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

# XI. வயது வந்தவர்கள் கடத்தப்பட்டமை மற்றும் பலவந்தமான ஆட்சேர்ப்பு

## அறிமுகம்

632. சண்டையில் ஈடுபடுதல் மற்றும் எல்ரீரீஈபடையணிகளுக்கான பாதுகாப்பு கட்டமைப்புக்களை நிர்மாணித்தல் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளுக்கும்,ஏனைய நடவடிக்கைகளுக்கும் என பலவந்தமான விதத்தில் ஆட்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நோக்கத்திற்கென பிரதானமாக எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் தொடர்பாக இப்பிரிவு கவனம் செலுத்துகிறது. ஒருசில சந்தர்ப்பங்களில் எல்ரீரீஈ இயக்கம் மேற்கொண்ட கடத்தல் சம்பவங்களை அடுத்து சட்டவிரோதமான கொலைகளும் இடம்பெற்றுள்ளன என அறிவிக்கப்பட்டிருந்தது. அவை அத்தியாயம் VIஇல் உள்ளடக்கப்பட்டுள்ளன. எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர்களின் ஆட்சேர்ப்பு அத்தியாயம் XII இல் புறம்பாக கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

633. விசாரணைக்கு உட்படுத்தப்படும் காலப்பிரிவு முழுவதிலும் எல்ரீரீஈ இயக்கத்தினால் வயது வந்தவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டபோதிலும், இந்த அத்தியாயம் மோதலின் இறுதிக் கட்டங்கள் தொடர்பாகவே கவனம் செலுத்துகின்றது. ஆட்சேர்ப்பில் இருந்து தவிர்ந்து கொள்ள விரும்பியவர்கள் அல்லது எல்ரீரீஈ பிடியிலிருந்து தப்பிச் செல்ல முயன்றவர்கள் துன்புறுத்தப்பட்ட சம்பவங்களையும் இந்த அத்தியாயம் கவனத்தில் எடுக்கின்றது. இந்த அத்தியாயத்தில் உள்ளதகவல்கள் முன்னைய எல்ரீரீஈ இயக்கப் போராளிகள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஏனையவர்கள், சாட்சிகள் என்பவற்றை அடிப்படையாக கொண்டுள்ளன. மேலும்,

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவையும் உள்ளடக்கிய விதத்தில் பலவந்தமான ஆட்சேர்ப்பு தொடர்பாக ஆவணப்படுத்தியுள்ள ஏனைய மூலாதாரங்களிலிருந்து கிடைத்த தகவல்களையும் அது அடிப்படையாக கொண்டுள்ளது. குறிப்பாக,2008,2009 ஆகிய ஆண்டுகளில் எல்ரீரீஈ இயக்கத்தினால் தமது குடும்ப உறுப்பினர்கள் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டிருந்த பல தனிநபர்களிடமிருந்தும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு மனுக்கள் கிடைத்திருந்தன. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையில் இருந்து வருவதனால், அவர்கள் வழங்கியிருக்கும் விபரங்கள் இதுவரையில் சரிபார்க்கப்படவில்லை. எனினும்,எடுத்து விளக்கிய சம்பவங்கள் ஏனைய மூலாதாரங்கள் ஆவணப்படுத்தியிருக்கும் சம்பவங்களுடன் பெரும்பாலான அளவுக்கு பொருந்திச் செல்வனவாக இருந்து வருகின்றன.

634. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்கள், குடும்பங்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் அச்சுறுத்தலுக்கும், மிரட்டல்களுக்கும் ஆளாக்கப்பட்டிருப்பதனாலும், கடத்தல் சம்பவங்கள் மற்றும் பலவந்தமான ஆட்சேர்ப்பு என்பன தொடர்பாக முறைப்பாடு செய்யவேண்டாம் என அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமையாலும் இந்த நிகழ்வின் முழு அளவையும் துல்லியமாக பிரதிநிதித்துவம் செய்துவருபவையாக இருந்துவரமுடியாது. மேலும், ஒருசில சந்தர்ப்பங்களில் குடும்பங்கள் அரசாங்கத்திடம் அல்லது வேறு நிறுவனங்களில் முறைப்பாடு செய்வதிலும் பார்க்க, தமது உறவினர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக அல்லது அவர்களை விடுவித்துக் கொள்வதற்காக நேரடியாக எல்ரீரீஈ அலுவலகங்களை அணுகவே விரும்பினார்கள்.

635. கருணா குழு 2004 இல் எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து பிரிந்ததனை அடுத்து, பரவலான கடத்தல் சம்பவங்களிலும் குறிப்பாக சிறுவர்களை பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்வதிலும் அதுஈடுப்பட்டிருந்தது. இந்த ஆட்சேர்ப்பு மாதிரிகள் சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை மற்றும் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான அத்தியாயம் XIIஇல் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

### எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் மற்றும் பலவந்தமான ஆட்சேர்ப்பு என்பவற்றின் போக்குகள்

636. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப வருடங்களின் போது பெருந்தொகையானோர் தாமாகவே முன்வந்து அந்த இயக்கத்தில் இணைந்து கொண்டனர். ஒருசிலர் அரசியல் காரணங்களுக்காகவும், ஏனையவர்கள் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக, குறிப்பாக அரசாங்கம் காட்டிவந்த பாரபட்சம் மற்றும் அரசாங்கத்தின் அத்துமீறல்கள் என்பவற்றினால் ஆத்திரமடைந்து, அதனால் தூண்டப்பட்டவர்களாக இந்த இயக்கத்தில் சேர்ந்திருந்தார்கள் அல்லது எல்ரீரீஈ இயக்கத்தின் பிரச்சாரம் காரணமாக அதில் இணைந்து கொண்டனர்.[571]

637. 2006 ஆம் ஆண்டில் யுத்த நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்ததனை அடுத்து, எல்ரீரீஈ இயக்கத்தில் சேர்ந்துகொள்வதற்கு அநேகமாக அதிகம் பேர் விருப்பம் காட்டவில்லை. அந்த நிலையில், இயக்கம் பெருமளவுக்கு பலவந்தமான விதத்திலேயே ஆட்சேர்ப்பினை மேற்கொண்டது. பொதுமக்களின் கடத்தல்,

571 UTHR, Trauma in the Vanni: Human Grist to the Mills of Dual Hypocrisy, 8 July 2008

துன்புறுத்தல் மற்றும் பயமுறுத்தல் என்பனவற்றை போர் நிறுத்த உடன்படிக்கை தெளிவான விதத்தில் தடைசெய்திருந்த போதிலும், 2002 ஆம் ஆண்டிற்கும் 2007 ஆம் ஆண்டிற்கும் இடையில் வயது வந்தவர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக 1248 முறைப்பாடுகள் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கு கிடைத்திருந்தன. இவற்றில் பெரும்பாலானவை ஆட்சேர்ப்பு சம்பந்தப்பட்டவையாகும். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முறைப்பாட்டாளர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இக்குற்றச் செயல்களை இழைத்தவர்கள் என்ற முறையில் எல்ரீரீஈ இயக்கத்திற்கும், கருணாகுழுவுக்கும் இடையில் ஒரு தெளிவான வித்தியாசத்தை எடுத்துக்காட்டியிருக்கவில்லை என்ற விடயத்தை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெளிவுபடுத்தியிருந்தது. எவ்வாறிருப்பினும்,2004 ஆம் ஆண்டின் பின்னர் அச்சந்தர்ப்பத்தில் அரசாங்கப்படைகளுடன் கூட்டாக இணைந்து செயற்பட்டுவந்த கருணா குழுவுடன் சம்பந்தப்பட்ட ஒரு சில சம்பவங்கள் இருந்திருக்கமுடியும்.

638. கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும்,[572] காணாமல் போன நபர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவும் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன. ஜனாதிபதி ஆணைக்குழுவின் 2015 ஏப்ரல் இடைக்கால அறிக்கையின் பிரகாரம், எழுத்துமூலமான முறைபாடுகளின் வடிவில் கிடைத்த 13,378க் குற்றச்சாட்டுகளில் 17சதவீதம் எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளாகவே இருந்து வந்துள்ளன.

639. எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் மற்றும் பலவந்தமான ஆட்சேர்ப்பு என்பன அதன் கட்டுப்பாட்டில் இருந்து வந்தஅனைத்துப் பிரதேசங்களிலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கவனத்திலெடுக்கும் காலப்பிரிவு முழுவதிலும் இடம்பெற்றுவந்துள்ளன. அறிவிக்கப்பட்ட கடத்தல் சம்பவங்களில் பெரும்பாலானவை ‘‘எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவந்த பிரதேசங்களான கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்றிருந்தன. ஆனால், அவை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் இடம்பெற்றிருந்தன. 2004 ஆம் ஆண்டில் கருணாவின் பிளவை அடுத்து பலவந்தமான ஆட்சேர்ப்பு குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தீவிரமாக இடம்பெற்றது. எல்ரீரீஈ இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருந்த பலர் கருணாகுழுவுடம் இணைந்து, அதிலிருந்து வெளியேறினர். அதன் பின்னர் எல்ரீரீஈ இயக்கம் அதன் குறைவடைந்திருக்கும் ஆட்பலத்தை வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இத்தகைய முன்னைய போராளிகளை ஆட்சேர்ப்பு செய்வதனை இலக்காகக்கொண்டு செயற்பட்டுவந்தது.[573]

640. எல்ரீரீஈ இயக்கம் பலவந்தமாகவும், தன்னிச்சையான விதத்திலும் இளம் ஆண்களையும், பெண்களையும் தனது இயக்கத்தில் இணைத்துக்கொண்டது. அவர்கள் ஒரு குடும்பத்திற்கு ஒரு நபர் என்ற கொள்கையை அறிமுகம் செய்துவைத்ததுடன், அதற்கு ஊடாக அந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து

---

[572] கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பணங்களின் பிரகாரம், ஆணைக்குழு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் மூதூர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்த பொழுது எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட கணிசமான அளவிலான கடத்தல் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

[573] Human Rights Watch, « Living in Fear : Child Soldiers and the Tamil Tigers in Sri Lanka », 2004, p. 37

வந்த பிரதேசங்களில் வசித்து வந்த ஒவ்வொரு குடும்பமும் ஒரு உறுப்பினரை அந்த இயக்கத்திற்கு வழங்கவேண்டியிருந்தது.[574]வாகனங்கள் மூலம் விடுக்கப்படும் அறிவித்தல்கள் மூலமும், வீட்டுக்கு வீடு மேற்கொள்ளப்பட்ட விஜயங்கள் மூலமும், எல்ரீரீஈ இயக்கத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான கட்டளைகள் மற்றும் அதில் போய் சேர்ந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் என்பவற்றைக் கொண்டிருந்த கடிதங்கள் மூலமும் இந்த “கோட்டாமுறை” குறித்து குடும்பங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

641. மோதலின் இறுதிக்கட்டத்திற்கு முன்னரான வருடங்களின் போது, ஆட்கள் தமது வீடுகளிலிருந்து கோயில்களிலிருந்தும், தேவாலயங்களிலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும், பணி இடங்களிலிருந்தும், எல்ரீரீஈ இயக்கத்தின் சோதனைச் சாவடிகளிலிருந்தும் கடத்தப்பட்டார்கள். இளவயது பிரிவிர் எல்ரீரீஈசோதனைச் சாவடிகளில் நிறுத்தப்பட்ட பொழுது தமது அடையாள அட்டைகளை காட்டுமாறு கேட்டக்கப்பட்டதுடன்,அவர்களுடைய குடும்பத்தில் எவரேனும் எல்ரீரீஈ இயக்கத்தில் இணைந்துள்ளார்களா எனவும் அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது. தனது குடும்பம் எவ்விதம் சேவையை வழங்கியுள்ளது என்ற விடயத்தை நிரூபிக்க முடியாதிருந்தால், கடத்தப்படுவதற்கும், பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான அபாயத்தை அவர்கள் எதிர்கொண்டார்கள்.[575]

642. அவ்விதம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் அந்த நபர்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் முகாம்களில் ஒன்றில் பயிற்றுவிக்கப்பட்டனர். பெண்களுக்கென தனியாக முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.[576] எல்ரீரீஈ படையணிகளுக்கு பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட நபர்கள் சண்டையிடுதலிலும், தாதிமாராக /காயப்பட்ட உறுப்பினர்களுக்கான துணை மருத்துவ ஆளணியினராக, பொது ஏற்பாடுகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்பவர்களாக பல்வேறு பணிகளை உள்ளடக்கிய விதத்தில் பல்வேறுபட்ட நிலைகளில் வேலை செய்யவேண்டியிருந்தது. நிர்வாகப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டவர்கள் அல்லது எல்ரீரீஈஇயக்கத்திற்கு ஆதரவளிக்கும் ஏனைய செயற்பாடுகளில் ஏற்கனவே ஈடுப்பட்டிருந்தவர்கள் முன்னரங்க நிலைகளுக்கு அனுப்பப்படமாட்டார்கள்.[577] குறிப்பாக ஆயுத மோதலின் இறுதிக்கட்டத்தின் போது, இராணுவப் பயிற்சி மிகக் குறுகிய காலத்தைக் கொண்டதாக இருந்து வந்தது என அறிவிக்கப்பட்டதுடன், ஒருசில சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் போர்க்களத்திற்கு அனுப்பபடுவதற்கு முன்னர் ஒருசில நாட்கள் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டனர்.

643. தமது உறவினர்களை நீண்ட காலப்பிரிவின் போது ஒளித்து வைத்திருப்பதன் மூலம் ஆட்சேர்ப்பில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கு குடும்பங்கள் முயற்சித்தன.[578] திருமணமான நபர்களுக்கு தொடக்கத்தில் கட்டாய ஆட்சேர்ப்பில் இருந்தும்

574 Norwegian Refugee Council/Internal Displacement Monitoring Centre (NRC/IDMC), Sri Lanka: Returns in the east but new displacements in the north, 27 August 2008, available at: http://www.refworld.org/docid/48b5428726.html.

575 WS on file

576 WS on file

577 WS on file

578 WS on file

-

விலக்களிக்கப்பட்டிருந்ததனால், பலர் விரும்பித் திருமணம் செய்து கொண்டனர்.[579] அதன் விளைவாக, 2006 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் இடம்பெறும் அனைத்து திருமணங்களும் வெற்றும், வறிதுமான திருமணங்களாக கருதப்படும் என எல்ரீரீஈ இயக்கம் அறிவித்தது.[580] கடத்தல்களை தடுப்பதற்கு முயற்சித்த உறவினர்கள் துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறை என்பவற்றை எதிர்கொண்டார்கள் அல்லது எல்ரீரீஈ இயக்கத்தின் கொள்கைகளுக்கு இணங்கமறுத்தால் அவர்களுக்கும் கடத்தல் மற்றும் வன்முறை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. தேடப்படும் நபர் இல்லாத சந்தர்ப்பத்தில், குடும்பத்தின் மற்றொரு உறுப்பினர் பலவந்தமாக எடுத்துச் செல்லப்படுவார்.[581]

644. தப்பிச் செல்வதில் வெற்றியீட்டிய பெரும்பாலானவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் மீண்டும் கடத்தப்பட்டதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்கள் சித்திரவதைக்கும் ஆளாக்கப்பட்டனர். உதாரணமாக அத்தகைய நபர் ஒருவர் 2005 இல் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், அவர் தப்பிச் செல்வதற்கு முயன்றதையடுத்து 2007 – 2008 காலப்பிரிவின் போது பல மாதங்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. அவர் தடுத்துவைக்கப்பட்ட காலப்பிரிவின் போது தாக்குதலுக்கு உள்ளானதாகவும் கூறப்படுகின்றது. அவர் விடுவிக்கப்பட்ட பின்னர் ஒரு போராளியாக மீண்டும் இயக்கத்தில் சேர்ந்துகொள்வதற்குநிர்ப்பந்திக்கப்பட்டார்.[582] தன்னை பெண் போராளிகள் முகாம் ஒன்றுக்கு பலவந்தமாக எடுத்துச் சென்றதாகவும், அங்கு விசாரணை செய்ததாகவும், அதன் பின்னர் இராணுவப் பயிற்சிக்கு அனுப்பி வைத்ததாகவும் பெண் ஒருவர் தெரிவித்தார். ஏனையவர்களுடன் சேர்ந்து தப்பிச் செல்வதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில் தான் மீண்டும் சோதனைச்சாவடி ஒன்றில் வைத்து பிடிக்கப்பட்டதாக அவர் கூறினார்.[583] மற்றொரு சம்பவத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் சிறைச்சாலை ஒன்று தொடர்பான விபரங்களை பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் குறிப்பிட்டார். 2009 பெப்ரவரி மாதத்தில் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் பயிற்சி முகாமிற்கு அனுப்பப்படமுன்னர் அந்தச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்ததாக ஒருவர் சொன்னார். அங்கு வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருசிலர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் தப்பிச் செல்வதற்கு முயற்சித்ததாக கூறப்படுகின்றது. மேலும், அச்சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தவர்கள் சிறுகுழுக்களாக அவர்களின் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டதாகவும், அவர்கள் ஏதேனும் முறைப்பாடுகள் செய்தால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் ஒருசிலரின் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.[584]

645. 2008 செப்டம்பர் மாதத்தின் பின்னர் எல்ரீரீஈ இயக்கம் இராணுவத்தின் அழுத்தத்தை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில்,‘‘ஒரு குடும்பத்திற்கு ஒருவர்’’ என்ற கொள்கையை அது மாற்றியதுடன்,ஒரு குடும்பத்தின் அளவைப் பொறுத்து ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள்

579 Human Rights Watch, Trapped and Mistreated . LTTE Abuses against civilians in the Vanni, 2008, p. 7

580 ICG, Sri Lanka’s Human Rights Crisis, p. 12, 2006

581 WS on file

582 WS on file

583 WS on file

584 WS on file

தேவை என்ற கொள்கையை எடுத்துவந்தது.[585] மன்னாரில் எல்ரீரீஈ இயக்கப்போராளிகள் வீடு வீடாகச்சென்று பலவந்தமாக இளம் பெண்களையும், ஆண்களையும்,பிள்ளைகளையும் ஆட்சேர்ப்புச் செய்தனர்.[586]

646. அவ்விதம் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களிடம் அவர்களை படையணியில் வைத்திருக்கும் காலப்பிரிவின் அளவு குறித்தோ அல்லது அவர்கள் எங்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள் என்பது குறித்தோ தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. அவ்விதம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் அவர்கள் அறிவிக்கவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குடும்பங்கள் தமது உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களை,எல்ரீரீஈ இயக்கம்அவர்களை பிடித்து வைத்திருப்பதை பார்த்ததாக சொன்ன நபர்களிடமிருந்தே கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். கடத்தப்பட்டு, எல்ரீரீஈ இயக்கத்தின் பயிற்சி முகாம்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டவர்கள், சில சந்தர்ப்பங்களில் ஒரு சில மணித்தியாலயங்களுக்கு அல்லது ஓரிரு நாட்களுக்கு வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர். சில சந்தர்ப்பங்களில் எல்ரீரீஈ முகாம்களில் இருந்து வரும் தமது உறவினர்களை போய் பார்ப்பதற்கு குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், எல்லா நேரங்களிலும் இது நிகழவில்லை.

647. போரில் கொல்லப்பட்டவர்கள் எனக் கூறப்பட்டவர்களின் சடலங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எல்ரீரீஈ பொறுப்பாளர்களினால் குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டன. உதாரணமாக, ஒரு சம்பவத்தில் ஓர் இளம் ஆண் வீதியில் வைத்து கடத்திச் செல்லப்படுவதை ஆட்கள் பார்த்திருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் அவரின் சடலம் குடும்பத்திடம் கையளிக்கப்பட்டது. அவருடைய சகோதரனும் சகோதரியும்கூட 2008 ஆம் ஆண்டில் அவர்களுடைய குடும்ப வீட்டில் இருந்து பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்கள் எனக் கூறப்படுகிறது. அவர்களுக்கு என்ன நடந்தது என இதுவரையில் தெரியவில்லை.[587]

648. குடும்பங்கள் ஒருசில சந்தர்ப்பங்களில் தமது உறவினர்கள் கடத்தப்பட்ட விடயத்தை எல்ரீரீஈ அலுவலகங்களுக்கும்,அதேபோல தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் மற்றும்/அல்லது பொலிசுக்கும் தெரிவித்தனர். எனினும், அவ்விதம் கடத்தப்பட்டவர்களுக்கு நேர்ந்த கதி, அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது போன்ற தெளிவுபடுத்தல்கள் அவர்களுக்கு அரிதாகவே கிடைத்திருக்கின்றன.

649. சண்டையின் இறுதி வாரங்களின் போது, எல்ரீரீஈ இயக்கம் அதன் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை கணிசமான அளவில் அதிகரித்திருந்தது. யுத்த சூன்ய வலய பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.[588] மக்கள் கூடாரங்களில் இருந்து கடத்திச் செல்லப்பட்டது தொடர்பாக அறிக்கைகள் கிடைத்துள்ளன.[589]தாம் கட்டாய ஆட்சேர்ப்பு குறித்து

585 HRW, Trapped and Mistreated. LTTE Abuses against Civilians in the Vanni, 2008, p. 7.

586 WS on file

587 WS on file

588 WS on file

589 WS on file

அச்சம் கொண்டிருந்ததாகவும், அதேவேளையில், இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதலினால் கொல்லப்படமுடியும் என்ற விதத்தில் அச்சம் கொண்டிருந்ததாகவும் பல சாட்சிகள் எடுத்துக் கூறியிருந்தார்கள்.

650. 2009 மார்ச் மாத்தில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் தேசிய ஊழியர்கள் இருவரும், அவர்களில் தங்கியிருக்கும் குடும்ப உறுப்பினர்களில் மூவரும் எல்ரீரீஈ இயக்கத்தினால் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். மனித நேயப் பணியாளர்களையும், அவர்களுடைய உறவினர்களையும் விடுவிக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு மீண்டும் மீண்டும் வேண்டுகோள்களை முன்வைத்திருந்த போதிலும், எல்ரீரீஈ இயக்கம் அவற்றுக்கு செவிசாய்க்கவில்லை எனினும், இறுதியில் அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால்,அவ்விதம் அவர்கள் விடுவிக்கப்பட்ட சரியான திகதி மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பன தொடர்பான தகவல்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கொண்டிருக்கவில்லை.

651. வடமாகாணத்தில் வளையர்மடம் புனித தேவாலயத்தில் வைத்து எல்ரீரீஈஇயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் குழு ஒன்றினால் 2009 மார்ச் மாதத்தின் பிற்பகுதியில் பெருந்தொகையான இளைஞர் யுவதிகளும், சிறுவர்களும் கடத்தப்பட்ட சம்பவத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு ஆவணப்படுத்தியுள்ளது.[590] அச்சந்தர்ப்பத்தில் இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கென பெருந்தொகையான பொதுமக்களும், அரசு சாராஅமைப்புக்களின் பணியாளர்களும், முன்னாள் எல்ரீரீஈ இயக்கப் போராளிகளும் -அவர்களில் ஒரு சிலர் கடந்த காலத்தில் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர் - தேவாலயத்தில் ஒன்று கூடியிருந்தார்கள்.[591] அச்சந்தர்ப்பத்தில் பல மதகுருமார்களும் அங்கிருந்தார்கள்.[592] ஒரு சில அறிக்கைகளின் பிரகாரம், எல்ரீரீஈ இயக்கத்தின் தளபதிகளான இளம்பரிதி, எழிலன் ஆகியோர், அந்த ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு மதகுருமாரை நிர்ப்பந்தித்தனர். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்வதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.[593]

652. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் சேகரிக்கப்பட்டிருந்த சாட்சிகளின் சான்றுகளின் அடிப்படையில் - இவை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சமர்ப்பணங்கள் மற்றும் சான்றுகள் என்பவற்றினாலும்,[594] காணாமல் போன நபர்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவினாலும்[595] முறையே உறுதிப்படுத்தப்பட்டிருந்தன - எழிலன் மற்றும்

---

590 WS on file

591 WS on file

592 WS on file

593 மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, அவர்கள் பேசட்டும், பாகம் III 'மாத்தளன்' கடலில்: தப்பிச் செல்வது மரணத்தை எடுத்து வரும்; தரித்து நிற்பது அதிலும் பார்க்க மோசமான நிலைமைக்கு இட்டுச் செல்கின்றது. விசேட அறிக்கை இல. 34 டிசம்பர் 13, 2009, பந்தி 3.8

594 LLRC Report, para. 5.84

595 Presidential Commission to Investigate Complaints Regarding Missing Persons, Interim report (April 2015).

இளம்பரிதி ஆகியோரின் தலைமையில் பெருந்தொகையான ஆயுதம் தாங்கிய எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் அத்தேவாலயத்திற்கு வந்தனர். அவர்களில் ஒரு சிலர் நடந்தும்,ஒரு சிலர் வாகனங்களிலும் வந்தார்கள். பின்னர் தேவாலய வளவை அவர்கள் சுற்றிவளைத்தார்கள். மக்கள் தப்பிச் செல்வதை தடுப்பதற்கும், அதேபோல ஒரு சில அறிக்கைகளின் பிரகாரம், தேவாலயத்திற்கு வெளியில் இருந்தவர்கள் (அவர்களில் ஒருசிலர் தேவாலயத்திற்குள்ளே இருந்த பிள்ளைகளின் பெற்றோர்களாக இருந்தனர்) எல்ரீரீஈ உறுப்பினர்களை தாக்கி, கூக்குரல் எழுப்பி,எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தினாலும் ஒருசில துப்பாக்கி வேட்டுக்கள் ஆகாயத்தை நோக்கி தீர்க்கப்பட்டன.[596]சில எல்ரீரீஈ உறுப்பினர்கள் கதவை உடைத்துக்கொண்டு பலவந்தமாக தேவாலயத்திற்குள் நுழைவதனை இரு சாட்சிகள் பார்த்திருந்தனர்.[597] தேவாலயத்திற்குள்ளே இருந்த ஒருசில முன்னாள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் உள்ளே வந்த எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களை எதிர்ப்பதற்கு முயற்சித்தார்கள்.[598]

653. நூற்றுக்கணக்கான பிள்ளைகளும் அதேபோலஇளைஞர்களும் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டதுடன்,[599]அதனை தடுப்பதற்கு முயற்சித்த குடும்ப உறுப்பினர்கள் எல்ரீரீஈ ஆட்களினால் உடல் ரீதியான தாக்குதல்களுக்கு உள்ளானார்கள்.[600] தான் தேவாலயத்திற்கு அருகில் வந்த சற்றுநேரத்தின் பின்னர், தேவாலய மைதானத்தில் இருந்து வாகனங்கள் வரும் சத்தம் தனக்குக் கேட்டதாகவும், பல வாகனங்கள் தேவாலயத்தில் இருந்து வெளியேறிச் செல்வதனை பார்த்ததாகவும் சாட்சி ஒருவர் கூறினார்.[601]அந்த வாகனங்களில் இளைஞர்களும், பெண்களும் நிறைந்திருந்தார்கள். தேவாலயத்தில் இருந்து ஆட்களை ஏற்றிச்செல்லும் பொருட்டு அந்த வாகனங்கள் பல தடவைகள் பயணங்களை மேற்கொண்டன. ஏனெனில், ஏராளமானவர்கள் அங்கிருந்தார்கள்.[602] அன்றைய தினம் பின்னர் மாலையில் அவர்கள் தேவாலயத்திற்கு சென்ற பொழுது, கட்டாய ஆட்சேர்ப்பு நோக்கத்திற்கென எல்ரீரீஈ இயக்கத்தினால் நூற்றுக்கணக்கான இளம் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் எடுத்துச் செல்லப்பட்டார்கள் என தமக்கு கூறப்பட்டதாக இரு சாட்சிகள் குறிப்பிட்டார்கள்.[603]

654. எல்ரீரீஈ இயக்கம் ஆட்களை கடத்திச் சென்று, அவர்களை பங்கர்களை தோண்டுவது போன்ற கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தி வந்துள்ளது என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது.[604] கட்டாய ஆட்சேர்ப்பினை தவிர்ப்பதற்கு முயன்ற அல்லது ஆயுதமோதலின் இறுதிக்கட்டங்களின் போது எல்ரீரீஈ கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு முயன்ற பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைகளில்

596 WS on file

597 WS on file

598 WS on file

599 WS on file

600 WS on file

601 WS on file

602 WS on file

603 WS on file

604 HRW, Trapped and Mistreated. LTTE Abuses against Civilians on the Vanni, 2008, p. 11

பங்கேற்பதற்கு பலவந்தப்படுத்தப்படார்கள் அல்லது எல்ரீரீஈ முன்னரங்க நிலைகளில் குழிகளை வெட்டும் வேலை அவர்களிடம் வழங்கப்பட்டிருந்தது என்பதனைக் காட்டும் தகவல்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு சாட்சிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளது. அந்த வகையில் அவர்கள் அயல் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் தாக்குதல்களை உள்ளடக்கிய விதத்தில் போர் நடவடிக்கைகளின் தாக்கங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்து வந்தார்கள்.

655. இது தவிர, ஆட்சேர்ப்புக்கென கடத்தப்பட்ட பெருந்தொகையானவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயம் குடும்பங்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில், அக்குடும்பங்களினால் எல்லா சந்தர்ப்பங்களிலும் தமது உறவினர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியாதிருந்தது. அதுமட்டுமன்றி, ஆயுதமோதலில் உயிர் தப்பியவர்கள் 2009 மே மாதத்தில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு சென்ற சந்தர்ப்பத்தில், எல்ரீரீஈ இயக்கத்தினால் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தவர்கள்- ஒருசில நாட்களுக்கு அவர்கள் அவ்விதம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தாலும் கூட - எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகளாக கருதப்பட்டதுடன், அந்த நிலையில் சட்டவிரோதமான தன்னிச்சையாக தடுத்துவைத்தல், சித்திரவதை மற்றும் இந்த அறிக்கையில் ஏற்கனவே எடுத்து விளக்கப்பட்டிருக்கும் ஏனைய அத்துமீறல்கள் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டிய ஆபத்துநிலையில் இருந்து வந்தார்கள்.

# XII. ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்கள் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டமை

## அறிமுகம்

656. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கிய காலப் பிரிவின் போது, இலங்கையில் சிறுவர்கள் போர் நடவடிக்கைகளுக்கென ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விதம் மற்றும் பயன்படுத்தப்பட்ட விதம் என்பவற்றை இந்த அத்தியாயசம் ஆவணப்படுத்துகின்றது. மேலும், அவர்களின் விடுதலைக்கான செயற்திட்டங்களையும் அது முன்வைக்கின்றது.

657. இலங்கையினால் 1990 ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சிறுவர் உரிமைகள் சமவாயம் (CRC) அரசதரப்புக்கள் ''ஆயுத மோதல் ஒன்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றை உத்தரவாதம் செய்வதற்கென சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்''எனக் கேட்டுக்கொள்கின்றது.[605]

658. சிறுவர்களை ஆயுத மோதலில் சம்பந்தப்படுத்துவது தொடர்பான சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் மேலதிக ஏற்பாட்டிற்கும் இலங்கை ஒரு தரப்பாக இருந்து வருகின்றது.[606] இந்த ஏற்பாடு, அரசு சாராத குழுக்கள் 18 வயதிற்கு

[605] சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம், உறுப்புரை 38(4)

[606] இலங்கையினால் செப்டம்பர் 8, 2000 அத்தாட்சிப்படுத்தப்பட்டது. 2002 பெப்ரவரி மாதத்தில் அது அமுலுக்கு வந்தது.

குறைந்த பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்து, பயன்படுத்துவதனை தடை செய்கின்றது.[607] அரச ஆயுதப் படைகள் வயது தொடர்பான நிரூபணம்,பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாவலர்களின் சம்மதம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் உரிய பாதுகாப்புகள் இருந்து வரும் நிலையில் 18 வயதிற்கு குறைந்தவர்களின் சுயவிருப்பிலான ஆட்சேர்ப்புக்கு இடமளிக்க முடியும். எவ்வாறிருப்பிலும், போர் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான குறைந்தபட்ச வயது 18 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

659. 15 வயதிற்கு குறைந்த பிள்ளைகளை ஆயுதப் படைகளுக்கு அல்லது குழுக்களுக்கு கட்டாய ஆட்சேர்ப்பு செய்வது, சேர்த்துக் கொள்வது அல்லது போர் நடவடிக்கைகளில் முனைப்பான விதத்தில் பங்கேற்பதற்கென அவர்களை பயன்படுத்திக் கொள்வது[608] வழக்காறு சார்ந்த சர்வதேச குற்றவியல் சட்டத்தில் ஒரு போர் குற்றமாக இருந்து வருவதுடன், சர்வதேச குற்றவியல் விசாரணை மன்றங்களில் நியாயாதிக்கத்தினாலும் அது நிரூபிக்கப்பட்டுள்ளது.[609]

660. இலங்கையினால் 2001ஆம் ஆண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் மிக மோசமான சிறுவர் உழைப்பு வடிவங்கள் தொடர்பான சமவாயம் அதன் வீச்சினை பின்பவருமாறு வரையறை செய்கின்றது. ‘‘அடிமை முறை தொடர்பான அனைத்து வடிவங்கள் மற்றும் அடிமைமுறையை ஒத்த நடைமுறைகள் [..] ஆயுதமோதலில் பயன்படுத்திக் கொள்வதற்கென சிறுவர்களைப்பலவந்தமாக அல்லது கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்வதனை உள்ளடக்கிய விதத்தில் பலவந்தமான அல்லது கட்டாயமாக உழைப்பை பெற்றுக்கொள்ளல்.”[610]

661. அரசு சாராத ஆயுதக்குழுக்களினால் சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் மற்றும் போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுதல் என்பவற்றை தடுத்து நிறுத்தும் பொருட்டு வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டிய கடப்பாட்டினை இலங்கை அதிகாரிகள் கொண்டுள்ளார்கள். மேலும், பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சிறுவர்கள் அல்லது அத்தகைய குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட சிறுவர்கள் மோதலின் பின்னர் பாதுகாப்பு மற்றும் உதவி என்பவற்றை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

662. இக்காலப்பிரிவின் போது சிறுவர் ஆட்சேர்ப்பு தொடர்பாக பல ஆயுதக்குழுக்கள் பொறுப்பாக இருந்து வந்திருக்கும் அதேவேளையில், இந்த அறிக்கை முதன்மையாக எல்ரீரீஈ மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இயக்கம்/ கருணாகுழு என்பன தொடர்பாகவே கவனம் செலுத்துகின்றது. அந்த இயக்கங்கள் மேற்கொண்ட சிறுவர் ஆட்சேர்ப்பின் பரிமாணமே இதற்கான காரணமாகும். சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்திருப்பதுடன், சிறுவர்களும் ஆயுதப் மோதலும்[611] என்ற தலைப்பிலான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையில்

---

607 ஆயுத மோதலில் சிறுவர்கள் சம்பந்தப்படுவது தொடர்பான சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தில் மாற்று ஏற்பாடு, உறுப்புரை 1 மற்றும் உறுப்புரை 4(1)

608 சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டவாக்கம், 2002, உறுப்புரை 8(2) (e)(vii).

609 சியாராலியோன் சிறப்பு நீதிமன்றம் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

610 சர்வதேச தொழில் தாபனம் மிக மோசமான சிறுவர் உழைப்பு வடிவங்கள் தொடர்பான சமவாயம் 182, உறுப்புரை 3 (a).

611 ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் 2006 டிசம்பர் 20 ஆம் திகதி இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான தனது முதலாவது அறிக்கையை சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான பாதுகாப்புச் சபையின் செயல் குழுவுக்கு சமர்ப்பித்தார்.

-

பெயர் குறிக்கப்பட்டிருக்கும் ஏனைய குழுகள் இனியபாராதி[612], புளொட் மற்றும் ஈபிடிபி ஆகிய பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் முன்னாள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உறுப்பினர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் (பிள்ளையான் என அழைக்கப்படும்) சிவனேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோர் ஆவர்.[613]

663. எல்ரீரீஈ இயக்கம் ஆயுத மோதல் இடம்பெற்ற காலப்பிரிவு முழுவதிலும் ஆயிரக்கணக்கான சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்து, பயன்படுத்தியது. கருணா 2004 ஏப்ரல் மாதத்தில் எல்ரீரீஈ இயக்கத்தில் இருந்து பிரிந்து செல்வதற்கு முன்னர் அந்த இயக்கத்தின் கிழக்கு மாகாணத்தின் தளபதியாக இருந்துவந்தார். இந்த ஆட்சேர்ப்புக்களில் சில அந்தக் காலப்பிரிவின் போது அவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2006 ஆம் ஆண்டு வரையில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பு மிகவும் முனைப்பான விதத்தில் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவ்விதம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் ஏனைய பிரதேசங்களில் இருந்தவர்களிலும் பார்க்க வயது குறைந்தவர்களாக இருந்துவந்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எல்ரீரீஈ இயக்கத்தில் இருந்து பிரிந்த பின்னர் கருணாகுழு தொடர்ந்தும் சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்துவந்தது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் / கருணாகுழு என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் ஆட்சேர்ப்பு மாதிரிகள் எல்ரீரீஈ இயக்கத்தின் ஆட்சேர்ப்பில் இருந்து புறம்பான விதத்தில் கவனத்தில எடுக்கப்பட்டுள்ளன.

664. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அதன் விசாரணையின் ஒரு பாகமாக, சிறுவர் ஆட்சேர்ப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதற்கான சாட்சிகள் ஆகியோரிடம் ஆழமான, இரகசியமான நேர்காணல்களை நடத்தியது. சிறுவர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர்கள், அவ்விதம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்கள், முன்னாள் எல்ரீரீஈ போராளிகள், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திர காலப்பிரிவின் போது இலங்கையில் செயற்பட்ட சிறுவர் பாதுகாப்பு முகவரகங்களின் ஊழியர்கள், அதேபோல சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் போர் நடவடிக்கைகளில் அவர்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக தகவல்களை கொண்டிருந்த ஏனைய தனிநபர்கள் மற்றும் குழுக்கள் ஆகியோரும் இதில் அடங்குவர். தமது பிள்ளைகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதாகவும், ஒருசில சம்பவங்களில் அவர்கள் சண்டையில் மரணமடைந்திருப்பதாகவும் குற்றம் சாட்டும் விதத்தில் பெற்றோர்களிடம் இருந்து கிடைத்த பெருந்தொகையான மனுக்களையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பெற்றுக்கொண்டுள்ளது. இத்தகைய ஒருசில சம்பவங்களில் குறிப்பிட்ட பிள்ளையின் சடலம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

(S/2006/1006) இச்செயல் குழு 2007 பெப்ரவரி 9 ஆம் திகதி இந்த அறிக்கையை பரிசீலனை செய்ததுடன், அதனையடுத்து 2007 யூன் 13 ஆம் திகதி அதன் முடிவுகளை வெளியிட்டது (S/AC.51/2007/9) செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் அறிக்கையில் இக்குழு குறிப்பிடப்பட்டுள்ளது.

612 சிறுவர் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான பாதுகாப்புச் சபையின் செயல் குழுவின் விசேட தூதுவர் 2009 டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட தனது விஜயத்தை அடுத்து சமர்ப்பித்த அறிக்கையில் "அம்பாறை மாவட்டத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்களை மீள ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான அச்சுறுத்தல்கள்" இனிய பாராதியினால் விடுக்கப்பட்டு வருவது தொடர்பாக தனது கரிசனைகளை எழுப்பியிருந்தார்.

613 பார்க்கவும் சம்பந்தப்பட்ட SRSG, மேலும் பார்க்கவும் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் என்பவற்றுக்கான SRSG தூதுவரின் விசேட அறிக்கை, பெப்ரவரி 4, 2010 மற்றும் இலங்கையின் ஐ.நா. நிரந்தர தூதுக்குழு, ஆயுத மோதலில் சிறுவர் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு அனுப்பி வைத்த கடிதம். ஜனவரி 27, 2010

665. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட நபர் முதலில் எல்ரீரீஈ இயக்கத்தில் இணைந்து கொண்ட பொழுது அநேகமாக 18 வயதிற்கு குறைந்தவராகவும், ஒருசில சந்தர்ப்பங்களில் 15 வயதிற்கு குறைந்தவராகவும் இருந்து வந்தார் என்ற விடயம் தெளிவாக தெரியவந்த போதிலும், ஒரு சில எல்ரீரீஈ இயக்கப் போராளிகள் இந்தப் பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தயக்கம் காட்டிவந்துள்ளார்கள் என்ற விடயம் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுக்கு தெரியவந்துள்ளது. இந்த வழக்கம் நிலவிவந்தது என்ற விடயத்தை ஒருசிலர் முற்றுமுழுதாக மறுத்தனர்.

666. மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பிரிவின் போது சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் போர் நடவடிக்கைகளில் அவர்கள் பயன்படுத்தப்படுதல் என்பன தொடர்பான சம்பவங்களை ஆவணப்படுத்தும் பெருந்தொகையான கண்காணிப்பு பொறிமுறைகள் இருந்து வந்துள்ளன. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் யுனிசெப் தலைமையிலான பாதுகாப்புச் சபை 1612 கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை (MRM) செயலணி என்பன இதில் அடங்குகின்றன.

667. 2002 பெப்ரவரி போர்நிறுத்த ஒப்பந்தம் “கடத்தல், பொதுமக்களை துன்புறுத்துல் மற்றும் பயமுறுத்துதல் ஆகிய செயல்களையும் உள்ளடக்கிய பொதுமக்களுக்கு எதிரான பகைமைச் செயல்களை” தடைசெய்தது. அது சிறுவர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பாக வெளிப்படையாக குறிப்பிடாவிடினும், அந்த விடயமும் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழு வியாக்கியானம் செய்திருந்தது. இலங்கையில் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்த 2002 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து, இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் வரையில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வயது குறைந்த பிள்ளைகளின் பல ஆட்சேர்ப்பு சம்பவங்களை ஆவணப்படுத்தியதுடன், அவை போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல்கள் எனவும் முடிவுசெய்திருந்தது.

668. பாதுகாப்புச்சபை தீர்மானம் 1612 கீழ் ஐக்கியநாடுகள் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறையை அமுல் செய்வதற்கென தெரிவுசெய்யப்பட்டிருந்த ஏழு முன்னோடி நாடுகளில் 2005 இல் இலங்கையும் ஒன்றாக இருந்து வந்தது.[614] ஆயுதமோதல்களின் போது சிறுவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் ஆறு பாரதூரமான அத்துமீறல்கள் தொடர்பாக பாதுகாப்புச்சபைக்கு அறிக்கையிடவேண்டும் என அது அவசியப்படுத்தியிருந்தது: சிறுவர்களை ஆயுதமோதல்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அதில் பயன்படுத்துதல், சிறுவர்களை கொலை செய்தல் மற்றும் அங்கவீனப்படுத்துதல், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்முறை,பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள், சிறுவர்களை கடத்துதல்,

614 உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கும் செயல் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கூடாக அவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழிமுறைகள் குறித்து பரப்புரை செய்வதற்கும் இலங்கை 2006 ஜுலை மாதத்தில் ஒரு கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை (MRM ) செயலணியை ஸ்தாபித்தது. இந்த செயலணி 2006 ஆம் ஆண்டில் ஆயுத மோதலில் சம்பந்தப்பட்டிருக்கும் சிறுவர் தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியிடம் தனது முதலாவது ஆண்டறிக்கையை சமர்ப்பித்தது. இந்த செயலணிக்கு யுனிசெப் அமைப்பின் இணைத் தலைமையுடன் ஐக்கிய நாடுகள் வதிவிட /மனிதநேய ஒருங்கிணைப்பாளரின் தலைமையின் கீழ் இருந்து வந்த போதிலும், உலகெங்கிலும் இருக்கும் ஏனைய செயலணிகளை போலன்றி இலங்கையின் MRM செயலணியில் அரசாங்க முகவரகங்களும் பெற்றுக் கொண்டிருந்தன. பகிரங்கமாக கிடைக்கும் அறிக்கைகளின் பிரகாரம், செயலணியொன்றில் தேசிய அரசாங்கத்தின் அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை இந்த பொறிமுறையின் வினைத்திறன் மிக்க அமுலாக்கத்திற்கு இடையூறு விளைவித்தது. அதன் பக்கச்சார்ப்பற்ற தன்மை மற்றும் நடுநிலைத் தன்மை என்பவற்றையும் அது பாதித்தது.

மனிதநேய நிவாரணங்களை மறுத்தல். இந்த அத்தியாயம் சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் பயன்படுத்துதல் என்பன தொடர்பாக பாதுகாப்புச்சபை தீர்மானம் 1612 இன் கீழ் அறிக்கையிடுதல் விடயத்தை கவனத்தில் எடுக்கின்றது.

669. மேலே குறிப்பிடப்பட்ட பொறிமுறைகளினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் அளவிலும் பார்க்க உயரளவில் சிறுவர்கள் போர் நடவடிக்கைகளில் முழு அளவில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்துவருகின்றன என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு சேகரித்திருக்கும் தகவல்கள் காட்டுகின்றன. குறிப்பாக, மோதலின் இறுதிக்கட்டத்தின் போது வன்னியில் செயற்படும் அனைத்து சர்வதேச முகவரகங்களும் வெளியேறவேண்டும் என 2008 செப்டம்பர் மாதத்தில் அரசாங்கம் கட்டளையிட்டதனையடுத்து இது இடம்பெற்றுள்ளது. உண்மையில் இந்த வெளியேற்றம் சிறுவர் ஆட்சேர்ப்பு தொடர்பான சுயாதீனமான கண்காணிப்பாளர்கள் எவரும் இருந்துவராத நிலையை எடுத்துதுரைத்தது. எல்ரீரீஈ இயக்கத்தினால் வெளியேறுவதற்கு இடமளிக்கப்படாத தேசிய ஊழியர்கள் அங்கு தங்கியிருந்த போதிலும், சம்பவங்களை கண்காணிப்பதற்கும், அவை குறித்து எல்ரீரீஈ இயக்கத்துடன் விடயங்களை முன்வைப்பதற்குமான அவர்களுடைய ஆற்றல், இடம்பெறக்கூடிய பழிவாங்கல் காரணமாக பெருமளவுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. மேலும், மோதலின் இறுதிக் கட்டத்தின் போது எல்ரீரீஈ இயக்கத்தினால் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களுக்கு மத்தியில் ஐ நா ஊழியர்களின் உறவினர்களும் இருந்துவந்தார்கள். 2009 பெப்ரவரி மாதத்தில் ஊழியர் ஒருவரின் 16வயது மகளையும் உள்ளடக்கிய விதத்தில் தனது அமைப்பின் ஊழியர்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விடயத்தை கண்டித்து ஐக்கியநாடுகள் அமைப்பு ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது.[615]

670. குறிப்பாக 16- 18 வயதிற்கு இடைப்பட்ட வளர்ந்த பிள்ளைகள் தமது இயக்கத்தில் “தாமாகவே முன்வந்து” இணைந்து கொண்டதாக எல்ரீரீஈ இயக்கத்தினர் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுடன் வாதாடியுள்ளனர். அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களை காட்டியிருந்தார்கள் பெற்றோரின் மரணம், குடும்பம் பிரிந்திருத்தல், இடப்பெயர்ச்சி,உணவுத்தட்டுப்பாடு, நோய், வறுமை, அரசாங்கப்படைகளினால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல், தடுத்துவைத்தல், கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமை, வீட்டில் இடம்பெறும் துஷ்பிரயோகம், எல்ரீரீஈ இயக்கத்தின் ‘போராட்டத்துடன்’ தம்மை அடையாளப்படுத்துதல் அல்லது ‘எதிரி’யின்பால் வெறுப்புக்கொள்ளல் என்பன இக்காரணங்களில் அடங்குகின்றன.[616] ஏனைய பின்புலங்களில், சுயாதீனமான ஆய்வாளர்களால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பொதுவான காரணங்களாக இவை இருந்துவருகின்றன.[617] பலசந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புக்கான காரணிகளாக இவை இருந்து வந்துள்ளன. எவ்வாறிருப்பினும், சர்வதேச சட்டத்தின் கீழும், இலங்கைச் சட்டங்களின் கீழும் அரச ஆயுதப் படைகளிடமிருந்து தெளிவான விதத்தில் வேறுபட்டிருக்கும் ஆயுதக்குழுக்களினால் 18வயதிற்கு குறைந்த சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகிய அனைத்துச் செயல்களும் -

615 ஐ நா ஆளணியினர் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர், கொழும்பு, மார்ச் 16, 2009, வதிவிட /மனிதநேய ஒருங்கிணைப்பாளர் அலுவலகம்.

616 முன்னாள் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊழியர் , முன்னாள் யுனிசெப் ஊழியர்.

617 உதாரணமாக பார்க்கவும்: Wessells, M. (2005) சிறுவர் போராளிகள், சமாதானக் கல்வி மற்றும் சமாதானத்திற்கு மோதலுக்குப் பிற்பட்ட மீள் கட்டுமானம்.

அவை ''சுயவிருப்பில்'' இடம்பெற்றாலும் சரி, பலவந்தமாக இடம் பெற்றாலும் சரி – தடைசெய்யப்பட்டுள்ளன.

671. எவ்வாறிருந்தபோதிலும், சிறுவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வீடுகளிலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும், கோயில்களிலிருந்தும் மற்றும் சோதனைச் சாவடிகளில் இருந்தும் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்கள் என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்துவருகின்றன. பல சம்பவங்களில் அவர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டு, முன்னரங்கிற்கு சண்டையிடுவதற்கு அனுப்பப்பட்டார்கள். இச்சிறுவர்களில் பெருந்தொகையானவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயம் இதுவரையில் தெரியவரவில்லை.[618] போரின் முடிவின் போது எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புபட்டிருந்த சுமார் 500சிறுவர்கள் மட்டுமே அரசாங்கத்தின் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் முறையாக உள்வாங்கப்பட்டிருந்தனர். ஏனையவர்களில் பெருந்தொகையானோர் காணாமல் போனவர்கள், எங்கிருக்கின்றார்கள் என்பது தெரியாதவர்கள் என்றவகைகளில் இருந்திருக்கமுடியும்.

672. இலங்கையில் சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் வழமை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பரவலான விதத்தில் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது. உதாரணமாக, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் ஏனைய சர்வதேச முகவரகங்கள் என்பன அதனை கண்டித்துள்ளன. எல்ரீரீஈ இயக்கம் மற்றும் கருணாகுழு போன்ற துணைப்படைக் குழுக்களின் மூத்த தளபதிகளுக்கு சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கும் அத்துமீறல்கள் தொடர்பாகவும், அதுதொடர்பாக அவர்கள் கொண்டிருக்கும் சர்வதேச கடப்பாடுகள் தொடர்பாகவும் தெரியப்படுத்தப்பட்டது. ஆனால், ஆயுதக்குழுகளில் இருக்கும் சிறுவர்களை விடுவிப்பதாகவும், ஆட்சேர்ப்பை நிறுத்துவதாகவும் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், 2009 இல் மோதல் முடிவடையும் வரையிலும், ஒருசில சந்தர்ப்பங்களில் அதன் பின்னரும் கூட இந்த வழமை தொடர்ச்சியாக இடம் பெற்றுவந்துள்ளது.

## ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்களை பயன்படுத்துதல் தொடர்பான போக்குகள்

### எல்ரீரீஈ இயக்கத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்களை பயன்படுத்துதல்

673. பரவலான விதத்திலும், திட்டமிட்ட ஒழுங்கிலும் ஆயிரக்கணக்கான சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்து, அவர்களை போராளிகளாகவும், ஏனைய வேலைகளை செய்பவர்களாகவும் பயன்படுத்திக் கொள்வதில் எல்ரீரீஈ இயக்கம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்தது. 1990இல் எல்ரீரீஈ இயக்கம், முழுமையாக சிறுவர்களை கொண்டிருந்த படையணிகளுடன் சேர்ந்து சண்டையில் ஈடுபட்டிருந்தது.[619] தமது படையணிகளில் சிறுவர்கள் இருந்து வருவதனை எல்ரீரீஈ இயக்கம் பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொண்டிருந்ததுடன், இந்த ஆட்சேர்ப்பினையும், போர் நடவடிக்கைகளில் சிறுவர்களை பயன்படுத்துவதனையும் நிறுத்தப் போவதாக வாக்களித்திருந்தது. ஆனால், இந்த வாக்குறுதிகள் அனைத்தும் மீறப்பட்டன. ஆயுத மோதலில் சம்பந்தப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கான ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி 1998 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தினை அடுத்து, ஆயுத மோதலில் சிறுவர்களை பயன்படுத்துவதில்லை என எல்ரீரீஈ இயக்கம் இணக்கம் தெரிவித்திருந்தது. ஆனால், 2009 மே மாதம் முடியும் வரையில் இந்த வழக்கம் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது.

618 LLRC, அத்தியாயம் 9, பந்தி 9.75

619 Human Rights Watch, 2004, Living in Fear: Child Soldiers and the Tamil Tigers in Sri Lanka.

674. பிள்ளைகள் இராணுவப் பயிற்சியை ஆரம்பிப்பதற்கான விரும்பத்தக்க வயது பதினைந்தும், அதற்கு மேற்பட்ட வயதாகவும் இருந்து வருகின்றது என 2003 ஆம் ஆண்டில் எல்ரீரீஈ இயக்கம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்தது.[620]அந்த இயக்கம் 2006 அக்டோபர் 15 ஆம் திகதி ஆட்சேர்ப்பு செய்வதற்கான குறைந்தபட்ச வயது 17 வருடங்கள் என ஒரு கொள்கையை உருவாக்கிக் கொண்டது.[621]2007 அக்டோபர் மாதத்தில் எல்ரீரீஈ இயக்கம் சிறுவர்கள் மற்றும் ஆயுதமோதல்கள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பிவைத்ததுடன், சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் மேலதிக ஏற்பாட்டிற்கு இணங்கிய விதத்தில் ஆட்சேர்ப்புக்கான குறைந்தபட்ச வயதை 17 இல் இருந்து 18 ஆக மாற்றியமைப்பதாக குறிப்பிட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் பெறப்பட்ட தகவல்கள் எல்ரீரீஈ இயக்கம் இந்த வாக்குறுதிகளுக்கு மதிப்பளிக்கத் தவறியிருக்கின்றது என்பததையும், சிறுவர் ஆட்சேர்ப்பும், போர் நடவடிக்கைகளுக்கு அவர்களை பயன்படுத்திக்கொள்வதும் தொடர்ந்து இடம் பெற்றுவந்துள்ளது என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றன.

675. எல்ரீரீஈ இயக்கத்தினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கும் சிறுவர்களின் சாரசரி வயது 16 ஆக இருந்து வருகின்றது என 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பிட்டிருந்தது.[622] எனினும், எல்ரீரீஈ இயக்கம் அந்தக் காலகட்டத்திலும் 15 வயதிற்கு குறைந்த பிள்ளைகளையும், அதே போல 9 வயதிற்கு குறைந்த ஒரு சில பிள்ளைகளையும் கூட ஆட்சேர்ப்புச் செய்து கொண்டிருந்ததாக கூறப்பட்டது.[623] ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால், இது போர் குற்றங்களுக்கு இணையானதாக இருந்து வர முடியும்.

676. 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மோதலின் முடிவு வரையில் அறியப்பட்ட சிறுவர் ஆட்சேர்ப்பு தொடர்பான தரவுத் தளம் ஒன்றை யுனிசெப் அமைப்பு பராமரித்து வந்தது. அது எல்ரீரீஈ இயக்கம் 2,689 பெண் பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் 6,905 பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது என ஆவணப்படுத்தியிருந்தது. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் அதன் ஆணைப்பத்திர காலத்தின் போது, சிறுவர் ஆட்சேர்ப்பு தொடர்பாக பெற்றோர்களிடமிருந்து பெருந்தொகையான முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தது. எவ்வாறிருப்பினும், முன்னர் சுட்டிக் காட்டப்பட்டதைப் போல, இந்த நிறுனங்களினால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் இந்த நிலைமையின் மொத்தச் சித்திரத்தையும் அநேகமாக எடுத்துக்காட்டவில்லை என்றே தெரிகின்றது. ஏனெனில், ஆட்சேர்ப்பு தொடர்பாக அறிக்கையிடுவதற்கு பல குடும்பங்கள் தயக்கம் காட்டிவந்தன.

---

620 இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆவணங்கள்

621 S/2007/758, டிசம்பர் 21, 2006, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை

622 S/2006/1006, டிசம்பர் 20, 2006, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை

623 S/2006/1006, டிசம்பர் 20, 2006, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை S/2009/325, ஜுன் 25, 2009, ஆயுத மோதலில் சிறுவர் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை.

677. அச்சந்தர்ப்பத்தில் இலங்கையில் பணிபுரிந்துவந்த சர்வதேச சிறுவர் பாதுகாப்பு முகவரகங்களின் உறுப்பினர்கள் “மோதலின் இறுதிக் கட்டங்களின் போது, எல்ரீரீஈ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் ஆட்சேர்ப்பில் கணிசமான ஒரு அளவிலான ஓர் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது”[624] எனக் குறிப்பிட்டிருந்தனர். பல அறிக்கைகளின் பிரகாரம்,மோதலின் இறுதி மாதங்கள் சிலவற்றின் போது எல்ரீரீஈ இயக்கம் 15 வயதிற்குக் குறைவாக இருந்துவந்த சிறுவர்களை அதிகரித்தளவில் ஆட்சேர்ப்புச் செய்துவந்துள்ளது.[625]

**ஆட்சேர்ப்பு செயன்முறைகள்**

678. எல்ரீரீஈ இயக்கம் பலவருட காலம் அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் ஒரு வழமையான கொள்கையை அமுல் செய்துவந்ததுடன், அதன் பிரகாரம் ஒவ்வொரு குடும்பமும் எல்ரீரீஈ அமைப்புக்கு ஒரு பிள்ளையை வழங்கவேண்டியிருந்தது. போர்நிறுத்த ஒப்பந்த காலம் முழுவதிலும் அந்த இயக்கம் பிள்ளைகளை ஆட்சேர்ப்பு செய்தது. 2006ஆம் ஆண்டில்போர்நிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்ததை அடுத்து, ஆட்சேர்ப்பு அதிகரித்திருந்தது என்பதனை இது காட்டுகின்றது. பின்னர் குறிப்பாக 2008 ஆம் ஆண்டிலிருந்து ஒருசில சம்பவங்களில் ஒரு சில பிரதேசங்களில் குடும்பங்களிலிருந்து மூன்று அல்லது நான்கு பிள்ளைகள் எடுத்துச் செல்லப்பட்டதாக சாட்சி ஒருவர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் தெரிவித்தார்.[626] பல சம்பவங்களில் பிள்ளைகளை இயக்கத்திடம் ஒப்படைப்பதை தவிர தம்மால் வேறு எதனையும் செய்யமுடியாது என குடும்பங்கள் கருதின. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் துன்புறுத்தல், வன்முறை என்பவற்றையும், மறுத்தால் ஏனைய குடும்ப உறுப்பினர்கள் கடத்தப்படும் ஆபத்தையும் எதிர்கொள்ள நேரிட்டது.

679. எல்ரீரீஈ இயக்கம் செயற்பட்டு வந்த அனைத்துப் பிரதேசங்களிலும் சிறுவர்களின் ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது. மேலும், அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசங்களிலும் சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், வன்னிக்கு ஊடாக அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள். சிறுவர் ஆட்சேர்ப்பில் இயக்கத்தின் அரசியல் துறை, மகளிர் பிரிவு மற்றும் ஒருசில சந்தர்ப்பங்களில் புலனாய்வுப் பிரிவு என்பன குறிப்பாக சம்பந்தப்பட்டிருந்தன.

680. இயக்கத்தில் இணைந்து கொள்வதற்கு மறுத்த சிறுவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் தாக்குதல்கள் அல்லது வன்முறை அச்சுறுத்தல் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்ததுடன், எதிர்ப்புத் தெரிவிக்க முயன்ற அவர்களுடைய உறவினர்கள் அல்லது பாதுகாவலர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தாக்கப்பட்டனர். தமது சகோதரர்கள் அல்லது சகோதரிகள் படையினரால் எடுத்துச் செல்லப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு,“தாமாகவே முன்வந்து” இயக்கத்தில் இணைந்துகொண்ட சிறுவர்கள் தொடர்பான சம்பவங்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு ஆவணப்படுத்தியுள்ளது.[627] ஆட்சேர்ப்புக்கு

[624] WS on file

[625] S/2009/325, ஜுன் 25, 2009, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை

[626] WS on file

[627] WS on file

எதிர்ப்புத் தெரிவித்தன் காரணமாக சிறுவர்கள் எல்ரீரீஈ இயக்கப் போராளிகளினால் தாக்கப்பட்டதனை தாம் பார்த்ததாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் பேசிய சாட்சிகள் தெரிவித்தார்கள். அத்தகைய நடைமுறைகள் குறித்து ஏனைய அறிக்கைகளும் இக்குழுவுக்கு கிடைத்துள்ளன.[628] சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதனை தடுப்பதற்கு முயற்சி செய்த பெற்றோரும், பாதுகாவலரும் தாக்கப்பட்டதாகவும், கத்திக்குத்துக்கு இலக்கானதாகவும் மற்றும்/அல்லது எல்ரீரீஈ இயக்கத்தினால் கடத்தப்பட்டதாகவும் ஏனைய சாட்சிகள் குறிப்பிட்டார்கள்.[629]

681. கிழக்கு மாகாணத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சிறுவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இரண்டு நாட்களுக்கு குறைவான காலப்பிரிவில் ஒருசில சந்தர்ப்பங்களில் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் என்பதனைக்காட்டும் நம்பகமான அறிக்கைகள் உள்ளன. ஒரு சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பு செய்தவர்களில் 90 சதவீதமானவர்கள் மட்டக்களப்பில் இருந்து வன்னிக்கு பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்படுவதையும், அவர்கள் 18வயதிற்குக் குறைந்தவர்களாக தென்படும் விடயத்தையும் இலங்கை இராணுவம் அவதானித்திருந்ததாகக் கூறப்படுகின்றது.[630] அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சிறுவர்கள் வன்னியில் எல்ரீரீஈ இராணுவக் கட்டமைப்புக்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்ற விடயம் தமக்கு தெரியவந்தவுடனே, அவர்களை விடுவித்துக் கொள்வதற்கு எந்த நம்பிக்கையும் இருந்து வரவில்லை என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் கண்காணிப்பாளர்கள் கூறியிருந்தனர்.[631] இயக்கத்தின் அரசியல் துறைப்பிரிவுடன் குடும்ப உறுப்பினர்கள் அல்லது சர்வதேச முகவரகங்கள்நடத்திய பேச்சுவார்த்தைகளின் விளைவாக ஒரு சில சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

682. ஆகக்குறைந்தது 2003ஆம் ஆண்டு தொடக்கம் சிறுவர்கள் போராளிகளாகச் சேர்த்துக் கொள்வதற்கு அவர்களைக் கவர்ந்திழுக்கும் நோக்கத்துடன் எல்ரீரீஈ இயக்கம் விரிவான முறையில் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தது. அவர்கள் பாடசாலைகளுக்கு அருகில் ஒலிபெருக்கிகளை வைத்து தேசப்பற்று மிக்க பாடல்களை ஒலிபெருக்கியதுடன்,‘‘தியாகிகளை’’ போற்றிப் புகழ்ந்தார்கள். சண்டையில் இணைந்துகொள்ளுமாறு மக்களை தூண்டினார்கள். எல்ரீரீஈ இயக்கம் பாடசாலைகளில் 13 வயது மாணவர்களை போராளிகளாக இணைந்து கொள்வதற்கு அவர்களை தூண்டும் நோக்கத்துடன் பிரச்சார நாடகங்களை உள்ளடக்கிய விதத்தில் சமூகக் கலாசார நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தியது. அத்தகைய நடவடிக்கைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மிக வறிய சமூகங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், பிள்ளைகள் தமக்கு பாடசாலைக்கல்வியும், உணவு மற்றும் பணத்தொகைகள் போன்ற பொருள் வடிவிலான அனுகூலங்களும்கிடைக்கும் என நம்ப வைக்கப்பட்டிருந்தார்கள்.

683. பிள்ளைகளை இயக்கத்தில் சேர்வதற்கு தூண்டுவதற்கென இயக்க உறுப்பினர்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்தமை குறித்து பல அறிக்கைகள்

628 WS on file

629 WS on file

630 இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் ஆவணம்.

631 பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

உள்ளன. உதாரணமாக, 2004 ஆம் ஆண்டில் பல நூற்றுக்கணக்கான எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் அமைந்திருந்த பாடசாலைகளிலும், ஏனைய இடங்களிலும் அத்தகைய நடவடிக்கைளை முன்னெடுத்தார்கள். சில சந்தர்ப்பங்களில் இத்தகைய அமர்வுகளை உடனடுத்து, அவர்களுடைய பெற்றோர்களுக்கு எவ்வித அறிவித்தல்களையும் வழங்காமல் பிள்ளைகள் எடுத்துச் செல்லப்பட்டனர். ஏனைய பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் வழியில் அல்லது திரும்பிவரும் பொழுது மோட்டார் சைக்கிளில் வரும் நபர்களினால் அல்லது வெள்ளை வானில் வரும் நபர்களினால் கடத்தப்பட்டிருந்தார்கள்.[632]பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு இது தொடர்பாக தமது பெற்றோர்களுக்கு அறிவிக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. 2007 நவம்பர் மாதத்தில் வடமாகாணத்தில் 15 வயதான ஒரு சிறுமி பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது, சாதாரண உடையிலிருந்த மூன்று நபர்கள் அவளை தூரத்தினார்கள். அப்பிள்ளையை அழைத்துச் செல்வதற்காக பாடசாலைக்கு வந்துகொண்டிருந்த அவருடைய தந்தை அந்த மூன்று நபர்களிடமும் மன்றாடிய போதிலும், அவர்கள் அவரை தாக்கினார்கள். பாடசாலை சீருடையில் இருந்த அந்தப் பெண் அந்த நபர்களினால் எடுத்துச் செல்லப்பட்டாள். பின்னர் தந்தைக்கு எல்ரீரீஈ இயக்கத்திடமிருந்து ஒரு கடிதம் கிடைத்ததுடன், அவருடைய மகள் தங்களுடன் சேர்ந்து சண்டையிட்டு வருகிறாள் என அதில் கூறப்பட்டிருந்தது. பின்னர் அப்பிள்ளை போரில் கொல்லப்பட்டதுடன், அவளுடைய உடல் இறுதிக்கிரியைகளுக்கு என குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது.[633]அவர்கள் இவ்விதம் செயற்படும் விதம் யுனிசெப் அமைப்புக்கும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்புக் காலப்பிரிவின் போது அதற்கும், பல தடவைகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

684. ஆட்சேர்ப்பில் ஈடுப்பட்டிருந்த எல்ரீரீஈ ஆட்கள் வீடு வீடாக சென்றார்கள் இயக்கத்தில் பிள்ளைகளை அல்லது இளைஞர், யுவதிகளை சுயவிருப்பில் சேரவைக்குமாறு கேட்டு நகரங்களிலும், கிராமங்களிலும் பெற்றோரிடம் கடிதங்களை விநியோகித்தார்கள். 2006 ஆம் ஆண்டில் எல்ரீரீஈ இயக்கத்தினர் வீடுவீடாக வந்தபொழுது, பிள்ளைகளின் தாய்மார் கதறித்துடிக்க பெரும்பாலும் 14 -15 வயதுப் பிள்ளைகள் அபகரித்து, இழுத்துச் செல்லப்பட்டார்கள் எனச்சாட்சிகள் குறிப்பிட்டிருந்தன.[634] உதாரணமாக, 2004ஆம் ஆண்டில் பல நூற்றுக்கணக்கான எல்ரீரீஈ உறுப்பினர்கள் வாகனேரி கிராமத்திற்கு வந்ததாகவும், வீடுவீடாகச் சென்று, கூட்டங்களுக்கு வருமாறு ஆட்களுக்கு அழைப்பு விடுத்ததாகவும், அத்தகைய கூட்டங்களின் போது பெருந்தொகையான பிள்ளைகள் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதாகவும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு அறிக்கைகள் கிடைத்திருந்தன.[635]

685. மேலும், எல்ரீரீஈ இயக்கம் அநாதை இல்லங்கள், மருத்துவமனைகள், தேவாலயங்கள் மற்றும் கோயில்கள் என்பவற்றில் இருந்து - குறிப்பாக மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற

632 பதிவு செய்யப்பட்டிருக்கும் மூலாதாரம்

633 WS on file

634 WS on file

635 இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட சர்வதேச நிறுவனத்தின் உள்ளக ஆவணம்

திருவிழாக்களின் போது – தமது படையணிகளில் பலவந்தமாக சேர்த்துக் கொள்வதற்கென சிறுவர்களை கடத்தியுள்ளார்கள். 2004ஆம் ஆண்டில் மட்டக்களப்பிற்கு அருகில் இடம்பெற்ற ஒரு கோவில் திருவிழாவின் போது,எல்ரீரீஈ இயக்கத்தினால் ஆட்சேர்ப்பு செய்யும் நோக்கத்துடன் 20சிறுவர்கள் கடத்தப்பட்டார்கள். சிறுவர் பாதுகாப்பு முகவரகங்கள் இது தொடர்பாக குரல் எழுப்பியதை அடுத்து, இறுதியில் பெரும்பாலான சிறுவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.[636] 2008ஆம் ஆண்டில் எல்ரீரீஈ பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று நபர்கள் ஒரு மருத்துவமனைக்குள் புகுந்து, ஆட்சேர்ப்பினை தடுப்பதற்கு முயற்சி செய்த அங்கிருந்த மருத்துவரை தாக்கிவிட்டு, சிறுவர்களையும்,இளைஞர் யுவதிகளையும் கடத்திச் சென்றார்கள்.[637] பிள்ளைகள் அவ்விதம் இழுத்துச் செல்லப்பட்ட பொழுது தாய்மார் எல்ரீரீஈ இயக்கத்தினர் மீது மணலை வாரி வீசியதாக ஒரு சாட்சி கூறியிருந்தார். அது ஒரு சாபத்தின் குறியீடாகும்.[638]

686. மோதல் இடம்பெற்ற காலப்பிரிவு முழுவதிலும் தமது பிள்ளைகள் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்படுவதனை தடுப்பதற்கென குடும்பங்கள் விரிவான வழிமுறைகளைப் பின்பற்றிவந்துள்ளன. வீடுகளுக்குள்ளே அவர்களை ஒளித்துவைத்தல்,‘‘காட்டு மறைவிடங்களில்’’ தொலைதூர இடங்களில் வைத்தல்[639] தேவாலயங்கள், பாடசாலைகள் அல்லது மருத்துவமனைகளில் வைத்தல் அல்லது ஏனைய மாவட்டங்களில் இருக்கும் உறவினர்களிடம் விட்டுவைத்தல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. 2007 இல் இடம் பெற்ற ஒரு சம்பவத்தில், 20 பையன்களும், இளைஞர்களும் ஆட்சேர்ப்பைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு கிளிநொச்சியில் மருத்துவமனை வளாகம் ஒன்றில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். மன்னாருக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் எல்ரீரீஈஇயக்கம் நடத்திய ஆட்சேர்ப்பு பிரச்சாரத்தின் பின்னர் அங்கிருந்த குடும்பங்கள், ஒரு குடும்பத்தில் ஒரு நபரை ‘‘சுயவிருப்பில்’’ வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்க மறுத்தனர். அதனையடுத்து அவர்கள் அச்சுறுத்தல்கள், கடத்தல்கள் என்பவற்றை எதிர்கொண்டதுடன், ஒரு குடும்பம் மடு தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தது.[640] பிள்ளைகள் ஒளிந்திருக்கும் இடத்தினை எல்ரீரீஈ இயக்கத்தினர் கண்டுபிடித்தால், அப்பிள்ளைகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன், பெற்றோர் கடுமையாக தாக்கப்படுவார்கள்.[641]

687. தமது பிள்ளைகள் திருமணம் செய்து கொண்டால் ஆட்சேர்ப்பிலிருந்து தப்பிக்கொள்ள முடியுமென ஒருசில பெற்றோர் நம்பினார்கள். அதன் காரணமாக, இளவயதுத் திருமணங்கள் இடம்பெறும் ஒரு போக்கு தோன்றியது.[642]

688. தமது பிள்ளைகள் எல்ரீரீஈ முகாம் ஒன்றிற்கு சென்றிருப்பதாக அல்லது எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக சாட்சிகள் தம்மிடம் கூறியிருந்த காரணத்தினால்,

---

636 இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட சர்வதேச நிறுவனத்தின் உள்ளக ஆவணம்

637 WS on file

638 WSon file

639 WS on file

640 WS on file

641 WS on file

642 http://www.hrw.org/reports/2004/srilanka1104/srilanka1104.pdf

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெற்றோர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அல்லது யுனிசெப் அலுவலகம் என்பவற்றுக்கு வருவார்கள். மேலும்,அவர்கள் தமது பிள்ளைகளைக் கேட்டு எல்ரீரீஈ இயக்கத்தின் முகாம்களுக்கும் செல்வார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் வாய்தர்க்கங்களும் ஒருசில சந்தர்ப்பங்களில் எல்ரீரீஈ உறுப்பினர்களுடன் கைகலப்புக்களும் ஏற்படும்.[643] ஒருசில சம்பவங்களில் குடும்பங்கள் எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து கடிதங்களைப் பெற்றுக்கொண்டதுடன், அக்கடிதங்களில் அவர்களுடைய பிள்ளைகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற விடயம் கூறப்பட்டிருந்தது.[644]பல சம்பவங்களில் பிள்ளைகள் எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த காலப்பிரிவு முழுவதிலும் தமது குடும்பங்களுடன் எத்தகைய தொடர்புகளையும் வைத்துக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருக்கவில்லை. 2004 ஆம் ஆண்டில் எல்ரீரீஈ இயக்கத்தினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 63 பிள்ளைகளின் பெற்றோர்களுடன் யுனிசெப் அமைப்பு உரையாடியதுடன், அந்தப் பிள்ளைகளில் எவரும் தமது குடும்பங்களுடன் எத்தனைய தொடர்புகளையும் வைத்துக் கொள்ள முடியாதவர்களாக இருந்துவந்தனர்.

689. எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த சிறுவர்கள் சில சந்தர்ப்பங்களில் மிரட்டப்பட்டனர், அவர்கள் இயக்கத்தை விட்டுச் செல்வதற்கு முயன்றால் அவர்கள் அல்லது குடும்பத்தினர் கொல்லப்படுவார்கள் என்ற விதத்தில் இந்த மிரட்டல்கள் அமைந்திருந்தன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இச்சிறுவர்களைப் பிரித்து, வேறுபடுத்தி எடுக்கக்கூடியதாக இருந்துவந்த சிறுவர் பாதுகாப்பு முகவரகங்கள் அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்து சென்றனர். மீண்டும் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்படும் அபாயத்தை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு, சில சந்தர்ப்பங்களில் மோதல் பிரதேசத்தில் இருந்து வெகுதொலைவில் இருக்கும் பிரதேசங்களுக்கு அவர்கள் எடுத்துச்செல்லப்பட்டிருந்தார்கள். எல்ரீரீஈ இயக்கத்தினால் மீண்டும் கைது செய்யப்பட்ட பின்னர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்கள் குறித்த அறிக்கைகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்திருந்தன.[645]

690. சிறுவர் பாதுகாப்பு முகவரகங்களுக்கு அறிவிக்கபட்டிருந்த (வழமையாக இடம்பெறும்) ஒரு சம்பவம் மீண்டும் கைதுசெய்யப்பட்ட 17வயது யுவதி ஒருவருடைய சம்பவமாகும். அவர் ஒரு பாதுகாப்பு இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த போதிலும், தனது மாமாவின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்பதற்கென மட்டக்களப்பிற்கு திரும்பியிருந்தார். அங்கு அவர் பிடிக்கப்பட்டதுடன், மூன்று நாட்கள் தரையில் நிற்க வைக்கப்பட்டிருந்தார். இரண்டு நாட்கள் கடும் வெய்யில் வைக்கப்பட்டிருந்த பின்னர்,அவருக்கு ஒரு சில சந்தர்ப்பங்களில் தண்ணீர் மட்டுமே அருந்தக் கொடுக்கப்பட்டிருந்தது. அவருக்கு ஒரு தற்காலிக விடுதலை வழங்கப்பட்டிருந்தது.

691. 2009ஆம்ஆண்டில் சுமார் 14 வயதுடைய சிறுவர்கள் அல்லது அதிலும் பார்க்க குறைந்த வயதுடைய சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன், அவர்களில் ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் இருந்துவந்தார்கள் என பல

643 Source on record

644 WS on file

645 WS on file

மூலங்கள் தெரிவிக்கின்றன.[646] அழுது கூக்குரலிடும் பிள்ளைகளையும்,தமது பெற்றோரிடம் மீண்டும் ஓடிச்செல்வதற்கு முயன்று கொண்டிருந்த பிள்ளைகளையும்[647]தாம் பார்த்ததாக சாட்சிகள் கூறினார்கள். (மோதலின் இந்தக்கட்டத்தின் போது,போர் மிகக் கடுமையாக இடம்பெற்றுவந்ததுடன் ஷெல்தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வந்த ஒரு பின்னணியில் சிறுவர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது என்ற விடயத்தை இங்கு வலியுத்துதல் வேண்டும்). யுனிசெப் அமைப்பு 2009 பெப்ரவரி 17ஆம் திகதி மோதல் பிரதேசங்களில் இருந்துவரும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பான பாரதூரமான கரிசனையை வெளிப்படுத்தும் விதத்தில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது. ‘‘எல்ரீரீஈ இயக்கம் பொதுமக்களையும், 17வயதளவில் மிகச் சிறுவயதில் இருந்த பிள்ளைகளையும் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்யும் விடயத்தை தீவிரப்படுத்தியிருக்கும் விடயம் குறித்து எங்களுக்கு தெளிவான ஆதாரங்கள் இருந்துவருகின்றன’’ என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

692. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு இளம் பிள்ளை ஒன்றின் தாய் 2009 மார்ச் மாத முடிவு அளவில் ஒரு குடும்பம் தனது பிள்ளையை ஒளித்துவைத்திருந்த பங்கர் ஒன்றை தான் பார்த்ததாகவும், மற்றொரு சந்தர்ப்பத்தில் ஒரு தாய் தனது மூன்று பிள்ளைகளைக் குளிப்பாட்டுவதற்காக இரவில் வெளியில் எடுத்ததனை கண்டதாகவும் கூறியிருந்தார். எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ள ஆரம்பித்ததனை அடுத்து, அப்பிள்ளைகள் ஓடித் தப்பினார்கள். ஆனால், ஒரு துப்பாக்கிவேட்டு தாயின் உயிரைப் பறித்திருந்தது எனக் கூறப்பட்டது. அத்தாயும் அநேகமாக அக்காலப் பிரிவில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதிலிருந்து தப்பித்துக்கொண்டிருந்தார். சாதாரண உடையில் வந்த ஒரு ஆயுதக்குழு – அவர்கள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் என அப்பெண்மணி நம்பினார். அவரை பலவந்தமாக ஒரு டிரக் வண்டியில் ஏற்றுவதற்கு முயற்சித்தது. அவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபொழுதுதாக்கப்பட்டார். ஆனால், அப்பெண்மணியின் மகள் அவரை அழைக்கும் சத்தம் கேட்டவுடன் எல்ரீரீஈ உறுப்பினர்கள் அவரை போவதற்கு அனுமதித்தார்கள்.[648]

693. மோதலின் இறுதி ஒரு சில மாதங்களின் போது அறிவிக்கப்பட்ட பலவந்தமான ஆட்சேர்ப்பு தொடர்பான மிகவும் பாரதூரமான சம்பவங்களில் ஒன்று, 2009 மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் வளையர்மடம் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த நூற்றுக்கணக்கான வயது வந்தவர்களையும்,பிள்ளைகளையும் எழிலன் மற்றும் இளம்பரிதி ஆகியோரின் தலைமையில் வந்த எல்ரீரீஈ உறுப்பினர்கள் கடத்திச் சென்றதாக கூறப்படும் சம்பவமாகும். இச்சம்பவம் முன்னைய அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.[649]

694. சிறுவர் ஆட்சேர்ப்புக்குப் பொறுப்பாக இருந்து வந்தவர் எனக்கூறப்படும் மற்றொரு உயர்மட்ட எல்ரீரீஈ முக்கியஸ்தர் எல்ரீரீஈ இயக்கத்தின் விளையாட்டுப்

646 WS on file

647 WS on file

648 WS on file

649 WS on file

பிரிவின் தலைவரான பாப்பா ஆவார்.[650] 2009 ஏப்ரல் மாதத்தில் அவர் ஏனைய எல்ரீரீஈ உறுப்பினர்களுடன் வெள்ளை வான் ஒன்றில் வளையர்மட தேவாலயத்திற்கு வந்ததாகவும், மற்றொரு நபருடன் வீதியில் நடந்து கொண்டிருந்த (சுமார் 17 வயதுடைய) ஒரு இளம் பெண்ணை அவர் காரிலிருந்து இறங்கி, பிடித்து இழுத்துச் சென்றதாகவும், அச்சிறுமியுடன் வந்த நபர் அச்சிறுமியை எடுத்துச் செல்வதனை தடுப்பதற்கு முயன்றதாகவும் கூறப்படுகின்றது. ஆட்கள இச்சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறப்படுகின்றது. ஆனால், தாம் கொல்லப்படலாம் அல்லது ஆட்சேர்ப்புக்கு உள்ளடக்கப்படலாம் என்ற அச்சத்தில் அவர்கள் இதில் தலையிடவில்லை.[651]

695. ஆயுதமோதலின் இறுதி ஒரு சில வாரங்களிலும், மாதங்களிலும் போதும் எல்ரீரீஈ இயக்கம் அதன் ஆட்பலத்தை அதிகரித்துக் கொள்வதற்கு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வந்த நிலையில், ஆட்சேர்ப்புக்கு உள்ளாக்கப்படக்கூடிய நிலையில் இருந்துவந்தவர்கள் மத்தியில் கடும் கோபமும், மனக்கலக்கமும் ஏற்பட்டிருந்தது. அடிக்கடி தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த இடப்பெயர்ச்சியுடன் இணைந்த விதத்தில் ஆட்சேர்ப்பில் இருந்து பிள்ளைகளை ஒளித்து வைத்திருப்பது என்பது பெருமளவுக்கு ஒரு சிரமமான காரியமாக இருந்துவந்தது. சிறுவர்கள் பங்கர்களில் ஒளித்துவைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான அறிக்கைகள் இருந்துள்ளன. அறிக்கையிடப்பட்ட ஒரு சம்பவத்தில் ஆட்சேர்ப்பில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கென ஒரு பங்கரில் ஒளிந்திருந்த பெண்கள் மற்றும் இளம் பிள்ளைகளின் ஒரு குழு இலங்கை இராணுவத்தின் திசையில் இருந்து ஏவப்பட்டதாக கூறப்படும் ஒரு ஷெல் அந்த பங்கரை தாக்கியதன் விளைவாக கொல்லப்பட்டார்கள்.[652]

### எல்ரீரீஈ இயக்கத்தினால் போர் நடவடிக்கைகளில் சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டமை

696. எல்ரீரீஈ இயக்கம் சிறுவர்களைப் பல்வேறு வழிகளில் பயன்படுத்திக் கொண்டுள்ளது. பாரிய சண்டைகளின் போது முன்னரங்கில் சண்டையிடுவதற்கென அவர்களை அமர்த்துவதனையும் இது உள்ளடக்கியிருந்தது. எல்ரீரீஈ இயக்கம் அவர்களைக் காலாட்படை சிப்பாய்களாகவும், பாதுகாப்பு மற்றும் புலனாய்வு உத்தியோகத்தர்களாவும், தற்கொலை குண்டுதாரர்களாவும் கூட பயன்படுத்தி வந்துள்ளது.[653]மோதலின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள் மோதல் வலயத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில் அவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தியவர்களில் சிறுவர்களும் இருந்துவந்தார்கள் என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளன. அச்சிறுவர்கள் பெருமளவுக்கு மனக்கிலேசமடைந்திருப்பதனை காணமுடிந்தது.[654]

---

650 WS on file

651 WS on file

652 WS on file

653 http://www.hrw.org/report/2007/01/23/complicit-crime/state-collusion-abductions-and-child-recruitment-karuna-group

654 பார்க்கவும்: நடமாட்ட கட்டுப்பாடுகள் தொடர்பான அத்தியாயம் XIV இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட சர்வதேச நிறுவனத்தின் உள்ளக ஆவணம்

697. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு ஆயுதங்களை கையாளும் விதத்தையும் உள்ளடக்கிய விதத்தில் ஓரளவுக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. ஒருசில சந்தர்ப்பங்களில் பயிற்சி மிகக் குறுகிய காலமாக இரண்டு நாட்கள் மட்டும் நீடித்ததுடன், அதனை அடுத்து அவர்கள் சண்டையிடுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். சிறுவர்களை பயிற்றுவிக்கும் முகாம்கள் வல்லிபுனத்தில் படத்துறைப்பள்ளி பாடசாலையிலும், பளையில் எரிமலை முகாமிலும்,அனந்தபுரத்திலும் அமைந்திருந்தன. அத்தகைய முகாம்களில் சுமார் 3000 தொடக்கம் 4000 வரையிலான சிறுவர்கள் இருந்து வந்திருக்க முடியும் என்றும், அவர்களில் பெரும்பாலானவர்கள் 15வயதிற்கு மேற்பட்டவர்களாக இருந்துவந்தார்கள் என்றும்,ஆனால், 9வயது வரையிலான சிறுபிள்ளைகளும் அவற்றில் இருந்துவந்தார்கள் என்றும் ஒரு மூலம் குறிப்பிட்டிருந்தது.[655]

698. ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்திற்கு அருகில் போரில் பயன்படுத்தப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு 13வயதுச் சிறுவனை சாட்சி ஒருவர் 2003 ஆம் ஆண்டில் நேர்காணல் நடத்தியிருந்தார். “தெளிவாகவே மிகச் சிறு வயது” போராளிகள் எல்ரீரீஈ கிழக்கு மாகாண தளபதி கருணாவின் காட்டுப்பிரதேச காவலரண் ஒன்றில் காவற்பணியில் இருந்துவந்ததனை அந்த சாட்சி பார்த்திருக்கின்றார்.[656] இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பாளர்களும் சிறுவர்களுக்கு இராணுவப்பயிற்சி வழங்கப்பட்டதனை தாம் பார்த்ததாக அறிக்கையிட்டிருந்தனர்.[657] அதேபோல சிறுவயது இயக்க உறுப்பினர்கள் சோதனைச் சாவடிகளில் கடமையில் இருப்பதனையும், தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களையும் உள்ளடக்கிய விதத்தில் ஆயுதங்களை கையாள்வதையும் தாம் பார்த்ததாக அவர்கள்குறிப்பிட்டிருந்தனர்.[658] பங்கர்களை தோண்டுவதற்கும், காவல் பணியிலும் சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் போர்க் களத்தில் கொல்லப்படும் போராளிகளிடமிருந்து ஆயுதங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்காகவும் அவர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தனர்.

699. போர் சம்பந்தப்படாத புலனாய்வு, ஆட்சேர்ப்பு அல்லது அரசியல் நடவடிக்கைகள் போன்ற செயற்பாடுகளிலும் சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தனர். எல்ரீரீஈ இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவில் சிறுவர்கள் செயற்பட்டு வருகின்றார்கள் என்பது குறித்த மிக முக்கியமான அறிக்கைகள் 2003ஆம் ஆண்டு தொடக்கம் கிடைத்துள்ளன. உதாரணமாக, 2004 இல் தப்பிச் சென்று, சிறுவர் பாதுகாப்பு முகவரகமொன்றின் உதவியை பெற்றுக் கொண்டிருந்த நான்கு இளம் பெண்கள்,கொழும்பையும் உள்ளிட்ட இடங்களில் பிரதான அரசாங்க நிறுவனங்களின் GPS படங்களை பதிவு செய்வதற்கென நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியில் அமர்த்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டிருந்தது. எல்ரீரீஈ இயக்கத்தின் சாதாரண நடைமுறை, ஆட்சேர்ப்பின் பின்னர் அனைத்துப் பெண்களினதும் தலைமயிரை குட்டையாக வெட்டிவிடுவதாகும். அதேவேளையில், சமூகத்தில் அவர்களை சேர்த்துவிடும் நோக்கத்தில் அந்த தலைமயிரை நீண்டகாலம் எல்ரீரீஈ இயக்கம் வைத்துக்கொண்டிருந்தது.

---

655 WS on file

656 WS on file

657 WS on file

658 Source on record.

700. முன்னரங்க நிலைகளுக்கு அனுப்பப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை மற்றும் மோதல் இடம்பெற்ற காலப்பிரிவு முழுவதிலும் மரணமடைந்திருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை என்பன தெரியவில்லை. ஆரம்ப வருடங்களில் மரணமடைந்தவர்களின் சடலங்கள் ஒருசில சந்தர்ப்பங்களில் குடும்பங்களுக்குத் திருப்பி அளிக்கப்பட்டன.[659] காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைச் செய்திருக்கும் பெருந்தொகையான குடும்பங்கள், தமது பிள்ளைகள் எல்ரீரீஈ இயக்கத்தினால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், அதன் காரணமாக இப்பொழுது அவர்கள் ஆயுதமோதலின் போது கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் அல்லது எங்கிருக்கின்றார்கள் எனத் தெரியாதவர்கள் என்ற வகைப்படுத்தலில் அடங்கியிருக்க முடியும் எனக் கூறியிருந்தனர். சிறுவர் ஆட்சேர்ப்பின் முழு அளவு மற்றும் இதுவரையில் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயம் தெரியாதிருக்கும் சிறுவர்களுக்கு நேர்ந்த கதி என்பவற்றை நிர்ணயித்துக் கொள்வதற்கென ஒரு முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளது.

**ஆட்சேர்ப்பினை முடிவுக்கு கொண்டுவந்து சிறுவர்களை விடுவிப்பதற்கான எல்ரீரீஈ இயக்கத்தின் செயற்திட்டம்**

701. பட்டியலிடப்பட்ட தரப்புக்கள் சிறுவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் ஆயுதமோதலில் அவர்களை பயன்படுத்துதல் என்பவற்றை முடிவுக்கு கொண்டுவருவதற்கென தெளிவான கால வரையறையுடன் கூடிய செயற்திட்டங்கள் தொடர்பாக ஐக்கியநாடுகள் அமைப்புடன் உடன்பாடுகளை எட்டவேண்டிய தேவையை பாதுகாப்புச்சபை தீர்மானம் 1460 (2003) குறிப்பிடுகின்றது.

702. பெப்ரவரி மாதம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர்இனிமேல் தனது அமைப்புக்கு சிறுவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படாதிருப்பதனையும், ஏற்கனவே இயக்கத்தில் இருந்து வரும் சிறுவர்கள் விடுவிக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தும் அதன் கடப்பாட்டினை அமுல் செய்வதற்கு திட்டவட்டமான படிமுறைகளை உருவாக்கிக் கொள்வதற்கென எல்ரீரீஈ இயக்கம் யுனிசெப்புடன் ஒரு சந்திப்பை நடத்துவதற்கு இணங்கியது.[660] இலங்கையின் வடக்கு கிழக்கில் ஆயுதமோதலினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்திட்டத்தை 2003 யூன் மாதம் 16 ஆம் திகதி அரசாங்கமும், எல்ரீரீஈ இயக்கமும் அங்கீகரித்தன. 2003 அக்டோபர் மாதத்தில் எல்ரீரீஈ இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களுக்கென அந்த இயக்கத்தின் தளபதிகள் முன்னிலையில் கிளிநொச்சியில் ஒரு இடைத்தங்கல் நிலையம் திறந்துவைக்கப்பட்டது. 49 பிள்ளைகள் -27ஆண் பிள்ளைகள் மற்றும் 22 பெண் பிள்ளைகள் - எல்ரீரீஈ இயக்கத்திடம் இருந்து பிரித்தெடுக்கப்பட்டனர். இந்த செயற்திட்டம் முதன்மையான சர்வதேச பங்காளர்களுடன் கூட்டாக இணைந்து, 2003 ஜூலை தொடக்கம் 2005 யூன் மாதம் வரையிலான இரண்டு வருட காலப்பிரிவுக்கான நிகழ்ச்சித் திட்டமிடலுடன்

---

[659] WS on file

[660] http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca200302/20030203child_soldiers_released_unicef_chief.htm

-

உருவாக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் அது 2006 ஜூலை மாதம் வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.[661]

703. இந்தச் செயற்திட்டத்தின் ஒரு பாகமாக அனைத்து சிறுவர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்கு எல்ரீரீஈ இயக்கம் உடன்பட்டிருந்த அதேவேளையில், ஆட்சேர்ப்பு தொடர்ந்து இடம்பெற்று வந்தது. செயற்திட்டத்தில் கையொப்பமிட்டு அடுத்து வந்த 12 மாத காலப்பிரின் போது யுனிசெப் தரவுகளின் பிரகாரம் எல்ரீரீஈ இயக்கம் 625 சிறுவர்களை விடுவித்திருந்த அதேவேளையில், ஆகக்குறைந்தது 1406 சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது.[662]எல்ரீரீஈ இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை எந்த அளவுக்கு குறைவடைந்து வந்தது என்றால், கிளிநொச்சி நிலையம் சிறுவர்களின் குறைந்த விகித விடுவிப்புக் காரணமாக 2005 ஆம் ஆண்டில் தாக்கமான விதத்தில் மூடப்பட்டது.

704. எல்ரீரீஈ இயக்கத்தின் ஆட்சேர்ப்பும், ஆயுதமோதலில் சிறுவர்களை பயன்படுத்தும் செயற்பாடும் 2009 மே மாதத்தில் ஆயுதமோதல் முடிவடையும் வரையில் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபையின் நிகழ்ச்சி நிரலில் இருந்துவந்தது.

**மோதலின் முடிவின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த சிறுவர்களை விடுவித்தல் மற்றும் மீள ஒருங்கிணைத்தல்**

705. ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ 2006 செப்டம்பர் மாதத்தில் சிறுவர்களையும் உள்ளிட்ட விதத்தில் மோதலின் போது “சரணடைந்தவர்கள்” அனைவர் தொடர்பாகவும் திட்டவட்டமான பொறுப்புக்களைக் கொண்ட புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமனம் செய்தார். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மாவட்ட அதிகாரிகள், சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை மாகாண ஆணையாளர் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை என்பவற்றுடன் கலந்தாலோசனை செய்து,எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த சிறுவர்களை பெற்றுக் கொள்வதற்கென “பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களை” அடையாளம் கண்டிருந்தார். எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த சிறுவர்கள் தொடர்பாக பாதுகாப்பான பராமரிப்பு, புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைப்பு என்பன தொடர்பான கொள்கைகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையின் கீழான ஒரு பல்துறை சார் கமிட்டியினால் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன.

706. 2008 டிசம்பர் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட 1580/5 அவசரகால ஒழுங்குவிதிகள் சரணடைந்த சிறுவர்கள் தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய திட்டவட்டமான நடைமுறைகளையும் உள்ளக்குகின்றன. இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நடைமுறைகள் ஒரு மாஜிஸ்ட்ரேட் நீதவானால் தீர்மானிக்கப்படும் விதத்தில் குடும்பத்துடன் மீண்டும் இணைத்தல் அல்லது

---

661 Report on Grave Child Rights Violations in Conflict Areas in Sri Lanka in accordance with UNSCR 1612, 1 November 2005 – 31 october 2006.

662 இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுடனும், இலங்கையில் செயற்பட்டு வந்த ஏனைய சர்வதேச நிறுவனங்களுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்ட மாதாந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது யுனிசெப் புள்ளி விபரங்கள்

அப்பிள்ளையைப் பாதுகாப்பான சிறுவர் தங்குமிட நிலையமொன்றுக்கு அனுப்பிவைத்தல் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.

707. மோதலின் முடிவின் போது வன்னியில் இருந்து வெளியில் வந்த சிறுவர்கள் முதலில் வயது வந்தோர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால், சிறுவர் பாதுகாப்பு முகவரகங்கள் முன்னெடுத்த பரப்புரைகளை அடுத்து, இறுதியில் அவர்கள் மூன்று பாதுகாப்பான சிறுவர் தங்குமிட நிலையங்களில் ஒன்றுக்கு அனுப்பிவைபக்கப்பட்டனர். 2010 ஆம் ஆண்டளவில் கொழும்பில் அமைந்திருந்த இரத்மலான நிலையம் மட்டுமே திறந்து வைக்கப்பட்டிருந்தது. சுமார் 350 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் அவர்களுடைய பெற்றோரிடம் விடுவிக்கப்பட்டனர் அல்லது இடைத் தங்கல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

708. இலங்கை பாதுகாப்புப்படைகள் 2009ஏப்ரல் மாதத்தில் ‘சரணடைந்த’ சிறுவர்கள் எனக் குறிப்பிடப்பட்ட எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த சிறுவர்களை ஓமந்தையிலும் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்தவர்கள் தங்கியிருந்த முகாம்களிலும் பதிவு செய்யத் தொடங்கின. 2009 யூன் மாதம் அளவில் இலங்கை இராணுவம் அந்தவகையில் 181 சிறுவர்களை இனங்கண்டிருந்ததுடன், அவர்களில் 91 சதவீதத்தினர் 16 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருந்துவந்ததுடன், 9சதவீதத்தினர் 14 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருந்துவந்தனர்.[663]வடிகட்டும் சோதனைகளின் போது மொத்தம் 200 சிறுமிகளையும் உள்ளடக்கிய விதத்தில் 556 சிறுவர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அவர்கள் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தில் 1 தொடக்கம் 6 மாதகாலம் வரையிலான காலப் பிரிவை மட்டுமே செலவழித்திருந்தார்கள்.

709. புதிய ஆட்சேர்ப்புக்களை தடுக்கும் விடயத்திலும், சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் விடயத்திலும் அரசாங்கம் காட்டிவந்திருக்கும் அர்ப்பணிப்புணர்வை யுனிசெப் அமைப்பும், சிறுவர்கள் மற்றும் ஆயுதமோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் விசேட தூதுவரும் பாராட்டியிருந்தார்கள். குறிப்பாக, அரசாங்கம் இச்சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் விடயத்தில் கவனம் செலுத்தியிருந்தது என்பதை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கவனத்தில் எடுக்கின்றது. மோதலின் முடிவின் போது 18 வயதிற்கு குறைந்த சிறுவர்களுக்கு ஆதரவு வழங்கப்பட்ட அதேவேளையில், அச்சந்தர்ப்பத்தில் சிறுவர் பாதுகாப்பு முகவரகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பன இது தொடர்பாக ஒரு சில கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தன. உதாரணமாக, சிறுவர்கள் மற்றும் ஆயுதமோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தின் விசேட பிரதிநிதியின் விசேட தூதுவர் 2009 டிசம்பர் மாதத்தில் இலங்கையில் மேற்கொண்ட தனது பயணத்தை அடுத்து சமர்ப்பித்த அறிக்கையில், இந்த நிலையங்கள் இராணுவ ஊழியர்களால் அன்றி சிவில் ஊழியர்களால் நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார். அச்சந்தர்ப்பத்தில், ஒரு நிலையத்தில் குடும்பங்களுடன் தொடர்பு கொள்வதில் நிலவி வந்த ஒருசில தாமதங்கள் குறித்தும் அவர் தனது கரிசனைகயை வெளிப்படுத்தியிருந்தார். மேலும், குறைந்த வயதினராக இருந்து வந்த பொழுது

[663] யுனிசெப் உள்ளக ஆவணம், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பான செயல் குழுவின் இரண்டாவது காலாணடு அறிக்கை, 2009

ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மோதலின் முடிவின் போது வயது வந்தவர்களாக இருந்துவந்த சிறுவர்கள் தொடர்பாகவும் ஏற்பாடுகள் எவையும் இருந்து வரவில்லை.

### கருணாகுழு/ தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் (TMVP)

710. எல்ரீரீஈ இயக்கத்தில் இருந்து பிரிந்த சந்தர்ப்பத்தில் கருணாகுழு முன்னர் எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்த பெருந்தொகையான சிறுவர்களைத் தனது படையணிகளுக்குள் ஒருங்கிணைத்துக் கொண்டது. இக்குழுவின் ஒட்டுமொத்த இராணுவ உத்தியில் கடத்தல்கள் மற்றும் சிறுவர் ஆட்சேர்ப்பு என்பன அடிப்படைக் கூறுகளாக இருந்துவந்தன.[664]

### ஆட்சேர்ப்பு செயன்முறை

711. கருணாகுழுவினால் (2007 ஆம் ஆண்டு தொடக்கம் அதன் அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பினால்) மேற்கொள்ளப்பட்ட சிறுவர் ஆட்சேர்ப்பு ஆகக்குறைந்தது 2008 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து இடம்பெற்று வந்தது. மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களை சூழவிருந்த நகரங்களிலும், கிராமங்களிலும் அரசாங்கப் படைகளுடன் இணையான விதத்தில் கருணாகுழுவும் செயற்பட்டு வந்தது. அக்குழு வீடுவீடாகச் சென்று சிறுவர்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் ஆட்சேர்ப்புச் செய்தது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த ஆட்சேர்ப்பு கடத்தலுக்கு இணையான விதத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

712. கருணாகுழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிறுவர்களின் சராசரி வயது 17ஆக இருந்து வந்தது[665] என 2005 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பிட்டிருந்தது. 2009ஆம்ஆண்டளவில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களில் சாரசரி வயது 15.9ஆக வீழ்ச்சியடைந்திருந்தது.[666] எவ்வாறிருப்பினும், இந்த மதிப்பீடுகள் அறிவிக்கப்பட்ட சம்பவங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டிருந்தமையினால் அவை வயதுப் பகிர்வை முழுமையாக பிரதிநிதித்துவம் செய்தனவா என்ற விடயம் தெளிவாக தெரியவில்லை.

713. 2006 யூன் மாதத்தில் மட்டக்களப்பில் கிரான் பகுதியில் கோவில் ஒன்றில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றின் போது கருணாகுழுவைச் சேர்ந்த பிரிவினரால் 18பேர் கடத்தப்பட்டிருந்தனர். அவர்களில் நான்கு சிறுவர்களும் அடங்குவர்.[667] கருணாகுழு சிறுவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் நிதி ஊக்குவிப்புக்களை வழங்கியதாக கூறப்படுகின்றது. பயிற்சி முடிவடைந்த பின்னர் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவுகளின் வடிவில் இந்தஅலவன்சுகள் வழங்கப்பட்டன. குறிப்பாக, வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து

---

664 இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

665 S/2006/1006, டிசம்பர் 20, 2006, இலங்கையில் சிறுவர் மற்றும் ஆயுதல் மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை.

666 S/2009/325, ஜுன் 25, 2009, சிறுவர் மற்றும் ஆயுதல் மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை.

667 ஐக்கிய நாடுகள், 2006 , இலங்கையில் சிறுவர் மற்றும் ஆயுதல் மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை.

பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தூண்டுதல் அளிக்கும் விதத்தில் இது மேற்கொள்ளப்பட்டிருந்தது.[668]

714. கருணாகுழுவின் உறுப்பினர்கள் 2006 யூலை மாதம் மட்டக்களப்புக்கு அருகில் வாகரைக்கல்லடியில் மாலை நேரத்தில் வீடுவீடாகச் சென்று ஒரு ஆண் பிள்ளையை சுயவிருப்பில் தமது இயக்கத்திற்கு தருமாறு குடும்பங்களிடம் கேட்டுக்கொண்டனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் 12வயதுப் பிள்ளைகள் கூட அவ்விதம் பெறப்பட்டிருந்தனர். ஆண் பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புச் செய்பவர்கள் பெண் பிள்ளைகளை எடுத்துச் செல்வார்கள். அத்தகைய சந்தர்ப்பத்தில் கருணாகுழுவின் உறுப்பினர்கள் அழுதுபுலம்பும் பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளை பலவந்தமாக பறித்து, இழுத்துச் சென்றதை பார்த்ததாக சாட்சிகள் குறிப்பிட்டிருந்தனர்.[669]

715. சிறு பையன்களையும், இளைஞர்களையும் கடத்திய பின்னர் கருணாகுழு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அருகிலிருக்கும் அதன் அரசியல் அலுவலகத்தில் அவர்களைத் தற்காலிகமாக வைத்திருந்தது. தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் அலுவலகங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இலங்கை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பாதுகாப்பைப் பெற்றிருந்தன என அறிவிக்கப்பட்டிருந்தது.

716. கருணாகுழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் நிர்ணயித்துக் கொள்ள முடியாதிருந்தது. 2006 ஆம் ஆண்டிற்கும், 2009 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது கருணா குழுவினால்/ தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பினால் இரு பெண் பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் 596 பிள்ளைகள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததாக யுனிசெப் பதிவு செய்திருந்தது.

717. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுக்கு கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில், கருணா குழு (மற்றும் அதனையடுத்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு) சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்து வந்தமையை அரசாங்கப் படைகள் அறிந்திருக்க முடியும் என்பதனை நம்புவதற்கான நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. 2006 ஆம் ஆண்டு தொடக்கம் கிழக்கு மாகாணம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்ததுடன், இத்தகைய ஆட்சேர்ப்பு பொலிஸ் மற்றும் இலங்கை இராணுவ முகாம்களுக்கு அருகில் இடம் பெற்றுவந்தது. புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிறுவர்கள் இலங்கை இராணுவத்தின் சோதனைச் சாவடிகளுக்கு ஊடாக செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது எனவும் கூறப்படுகின்றது.[670] 2007 ஆம் ஆண்டளவில் கருணாகுழு கிழக்கு மாகாணத்தில் முழுமையாக ஆயுதங்களைத் தாங்கிய

668 ஐக்கிய நாடுகள், 2007 மற்றும் 2009, இலங்கையில் சிறுவர் மற்றும் ஆயுதல் மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை.

669 WS on file

670 இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட சர்வதேச நிறுவனத்தின் உள்ளக ஆவணம்

-

நிலையில் பாதுகாப்பு படைகளின் சோதனைச் சாவடிகளை பகிரங்கமாக தாண்டிச்சென்றது.[671]

718. சிறுவர்கள் மற்றும் ஆயுதமோதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட ஆலோசகரான அலன்றொக் 2006 ஆம் ஆண்டு மேற்கொண்ட தனது இலங்கை விஜயத்தை அடுத்து சமர்ப்பித்த அறிக்கையில் "அரசாங்கப் பாதுகாப்பு படைகளின் ஒருசில பிரிவுகள் கருணா அணியினால் மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் மற்றும் சிறுவர்களை பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்தல் என்பவற்றுக்கு ஆதரவளிப்பதனையும், ஒருசில சந்தர்ப்பங்களில் அவற்றில் பங்கேற்பதனையும் காட்டும் வலுவான நம்பகமான சான்றுகள்" தனக்கு கிடைத்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.[672] மட்டக்களப்பு மாவட்டத்தில் கடத்தப்பட்டிருந்த பெருந்தொகையான சிறுவர்களின் பெற்றோரை அவர் சந்தித்திருந்தார். மேலும்,பல நம்பகமான மனித உரிமைகள் அமைப்புக்களும் இதே குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தன. இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் தொடர்பான மீறல்களை அறிக்கையிட்டிருந்ததுடன், அத்தகைய மீறல்களில் பாதுகாப்புப் படைகள் கருணாகுழுவுடனும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்புடனும் இணைந்து செயற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்கென சிறுவர்களை கடத்துவதுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களும் இதில் அடங்கியிருந்தன.[673]

**சிறுவர்கள் பயன்படுத்தப்பட்டமை**

719. கருணா குழு எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து பிரிந்த பின்னர், அதில் சம்பந்தப்பட்டிருந்த சிறுவர்களுக்கு அடிப்படை இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. உதாரணமாக, வெலிக்கந்தை இலங்கை இராணுவத்தின் பயிற்சி முகாமிற்கு அருகில் அமைந்திருந்த கருணா குழுவின் பிரதான முகாமில் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.[674] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட சாட்சி ஒருவர், 2005 ஆம் ஆண்டில் வெலிஓயா பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தின் பச்சை சீருடை அணிந்திருந்த சிறுவர்கள் நடமாடியதை தாம் பார்த்ததாக கூறினார்.[675] திருகோணமலையில் கருணா குழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 14 வயது சிறுவர்கள் இலங்கை இராணுவத்தளம் ஒன்றுக்கு அருகில் கடமையில் இருந்த விடயமும் அவதானிக்கப்பட்டுள்ளது.[676]

720. சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்த 2006 ஆம் ஆண்டு மற்றும்

---

671 இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

672 Statement from the Special Advisor On Children And Armed Conflict, Colombo,13 Nov 2006 < https://childrenandarmedconflict.un.org/press-release/13Nov06>

673 இலங்கை போர் நிறுத்தம கண்காணிப்புக் குழுவின் ஆவணம்

674 US diplomatic cable, Karuna group emboldened in the east, 20 March 2007, < https://www.wikileaks.org/plusd/cables/07COLOMBO460_a.html>

675 WS on file

676 WS on file

2007ஆம் ஆண்டு அறிக்கைகளில்[677] ஆயுதமோதல் நிலைமைகளில் சிறுவர்களை பயன்படுத்தி வரும் ஒரு தரப்பாக கருணா குழு / தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு பட்டியலிடப்பட்டிருந்தது. சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் செயற்குழு இலங்கை நிலவரம் தொடர்பான அதன் 2007 ஆம் ஆண்டு அறிக்கையில் ‘‘அறிக்கையிடும் காலப் பிரிவின் போது தமிழ் மக்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு / கருணா குழு தொடர்ந்தும் சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்து, பயன்படுத்தி வந்தது தொடர்பாக செயற்குழு (S/AC.51/2007/11) ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட்டிருந்த போதிலும், அதன் படையணிகளில் இருந்து வரும் அனைத்து சிறுவர்களையும் விடுவிக்கத் தவறியுள்ளது. மேலும், சிறுவர்களை விடுவிப்பதற்கு ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதை தடைசெய்வது தொடர்பான உள்ளக விதிமுறைகள் வெளியிடப்பட்டிருந்த போதிலும், கூட, கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான திட்டவட்டமான காலக் கெடுவுடன் கூடிய செயற்திட்டம் ஒன்றை முன்வைக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் அமைப்புடன் பயனுள்ள விதத்தில் ஓர் உரையாடலில் ஈடுபடத்தவறியுள்ளது’’[678]என்ற விதத்தில் தனது கரிசனைகளை தெரிவித்திருந்தது.

**சிறுவர்களை விடுவிப்பதற்கான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு /கருணாகுழுவின் செயற்திட்டம்**

721. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு/கருணா குழு அரசாங்கம் மற்றும் யுனிசெப் என்பவற்றுடன் 2008 டிசம்பர் மாத்தில் செயற்திட்டம் ஒன்றுக்கு உடன்பட்டது. இச்செயற்திட்டத்தின் பிரகாரம், அது சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்களை பயன்படுத்துதல் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், அதன் படையணிகளிலிருந்துவரும் சிறுவர்களை விடுவிப்பதற்கும் உடன்பாடு தெரிவித்திருந்தது. இச்செயற்திட்டம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், குறைந்தது 122 சிறுவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். மோதலின் எஞ்சியிருந்த காலப் பிரிவின் போது தமிழ் மக்கள் விடுலைப்புலிகள் அமைப்பு /கருணா குழு மேலும்,26 சிறுவர்களைமட்டுமே ஆட்சேர்ப்புச் செய்திருந்ததென யுனிசெப் பதிவு செய்திருந்தது.[679] 2011 இல் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு /கருணா குழு செயற்திட்டத்திற்கு இணங்கியொழுகியமையை அடுத்து, பாதுகாப்புச்சபை தீர்மானம் 1612 இன் கீழ் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை/ கருணா குழுவை செயலாளர் நாயகம் பட்டியலிலிருந்து நீக்கினார்.[680](அச்சந்தர்ப்பத்தில் கருணா குழுவில் இருந்து பிரிந்து சென்றிருந்த) பிள்ளையானும் தனது படையணிகளில் இன்னமும் இருந்து வந்த சிறுவர்களை இணங்காண்பதற்கும், அவர்களை விடுவித்து, மீள ஒருங்கிணைப்பதற்கும் அரசாங்க அதிகாரிகளுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டார்.

677 A/61/529-S/2006/826; AS/2007/757; A/62/609-S/2007/757

678 S/AC.51/2008/11, அக்டோபர் 21, சிறுவர் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயல் குழு, இலங்கையின் சிறுவர் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான முடிவுக் குறிப்புக்கள், 2008.

679 ஐக்கிய நாடுகள் அமைப்பு, 2011, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் குறித்த செயலாளர் நாயகத்தின் அறிக்கை

680 https://childrenandarmedconflict.un.org/our-work/action-plans/

-

## சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்கள் பயன்படுத்துவது தொடர்பாக நீதி மற்றும் பொறுப்புக் கூறுதல்

722. சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பன குற்றச்செயல்களாக இருந்து வருகின்றன என இலங்கையின் சட்டம் குறிப்பிடுகின்றது. எவரேனும் நபர் ஒருவர் ஒரு சிறுவரை ஆயுதமோதலில் பயன்படுத்துவற்காக ஈடுபடுத்தினால் அல்லது ஆட்சேர்ப்புச் செய்தால், அந்நபர் ஒரு குற்றச்செயலுக்கு குற்றவாளியாக்கப்படுவார் என தண்டனைச் சட்டக்கோவை (2006) குறிப்பிடுகின்றது. ''ஒரு பிள்ளை'' என்ற பதத்திற்கு சர்வதேச சட்டத்திற்கு இணங்கிய விதத்தில் 18 வயதிற்குக் குறைந்த நபர் என வரைவிலக்கணம் வழங்கப்படுகின்றது.[681]

723. சிறுவர்களை படையணிகளில் சேர்த்துக் கொள்வது ''எல்ரீரீஈ இயக்கத்தின் மிக மோசமான குற்றச் செயல்களில் ஒன்றாக இருந்துவந்தது'' என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எடுத்து விளக்கியிருந்ததுடன், கிழக்கு மாகாணத்தில் ஏனைய குழுக்கள் இவ்விதம் சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்துவரும் விடயம் குறித்து தனது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தது. ''போராளிகளாக சிறுவர்கள் படையணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள் என்பதற்கு தெளிவான சாட்சியங்கள் இருந்துவரும் சந்தர்ப்பங்களில், அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியிருப்பதுடன், குற்றமிழைத்திருப்பவர்கள் சட்டத்தின் முன்னால் எடுத்துவரப்படுதல் வேண்டும்'' என அது பரிந்துரை செய்திருந்தது. ''எல்ரீரீஈ இயக்கத்துடன் அல்லது ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்திருக்கும் சட்டவிரோதமான ஆயுதக்குழுக்களினால் சிறுவர்கள் ஆட்சேர்ப்பு தொடர்பாக குற்றமிழைப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கும் நோக்கத்துடன் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்"என்றும் அந்த ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.[682]

724. எனினும், சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தமைக்கு எதிராக எழிலன் மற்றும் பாப்பா போன்ற எல்ரீரீஈ உறுப்பினர்களுக்கு எதிராக அல்லது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்/கருணாகுழுவுக்கு எதிராக அல்லது ஏனைய துணைப் படைக்குழுக்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விடயம் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு தெரியவரவில்லை. எழிலன் மற்றும் பாப்பா ஆகியோர் 2009 மே 18 ஆம் திகதி அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் இருக்கும் பொழுது, அவர்களை மக்கள் கடைசியாக கண்டிருந்தனர். கருணா மற்றும் பிள்ளையான் ஆகியோர் அதன் பின்னர் மத்திய அரசாங்கத்திலும், மாகாணசபையிலும் அமைச்சுப் பொறுப்புக்களை வகித்து வந்தனர். 2006 ஆம் ஆண்டு தொடக்கம் சிறுவர் ஆட்சேர்ப்பு விடயம் ஒரு குற்றமாக்கப்பட்டிருந்தமை மற்றும் அரசாங்கக்கட்டுப்பாட்டில் இருந்துவந்த பிரதேசங்களில் அத்தகைய ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருந்தது என்ற விடயம் என்பவற்றின் பின்னணியில், இதனை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாதுள்ளது.

---

681 இலங்கை தண்டனைச் சட்டக்கோவை, 2006, பிரிவு 358A

682 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, அத்தியாயம் 9, முதன்மை அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றின் சாராம்சம், பந்தி 9.79

725. இலங்கை பாதுகாப்புப் படைகளில் இருந்துவந்த சில கூறுகளினால் சிறுவர் ஆட்சேர்ப்புக்கு உதவியும்,தூண்டுதலும் வழங்கப்பட்டுவருகின்றது என்பது தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கென 2007 ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கம் அமைச்சுக்களுக்கு இடையிலான உயர் மட்ட கமிட்டி ஒன்றை ஸ்தாபித்தது. எவ்வாறிருப்பினும், இக் கமிட்டியினால் முன்னெடுக்கப்பட்ட எவையேனும் நடவடிக்கைகள் குறித்தோ அல்லது அதன் பணியின் பெறுபேறுகள் குறித்தோ இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு எத்தகைய தகவல்களும் கிடைக்கவில்லை.

726. சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்ததாக அறிக்கையிடப்பட்டிருந்த இனியபாரதி குழுவினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சிறுவர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்வதற்கென 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும், ஒரு விசேட பொலிஸ் விசாரணைக் குழுவும் பூர்வாங்க விசாரணையொன்றை மேற்கொண்டன. எனினும், இந்த விசாரணையின் பெறுபேறுகள் எவற்றையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு அறிந்திருக்கவில்லை.[683] இக்குழு 2012 ஆம் ஆண்டில்பாதுகாப்புச் சபையினால் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது.

727. சிறுவர் மற்றும் ஆயுதமோதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை அறிக்கையின் பின்னிணைப்பு IIஇன் பட்டியலிலிருந்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் 2012 ஆம் ஆண்டில் இலங்கையை நீக்கினார்.[684] ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையின் செயல்குழு அதன் தொடர் நடவடிக்கை தொடர்பான முடிவுக் குறிப்புக்களில் ‘‘ஆயுதமோதல் இடம்பெற்றுவந்த காலப்பிரிவின் போது பிரயோகிக்கத்தக்க தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை மீறும் விதத்தில் அனைத்து தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட சிறுவர்களுக்கு எதிரான அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பாக தொடர்ந்து புலன் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமென’’ இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தது. மேலும்,‘‘ஆயுதமோதல் இடம்பெற்ற காலப்பிரிவின் போது நிகழ்த்தப்பட்ட அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வரும் நபர்களை பொறுப்புக்கூறவைக்கும் நிலையை உறுதிப்படுத்துமாறும்’’ அது அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டிருந்தது.[685]

---

683 (இனியபாரதி என்றும் அழைக்கப்படும்) கே.புஸ்பகுமார், முன்னாள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் துணைப் படைத் தலைவராக இருந்து வந்ததுடன், அம்பாறை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கைகளில் அவருடைய குழு சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட 2012 ஆம் ஆண்டிற்கான அறிக்கையிலும் அது குறிப்பிடப்பட்டிருந்தது.

684 S/AC.51/2012/3சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான பாதுகாப்புச் சபை செயல்குழு, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான நிலவரம் குறித்த முடிவுரைகள்

685 S/AC.51/2012/3, டிசம்பர் 21, 2012 சிறுவர்கள் மற்றும் ஆயுதமோதல் தொடர்பான செயல்குழு, இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுதமோதல் தொடர்பான நிலவரம் குறித்த முடிவுக்கு குறிப்புக்கள், பந்தி 9.c.

# XIII. ஆயுதமோதலின் இறுதிக்கட்டத்தின் போது, போர் நடவடிக்கைகள் பொதுமக்களின் மீதும் பொதுவசதிகள் மீதும் எடுத்து வந்திருந்த தாக்கம்

## அறிமுகம்

728. வன்னியில் அரசாங்கம் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளின் இறுதிக்கட்டங்களின் போது 2009 ஜனவரி மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடையில் பெரும்பாலும் இடம்பெற்ற பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் பொது வசதிகள் மீதான தாக்குதல்கள் என்பவற்றை இந்த அத்தியாயம் பரிசீலனை செய்கின்றது. ஆயுத மோதலின் முன்னைய கட்டங்களில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்த போதிலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு இறுதி மாதங்களில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் விடயத்திற்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. போர் நடவடிக்கைகளின் தீவிரம் மற்றும் பொதுமக்கள் மீதும் பாதுகாக்கப்பட்ட இடங்கள் மீதும் ஏற்பட்டிருந்த விரிவான தாக்கம் என்பனவே இதற்கான காரணமாகும்.

729. குறிப்பாக, மருத்துவமனைகள் அல்லது காயமடைந்தவர்களை, நோயாளர்களை மற்றும் பொதுமக்களை போர் நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்து, அவர்களுக்கு தஞ்சம் வழங்குவதற்கென ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஏனைய வலயங்கள்,ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையங்கள் மற்றும் ஏனைய மனித நேய நிவாரண உதவிகளை வழங்கும் இடங்கள் போன்ற சிவில் இலக்குகள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை நடத்தும் விடயத்தில் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பெருமளவுக்கு கவனம் செலுத்தியது. இவ்விதம் பொதுமக்கள் மீதும், பொது வசதிகள் மீதும், இலங்கை இராணுவத்தின் நிலைகளிலிருந்து மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஒரு மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர், பிரித்து வேறுபடுத்தி அறிதல் மற்றும் விகிதாசார அளவு என்பன தொடர்பான கோட்பாடுகளுக்கு இணங்கியொழுகவேண்டிய கடப்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கும், பொதுவசதிகளுக்கும் ஏற்படக்கூடிய தீங்குகளை தடுப்பதற்கு அல்லது ஆகக் குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்வதற்கு சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை வழிமுறைகளையும் மேற்கொள்ளவேண்டிய கடப்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி இச்சம்பவங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன.[686] எவ்வாறிருப்பினும், சாத்தியமான அத்துமீறல்கள் இடம்பெற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளை மேலும் ஸ்தாபித்துக் கொள்வதற்கும், பொறுப்புக் கூறவேண்டியவர்களை இனங்கண்டு கொள்வதற்குமென சுயாதீனமாக ஒரு நீதிமன்றம் மேலும் விசாரணைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

730. இந்த அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்படும் உதாரணங்கள் அரசாங்கத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட மூன்று யுத்த சூன்ய வயலங்களுக்குள் பொதுமக்களின் உயிரிழப்புக்களை எடுத்து வந்ததாக கூறப்படும் ஒரு சில தாக்குதல்களை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கின்றன. மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இடம்பெற்ற சேதங்கள் மற்றும் தீங்கு என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் நிகழ்த்தப்பட்டதாக கூறப்படும் அத்துமீறல்களின் பாரதூரமான தன்மை காரணமாகவே இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு

---

[686] பார்க்கவும் அத்தியாயம் V - சட்ட சட்டகம்

குறிப்பிட்ட சில சம்பவங்களை இதற்கெனத் தெரிவுசெய்துள்ளது. பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் யுத்த சூன்ய வலயங்களுக்குள்ளேயே இடம்பெற்றிருந்தன. இதற்கு காரணம் இலங்கை இராணும் முன்னகர்ந்து சென்ற பொழுது, இடம் பெயர்ந்த மனிதநேய நிவாரண வசதிகள் யுத்த சூன்ய வலயங்களுக்குள் எடுத்துச் செல்லப்பட்டமையாகும். எவ்வாறிருப்பினும்,பொதுமக்களையும், பொதுவசதிகளையும் பாதிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதல்கள் ஒருசில உதாரணங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதைப் போல யுத்த சூன்ய வலயங்களுக்குள் மட்டும் வரையறுக்கப் பட்டிருக்கவில்லை.

731. மேலும், இந்தப் புலன் விசாரணை எல்ரீரீஈ இயக்கம் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகள் தொடர்பாக - குறிப்பாக பொது மக்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் ஆபத்து விளைவிப்பதனை குறைந்தபட்ச மட்டத்தில் வைத்துக் கொள்வதற்கு சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டிய கடப்பாட்டினையும் உள்ளடக்கிய விதத்தில் - எல்ரீரீஈ இயக்கத்தினால் பின்பற்றப்பட்ட உத்திகளையும் பரிசீலனை செய்தது.[687] எல்ரீரீஈ இயக்கம் மருத்துவமனைகள் போன்ற பாதுகாக்கப்பட்ட இடங்களுக்கு அருகில் இருந்து தாக்குதல்களை தொடுத்ததாகவும், அத்தகைய இடங்களுக்கு அருகில் போர் நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கவனம் செலுத்தியது. எல்ரீரீஈ இயக்கம் அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசத்தில் வசித்துவந்த பொதுமக்களின் நடமாட்டத்தின் மீது விதித்திருந்த கட்டுப்பாட்டின் இயல்பு மற்றும் அளவு என்பன அத்தியாயம் XIVஇல் புறம்பாக பரிசீலனை செய்யப்படுகின்றன.

### போர் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்: அரசாங்கப் படைகள்

732. போர் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக இடம்பெற்றதாக கூறப்படும் அத்துமீறல்களை எடுத்துக்காட்டும் பொருட்டு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு திட்டவட்டமான ஒரு சில சம்பவங்களை தெரிவு செய்திருந்த போதிலும், இந்த மோதலின் பரவலான பின்புலத்தில் அவை நோக்கப்படுதல் வேண்டும். எல்ரீரீஈ இயக்கம் 2008ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும், 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் தனது வலுவான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களை இலங்கை இராணுவத்திடம் இழந்தது. இலங்கை தொடர்பான புலன் விசாணைக்குழு கலந்தாலோசனை செய்த இராணுவ பகுப்பாய்வாளர்களின் கருத்தின் பிரகாரம்,அச்சந்தர்ப்பம் தொடக்கம் அந்த இயக்கத்தின் இராணுவத்தோல்வி தவிர்க்க முடியாததாகத் தென்படத் தொடங்கியது. இங்கை இராணுவத்தின் படைப்பிரிவுகள் மூன்று வெவ்வேறு திசைகளிலிருந்து வடகிழக்கை நோக்கி முன்னகர்ந்து சென்ற பொழுது, எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரையும், பொதுமக்களையும் மிகச் சிறிய பிரதேசம் ஒன்றிற்குள் வைத்திருக்கும் இராணுவ உத்தியை அரசாங்கப்படைகள் பயன்படுத்தின. குறிப்பாக ‘‘யுத்த வலயங்கள்’’ அல்லது ‘‘யுத்த சூன்ய வலயங்கள்’’ என்பவற்றை உருவாக்குவதன் மூலம் இது ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்டது.

[687] பார்க்கவும் அத்தியாயம் V - சட்ட சட்டகம்

-

**“பொதுமக்கள் உயிரிழப்புக்களைப் பூச்சிய மட்டத்தில் வைத்திருக்கும்” அரசாங்கத்தின் வெளிப்படுத்தப்பட்ட கொள்கை**

733. மோதல் இடம்பெற்ற காலப்பிரிவின் போதும், அதனையடுத்து வந்த பல காலப் பிரிவுகளிலும் வன்னியில் முன்னெடுக்கப்பட்ட தமது செயற்பாடுகளின் ஒரு பாகமாக “பொதுமக்கள் உயிரிழப்புக்களைப் பூச்சிய மட்டத்தில் வைத்திருக்கும்” ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்ததாக அரசாங்கமும், பாதுகாப்புபடைகளும் கூறிவந்துள்ளன. இது எல்ரீரீஈ இயக்கத்தினால் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் “பொதுமக்களை மீட்டெடுக்கும் மனிதநேய நடவடிக்கையாக” அரசாங்கத்தினால் வர்ணிக்கப்பட்டிருந்தது.[688]

734. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபகஷ் 2010ஆம் ஆண்டில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் முன்வைத்த தனது சமர்ப்பணத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:“பொதுமக்கள் உயிரிழப்புக்களைப் பூச்சிய மட்டத்தில் வைத்திருக்கும் முக்கியமான ஒரு எண்ணக்கருவை நாங்கள் உள்ளடக்கிக் கொள்ளவேண்டுமென ஜனாதிபதியும், பாதுகாப்புச்சபையின் உறுப்பினர்களும் தீர்மானித்திருந்தார்கள். [….] இராணுவத் தலைமையகம், கடற்படைத் தலைமையகம், விமானப்படைத் தலைமையகம் ஆகிய இடங்களிலிருந்து செல்லும் அனைத்து நடவடிக்கை கட்டளைகளிலும் முதல் விடயமாக அது இருந்துவந்தது. [….] பொதுமக்களின் உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்வதற்குச் சாத்தியமான அனைத்து வழிமுறைகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது”. இந்தச் செய்தி “தலைமையகங்களில் இருந்து படையணி மட்டம் வரையிலான அனைத்து மட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. ஆகவே, அந்த நிலையில் பொதுமக்களின் உயிரிழப்புக்களை தவிர்க்கும் விதத்தில் திட்டங்களை தீட்டுவது மிக முக்கியமானது என்ற விடயத்தை அவர்கள் தெரிந்து கொள்வார்கள்”என்றும் அந்தச் செய்தி கூறியது.[689]

735. பொதுமக்களின் உயிரிழப்புக்களை தவிர்த்துக்கொள்ளும் நோக்கிலான தனது கொள்கைக்கு பின்வரும் வழிமுறைகளின் மூலம் ஆதரவளிக்கப்பட்டிருந்து என அரசாங்கம் கூறியது:

- “பொதுமக்களின் உயிரிழப்புக்களை பூச்சிய மட்டத்தில் வைத்திருத்தல் தொடர்பான கொள்கை” குறித்த ஜனாதிபதியின் பணிப்புரை, ஆயுதப் படைகளின் அனைத்து மட்டங்களுக்கும், அனைத்துப் பிரிவுகளுக்கும் தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவற்றின் அனைத்துத் திட்டங்களிலும், வழங்கப்படும் கட்டளைகளிலும் இது முதன்மையான ஒரு விடயமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. மேலும், பாதுகாப்புப்படைகள் போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பின்பற்றப்படவேண்டிய விதிமுறைகளிலும் ஒரு முக்கிய கூறாக அது இருந்துவந்தது.[690]

---

688 மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, ஜுலை 2006, Op.cit.

689 பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ LLRC ஆணைக்குழுவிடம் முன்வைத்த சமர்ப்பணம், ஆகஸ்ட் 17,2010.

690 LLRCஅறிக்கை, பந்தி 3.17.

- முனைப்பாக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தளபதிகளும், துருப்புக்களும் "பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு என்பன தொடர்பான அவர்களுடைய பொறுப்புக்களை அறிந்திருப்பதனையும், போர் உக்கிரமடையும் நிலையில் பொருத்தமான தகவல்களை அறிந்த நிலையில் முடிவுகளை மேற்கொள்வதனையும்"உறுதிப்படுத்துவதற்கென இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டம் என்பன தொடர்பான விரிவான பயிற்சிகளை வழங்குதல்.[691]

- பிரதானமாக ஆளில்லாத வேவு விமானங்களிலிருந்து கிடைத்த போர்க்கள புலனாய்வுத் தகவல்கள், போர்க்களங்களில் பொதுமக்கள் இல்லாதிருக்கும் நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு தளபதிகளுக்கு தெளிவான தகவல்களை வழங்கின.[692] ஜெனரல் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "பொதுமக்களின் உயிரிழப்புக்களை குறைந்த பட்சத்தில் வைத்திருக்கும் பொருட்டு ஆளில்லாத வேவு விமானங்கள் எமக்கு பிரமாண்டமான அளவில் ஆதரவளித்திருந்தன. அதன் காரணமாக எல்ரீரீஈ இயக்கம் எங்கிருக்கின்றது என்ற விடயத்தை நாங்கள் துல்லியமாக அறிந்திருந்தோம் எல்ரீரீஈயின் படையணிகள் எங்கிருக்கின்றன என்பதனையும் நாங்கள் சரியாக அறிந்திருந்தோம். அதன் துருப்புக்களை எந்த இடத்தில் ஒன்று குவித்திருக்கின்றது என்பதனையும் நாங்கள் துல்லியமாக தெரிந்துகொண்டோம் பொதுமக்கள் பெருந்தொகையாக செறிந்துவாழும் இடங்கள் எவை என்பதனையும் நாங்கள் துல்லியமாக தெரிந்துகொண்டோம். எனவே, பொதுமக்களுக்கு எத்தகைய சிரமங்களும் ஏற்படாத விதத்தில் நாங்கள் எல்ரீரீஈ உடன் சண்டையில் ஈடுபடக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அது நீங்கள் உங்களுடைய கண்களால் ஒரு பொருளை நேரடியாக பார்ப்பதை ஒத்ததாகும்."[693]

- யுத்த சூன்ய வலயங்களுக்குச் செல்லுமாறு பொதுமக்களுக்குப் பொதுவான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டதுடன், தாக்குதல்களுக்கு முன்னர் திட்டவட்டமான விதத்தில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன, இலக்கு வைக்கப்பட்ட வலயங்களில் இருந்து பொதுமக்களின் வெளியேற்றம் தொழில்நுட்ப முறைகளின் பயன்பாட்டிற்கு ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது.[694]

- பாதுகாப்புப் படையினர் தாக்குதல் இலக்குகளை துல்லியமாகக் கணிப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு தீவிரமான பயிற்சி வழங்கப்பட்டது.[695]

- தாம் வைக்கும் இலக்குகள் சரியான இடத்தைச் சென்று தாக்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பாதுகாப்புப் படையினருக்கு கடுமையான

---

[691] மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, ஜூலை 2006, Op.cit, பந்தி 249.

[692] மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 240.

[693] 53 ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் கமல் குணரத்ன கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணம், செப்டம்பர் 8, 2010.

[694] மனிதநேயச் செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 168 – 228

[695] மனிதநேயச் செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 242 – 244

பயிற்சிகள் வழங்கப்பட்டன. போர்ச் சேத மதிப்பீடுகளை மேற்கொள்வதனையும் இது உள்ளடக்கியிருந்தது.

- இரண்டாம் நிலைச் தேசங்களை குறைத்துக் கொள்ளும் பொருட்டு இலங்கை விமானப்படை துல்லியமாக இலக்குகளைச் சென்று தாக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்தியது.[696] ஆட்டிலறித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், அந்த சூட்டுத்தாக்கம் போய்விழும் பிரதேசங்களை எடுத்துக் காட்டுவதற்கென ராடார்களும், அமைவிடத்தைக் கண்டுபிடிக்கும் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன.[697]

- இலக்குகளைத் தெரிவுசெய்தல், மதிப்பிடுதல் மற்றும் நடவடிக்கையை முன்னெடுத்தல் என்பவற்றுக்கென விரிவான விதத்தில் முடிவுகளை மேற்கொள்ளும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. அந்தநிலையில், சரியான இலக்குகள் தொடர்பாக மட்டுமே நடவடிக்கைகள் முன்னெடுப்பதனை அவை உறுதிப்படுத்தும்.[698]விமானப்படைத்தளபதி இப்படிக் கூறியிருந்தார்: ''மீண்டும் நானே தனிப்பட்ட முறையில் இலக்குகளைப் பரிசீலித்துப் பார்ப்பேன். இந்தத் தாக்குதல் காரணமாக ஏதேனும் மறைமுகமான சேதங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்பதையும் நான் பார்ப்பேன்.''[699]களத்தில் இருந்த படைகளின் சூட்டுத்தாக்குதல்கள் தொடர்பாக இராணுவத்தளபதி இப்படிக் கூறியிருந்தார்: ''எமது ரேடியோ தொடர்பாடல்களுக்கு ஊடாக நாங்கள் பரிசீலனைகளை நடத்துகின்றோம். சூட்டுத்தாக்குதல்களை நாங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். அது தொடர்பாக கவனமாக இருக்குமாறும், உரிய விதத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நாங்கள் அறிவுறுத்தல்களை வழங்குகின்றோம்.''[700]

736. மனிதநேய நடவடிக்கை–விடயப் பகுப்பாய்வு என்ற தலைப்பிலான அரசாங்கத்தின் அறிக்கை, பொதுவான நடவடிக்கை நடைமுறைகள் மற்றும் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான முன்னாயத்தங்கள் தொடர்பான ஒரு பிரிவைக் கொண்டிருப்பதுடன், அப்பிரிவு இலங்கை இராணுவத்திற்கான இலக்குகளை அடையாளம் காணுதல் மற்றும் போர்ப் பயிற்சிகள் என்பன தொடர்பாகவும்,கலாசாரச் சொத்துக்களின் பாதுகாப்பு, ராடார் முறைக்கூடாக ஆட்டிலறிகளை மற்றும் மோட்டார் என்பவற்றை பயன்படுத்துதல்,உளவு பார்க்கும் விமானங்கள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் என்பன தொடர்பான பயிற்சிகளையும் உள்ளடக்குகின்றது. அப்பயிற்சி ''இலக்குளை சரி பார்த்துக் கொள்வதற்கும், துல்லியமான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அப்படைகளுக்கு உதவுகின்றன. அது மேலும் இப்படி குறிப்பிடுகின்றது. ''தாக்குதல்களுக்கு முன்னர் தேவைப்பட்ட விதத்தில் பொதுமக்களுக்கு பல்வேறு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. பொதுமக்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறுவதனை

[696] மனிதநேயச் செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 243

[697] இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் முன்வைத்த சமர்ப்பணம் செப்டம்பர் 8, 2010.

[698] மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 239

[699] எயார் சீப் மார்ஷல் டபிள்யு.டி.ஆர்.எம்.ஜே. குணதிலக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணம் - செப்டம்பர் 8, 2010

[700] இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவின் சமர்ப்பணம் - செப்ரம்பர் 8, 2010.

உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், மறைமுகமான சேதங்களை குறைத்துக் கொள்வதற்கும் அதி நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.”[701]

737. விமானப்படையினால் பின்பற்றப்பட்ட இலக்குவைக்கும் நடைமுறைகள் தொடர்பான பல ஆவணங்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு பார்வையிட்டுள்ளது. மேலும், அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகளையும் அது மீளாய்வு செய்துள்ளது. விமானப்படையைப் பொறுத்தவரையில் மிகக் கவனமான விதத்தில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன என்ற விடயத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் வலியுறுத்திக் கூறியிருந்தார். “நாங்கள் மிகத் தெளிவான ஒரு செயல்முறையைக் கொண்டிருந்தோம். விமானப் படைத் தளபதியின் ஒப்புதலைப் பெற்றுக்கொண்ட பின்னரேயே விமானத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன”என அவர் கூறியிருந்தார். விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் குணதிலக, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான தனது அறிக்கையில் “நாங்கள் எந்த அளவுக்கு கவனம் எடுக்கின்றோம் என்றால், ஓரிலக்கைத் தீர்மானிப்பதற்கு முன்னர், ஒரு நடைமுறையை நாங்கள் பின்பற்ற வேண்டியிருக்கின்றது. நாள் ஒன்றுக்கு 24 மணி நேரமும் நாங்கள் வானிலிருந்து கண்காணிக்கும் செயற்பாட்டை மேற்கொண்டுவந்தோம். எதிரி நகர்ந்து செல்லும் சந்தர்ப்பங்களில் அவர்கள் இருக்கும் இடத்தை எம்மால் அடையாளம் காணமுடியும். ஒன்றில் நாங்கள் அவர்களை நேரடியாக எதிர்கொள்கின்றோம் அல்லது இராணுவத்திற்கு அல்லது கடற்படைக்கு அது குறித்து தெரிவிக்கின்றோம்”என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தார்.

738. அந்த நடைமுறையின் துல்லியமான கூறுகளை அவர் விவரமாக எடுத்துவிளக்கியிருந்தார்: “முதலில் நாங்கள் ஏராளமான புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றோம். எமது உளவுபார்க்கும் விமானங்களை அல்லது பீச்கிராப்ட் விமானங்களை அனுப்பிவைக்கின்றோம். பொதுமக்கள் வசித்துவரும் இடங்கள் இருக்கின்றனவா என்பதனை கண்டறிவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம்அல்லது விமானத்தில் இருந்துஇலக்கு வைத்து தாக்குமிடத்து சேதமடையக்கூடிய ஏதேனும் ஒரு வஸ்து இருக்கின்றதா எனப் பார்க்கின்றோம். அவை அனைத்தும் குறித்து நாங்கள் திருப்தியடைந்த பின்னர் அந்தப் படங்களை, தாக்குதல் நடத்தும் பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கின்றோம். அவை இலக்குவைப்பது தொடர்பாக விரிவான முறையில் கவனம் செலுத்துகின்றன. நாங்கள் இலக்குகளுக்கு ஏற்ற விதத்தில் ஆயுதங்களைப் பொருத்தமாக பயன்படுத்துகின்றோம். எமது உளவு பார்க்கும் விமானங்களை நாங்கள் மேலே வானில் அனுப்புவதுடன், இதனை செய்யப்போகும் படைப்பிரிவுக்கு ஒரு நேரடிப்படத்தை நாங்கள் பெற்றுக்கொடுக்கின்றோம். அதேவேளையில், விமானப்படைத் தலைமையகத்தில் இருந்து இந்த இலக்கை நாங்கள் கண்காணிக்கின்றோம்”.

739. அவர் தொடர்ந்தும் இப்படிக் கூறியிருந்தார்: “விமானப்படைச் செயற்பாடுகளின் பணிப்பாளர் இந்த இலக்குகளை தயாரிக்கின்றார். இந்தத் தாக்குதலின் போது மறைமுகமான பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றனவா என்பதனை பார்ப்பதற்காக அந்த இலக்குகளை நான் தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்கின்றேன்”. இந்தக் கண்டிப்பான நடைமுறைகளை பின்பற்றுவதனூடாக

[701] மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 228

“ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் நூறு சதவீதம் துல்லியமாக செயற்படுகின்றோம்” என்ற விடயத்தை அவர் உறுதிபடக் கூறியிருந்தார்.

740. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்த ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி ஒருவர், பொருத்தமான இலக்குகளை நிர்ணயிப்பதில் பின்பற்றப்படும் மேலும் சில வழிமுறைகளை குறிப்பிட்டிருந்தார். மேலும், விகிதாரசாரத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தது என அவர் குறிப்பிட்டார். தாக்கமான விதத்தில் கட்டளையிடுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பவற்றுக்கான பயிற்சி துல்லியமாக இலக்குகளை நிர்ணயிக்கும் முறைகளை அபிவிருத்தி செய்தல், களத்தில் இருக்கும் துருப்புக்களுடன் இணைந்த விதத்தில் விமானக் கட்டுப்பாட்டு முறைகளை முன்னெடுத்தல் துல்லியமான ஆயுதங்களைப் பயன்படுத்துதல், ஒவ்வொரு நடவடிக்கையின் பின்னரும் நடைமுறையை தரமுயர்த்துவதற்கும், விமானிகளுக்கு தகவல்களைத் தெரிவிப்பதற்கும் போர்ச் சேத மதிப்பீட்டு முறை ஒன்றை மேற்கொள்ளல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது.

741. விமானப்படையின் இலக்குவைக்கும் நடைமுறைகள் குறித்த இந்த விரிவான சாட்சியங்களுக்கு மாறான விதத்தில்,கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆவணங்களோ அல்லது ஏனைய ஆவணங்களோ இராணுவத்தின் ஆட்டிலறிப் பிரிவினால் மேற்கொள்ளப்படவேண்டிய இலக்கு வைக்கும் நடைமுறைகள் தொடர்பான விபரங்களை வழங்கவில்லை. இலங்கை இராணுவத்தினால் பயன்படுத்தப்படும் போர் நடவடிக்கை தொடர்பான விதிமுறைகளைக் காட்டும் ஆவணங்களின் பிரதிகளோ அல்லது போர்ச் சேத மதிப்பீடுகளோ இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைக்கவில்லை. இது தொடர்பாக அது அரசாங்கத்திடம் வேண்டுகோள்களை முன்வைத்திருந்த போதிலும், அவை அக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. இலங்கை இராணுவத் தளபதி ஜனரல் ஜகத் ஜயசூரிய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குவில் முன்வைத்த சமர்ப்பணத்தில் “கனரக ஆயுதங்கள் மற்றும் சூட்டுவலு என்பவற்றை பயன்படுத்துவது தொடர்பாக பல கட்டுப்பாடுகளை” தாம் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். “தாங்கிகள் ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை.” மோதல் காலப் பிரிவின் போது ஜெனரல் ஜகத் ஜயசூரிய வன்னிப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் தளபதியாக இருந்துவந்தார்.[702] ஆட்டிலறிகள் மற்றும் மோட்டார்கள் என்பன பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அவற்றின் துல்லியத்தன்மை குறித்து அவர் உறுதிபடக்கூறினார். ஏனென்றால் “அமைவிடங்களை கண்டுபிடிக்கும் கருவிகளை எப்பொழுதும் நாங்கள் வைத்திருந்தோம். அவை இரவும் பகலும் அப்பிரதேசங்களில் இருக்கும் றாடார்களுடன் இணைந்த விதத்தில் சூட்டுத்தாக்குதல் எங்கு போய் விழுகின்றது என்பதைக் காட்டிக் கொண்டிருந்தன. எல்லா நிலைகளிலும் ஆட்டிலறி சூட்டு றாடார்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன், அவை அவற்றுக்கு எதிரில் உள்ள இடத்தில் இருந்து சுமார் 35 கி.மீ. பிரதேசத்தை உள்ளடக்கக் கூடியவையாக இருந்தன.”

742. தானும் தனக்கு கீழ் இருந்துவந்த தளபதிகளும் போர்க்களம் தொடர்பான ஒரு சிறந்த பொது நோக்கினை கொண்டிருந்ததாக அவர் சொன்னார். ஏனென்றால்,“போர் அரங்கின் நிலைமையைத் தெரிந்து கொள்வதற்கு இயலச்செய்யும் பொருட்டு, உளவு பார்க்கும் விமானங்கள் இரவும் பகலும் தொடர்ச்சியாக சேவையில் அமர்த்தப்பட்டிருந்தன. இது பொதுமக்களின் உயிரிழப்புக்களை குறைத்துக் கொள்வதற்கு உதவியதுடன், உயிரிழப்புக்களை

[702] கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் உரையாடிய பொழுது ஜெனரல் ஜகத்ஜயசூரிய இராணுவத் தளபதியாக பதவி உயர்த்தப்பட்டிருந்தார்.

பூச்சிய மட்டத்தில் வைத்திருக்கும் கொள்கையை பராமரிப்பதற்கும் உதவியது''. அனைத்து சூட்டு சம்பவங்களும் பொருத்தமான விதத்தில் முகாமை செய்யப்பட்டதாகவும் ஜெனரல் ஜகத் ஜயசூரிய கூறினார். ''நாங்கள் எமது வானொலித் தொடர்பாடல்களுக்கு ஊடாக பரிசோதனைகளை மேற்கொள்கின்றோம் எமது சூட்டுத்தாக்குதல்களை நாங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். ஆகவே, அது தொடர்பான கட்டுப்பாடுகளை பராமரிக்குமாறு நாங்கள் அறிவுறுத்தல்களை வழங்குவதுடன், அதன் பிரகாரம் முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கூறுகின்றோம்''.

743. மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன[703] கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் பின்வருமாறு கூறியிருந்தார்: ''உடனடியாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உபகரணங்களை கொண்டிருந்த சொகுசு நிலை– சொகுசு நிலைஎன்ற சொல்லை இங்கு அடிக்கோடிடவேண்டும் - உளவுபார்க்கும் விமானங்களின் ஒத்துழைப்பு, செயற்பாட்டு அறைகள் இருந்து வந்த கள முனைகளுடன் கொண்டிருந்த இணைப்புக்கள் இருந்து வந்தன. எமக்கு ஆதரவளிப்பதற்கும், எம்முடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்குமென சேவையில் அமர்த்தப்பட்டிருந்த விமானப்படையைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த விமானிகள் ஆகிய அனைத்துக் காரணிகளும் எமக்கு உதவியாக இந்தன."[704]

744. கீழே எடுத்து விளக்கப்படும் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் மற்றும் பொதுமக்களின் சொத்துக்களுக்கான சேதம் என்பன சர்தேச மனிதநேயச் சட்டத்தை மீறும் விதத்தில், இடம்பெறுவது எதிர்பார்க்கப்பட்டிருக்க முடியும் என்பதனையும், அரசாங்க மற்றும் இராணுவத் தலைவர்கள் அறிந்து,அவற்றை ஏற்றுக் கொண்டிருக்கமுடியும் என்பதனையும் இந்தக் கூற்றுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

### நேரடி மற்றும் மறைமுக சூட்டுவலு பயன்படுத்தப்பட்டமை

745. தெரிவு செய்யப்படும் ஆயுதங்களின் வகைகள் மற்றும் பொதுமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் சண்டை இடம்பெறும் பொழுது தரப்புக்கள் அவற்றை பயன்படுத்தும் விதம் என்பன பொதுமக்கள்மீதான கண்மூடித்தனமான அல்லது விகிதாரசார அளவுக்கு மிகையான பாதிப்புக்கள் ஏற்படக்கூடிய கணிசமான ஒரு நிலையைத் தோற்றுவிக்க முடியும். சுடுகலனை பயன்படுத்தும் நபர் அந்த ஆயுதத்திற்கும் அந்த இலக்குக்கும் இடையில் ஒரு நேரடிப் புள்ளி இல்லாத சந்தர்ப்பத்தில் மறைமுகமாக சூட்டுத்தாக்கம் இடம்பெறுகிறது. அதற்குப் பதிலாக ஒரு ஆயுதம் மேல்நோக்கி சுடப்படுவதுடன், அங்கிருந்து துப்பாக்கி ரவைகள் மேலே இருந்து கீழே விழுகின்றன. இந்த விதத்தில் துல்லியத்தன்மை குறைந்த இலக்குகள் மீது சூட்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்காரணத்தினால்

[703] 53 ஆவது படைப் பிரிவின் தளபதி முதலில் வட புல முன்னரங்கில் யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் பணியாற்றி வந்தார். பின்னர் அவர் வன்னியில் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த மக்களைப் பெற்றுக் கொள்வதற்கான பொறுப்பில் அமர்த்தப்பட்டார். 58ஆவது படைப் பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த தனது சமர்ப்பணத்தில் ஆளில்லா உளவு பார்க்கும் விமானங்களின் பெறுமதி குறித்து இதே மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

[704] உளவு பார்க்கும் ஆளில்லா விமானங்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்ட விடயம் பல சாட்சிகளினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. உளவு பார்க்கும் விமானங்கள் மேலே பறந்து, சிறிது நேரத்தின் பின்னரே ஏறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஒரேநேரத்தில் பெருந்தொகையான ஏறிகணைகள் ஏவப்படுகின்றன் ‘‘தனி ஒரு இலக்கினை’’ குறிவைக்காது அது பரந்த வெடிப்புத் தாக்கத்தை எடுத்துவரக்கூடிய ஒரு பிரதேச ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றது. மறைமுகச் சூட்டுத்தாக்கத்தின் பயன்பாடு ஒரு பரந்த பிரதேசத்தில் சேதங்களை எடுத்து வரமுடியும். மேலும், அது ‘‘பொதுமக்கள் மீது அழிவுகரமான குறுங்கால மற்றும் நீண்ட கால தாக்கத்தையும் ஏற்படுத்தமுடியும்.”[705]

746. நேரடி சூட்டுத் தாக்குதல் என்பது ஆயுதத்திற்கும் சம்பந்தப்பட்ட இலக்குக்கும் இடையில் பார்வையில் ஒரு நேரடிப் புள்ளி இருப்பதனை காட்டுகின்றது. அது பொதுவாக பெருமளவுக்கு துல்லியமானதாக இருந்துவருகின்றது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு கலந்தாலோசனைகளை மேற்கொண்ட இராணுவத்தரப்புக்களின் தகவல்களின் பிரகாரம், இலங்கை இராணுவம் நேரடி சூட்டுத்தாக்குதல் தெரிவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் பரந்த வீச்சிலான பல்வேறு ஆயுதங்களை தன்வசம் கொண்டிருந்தது. எவ்வாறிருப்பினும், ரொக்கெட்டுக்களினால் ஏவப்படும் கிரனைட்டுகள் (RPGs)[706]போன்ற நேரடித்தாக்குதல் ஆயுதங்கள் அவை தாக்கும் பரப்பெல்லையை விரிவாக்கும் விதத்திலும், ஆனால் துல்லியத் தன்மை குறைவான விதத்திலும் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதாவது, அத்தகைய ஆயுதங்கள், அந்த நிலையில், பொதுமக்களுக்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தினைஅதிகரிக்கின்றன.

747. இலங்கை பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட வான்வழிக் கண்காணிப்பு நடவடிக்கைகள் இலக்குகளை துல்லியமாக இனங்கண்டு கொள்வதற்கு உதவியிருக்கமுடியும். அந்த இலக்குகள் மீது, உயரளவிலான துல்லியத்தன்மையை கொண்டிருப்பதுடன், இலக்கை சூழவுள்ள பிரதேசங்களுக்கு ஏற்படக்கூடிய தற்செயலான சேதங்களை குறைக்கக்கூடிய ஆயுதங்களை பயன்படுத்தியிருக்க முடியும். எப்படியிருந்தபோதிலும், இலங்கை இராணுவம் ஆட்டிலறி ஏறிகணைகள் மற்றும் மல்ட்டி பரல் ரொக்கட் போன்ற பெருந்தொகையான ஆயுதங்களைப் பயன்படுத்திவந்துள்ளது. அவை யுத்த சூன்ய வலயங்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன், மோதலின் முடிவுவரையில் அத்தகைய ஆயுதங்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.[707]

748. கனரக ஆயுதங்களின் பயன்பாட்டை அது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், போரின் இறுதி வாரங்களின் போது அவற்றின் பாவனையை அது முற்றாக நிறுத்தியிருந்தது என்றும் அரசாங்கம் இடையறாது வலியுறுத்தி வந்துள்ளது. இலங்கை பாதுகாப்புச் செயலாளரின் கூற்றின் பிரகாரம் ‘‘போரின் இறுதிக்கட்டங்களின் போது, பொதுமக்கள் பிரசன்னமாக இருந்த காரணத்தினாலும், குறிப்பிட்ட பிரதேசம் மிகச் சிறிய அளவில் வரையறுக்கப்பட்டிருந்த காரணத்தினாலும் நாங்கள் மறைமுகமான சூட்டுத்தாக்குதல் ஆட்டிலறி, மோட்டார் மற்றும் விமானத்தாக்குதல்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். துருப்புக்களும் தனிப்பட்ட ஆயுதங்களை மட்டுமே

---

[705] ஐக்கிய நாடுகள், நவம்பர் 2013, ஆயுத மோதலில் சிவிலியன்களுக்கான பாதுகாப்பு தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை, பந்தி 69

[706] கோப்பிலிருக்கும் வாக்குமூலம்

[707] UNOSAT இலங்கையில் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு புவி வெளி பகுப்பாய்வு

பயன்படுத்த வேண்டியிருந்தன''.[708] அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கையை ஒரு மனிதநேய இயல்பிலான ''பணயக் கைதிகளை மீட்டெடுக்கும் ஒரு செயற்பாடாக'' குறிப்பிட்டிருந்ததுடன், அது தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:''பாதுகாப்புப்படைகள் தமக்கு கிடைத்திருக்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம், பாரிய வலிமை மிக்க துப்பாக்கிகளின் உபயோகத்தையும், போர் விமானங்களின் உபயோகத்தையும், பொதுமக்களின் உயிரிழப்புக்களை எடுத்துவரக்கூடிய வான்வழிக் கருவிகளின் உபயோகத்தையும் நிறுத்தியிருக்கின்றது''.[709]

749. அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் 2009 மார்ச் மாதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ''கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதனை எந்த விதத்திலும் நியாயப்படுத்தமுடியாது''.[710]அரசாங்கம் ஏப்ரல் 27 ஆம் திகதி பின்வரும் அறிவித்தலை வெளியிட்டிருந்தது: ''போர்நடவடிக்கைகள் அவற்றின் முடிவை எட்டியுள்ளன. பாரிய துப்பாக்கிகள், விமானத்தாக்குதல்கள் மற்றும் விமானத்தில் இருந்து பயன்படுத்தும் கருவிகள் என்பன பொதுமக்களின் உயிரிழப்புக்களை ஏற்படுத்தக் கூடியவையாக இருந்துவருவதனால் அவற்றை நிறுத்துமாறு பாதுகாப்புப் படைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினர் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களை மீட்டெடுக்கும் முயற்சிகளுக்கு மட்டுமே தமது செயற்பாடுகளை வரையறுத்துக் கொள்வார்கள். உயிர்களைப் பாதுகாக்கும் விடயத்துக்கு அவர்கள் உயர் முன்னுரிமை வழங்குவார்கள்''.[711]

750. கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு, சாட்சிகளின் சான்றுகளை பரிசீலனை செய்த இராணுவ பகுப்பாய்வாளர்களின் கருத்துக்கள், ராஜதந்திர வட்டாரங்கள், அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் ஏனையவர்கள் ஆகிய தரப்புக்களிடமிருந்து கிடைத்த அறிக்கைகள் என்பவற்றின் பிரகாரம், இலங்கை ஆயுதப்படைகள் மூன்று யுத்த சூன்ய வலயங்களிலும், அவற்றை சூழவுள்ள பிரதேசங்களிலும் ஆட்டிலறி ஏறிகணைகள் மற்றும் மல்ட்டிபரல் ரொக்கட் லோன்சர்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் மறைமுகமான சுடுகலன்களைப் பயன்படுத்தியிருந்ததுடன், அவை ஆயுதமோதலின் இறுதிக்கட்டங்கள் முழுவதிலும் பொதுமக்களின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன், பொதுமக்கள் உயிரிழப்புக்களையும் எடுத்து வந்திருந்தன. குறைந்தது நான்கு மருத்துவ நிலையங்கள் - புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், உடையார்கட்டு மற்றும் புதுமாத்தளன் - மீது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன்,சாட்சிகளின் சான்றுகளின் பிரகாரம், மல்ட்டிபரல் ரொக்கட் லோன்சர்கள் போன்ற ஆயுதங்களைக் கொண்டும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இராணுவ நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் ஒரு சிலரையும் உள்ளடக்கிய விதத்தில் சாட்சிகள் சூட்டுத்தாக்குதல்கள் துவக்கிவைக்கப்படும் சத்தத்தை தாம் கேட்ட விதத்தை எடுத்து விளக்கியிருந்தார்கள். அது பயணிக்கும் திசை வழியையும், ஒரு சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்ததும் ஆயுதங்களின் வகைகளையும் அவர்கள்

---

708 பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கோத்தாபய ராஜபக்ஷ கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணம், ஆகஸ்ட் 17, 2010

709 மனிதநேய செயற்பாட்டு விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, Op.cit, பந்தி 183

710 இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பாதுகாப்பு அமைச்சு, "எல்ரீரீஈ இயக்கம் ஆயுதங்களை கைவிட்டால் உடனடியாக போர் நிறுத்தம் - அமைச்சர் கூறுகின்றார்" 'BBC Hardtalk',<http://www.defence.lk/new.asp?fname=20090306_02>

711 www.defence.lk/new.asp?name=20090427_06

குறிப்பிட்டிருந்தார்கள்.[712] மற்றவர்கள் வெடிப்பினால் ஏற்பட்டிருக்கும் சேதத்தை மதிப்பிடுவதன் மூலம் தாக்குதல் வந்த திசை மற்றும் தாக்குதலின் வகை என்பவற்றை நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்துவந்தார்கள்.[713]

751. ‘‘தொகுதிக்குண்டுகள்’’ (ஒருசில சாட்சிகள் இதனை ‘‘கொத்துக்குண்டு’’ என அழைத்தனர்) பயன்படுத்தப்பட்டதாக பல சாட்சிகள் கூறினார்கள். அத்தகைய பொருட்கள் நடுவானில் வெடித்ததாகவும், தரையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் சிறு சிறு துகள்களை காற்றில் விடுவித்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொகுதி வெடிபொருட்கள் சிறு துகள்களை மேலே உள்ள பரந்த பிரதேசத்திலிருந்துஒரு இலக்குப் பிரதேசத்தில் சிதறவிடுவதுடன், ஒரு தாக்கம் ஏற்படும்போது அவை வெடிக்கின்றன. எவ்வாறிருப்பினும், மறைமுகமான சுடுகலன் வெடிபொருட்கள் தலைக்கு மேலால் துண்டுகளாகவும் வெடித்துச் சிதறமுடியும். தொகுதிக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களின் இயல்பின் பின்னணியில் நோக்கும் பொழுது, அவை உண்மையில் பயன்படுத்தப்பட்டனவா இல்லையா என்பதனை நிர்ணயித்துக்கொள்வதற்கென மேலும் விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது.

752. அதேபோல வெள்ளை பொஸ்பரசு வாயு பயன்படுத்தப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுக்களும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன. குறிப்பாக, மோதலின் இறுதி வாரங்களின் போது அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றதாக சாட்சிகள் கூறினார்கள். அந்தத் தாக்குதல்களின் போது குண்டுகள் தீவிரமான சூட்டுக்காயங்களையும், தோல் கருமையடையும் நிலையையும் எடுத்துவந்திருந்தன. வெள்ளை பொஸ்பரசு வாயு பயன்படுத்தப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதிய தகவல்களைச் சேகரிக்க முடியவில்லை. எனவே, இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் மேலும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு நம்புகின்றது.

**யுத்த சூன்ய வலயங்கள் உருவாக்கப்பட்டமை**

753. அரசாங்கம் 2009 ஜனவரி மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது எந்தவொரு உயிரிழப்பையும் ஏற்படுத்தாத அதன் கொள்கையின்” ஒரு பாகமாக மூன்று “யுத்த சூன்ய வலயங்களை” (No Fire Zones) அல்லது “பாதுகாப்பு வலயங்களை” ஒன்றன் பின் ஒன்றாக ஸ்தாபிக்கப் போவதாக அறிவித்தது. இந்தப் பிரிவு இத்தகைய மூன்று வலயங்கள் உருவாக்கப்பட்டமை தொடர்பான ஒரு பொது நோக்கினை முன்வைக்கின்றது. அதன் பின்னர் ஒவ்வொரு யுத்த சூன்ய வலயமும் தொடர்பான திட்டவட்டமான தகவல்கள் கீழேயுள்ள உப பிரிவுகளில் எடுத்து விளக்கப்படுகின்றன. ஒவ்வொரு யுத்த சூன்ய வலயத்திலும் ஆவணப்படுத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விபரங்களுடன் இணைந்த விதத்தில் இத்தகவல்கள் முன்வைக்கப்படுகின்றன.

754. அரசாங்கம் எல்ரீரீஈ இயக்கத்துடன் எத்தகைய ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளாத நிலையில் ஒருதலைப்பட்சமான விதத்தில் இந்த யுத்த சூனிய வலயங்களைப் பிரகடனம் செய்தது. அந்த வகையில் மோதலின் இரு

[712] WS on file.

[713] WS on file.

தரப்பினராலும் இந்த வலயங்கள் பாதுகாப்பான, நடுநிலையாக பாதுகாக்கப்பட்ட வலயங்கள் என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்விதம் குறித்துரைக்கப்பட்ட பிரதேங்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசங்களுக்குள் அமைந்திருந்ததுடன், அக்கால கட்டத்தில் அரசாங்கப் படைகள் அந்த இடங்களை அணுக முடியாத நிலையும் காணப்பட்டது.

755. ஒவ்வொரு யுத்த சூன்ய வலயமும், அதற்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த வலயத்திலும் பார்க்க அளவில் சிறியதாக இருந்து வந்ததுடன், இடம்பெயர்ந்த மக்களின் நகர்வு மற்றும் இலங்கை இராணுவம் முன்னேறி வந்த நிலையில் எல்ரீரீஈ இயக்கம் அதன் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த நிலப் பரப்புக்களை இழந்து, ஒரு சிறிய நிலப்பரப்புக்குள் பின்வாங்கி வந்ததுடன் இணைந்த விதத்தில் இந்த வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அது தவிர, மருத்துவமனைகள் மற்றும் மனிதநேய முகவரகங்களின் அலுவலகங்கள் என்பவற்றையும் உள்ளிட்ட பாதுகாக்கப்பட்ட இடங்களைச் சூழவுள்ள சுமார் 1 கி.மீ பிரதேசத்தை "மேலதிகப் பாதுகாப்பு வலயமாக" அரசாங்கம் பிரகடனம் செய்தது.[714]

756. யுத்த சூன்ய வலயங்களின் அமைவிடத்தின் பின்னணியில் இருந்த தர்க்க நியாயம் பெருமளவுக்கு கேள்விக்குரியதாக இருந்து வந்தது. ஏற்கனவே இருந்து வந்த எல்ரீரீஈ இராணுவ நிலைகளிலேயே இவ்வலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குறித்துரைக்கப்பட்ட யுத்த சூன்ய வலயங்களிலிருந்து முன்னரேயே அந்த இராணுவ நிலைகள் அகற்றிக் கொள்ளப்படவில்லை.[715] முதாலாவது யுத்த சூன்ய வலயம் இலங்கை இராணுவத்தின் முன்னோக்கிய நகர்வுடன் உடனிணைந்த விதத்தில் A35நெடுஞ்சாலையில் கிளிநொச்சியிலிருந்து (PTK என அறியப்பட்ட) புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவை நோக்கிச் செல்லும் பாதையில் பிரதான மையத்தில் அமைந்திருந்தது. எல்ரீரீஈ இயக்கம் அதன் புதுக்குடியிருப்பு இராணுவ நிலைகளை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு முதலாவது யுத்த சூன்ய வலயப் பிரதேசத்தில் இராணுவத்துடன் மோத வேண்டியிருந்திருக்கும். போர் நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு பெருமளவுக்கு வாய்ப்புக்கள் இருந்து வரும் ஒரு பிரதேசத்தில் "பாதுகாப்பு வலயமொன்றை" உருவாக்குவது, இலங்கை இராணுவத்தின் உள்நோக்கம் குறித்த கேள்விகளை எழுப்புகின்றது.

757. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "எல்ரீரீஈ இயக்கம் யுத்த சூன்ய வலயத்தின் புனிதத்தைக் கெடுக்கும் நிலை மற்றும் எதிர்பார்க்கப்படும் மனிதநேய குறிக்கோள்களுக்கு எல்ரீரீஈ இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் ஒப்பந்தமொன்று இல்லாத நிலை மற்றும் அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக பிரகடனம் செய்திருக்கும் யுத்த சூன்ய வலய ஏற்பாடுகளுடன் எல்ரீரீஈ இயக்கம் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதனை சரியாக தெரிந்துகொள்ளக் கூடிய ஒரு வழிமுறை இருந்து வராத நிலை என்பவற்றின் பின்னணியில், யுத்த சூன்ய வலய பிரதேசத்தில் எல்ரீரீஈ இயக்கம் அதன் நிலைகளிலிருந்து துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொள்ளும் பொழுது பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தும் நிலையில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் இடம்பெற்றிருக்க முடியுமென முடிவாக கூறுவது நியாயமானதாக இருந்து வரும்."

758. பாதுகாப்புச் செயலாளர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த தனது சமர்ப்பணத்தில், தேசிய பாதுகாப்புச் சபைக்கும், ஜனாதிபதி அவர்களுக்குமிடையில் இடம்பெற்ற

714 LLRC அறிக்கை, நவம்பர் 2011, அடிக்குறிப்பு 47 - இதில் இராணுவத் தளபதி 2009 ஜனவரி 19 ஆந் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக் குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்த ஒரு கடிதம் தொடர்பாக குறிப்பிடப்படுகின்றது. இக்கடிதத்தில் யுத்த சூனிய வலயங்கள் தொடர்பாகவும், மருத்துவமனைகளுக்கு அருகில் உருவாக்கப்பட்டிருக்கும் மேலதிக பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

715 UNOSAT இலங்கை தொடர்பான விசாரணைக் குழு பார்வையிட்ட செய்மதிப் படங்கள்.

கலந்துரையாடல்களையடுத்தே யுத்த சூன்ய வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார். "பாதுகாப்புச் சபையும், ஜனாதிபதியும் இணைந்து பொதுமக்கள் இந்தப் பிரதேசங்களுக்கு வருவதனை இயலச் செய்வதற்கென யுத்த சூன்ய வலயங்களாக இப்பிரதேசங்களை அடையாளப்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. அந்த நிலையில், இராணுவம் தனது செயற்பாடுகளை இந்தப் பிரதேசத்தில் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்து வந்திருக்கும்."[716] அவர் தொடர்ந்து பின்வருமாறு குறிப்பிட்டார்: "முடியுமான வரையில் சிவிலியன்களுக்கு அருகில் செல்வதே எமது நோக்கமாக இருந்து வந்தது. அவ்வாறு அவர்களை நாங்கள் அண்மிக்கும் பொழுது, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசங்களுக்குள் அவர்களால் வர முடியும்."

759. யுத்த சூன்ய வலயங்கள் உருவாக்கப்பட்டமை தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டதாக அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. மோதல் வலயத்தில் போடப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கிகளுக்கூடாக வழங்கப்பட்ட செய்திகள் என்பவற்றின் மூலம், இப்பிரதேசங்களுக்கு மக்கள் நகர்ந்து செல்ல வேண்டுமெனவும், அங்கு அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.[717] அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், 2009 ஜனவரி 16 ஆந் திகதிக்கும், ஏப்ரல் 29 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது 13 பல்வேறு துண்டுப் பிரசுரங்களின் 127,000 பிரதிகள் போடப்பட்டிருந்தன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட சாட்சிகளும் இத்தகைய துண்டுப் பிரசுரங்களை பார்த்திருந்ததாக கூறியிருந்தனர் அல்லது பின்னர் பொதுமக்கள் இந்த இடங்களை விட்டுச் செல்ல வேண்டுமென இலங்கை இராணுவம் அவர்களை ஊக்குவித்து வந்தது என்ற விடயத்தை தாம் கேள்விப்பட்டிருந்ததாகச் சொன்னார்கள்.[718] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அத்தகைய துண்டுப் பிரசுரங்களின் பிரதிகளை பெற்றுக் கொண்டுள்ளது.

760. சிவிலியன்கள் யுத்த சூன்ய வலயம் 1 க்கு நகர்ந்து செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளும் துண்டுப் பிரசுரங்களில்[719] ஒன்று இப்படிக் குறிப்பிட்டிருந்தது: "உங்களைப் போன்ற அப்பாவிப் பொதுமக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு நாங்கள் இதுவரையில் காத்திருந்தோம். மேலும், உங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்குவதற்கு நாங்கள் காத்திருந்தோம். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரும் பிரதேசங்களுக்குள் வசித்து வரும் மக்களுக்கு அத்தகைய வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்துள்ளோம். நாளொன்றுக்கு ரூபா 100 அலவன்ஸ் கொடுப்பனவு, தொலைக்காட்சி பார்ப்பதற்கான வசதிகள் மற்றும் தொலைபேசி அழைப்புக்களை எடுப்பதற்கான வசதிகள் என்பன அவர்களுக்கு வழங்கப்படும். மேலும், இம்முகாம்களுக்கு அருகில் பொழுதுபோக்குகளுடன் இணைந்த விதத்தில் நூல்நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இன்னமும் தாமதியாமல் நாங்கள் இருக்கும் இடத்திற்கு வாருங்கள். கீழே தரப்பட்டுள்ள படத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு, உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தில் உங்கள்

---

716 பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணம், ஆகஸ்ட் 17, 2010. இராணுவத் தளபதி ஜனரல் ஜகத் ஜயசூரிய முன்வைத்த சமர்ப்பணம், செப்டம்பர் 8, 2010. பார்க்கவும்: மனிதநேய செயற்பாடுகள் தொடர்பான விடயப் பகுப்பாய்வு, பாதுகாப்பு அமைச்சு, பந்தி 174

717 இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பார்வையிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களின் பிரதிகள்

718 இந்தத் துண்டுப் பிரசுரங்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பகல் நேரத்தின் போது இந்த இடங்களை தாண்டிச் செல்லுமாறு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தன. இது சிவிலியன்களைப் பொறுத்தவரையில் ஒரு தடுமாற்ற நிலையை எடுத்து வந்திருந்தது. ஏனெனில், எல்ரீரீஈ இயக்கத்தின் பழிவாங்குதல் செயற்பாடுகளிலிருந்துத் தப்பிக் கொள்ள வேண்டுமானால் அவர்கள் இரவிலேயே தப்பிச் செல்ல வேண்டியிருந்தது.

719 இந்தத் துண்டுப் பிரசுரங்கள் சிங்களத்திலும், தமிழிலும் இருந்து வந்ததுடன், அவற்றின் மொழிபெயர்ப்புக்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு மொழிபெயர்ப்பாளரினால் வழங்கப்பட்டிருந்தன.

வருகையை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம். A35 நெடுஞ்சாலையில் முல்லைத்தீவில் உடையார்கட்டு சந்தியிலிருந்து மஞ்சள் பாலம் வரையிலான யுத்த சூன்ய பிரதேசம்." (இந்த வரைபடத்தில் யுத்த சூன்ய வலயம் குறித்த மங்கலான ஒரு படம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதில் "இராணுவ லெப்டினன்ட் ஜெனரல், இராணுவத் தளபதி" சுருக்க ஒப்பத்தை இட்டிருந்தார்.)

761. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட துண்டுப் பிரசுரங்களில் ஒன்று "வன்னியில் வசித்து வரும் பொதுமக்களுக்கென ஒரு பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டுள்ளது" என்ற தலைப்பினைக் கொண்டிருந்ததுடன், பொதுமக்கள் முடியுமான அளவு விரைவில் "இந்தப் பாதுகாப்பு வலயத்திற்கு" செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர். "அந்த வலயம் வன்னிப் பிரதேசத்தில் பின்வரும் பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது: புதுக்குடியிருப்பு, பரந்தன்,A35 நெடுஞ்சாலை, மஞ்சள் பாலம், உடையார்கட்டு சந்தியிலிருந்து வடக்கே இருட்டுமடு மற்றும் தேவிபுரம் வரையிலான 4 கி.மீ. பிரதேசம். மேலே குறிப்பிடப்பட்ட இடங்கள் இடம்பெயர்ந்த மக்களுக்கென ஒதுக்கப்பட்டிருப்பதனால் அந்த இடங்களின் மீது இராணுவம் ஷெல் தாக்குதல்களையோ, விமானத் தாக்குதல்களையோ நடத்தமாட்டாது என்ற விடயத்தை உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்"

762. யுத்த சூன்ய வலயங்கள் பாதுகாப்பானவை என்ற இத்தகைய உறுதிப்படுத்தலுக்கு மத்தியிலும் கூட, அந்த வலயங்கள் மீது மீண்டும் மீண்டும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பாரிய ஆட்டிலரி ஆயுதங்கள் அந்த இடங்களில் பாவிக்கப்பட்ட விடயத்தை அரசாங்கம் மறுத்திருந்த அதேவேளையில், இலங்கை இராணுவம் மோதலின் இறுதிக் கட்டத்தின் போது - அதாவது, 2009 ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையில் - இந்த மூன்று யுத்த சூன்ய வலயங்களையும் சூழவுள்ள பிரதேசங்களின் மீது அத்தகைய ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல்களை நடத்தியிருந்தது. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவுக்கு வழங்கப்பட்ட செய்மதிப் படங்களின் பகுப்பாய்வு பின்வரும் முடிவினை வழங்கியிருந்தது: "மோதலின் இறுதி ஐந்து மாதங்களின் போது இலங்கை இராணுவம் குறிப்பாக யுத்த சூன்ய வலயங்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவுக்கு செறிந்து வாழ்ந்து வந்த இடங்கள் என்பவற்றின் மீது கணிசமான ஆட்டிலரித் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடிய இராணுவ வல்லமையை ஸ்தாபித்து, பராமரித்து வந்ததுடன், அதனை இற்றைப்படுத்தியும் வந்துள்ளது என்பதற்கு வலுவான சாட்டியங்கள் இருந்து வருகின்றன." மேலும், "யுத்த சூன்ய வலயங்களை இலங்கை இராணுவம் இலக்காகக் கொண்டு, அதன் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வந்தது என்பதற்கும் சாட்சிகள் இருந்து வருகின்றன."[720]

763. யுத்த சூன்ய வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் தாக்குதல்களும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்ற விடயத்தை அரசாங்கம் திரும்பத் திரும்பக் கூறி வந்ததுடன், சிவிலியன்களின் மரணங்களுக்கான காரணம் "தமது போராளிகளையும், ஆயுதங்களையும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும், யுத்த சூன்ய வலயங்களிலும், ஏனைய பாதுகாக்கப்பட்ட அமைவிடங்களிலும் வேண்டுமென்றே வைத்திருக்கும் எல்ரீரீஈ இயக்கத்தின் சட்ட விரோதமான உத்தியை உள்ளிட்ட அதன் குற்றம் காணும் தந்திரோபாயங்களாகும்" என அது வாதிட்டது. மேலும், எல்ரீரீஈ இயக்கம் யுத்த சூன்ய வலயங்கள் மற்றும் மருத்துவமனைகள் என்பவற்றையும் அண்மித்த பிரதேசங்களிலிருந்து ஆட்டிலரித் தாக்குதல்களையும், ஏனைய ஆயுதங்கள் மூலமான தாக்குதல்களையும் இடையறாது மேற்கொண்டு வந்தது" என்றும் அது குறிப்பிட்டது.[721]

---

720 UNOSAT,இலங்கை தொடர்பான செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவுக்கு ஆதரவாக வழங்கப்பட்ட செய்மதிப் படம் தொடர்பான பகுப்பாய்வு

721 LLRC கண்காணிப்புக் குழுவின் அமுலாக்கல் தொடர்பான இராணுவ சபையின் முழு அறிக்கை,www.army.lk/docimages/image/LLRC_2013.pdf>இணையதளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

764. கீழே கலந்துரையாடப்பட்டவாறு, எல்ரீரீஈ இயக்கத்தின் செயல்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளை மீறுவதாக இருந்து வந்துள்ளன. தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரும் பொதுமக்களைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச மனிதநேயச் சட்டம் கேட்டுக் கொள்கின்றது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டு, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரு புறத்தில் சிவிலியன்கள் மற்றும் சிவிலியன் இலக்குகள் என்பவற்றுக்கும், மறுபுறத்தில், சட்டபூர்வமான இராணுவ இலக்குகள் என்பவற்றுக்குமிடையிலான வித்தியாசத்தை கண்டறிந்து கொள்வது தொடர்பான இலங்கை இராணுவத்தின் கடப்பாடுகளிலிருந்து அதனை விடுவிக்கவில்லை. மேலும், சாதாரண பொதுமக்களின் உயிரிழப்புக்கள், பொதுமக்களுக்கிடையிலான காயங்கள் மற்றும் சிவிலியன் இலக்குகள் சேதமடைதல் என்பவற்றை தவிர்ப்பதற்கு அல்லது ஆகக் குறைந்தது குறைத்துக் கொள்வதற்கு சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டினை அது கொண்டுள்ளது.

765. யுத்த சூன்ய வலயங்களுக்கு நகர்ந்து செல்லுமாறு அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு பொதுமக்கள் செவிமடுத்ததனை பெருந்தொகையான காட்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இத்தாக்குதல்கள் குறித்த உதாரணங்கள் காட்டுவதைப் போல, அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட யுத்த சூன்ய வலயங்கள் சிவிலியன்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்பான புகலிடங்களாக இருந்து வரவில்லை. மருத்துவமனைகள் போன்ற பாதுகாக்கப்பட்ட சிவிலியன் இலக்குகளை உள்ளடக்கிய விதத்தில் யுத்த சூன்ய வலயங்கள் உருவாக்கப்பட்ட உடனேயே, அவை இலங்கை பாதுகாப்புப் படையினரின் தொடர்ச்சியான சூட்டுத் தாக்குதல்களை எதிர்கொண்டன. அங்கு தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்களுக்கு யுத்த சூன்ய வலயங்களில் இராணுவ செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்ற விடயம் குறித்தோ அல்லது பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய பொருத்தமான நேரம் குறித்தோ அரசாங்கம் மற்றும் இலங்கை இராணுவம் எத்தகைய அறிவித்தலையும் வழங்கவில்லை.

766. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் மனித உரிமைகள் குறித்த ஐநா செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி 2009 ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தையடுத்து, இரண்டாவது யுத்த சூனிய வலயம் குறித்து பின்வரும் விதத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தார்: "எல்ரீரீஈ படைகள் தவிர்க்க முடியாத விதத்தில் இரண்டாவது யுத்த சூனிய வலயத்துக்குள் பின்வாங்க வேண்டிய நிலையில், அது ஒரு யுத்தப் பிரதேசமாக மாறுவதைத் தவிர்க்க முடியாது. இது அங்கு எஞ்சியிருக்கும் பொதுமக்களைப் பொறுத்தவரையில் மிகவும் பாரதூரமான, அழிவுகரமான ஆபத்தொன்றை உருவாக்குகின்றது. இந்த வலயத்தின் வரையறுக்கப்பட்ட அளவு மற்றும் சனச்செறிவு என்பவற்றின் காரணமாக அங்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு இராணுவ நடவடிக்கையும் - உச்ச மட்ட எச்சரிக்கையுடனும் சிவிலியன்கள் மற்றும் போராளிகள் ஆகிய தரப்பினரை புறம்பாக வேறுபடுத்தும் கோட்பாட்டுக்கு மதிப்பளிக்கும் விதத்திலும் மேற்கொள்ளப்பட்டாலும் கூட – அதன் இயல்பு காரணமாக பொதுமக்களுக்கு மத்தியில் விகிதாசார அளவிலும் பார்க்க கூடியளவிலான சேதத்தை எடுத்து வரக் கூடிய சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளது."[722]

**முன்னெடுக்கப்பட்ட பகைமைச் செயற்பாடுகள்: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்**

722 உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தொடர்பான ஐநா செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி, இலங்கைக்கான விஜயம் ஏப்ரல் 2-6, 2009.

767. தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரும் பொதுமக்களையும், பொதுச் சொத்துக்களையும் தாக்குதல்களுக்கு எதிராக பாதுகாத்துக் கொள்வதற்கென சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டினை சர்வதேச மனித நேயச் சட்டத்தின் கீழ் எல்ரீரீஈ இயக்கம் கொண்டிருந்தது. சன நெரிசல் மிகுந்த பிரதேசங்களுக்குள் அல்லது பிரதேசங்களுக்கு அருகில் இராணுவ நிலைகளை வைத்திருப்பதனை முடியுமான வரையில் தவிர்த்துக் கொள்ளல், அதேபோல மோதலின் ஒரு தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வரும் பொதுமக்களையும், பொதுச் சொத்துக்களையும் இராணுவ இலக்குகளுக்கு அருகிலிருந்து அகற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய கடப்பாடு என்பவற்றையும் அத்தகைய முன்னெச்சரிக்கைகள் உள்ளடக்குகின்றன.[723]

768. ஆயுதங்கள் மற்றும் ஏனைய தளபாடங்கள் என்பவற்றின் அமைவிடம்.

769. பொதுச் சொத்துக்கள் இராணுவ நோக்குகளுக்கென இலக்காகக் கொள்ளப்பட்டால், அவை அவற்றின் பாதுகாக்கப்பட்ட அந்தஸ்தை இழந்து விடுகின்றன.[724] எனவே, பொதுச் சொத்துக்களுக்கு அருகில் குறிப்பாக, மருத்துவமனைகளுக்கு அருகில் தனது இராணுவத் தளபாடங்களை வைத்திருப்பதனை தவிர்த்துக் கொள்வதற்கான அல்லது எதிரிக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய செயல்களை மேற்கொள்வதற்கென இந்த வசதிகளை பயன்படுத்துவதனை தவிர்த்துக் கொள்வதற்கான கடப்பாட்டினை எல்ரீரீஈ இயக்கம் கொண்டிருந்தது.

770. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் அமைந்திருந்த அனைத்து மருத்துவமனைகளும், மருத்துமனைக்குள்ளே ஆயுதங்களை எடுத்துச் செல்வதனை முற்றாகத் தடை செய்யும் கண்டிப்பான விதிமுறைகளைக் கொண்டிருந்தன என்பதனையும், இந்த விதிமுறைகள் மதிக்கப்பட்டு வந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பதனையும்[725] பல்வேறு சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர். நேரில் கண்ட சாட்சிகளின் பிரகாரம், காயமடைந்த நபர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதில் உதவிய எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகள் பொதுவாக நிராயுதபாணிகளாக இருந்து வந்தனர்.[726]

771. அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்ட மருத்துவமனைகள் அல்லது அம்புலன்ஸ் வண்டிகள் எல்ரீரீஈ இயக்கத்தினால் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதனைக் காட்டும் தகவல்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கவில்லை. நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட மருத்துவ அல்லது மனித நேயப் பணியாளர்கள் எவரும் மருத்துவமனைகளுக்குள் இராணுவச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எல்ரீரீஈ எத்தகைய முயற்சிகளையும் எடுத்ததாகக்குறிப்பிடவில்லை. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம், மருத்துவமனைகளுக்குள் எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவத் தளபாடங்கள் வைக்கப்பட்டிருக்கவில்லை.

772. இந்தத் தகவல்களின் அடிப்படையில், இலங்கை இராணுவம் தாக்குதல்களை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் மருத்துவமனைகளுக்கு உள்ளே சட்ட ரீதியான இராணுவ இலக்குகள் இருந்து வந்துள்ளன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இருந்து வரவில்லை என இலங்கை தொடர்பான புலன்

723 ICRC வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான தரவுத் தளம், விதிமுறைகள் 23-24.

724 ICRC வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான தரவுத் தளம், விதிமுறைகள் 10 – 28. மேலும், பார்க்கவும் அத்தியாயம் ஏ, சட்ட ரீதியான சட்டகம்.

725 WS on file

726 WS on file

-

விசாரணைக் குழு கருதுகின்றது. ஒரு சில மருத்துவமனைகளில் காயமடைந்திருந்த எல்ரீரீஈ இயக்க இராணுவப் போராளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது என்ற விடயம், இத்தகைய இலக்குகளின் பாதுகாக்கப்பட்ட தன்மையை இல்லாமல் செய்து விட முடியாது. ஏனெனில், இந்த நபர்கள் அச்சந்தர்ப்பத்தில் போர் நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டிருக்கவில்லை.

773. எவ்வாறிருப்பினும், எல்ரீரீஈ இயக்கம் மருத்துவமனைகளை அண்மித்த பிரதேசங்களிலிருந்து தாக்குதல்களை நிகழ்த்தியிருந்தது என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சேகரித்திருக்கும் தகவல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கீழே எடுத்து விளக்கப்படும் சம்பவங்கள் எல்ரீரீஈ இயக்கம் மருத்துவமனைகளுக்கு அருகிலும், சில சமயம் அவற்றுக்கு பக்கத்திலும், பொதுமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைச் சூழவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வரும் முகாம்கள் அல்லது தங்குமிடங்கள் என்பவற்றுக்கு அருகிலும்[727] இராணுவ நிலைகளை (முக்கியமாக மண் அரண்கள் மற்றும் பதுங்கு குழிகள் என்பவற்றை) அமைத்ததுடன், ஆட்டிலரி மற்றும் ஏனைய ஆயுதங்கள் என்பவற்றை அந்த இடங்களில் நிலைகொள்ளச் செய்திருந்தது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. அவ்வாறு செய்ததன் மூலம் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களை பாதுகாத்துக் கொள்வதற்குச் சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வது தொடர்பான அதன் கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு எல்ரீரீஈ இயக்கம் தவறியுள்ளது.

774. மருத்துவமனைகளுக்கு அருகில் இராணுவ நிலைகளை நிலைக் கொள்ளச் செய்வதனை தடுப்பதற்கு எல்ரீரீஈ இயக்கத்தின் மூத்த தலைவர்களினால் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததனைக் காட்டும் தகவல்களோ அல்லது பொதுமக்களுக்கு வரக் கூடிய ஆபத்துக்களைத் தடுப்பதற்கு அல்லது குறைத்துக் கொள்வதற்கு மருத்துவமனைகளுக்கு அருகிலிருந்து தாக்குதல்களை ஆரம்பிக்கப் போகும் எண்ணம் குறித்து அவர்களுக்கு எச்சிரிக்கை விடுக்கும் முறைகளையும் உள்ளிட்ட விதத்தில், எல்ரீரீஈ இயக்கம் முன்னெச்சரிக்கை வழிமுறைகளை மேற்கொண்டிருந்தமை குறித்த தகவல்களோ இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கவில்லை. அவர்கள் அவ்வாறு செய்திருந்தால், அத்தாக்குதல்களை அடுத்து பழிவாங்கும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெறக் கூடிய சாத்தியப்பாட்டின் பின்னணியில், மருத்துவமனை ஆளணியினர் ஆகக் குறைந்தபட்ச பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொண்டிருக்க முடியும்.

775. சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டிருக்கும் பொதுச் சொத்துக்களுக்கு அருகில் செறிவாக மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் இராணுவ நிலைகளை வைத்திருப்பது, அந்த இடங்களை நோக்கி துப்பாக்கி பிரயோகங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு வழிகோலியதன் மூலம் பொதுமக்களின் உயிரிழப்புக்களுக்கு பங்களிப்புச் செய்திருந்தது. மேலும், அத்தகைய செயல்களின் பின்னாலிருந்த உள்நோக்கம் தொடர்பான பாரதூரமான கேள்விகளையும் அது எழுப்புகின்றது. அதாவது, இராணுவ இலக்குகளை அல்லது பிரதேசங்களை இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களிலிருந்து அல்லது அவர்களுடைய துப்பாக்கிப் பிரயோகங்கள் தூண்டப்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் அவை மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்ற சந்தேகத்தையும் அது எழுப்புகின்றது. அத்தகைய செயற்பாடுகள் வழக்காறு சார்ந்த சர்வதேச சட்டத்தை மீறுபவையாக இருந்து வருகின்றன.

776. இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், சிவிலியன்களையும் வர வர சுருங்கி வந்த ஒரு சிறிய நிலப் பரப்புக்குள் பின்தள்ளி வந்த நிலையில், எல்ரீரீஈ இயக்கம் ஆஸ்பத்திரிகள் மற்றும் ஏனைய பாதுகாக்கப்பட்ட இடங்கள் என்பவற்றிலிருந்து இராணுவ இலக்குகளைப் பிரித்து, வேறுபடுத்திக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் பெருமளவுக்கு

[727] UNOSAT, செயலாளர் நாயகத்தின் இலங்கை தொடர்பான நிபுணர் குழுவுக்கு ஆதரவளிப்பதற்கான பூகோள அமைவிடப் பகுப்பாய்வு

வரையறுக்கப்பட்டிருந்தன. சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்படுத்தியிருந்த இந்த மாற்றம், போருடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு தரப்பும் சர்வதேச மனிதநேயச் சட்டத்திற்கு இணங்கியொழுகுவதிலிருந்து அவற்றுக்கு விலக்களிக்கவில்லை என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு வலியுறுத்துகின்றது. அதாவது, இச்சட்டத்தின் பிரகாரம், மோதலின் இரு தரப்புக்களும் பிரித்தறிந்து கொள்ளுதல், விகிதாசார அளவு மற்றும் தாக்குதலின் பாதிப்புக்களுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்தும்பொழுது சாதாரண முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற கோட்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். இந்தக் கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதானது, சிக்குண்டிருக்கும் பொதுமக்களை ஆபத்துக்களுக்குள் தள்ளி விடாதிருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்திலான உத்திகளை மோதலின் இரு தரப்புக்களும் பின்பற்ற வேண்டும் என்பதாகும்.

777. அரசாங்கம் ஒருதலைப்பட்சமான விதத்தில் “பாதுகாப்பு வலயங்கள் போன்ற பிரதேசங்களை பிரகடனம் செய்த சந்தர்ப்பத்தில் எல்ரீரீஈ இயக்கத்துடன் ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளவில்லை என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு மீண்டும் நினைவூட்ட விரும்புகின்றது. எவ்வாறிருந்தபோதிலும், யுத்த சூனிய வலயங்கள் எங்கு அமைந்திருக்கின்றன என்ற விடயத்தையும், பொதுமக்களுக்கு பாதுகாப்பளிப்பதே அவற்றின் நோக்கமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் எல்ரீரீஈ இயக்கம் அறிந்திருக்க வேண்டும். தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் வசித்து வந்த சிவிலியன்களின் நடமாட்டத்தின் மீது விதித்த வரையறைகளுக்கூடாக, எல்ரீரீஈ இயக்கம் அம்மக்களை மோதல் வலயமொன்றாக இருந்து வந்த வரையறுக்கப்பட்ட ஒரு நிலப் பரப்புக்குள் வைத்திருந்தது. அந்த வகையில் அது மக்களை இராணுவ நடவடிக்கைகளின் அபாயத்தை எதிர்கொள்ளச் செய்திருந்தது. மோதலின் முடிவு வரையில் எல்ரீரீஈ இயக்கம் பொதுமக்களின் நடமாட்டம் மீது விதித்திருந்த கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள் அத்தியாயம் XX இல் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. பலவந்தமான ஆட்சேர்ப்புக்கு வழிகோலும் விதத்தில் வயது வந்தவர்களை கடத்துதல், சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்து, போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல் என்பனவும் யுத்த சூனிய வலயங்களுக்குள் இடம்பெற்று வந்துள்ளன. சம்பந்தப்பட்ட அத்தியாயங்களில் அந்த விடயங்கள் எடுத்து விளக்கப்படுகின்றன.

### ஆயுத மோதலின் இறுதி மாதங்களின் போது பொதுச் சொத்துக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்த ஒரு பொதுநோக்கு

778. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இருந்து வந்தமை, தேவையான அத்தியாவசிய மனிதநேய உதவிகள் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு, மருத்துவப் பராமரிப்பு என்பவற்றை வழங்க வேண்டிய தேவையை எடுத்து வந்திருந்தது. இந்தப் பொதுமக்கள் யுத்த சூனிய வலயங்களில் செறிந்து வாழ்ந்து வந்த நிலை, இது தொடர்பாக மிகவும் ஒரு நிர்ணயகரமான நிலையை எடுத்து வந்திருந்தது. இவர்கள் வாழ்ந்து வந்த பிரதேசங்கள் இலங்கை இராணுவத்தின் பாரிய ஷெல் தாக்குதல்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட பிரதேசங்களாக இருந்து வந்தன. வன்னிப் பிரதேசத்தின் மனிதநேய நிவாரணப் பணிகளை அணுகுதல் மற்றும் நிவாரண உதவி தொடர்பான பிரச்சினையை அத்தியாயம் XV பரிசீலனை செய்கின்றது. பொதுமக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்ட இடங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் மற்றும் அத்தாக்குதல்கள் பொதுமக்கள் மீது எடுத்து வந்திருந்த தாக்கம் என்பன இப்பகுதியில் கவனத்தில் எடுக்கப்படுகின்றது.

779. ஐக்கிய நாடுகள் முகவரகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் என்பவற்றின் சர்வதேச ஆளணியினர் 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வன்னியிலிருந்து வெளியேற வேண்டி நேரிட்டது. அவர்களுடைய பாதுகாப்பினை இனிமேலும் தம்மால் உறுதிப்படுத்த முடியாது என அரசாங்கம் கூறியிருந்தமையினால் அவர்கள் அவ்விதம் வெளியேற வேண்டியிருந்தது. எவ்வாறிருப்பினும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதிலிருந்தும் எல்ரீரீஈ இயக்கத்தினால் தடுக்கப்பட்ட இந்நிறுவனங்களின் இலங்கை ஆளணியினர் தம்மால் முடியுமான விதத்தில் இந்த உதவிகளை வழங்குவதற்கு முயற்சிகளை

மேற்கொண்டிருந்தார்கள். அதிகரித்தளவிலான கட்டுப்பாடுகள், மீண்டும் மீண்டும் இடம்பெற்ற இடப்பெயர்ச்சி மற்றும் அவர்கள் எதிர்கொண்டு வந்த ஆபத்து என்பவற்றுக்கு மத்தியிலும்[728] அவர்கள் இம்முயற்சிகளை முன்னெடுத்து வந்தனர். ஒரு சில மனிதநேயப் பணியாளர்கள் உயிரிழந்தனர் அல்லது மோதலின் இறுதிக் கட்டங்களின் போது படுகாயமடைந்தனர். பெரும்பாலானவர்கள் ஷெல் தாக்குதல்களிலிருந்தே அவ்விதம் காயமடைந்தார்கள்.[729]

780. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்கள் என்பவற்றினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மருத்துவ மற்றும் உணவு விநியோக நிலையங்களுக்கு அருகில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த பெருந்தொகையான மக்கள் தமது கூடாரங்களை அமைத்துக் கொண்டிருந்தனர். ஏனைய பிரதேசங்களிலும் பார்க்க இந்த இடங்கள் பாதுகாப்பாக இருந்து வரும் என்ற நம்பிக்கையில் அவர்கள் அவ்விதம் செய்திருந்தனர். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அத்தகைய நிலையங்கள் சாதாரணமாக ஐக்கிய நாடுகள் சின்னத்தையும், கொடியையும் கொண்டிருந்ததுடன், கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படும் ஆளில்லா விமானங்களுக்கு அவை மிகவும் தெளிவாக தென்படக் கூடிய விதத்தில் அமைக்கப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், அத்தகைய நிலையங்களும், ஏனைய நிவாரண உதவி நிலையங்களும் ஷெல் தாக்குதல்களிலிருந்து தப்பிக் கொள்ளவில்லை. அத்தாக்குதல்கள் மனிதநேய பணியாளர்களையும், அவர்களுடைய செயற்பாடுகளையும் ஆபத்தில் தள்ளியது மட்டுமன்றி பொதுமக்களையும் ஆபத்தில் தள்ளியிருந்தன.

781. மோதல் காலப் பிரவின் போது, காயப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட நபர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான முக்கியமான வசதிகளையும், அதேபோல காயங்கள் அல்லது நோய்கள் காரணமாக போர்க் களத்திலிருந்து ஒதுங்கியிருப்பவர்களுக்கான சேவையினையும் மருத்துவமனைகள் வழங்கி வருகின்றன. மருத்துவ நிலையங்கள், மருத்துவ ஆளணியினர் மற்றும் அந்த இடங்களில் சிகிச்சை பெறுபவர்கள் - அவர்கள் சாதாரண பொதுமக்களாக இருந்தாலும் சரி, போரில் ஈடுபட்டு காயப்பட்டவர்ளாக இருந்தாலும் சரி - சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் இலக்காகக் கொள்ளப்பட முடியாது.

782. யுத்த சூனிய வலயங்களையும் உள்ளடக்கிய விதத்தில், எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களுக்குள் பல மருத்துவ நிலையங்கள் அமைந்திருந்தன. மருத்துவமனைகளில் பெரும்பாலும் அரசாங்க ஊழியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்ததுடன், அவை செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னத்தைக் கொண்டிருந்தன. உதாரணமாக, கூரைப் பகுதியில் தெளிவாக அந்தச் சின்னம் தீட்டப்பட்டிருந்தது அல்லது கொடிகளில் அதனை தெளிவாக பார்க்க முடிந்தது. புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் கூரையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னத்தை தெளிவாக எடுத்துக் காட்டும் ஒரு படத்தினை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்டுள்ளது. இப் பிரிவில் குறிப்பிடப்படும் மருத்துவமனை கட்டடங்கள் செஞ்சிலுவைச் சின்னத்தை தெளிவான விதத்தில் கொண்டிருந்தன என்பதனை செய்மதிப்படங்களும் உறுதிப்படுத்துகின்றன.

---

[728] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட ஆவணங்களின் பிரகாரம், கூட்டுப் படைகள் தலைமையகம் "விடுவிக்கப்படாத பிரதேசங்களில்" இருந்து வந்த ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாதென 2008 செப்டம்பர் மாதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு அறிவித்திருந்தது (தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களை "விடுவிக்கப்படாத பிரதேசங்கள்" என்ற பதத்தின் மூலமே அரசாங்கம் குறிப்பிட்டு வந்தது).

[729] ICRC, மே 13, 2009, "சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூன்றாவது உறுப்பினர் மோதல் பிரதேசத்தில் கொல்லப்பட்டார்", செய்தி வெளியீடு 09/100 ICRC, ஏப்ரல் 13, 2009, "சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஊழியர் மோதல் பிரதேசத்தில் கொல்லப்பட்டார்" செய்தி வெளியீடு 73/09 ICRC,மார்ச் 05, 2009,ICRC உறுப்பினர் மோதல் பிரதேசத்தில் கொல்லப்பட்டார்" செய்தி வெளியீடு 48/09 CARE, மார்ச் 18, 2009, "மனிதநேயப் பணியாளர் இலங்கை மோதலில் கொல்லப்பட்டார்", செய்தி வெளியீடு: WS on file

783. இலங்கை இராணுவத்தின் நகர்வுகள் முன்னேறிச் சென்ற பொழுது, மருத்துவ நிலையங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாடசாலைகளில் அமைத்துக் கொள்ளப்பட்டன. மோதலின் இறுதிக் கட்டத்தின் போது கூடாரங்களிலும் மற்றும் நகர்த்திச் செல்லக் கூடிய அமைப்புக்களிலும் மருத்துவமனைகள் நடத்திச் செல்லப்பட்டன. வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட மருத்துவ சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் என்பனவும், அவை தெளிவாகவே சின்னமொன்றைக் கொண்டிருந்த போதிலும், ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. மிகவும் கடுமையான விதத்தில் சுகவீனமுற்றிருந்த நோயாளிகளின் இடமாற்றம் சில சந்தர்ப்பங்களில் மிகவும் அபாயகரமான நிலைமைகளுக்குள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.[730] இத்தாக்குதல்கள் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை காயப்படுத்தியதுடன், உயிரிழப்புக்களையும் எடுத்து வந்தன. நிலைமை மோசமடைந்து வந்த பொழுது, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவ ஆளணியினரின் ஆற்றல் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், மருத்துவத் துறை ஆளணியினர் தமது கடமைகளை நிறைவேற்றி வைக்கும் விதத்தில் திடசங்கற்பத்துடன் செயற்பட்டு வந்தனர். தமது உயிருக்கு பெருமளவில் ஆபத்து நிலவி வந்த நிலைமைகளிலும் சிகிச்சை அளிப்பதற்கு அவர்கள் முன்வந்தார்கள். மேலும், ஷெல் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் மருத்துவத் துறை ஆளணியினரும் அடங்கியிருந்தனர்.[731] மருத்துவமனைகளுக்குச் செல்லும் பாதைகள் அல்லது பாதைகளுக்கு அருகிலுள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய விதத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள், அப்பிரதேசத்தில் வேறு தாக்குதல்களில் காயமடைந்திருந்த சிவிலியன்கள் மருத்துவமனைகளை அணுகுவதற்கு இடையூறாக இருந்து வந்தன.

784. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட கடிதங்களிலிருந்த விடயங்களுடன் பொருந்திச் செல்லும் விதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மனிதநேய பணியாளர்கள் ஆகிய தரப்பினர் வழங்கிய விபரங்களையும் உள்ளடக்கிய விதத்தில் சாட்சிகள் விவரித்த விடயங்கள், தாக்குதல்களிலிருந்து இந்நிலையங்கள் பாதுகாப்புப் பெறுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு GPS தொழில்நுட்பத்திற்கூடாக அரசாங்கத்திற்கும், வவுனியா பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்கும், இலங்கையின் ஏனைய பாதுகாப்புப் படைகளுக்கும், அதேபோல தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திற்கும் தகவல்கள் அனுப்பப்பட்டிருந்தன என்பதனைக் காட்டுகின்றன. பெரும்பாலான மருத்துவமனைகளிலும் ஏனைய நிவாரணப் பணி நிலையங்களிலும் சண்டை காரணமாக அவை வேறு இடங்களில் நிறுவப்பட்ட போது அந்த இடங்களிலும் GPS தொழில்நுட்ப தொடர்பாடல் வசதி இருந்து வந்துள்ளது.[732]

785. குறைந்தது இரு சந்தர்ப்பங்களின் போது, வள்ளிபுனம் மற்றும் உடையார்கட்டு மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள் இந்தத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டதனை உடனடுத்து இடம்பெற்றிருந்தன.[733] மருத்துவமனைகள் மீது ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்ற விடயம் தொடர்பாக மருத்துவமனை ஊழியர்களும், தொண்டு நிறுவனங்களின் பணியாளர்களும் இராணுவத்திற்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் உடனடியாகத் தகவல்களை தெரிவித்ததாகவும், ஷெல் தாக்குதல்களை நிறுத்துமாறும் கேட்டுக் கொண்டதாகவும் சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர். ஒரு சில சந்தர்ப்பங்களில், இலங்கை இராணுவ நிலைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. இன்னும் சில சந்தர்ப்பங்களில்

[730] WS on file.

[731] WS on file.

[732] WS on file ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மனிதநேய நிறுவனங்கள் என்பன இலங்கை அரசாங்கத்திற்கும், இலங்கை இராணுவத்திற்கும் அனுப்பிவைத்த கடிதங்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்டது.

[733] WS on file

தாக்குதல் தொடுக்கப்படும் திசை மாற்றியமைக்கப்பட்டது. அதாவது, ஷெல் தாக்கும் இடங்களை இலங்கை இராணுவம் கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் இருந்து வந்தது என்பதனையே இது காட்டுகின்றது.[734]

786. சாட்சிகள் வழங்கிய தகவல்களின் பிரகாரம், (தற்காலிக அரசு சாராத) மருத்துவ நிலையமொன்று மறைந்திருப்பதற்கும் தாக்குதல்கள் இடம்பெறக் கூடிய சாத்தியப்பாட்டைக் குறைத்துக் கொள்வதற்கு குறைந்தது செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டிருந்தது. இது 2009 ஜனவரி மாதத்தில் உடையார்கட்டு மருத்துவமனையின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையடுத்து இடம்பெற்றிருந்தது.[735] இந்த நிலையம் செயற்பாட்டிலிருந்த பொழுது அதன் மீது ஷெல் தாக்குதல்கள் இடம்பெறவில்லை என ஒரு சாட்சி குறிப்பிட்டிருந்தார்.

787. காயமடைந்த எல்ரீரீஈ போராளிகளுக்கு அந்த இயக்கத்திற்குச் சொந்தமான மருத்துவ நிலையங்களிலேயே சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. ஆனால், ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அரசாங்க மருத்துவமனைகளிலும் சிகிச்சை வழங்கப்பட்டது. ஒரு சில அரசாங்க மருத்துவமனைகளில் எல்ரீரீஈ இயக்கப் போராளிகளுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்ற விடயத்தை சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு அறிந்திருந்தது. மேலும், இந்த மருத்துவமனைகளில் நிராயுதபாணிகளான எல்ரீரீஈ இயக்க மருத்துவர்கள் பணியாற்றி வந்தார்கள் என்பதனையும், காயமடைந்த எல்ரீரீஈ போராளிகளுக்கும், அதேபோல பொதுமக்களுக்கும் அவர்கள் சிகிச்சை அளித்து வந்தார்கள் என்பதனையும் அந்த அமைச்சு அறிந்திருந்தது.[736] மருத்துவமனைகளுக்குள் போரின் போது காயமடைந்த எல்ரீரீஈ இயக்கப் போராளிகள் தங்கியிருந்தமை பொதுமக்கள் வார்ட்டுகளில் அல்லது புறம்பான வார்ட்டுகளில் தங்கியிருந்து வந்தமை அந்த மருத்துவமனைகளின் பாதுகாக்கப்பட்ட அந்தஸ்தில் அல்லது அந்த இடத்தில் தங்கியிருந்தவர்களின் அந்தஸ்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை.

788. ஷெல் வீச்சுக்களின் போது, மருத்துவ நிலையங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன என்ற விடயத்தை அல்லது ஒரு சில சந்தர்ப்பங்களில் ஷெல் வீச்சுக்கள் மருத்துவ நிலையங்களைத் தாக்கியிருக்கின்றன என்ற விடயத்தை அரசாங்கம் மறுத்தது.[737] கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் ''மருத்துவமனைகள் மீது உண்மையில் ஷெல்கள் விழுந்திருந்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் அவற்றின் விளைவாக சேதமும், உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருந்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பவற்றைக் கவனமாக பரிசீலனை செய்த பின்னர்'' அந்த விடயம் குறித்து "திருப்தியடைந்திருப்பதாக" குறிப்பிட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இந்த தாக்குதல்களுக்கு யார் பொறுப்பாக இருந்து வந்தார்கள் என்ற விடயம் தொடர்பாக "தொழில்நுட்ப இயல்பைக் கொண்ட முதன்மை சாட்சியங்கள் கிடைக்காமையினாலும், அதற்கு துணை நிற்கக் கூடிய சிவிலியன்களின் சாட்சியங்கள் இயல்பில் சந்தேகத் தன்மையைக் கொண்டிருந்த காரணத்தினாலும், இந்த ஷெல் வீச்சுக்கு ஒரு தரப்பு அல்லது மறு தரப்பு பொறுப்பாக இருந்து வந்துள்ளது என்ற விடயம் குறித்த ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர

[734] WS on file

[735]WS on file

[736] WS on file

[737] www.nydailynews.com: www.nydailynews.com: இலங்கையின் போர் வலயத்தில் செயற்பட்டு வந்த ஒரேயொரு மருத்துவ வசதியின் மீது மோட்டார் ஷெல் தாக்குதல் உறுப்புரை 1.412744

முடியாதிருப்பதனால்” இது குறித்து ஒரு திட்டவட்டமான முடிவைக் கூற முடியாது என அது குறிப்பிட்டிருந்தது.[738]

789. எவ்வாறிருப்பினும், அதன் விசாரணையின் போது இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சேகரித்த தகவல்கள் இத்தாக்குதல்கள் தனித்த சம்பவங்களாக இருந்து வரவில்லை என்பதனையும், குறிப்பிட்ட ஒரு மாதிரியை அவை கொண்டுள்ளன என்பதனையும் காட்டுகின்றன. அதாவது, பாதுகாக்கப்பட்ட இடங்கள் இத்தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இலங்கை இராணுவம் போதிய வழிமுறைகளை மேற்கொள்வதற்கு தவறியிருப்பதுமன்றி, ஒரு சில சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே இத்தகைய இடங்களை இலக்குவைத்துத் தாக்குதல்களை மேற்கொண்டிருக்க முடியும்.

790. மல்டி பெரல் ரொக்கட்டுக்கள் போன்ற மறைமுக சூட்டு ஆயுதங்களை செறிவான விதத்தில் மக்கள் வாழ்ந்து வரும் இடங்களில் பொருத்தமற்ற விதத்தில் பயன்படுத்தப்படும் ஒரு முறையை இத்தாக்குதல்கள் பிரதிபலிக்கின்றன. மேலும், குறிப்பிட்ட அமைவிடங்களில் பாதுகாக்கப்பட்ட இடங்கள் இருந்து வரும் விடயத்தையும் இலங்கை இராணுவம் அறிந்திருந்தது. தொடர்ந்தும் விமானங்கள் மற்றும் ஆளில்லாத வேவு விமானங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி, கண்காணிப்பு நடத்தப்பட்டு வந்திருக்கும் நிலைமையிலும் கூட போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வந்தபொழுது இந்த அமைவிடங்கள் மீண்டும் மீண்டும் ஆட்டிலரி தாக்குதல்களுக்கும், விமானத் தாக்குதல்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தன. அத்தாக்குதல்கள் உயிரிழப்புக்களையும், அதேபோல உள்கட்டமைப்புக்களுக்கான சேதங்களையும் ஏற்படுத்தியிருந்தன. அதன் விளைவாக ஊழியர்கள், நோயாளர்கள் போன்றவர்களையும் அதேபோல உபகரணங்களையும் பல தடவைகள் வெவ்வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலைமை நிலவி வந்தது.

791. குறுகிய தூரத்தை கவனத்தில் எடுக்கும் பொழுது, யுத்த சூன்ய வலயங்களுக்குள்ளிருந்து எல்ரீரீஈ இயக்கம் மருத்துவமனைகள் மீது ஆட்டிலரி தாக்குதல்களை நடத்தியிருக்கக் கூடிய வாய்ப்பு அநேகமாக குறைவாகவே காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், மருத்துவமனைகளுக்கு அருகிலும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணிமனைகளுக்கு அருகிலும் எல்ரீரீஈ இராணுவ நிலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமை மற்றும் மருத்துவமனைகளுக்கு அருகிலிருந்து அந்த இயக்கம் சூட்டுத் தாக்குதல்களை நடத்தியமை என்பன, தாக்குதல்களின் விளைவுகளிலிருந்து பொதுமக்களையும், பொது இடங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமான சாத்தியமான அனைத்து முன்னெச்சரிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய தனது கடப்பாட்டை மதித்து நடக்கும் அந்த இயக்கத்தின் நிலை மீது கேள்விகளை எழுப்புகின்றன.

792. பின்வரும் பகுதி மருத்துவமனைகள், தற்காலிக மருத்துவ நிலையங்கள், ஐநா மையங்கள் மற்றும் உணவு விநியோக நிலையங்கள் என்பவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான விபரங்களை முன்வைக்கின்றது. தாக்குதல்கள் பெருமளவுக்கு யுத்த சூனிய வலயங்களிலேயே இடம்பெற்றுள்ளன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு 2008 அக்டோபர் மாதத்திற்கும், 2009 மே மாதத்திற்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது வன்னியில் அமைந்திருந்த ஒன்பது பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை - சில சமயங்களில் பன்முகப்பட்ட தாக்குதல்களை பரிசீலனை செய்தது. அவற்றில் ஏழு நிலையங்கள் யுத்த சூனிய வலயங்களுக்குள் அமைந்திருந்தன.

### முதலாவது யுத்த சூனிய வலயம் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் மருத்துவமனைகள், ஐக்கிய நாடுகள் அலுவலகங்கள் மற்றும் மனிதநேய முகவரகங்கள் என்பன தாக்கப்பட்டமைக்கான உதாரணங்கள்

---

738 கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, பந்திகள் 4.288 மற்றும் 4.293.

-

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புக்கள், கிளிநொச்சி**[739]

793. வன்னி பிரதேசத்தின் ஐநா அலுவலகம் “Kilinochchi City Box”, அல்லது “the Box” என அழைக்கப்படும் கிளிநொச்சி நகரத்தின் ஒரு பிரதேசத்தில் அமைந்திருந்தது. கிளிநொச்சி நகரம் எல்ரீரீஈ இயக்கத்தின் ஒரு பலம் வாய்ந்த கோட்டையாக இருந்து வந்தபோதிலும், the “Box” என்று அழைக்கப்பட்ட இப்பிரதேசம் அரசாங்கத்தினால் ஒரு “பாதுகாப்பான” பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. வன்னிப் பிரதேசத்தில் மனிதநேய நிகழ்ச்சித்திட்டங்களும், செயற்பாடுகளும் பாதுகாப்பான விதத்தில் முன்னெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், அவற்றுக்கு வசதி செய்து கொடுப்பதற்குமென இந்தப் பிரதேசம் உருவாக்கப்பட்டிருந்தது. எனவே, இந்த வகையில் பிரதேசத்தில் மனிதநேய நிவாரண உதவி நிலையங்கள் அமைந்திருந்திருந்தன என்ற விடயத்தை அரசாங்கம் அறிந்திருந்தது. ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும், அரசாங்கத்திற்குமிடையில் இருந்து வந்த இந்த புரிந்துணர்வுக்கு மத்தியிலும் கூட, இந்த இடத்தில் அமைந்திருந்த ஐ நா அலுவலகங்கள் இலங்கை இராணுவத்தின் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன. எல்ரீரீஈ இயக்கமும் கிளிநொச்சி நகருக்கு அருகில் ஆட்டிலரி வசதிகளையும் உள்ளடக்கிய விதத்தில் இராணுவ நிலைகளை கொண்டிருந்தது. எவ்வாறிருப்பினும், சாட்சியங்களின் கூற்றுக்களின் பிரகாரம், ஷெல் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், இந்த இடத்திலிருந்து எல்ரீரீஈ இயக்கத்தினால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.[740]

794. 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கும், அக்டோபர் மாதத்திற்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது இலங்கை இராணுவத்தின் 57 ஆவது மற்றும் 58 ஆவது படைப் பிரிவுகள் கிளிநொச்சியை நோக்கி முன்னேறிச் சென்ற பொழுது, பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தை (Box) சூழ இருந்த பிரதேசங்கள் விமானக் குண்டுத் தாக்குதலுக்கும், ஷெல் வீச்சுக்கும் இலக்காகின. 2008 ஜூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலின் விளைவாக அரசு சாரா அமைப்பொன்றின் பணிமனையொன்று ஓரளவுக்கு சேதமடைந்தது.[741] செப்டம்பர் 3 ஆந் திகதி இலங்கை இராணுவம் கிளிநொச்சியின் மீது ஷெல் தாக்குதலை மேற்கொண்ட பொழுது, உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் (WFP) பணிமனையிலிருந்து 300 மீற்றர் தொலைவிலும், அரச சாரா அமைப்பொன்றின் பணிமனையிலிருந்து 100 மீற்றர் தொலைவிலும் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் ஷெல் ஒன்று வீழ்ந்தது. இந்த ஷெல் தாக்குதல்களையடுத்து ஐக்கிய நாடுகள் அமைப்புகிளிநொச்சியிலிருந்து செயற்பட்டு வந்த அதன் ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பாக கரிசனை கொண்டதுடன், செப்டம்பர் 4 ஆந் திகதி அரசாங்கத்திடம் அக்கரிசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அடுத்த நாளும், மீண்டும் செப்டம்பர் 8 ஆந் திகதியும் மனிதநேய முகவரகங்களின் பணிமனைகளினதும், அவற்றில் பணியாற்றி வரும் ஊழியர்களினதும் பாதுகாப்பை தம்மால் உத்தரவாதப்படுத்த முடியாதிருப்பதனால் அவை தமது அலுவலகங்களை மூடிவிட வேண்டுமென அரசாங்கம் அறிவுரை வழங்கியது. வன்னிப் பிரதேசத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும்,Caritas அமைப்பும் மட்டுமே இருந்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

---

[739] இந்தப் பிரிவு சிவிலியன் இலக்குகள் மீதான ஷெல் தாக்குதல்கள் தொடர்பாக கவனம் செலுத்திய போதிலும், கிளிநொச்சியை சேர்ந்த பிரதேசங்களில் வசித்து வந்த பொதுமக்கள் மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்ற விடயத்தை ஏனைய மூலாதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, டிசம்பர் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சின் விளைவாக இரு வீடுகளில் வசித்து வந்த ஏழு நபர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அப்பிரதேசத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் தளங்கள் இருந்து வரவில்லை எனவும் கூறப்படுகின்றது.WS on file.

[740] WS on file.

[741] WS on file

795. அரசாங்கத்தின் இந்த அறிவுறுத்தலின் அடிப்படையில், ஐக்கிய நாடுகள் அமைப்பு செப்டம்பர் 8 ஆந் திகதி அதன் ஊழியர்களை விலக்கிக் கொள்ளத் தொடங்கியது.[742] செப்டம்பர் 9 ஆந் திகதி, ஐக்கிய நாடுகளின் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் ஒரு ஆட்டிலரி ஷெல் வீழ்ந்து வெடித்தது.[743] இலங்கை பாதுகாப்புப் படைகள் கிளிநொச்சியை நோக்கிச் சென்றதுடன், அந்நகர்வின் போது பல்லாயிரக்கணக்கான சிவிலியன்கள் வெளியேற நேரிட்டது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் வசதிகள் மேலும் சேதமடைந்தன.[744] செப்டம்பர் 10 ஆந் திகதி அதிகாலையில் இலங்கை விமானப் படை கிளிநொச்சி மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதுடன், Box என அழைக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் வசதிகள் அதில் சேதமடைந்தன; ஒரு சில ஷெல்கள் ஐ நா பதுங்கு குழியிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் விழுந்து, கொங்கிரீட் சுவர்களில் வெடிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன;[745] செப்டம்பர் 28 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் அலுவலக வளவுக்குள் ஒரு ஷெல் வீழ்ந்த பொழுது ஐந்து சிவிலியன்கள் காயமடைந்தார்கள்;[746] அக்டோபர் 3 ஆந் திகதி பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விமானத் தாக்குதல் கிளிநொச்சி Box பிரதேசத்தில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூன்று கட்டடங்களை சேதப்படுத்தியது.[747] செப்டம்பர் 16 ஆந் திகதி சர்வதேச ஆளிணியினர் அனைவரும் வெளியேறி இருந்தனர். உள்நாட்டு ஊழியர்கள் எல்ரீரீஈ இயக்கம் விதித்திருந்த வரையறைகள் காரணமாக வெளியேற முடியாத நிலையிலிருந்து வந்ததுடன், இறுதியில் ஷெல் தாக்குதல்கள் காரணமாக அவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட வரையில் அவர்கள் தொடர்ந்தும் மனிதநேய நிவாரணப் பணிகளை அங்கு முன்னெடுத்து வந்தார்கள்.[748]

**கிளிநொச்சி மருத்துவமனை**

796. நீண்ட காலமாக செயற்பட்டு வந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான கிளிநொச்சி மருத்துவமனை இலங்கை பாதுகாப்புப் படைகள் கிளிநொச்சியை நோக்கி முன்னேறிச் சென்ற பொழுது மீண்டும் மீண்டும் ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. 2008 ஆம் ஆண்டு அக்டோபர் 25, டிசம்பர் 24 மற்றும் டிசம்பர் 30 ஆகிய திகதிகளில் இந்த மருத்துவமனை மீது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் கட்டடங்களுக்கு அதன் விளைவாக சேதங்கள் ஏற்பட்டன.[749] கிளிநொச்சிக்கு தெற்கே இலங்கை இராணுவத்தின் திசையிலிருந்து இந்த ஷெல்கள் வந்ததாக சாட்சிகள் கூறினார்கள்.[750] மருத்துவமனைக்கு அருகில் எல்ரீரீஈ இயக்கத்தின் நிலைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.[751] டிசம்பர் 31 ஆந் திகதி அளவில் மருத்துவ சேவைகள் வேறு இடமொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.[752]

[742] WS on file

[743] WS on file

[744] WS on file

[745] WS on file

[746] WS on file

[747] ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளிநாட்டு அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதம், அக்டோபர் 8, 2008, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பார்வையிடப்பட்டது.

[748] WS on file

[749] WS on file

[750] WS on file

[751] WS on file

[752] WS on file

**முல்லைத்தீவு மருத்துவமனை**

797. முல்லைத்தீவு மருத்துவமனை வன்னியில் அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டு வரும் மிகப் பழைய மருத்துவமனைகளில் ஒன்றாக இருந்து வந்ததுடன், அதன் அமைவிடத்தை இலங்கை இராணுவம் நன்கு அறிந்திருந்தது. அந்த மருத்துவமனையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னம் தெளிவாக காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் துல்லியமான அமைவிடத்தை காட்டும் GPS தகவல்கள், மனிதநேய செயற்பாட்டாளர்கள் மற்றும் மருத்துவத் துறை பணியாளர்கள் ஆகியோரினால் பல தடவைகள் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.[753] இந்த மருத்துவமனையை சூழவுள்ள பிரதேசம், 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கும், 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது பல தடவைகள் ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.[754]

798. 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆந் திகதி நள்ளிரவு 1 மணி அளவில் முல்லைத்தீவு மருத்துவமனையை சூழவுள்ள பிரதேசத்தில் சுமார் 40 ஷெல்கள் வெடித்தன.[755] முல்லைத்தீவிலிருந்து சுமார் 10 கி.மீற்றர் தொலைவில் அப்பொழுது இலங்கை இராணுவம் முன்னகர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த நிலையில் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசத்திலிருந்து இந்த ஷெல் தாக்குதல் ஏவப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது.[756] ஷெல் தாக்குதலின் போது பாரிய காயங்கள் எவையும் ஏற்படாதிருந்தாலும் கூட, மருத்துவமனை கட்டடங்கள் சேதமடைந்தன. எல்ரீரீஈ அமைப்பின் பொலிஸ் நிலையம் இந்த மருத்துவமனையிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் அமைந்திருந்ததாக சாட்சிகளின் அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த தாக்குதல்களின் போது அந்த பொலிஸ் நிலையமும் சேதமடைந்ததாக கூறப்படுகின்றது.[757] இது குறித்து அறிவிக்கப்பட்ட பொழுது, ஷெல் தாக்குதல் நடத்தியதற்கான பொறுப்பை ஏற்பதற்கு இலங்கை இராணுவம் மறுத்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால், இது குறித்து இலங்கை இராணுவத்திற்கு அறிவிக்கப்பட்டதனையடுத்து, ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டிருந்தன.[758]

799. 2008 ஆம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்த மருத்துவமனை மீண்டும் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டதுடன், முல்லைத்தீவின் தெற்கில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்திலிருந்து மல்டிபெரல் ரொக்கட் சூட்டுத் தாக்குதல்களையும் எதிர்கொண்டது.[759] மருத்துவமனைக் கட்டடம் சேதமடைந்ததுடன், இருவர் சிறு காயங்களை எதிர்கொண்டார்கள்.[760] 2008 டிசம்பர் மற்றும் 2009 ஜனவரி ஆகிய மாதங்களில் மருத்துவமனையை சூழவுள்ள பிரதேசங்களையும்[761] உள்ளடக்கிய விதத்தில்

---

753WS on file

754WS on file

755WS on file; மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் விசேட நடைமுறைகள் பிரிவு, ஜெனீவாவிலிருக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கையின் நிரந்தர பிரதிநிதிக்கு அனுப்பி வைத்த கடிதம், நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான அல்லது அதிரடியான மரண தண்டனைகள் குறித்த விசேட அறிக்கையாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக் கடிதம் AL/GSO214(33-24)LKA16/2008, 6 October

756WS on file

757WS on file

758WS on file

759WS on file

760WS on file

761WS on file

முல்லைத்தீவு மீதான ஷெல் தாக்குதல்கள் தீவிரமடைந்த பொழுது, அந்த மருத்துவமனையை மூடிவிடுவதற்கும், அதனை வள்ளிபுனத்திற்கு எடுத்துச் செல்வதற்கும் மருத்துவ ஆளணியினர் முடிவு செய்தனர்.[762]

800. 2008 ஆகஸ்ட், அக்டோபர், டிசம்பர் காலப் பிரிவின் போதும், 2009 ஜனவரி மாதத்தின் போதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு உள்ளேயோ அல்லது அதற்கு அயல் பிரதேசத்திலேயோ எல்ரீரீஈ இயக்கம் இராணுவ நிலைகளை கொண்டிருப்பதனை எடுத்துக் காட்டும் தகவல்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கவில்லை. இந்த அடிப்படையில், அறியப்பட்ட இராணுவ இலக்குகள் இந்த இடத்தில் இருந்து வராத காரணத்தினால் மருத்துமனை மீதும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது.

801. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டதனையடுத்து, இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவு அதன் முன்னோக்கிய நகர்வை தொடர்ந்து மேற்கொண்டதுடன்,A35 நெடுஞ்சாலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த விஸ்வமடு மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய நகரங்களை நோக்கி கிழக்குத் திசையில் முன்னேறிச் சென்றது. இலங்கை இராணுவம் முன்னேறிச் சென்ற பொழுது புதுக்குடியிருப்பு பிரதேசமும், புதுக்குடியிருப்பை சூழவுள்ள பிரதேசங்களும் அரசாங்க படைகளிலிருந்து கணிசமான அளவிலான குண்டுத் தாக்குதல்களை சந்தித்தன. மருத்துவமனைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மனிதநேய முகவரகங்கள் என்பவற்றினால் பயன்படுத்தப்பட்ட கட்டடங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பொது உள்கட்டமைப்பு வசதிகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன முன்னகர்ந்து வந்த படைகளுடன் மக்கள் செறிவு மிக்க பிரதேசங்களுக்கு அருகிலிருந்து எல்ரீரீஈ இயக்கம் சமரில் ஈடுபட்டது. மருத்துவமனையை அண்மித்த பிரதேசத்தில் உருவாக்கப்பட்டிருந்த அதன் இராணுவ நிலைகளிலிருந்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. மருத்துவமனைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ நிலைகளிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, தாக்குதல்களின் விளைவுகளிலிருந்து சாதாரண பொதுமக்களையும், பொதுச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளை தெளிவாகவே மீறும் செயல்களாக இருந்து வந்துள்ளன.

### யுத்த சூன்ய வலயங்களிலும், புதுகுடியிருப்பிலும் பொதுமக்கள் மீதும் பொதுச் சொத்துக்கள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கான உதாரணங்கள்

#### யுத்த சூன்ய வலயம் 1 மற்றும் புதுக்குடியிருப்பு என்பவற்றின் மீதான தாக்குதல்கள்

802. இலங்கை பாதுகாப்புப் படைகளின் வன்னிப் பிரதேச கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய முதலாவது யுத்த சூன்ய வலயத்தை 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆந் திகதி அறிவித்தார்.[763] இந்த யுத்த சூன்ய வலயம் A35 நெடுஞ்சாலையின் வட பகுதியில் உடையார்கட்டு சந்திக்கும், மஞ்சள் பாலத்திற்குமிடையிலான 35.5 சதுர கி.மீ.பரப்பளவை[764] உள்ளடக்கியிருந்தது.

[762]WS on file

[763]இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடமிருக்கும் கையொப்பமிடப்பட்ட கடிதக் கோவை

[764]இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பிலிருக்கும் உள்ளக மனித நேய விவகாரங்கள் ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் வரைபடம்

ஏனைய எல்லைகள் ஒரு வரைபடத்தில் கோடுகளாக வரையப்பட்டிருந்ததுடன், அவை நிலப்பரப்பு தொடர்பாக அறியத்தக்க எத்தகைய கூறுகளையும் கொண்டிருக்கவில்லை. அதன் எல்லைகளைத் தெரிந்து கொள்வது சிவிலியன்களை பொறுத்தவரையில் மிகவும் கடினமான ஒரு காரியமாக இருந்து வந்தது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பார்வையிடப்பட்ட எந்தவொரு துண்டுப் பிரசுரமும் யுத்த சூன்ய வலயத்தின் எல்லைகளை தெளிவாகக் காட்டியிருக்கவில்லை அல்லது உள்ளடக்கப்பட்ட பிரதேசம் குறித்த விபரங்களை எவரும் அறிந்திருக்கவில்லை. எல்ரீரீஈ இயக்கம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த விதத்தில் தனது பிடியில் வைத்திருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புதுக்குடியிருப்பு நகரம் தென் கிழக்கில் யுத்த சூன்ய வலயத்திற்கு வெளியில் அமைந்திருந்தது.

803. யுத்த சூன்ய வலயம் 1 முன்னர் நிலவி வந்த எல்ரீரீஈ இயக்கத்தின் நிலைகளை கொண்டிருந்தது.[765] அது முன்னரங்க நிலைகளுக்கு அருகில் அமைந்திருந்ததுடன், சாதாரண பொதுமக்களுக்கு தப்பிச் செல்வதற்கான ஒரு சில வழிகளை மட்டுமே வழங்கியது. எவ்வாறிருந்தபோதிலும், யுத்த சூன்ய வலயம் 1 இல் வந்துகுவிந்திருந்த பொதுமக்களுக்கு சர்வதேச நிறுவனங்களின் பிரசன்னததின் மூலம் ஒரு உறுதி வழங்கப்பட்டிருந்ததுடன், அது பாதுகாப்பான இடம் என அவர்கள் நம்பியிருந்தனர். ஆனால், ஷெல் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே அவர்கள் அந்த இடத்தை கைவிடத் தொடங்கினார்கள். யுத்த சூன்ய வலயம் 1 பிரதேசத்திற்குள் அல்லது அதற்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வள்ளிபுனம் மருத்துவமனை**

804. A35தேசிய நெடுஞ்சாலையில் யுத்த சூன்ய வலயம் 1 இன் முனையில் வள்ளிபுனத்துக்கும், தேவிபுரம் சந்திக்குமிடையில் அமைந்திருக்கும் வள்ளிபுனம் மருத்துவமனை பல கட்டடங்களை கொண்டிருந்தது. மருத்துவமனையை அண்டிய பிரதேசம் மோதல் காரணமாக இடம்பெயர்ந்திருந்த பெருந்தொகையான பொதுமக்கள் செறிந்து வாழ்ந்து வந்த ஒரு பிரதேசமாக இருந்து வந்தது. அவர்கள் அங்கு தற்காலிக கொட்டில்களை அமைத்துக் கொண்டிருந்தனர்.[766] 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆந் திகதியும், மீண்டும் 20 ஆந் திகதியும் மருத்துவமனையின் GPS தகவல்கள் இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகாவுக்கும், வன்னி பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரியா அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.[767] ஜனவரி 24 ஆந் திகதியிடப்பட்ட பி.ப. 10.50 நேரம் குறிக்கப்பட்டு 57, 58 மற்றும் 59 ஆவது படைப் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இராணுவ கடிதத்தின் பிரதியொன்றை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்டது. இக்கடிதம் அதிரடிப் படைகள் 2, 3 மற்றும் 4 என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், வள்ளிபுனம் மருத்துவமனையின் நிலை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த GPS தகவல்கள் அதற்கு முன்னர் களத்திலிருந்து இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தனவா என்பது தெரியவில்லை.

805. 2009 ஜனவரி 19 ஆந் திகதி யுத்த சூன்ய வலயம் 1 தொடர்பான அறிவித்தல் விடுக்கப்படுவதற்கு முன்னர், இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசங்களிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வள்ளிபுனம் மருத்துவமனையை தாக்கியதுடன்,[768] எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகளுக்கு

[765] WS on file.

[766] WS on file.

[767] WS on file; LLRC இணைப்புக்கள், இணைப்பு 3 பக். 94. இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்http://www.llrcaction.gov.lk/assets/downloads/reports/en/Annexe-3_en.pdf

[768] WS on file

சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த ஒரு தற்காலிக வார்ட்டுக்கு அருகில் விழுந்தன.[769] இந்த விடயம் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம், அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

806. யுத்த சூன்ய வலயம் 1 பிரகடனப்படுத்தப்பட்டவுடனேயே ஜனவரி 21 மற்றும் 22 ஆந் திகதிக்குமிடையில் வள்ளிபுனம் மருத்துவமனை வளவில் மூன்று ஷெல்கள் வெடித்ததுடன், பிரதான கட்டடம், மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகள், அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் தற்காலிக மருத்துவக் கொட்டில்கள் என்பவற்றுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தது.[770] குறைந்தது ஐந்து சிவிலியன்கள் இத்தாக்குதல்களில் கொல்லப்பட்டதாகவும், 22 பேர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது. ஒரு தற்காலிக வார்ட்டும் இதில் சேதமடைந்தது. ஏற்கனவே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் இந்த தற்காலிக வார்ட்டில் தங்கியிருந்ததுடன், அவர்கள் மேலும் காயங்களுக்குள்ளானார்கள்.

807. வள்ளிபுனம் மருத்துவமனையைச் சூழவுள்ள பிரதேசமும் சூட்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டது. தனது அலுவலகத்திலிருந்த பொழுது மல்டி பெரல் ரொக்கட்தாக்குதல் சத்தத்தை கேட்டதாகவும், அருகிலுள்ள மருத்துவரின் வீட்டிலிருந்து அழுகுரல்கள் வருவதைக் கேட்டு, அங்கு ஓடிச் சென்றதாகவும் சாட்சி ஒருவர் விபரித்திருந்தார். அந்த வீட்டைச் சூழவுள்ள மரங்களின் கிளைகள் ஷெல் தாக்குதல்கள் காரணமாக கருகி விழுந்திருந்ததை தான் பார்த்ததாக அவர் சொன்னார். அந்தக் குண்டு வெடிப்புக்கள் செங்கல் மற்றும் மண் என்பவற்றை கொண்டு கட்டப்பட்டிருந்த அந்த வீட்டின் ஒரு பக்கத்தை உடைத்து, வீழ்த்தியிருந்தன. அந்த மருத்துவர் தரையில் விழுந்து கிடந்ததுடன், அவரின் வயிற்றின் உட்பாகங்கள் குண்டு துணுக்குகளினால் கிழித்தெறியப்பட்டிருந்ததுடன், அவை வெளியில் வந்து கொண்டிருந்தன. அந்த மருத்துவர் பின்னர் அந்த காயங்களின் விளைவாக மரணமடைந்தார்.[771] 2009 பெப்ரவரி மாதம் ஆரம்பப் பகுதியில் வள்ளிபுரம் மருத்துவமனைக்கு அருகிலுள்ள பிரதேசம் "கொத்துக் குண்டுகளால்" தாக்கப்பட்டதாகவும், தரைக்கு 20 – 25 மீற்றர் மேலே அவை நடுவானில் வெடித்ததாகவும், அவ்விதம் வெடித்து அது மேலும் 40 – 45 குண்டுத் துணுக்குகளாக சிதறிச் சென்றதாகவும் அவர் கூறினார்.[772]

808. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்ட வள்ளிபுனம் மருத்துவமனையின் செய்மதிப் படங்கள் மருத்துவமனை வளவுக்குள் இரண்டு வெடிப்புக்கள் இருந்து வருவதனையும், மூன்று வெவ்வேறு கட்டடங்களின் கூரைக்கு மேலே நான்கு வெடிப்புக்கள் இருந்து வருவதனையும், ஒரு கட்டடம் ஒரு பக்கம் அழிவுற்றிருப்பதனையும், ஏனைய எட்டு கட்டடங்கள் முழுமையாக அழிக்கப்பட்டிருப்பதனையும் காட்டுகின்றன. இவை அனைத்தும் 2009 ஜனவரி மாதம் 21 ஆந் திகதிக்கும், பெப்பரவரி மாதம் 18 ஆந் திகதிக்குமிடையில் இடம்பெற்றிருந்தன. மருத்துவமனையை ஒரு கிலோமீற்றர் சூழவுள்ள பிரதேசத்தில் 50க்கும் மேற்பட்ட மேலதிக ஆட்டிலரி தாக்குதல்களை எதிர்கொண்ட அமைவிடங்கள் இருந்து வந்தன. இப்பிரதேசம் அரசாங்கத்தினால் ஒரு "மேலதிக பாதுகாப்பு வலயமாக" பெயர் குறிக்கப்பட்டிருந்தது. இது மருத்துவமனையும் அதன் அயல் பிரதேசமும் புதிதாக பிரகடனம் செய்யப்பட்ட யுத்த சூன்ய வலயத்திற்குள் இருந்து வந்த போதிலும், தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை அவை எதிர்கொண்டு வந்தன என்ற விடயத்தை எடுத்துக் காட்டுகின்றது.

[769] WS on file

[770] WS on file; LLRC அறிக்கை பந்திகள் 4.118 மற்றும் 4.120.

[771] WS on file

[772] WS on file

809. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பார்வையிடப்பட்ட செய்மதிப் படங்கள் வள்ளிபுனம் மருத்துவமனைக்கு சுமார் 650 மீற்றர் தென் கிழக்கில் எல்ரீரீஈ இயக்கத்தின் மண் அணையொன்று அல்லது பாதுகாப்பு நிலையொன்று இருந்து வந்ததனை காட்டுகின்றன.[773] பொது இடங்களுக்கு சிறிது தூரத்தில் அத்தகைய இராணுவ நிலைகளை வைத்திருப்பது ஒரு சட்ட ரீதியான இலக்காக இருந்து வர முடியும். எனினும், இந்த செய்மதிப் படங்கள், வள்ளிபுனம் மருத்துவமனை பிரதேசத்தின் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்ட காலப் பிரிவின் போது, இப்பிரதேசம் தாக்கப்பட்டதற்கான எத்தகைய அடையாளங்களையும் காட்டவில்லை.

810. வள்ளிபுனம் மருத்துவமனையின் மீதான தாக்குதல்களை பரிசீலனை செய்யும் பொழுது, மருத்துவமனையின் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கான நியாயப்படுத்தல்கள் எவையும் இருந்து வரவில்லை போல் தெரிகிறது. எல்ரீரீஈ இயக்கம் இந்த மருத்துவமனையில் அதன் இராணுவ நிலைகளை கொண்டிருந்தது என்பதனை காட்டும் தகவல்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கவில்லை. இத்தாக்குதலின் நோக்கம், காயமடைந்த எல்ரீரீஈ போராளிகள் அங்கு சிகிச்சை பெற்று வருவதனை இலக்கு வைப்பதாக இருந்து வந்தால், இவை சட்டபூர்வமான இலக்குகளாக இருந்து வர முடியாது. மேலும், பொதுமக்கள் பெருமளவுக்கு செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் இத்தகைய வெடித்துச் சிதறுமத் துணுக்குகளுடன் கூடிய ஆயுதங்களின் பாவனை பொதுமக்களுக்கான சேதங்கள் ஏற்படக் கூடிய கணிசமான அளவிலான ஆபத்தைக் கொண்டிருப்பதுடன், மருத்துவமனைகளையும் உள்ளிட்ட பாதுகாக்கப்பட்ட இலக்குகள் மீதும் பாதிப்புக்கள் ஏற்பட முடியும். இது நிரூபிக்கப்பட்டால், சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கடப்பாடுகளுக்கு இணங்கிய விதத்தில் இடம்பெற்றதாக இருந்து வருவதற்கு எத்தகைய வாய்ப்புமில்லை.

### உடையார்கட்டு மருத்துவமனை, ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையம் மற்றும் யுத்த சூன்ய வலயம் 1 க்கு உள்ளே அமைந்திருந்த உணவு விநியோக நிலையம்

811. உடையார்கட்டு மருத்துவமனை, யுத்த சூன்ய வலயம் 1 இன் தென்மேற்கு மூலையில் A35 நெடுஞ்சாலையின் வட பகுதியில் பெரிய பாடசாலையொன்றில் அமைந்திருந்தது. அது சுமார் 11 நிரந்தர கட்டடங்களை கொண்டிருந்ததுடன், அவை தெளிவாக செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னத்தை கொண்டிருந்தன. தற்காலிக வார்டுகளாக பயன்படுத்தப்பட்டு வரும் கூடாரங்களும் அதனைச் சூழ அமைந்திருந்தன.[774] மருத்துவத் துறை ஆளணியினரும், மனிதநேயப் பணியாளர்களும் இந்த மருத்துவமனையின் அமைவிடம் குறித்த GPS படங்களை முதலில் ஜனவரி 18 ஆந் திகதியும்,மீண்டும் ஜனவரி 20 ஆந் திகதியும் பாதுகாப்புப் படைகளுக்கு அனுப்பி வைத்திருந்தார்கள்.[775]

812. சுதந்திரபுரம்/உடையார்கட்டு பிரதேசத்தில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதநேய சேவை நிலையம் மருத்துவ நிலையத்திலிருந்து சுமார் 700 மீற்றர் தொலைவில் A35 நெடுஞ்சாலையில் வடக்குப் பகுதியில் ஒரு திறந்த வெளியில் ஜனவரி 23 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.[776] ஐக்கிய நாடுகள் அமைப்பின் இந்தப் புதிய நிலையத்தைக் காட்டும் GPS படங்கள் ஜனவரி 23 ஆந் திகதியன்று அல்லது அதனை உடனடுத்து பாதுகாப்புப் படைகளுக்கு அனுப்பி

[773]WS on file

[774]WS on file

[775]WS on file – LLRC இணைப்புக்கள், இணைப்பு 3, பக். 94

[776]WS on file

வைக்கப்பட்டிருந்தன.[777] இலங்கை இராணுவத்திற்குச் சொந்தமான ஆளில்லாத வேவு விமானங்கள் ஜனவரி 23 ஆந் திகதி மேல் வானில் அவதானிக்கப்பட்டன.[778] மாவட்டச் செயலாளர் அலுவலகத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்த உணவு விநியோக நிலையம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையத்தையடுத்து ஒரு களஞ்சியசாலை மற்றும் சுமார் 10 விநியோக இடங்கள் என்பவற்றுடன் கூடிய விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது.[779] பல தொண்டு நிறுவனங்களின் அலுவலகங்களும் அருகில் அமைந்திருந்தன.[780]

813. வடக்கில் சுமார் 100 மீற்றர் தொலைவில் எல்ரீரீஈ இயக்கம் நான்கு போராளிகளுடனும், ஒரு சில சிறு ஆயுதங்களுடனும் ஒரு சிறிய நிலையைக் கொண்டிருந்தது. சுமார் 100 மீற்றர் தெற்கில் அந்த இயக்கத்தின் வானொலி நிலையம் அமைந்திருந்தது.[781]

814. ஜனவரி 23 ஆந் திகதி பிற்பகல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுது, ஐ நா பணிமனை மற்றும் மருத்துவமனை என்பவற்றை சூழவுள்ள பிரதேசம் இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டது. இந்த நிலையத்தை உருவாக்கிக் கொண்டிருந்த ஐ நா பணியாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு அருகில் மூன்று ஷெல்கள் விழுந்த பொழுது, அந்த இடத்தில் ஆகக் குறைந்தது 23 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஒரு ஷெல் ஐ நா பணிமனையிலிருந்து 60 மீற்றர்கள் தொலைவில் விழுந்தது.[782] தெற்கில் இலங்கை இராணுவத்தின் நிலைகளின் திசையிலிருந்து வந்த சூட்டுத் தாக்குதல், மல்டி பெரல் ரொக்கட் லோஞ்சர் தாக்குதல் மற்றும் சிறுரக ஆயுதங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.[783] தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, இராணுவ அதிகாரிகள் தாம் இந்த தாக்குதலை மேற்கொண்ட விடயத்தை மறுத்தனர். எவ்வாறிருப்பினும், ஷெல் தாக்குதல்களில் ஒரு தற்காலிக மந்த நிலை இருந்து வந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை.[784]

815. அன்றைய இரவின் போது, ஐ நா நிலையத்தின் அயல் பிரசேத்தின் மீது குறைந்தது 12 ஷெல் தாக்குதல்கள் ஏவப்பட்டதனையடுத்து, மேலும் பல சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். ஐ நா ஊழியர்கள் தங்கியிருந்த பதுங்கு குழிகளுக்கு எட்டு மீற்றர் அப்பால் ஒரு ஷெல் விழுந்தது.[785] ஐ நா களத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களுக்கூடாக குண்டுத் துகள்கள் கிழித்துச் சென்ற காரணத்தினால் அந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களில் சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.[786] ஷெல் தாக்குதலில் ஒரு வயோதிப நபர் தனது மகனையும், மகளையும், பேரப்பிள்ளையையும் இழந்தார். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்பட ஆதாரங்கள், அந்த பிரதேசத்தைச் சூழ தலை வேறாகி, சிதைந்து, சின்னாபின்னமாகியிருந்த உடல் பாகங்கள் சிதறுண்டு கிடக்கும் காட்சிகளை

[777] WS on file

[778] WS on file

[779] WS on file

[780] WS on file

[781] WS on file

[782] WS on file

[783] WS on file

[784] WS on file

[785] WS on file

[786] WS on file

காட்டுகின்றன. இதில் ஐ நா பதுங்கு குழிக்கு அருகில் ஒரு மரத்தில் வெடித்துச் சிதறியிருந்த குழந்தையொன்றின் உடலும் அடங்கியிருந்தது.[787]

816. ஒரு சிறிய மத்திய நிலைக்குப் பின்னர் ஜனவரி 24 ஆந் திகதி அதிகாலையில் உடையார்கட்டு பிரதேசத்தின் தெற்கிலும், தென்கிழக்கு பிரதேசத்திலிருந்த இலங்கை இராணுவத்தின் நிலைகளிலிருந்து பாரிய ஆட்டிலரி தாக்குதல்கள் காலை சுமார் 10 மணி அளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.[788] ஷெல் தாக்குதல்களுக்கு மத்தியிலும் கூட, மருத்துவமனை மற்றும் ஐ நா நிலையங்களுக்கு அருகில் ஒரு வயல் வெளியில் அமைந்திருந்த விநியோக நிலையங்களிலிருந்து உணவுப் பங்கீடுகளை பெற்றுக் கொள்வதற்காக ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் வரிசையில் நின்றிருந்தார்கள்.[789] துப்பாக்கி சத்தங்கள் அண்மித்து வருவதனைக் கேட்ட அவர்கள் தரையில் படுத்துக் கொண்டார்கள்.[790] உணவு வரிசைகளுக்கு அருகில் ஐந்து ஷெல்கள் விழுந்ததுடன், அதில் 20 பேர் கொல்லப்பட்டதாகவும், பெருந்தொகையானோர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.[791] இந்தக் காட்சி “மாபெரும் களேபரமாக” இருந்து வந்தது என்றும், “உணவை எடுத்துச் செல்வதற்காக வந்த மக்கள் அதற்கு பதிலாக சடலங்களை தூக்கிச் சென்றார்கள்” என்றும் சாட்சியொருவர் குறிப்பிட்டிருந்தார்.[792]

817. ஜனவரி 24 ஆந் திகதி பி.ப. சுமார் 4 மணியளவில் உடையார்கட்டு மருத்துவமனையின் மீது ஒரு ஷெல் விழுந்ததுடன், மற்றொன்று மருத்துவமனை வளவுக்கு அருகில் வெடித்தது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம், இத்தாக்குதல்களில் 5 தொடக்கம் 13 பேர் வரையிலானவர்கள் கொல்லப்பட்டிருந்ததுடன், 27 பேர் காயமடைந்திருந்தனர்; கொல்லப்பட்டவர்களில் ஒருவர் ஒரு தாதியாவார்; அவர் இரு கட்டடங்களுக்கு இடையில் நடந்து சென்ற போது குண்டுத் துகளொன்றினால் தாக்கப்பட்டிருந்தர்.[793]

818. UNOSAT இனால் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட செய்மதிப் படங்களின் பகுப்பாய்வு, மருத்துவமனையின் திறந்த முற்றத்தில் மூன்று குண்டுகளால் ஏற்படுத்தப்பட்ட மூன்று பள்ளங்கள் இருப்பதனையும், கூரையின் மேல் பகுதியில் குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட மூன்று பள்ளங்கள் இருப்பதனையும், அதேபோல் மூன்று கட்டடங்கள் அழிவுற்றிருப்பதனையும் காட்டுகின்றன. இனங்காணப்பட்ட தாக்கம் காரணமான குண்டுப் பள்ளங்கள் மற்றும் சேதம் என்பன ஆட்டிலரி தாக்கத்துடன் பொருந்திச் செல்வதாக இருந்து வருகின்றன.

---

787 WS on file; இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட புகைப்படங்கள்

.

788 WS on file

789 WS on file

790 WS on file

791 WS on file

792 WS on file

793 WS on கடைந் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தூதுக் குழுத் தலைவர் இலங்கை இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு 2009 ஜனவரி 24 ஆந் திகதி அனுப்பி வைத்த எழுத்து மூலமான கடிதம்,LLRC பின்னிணைப்புக்கள், பின்னிணைப்பு 3, பக். 94. இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும். http://www.llrcaction.gov.lk/assets/downloads/reports/en/Annexe-3_en.pdf>

819. ஜனவரி 25 ஆந் திகதி இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புப் படை பிரதானியின் ஆலோசனையின் பேரில்[794] ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஒரு சில மனிதநேய நிறுவனங்கள் யுத்த சூன்ய வலயத்திலிருந்து வெளியேறி, புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு சென்றன.[795] ஐ நா பணியாளர்கள் A35 நெடுஞ்சாலைக்கூடாக வெளியேறிய பொழுது, பேரழிவுக் காட்சிகளை பார்த்தார்கள்: "நாங்கள் A35 நெடுஞ்சாலையில் இறங்கி, புதுக்குடியிருப்பை நோக்கித் திரும்பிய பொழுது மிகவும் பயங்கரமான ஒரு காட்சியை பார்த்தோம். வீதியிலும், வீதியின் ஓரங்களிலும் சிவிலியன்களின் சடலங்கள் சிதறுண்டு கிடந்தன."[796] யுத்த சூன்ய வலயத்தில் "எதுவுமே எஞ்சியிருக்கவில்லை" என மற்றொரு சாட்சி இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் சொன்னார்.[797]

820. ஷெல் தாக்குதலின் தீவிரம் காரணமாக உடையார்கட்டு மருத்துவமனையை ஒரு பாதுகாப்பான பிரதேசத்திற்கு எடுத்துச் செல்வது தொடர்பான தீர்மானம் பெப்பரவரி மாதத் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது.[798] உடையார்கட்டு மருத்துமனையின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை உடனடுத்து, அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து சுயாதீனமான விதத்தில், சிறிய தற்காலிக சிகிச்சை நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கு தான் முடிவு செய்ததாக ஒரு மருத்துவப் பணியாளர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் சொன்னார். அவர் அக்கட்டடங்களில் செஞ்சிலுவைச் சங்க சின்னங்களை பயன்படுத்தவில்லை. மேலும், அந்த வைத்திய நிலையத்தின் அமைவிடம் குறித்து அவர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவும் இல்லை. அந்த சிகிச்சை நிலையம் தாக்கப்படவில்லை.[799]

821. நிவாரண உதவி நிலையங்களுக்கு அருகில் எல்ரீரீஈ இயக்கம் அதன் நிலைகளை கொண்டிருந்தது. அவை ஒரு வானொலி நிலையம் மற்றும் ஒலிபெருக்கி கருவித் தொகுதி என்பவற்றுடன் கூடிய ஒரு சிறிய இராணுவ நிலையையும் உள்ளடக்கியிருந்தன. ஷெல் தாக்குதலின் விளைவாக அந்த வானொலி நிலையத்தின் ஒலிபரப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்தன.[800] ஜனவரி 23 ஆந் திகதி ஐ நா நிலையத்திற்கு சுமார் 300 மீற்றர் அப்பால் அமைந்திருந்த ஒரு ஆட்டிலரி நிலையிலிருந்து எல்ரீரீஈ இயக்கம் தாக்குதல் நடத்தியதாக சாட்சிகளின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால், ஜனவரி 24 ஆந் திகதி இரவு எல்ரீரீஈ இயக்கத்தின் தாக்குதல்கள் இடம்பெறவில்லை.[801]

**புதுக்குடியிருப்பு மருத்துவமனை மற்றும் ஐ நா மையம்**

822. புதுக்குடியிருப்பு மருத்துவமனை மிக மோசமான விதத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்த மருத்துவமனைகளில் ஒன்றாகும். அது A35 நெடுஞ்சாலையில் புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது. இந்த அரசாங்க மருத்துவமனை கட்டடத் தொகுதி 10 பிரதான கட்டடங்களையும், 20 க்கும் மேற்பட்ட துணைக் கட்டடங்களையும் கொண்டிருந்தது. இது தெளிவான

[794]ஐ நா பிரதம பாதுகாப்பு ஆலோசகர், பாதுகாப்புப் படைகள் பிரதானிக்கு 2009 பெப்ரவரி மாதம் 4 ஆந் திகதி அனுப்பி வைத்த கடிதம். இணையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.<http://www.llrcaction.gov.lk/assets/downloads/reports/en/Annexe-2_en.pdf>

[795]WS on file

[796]WS on file

[797]WS on file

[798]WS on file

[799]WS on file

[800]WS on file

[801]WS on file

விதத்தில் செஞ்சிலுவைச் சங்க சின்னத்தைக் கொண்டிருந்ததுடன், அதை வானிலிருந்தும், செய்மதிப் படங்கள் மூலமும் பார்க்கக் கூடியதாக இருந்தது.[802]

823. கிளிநொச்சியிலிருந்து வெளியேறிய ஐக்கிய நாடுகள் அமைப்பு அதன் ஒரு சில அலுவலகங்களை புதுக்குடியிருப்பு மருத்துவமனையிலிருந்து 30-40 மீற்றர் தொலைவில் அமைத்துக் கொண்டது.[803] முதலாவது யுத்த சூன்ய வலயத்தில் இடம்பெற்ற பாரிய ஷெல் தாக்குதல் காரணமாக ஜனவரி 25 ஆந் திகதி மேலும் அதிக எண்ணிக்கையிலான ஐ நா பணியாளர்கள் புதுக்குடியிருப்புக்கு மாற்றப்பட்டார்கள். ஐ நா முதன்மை நிலையமும் இதில் அடங்கும் (மேலே பார்க்கவும்). மருத்துவமனை மற்றும் ஐ நா நிலையம் என்பவற்றின் GPSஅமைவிடங்களை அரசாங்கம் அறிந்திருந்தது.[804] பாதுகாப்புப் படைகள் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி[805] இப்பிரதேசத்தை அடிக்கடி கண்காணித்து வந்ததாக சாட்சிகளின் கூற்றுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே, இலங்கை இராணுவம் புதுக்குடியிருப்பில் மருத்துவமனை மற்றும் அதற்கு அண்மையில் அமைந்திருந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையம் என்பவற்றின் துல்லியமான அமைவிடத்தை அறிந்திருந்திருக்க வேண்டும்.

824. புதுக்குடியிருப்பு மருத்துவமனையும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையமும் 2009 ஜனவரி 10 ஆந் திகதிக்கும், பெப்ரவரி 6 ஆந் திகதிக்குமிடையில் கணிசமான அளவிலான குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகின. ஜனவரி 13 ஆந் திகதி காலை 10 மணிக்கும் 11 மணிக்குமிடையில் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்ததாக கூறப்படும் பிரதேசங்களிலிருந்து ஏவப்பட்ட இரண்டு சுற்றுக்களிலான குண்டுத் தாக்குதல்களினால் மருத்துவமனை நேரடியாக பாதிக்கப்பட்டது. இந்த தாக்குதல்களின் போது கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டதுடன், குறைந்தது இரண்டு நோயாளிகள் படுகாயமடைந்தனர்.[806] இந்தத் தாக்குதல் தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் கடிதமொன்றுக்கு பதிலளித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு "அறிக்கையிடப்பட்ட இந்தச் சம்பவத்தில் தான் சம்பந்தப்பட்டிருக்கும் விடயத்தை இலங்கை இராணுவம் திட்டவட்டமாக மறுக்கின்றது" எனக் கூறியிருந்ததுடன், வன்னியில் அதன் செயற்பாடுகளின் போது "சிவிலியன்களுக்கு எத்தகைய உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துவதில்லை என்ற அதன் கொள்கையை" மீண்டும் வலியுறுத்திருந்தது.[807]

825. 2009 ஜனவரி 26 ஆந் திகதிக்கும், பெப்பரவரி 4 ஆந் திகதிக்குமிடையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனை பிரதேசமும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் மீண்டும் புதிய ஆட்டிலரி ஷெல்கள் மற்றும் ரொக்கட் தாக்குதல் என்பவற்றை எதிர்கொண்டதாகவும், இவை இலங்கை இராணுவத்தினரின் நிலைகளிலிருந்து ஏவப்பட்டிருந்தன எனவும் சாட்சிகள் தெரிவித்திருந்தனர்.[808] மிகக் குறுகிய காலப் பிரிவுக்குள் மருத்துவமனையின் மீது பெருந்தொகையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக சாட்சியங்கள் கூறியிருந்ததுடன், இலங்கை இராணுவம் மல்டி பரல் ரொக்கட் லோன்சர்களை பயன்படுத்தியிருக்கக் கூடிய சாத்தியப்பாட்டினை அது காட்டுகின்றது.[809] முதலாவது யுத்த சூன்ய வலயத்தின்

802 UNOSAT.

803WS on file

804WS on file

805WS on file

806WS on file; LLRC அறிக்கை, பந்தி 4.130.

807 இலங்கை வெளி விவகார அமைச்சின் கடிதம், ஜனவரி 15, 2009, இக்கடிதம் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பார்வையிடப்பட்டது.

808WS on file

809WS on file

மீது முன்னர் இடம்பெற்ற தாக்குதல்களின் போது காயமடைந்தவர்களை உள்ளடக்கிய விதத்தில் மருத்துவமனைக்குள்ளே 500 க்கும் மேற்பட்ட நோயாளிகள் இருந்து வந்தனர். மேலும், மருத்துவமனை வளவு ஒரு பாதுகாப்பான இடம் எனக் கருதி, அங்கு பெருந்தொகையான சிவிலியன்களும் தஞ்சம் புகுந்திருந்தனர்.[810] மருத்துவமனையில் சனநெறிசல் அதிகமாக காணப்பட்டதுடன், பெரும்பாலான நோயாளர்கள் கட்டில் இல்லாத காரணத்தினால் தரையில் இருந்தனர். அதே போல மண்டப வழிகளிலும், வெளிப் பிரதேசத்திலும், தரையிலும் பெருந்தொகையான மக்கள் தங்கியிருந்தனர்.[811] ஷெல் குண்டுகள் விழுந்த பொழுது, மக்கள் பாதுகாப்புக் கருதி ஓடியதாகவும், மருத்துவமனைக்கு வெளியில் அமைக்கப்பட்டிருந்த பதுங்கு குழிகளை நோக்கி நோயாளர்களை உள்ளிட்ட விதத்தில் பெருந்தொகையானவர்கள் தமது மருந்துகளை கைகளில் எடுத்துக் கொண்டு ஓடியதாகவும் சாட்சிகள் குறிப்பிட்டிருந்தன.[812]

826. 2009 ஜனவரி 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் இலங்கை இராணுவம் நிலை கொண்டிருந்ததாக கூறப்படும் தெற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் ஷெல்களும், ரொக்கட் தாக்குதல்களும் மருத்துவமனையை நோக்கி மேற்கொள்ளப்பட்டதுடன், அம்புலன்ஸ் வண்டிகளுக்கும், மருத்துவமனையின் ஏனைய வாகனங்களுக்கும் இதன் விளைவாக சேதங்கள் ஏற்பட்டன.[813] இந்த பிரதேசம் மீண்டும் ஜனவரி 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டது. இத்தாக்குதல்களின் போது பாரிய ஆட்டிலரிகளும், மல்டி பரல் ரொக்கட் லோன்சர்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன.[814] ஜனவரி 29 அல்லது 30 ஆந் திகதி மருத்துவமனையின் ஆண்கள் வார்ட்டின் மீது ஒரு ஷெல் விழுந்ததுடன், மருத்துவமனை மைதானத்தில் இரண்டு ஷெல்கள் விழுந்தன.[815]

827. 2009 பெப்ரவரி 1 ஆந் திகதி, புதுக்குடியிருப்பு மருத்துவமனை, ஒட்டிசுட்டான் இலங்கை இராணுவ நிலைகளிலிருந்து மூன்று தடவைகள் ஏவப்பட்டதாக கூறப்படும் ஷெல்களினால் நேரடியாக தாக்கப்பட்டது. இத்தாக்குதல்களின் போது ஆகக் குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டதுடன், சிறுவர்களையும் உள்ளிட்ட பெருந்தொகையானோர் காயமடைந்தனர்.[816] பி.ப. 3.00 மணிக்கும், 4 மணிக்குமிடையில் மருத்துவமனையின் மீது இரு ஷெல்கள் ஏவப்பட்டிருந்தன. இரண்டாவது ஷெல் தாக்குதலில் ஆகக் குறைந்தது ஒருவர் உயிரிழந்தார்.[817] பின்னர் மாலையில் இடம்பெற்ற மூன்றாவது தாக்குதல் பெண்களும், குழந்தைகளும் இருந்த வார்ட் மீது விழுந்ததுடன், அதில் ஆகக் குறைந்தது நான்கு நோயாளிகள் கொல்லப்பட்டதுடன், குறைந்தது 14 பேர் காயமடைந்தனர்.[818] இந்த மருத்துவமனை மீண்டும் அடுத்த நாள் மாலையில் தாக்கப்பட்டது. அத்தாக்குதல்களில் சிறுவர் வார்ட்டு சேதமடைந்ததுடன், ஒரு மருத்துவமனை ஊழியர் மற்றும் குழந்தை ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் 7 பேர் இதில் கொல்லப்பட்டதாகவும், 15 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.[819] அநேகமாக பெப்பரவரி 3 ஆந்

[810] WS on file

[811] WS on file

[812] WS on file

[813] WS on file

[814] WS on file

[815] WS on file

[816] கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம்; ICRC செய்தி வெளியீடு 29/09, பெப்ரவரி 4, 2009, வன்னி மருத்துவமனை காலி செய்யப்பட்டது – மருத்துவச் சேவைகளையும், காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு தரப்புக்கள் உச்ச மட்டத்தில் செயற்படுதல் வேண்டும்.

[817] WS on file; ICRC, 2009, Sri Lanka: ICRC maintains support for hospital hit by shelling available online at < https://www.icrc.org/eng/resources/documents/interview/sri-lanka-interview-020209.htm>

[818] WS on file

திகதி நடத்தப்பட்ட ஆட்டிலரி தாக்குதல் ஒன்றில் மருத்துவமனை சத்திர சிகிச்சை அறை சேதமடைந்தது.[820]

828. இத்தாக்குதல்கள் 2009 பெப்ரவரி 3 ஆந் திகதி இரவு முழுவதிலும் இடம்பெற்றதுடன், பெப்ரவரி 4 ஆந் திகதி காலை நேரத்தில் செறிவான விதத்தில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.[821] மருத்துவமனை மைதானத்தில் குறைந்தது 50 ஷெல்கள் வீழ்ந்ததுடன், அது மரணங்களையும், காயங்களையும் ஏற்படுத்தியிருந்தன. மேலும், மருத்துவமனை கட்டடங்களுக்கு பாரிய அளவிலான சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.[822] மருத்துவமனையின் நுழைவாயிலுக்கு அருகில் ஷெல்கள் வீழ்ந்த பொழுது, ஐந்து பேர் அதில் கொல்லப்பட்டனர்.[823]

829. பெப்ரவரி 4 ஆந் திகதி அளவில் மருத்துவமனையின் நிலை "ஒரு கொலைக் களமாக" இருந்து வந்தது என அதன் ஊழியர் ஒருவர் விளக்கினார். அத்தகைய காட்சிகளை இதற்கு முன்னர் தான் ஒருபோதும் கண்டிருக்கவில்லை எனவும் அப்பெண்மணி கூறினார்.[824] நூற்றுக்கணக்கான காயப்பட்ட நபர்கள் தொடர்ந்து மருத்துவமனைக்கு வந்து கொண்டிருந்ததுடன், அவர்களுக்கு சேவைகளை வழங்குவதில் மருத்துவ ஆளணியினர் போராடிக் கொண்டிருந்தனர். மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகள் அழிவடைந்திருந்ததுடன், தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த ஷெல் தாக்குதல்கள் காரணமாக மருத்துவமனை ஊழியர்கள் பதுங்கு குழிகளில்ஒளிந்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.[825]

830. 2009 ஜனவரி 21 ஆந் திகதிக்கும் பெப்ரவரி 5 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது, புதுக்குடியிருப்பு மருத்துவமனையின் ஆகக் குறைந்தது 10 பிரதான கட்டடங்களும், 20 துணைக் கட்டடங்களும் மிக மோசமாக சேதமடைந்திருந்தன அல்லது அழிவுற்றிருந்தன என்பதனை செய்மதிப் படங்கள் காட்டுகின்றன. ஆகக் குறைந்தது கூரை மேல் 30 குண்டுப் பள்ளங்கள் ஏற்பட்டிருந்ததுடன், ஆட்டிலரி தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றமையினால் இக்குண்டுப் பள்ளங்கள் உருவாகியிருந்தன. மருத்துவமனை கட்டடத் தொகுதி முழுவதிலும் இத்தகைய குண்டுப் பள்ளங்கள் ஏற்பட்டிருந்தன.[826] இக்காலப் பிரிவின் போது தொடர்ந்து செயற்பட்டு வந்திருந்த நிலையில், புதுக்குடியிருப்பு மருத்துவமனை கணிசமான அளவிலான குண்டுத் தாக்குதல்களை எதிர்கொண்டிருந்தது என்பதனை சுயாதீனமாக உறுதிப்படுத்தும் சாட்சியங்களை இந்தப் படங்கள் வழங்குகின்றன.

831. புதுக்குடியிருப்பு மருத்துவமனை மூடப்பட வேண்டுமென்றும், அங்குள்ள நோயாளர்களும், மருத்துவ ஆளணியினரும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசங்களுக்கு நகர்ந்து செல்ல வேண்டுமென்றும்[827] இலங்கை அதிகாரிகள் மருத்துவமனை முகாமைத்துவத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்ததாக கூறப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், புதுக்குடியிருப்பு மருத்துவமனை சத்திர சிகிச்சை அறையுடன் கூடிய விதத்தில் பெருந்தொகையான

[819] WS on file

[820] WS on file

[821] WS on file

[822] WS on file

[823] WS on file

[824] WS on file

[825] WS on file

[826] UNOSAT

[827] WS on file

நோயாளர்களுக்கு சேவைகளை வழங்கி வந்த வன்னிப் பிரதேசத்தின் ஒரேயொரு மருத்துவமனையாக இருந்து வந்தது.[828]

832. அரசாங்கமும், பாதுகாப்புப் படைகளும் இந்த மருத்துவமனையின் அமைவிடத்தை அறிந்திருந்ததுடன், அது இயங்கி வருகின்றது என்ற விடயத்தையும் அறிந்திருந்தன. புதுக்குடியிருப்பில் பிரசன்னமாகியிருந்த ஐக்கிய நாடுகள் அமைப்பும் மற்றும் ஏனைய அமைப்புக்களும் இந்த மருத்துவமனை தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றது[829] என்ற விடயத்தை பல தடவைகள் அரசாங்கத்திற்கும், இலங்கை இராணுவத்திற்கும் தெரிவித்திருந்தன. 2009 பெப்ரவரி 2 ஆந்திகதி பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, புதுக்குடியிருப்பு மருத்துவமனை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் யுத்த சூன்ய வலயத்திற்கு[830] வெளியில் அமைந்திருப்பதனால் அது ஒரு சட்டபூர்வமான இலக்காக இருந்து வருகின்றது என தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கூறியிருந்தார். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு இதனை பார்த்திருந்தது. “யுத்த சூன்ய வலயத்திற்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது” என்றார் அவர். ‘‘அது யுத்த சூன்ய வலயத்திற்கு வெளியில் அமைந்திருந்தால் அது ஒரு சட்டபூர்வமான இலக்காக இருந்து வருகின்றது என நீங்கள் கூறுகின்றீர்களா?” என நேர்காணல் நடத்தியவர் கேட்ட பொழுது அவர் “ஆம், இப்பிரதேசத்தில் எந்தவொரு மருத்துமனையும் இயங்க முடியாது” என பதிலளித்தார்.

833. புதுக்குடியிருப்பு மருத்துவமனை எல்ரீரீஈ இயக்கத்தினால் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது தொடர்பான எத்தகைய தகவல்களும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கவில்லை.[831] மருத்துவமனை வளவிலிருந்து குறைந்தது 400 மீற்றர் தொலைவில் அமைந்திருந்த அணைக்கட்டொன்றில் எல்ரீரீஈ இயக்கம் அதன் நிலைகளை அமைத்துக் கொண்டிருந்தது.[832] அநேகமாக மருத்துவமனைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய நடமாடும் நிலையொன்றிலிருந்து எல்ரீரீஈ இயக்கம் மோட்டார் தாக்குதல் மேற்கொண்டதாக சாட்சியொருவர் கூறியிருந்தார். ஆனால், இன்னமும் அந்த இடம் மருத்துவமனைக்கு வெளியில்அமைந்திருந்தது.[833] எல்ரீரீஈஇயக்கத்தின் இராணுவ வாகனங்களும், மருத்துவமனை மைதானத்தையொட்டிச் சென்ற A35நெடுஞ்சாலையில் பயணித்தன.[834]

834. தனது படை அணியினர் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அருகில் இராணுவ நிலைகளை அமைத்துக் கொள்வதனை தடுப்பதற்கு எல்ரீரீஈ இயக்கத்தின் தலைமைத்துவம் வழிமுறைகளை எடுத்திருந்தது என்பதனை காட்டும் எத்தகைய தகவல்களும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைக்கவில்லை. இராணுவ நிலைகளுக்கு அருகில் இருந்து வந்த சிவிலியன்களுக்கு அந்த இடங்களை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கை வழங்கப்பட்டிருக்கவுமில்லை.

[828] WS on file

[829] WS on file

[830] Sky News, 2 February 2009, “Packed Sri Lanka Hospital Shelled”, <http://news.sky.com/story/667068/packed-sri-lanka-hospital-shelled>. Video footage available on https://www.youtube.com/watch?v=pKmM2qg95R0>

[831] WS on file

[832] WS on file

[833] WS on file

[834] WS on file

-




*2009 ஜனவரி 21 ஆந் திகதி பிரகடனம் செய்யப்பட்ட பாதுகாப்பு வலயம் (ஆதாரம்: பாதுகாப்பு அமைச்சு)*

### யுத்த சூன்ய வலயம் 2 இல் பொதுமக்கள் இலக்குகள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள்

835. உத்தியோகபூர்வமாக சிவிலியன் பாதுகாப்பு வலயம் என அழைக்கப்படும் இரண்டாவது யுத்த சூன்ய வலயம் 2009 பெப்ரவரி 12 ஆந் திகதி உருவாக்கப்பட்டதுடன்,[835] அது வடக்கில் புதுமாத்தளனிலிருந்து தெற்கில் வெள்ளான்முள்ளிவாய்க்கால் வரையில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் அமைத்திருந்ததுடன், வலயன்மடம் (வலைஞர்மடம்), அம்பலவான்பொக்கனை மற்றும் கரையான்முள்ளிவாய்கால் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. அது 14 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை - அதாவது முதலாவது யுத்த சூன்ய வலயத்தின் பரப்பளவில் சுமார் மூன்றில் ஒரு பங்கினை கொண்டிருந்தது.[836] யுத்த சூன்ய வலயம் 2 உருவாக்கப்பட்ட விடயம் ஐக்கிய நாடுகள் நிலையம் மற்றும் சர்வதேச முகவரகங்கள்என்பவற்றுக்கும், அதே போல களத்திலிருந்த இலங்கை பாதுகாப்புப் படையினருக்கும் தெரிவிக்கப்பட்டதுடன், வானொலியிலும் ஒலிப்பரப்பப்பட்டது.[837]

836. யுத்த சூன்ய வலயம் 2 உருவாக்கப்படுவதற்கு முன்னர் பெருந்தொகையான சிவிலியன்கள் இப்பிரதேசத்திற்குள் வந்திருந்தனர். பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் பின்வருமாறு கூறியிருந்தார்: "எல்ரீரீஈ இயக்கம் அனைத்து சிவிலியன்களையும் முதலாவது யுத்த சூன்ய வலயத்திலிருந்து வெளியில் எடுத்து, மற்றொரு இடத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது என்ற விடயத்தை நாங்கள் அறிந்து

835 பாதுகாப்புப் படைகளின் பிரதானி அனுப்பி வைத்த குறிப்பு, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பில் உள்ளது.

836 மனித நேய விவகார ஒருங்கிணைப்பு அலுவலக (OCHA) வரைபடம் - இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பில் உள்ளது.

837 இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய 2010 செப்டம்பர் 8 ஆந் திகதி கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணம். பாதுகாப்புப் படைகளின் பிரதானி அனுப்பி வைத்த குறிப்பு, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பில் உள்ளது. WS on file

கொண்ட உடனேயே, யுத்த சூன்ய வலயத்தை நாங்கள் அந்தப் பிரதேசத்திற்கு நகர்த்தினோம்."[838]எவ்வாறிருப்பினும், சிவிலியன்களை பொறுத்தவரையில், யுத்த சூன்ய வலயம் 1 இலிருந்து புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசங்களை நோக்கி நகர்வதைத் தவிர வேறு மாற்று வழி இருக்கவில்லை என்ற விடயத்தை கிடைக்கும் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் விரும்பினாலும் கூட, ஷெல் தாக்குதல்களிலிருந்து தப்பிச் செல்வதற்கோ அல்லது எல்ரீரீஈ இயக்க நிலைகளிலிருந்து தப்பிச் செல்வதற்கோ அவர்களுக்கு வேறு எந்த பாதுகாப்பான வழிகளும் இருந்து வரவில்லை.

837. கீழே உள்ள பிரிவு யுத்த சூன்ய வலயம் 2 இல் பொதுமக்கள் இலக்குகள் மீது நிகழ்த்தப்பட்ட ஒரு சில தாக்குதல்கள் தொடர்பான விபரங்களை எடுத்துக் காட்டுவதுடன், அவை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இக்காலப் பிரிவின் போது இத்தாக்குதல்கள் அதிகரித்தளவில் பொதுமக்கள் மீது பாதிப்புக்களை எடுத்து வந்திருந்தன என்ற விடயத்தை பார்க்க முடிகின்றது. ஏப்ரல் 21 ஆந் திகதி மோதலின் தீவிரத் தன்மை மற்றும் "பொதுமக்கள் மத்தியில் இடம்பெற்று வந்த "பாரியளவிலான உயிரிழப்புக்கள்" என்பவற்றினால் தூண்டப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யுத்த சூன்ய வலயம் 2 இல் "மேலும் இரத்தக் களறி ஏற்படுவதனை குறைத்துக் கொள்வதற்கான விதிவிலக்கான முன்னெச்சரிக்கை வழிமுறைகளை" இரு தரப்புக்களும் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளும் விதத்தில் ஒரு ஊடக அறிக்கையை வெளியிட்டிருந்தது. எல்ரீரீஈ இயக்கம் அதன் போராளிகளையும், இராணுவத் தளபாடங்களையும் "பொதுமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலிருந்து வெகு தூரத்தில் வைத்திருக்க வேண்டுமென்றும், அந்தப் பிரதேசத்திலிருந்து வெளியேறிச் செல்ல விரும்பும் பொதுமக்களுக்கு பாதுகாப்பாக அவ்வாறு செல்வதற்கு இடமளிக்க வேண்டுமென்றும்" அது கேட்டுக் கொண்டிருந்தது. "அரசு பயன்படுத்தும் போர் நுட்பங்கள் மற்றும் வழிமுறைகள் என்பன அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒரு புறத்தில் பொதுமக்கள், பொதுச் சொத்துக்கள் என்பவற்றுக்கும், மறுபுறத்தில், இராணுவ இலக்குகள் என்பவற்றுக்குமிடையில் தெளிவாக பிரித்து, அறிந்து கொண்டு போர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விடயம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என அது அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் "ஆட்டிலரி போன்ற ஆயுதங்களின் பாவனை பொதுமக்கள் மீது எடுத்து வரக் கூடிய தாக்கம் குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம்."[839]

### புதுமாத்தளன் மருத்துவமனை மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மையம்

838. 2009 பெப்ரவரி 5 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகிய தரப்பினர் புதுக்குடியிருப்பிலிருந்து (சில சந்தர்ப்பங்களில் மாத்தளன் என அழைக்கப்படும்) புதுமாத்தளன் பிரதேசத்திற்கும், வலயன்மடம் பிரதேசத்திற்கும் இடம்பெயர்ந்தனர்.[840] மனிதநேய முகவரகங்கள் வாகன தொடரணிகளுடன் நகர்ந்து சென்ற நிலையில் இரணைப்பாலை என்ற இடத்திற்கு அருகில் அவை ஷெல் தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும் எதிர்கொண்டதுடன், எதிரிலுள்ள பாதை அருகில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்கள் காரணமாக தற்காலிகமாக தமது பயணத்தை நிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தன.[841]

---

[838] கோத்தாபய ராஜபக்ஷ LLRC ஆணைக்குழுவிடம் முன்வைத்த சமர்ப்பணம் ஆக்ஸட் 17, 2010

[839] ICRC New Release 09/81, 21 April 2009: ICRC calls for exceptional precautionary measures to minimise further bloodshed in "no-fire-zone.

[840] WS on file

[841] WS on file

839. புதுக்குடியிருப்பு மருத்துவமனை கைவிடப்பட்ட பின்னர், சுகாதாரப் பணியாளர்கள் புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பாதைக்கு அருகில் அமைந்திருந்த முன்னைய பாடசாலை கட்டடமொன்றில் ஒரு தற்காலிக மருத்துவமனையை ஸ்தாபித்தனர். அது நந்திக்கடல் கடல்நீரேரியின் கரையில் ஒரு மேட்டுப் பகுதியில் அமைந்திருந்தது.[842] இந்த மருத்துவமனையின் கூரை மற்றும் சுவர்கள் என்பவற்றில் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னம் மிகத் தெளிவான விதத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.[843] ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்கள் மருத்துவமனை கட்டடங்களுக்கும், கடல்நீரேரியின் கரைக்குமிடையில் ஒரு சிறிய கேந்திர நிலையத்தை அமைத்தார்கள். அதில் ஐக்கிய நாடுகளின் கொடி கட்டப்பட்டிருந்ததுடன், அந்த அமைப்பின் வாகனங்கள் மற்றும் டிரக் வண்டிகள் என்பவற்றிலும் அதன் அடையாளங்கள் தெளிவாக தெரிந்த காரணத்தினால் அதனை இலகுவில் இனங்கண்டு கொள்ள முடிந்தது.[844]

840. மருத்துவமனை மற்றும் ஐக்கிய நாடுகள் கேந்திர நிலையம் என்பவற்றின் GPSபடங்கள் கடல்நீரேரிக்கு சுமார் ஒரு கிலோமீற்றர் அப்பால் நிலைகொண்டிருந்த இலங்கை பாதுகாப்புப் படையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களால் இந்த மருத்துவமனையையும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் கேந்திர நிலையத்தையும் நேரடியாக பார்க்கக் கூடியதாக இருந்து வந்தது.[845] மேலும், அரசாங்க பாதுகாப்புப் படையினர் இந்த மருத்துவமனை மற்றும் ஐ நா கேந்திர நிலையம் என்பவற்றின் அமைவிடம் மற்றும் அவற்றின் கருமங்கள் என்பவற்றை வான்வழிக் கண்காணிப்புக்கூடாக அறிந்து வைத்திருந்தனர்.[846] அங்கிருந்த பாதுகாப்புப் படைகள் 53 ஆவது மற்றும் 58 ஆவது படையணிகள் மற்றும் இலங்கை இராணுவத்தின் அதிரடிப் படை 8 என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.[847]

841. எல்ரீரீஈ இயக்கம் கடல்நீரேரியின் கரைகளில் நிலைகளை அமைத்துக் கொண்டிருந்ததுடன், அவை மருத்துவமனையிலிருந்து சுமார் 350 மீற்றர் தொலைவில் அமைந்திருந்தன.[848] ஆனால், அந்த நிலைகள் மருத்துவமனைக்கும் எதிர்கரையிலிருந்த இலங்கை இராணுவத்தின் நிலைகளுக்கும் நடுவில் அமைக்கப்பட்டிருக்கவில்லை.[849] புதுக்குடியிருப்பு வீழ்ச்சியடைந்ததையடுத்து, எல்ரீரீஈ இயக்கத்தின் நிலைகள் பலப்படுத்தப்பட்டதுடன், 2009 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் புதுமாத்தளன் பகுதியில் சண்டை தீவிரமடைந்த நிலையில், அகழிகள் அம்மருத்துவமனையிலிருந்து 100 மீற்றர் வரையிலான பிரதேசம் வரையில் விரிவாக்கப்பட்டன.[850] காயமடைந்த எல்ரீரீஈ இயக்கப் போராளிகள் புதுமாத்தளன் மருத்துவமனையில் புறம்பாக வைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவமனைக்குள் எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவ பிரசன்னம் இருந்து வரவில்லை.[851]

842. மருத்துவமனைக்குள் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து காணப்பட்டன: நோயாளிகளின் எண்ணிக்கை மருத்துவமனையின் தாங்கு திறனையும் தாண்டிச் சென்றிருந்த நிலையில் நோயாளிகள் பாய்களிலும், கித்தான் துணிகளிலும் படுக்க

[842] WS on file

[843] WS on file

[844] WS on file

[845] WS on file

[846] WS on file

[847] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பிலிருக்கும் தகவல்

[848] UNOSAT.

[849] WS on file

[850] WS on file; UNOSAT.

[851] WS on file

வைக்கப்பட்டிருந்தனர்; உபகரணங்களின் பற்றாக்குறை காரணமாக உதாரணமாக ஏற்றும் மருந்துகள் போன்றவை மரங்களில் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றின் கீழ் நோயாளிகள் நடமாடினர்.[852] பெருந்தொகையான பொதுமக்கள் இந்த மருத்துவமனை மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கேந்திர நிலையம் என்பவற்றை சூழவுள்ள பிரதேசங்களுக்கு வந்து, கூடாரங்களை அமைத்துக் கொண்டிருந்தனர். தமக்கு தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்களில் பெரும்பாலானவர்கள் வெள்ளைக் கொடிகளுடன் வந்திருந்தனர்.[853]

843. 2009 பெப்ரவரி 9 ஆந் திகதிக்கும், ஏப்ரல் 20 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது புதுமாத்தளன் மருத்துவமனை, அதற்கு அருகில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் கேந்திர நிலையம் என்பவற்றின் மீது பல தடவைகள் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டமை குறித்த தகவல்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்துள்ளன. பெப்ரவரி 9 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது புதுமாத்தளன் மருத்துவமனையில் 16 நோயாளர்கள் கொல்லப்பட்டதாக கூறப்பட்டிருந்தது. மேலும், தாக்குதலின் போது மருத்துவமனை பக்கச் சுவர் சேதமடைந்தது.[854] இந்த மருத்துவமனையை சூழவுள்ள பகுதி இரண்டாவது யுத்த சூன்ய வலயத்திற்குள் வருவதாக பெப்ரவரி 12 ஆந் திகதி அரசாங்கம் அறிவித்ததனையடுத்து[855] மனிதநேயப் பணியாளர்கள் அதனை ஒரு “நல்ல செய்தியாக வரவேற்றனர்” எவ்வாறிருப்பினும், ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வந்தன.

844. யுத்த சூன்ய வலயம் பிரகடனப்படுத்தப்பட்ட தினத்திற்கு அடுத்த தினம் பெப்ரவரி 13 ஆந் திகதி இலங்கை பாதுகாப்புப் படையினரால் ஏவப்பட்டதாக நம்பப்படும் ஒரு ஆட்டிலரி ஷெல் மருத்துவமனையின் சமையல் கூடாரத்தின் மீது விழுந்ததுடன், அதில் இரு பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஆகக் குறைந்தது மூன்று பேர் கொல்லப்பட்டனர்.[856] பெப்ரவரி 18 ஆந் திகதி இரவு நேரத்தின் போது மருத்துவமனையின் சத்திர சிகிச்சை வார்ட்டுக்கு அருகில் ஒரு ஆட்டிலரி ஷெல் விழுந்த பொழுது ஆகக் குறைந்தது இரண்டு நோயாளிகள் கொல்லப்பட்டதாக சாட்சிகள் தெரிவித்திருந்தனர். மருத்துவமனையின் வேலிப் பகுதியில் கூடாரமொன்றின் மீது ஒரு ஷெல் விழுந்த பொழுது அங்கிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.[857]

845. மார்ச் 16 ஆந் திகதி சிறுரக ஆயுதங்களை கொண்டும், ரொக்கட்டினால் ஏவப்பட்ட கிரனைட்களைக்(RPG) கொண்டும் நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக மருத்துவமனையின் கூரைப் பகுதி சேதமடைந்ததுடன், இருவர் கொல்லப்பட்டனர்.[858]மீண்டும் மார்ச் 24 ஆந் திகதி மருத்துவமனை சிறுரக ஆயுதங்கள், ஆட்டிலரி ஷெல் மற்றும் ஆர்பிஜி தாக்குதல்களை எதிர்கொண்டதுடன், இத்தாக்குதல்கள் கடல்நீரேரிக்கு அப்பால் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் நிலைகளிலிருந்து நிகழ்த்தப்பட்டிருந்தன. பாதிக்கப்பட்ட மூன்று பேரில் ஒருவர் ஒரு பெண் ஆவார். ஒரு ஆர்பிஜி அவருடைய காலை தாக்கிய பொழுது அவர் கொல்லப்பட்டார்.[859] அதே தினத்தில் பின்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கேந்திர நிலையத்திற்கு அருகில் பொதுமக்கள் பயணம் செய்த

[852] WS on file

[853] WS on file

[854] ICRC, 10 February 2006· News Release 34/09, “ICRC evacuates over 240 wounded and sick from the Vanni by sea”; WS on file.

[855] WS on file

[856] WS on file

[857] WS on file

[858] WS on file

[859] WS on file

பேருந்து ஒன்றின் மீது ஒரு ஆர்பிஜி தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் ஆறு வயது ஆண் பிள்ளை ஒன்று கொல்லப்பட்டது.[860] அடுத்த நாள் மார்ச் 25 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் தளத்தின் மீது ஆர்பிஜி தாக்குதல் நடத்தப்பட்ட போது ஒரு நபர் காயமடைந்தார்.[861] மார்ச் 26 ஆந் திகதி அதிகாலை புதுமாத்தளன் மருத்துவமனை மீண்டும் ஆர்பிஜி என்பவற்றின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட போது[862] இரு சுகாதார பணியாளர்கள் காயமடைந்தனர். புதுமாத்தளன் மருத்துவமனை மீதான செறிவான ஷெல் தாக்குதல்கள் ஏப்ரல் மாதம் முழுவதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. ஏப்ரல் 9 ஆந் திகதி அல்லது அதற்கு கிட்டிய தினத்தில் மருத்துவமனையின் நுழைவாயிலுக்கு எதிரில் வீழ்ந்த ஷெல்களினால் 3 பேர் கொல்லப்பட்டனர்.[863]

846. இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவு ஏப்ரல் 20 ஆந் திகதி புதுமாத்தளனை நோக்கி முன்னேறி வந்தது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு 2010 செப்டம்பர் மாதம் 8 ஆந் திகதி ஒரு அறிக்கையை சமர்ப்பித்த 58 ஆவது படைப் பிரிவின் தளபதி ஷவேந்திர சில்வா, புதுமாத்தளன் பிரதேசத்தை கைபற்றுவதற்கான செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் பணி தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்ற விடயத்தை உறுதிப்படுத்தினார். இந்த முன்னகர்வின் போது எல்ரீரீஈ இயக்கத்தின் பாதுகாப்பு அரண்கள் தகர்க்கப்பட்டதாக அவர் கூறினார். “சிவிலியன்களை மீட்டெடுக்கும் உலகின் மிகப் பெரிய பணி” தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் சொன்னார். “அது புதுமாத்தளன் விமானப் படங்களில் காட்டப்பட்டுள்ளது.” ஏனைய படைப் பிரிவுகள் மற்றும் விசேட படைகளுடன் இணைந்த விதத்தில் எனது படைப் பிரிவிடம் பணி முழுவதுமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது….” தமது தலைமை அலுவலகத்தில் ஒரு ஆளில்லாத கண்காணிப்பு விமானம் இருந்து வந்தது என்ற விடயத்தை அவர் உறுதிப்படுத்தினார்.

847. ஐக்கிய நாடுகள் அமைப்பின் கேந்திர நிலையம் மற்றும் மருத்துவமனை என்பவற்றின் அருகில் எல்ரீரீஈ இயக்கத்துக்கும், இலங்கை இராணுவத்திற்குமிடையில் துப்பாக்கிச் சூட்டு பரிமாற்றங்கள் ஆரம்பித்தன.[864]இதில் பலர் கொல்லப்பட்டதுடன், மேலும் பலர் காயமடைந்தனர்; ஒரு சாட்சி கூறியதன் பிரகாரம் “ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மிகவும் அபாயகரமான விதத்தில் இடம்பெற்று வந்தமையினால் மருத்துவர்களினால் மரணித்திருந்தவர்களையோ அல்லது மரணித்துக் கொண்டு இருப்பவர்களையோ அணுக முடியாதிருந்தது.”[865] ஏப்ரல் 21 ஆந் திகதி விமானத் தாக்குதல்களுடன் இணைந்த விதத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆட்டிலரி ஷெல் தாக்குதல்கள் காரணமாக மருத்துவமனை நோயாளர்களும் அவர்களுடைய உறவினர்களும் தங்கியிருந்த கூடார வீடுகள் தீப்பற்றி எரிந்ததுடன், கடலுக்கு அருகில் இருந்த மணல் பதுங்கு குழிகளுக்குள் மக்கள் தப்பிச் சென்றார்கள்.[866]

848. புதுமாத்தளன் மருத்துவமனையையும் உள்ளடக்கிய விதத்தில் யுத்த சூன்ய வலயத்தில் தீவிரமான சண்டை தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததுடன், அதனை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் “ஒரு பேரழிவுக்கு இணையான சம்பவம்” என வர்ணித்திருந்தது. ஆட்டிலரி போன்ற ஆயுதங்களை பயன்படுத்துவதன் காரணமாக பொதுமக்களின் மீது ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்து குறிப்பாக, சர்வதேச

[860] WS on file

[861] WS on file

[862] WS on file

[863] WS on file

[864] WS on file

[865] WS on file

[866] WS on file

செஞ்சிலுவை சங்கம் கவலை வெளியிட்டிருந்தது. இரு தரப்புக்களும் தீவிரமான விதத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், அது கேட்டுக் கொண்டிருந்தது. இந்தப் பின்புலம் "பொதுமக்கள் செறிவாக வாழ்ந்து வரும் பிரதேசத்தில் சண்டை இடம்பெற்று வரும் ஒரு விதிவிலக்கான நிலைமையை கொண்டுள்ளது" எனவும் அது குறிப்பிட்டிருந்தது.[867]

849. புதுமாத்தளன் மருத்துவமனை மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு அலுவலகம் என்பவற்றின் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டமை குறித்து[868] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சாட்சிகளிடமிருந்து சேகரித்திருந்த சான்றுகளை செய்மதிப் படங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆகக் குறைந்தது ஆறு குண்டுப் பள்ளங்கள் மூன்று புறம்பான மருத்துவமனை கட்டடங்களின் கூரைகளில் இனங்காணப்பட்டிருந்தன. மருத்துவமனைக்கு அருகில் அமைந்திருந்த பல சிறிய தற்காலிக கட்டடங்கள் அழிக்கப்பட்டிருந்தன. மருத்துவமனை வளவிலிருந்து 400 மீற்றர் சுற்றளவுக்குள் ஆகக் குறைந்தது மேலும் 20 ஆட்டிலரி தாக்குதல்களின் தாக்கத்தை கொண்டிருந்த குண்டுப் பள்ளங்கள் இருந்து வருவதனை செய்மதிப் படங்கள் காட்டுகின்றன. இவற்றில் சில ஐக்கிய நாடுகள் அமைப்பின் கேந்திர நிலையத்திற்கு சேதத்தை விளைவித்திருந்தன.

850. புதுமாத்தளன் மருத்துவமனை மற்றும் ஐக்கிய நாடுகள் கேந்திர நிலையம்[869] என்பவற்றின் மீதான தாக்குதல்களின் போது இலங்கை பாதுகாப்புப் படைகள் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியதாக சாட்சிகள் குற்றம் சாட்டியிருந்தனர். ஒரு "கொத்துக் குண்டு" தாக்குதலின் விளைவாக[870] காயமடைந்திருந்த ஒரு பெண்மணியின் காலை நீக்கியதாக மருத்துவ ஆளணியினர் தெரிவித்திருந்தனர். முன்னர் எடுத்துக் காட்டப்பட்டதை போல கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்ட விதத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு புலன் விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும்,இலங்கை இராணுவத்தினரால் கடல் நீரேரிக்கு அப்பால் இருந்த அதன் நிலைகளிலிருந்து ஆர்பிஜிகளும் ஏவப்பட்டிருந்தன. சுமார் 800 மீற்றர் தொலைவிலிருந்து இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.[871] இந்த வீச்செல்லையிலிருந்து மேல் நோக்கிய விதத்தில்ஆர்பிஜிகள் மறைமுகமாக ஏவப்படுதல் வேண்டும். அந்த நிலையில், துல்லியமாக இலக்கைத் தாக்கும் அதன் திறன் பெருமளவுக்கு குறைவதுடன்,அது கண்மூடித்தனமான ஒரு தாக்குதலுக்கு வழிகோலுகின்றது.[872]

851. இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் கூற்றுப்படி, அரசாங்கப் படைகள் கடல்நீரேரிக்கூடாக தமது நிலைகளிலிருந்து அடையாளம் காணப்பட்டிருந்த எல்ரீரீஈ இலக்குகள் மீது ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன.[873] ஷெல் தாக்குதல்கள் காரணமாக எல்ரீரீஈ நிலைகள் தாக்கப்பட்டிருந்ததனை செய்மதிப் படங்கள் காட்டுகின்றன.[874]

867 ICRC, 21 April 2009, News Release 09/81, "ICRC calls for exceptional precautionary measures to minimise further bloodshed in 'no-fire zone'"

868 UNOSAT on file

869 WS on file

870 WS on file

871 WS on file

872 Munitions analysis carried out by OISL.

873 இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவின் தளபதி ஷவேந்திர சில்வா, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணம், செப்டம்பர் 8, 2010

874 UNOSAT.

852. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு வழங்கிய தனது அறிக்கையில் மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா புதுமாத்தளன் மருத்துவமனை தாக்கப்பட்டது என்ற விடயத்தை மறுத்ததுடன், அந்த மருத்துவமனை எல்ரீரீஈ போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது என்ற விடயத்தை வலியுறுத்திக் கூறினார். அங்கு சிவிலியன்கள் எவரும் இருந்து வரவில்லை என்றும் அவர் சொன்னார். எவ்வாறிருப்பினும், இது பாதுகாக்கப்பட்ட ஒரு இடம் என்ற வகையில் அந்த மருத்துவமனையின் இயல்பில் எந்தவித மாற்றத்தையும் எடுத்து வர மாட்டாது. நோய் அல்லது காயங்கள் காரணமாக அங்கு சிகிச்சை பெற்று வந்த எல்ரீரீஈ இயக்கப் போராளிகளை,சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் இலக்காக கொள்ள முடியாது. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்டிருக்கும் சான்றுகள், நிகழ்வுகள் குறித்த இந்தக் கருத்துக்களுடன் வலுவான விதத்தில் முரண்படுகின்றன. புதுமாத்தளன் மருத்துவமனை பொதுமக்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கென பயன்படுத்தப்பட்டு வந்ததுடன், அது மீண்டும் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகியது.[875]

### வளையர்மடம் தேவாலயம் மற்றும் மருத்துவமனை

853. புதுக்குடியிருப்பிலிருந்து வெளியேறிய பின்னர், பல மருத்துவப் பணியாளர்களும் ஐ நா அலுவலகங்களைச் சேர்ந்தவர்களும் புதுமாத்தளன் பகுதிக்கு சென்றதுடன், ஒரு சில தொண்டு நிறுவனங்கள் மூன்று கி.மீ. தெற்கில் அமைந்திருந்திருக்கும் வளையர்மடம் என்ற இடத்தில் தமது அலுவலகங்களை ஸ்தாபித்துக் கொண்டிருந்தன.[876] இந்த அமைவிடம் ஒரு தற்காலிக உள்ளூர் அரசாங்க தளமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.[877] அந்த இடத்தில் அமைந்திருந்த தேவாலய கட்டடங்களில் பெருந்தொகையான பொதுமக்கள் தஞ்சம் புகுந்திருந்தனர்.[878] வளையர்மடம் தேவாலயத்திலிருந்து 150 மீற்றர் தொலைவில் ஒரு சிறிய வைத்தியசாலையும் அமைந்திருந்தது.[879]

854. பெப்ரவரி 22 ஆந் திகதி இலங்கை இராணுவத்தின் நிலைகளிலிருந்து வளையர்மடம் பகுதியை நோக்கி மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன. ஒரு ஷெல் உள்ளூர் அரசாங்க தளத்தை தாக்கியதுடன், ஒரு அரச பணியாளர் அதில் கொல்லப்பட்டார்.[880] மார்ச் நடுப் பகுதியில் இலங்கை இராணுவத்தின் நிலைகளிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வளையர்மடத்தில் தொண்டு நிறுவனமொன்றின் அலுவலகத்திற்கு அருகிலிருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த பிரதேசத்தில் வீழ்ந்தது. இதன் காரணமாக, எண்ணிக்கை தெரிய வராத உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன.[881]

855. 2009 ஏப்ரல் 21 - 22 திகதிகளில் வளையர்மடம் பிரதேசமும், அதனைச் சூழவுள்ள பிரதேசமும் மீண்டும் மீண்டும் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டன.[882] தேவாலய வளவும், மருத்துவ நிலையங்களும் இதில் அடங்கியிருந்தன. சாட்சிகள் வழங்கும் தகவல்களின் பிரகாரம், அச்சந்தர்ப்பத்தில் தேவாலயத்திலும், வளவுக்குள்ளும் 1000 க்கும் மேற்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சம்

---

[875] Customary IHL, rules 28, 35.

[876] WS on file

[877] WS on file

[878] WS on file

[879] WS on file

[880] WS on file

[881] WS on file

[882] WS on file

புகுந்திருந்தனர்.[883] அந்த தாக்குதல்களின் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களை ஒரு தொண்டு நிறுவனப் பணியாளர் இப்படி விளக்கினார்: “அது மிகவும் பயங்கரமான காட்சியாக இருந்து வந்தது. உடல் உறுப்புக்கள் எல்லா இடங்களிலும் சிதறியிருந்தன. மரங்களில் கைகள் தொங்குவதை கூட நான் பார்த்தேன். வாகனங்கள் அனைத்திலும் மனித உடலுறுப்புக்கள் சிதறி கிடப்பதைக் கண்டேன்.”[884]

856. இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த முகாம்களில் ஒன்றில் ஒரு ஷெல் அல்லது குண்டு வெடிப்பின் தெறிப்புக்கள் விழுந்த பொழுது கொல்லப்பட்டவர்களில் ஐந்து பொதுமக்களும் இருந்தார்கள். மருத்துவமனைகளில் கொல்லப்பட்டவர்களில் உள நோய் மருத்துவர் ஒருவரும் இருந்தார். குறிப்பாக, ஷெல் தாக்குதல் காரணமாக தமது குடும்ப உறுப்பினர்களை இழந்து கடும் மன அதிர்ச்சிக்குள்ளாகியிருந்த பெருந்தொகையான மக்களுக்கு உளவளத் துணை சேவைகளை வழங்கும் ஒரு அணியின் ஒரு உறுப்பினராக அவர் இருந்து வந்தார்.[885] எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் அல்லது காயமடைந்தார்கள் என்பது சரியாக தெரியவில்லை. ஆனால், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள் என ஒரு அறிக்கை தெரிவித்தது.[886]

857. தலைக்கு மேலே குண்டுகள் வெடித்ததாகவும், இந்தச் சம்பவங்களின் போது அவை தரையை போய் தாக்குவதற்கு முன்னர் மேலே “குண்டுத் துகள்கள்” சிதறியதாகவும் பல சாட்சிகள் விவரித்திருந்தார்கள். ஷெல் தாக்குதலில் காயமடைந்த சாட்சி ஒருவர் “ஒரு தாக்குதல் ஆரம்பிக்கப்படும் சத்தத்தையும், வெடிப்புச் சத்தத்தையும் கேட்கக் கூடியதாக இருந்தது. அதன் பின்னர் பரந்த பிரதேசத்தில் 40 அல்லது 50 சிறிய வெடிப்புக்கள் நிகழும் சத்தத்தை தான் கேட்டேன்” எனக் கூறினார்.[887]மற்றொரு குண்டு மருத்துவமனையின் கூரையில் விழுந்தது. ஆனால், அது வெடிக்கவில்லை.[888]

858. எல்ரீரீஈ இயக்கத்தினர் வளையர்மடம் தேவாலயத்திலும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் அவ்வப்பொழுது ஆயுதங்களுடன் நடமாடினார்கள்.[889]உண்மையிலேயே மார்ச் மாதத்தில் அவர்கள் இந்த தேவாலயத்திற்குள் திடீரென பிரவேசித்து, எல்ரீரீஈ இயக்கத்தின்ஆட்சேர்ப்பிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு அல்லது பாதுகாப்புக்கென இங்கு தஞ்சம் புகுந்திருந்த பல டசன் கணக்கான இளைஞர்களை பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்தனர் (பார்க்கவும் அத்தியாயம் XI- பலவந்தமான ஆட்சேர்ப்பு). எவ்வாறிருப்பினும், ஏப்ரல் மாதத்தில் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்ற பொழுது, இந்த தேவாலயத்திற்குள்ளோ அதற்கு அருகிலோ எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவ நிலைகள் இருந்து வரவில்லை என சாட்சிகள் கூறினார்கள் அல்லது தேவாலயத்தின் மீது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட பொழுது தேவாலயத்திலிருந்து அல்லது அதன் சுற்றுப்புறத்திலிருந்து எல்ரீரீஈ இயக்கம் சூட்டுத் தாக்குதலை நடத்தவில்லை.

### உணவு விநியோக கியூ வரிசை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள்

859. யுத்த சூன்ய வலயம் 2 இல் உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த சாட்சிகள் உணவுக்காக கியூ வரிசையில் இருந்த மக்கள் எவ்வாறு பல தடவைகள்

[883]WS on file

[884]WS on file

[885]WS on file

[886]WS on file

[887]WS on file

[888]WS on file

[889]WS on file

ஷெல் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பதனை எடுத்து விளக்கினார்கள். உணவு விநியோகங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர், உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த மனிதநேய முகவரகங்கள் உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவிருக்கும் அமைவிடத்தை இலங்கை இராணுவத்தினருக்கு தெரிவித்திருந்தன.[890]

860. வளையர்மடத்தில் 2009 மார்ச் 11 ஆந் திகதி உணவு மற்றும் தானியங்கள் என்பன விநியோகிக்கப்பட்ட பொழுது, அங்கு கியூ வரிசையிலிருந்த பொதுமக்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதனை சாட்சியொருவர் குறிப்பிட்டார்.[891] தலைக்கு மேலால் ஒரு வேவுபார்க்கும் விமானம் பறப்பதனை பார்த்ததாகவும், பொதுவாக, இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களுக்கு முன்னர் அவ்வாறு நிகழ்வது வழமையென்றும் ஒரு சாட்சி கூறியிருந்தார். ஒரு சில நிமிடங்களின் பின்னர் பல டசன் கணக்கான ஷெல்கள் அந்த இடத்தில் விழுந்ததாகவும், தனது தாயாரையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான மக்கள் அதில் கொல்லப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

861. 2009 மார்ச் 25 ஆந் திகதி காலை சுமார் 11 மணியளவில் அம்பலவன்பொக்கனைக்கு அருகே நூற்றுக்கணக்கான மக்களுக்கு சமைத்த உணவை விநியோகித்துக் கொண்டிருந்த ஒரு நிலையம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், கேப்பாபுலவு இலங்கை இராணுவ நிலைகளிலிருந்து அந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது.[892] அந்த ஷெல் தாக்குதல்கள் சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்ததாகவும், அச்சந்தர்ப்பத்தில் சுமார் 50 ஷெல்கள் விழுந்ததாகவும்,[893] பெருந்தொகையானோர் அதில் கொல்லப்பட்டதாகவும்[894] அச்சாட்சி தெரிவித்தார். உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்பிரதேசத்திற்கு மேலே கண்காணிப்பு விமானங்கள் பறந்ததாகவும் மக்கள் தெரிவித்தனர்.[895]

862. யுத்த சூன்ய வலயம் 2 இல் பரவலாக அறிக்கையிடப்பட்ட மற்றொரு சம்பவத்தின் போது, 2009 ஏப்ரல் 8 ஆந் திகதி காலையில் பொக்கானையில் பால்மா விநியோகம் இடம்பெற்று வந்த ஆரம்ப சுகாதார நிலையமொன்றில் இரு ஷெல்கள் விழுந்தன.[896][897]மிகவும் தட்டுப்பாடுநிலவிய ஒரு பண்டமான, பால்மா ஒரு நாளைக்கு முன்னர் அல்லது இரு நாளைக்கு முன்னர் கப்பல் மூலம் அங்கு எடுத்து வரப்பட்டிருந்தது. அந்த விடயம் உள்ளுர்வாசிகளுக்கு ஒலிபெருக்கிகள் மூலம் தெரிவிக்கப்பட்டதுடன், அடுத்த நாள் காலையில் சுகாதார நிலையத்திற்கு வருமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர்.[898] இந்த விநியோகம் மேற்கொள்ளப்படும் நேரம் மற்றும் இடம் என்பவற்றையும் மனிதநேய முகவரகங்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்திருந்தன.[899] அது தவிர, கண்காணிப்பு விமானங்களும் பிரதேசத்தில் பறந்து கொண்டிருந்தன. அந்த விமானங்கள் கியூ வரிசையில் பொதுமக்கள் பெரும்பாலும் பெண்களும், பிள்ளைகளும் இருந்ததனையும் பார்த்திருக்க முடியும்.[900] அது தவிர,

[890]WS on file

[891]WS on file

[892]WS on file

[893]WS on file

[894]WS on file

[895]WS on file

[896]Also referred to as Ampanarpokkenai.

[897]WS on file

[898]WS on file

[899]WS on file

[900]WS on file

மேலும் இலங்கை இராணுவம் அந்த இடத்திலிருந்து சுமார் 800 மீற்றர்களுக்கு அப்பால் நிலை கொண்டிருந்தது.[901]

863. இத்தாக்குதல்களில் சிறு குழந்தைகள் மற்றும் இளம் பிள்ளைகள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டதாக சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர்.[902] வெடிப்புக்கள் நிகழ்ந்த இடத்தில் மிக மோசமான விதத்தில் சிதைக்கப்பட்டிருந்த உடல்களை தாம் பார்த்ததாகவும், உடல் உறுப்புக்கள் அப்பிரதேசம் முழுவதும் சிதறுண்டு இருந்ததாகவும் அவர்கள் சொன்னார்கள். காயப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த அருகிலுள்ள மருத்துவமனையொன்றில் "பேரழிவு" காட்சியொன்றே காணப்பட்டது. "பெருந்தொகையான பெண்களும், பிள்ளைகளும் உயிரிழந்திருந்ததுடன், காயமடைந்திருந்தனர். ஒரு சிலர் தலையிலும் வயிற்றிலும் காயப்பட்டிருந்தனர்; பிள்ளைகளையும் உள்ளடக்கிய ஏனையோர் கை, கால்களை இழந்திருந்தனர். காயப்பட்டவர்களின் உயிர்களை பாதுகாப்பதற்கென மருத்துவர்கள் ஒரு கடுமையான பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தார்கள்."[903]

864. மேலே விபரிக்கப்பட்ட எந்தவொரு சம்பவத்தின் போதும், உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்ட இடங்களுக்கு அருகில் எல்ரீரீஈ இயக்கத்தின் ஆயுத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக எந்தவொரு தகவலும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கவில்லை. உணவு விநியோகம் மேற்கொள்ளப்படும் இடம் மற்றும் நேரம் என்பன தொடர்பான விபரங்கள் முறையான ஒழுங்கில் இலங்கை விமானப் படையினருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அந்த இடங்கள் வேண்டுமென்றே இலக்காகக் கொள்ளப்பட்டன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.[904]

### முள்ளிவாய்க்கால் மருத்துவமனைகள்

865. தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த ஷெல் தாக்குதல்கள் காரணமாக 2009 ஏப்ரல் 23 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த ஒரு திகதியில் வளையர்மடம் மருத்துவமனை காலி செய்யப்பட்டதுடன், அதன் சிகிச்சை நிலையம் முள்ளிவாய்க்காலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.[905] தங்குவதற்குபாதுகாப்பான இடமொன்றைத் தேடிக் கொள்ள வேண்டிய அவசரத்தில் குடும்பங்கள் இருந்து வந்தமையினால், உயிரிழந்த தமது அன்புக்குரியவர்களை புதைப்பதற்கு அவர்களுக்கு கால அவகாசம் கிடைக்கவில்லை.[906] வளையர்மடம் மருத்துவமனையிலிருந்த ஒரு நோயாளி, தன்னை முள்ளிவாய்க்காலுக்கு மற்றவர்கள் தூக்கிச் சென்றார்கள் என்றும், அங்கு மேலும் 50 நோயாளிகளுடன் ஒரு கூடாரத்தில் தங்கவைக்கப்பட்டதாகவும் சொன்னார்[907] முள்ளிவாய்க்கால் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மற்றும் முள்ளிவாய்க்கால் மருத்துவமனை ஆகிய இரண்டு மருத்துவ நிலையங்கள் அங்கு ஸ்தாபிக்கப்பட்டன. முள்ளிவாய்க்கால் மருத்துவமனை அச்சந்தர்ப்பத்தில் யுத்த சூன்ய வலயம் 2 இல் எஞ்சியிருந்த ஒரேயொரு மருத்துவமனையாக இருந்து வந்தது.[908]

---

[901] WS on file

[902] WS on file

[903] WS on file

[904] WS on file

[905] WS on file

[906] WS on file

[907] WS on file

[908] WS on file

-

866. முள்ளிவாய்க்கால் மேற்கு எனவும் அழைக்கப்படும் முள்ளிவாய்க்கால் மருத்துவமனை கரயன்முள்ளிவாய்க்காலில் ஒரு பாடசாலை கட்டடத்தை சீராக்கம் செய்து அமைக்கப்பட்டிருந்தது. அந்த மருத்துவமனையில் வெள்ளைக் கொடிகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னம் என்பன தெளிவாக காட்டப்பட்டிருந்தன.[909] இந்த மருத்துவமனையின் GPS படங்கள் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு ஏப்ரல் 26 ஆந் திகதி அல்லது அதனை அண்மித்த ஒரு திகதியில் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.[910] அது தவிர, இலங்கை பாதுகாப்புப் படைகள் பிரதேசம் தொடர்பாக ஒழுங்கான அடிப்படையில் விமான கண்காணிப்பொன்றையும் மேற்கொண்டு வந்தன.[911] இந்த மருத்துவமனை, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமொன்றுக்கு அருகில் அமைந்திருந்தது.[912]

867. யுத்த சூன்ய வலயம் 2 இல் நிலைமை வர வர மோசமடைந்து வந்த காரணத்தினால், எஞ்சியிருந்த சுகாதார பராமரிப்பு நிலையங்கள் தற்காலிக கட்டமைப்புகளாக மட்டுமே இருந்து வந்தன. அவை அவசர அவசரமாக உருவாக்கப்பட்ட கட்டடங்களாக இருந்து வந்ததுடன், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அவற்றில் இருந்தனர். மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பன தொடர்பாக கடுமையான ஒரு தட்டுப்பாடு நிலவி வந்தது. மருத்துவத் துறை ஆளணியினர் பெருமளவுக்கு களைப்படைந்திருந்தனர்.[913] "வேலை செய்வதற்கு மிகவும் துன்பகரமான ஒரு காலகட்டம். எல்லா இடங்களிலும் படுகொலைகள் நிகழ்ந்து வந்தன. ஷெல் தாக்குதல், குண்டு வீச்சுக்கள் என்பவற்றினால் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்திருந்தார்கள். இப்போது ஆர்பிஜி மற்றும் ரைபல் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன" என இந்நிலையை சாட்சியொருவர் வர்ணித்திருந்தார். முள்ளிவாய்க்கால் மருத்துவமனையின் சத்திர சிகிச்சை கூடம் ஒரு "கூடாரம்" மட்டுமே என விவரிக்கப்பட்டிருந்தது.[914] முள்ளிவாய்க்கால் காட்சியை "வர்ணிப்பதற்கு வார்த்தைகளில்லை" என மற்றொரு சாட்சி கூறினார்; கட்டில்கள் பற்றாக்குறை காரணமாக நோயாளிகள் வெளியே மணலில் படுத்துக் கிடந்தார்கள். சூடு காரணமாக சடலங்கள் அழுகிக் கொண்டிருந்தன.[915]

868. ஏப்ரல் 20 ஆந் திகதி இடம்பெற்ற உக்கிரமான ஷெல் தாக்குதலையடுத்து, எல்ரீரீஈ இயக்கத்தின் பாதுகாப்பு நிலைகளை தகர்ந்த பின்னர்,இலங்கை இராணுவம் யுத்த சூன்ய வலயம் 2 ஐ இரு பாகங்களாக துண்டித்தது. அதன் விளைவாக சுமார் 100,000 பொதுமக்களும், அதே போல தமது ஆயுதங்களை ஒப்படைத்திருந்த ஒரு சில எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்று, அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தார்கள். அங்கு அவர்கள் சோதனையிடப்பட்டு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர் அல்லது சந்தேக நபர்கள் என்ற முறையில் இராணுவ காவலில் வைக்கப்பட்டார்கள். அறிக்கைகளின் பிரகாரம் யுத்த சூன்ய வலயம் 2 இன் கீழ் பகுதியில் சுமார் 150,000 மக்கள் தங்கியிருந்தார்கள்.[916]

869. கனரக ஆயுதங்களின் உபயோகத்தை முடித்துக் கொள்ளுமாறு இலங்கை இராணுவத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக ஏப்ரல் 27 ஆந் திகதி

909 WS on file

910 WS on file; Report of the UN Secretary-General's Panel of Expertson Accountability in Sri Lanka, 31 March 2011.

911 WS on file; UNOSAT report on file.

912WS on file

913 WS on file

914 WS on file

915 WS on file

916 WS on file

அரசாங்கம் அறிவித்திருந்தது. எவ்வாறிருப்பினும், ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை, ஒரு சில மூலாதாரங்களின் பிரகாரம் அவை மேலும் தீவிரமடைந்திருந்தன.[917] ஏப்ரல் 27 ஆந் திகதி தொடக்கம் இன்னமும் யுத்த சூன்ய வலயம் 2 இல் அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் மருத்துவமனை புதுக்குடியிருப்புத் திசையில் அமைந்திருந்த இலங்கை இராணுவத்தின் நிலைகளிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களை மீண்டும் மீண்டும் எதிர்கொண்டது.[918] ஏப்ரல் 28 ஆம் திகதி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் ஷெல்கள் வீழ்ந்தபொழுது பெண்களையும், பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் குறைந்தது ஆறு பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.[919] ஏப்ரல் 29 ஆந் திகதி ஏவப்பட்ட ஷெல்கள் மருத்துவமனை வார்ட்டொன்றின் கூரையை சேதப்படுத்தியதுடன், ஒன்பது நோயாளிகள் அதில் கொல்லப்பட்டனர். மேலும் 15 பேர் காயமடைந்ததாக கூறப்பட்டது.[920]

870. மே 2 ஆந் திகதி காலை நேரத்தில் பொதுமக்கள் சுறுசுறுப்பாக தமது அலுவல்களில் ஈடுபட்டிருந்த பொழுது, மருத்துவமனையை சூழவுள்ள பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் பெருமளவுக்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்தியது.[921] வெளியில் சுமார் 30 அல்லது 40 சடலங்கள் கிடத்தப்பட்டிருப்பதனை தாம் பார்த்ததாகவும், அவற்றில் ஒரு சில சடலங்கள் மிக மோசமான காயங்கள் காரணமாக அடையாளம் காண முடியாத நிலையில் இருந்து வந்ததாகவும் சாட்சியொருவர் நினைவு கூர்ந்தார்.[922] மருத்துவமனையை அடுத்துள்ள பிரதேசமொன்றின் பதுங்கு குழியொன்றில் ஒரு ஷெல் விழுந்த பொழுது ஏழு பேர் கொல்லப்பட்டனர்.[923] சாட்சியொருவர் இக்காட்சியை பின்வருமாறு வர்ணித்தார்: "எல்லா இடங்களிலும் சடலங்கள் சிதறிக் கிடந்தன. ஷெல்களிலிருந்து வந்து காற்றில் கலந்த புகையின் வாசனையை இன்னும் என்னால் உணர முடிகிறது. இரத்தத்தின் வாடையும், காயப்பட்டவர்களின் அழு குரல்களும் சகித்துக் கொள்ள முடியாதவையாக இருந்து வந்தன. பெருந்தொகையான பெண்களும், பிள்ளைகளும் செத்துக் கிடந்தார்கள்." [924]

871. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட செய்மதிப் படங்கள் முள்ளிவாய்க்கால் மருத்துவ நிலையங்கள் ஆட்டிலரி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, அதன் விளைவாக சேதமடைந்திருந்தன என்ற விடயத்தை உறுதிப்படுத்துகின்றன.[925] முள்ளிவாய்க்கால் மருத்துவமனை வளவில் நான்கு மருத்துவமனை கூரைகளில் புறம்பான எட்டு குண்டுத் தாக்கப் பள்ளங்களை இனங்காணக் கூடியதாக இருந்தது. அடுத்து அமைந்திருந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலைய வளவில் ஆகக் குறைந்தது இரண்டு மோட்டார் குண்டுத் தாக்கப் பள்ளங்கள் அடையாளம் காணப்பட்டன. இந்த தாக்கங்கள் முள்ளிவாய்க்கால் மாவட்டம் முழுவதிலும், யுத்த சூன்ய வலயம் 2இலும் இடம்பெற்று வந்த பாரியளவிலான குண்டுத் தாக்குதல்களின் ஒரு பாகமாக இருந்து வந்தன என்பதனை செய்மதிப் படங்கள் காட்டுகின்றன.

917 WS on file

918 WS on file

919 WS on file

920 WS on file

921 Internal document on file with OISL; WS on file.

922 WS on file

923 WS on file

924 WS on file

925 UNOSAT, on file with OISL.

872. அத்தியாயம் III இல் குறிப்பிட்டுள்ளவாறு, மோதலின் அக்கட்டத்தின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு ஒழுங்கமைந்த, கட்டுக்கோப்பான இராணுவச் சக்தியாக இருந்து வரவில்லை. முள்ளிவாய்க்காலில் எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிக் குழுக்கள் சாதாரண பொதுமக்களுடன் கலந்திருந்ததுடன், அந்த இயக்கம் நந்திக்கடல் ஏரிக்கு அருகில் குறைந்தது மருத்துவமனையிலிருந்து 200 மீற்றர் தொலைவில் ஒரு சில சிறிய நிலைகளை அமைத்திருந்தது.[926] செய்மதிப் படங்கள் மற்றும் சாட்சிகள் முன்வைத்த சான்றுகள் என்பவற்றின் அடிப்படையிலான தகவல்களின் பிரகாரம், எல்ரீரீஈ இயக்கம் முள்ளிவாய்க்கால் மற்றும் வளையர்மடம் மருத்துவமனைகளுக்குள் இராணுவ நிலைகளை கொண்டிருந்தது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்பவில்லை.




*2009 பெப்ரவரி 12 ஆந் திகதி பிரகடனம் செய்யப்பட்ட பாதுகாப்பு வலயம்*

*(ஆதாரம்: பாதுகாப்பு அமைச்சு)*

## யுத்த சூன்ய வலயம் 3 இன் மீதான தாக்குதல்கள் மற்றும் ஆயுத மோதலின் இறுதி நாட்கள்

873. 2009 மே 8 ஆந் திகதி அரசாங்கம் மூன்றாவதும், இறுதியானதுமான யுத்த சூன்ய வலயத்தை அறிவித்தது. இலங்கை இராணுவத்தின் முன்னகர்வுகளையடுத்து அறிவிக்கப்பட்ட இந்த யுத்த சூன்ய வலயம் 3 இன்னமும் எல்ரீரீஈ கட்டுப்பாட்டில் இருந்து வந்த யுத்த சூன்ய வலயம் 2 இன் எஞ்சியிருந்த சிறிய மத்திய பாகத்தை உள்ளடக்கியிருந்ததுடன், அது இரண்டு சதுர கிலோ மீற்றருக்கும் குறைந்த ஒரு நிலப் பரப்பைக் கொண்டிருந்தது. வரைபடங்களையும் உள்ளடக்கிய விதத்தில் யுத்த சூன்ய வலயம் 3ஐ அறிவிக்கும் தொடர்பாடல்கள் சர்வதேச நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இலங்கை இராணுவத்தின் 53, 55, 58 மற்றும் 59 படைப் பிரிவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் இராணுவத் தளபதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.[927] துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டமைக்கூடாக யுத்த சூன்ய

---

926 WS on file

927 LLRC Report, paras.4.44 – 4.88.

வலயம் 3 உருவாக்கப்பட்ட விடயம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது.[928]

874. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த சின்னஞ் சிறிய நிலப்பரப்புக்குள் நெருக்கமாக இருந்து வந்தனர். பாரிய கடல்நீரேரியின் ஒரு பக்கத்தில் இலங்கை இராணுவம் இருந்து வந்ததுடன், மறுபக்கத்தில் எல்ரீரீஈ இயக்கம் இருந்தது. பொதுமக்கள் எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து சிறிது தூரத்திற்கு பின்னால் தங்கியிருந்தனர்.

875. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு 58 ஆவது படைப் பிரிவின் தளபதியான ஜெனரல் ஷவேந்திர சில்வா சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம்[929] பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: “இராணுவ செயற்பாட்டின் இறுதிக் கட்டங்களின் போது நாங்கள் கண்மூடித்தனமாக செயற்படவில்லை. அனைத்து விடயங்களும் கண்காணிப்பு விமானப் படங்களுக்கூடாக திட்டமிடப்பட்டதுடன், பொதுமக்கள் எங்கிருக்கின்றார்கள் மற்றும் எல்ரீரீஈ இயகத்தினர் எங்கு இருக்கின்றார்கள் என்பதனை நாங்கள் துல்லியமாக அறிந்திருந்தோம். எல்ரீரீஈ போராளிகளுக்கு மிக அருகில் பொதுமக்கள் இருந்து வருகின்றார்களா என்பது குறித்த ஒரு துளிக் குழப்பநிலையும் இருந்து வரும் சந்தர்ப்பங்களில் நாங்கள் வேறு வழிகளை பின்பற்ற வேண்டியிருந்ததுடன், இந்த இரு தரப்புக்களையும் பிரிப்பதற்கு எமக்கு கால அவகாசம் தேவையாக இருந்து வந்தது.” ஜெனரல் ஷவேந்திர சில்வா போர் முனையில் நின்று, இராணுவத்தின் களச் செயற்பாடுகளை நெறிப்படுத்தியவராவார்.

876. எவ்வாறிருப்பினும், தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களும் பேரழிவுகளும் இடம்பெற்று வந்ததாக சாட்சிகள் குறிப்பிட்டிருந்தனர். எல்ரீரீஈ இயக்கத்தின் ஆட்டிலரி தாக்குதல் மே 12 ஆந் திகதி வரையில் சாதாரண பொதுமக்கள் இருந்த இடங்களுக்கு அப்பால் முன்னரங்கத்தில் இருந்து வந்தது என ஒரு சாட்சி கூறினார். இலங்கை இராணுவத்திலிருந்து வந்த தாக்குதல் எல்ரீரீஈ இயக்கத்தின் முன்னரங்குகளை தாண்டிச் சென்றிருந்தாக மற்றொருவர் கூறினார். “அது பின்னாலிருந்த பொதுமக்கள் மீது பாதிப்பை எடுத்து வந்ததாகவும்,”[930] அனைவரும் மிகச் சிறிய ஒரு இடப்பரப்புக்குள் அடைப்பட்டுக் கிடந்ததாகவும், ஒரு ஷெல் விழுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்கள் காயப்பட்டதாகவும், கொல்லப்பட்டதாகவும் அவர் சொன்னார். ஒரு கிணற்றுக்கு அருகிலிருந்த மாமரத்தின் மீது ஒரு ஷெல் வீழ்ந்த பொழுது ஒன்பது பேர் கொல்லப்பட்டதை தான் பார்த்ததாக மற்றொரு சாட்சி கூறினார். ஒரு ஷெல் பதுங்கு குழியை தாக்கிய போது அதிலிருந்த பெண்மணி கொல்லப்படுவதை ஒருவர் பார்த்தார்… அவர் ஒரு தையல் மெஷினை வைத்திருந்ததுடன், பதுங்குக் குழிக்கு மணலை நிரப்புவதற்கென துணிப் பைகளை தைப்பதற்கு அதனை பயன்படுத்தி வந்தார்.“பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குடும்ப உறுப்பினர்கள் கொல்லப்பட்ட போது மக்கள் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றார்கள் - இறந்தவர்களுக்காக துக்கம் அனுஷ்டிப்பதற்கோ அல்லது அவர்களுடைய சடலங்களை புதைப்பதற்கோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை…” தனது பதுங்குக் குழிக்கு அருகில் சிறுவர்களையும் உள்ளிட்ட விதத்தில் 100 க்கும் மேற்பட்ட சடலங்களை பார்த்ததாக மற்றொரு சாட்சி விவரித்தார்.

877. அப்பிரதேசத்தில் இருந்து வந்த அனைத்து பொதுமக்களுக்கும் வெள்ளிமுள்ளிவாய்க்காலில் அமைந்திருந்த ஒரேயொரு சுகாதார நிலையமாக அது இருந்து வந்தது. இந்தப் பகுதி முள்ளிவாய்க்கால் கிழக்கு எனவும்

928 LLRCReport, para. 4.45.

929 இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் சமர்ப்பித்த சமர்ப்பணம், செப்டம்பர் 8, 2010

930 WS on file

-

அழைக்கப்பட்டது.[931] இந்தச் சுகாதார நிலையம் முன்னைய சிறு பாடசாலை கட்டடமொன்றில் அமைந்திருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கூடார கட்டமைப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதனைச் சூழ பொதுமக்கள் வசித்து வந்த பெருந்தொகையான கூடாரங்கள் காணப்பட்டன.[932]

878. மே 8 ஆந் திகதிக்கும் 12 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவில் யுத்த சூன்ய வலயம் 3 இலங்கை இராணுவத்தினால் தினசரி தீவிரமான குண்டுத் தாக்குதல்களையும், ஆட்டிலரி தாக்குதல்களையும் பல தடவைகள் எதிர்கொண்டது.[933] விமானப் படையும், கடற்படையும் இதில் இணைந்திருந்தன. இந்த நிலையில், இச்சுகாதார நிலையம் பல தடவைகள் ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டது. இரு தரப்புக்களும் சிறு ஆயுதங்களைக் கொண்டும் தாக்குதல்களை நடத்தியதுடன், சண்டை நடைபெறும் இடத்துக்கு அருகில் இருந்து வந்தமையினால் அது மேலும் ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்தது.

879. இலங்கை இராணுவத்தினால் ஏவப்பட்ட ஷெல்கள் மே 12 ஆந் திகதி காலை சுமார் 8 மணியளவில் சுகாதார நிலையத்தின் நோயாளர் அனுமதி வார்ட்டுக்கு எதிரில் விழுந்ததாகவும், அதன் போது மாவட்ட சுகாதார நிர்வாகி ஒருவர், மருத்துவத் தொண்டர்கள், ஒரு தாதி மற்றும் பல நோயாளிகள் ஆகியோரை உள்ளடக்கிய விதத்தில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டதாகவும் சாட்சிகள் தெரிவித்தனர்.[934]பலர் உடனடியாக கொல்லப்பட்டதுடன், ஏனையோர் தமது காயங்களையடுத்து உயிரிழந்தனர். மேலும், சிலர் மருத்துவ பராமரிப்பு மற்றும் மருந்துகள் இல்லாமை காரணமாக உயிரிழந்தனர்.

880. இந்த ஷெல் தாக்குதல் வேலைப் பளு மிகுந்த நேரத்தில் நிகழ்ந்ததுடன், முன்னைய தாக்குதல்களில் காயமடைந்திருந்த பொதுமக்கள் அப்பொழுது சிகிச்சைக்காக காத்திருந்தனர்.[935]ஒரு சாட்சி இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் இப்படிக் கூறினார்: ''பெருந்தொகையான சடலங்கள் இருந்து வந்தன. அவற்றை வேறுபடுத்த முடியவில்லை. எல்லா இடங்களிலும் உடல் பாகங்கள் சிதறிக் கிடக்கின்றன…..” [936]“அது படுபயங்கரமான ஒரு காட்சியாகும். மருத்துவமனைக்கு உள்ளே இறந்தவர்களையும், இறந்து கொண்டிருப்பவர்களையும் காண முடிந்தது” என மற்றொருவர் கூறினார்.[937] காயமடைந்திருந்த பெருந்தொகையான நோயாளிகள் இருந்து வந்ததுடன், மரணித்தவர்களின் சடலங்களும் அதே இடத்தில் கிடத்தப்பட்டிருந்தன. எல்லா இடங்களிலும் மக்கள் அழுது புலம்பிக் கொண்டிருந்ததாக மற்றொருவர் குறிப்பிட்டார். மருந்துப் பொருட்கள் அநேகமாக முடிந்து போயிருந்தன.[938]

881. அதே தினம் பின்னர், மருத்துவமனை ஊழியர்களும் தொண்டர்களும் தங்கவைக்கப்பட்டிருந்த கூடாரமொன்றின் மீது ஒரு ஷெல் வீழ்ந்ததுடன், அதில் தாதி உதவியாளர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஆறு பேர் கடுமையான தீக்

931 WS on file

932 WS on file

933 WS on file

934 இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பிலிருக்கும் ஆவணம் - உயிரிழந்த 20 பேரின் தனிப்பட்ட புகைப்படங்களையும் உள்ளடக்கிய விதத்தில்

935 சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் சிகிச்சைக்காக காத்திருந்த பெரும்பாலான பொதுமக்கள் தற்காலிக கூடாரங்கள் மீது மே 9 – 10 திகதிகளில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களின் போது காயப்பட்டதாக கூறப்படுகின்றது. இந்த தாக்குதல்களில் மேலும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

936 WS on file

937 WS on file

938 WS on file

காயங்களுக்குள்ளானார்கள்.[939] அச்சந்தர்ப்பத்தில் நோயாளிகள் அசாதாரணமான தீக் காயங்களுடன் எடுத்து வரப்பட்டதாக ஆகக் குறைந்தது இரு சாட்சிகள் தெரிவித்ததுடன், அந்நோயாளிகளின் பல்வேறு உடல் உறுப்புக்கள் “கரிபோல” கறுத்திருந்ததைப் பார்த்ததாக அவர்களில் ஒருவர் சொன்னார்.[940]

882. மே 13 ஆந் திகதி அளவில் சூழவுள்ள எல்லா இடங்களிலும் ஷெல்கள் விழுந்து கொண்டிருந்ததுடன், சில நேரங்களில் மருத்துவமனை வளவுக்குள்ளும் அவை வந்து வீழ்ந்தன. அந்த நிலையில், வழங்கப்படக் கூடியதாக இருந்து வந்த ஒரேயொரு சிகிச்சை அடிப்படை முதலுதவி மற்றும் மருந்து வகைகள் என்பன மட்டுமே ஆகும்.[941] அச்சந்தர்ப்பத்தின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் - நோயாளிகளின் உயிர்களை பாதுகாப்பதற்கான சிகிச்சைக்கு அவர்களை எடுத்துச் செல்வதற்கு அச்சந்தர்ப்பத்தில் கிடைத்து வந்த ஒரேயொரு வாய்ப்பு - ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிச் சூடுகளும் தொடர்ந்து இடம்பெற்று வந்த பின்னணியில் கரையை அணுக முடியாத நிலையில் இருந்து வந்தது.[942] அதன் காரணமாக உடனடியாக தேவைப்பட்ட சிகிச்சைகளை வழங்க முடியாதிருந்தது: “காயப்பட்டவர்களில் பிள்ளைகளும், வயோதிபர்களும் இருந்து வந்தார்கள். அவர்களுடைய உயிருக்கு அச்சந்தர்ப்பத்தில் ஆபத்து நிலவி வந்தது. அவர்களை வேறு இடத்துக்கு எடுத்துச் செல்வதே பொருத்தமான மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரேயொரு வழியாக அப்போது இருந்து வந்தது. முடியுமான விரைவில் அவர்களை அந்த இடத்திலிருந்து அகற்ற வேண்டியிருந்தது.” மே 14 ஆந் திகதி அளவில் மிக அருகில் உக்கிரமான விதத்தில் ஷெல் தாக்குதல்கள் நிகழத்தொடங்கியதனையடுத்து, எஞ்சியிருந்த தற்காலிக மருத்துவமனையும் தனது செயற்பாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.[943]

883. மருத்துவத் துறை ஆளணியினர் ஒரு வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு ஒரு சில நோயாளிகளை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதனை பார்க்க முடிந்தது. அதன் பின்னர் நடக்கக் கூடிய நிலையில் இருந்து வந்த நோயாளிகளுடன் அவர்கள் வட்டுவாகல் பாலத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.[944]சுமார் 150 நோயாளர்களை பொறுத்தவரையில் அவர்களுடைய காயங்கள் மிக மோசமாக இருந்து வந்தமையால் அவர்களை எடுத்துச் செல்ல முடியாதிருந்தது. கப்பலின் மூலமும் அவர்களை அந்த இடத்திலிருந்த அகற்ற முடியாத காரணத்தினால் அவர்கள் அங்கு விட்டுச் செல்லப்பட்டார்கள்.[945]

884. மே நடுப்பகுதி போரின் இறுதி நாட்களின் போது, எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களும், அதேபோல தமது ஆயுதங்களைக் கைவிட்டு, இப்பொழுது போர் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருப்பவர்கள் என்ற வகைப்பாட்டுக்குள் வந்திருந்த எல்ரீரீஈ போராளிகளும், எஞ்சியிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பாலத்தைக் கடந்து நடந்து வந்து, அரசாங்கத் துருப்புக்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தார்கள்.

885. யுத்த சூன்ய வலயங்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் காரணமாக கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களின் சடலங்கள் எல்லா இடங்களிலும் சிதறுண்டு கிடப்பதுடன் இணைந்த விதத்திலான பேரழிவுக் காட்சிகளை பல சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தார்கள்.[946] தாம் தஞ்சம்

939 WS on file

940 WS on file

941 WS on file

942 ICRC News Release 09/97, Fighting hinders further ICRC evacuations of severely wounded people.

943 WS on file

944 WS on file

945 WS on file

946 WS on file

-

புகுந்திருந்த பதுங்கு குழிகளுக்குள் குண்டுகள் வீழ்ந்த சந்தர்ப்பங்களில் ஒட்டுமொத்த குடும்பங்களும் கொல்லப்பட்டிருந்தன. ஷெல் தாக்குதல் காரணமாக தாம் மேலும் இடம்பெயர நேரிட்டமையால் மரணித்திருந்த தமது குடும்ப உறுப்பினர்களை விட்டு விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதென சாட்சிகள் தெரிவித்தார்கள். ஷெல் தாக்குதல் மற்றும் தாங்கள் நேரில் பார்த்த பேரழிவு என்பவற்றின் தமது அனுபவங்கள் மற்றும் நினைவுகள் காரணமாக பெருந்தொகையான சாட்சிகள் கடும் மன அதிர்ச்சியிக்குள்ளாகியிருந்தார்கள்.

886. சிவிலியன்கள் இறுதியில் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி நகரத் தொடங்கிய பொழுது, அவர்கள் மிக மோசமான விதத்தில் உடல் களைப்படைந்தவர்களாக இருந்து வந்தார்கள் என்பதனை சாட்சிகள் குறிப்பிட்டார்கள். நோயாளிகளையும் உள்ளிட்ட விதத்தில் மக்கள் பட்டினியில் வாடியதுடன், சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்தனர். வயோதிபர்கள் பெருமளவுக்கு பலவீனமான நிலையில் இருந்து வந்தார்கள்.[947]

887. மோதல் முடிவடைந்த பின்னர் மோதல் வலயத்தில் புதைக்கப்பட்டிருந்த சடலங்களை தோண்டியெடுத்து, எரிப்பதனையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கை இராணுவம் ஆதாரங்களை அழித்திருக்க முடியுமென்ற பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவலை கொண்டுள்ளது. மருத்துவமனைகளில் உயிர்நித்தவர்கள் தவிர, தாம் அவசர அவசரமாக அந்த இடத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு முன்னர், குடும்ப உறுப்பினர்களை புதைத்த சம்பவங்களை அல்லது ஷெல் தாக்குதல்களில் மரணித்த நபர்களை மற்றவர்கள் புதைப்பதை தாம் பார்த்த சம்பவங்களை பல சாட்சிகள் தெரிவித்தார்கள். போர் ஆரம்பித்த காலம் தொடக்கம் சடலங்களை தோண்டியெடுக்கும் சம்பவங்கள் முறையான விதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. புதைக்கப்பட்ட சடலங்களை தோண்டியெடுத்து, புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கு விரிவான தடயவியல் மற்றும் மானிடவியல் நிபுணத்துவம் தேவைப்படும்.




947 WS on file

*மே 8,2009 இல் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயம் (ஆதாரம்: பாதுகாப்பு அமைச்சு)*




*மே 13,2009 இல் உள்ளவாறு நிலைமை (ஆதாரம்: பாதுகாப்பு அமைச்சு)*

# XIV. நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள்

## அறிமுகம்

888. இந்தப் புலன் விசாரணை கவனத்திலெடுக்கும் காலப் பிரிவிற்கு நீண்ட காலத்திற்கு முன்னரேயே எல்ரீரீஈ இயக்கத்தினால் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. குறிப்பாக, எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு அனுமதி வழங்கும் பாஸ் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டு வந்தது. இந்த பாஸ் வழங்கும் நடைமுறை பல்வேறு மட்டங்களிலான தீவிரத் தன்மையுடன் அமுல் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இந்தக் கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக இருந்து வந்ததுடன், அவசர மருத்துவ சேவைகள் தவிர, வேறு எந்த காரணங்களுக்காகவும் பாஸ் வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டது.

889. இந்தப் பிரிவு எல்ரீரீஈ இயக்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த பிரதேசங்களில் பொதுமக்களின் நடமாட்டம் தொடர்பாக அதிகரித்தளவில் விதித்து வந்த, பலவந்தத்துடன் கூடிய கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்கின்றது. பொதுமக்கள் வெளியேறிச் செல்வதனை அவர்கள் தடுத்த விதம், அது தொடர்பான துஷ்பிரயோகங்கள், குற்றச் செயல்கள் என்பன இப்பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், இத்தகைய செயற்பாடுகள் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதற்கு இணையாக இருந்து வருகின்றதா என்ற விடயத்தையும் இப்பிரிவு கவனத்தில் எடுக்கின்றது. நடமாட்டம் தொடர்பான இத்தகைய கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் என்பன, பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவ தளபாடங்களின் அமைவிடம் என்பன தொடர்பான முன்னைய பிரிவுடன் சேர்த்துக் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

890. சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ஒவ்வொரு நபருக்கும் ஒரு பிரதேசத்தில் சட்டபூர்வமாக பிரசன்னமாகியிருக்கும் உரிமையையும், நடமாட்ட சுதந்திரத்தையும், தனது வசிப்பிடத்தை தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துகின்றது.[948] இந்த உரிமை, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கநெறிகள் அல்லது ஏனையவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கு தேவைப்படும் நிலையில், சட்ட ஏற்பாடுகளின் மூலம் வரையறைகளுக்கு உட்படுத்தப்பட முடியும். நடமாட்ட சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் எவையேனும் வழிமுறைகள், தேவை தொடர்பான கோட்பாடு மற்றும் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் ஏனைய மனித உரிமைகளுடன் இணங்கியொழுகுவதற்கான தேவை என்பவற்றினாலேயே நிர்வகிக்கப்படுகின்றன.[949] மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகாத எவையேனும் வரையறைகள், நடமாட்டச் சுதந்திரத்திற்கான உரிமையின் மீது மேற்கொள்ளப்படும் தன்னிச்சையான ஒரு தலையீடாகவே கருதப்படும்.

891. ஒரு ஆயுத மோதல் நிலைமையில், அந்த மோதல்களுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர், பொதுமக்களின் பாதுகாப்பு அவசியப்படுத்தும் அளவுக்கு அல்லது இராணுவ காரணங்கள் அவசியப்படுத்தும் அளவுக்கு தனிப்பட்ட பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு குடித்தொகையினரை ஒரு இடத்திலிருந்து வெளியேற்ற அல்லது வேறு இடத்திற்கு நகர்த்த முடியும்.

892. தனிநபர்களின் அல்லது குழுக்களின் நடமாட்டம் மீதான தன்னிச்சையான வரையறைகளை விதித்தல் போதியளவிலான வீடமைப்புக்கான உரிமை (உணவு, தண்ணீர், பொதுச் சுகாதாரம் என்பவற்றை உள்ளடக்கிய), போதியளவிலான வாழ்க்கைத் தரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, சித்திரவதை அல்லது குரூரமான விதத்தில் நடத்துதல் என்பவற்றை தடை செய்தல், ஆட்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான உரிமை மற்றும் ஒரு சில சந்தர்ப்பங்களில் வாழ்வதற்கான உரிமை[950] போன்ற தொடரான பல மனித உரிமைகளை முறைகேடான விதத்தில் மீறுபவையாக இருந்து வர முடியும்.

893. இக்காரணத்தினால் கடமைகளை கொண்டிருப்பவர்கள், தனிநபர்களை அல்லது குழுக்களை பலவந்தமாக இடம்பெயரச் செய்தல் அல்லது அவர்களுடைய நடமாட்டத்தை தன்னிச்சையான விதத்தில் கட்டுப்படுத்துதல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வது மட்டுமன்றி, பலவந்தமாக இடப்பெயரச் செய்யப்பட்டவர்கள் அல்லது ஆயுத மோதல் அல்லது இயற்கை அனர்த்தங்கள் என்பவற்றின் காரணமாக நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நபர்கள் ஆகியோரின் நிலைமைகளை விருத்தி செய்யும் நோக்கிலான வழிமுறைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

894. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் எல்ரீரீஈ இயக்கத்தின் பாஸ் நடைமுறை காரணமாக நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள்.

---

948 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் உறுப்புரை 12 “நடமாட்டத்திற்கான சுதந்திரம் ஒரு நபரின் சுதந்திரமான அபிவிருத்திக்குத் தேவையான இன்றியமையாத ஒரு நிபந்தனையாகும். அது சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய பல உரிமைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. அரச தரப்புக்களின் அறிக்கைகள் மற்றும் தனிநபர்களின் தொடர்பாடல்கள் என்பவற்றை கவனத்தில் எடுக்கும் கமிட்டி நடைமுறைகளில் இது காட்டப்படுகின்றது.” நடமாட்ட சுதந்திரத்திற்கான பொதுக் குறிப்பு இல. 27 (உறுப்புரை 12),), CCPR/C/21/Rev.1/Add.9, 1999,பந்தி. 1

949 Ibid, para. 2.

950 பொதுவாக பார்க்கவும்: A. F. Bayefsky and J. Fitzpatrick (eds.), Human Rights and Forced Displacement, Brill/Nijhoff, 2001; G.S. Goodwin-Gill and J. McAdam, The Refugee in International Law, 3rd edn, Oxford University Press, Oxford, 2007.

895. எல்ரீரீஈ இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மான் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள் பிரவேசித்தல் மற்றும் அவற்றிலிருந்து வெளியேறுதல் என்பவற்றை வரையறுக்கும் பொருட்டு 1990 களின் தொடக்கத்தில் ஒரு பாஸ்நடைமுறையை உருவாக்கினார். 2002 ஆம் ஆண்டுக்கும் 2006 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் அமுல் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து, எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரசேதங்கள் மற்றும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்கள் என்பவற்றுக்கிடையிலான நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் குறைக்கப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் எல்ரீரீஈ இயக்கம் 10 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஒரு போக்குவரத்து அனுமதி அட்டையை[951] வழங்கியதுடன், தனிநபர்களும், குடும்பங்களும் சார்பு ரீதியில் மிக எளிதாக எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களை விட்டு வெளியேறவும், அவற்றுக்குள் பிரவேசிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது.

896. எவ்வாறிருப்பினும், அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வந்த பிரதேசங்கள் மற்றும் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்கள் என்பவற்றுக்கிடையில் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகளை எல்ரீரீஈ இயக்கம் தளர்த்தியமை, கட்டுப்பாடுகள் முழுவதுமாக இல்லாத விதத்தில் மேற்கொள்ளப்படவில்லை. இரு தரப்பினரும், பிரவேச மற்றும் வெளியேற்ற சோதனைச் சாவடிகளை தொடர்ந்தும் பராமரித்து வந்ததுடன். அதன் விளைவாக, விசாரணைகள், வாகனங்களை சோதனையிடுதல் என்பனவும், ஒரு சில சந்தர்ப்பங்களில், குறிப்பாக இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துன்புறுத்தலாக கருதப்படக் கூடிய சம்பவங்களும் அறிவிக்கப்பட்டிருந்தன.

897. 2006 ஆம் ஆண்டில் போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்ததனையடுத்து எல்ரீரீஈ இயக்கம் தனிநபர் பிரவேச மற்றும் வெளியேற்ற பாஸ்களை வழங்கும் நடைமுறையை மீண்டும் அறிமுகம் செய்து வைத்தது.[952] முன்னைய வருடங்களை போலவே, எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களிலிருந்து வெளியேறி, அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்ய விரும்பியவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் எழுத்து மூலமான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அவர்களுக்கு வழங்கப்படும் பயண பாஸ் பத்திரம், சம்பந்தப்பட்ட நபர் எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியே எவ்வளவு காலம் இருந்து வர முடியும் என்ற கால அளவையும் குறிப்பிட்டிருந்தது.[953]

898. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் வாழ்ந்து வந்தவர்கள் கேட்டவுடனேயே பயண அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை கொண்டிருக்கவில்லை. தனியொரு பயணத்திற்கு மட்டுமே ஒரு பாஸ் வழங்கப்பட்டதுடன், ஒரு பாஸை பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள் யார் என்பது தொடர்பாகவும் வரையறைகள் நிலவி வந்தன. ஒரு பயண பாஸை பெற்றுக் கொள்வதற்கான முன் நிபந்தனைகளில் ஒன்று, அவ்விதம் பிரயாணம் செய்பவர் திரும்பி வருவதனை உத்தரவாதப்படுத்தும் குடும்ப உறுப்பினர் ஒருவரை பிணைக்காரராக நியமனம் செய்வதாகும். இத்தேவை மிகவும் இறுக்கமான விதத்தில் எல்ரீரீஈ இயக்கத்தினால் பின்பற்றப்பட்டு வந்தது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் தேசிய ஊழியர்களுக்கு பாஸ்களை வழங்கும் பொழுதும் இது கடைப்பிடிக்கப்பட்டது.[954]

951 Trapped and Mistreated, LTTE Abuses Against Civilians in the Vanni, Human Rights Watch, December 2008.

952 WS on file

953 WS on file

954 S.S v The Netherlands, Communication No. 191/2001, U.N. Doc. CAT/C/30/D/191/2001 (2003), case examined by CAT Committee where in 1996 the complainant wanted to travel to Trincomaleeto

-

899. ஒரு பாஸ் வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் வெளியில் சென்ற நபர் வன்னிக்குத் திரும்பி வராத சந்தர்ப்பத்தில், பிணையாளராக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் குடும்ப உறுப்பினர் எல்ரீரீஈ இயக்கத்தின் தண்டனையை எதிர்கொள்ளும் ஆபத்தைக் கொண்டிருந்தார்.

900. இந்த பாஸ் நடைமுறை சிவிலியன் குடித்தொகையினரின் மீது எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டினை மிகவும் வலுவான விதத்தில் இறுக்கமாக்கியதுடன், வன்னியிலிருந்து வெளியே சென்றவர்கள் மீண்டும் திரும்பி வருவதனையும் இது உறுதிப்படுத்தியது. உதாரணமாக, மக்கள் நீண்ட காலத்திற்கு வன்னியிலிருந்து வெளியில் போய் தங்கியிருந்தால், எல்ரீரீஈ இயக்கத்தின் நடவடிக்கைகள்[955] தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துமாறு அரசாங்கம் அவர்களை நிர்ப்பந்திக்கும் அபாயத்தை அதிகரித்தளவில் எதிர்கொள்வார்கள் என்ற விதத்தில் ஒரு நம்பிக்கை நிலவி வந்தது. தாம் எந்த மக்களுக்காக போராடி வருவதாகக் கூறி வருகின்றார்களோ அந்த மக்கள் வன்னியிலிருந்து வெளியேறிச் சென்றால் தமது போராட்டத்தின் நம்பகத்தன்மை அல்லது சட்டபூர்வத்தன்மை இல்லாமல் போய்விடும் என எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்கள் அடிக்கடி கூறி வந்ததாக பல சாட்சிகள் தெரிவித்தார்கள்.[956] ஒவ்வொரு தமிழரும் எல்ரீரீஈ இயக்கத்தின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதற்கான தார்மீக கடப்பாட்டினை கொண்டிருக்கிறார் என்றும், அதன் காரணமாக அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் செல்ல முடியாதென்றும் எல்ரீரீஈ இயக்கம் கூறி வந்தது. [957]

901. எல்ரீரீஈ இயக்கம் அமுல் செய்த பாஸ் நடைமுறை, இராணுவ நோக்கங்களுக்காக அல்லது கட்டாய ஊழியத்துக்காக சிவிலியன்களை பலவந்தமான விதத்தில் ஆட்சேர்ப்பதனையும் உள்ளடக்கிய அவர்களுடைய ஆட்சேர்ப்பு கொள்கையுடன் மிகவும் நெருக்கமான விதத்தில் பின்னிப்பிணைந்திருந்தது. எல்ரீரீஈ இயக்கத்திற்கான இராணுவ அமைப்புக்களை (பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மண் அணைகள் மற்றும் பதுங்கு குழிகள்) என்பவற்றை நிர்மாணிப்பதற்கும் இவ்விதம் பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.[958] பயணப் பாஸ் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் பொழுது, எல்ரீரீஈ அரசியல் பிரிவினால் வழங்கப்பட்டிருக்கும் சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன், குடும்ப உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றார் என்ற விடயம் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.[959] எல்ரீரீஈ இயக்கத்திற்கு உறுப்பினர் எவரையும் வழங்கியிராத குடும்பங்களுக்கு பயண அனுமதிப் பத்திரங்கள் மறுக்கப்பட்டன.[960]

902. எல்ரீரீஈ இயக்கத்திற்கு பாரிய அளவிலான ஆட்பலம் தேவைப்பட்ட காரணத்தினால், முனைப்பான விதத்தில் இராணுவப் பணியில்ஈடுபடுவதற்குத் தகுதியானவர்கள் எனக் கருதப்பட்ட இளைஞர் யுவதிகள் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு அனுமதிக்கப்படாத ஒரு அபாய நிலையை எதிர்கொண்டிருந்தனர். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு இளம் பெண் இவ்விதம் 2006 ஆம் ஆண்டில்

pay tribute to his deceased mother but was refused a travel pass by the LTTE because he did not have anyone to vouch for him.

955 WS on file

956 WS on file

957 WS on file

958 WS on file

959 WS on file

960 WS on file

அப்பிரதேசத்திலிருந்துவெளியேறுவதிலிருந்தும் தடுக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார். [961]

903. ஒரு தகவல் மூலாதாரத்தின் பிரகாரம், எல்ரீரீஈ இயக்கத்திற்கு காணி அல்லது ஏனைய பண வடிவிலான உதவி, பொருள் வடிவிலான உதவி என்பனவற்றை வழங்கிய குடும்பங்களுக்கு குடும்ப உறுப்பினர் ஒருவரை "சுய விருப்பின் அடிப்படையில்" இயக்கத்திற்கு வழங்க வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. பொதுவாக, அத்தகைய குடும்பங்களுக்கு எல்ரீரீஈ பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.[962] மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் (Human Rights Watch)அறிக்கையின் பிரகாரம், அந்தப் பிரதேசத்திலிருந்து நிரந்தரமாக வெளியேறிச் செல்ல விரும்பிய குடும்பங்கள் தமது காணியையும் உள்ளடக்கிய அனைத்துச் சொத்துக்களையும் எல்ரீரீஈ இயக்கத்திடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது.[963]

904. மோதல் 2008 இல் தீவிரமானதையடுத்து, இந்த அனுமதிப் பத்திர முறை மேலும் இறக்கமடைந்ததுடன், இறுதிக் கட்டத்தில், வன்னியில் பெற்றுக் கொள்ள முடியாத மருத்துவச் சிகிச்சையை வெளியில் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருந்து வருவதாக மருத்துவரொருவர் வழங்கியிருக்கும் சான்றிதழ் அடிப்படையில் அவசர மருத்துவ சிகிச்சைக்கு மட்டும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. நம்பகமான ஒரு மூலாதாரத்தின் பிரகாரம், எல்ரீரீஈ இயக்கம் மருத்துவ உதவிக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் நடைமுறை தொடர்பாகவும் ஒரு கட்டுப்பாட்டை பிரயோகித்திருந்தது.[964] எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேங்களுக்கு வெளியில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமென மருத்துவர்கள் குறிப்பிட்டிருந்த நபர்கள், அவ்விதம் மருத்துவச் சிகிச்சைக்குச் செல்லும் பொழுது, அந்நபர்களில் உண்மைத் தன்மை மற்றும் தனிப்பட்ட விபரங்கள் என்பவற்றை கண்காணிக்கும் பொறுப்பு எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களிடம் விடப்பட்டிருந்தது.

905. எனவே, 2008 ஆம் ஆண்டின் முடிவின் போது,வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்த நிலையில், வன்னிப் பிரதேசத்தில் வசித்து வந்த பொதுமக்கள் ஏற்கனவே தமது நடமாட்டம் தொடர்பான கடுமையான கட்டுப்பாடுகளையும், வரையறைகளையும் எதிர்கொண்டிருந்தார்கள். தாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் தங்கியிருப்பதைத் தவிர, அவர்களுக்கு வேறு மாற்று வழி எதுவும் இருந்து வரவில்லை.

### நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பலவந்தமான வழிமுறைகளின் அறிமுகம் - 2009

906. 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மோதல் தீவிரமடைந்த நிலையில், எல்ரீரீஈ இயக்கம் படிப்படியாக அதன் பிடியை இழந்து கொண்டிருந்தது. இப்பின்னணியில் முன்னகர்ந்து செல்லும் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து வெளியேறுவதற்கு மக்கள் துணிச்சலுடன் முன்வந்தார்கள். அப்பொழுது மக்களை வெளியேறுவதிலிருந்து தடுப்பதற்கென எல்ரீரீஈஇயக்கம் அதிகரித்த அளவிலான பலவந்த வழிமுறைகளை பயன்படுத்தியது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கும் பெருந்தொகையான வாக்குமூலங்கள், 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அநேகமாக ஜனவரிமாதத்தில், பொதுமக்கள் தமது இடங்களிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சித்தால், அவர்களை தடுத்து

961 WS on file

962 WS on file

963 Trapped and Mistreated, LTTE Abuses Against Civilians in the Vanni, Human Rights Watch, December 2008.

964 WS on file

நிறுத்துவது என எல்ரீரீஈ இயக்கம் ஒரு முடிவை எடுத்திருந்தது என்ற விடயத்தை தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தன.[965]இக்கொள்கையை அமுல்படுத்துமாறு எல்ரீரீஈ யின் இராணுவப் பிரிவுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.[966] தப்பிச் சென்றவர்கள் மீண்டும் திரும்பி வருவதற்கு மறுத்தால், அவர்களை அதே இடத்தில் சுடுமாறு எல்ரீரீஈ போராளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததாகவும், அவர்கள் அதற்குமேலும் திரும்பி வருவதற்கு மறுத்தால், தளபதிகளிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கூறப்பட்டிருந்ததாகவும் ஒரு சில மூலாதாரங்கள் தெரிவித்தன. [967]

907. தப்பிச் செல்வதற்கு முயற்சித்தவர்களை நேரடியாக சுடுமாறு இயக்கத்தின் மூத்த தலைவர்கள் அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தார்களா என்ற விடயம் குறித்து முரண்பட்ட தகவல்கள் இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவுக்கு கிடைத்துள்ளன. மக்கள் வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்தால் அவர்களை சுடுமாறு ஒரு மூத்த தலைவர் இராணுவ போராளிகளுக்கு கட்டளைகளை வழங்குவதனை தான் செவிமடுத்ததாக குறைந்தது ஒரு நபர் குறிப்பிட்டார். மறுபுறத்தில், அத்தகைய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்ற பொழுது, அவற்றுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் தலைவர்களால் தண்டிக்கப்பட்டதாக மற்றொருவர் கூறினார். ஆனால், இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவினால் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.[968] எனவே, கீழே அறிக்கையிடப்பட்டிருக்கும் கொலைகள், ஒரு உத்தியோகபூர்வ கொள்கையின் ஒரு பாகமாக இருந்து வந்துள்ளனவா அல்லது தனிப்பட்ட போராளிகளின் செயல்களாக இருந்து வந்துள்ளனவா என்பது குறித்து இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

908. அவர்களை பாதுகாப்பதற்கென சர்வதேச சமூகம் தலையிட இருப்பதனால் பொதுமக்கள் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறிச் செல்ல முடியாது என எல்ரீரீஈ இயக்கம் கூறியதாக சாட்சிகள் தெரிவித்தனர். பொதுமக்கள் அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படாததற்கான காரணம், இலங்கை இராணுவம் முன்னகர்வின் போது உயரளவில் இடம்பெறக்கூடிய பொதுமக்களின் உயிரிழப்புக்கள் சர்வதேச சமூகத்தின் தலையீட்டுக்கு தூண்டுதல் அளிக்க முடியும் என ஒரு சில எல்ரீரீஈ தலைவர்கள் நம்பியிருந்ததாகப் பலர் கருத்து தெரிவித்திருந்தார்கள்.[969]

909. தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசங்களிலிருந்து மக்கள் வெளியேறிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு எல்ரீரீஈ இயக்கம் பௌதீக வழிமுறைகளை செயற்படுத்தியது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சோதனைச் சாவடிகள் மற்றும் காவலரண்கள் என்பவற்றை நிறுவுவதனையும் இது உள்ளடக்கியிருந்தது. இத்தகைய நிலைகளும், எல்ரீரீஈ இயக்கத்தின் நடமாடும் ரோந்து அலகுகளும், அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி மக்கள் நகர்ந்து செல்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளை தடுத்து நிறுத்தும் செயல்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

910. மோதல் இடம்பெற்று வரும் பிரதேசங்களை விட்டு தாம் வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்த பொழுது எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்கள் எவ்வாறு தம்மை வழி மறித்தார்கள் என்பதனையும், திரும்பிச் செல்வதற்கு தம்மை எவ்வாறு நிர்ப்பந்தித்தார்கள் என்பதனையும் சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தனர். ஒரு சிலர் அச்சுறுத்தப்பட்டு, மிரட்டப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஒரு சில சந்தர்ப்பங்களில் ஆட்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. அத்தகைய

[965] WS on file

[966] WS on file

[967] WS on file

[968] WS on file

[969] WS on file

தாக்குதல்களையடுத்து, ஒரு சிலர் எல்ரீரீஈ யின் முன்னரங்க நிலைகளில் குழிகளை வெட்டுவது போன்ற இராணுவ வேலைகளில் பங்கேற்பதற்கென பலவந்தமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர்.[970] பழிவாங்குதல்கள் குறித்த அச்சம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதிகமானவர்கள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறிச் செல்வதனை தடுப்பதற்கு போதுமானதாக இருந்து வந்தது. [971]

911. முல்லைத்தீவு மாவட்டத்தில் விஸ்வமடுவில் அமைந்திருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் பதிவு செய்யும் ஒரு இடத்தில் 2009 பெப்ரவரி 9 ஆந் திகதி, பெண் தற்கொலை குண்டுதாரி ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தார். இத்தாக்குதல்களில் பல இராணுவ வீரர்களும், ஒரு பிள்ளையையும் உள்ளடக்கிய விதத்தில் எட்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். அச்சந்தர்ப்பத்தில் இலங்கையிலிருந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் இது தொடர்பாக, “குறிப்பாக, சண்டை நடக்கும் இடத்திலிருந்து தப்பிச் சென்று கொண்டிருந்த மக்களை - குறிப்பாக அப்பாவி பொதுமக்களை - கொலை செய்து, அவர்களுடைய உயிருக்கு ஆபத்து விளைவித்த இந்தத் தாக்குதலை ஐ நா அமைப்பு கண்டிக்கின்றது” என குறிப்பிட்டிருந்தார்.

912. பொதுமக்கள் அனைவரும் “பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பதாக” அல்லது ‘‘மனிதக் கேடயமாக’’ பயன்படுத்தப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அம்மக்களை விடுவிப்பதே அதன் குறிக்கோள் எனவும் அது குறிப்பிட்டிருந்தது. எல்ரீரீஈ இயக்கம் வெற்றிகரமான விதத்தில் இலங்கை இராணுவத்தை எதிர்கொள்ளும் எனவும், ஒரு போர் நிறுத்தம் அறிவிக்கப்படும் அல்லது சர்வதேச சமூகம் தலையிடும் என தான் நம்பியதாகவும், அதனால் எல்ரீரீஈ இயக்கத்துடன் சேர்ந்து தாமும் நகர்ந்து சென்றதாகவும் ஒரு சில சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர். தமிழ் மக்கள் சார்பில் போராடிக் கொண்டிருக்கும் ஒரு இயக்கமாக எல்ரீரீஈ இயக்கம் இருந்து வருவதால் தாம் நம்பியதால், அவர்களை பின்தொடர்ந்து செல்ல வேண்டிய ஒரு தார்மீக உணர்வு தமக்கு இருந்ததாக ஒரு சிலர் குறிப்பிட்டார்கள்.

913. முன்னரங்க நிலைகளை தாண்டிச் செல்வதற்கு முயற்சிக்கும் பொழுது, இரு தரப்புக்களுக்மிடையில் நிகழும் சண்டையில் இடையில் அகப்பட்டுக் கொள்ள முடியும் என்ற அச்சம் காரணமாக தாம் எல்ரீரீஈ பிரதேசங்களில் தொடர்ந்து இருந்து வந்ததாக பெருந்தொகையான சாட்சிகள் கூறினார்கள். “எல்ரீரீஈ இயக்கம் மக்கள் வன்னியிலிருந்து வெளியேறிச் செல்வதனை தடுத்திருந்தமை மற்றும் போரிட்டு வரும் தரப்புக்களுக்கு மத்தியில் முன்னரங்க நிலைகளை தாண்டிச் செல்வதற்கு முயற்சிப்பதன் அபாயங்கள் என்பன காரணமாக (பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கண்ணிவெடிகள் காரணமாகவும்) நாங்கள் கையாலாகாதவர்களாக ஒரு பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டிருந்தோம்” என ஒரு சாட்சி குறிப்பிட்டார்.[972]எல்ரீரீஈ இயக்கத்தில் தமது குடும்ப உறுப்பினர் ஒருவர் அல்லது உறவினர் ஒருவர் - பலவந்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களையும் உள்ளடக்கிய விதத்திலிருந்துவந்த காரணத்தினால், தம்மால் அங்கிருந்து செல்ல முடியாதிருந்ததென வேறு சிலர் குறிப்பிட்டார்கள். மற்றும் பலர் வயது முதிர்ந்த நோயாளிகளான அல்லது காயமடைந்திருந்த உறவினர்களை கொண்டிருந்தார்கள். அவர்களை விட்டுச் செல்ல முடியாத நிலையில் தொடர்ந்து வன்னியில் தங்கியிருப்பதற்கு அவர்கள் முடிவு செய்திருந்தார்கள்.

914. தாம் மறுபக்கத்திற்கு கடந்து சென்றால் இலங்கை இராணுவத்தின் துன்புறுத்தல் அல்லது துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட முடியும் என அச்சமடைந்திருந்ததாக பலர் கூறினார்கள்.[973] பாலியல் துன்புறுத்தல் மற்றும்

970 WS on file

971 WS on file

972 WS on file

973 WS on file

துஷ்பிரயோகம் குறித்த அச்சம், எல்ரீரீஈ இயக்கத்தின்ஆதரவாளா்களாக இருந்து வருவதாக பொய்யாகத் தம் மீது குற்றஞ் சாட்டப்படுதல் அல்லது கருதப்படுதல் மற்றும் இலங்கை இராணுவத்தினால் “வெள்ளை வான்களில்” கடத்தப்படுதல் குறித்த அச்சம் போன்ற காரணங்களை பல சாட்சிகள் குறிப்பிட்டிருந்தாா்கள். வடிகட்டும் நடைமுறை மற்றும் அதனையடுத்து தமது சுதந்திரம் பறிக்கப்பட்டு, அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வைக்கப்பட முடியும் என்ற அச்சத்தை பலர் வெளியிட்டிருந்தாா்கள்.

915. எவ்வாறிருப்பினும், மக்கள் வன்னியிலிருந்து வெளியேறிச் செல்வதனை தடுக்கும் விதத்தில் இந்த அச்ச உணர்வுகளை எல்ரீரீஈ இயக்கம் பயன்படுத்திக் கொண்டதாக கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த இயக்கம் பொதுக் கூட்டங்களை நடத்தியதுடன், அக்கூட்டங்களில் இலங்கை இராணுவம் மேற்கொண்டு வரும் அட்டூழியங்கள் குறித்து எடுத்துக் கூறி, மக்களுக்கு அது எச்சரிக்கை விடுத்தது.[974] 2009 ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில், மக்கள் வன்னியிலிருந்து வெளியேறிச் செல்வதனை தடுப்பதனை நியாயப்படுத்துவதற்கான ஒரு காரணமாக எல்ரீரீஈ இயக்கத் தலைவர்கள், பெண்கள் வல்லுறவுக்குள்ளாக்கப்படலாம் என்ற அச்சத்தையும் பயன்படுத்தியதாக கூறப்படுகின்றது. [975]

916. வெளியேறிச் செல்ல முயற்சித்தால் எல்ரீரீஈ இயக்கத்தின் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்ற அச்ச உணர்வுகளை தாம் அனுபவித்ததாக சாட்சிகள் எடுத்துக் காட்டியிருப்பதுடன், இலங்கை இராணுவத்தின் தாக்குதல்கள் இடம்பெற்று வந்த ஒரு பிரதேசத்தில் தொடா்ந்து தங்கியிருப்பதற்கு இது அவர்களை நிர்ப்பந்தித்திருந்தது. தமது மனதில் எப்பொழுதும் ஒரு திகில் உணர்வு நிலவி வந்ததாவும் அவர்கள் கூறினாா்கள். தாம் ஒரு பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பதான உணர்வுடன் கூடிய மன அதிர்ச்சியொன்றை தொடா்ந்து அனுபவித்து வந்ததாக சாட்சிகள் இலங்கை தொடா்பான விசாரணைக் குழுவிடம் தெரிவித்தாா்கள்.[976]

917. இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்ட பெரும்பாலான சூட்டுச் சம்பவங்கள் ஆகாயத்தின் மீது அல்லது தரையின் மீது நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் சம்பந்தப்பட்டவையாகவே இருந்து வந்தன. ஆயுதம் தரித்த எல்ரீரீஈ இராணுவப் போராளிகள் தப்பிச் செல்வதற்கு முயற்சித்த பொதுமக்கள் மீது பல சந்தர்ப்பங்களில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்ததுடன், இதன் காரணமாக உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகவும், அறிவிக்கப்பட்டிருந்தது. இத்தகைய ஒரு சில சம்பவங்களில் துப்பாக்கி ரவைகள் காயங்களை ஏற்படுத்தியிருந்தன (கீழே பாா்க்கவும்). இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்ட பெரும்பாலான சம்பவங்கள் 2009 ஆம் ஆண்டு மாா்ச் மாதத்தில் இடம்பெற்றிருந்ததுடன், ஒரு சில சம்பவங்கள் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றிருந்தன.

918. உயரளவில் பொதுமக்களின் உயிரிழப்புக்களுடன் இணைந்த விதத்தில் தொடா்ச்சியாக ஷெல் தாக்குதல்களை எதிர்கொண்டு வந்த ஒரு பிரதேசத்தில் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டுமென ஆயிரக்கணக்கான பொதுமக்களை பலவந்தப்படுத்தும் ஒரு கொள்கை பின்பற்றப்பட்டுவந்த நிலைமைகளுக்கு மத்தியிலும், அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் என்பவற்றுக்கூடாக மக்கள் வெளியேறிச் செல்வதனை தடுப்பதற்கென எல்ரீரீஈ இயக்கம் மேற்கொண்டு வந்த முயற்சிகளுக்கு மத்தியிலும் பெருந்தொகையான மக்கள் அவ்விதம் தப்பிச் செல்வதற்கு முயற்சித்தாா்கள். மோதலின் இறுதி வாரங்களின் போது பெருந்தொகையான பொதுமக்களும், அதே போல விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு சில உறுப்பினர்களும் உக்கிரமான ஷெல் தாக்குதல்

974 WS on file

975 WS on file

976 WS on file

மற்றும் துப்பாக்கிப் பிரயோகம், பலவந்தமான ஆட்சேர்ப்பு, பல தடவைகள் இடம்பெற்ற இடப்பெயர்வு, உணவு, நீர் மற்றும் பொதுச் சுகாதார வசதிகளின் தட்டுப்பாடு போன்ற காரணங்களினால் வெளியேறிச் செல்லத் துணிந்திருந்தார்கள் என்பதனை பல சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. இருதரப்புக்குமிடையில் இடம்பெறும் சண்டையில் அகப்பட்டுக் கொள்வதற்கோ அல்லது எல்ரீரீஈ இயக்கத்தின் பழிவாங்குதல்களுக்கு முகம்கொடுப்பதற்கோ அவர்கள் தயாராக இருந்து வந்தார்கள்.

919. தம்மை எவரும் பார்க்க முடியாத இரவு நேரங்களில் மக்கள் தப்பிச் சென்றார்கள்.[977] ஆனால், அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் இலங்கை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினை எதிர்கொள்ளும் ஆபத்தினை கொண்டிருந்தார்கள். ஏனையவர்கள் தாம் அறிந்த உள்ளூர் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் தப்பிச் செல்லக் கூடியதாக இருந்தது.[978] உதாரணமாக, வெளியேறுவதற்கு முன்னர் அனுமதி மறுக்கப்பட்டிருந்த 50 குடும்பங்களைக் கொண்ட ஒரு குழு, இறுதியில் தாம் அறிந்திருந்த உள்ளூர் இயக்கத் தளபதியிடமிருந்து பெப்ரவரி 4 ஆந் திகதி அனுமதியைப் பெற்றுக் கொண்டது. இரு தரப்புக்களும் மேற்கொண்டு வந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கு மத்தியிலும், அவர்கள் ஒரு கம்பில் சுற்றிய வெள்ளைக் கொடியுடன் கடல்நீரேரியை கடந்து சென்றார்கள்.[979] அரசாங்கப் படைகள் ஏப்ரல் 20 ஆந் திகதி எல்ரீரீஈ இயக்கத்தின் முன்னரங்க நிலைகளை தகர்த்துக் கொண்டு முன்னேறிய பொழுது, சுமார் 100,000 பேர் அங்கிருந்து தப்பிச் சென்றார்கள்.

920. அறிக்கைகளின் பிரகாரம், மே 14 ஆந் திகதி, எல்ரீரீஈ தலைவர் பிரபாகரன் கட்டளைகளை வழங்கியிருந்ததுடன், அக்கட்டளைகள் பகிரங்கப்படுத்தப்பட்டன. அதில் பொதுமக்கள் சுதந்திரமாக வெளியேறிச் செல்ல முடியுமென்றும், எல்ரீரீஈ இயக்கம் அவர்களை தடுத்து நிறுத்த மாட்டாது என்றும் கூறப்பட்டிருந்தது.[980] அதனையடுத்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கிச் சென்றார்கள்.

### வன்னியிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சித்தவர்கள் எதிர்கொண்ட திட்டவட்டமான பழிவாங்கல் சம்பவங்கள்

921. பொதுமக்கள் வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்த சந்தர்ப்பங்களில் ஆட்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்படும் சத்தத்தை அல்லது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தத்தை தாம் கேட்டதாக பல மூலாதாரங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தன. திட்டவட்டமான ஒரு சில சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைக் குழுவுக்கு ஏனைய மூலாதாரங்களிலிருந்து தகவல்கள் கிடைத்தன. பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறப்படும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களும் இதில் அடங்கியிருந்தன. திட்டவட்டமாக குறிப்பிடப்படாத ஒரு திகதியில் நடு இரவில் சுமார் 40 அல்லது 50 ஆட்களுடன் சேர்ந்து நிவாரணப் பொருட்களை எடுத்து வரும் கப்பலொன்றுக்குள் ஏறுவதற்கு முயற்சித்த சம்பவத்தை ஒரு சாட்சி எடுத்து விளக்கியிருந்தார். ஆனால், எல்ரீரீஈ இயக்கம் நீர் பரப்பில் காவலரண்களை ஏற்படுத்தியிருந்ததுடன், அந்த இடத்தை தாண்டிச் செல்ல

977 பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொது மக்கள் இரவு நேரத்தில் தப்பிச் செல்வதற்கு முயற்சித்திருந்த போதிலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு பார்வையிட்ட துண்டுப் பிரசுரங்களில் அவர்கள் பகல் நேரத்திலேயே தப்பிச் செல்ல வேண்டுமென வலியுறுத்திக் கெட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

978 WS on file

979 WS on file

980 WS on file

முயன்றால், அவர்களை சுட்டு விடுவதாக மிரட்டினார்கள். இன்னொரு பாதையில் செல்வதற்கு அவர்கள் முயன்ற போதும், மீண்டும் எல்ரீரீஈ இயக்கத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். அவர்களுடைய சீருடைகள் காரணமாகவும்,பதின்ம வயது இளைஞர்கள் போன்ற அவர்களது தோற்றம் காரணமாகவும் அவர்கள் இயக்கத்திற்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் என்ற விடயத்தை தப்பிச் செல்ல முயன்றர்கள் இனங்கண்டு கொண்டார்கள். அந்த விளக்கத்தின் பிரகாரம், அந்தக் குழுவிலிருந்த ஒருவர் தம்மைப் போக விடுமாறு எல்ரீரீஈ இயக்க போராளிகளிடம் சத்தம் போட்டுக் கூறிய பொழுது, போராளிகளில் ஒருவர் மார்பில் சுட்டு அவரைக் கொன்றிருந்தார்.[981] அதன் பின்னர் இக்குழு, துப்பாக்கிகளை ஏந்தியிருந்த சிறிய பதின்ம வயது இளைஞர் குழுவொன்றினால் தடுக்கப்பட்டதாக கூறப்பட்டது. அந்த இளைஞர்கள் தாம் செய்ய வேண்டியிருக்கும் பணி குறித்து மனக்கலக்கத்தில் இருந்து வருவது தெளிவாக தெரிந்தது. இறுதியில், அவர்கள் அக்குழுவினர் நகர்ந்து செல்வதற்கு இடமளித்தனர்.

922. உடையார்கட்டில் பெப்ரவரி 4 ஆந் திகதி இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில், பிள்ளைகளையும் உள்ளடக்கிய நூற்றுக்கணக்கான பொதுமக்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி வயல்வெளி ஒன்றை தாண்டிச் செல்ல முற்பட்ட பொழுது, எல்ரீரீஈ இயக்கத்தின் ஆயுதம் தரித்த போராளிகள் குழுவொன்றினால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.[982] திரும்பிச் செல்ல வேண்டுமென அம்மக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்ட போதிலும், அவர்கள் தொடர்ந்து முன்னோக்கி நகர்ந்தார்கள். இயக்கப் போராளிகள் ஆகாயத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்ததாக கூறப்படுவதுடன், அதன் பின்னர் தரையை நோக்கி அவர்கள் சுட்டார்கள். அப்பொழுது துப்பாக்கி வேட்டுக்கள் அந்த மக்களை நோக்கிச் சென்றன. இந்த வேட்டுக்கள் காரணமாக பலர் தமது கால்களில் காயமடைந்ததாக கூறப்படுவதுடன், அதன் விளைவாக, ஒருவர் உயிரிழந்தார்.[983] மற்றொரு சம்பவத்தில் ஏப்ரல் மாதத்தில் இரு நபர்கள் தப்பிச் செல்வதற்கு முயற்சித்த பொழுது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போது அவர்களுடைய கால்கள் காயமடைந்தன. இந்தக் காயங்கள் நேரடி துப்பாக்கி வெட்டுக்களினால் அல்லது தாவிச் செல்லும் வேட்டுக்களினால் ஏற்பட்டவையா எனத் தெளிவாக தெரியவில்லை.[984]

923. மார்ச் மாதத்தில் அறிவிக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், 12 வயதுச் சிறுமியொருவர் சுடப்பட்டு, காயமடைந்த சம்பவத்தையும் உள்ளடக்குகின்றன. அச்சிறுமி தங்கையுடனும், தனது பெற்றோருடனும் இருந்ததுடன், அவர்கள் வெளியேறிச் செல்வதற்கு கடல்நீரேரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். எல்ரீரீஈ போராளிகள் அந்த இடத்திற்கு வந்து, அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார்கள். சிறுமியின் தொடையில் காயம் ஏற்பட்டதுடன், அதன் காரணமாக அக்குடும்பத்தினர் தண்ணீரில் விழ நேரிட்டது. எல்ரீரீஈ இயக்கத்தினரால் அவர்கள் கரைக்கு எடுத்து வரப்பட்டதுடன், அச்சிறுமி சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.[985] மக்கள் தப்பிச் செல்வதற்கு முயற்சித்தால் அவர்களை சுடுமாறு தமக்கு கட்டளை வழங்கப்பட்டிருப்பதாக போராளி ஒருவர் சாட்சியிடம் தெரிவித்தார்.

924. மார்ச் 20 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த ஒரு திகதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில், மக்கள் கூட்டம் வெளியேறிச் செல்வதனை தடுக்கும் பொருட்டு முன்னைய இரவில் எல்ரீரீஈ இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆகக் குறைந்தது ஒரு இளம் பிள்ளை கொல்லப்பட்டது. அதன் பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் கடற்கரையில்

---

981 WS on file

982 WS on file

983 WS on file

984 WS on file

985 WS on file

ஒன்றுகூடியிருந்தார்கள். தப்பிச் செல்வதற்கு முயன்ற ஏனையவர்களும் கொல்லப்பட்டார்கள் என சில அறிக்கைகள் காட்டுகின்றன. அங்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்த மக்கள், நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதற்கென வந்திருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலொன்றில் தம்மை எடுத்துச் செல்லுமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டனர். இச்சம்பவங்களின் பின்னர் மக்கள் கடும் அதிர்ச்சிக்கும், விரக்திக்கும் உள்ளாகியிருந்ததாக சாட்சிகள் கூறினார்கள். ஏனெனில், எல்ரீரீஈ இயக்கம் தம்மை இந்த விதத்தில் நடத்துமென அவர்கள் ஒரு போதும் எதிர்பார்த்திருக்கவில்லை.[986] பல நூறு எல்ரீரீஈ இயக்க போராளிகளினால் இறுதியில், அந்தக் கூட்டத்தினர் கலைத்து விடப்பட்டார்கள். எல்ரீரீஈ இயக்கத்தின் ஆட்சேர்ப்புப் பிரிவின் தலைவராக இருந்து வந்த புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர் எழிலன் கடற்கரையில் நடந்த சம்பவத்தில் சம்பந்தபட்ட விடுதலைப் புலிகளில் ஒருவர் எனக் கூறப்படுகின்றது.

925. மார்ச் மாதத்தில் அறிவிக்கப்பட்ட மற்றொரு சம்பவத்தில், சுமார் ஆயிரம் பேர் கடல்நீரேரிக்கூடாக தப்பிச் செல்வதற்கு முயற்சித்தார்கள். எவ்வாறிருப்பினும், நீர்ப்பரப்புக்கு அருகில் எல்ரீரீஈ இயக்கத்தினர் காவலரண்களை அமைத்திருந்தனர். தப்பிச் செல்ல முயற்சித்தவர்களில் ஒரு சிலர் கம்புகள் மற்றும் பிவிசி குழாய்கள் என்பவற்றால் தாக்கப்பட்டார்கள். ஆண்கள் பங்கர்களை அமைப்பதற்கென எடுத்துச் செல்லப்பட்டார்கள் எனக் கூறப்படுகின்றது. சுமார் 14 வயது பிள்ளைகளையும் உள்ளடக்கிய பெருந்தொகையான இளைஞர்கள் பலவந்தமாக இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், அது அவர்களுக்கும்,அவர்களுடைய குடும்பத்திற்கும் மனக்கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. [987]

926. புதுமாத்தளன் மருத்துவமனையைச் சூழவுள்ள பிரதேசங்களை உள்ளடக்கிய விதத்தில் இலங்கை இராணுவத்தினால் உக்கிரமான விதத்தில் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர், ஏப்ரல் 22 ஆந் திகதி இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தை சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தார்கள். எல்ரீரீஈ கட்டுப்பாட்டில் இருந்து வந்த பிரதேசத்திலிருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்த பொழுது, இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. சாட்சிகள் வழங்கும் சான்றுகளின் பிரகாரம், மக்களை பலவந்தமாக பின்வாங்கச் செய்வதற்கென எல்ரீரீஈ இயக்கத்தினர் அவர்களை மிரட்டியதுடன், அவர்களை பயப்படச் செய்வதற்கென ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களை தீர்த்திருந்தனர்.[988] இச்சந்தர்ப்பத்தில் இலங்கை இராணுவ நிலைகளிலிருந்து தொடர்ச்சியாக இடம்பெற்றதாக கூறப்படும் ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட, பின்னர் அதே இரவில் அந்த மக்கள் எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தப்பிச் சென்றார்கள். சாட்சிகள் வழங்கும் சான்றுகளின் பிரகாரம், மக்கள் சண்டை இடம்பெறும் இடத்திலிருந்து தப்பிச் செல்வதற்கு துணிச்சலாக முன்வந்ததுடன், நந்திக்கடல் கடல்நீரேரியை நோக்கி அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். காயங்கள் அல்லது அதீத களைப்பு காரணமாக நடக்க முடியாதிருந்த தமது நண்பர்களை அல்லது உறவினர்களை ஒரு சிலர் தூக்கிக் கொண்டும் சென்றார்கள். இந்தத் தடவை அவர்களை தடுத்து நிறுத்துவதற்கு எல்ரீரீஈ இயக்கம் முயற்சிக்கவில்லை. ஒருசில போராளிகள் அவர்களுக்கு உதவியும் செய்தார்கள். அந்த இடத்தைக் கடந்து செல்வதற்கு முயற்சித்த ஒரு சிலர் இலங்கை இராணுவத்தின் துப்பாக்கி பிரயோகித்தினால் கொல்லப்பட்டிருக்க முடியுமென ஊர்ஜிதப்படுத்தப்படாத அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஏனெனில், அச்சந்தர்ப்பத்தில் எல்ரீரீஈ இராணுவம் நிலைகொண்டிருந்த பின் பகுதியிலிருந்து எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை.[989]

[986] WS on file

[987] WS on file

[988] WS on file

[989] WS on file

927. ஏனைய சம்பவங்களில், தனிநபர்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் தாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. சுமார் 200 பேருடன் சேர்ந்து தப்பிச் செல்வதற்கு முயற்சித்த பொழுது, மார்ச் 18 ஆந் திகதி ஒருவர் தாக்குதலுக்குள்ளானார். இறுதியில், ஆவேசமடைந்திருந்த மக்கள் கூட்டத்தை எல்ரீரீஈ இனால் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. அந்த நிலையில், மக்கள் வெளியேறக் கூடியதாக இருந்து வந்தது. தான் வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்த பொழுது எல்ரீரீஈ போராளிகள் தன்னை ஒரு கம்பினால் தாக்கியதாகவும், ஏனையவர்களும் தாக்கப்படுவதனை தான் கண்டதாகவும் சாட்சியமளித்த பெண்மணி ஒருவர் சொன்னார். கடந்து செல்லும் சந்தர்ப்பத்தில் இலங்கை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகக் கூடிய ஆபத்து இருந்து வந்த நிலையிலும் கூட, மக்கள் துணிச்சலுடன் வெளியேறிச் செல்வதற்கு தயாராக இருந்து வந்தார்கள் என சாட்சிகள் குறிப்பிட்டார்கள்.

928. 2009 மார்ச் 14 ஆந் திகதி அளவில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் புதுக்குடியிருப்புக்கு அருகில் எல்ரீரீஈ இயக்கத்தினர் ஒரு தம்பதியினர் மீது தாக்குதல் நடத்தியதுடன், அவர்கள் வெளியேறிச் செல்வதனையும் தடுத்தார்கள்.[990] அந்த ஆண் எல்ரீரீஈ இயக்கத்தினால் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டதுடன், எல்ரீரீஈயின் முன்னரங்க நிலைகளுக்கு அருகில் இராணுவக் கடமைகளை புரிவதற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அப்பெண் நம்புகின்றார். ஆனால், ஒரு சில நாட்களின் பின்னர் அவர் அங்கிருந்து தப்பி வந்தார்.

### தேசிய தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் அவர்கள் மீது தங்கியிருப்பவர்கள் ஆகியோர் எல்ரீரீஈ பிரதேசங்களிலிருந்து வெளியேறுவது தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள்

929. மனிதநேய பணிகளில் ஈடுபட்டிருந்த வன்னியைச் சேர்ந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தேசிய ஊழியர்கள் மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்களின் ஊழியர்கள் ஆகியோரும் வன்னியிலிருந்து வெளியேறிச் செல்லும் பொழுதும், வன்னிக்குள் பிரவேசிக்கும் பொழுதும் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். 2006 ஆம் ஆண்டு தொடக்கம் அனுமதிப் பத்திர நடைமுறை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து அவர்களும் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.[991] பின்னர் எடுத்துக் காட்டப்படுவதைப் போல, மோதலின் இறுதிக் கட்டங்களின் போது, மோதல் வலயத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு இந்த அமைப்புக்களின் தேசிய ஊழியர்கள் முன்வந்த பொழுது இது ஒரு முக்கியமான பிரச்சினையாக உருவாகியிருந்தது. அவ்வாறு வெளியேறிச் செல்வதற்கு பலருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கிளிநொச்சி வீழ்ச்சியடையும் வரையில், மனிதநேய முகவரகங்களில் பணியாற்றி வரும் உள்ளூர் ஊழியர்களின் நடமாட்டம் தொடர்பான அனுமதிப் பத்திர விண்ணப்பங்களை கையாள்வதற்கென எல்ரீரீஈ இயக்கத்தின் தொடர்பு உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பாக இருந்து வந்தார்.[992] தேசிய ஊழியர் அணியைச் சேர்ந்த உறுப்பினர் எவரேனும் எல்ரீரீஈகட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு பயணம் செய்ய வேண்டுமானால், எல்ரீரீஈ இயக்கத்தின் அனுமதிப் பத்திரமொன்றையும், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இசைவுச் சான்றிதழ் ஒன்றையும் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.[993]

990 WS on file

991 இலங்கையில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அறிக்கை,S/2007/758, 21 December 2007.

992 WS on file

993 வன்னிக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் சர்வதேச மனிதநேயப் பணியாளர்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் அனுமதிப் பத்திரத்தைப் பெற வேண்டிய தேவை இருந்து வரவில்லை.

930. பாதுகாப்புக் காரணங்களுக்காக சர்வதேச மனிதநேய முகவரகங்கள் வன்னியிலிருந்து வெளியேற வேண்டுமென அரசாங்கம் அறிவித்தல் விடுத்ததனை உடனடுத்து, 2008 செப்டம்பர் மாதத்தில் தனது தேசிய ஊழியர்களுக்கும், அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கும் பயண அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென ஐ நா வேண்டுகோள் விடுத்திருந்தது. அதனையடுத்து எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் துறை தலைவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நடமாட்ட சுதந்திரம் என்பவற்றை உத்தரவாதப்படுத்தும் சர்வதேச சட்டத்தின் கீழான எல்ரீரீஈ இயக்கத்தின் கடப்பாட்டுக்கு இணங்கியொழுமாறு அவர்களிடம் ஐ நா கேட்டுக் கொண்டது.[994] இறுதியில் ஒரு சில தேசிய ஊழியர்களுக்கு மட்டும் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஆனால், அவர்களில் தங்கியிருந்த அனைவருக்கும் அனுமதிப் பத்திரங்கள் மறுக்கப்பட்டன.[995,996] அரசாங்க கட்டுப்பாட்டின் கீழிருந்து வரும் பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு தாம் பொதுமக்களை அனுமதித்தால், மக்களை பாதுகாப்பதற்கான தமது கடப்பாடு மற்றும் கடமை என்பவற்றிலிருந்து தவறி விடுவோம் என எல்ரீரீஈ இயக்கத்தின் தலைமைத்துவம் ஐ நா அதிகாரிகளிடம் கூறியிருந்தது.[997]

931. ஐ நா வின் (பிரதானமாக உள்;ர்) ஊழியர்களும், அவர்களில் தங்கியிருந்தவர்களும் கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்புக்கு மாற்றப்பட்டதனை உடனடுத்து, 2009 ஜனவரி மாதத்தில் தமது நடமாட்டத்திற்கும், தம்மீது தங்கியிருப்பவர்களின் நடமாட்டத்திற்கும் அனுமதி வழங்குமாறு எல்ரீரீஈ இயக்கத்திடம் கேட்டுக் கொள்வதற்கு மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எல்ரீரீஈ இயக்கம் மீண்டும் இதற்கு எதிர்மறையாகவே பதிலளித்தது. இனிமேல் ஐ நா ஊழியர்களுக்கோ அல்லது அவர்களின் குடும்பத்தினருக்கோ எத்தகைய அனுமதிப் பத்திரங்களையும் வழங்க மாட்டாது என எல்ரீரீஈ இயக்கம் ஐ நா விடம் தெரிவித்திருந்ததாக கூறப்படுகின்றது.[998]

932. 2009 ஜனவரி 21 ஆந் திகதி 100 க்கு மேற்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் தேசிய ஊழியர்களும், அவர்களுடைய குடும்பத்தவர்களும் வவுனியாவுக்கு பிரயாணம் மேற்கொள்ளப்படவிருந்த ஒரு ஐக்கிய நாடுகள் மனிதநேய வாகனத் தொடரணியில் (Convoy 11) புதுக்குடியிருப்பிலிருந்து வெளியேறிச் செல்லவிருந்தனர். ஆனால்,அது எல்ரீரீஈ இயக்கத்தினால் தடுக்கப்பட்டது. சாட்சிகள் முன்வைத்த விபரங்களின் பிரகாரம், இந்த வாகனத் தொடரணி சுமார் 50 லொரிகளைக் கொண்டிருந்ததுடன், அவற்றில் ஏழு லொறிகள் ஐ நா வின் தேசிய ஊழியர்களையும், அவர்கள் மீது தங்கியிருப்பவர்களையும் எடுத்துச் சென்றன. பயணத்தை ஆரம்பித்த சிறிது நேரத்தின் பின்னர் ஐ நா நிலையத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் எல்ரீரீஈ பொலிஸாரினால் வாகனத் தொடரணி நிறுத்தப்பட்டது. இந்தப் பொலிஸ் பிரிவு தன்னியக்க ஆயுதங்களுடன் கூடிய விதத்தில் பெருமளவுக்கு ஆயுதங்களை கொண்டிருந்ததாக கூறப்பட்டதுடன், ஆர்பிஜி ரக ஆயதங்களை வைத்திருந்த எல்ரீரீஈ போராளிகளும் அவர்களுடன் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.[999]

---

அவர்கள் அங்கு வருகை தரும்சந்தர்ப்பத்திலும், எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து புறப்படும் சந்தர்ப்பத்திலும் மட்டும் தம்மை பதிவுச் செய்ய வேண்டியிருந்தது.

994 Internal UN communication on file with OISL, 15 January 2009.

995 WS on file

996 எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் துறை தலைவரான திரு. பீ. நடேசனுடன் ஐ நா மேற்கொண்ட கடிதத் தொடர்பு , ஆகஸ்ட் 21, 2008, செப்டம்பர் 15, செப்டம்பர் 17, செப்டம்பர் 19, 2008, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பிலுள்ளது.

997 WS on file

998 WS on file

999 WS on file

-

933. ஒரு நேரடிச் சாட்சியின் விபரங்களின் பிரகாரம்[1000], அந்த இடத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் தளபதியொருவரும், பெருந்தொகையான உறுப்பினர்களும், இயக்கத்தின் பொலிஸாரும் இருந்து வந்தனர். அவர்களில் பெருந்தொகையானவர்கள் கனரக ஆயுதங்களையும், சிறு ஆயுதங்களையும் கொண்டிருந்ததுடன், மற்றவர்கள் பொல்லுகளை வைத்திருந்தார்கள்.[1001] எல்ரீரீஈ பொலிஸார் ஐ நா வாகனங்களின் பக்கங்களில் பொல்லுகளைக் கொண்டு அடிக்கத் தொடங்கியதுடன், அதில் உள்ளே இருப்பவர்கள் வெளியே வர வேண்டுமென சத்தமிட்டார்கள். ஊழியர்களுக்கு மத்தியிலும், அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு மத்தியிலும் - பெருமளவுக்கு பெண்கள் மற்றும் பிள்ளைகள் - இது அச்சத்தை ஏற்படுத்தியது. ஒரு சில எல்ரீரீஈ பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவர்களை வாகனங்களிலிருந்து பலவந்தமாக இறக்குவதற்கு முயற்சித்தார்கள். எல்ரீரீஈ உறுப்பினர்களும், அங்கு ஒன்றுகூடியிருந்த எதிர்ப்பாளர் குழுவொன்றும், தமது சொந்த மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வன்னியை விட்டு வெளியேறுவதற்கு முயற்சிக்கும் துரோகிகள் என மிகவும் ஆக்ரோ'மான விதத்தில் அவர்கள் மீது குற்றம் சுமத்தினார்கள்.[1002]

934. தேசிய ஊழியர்களுக்கும் மற்றும் வாகன தொடரணிக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பயண அனுமதியை பெற்றுக் கொள்ள முடியாது போனமையினால் அவர்கள் மீண்டும் புதுக்குடியிருப்பிலிருந்த ஐ நா தளத்திற்கு திரும்ப வேண்டி நேரிட்டது. அவர்கள் திரும்பி வரும்பொழுது ஐ நா நிலையத்திற்குள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களும், அந்த இயக்கத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இருந்ததனை பார்த்தார்கள். வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்ததன் விளைவாக ஒரு சில ஊழியர்கள் மற்றும் அவர்கள் மீது தங்கியிருப்பர்கள் கைது செய்யப்படவிருப்பதாக அச்சுறுத்தப்பட்டதுடன், ஏனைய எல்ரீரீஈ உறுப்பினர்கள் அவர்களை படம் பிடிக்கத் தொடங்கினார்கள். இறுதியில், அந்த வளவிலிருந்து எல்ரீரீஈ ஆட்களை ஐ நா ஊழியர்கள் வெளியேறச் செய்தார்கள். எவ்வாறிருப்பினும், தமது தேசிய ஊழியர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்கள் ஆகியோர் வன்னியிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு அனுமதி வழங்குமாறு ஐ நா மேற்கொண்ட வேண்டுகோள்களை எல்ரீரீஈ இயக்கம் தொடர்ச்சியாக மறுத்து வந்தது. மோதலின் முடிவுக்கு முன்னர், அவர்களில் ஒரு தொகையினர் இறுதியாக அங்கிருந்து தப்பிச் செல்லக் கூடியதாக இருந்தது.[1003]

# XV.மனிதநேய உதவி மறுப்பு

## அறிமுகம்

935. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த பிரதேசமாக இருந்து வந்தாலும் கூட, அரசாங்கம் பல வருட காலம் அப்பிரதேசங்களில் அரசாங்க அதிபர்களுக்கூடாக தனது பிரசன்னத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளையும் வழங்கி வந்தது. மேலும், போரினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்களுக்கும் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அது மனிதநேய நிவாரண உதவிகளை வழங்கியது. அத்துடன், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என்பவற்றினாலும் அம்மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், மோதலின் இறுதிக் கட்டத்திற்கு முன்னைய வருடங்களிலும் கூட, இந்த அமைப்புக்களினால் வழங்கப்பட்ட மனிதநேய நிவாரண உதவி பெருமளவுக்கு சவால் மிக்க ஒரு

---

[1000] WS on file

[1001] WS on file

[1002] WS on file

[1003] WS on file

சூழ்நிலையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. அணுகும் வசதி தொடர்பான கட்டுப்பாடுகள் இருந்து வந்ததுடன், ஒரு சில பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கும் கட்டுப்பாடுகள்இருந்து வந்தன. மனிதநேயப் பணியாளர்கள் அவர்கள் எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளை கொண்டிருந்தார்கள் என்ற விதத்தில் அடிக்கடி அரசாங்கத்தினால் சந்தேகிக்கப்பட்டுள்ளனர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.[1004] அதன் விளைவாக, அவர்கள் அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை அனுபவித்து வந்துள்ளார்கள்.

936. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் பின்வரும் முடிவுக் குறிப்பினை முன்வைத்திருந்தது: “ஆணைக்குழு அதன் முன்வைக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர், இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் - குறிப்பாக, மேலே குறிப்பிடப்பட்ட முகவரகங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் - சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தோழமை உணர்வுடன் இணைந்த விதத்தில் உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தும் சிரமங்களுக்கு மத்தியிலும், பொதுமக்களுக்கு வழங்குவதற்கு சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் எடுத்திருந்தது” (பந்திகள் 9.19 மற்றும் 9.20).

937. எவ்வாறிருப்பினும், மோதல்களின் இறுதி மாதங்களின் போது இலங்கை இராணுவம், எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசத்தை நோக்கி நகர்வுகளை முன்னெடுத்து வந்த சந்தர்ப்பத்தில், மனிதநேய நிவாரண உதவிகளை வழங்கும் விடயத்தில் தொண்டு நிறுவனங்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த அதிகரித்த அளவிலான இடையூறுகளை இந்த அத்தியாயம் எடுத்து விளக்குகின்றது. 2008 செப்டம்பர் மாதத்தில் மனிதநேய செயற்பாட்டாளர்கள் கிளிநொச்சியிலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிளிநொச்சியிலேயே பெரும்பாலான தொண்டு நிறுவனங்கள் அப்பொழுது மையம் கொண்டிருந்தன. அதன் பின்னர், நிவாரண உதவிகளை வழங்கும் செயற்பாடு அதிகரித்த அளவில் சிரமமானதாக இருந்து வந்தது மட்டுமன்றி, விநியோகிப்பதற்கென அதிகாரமளிக்கப்பட்ட பொருட்களின் அளவு மற்றும் இயல்பு என்பன போதியளவு உணவு, தண்ணீர், பொதுச் சுகாதாரம் மற்றும் உயிர் பாதுகாப்புச் சுகாதார பராமரிப்பு என்பன தொடர்பான பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை கூட நிறைவு செய்து வைக்கவில்லை. இது ஒரு அழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

938. கல்விக்கான உரிமை, உடல் மற்றும் உள ஆரோக்கியத்துக்கான உரிமை போன்ற மனித உரிமைகள் சர்வதேச மனிதநேயச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்ற விடயத்தையும், ஓர் ஆயுத மோதலின் போதும் மனிதநேய நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான அந்த உரிமைகள் செல்லுபடியாகும் என்ற விடயத்தையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு இங்கு நினைவூட்டுகின்றது. மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் கடமைகளை கொண்டிருப்பவர்கள், இந்த உரிமைகளில் ஆகக் குறைந்தது ஒரு குறைந்தபட்ச மட்டத்தை திருப்திப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படை கடப்பாட்டினை கொண்டுள்ளார்கள்.[1005] அத்தியாவசிய உணவுப் பண்டங்களை வழங்குதல், அத்தியாவசிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு, அடிப்படை தங்குமிடம் மற்றும் வீடமைப்பு, அதேபோல அடிப்படையான கல்வி வசதிகள் என்பன இதில் அடங்குகின்றன.[1006] மேலும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றி

[1004] அரசு சாரா அமைப்பின் இரகசியமான சமர்ப்பணம்

[1005] CESCR,பொதுக் குறிப்பு இல. 3 (1990) அரச தரப்புக்களின் கடப்பாடுகளின் இயல்பு (சமவாயத்தின் உறுப்புரை 2 (1), பந்தி 10.

[1006] Ibid., பந்தி 10, CESCR,பொதுக் குறிப்பு இல. 12 பந்தி 6; பொதுக் குறிப்பு இல. 14 (2000) ஆகக் கூடிய சுகாதாரத் தரத்தை எட்டுவதற்கான உரிமை (உறுப்புரை 12) பந்தி 47; மற்றும் பொதுக் குறிப்பு இல. 15 (2003) நீருக்கான உரிமை (சமவாயத்தின் உறுப்புரை 11 மற்றும் 12), பந்தி 40.

வைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாடு சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களை பட்டினி கிடக்கச் செய்யும் செயலை ஒரு போர் வழிமுறையாக வேண்டுமென்றே மேற்கொள்வதனை சர்வதேச சட்டம் தடை செய்கின்றது. அவ்வாறு செய்வதன் மூலம் அவர்களுடைய உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை அவர்களுக்கு ஏற்படும். வேண்டுமென்றே நிவாரணப் பணிகளை தடுத்தலும் இதில் அடங்குகின்றது. அத்தகைய நடத்தை வழக்காறு சார்ந்த சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு போர்க் குற்றத்திற்கு இணையானதாகவும் இருந்து வருகின்றது.[1007]

939. போதியளவிலான நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் உத்தரவாதம் வழங்கியிருந்த போதிலும், இந்த அத்தியாயத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் தகவல்கள், வன்னியைச் சென்றடைந்த உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றின் அளவு தொடர்பாக அரசாங்கம் வரையறைகளை விதித்திருந்தமைக்கான அதன் நோக்கங்கள் குறித்து பாரதூரமான கேள்விகளை எழுப்புகின்றன. அந்த வகையில், அரசாங்கம் சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றை எந்த அளவுக்கு மீறியிருக்கின்றது என்பதனையும், அது அதன் இராணுவ உத்திக்கு சாதகமாக பொதுமக்களின் உரிமைகளை ஒடுக்கியிருக்கின்றதா என்ற விடயத்தையும் இந்த அத்தியாயம் பகுப்பாய்வு செய்கின்றது. அரசாங்கத்தை பொறுத்தவரையில், தேவையான நிவாரண உதவிகளை தன்னால் வழங்க முடியாது அல்லது வழங்க விரும்பவில்லை என்ற விடயம் தெளிவாக தெரிய வந்திருந்த நிலையில், மோதல் பிரதேசங்களில் செயற்பட்டு வந்த அனைத்து மனிதநேய செயற்பாட்டாளர்களையும் அது தடை செய்தது ஏன் என்ற பாரதூரமான கேள்விகளும் உள்ளன.

940. முன்னைய மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளை 2009 ஜனவரி 29 ஆந் திகதி "பல மாதங்கள் இடம்பெற்ற சண்டையின் பின்னர் பல தடவைகள் இடம்பெற்ற இடப்பெயர்ச்சி, கடுமையான மழை மற்றும் வெள்ளப் பெருக்கு என்பன காரணமாக பொதுமக்கள் எதிர்கொண்டுள்ள ஆபத்தான நிலை" தொடர்பாக கவனத்தை ஈர்த்திருந்தார். மேலும், சுயாதீனமான கண்காணிப்பாளர்கள் மற்றும் மனிதநேயப் பணியாளர்கள் ஆகியோர் அப்பிரதேசத்தை அணுக முடியாத நிலை "நாங்கள் அறிந்திருப்பதிலும் பார்க்க நிலைமை மிக மோசமாக இருந்து வருகின்றது" என்பது குறித்த கரிசனைகளை எழுப்புவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

941. ஐந்து மாதங்களுக்குப் பின்னர், 2009 மே 14 ஆந் திகதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட ஒரு ஊடக அறிக்கை மிகவும் பரிதாபமான மனிதநேய நிலையை எடுத்து விளக்கியிருந்தது. அதனை அது "கற்பனை செய்தும் பார்க்க முடியாத ஒரு பேரவலம்" என வர்ணித்திருந்தது.[1008] "உயர் மட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு மத்தியிலும் கூட, களத்தில் பாதுகாப்பின்மை என்பது, எமது கடல் செயற்பாடுகள் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளன என்பதனை காட்டுகினறது. அது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். தற்போதைய சூழ்நிலையில் எந்தவொரு மனிதநேய அமைப்பினாலும் அவர்களுக்கு (பொதுமக்களுக்கு) உதவ முடியாதுள்ளது. மக்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான உயிர்களை பாதுகாப்பதற்கென எங்களுக்கு பாதுகாப்பும் தடங்கலற்ற விதத்தில் இடங்களை அணுகும் வசதியும் தேவைப்படுகின்றது." பங்கர்களில் தஞ்சம் புகுந்திருக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் நிலைமையையும் இந்த ஊடக அறிக்கை எடுத்து விளக்கியிருந்தது. "மிகவும் தட்டுப்பாடான குடிநீர் மற்றும் உணவு என்பவற்றை பெற்றுக் கொள்வது மிகக் கடினமாக இருந்து வருகின்றது."

---

[1007] ICRCDதரவுத் தளம்,*வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம்.*

[1008] சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்தி வெளியீடு, 09/103, மே 14 2009,"மனிதநேய நிவாரண உதவிகள் பொதுமக்களைச் சென்றடையவில்லை"

### நிவாரண உதவிகளை வழங்குவதற்கும், ஒருங்கிணைப்பதற்குமான அரசாங்கத்தின் பொறிமுறைகள்

942. யாழ்ப்பாணத்திற்கான நுழைவு/வெளியேற்றப் புள்ளியான முகமாலை மீது எல்ரீரீஈ இயக்கம் தாக்குதல் நடத்திய பின்னர், 2006 ஆகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் வன்னியில் "விடுவிக்கப்படாத பிரதேசங்கள்" என்பவற்றில் அத்தியாவசிய சேவைகளை பராமரித்து வருவதற்கென அரசாங்கம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஒருவரை நியமனம் செய்தது.[1009]அதற்கு அடுத்த மாதம், "மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு மத்திய இடமொன்றிலிருந்து ஒருங்கிணைக்கப்படும் விதத்தில் மனிதநேய நிவாரண உதவிகளை வழங்குதற்கென" அது மனிதநேய உதவி தொடர்பான ஆலோசனை கமிட்டியொன்றை (CCHA) ஸ்தாபித்தது. இக்கமிட்டி 2006 அக்டோபர் மாதம் தொடக்கம் 28 தடவைகள் கூடியிருந்தது.[1010]

943. மனிதநேய உதவி தொடர்பான ஆலோசனைக் குழு அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சரின் தலைமையின் கீழ் செயற்பட்டு வந்ததுடன், தேசத்தை கட்டியெழுப்புதல், மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள், சுகாதாரம், கல்வி மற்றும் வெளி விவகாரம் ஆகிய அமைச்சுக்களிலிருந்து அது பிரதிநிதிகளை கொண்டிருந்தது. பாதுகாப்புச் செயலாளர், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், வட மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், (முன்னைய சமாதான செயன்முறை இணைத் தலைமைகள் என்ற முறையில்) ஐக்கிய அமெரிக்கா, நோர்வே மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள், ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளர், ஐ நா வின் அனைத்து முகவரகங்களினதும் பிரதானிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ECHO ஆகிய தரப்புக்களுடன் இணைந்து இது மேற்கொள்ளப்பட்டது.

944. பாதுகாப்புச் செயலாளர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு வழங்கிய தனது அறிக்கையில், மனிதநேய உதவி தொடர்பான கலந்தாலோசனை கமிட்டியின் அனைத்துக் கூட்டங்களும் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றதாகவும், அக்கூட்டங்கள் "அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற போதிலும் மக்களுக்குச் செல்வதற்கு அனுமதியளிப்பதாக இருந்து வந்தாலும் சரி, அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிப்பதாக இருந்தாலும் சரி பெரும்பாலான பிரச்சினைகள் பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வந்தமையினால், அக்கூட்டங்களில் நான் சமூகமளித்திருந்தேன்" எனக் குறிப்பிட்டிருந்தார்.[1011]

945. இந்தக் கூட்டங்கள் மனிதநேய முகவரகங்களுக்கும், ஏனையவர்களுக்கும் கரிசனைகளை எழுப்புவதற்கும் மனிதநேய நிவாரண உதவிகளை வழங்குவது தொடர்பான வேண்டுகோள்களை உருவாக்குவதற்கும் வாய்ப்பினை வழங்கின. அதேவேளையில், உயிர்களை பாதுகாப்பதற்கு அத்தியாவசியமாக தேவைப்படும் நிவாரண உதவி என தாம் கருதி, அவற்றை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள்களை முன்வைத்த சந்தர்ப்பத்தில் அவை மறுக்கப்பட்டது தொடர்பான உதாரணங்களை மனிதநேய அலுவலர்கள் தெரிவித்திருந்தார்கள்.

946. மனிதநேய நிவாரண பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கென ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள் என்பன

---

1009 Sri Lanka's Humanitarian effort, Presidential Task Force for Resettlement, Development and Security in the Northern Province 2011, pp ii-iii

1010 Sri Lanka's Humanitarian effort, Presidential Task Force for Resettlement, Development and Security in the Northern Province 2011, pp ii-iii

1011 பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. கோத்தாபய ராஜபக்ஷ, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் சமர்ப்பித்த சமர்ப்பணம், ஆகஸ்ட் 17, 2010

முன்வைத்திருந்த வேண்டுகோள்கள், பெருமளவுக்கு அரசாங்க அதிபர்களின் வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்ற விடயத்தை 2008 நவம்பர் 20 ஆந் திகதி கவனத்திலெடுத்த அத்தியாவசிய சேவை ஆணையாளா் நாயகம் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள்,உணவுப் பொருட்கள் மற்றும் உணவல்லாத ஏனைய பொருட்கள் என்பன தொடா்பான வேண்டுகோள்களை இனிமேல் ஐக்கிய நாடுகள் முகவரகங்கள் மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றிடம் முன்வைப்பதனை தடை செய்தாா். மேலும், அத்தகைய வேண்டுகோள்கள் அனைத்தும் தனது அலுவலகத்திற்கூடாக அனுப்பப்படல் வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தல் வழங்கியிருந்தாா்.[1012] இது வன்னிக்கு நிவாரண உதவிகளை வழங்கும் செயற்பாட்டின் மீது அரசாங்கத்தின் பிடியை மேலும் இறுக்கியது.

947. வட மாகாணத்தில் மீள் குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பன தொடா்பான ஜனாதிபதி செயலணியின் 2011 ஆம் ஆண்டின் “இலங்கையின் மனிதநேய முயற்சி” அறிக்கையில் மோதல் இடம்பெற்ற காலப் பிரிவு முழுவதிலும் “எல்ரீரீஈ இயக்கத்தின் செல்வாக்கின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்து பிரதேசங்களுக்கும் மனிதநேய நிவாரண உதவிகள் வழங்கப்பட்டதாக” அரசாங்கம் முடிவாக குறிப்பிட்டிருந்தது. ‘‘அது தனது அர்ப்பணிப்புணர்வினை முன்னெடுக்கும் விதத்தில் உணவு, மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றின் போதிய அளவிலான தங்குதடையற்ற விநியோகத்தை பராமரித்து வருவதற்கு அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. மோதல் தீவிரமடைந்திருந்த காலப் பிரிவின் போது, உணவு விநியோக மாா்க்கங்கள் எல்ரீரீஈ இயக்கத்தின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய விநியோகங்கள் அனுப்பப்பட்டிருந்தன… அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கென அனுப்பி வைக்கப்படும் பொருட்களை எல்ரீரீஈ இயக்கம் பயன்படுத்தி வந்தது என்பது குறித்த விடயத்தை அரசாங்கம் அறிந்திருந்த போதிலும், அது அத்தகைய பொருட்களை அனுப்பி வைப்பது தொடா்பான கடப்பாட்டிலிருந்து விலகிச் செல்லவில்லை.’’[1013]

948. எல்ரீரீஈ இயக்கம் அத்தகைய பொருட்களை எடுத்தாலும் சரி, எடுக்காவிட்டாலும் சரி, வன்னியில் வசித்து வந்த பொதுமக்கள் போதிய உணவு மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டிருந்தது. கீழே எடுத்து விளக்கப்படுவதனை போல, அவசர கால நிவாரண உதவிகளை வழங்குவதில் சர்வதேச மற்றும் உள்ளுர் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை கட்டுப்படுத்துவதன் மூலமும்,மோதல் வலயத்தில் சர்வதேச தரப்புக்களின் பிரசன்னத்தை அகற்றுவதன் மூலமும் அரசாங்கம் “நிவாரண” நடவடிக்கைகளை தனது சொந்தப் பொறுப்பில் முன்னெடுக்க வேண்டியிருந்தது. மேலும், அதன் ஒட்டுமொத்த பாதுகாப்புக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளக் கூடியதாகவும் அது இருந்து வந்தது. “பாதுகாப்புப் பிரச்சினைகள்” என்ற விரிவான தளத்திற்குள் அரசாங்கம் மருந்துப் பொருட்கள், தண்ணீர், பொதுச் சுகாதாரம் மற்றும் வன்னிக்குச் செல்ல வேண்டிய உணவுப் பொருட்கள் என்பன தொடா்பாக மிகவும் கடுமையான விகிதாசாரரீதியற்ற கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. அது பொதுமக்களின் மீது அதிகரித்தளவிலான வலுவிழக்கச் செய்யும் ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது.

[1012] அத்தியாவசிய சேவை ஆணையாளா் நாயகம் எஸ்.பி. திவாரத்ன அவர்களின் கடிதம், நவம்பர் 20, 2008.

[1013] மேலும் பாா்க்கவும்: See also www.defence.lk/PrintPage.asp?fname=20081206_13 இலங்கையில் அனைவருக்கும் - குறிப்பாக, உள்ளக ரீதயில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கும் - அரசாங்க சேவைகள்

**எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களுக்கு பொருட்களை எடுத்துச் செல்வது தொடர்பான அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள்**

949. 2002 ஆம் ஆண்டின் போர் நிறுத்த ஒப்பந்தம், எல்ரீரீஈ பிரதேசங்களுக்கு (அச்சந்தர்ப்பத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு) பொருட்களை எடுத்துச் செல்லல் மற்றும் அங்கிருந்து பொருட்களை எடுத்து வருதல் என்பன தொடர்பான ஒரு சில கட்டுப்பாடுகளை தொடர்ந்தும் வைத்துக் கொள்ளும் உறுப்புரைகளை கொண்டிருந்தது. தடை செய்யப்பட்ட பொருட்கள், இராணுவம் சாராத ஆயுதங்கள் மற்றும் தளபாடங்கள், வெடி மருந்துகள்,தூரத்திலிருந்து இயக்கும் உபகரணங்கள், முள்ளுக் கம்பி, தொலை நோக்குக் கண்ணாடிகள், பேனாவிளக்கு மற்றும் பெட்டரிகள் என்பன தடை செய்யப்பட்ட பொருட்களாக இருந்து வந்தன. அது தவிர, அரசாங்க அதிபர்களுக்கூடாக விநியோகிக்கப்பட வேண்டிய டீசல் மற்றும் பெட்ரோல் என்பவற்றை போக்குவரத்துச் செய்வது தொடர்பாக இறுக்கமான கட்டுப்பாடுகள் பொருட்களினளவு மற்றும் நடைமுறை என்பன தொடர்பாக விதிக்கப்பட்டிருந்தன. அதே போல சிமெந்து மற்றும் இரும்புக் கம்பிகள் என்பனவும் தடை செய்யப்பட்டிருந்தன. சீமெந்து, இரும்புக் கம்பிகள் முன்னரேயே தடை செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக, டீசல் மற்றும் பெட்ரோல் என்பன மருத்துவ சேவைகளை நடத்துவதற்கும் மற்றும் உணவுற்பத்திக்கும் அத்தியாவசியமானவையாக இருந்து வந்தன.[1014] கட்டுமானப் பொருட்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் குறிப்பாக, மிகவும் பாரதூரமானவையாக இருந்து வந்தன. 2004 சுனாமியின் பின்னரும் அது அமுலிலிருந்து வந்த காரணத்தினால், எல்ரீரீஈ யின் கட்டுப்பாட்டுக்குளிருந்து வந்த பிரதேசங்களில் மீள்கட்டுமான நடவடிக்கைகள் கடுமையான விதத்தில் பாதிக்கப்பட்டிருந்தன.

950. போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்த பொழுது 2006 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் மேலும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மீண்டும் ஒரு முறை பெருந்தொகையான பொருட்கள் மற்றும் உற்பத்திகள் என்பன வன்னிக்குள் நுழைவது தடை செய்யப்பட்டதுடன், அவற்றில் ஒரு சில பொருட்கள் தூய்மையான நீர் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கு அத்தியாவசியமாக தேவைப்பட்ட பண்டங்களாக இருந்து வந்தன. கட்டுமான வேலைகளுக்கு எரிபொருள், சிமெந்து மற்றும் இரும்புக் கம்பிகள் என்பவற்றின் போக்குவரத்துத் தடை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள் என்பன மட்டுமே அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் எரிபொருளை போக்குவரத்துச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கு ஐ நா வுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்கள் மற்றும் எரிபொருள் என்பன தொடர்பாக அந்த அமைப்பு அரசாங்கத்துடன் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியிருந்ததுடன், நிவாரணப் பணிகளின் மீது தாக்கத்தையெடுத்து வரும் தட்டுப்பாடுகள் குறித்து அது அரசாங்கத்தின் கவனத்தையும் ஈர்க்க வேண்டியிருந்தது.[1015]

951. மீளாய்வுக்குட்படுத்தப்படும் காலப் பிரிவின் போது, வன்னிக்குள் எடுத்துச் செல்லப்படும் எந்தவொரு நிவாரணப் பொருள் தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சு இறுதி அதிகாரத்தைக் கொண்டிருந்தது. உள்யுர் மட்டத்தில், இலங்கை இராணுவம் மற்றும் கடற்படை என்பன பொருட்களின் போக்குவரத்துக்கு அதிகாரமளிக்கும் விடயத்தை விலக்கிக்கொள்ளவோ அல்லது தாமதிக்கவோ கூடிய நிலையில் இருந்து வந்தன.[1016]

---

1014 போர் நிறுத்த ஒப்பந்தம் 2002, இணைப்புA.

1015 ஐ நா கடித போக்குவரத்துஈ ஜூலை 24, 2008, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பார்வையிடப்பட்டது.

1016 http://www.odihpn.org/humanitarian-exchange-magazine/issue-05/feedback-june-1996-members-contribution-banned-restricted-or-sensitive-working-with-the-military-in-sri-lanka

-

952. தொண்டு நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள்

953. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என்பவற்றின் ஊழியர்களையும் உள்ளடக்கிய விதத்தில் ஓமந்தையைத் தாண்டிச் செல்லும் அனைத்து நபர்களும் பாதுகாப்புஅமைச்சின் ஆவணங்களை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. சோதனைச் சாவடிகளில் மேற்கொள்ளப்படும் தேடுதல் நடவடிக்கைகளிலிருந்து அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுடைய ஆவணங்கள் மற்றும் சொத்துக்கள் என்பன இலங்கை இராணுவத்தினால் கைப்பற்றப்படுவதிலிருந்தும் பாதுகாப்பு பெற்றிருக்கவில்லை. அந்த நிறுவனங்களின் தேசிய ஊழியர்கள் துன்புறுத்தல், கைது மற்றும் ஏனைய அத்துமீறல் என்பவற்றுக்கு எளிதில் இலக்காகக்கூடியவர்களாக இருந்து வந்தனர்.[1017]

954. ஐக்கிய நாடுகளின் ஆளணியினரையும் உள்ளடக்கிய இலங்கைப் பிரஜைகள் எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து இசைவினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருந்து வந்தது. எல்ரீரீஈ அனுமதிப் பத்திரங்களை வைத்திருந்தவர்கள் மட்டுமே வன்னியிலிருந்து வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள் (பார்க்கவும் அத்தியாயம் XIV). இந்தக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் தொண்டு நிறுவனங்கள் என்பன, அங்கிருந்து வெளியேற்றப்படும் வரையில் வன்னியில் தங்கியிருந்தன. அவை தேவைகள் தொடர்பான மதிப்பீடுகளைச் செய்யக் கூடியதாக இருந்து வந்ததுடன், வன்னியில் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களில் நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டங்களை பராமரித்து வரக் கூடிய நிலையிலும் இருந்து வந்தன.

955. அனைத்து ஐக்கிய நாடுகள் முகவரகங்களும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களும் செப்டம்பர் 29 ஆந் திகதிக்குள் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து வந்த பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டுமென 2008 செப்டம்பர் 3 ஆந் திகதி பாதுகாப்புச் செயலாளர் கட்டளையிட்டிருந்தார். கூட்டுப் படைகள் தலைமையகம் இந்த விடயத்தை ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தது. “விடுவிக்கப்படாத பிரதேசங்களில் தொண்டுப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஊழியர்களின் பாதுகாப்பை உத்திரவாதப்படுத்த முடியாது என்றும், ஓமந்தைக்கு அப்பால் வன்னிக்குப் பிரயாணம் செய்வதற்கான அனுமதி இனிமேல் வழங்கப்படமாட்டாது என்றும்[1018] அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. முன்னரெடுத்து விளக்கப்பட்டதைப் போல, அநேகமாக இந்தக் கட்டளை வழங்கப்பட்ட உடனேயே ஐ நா அலுவலக வளவுக்கு அருகிலிருந்த பிரதேசத்தில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பாதுகாப்பு நோக்கங்களுக்காக தனது ஊழியர்களுடனடியாக கிளிநொச்சியிலிருந்து வெளியேறுவதாக செப்டம்பர் 12 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்தது. இதனையடுத்து பொதுமக்கள் மூன்று நாட்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். செப்டம்பர் 16 ஆந் திகதி ஐ நா அலுவலகங்களுடன் இணைந்தவிதத்தில் சர்வதேச ஆளணியின் உறுப்பினர்கள் வவுனியாவுக்கு மாற்றப்பட்டனர். எவ்வாறிருப்பினும், தேசிய ஊழியர்கள் ஒரு சிலருக்கும், தேசிய ஊழியர்களின் குடும்பங்களுக்கும் அவ்வாறு வெளியேறிச் செல்வதற்கு அவசியமான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு எல்ரீரீஈ இயக்கம் மறுத்தது (பார்க்கவும் நடமாட்ட கட்டுப்பாடு தொடர்பான அத்தியாயம் XIV).

956. வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் செப்டம்பர் 18 ஆந் திகதி அனுப்பி வைத்த ஒரு கடிதம் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு “கிளிநொச்சியிலிருந்தான வெளியேற்றம் பூர்த்தியடையும் செப்டம்பர் 29 ஆந் திகதிக்கு பின்னர், இலங்கை அரசாங்கம்இப்பிரதேசங்களில் தொடர்ந்தும்

1017 WS on file;

1018 WS on file; கோப்பிலிருக்கும் சாட்சி வாக்குமூலம்: ஐ நா கடிதம், செப்டம்பர் 4, 2008: ;http://www.island.lk/2008/09/10/news16.html; அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் செய்தி வெளியீடு, அக்டோபர் 3, 2008,http://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/AF5D1F3435536F42852574D70063A679-Full_Report.pdf

தங்கியிருக்கும்எவரோனும் ஐ நா அலுவலர்களை அங்கீகரிக்கக் கூடிய நிலையில் இருந்து வர மாட்டாது"[1019] எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

957. அரசாங்கம் இந்த வழிமுறைகளுக்கூடாகவும், அதற்கு பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கூடாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் தேசிய ஆளணி உறுப்பினர்களையும், அவர்களுடைய குடும்பங்களையும் பாதுகாப்பதற்கான கடப்பாட்டினை அங்கீகரிக்கத் தவறியிருந்தது. எல்ரீரீஈ இயக்கம் அவர்கள் வெளியேறுவதற்கு அனுமதி வழங்க மறுத்திருந்தது என்ற விடயம் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தும் கூட இவ்வாறு இடம்பெற்றிருந்தது.

958. ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் என்பன பலவந்தமாக வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டமை, அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் பொதுமக்கள் மீதெடுத்து வரும் தாக்கம் தொடர்பான தகவல்கள் போர்க் களத்திலிருந்து வெளியில் கசிவதனை குறைக்கும் விதத்தில் அது முன்னெடுத்திருந்த பல்வேறு வழிமுறைகளில் ஒன்றாகும்.[1020]ஐக்கிய நாடுகள் அமைப்பும், ஏனைய தொண்டு நிறுவனங்களும் இடம்பெற்று வரும் மனிதநேய நெருக்கடியையும், நிவாரணப் பணிகளின் விநியோகத்தையும் சுயாதீனமான விதத்தில் கண்காணிக்க முடியாதிருந்தது. மோதல் வலயத்தில் அவர்கள் இல்லாத நிலையில், துரிதமாக மாற்றமடைந்து வரும் நிலைமையில் பொதுமக்களின் தேவைகளை ஒழுங்கான அடிப்படையில் மதிப்பீடு செய்து கொள்ள முடியாத நிலையிலும் இருந்து வந்தார்கள் அல்லது அந்த நிவாரண உதவித் தேவைகளுக்கு விரைவில் எதிர்வினையாற்ற முடியாதவர்களாக இருந்து வந்தார்கள். சர்வதேச அவதானிப்பாளர்களில்லாதிருந்த நிலை, பொதுமக்கள்,குறிப்பாக எல்ரீரீஈ இயக்கம் மற்றும் அரசாங்கப் படைகள் என்பவற்றின்துஷ்பிரயோகங்களுக்கு எளிதில் இரையாகக் கூடிய நிலையை உருவாக்கியிருந்தது.

959. அரசாங்க தகவல் திணைக்களத்தின் மூலம் 2008 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில்[1021] அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் இப்படிக் குறிப்பிட்டிருந்தார். "அரசு சாரா அமைப்புக்கள் மற்றும் சர்வதேச அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றின் அலுவலகங்கள் எல்ரீரீஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டதனையடுத்து நிவாரண நடவடிக்கைகள் முடிவுக்கு வரப்போவதில்லை. ஏனெனில்,அரசாங்கம் ஏற்கனவே இப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தேவைகளைக் கொண்டிருக்கும் பிரஜைகளுக்கு போதியளவிலான மனிதநேய பணிகளையும் மற்றும் நிவாரணச் சேவைகளையும் வழங்கி வருகின்றது." அவர் மேலும், பின்வருமாறு கூறியிருந்தார்: "தற்பொழுது அரசாங்க வழிமுறைகளுக்கூடாக வன்னியில் வசித்து வரும் பொதுமக்களுக்குத் தங்குதடையற்ற விதத்தில் பொருட்களும், சேவைகளும் சென்று கொண்டிருக்கின்றன." மேலும், இவை அடுத்து வரும் நாட்களில் "பலப்படுத்தப்படவுள்ளன". எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் அறிக்கைக்கு மாறாக நிவாரண பொருட்களின் பாய்ச்சல் குறைவடைந்திருந்தது.

960. பாதுகாப்பு அமைச்சின் இணையதளத்தில் 2008 டிசம்பர் மாதத்தில்முதலில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், மோதல் வலயத்தில் உதவி தேவைப்படும் அனைவருக்கும் அரசாங்கம் தொடர்ந்தும் சமூக சேவைகளை வழங்கி வருகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எல்ரீரீஈ பிரதேசங்களில் இருந்து வருபவர்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்ததார்கள். உள்ளக ரீதியில்இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கு

---

1019 வெளி விவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் பிரசாத் காரியவசம் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு அனுப்பிய கடிதம், செப்டம்பர் 18, 2008.

1020 உள்ளக ஐ நா அறிக்கை,2009,http://home.wfp.org/stellent/groups/public/documents/communications/wfp225450.pdf

1021 http://www.defence.lk/new.asp

நிவாரணஉதவிகளை விநியோகிக்கக் கூடிய மிகச் சிறந்த நிலையில் அரசாங்கம் இருந்து வருகின்றது என்றும் கூறப்பட்டிருந்தது.[1022]

### வன்னிக்கு நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதில் எதிர்கொண்ட தடைகள்

#### பாதை வழிப் போக்குவரத்து

961. 2009 ஜனவரி மாத முடிவில் பாதை வழிப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது வரையில் வன்னிக்குள் எடுத்துச் செல்லப்படும் பண்டங்கள் ஓமந்தைக் கடவையிலும், மதவாச்சியிலும் அமைந்திருந்த இராணுவ சோதனைச் சாவடிகளில் பரிசோதனை செய்யப்பட்டன. அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும், எல்ரீரீஈ யின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த பிரதேசத்திற்குமிடையிலான பிரதான கடவைப் புள்ளியாக ஓமந்தைச் சோதனைச் சாவடியே இருந்து வந்தது. வன்னியில் எல்ரீரீஈ பிரதேசங்களைத் தாண்டிச் செல்லும் பொருட்டு, மனிதநேய நிவாரணப் பொருட்களையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்து வாகனங்களும், அனைத்து நபர்களும், அனைத்துப் பண்டங்களும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை இராணுவம் என்பவற்றின் இசைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.[1023] பாரிய டிரக் வண்டிகளையும் உள்ளடக்கிய விதத்தில், அனைத்து வாகனங்களும் இராணுவ சோதனைக்கென தமது வாகனத்திலிருக்கும் அனைத்துப் பண்டங்களையும் இறக்க வேண்டியிருந்தது. வாகனங்கள் முழுமையாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. அவற்றின் கதவுகள் கழற்றி எடுக்கப்பட்டதுடன், டயர்களில் காற்று விடப்பட்டது.[1024] மோதல் தீவிரமடைந்து வந்தபொழுது இத்தகைய பாதுகாப்புப் பரிசோதனைகளும், ஏனைய வடிகட்டும் செயன்முறைகளும் மிகவும் இறுக்கமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டன. தென் இலங்கையிலிருந்து செல்லும் டிரக் வண்டிகள் ஓமந்தையில் தமது சரக்குகளை இறக்க வேண்டியிருந்தது. அத்தகைய சரக்குகளுக்கு இராணுவத்தின் இசைவு கிடைத்த பின்னர், அவற்றை வன்னிக்கு போக்குவரத்துச் செய்வதற்கென வடக்கிலிருந்து வந்திருக்கும் டிரக் வண்டிகளில் அவற்றை மீண்டும் ஏற்ற வேண்டியிருந்தது.

962. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாளொன்றுக்கு 20 டிரக் வண்டிகளுக்கு மேல் சோதனை செய்யப்படவில்லை. இச்சோதனைகள் காரணமாக நீண்ட தாமதங்கள் ஏற்பட்டதுடன், அழியத்தக்க பொருட்கள் சீர்குலைந்தன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் வாகனங்களும், சலுகைகள் மற்றும்விலக்குரிமைகள் என்பவற்றை மீறும்விதத்தில் ஏனைய வாகனங்களைப் போலவே முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. எனினும், கொழும்பில் அல்லது வவுனியாவில் சோதனை செய்யப்பட்டு, இராணுவத்தினரால் சீல் வைக்கப்பட்டிருந்த ஐநா டிரக் வண்டிகள் ஓமந்தையில் தமது சரக்குகளை இறக்க வேண்டிய தேவை இருந்து வரவில்லை. உணவு வாகனத் தொடரணிகளுடன் செல்லும் ஐக்கிய நாடுகள் ஆளணியினர் கெமராக்கள் மற்றும் செய்மதித் தொலைபேசிகள் என்பவற்றை எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆனால், ஐக்கிய நாடுகள் அமைப்புக்களின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் பிரகாரம், செய்மதித் தொலைபேசிகள் அத்தியாவசியமான ஒரு உபகரணமாகக் கருதப்பட்டது.[1025] நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனத் தொடரணிகளைத் தடுத்துவைத்து, பரிசோதிக்கும் நீண்ட தாமதங்களுடன் கூடிய நடைமுறை பாரதூரமாக நோய்வாய்பட்டு அல்லது காயப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துச்

---

1022 இலங்கையில் அனைத்து மக்களுக்கும் - குறிப்பாக உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கும் - அரசாங்க சேவைகள்http://www.defence.lk/new.asp?fname=20081206_03

1023 WS on file.

1024 WS on file.

1025 ஐ நா கடிதம், டிசம்பர் 16, 2008

செல்லப்படுவதற்கென காத்திருக்கும் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முடியுமென சாட்சிகள் குறிப்பிட்டிருந்தனர்.[1026]

963. மனிதநேய முகவரகங்கள் கிளிநொச்சியிலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்னரான உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி உணவு விநியோகம் 2008 செப்டம்பர் 15 ஆந் திகதி வன்னியில் இடம்பெற்றதுடன், அதன் மூலம் 156,000 மக்களுக்கு ஆறு நாட்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. 2008 அக்டோபர் மாதத்திற்கும், 2009 ஜனவரி மாதத்திற்குமிடையில் முகவரகங்கள் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதனையடுத்து, ஐக்கிய நாடுகள் அமைப்பு வன்னிக்கு 11 பாதை வாகனத் தொடரணிகளில் நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்திருந்தது. எவ்வாறிருப்பினும், இவ்வாகனத் தொடரணிகள் தமது இறுதி இடத்தைச் சென்றடைவதில் பல்வேறு தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. போதியளவிலான இருப்பிடம், நீர் மற்றும் பொதுச் சுகாதாரம் என்பன இல்லாத நிலையில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் உடனடித் தேவைகளுக்கு அவற்றால் உடனடியாக நிவாரணம் வழங்க முடியவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் நீரினால் காவப்படும் நோய்களினால் பாதிக்கப்படக் கூடிய ஆபத்தையும் எதிர்கொண்டிருந்தார்கள்.[1027]

964. ஐநாவின் ஒவ்வொரு வாகனத் தொடரணியும் புறப்படுவதற்கு முன்னர், ஐக்கிய நாடுகள் அமைப்பு, இலங்கை இராணுவம் மற்றும் எல்ரீரீஈ இயக்கம் என்பவற்றிற்கிடையில் அந்த வாகனத் தொடரணி செல்லும் பாதை மற்றும் வாகனத் தொடரணியின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு இடமளிக்கும் பொருட்டு ஒரு தற்காலிக போர் நிறுத்தத்தை மேற்கொள்வது தொடர்பான ஒப்பந்தமொன்றை செய்துகொள்ள வேண்டியிருந்தது. போக்குவரத்துச் செய்யப்படவிருக்கும் உணவுப் பொருட்கள் / உணவல்லாத பொருட்கள் என்பவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னர், முன்னர் எடுத்து விளக்கப்பட்டது போல, அனைத்து டிரக் வண்டிகளும் வவுனியாவில் இராணுவத்தின் மிகவும் உன்னிப்பான அவதானிப்பு மற்றும் மேற்பார்வை என்பவற்றின் கீழ் சரக்குகளை ஏற்ற வேண்டியிருந்ததுடன், வண்டிகளுக்கு சீல் வைக்க வேண்டிய தேவையும் இருந்து வந்தது. குறைந்தது மூன்று சந்தர்ப்பங்களில், அத்தியாவசியத் தங்குமிட பொருட்கள் மற்றும் பொதுச் சுகாதார பொருட்கள் போன்ற உணவல்லாத நிவாரண உதவிகளை ஏற்றி வந்த டிரக் வண்டிகளை, இராணுவம் அதற்கு அனுமதிவழங்குவதை தாமதப்படுத்தியதனால் அல்லதுஅனுமதி வழங்காமையால் அந்த வாகன தொடரணிகளிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.[1028]

965. உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி 2008, டிசம்பர் 23 ஆந் திகதி பாதுகாப்புச் செயலாளருக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருந்ததுடன், அக்கடிதத்தில் வன்னிக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படும் வாகனத் தொடரணிகளின் எண்ணிக்கை தொடர்பான கட்டுபாடுகளின் விளைவாக, புதிய இடப்பெயர்ச்சிகள் ஏற்படுமென தான் அஞ்சுவதாகவும், கடுமையான மழை காரணமாக “பெருந்தொகையான பொதுமக்கள் போதிய உணவு, தண்ணீர், இருப்பிடம் மற்றும் பொதுச் சுகாதாரம் என்பன இல்லாத நிலையில் இருந்து வர முடியும், எனவும் குறிப்பிட்டிருந்தார். அவர் அதிகாரிகளிடம் பின்வருமாறு கேட்டுக் கொண்டிருந்தார். “அதிகளவிலான நிவாரண பொருட்கள் மற்றும் மனிதநேயப் பணியாளர்கள் அனைத்து பொதுமக்களையும் சென்றடையும் நிலையை கணிசமான அளவில்

1026 WS on file.

1027 HRW, 23 December 2008, http://www.hrw.org/news/2008/12/22/sri-lanka-end-detentions-and-aid-restrictions

1028 http://www.logcluster.org/sites/default/files/documents/Minutes _Logcluster_LKA_Vavuniya_081006.pdf

விருத்தி செய்தல் வேண்டும்… பொதுமக்களின் அதிகரித்து வரும் தேவைகளை தற்பொழுது கிடைத்து வரும் நிவாரணப் பொருட்களின் அளவைக் கொண்டு நிறைவேற்றி வைக்க முடியாது என நான் ஆழமாக கரிசனை கொண்டுள்ளேன்.” வாராந்த வாகனத் தொடரணிகள் உணவுப் பொருட்களை மட்டுமே போக்குவரத்துச் செய்வதற்கு அனுதிக்கப்பட்டிருக்கும் விடயத்தை குறிப்பிட்டு, மக்களின் மிகவும் நிர்ணயகரமான உயிரை பாதுகாப்பதற்கான தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு போதிய அளவிலான மருந்துப் பொருட்கள், அவசர கால தங்குமிட பொருட்கள், தண்ணீர் மற்றும் பொதுச் சுகாதார உபகரணங்கள் என்பவற்றை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற விடயத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

966. வாகனத் தொடரணிகளின் பாதுகாப்பான போக்குரத்துக்கு இடமளித்தல் மற்றும் பயணங்கள் முழுவதிலும் அவை கடந்து செல்லும் சரியான இடங்களை அறிந்திருந்தமை என்பன தொடர்பான உடன்பாடுகளுக்கு மத்தியிலும் கூட, வாகனத் தொடரணிகளுக்கு அருகில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் பல சந்தர்ப்பங்களில் அவற்றின் மீது பாதிப்புக்களை எடுத்து வந்திருந்தன. மேலும், அந்த வாகனத் தொடரணிகளின் பாதுகாப்பு தொடர்பாக அது ஆபத்துக்களை எடுத்து வந்திருந்ததுடன், அத்தியாவசிய நிவாரண பொருட்களின் விநியோகத்தை அவை தாமதப்படுத்தியிருந்தன அல்லது தடுத்திருந்தன.[1029] இலங்கை இராணுவமும் அதே போல எல்ரீரீஈ இயக்கமும் தமது துருப்புக்களை முன்னகர்த்திச் செல்லும் பொருட்டு இந்த வாகனத் தொடரணிகளை பயன்படுத்தியதாக சாட்சிகள் குறிப்பிட்டிருந்தனர்.[1030]

967. வாகனத் தொடரணிகளின் பயணத்துக்கு அனுமதியளிப்பது தொடர்பாக இரு தரப்புக்களும் தெளிவான விதத்தில் ஒப்பந்தங்களை செய்து கொண்ட பின்னர், அவற்றுக்கு அருகில் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வது உள்நோக்கம் தொடர்பான கேள்விகளை எழுப்புகின்றது. இந்த வாகனத் தொடரணிகளுக்கு ஆபத்து விளைவிப்பதற்கு அல்லது அவற்றை தடுப்பதற்கு அல்லது நிவாரணப் பணிகளை தாமதப்படுத்துவதற்கு வேண்டுமென்றே ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவா என்ற கேள்வியையும் அது எழுப்புகின்றது.

968. இறுதி வாகனத் தொடரணியான தொடரணி 11, 2009 ஜனவரி மாதத்தில் மோதல் வலயத்தில் தற்காலிகமாக சிக்குண்டிருந்தது (பார்க்கவும் அத்தியாயம் XIII). அந்த இடத்திலிருந்து அந்த வாகனத் தொடரணியினால் தொடர்ந்து செல்ல முடியாதிருந்ததாகவும், போதியளவிலான பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத நிலை மற்றும் பாதைகளில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தமை காரணமாகநிவாரணப் பொருட்களின் விநியோகத்தை அவற்றால் தொடர்ந்து மேற்கொள்ள முடியவில்லை என்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்திருந்தது.[1031]

969. நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனத் தொடரணிகளுடன் இணைந்த விதத்தில், வன்னிக்கு உணவு மற்றும் உணவல்லாத நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கென அரசாங்க அதிபர்கள் சிறிய வாகனத் தொடரணிகளையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அத்தகைய தொடரணிகள் எத்தகைய தடங்கல்களுமில்லாமல் வந்து சேர்ந்துள்ளன. உதாரணமாக 2008 அக்டோபர் முதல் இரு வார காலத்தின் போது, அரசாங்க வாகனத் தொடரணிகள் 714 மெ.தொன் உணவுப் பொருட்களை போக்குவரத்துச் செய்துள்ளன.[1032] 2008

1029 WS on file,

1030 War on the Displaced, Human Rights Watch, பெப்ரவரி 19, 2009;WS on file: ஐ நா கடிதம், அக்டோபர் 17, 2008

1031 இலங்கை : போர் வலயத்திலிருக்கும் 250,000 மக்களுக்கு உணவு தேவை, உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், பெப்ரவரி 6, 2009 https://www.wfp.org/stories/sri-lanka-vanni

1032 IASC நிலவரம் தொடர்பான அறிக்கை #148, அக்டோபர் 9-16, 2008, http://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-jaffna-kilinochchi-mullaitivu-mannar-vavuniya-trincomalee-and-batticalo-1

டிசம்பர் 1ஆந் திகதி அரசாங்க அதிபரின் ஒரு வாகனத் தொடரணி 591.7 மெ.தொன் உணவுப் பொருட்களையும், இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ஏனைய பொருட்களையும் போக்குவரத்துச் செய்தது.[1033] வன்னியை சென்றடைந்த இறுதி வாகனத் தொடரணி 2009 ஜனவரி 29 ஆந் திகதி அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றும், அது உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் 153 மெ.தொ. உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றது என்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் சுட்டிக் காட்டியிருந்தது. [1034]

### கப்பல் வழிப் போக்குவரத்து

970. வீதி வழி வாகனத் தொடரணிகள் நிறுத்தப்பட்ட பின்னர், வன்னிக்கு நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கான ஒரேயொரு வழி கடல் மார்க்கமாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் 2009 பெப்ரவரி 10 ஆந் திகதி, செஞ்சிலுவைச் சங்கத்தின் முதலாவது கப்பல் சுமார் மூன்று வார கால தாமதத்தின் பின்னர் வன்னிக்கு நிவாரணப் பொருட்களை போக்குவரத்துச் செய்யும் பணியை மீண்டும் ஆரம்பித்தது. இந்தக் கப்பல்களின் முதன்மை நோக்கம் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்வதாகும். மேலும், பாரதூரமாக நோய்வாய்ப்பட்டிருப்பவர்கள் மற்றும் காயப்பட்டிருக்கும் நபர்கள் ஆகியோரை வன்னியிலிருந்து எடுத்து வருவதும் அதன் நோக்கமாக இருந்து வந்தது. ஒட்டுமொத்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 13,000 க்கும் மேற்பட்ட நோயாளர்களையும், பராமரிப்போரையும் கப்பல் மூலம் அங்கிருந்து எடுத்து வந்தது. செஞ்சிலுவைச் சங்கத்தின் 2009 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையின் பிரகாரம், இறுதிக் கப்பல் மே 9 ஆந் திகதி வந்தது.

971. இக்கப்பல்கள் திருகோணமலையிலிருந்து புறப்பட்டதுடன், நிவாரண உதவிப் பொருட்களை கப்பலில் ஏற்றும் பொழுது இராணுவம் அது தொடர்பான கண்டிப்பான விதிமுறைகளைச் செயற்படுத்தியதாக சாட்சிகள் தெரிவிக்கின்றனர். கடற்படையிடமிருந்து முன்னனுமதியைப் பெற வேண்டியிருந்ததுடன், மருத்துவ உபகரணங்கள், வானொலி தொடர்பாடல் கருவிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள், அத்துடன் கப்பலில் ஏற்றப்படும் அனைத்துச் சரக்குகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஒட்டுமொத்த கப்பலும் இராணுவ நடைமுறைகளின் பிரகாரம், கடற்படையினரால் சோதனையிடப்பட்டு, அதற்கு அவர்கள் அதிகாரமளிக்க வேண்டியிருந்தது.[1035] ஒரு சில அதிகாரிகளினால் அதிகாரமளிக்கப்பட்ட போதிலும், சில சந்தர்ப்பத்தில் கடைசி நிமிடத்தில் சரக்குகளைக் கப்பலில் ஏற்றுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை (பார்க்கவும் நீர் மற்றும் பொதுச் சுகாதார வசதிகளை அணுகுதல், கீழே).[1036]

972. சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு அறிக்கையிட்டிருந்த ஆகக் குறைந்தது ஒரு சம்பவத்தில், ஏப்ரல் 22 ஆந் திகதி கடற்கரையில் இருந்த இலங்கை இராணுவம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலைச் சூழ தாங்கிகள் மற்றும் மோட்டார் ஷெல்கள் என்பவற்றைக் கொண்டு தாக்குதல் நடத்தத் தொடங்கியது. இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தும் திசை கடல் நீரேரிக்கூடாக தெளிவாக தெரிந்ததாக சாட்சிகள் குறிப்பிட்டார்கள்.

---

1033 IASC நிலவரம் தொடர்பான அறிக்கை # 155,http://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/B571FB28A4286F5049257520001F4754-Full_Report.pdf

1034 இலங்கை : போர் வலயத்திலிருக்கும் 250,000 மக்களுக்கு உணவு தேவை, உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், பெப்ரவரி 6, 2009 https://www.wfp.org/stories/sri-lanka-vanni

1035 WS on file

1036 WS on file

ஷெல் தாக்குதல்கள் நிறுத்தப்பட்ட பின்னர், இறுதியில் அக்கப்பல் அதில் எடுத்துச் செல்லவிருந்த நோயாளிகளை ஏற்றிக் கொண்டது.[1037]

### வன்னியில் நிவாரண உதவி தேவைப்படும் பொதுமக்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையை அரசாங்கம் சாதுர்யமாக மாற்றியமைத்த விதம்

973. 2009 மே மாத இறுதியளவில், சுமார் 284,000 பொதுமக்கள் மோதல் வலயத்திலிருந்து வெளியில் வந்துள்ளார்கள் என்றும், அவர்கள் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்றும் அரசாங்கம் உறுதிப்படுத்தியது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பொறிமுறைகள் என்பவற்றுக்கு வழங்கிய பல்வேறு அறிக்கைகளில் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு அது வழங்கி வரும் நிவாரண உதவிகளை அரசாங்கம் வலியுறுத்தியிருந்ததுடன், மோதல் காலப் பிரிவின் போது அது எந்த அளவுக்கு நிவாரண உதவிகளை வழங்கியிருந்தது என்ற விடயத்தையும் குறிப்பிட்டிருந்தது. எனினும், வன்னிக்குள் உணவுப் பண்டங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் என்பவற்றை அனுப்பி வைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது, அங்கு 70,000 பொதுமக்கள் மட்டுமே இருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை கொழும்பு அரசாங்க அதிகாரிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்தனர்.

974. உதாரணமாக, 2009 பெப்ரவரி 7 ஆந் திகதி, பாதுகாப்புச் செயலாளர் பின்வருமாறு கூறியிருந்ததாக ஊடகங்களில் மேற்கோள் காட்டப்பட்டிருந்தது: “வன்னியில் சிக்குண்டிருக்கும் பொதுமக்களின் உண்மையான எண்ணிக்கை 100,000 க்கும் குறைவானதாகும்.”[1038] அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க 2009 பெப்ரவரி 18 ஆந் திகதி வெளியிட்ட ஒரு அறிக்கையில், யுத்த சூனிய வலயத்திலிருக்கும் பொதுமக்களின் தொகை தற்பொழுது 100,000 க்கும் குறைவாக இருந்து வருகின்றது என்ற அரசாங்கத்தின் கருத்தை மீண்டும் வெளியிட்டிருந்தார்.[1039] மேலும், 2008 அக்டோபர் மாதம் தொடக்கம் எல்ரீரீஈ கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்துச் சென்ற வாகனத் தொடரணிகள் மிகைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான 230,000 உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கென பொருட்களை எடுத்துச் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டார். களத்திலிருந்து பெறப்பட்ட அரசாங்க அதிபர்களின் புள்ளிவிபரங்கள் இரட்டிப்பு மற்றும் இரண்டு தரம் கணித்தல் என்பவற்றைக் கொண்டிருந்ததாகவும் அவர் சொன்னார். ஒரு சந்தர்ப்பத்தில் அரசாங்க அதிபர்களின் புள்ளிவிபரங்கள் “தன்னிச்சையானவையும், ஆதாரமற்றவையும்” என அரசாங்க அதிகாரியொருவர் கூறியிருந்தார்.[1040] ஆனால், மருந்துப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் என்பவற்றுக்கான தமது வேண்டுகோள்களின் போது, அரசாங்க அதிபர்கள் வழங்கியிருந்த புள்ளிவிபரங்கள் சுமார் 320,000அரசாங்கம் வலியுறுத்தியிருந்த புள்ளிவிபரத்திலும் பார்க்க மிகவும் துல்லியமானவை என்ற விடயம் நிரூபிக்கப்பட்டிருந்தது. 2009 ஜனவரி மாதத்தில் மோதல் வலயத்திலிருந்து வெளியில் வரும் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கான திட்டங்களை அரசாங்கம் 200,000 மக்கள் என்ற அடிப்படையில் தயாரித்திருந்தது (பார்க்கவும் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்கள்

---

[1037] WS on file

[1038] “முழு உண்மையையும் கூறவும்”, பாதுகாப்பு செயலாளர், டெய்லி நியுஸ், பெப்ரவரி 7, 2009, http://archives.dailynews.lk/2009/02/07/sec01.asp

[1039] அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு, *முல்லைத்தீவு யுத்த சூனிய வலயத்திலிருக்கும் மக்களுக்கு அரசாங்கம் உணவை அனுப்ப போகின்றது, பெப்ரவரி 18, 2009.*

[1040] தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் டப்ளியு.கே.கே. குமாரசிரி அவர்களின் கடிதம், மார்ச் 18, 2009.

தொடர்பான சோதனைகள் மற்றும் அவர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டதற்கான அத்தியாயம் XVI).

975. 2009 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டின் போது, நிவாரண உதவித் தேவைகள் தொடர்பாக அரசாங்கம் தொடர்ந்தும் சுமார் 70,000 பொதுமக்கள் இருந்து வருகின்றார்கள் என மீண்டும் மீண்டும் கூறி வந்தது என்ற விடயத்தை மனிதநேயப் பணியாளர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இது தொடர்பாக பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: “சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் போன்ற சர்வதேச முகவரகங்களுடன் ஒருங்கிணைந்த விதத்தில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த விடாப்பிடியான முயற்சிகள் ஒரு போர்த் தந்திரமாக பொதுமக்களை பட்டினி கிடக்கச் செய்யும் நோக்கத்திற்கென, யுத்த சூனிய வலயங்களிலிருந்து வந்த பொதுமக்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதற்கு வேண்டுமென்றே ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது குறித்து எத்தகைய அனுமானங்களையும் மேற்கொள்வதற்கு இடமளிக்கவில்லை.”

976. மிகை உணவுப் பொருட்களை தங்களால் எடுத்துக் கொள்ள முடியும் என்ற நோக்கத்தில் எல்ரீரீஈ இயக்கம் பொதுமக்களின் சனத்தொகைகள் குறித்த மிதமிஞ்சிய அளவிலான புள்ளிவிபரங்களை காட்டியிருந்ததாக அரசாங்க வட்டாரங்கள் வாதிட்டன. எல்ரீரீஈ இயக்கத்தைப் பொறுத்தவரையில், பரந்த அளவிலான தரப்புக்களிலிருந்து உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும், அதேபோல, மிகை நிவாரணப் பொருட்களை பயன்படுத்துவதற்குமென சனத்தொகை தொடர்பான புள்ளிவிபரங்களை மிகைப்படுத்திக் காட்டுவதற்கான ஒரு அக்கறையை அது கொண்டிருந்திருக்க முடியும். எவ்வாறிருப்பினும், குடித்தொகை தொடர்பான புள்ளிவிபரங்களை மிகைப்படுத்திக் காட்டுமாறு எல்ரீரீஈ இயக்கம் அரசாங்க உத்தியோகத்தர்கள் மீது அழுத்தம் பிரயோகித்தது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட நம்பகமான பல வட்டாரங்களினால் மறுக்கப்பட்டிருந்தன.[1041]

977. நிவாரணப் பொருட்களின் விநியோகத்தைக் கண்காணிக்கும் பணி வர வர சிரமமானதாக இருந்து வந்த ஒரு நிலையில், அவ்விதம் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் இறுதியில் விடுதலைப் புலிகளின் கைகளுக்குப் போய் சேர்ந்தனவா அல்லது அப்படி நிகழ்ந்திருந்தால் அது எவ்வாறு என்பதனை மதிப்பிட்டு மேற்கொள்வதற்குச் சுயாதீனமான தரவுகள் இருந்து வரவில்லை. எனினும், உணவுக்கான கியு வரிசைகளின் மீது ஷெல் தாக்குதல் இடம்பெறக் கூடிய ஆபத்துக்கு மத்தியிலும் கூட, பொதுமக்களுக்கான உணவு விநியோகங்கள் இடம்பெற்று வந்ததாக சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தனர்.

978. சுயாதீனமாக எடுக்கப்பட்ட பெருந்தொகையான சான்றுகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன. அவை எல்ரீரீஈ இயக்கத்திற்குக் கிடைக்கும் மருந்துப்பொருட்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில், தேவை ஏற்பட்ட போது, அரசாங்க மருத்துவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன என்பதனையும், அரசாங்க விநியோக மார்க்கங்களுக்கு புறம்பான விதத்தில் எல்ரீரீஈ இயக்கம் சுயாதீனமான விநியோக மார்க்கங்களை கொண்டிருந்தது என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றன.[1042]

979. மோதலின் தீவிரத் தன்மை அதிகரித்து வந்தமை மற்றும் அதேபோல எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களுக்கூடாக பல தடவை இடம்பெற்ற இடப்பெயர்ச்சிகள் என்பவற்றின் காரணமாக, வன்னியிலிருந்து வந்த குடித்தொகையினரின் துல்லியமான எண்ணிக்கையைக் கணிப்பிடுவது சிக்கலான ஒரு காரியமாக இருந்து வந்தது என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன்

[1041] WS on file

[1042] WS on file

விசாரணைக் குழு ஏற்றுக் கொள்கின்றது. எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் மோதலின் இறுதிக் கட்டங்களின் போது வெளியில் வந்த பொதுமக்களின் எண்ணிக்கை என்பவற்றுக்கிடையிலான கணிசமான அளவிலான வித்தியாசத்துக்கு, அரசாங்கத் தரப்பில் இடம்பெற்ற பிழையான கணிப்பீடு என்ற விதத்தில் விளக்கமளிக்க முடியாது.

980. ஆளில்லாத விமானங்கள் அல்லது வேவு பார்க்கும் விமானங்கள் மோதல் வலயத்திற்கு மேலே அடிக்கடி பறந்து சென்றதாகவும், அவை படங்களைச் சேகரித்ததாகவும் பெருந்தொகையான சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக்குத் தெரிவித்திருந்தனர். அப்படங்களில் ஒரு சில பாதுகாப்பு அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்ததுடன், விசாரணைக் குழு அவற்றைப்பார்வையிட்டிருந்தது. உதாரணமாக, 2009 ஏப்ரல் 20 ஆந் திகதி புதுமாத்தளன் பகுதியிலிருந்து மக்கள் தப்பிச் செல்வதைக் காட்டும் விமானப் படங்கள் மிகத் தெளிவாக இருந்து வருவதுடன், அவை கூடாரங்களையும், கடற்கரையில் இடம்பெறும் மக்கள் நடமாட்டத்தையும் காட்டுகின்றன.[1043] 2014 அக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டியிடம் முன்வைத்த அதன் அறிக்கையிலும், வேறு பல சந்தர்ப்பங்களிலும் மோதல் வலயத்திற்கு மேலே தொடர்ச்சியாக வேவு பார்க்கும் விமானங்கள் பறந்து சென்று தகவல்களைச் சேகரித்ததாகவும், அவை களத்தில் என்ன நடக்கின்றது என்பது குறித்து உடனுக்குடன் படங்களை தமக்குப் பெற்றுத் தந்ததாகவும் அரசாங்கம குறிப்பிட்டுள்ளது.

### சுகாதாரம், உணவு, தண்ணீர் மற்றும் பொதுச் சுகாதாரம் என்பவற்றுக்கான உரிமைகள் தொடர்பாக அரசாங்கத்தின் செயற்பாடுகள் எடுத்து வந்திருந்த தாக்கம்

981. மோதலின் கடைசி ஐந்து மாதக் காலப் பிரிவின் போது, பொதுமக்கள் மீண்டும் மீண்டும் இடம்பெயர நேர்ந்திருந்த ஒரு பின்னணியில் உணவு, தண்ணீர், பொதுச் சுகாதாரம் மற்றும் உயிர்ப் பாதுகாப்பு, மருத்துவப் பராமரிப்பு என்பவற்றை வழங்கும் விடயத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அவர்கள் மீது எடுத்து வந்திருந்த தாக்கத்தைக் கீழே உள்ள பிரிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. யுனிசெப் 2009 ஏப்ரல் 28 ஆந் திகதி வெளியிட்ட மனிதநேய செயற்பாடுகளின் பின்னைய நிலைமை தொடர்பான அறிக்கையில் மோதல் வலயத்தில் அண்மையில் இடம்பெயர்ந்திருந்த பொதுமக்கள் “மிக மோசமான நிலைமைகளை” எதிர்கொண்டிருந்தார்கள் என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தது. “பாதுகாப்பான குடிநீர் மற்றும் பொதுச் சுகாதார வசதிகளின் தட்டுப்பாடு, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மருந்துகள் என்பன இல்லாமை, அதேபோல உணவுத் தட்டுப்பாடு என்பவற்றையும் இது உள்ளடக்கியிருந்தது. (ஐந்து வயதுக்குக் குறைந்த நான்கு பிள்ளைகளில் ஒரு பிள்ளைக்கும் அதிகமானவர்கள் நாட்பட்ட போஷாக்கின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்).”[1044] மனித உரிமைகள் தொடர்பான ஐநா ஆணையாளரும் “மோதல் வலயத்திலிருந்து வெளியே வரும் பொதுமக்கள் நோயுற்றவர்களாக, பட்டினி கிடப்பவர்களாக, மோசமான போஷாக்கின்மை மற்றும் நீராகாரமின்மை என்பவற்றினால் நலிந்து போனவர்களாக இருந்து வருகின்றனர்” என்ற விடயம் தொடர்பாகக் கவனத்தை ஈர்த்திருந்தார்.[1045]

---

[1043] இலங்கை பாதுகாப்பு அமைச்சு இணையதளம்: http://www.defence.lk/main_res.asp?fname=videos_ATRO

[1044] சிறுவர்களின் நெருக்கடி: 100,000 மக்கள் போர் வலயத்திலிருந்து தப்பிச் செல்கின்றார்கள், இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு சிக்குண்டிருக்கின்றார்கள். யுனிசெப் மனிதநேய செயற்பாடு தொடர்பான பிந்திய அறிக்கை, இலங்கை ஏப்ரல் 28, 2009

[1045] அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர், மே 20.

982. ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றால் கொல்லப்பட்டவர்களைத் தவிர, பெருந்தொகையான மக்கள் பட்டினி, அதீத களைப்பு, மருத்துவ பராமரிப்பின்மை என்பவற்றின் விளைவாக,உயிரிழந்துள்ளார்கள் என்ற விடயத்தை சாட்சிகள் முன்வைத்த சான்றுகளும், ஏனைய ஆவணங்களும் குறிப்பிட்டுள்ளன. உணவு மற்றும் மருத்துவப் பராமரிப்பு கிடைக்காமையின் காரணமாக ஏராளமானவர் - குறிப்பாக, வயோதிபர்கள் மற்றும் சிறுவர்கள் போன்ற எளிதில் பாதிப்படையக் கூடிய தரப்பினர் - உயிரழந்துள்ளார்கள் என்ற விடயம் விசாரணைக்குட்படுத்தப்படுதல் வேண்டும்.

### உணவுக்கான உரிமை பறிக்கப்பட்டமை

983. மோதலின் இறுதி ஐந்து மாதங்களின் போது வன்னிக்குள் குறைந்த அளவிலான உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் என்பவற்றை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியமையை நியாயப்படுத்தும் பொருட்டு, குடித்தொகையை குறைத்துக் காட்டும் புள்ளிவிபரங்களைப்பயன்படுத்தியமை (கீழே பார்க்கவும்) உணவுப் பற்றாக்குறையினாலும், உயரளவிலான போஷாக்கின்மை மற்றும் நாட்பட்ட போஷாக்கின்மையாலும் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த மக்களின் மீது பாரிய பின்விளைவுகளை எடுத்து வந்திருந்தது. வன்னியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு மத்தியில் போஷாக்கின்மை நிலை தேசிய மட்டத்திலும் பார்க்க பெருமளவுக்கு உயர்வாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை ஏற்கனவே 2003 ஆம் ஆண்டில் ஒரு மதிப்பீட்டாய்வு எடுத்துக் காட்டியிருந்தது.[1046]இப்பிரதேசத்திற்குள்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவது தடைசெய்யப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த மதிப்பீட்டாய்வு நடத்தப்பட்டது. வன்னிப் பிரதேசத்திற்குள் போக்குவரத்துச் செய்யப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் உணவல்லாத ஏனைய பொருட்கள் என்பவற்றின் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகளைப் போர் நிறுத்தக் காலப் பிரிவின் போது அரசாங்கம் தற்காலிகமாக தளர்த்தியிருந்த போதிலும், இந்த மதிப்பீட்டாய்வின் பெறுபேறுகள் மோதலின் நீண்ட கால ரீதியான தாக்கத்தையும், வன்னிக் குடிமக்கள் மீது முன்னைய தசாப்தங்களின் போது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளின் தாக்கங்களையும் பிரதிபலித்தன.

984. 2006 ஆம் ஆண்டில் போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்ததுடன் இணைந்த விதத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியதுடன், வன்னிக்குள் எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருட்கள் மீதான கட்டுப்பாடுகள் மேலும் தீவிரமடைந்தன. கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் 2006 அக்டோபர் மாதத்தில் 30 - 40 சதவீதமான வயல்களில் மட்டுமே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது என உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மதிப்பீடு செய்திருந்தது. டீசல் தடை செய்யப்பட்டமை அரிசி ஆலைகளின் செயற்பாடுகளையும் பாதித்திருந்தது.[1047] மக்கள் பாரியளவில் இடம்பெயர்ந்திருந்த நிலை, விவசாயிகள் தமது சாகுபடி நடவடிக்கைகளைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்தை எடுத்து வந்திருந்தது. பாரிய சாகுபடி நிலப்பரப்புக்கள் இலங்கை இராணுவத்தினால் துப்புரவு செய்யப்பட்டதுடன், விவசாயிகள் மீண்டும் திரும்பி வருவது தடுக்கப்பட்டது. மேலும், இலங்கை இராணுவம் ஒரு சில நீர்த்தேக்கங்கள்

[1046] Justus-Liebig-University Giessen, ஜேர்மனியின் Agro Action அமைப்பின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்பட்ட போஷாக்கு தொடர்பான அடிப்படை மதிப்பீட்டாய்வு மார்ச் 2004, http://www.unigiessen.de/cms/fbz/ fb09/institute/ernaehrungs wissenschaft/ag/krawinkel/forschung/nutrition-baseline-report

[1047] வன்னி பிரதேசத்தில் அவசர கால உணவுப் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீடு, அக்டோபர் 2006, உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், http://documents.wfp.org/stellent/groups/public/documents/ena/wfp130895.pdf?iframe

மற்றும் அணைக்கட்டுக்கள் என்பவற்றைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்திருந்ததுடன், வயல் நிலங்களுக்கு நீர் ஓடிச் செல்வதனையும் கட்டுப்படுத்தியிருந்தது. 2008 நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்குகள் மற்றும் நிஷா சூறாவளி என்பன எஞ்சியிருந்த பயிர்களையும் அழித்தன.

985. இதன் விளைவாக, மோதல் அதிகரித்து வந்த நிலையிலும், சமூகங்கள் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறிய நிலையிலும் வன்னியில் அரிசி உற்பத்தி கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்தது.[1048] முல்லைத்தீவிலிருந்த காணிகளில் 50 சதவீதமான காணிகளை மட்டுமே இன்னமும் அணுகக் கூடியதாக இருந்து வருகின்றது என வன்னியிலிருந்த அரசாங்க அதிகாரியொருவர் 2008 டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் தெரிவித்திருந்தார்.[1049] போரின் காரணமாக ஏற்பட்டிருந்த நீண்ட காலப் பாதுகாப்பின்மை நிலை, கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தமை மற்றும் இடப்பெயர்ச்சி என்பவற்றின் காரணமாக மக்கள் காணிகளை அணுக முடியாத நிலையின் விளைவாக உள்ளூர் அரிசி மற்றும் மரக்கறி என்பவற்றில் தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருந்தன. அதனையடுத்து திட உணவுப் பொருட்களின் விலைகளில் செங்குத்தான அதிகரிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய உற்பத்திகள் என்பவற்றின் தட்டுப்பாடு காரணமாக வன்னியில் பொதுவாக விலைவாசி உத்தியோகபூர்வ சந்தை விலைகளிலும் பார்க்க ஐந்து தொடக்கம் பத்து மடங்கு உயர்வாக இருந்து வந்தது.[1050]

986. ஐக்கிய நாடுகள் அமைப்பும், தொண்டு நிறுவனங்களும் கிளிநொச்சியிலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் உணவு உதவி வழங்கும் விடயம் பெருமளவுக்கு கடினமானதாக மாறியது. பல்வேறு பாதுகாப்புச் சம்பவங்களுக்கு மத்தியிலும் கூட, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதை வழி உணவு வாகனத் தொடரணிகள் செயற்படுத்தப்பட்ட முதல் நான்கு மாத காலப் பிரிவின் போது (அக்டோபர் 2008 தொடக்கம் ஜனவரி 2009 வரை) மாதமொன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சராசரி உணவின் அளவு 3,639 மெ.தொன்களாக இருந்து வந்தது. இந்தப் புள்ளிவிபரம் அரசாங்கத்தின் உணவுப் பங்களிப்புக்கள், அதேபோல இந்திய அரசாங்கம் மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றின் உணவுப் பங்களிப்புக்கள் என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளன.[1051]

987. எவ்வாறிருப்பினும், 2009 ஜனவரி 16 ஆந் திகதிக்குப் பின்னர் வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட உணவின் அளவு குறைவடைந்தது. 2009 மார்ச் மாதத்தில் சுமார் 150,000 தொடக்கம் 200,000 வரையிலான மக்களுக்கு மாதமொன்றுக்கு ஆகக் குறைந்தது 3000 மெ.தொன். உணவு தேவையாக இருந்து வருகின்றது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் தெரிவித்திருந்தது.[1052] உணவுப் பொருட்களின் கப்பல் மூலமான

1048 Keen, பக். 13

1049 உள்ளக அறிக்கை, வன்னிக்கான ஐ நா முகவரகங்களுக்கிடையிலான ஆதரவு தூதுக் குழு, வாகன தொடரணி 9 , டிசம்பர் 29-30 , 2009.

1050 உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், அவசர கால உணவுப் பாதுகாப்பு மதிப்பீடு, வன்னி, இலங்கை, அக்டோபர் 2006, http://documents.wfp.org/stellent/groups/public/documents/ena/wfp130895.pdf?iframe; IASC Situation Reports #158 and #159; Tamil Relief Organisation, Humanitarian Crisis in the Vanni, September 2008, http://sangam.org/2008/09/TRO_Crisis_Vanni.php?uid=3066; SEDOT, Vanni Situation Report, September 2008, http://www.padippakam.com/document/ltte/General/v100670.pdf.

1051 வன்னியில் இருந்துவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு விநியோகம், மார்ச் 2009, ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் மனிதநேய செயற்பாட்டு ஒருங்கிணைப்பாளர் அலுவலகம்

1052 வன்னியில் இருந்துவரும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவு விநியோகம், மார்ச் 2009, ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் மனிதநேய செயற்பாடு ஒருங்கிணைப்பாளர் அலுவலகம்.

விநியோகம் மீண்டும் தொடங்கிய 2009 பெப்ரவரி 17 ஆந் திகதிக்கும், மே 9 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கப்பல் மூலமான கடைசி விநியோகத்திற்குமிடையில்[1053]மொத்தக் காலப் பிரிவிற்கும் அனுமதியளிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட உணவு அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் தகவல்களின் பிரகாரம் 2,442 மெ.தொன்களாக மட்டுமே இருந்து வந்துள்ளது.[1054] அமைச்சினால் தயாரிக்கப்பட்ட ஒரு அட்டவணை 2009 பெப்ரவரி மாதத்திற்கும் மே மாதத்திற்குமிடையில் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட உணவு அளவு தொடர்பான விபரங்களைக் காட்டுகின்றது. பெரும்பாலான உணவுப் பொருட்கள் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டிருந்தன என்ற விடயத்தை அந்த அட்டவணை காட்டுகின்றது. அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் "முல்லைத்தீவு யுத்த சூனிய வலயத்திலிருந்த மக்களுக்கு அரசாங்கம் உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க வேண்டியிருந்தது" என பெப்ரவரி 17 ஆந் திகதி குறிப்பிட்டிருந்தார். அதேவேளையில், மொத்த ஐந்து மாத கால பிரிவுக்கும் அது 105 மெ.தொ. உணவை மட்டுமே வழங்கியிருந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மே 7 ஆந் திகதி வெளியிட்ட ஓர் ஊடக அறிக்கையில் இக்காலப் பிரிவின் போது அது கப்பல் மூலம் 2,300 மெ.தொ.க்கு மேற்பட்டஉணவை விநியோகித்திருந்ததாக குறிப்பிட்டிருந்தது.[1055] இது மேலே குறிப்பிடப்பட்ட அரசாங்கத்தின் கப்பற்படுத்தல் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

988. எனவே, இத்தகவலின் பிரகாரம், ஐந்து மாதக் காலப் பிரிவு தொடர்பாக விநியோகிக்கப்பட்ட உணவின் அளவு இடம்பெயர்ந்த மக்களின் மதிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில்,மாதமொன்றுக்கு 3000 மெ.தொன்னின் ஒரு சிறு பாகமாகவே இருந்து வந்துள்ளது. இந்த இடம்பெயர்ந்திருந்த மக்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை, களத்திலிருந்த உள்ளூர் அரசாங்க அதிகாரிகளினால் வழங்கப்பட்டிருந்த புள்ளிவிபரங்களிலும் பார்க்க மிகக் குறைவாக இருந்துவந்தது.[1056] உணவுப் பொருட்களின் விநியோகம் வரையறுக்கப்பட்டதாக இருந்துவந்தது மட்டுமன்றி, உணவு விநியோக கியு வரிசைகள் மற்றும் களஞ்சியசாலைகள் மீது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை கையிருப்புக்கள் மேலும் குறைவடைவதற்கு வழிவகுத்தது. ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வந்தபோதிலும், மக்கள் உணவைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருந்ததாக எண்ணற்ற சாட்சிகள் தமது வாக்குமூலங்களில் குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு சிறு அளவு உணவைப் பெற்றுக் கொள்வதற்கும் கூட அவர்கள் இறுதி நேரத்தில் ஆபத்துக்களைப் பொருட்படுத்தாமல் முன்வந்திருந்தார்கள் அல்லது இனந்தெரியாத தாவரங்களை அவர்கள் உணவாக உட்கொண்டதுடன், அதன் காரணமாக நோய்வாய்ப்பட்டிருந்தனர்.[1057]

989. போதியளவில் உணவு மற்றும் உணவு குறைநிரப்பிகள் கிடைக்காதிருந்த நிலை பாரிய ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தது. குறிப்பாக, வயோதிபர்களும், பிள்ளைகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். நாட்பட்ட போஷாக்கின்மை

---

[1053] மே 14 ஆந் திகதி செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலொன்று 25 மெ.தொ. உணவை இறக்குவதற்கும், மருத்துவ வசதி தேவைப்பட்ட நோயாளிகளை ஏற்றிக் கொள்வதற்கும் முயற்சி செய்தது. ஆனால், சண்டை தீவிரமாக இடம்பெற்று வந்த காரணத்தினால் அது திரும்பிச் செல்ல நேரிட்டது. உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் 500 மெ.தொ. உணவை ஏற்றி வந்த மற்றொரு கப்பலும் அதேநாள் கரையை அணுக முடியாதிருந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்தி வெளியீடு 09/103, மனிதநேய நிவாரண உதவிகள் பொதுமக்களைச் சென்றடையவில்லை, 14 மே, 2009

[1054] உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கப்பல் மூலம் முல்லைத்தீவுக்கு அனுப்பப்பட்டுள்ளன, மனித உரிமைகள் அலகு, அனர்த்த முகமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு, 2009

[1055] சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மோதல் வலயத்திலிருந்து 495 மக்களை வெளியேற்றியதுடன், 25 தொன் உணவை விநியோகித்தது, செய்தி வெளியீடு 09/93, மே 7, 2009

[1056] அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகத்தின் கூற்றின் பிரகாரம் இக்காலப் பிரிவின் போது 3150 மெ.தொ. கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

[1057] WS on file.

மற்றும் போஷாக்கின்மை தொடர்பாக இலங்கையின் மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் மாவட்டங்கள், தேசிய சராசரியிலும் பார்க்க உயர் அளவுகளை எடுத்துக் காட்டியிருப்பதாக யுனிசெப் அமைப்பின் 2009 ஆம் ஆண்டுக்கான மனிதநேய நடவடிக்கை அறிக்கை குறிப்பிட்டிருந்தது.[1058] மோதல் பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் செல்லும் பிள்ளைகளுக்கு மத்தியில் அதிகரித்த அளவிலான நாட்பட்ட போஷாக்கின்மை நிலைகள் அவதானிக்கப்பட்டிருந்தன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஓர் மதிப்பீட்டாய்வின் பிரகாரம், 2009 மே மாதமளவில் நாற்பட்ட போஷாக்கின்மை மார்ச் மாதத்தில் நிலவி வந்த 25 சதவீதத்துடன் ஒப்பிடும் பொழுது 35 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது. 2009 மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் உள்ளூர் மதிப்பீட்டாய்வு 6 வயது தொடக்கம் 60 மாதம் வரையிலான 678 பிள்ளைகளை உள்ளடக்கிய ஒரு எழுந்தமான மாதிரியில் 69.91 சதவீதத்தினர் எடைக் குறைவைக் கொண்டிருந்தனர் என்பதனைக் காட்டியது.[1059]

990. நிவாரணப் பொருட்களை எடுத்துவரும் கப்பலில் மிக மோசமாக போஷாக்கின்மையினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கான உயர் வலு மிக்க BP-100 உணவுப் பொருட்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென, மனிதநேய உதவி தொடர்பான ஆலோசனைக் கமிட்டிக் கூட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் ஐக்கிய நாடுகளின் முகவரகங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தன. ஆனால்,அரசாங்கம் இந்த வேண்கோளை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தது. “பாதுகாப்பு அமைச்சு வெளிப்படுத்தியிருக்கும் பாரதூரமான கரிசனைகளை” உதாரணங்காட்டி அவ்விதம் அது மறுக்கப்பட்டிருந்தது. மரணமடைந்திருந்த எல்ரீரீஈ உறுப்பினர் ஒருவரின் உடலில் உயர் வலுமிக்க BP-100 உணவு காணப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது. அனுப்பி வைக்கப்படும் உணவு எல்ரீரீஈ இயக்கத்திற்குத் திசை திருப்பப்பட்டது என்ற விடயத்தை நிரூபிப்பதற்காக அரசாங்கம் இதனை பயன்படுத்தியிருந்தது.[1060] அரசாங்கம் அதற்குச் சொந்தமான அத்தகைய உணவுப் பண்டங்களை அனுப்பிவைப்பதாக கூறியதுடன், அந்த விடயம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மோதலின் முடிவின்போது உள்ளக இடம்பெயர் முகாம்களுக்குச் சென்று, தம்மைப் பதிவு செய்த சந்தர்ப்பத்தில் பிள்ளைகளுக்கு மத்தியில் அவதானிக்கப்பட்டஉயர் மட்டங்களிலான நாட்பட்ட போஷாக்கின்மை அத்தகைய உணவுப் பொருட்கள் பரவலாக கிடைக்கவில்லை என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

991. மருத்துவத் துறையில் தொழில்புரியும் (பெண்) சாட்சியொருவர் தனது குடும்பதிலிருந்த ஒரு பிள்ளையின் நிலைமையை எடுத்து விளக்கியிருந்தார்: “அப்பிள்ளைகளில் 18 மாதங்கள் வயதான ஒரு குழந்தை மிகக் கடுமையான மந்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. அக்குழந்தையினால் எழுந்துநிற்கவோ, நடக்கவோ முடியவில்லை. எல்லா நேரங்களிலும் அதனை மற்றவர்கள் தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அப்பிள்ளைகளுக்கு உணவு வழங்கப்பட வேண்டுமென்ற விடயத்திற்கு நாங்கள் ஆதரவாகப் பேசியதுடன், அப்பிள்ளைகள் தமது கால்களில் தசைகள் அழியும் அடையாளங்களைக் காட்டினார்கள். அப்பிள்ளைகளின் வயிறு ஊதி பெருத்திருந்ததுடன், உடல் தோலுக்கூடாக எலும்புகள் வெளியே துருத்திக் கொண்டிருந்தன. இந்த வயதைச் சேர்ந்த பிள்ளையொன்றின் சாதாரண கொழுப்புப் படலம் காணாமல் போயிருந்தது.”[1061] மற்றொரு சாட்சி இப்படிக் கூறினார்: “எல்லோரும் பட்டினி கிடக்கின்றார்கள். பிள்ளைகள் போஷாக்கின்மையால்

---

1058 UNICEF, மனிதநேச செயல் அறிக்கை, 2009, http://www.unicef.org/har09/files/har09_SriLanka_countrychapter.pdf

1059 சுகாதார அமைச்சு, போஷாக்குத் தொடர்பான மதிப்பீட்டாய்வு, மார்ச் 25 -31, 2009.

1060 WS on file

1061 WS on file

வாடுவதனையும், வயோதிபர்கள் மிகவும் பலவீனமானவர்களாக இருந்து வருவதனையும் என்னால் பார்க்க முடிகின்றது."[1062]

992. வன்னியில் பணிபுரிந்த அரசாங்க அதிகாரிகளும், தொண்டு நிறுவனங்களின் ஊழியர்களும் இந்த அபாய எச்சரிக்கையைப் பல மாதங்களாக விடுத்துக் கொண்டிருந்தனர். 2009 மார்ச் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் பல வயோதிபர்கள் பட்டினி காரணமாக மரணித்துள்ளார்கள் என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தன.[1063] 2009 ஏப்ரல் மாதத்தில் வவுனியா மாஜிஸ்ட்ரேட் நீதவான் ஒருவர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த வயது முதிர்ந்த உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருந்த நபர்களை விடுவிக்குமாறு கட்டளையிட்டிருந்தார். அந்த முகாம்களில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த மரணங்கள் பட்டினி காரணமாகவே ஏற்பட்டிருந்தன என அவர் குறிப்பிட்டிருந்தார் (பார்க்கவும் அத்தியாயம் XVI - உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருந்த நபர்களைச் சோதனை செய்தல் மற்றும் அவர்களுடைய சுதந்திரத்தைப் பறித்தல்). உணவைப் பெற்றுக் கொள்வதில் வயோதிபர்கள் எதிர்கொண்டு வந்த சிரமங்களைப் பெருந்தொகையான சாட்சிகள் எடுத்துக் காட்டியிருந்ததுடன், தொடர்ச்சியான இடப்பெயர்ச்சிகள், உணவுத் தட்டுப்பாடு மற்றும் பராமரிப்பாளர்களின் தட்டுப்பாடு என்பன காரணமாக அவர்கள் பலவீனமடைந்திருந்தனர்.

993. உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்கள் வன்னியிலிருந்து வந்தவுடனேயே சந்தித்திருந்த தொண்டு நிறுவன ஊழியர் ஒருவர் அவர்களிடையே போஷாக்கின்மையைக் காட்டும் வெளிப்படையான அடையாளங்கள் இருந்து வருகின்றன என்ற விடயத்தை ஊர்ஜிதம் செய்திருந்தார்.[1064] ஐநா வின் மூத்த அதிகாரயொருவர் தான் இதுவரையில் பார்த்த மிக மோசமான விதத்தில் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்த நபர்களில் இவர்களும் அடங்குகின்றனர் எனக் கூறியிருந்தார். மே மாதத்தின் நடுப்பகுதியில் ஓமந்தையின் முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் மெலிந்து வாடியிருந்த பெண்களையும், ஆண்களையும், பிள்ளைகளையும் தான் பார்த்ததாக ஒரு உள்ளூர் மனிதநேயப் பணியாளர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் கூறினார். வேலிக்கூடாக தான் வீசிய தண்ணீர் போத்தலொன்றை எடுத்துத் திறப்பதற்கு முன்னர் வயோதிபர் ஒருவர் கீழே விழுந்து மரணிப்பதை பார்த்ததாகவும் அப்பெண்மணி கூறியிருந்தார்.[1065] 2009 மார்ச் மாதத்திற்கும் மே மாதத்திற்குமிடையில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோப் படங்கள் என்பன சாட்சிகளினால் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தன. அவை வெளியில் பிதுங்கிக் கொண்டிருக்கும் கண்கள், தோலில் துருத்திக் கொண்டிருக்கும் எலும்புகள் மற்றும் மிகவும் மெல்லிய முழங்கால்களைக் கொண்ட பிள்ளைகளைக் காட்டுகின்றன.

994. ஐக்கிய நாடுகள் முகவரகங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் என்பன மோதல் வலயத்தில் நிலவி வரும் உணவுத் தட்டுப்பாடு மற்றும் பொதுமக்களின் பரிதாப நிலை என்பன தொடர்பான பிரச்சினையை இரகசியக் கலந்துரையாடல்களின் போதும், பகிரங்க அறிக்கைகளுக்கூடாகவும் அடிக்கடி அரசாங்கத்திடம் எழுப்பியிருந்தன.[1066]மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசர கால நிவாரணம் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரதிச் செயலாளர் நாயகம் திரு. ஜோன் ஹோம்ஸ் இலங்கை தொடர்பான தனது விஜயத்தையடுத்து பெப்ரவரி 27 ஆந் திகதி பாதுகாப்புச் சபையிடம் விடயங்களை முன்வைத்தார். அதில்

1062 WS on file

1063 சுகாதார பிராந்திய பணிப்பாளரின் கடிதம், மார்ச் 2, 2009.

1064 WS on file.

1065 WS on file.

1066 உதாரணமாக, 2009 பெப்ரவரி 6 ஆந் திகதி உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் "இலங்கையில் போர் வலயத்திலிருக்கும் 250,000 பேருக்கு உணவு தேவை" என்ற தலைப்பில் ஒரு செய்தி அறிக்கையை வெளியிட்டிருந்தது https://www.wfp.org/stories/sri-lanka-vanni

உணவு, மருந்துப் பொருட்கள், சுத்தமான நீர், பொதுச் சுகாதார வசதிகள் மற்றும் தங்குமிடம் என்பவற்றின் விநியோகம் பாரதூரமான விதத்தில் குறைவாக காணப்பட்ட நிலைமையை எடுத்துக் காட்டியிருந்ததுடன், பொருள் விநியோகங்கள் “மேலும் பெருமளவுக்கு அதிகரிக்கப்பட வேண்டும்” என வேண்டுகோள் விடுத்திருந்தார்.[1067] அகதிகளுக்கான ஐநா உயர் ஸ்தானிகர் 2009 மே 20 ஆந் திகதி வெளியிட்ட செய்தி அறிக்கையொன்றில், மோதல் வலயத்திலிருந்து வெளியில் வந்து கொண்டிருந்த பொதுமக்கள் “நோயுற்றவர்களாக, பட்டினி கிடப்பவர்களாக நாட்பட்ட போஷாக்கின்மையினால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்து வருவதாக” வர்ணித்திருந்தார்.[1068]

995. அதனையடுத்து, அரசாங்க அதிகாரிகளோ ஐக்கிய நாடுகள் முகவரகங்களோ அல்லது ஏனையவர்களோ உணவுத் தட்டுப்பாடு தொடர்பாக தம்மிடம் கரிசனைகளை எழுப்பியிருக்கவில்லை என அரசாங்கம் இதனை மறுத்தது. “எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்க அதிபர்களினாலேயோ அல்லது உணவு மற்றும் பொது வசதிகள் தொடர்பான துறைசார் கமிட்டியினாலோ அல்லது ஐக்கிய நாடுகள் அல்லது ஏனைய முகவரகங்களினாலேயோ, உணவுத் தட்டுப்பாடு, இலங்கை அரசாங்கம் மேலதிகமாக கவனஞ்செலுத்த வேண்டியிருக்கும் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது என்ற விடயம் எழுப்பப்பட்டிருக்கவில்லை.”[1069]

996. தண்ணீர் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கான உரிமை

997. பிளாஸ்டிக் தண்ணீர்த் தாங்கிகள், கழிப்பறைகள் மற்றும் நீர்ப் பம்புகளுக்கான எரிபொருள் போன்ற உணவல்லாத பொருட்களை வன்னிக்குள் போக்குவரத்துச் செய்வது தொடர்பாக அரசாங்கம் ஏற்கனவே ஒரு நீண்ட கால ரீதியான கட்டுப்பாட்டை விதித்திருந்தது. அதன்விளைவாக, குறிப்பாக மோதல் தீவிரமடைந்த பொழுது தண்ணீர் மற்றும் பொதுச் சுகாதார வசதிகளின் தட்டுப்பாடுகள் அதிகரித்ததுடன், அதன் மூலம் நீரினால் காவப்படும் நோய்கள் பரவக் கூடிய ஆபத்துக்கள் அதிகரித்துவந்தன.

998. உதாரணமாக, இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையிலும், உள்ளூர் கிணறுகள் குடிப்பதற்கும், துவைப்பதற்கும், சமைப்பதற்கும் போதியளவில் நீரை வழங்காதிருந்து வந்த நிலையிலும் சுத்தமான நீரின் தட்டுப்பாடு ஒரு பாரிய மனிதநேயப் பிரச்சினையாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை தொண்டு நிறுவனங்கள் ஏற்கனவே 2009 பெப்ரவரி மாதத்தில் எழுப்பியிருந்தன. 2009 மார்ச் மாதத்தில் இரண்டாவது யுத்த சூனிய வலயத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு தற்போது கிடைக்கும் நீரிலும் பார்க்க ஐந்து மடங்கு நீர் தேவையாக இருந்து வருகின்றது என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்திருந்தது. மேலும், தற்போது கிடைக்கும் நீர் நாளொன்றுக்கு 35,000 க்கு குறைந்த மக்களுக்கே விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்ற விடயத்தையும் அது குறிப்பிட்டிருந்தது.[1070]

999. சுத்தமான நீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டு வருகின்றது என்ற விடயம் குறித்து அதே மாதத்தில் ஏனைய தொண்டு நிறுவனங்களும் கவனத்தை ஈர்த்திருந்தன. நீர் மற்றும் பொருத்தமான பொதுச்சுகாதார வசதிகள் இல்லாமை காரணமாக தொற்று

---

[1067] இலங்கையின் மனிதநேய நிலைமை தொடர்பாக பாதுகாப்புச் சபைக்கு விடயங்களை எடுத்து விளக்குதல்,மனிதநேய விவகாரங்கள் மற்றும் அவசரகால நிவாரணம் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரதிச் செயலாளர் நாயகம் திரு. ஜோன் ஹோம்ஸ், பெப்ரவரி 27, 2009http://www.innercitypress.com/sri1holmes022709.pdf

[1068] அகதிகளுக்கான ஐநா உயர்ஸ்தானிகர் இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வசித்து வந்த முகாம்களின் நிலைமை குறித்து கரிசனை கொண்டிருந்தார்,மே 20, 2009.

[1069] ஜனாதிபதி செயலணி, இலங்கையின் மனிதநேய முயற்சி, பந்தி. 48, பக். 17.

[1070] வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் மனிதநேய ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கான ஐநா அலுவலகம், தண்ணீர், பொதுச் சுகாதாரம், சுகாதாரம் மற்றும் போஷாக்கு, மார்ச் 2009

நோய்கள் பரவக் கூடிய ஆபத்து இருந்து வருவதாகவும் அவை குறிப்பிட்டிருந்தன. உடனடியாக தேவைப்பட்ட தண்ணீர் தூய்மைப்படுத்தும் மாத்திரைகள் மற்றும் தண்ணீர்த் தாங்கிகள் என்பவற்றை வழங்குவதற்கு அதிகாரிகள் மறுத்ததாக ஒரு மூத்த ஐநா அதிகாரி இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் கூறினார். 2009 மே மாதத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் குளோரீன் பீப்பாய்களையும் ஏற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் முகவரகம் ஒன்றுக்கு பூர்வாங்க இசைவு கிடைத்திருந்தது. ஆனால், அவை படகில் ஏற்றப்படவிருந்த சந்தர்ப்பத்தில் எல்ரீரீஈ இயக்கத்தினால் ஓர் ஆயுதமாக அவை பயன்படுத்தப்பட முடியும் எனக் கூறி இராணுவத்தினால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

1000. மோதலின் இறுதி மாதங்களின் போது, குறிப்பாக ஒரு சிறிய வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் ஆயிரக்கணக்கான மக்கள் மிகவும் நெருக்கமான விதத்தில் வசித்து வந்த மூன்றாவது யுத்த சூனிய வலயத்தில் மிக மோசமான வாழ்க்கை நிலைமைகள் நிலவி வந்ததாக சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தார்கள். தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட கியூ வரிசைகள் இருந்து வந்ததாகவும், மொத்தக் குடும்பங்களும் தமது உடல்களை கடலில் கழுவிக் கொள்ள வேண்டியிருந்தது என்றும் அவர்கள் கூறினார்கள். தமது சொந்தக் குடும்ப உறுப்பினர்கள், மற்றும் ஆயிரக்கணக்கான ஏனைய மக்கள் ஆகியோர் முன்னிலையில் சில சமயங்களில் தலைக்கு மேலால் விமானங்கள் பறந்து கொண்டிருக்கும் பொழுது, கடற்கரையில் மலம் கழிக்க வேண்டி நேரிடும் அதீத சங்கட உணர்வு மற்றும் சிறுமை என்பவற்றைப் பலர் எடுத்து விளக்கியிருந்தார்கள். கடற்கரை நெடுகிலும் இருந்த நீர் மாசாக்கப்பட்டிருந்தது. ஆனால், தம்மையும், தமது சமையல் உபகரணங்களையும் கடல் நீரில் கழுவுவதைத் தவிர,தமக்கு வேறு எத்தகைய தெரிவும் இருந்துவரவில்லை என இடம்பெயர்ந்த மக்கள் கூறினார்கள். மீனவர்கள் இந்த மாசடைந்த நீரில் மீன்களை பிடித்து, பட்டினி கிடந்த மக்களுக்கு அவற்றை விற்பனை செய்தார்கள். சாட்சியொருவர் விசாரணைக் குழுவிடம் இப்படிக் கூறினார்: “இந்த மீன் மாசாக்கப்பட்ட நீரிலிருந்து பிடிக்கப்பட்டது என்பது எனக்குத் தெரியும். ஆனால், எனக்கு வேறு எந்தத் தெரிவும் இருந்து வரவில்லை. எனது குடும்பத்திற்கு உணவளிக்க வேண்டும்.”[1071]

### அவசர கால மருத்துவப் பராமரிப்பினை அணுகுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டமை

1001. மோதல் இடம்பெற்று வரும் சூழ்நிலைக்கு மத்தியிலும் கூட, பொதுமக்கள் அதேபோல போர் நடவடிக்கைகளில் இனிமேலும் பங்கேற்காதிருக்கும் நபர்கள் ஆகிய இரு தரப்பையும் சேர்ந்த நோயாளிகள் மற்றும் காயப்பட்டோருக்கு உயிர்ப் பாதுகாப்பு மருத்துவப் பராமரிப்பு வழங்கப்படுதல் வேண்டும் என சர்வதேச மனிதநேயச் சட்டம் அவசியப்படுத்துகின்றது. அரசாங்கத்தின் இறுதிப் போர் நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்பட்ட மாதங்களின் போது, கிடைக்கக் கூடியதாக இருந்த மருத்துவப் பராமரிப்பு வசதிகள் தீவிரமான விதத்தில் வீழ்ச்சியடைந்திருந்தன. இதற்குப் பல காரணங்கள் இருந்து வந்தன: மருத்துவ நிலையங்கள் மீது தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் அவை இடம்பெயர்ந்தமை, சுகாதாரத் துறை ஆளணியினரின் கடுமையான முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புணர்வு என்பவற்றுக்கு மத்தியிலும் கூட பராமரிப்பை வழங்கும் அவர்களுடைய ஆற்றல் குறைவடைந்து வந்தமை, குறிப்பாக தீவிரமான ஷெல் தாக்குதல்களின் விளைவாக, மருத்துவப் பராமரிப்பு தேவைப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் கிடைக்கும் மருந்துப் பொருட்களின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றைக் குறிப்பிட முடியும் - இடப்பெயர்ச்சி காரணமாக இடம்பெற்ற இழப்புக்கள், ஷெல் தாக்குதல் காரணமாக ஏற்பட்டிருந்த அழிவு மற்றும் வன்னிக்குள் பிரவேசிக்கும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தொடர்பாக

[1071] WS on file

விதிக்கப்பட்டிருந்த கடுமையான கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கூடாக இந்நிலைமை ஏற்பட்டிருந்தது.

1002. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வந்த பெரும்பாலான மருத்துவமனைகள் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்பட்டு வந்த காரணத்தினால் அவை கொழும்பிலிருந்து உத்தியோகபூர்வ மார்க்கங்களுக்கூடாக மருந்துப் பொருட்களை பெற்றுக் கொள்வதிலேயே பெருமளவுக்கு தங்கியிருந்து வந்தன. மருந்துப் பொருட்கள் இறுதியில் கடற்படையினரால் திருகோணமலையில் வைத்து கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்னர் பொருட் கட்டளைகளை முன்வைக்கும் விதத்தில் காணப்பட்ட சிக்கலான தன்மை, ஒப்புதல்களை வழங்குதல் மற்றும் சோதனை நடைமுறைகள் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. இதன் விளைவாக, அத்தியாவசிய மருந்துப் பொருட்களில் ஒரு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது.

1003. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களினால் அரசாங்க அதிபரிடம் காலாண்டுக்கு ஒரு முறை சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோள்களின் அடிப்படையில்,சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சினால் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன என சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனர். அரசாங்க அதிபர்கள் அந்த வேண்டுகோள்களை சுகாதார அமைச்சிடம் சமர்ப்பித்தனர். ஸ்தாபிதமாயிருக்கும் நடைமுறையின் பிரகாரம், வன்னிப் பிரதேசத்திற்குப் போக்குவரத்துச் செய்யப்பட வேண்டிய அனைத்து மருந்துப் பொருட்கள் தொடர்பாகவும் அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சின் முன்னனுமதியைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த மருந்துப் பொருட்களின் அளவை அரசாங்கம் முறையான ஒரு ஒழுங்கில் குறைத்ததாகவும்,ஒப்புதல் வழங்கும் நடைமுறை தாமதப்படுத்தப்பட்டதாகவும், சில சமயங்களில் விநியோகங்கள் பின்போடப்பட்டதாகவும் சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனர். அதேவேளையில், ஏனைய சந்தர்ப்பங்களில் இராணுவம் வன்னிப் பிரதேசத்திற்குள் எடுத்துச்செல்லும் குறிப்பிட்ட சில மருந்துப் பொருட்களின் போக்குவரத்துக்கு அனுமதி வழங்குவதற்கு மறுத்திருந்தது.[1072] மருந்துப் பொருட்களுக்கான அனுமதி கொழும்பில் வழங்கப்பட்டு, அங்கிருந்து அவை வவுனியாவுக்கு போக்குவரத்துச் செய்யப்பட்டன. ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவை வன்னிப் பிரதேசங்களுக்குள் எடுத்துச் செல்லப்படவில்லை.[1073] ஏனைய பண்டங்களைப் போலவே, வன்னிப் பிரதேசத்திற்குள் பாதைப் போக்குவரத்துக்கூடாக எடுத்துச் செல்லப்பட்ட மருந்துப் பொருட்கள் ஓமந்தையில் இராணுவத்தினரால் இறக்கிப் பரிசோதிக்கப்பட்டன. வன்னியில் சுகாதாரத் துறை மிக மோசமான விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்ற விடயத்தை ஏற்கனவே 2006 ஆம் ஆண்டில் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் அறிக்கையிட்டிருந்தது: அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பிரதேசத்திற்குள் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால், தற்பொழுது விதிமுறைகள் தெளிவற்றதாக இருந்து வருவதுடன், சுகாதார நிலையங்கள் உயிர்ப் பாதுகாப்புக் கருமங்களை பராமரித்து வருவதில் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றன.[1074]

1004. 2009 ஜனவரி மாதம் தொடக்கம், இராணுவம் சுகாதாரத் துறை மற்றும் மருந்து வழங்கல்கள் மீது அதிகரித்த அளவிலான கட்டுப்பாட்டை பிரயோகித்து வந்தது. மருந்துப் பொருட்கள் கப்பல் மூலம் போக்குவரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், மிகவும் சிக்கலான ஒப்புதல் வழங்கும் நடைமுறை அமுலில் இருந்தது. மோதல் வலயத்திலிருந்து வந்த அரசாங்க மருத்துவத் துறை

[1072] WS on file

[1073] WS on file

[1074] அவசர கால உணவுப் பாதுகாப்பு மதிப்பீடு, வன்னி, இலங்கை, உலக உணவு நிகழ்ச்சித்திட்டம், அக்டோபர் 2006

ஆளணியினர் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சின் மருந்துப் பொருட்கள் வழங்கல் பிரிவுக்கு ஒரு வேண்டுகோளை அனுப்பிவைக்க வேண்டியிருந்தது. சுகாதார அமைச்சு அதற்குப் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலைக் கோரியது. அனுமதி கிடைத்த பின்னர், சுகாதாரப் பராமரிப்பு அமைச்சு மருந்துப் பொருட்களை திருக்கோணமலைக்கு போக்குவரத்துச் செய்து, அங்கு அவற்றை கடற்படையிடம் ஒப்படைத்தது. அதன்பின்னர் கடற்படை அந்த மருந்துப் பொருட்களை பரிசோதனை செய்து, அதனையடுத்து பாதுகாப்பு அமைச்சிடமிருந்து மேலும் உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பின்னர் கடற்படையினர் அவற்றைப் பரிசீலித்து, வன்னிப் பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக அரசாங்க மருத்துவ விநியோக கப்பல்களில் ஏற்றினர்.[1075]

1005. அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் தகவல்களின் பிரகாரம்,[1076] 2009 பெப்ரவரி மாதம் 19 ஆந் திகதிக்கும், மே மாதம் 9 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது, வன்னியிலிருந்த மருத்துவத் துறை ஆளணியினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்களிலிருந்து ஒன்பது தடவைகள் வரையறுக்கப்பட்ட மருந்துப் பொருட்களை பெற்றுக் கொண்டிருந்தனா். இரத்தம் சேகரிப்பதற்கான உறைகள், கெட்டாமைன் போன்ற மயக்க மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைக் கத்திகள் போன்ற பொருட்கள் தொடா்பாக அத்தியாவசிய உயிர்ப் பாதுகாப்பு மருந்துப் பொருட்கள் என்ற முறையில் அவற்றுக்கு மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும், அத்தகைய பொருட்களைக் கப்பலில் ஏற்றிச் செல்வதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை. குறிப்பாக, போரினால் காயமடைந்திருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், சீர்குலைந்து கொண்டு வந்த வாழ்க்கைத் தரங்கள் காரணமாக ஏற்பட்டிருந்த நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் அவை தேவைப்பட்டன.[1077] அன்டிபயோடிக், லெடெக்ஸ் கையுறைகள், வலி நாசினிகள் மற்றும் கட்டுப் போடும் பொருட்கள் போன்ற மருத்துவப் பொருட்களின் அளவு சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சினால் குறைக்கப்பட்டிருந்தன என தாம் நம்புவதாக சாட்சிகள் இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனா்.[1078]

1006. மயக்க மருந்துகள் தொடா்பாக முன்வைக்கப்பட்டிருந்த ஒரு வேண்டுகோள் தொடா்பாக சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சின் செயலாளா் 2009 மாா்ச் 17 ஆந் தேதியிட்ட கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தாா்: “நோயாளிகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு, மயக்க மருந்துகள், அவற்றைப் பயன்படுத்துவதற்கு பயிற்றுவிக்கப்பட்ட மருந்தாளா்கள் இருந்து வரும் மருத்துவமனைகளுக்கும், சத்திர சிகிச்சைகளை நடத்தக் கூடிய மருத்துவர்கள் இருந்து வரும் மருத்துவமனைகளுக்கும் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றன. உங்கள் மருத்துவமனையில் இந்த இரு வகையைச் சேர்ந்த ஆளணியினரும் இல்லாதிருப்பதனால் அவற்றை அங்கு அனுப்பி வைப்பது சாத்தியமில்லை.’’[1079] மூத்த சத்திர சிகிச்சை மருத்துவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் போரினால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவத் துறை

[1075] WS on file.

[1076] கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம், சுகாதார அமைச்சின் செயலாளரின் கடிதம், வட மாகாணம், பிராந்திய மருத்துவ வழங்கல்கள் பிரிவு, உடனடி மருந்துப் பொருட்களின் பட்டியல், ஜுன் 2, 2009 http://www.refworld.org/pdfid/ 4d89afd 815 c5 .pdf; உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் முல்லைத்தீவுக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன 2009, மனித உரிமைகள் பிரிவு, அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு

[1077] WS on file

[1078] WS on file

[1079] இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பிலிருக்கும் கடிதம், மாா்ச் 17, 2009.

ஆளணியினரில் சத்திர சிகிச்சை மருத்துவர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தார்கள் என்றும், அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்கத்தினாலேயே தொழிலில் அமர்த்தப்பட்டிருந்ததாகவும் சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தார்கள்.

1007. அனுமதியளிக்கப்பட்ட கப்பல் சரக்குகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அளவுகளிலான மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் என்பவற்றைக் கொண்டிருந்ததுடன், அவை நோயுற்றிருந்தவர்கள் மற்றும் காயமடைந்திருந்தவர்கள் ஆகியோரின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் சிறிதளவு பொருத்தப்பாட்டை மட்டுமே கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. உதாரணமாக, 2009 மார்ச் 3 ஆந் திகதி பல்வேறு அளவுகளிலான நான்கு வகைகளைச் சேர்ந்த மருந்துப் பொருட்களை மட்டுமே கப்பலில் அனுப்புவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. கொழும்பு மருந்துப்பொருள் வழங்கல் பிரிவின் பணிப்பாளருக்கு, வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருந்த மருந்து வகைகளில் 55 மருந்து வகைகளில் ஐந்து மருந்து வகைகள் மட்டும் ஏன் அனுப்பி வைக்கப்படுகின்றன என்பதனை 2009 ஏப்ரல் 1 ஆந் திகதி எடுத்து விளக்குகையில், திருகோணமலை பிராந்திய மருந்துப்பொருள் வழங்கல் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி "போதிய கால அவகாசமின்மையால் பிராந்திய மருத்துவ வழங்கல் பணிப்பாளரினால் வழங்கப்பட்டிருக்கும் பட்டியலிலிருக்கும் ஏனைய பொருட்களை தம்மால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளது" என கடற்படை அதிகாரிகள் தனக்கு தெரிவித்திருப்பதாக கூறியிருந்தார். அனுப்பி வைக்கப்படாத மருந்துப் பொருட்களில் அன்டிபயோடிக், வலி நாசினிகள் மற்றும் கட்டுப் போடும் துணிகள் என்பனவும் அடங்கியிருந்தன.[1080]

1008. 2009 ஏப்ரல் 27 ஆந் திகதி கப்பலின் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள் 10 வகைகளைச் சேர்ந்த தடுப்பூசிகள் மற்றும் இரு வகையைச் சேர்ந்த கருத்தடை மருந்துகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. ஏனைய மருந்துப்பொருட்கள் வழங்கப்பட வேண்டுமென பட்டியல்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், அவை வழங்கப்பட்டிருக்கவில்லை.[1081]

1009. அச்சந்தர்ப்பத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட ஒரு செய்தி அறிக்கை மருந்துப்பொருட்களின் தட்டுப்பாட்டை எடுத்துவிளக்கியிருந்தது. உதாரணமாக, ஏப்ரல் 20 ஆந் திகதி "அவசரமாக தேவைப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் பொதுச் சுகாதார உபகரணங்கள் என்பன சிக்குண்டிருக்கும் மக்களை சென்றடையும் அளவை அதிகரித்துக் கொள்வதற்கு தாம் அயராது முயற்சிகளை எடுத்துவருவதாக" குறிப்பிட்டிருந்தது.[1082] மேலும், அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாடு மற்றும் சுகாதாரமற்ற நிலைமைகள் என்பவற்றின் காரணமாக காயங்களில் தொற்றுக்கள் ஏற்படக் கூடிய ஆபத்து அதிகரித்த அளவில் காணப்படுகின்றது என்ற விடயத்தையும் அது சுட்டிக் காட்டியிருந்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மே 7 ஆந் திகதி வெளியிட்ட மற்றொரு செய்தி அறிக்கையில், அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் என்பன அங்கு வாழ்ந்து வரும் மக்களின் ''அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு போதியதாக இருந்து வரவில்லை." எனக் குறிப்பிட்டிருந்தது.

[1080] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் கோப்பிலிருக்கும் கடிதம், ஏப்ரல் 2, 2009.

[1081] WS on file

[1082] சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்தி வெளியீடு இல. 09/13, ஏப்ரல் 20, 2009: பெப்ரவரி மாதம் தொடக்கம் இலங்கையின் மோதல் வலயத்திலிருந்து 10,000 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளனனர். செய்தி வெளியீடு 09/93, மே 7, 2009 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மோதல் வலயத்திலிருந்து 495 பேரை அப்புறப்படுத்தியிருந்ததுடன், 25 தொன் உணவுப் பொருட்களை வழங்குகின்றது.

1010. எரிபொருள் தட்டுப்பாடுகள் காரணமாக மருத்துவமனைகளில் செயற்படும் ஆற்றலும் பாதிக்கப்பட்டிருந்தது. மின்சார ஜெனரேட்டர்கள், குளிரூட்டிகள் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகள் என்பவற்றை இயக்குவதற்கு எரிபொருள் தேவையாக இருந்துவந்ததே இதற்கான காரணமாகும். 2007 ஆம் ஆண்டு முடிவு வரையில், கிளிநொச்சியிலிருந்த மருத்துவமனைகள் அரசாங்க அதிபருக்கூடாக 6,250 லீற்றர் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது என சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர். 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த அளவு எத்தகைய ஒரு விளக்கமும் அளிக்கப்படாமல் 2,850 லீற்றர்களாகக் குறைக்கப்பட்டது.[1083] மேலும், வன்னியிலிருந்த மருத்துவமனைகளுக்கு எரிபொருளை அனுப்பிவைப்பதிலும் தாமதங்கள் இருந்துவந்தன. உதாரணமாக, 2008 செப்டம்பர் தொடக்கம் 2008 நவம்பர் வரையிலான காலப் பிரிவின் போது, சுகாதார சேவைகளுக்கான எரிபொருள் விநியோகத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும், அதன் விளைவாக, ஒரு சில அம்புலன்ஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.[1084] இது சம்பந்தப்பட்ட மருத்துவமனைகள் எரிபொருளை பாதுகாப்பதற்கென மின்சாரத்தைத் துண்டிக்கும் ஒரு முறையை அறிமுகம் செய்வதற்கு அவற்றைத் தூண்டியிருந்தன.[1085] இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாதை வழி வாகனத் தொடரணிகளின் போக்குவரத்து நிறுத்தப்பட்ட பின்னர் மோதல் முடிவு வரையில் வன்னிப் பிரதேசத்திற்குள் எரிபொருள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை.

1011. மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ வசதிகள் என்பவற்றை இயக்குவதற்கான மின்சார விநியோகமும், தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த மோதல் மற்றும் மருத்துவமனைகள் இடையறாது வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலை என்பவற்றின் காரணமாக உருவாக்கப்பட்டிருந்த எரிபொருள் தட்டுப்பாட்டினால் தாக்கங்களை எதிர்கொண்டிருந்தது. எரிபொருள் தட்டுப்பாடு நோயாளிகளை போக்குவரத்துச் செய்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகளை பயன்படுத்தும் நிலையையும் கட்டுப்படுத்தியிருந்தது.

1012. அரசாங்க மருத்துவமனைகள் அமைந்திருந்த பிரதேசங்கள் எங்கும் மோதல் பரவி வந்த நிலையில் மருத்துவத் துறை ஆளணியினர், உபகரணங்களையும் நோயாளிகளையும், மருத்துவப் பொருட்களையும் முறையான ஒழுங்கில் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்திக் கொண்டிருந்தார்கள். இவ்விதம் மருத்துவமனைகள் இடம்பெயர்ந்த பொழுது, மருத்துவமனைகளுக்கு அருகில் கூடாரங்களை அமைத்து வசித்து வந்த மக்களும் அவற்றுடன் இணைந்து இடம்பெயர்ந்து சென்றார்கள்.

1013. பிரதேசங்கள் இலங்கை இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டு வந்தபொழுது மருந்துப் பொருட்களின் விநியோகமும் படிப்படியாக இல்லாமல்போனது. தொடக்கத்தில் மருத்துவமனை ஆளணியினரால் பெருந்தொகையான மருந்துப் பொருட்களையும், உபகரணங்களையும் புதிய இடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடிய நிலை காணப்பட்டதுடன், மருத்துவமனைகளிலும் மருந்துகள் பெருமளவுக்கு கையிருப்பில் இருந்துவந்தன.[1086]எவ்வாறிருப்பினும், மோதல் தீவிரமடைந்து வந்த நிலையில், கையிருப்புக்கள் தீர்ந்துப் போயின. மருந்துப்பொருட்களை புதிய

[1083] IASC நிலவர அறிக்கை 140, ஆகஸ்ட் 14 – 21 , 2009, http://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/AADCCC7F5BCF3CBAC12574B000480D3D-Full_Report.pdf

[1084] IASC நிலவர அறிக்கை #145, செப்டம்பர் 18-25, http://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/5285B569C0A68021C12574D600427670-Full_Report.pdf

[1085] WS on file

[1086] கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம் கோப்பிலிருக்கும் சத்திய கடதாசி

இடங்களுக்கு எடுத்துச் செல்வது சிரமமாக இருந்து வந்தமையும் இதற்கான ஒரு காரணமாகும். தொடக்கத்தில் அவர்கள் 2008 செப்டம்பர் மாதத்தில் கிளிநொச்சி மருத்துவமனையை வேறு இடத்திற்கு எடுத்துச் சென்ற பொழுது, பெரிய டிரக் வண்டிகளில் மருந்துப் பொருட்களையும் தம்மால் எடுத்துச் செல்ல முடிந்தது என சுகாதாரத் துறைப் பணியாளர் ஒருவர் சொன்னார். 2009 மே மாதத்தின் நடுப்பகுதி அளவில் அங்கு தங்கியிருந்த சிறு அளவிலான மருத்துவத் துறை ஆளணியினரிடம் பிளாஸ்டிக் பைகளில் எடுத்து வந்திருந்த மருந்துப் பொருட்களில் சொற்ப மருந்துகளே எஞ்சியிருந்தன. 2010 ஜனவரி மாதத்தின் முடிவில் கிளிநொச்சி மருத்துவமனை உடையார்கட்டிலிருந்து வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட பொழுது, மருத்துவத் துறை ஆளணியினரால் மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்ல முடியாதிருந்தது. அப்பொருட்கள் வீதியோரங்களில் கைவிடப்பட்டிருந்தன.[1087]

1014. மருத்துவமனையைச் சூழ கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட பொழுது மருத்துவத் துறை ஆளணியினர் காயமடைந்தனர் அல்லது உயிரிழந்தனர். நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கிருந்த மருத்துவர்கள் மற்றும் தாதிமார்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. பல சந்தர்ப்பங்களின் போது, மருத்துவத் துறை ஆளணியினரால் பல மணித்தியாலங்களுக்கு தமது பங்கர்களிலிருந்து வெளியில் வர முடியாதிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில், இடையறாது இடம்பெற்று வந்த ஷெல் தாக்குதல்கள் காரணமாக முழு நாளும் அவர்கள் பங்கர்களுக்குள்ளேயே இருக்க வேண்டியிருந்தது.[1088] (பார்க்கவும் அத்தியாயம் XIII - போர் நடவடிக்கைகள் பொதுமக்களின் மீதும், பொதுச் சொத்துக்கள் மீதும் எடுத்து வந்திருந்த தாக்கம்).

1015. மோதல் தீவிரமடைந்து வந்த நிலையில், போர் சம்பந்தப்பட்ட காயங்களுடன் மருத்துவ சிகிச்சை தேவைப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. சிறு அளவில் இருந்து வந்த மருத்துவத் துறை ஆளணியினரின் மீதும், குறைவடைந்திருந்த மருந்துப் பொருட்களின் கையிருப்புக்கள் மீதும் இது பாரியளவிலான அழுத்தங்களை எடுத்து வந்திருந்தது. வன்னிப் பிரதேசத்திற்குள் விட்டு விட்டு மருந்துப் பொருட்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்த அதேவேளையில், அதிகரித்த எண்ணிக்கையிலான காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளிகள் ஆகியோருக்கு சிகிச்சை அளிப்பதற்கு அவை போதியவையாக இருந்து வரவில்லை. உதாரணமாக, அன்டிபயோடிக் மற்றும் சொட்டு மருந்து என்பவற்றின் தட்டுப்பாடு காரணமாக ஒரு குழந்தையின் தாய் அவரது காலில் ஏற்பட்டிருந்த காயத்தில் தொற்று ஏற்பட்டதன் காரணத்தினால் மரணமடைந்ததாக சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர்.[1089] தாம் யாருக்கு சிகிச்சை அளிப்பது என்பது தொடர்பாக மருத்துவத் துறை ஆளணியினர் மிகக் கடினமாக தெரிவினைச் செய்ய வேண்டியிருந்தது.[1090]

1016. மருத்துவமனைகள் போதிய களஞ்சியசாலை வசதிகளையும், குளிர்சாதனப்பெட்டிகளுக்கான போதியளவிலான எரிபொருளையும் கொண்டிருக்கவில்லை.[1091] இரத்தம் வழங்குபவர்களினதும், இரத்த உறைகளினதும் தட்டுப்பாடு தானம் செய்யப்பட்ட இரத்தத்தைச் சேகரிப்பதற்கு தடையாக இருந்து வந்தது. மோதல் உக்கிர நிலையை அடைந்தபொழுது இரத்த தானம் வழங்குபவர்களால் மருத்துவமனைகளை அணுக முடியாத நிலை காணப்பட்டது. மேலும், மருத்துவத் துறை ஆளணியினரால் வழங்கப்பட்ட இரத்தத்தின் பொருத்தப்பாடு மற்றும் நோய்க் குறிகள் என்பவற்றையும் பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. அதன் விளைவாக, மருத்துவத்துறை ஆளணியினர் சில

[1087] WS on file

[1088] WS on file

[1089] WSon file

[1090] கோப்பிலிருக்கும் சாட்சியின் வாக்குமூலம் ICRC செய்தி வெளியீடுகள்.

[1091] WS on file

சந்தா்ப்பங்களில் சாதாரண இரத்த ஏற்றத்தை மேற்கொண்டார்கள். அதாவது, இந்த நடைமுறையில் நோயாளியின் உடல் துவாரமொன்றில் சேர்ந்திருக்கும் இரத்தத்தை கிருமி நீக்கப்பட்ட ஒரு உறிஞ்சு துணியில் எடுத்து மற்றொரு பாத்திரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதனையடுத்து நோயாளியின் உடலில் ஏற்றப்பட்டது. [1092]

1017. சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்களின பிரகாரம், மயக்க மருந்துகளின் தட்டுப்பாடு காரணமாக மருத்துவத் துறை ஆளணியினர் மயக்க மருந்து எதனையும் கொடுக்காமலேயே சதையில் ஊடுருவியிருக்கும் துகள்கள் போன்ற வஸ்துக்களை அகற்றும் சிறிய சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டனர்.[1093] மோதலின் முடிவுக்கு ஒரு சில நாட்கள் முன்னர் வரையில் சத்திர சிகிச்சைகளில் மயக்க மருந்துகள் இருந்து வந்ததுடன்,அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு உறுதிப்படுத்திக் கொண்டிருந்தது.[1094]

1018. உடனடி மருத்துவப் பராமரிப்பு தேவைப்பட்டிருந்த மிக மோசமாக நோய் வாய்ப்பட்டிருந்தவர்கள் அல்லது காயமடைந்திருந்தவர்கள் ஆகியோரை பாதை வழியாக அல்லது கப்பல் மார்க்கமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வன்னியிலிருந்து போக்குவரத்துச் செய்தது. அநேகமாக தமது காயங்கள் காரணமாக உயிரிழந்திருக்கக் கூடியவர்களின் உயிரைப் பாதுகாப்பதற்கு இது ஏதுவாக அமைந்தது. 2009 ஜனவரி மாத முடிவின் போது, பாதை வழியிலான அணுகுதல் வசதி அனைத்தும் தடைசெய்யப்படும் வரையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதைப் போக்குவரத்து மூலம் வவுனியாவிலிருந்த மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை மாற்றுவதற்கு ஒழுங்கான ஏற்பாடுகளை செய்துவந்தது. வழமையான நடைமுறை நோயாளிகளை,பராமரிப்பாளர்கள் (பக்கத்தில் இருப்பவர்கள் என அழைக்கப்படுபவர்கள்) மருத்துவர் ஒருவரிடம் அழைத்துச் சென்று ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொள்வார்கள். பின்னர் அக்கடிதம் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கென எல்ரீரீஈ இயக்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என சாட்சிகள் கூறினார்கள். வீதிப் போக்குவரத்துக்கூடாக எடுத்துச் செல்லப்பட்ட அனைத்து நோயாளர்களும், அருகில் நிற்பவர்களும் ஓமந்தையில் இலங்கை இராணுவத்தின் சோதனை நடைமுறைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 2008 செப்டம்பர் மாதத்திற்கும், 2009 ஜனவரி மாதத்திற்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மனிதநேய வாகனத் தொடரணிகளின் ஒரு பாகமாக தொடர்ந்தும் நோயாளிகளை மருத்துவமனைகளுக்கு எடுத்துச் சென்றது.

1019. எவ்வாறிருப்பினும், இந்த வாகனத் தொடரணிகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள் சில சந்தர்ப்பங்களில், உடனடி மருத்துவக் கவனிப்பு தேவைப்பட்ட நோயாளிகளை இடமாற்றம் செய்வதனை பல வாரங்களுக்கு தாமதித்தன. 2009 ஜனவரி 29 ஆந் திகதி வன்னிக்குள் பிரவேசித்த இறுதி வாகனத் தொடரணி வன்னியிலிருந்து காயமடைந்த மற்றும் நோயுற்றிருந்த 226 நோயாளர்களை வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றது.[1095] 2009 பெப்ரவரி 10 ஆந் திகதி கப்பல் மூலமாக மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அதன் ஒவ்வொரு பயணத்தின் போதும் சுமார் 500 நோயாளர்களையும், அவர்களுடன் சேர்ந்து செல்லும் பராமரிப்பாளர்களையும் அப்புறப்படுத்தியிருந்தது. 2009 பெப்ரவரி 10 ஆந் திகதிக்கும், ஏப்ரல் 30 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது அவர்கள் 13,000

1092 WS on file

1093 WS on file

1094 WS on file

1095 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்தி வெளியீடு 09/25, ஜனவரி 29, 2009.

க்கும்மேற்பட்டநோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்களையும் அவர்களுடன் இணைந்து செல்லும் பராமரிப்பாளர்களையும் அப்புறப்படுத்தியிருந்தனர்.[1096]

1020. வன்னியிலிருந்த மருத்துவத் துறை ஆளணியினர் மற்றும் தொண்டர்கள் ஆகியோர் மோதலின் போது காயமடைந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு மருத்துவ உதவியை வழங்குவதற்கு அயராது உழைத்து வந்ததாக சாட்சியங்களின் வாக்குமூலங்கள் தெரிவிக்கின்றன. நம்ப முடியாத அளவுக்கு கடினமாக இருந்து வந்த சூழ்நிலைகளில் பல தடவைகள் இடம்பெற்ற இடப்பெயர்ச்சிகளுடன் அவர்கள் பணியாற்றி வந்தார்கள். மேலும், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள், மிகக் கடுமையான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றின் தட்டுப்பாடு என்பவற்றுக்கு மத்தியிலேயே அவர்கள் பணியாற்றியிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு தடவையும் இடம்மாறியிருந்த சந்தர்ப்பத்தில் மருத்துவ வசதிகள் வர வர குறைவடைந்து வந்ததுடன், இறுதியில் மருத்துவத் துறை ஆளணியினரால் முதலுதவியை மட்டுமே வழங்கக் கூடியதாக இருந்து வந்தது.

1021. எனினும், தமது சக மனிதர்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குவதற்கென தமது உயிரை துச்சமென மதித்துச் செயற்பட்ட அவர்களில் பெரும்பாலானவர்கள் மோதலின் முடிவின் போது அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

1022. வன்னியில் மிக மோசமான நிலையில் தீவிரமடைந்து வரும் மனித அவலம்,மருத்துவமனைகள் மற்றும் தற்காலிக மருத்துவ நிலையங்கள் என்பவற்றின் மீது ஷெல் தாக்குதல்கள் எடுத்து வரும் தாக்கம் என்பவற்றை அறிந்திருந்த நிலையிலும் அரசாங்கமும், பாதுகாப்புப் படைகளும் ஒரு சில உயிர் காக்கும் மருந்துப் பொருட்களையும் உள்ளடக்கிய விதத்தில் அவசர கால மருந்துப் பொருட்களை அனுப்பி வைப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தன. மேலும், ஷெல் தாக்குதல்களிலிருந்து மருத்துவத் துறை ஆளணியினரதும், மருத்துவ வசதிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் தவறியிருந்தது.

## XVI. மூடுண்ட முகாம்களில் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்களை வடிகட்டுதல் மற்றும் அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்டமை

### அறிமுகம்

1023. நடமாட்டம் தொடர்பாக எல்ரீரீஈ இயக்கம் விதித்திருந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் 2009 பெப்ரவரி மாதத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்திலிருந்து பொதுமக்களின் வெளியேற்றம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால், இலங்கை இராணுவம் ஏப்ரல் 20 ஆந் திகதி எல்ரீரீஈ இயக்கத்தின் பாதுகாப்பு அரண்களை தகர்த்துக் கொண்டு யுத்த சூனிய வலயம் 2 க்கு ஊடாக புதுமாத்தளன் பகுதியில் முன்னேறிச் சென்றபொழுது, இந்த வெளியேற்றம் பாரியளவில் இடம்பெறத் தொடங்கியது. அதனையடுத்து, தமது ஆயுதங்களை ஒப்படைத்திருந்த எல்ரீரீஈ போராளிகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்தார்கள். மே 15 ஆந் திகதிக்கும், 20 ஆந் திகதிக்குமிடையில் மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் இறுதிப் போர்வலயத்திலிருந்து வெளியேறினார்கள்.அரசாங்கத் தகவல்களின் பிரகாரம், இதனையடுத்து, அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சுமார் 284,000 பேர் வந்திருந்தனர்.[1097]

[1096] சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்தி விவரணம் 03/2009, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆண்டறிக்கை, 2009.

[1097] இலங்கை போருக்குப் பிற்பட்ட முன்னேற்றம், வெளி விவகார அமைச்சு, செப்டம்பர் 2010.

1024. மே 14 ஆந் திகதி தொடக்கம் இலங்கை இராணுவச் சிப்பாய்கள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி அறிவித்தல்களை வழங்கியதுடன், பொதுமக்கள் அதனை செவிமடுத்து, இலங்கை இராணுவத்தின் நிலைகள் அமைக்கப்பட்டிருந்த A35வீதிக்கூடாக வட்டுவாகல் பாலத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். அது மிக முக்கியமான தாண்டிச் செல்லும் ஒரு புள்ளியாக இருந்து வந்தது. உயிருடன் இருந்த பெருந்தொகையான எல்ரீரீஈ போராளிகள் தமது சீருடைகளைக் களைந்து விட்டு, ஆயுதங்கள் மற்றும் ஏனைய இராணுவ உபகரணங்கள் என்பவற்றைக் கீழே போட்டுவிட்டு சாதாரண உடைகளை அணிந்து கொண்டார்கள். எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் பிரிவின் பொறுப்புதாரர்களுடன் இணைந்த விதத்தில் அவர்கள் தமது குடும்பங்களுடன் சேர்ந்து மக்களுடன் மக்களாக நடந்து சென்றார்கள்.[1098]

1025. வீதியெங்கிலும் சிதறுண்டு கிடந்த நூற்றுக்கணக்கான சடலங்களுக்கு மத்தியில் பாலத்தை நோக்கி தாம் நடந்து சென்றதாக சாட்சிகள் விவரித்திருந்தார்கள். கடல் நீரேரியில் சடலங்கள் மிதப்பதை தாம் பார்த்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் மோதல் காலப் பிரிவின் போது பல தடவைகள் இடம்பெயர்ந்தவர்களாக இருந்து வந்ததுடன், பெரும்பாலும் தமது உபயோகப் பொருட்களை இழந்திருந்தனர். அதிகமானவர்கள் போதிய உணவின்மையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களில் பெரும்பாலான உள்ளக ரீதியில இடம்பெயர்ந்த நபர்கள் ஷெல் தாக்குதல்கள் காரணமாக அல்லது சிறு ஆயுதங்களின் சூட்டுத் தாக்குதல் காரணமாக காயமடைந்திருந்தனர். மிகவும் பலவீனமான நிலையிலிருந்து வந்த வயது முதிர்ந்த உறவினர்களை, குடும்ப உறுப்பினர்கள் எவ்வாறு விட்டு விட்டு வந்தார்கள் என்பதனை ஒரு சில சாட்சிகள் கூறியிருந்தார்கள். அந்தக் குடும்ப உறுப்பினர்களும் கூட மற்றவர்களைச் சுமந்து செல்ல முடியாத அளவுக்கு நலிவுற்றவர்களாக இருந்து வந்தனர்.[1099]

1026. நோய்வாய்ப்பட்டவர்கள் அல்லது காயப்பட்டிருந்தவர்கள் தமக்கு உதவி வழங்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்ததாக ஏனையவர்கள் கூறினார்கள். காயமடைந்த அல்லது உடல் ஊனமுற்ற நபர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்வதில் கணிசமான அளவிலான சிரமங்களை எதிர்கொண்டார்கள். ஒரு சிலர் குடும்ப உறுப்பினர்களால் சக்கர நாற்காலிகளில் வைத்து தள்ளிச் செல்லப்பட்டனர். அதேவேளையில், சன நெரிசலுக்கு மத்தியில் ஊன்றுகோல்களுடன் தாம் பயணத்தை மேற்கொள்வது எவ்வளவு போராட்டம் மிக்க ஒரு காரியமாக இருந்து வந்தது என்பதனை ஏனையவர்கள் விளக்கியிருந்தார்கள்.[1100] ஒரு சிலர் வீதியிலிருந்து சற்று விலகிச் சென்ற சந்தர்ப்பங்களில் நிலக்கண்ணி வெடிகளினால் கொல்லப்பட்டனர் அல்லது காயப்பட்டனர்.[1101]

1027. வாட்டுவாகல் பாலத்தைத் தாண்டிய பின்னர், இந்தச் சனக்கூட்டம் முல்லைத்தீவு நகரில் சூழவும் முட் கம்பி வேலிகளினால் அமைக்கப்பட்டிருந்த ஒரு பாரிய பிரதேசத்தை சென்றடைவதற்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் சிப்பாய்களின் வழிநடத்தலில் சுமார் இரண்டு அல்லது மூன்று கி.மீ. தூரம்நடந்துசெல்ல வேண்டியிருந்தது.[1102] இது உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்கள் செல்ல வேண்டியிருந்த மூன்று முள்ளுக் கம்பி வேலியிட்ட பிரதேசங்களில் ஒன்றாக இருந்து வந்தது. இந்த இடத்தில் பன்முகப்பட்ட பாதுகாப்பு,வடிகட்டல் சோதனை மற்றும் பதிவு செய்தல் செயன்முறைகள் இடம்பெற்றன.

[1098] WS on file

[1099] WS on file

[1100] WS on file

[1101] WS on file

[1102] WS on file

1028. தமக்கு போதியளவு உணவு மற்றும் நீர் என்பன கிடைக்கவில்லை என்றும், அவை டிரக் வண்டிகளின் பின்பக்கத்திலிருந்து மக்களை நோக்கி வீசப்பட்டன அல்லது கௌரவக் குறைச்சலானவிதத்தில் வழிமுறைகளில் விநியோகிக்கப்பட்டன என சாட்சிகள் தெரிவித்தார்கள். அந்த நிலையில்,மிகவும் பலவீனமாக இருந்து வந்தவர்களினால் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.[1103] உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த மக்கள் தமது உடலைக் கழுவிக் கொள்ள முடியாதவர்களாக அல்லது கழிப்பறை வசதிகளை அணுக முடியாதவர்களாக இருந்து வந்தார்கள்.[1104] பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைவதற்கு இடமின்றி இருந்து வந்ததுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் சுமார் மூன்று நாட்கள் வரையில் திறந்த வெளிகளில் இருக்க நேரிட்டது. மிகவும் பாரதூரமான விதத்தில் காயமடைந்தவர்கள் அல்லது நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள், சாட்சிகளின் கூற்றுக்களின் பிரகாரம், புறம்பாக எடுக்கப்பட்டு, மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டார்கள் எனக் கூறப்படுகின்றது. எனினும், அவர்களில் ஒரு சிலர் இதனையடுத்து தடுப்பு முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார்கள்.[1105]

1029. இப்பிரிவு உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த சோதனை நடைமுறைகளை எடுத்து விளக்குவதுடன், அதனையடுத்து மூடுண்ட முகாம்களில் அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்த விதத்தையும் எடுத்து விளக்குகின்றது. யதார்த்தத்தில் எத்தகைய சட்ட அடிப்படையும் இல்லாமல் அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்தது. பல மாதங்களின் பின்னரேயே அரசாங்கம் நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, பெருந்தொகையான மக்களுக்கு மீள் குடியேறுவதற்கு அனுமதி வழங்கியது.

1030. அரசாங்கம் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பல்வேறு இடங்களில் தடுப்பு முகாம்களை அமைத்திருந்த போதிலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுமுதன்மையாக வவுனியாவிலிருந்த மெனிக்பார்ம் முகாம் மீதே கவனம் செலுத்தியிருந்தது. இந்த முகாம் 2009 ஏப்ரல் மாதத்திற்கும், 2012 செப்டம்பர் மாதத்திற்குமிடையில் ஆகக் கூடிய உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்களைக் கொண்டிருந்தது. இறுதியில் அது மூடப்பட்ட பொழுது அதன் உச்சக் கட்டத்தில் சுமார் 220,000 உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள்.

1031. 2009 மே நடுப் பகுதியில் மோதலின் முடிவையடுத்து வன்னியிலிருந்து வந்தவர்கள் மற்றும் மோதல் முடிவடைவதற்கு முன்னர் எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள் ஆகியோரின் சாட்சிகள் மூலம் வழங்கப்பட்ட சான்றுகளையே இந்தப் பிரிவு பெருமளவுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு மனிதநேய நிவாரணப் பணியாளர்களுடன் மேற்கொண்ட நேர்காணல்கள், சமர்ப்பணங்கள், அரசாங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு என்பவற்றின் அறிக்கைகள் மற்றும்ஏனைய பகிரங்கமாகக் கிடைக்கும் மூலாதாரங்கள் என்பவற்றிலிருந்தும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு மேலதிகமாக தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

### அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக ரீதியான தடுப்புக் காவல்

1032. தமது சுதந்திரத்தின் மீது சட்டவிரோதமான விதத்தில் அல்லது தன்னிச்சையான விதத்தில் தலையீடுகள் மேற்கொள்ளப்படுவதிலிருந்தும் மனித உரிமைகள் சட்டம் அனைத்து நபர்களுக்கும் பாதுகாப்பு வழங்குகின்றது. சுதந்திரம்

---

1103 WS on file

1104 WS on file

1105 WS on file

பறிக்கப்படுவதனையும் இது உள்ளடக்குகின்றது.[1106] தன்னிச்சையான விதத்தில் ஒருவரின் சுதந்திரத்தை பறிக்கும் செயல் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழும் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய தடை சிவிலியன்களும்,குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் யுத்தத்தில் பங்கேற்காத நபர்களும் மனிதாபிமான விதத்தில் நடத்தப்பட வேண்டுமென்ற தேவையின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.[1107] ஆயுத மோதல் நிலைமையொன்றில் தன்னிச்சையான விதத்தில் அல்லது சட்ட விரோதமான முறையில் சுதந்திரத்தை பறித்தல் என்பது, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி நிர்ணயிக்கப்படும்.

1033. ஒரு குற்றவியல் வழக்கில் ஆஜர்படுத்தும் நோக்கத்திற்கென அல்லது நீதிமன்றத்தின் மூலம் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டதனையடுத்து நபர் ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க முடியும் அது தவிர, அதிகாரிகள் (குற்றச்சாட்டொன்றை முன்வைத்து வழக்குத் தொடர்வதற்கான எதிர்பார்ப்பு இல்லாமல்) நிர்வாக ரீதியாகவும் ஆட்களை தடுத்து வைக்க முடியும். நிர்வாக ரீதியான தடுப்புக் காவல், சுதந்திரம் தன்னிச்சையான விதத்தில் பறிக்கப்படுவது தொடர்பான மிக மோசமான அபாய ஏதுக்களை எடுத்து வருகின்றது என மனித உரிமை கமிட்டி குறிப்பிட்டுள்ளது. மேலும், மிகவும் விதிவிலக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் மட்டுமே அத்தகைய ஒரு தடுப்புக் காவலை நியாயப்படுத்த முடியும். அதாவது, நபரொருவர் “நேரடியான, வெளிப்படையான அச்சுறுத்தலொன்றை” விடுத்துக் கொண்டிருக்கின்றார் என்ற நிலையிலேயே அது மேற்கொள்ளப்பட முடியும்.[1108]அத்தகைய சம்பவங்களின் போது, அதனை நிரூபிக்கும் பொறுப்பு அதிகாரிகளிடமே உள்ளது. அதாவது, சம்பந்தப்பட்ட நபர் ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றார் என்பதனையும், மாற்று வழிமுறைகளுக்கூடாக அந்த நிலைமையை வினைத்திறன் மிக்க விதத்தில் கையாள முடியாது என்பதனையும்அவர்கள் எடுத்துக் காட்ட வேண்டும். மேலும், தடுத்து வைக்கப்படும் காலப் பிரிவு அதிகரித்துச் செல்லும் பொழுது இந்தச் சுமையும் அதிகரித்துச் செல்கின்றது என்ற விடயத்தை இக்கமிட்டி வலியுறுத்தியிருந்தது.[1109]

1034. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 9(2), எவரேனும் நபரொருவரின் சுதந்திரம் பறிக்கப்பட்டிக்கும் சந்தர்ப்பத்தில், அவர்கள் அவ்விதம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதன் காரணமும், அவர்களுக்கெதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் எவையேனும் இருப்பின் அவையும் உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டுமென்பதனை அவசியப்படுத்தப்படுகின்றது. இலங்கை இந்த உறுப்புரையின் கீழான இந்தக் கடப்பாட்டினை வலுவிழக்கச் செய்துள்ளது ஆனால், அது உறுப்புரை 9(2) இன் கீழான இலங்கையின் கடப்பாடுகளை முழுமையாக இடைநிறுத்தி வைக்கவில்லை. அதற்கு பதிலாக, அத்தகைய நபர்களுக்கு தெரிவிப்பதனை தாமதப்படுத்துவதற்கு இடமளிக்கும் விதத்தில் அவற்றை ஓரளவுக்கு சீராக்கம் செய்கிறது. அந்த தாமதத்தின் கால அளவு நிலைமையின் அவசரத் தன்மை அவசியப்படுத்தும் அளவுக்கு மட்டும் கண்டிப்பான விதத்தில் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

1106 சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயம் (ICCPR) உறுப்புரை 9. “தன்னிச்சையான” என்ற பதத்திற்கு மனித உரிமைகள் கமிட்டி பரவலான விதத்தில் வரைவிலக்கணம் வழங்கியுள்ளது: “பொருத்தமற்ற நிலை, அநீதி, முன்னுணர்ந்து கூற முடியாத நிலை மற்றும் சட்டத்தின் உரிய நடைமுறை இல்லாமை”.

1107 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேய சட்டம் குறித்த தரவுத் தளம், விதிமுறை 99.

1108 GC 35, para. 15. See, e.g., Concluding observations Colombia 2010, para. 20; Jordan 2010, para. 11.Such threats may arguably be posed by a person taking direct part in hostilities.

1109 GC 35, para. 15

1035. சுந்திரம் பறிக்கப்பட்ட நபர்கள், அவ்விதம் அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்படுவதற்கு வழிகோலிய காரணம் இல்லாமல் போன உடனேயே விடுவிக்கப்படுதல் வேண்டும்.[1110]

1036. உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்கள் மீது விதிக்கப்படும் நிர்வாக ரீதியான தடுப்புக் காவல் தொடர்பாக உள்ளக இடப்பெயர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் வழிகாட்டுதல் கோட்பாடுகள்[1111] அத்தியாவசியமாகவிருந்து வரும் விதிவிலக்கான சந்தர்ப்பசூழ்நிலைகள் தவிர, உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்கள் தடுத்து வைக்கப்படவோ அல்லது முகாம்களில் அடைத்து வைக்கப்படவோ கூடாது என்பதனை வலியுறுத்துகின்றன. மேலும், சந்தர்ப்பசூழ்நிலைகள் அவசியப்படுத்தும் காலப் பிரிவின் போது மட்டுமே அவர்கள் அவ்வாறு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.[1112] வெறுமனே உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்கள் என்ற அவர்களின் அந்தஸ்தின் அடிப்படையில் அவ்விதம் இடம்பெயர்ந்த நபர்களின் சுதந்திரத்தை பறிப்பதானது தன்னிச்சையான தடுப்புக் காவலுக்கு இணையானதாக இருந்து வருவதுடன், அது தடை செய்யப்பட்டுமுள்ளது. மேலும்,உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்களின் நடமாட்ட உரிமையை உறுதிப்படுத்தும் பொருட்டு அந்நபர்கள் முகாம்களுக்கு உள்ளேயும், வெளியேயும் அல்லது ஏனைய குடியிருப்புக்களிலும் சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமையை கொண்டிருத்தல் வேண்டும்.[1113] இடம்பெயர்ந்த நபர்கள் அவர்களுடைய இடப்பெயர்ச்சிக்கு வழிகோலிய காரணங்கள் இல்லாமல் போன உடனேயே[1114] அவர்களுடைய இருப்பிடங்களுக்கு சுயவிருப்பில், பாதுகாப்பாக திரும்பி வருவதற்கான உரிமையை கொண்டுள்ளார்கள்.

## முல்லைத்தீவு மற்றும் ஓமந்தை போன்ற இடங்களில் இடம்பெற்ற (ஆட்களை) வடிகட்டும் செயன்முறைகள்

1037. உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்கள் இருந்து வரும் முகாம்களின் சிவிலியன் மற்றும் மனிதநேய இயல்பை பராமரித்து வருவதற்கும், அவ்விதம் இடம்பெயர்ந்த நபர்களின் பாதுகாப்பு மற்றும் ஆபத்துக்களற்ற நிலை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் முன்னைய எல்ரீரீஈ இயக்க போராளிகளை பிரித்து, வேறாக்கும் பொருட்டு உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்களை சோதனையிட வேண்டிய கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டுள்ளது. மேலும், தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை மீறியிருப்பவர்களை அவர்களுடைய செயல்களுக்கு பொறுப்பாக்குவதற்குத் தேவையான முதல்படியாகவும் அது அவசியமாக இருந்து வந்தது. எவ்வாறிருப்பினும்,ஆட்களை வடிகட்டும் செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்ட விதம் சர்வதேச தர நியமங்களை நிறைவேற்றி வைப்பதற்கு தவறியிருப்பதுடன், துன்புறுத்தல்,துஷ்பிரயோகம் என்பவற்றுக்கு வசதி செய்து கொடுத்திருந்தது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது.

1038. போராளிகளை பிரித்து, வேறாக்குவது தொடர்பான அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரின் வழிகாட்டுதல்கள் அதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் வழங்குகின்றது: “கிடைக்கும் சான்றுகள் அனைத்தும் ஒரு நபர் போராளியாக இருந்து வர முடியும் என்பதனை சுட்டிக் காட்டும் சந்தர்ப்பத்தில்,

[1110] GC 35,சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான தரவுத் தளம், விதிமுறை 128.

[1111] E/CN.4/1998/53/Add.2

[1112] கோட்பாடு 12.

[1113] கோட்பாடு 14.

[1114] சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான தரவுத் தளம், விதிமுறை 132.

அந்நபர் பொதுமக்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, புறம்பாக தடுத்து வைக்கப்பட வேண்டுமா என்ற விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பொருத்தமான அதிகாரிகளினால் பரிசோதனை செய்யப்பட வேண்டும்."[1115] போராளிகளை இனங்கண்டு கொள்வதற்கான செயன்முறை பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டுமென அந்த வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன:

1039. அந்தச் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கான ஒரு அமைப்பை உருவாக்குதல், அந்த அமைப்புக்கு ஏனையவற்றுக்கு மத்தியில்,ஒரு தனி நபரை போராளியாக அடையாளம் காண்பது தொடர்பான முடிவுகளை மீளாய்வு செய்வதற்கான அதிகாரமும் இருந்து வருதல் வேண்டும்,

1040. ஒரு தனிநபரை ஒரு போராளியாக கருதுவதற்கான தெளிவான அளவுகோல்களையும் உள்ளடக்கிய விதத்தில் திட்டவட்டமான செயற்பாட்டு ஒழுங்குவிதிகளை ஸ்தாபித்தல், முடிவுகளை மேற்கொள்வதற்கென ஒரு முறைமையினை அபிவிருத்தி செய்தல் மற்றும் முடிவுகளை மீளாய்வு செய்வதற்கென ஒரு செயன்முறையை உருவாக்குதல்;

1041. பிரித்து வேறுபடுத்தும் செயன்முறைக்கான காரணங்கள், அதில் சம்பந்தப்பட்டிருக்கும் நடைமுறைகள் மற்றும் போராளிகளாக இனங்காணப்பட்டிருக்கும் தனிநபர்கள் மீதான தாக்கங்கள் என்பவற்றை விளக்கும் பொருட்டு தெளிவான, சுருக்கமான தகவல்களை வழங்குதல்.

1042. ஆயுதப் படைகளுடன் அல்லது ஆயுதக் குழுக்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சிறுவர்கள் தொடர்பான (பாரிஸ் கோட்பாடுகள் என அழைக்கப்படும்) கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆயுதப் படைகளில் அல்லது குழுக்களில் எந்தவொரு நிலையிலும்- போராளிகளாக அல்லது துணைச் சேவைகளை பொறுப்பேற்பவர்களாக - சம்பந்தப்பட்டிருந்த 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை விடுவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பன தொடர்பான திட்டவட்டமான வழிகாட்டுதல்களை கொண்டுள்ளன (பார்க்கவும் அத்தியாயம் XII - ஆட்சேர்ப்பு மற்றும் சிறுவர்களை பயன்படுத்துதல்).

1043. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தமொன்று அல்லது சமாதான ஒப்பந்தமொன்று இல்லாத நிலையில்,எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட போராளிகள் மற்றும் ஏனைய நபர்கள் ஆகியோரின் ஆயுதங்களை களைவதற்கு, படையணிகளை கலைப்பதற்கு அல்லது அவர்களை சமூகத்துடன் மீள ஒருங்கிணைப்பதற்கு முறையான, நன்கு வரையறுக்கப்பட்ட செயன்முறையொன்று இருந்து வரவில்லை. பொதுவாக ஒரு மோதலின் முடிவில் இத்தகைய நிலைமைகள் தோன்றுவது சகஜமாகும். எல்ரீரீஈ இயக்கத்துடன் எவரேனும் ஒரு நபர் ஏதேனும் தொடர்புகளை கொண்டிருந்தாரா என்பதனை அடையாளம் கண்டு கொள்வதற்கு முயற்சிப்பதற்கு பதிலாக, அரசாங்கம் வெளிப்படைத் தன்மை குறைந்த அல்லது நடைமுறைகள் குறித்த வரைவிலக்கணம் எதுவுமில்லாத சோதனை செயன்முறைகளை மேற்கொண்டதுடன், அது தொடர்பான சர்வதேச தர நியமங்களை நிறைவேற்றி வைக்கவும் தவறியது. அந்தச் செயன்முறை, போரில் ஈடுபட்டவர்களுக்கும் அரசியல் அல்லது நிர்வாக பொறுப்புக்களை மேற்கொண்டு வந்த இயக்க பொறுப்பாளர்களுக்குமிடையில் பிரித்து வித்தியாசம் பார்க்கவில்லை - எல்ரீரீஈ இயக்கத்துடன் ஏதேனும் தொடர்புகளை கொண்ட நபர்கள் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அரசாங்கத்திடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு மத்தியிலும் கூட, பொதுமக்களையும் எல்ரீரீஈ இயக்க போராளிகளாக சந்தேகிக்கப்பட்டவர்கள் அல்லது இனங்காணப்பட்டவர்கள் ஆகியோரையும் பிரித்து, வேறுபடுத்துவது

[1115] அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர், தஞ்சம் புகும் இடங்களில் சிவிலியன் மற்றும் மனிதநேய இயல்பை பராமரித்து வருவதற்கான வழிகாட்டுதல்கள், செப்டம்பர் 2006, http://www.refworld.org/pdfid/452b9bca2.pdf

தொடர்பாக பயன்படுத்தப்பட்ட அளவுகோல் மற்றும் நடைமுறைகள் என்பன தொடர்பாக தகவல்கள் கிடைக்கவில்லை.

1044. மோதல் வலயத்திலிருந்து வெளியில் வந்த ஒவ்வொரு தனிநபரும் இலங்கை இராணுவத்தின் தொடரான பல பாதுகாப்புச் சோதனை இடங்கள், வடிகட்டும் இடங்கள் மற்றும் தடுத்து வைத்திருக்கும் பிரதேசங்கள் என்பவற்றுக்கூடாக செல்ல வேண்டியிருந்தது. இதே மாதிரியான சோதனைகள் மற்றும் பரிசோதனைகள் என்பன அதன் பின்னர் உள்நாட்டில் தங்கியிருந்தவர்களின் முகாம்களுக்குள்ளும் மேற்கொள்ளப்பட்டன.

1045. முல்லைத்தீவு அல்லது ஓமந்தை பிரதான வடிகட்டும் நிலையங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை வடிகட்டி, பதிவு செய்வதற்கென அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டு, இலங்கை இராணுவத்தினால் நடத்தப்பட்டு வந்த செயன்முறை சுயாதீனமான ஒரு கண்காணிப்புக்குட்படுத்தப்படவில்லை. ஒரு தற்காலிகமான உடன்பாடு மற்றும் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் சர்வதேச முகவரகங்களுக்கு இந்த வடிகட்டும் நிலையங்களை அணுகுவதற்கும், பின்னர் மெனிக்பார்ம் முகாமை முழுமையாக அல்லது தொடர்ச்சியாக அணுகுவதற்கும் இடமளிக்கப்படவில்லை. உதாரணமாக,அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர்அலுவலகத்திற்கு ஓமந்தைக்கு அணுகுவசதி வழங்கப்பட்டிருந்த அதேவேளையில், அதன் ஊழியர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்களுடன் சுயாதீனமாக உரையாடுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை.[1116].[1117] இந்த வரையறுக்கப்பட்ட அணுகு வசதியும் கூட 2009 மே மாதத்தில்மோதலின் இறுதி வாரங்களின் போது ரத்து செய்யப்பட்டது.[1118] இது சுயாதீனமான சர்வதேச முகவரகங்களுக்கு அணுகும் வசதி மறுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கியதுடன், அது மறுபுறத்தில், ஆட்கள் பரவலான விதத்தில் துன்புறுத்தப்படுவதற்கும், பாரியளவிலான ஏனைய அத்துமீறல்களுக்கும் வழிகோலியது. குறிப்பாக, பலவந்தமாக ஆட்கள் காணாமல் போகச் செய்யப்படும் நிலைமைகளை எடுத்து வந்தது.

1046. சிறுவர்களையும் உள்ளடக்கிய தனிநபர்கள், எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என தன்னிச்சையான விதத்தில் அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களது குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு தடுப்புக் காவல் நிலையங்களுக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள். எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்கள் தம்மை அடையாளம் காட்ட வேண்டுமென்றும், ஒரு நாள் மட்டும் அவர்கள் அந்த இயக்கத்திற்காக வேலை செய்திருந்தாலும் கூட தம்மை அடையாளப்படுத்த வேண்டுமென்றும் சிப்பாய்கள் தொடர்ச்சியாக அறிவித்தல்களை - சில சந்தர்ப்பங்களில் ஒலிபெருக்கிகளுக்கூடாக –வழங்கி வந்தார்கள் என முல்லைத்தீவிலும், ஓமந்தையிலும் சாட்சிகள் தெரிவித்தனர்.[1119]அதிகாரிகள் போராளிகளுக்கும், பொதுமக்களுக்குமிடையில் வித்தியாசம் பார்க்காதிருந்த நிலை உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களுக்கு அல்லது தடுப்பு நிலையங்களுக்கு யார் எடுத்துச் செல்லப்படுவார்கள், எந்த அடிப்படையில் எடுத்துச் செல்லப்படுவார்கள் என்பது குறித்த ஒரு நிச்சயமற்ற நிலையை உருவாக்கியிருந்தது. மேலும், சந்தேக நபர்கள் என்ற முறையில் எடுத்துச் செல்லப்பட்டவர்கள் பலர் உண்மையில் எல்ரீரீஈ இயக்கத்தினால் கட்டாய ஆட்சேர்ப்புக்குட்பட்டவர்களாவார்கள். அந்த விடயமும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. எல்ரீரீஈ இயக்கத்துடன் சாதாரண பொதுமக்கள் என்ற நிலையில் சில வேலைகளை செய்து வந்த ஒரு சில உள்நாட்டில்

1116 அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர், இலங்கையின் வட பிரதேசத்தில் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் நிலவரம் தொடர்பான பிந்திய தகவல்கள், மே 14 மற்றும் 18, 2009.

1117 WS on file

1118 WS on file

1119 WS on file

இடம்பெயர்ந்தவர்கள் - உதாரணமாக மருத்துவத் துறை ஆளணியினர் - தடுப்புக் காவல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

1047. வடிகட்டுதல் மற்றும் பதிவு செய்தல் நடவடிக்கைகளின் போது, பாதுகாப்புப் படையினர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களிடம் எல்ரீரீஈ இயக்கத்துடனான அவர்களுடைய தொடர்புகள் குறித்து அல்லது அவர்களுடைய உறவினர்கள் கொண்டிருக்கும் அத்தகைய தொடர்புகள் குறித்து மீண்டும் மீண்டும் விசாரணை செய்தனர். இயக்கத்துடனான தமது தொடர்பினை ஏற்றுக் கொள்ளாதிருந்தால் மிகக் கடினமான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று இளைஞர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.[1120] உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கோ அல்லது எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என அடையாளம் காணப்பட்ட நபர்களுக்கோ இந்தச் செயன்முறை குறித்த தகவல்கள் வழங்கப்படவில்லை.

1048. 2005 ஆம் ஆண்டின் அவசர கால ஒழுங்குவிதிகள் (19.1) உறவினர் ஒருவர் கைது செய்யப்படும் பொழுது குடும்ப உறுப்பினரொருவருக்கு அது குறித்து தெரிவிக்கப்பட வேண்டுமென்ற ஏற்பாட்டை கொண்டிருந்த போதிலும், தமது உறவினர்கள் எங்கு எடுத்துச் செல்லப்படுகின்றார்கள் என்ற தகவல் குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை.

1049. முல்லைத்தீவு மூன்று தடுத்து வைத்திருக்கும் பிரதேசங்களை கொண்டிருந்ததுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் பாலத்தை கடந்த பின்னர் அவற்றுக்கூடாக செல்ல வேண்டியிருந்தது. பல்லாயிரக்கணக்கான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் முல்லைத்தீவில் முதலாவது தடுத்து வைக்கும் பிரதேசத்தில் பல மணித்தியாலங்கள் அல்லது இரவு முழுவதும் காத்திருக்க வேண்டியிருந்தது. அதேவேளையில், பெருந்தொகையானவர்கள் முட்கம்பி வேலிகளினால் அமைக்கப்பட்டிருந்த ஒரு குறுகிய ஒழுங்கைக்குள் அமைக்கப்பட்டிருந்த மற்றொரு தடுத்து வைக்கும் பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். முல்லைத்தீவிலிருந்த இரண்டாவது தடுத்து வைத்திருக்கும் பிரதேசத்தில் ஒவ்வொரு தனிநபரும் பாதுகாப்புச் சோதனைக்கூடாக செல்ல வேண்டியிருந்தது.[1121]

1050. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களில் ஒரு சிலர் மணல் மூட்டைகளை கொண்டு அமைக்கப்பட்டிருந்த காவலரண்களுக்கு[1122] அல்லது பனை இலைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த தடுப்புக்களுக்குள் எடுத்துச் செல்லப்பட்டனர். ஏனையவர்கள், மற்றவர்கள் தம்மைப்பார்க்கக் கூடிய நிலையில் தமது ஆடைகளை களையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர்.[1123] தம்மை ஆண் சிப்பாய்கள் சோதனை செய்ததாக பெருந்தொகையானஉள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த பெண்கள் தெரிவித்தனர். ஒரு சில பெண்கள் பெண் சிப்பாய்களினால் சோதனையிடப்பட்டனர். ஆனால், அவர்கள் தமது ஆடைகளை களைந்த பொழுது, தடுப்புக்களுக்கு மேலே இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஆண் சிப்பாய்களின் பார்வைக்கு இலக்காக வேண்டியிருந்ததுடன், அச்சிப்பாய்கள் தமது கையடக்க தொலைபேசிகளில் நிர்வாணமான அல்லது அரை நிர்வாணமான பெண்களின் புகைப்படங்களை பதிவு செய்தனர்.[1124] அத்தியாயம் X இல் எடுத்து விளக்கப்பட்டவாறு, சிப்பாய்கள் ரைபல் துப்பாக்கிகளின் குழாய்களை தனது மார்பகங்கள் மீது அழுத்தினார்கள் என ஒரு சாட்சி கூறியிருந்தார்.[1125] தன்னை

1120 WS on file

1121 WS on file

1122 WS on file

1123 WS on file

1124 WS on file

1125 WS on file

-

நிர்வாணப்படுத்தி சோதனை செய்த பொழுது தான் ஒரு “பிணத்தைப் போல” இருப்பதாக உணர்ந்ததாக மற்றொருவர் கூறினார்.[1126]

1051. முல்லைத்தீவு மற்றும் ஓமந்தை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த மூன்று தடுத்து வைக்கும் பிரதேசங்களிலும் தகவல் வழங்குபவர்களாக மாறியிருந்த துணைப் படை குழுக்களின் உறுப்பினர்கள் அல்லது முன்னாள் எல்ரீரீஈ இயக்க போராளிகள், எல்ரீரீஈ உறுப்பினர்கள் மற்றும் எல்ரீரீஈ இயக்கத்தின் ஊழியர்கள் ஆகியோரை அடையாளம் காண்பதற்கு இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு உதவினார்கள். அவர்களில் சிலர் தமது முகங்களை மூடிக் கொண்டிருந்தனர்.[1127] சரணடைந்திருந்த அல்லது முன்னரே கைது செய்யப்பட்டிருந்த ஒரு சில முன்னாள் போராளிகள், தமது முன்னைய சகாக்களை இனங்காண்பதற்கென தம்மை இராணுவ புலனாய்வு அதிகாரிகள் முல்லைத்தீவுக்கு எடுத்துச் சென்றதாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் உறுதிப்படுத்தியிருந்தனர். [1128]

1052. எல்ரீரீஈ இயக்கத்தில் போராளிகளாக இருந்த அல்லது அந்த இயக்கத்திற்கு சிவிலியன்கள் என்ற முறையில் பணியாற்றியிருந்த ஒரு சில பொதுமக்கள் சிப்பாய்களிடம் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்கள், ஏனையவர்கள் அவ்வாறு செய்யவில்லை.[1129] தலை மயிரை குட்டையாக வெட்டியிருந்த இளம் பெண்கள் எல்ரீரீஈ உறுப்பினர்களாக சிப்பாய்களினால் மிக இலகுவில்இனங்காணப்பட்டிருந்தனர். அந்த நிலையில், அவர்கள் எளிதில் பாதிப்புக்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாக இருந்து வந்தார்கள். முல்லைத்தீவில் தம்மை எல்ரீரீஈ உறுப்பினர்களாக அடையாளப்படுத்தியவர்கள் அல்லது எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் புறம்பாக எடுத்து, இராணுவ புலனாய்வு அதிகாரிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.[1130] அவர்கள் அவர்களது குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு,எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் சிப்பாய்களினால் பாதுகாக்கப்பட்டிருந்த ஒரு திறந்த பிரதேசத்திற்குள் வைக்கப்பட்டிருந்தார்கள்.[1131]

1053. தம்மை எல்ரீரீஈ இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக அடையாளப்படுத்திக் கொண்டிருந்த ஒரு சிலர் மீது சிப்பாய்கள் தாக்குதல் நடத்துவதை தாம் பார்த்ததாக முல்லைத்தீவிலும், ஓமந்தையிலும் சாட்சிகள் குறிப்பிட்டிருந்தார்கள்.[1132] வன்னியில் இடம்பெற்ற சோதனைச் செயன்முறைகளின் போது, உடல் ரீதியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடும் அறிக்கைகள் குறித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் 2009 மே மாதத்தில் கரிசனைகளை எழுப்பியிருந்தார்.அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்துமாறு அவர் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.[1133]

1054. மேலும் பதிவுகள், உடல் ரீதியான தேடல்கள்,வடிகட்டல் மற்றும் விசாரண என்பன மேற்கொள்ளப்பட்ட ஓமந்தையில்[1134] எல்ரீரீஈ இயக்கத்தில் பல்வேறு

1126 WS on file

1127 WS on file

1128 WS on file

1129 WS on file

1130 WS on file

1131 WS on file

1132 WS on file

1133 அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் - இலங்கையின் வட பிரதேசத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்தவர்களின் நிலைமை தொடர்பான பிந்திய தகவல்கள் மே 14, 2009.

1134 WS on file

நிலைகளில் பணியாற்றி வந்த உறுப்பினர்கள் ஒன்று சேர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்ட பிரதேசங்கள் இருந்து வந்தன. அடையாளம் காணப்பட்டவர்கள் அல்லது எவையேனும் வடிகட்டுமிடங்களில் தாம் எல்ரீரீஈ இயக்கத்துடன் சம்பந்தப்பட்டிருந்ததாக – சிவிலியன்களின் பணிகளை மேற்கொள்வதனையும் உள்ளடக்கிய விதத்தில் - ஏற்றுக் கொண்டிருந்தவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.[1135] உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் காயமடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில் மருத்துவத் துறை ஆளணியினரை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், ஒரு சிலர் மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டார்கள்.[1136]

1055. பல்வேறு வடிகட்டும் நிலையங்களுக்கூடாக சென்ற பின்னர்,எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளை வைத்திராதவர்கள் என அடையாளம் காணப்பட்ட நபர்கள் அரசாங்கத்தினால் “நலன்புரி கிராமங்கள்” என பெயர் குறிக்கப்பட்டிருந்த மூடுண்ட முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். பெரும்பாலானவர்கள் மெனிக் பார்ம் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன், அங்கிருந்து வெளியேறுவதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

### மூடுண்ட முகாம்களில் இருந்து வந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டமை

#### உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கென மூடுண்ட முகாம்கள் ஸ்தாபிக்கப்பட்டமை

1056. எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த பிரதேசங்களிலிருந்து வெளியில் வந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் சுதந்திரத்தை அரசாங்கம் அபகரித்து, அவர்களை 2008 மார்ச் மாதம் முதல் இராணுவ பாதுகாப்புடன் கூடிய மூடுண்ட முகாம்களில் வைத்திருந்தது. அவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது முகாம் காளிமோட்டை[1137] முகாமாகும், இரண்டாவது முகாம் 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சிறுகண்தல்[1138] என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. இந்த இரு முகாம்களும் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்தன. மோதல் பிரதேசங்களிலிருந்து தப்பி வருபவர்கள் அடுத்து எதிர்கொள்ள வேண்டியிருக்கும் நிலைமைக்கான ஒரு முன்னோட்டமாக இந்த முகாம்கள் இருந்து வந்தன: முட் கம்பிகளினால் சூழப்பட்டிருந்ததுடன், பாதுகாப்புப் படையினர் காவல் பணியிலிருந்து வந்த முகாம்களில் நீண்ட காலம் (பல மாத காலம்) தமது சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இருந்து வர வேண்டியிருந்தது. அந்த முகாம்களிலிருந்து

1135 WS on file

1136 WS on file

1137 காலிமோட்டை முகாம் UNOCHA தகவலின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு மே மாதம் மூடப்பட்டது,Humanitarian Snapshot, June 2010.

1138 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2009 ஜூன் மாதம் உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அடிப்படை உரிமை மனுவொன்றில், அந்த மனுவின் மனுதாரர் என்ற முறையில் “காளிமோட்டை மற்றும் சிறுகண்தல் ஆகிய இடங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் (700) தடுத்து வைக்கப்பட்டிருத்தல் மற்றும் அவர்களுடைய சுதந்திரம் அபகரிக்கப்பட்டிருத்தல் என்பன 15 மாதங்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன. அவர்கள் விடுவிக்கப்படுவார்களா, அப்படியானால் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்பது குறித்த எத்தகைய தகவல்களும் பகிரங்கமாக கிடைக்கவில்லை” எனக் குறிப்பிட்டிருந்தது. அடிப்படை உரிமைகள் மனு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் ஐந்து பிரதிவாதிகள், ஜூன் 2009.

வெளியில் நடமாடுவது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியேறுவதற்கோ அல்லது தமது அனுசரணைக் குடும்பங்களிடம் போய் தங்கியிருப்பதற்கோ அனுமதி வழங்கப்படவில்லை.

1057. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மனித உரிமைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியான வால்டர் காலின் 2007 டிசம்பர் மாதத்தில் மேற்கொண்ட தனது இலங்கை விஜயத்தின் பின்னர் தொகுத்து வழங்கிய பரிந்துரைகளின் தொகுப்பிலும், மனித உரிமைகள் பேரவையில், அதனையடுத்து அவர் சமர்ப்பித்த அறிக்கையிலும் இலங்கையில் இடப்பெயர்ச்சி தொடர்பான வழிகாட்டுதல் கோட்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்ததுடன்,[1139] தமது நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்கள் “சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பவற்றின் மூலம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய அனைத்து உத்தரவாதங்களையும் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்களாக இருந்து வருகின்றனர்” எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும், அவர் “பாதுகாப்பு தொடர்பான விடயங்களைக் கவனத்தில் கொள்வது திட்டத்தின் ஒரு கூறாக இருந்து வரும் அதேவேளையில்” (சாதாரண பொதுமக்களின் உடனடி தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு) அது இயல்பில் மனிதநேயமிக்கதாகவும், சிவிலியன் தன்மை கொண்டதாகவும் இருந்து வர வேண்டும் என்ற விடயத்தை அரசாங்கத்திற்கு நினைவூட்டியிருந்தார். குறிப்பாக, உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் நடமாட்ட சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கப்பட வேண்டுமென்றும்,அவர்களை ஒரு முகாமுக்குள் அடைத்து வைக்க முடியாதென்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.[1140]

1058. தொண்டு நிறுவனங்கள் 2008 ஆம் ஆண்டு முழுவதிலும், 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களை ஸ்தாபிப்பதில் மதிப்பளிக்கப்பட வேண்டிய முதன்மையான குறைந்தபட்ச கோட்பாடுகள் குறித்து தொடர்ச்சியாக அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்தி வந்திருந்தன. அகதிகளுக்கானஐ நா உயர ஸ்தானிகர் 2008 ஆகஸ்ட் மாதத்தில் நினைவில் வைத்திருக்க வேண்டிய விடயங்களின் ஒரு பட்டியலை அபிவிருத்தி செய்ததுடன், அதில் “உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்களின் உடல் ரீதியான பாதுகாப்பு, ஆபத்தற்ற நிலை, பந்தோபஸ்து மற்றும் நலனோம்பல் என்பன உத்தரவாதப்படுத்தப்படும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் வாழ்ந்து வரும் இடங்களுக்கு மட்டுமே ஆதரவளிக்க முடியும்” என்ற விடயம் எடுத்துக் கூறப்பட்டிருந்தது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை வைத்திருக்கும் வருங்கால இடங்களை இனங்காணுதல் மற்றும் முகாம் முகாமைத்துவம் என்பவற்றில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் பங்குபற்ற வேண்டுமானால் அதற்கான ஒரு சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்த நிபந்தனைகள் “ உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் அங்கு இருப்பவர்களின் நடமாட்டச் சுதந்திரம் முழுமையாக தங்குதடையற்ற விதத்தில் வழங்கப்படுவதனையும்”, அதே போல இடப்பெயர்ச்சியின் போதும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கானஇடங்கள் உருவாக்கப்படும் போதும் தொண்டு நிறுவனங்கள் அவற்றை சுதந்திரமாக தங்குதடையற்ற விதத்தில் அணுகும் வாய்ப்பு வழங்கப்படுவதையும் உள்ளடக்கியிருந்தன. மக்களுக்கு அவசர கால அடிப்படையில் தங்குமிட வசதியை வழங்கும் விடயத்தில் அனுசரணை குடும்பங்களின் ஏற்பாடே விரும்பத்தக்க ஒரு

1139 E/CN.4/1998/53/Add.2

1140 ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் மனித உரிமைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியின் அறிக்கை, மே 21, 2008 A/HRC/8/6/Add.4, page 5 and page 22.

தெரிவாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் பரப்புரை செய்திருந்தார்.[1141]

1059. வட மாகாணத்தில் மீள் குடியேற்றம் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவரான பஸில் ராஜபகஷ் “வன்னி மக்களுக்கான அவசர கால நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம்” என்ற தலைப்பிலான அரசாங்கத்தின் வரைவினை 2009 ஜனவரி மாதத்தில் தொண்டு நிறுவனங்களிடமும், நன்கொடையாளர்களிடமும் சமர்ப்பித்தார். அது மோதல் வலயத்திலிருந்து வெளியில் வருவார்கள் என எதிர்பார்க்கப்படும் சுமார் 200,000 மக்களுக்கு “ பாதுகாப்பினையும், நிவாரண உதவியையும் வழங்குவதற்கு” “நலன்புரி கிராமங்களை” உருவாக்குவதற்கான திட்டங்களை எடுத்து விளக்கியிருந்தது. பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்ற வேண்டிய தேவை என்பவற்றை அரசாங்கம் இந்த யோசனைக்கான காரணங்களாக குறிப்பிட்டிருந்தது.[1142]

1060. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை அரை நிரந்தர கட்டடங்களில் சுமார் மூன்று வருட காலம் வரையில் வைத்திருப்பது தொடர்பான அரசாங்கத்தின் வெளிப்படுத்தப்பட்டிருந்த நோக்கங்கள் குறிப்பாக சர்வதேச சமூகத்தை பொறுத்தவரையில் கரிசனைக்குரிய விடயங்களாக இருந்த வந்தன. அந்த முகாம்கள் வேலியடைத்து மூடப்பட்டிருப்பதுடன், இராணுவக் காவலையும் கொண்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் 2009 ஜனவரி மாதத்தில் சுமார் 200,000 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை பெற்றுக் கொள்வதற்கு தயாராக இருந்து வருவதாக அரசாங்கம் கூறிய அதேவேளையில், வன்னிக்கு நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் விடயம் தொடர்பாக அங்கு சுமார் 70,000 பொதுமக்கள் மட்டுமே இன்னமும் இருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை வலியுறுத்தியது ஒரு சுவாரஸ்யமான ஒரு விடயமாகும்.

1061. அதே மாதத்தில், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் புதிய இடங்களுக்கு உதவி வழங்குவது தொடர்பாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் மேலும் வழிகாட்டுதல் குறிப்பொன்றை தயாரித்திருந்தார். வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இருக்கும் புதிய அமைவிடங்களுக்கான நிவாரண உதவி விநியோகம் “சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான வழிகாட்டுதல் கோட்பாடுகள் என்பவற்றுக்கும், முகாம்களின் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு என்பவற்றின் பராமரிப்பு மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தங்கியிருக்கும் அமைவிடங்களின் சிவிலியன் மற்றும் மனிதநேய இயல்பை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பேற்றல் என்பவற்றையும் உள்ளடக்கிய” நிபந்தனைகளுக்கு அரசாங்கம் இணங்கியொழுகுவதற்கு அமைவாகவே இந்த உதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.[1143]

1062. 2009 ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த வழிகாட்டுதல் குறிப்பின் நடுத்தர கால மீளாய்வு அரசாங்கத்தின் பல சாதனைகளை எடுத்துக் காட்டிய அதேவேளையில், நடமாட்ட சுதந்திரம் போன்ற முதன்மையான கோட்பாடுகளுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் மதிப்பளிக்கத் தவறியுள்ளது என்ற விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தது. முகாம்களுக்குள் இரவு நேரங்களையும் உள்ளடக்கிய விதத்தில் தொடர்ந்து ஆயுதம் தரித்த துணைப் படைக் குழு ஆளணியினர் மற்றும் இராணுவ

1141 UNHCR Colombo Aide Memoire of 29 August 2008,http://www.un.org/press/en/2009/090424_Awad.doc.htm

1142 இலங்கையின் மனிதநேய முயற்சி, வட மாகாணத்தில் மீள் குடியேற்றம் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான ஜனாதிபதி செயலணி, 2011.

1143 Flash Update on the IDP Situation in Sri Lanka, 21 January 2009, UNHCR Representative Office in Colombo.

ஆளணியினர் இருந்து வருகின்றனர் என்றும் அது குறிப்பிட்டிருந்தது.[1144] "உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு தமது நடமாட்ட சுதந்திரத்திற்கான உரிமையை மீளப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அவர்களை முகாம்களிலிருந்து விடுவித்தல் என்பவற்றுக்கான கால அட்டவணையுடன் கூடிய ஒரு திட்டம்" உருவாக்கப்பட வேண்டும் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் கேட்டுக் கொண்டிருந்தார், "கால அட்டவணையுடன் கூடிய வெளிப்படையான சோதனை செயன்முறையொன்றுக்கான நடைமுறைகளும்" உருவாக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டிருந்தார். 2009 மே 15 ஆந் திகதி வோல்டர் காலின் பின்வரும் விதத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தார்: "அத்தகைய நபர்களின் சுதந்திரம் நீண்ட காலமாக பறிக்கப்பட்டிருக்கும் நிலை தன்னிச்சையான தடுப்புக் காவலுக்கு இணையானதாக இருந்து வருவது மட்டுமன்றி,அது தேவையற்ற விதத்தில் மனிதநேய நிலைமையை தீவிரப்படுத்த முடியும்."

1063. 2009 ஜுன் மாதம் அளவில், சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த பரப்புரைகளுக்கு மத்தியிலும் கூட, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில்[1145] இராணுவ பாதுகாப்புடன் கூடிய விதத்தில் இராணுவத்தினரால் பராமரிக்கப்படும் 30 மூடப்பட்ட அமைவிடங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றில் சுமார் 284,000 உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். அந்த வகையில், எல்ரீரீஈ இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்து வந்த மோதல் வலயத்திற்குள் முன்னர் அகப்பட்டுக் கொண்டிருந்த - குடும்பங்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் மற்றும் உடல் ஊனமுற்ற நபர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய –சிவிலியன்கள்,அதனையடுத்து தாம் மூடப்பட்ட முகாம்களுக்குள் வைக்கப்பட்டிருக்கும் ஒரு நிலையை எதிர்கொண்டார்கள். தாம் அந்த முகாம்களிலிருந்து எப்போது வெளியேறப்போகின்றோம் அல்லது எப்போது வீடுகளுக்குச் செல்லப் போகின்றோம் என்ற விடயத்தையும் அவர்கள் தெளிவாக அறிந்திருக்கவில்லை.

1064. நடமாட்ட சுதந்திரத்திற்கான உரிமைகள் மற்றும் தன்னிச்சையான விதத்தில் தடுப்புக் காவலுக்குட்படுத்தபடாதிருப்பதற்கான உரிமை என்பன தொடர்பாக இலங்கையின் அரசியல் யாப்பு, சர்வதேச சட்டம் என்பவற்றின் கீழ் உறுதியான பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும்,தமது சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்த நபர்களின் உரிமை ஒரு நீதவான் முன்னிலையில் உடனடியாக எடுத்து வரப்பட வேண்டியிருந்த போதிலும்,[1146] மூடுண்ட முகாம்களில் தங்கியிருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் சட்டத்தரணிகளை அணுக முடியாத நிலையில் இருந்து வந்தனர். அதே போல தன்னிச்சையான தடுப்புக் காவலுக்கு இணையானதான அந்த நிலைமையைக் குறித்து சவால் விடுப்பதற்கு நீதிமன்றங்களை அணுக முடியாத நிலையிலும் அவர்கள் இருந்து வந்தனர். இலங்கையின் அரசு சாரா அமைப்புக்களில் ஒன்றான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ஒரு குழு என்ற முறையில் அம்மக்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு சவால் விடுக்கும் பொருட்டு அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தது (கீழே பார்க்கவும்). உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் சுதந்திரத்தை பறிப்பதனை ஒழுங்குமுறைப்படுத்தும் ஒரு சட்டம் இருந்து வரவில்லை. அவ்விதம் அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் கால அளவு இராணுவ அதிகாரிகளின் தற்றுணிபிலேயே தங்கியிருந்தது.

1065. மீள் குடியேற்றத்திற்கு இடையூறாக இருந்து வந்த கரிசனைக்குரிய ஒரு காரணியாக கண்ணிவெடி அகற்றல் செயற்பாடு இருந்து வந்த அதேவேளையில், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை மூடுண்ட முகாம்களில், அவர்களுக்கு

[1144] வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பான வழிகாட்டுதல் குறிப்பின் நடுத்தர கால மீளாய்வு –ஓர் ஐந்தொகை பத்திரம், ஏப்ரல் 2009.

[1145] உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை பாதுகாப்பதற்கான செயற்குழு, பாதுகாப்பு அபிவிருத்திகள் தொடர்பான இரண்டாவது காலாண்டுச் செய்திகள்.

[1146] உறுப்புரைகள் 12(3), 13 (2) மற்றும் 14(1)(h)).

நடமாட்ட சுதந்திரத்தை வழங்காமல் நீண்ட காலப் பிரிவுகளில் தங்க வைத்திருப்பதற்கான முதன்மையான காரணம் எல்ரீரீஈ சந்தேக நபர்களாக அவர்கள் இருந்து வருகின்றார்களா என்ற விடயம் குறித்து சோதனைகளை மேற்கொள்வதாகும் என்ற விடயம் பலா் வழங்கிய தகவல்களிலிருந்தும், அதே போல அரசாங்கம் வெளியிட்ட பல அறிக்கைகளிலிருந்தும் தெளிவாக தெரிய வருகின்றது. உதாரணமாக, வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான தகுதி வாய்ந்த அதிகாரியான மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன 2010 செப்டம்பர் 8 ஆந் திகதி கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு வழங்கிய தனது வாக்குமூலத்தில்[1147] "உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் நடமாட்டம் தொடர்பாக நாங்கள் ஒரு சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியிருந்தது. ஏனெனில், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு மத்தியில் மிகவும் ஆபத்தான நபர்களும் இருந்து வந்தார்கள். எல்லோரும் எமது பக்கத்திற்கே விரலை நீட்டுகின்றார்கள் - அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பக்கம் - இந்த மக்களுக்கு நாங்கள் எந்தவிதமான நடமாட்ட சுதந்திரத்தையும் வழங்குவதில்லை என அவர்கள் கூறுகின்றார்கள்…. சுமார் இரண்டு மூன்று மாத காலப் பிரிவுக்கு அவர்களுடைய நடமாட்டத்தை ஓரளவுக்கு கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது.[1148] ஏனெனில், பெருந்தொகையான போராளிகள் இந்த சாதாரண குடிமக்களுக்கு மத்தியில் ஒளிந்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற விடயம் எமக்குத் தெரியும். அவர்களை இனங்கண்டுகொள்வதற்காக நாங்கள் எமது அனைத்து புலனாய்வு முகவரகங்களையும் பயன்படுத்த வேண்டியிருந்தது."

1066. எவ்வாறிருப்பினும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் சுதந்திரத்தை தற்காலிகமாக பறித்துக் கொள்வதற்கும், அவர்களிடமிருந்து போராளிகளை பிரித்தெடுப்பதற்கும் அரசாங்கங்கள் உரித்துக்களை கொண்டிருந்த போதிலும், சுதந்திரம் பறிக்கப்படும் நிலை சாத்தியமான ஆகக் குறைந்த காலப் பிரிவு தொடர்பாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் சுதந்திரத்தை பறிக்கும் செயலை, உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் அரசின் பாதுகாப்புக்கு பாரதூரமான விதத்தில் பங்கம் விளைவிக்க முடியுமென நம்புவதற்கு பாரதூரமான மற்றும் சட்ட ரீதியான காரணங்கள் இருந்து வரும் நிலைமைகளில் மட்டுமே அனுமதிக்க முடியும். மேலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை தொடர்ந்தும் தடுத்து வைக்க வேண்டுமானால்,அதற்கு ஒரு சட்ட அடிப்படை இருந்து வருதல் வேண்டும, மற்றும் ஒவ்வொரு தனிநபருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

1067. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 2009 ஜுன் 11 ஆந் திகதி உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தது. "வலுவுக்கிடக்கூடிய பிடிவிறாந்து இல்லாத நிலையிலும், தனிநபர் ஒருவரை கைது செய்வதற்கு இடமளிக்கும் ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதியொன்றின் பக்கபலமில்லாமலும் பின்னைய வகையைச் சோந்தமுகாமொன்றில் (அதாவது, "நலன்புரி நிலையம்" அல்லது "இடம்பெயர்ந்தவர்களின்" முகாம்களில்) சாதாரண சிவிலியன் ஒருவரின் சுதந்திரத்தை பறிப்பது" சட்ட விரோதமான தன்னிச்சையான ஒரு கைதுக்கு இணையானதாக இருந்து வருகின்றது… பின்னைய வகையைச் சேர்ந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அத்தகைய நபர்கள் அனைவரும்… அவர்கள் உண்மையில் சட்ட விரோதமான விதத்திலும், தன்னிச்சையான விதத்திலும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும்,

[1147] மனிதநேய நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த பொதுமக்களை மீளக் குடியமர்த்துதல், இலங்கை அரசாங்கம், நவம்பர் 26, 2009,http://reliefweb.int.

[1148] நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பல்வேறு தரப்புக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2-3 மாதக் காலப் பிரிவிலும் பார்க்க அதிக காலம் நீடித்ததுடன், மேஜர் ஜெனரலின் வாக்குமூலத்திற்கு மாறாக சோதனை மற்றும் விசாரணை நடவடிக்கை என்பன 2010 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விதத்தில் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிடுவது நியாயமானதாகும்.” இந்த உரிமைகள் நடமாட்டச் சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தும் உறுப்புரை 14(1)யும் உள்ளடக்குகின்றன. தனிநபரொருவரின் சுதந்திரம் பறிக்கப்படுவதாக இருந்தால் அவருடைய கைதுக்கான மற்றும் தடுத்து வைப்புக்கான காரணத்தை அவருக்கு சர்வதேச தர நியமங்களுக்கு இணங்கிய விதத்தில் தெரிவித்தல் வேண்டும் என சர்வதேச சட்டம் அவசியப்படுத்துகின்றது.

1068. இந்த மனு ஏனையவற்றுக்கு மத்தியில் மூடுண்ட “நலன்புரி” முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களினதும் நடமாட்ட சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கும், அதே போல பெயர் குறிப்பிடப்பட்ட அரச அதிகாரிகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் அரசியல் ரீதியான உரிமைகளை மீறி இருக்கின்றார்கள் என்ற விடயத்தை அங்கீகரிப்பதற்கும் உச்ச நீதிமன்றம் ஒரு கட்டளையை வழங்க வேண்டுமென கோரியிருந்தது. உச்ச நீதிமன்றம் 2009 ஜுன் 18 ஆந் திகதி இந்த விண்ணப்பம் தொடர்பாக விசாரணை நடத்தியது. ஆனால், இவ்வழக்கு பல தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைக்கும் தகவல்களின் பிரகாரம்,இந்த விடயம் தொடர்பான தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை.[1149]

1069. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் மனித உரிமைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி வால்டர் காலின் 2009 செப்டம்பர் மாதத்தில் இலங்கைக்கு மேற்கொண்ட மற்றொரு விஜயத்தின் பின்னர், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் திரும்பத் தமது இடங்களுக்குச் செல்லும் செயற்பாடு மந்த கதியில் இடம்பெற்று வருவது குறித்து தமது ஆழமான கவலையை தெரிவித்திருந்தார். “மூடுண்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் 250,000 க்கும் மேற்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின்நடமாட்டச் சுதந்திரத்தைமீண்டும் வழங்குவது… அவசரமாகமேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது….”[1150] என அவர் குறிப்பிட்டிருந்தார். மேலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் முகாம்களை விட்டு வெளியேறி ஒன்றில் தமது வீடுகளுக்குச் செல்வதற்கு அல்லது தமது அனுசரணை குடும்பங்களில் தங்கியிருப்பதற்கு அல்லது திறந்தவெளி இடைத்தங்கல்முகாம்களுக்குச் செல்வதற்கு அரசாங்கம் அவர்களை அனுமதிக்க வேண்டுமென அவர் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தார். “சர்வதேச சட்டத்தின் பிரகாரம், சட்டபூர்வமான தவிர்க்க முடியாத பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள், ஒரு மோதலின் உச்ச கட்டத்தின் போது சிவிலியன்களின் சுதந்திரம் பறிக்கப்படுவதனை நியாயப்படுத்த முடியும். ஆனால், அது இந்த பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளுக்கு எதிர்வினையாற்றுவதற்குத் தேவையான முழுமையான காலப் பிரிவிலும் பார்க்க நீடிக்கப்படக் கூடாது. மேலும், சுதந்திரத்தை பறிப்பது தொடர்பான முடிவுகள் ஒரு குழு அடிப்படையில் அன்றி,தனிநபர் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். விடுவிக்கப்படாத நபர்களுக்கு தனித்தனியாக அதற்கான காரணங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும். சுயாதீனமான அமைப்பொன்றில் இந்த முடிவு குறித்த ஒரு மீளாய்வினை மேற்கொள்வதற்கான உண்மையான வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.”[1151]

---

[1149] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எதிர் பாதுகாப்பு அமைச்சு (SC FR 457/09),http://www.cpalanka.org/the-centre-for-policy-alternatives-vs-minister-of-defence-sc-fr-45709.

[1150] Irinews, Sri Lanka: Concerns growing over pace of IDP resettlement, 30 September 2009. http://www.irinnews.org/report/86371/sri-lanka-concerns-growing-over-pace-of-idp-resettlement

[1151] ஐக்கிய நாடுகள் செய்தி வெளியீடு,*சுமார் இரண்டரை இலட்சம் இடம்பெயர்ந்த மக்களின் நடமாட்ட சுதந்திரம், ஐ நா பிரதிநிதி இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றார்,* செப்டம்பர் 29, 2009 http://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=135&LangID=E

1070. “சாதாரண பொது மக்களை முகாம்களிலிருக்கும் மக்களுடன் மூடுண்ட முகாம்களிலும், அமைவிடங்களிலும் தொடர்ச்சியாக தடுத்து வைத்திருப்பதனை… அடுத்த ஒரு சில வாரங்களில் நடமாட்ட சுதந்திரத்தை மீளப் பெற்றுக் கொடுப்பதில் கணிசமான அளவிலான முன்னேற்றம் ஏற்படாதிருந்தால், ஒரு கூட்டுத் தண்டனையளிக்கும் முறையாகவே கருத வேண்டியிருக்கும்” என வால்டர் காலின் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

### மெனிக்பார்ம் தடுப்பு முகாம், செட்டிகுளம் பிரிவு, வவுனியா மாவட்டம்

1071. மெனிக்பார்ம் முகாம் சுமார் 500 ஹெக்டயார் பரப்பளவில் பல கி.மீற்றர் பிரதேசத்தில் அமைந்திருந்ததுடன், அது ஏழு வலயங்களை கொண்டிருந்தது.[1152] ஒவ்வொரு வலயமும் முள்ளுக் கம்பிகளினால் சூழப்பட்டிருந்ததுடன், இராணுவ சிப்பாய்கள் அங்கு காவலில் இருந்தனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் முதலில் 2009 பெப்ரவரி மாதத்தில் மெனிக்பார்ம் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களுக்கு மத்தியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அகற்றப்பட்ட நோயாளிகளுடன் வந்திருந்த பராமரிப்பாளார்களும் மற்றும் சிகிச்சையின் பின்னர் குணமடைந்திருந்த நோயாளிகளும் இருந்தனர்.[1153] 2009 மே 17 ஆந் திகதிக்கும், ஜுலை 9 ஆந் திகதிக்குமிடைப்பட்ட காலப் பிரிவின் போது முல்லைத்தீவு மற்றும் ஓமந்தை ஆகிய பிரதேசங்களில் சோதனையிடப்பட்ட பின்னர் சுமார் 90,000 உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் மெனிக்பார்ம் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அந்த முகாமின் உச்ச கட்டத்தின் போது மொத்தம் 284,000 உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 220,000 பேர் அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

1072. இவ்விதம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் அனுமதியில்லாமல் மெனிக்பார்ம் முகாமிலிருந்து வெளியேறுவது தடை செய்யப்பட்டிருந்தது மட்டுமன்றி, தமக்கென ஒதுக்கப்பட்டிருந்தவலயத்திலிருந்து வெளியில் செல்ல முடியாதவர்களாகவும் அவர்கள் இருந்து வந்தனர். தொடக்கத்தில் அதே வலயத்தில் ஏனைய பிரிவுகளிலிருந்த உறவினர்களை போய் பார்ப்பதற்கும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. நடமாட்டச்சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டமையானது,உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் ஏனைய பிரிவுகளில் அல்லது வலயங்களில் போய் தமது உறவினர்களை தேடிப் பார்ப்பதனை தடுத்தது. மோதலின் போது அல்லது சோதனை நடவடிக்கைகளின் போது பெற்றோர் பிள்கைளிலிருந்து பிரிக்கப்பட்டதுடன்,[1154] அவர்களை எல்லா இடங்களிலும் தேடிக் கொண்டிருந்தார்கள். குடும்பத்தைப் பிரிப்பது உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் எதிர்கொண்டு வந்த முக்கியமான ஒரு கரிசனையாக இருந்து வந்ததுடன், மோதல் வலயங்களிலிருந்து ஏற்கனவே வெளியே வந்திருந்த மக்கள் அனுபவித்து வந்திருந்த கடும் மன அதிர்ச்சி நிலைமையை அது மேலும் அதிகரித்தது. ஒரு சிலரை பொறுத்தவரையில் இது பல மாத காலம் நீடித்தது. குறிப்பாக, தமது உறவினர்களை பாதுகாப்புப் படையினர் எடுத்துச் சென்றமை மற்றும் உறவினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறியாதிருந்த நபர்கள் அல்லது தடுத்து வைக்கப்பட்டு பல்வேறு நிலையங்களுக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்த நபர்கள் தொடர்பாக இந்நிலைமை காணப்பட்டது.

1073. உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த பலருக்கு தமது குடும்ப உறுப்பினர்களின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் சாட்சிகள் தெரிவித்தனர்.[1155]

1152 Zone 0 (Kathirkamar Village) ; Zone 1 (Ananda Kumarasamy Village) ; Zone 2 (Pon Ramanathan Village) ; Zone 3 (Arunachchalam Village) ; Zone 4 (Chettikkulam); Zone 5; Zone 6 ; Zone 7 (Maruthamadu Welfare Centre).

1153 WS on file

1154 WS on file

1155 WS on file

மெனிக்பாா்ம் முகாம்களுக்கு வெளியில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு விசேட அனுமதி தேவையாக இருந்து வந்ததுடன், சிகிச்சை பூர்த்தியடைந்த பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் மீண்டும் முகாம்களுக்கு எடுத்து வரப்பட்டார்கள். அதாவது, தடுப்புக் காவல் கைதிகள் நடத்தப்படும் அதே விதத்தில் அவர்கள் நடத்தப்பட்டார்கள்.[1156] வெளியிலிருப்பவர்கள் முகாம்களுக்குள் வந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்திருப்பவர்களை பார்ப்பதும் கடுமையான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்தவுடனேயே பார்வையாளர்களை வெளியேறிச் செல்லுமாறு சிப்பாய்கள் கட்டளையிட்டனர். சில சந்தர்ப்பங்களில் இது 15 நிமிடங்களுக்கு மேற்படவில்லை. இந்த நிபந்தனைகள், சிறையிலிருக்கும் ஒருவரை போய் பார்ப்பதற்கான நிபந்தனைகள் போல் இருந்து வருவதாக சாட்சி ஒருவர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தார்.[1157]

1074. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தொடர்பான அரசாங்கத்தின் இராணுவமயப்படுத்தப்பட்ட இயல்பிலான அணுகுமுறை,2009 ஏப்ரல் மாதத்தில் வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு பொறுப்பான தகுதி வாய்ந்த அதிகாரியாக மேஜர் ஜெனரல் சந்திரசிரி நியமனம் செய்யப்பட்டதன் மூலம் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அதனையடுத்து, இறுதிப் போரில் சம்பந்தப்பட்டிருந்த இலங்கை இராணுவத்தின் 53 ஆவது படைப் பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார். உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் பிரச்சினைகளை நிர்வகிக்கும் விடயத்தில்[1158] சிவிலியன் அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருந்தபோதிலும், குறிப்பாக வலயங்கள் மற்றும் முகாம்களுக்கு உள்ளேயும் வெளியேயும் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் பாதுகாப்பு அமைச்சும், இலங்கை இராணுவமும் முக்கியமான பாத்திரங்களை வகித்து வந்தன. இது பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபயராஜபக்ஷ கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் முன்வைத்த சமர்ப்பணத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. “ஒட்டுமொத்த செயன்முறையையும் இராணுவமே கவனித்துக் கொண்டது. உண்மையில் ஏனைய அரசாங்க அதிகாரிகள், முகவரகங்கள் ஆகிய தரப்பினரும் இருந்து வந்தார்கள். ஆனால், வேலைகளில் பெரும்பாலான பகுதி (உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களை அமைத்தல்) இராணுவத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது”[1159] என அவர் கூறினார். மெனிக்பாா்ம் முகாமின் ஒவ்வொரு வலயத்திற்கும் இராணுவத் தளபதிகள் பொறுப்பாக இருந்து வந்ததுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் நாளாந்த வாழ்க்கையை ஒழுங்குமுறைப்படுத்தும் பொருட்டு இராணுவத்தினர் தொடர்ந்தும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

1075. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் முகாம்களிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்படாததற்கு உத்தியோகபூர்வமாக முன்வைக்கப்பட்ட முதன்மையான உத்தியோகபூர்வ நியாயப்படுத்தல் வடிகட்டி சோதனை செய்தல் மற்றும் விசாரணை செய்வதாகும். இது 2009 ஆம் ஆண்டு முழுவதிலும் முகாம்களுக்குள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததுடன், 2010 ஆம் ஆண்டிலும்

---

1156 கோப்பிலுள்ள கடிதம் செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சு, மே 11, 2009

1157 WS on file

1158 மீள் குடியேற்றம், அனர்த்த நிவாரணச் சேவைகள் அமைச்சின் தலைமையின் கீழ் செயற்பட்டு வந்த தேசிய நெறிப்படுத்தல் கமிட்டியொன்றில் ஏனைய பல அமைச்சுக்களும் சம்பந்தப்பட்டிருந்தன. மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபரும், ஏனைய முகவரகங்களைச் சேர்ந்தவர்களும் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.(Sri Lanka’s Humanitarian Effort, Presidential Task Force for Resettlement, Development and Security in the Northern Province, 2011).

1159 கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் பாதுகாப்புச் செயலாளர் திரு. கோத்தாபய ராஜபகஷ் முன்வைத்த சமர்ப்பணம், ஆகஸ்ட் 17, 2010.

அவை இடம்பெற்றன. சாதாரண உடையில் செயற்பட்டு வந்த இராணுவத்தின் புலனாய்வு உத்தியோகத்தர்களும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் எல்ரீரீஈ உறுப்பினர்கள் மற்றும் போராளிகள் ஆகியோர் தொடர்பாக தேடுதல் நடத்துவதற்கான உத்தியின் ஒரு பாகமாக அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

1076. துணைப்படை குழுக்களின் உறுப்பினர்களும், தகவல்களை வழங்குபவர்களாக செயற்பட்டு வந்த முன்னைய எல்ரீரீஈ இயக்க போராளிகளும் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர்களுடன் எல்ரீரீஈ உறுப்பினர்களை அடையாளம் காண்பதற்கென அடிக்கடி முகாம்களுக்குள் பிரவேசித்தனர்.[1160] அவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு மத்தியில் நடந்து செல்வதுடன், தனிநபர்களை சுட்டிக் காட்டுவார்கள். அப்பொழுது அவ்விதம் சுட்டிக் காட்டப்பட்டவர்கள் விசாரணைக்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஒரு சில நபர்கள் அவ்விதம் எடுத்துச் செல்லப்பட்ட போது ஏனையவர்களுக்கு முன்னிலையில் அவர்கள் இழுத்துச் செல்லப்பட்டதுடன், அவர்கள் மீது தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.[1161] ஏனையவர்கள் இரவு நேரங்களில் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.[1162]

1077. தமது சுதந்திரம் பறிக்கப்பட்ட காலப் பிரிவின் போது, பல தடவைகள் குற்றவியல் புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தம்மை அழைத்தார்கள் என்பதனையும், எல்ரீரீஈ இயக்கத்துடனான தமது சந்தேகத்துக்குரிய தொடர்புகள் குறித்து அல்லது முகாம்களிலிருக்கும் எல்ரீரீஈ உறுப்பினர்கள் குறித்து தகவல்கள் உள்ளனவா என முகாமிலிருந்த ஒரு அறையில் தாம் விசாரணைக்குட்படுத்தப்பட்டதனையும் சாட்சிகள் தெரிவித்தார்கள்.[1163] உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த ஒரு சில நபர்கள் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் முகவர்களினால் அடிக்கடி விசாரணை செய்யப்பட்டதாகவும், சில நேரங்களில் ஒரு காகிதத்தில் அல்லது ஒருவெற்றுக் காகிதத்தில் அல்லது சிங்கள மொழியிலிருந்த ஆவணத்தில் கையொப்பமிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் ஏனைய மூலங்களும் தெரிவித்தன. அந்த ஆவணத்தை வாசிப்பதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை. உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த ஒரு சில நபர்கள் நாளாந்த அடிப்படையில் குற்றவியல் புலன் விசாரணை அதிகாரிகளை சந்திக்க வேண்டியிருந்தது. சோதனை நடவடிக்கைகளின் போது தமது கணவன்மார்களிடமிருந்து பிரிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களின் மனைவிமாரிடம் அவர்களுடைய கணவன்மார்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்யப்பட்டது.

1078. சிப்பாய்கள் அடிக்கடி மக்களை அடித்துத் துன்புறுத்திய நிலையில் அல்லது விசாரணைக்கென உறவினர்களை எடுத்துச் சென்ற நிலையில் அல்லது தடுப்பு நிலையங்களுக்கு அவர்களை எடுத்துச் சென்ற நிலையில் தாம் எவ்வாறு இடையறாது அச்சத்துக்கு மத்தியில் வாழ்ந்து வந்தார்கள் என்பதனை சாட்சிகள் விளக்கியிருந்தார்கள். உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் சிப்பாய்களின் கண்டிப்பான அறிவுறுத்தல்களை அனுசரிக்கத் தவறினால், அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதுடன், ஏச்சுப் பேச்சுக்களுக்கும் அவர்கள் உள்ளானார்கள்.[1164] மோசமான நிலைமைகள் குறித்தோ அல்லது சிப்பாய்கள் அல்லது குற்றவியல் புலனாய்வுத் துறையினர் தம்மை நடத்தும் விதம் குறித்தோ முறைப்பாடு செய்வதற்கு அவர்களுக்கு எந்த வாய்ப்பும் இருந்து வரவில்லை.

[1160] WS on file

[1161] WS on file

[1162] WS on file

[1163] WS on file

[1164] WS on file

1079. இராணுவ ஆளிணியினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் துணைப் படை குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் தொடர்ந்தும் அங்கு பிரசன்னமாகியிருந்த நிலையும் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்களை பொறுத்தவரையில் ஒரு பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கியிருந்தது. தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் அதிகாரமளிக்கப்படுமிடத்து, நாளின் குறிப்பிட்ட நேரங்களில் மெனிக்பார்ம் முகாமில் சமூகமளித்திருந்த அதேவேளையில், குறிப்பாக இரவில் பாதுகாப்பு அல்லது கண்காணிப்புப் பொறிமுறைகள் இல்லாதிருந்த நிலை, உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்களை குறிப்பாக, பெண்களையும், பெண் பிள்ளைகளையும் மிகவும் ஒரு பலவீனமான ஒரு நிலைக்குத் தள்ளியிருந்தது.

1080. முகாம்களில் இடம்பெற்று வரும் பாதுகாப்பு தொடர்பான சம்பவங்களை காட்டும் அறிக்கைகள் குறித்து 2009 செப்டம்பர் மாதத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆழ்ந்த கவலையை தெரிவித்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். மெனிக்பார்ம் முகாமில் செப்டம்பர் 26 ஆந் திகதி இடம்பெற்றதாக கூறப்படும் ஒரு சம்பவத்தில்,உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் ஒரு குழு இரு வலயங்களுக்கிடையில் நடமாடுவதை பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்த முற்பட்ட பொழுது அது ஒரு முறுகல் நிலையை தோற்றுவித்ததுடன், பாதுகாப்புப் படையினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்திருந்தார்கள். எங்கோ இருந்து வந்து தன்னை தாக்கிய ஒரு துப்பாக்கிக் குண்டு காரணமாக ஒரு பிள்ளையின் உடல் செயலிழந்ததாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அறிக்கையிட்டிருந்தார். உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்களின் பாதுகாப்புக்கும், உடல் ரீதியான பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கும் வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும், இடம்பெயர்ந்திருப்பவர்களை மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பும் செயன்முறை துரிதப்படுத்தப்பட வேண்டுமென்றும்,அம்மக்களின் நடமாட்ட சுதந்திரம் மீண்டும் வழங்கப்பட வேண்டுமென்றும்இந்த அறிக்கையில் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.[1165]

### முகாம் நிலவரங்கள்

1081. தடுத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்களின் நிலைமை, முகாம்களில் காணப்பட்ட நிலைமைகளினால் மேலும், மோசமடைந்திருந்தது. குறிப்பாக, 2009 ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் முடிவில் பெருந்தொகையான மக்களின் உள் வருகையுடன் இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் இது தொடர்பான திட்டமிடல் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன ஆரம்பித்திருந்த போதிலும், மக்கள் பெரும் திரளாக முகாம்களுக்குள் வந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அதற்கு உரிய விதத்தில் தயாராக இருக்கவில்லை.

1082. 2009 நவம்பர் 26 ஆந் திகதி வெளியிட்ட ஓர் அறிக்கையில், "உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் வாழ்ந்து வரும் முகாம்களில் இருப்பவர்கள் சகஜ நிலையை அனுபவிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு குறுகிய காலப் பிரிவுக்குள் மருத்துவமனைகள், வங்கிகள், அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் சதொச விற்பனை நிலையங்கள் என்பவற்றை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்துள்ளது.........." என அரசாங்கம் கூறியிருந்தது.[1166] அரசாங்கம் 2013 ஜனவரி 31 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டியில்[1167] சமர்ப்பித்த அதன் அறிக்கையில் "ஒவ்வொரு நலன்புரி கிராமமும் தங்குமிடங்களைக் கொண்ட தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் மின்சாரம்

---

1165 UNHCR, 29 Sept 2009, UNHCR concerned about safety of displaced persons in Sri Lanka, reliefweb.int.

1166 The resettlement of the civilians displaced during the humanitarian mission, report by Government of Sri Lanka. 26 November 2009, as recorded on relief.web/int.

1167 CCPR/C/LKA/5,Consideration of reports submitted by State parties under article 40 of the Convention, Sri Lank, 31 January 2013.

வழங்கப்பட்டிருப்பதுடன்,ஒவ்வொரு இருப்பிடத் தொகுதியும் புறம்பான சமையலறைகள், கழிப்பறைகள், குளிக்குமிடங்கள் மற்றும் சிறுவர் நேய வெளிகள் என்பவற்றைக் கொண்டுள்ளன. பகிரங்க இடங்கள் மற்றும் நிலையங்களுக்குள் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கான பிரதேசங்கள் என்பவற்றை உருவாக்கும் விடயம் தொடர்பாக விசேட முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. நீர் விநியோகம் உலக சுகாதார நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த தர நியமங்களிலும் பார்க்க சிறந்த தர நியமங்களில் காணப்பட்டதுடன், பொதுச் சுகாதார வசதிகளும் தர நியமங்களுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் பராமரிக்கப்பட்டு வந்தன. உணவு மற்றும் போஷாக்கு என்பன குறிப்பாக கவனம் செலுத்தப்பட்ட ஒரு துறையாக இருந்து வந்தது… விரிவான சுகாதார பராமரிப்பு வசதிகள் மற்றும் போதிய மருந்துப் பொருட்கள் என்பன நலன்புரி கிராமங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன…”

1083. மெனிக்பார்ம் முகாம் உள்ளடக்கியிருந்த பல்வேறு வலயங்களின் விவரங்கள் கணிசமான அளவில் வேறுபட்டு காணப்பட்டதுடன், காலப் போக்கில் அவை மாற்றமடைந்துமிருந்தன. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த சாட்சிகளின் வாக்குமூலங்கள், அதே போல ஐக்கிய நாடுகள் அமைப்பு, மனிதநேய நிறுவனங்கள், அரசுசாரா அமைப்புக்கள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஏனையோர் முன்வைத்த அறிக்கைகள் என்பன அரசாங்கம் வழங்கிய விவரங்களில் விளக்கப்பட்டிருக்கும் நிலைமைக்கும், முகாம்களில் காணப்பட்ட நிலவரங்களுக்கிடையில் தெளிவான முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன என்பதனை காட்டுகின்றன.

1084. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்களில் காணப்பட்ட மிதமிஞ்சிய அளவிலான சனநெரிசல் மற்றும் மோசமான நிலைமைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு வசதிகளின் குறைபாடு என்பன தொடர்பாக 2009 ஏப்ரல் மாதத்தில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் கரிசனைகளை எழுப்பியிருந்தார். அந்த அலுவலகம் மேற்கொண்ட மீளாய்வு வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் செயற்பட்டு வந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தங்கியிருந்த முகாம்கள் தொடர்பாக பாதுகாப்பு குறித்த பாரதூரமான பிரச்சினைகளை கொண்டிருந்தன என முடிவாகக் கூறப்பட்டிருந்தது. அரசாங்கம் உடனடியாகமேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அந்த மீளாய்வுபரிந்துரைகளை முன்வைத்திருந்தது.[1168]

1085. சுகாதார பராமரிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சின் தொற்று நோய் அலகு 2009 ஏப்ரல் மாதம் வெளியிட்ட புறம்பான ஒரு அறிக்கையில், வவுனியாவில் அமைந்திருந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்கள் குறித்து அது மேற்கொண்ட மதிப்பீட்டுப் பெறுபேறுகள் எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. இந்த மதிப்பீடு *“உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் பொதுச் சுகாதார பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்வதற்கான தற்காலிக வழிகாட்டுதல்களின்”* பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.[1169] ஏற்கனவே பாரியளவில் இடம்பெற்றிருக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் உள் வருகை “வளங்களின் மீது பிரமாண்டமான அளவிலான அழுத்தங்களை எடுத்து வந்திருப்பதுடன், அதிகாரிகளுக்கு எண்ணற்ற பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது” என்ற விடயத்தை இந்த அறிக்கை ஏற்றுக் கொண்டிருந்ததுடன், அது கவனத்தில்

---

1168 UNHCR, Mid-term review, 15 April 2009.

1169 2009 ஜனவரி மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வழிகாட்டுதல்கள் நீர் மற்றும் உணவு என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதையும் உள்ளடக்கிய விதத்தில் தொற்று நோய்கள் பரவுவதனை தடுப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரை செய்திருந்தன. மனிதக் கழிவுகள் மற்றும் குப்பைகள் என்பவற்றை பாதுகாப்பாக அகற்றுதல், நோய் வாய்ப்பட்டிருக்கும் நபர்களுக்கு சிகிச்சை வழங்கி முகாமைத்துவம் செய்தல் மற்றும் நோய்கள் தொடர்பான கண்காணிப்பு என்பன தொடர்பான வழிமுறைகளும் இதில் அடங்குகின்றன.

எடுக்கப்பட வேண்டிய இந்த முகாம்களில் காணப்படும் நிலவரங்கள் தொடர்பான முக்கியமானமுடிவுகளையும் விரிவாக எடுத்து விளக்கியிருந்தது: தங்குமிடங்களுக்குள் போதியளவில் இடவசதி இல்லாதிருத்தல் மற்றும் காற்றோட்ட வசதியில்லாமை;கழுவுவதற்கும், ஆடைகளை சுத்தம் செய்வதற்கும் போதியளவில் நீர் கிடைக்காமை மற்றும் பாதுகாப்பான குடிநீர் தட்டுப்பாடு, கழிப்பறைகள் குறைந்த எண்ணிக்கையில் இருந்து வருதல் மற்றும் அவற்றின் மோசமான பராமரிப்பு, அவற்றில் பெரும்பாலான கழிப்பறைகள் நிரம்பி வழியும் நிலை; உணவு தயாரிப்பில் உச்ச மட்ட சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதை சமூக சமையலறைக்குள் காணப்படும் நிலைமைகள் கடினமாக்குகின்றன.[1170]

1086. மேலே குறிப்பிடப்பட்ட இரு அறிக்கைகளும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்களையும், ஏனைய மூலாதாரங்களையும் உறுதிப்படுத்துகின்றன. அத்தகைய வாக்குமூலங்களும் இதே மாதிரியான குறைபாடுகளை எடுத்துக் காட்டியிருந்தன: மிக மோசமான சீரண, சுகாதார மற்றும் பொதுச் சுகாதார பிரச்சினைகள், கழிப்பறைகளின் பற்றாக்குறை, நிரம்பி வழியும் கழிப்பறைகள், 15 பேர் வரையில் தங்கியிருந்த சனநெரிசல் மிகுந்த கூடாரங்கள், உலர் பருவத்தில் தாங்க முடியாத சூடு மற்றும் பருவப்பெயர்ச்சி காற்றுக் காலங்களில் பொருத்தமற்றவையாக இருந்து வந்த கூடாரங்கள். உதாரணமாக, 2009 ஆகஸ்ட் மாதத்தில் திடீரென ஏற்பட்ட ஒரு வெள்ளப் பெருக்கு காரணமாக நான்கு வலயங்களில் சுமார் 2,000 கூடாரங்கள் சேதமடைந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், நீரில் மூழ்கிய நிலையில் வலயம் 2இல் கழிப்பறைகளின் கழிவு நீர் கலப்பதன் காரணமாக நோய்களை பரவச் செய்யும் ஆபத்தும் இங்கு காணப்பட்டது.[1171]

1087. மெனிக்பார்ம் முகாமின் வலயம் 2 இல் காணப்பட்ட நிலவரங்கள் குறித்து சாட்சியொருவர் பின்வருமாறு விளக்கியிருந்தார்: “இந்த ஒவ்வொரு முகாமும் A தொடக்கம் Zவரையிலான அலகுகளை கொண்டுள்ளது.எமது முகாமில் ஒவ்வொரு அலகும் 6 மீ. x6 மீ. பரப்பைக் கொண்டிருந்ததுடன், 15 பேர் அதில் தங்கியிருந்தனர். சமையல் வேலையும் அங்கேயே மேற்கொள்ளப்பட்டது. இவை தற்காலிகமான கட்டமைப்புக்களாக இருந்து வந்ததுடன், ஒரு சில கித்தான் துணி கூரைகளை கொண்டிருந்ததுடன், ஏனையவை மெல்லியதுத்தநாககூரைகளைக் கொண்டிருந்தன. பிரிவுகள் A-C சுமார் 45 பேர்களுக்கு ஒரு கழிப்பறையை மட்டுமே கொண்டிருந்தது; நாங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. எமக்கு வழங்கப்பட்ட உணவு காரணமாக பலருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதுடன், திறந்த வெளி கழிப்பிடங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. நிலைமைகள் மிகவும் அசுத்தமாக இருந்து வந்தன.”[1172]

1088. வலயம் 2, தரையில் கூடாரங்களையும், குழிகளை மட்டுமே கொண்டிருந்ததாகவும், கழிப்பறைகளாக பயன்படுத்தப்படுவதற்கு தூண்கள் சூழ நடப்பட்டிருந்ததாகவும் சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்தனர். முகாம்களிலிருந்த கழிப்பறைகளில் பெரும்பாலானவை நிரம்பி வழிந்து கொண்டிருந்தன.[1173] கழிப்பறைகள் மற்றும் கழுவுமிடங்களும் உடல்

---

1170 தொற்று நோய் அலகு, சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு, வவுனியாவில் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்களுக்கான முகாம்களில் பொதுச் சுகாதாரம், சுகாதாரம் மற்றும் நோய் கண்காணிப்பு, வாராந்த அறிக்கை Vol. 36, No. 17, 18 – 25 April 2009, http://www.epid.gov.lk/web/attachments/article/150/Vol_36_NO_17_English.pdf

1171 Humanitarian Information Unit, U.S. Department of State, Sri Lanka: Manik Farm IDPs vulnerable to monsoon flooding, 21 August 2009, https://hiu.state.gov/Products/SriLanka_ManikFarmIDPsMonsoon_2009Aug21_HIU_U71

1172 WS on file

1173 WS on file

ஊனமுற்ற நபருகளுக்கான வசதிகளை கொண்டிருக்கவில்லை. குறிப்பாக, உடல் ஊனமுற்ற நபர்கள், போரினால் காயமடைந்த நபர்கள் இந்த இடங்களில் சிரமங்களையும், துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தது.[1174] நூற்றுக்கணக்கான கூடாரங்கள் தனியொரு கைப்பம்பிலிருந்தே நீரைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தன. உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் ஆற்றில் குளிக்க வேண்டியிருந்ததுடன், பெண்கள் குளிக்கும் பொழுது சிப்பாய்கள் அடிக்கடி அவர்கள் பக்கம் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.[1175]

1089. நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு அலகு மற்றும் மனிதநேய முகவரகங்களின் ஒன்றியம் "மெனிக்பார்ம் முகாமிலும், வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த சுகாதார மற்றும் மருத்துவச் சேவை நிகழ்ச்சித்திட்டம்" என்ற அதன் இறுதி அறிக்கையில் 2009 நவம்பர் மாதம் வரையில் வலயம் 2 இன் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் அதிகரித்த எண்ணிக்கையிலான நோயாளிகள் வருகை தந்த விடயத்தை குறிப்பிட்டிருந்தது. மேலே குறிப்பிட்டிருந்த நிகழ்ச்சித்திட்டம் மெனிக்பார்ம் முகாமில் ஆறு ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையங்களை நடத்தி வந்தது. "காலப் போக்கில் முகாம் முழுவதிலும் நோய்களும், வியாதிகளும் பரவத் தொடங்கியிருப்பதே இதற்கான காரணமாக இருந்து வர முடியும்."[1176] சிரங்கு போன்ற தோல் நோய்களும் அதே போல வாந்தி பேதியும் பரவலாகக் காணப்பட்டது என்றும் அவர்கள் அறிக்கையிட்டுள்ளனர். "இந்த முகாம்களுக்கு வந்தவர்கள், அவர்களின்உடல்களிலிருந்த ஆடைகளைத் தவிர வேறு எதனையும் வைத்திருக்கவில்லை. தற்காலிக கூடாரங்களில் அவர்கள் தஞ்சம்புகுந்தார்கள். இது அவர்களை சின்னம்மை,[1177] வயிற்றோட்டம், விஷக் காய்ச்சல், கண் வலி மற்றும் இருமல்கள் போன்ற நோய்களை எதிர்கொள்ளும் ஆபத்தை எடுத்து வந்திருந்தது. போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் கழிப்பறை வசதிகள் குறைவாக இருந்து வரும் நிலையில் திறந்த வெளியில் மலம் கழிப்பது பரவலாக இடம்பெற்று வருகின்றது…" அந்த அறிக்கை அந்த முடிவுரையில் "(மெனிக்பார்ம் முகாமில்) தங்கியிருந்தவர்கள் எதிர்கொண்ட சுகாதாரக் கேடான சூழல் எல்லா நேரங்களிலும் நோய்களின் பரவல் அல்லது பொதுவான வியாதிகள் என்பவற்றை உறுதிப்படுத்தின" எனக் குறிப்பிட்டிருந்தது.

1090. அங்கு கிடைக்கக் கூடியதாக இருந்து வந்த மருத்துவ வசதிகளை அணுகுவதில் நோய்வாய்ப்பட்டிருந்த உள்நாட்டில் இடம்யெர்ந்திருந்த நபர்கள் எதிர்கொண்டு வந்த சிரமங்களை மனிதநேயப் பணியாளர்களும் எடுத்து விளக்கியிருந்தனர். அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்ற பின்னர் வரிசையில் பல மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. சிங்கள மொழியை மட்டுமே பேசுபவர்களாக இருந்து வந்த பெரும்பாலான மருத்துவர்களுடன் நோயாளிகளால் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாதிருந்த விடயம் தொடர்பாகவும் அடிக்கடி அறிக்கைகள் கிடைத்துள்ளன. மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நோயாளர்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில் முற்றிலும் அவர்கள் குணமடைவதற்கு முன்னர் மீண்டும் முகாம்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.[1178] அது தவிர, மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் முகாம்களுக்கு உள்ளேயிருந்த தமது உறவினர்களிடம் தொடர்பு கொள்ள முடியாதவர்களாக இருந்து வந்தார்கள். அவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்த நபர் எங்கு எடுத்துச்

1174 WS on file

1175 WS on file

1176 மெனிக் பார்ம் முகாமிலும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள் நிகழ்ச்சித்திட்டம், the Relief and Rehabilitation U and the Consortium of Humanitarian Agencies, மார்ச், 2010.

1177 ஜூன் மாதத்தில் பரவிய சின்னம்மை நோய் காரணமாக 12,195 நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

1178 WS on file

செல்லப்பட்டிருந்தார் என்பதனை தெரியாதவர்களாக இருந்து வந்தனர். அனுமதிக்கப்பட்ட பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்ட வவுனியா மருத்துவமனைக்கு உள்ளேயும், வெளியேயும் இலங்கை இராணுவம் காவலிலிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. நோயாளிகளுக்கு தகவல்களை பெற்றுக் கொள்ள மட்டுமே அனுமதி வரையறுக்கப்பட்டிருந்தது. தொடக்கத்தில் முகாம் அதிகாரிகள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கென அனுப்பப்பட்டிருக்கும் உறவினர்களை சென்று பார்ப்பதற்கு இடம்பெயர்ந்திருந்தவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. ஒரு சில மாதங்களின் பின்னர் அவர்கள் ஒரு அனுமதிப் பத்திர முறையை அறிமுகம் செய்து வைத்தார்கள். அதன் பிரகாரம், மருத்துவமனையிலிருக்கும் உறவினர்களை சென்று பார்ப்பதற்கு விரும்பும் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் முகாம் அதிகாரிகளிடம் அது தொடர்பாக ஒரு பதிவை மேற்கொள்ள வேண்டும். மருத்துவமனைக்கு வந்த பின்னரும் அங்கிருந்த இராணுவ உத்தியோகத்தர்களுடன் அவர்கள் தம்மை பதிவு செய்ய வேண்டும். அதே நாளில் பிற்பகல் 6.00 மணிக்குள் அவர்கள் முகாமுக்கு திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

1091. மருத்துவப் பராமரிப்பு இல்லாத நிலை, முகாம்களில் காணப்பட்ட நிலவரங்கள் மற்றும் நடமாட்டம் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாகவும், போக்குவரத்து வசதி இல்லாமை காரணமாகவும் சிகிச்சை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் என்பவற்றின் விளைவாக, தடுத்திருக்கக் கூடிய மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்பதனை மனிதநேய நிறுவனங்களின் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. மிகவும் எளிதில் பாதிப்படையக் கூடியவர்களாக வயோதிபர்களே இருந்து வந்தனர். ஏனெனில், அவர்களில் பெரும்பாலானவர்களை பொறுத்தவரையில் அவர்களை பராமரிப்பதற்கென உறவினர்கள் எவரும் இருந்து வரவில்லை. வவுனியா மாவட்ட மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் 60 வயதுக்கு மேற்பட்ட நோய்வாய்ப்பட்டிருக்கும் அனைத்து இடம்பெயர்ந்த நபர்களும் முகாம்களில் அவர்களுடைய உறவினர்கள் இல்லாதிருப்பின், வயோதிபர் இல்லங்களுக்கு மாற்றப்படுதல் வேண்டுமென ஏப்ரல் 27 ஆந் திகதி ஒரு கட்டளையை விடுத்திருந்தது. பட்டினி மற்றும் போஷாக்கின்மை என்பவற்றின் விளைவாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தங்கியிருந்த முகாம்களில் ஒவ்வொரு நாளும் ஐந்துக்குமேற்பட்ட வயது முதிர்ந்த நபர்கள் மரணித்து வருகின்றார்கள் என்ற விடயத்தை நீதவான் அறிந்திருந்ததன் அடிப்படையிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. முன்னைய தினம் மெனிக்பார்ம் முகாமில் 14 வயோதிபர்கள் மரணமடைந்ததாக பதிவு செய்யப்பட்டிருந்தது.[1179]

1092. 2009 ஜுன் மாதத்தில் பல்வேறு முகாம்களில் அவதானிக்கப்பட்ட இரண்டு சடலங்களையும் உள்ளடக்கிய விதத்தில், தரையில் வயோதிபர்களின் சடலங்கள் கிடப்பதை ஒரு சில சந்தர்ப்பங்களில் தாம் பார்த்ததாக[1180] மனிதநேய பணியாளர்கள் அறிவித்திருந்தனர். பெரும்பாலான வயோதிபர்களுக்கு முகாமில் துணைக்கு எவரும் இருக்கவில்லை. ஒரு சிலர் குடும்பங்களிலிருந்த பிரிக்கப்பட்டிருந்ததுடன், குடும்பத்தினர் வேறு முகாம்களில் இருந்து வந்ததமையால் அவர்களுடன் சேர்ந்து கொள்ள முடியாத நிலையில் இருந்து வந்தனர். மேலும்,மோதல் வலயத்தில்நிலவிய நிலைமைகள் காரணமாக வயோதிபர்கள் குறிப்பாக, பலவீனமடைந்திருந்தனர் என பல சாட்சிகள் எடுத்து விளக்கியிருந்தார்கள். ஜுன் மாதம் தொடக்கம் ஒரு முன்னுரிமை என்ற முறையில் வயோதிப நபர்கள் விடுவிக்கப்படத் தொடங்கினார்கள். ஆனால்,குறைந்தபட்சமேனும் அவர்களை பராமரிப்பதற்கான ஆற்றலை கொண்டிராத நிறுவனங்களுக்கு அவர்கள்

1179 WS on file

1180 மெனிக் பார்ம் முகாமிலும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள் நிகழ்ச்சித்திட்டம், the Relief and Rehabilitation UN and the Consortium of Humanitarian Agencies, மார்ச், 2010.

அவ்விதம் விடுவிக்கப்பட்டார்கள் (கீழே பார்க்கவும், விடுவிப்புக்கள் மற்றும் மீள் குடியேற்றம்).[1181]

1093. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் "மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வசித்து வந்த வயோதிபர்கள் மிக மோசமான துன்பங்களை அனுபவித்து வந்துள்ளனர்" என்ற விடயத்தை ஏற்றுக் கொண்டிருந்ததுடன், அவர்கள் எதிர்கொண்டிருக்கும் சிரமங்கள், உளவியல் அதிர்ச்சி மற்றும் பொருளாதார கஷ்டங்கள் என்பன "உயரளவில் அங்கீகரிக்கப்படல் வேண்டும்" என்றும் அது குறிப்பிட்டிருந்தது (பந்தி 9.96). மேலும், "உடல் ஊனமுற்ற நிலை மற்றும் நீண்ட காலமாக உதாசீனப்படுத்தப்பட்டிருக்கும் சுகாதார பிரச்சினைகள் என்பவற்றின் காரணமாக வயோதிபர்களின் விசேட தேவைகள் தொடர்பாக குறிப்பாக கவனம் செலுத்த" வேண்டுமென அது அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தது. மேலும், தமது கூட்டுக் குடும்பத்திற்கு பராமரிப்பு வழங்கும் விடயத்தில் அவர்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகளும் இருந்து வர வேண்டுமென அது குறிப்பிட்டிருந்தது.

1094. அரசாங்க தகவல்களின் பிரகாரம், முகாம்களில் "கடும் மன அதிர்ச்சியின் பின்னர் ஏற்பட்டிருக்கும் மன அழுத்தம்,ஒழுங்கீன நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு ஆதரவு வழங்குவதனை உள்ளிட்ட விதத்தில் உள நோய்கள் தொடர்பான விசேட வசதிகள் வழங்கப்பட்டிருந்தன." எவ்வாறிப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், தொடக்கத்தில் உள சுகாதார சிகிச்சை அளிப்பவர்கள் முகாம்களுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய சேவைகளை வழங்குவதற்கு தாம் தயாராக இருந்து வருவதாக ஒரு சில அரசு சாரா அமைப்புக்கள் கூறியிருந்த போதிலும், இவ்விதம் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களில் பெரும்பாலானவர்கள் போரின் போது ஏற்பட்ட காயங்கள், குடும்ப உறுப்பினர்களின் மரணம், உறவினர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்ற தகவல்கள் இல்லாதிருக்கும் நிலை, தமது வருங்காலம் குறித்த நிச்சயமற்ற நிலை என்பவற்றை சமாளிக்கும் விடயத்தில் போராட்டங்களை எதிர்கொண்டிருந்தனர். முகாமுக்கு உள்ளேயும் வெளியேயும் நடமாட்ட சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை முகாமுக்குள் தாம் எத்தனைகாலம் இருக்க வேண்டியிருக்கும் என்பது குறித்த நிச்சயமற்ற நிலை மற்றும் பயனுள்ள விதத்திலான செயற்பாடுகள் இல்லாதிருந்தமை என்பன உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்தவர்களின் மன அதிர்ச்சியை மேலும் தீவிரப்படுத்தின.[1182] 2009 செப்டம்பர் மாதம் தொடக்கம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு சிவில் சமூக அமைப்புக்களின் உதவியுடன் உள சுகாதார சேவைகள் வழங்கப்பட்டதாக கூறப்பட்டிருந்தது. ஆனால், பாரிய அளவிலான தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு அச்சேவைகள் போதியதாக இருந்து வரவில்லை.[1183]

1095. அப்போதைய பிரதம நிதியரசர் சரத் என் சில்வா ஒரு புதிய நீதிமன்ற கட்டடத்தை திறந்து வைத்த பின்னர், மெனிக்பார்ம் முகாமுக்கு 2009 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஒரு விஜயத்தை மேற்கொண்டார். அவர் இப்படிக் கூறியதாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தது: "அவர்கள் எதிர்கொண்டிருக்கும் மிகப் பரிதாபகரமான நிலையை சொற்களால் என்னால் வர்ணிக்க முடியாது. என்னால் அவர்களுக்கு ஆறுதல் சொல்ல முடியாதிருந்தது. கடும் துன்பத்துக்கு மத்தியிலும் இன்னல்களுக்கு மத்தியிலும் அவர்கள் உயிர் வாழ்ந்து வருகின்றார்கள்.... எமது பக்கத்தில் நாங்கள் பாரிய ஒரு கட்டடத்தை நிர்மாணிக்கின்றோம். ஆனால்,

1181 IDP Protection WG, 31 June 2009, Second Quarterly update; WS on file.

1182 An outbreak of chickenpox in June led to 12,195 cases being recorded. Op cit.

1182 WS on file.

1183 மெனிக் பார்ம் முகாமிலும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள் நிகழ்ச்சித்திட்டம், the Relief and Rehabilitation U and the Consortium of Humanitarian Agencies, மார்ச், 2010.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த இந்த மக்கள் தற்காலிக கூடாரங்களில் வசித்து வருகின்றார்கள். ஒரு கூடாரத்தில் பத்து பேர் வசிக்கின்றார்கள். அந்த கூடாரத்தின் நடுவில் மட்டுமே அவர்களால் நேராக நின்று கொள்ள முடியும்… மலசலம் கழிப்பதற்கு தமது முறை வரும் வரையில்இடம்பெயர்ந்திருந்த இந்நபர்கள் சுமார் 50-100 யார் வரையிலான வரிசைகளில் நீண்ட நேரம் காத்திருக்கின்றார்கள். செட்டிகுளம் முகாமில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் இப்படியான ஒரு வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள்.[1184] "அவர்கள் நாட்டின் சட்டத்தின் பாதுகாப்புக்கு வெளியில் வாழ்ந்து வருகின்றார்கள்… நாங்கள் இந்த மக்களுக்கு ஒரு பாரிய தவறை இழைத்து வருகின்றோம்."[1185]

1096. மீள் குடியேற்றத்திற்கென ஆட்கள் விடுவிக்கப்பட்ட நிலையில் (கீழே பார்க்கவும்) முகாம்களில் காணப்பட்ட சனநெறிசல் குறைவடைந்த போதிலும், முகாம்களில் காணப்பட்ட நிலவரங்கள் அவசியமாக மாற்றமடைந்திருக்கவில்லை. சில நேரங்களில் அறிவிக்கப்பட்ட குடிநீர் பற்றாக்குறைகள், தங்குமிடங்களின் சீர்குலைவு, வரையறுக்கப்பட்ட விதத்தில் உணவு கிடைக்கும் நிலை மற்றும் மோசமான நிலவரங்கள் காரணமாக தொற்று நோய்கள் பரவக் கூடிய தொடர்ச்சியான ஆபத்து என்பவற்றின் பின்னணியில் முகாம்களின் நிலைமைகளில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

1097. சுமார் ஒரு வருடத்தின் பின்னர் 2010 ஆகஸ்ட் மாதத்தில் செட்டிகுளம் முகாமில் (மெனிக்பார்ம்) இன்னமும் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களிடமிருந்து வாக்குமூலங்களை பெற்றுக் கொள்வதற்காக அந்த முகாம்களுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் இந்த முகாம்களின் நிலைமைகள் "மிக மோசமானவையாக" இருந்து வருவதாக குறிப்பிட்டிருந்தார். மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு தான் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்வதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டினார்.[1186] முகாம்களில் நீண்ட காலமாக தமது சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் நிலை, சகிக்க முடியாத நிலைமைகள், பல்வேறு காரணங்களினால் அதிகாரிகள் அவர்களை மீள் குடியமர்த்த தவறியிருத்தல், வருமானம் இல்லாத நிலை, உணவை கொள்வனவு செய்வதற்கு உதவியில்லாத நிலை என்பவற்றை இடம்பெயர்ந்த மக்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் எடுத்துக் கூறியிருந்தார்கள்.

1098. அரசாங்கம் "இலங்கையின் மனிதநேய முயற்சி" என்ற தலைப்பிலான 2011 ஆம் ஆண்டின் அறிக்கையில் 2009 ஆம் ஆண்டில் அது சர்வதேச சமூகத்திடம் சமர்ப்பித்த திட்டம் "ஐக்கிய நாடுகள் அமைப்பினாலும், சர்வதேச முகவரகங்களினாலும் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை" என்ற விடயத்தை குறிப்பிட்டிருந்தது. "இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை நீண்ட காலப் பிரிவில் வைத்திருப்பதற்கு திட்டமிட்டு வருகின்றது என்ற அவர்களுடைய நம்பிக்கை காரணமாகவேஇது நிகழ்ந்தது."உண்மையிலேயே இந்த நம்பிக்கை பல முகவரகங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு நிலைமையை ஏற்படுத்தியது. ஏனெனில் அங்கிருந்த வசதிகள் பெருமளவுக்கு நிரந்தரமான கட்டமைப்பின் கூறுகளைக் கொண்டிருந்தது எனக் கருதப்பட்டு வந்தது." அதன் விளைவாக, "இலங்கை அரசாங்கம் இலட்சிய ரீதியிலான திட்டங்களிலும் பார்க்க குறைந்த மட்டங்களிலான திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது…….. " எனவும் அது குறிப்பிட்டிருந்தது. "உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை நீண்ட காலத்திற்கு தக்க வைத்துக் கொள்ளும் உள்நோக்கத்தை அரசாங்கம் கொண்டுள்ளது. என்ற விதத்தில் அவர்கள் நிலைமையை தவறாக பார்த்திருந்த காரணத்தினால் ஒரு சில முகவரகங்கள் நடந்து கொண்ட விதம் பல்வேறு

1184 Quoted in the CPA Fundamental Rights Petition, op. cit. june 2009

1185 BBC, 'IDPs not protected by law' – CJ, BBC, 4 June 2009, http://www.bbc.co.uk/sinhala/news/story/2009/06/09html

1186 Transcript of LLRC hearings in Cheddikulam camps.

பிரச்சினைகளை ஏற்படுத்தியிருந்தது" என்றும் இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் தங்க வேண்டியிருந்தால் வசதிகள் தரமுயர்த்தப்படும் என முன்னர் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்நிலைமை காரணமாக இந்த உதவிகள் மறுக்கப்பட்டன. இது குறுகிய ஆயுள் காலத்தைக் கொண்ட கூடாரங்கள் வழங்கப்பட்ட நிலையில்இடம்பெயர்ந்த நபர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் கூடாரங்கள் மூன்று மாதங்களுக்கு மேல் பயன்படுத்துவதற்கு ஒரு போதும் திட்டமிடப்பட்டிருக்கவில்லை; நிர்மாணம் தொடர்பான தேசிய தர நியமங்களை புறக்கணித்த தரக் குறைவான கழிப்பறைகள்;சனநெரிசலை குறைப்பதற்கு உதவுவதற்கு மறுப்புத் தெரிவித்தமை என்பன காரணமாக இந்த அசௌகரியங்கள் ஏற்பட்டிருந்தன."[1187]

1099. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் அடிப்படை வசதிகளை வழங்குவதும், அவர்களை கண்ணியமான விதத்தில் நடத்துவதும் அரசாங்கத்தின் கடப்பாடாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு குறிப்பிட விரும்புகிறது. மேலும், முகாம்களில் உதவிகளை வழங்குவதில் மனிதநேய முகவரகங்கள் பல சிரமங்களை எதிர்கொண்டிருந்தன. தொடக்கத்தில் அவர்கள் வருகை தந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மெனிக்பார்ம் முகாமுக்குள் செல்வதற்கு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது. ஆனால், 2009 ஜுன் மாதத்தில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆளணியினர் மற்றும் அரசுசாரா அமைப்புக்களின் ஆளணி உறுப்பினர்கள் ஆகியோருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. முகாம்களுக்குள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு முன்னனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், 2009 டிசம்பர் மாதம் வரையில், மனிதநேய முகவர் நிறுவனங்கள் முகாம்களை அணுகுவதற்கு வாரத்திற்கு இருமுறை என்ற அடிப்படையில் இராணுவத்திடம் அனுமதியை கேட்டுப் பெற வேண்டியிருந்தது.

1100. மனிதநேய பணியாளர்கள் முகாமுக்குள் பிரவேசித்த பின்னர், அவர்கள் தொடர்பாக மிகவும் கண்டிப்பான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. முகாமுக்குள் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பாக ஒரு உச்ச வரம்பு விதிக்கப்பட்டிருந்தது. முகாம்களுக்குள் கையடக்க தொலைபேசிகளையோ, கமெராக்களையோ எடுத்துச்செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. முகாம்களில் அனைத்து மனிதநேய பணியாளர்களினதும் நடமாட்டங்கள் மிகவும் உன்னிப்பான விதத்தில் கண்காணிக்கப்பட்டதுடன், ஒரு சில மனிதநேய நிறுவனங்கள் முகாம்களின் குறிப்பிட்ட சில இடங்களை மட்டுமே அணுக முடியுமென வரையறுக்கப்பட்டிருந்தது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கூடாரங்களுக்குள் செல்வதற்கோ அல்லது தனிப்பட்ட முறையில் அவர்களுடன் உரையாடுவதற்கோ அவர்களுக்கு அனுமதி வழங்கப்படாதிருந்த காரணத்தினால், தேவைகள் மற்றும் பாதுகாப்புக் கரிசனைகள் என்பவற்றை மதிப்பிடுவதற்கு அத்தியாவசியமாக இருந்து வந்த தகவல்களை அவர்களால் திரட்ட முடியாதிருந்தது.

1101. முகாமுக்குள்ளே எந்நேரமும் சிப்பாய்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் வழங்குபவர்கள் ஆகியோர் பிரசன்னமாக இருந்த நிலைமையும், மனிதநேய நிறுவனங்கள் விரிவான தேவைகளுக்கான மதிப்பீடொன்றை மேற்கொள்வதனையோ, முகாமில் இடம்பெயர்ந்திருந்த மக்களிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதையோ மிகவும் ஒரு சிரமமான காரியமாக ஆக்கியிருந்து.[1188] போதிய நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அத்தகைய தரவுகள் தேவையாக இருந்து வந்தன.[1189]

1102. நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை

1187 Presidential Task Force, Sri Lanka's Humanitarian Effort, p. 83, para. 159.

1188 WS on file

1189 Official cable from US Embassy, Colombo, 24 June 2009, https://www.wikileaks.org/plusd/cables/09COLOMBO637_a.html

1103. முகாம்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகள் 2009 டிசம்பர் 1 ஆந் திகதி வரையில், தளர்த்தப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னரும் கூட, முகாமுக்கு உள்ளேயும் வெளியேயும் நடமாட்டம் கண்டிப்பான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரணச் சேவைகள் அமைச்சர் ரிஸாத்பதியுதீன் நவம்பர் 30 ஆந் திகதி “இன்றைய தினம் தொடக்கம் கிராமங்கள் திறந்த வெளிகளாக பிரகடனம் செய்யப்படும்… எந்தவொரு சிவிலியனும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தமது தனிப்பட்ட விபரங்களை கொடுத்த பின்னர் சுதந்திரமாக இந்த கிராமங்களிலிருந்து வெளியேறிச் செல்ல முடியுமென அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது” என உத்தரவாதம் வழங்கியிருந்த பொழுதிலும்,இந்த நிலைமை காணப்பட்டது .[1190]

1104. அடுத்து வந்த சில மாதங்களின் போது, மீள் குடியேற்றத்திற்கென மெனிக்பார்ம் முகாமிலிருந்து விடுவிக்கப்படாதவர்கள், முகாமிலிருந்து வெளியில் செல்லும் பொருட்டு தற்காலிக அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இந்த அனுமதிப் பத்திரங்கள் மாற்றத்தக்க நடைமுறைகளின் பிரகாரம் விநியோகிக்கப்பட்டன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வலயங்களுக்கிடையில் அவை வேறுபட்டதுடன், கால வரம்புகளையும் கொண்டிருந்தன. அனைத்து அனுமதிப் பத்திரங்களும் இராணுவ அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. புதிய அனுமதிப் பத்திர நடைமுறைகள் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட நடமாட்ட சுதந்திரத்தை வழங்கிய அதேவேளையில், வலயங்கள் மற்றும் முகாம்களுக்கிடையிலும் கூட உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்கள் அனுமதிப் பத்திரம் இல்லாமல் நடமாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதனையே அது எடுத்துக் காட்டுகின்றது. தமது தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாவதனையடுத்து முகாம்களுக்குள் திரும்பி வரும் இடம்பெயர்ந்த நபர்கள் விரிவான ஒரு பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.[1191]

1105. உண்மையிலேயே பல மாதங்களின் பின்னரும், ஏனைய முகாம்களிலிருந்த இடம்பெயர்ந்த நபர்களை போய் பார்ப்பதில் தாம் இன்னமும் கட்டுப்பாடுகளை எதிர்கொண்டு வந்ததாக இடம்பெயர்ந்திருந்த நபர்கள் தெரிவித்தனர். அந்தக் கட்டுப்பாடுகள் வலயங்களுக்கிடையில் வேறுபட்ட அளவுகளில் காணப்பட்டன. உதாரணமாக, 2010 மே மாதத்தில் வலயம் 1, வலயம் 2 மற்றும் 3 என்பவற்றைச் சேர்ந்த இடம்பெயர்ந்திருந்த நபர்கள் மு.ப. 8.30 க்கும் பி.ப. 5.30 க்குமிடைப்பட்ட காலத்தில் தமது அடையாள அட்டையை இராணுவ காவலரணில் வைத்து விட்டு, வலயங்களைத் தாண்டிச் செல்ல முடியும். திரும்பி வரும் பொழுது அவர்கள் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம். ஏனைய வலயங்களில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த நபர்கள் 24 மணித்தியாலத்திற்கு முன்னர் தற்காலிக அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. 2010 மே மாதத்தில் பல வார காலம் வலயம் 2 இன் முகாமிலிருந்து வெளியே செல்வதற்கு குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் மட்டுமே தற்காலிக அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை காணப்பட்டது.

### உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை விடுவித்தல் மற்றும் மீள் குடியேற்றம்

1106. இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், வெளி விவகார அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற ஒரு சந்திப்பினையடுத்து, 2009 மே 22 ஆந் திகதி அரசாங்கம் வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில் “முடியுமான விரைவில் நலன்புரி கிராமங்களை இல்லாமலாக்குவது அரசாங்கத்தின் நோக்கமாக இருந்து வருகின்றது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களில் பெரும்பாலானவர்களின் முன்னைய வாழிடங்களில்

[1190] www.defence.lk/new.asp?fname=20091130_04

[1191] WS on file

அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கென 180 நாள் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது" என அது குறிப்பிட்டிருந்தது."[1192]

1107. அரசாங்கம் பெருந்தொகையான வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும், உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்களை முகாம்களிலிருந்து விடுவித்தல் மற்றும் அவர்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லல் என்பன மந்த கதியிலேயே இடம்பெற்று வந்தன. முகாம்களிலிருந்த ஒரு சில மனிதநேயப் பணியாளர்கள் மற்றும் மருத்துவத் துறை ஆளணியினர் 2009 மே மாதத்தின் முடிவின் போது அதிகாரிகளினால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.[1193] அவர்களுடைய சேவைகள் முகாம்களுக்கு தேவையாக இருந்து வந்தன. வயோதிபர்கள், கற்றல் சிரமங்களை கொண்டிருந்த நபர்கள் மற்றும் ஏனைய பலவீனமான குழுக்கள் ஆகியோர் முதலில் விடுவிக்கப்பட்டவர்களில் அடங்குவர். 2009 செப்டம்பர் மாதம் அளவில் 16,490 பேர் அனுசரணை குடும்பங்களுக்கும், வயோதிபர் இல்லங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும், 35,822 உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்றிருந்தார்கள்.[1194] எவ்வாறிருப்பினும், மனிதநேய உதவி ஒன்றியத்தின் தகவல்களின் பிரகாரம் அச்சந்தர்ப்பத்தில் வவுனியாவிலிருந்த முகாம்களில் 238,000 இடம்பெயர்ந்த நபர்கள் இன்னமும் தங்கியிருந்தார்கள்.

1108. ஏனையவர்கள் அனுமதியில்லாமல் முகாம்களிலிருந்து வெளியேறியதுடன்,இலஞ்சத் தொகைகளை செலுத்துவனூடாக அவர்களுடைய விடுவிப்பு சாத்தியமாகியிருந்தது. இராணுவ உத்தியோகத்தர்களுக்கு பாரிய இலஞ்சத் தொகைகளைக் கொடுப்பதற்கூடாக தமது உறவினர்களை விடுவித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளை குடும்ப உறுப்பினர்கள் செய்திருந்ததாக பல சாட்சிகள் குறிப்பிட்டிருந்தார்கள். சில சந்தர்ப்பங்களில் இது ஈபிடிபி கட்சியின் துணைப் படைகளுகளின் உதவிக்கூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.[1195] முகாம்களில் தொடக்கத்திலேயே தானியங்கி காசாளும் இயந்திரங்கள் நிறுவப்பட்டதாகவும், அவை இலஞ்சத் தொகைகளை செலுத்துவதற்கு வசதி செய்து கொடுத்ததாகவும் சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் கூறியிருந்தனர். எல்ரீரீஈ உறுப்பினர்களின் குடும்பத்தவர்கள் முகாம்களிலிருந்து அவர்களை விடுவித்துக் கொள்வதற்கென பாரிய தொகைகளை செலுத்தியிருந்தார்கள்.[1196] உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த ஒரு சிலர் தமது குடும்ப உறுப்பிர்களை விடுவித்துக் கொள்வதற்கென குடும்ப நகைகளை இராணுவ ஆளணியினருக்கு கொடுத்திருந்தனர்.[1197]

1109. அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தத்தையடுத்து, 2009 செப்டம்பர் 9 ஆந் திகதி, உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் முகாம்களிலிருந்து வெளியேறிச் சென்று, தமது உறவினர்களுடன் வசிப்பதற்கு அனுமதியளிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்தது.[1198] சுமார் 50,000 பேர் முகாம்களிலிருந்து வெளியேறிச்

1192 http://www.news.lk/ as accessed through reliefweb/web.int/report/sri-lanka/india-and-sri-lanka-agree-idp-timetable-political-solution

1193 Source: W-037

1194 UN, Joint Humanitarian Update, Report # 11, 10 – 23 October 2009, http://reliefweb.int/sites/reliefweb.int/files/resources/C14269A7E2A57F27C125765D00357EE3-Full_Report.pdf

1195 WS on file

1196 WS on file

1197 WS on file

1198 www.priu.gov.lk/news_update7Current _Affairs/ca200909/200909govt_to_release_idps_relatives.htm

சென்று மீளக் குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பொழுது 2009 அக்டோபர் மாதத்தில் பாரிய எண்ணிக்கையிலானவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.[1199]

1110. எவ்வாறிருப்பினும், 2009 டிசம்பர் முடிவின் போது, உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்கள் திரும்பிச் செல்வதற்கு ஒரு காலக்கெடு இருந்து வரவில்லைஎன அரசாங்கம் கூறியதாக ஊடகங்களில் மேற்கோள் காட்டப்பட்டிருந்தது. அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் இன்னமும் 100,000 பேர் முகாம்களில் தங்கியிருந்து வருகின்றார்கள் என்ற விடயத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்.[1200]

1111. 2010 ஜனவரி 26 ஆந் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலையடுத்து இடம்பெயர்ந்திருந்த மக்களின் வெளியேற்றம் கணிசமான அளவில் அதிகரித்தது. 2010 மார்ச் மாதம் அளவில் இன்னமும் 92,000 பேர் முகாம்களில் தங்கியிருந்தனர். இவர்களில் மெனிக்பார்ம் முகாமில் தங்கியிருந்த 88,198 பேரும் அடங்குவர்.[1201] இவர்கள் தொடர்ந்தும் தமது நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடுகளை எதிர்நோக்கி வந்தனர்.[1202] 2011 பெப்ரவரி மாதத்தின் முடிவின் போது மெனிக்பார்ம் முகாம்களில் இன்னமும் 17,701 இடம்பெயர்ந்த நபர்கள் தங்கியிருந்தனர்.[1203]மெனிக்பார்ம் முகாம்2012 செப்டம்பர் மாதத்தில் உத்தியோகபூர்வமாக மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் தங்கியிருந்த ஒரு சில இடம்பெயர்ந்த நபர்கள் மூன்று வருடத்திற்கு மேற்பட்ட காலப் பிரிவை அங்கு கழித்திருந்தார்கள்.

1112. தமது சமூகங்களுக்கு திரும்பிச் சென்ற பின்னர் அல்லது மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் இம்மக்களில் பெருந்தொகையானவர்கள் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள் மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறை என்பவற்றின் அபாயத்தை எதிர்கொண்டிருந்தார்கள். பெருமளவுக்கு இராணுவமயமாக்கப்பட்ட சூழல் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டிருந்தது. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் முன்னைய அறிக்கைகளில் இந்த விடயம் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது. குடும்ப உறுப்பினர்களை இழந்திருப்பவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையானவர்களின் நேரடி அனுபவத்தின் பின்னணியில் மோதலின் வடுக்கள் ஒரு நீண்ட காலப் பிரிவுக்கு தொடர்ந்து இருந்து வரும். முன்னாள் ஆணையாளர் நவிபிள்ளை 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மேற்கொண்ட தனது விஜயத்தின் போது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: “சண்டை முடிந்திருந்த போதிலும், மக்களின் துன்பம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. காணாமல் போனவர்கள், மரணித்தவர்கள் ஆகியோரின் உறவினர்களுக்கு மத்தியில் நான் அவதானித்த மிகவும் பாரதூரமான மன அதிர்ச்சி நிலை என்னை நிலைகுலைய செய்துள்ளது. நான் சென்ற இடங்களில் எல்லாம் இந்த நிலைமையை அவதானித்துள்ளேன். அவர்கள் இந்த நிலைமையை எதிர்கொள்ளும் மனோதிடத்தை பார்த்தும் நான் வியப்படைந்துள்ளேன்…..”[1204]

---

1199 IDP Site Locations and Capacity as of 29 October 2009, Vavuniya, UNOCHA; Vanni IDP Camps and Hospital Information, Arrivals since 01 April 2008-Updated as of 28 September 2009; AFP, 21 November – Sri Lanka to free all war displaced civilians: official.

1200 Daily Mirror, *Government now says no deadline to resettle IDPs*, 29 December 2009, http://www.dailymirror.lk/index.php/news/512-government-now-says-no-deadline-to-resettle-idps.html

1201 IDP Camps and Resettlement Information, Updated as of 11 March 2010, UN OCHA.

1202 UNHCR, Sri Lanka's displacement chapter nears end with closure of Manik Farm, 27 September 2009, http://www.unhcr.org/506443d89.html; The last 110 families were not allowed to return to their villages because their land has been occupied by the military, and they were relocated to state owned lands in Kepapilavu in Mullaithivu district.

1203 UNHCR, Shelter/ NFI Sector Meeting Thursday, 3 March 2011, file:///D:/downloads/Shelter%20Meeting%20Minutes%20-%2003.03.2011.pdf

1204 Press conference given by HC Pillay at the end of her visit to Sri Lanka, Colombo 31 August 2013.

# பாகம் 3

## XVII. இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணையின் முதன்மையான முடிவுகள் (OISL)

1113. பின்வரும் பகுதி இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நடத்திய புலன் விசாரணைகளின் விளைவாகவும், அதன் வசம் இருக்கும் தகவல்களின் அடிப்படையிலும் நிறுவப்பட்டிருக்கும் முதன்மையான முடிவுகளின் சாரம்சத்தை வழங்குகின்றது. குற்றச்சாட்டுக்களின் பாரிய எண்ணிக்கை, அவற்றின் பாரதூரமான இயல்பு, மீண்டும் மீண்டும் இடம்பெற்ற தன்மை மற்றும் அவை நிகழ்த்தப்பட்ட விதத்தில் காணப்பட்ட ஒருமித்த இயல்பு என்பனவும், அதே போல அவை எடுத்துக் காட்டும் ஒரே சீரான நடத்தை ஆகிய அனைத்தும் திட்டமிட்ட விதத்திலான குற்றச் செயல்களையே சுட்டிக் காட்டுகின்றன. இந்தப் பாரதூரமான உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய நபர்களை அடையாளம் காண்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சாத்தியமற்றதாக இருந்து வரும் அதேவேளையில், இந்த முடிவுகள்,மனிதநேயச் சட்டத்தின் அப்பட்டமான மீறல்கள் மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள், மற்றும் சர்வதேச குற்றச் செயல்கள் என்பன, புலன் விசாரணைக்குட்படுத்தப்பட்ட காலப் பிரிவின் போது அனைத்துத் தரப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. உண்மையிலேயே இக்குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை நீதிமன்றமொன்றில் நிரூபிக்கப்படுமிடத்து, சந்தர்ப்பச் சூழ்நிலையை பொறுத்து, போர் குற்றங்களுக்கு மற்றும்/அல்லது மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்களுக்கு இணையானவையாக இருந்து வர முடியும். இந்தச் சம்பவங்களில் பெரும்பாலானவற்றில் சம்பந்தப்பட்ட செயல்கள் பாரபட்சம் காட்டும் நிலைமைகளிலேயே நிகழ்த்தப்பட்டிருப்பதனை தெளிவாக காண முடிகின்றது.

1114. இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உடனடியாக விரிவான விதத்தில், சுயாதீனமாக விசாரணைக்குட்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், அவற்றுக்கு நேரடியாக பொறுப்பானவர்கள் அல்லது தளபதிகள் என்ற முறையில் அல்லது உயர் மட்ட அதிகாரிகள் என்ற முறையில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் சட்டத்திற்கு முன்னால் எடுத்து வரப்படல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை – குறிப்பாக பாதிக்கப்பட்ட சிறுவர்களையும், பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களையும் - பாதுகாப்பதற்கென விசேட வழிமுறைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவர்கள் உள சமூக ஆதரவையும் உள்ளடக்கிய விதத்தில் முழுமையான நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், இந்த முடிவுகள் ஆழமாக வேரூன்றியிருக்கும் நிறுவன ரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் கலாச்சாரங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டுவதுடன், அத்தகைய செயல்கள் மீண்டும் நிகழாதிருப்பதற்கு உத்தரவாதமளிக்கும் பொருட்டு, அவற்றை கவனத்தில் எடுப்பதற்கென பாரிய அளவிலான நிறுவன ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை இருந்து வருகின்றது என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றன.

1115. இங்கு கீழே பட்டியலிடப்பட்டிருக்கும் முடிவுகள் முதன்மையாக சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின், சட்டகத்திற்குள் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன், குறிப்பிட்ட ஒரு சம்பவம் ஆயுத மோதலுடன் சம்பந்தப்பட்டிருக்கும் நிலைமைகளில்,ஒப்பந்தத்தின் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வழக்காறு சார்ந்த சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பன பிரயோகிக்கப்பட வேண்டுமென்ற விடயத்தைஇங்கு முக்கியமாக குறிப்பிட வேண்டும். இது குறிப்பாக 1949 ஆம் ஆண்டின் நான்கு ஜெனீவா சமவாயங்களுக்கு பொதுவான உறுப்புரை 3 ஐ உள்ளடக்குவதுடன், மேலே குறிப்பிடப்பட்ட சட்ட ரீதியான சட்டகத்தில் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் போர் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பான வழக்காறு சார்ந்த விதிமுறைகளையும் உள்ளடக்குகின்றன.

-

**சட்டவிரோதமான கொலைகள்**

1116. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில், இலங்கையின் பாதுகாப்புப் படைகளும், அவற்றுடன் இணைந்திருந்த துணைப்படைக் குழுக்களும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் அறிக்கை உள்ளடக்கும் காலப் பிரிவின் போது சிவிலியன்களுக்கு எதிராகவும், ஏனைய பாதுகாக்கப்பட்ட நபர்களுக்கெதிராகவும் பரவலான விதத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதமான கொலைகளில் சம்பந்தப்பட்டிருந்தனா் என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக, ஒரு சில காலகட்டங்களின் போது தமிழ் அரசியல்வாதிகள், மனிதநேயப் பணியாளா்கள் மற்றும் ஊடகவியலாளா்கள் போன்ற தரப்பினர் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தனா். ஆனால்,அவ்விதம் பாதிக்கப்பட்டவர்களில் சாதாரண பொதுமக்களும் இருந்து வந்தனா். உதாரணமாக, பாதுகாப்புப் படையின் சோதனைச் சாவடிகள் மற்றும் இராணுவத் தளங்கள் என்பவற்றுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் கொலைகள் இடம்பெற்றிருக்கும் சில வெளிப்படையான மாதிரிகள் இருந்து வந்திருப்பது போல் தெரிகின்றது. மேலும், பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தனிநபர்கள் இவ்விதம் கொல்லப்பட்டிருந்தனா். இவை நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்படுமிடத்து, சந்தா்ப்ப சூழ்நிலைகளை பொறுத்து, போா் குற்றங்களாக மற்றும்/அல்லது மனிதகுலத்திற்கெதிரான குற்றச் செயல்களாக கருதப்பட முடியும்.

1117. கருணா குழு 2004 ஏப்ரல் மாதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றதனையடுத்து, அனைத்து தரப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய சட்டவிரோதமான கொலைகள் தீவிரமடைந்தன. துணைப்படைக் குழுக்களுக்கும்- கருணாக் குழுவுக்கும் - பாதுகாப்புப் படைகளின் பல்வேறு பிரிவுகளுக்குமிடையிலான கூட்டுச் செயற்பாட்டின் இயல்பு மற்றும் அளவு என்பன பெருமளவுக்கு கரிசனைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருவதுடன், அது மேலும் புலன் விசாரணை செய்யப்படுதல் வேண்டும். இராணுவத்தின் விசேட நடவடிக்கை அலகுகள், இராணவத்தின் புலனாய்வுக் கிளைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை என்பனவும் இந்தப் பாதுகாப்புப் படைத் தரப்புக்களில் அடங்கியிருந்தன. கொலை மற்றும் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக மூத்த அரசாங்க அதிகாரிகளினால் கட்டளைகள் விடுக்கப்பட்டிருந்தன என்ற விதத்திலான தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட ஆனால்,நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்களும் - குறிப்பாக கட்டளைபொறுப்புச் சங்கிலியின் அடிப்படையில் - அந்த புலன் விசாரணையின் ஒரு பாகமாக இது இருந்து வருதல் வேண்டும்.

1118. எல்ரீரீஈ இயக்கம் தொடர்பாக மாற்றுக் கருத்துக்களை கொண்டிருந்தவர்கள் எனக் கருதப்பட்ட தமிழ், முஸ்லிம்,சிங்களப் பொதுமக்களையும் எல்ரீரீஈ இயக்கம் சட்டவிரோதமான விதத்தில் கொலை செய்துள்ளது என்பதனை நம்புவதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சேகரித்திருக்கும் தகவல்கள் நியாயமான காரணங்களை முன்வைக்கின்றன. அந்த இயக்கம் எதிர் தமிழ் அரசியல் கட்சிகள், தகவல்களை வழங்குபவர்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள் அதே போல எதிரணியைச் சேர்ந்த துணைப்படைக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட தமிழர்களையும் இலக்கு வைத்திருந்தது. எல்ரீரீஈ இயக்கம் மேற்கொண்ட கண்மூடித்தனமான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் கிளேமோா் தாக்குதல்கள்[1205] என்பவற்றில் கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த பெருந்தொகையானவர்களில் பொதுமக்களும் அடங்கியிருந்தனா். ஒரு சில சந்தா்ப்பங்களில் பொதுமக்களை

[1205] இலங்கை இராணுவத்தால் 2007 நவம்பர் மாதம் மல்லாவியில் வெடிக்கச் செய்யப்பட்டதாக கூறப்படும் ஒரு கிளேமோா் குண்டுத் தாக்குதலில் ஓர் அம்புலன்ஸ் வண்டி தாக்குதலுக்கு உள்ளானதாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அறிக்கையிட்டுள்ளது. சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் அம்புலன்ஸ் வண்டிகள் விசேட பாதுகாப்பை பெற்றுள்ளன. நிரூபிக்கப்பட்டால் அவை போா் குற்றச் செயல்கள் மற்றும்/அல்லது மனிதகுலத்திற்கெதிரான குற்றச் செயல்கள் எனக் கருதப்பட முடியும்.

ஏற்றிச் சென்ற வாகனங்களை இலக்கு வைத்து கிளேமோாக் குண்டுகள் வெடிக்கச் செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, பெருந்தொகையான பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். சம்பந்தப்பட்ட வாகனங்கள் சிவிலியன் வாகனம் என்ற விடயத்தையும், அவை பொது மக்களை மட்டுமே போக்குவரத்துச் செய்கின்றன என்ற விடயத்தையும் அறிந்திருந்த நிலையிலும், இந்தக் கண்ணிவெடிகள் இயக்கப்பட்டிருந்தன. அத்தகைய தாக்குதல்கள் பொதுமக்கள் அல்லது பொதுச் சொத்துக்கள் என்பவற்றுக்கு எதிரான நேரடியான தாக்குதல்களை தடை செய்வதனை மீறும் ஒரு செயலாக இருந்து வருகின்றன. மோதலின் இறுதிக் கட்டங்களின் போது எல்ரீரீஈ இயக்கம், மோதல் வலயத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருந்த தமிழ் பொதுமக்களின் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தது. அதன் விளைவாக, ஒரு சில உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்ததுடன், மக்கள் வெளியேறிச் செல்வதற்கு முயற்சித்தால் பழிவாங்கும் செயல்கள் இடம்பெறும் என்ற விதத்தில் பரவலான விதத்தில் அச்ச உணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது. சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து,இச்செயல்கள் ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அவை போர்க் குற்றச் செயல்கள் மற்றும்/அல்லது மனிதக் குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் எனக் கருதப்பட முடியும்.

1119. 2009 மே 18 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் போர் முடிவடைந்த சந்தர்ப்பத்தில் எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்டிருந்த நபர்கள் மற்றும் அடையாளம் காணப்படாத நபர்கள் நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான விதத்தில் கொலை செய்யப்பட்டிருந்தார்கள் என்பது தொடர்பான குற்றச்சாட்டுகளையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழு புலன் விசாரணை செய்திருந்தது. இவ்விதம் கொல்லப்பட்டவர்களில் ஒரு சிலர் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பான ஒரு சில விடயங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்துவந்த போதிலும், சாட்சிகளின் சான்றுகள் மற்றும் அதேபோல புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆதாரங்கள் என்பவற்றின் அடிப்படையில், ஒரு சில சம்பவங்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட நபர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டிருந்தார்கள் என்பதனைக் காட்டும் போதியளவிலான தகவல்கள் இருந்து வருவது போல் தெரிகின்றது. சந்தர்ப்ப சூழ்நிலைகளை பொறுத்து, ஒரு நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்படுமிடத்து, இந்த அறிக்கையில் எடுத்து விளக்கப்படும் அத்தகைய பல சம்பவங்கள் போர்க் குற்றங்களாக அல்லது மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல்களாக கருதப்பட முடியும்.

**சுதந்திரம் பறிக்கப்பட்டமையுடன் சம்பந்தப்பட்ட உரிமை மீறல்கள்**

1120. அரசாங்கப் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல் சம்பவங்கள், அதே போல பாதுகாப்புப் படைகளுடன் இணைந்திருந்த (கிழக்கு மாகாணத்தில் கருணா குழுவையும், வடக்கில் ஈபிடிபி ஐயும் உள்ளடக்கிய) துணைப் படைக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட கடத்தல் சம்பவங்கள் என்பன தொடர்பான நீண்ட காலப் போக்குகளையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது. இத்தகைய சம்பவங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான மரண தண்டனைகள் என்பவற்றுக்கு இட்டுச் சென்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

1121. இது பொதுவாக செயற்படுத்தப்படும் விதம், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஆளணியினரால் ஒரு சில சந்தர்ப்பங்களில் இலக்கத்தகடில்லாத‘‘வெள்ளை வேன்களில்’’ செயற்பட்டு வரும் துணைப்படைக் குழுக்களின் உறுப்பினர்களின் உதவியுடன் தனி நபர்கள் தன்னிச்சயையான விதத்தில் கைது செய்யப்படுதல் அல்லது கடத்தப்படுதல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ளது. இத்தகைய வேன்கள் பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளை தாண்டிச் செல்லக் கூடியவையாகவும்,

பாதுகாப்புப் படைத் தளங்களுக்குள் பிரவேசிக்கக் கூடியவையாகவும் இருந்து வந்துள்ளன எனக் கூறப்படுகின்றது.இன்னமும் அமுலிலிருந்து வரும் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டு வரையில் அமுலிலிருந்த அவசர கால ஒழுங்குவிதிகள் என்பவற்றினால் வழங்கப்பட்டிருக்கும் விரிவான கைது மற்றும் தடுத்து வைத்தல் அதிகாரங்களைப் பயன்படுத்தி இத்தகைய உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், இன்னமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய கைதுகளின் போது கைது செய்யப்பட்டவர்களுக்கு அவர்களைத் தடுத்து வைத்திருப்பது தொடர்பான திட்டவட்டமான காரணங்கள் கூறப்படுவதில்லை. மேலும், அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதுமில்லலை. ஆவணப்படுத்தப்பட்ட சம்பவங்களில் ஒரு சில சம்பவங்களில் மட்டுமே அந்நபர்கள் நீதவான ஒருவர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, தம்மைதடுப்புக் காவலில் வைத்திருப்பதன் சட்டபூர்வமான தன்மைக்கு சவால் விடுக்கக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. சட்டத்தரணிகளை அணுக முடியாத நிலையில் அவர்கள் இருந்து வந்ததுடன், அவர்களுடன் எவரும் தொடர்பு கொள்ள முடியாத நிலையும் காணப்பட்டது. வெளியுலகத்தை அணுக முடியாத நிலையிலும் அவர்கள் இருந்து வந்துள்ளனர். ஒரு சில சம்பவங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகள் என்பவற்றினால் வழங்கப்பட்டிருக்கும் வரையறுக்கப்பட்ட உத்தரவாதங்களும் கூட மீறப்பட்டிருந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1122. அவ்விதம் சட்டவிரோதமான, தன்னிச்சையான கைது மற்றும் தடுப்புக் காவல் என்பன சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடுகளை தெளிவாகவே மீறுபவனவாக இருந்து வருகின்றன. தன்னிச்சையாக தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் உறவினர்களுக்கு அவர்கள் கைது செய்யப்பட்ட திகதி அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் போன்ற தகவல்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்படுவதில்லை. இது அவர்கள் மத்தியில் கடும் மண வேதனையையும், துயரத்தையும் எடுத்து வருவதுடன், இது புறம்பாக இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான கடப்பாடுகளை மீறும் ஒரு செயலாகவும் உள்ளது.

1123. மேலே எடுத்து விளக்கப்பட்டதைப் போல, கடத்தப்பட்ட அல்லது தன்னிச்சையான விதத்தில் தடுத்து வைக்கப்பட்ட நபர்கள் சித்திரவதை மற்றும் / அல்லது ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவுபடுத்தும் செயல்கள் அல்லது தண்டனை மற்றும் / அல்லது பாலியல்வன்முறை என்பவற்றுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உள்ளாக்கப்பட்டிருந்தனர். இத்தகைய அத்துமீறல்கள் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது எப்போதாவது இடம்பெறும் சம்பவங்களாக இருந்து வரவில்லை, அதற்குப் புறம்பாக, அவை பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

**பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள்**

1124. இலங்கை உலக அளவில் பலவந்தமான விதத்தில்ஆட்கள் காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் மிக உயர் விகிதங்களில் அறிவிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. அத்தகைய சம்பவங்கள் பெரும்பாலானவை மோதல் மற்றும் கிளர்ச்சி என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட முன்னைய காலகட்டங்களைச் சேர்ந்தவைகளாக இருந்து வந்திருப்பதுடன், அவை பல தசாப்த காலமாக இடம்பெற்று வந்துள்ளன. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு அதன் விசாரணைகளின் போது, அதன் ஆணைப்பத்திரத்துக்குள் வரும் காலப் பிரிவின் போது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற பல நூற்றுக்கணக்கான பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் தொடர்பான நம்பகமான தகவல்களை மீளாய்வு செய்தது. இத்தகைய சம்பவங்கள் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெருமளவுக்கு நிலவி வந்துள்ளன. மேலும்,போர் நடவடிக்கைகள் முடிவடைந்ததனையடுத்து, பெருந்தொகையானவர்கள் தடுத்து வைக்கப்பட்டமையும் பலவந்தமான காணாமல் போதல் சம்பவங்களுக்கு வழிகோலியிருந்தது. தடுத்து

வைக்கப்பட்டவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற விடயத்தை அவர்களுடைய உறவினர்கள் தொடர்ந்தும் அறியாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

1125. பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் சம்பந்தப்பட்ட முதலாவது சம்பவங்கள் 1970 களில் அறிவிக்கப்பட்டது தொடக்கம் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள் பல்வேறு விசாரணை ஆணைக்குழுக்களையும், ஏனைய பொறிமுறைகளையும் இதற்கென உருவாக்கியிருந்தன. அத்தகைய ஆணைக்குழுக்கள் மற்றும் பொறிமுறைகள் என்பன வேறுபட்ட ஆணைப்பத்திரங்களையும், வேறுபட்ட காலப் பிரிவுகளையும் கொண்டிருந்தன. இத்தகைய ஆணைக்குழுக்களில் ஒரு சில ஆணைக்குழுக்கள் நட்ட ஈடுகளை வழங்கியிருந்தன அல்லது திட்டவட்டமான பரிந்துரைகளை முன்வைத்திருந்தன. எவ்வாறிருப்பினும், அவற்றில் ஒரு சில மட்டுமே அமுல் செய்யப்பட்டிருந்தன. பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அத்தகைய செயல்கள் மீண்டும் நிகழாதிருப்பதனை தடுப்பதற்கென ஒரு சில பயனுள்ள வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1126. ஆட்கள் பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக எவரும் பொறுப்பேற்காத நிலையில், பல்வேறு உரிமைகளையும் தொடர்ச்சியாக மீறும் தனித்துவமான, ஒருங்கிணைந்த பல செயல்களின் ஒரு தொடராக இருந்து வருகின்றன. ஒரு மரணச் சான்றிதழ் இல்லாத நிலையில் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது ஏனைய உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கையின் சட்டத்தில் வாய்ப்பில்லாதிருந்து வருவதனால், நிரூபணமெதுவுமில்லாத நிலையில், தமது குடும்ப உறுப்பினர்கள் மரணித்துள்ளார்கள் என்ற விடயத்தை பிரகடனம் செய்வதற்கு மறுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு, போதியளவிலான வாழ்க்கைத் தரம் மற்றும் குடும்ப வாழ்க்கை என்பவற்றுக்கான உரிமைகளும் இதில் அடங்குகின்றன.[1206]

1127. கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில், பரவலான மற்றும் முறையான வித்திலான செயற்பாடுகளுக்கூடாக இலங்கை அதிகாரிகள கணிசமான அளவிலான பாதிக்கப்பட்ட நபர்களுடைய சுதந்திரத்தைப் பறித்துக் கொண்டுள்ளார்கள் என்பதனை நம்புவதற்கு இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழுவுக்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. இது மறுபுறத்தில், இந்நபர்களை சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து அகற்றியிருப்பதுடன், பாரதூரமான ஆபத்துக்களுக்கும் அவர்களை முகங்கொடுக்க வைத்துள்ளது. காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் - அவர்கள் சிங்களவர்களாக, தமிழர்களராக அல்லது முஸ்லிம்களாக எந்தத் தரப்பினராக இருந்து வந்தாலும் சரி - தகவல்களை தேடுவதற்கு முற்பட்ட சந்தர்ப்பங்களில் பழிவாங்குதல்கள், துன்புறுத்தல் மற்றும் தடுப்புக் காவல் என்பவற்றுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுடைய உறவினர்களுக்கு உண்மையைத் தெரிந்து கொள்ளும் உரிமையை உள்ளடக்கிய விதத்தில், உரிமை மீறல்களுக்கான தாக்கமான நிவாரணமொன்றுக்கான உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

1206 இந்தப் பின்புலத்தில், அரசாங்கம் மரணச் சான்றிதழ்களை வழங்கும் செயல், வெளிப்படையான, சுயாதீனமான, நீதிச் செயன்முறையொன்றின் ஒரு பாகமாக இருந்து வந்தாலேயொழிய, உரிமை மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவதை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்ற விடயத்தை இங்கு கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். அத்தகைய நீதிச் செயன்முறையொன்றே குறிப்பிட்ட நபர் காணாமல் போன சந்தர்ப்ப சூழ்நிலைகள் குறித்து சரியான முடிவுகளை எடுக்கக் கூடியதாக இருப்பதுடன், பாதிக்கப்பட்ட நபரின் மரணத்தையும் உறுதிப்படுத்தக் கூடியதாக இருந்து வரும். அத்துடன் அதற்கூடாக அவரின் உடல் பாகங்களை குடும்பத்துக்கு திருப்பிக் கொடுக்கக் கூடிய வாய்ப்பும் கிடைக்கும்.

1128. பலந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், சாதாரண பொதுமக்களுக்கு எதிரான பரந்த அளவிலான, திட்டமிட்ட முறையிலான தாக்குதல்களின் ஒரு பாகமாக இடம்பெற்றிருக்க முடியும் என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. அவை நிகழ்த்தப்பட்ட பூகோளப் பின்னணி மற்றும் காலப் பிரிவு என்பவற்றின் அடிப்படையில் நோக்கும் பொழுது, ஒரே பாதுகாப்புப் படையினரால் ஒரே விதமான குடித்தொகையினர் இலக்காகக் கொள்ளப்பட்டிருக்கிருக்கின்றார்கள் என்ற விடயத்தையும் நம்புவதற்கும் நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக, மோதல் முடிவின் போது இராணுவத்திடம் தம்மை ஒப்புவித்த காணாமல் போன நபர்கள், அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் படையணிகளுடன் சம்பந்தப்பட்டிருந்ததன் காரணமாக அல்லது சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்பட்டதன் காரணமாக வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டிருந்தார்களென நம்புவதற்கும் நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

## சித்திரவதை மற்றும் ஏனைய வடிவங்களிலான குரூரமான மனிதாபிமனமற்ற செயல்கள் அல்லது இழிவான விதத்தில் நடத்தும் செயல்கள்

1129. இலங்கையைப் பொறுத்தவரையில்,ஆயுத மோதல் தொடர்பாகவும், அதே போல வழமையான குற்றவியல் நீதித் துறை தொடர்பாகவும் சித்திரவதை நீண்ட காலமாக நிலவி வந்துள்ளது.இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் குறிப்பாக ஆயுத மோதல்முடிவடைந்ததனையடுத்து முன்னைய எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களும் பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் கொடூரமான சித்திரவதை முறைகள் பயன்படுத்தப்பட்டித்திருந்தன என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது. இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் ‘‘புனர்வாழ்வு’’ முகாம்கள் என்பவற்றிலும், அதே போல இரகசியமான, அடையாளம் காணப்படாத அமைவிடங்களையும் உள்ளடக்கிய விதத்தில் பல்வேறு இடங்களிலும் பாதுகாப்புப் படையினரின் பல்வேறு தரப்பினராலும் ஒரே மாதிரியான விதத்தில் சித்திரவதைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது.

1130. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம், இச்சித்திரவதை பரந்த அளவில் நிகழ்த்தப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. இந்த அத்துமீறல்கள், சித்திரவதை முழுமையாக தடை செய்யப்பட்டிருத்தல் மற்றும் சர்வதேச ஒப்பந்த ரீதியான மற்றும் வழக்காற்றுச் சட்ட ரீதியான இலங்கையின் கடப்பாடுகள் என்பவற்றை மீறுவதாக இருந்து வருகின்றன. ஒரு நீதிமன்றத்தின் முன் நிரூபிக்கப்பட்டால், இத்தகைய சித்திரவதைச் செயல்கள், அந்தந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, பரந்த அடிப்படையில் அல்லது முறையான ஒரு தாக்குதலின் ஒரு பாகமாக மேற்கொள்ளப்படுமிடத்து, மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்களுக்கு இணையானவையாக இருந்து வர முடியும். அத்துடன், இச்சித்திரவதைச் சம்பவங்கள் ஆயுத மோதல்களுடன் தொடர்புபட்டிருந்தன என்பது நிரூபிக்கப்பட்டால் அவை போர்க் குற்றங்களாகவும் கருதப்பட முடியும்.

### பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை

1131. குறிப்பாக, போருக்குப் பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு எதிராக பாதுகாப்புப் படையினரால் பரவலான விதத்தில் வன்புணர்வுச் சம்பவங்களும், பாலியல் வன்முறைச்

சம்பவங்களும்நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சேகரித்திருக்கும் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. பாலியல் வன்முறை மாதிரிகள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும், எல்ரீரீஈஇயக்கத்துடன் ஏதோவொரு வகையிலான தொடர்புகளைக் கொண்டிருப்பவர்கள் எனக் கருதப்படும் நபர்களை இழிவுபடுத்துவதற்கும், தண்டிப்பதற்குமென வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டிருக்கும் வழிமுறைகளாக இருந்து வருவது போல் தெரிகின்றன. பாலியல் வன்முறைச் சம்பவங்களை அரசாங்க அதிகாரிகள் மறுத்தல், பாதிக்கப்பட்டவர்களை தாழ்த்திப் பேசுதல் மற்றும் விசாரணைகளை நடத்துவதற்கு முன்வராமை என்பனஅதிகாரிகளினால் கண்டும் காணாமல் விடப்பட்டிருந்தன அல்லது சகித்துக் கொள்ளப்பட்டிந்தன என்பதனைக் காட்டுகின்றன. .[1207]

1132. இவ்விதம் பாதிப்புக்குள்ளாகியவர்கள் எனக் கூறப்படுபவர்கள், குற்றச் செயலைப் புரிந்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்படும் நபர்களால் சட்ட விரோதமான விதத்திலும், அநியாயமான விதத்திலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளியுலகுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்றும், அவர்கள் குற்றமிழைத்தவர்களின் கட்டுக் காவலில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தார்கள் என்றும் அறிக்கையிடப்பட்டிருந்தது. தமது உடலின் ஒரு பாகத்துக்குள் பாலுறுப்பைப் புகுத்துதல் அல்லது பின்துவாரத்தில் அல்லது பிறப்புறுப்பில் ஒரு வஸ்துவைத் திணித்தல் என்பவற்றையும் உள்ளிட்ட பாலியல் குற்றங்கள் தம் மீது புரியப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்திருந்தனர் அல்லது குற்றமிழைத்த நபர்கள் எனக் கூறப்படும் நபர்கள் மீது பாலியல் செயல்களை மேற்கொள்ளுமாறு தாம் பலவந்தப்படுத்தப்பட்டதாக அவர்கள் கூறினார்கள்.

1133. பாலியல் குற்றங்கள் பலவந்தத்தின் மூலம், பலவந்தப் பிரயோகம் குறித்த அச்சுறுத்தல் மூலம்,வற்புறுத்தல் மூலம் நிகழ்த்தப்பட்டிருந்தன என நம்புவதற்கும், தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் அல்லது ஒரு குற்ற வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளல், தண்டனை, பயமுறுத்துதல் அல்லது பலாத்காரம் அல்லது இன மற்றும் / அல்லது பால்நிலை மற்றும் /அல்லது அரசியல் சார்புநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம் காட்டுதல் போன்ற நோக்கங்களுக்காக, பாதுகாப்புப் படையினரால் இந்தக் கடுமையான உடல் ரீதியான உள ரீதியான துன்பம் மற்றும் வேதனை என்பன நிகழ்த்தப்பட்டிருந்தன என்பதனை நம்புவதற்கும் நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

---

1207 பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பது குறித்த ஐக்கிய நாடுகள் கமிட்டி இலங்கை தொடர்பான அதன் ஐந்தாவது, ஆறாவது மற்றும் ஏழாவது பருவ கால அறிக்கைகளின் 2011 முடிவு அவதானிப்புக்களில் பின்வரும் விடயம் தொடர்பாக அதன் கரிசனையை வெளிப்படுத்தியிருந்தது: “மோதலின் இறுதிக் கட்டங்களின் போதும், மோதலுக்குப் பிற்பட்ட காலப் பிரிவின் போதும் பெண்கள் வன்முறைக்கும், பாரபாட்சத்துக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கவில்லையென அரச தரப்பு விளக்கமளித்திருந்ததை கவனத்திலெடுக்கும் அதேவேளையில், இரு தரப்புக்களையும் சேர்ந்த - குறிப்பாக தமிழ் சிறுபான்மைக் குழு, உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளான பெண்கள் ஆகியோரின் மனித உரிமைகள் அப்பட்டமான விதத்தில் மீறப்பட்டிருப்பது குறித்த கமிட்டி அறிக்கைகள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. பாதுகாப்புப் படைகள், பொலிஸ் மற்றும் போராளிகள் குழுக்கள் ஆகிய தரப்பினரால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் வன்முறை குறித்தும் கமிட்டி குறிப்பாக கவனம் செலுத்துகின்றது.” அது அதிகாரிகளிடம், ஏனையவற்றுக்கு மத்தியில், பாலியல் வன்முறைச் சம்பவங்களை “உரிய முறையில் விசாரித்து, வழக்குத் தொடுத்து, அவற்றுக்குத் தண்டனை வழங்குமாறு” கேட்டுக் கொள்கின்றது. “CEDAW/C/LKA/CO/7,பந்திகள் 40 மற்றும் 41

.

1134. பாதிக்கப்பட்ட நபர்கள் மீது பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட முடியும் என்ற அச்சம் காரணமாகவும், இந்த விசாரணை எதிர்கொண்ட ஏனைய இடையூறுகள் காரணமாகவும் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்ட சந்தர்ப்பத்திலும் சித்திரவதைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கெதிராக பயன்படுத்தப்பட்ட பாலியல் வன்முறையின் அளவினை இலங்கை தொடர்பான புலன் விசாணைக் குழுவினால் மதிப்பிட்டுக் கொள்ள முடியாதிருந்தது. மேலும், விசாரணை அமர்வுகளுக்கு வெளியில் இடம்பெற்ற வன்புணர்வு மற்றும் ஏனைய வடிவங்களிலான பாலியல் வன்முறை என்பவற்றின் அளவையும் மதிப்பிட்டுக்கொள்ள முடியவில்லை. பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கடும் மன அதிர்ச்சி மற்றும் சமூகப் புறமொதுக்கல் நிலை என்பவற்றின் பின்னணியில், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு மற்றும் ஏனைய அமைப்புக்கள் என்பவற்றினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் அளவிலும் பார்க்க பாலியல் வன்முறை பெருமளவுக்கு அதிகமாக இடம்பெற்றிருக்க முடியும் என நம்பப்படுகின்றது.

1135. எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அது சேகரித்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் பாலியல் வன்முறை தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டம் என்பன குறித்து மீறல்கள் அரசாங்க பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்பட்டிருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என அது கருத்தில் கொள்கின்றது. மேலும் இத்தகைய செயல்களில் ஒரு சில, போர்க் குற்றங்கள்மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் என்பவற்றுக்கு இணையானவையாகவும் இருந்து வர முடியும்.

**கடத்தல் மற்றும் பலவந்தமான விதத்தில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

1136. 2009 ஆம் ஆண்டு வரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆட்கடத்தல்களை மேற்கொண்டு, அதற்கூடாக பலவந்தமாக தமது இயக்கத்துக்கு ஆட்சேர்ப்பினை செய்து வந்திருக்கும் ஒரு போக்கை எடுத்துக் காட்டும் நம்பகமான தகவல்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சேகரித்துள்ளது. இவ்விதம் பலவந்தமான ஆட்சேர்ப்புக்குட்படுத்தப்படும் நபர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது குடும்பங்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்து வருவதுடன், இராணுவச் செயற்பாடுகளையும் அதே போல ஏனைய உதவிச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருந்தனர். எல்ரீரீஈ இயக்கத்தினால் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கும் தமது உறவினர்கள் இருக்கும் இடம் குறித்து அக்குடும்பங்களுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்படுவதில்லை. மோதலின் இறுதிக் காலப் பிரிவின் போது பலவந்தமான ஆட்சேர்ப்புக்கென மேற்கொள்ளப்படும் கடத்தல்கள் பெருமளவுக்கு அதிகரித்துக் காணப்பட்டன. அதனை எதிர்த்து நிற்பதற்கு முயற்சித்த பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் உடல் ரீதியிலான துன்புறுத்தல்களையும் எதிர்கொண்டதுடன், அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டார்கள்.

1137. பலவந்தமான ஆட்சேர்ப்பு மற்றும் பலவந்தமான ஊழியம் என்பவற்றுக்கு வழிகோலும் கடத்தல் சம்பவங்கள் ஜெனிவா சமவாயங்களின் பொது உறுப்புரை 3 ஐ மீறும் செயல்களாக இருந்து வந்துள்ளன என்பதனையும் பகைமைச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்கேற்காத நபர்கள் மற்றும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் யுத்தத்தில் பங்கேற்காத நபர்கள் ஆகியோரை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டிய ஜெனிவா சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான எல்ரீரீஈ இயக்கத்தின் கடப்பாடுகளை மீறும் சம்பவங்களாக இருந்து வருகின்றன என்பதனையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அவதானித்துள்ளது.

1138. பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களின் நடமாட்டம் மிகக் கடுமையான விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த சம்பவங்களில் இது சுதந்திரத்தைப் பறிப்பதற்கு இணையானதாக இருந்து வர முடியும் என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கருதுகின்றது. எவ்வாறிருப்பினும், இது திட்டமிட்ட விதத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒரு நடைமுறையின் ஒரு பாகமாக இருந்து வந்துள்ளது என்பதனை நிலைநிறுத்துவதற்கு மேலும் தகவல்கள் தேவைப்படுகின்றன.

**1139.** வயது வந்தவர்களை கடத்திச் சென்று, அவர்களிடமிருந்து பலவந்தமாக வேலை வாங்கியமை மற்றும் பொதுமக்களை தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கச் செய்தமை என்பவற்றின் மூலம் எல்ரீரீஈ இயக்கமும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தை மீறியிருப்பதாக நம்புவதற்கு காரணங்கள் இருந்து வருகின்றன. ஒரு நீதிமன்றத்தினால் நிரூபிக்கப்படுமிடத்து, இத்தகைய அத்துமீறல்கள், அந்தந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, போர்க் குற்றங்களுக்கு மற்றும் / அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயல்களுக்கு இணையானவையாக இருந்து வர முடியும்.

## சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தல்

**1140.** தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பல வருட காலம் சிறுவர்களை பரவலாக ஆட்சேர்ப்புச் செய்து வந்திருப்பதுடன், ஆயுத மோதலில் அவர்களைப் பயன்படுத்தி வந்திருப்பது தொடர்பாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது. இந்நிலைமை மோதலின் இறுதி மாதங்களின் போது தீவிரமடைந்திருந்தது. 15 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளையும் போரில் ஈடுபடுத்துவது தொடர்பிலான அதிகரித்த அளவிலான அறிக்கைகள் கிடைத்திருந்தன. கருணா குழு எல்ரீரீஈ இயக்கத்திலிருந்து பிரிந்து சென்ற பின்னர் அவர்களும் சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்து வந்தார்கள் என்பது தொடர்பான தகவல்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சேகரித்துள்ளது. பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கமும் அவ்வாறு செய்திருந்தது. இது சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் மாற்று ஏற்பாடு என்பவற்றில் உள்ள 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை ஆட்சேர்ப்புச்செய்து, ஆயுத மோதல்களில் பயன்படுத்துவது தொடர்பான விதிமுறைகளை மீறுவதாக இருந்து வருகின்றது.

**1141.** இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் சிறுவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்று வந்த உள்நாட்டுப் போரின் பின்னணியிலும், அவற்றுடன் இணைந்த விதத்திலும் இடம்பெற்று வந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் / கருணா குழுவும் 15 வயதுக்குக் குறைந்தவர்கள் என தாம் அறிந்திருந்த பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்திருந்ததுடன், இப்பிள்ளைகள் போர் நடவடிக்கைகளில் முனைப்பான விதத்தில் பங்கேற்பதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தனர். அந்த வகையில், எல்ரீரீஈ இயக்கமும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் / கருணா குழு என்பனவும் வழக்காறு சார்ந்த சர்வதேச் சட்டத்தை மீறியுள்ளன என்பதனை நம்புவதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படுமிடத்து, அத்தகைய செயல்கள் போர்க் குற்றங்களாக இருந்து வர முடியும்.

**1142.** இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் தகவல்களின் அடிப்படையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் / கருணா குழு தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்த

பிரதேசங்களிலிருந்து பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்திருந்தார்கள் என்ற விடயத்தை இலங்கை அரசாங்க பாதுகாப்புப் படைகள் தெரிந்து வைத்திருந்தன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.[1208] அரசாங்கமும் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயம் மற்றும் அதன் மாற்று ஏற்பாடு என்பவற்றை மீறியிருக்க முடியும் என்பதனை இது காட்டுகின்றது. குறிப்பாக ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான இந்தச் சமவாயம் மற்றும் அதன் மாற்று ஏற்பாடு என்பவற்றை இலங்கை அத்தாட்சிப்படுத்தியிருந்தது. 18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பன சர்வதேச தொழில் தாபனத்தின் மிக மோசமான சிறுவர் உழைப்பு வடிவங்கள் தொடர்பான சமவாயத்தினை மீறும் செயல்களாகவும் இருந்து வருகின்றன.

**1143.** சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வரும் நபர்கள் தொடர்பாக புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்என்றும், அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும் என்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் சட்டவாக்கம், சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தலுக்குப் பொறுப்பாக இருந்து வரும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு பயன்படுத்தக் கூடிய ஏற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. சிறுவர் ஆட்சேர்ப்புச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என பரவலாகச் சந்தேகிக்கப்பட்ட நபர்கள் பொதுப் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருந்த நிலையில், இந்த விடயம் மேற்கொள்ளப்படவில்லை என்பது பெருமளவுக்கு கவலைக்குரியதாகும். இனியபாரதியினால் சிறுவர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதாக தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக முழுமையாக விசாரணை செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்பட வேண்டும் என்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது.

**1144.** எந்தவொரு ஆயுதக் குழுவினாலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, இன்றுவரையில் எங்கிருக்கின்றார்களென அறிய முடியாதிருந்து வரும் பிள்ளைகள் இருக்கும் இடங்களை அறிந்து கொள்வதற்கு விசேட முயற்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**போர் நடவடிக்கைகள் பொதுமக்கள் மீதும் பொதுச் சொத்துக்கள் மீதும் எடுத்து வந்த தாக்கம்**

**1145.** இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடமிருக்கும் தகவல்களின் அடிப்படையில், இந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்படும் பல தாக்குதல்கள், போர் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் கோட்பாடுகளுடன் - குறிப்பாக பிரித்தறிந்து வேறுபடுத்திப் பார்க்கும் கோட்பாட்டுடன் - இணங்கிச் செல்வில்லை என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

**1146.** ''பொதுமக்களுக்கு உச்சமட்ட பாதுகாப்பினை'' வழங்கும் நோக்கத்துடன் அரசாங்கத்தினால் ஒருதலைப்பட்சமாக யுத்த சூன்ய வலயங்கள் பிரகடனம் செய்யப்பட்டிருந்தன. இந்த யுத்த சூனிய வலயங்களில் இடம்பெற்ற பல சம்பவங்கள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டன. எவ்வாறிருப்பினும், இந்த யுத்த சூன்ய வலயங்கள் ஏற்கனவே எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவ நிலைகள் இருந்து வந்த பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இந்த வலயங்களில் அல்லது வலயங்களைச் சூழ இடம்பெற்ற சண்டை அதனையடுத்து கணிசமான அளவிலான

[1208] கிழக்கு மாகாணம் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்ததுடன், ஆட்சேர்ப்பு பொலிஸ் நிலையங்களுக்கும், இலங்கை இராணுவத்தின் முகாம்களுக்கும் அருகில் இடம்பெற்றது.

பொதுமக்களின் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதுடன், பொதுமக்களின் இத்தகைய மரணங்கள் மற்றும் காயங்கள் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் என்பன தொடர்பாக யார் பொறுப்பேற்க வேண்டும் என்பது குறித்த கேள்விகளையும் எழுப்புகின்றது.

**1147.** யுத்த சூனிய வலங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவ இலக்குகளை தாக்குதல்களுக்கென இலக்காகக் கொள்வது பாதுகாப்புப் படைகளைப் பொறுத்தவரையில் அனுமதிக்கத்தக்க ஒரு செயலாக இருந்து வரும் அதேவேளையில், இந்தத் தாக்குதல்கள் போர்ச் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான விதிமுறைகளுக்கு அமைவாக இருந்து வந்திருத்தல் வேண்டும். பொதுமக்கள் உயிரிழப்புக்கள் அல்லது பொதுச் சொத்துக்களுக்கான சேதம் போன்றவற்றை தவிர்ப்பதற்கு அல்லது ஆகக்குறைந்தபட்ச மட்டத்தில் வைத்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்வதனையும் இது உள்ளடக்குகின்றது. இந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்படும் சம்பவங்களில் பெருந்தொகையான சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பாரிய எண்ணிக்கையிலான பொதுமக்களின் பிரசன்னம், ஒரு தாக்குதலின் விளைவாக யுத்த சூனிய வலயங்களில் பொதுமக்களின் உயிரிழப்புக்களும், பொதுச் சொத்துக்களுக்கான சேதங்களும் ஏற்படக் கூடிய உயரளவிலான ஆபத்து நிலவி வருகின்றது என்றவிடயத்தை எடுத்துக் காட்டியது. இந்த இடங்களில் தங்கியிருந்த பொதுமக்களில் பெரும் எண்ணிக்கையினர் திடமான பாதுகாப்பு இல்லாத நிலையில் அல்லது பதுங்கு குழிகளை அணுக முடியாத நிலையில் மிகவும் பலவீனமான கூடாரங்களில் வசித்து வந்தனர்.

**1148.** பொதுமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அல்லது அத்தகைய பிரதேசங்களுக்கு அருகில் சட்டபூர்வமான இராணுவ இலக்குகளுக்கு எதிராக இராணுவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இருந்து வரும் உள்ளார்ந்த சிக்கல்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஏற்றுக் கொள்கின்றது. எவ்வாறிருந்தபோதிலும், பெருமளவுக்கு பொதுமக்கள் செறிந்து வாழும் இடங்களிலிருந்து நேரடியாகப் போர் நடவடிக்கைகளில் ஈடுபடும் எல்ரீரீஈ இயக்கத்தின் உறுப்பினர்கள் இருந்து வரும் நிலை, அந்தக் குடித்தொகையின் இயல்பினை மாற்றியமைக்கவில்லைஅல்லது சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் சாதாரண பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பை அது இல்லாமல் செய்யவும் மாட்டாது. மோதலின் தரப்புக்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமது இராணுவ நடவடிக்கைகளை சர்வதேச மனிதநேயச் சட்டத்துக்கு இணங்கிய விதத்தில் மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளன. யுத்த சூனிய வலயங்கள் ஒட்டுமொத்தமாக ஒரு சட்ட ரீதியான இராணுவ இலக்கு எனக் கருதப்பட்டிருக்க முடியாது என்பதனையே இது எடுத்துக் காட்டுகின்றது. எல்ரீரீஈ இயக்கத்தின் இராணுவத் தளபாடங்கள், நிலைகள் மற்றும் போர் நடவடிக்கைகளில் நேரடியாக சம்பந்தப்படும் நபர்கள் ஆகிய தரப்பினரை மட்டுமே நேரடியாக இலக்காகக் கொள்ள முடியும். இத்தாக்குதல்கள் நடத்தப்பட்ட விதம், பாதுகாப்புப் படையினர் ஒட்டுமொத்த யுத்த சூனிய வலயங்களையும் தனியொரு இராணுவ இலக்காகக் கருதியிருக்க முடியும் என்பதனைக் காட்டுகின்றது.

**1149.** இந்த அறிக்கையில் மீளாய்வு செய்யப்படும் ஒவ்வொரு சம்பவத்தினதும் விகிதாசார அளவு தொடர்பாகஇலங்கை தொடர்பான புலன் விசாரணை இறுதி முடிவொன்றை மேற்கொள்ளக் கூடியதாக இருந்து வரவில்லை. அதேவேளையில், இந்த விடயம் புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அது நம்புகின்றது.

**1150.** மேலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய ஏனைய விடயங்கள் யுத்த சூனிய வலயங்களில் மருத்துவமனைகள் மீது சேதங்களை எடுத்து வந்த தாக்குதல்கள் சம்பந்தப்பட்டவையாகும். மருத்துவமனைகள், ஏனைய மருத்துவ அலகுகள் மற்றும் மருத்துவத் துறை ஆளணி என்பவற்றுக்கு சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதுடன், அத்தரப்புக்கள் மீது

தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட முடியாது. மருத்துவ அலகுகள் மற்றும் மருந்துப் பொருட்களை போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் என்பவற்றிற்கு உரித்தாக இருந்து வரும் பாதுகாப்பு, இத்தகைய செயற்பாடுகள் தமது மனிதநேயக் கருமத்துக்கு அப்பால் போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படாதிருக்கும்வரையில் இல்லாமல் போக முடியாது. அத்தகைய சந்தர்ப்பத்திலும் கூட, நியாயமான காலப் பிரிவுடன் கூடிய விதத்தில் ஓர் எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும் என சர்வதேச மனிதநேயச் சட்டம் அவசியப்படுத்துகின்றது. அந்த எச்சரிக்கையை செவிமடுக்காதிருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட முடியும். இதனைக் கருத்தில் கொண்டு, வன்னியில் மருத்துவமனைகள் மீது மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதல் குறித்து இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மருத்துவமனைகளின் சரியான அமைவிடத்தை பாதுகாப்புப் படையினர் அறிந்திருந்த நிலையிலும், அத்தகைய ஷெல்தாக்குதல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெற்றமை இத்தகைய தாக்குதல்கள் எழுந்தமானமான சம்பவங்களாக இருந்து வருகின்றனவா என்ற விடயம் குறித்து பாரதூரமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

**1151.** யுத்த சூனிய வலயங்களில் அமைந்திருந்த ஏனைய பொது வசதிகள் குறிப்பாக மனிதநேய வசதிகள் மற்றும் உணவு விநியோக நிலையங்கள் என்பனவும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தன. அத்தகைய நிலையங்களின் சரியான அமைவிடம் குறித்து ஆயுதப் படைகளுக்கு ஒழுங்கான அடிப்படையில் அறிவிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், அவர்களுடைய சொந்த வாக்குமூலங்கள் மற்றும் அதே போல சாட்சிகள் கூறிய விடயங்கள் என்பவற்றின் பிரகாரம், பாதுகாப்புப் படையினர் தமது ஆளில்லாத விமானங்கள் மூலம் உடனடியாக இப்படங்களைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இது இத்தகைய தாக்குதல்கள்தற்செயலாக இடம்பெற்றவை என்பது குறித்த பாரதூரமான சந்தேகங்களைக் கிளப்புகின்றது.இங்கு மீளாய்வு செய்யப்பட்டிருக்கும் எந்தவொரு சம்பவத்திலும், இத்தகைய நிலையங்கள் இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதனை பாதுகாப்புப் படைகள் நியாயமான விதத்தில் நிர்ணயித்துக் கொள்வதற்கு எத்தகைய காரணங்களும் இருந்து வரவில்லை என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கும் தகவல்கள் காட்டுகின்றன. எனவே, இந்த நிலையங்கள் அவற்றின் சிவிலியன் பண்புக்கூறினை பராமரித்து வந்ததுடன், அந்த நிலையில் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் அவற்றை நேரடியாக இலக்காகக் கொண்டிருக்க முடியாது.

**1152.** பொது வசதிகளுக்கு எதிராக மற்றும் / அல்லது போர் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்காத பொது மக்களுக்கு எதிராக தாக்குதல்களை தொடுப்பது சர்வதேச மனிதநேயச் சட்டத்தை பாரதூரமாக மீறும் ஒரு செயலாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, அது ஒரு போர்க் குற்றமாகவும் இருந்து வர முடியும்.

**1153.** கரிசனைக்குரிய மற்றொரு விடயம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பயன்படுத்தப்படும் பொழுது,கண்மூடித்தனமான விதத்தில் அனைவர் மீதும் தாக்கங்களை எடுத்து வரக்கூடிய ஆயுதங்களை பாதுகாப்புப் படை பயன்படுத்தியது என்பதாகும். மல்ட்டிபெரல் ரொக்கட் லோஞ்சர்களையும் (MBRLs) உள்ளடக்கிய விதத்தில் அத்தகைய ஆயுதங்களின் பாவனை, யுத்த சூனிய வலயங்களை நோக்கி சூட்டுத் தாக்குதலை நடத்தும் பொழுது தொடர்ச்சியாகப் பின்பற்றிவந்திருக்கும் நடைமுறையின் ஒரு பாகமாக இருந்து வந்திருப்பது போல் தெரிகிறது. அத்தகைய ஆயுதங்கள் பிரதேசங்களை இலக்காகக் கொள்ளும் ஆயுதங்களாக இருந்து வருவதுடன், இலக்கு வைத்த ஒரு இடத்தைத் தாக்குவதற்கென வடிவமைக்கப்பட்ட ஆயுதங்களாக இருந்து வரவில்லை. பொதுமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் இருக்கும் இராணுவ நிலைகளை அது துல்லியமாக இலக்காகக்கொள்ள முடியாது.

**1154.** மேலும், RPG's போன்ற நேரடி சூட்டுவலு ஆயுதங்கள், அவற்றின் உச்சமட்ட தாக்க வீச்சினை அதிகரிக்கும் பொருட்டு மேல்நோக்கி சுடப்பட்டுள்ளன. நேரடிச் சுடுகலன்களை இந்த விதத்தில் பயன்படுத்துவது அத்தகைய ஆயுதங்களின் இலக்கின் துல்லியத் தன்மையைக் குறைத்து விடுகின்றது. அதாவது, அத்தகைய ஆயுதங்கள் திட்டவட்டமான இலக்குகளைத் தாக்கக் கூடிய சாத்தியப்பாடு அதன் காரணமாக பெருமளவுக்குக் குறைகின்றது. சர்வதேச குற்றவியல் நியாயாதிக்கத் துறை இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில்,அது போன்றதாரதம்மியமற்ற தாக்குதல்கள், பொதுமக்களுக்கு எதிரான நேரடித் தாக்குதல்கள் என்ற தகைமையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளது.[1209] இந்தமுடிவுக்குஆதரவளிக்கக் கூடிய காரணிகள் கொல்லப்பட்ட மற்றும் காயப்பட்ட பாரிய எண்ணிக்கையிலான பொதுமக்கள், சேதமடைந்த அல்லது அழிவுற்ற கணிசமான எண்ணிக்கையிலான பொதுச் சொத்துக்கள், யுத்த சூனிய வலயங்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கு மத்தியில் அவை எடுத்து வந்த பீதி மற்றும் அச்சம் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன.

**1155.** தமது சட்ட ரீதியான கடப்பாடுகளை - குறிப்பாக பிரித்து, வேறுபடுத்தி அறிதல் மற்றும் முன்னெச்சரிக்கை என்பன தொடர்பான தேவைகளை - சிறந்த விதத்தில் மதித்து நடக்கும் பொருட்டு தனது ஆயுதங்களையும்,தளபாடங்களையும் துல்லியமாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளைப் பாதுகாப்புப் படைகள் கொண்டிருந்ததாகக் கூறப்படும் விடயம் இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. இது தவிர, தமது ஆளில்லா விமானங்களிலிருந்து அனுப்பி வைக்கப்படும் உடனுக்குடனான படங்கள் போன்ற வசதிகளையும் தாம் கொண்டிருப்பதாக பாதுகாப்புப் படையினர் பகிரங்கமாக பிரகடனம் செய்திருந்தனர். அத்தகைய படங்கள் இராணுவ இலக்குகளை துல்லியமாக இலக்கு வைத்துத் தாக்குவதற்கு அவர்களுக்கு உதவியிருக்க முடியும்.

**1156.** ஒரு மோதலின் தரப்பினர் மேற்கொள்ள வேண்டிய மற்றொரு முன்னெச்சரிக்கை வழிமுறை சந்தர்ப்ப சூழ்நிலைகள் அனுமதியளிக்காதிருந்தாலே தவிர, தாக்குதல்கள் பொதுமக்கள் மீது பாதிப்புக்களை எடுத்து வரக் கூடிய வாய்ப்பு இருந்து வரும் சந்தர்ப்பங்களில்,தாக்கமான விதத்தில் எச்சரிக்கைகளை விடுப்பதாகும். அதாவது, இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குறிப்பிட்ட இடத்திலிருந்து விலகிச் செல்வதற்கு அவர்களுக்குப் போதிய கால அவகாசத்தை வழங்குவதாகும். யுத்த சூனிய வலயங்களுக்குளிருந்து வந்த பொதுமக்களுக்கு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படப் போவதாகத் தெரிவித்து, திட்டவட்டமான எச்சரிக்கைகள் எவையும் விடுக்கப்பட்டிருந்தன என்பதனை எடுத்துக் காட்டும் எத்தகைய தகவல்களும் இலங்கை தொடர்பான விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கவில்லை. இது மேலும் முக்கியத்துவம் பெறும் ஒரு விடயமாகும். ஏனென்றால், யுத்த சூனிய வலயங்களில் இருந்து வந்த பொதுமக்கள் அரசாங்கத்தினாலும், பாதுகாப்புப் படைகளினாலும் தமது சொந்தப்

---

1209 ICTY, *Prosecutor v.Galic*, case No. IT-98-29-T, Judgement, டிசம்பர் 5, 2003 அணுவாயுத வழக்கின் போது சர்வதேச நீதிமன்றம் தாரதம்மியமற்ற விதத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தடை செய்யப்பட்டிருக்கும் விடயத்தை பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்களுடன் சம்பந்தப்படுத்தியது. அது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: ‘‘அரசுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொது மக்களை ஒரு தாக்குதலின்இலக்காகக் கொள்ளக் கூடாது.எனவே, அந்த நிலையில், பொது மக்களுக்கும் இராணுவ இலக்குகளுக்குமிடையில் பிரித்து, வேறுபடுத்தும் ஆற்றல் அற்றவையாக இருந்து வரும் ஆயுதங்களை அவை ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது.’’ பந்தி 78. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் நியதிச் சட்டத்தின் உறுப்புரை 8 , சாதாரண பொது மக்களுக்கு எதிராக அல்லது பொதுச் சொத்துக்களுக்கு எதிராக வேண்டுமென்றே தாக்குதல்களை மேற்கொள்வது ஒரு போர்க் குற்றமாக இருந்து வருகின்றது எனப் பட்டியலிட்டுள்ளது.

பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த வலயங்களுக்குள் வருமாறு ஊக்குவிக்கப்பட்டிருந்தார்கள்.

**1157.** ஐக்கிய நாடுகள் நிலையங்களையும் உள்ளடக்கிய விதத்தில் மருத்துவமனைகள் மற்றும் ஏனைய பொதுச் சொத்துக்கள் என்பவற்றை எல்ரீரீஈ இயக்கம் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வந்திருந்தது என்பதனைக் காட்டும் சான்றுகளை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கண்டறியவில்லை. எவ்வாறிருப்பினும், யுத்த சூனிய வலயங்களில் பொது மக்கள் செறிந்து வாழ்ந்து வந்த பிரதேசங்களில் எல்ரிரிஈ இயக்கத்தின் இராணுவ நிலைகளும், ஆளணியும் இருந்து வந்தன என்பதை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் விசாரணைகள் எடுத்துக் காட்டுகின்றன. மருத்துவமனைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்கள் என்பவற்றை அண்மித்த இடங்களில் எல்ரீரீஈ இயக்கத்தின் போராளிகள் சிவில் உடையில் இருந்து வந்த சந்தர்ப்பங்களிலும் ஆயுதங்களுடன் நடமாடிய சம்பவங்கள் இருந்து வந்துள்ளன என்பதனை நம்பகமான வட்டாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும், இந்த அமைவிடங்களுக்கு வெகு அருகிலிருந்து எல்ரீரீஈ இயக்கம் தாக்குதல்களை தொடுத்திருந்தது என்பதனை நம்புவதற்கும் நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

**1158.** மேலும், எல்ரீரீஈ இயக்கம் மனிதநேய நிவாரண நிலையங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் என்பவற்றையும், யுத்த சூனிய வலயங்களில், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் செறிந்து வாழ்ந்து வந்த பிரதேசங்களைச் சூழவுள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய விதத்தில் பொது மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களுக்கு மிக அருகிலும், அவற்றின் அயல் பிரதேசங்களிலும் தமது பீரங்கிகள் மற்றும் ஏனைய யுத்த உபகரணங்கள் என்பவற்றை நிலைகொள்ளச் செய்திருந்ததுடன், மீண்டும் மீண்டும் இராணுவக் கட்டமைப்புக்களை (பெரும்பாலும் மண் அணைகள் மற்றும் அகழிகள் என்பவற்றை) அமைத்திருந்தது.

**1159.** இத்தகைய நடத்தை, பொது மக்கள் தம்மைச் சூழ இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய அபாயத்தை எடுத்து வந்திருந்தது. மேலும்,இலங்கை இராணுவத் தாக்குதல்களின் அதிகரித்தளவிலான ஆபத்துக்களை மக்களை எதிர்கொள்ளச் செய்வதனையும் இது உள்ளடக்கியிருந்து. இந்த அடிப்படையில், தாக்குதல்களின் தாக்கங்களிலிருந்து பொது மக்களையும்,பொது வசதிகளையும் பாதுகாப்பதற்குத் தேவையான சாத்தியமான அனைத்து வழிமுறைகளும் மேற்கொள்ள வேண்டிய சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளை அந்த இயக்கம் மீறியுள்ளது என்பதனை நம்புவதற்கான நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

**1160.** இறுதியாக, சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் ஒரு மோதலின் அனைத்துத் தரப்புக்களும் கொண்டிருக்கும் கடப்பாடுகளை ஞாபகப்படுத்திக் கொள்வது மிக முக்கியமாகும். அதாவது, இது எதிர்த்தரப்பினரின் நடத்தையின் அடிப்படையில் இடம்பெற முடியாது. அதாவது, சர்வதேச மனிதநேயச் சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டிய கடமை பரஸ்பர நிலை தொடர்பான நிபந்தனையைக் கொண்டிருக்கவில்லை. மோதலின் ஒரு தரப்பு சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான மீறல்களை மேற்கொண்டிருக்கும் நிலையில், எதிர்த்தரப்பும் அந்த மீறல்களை மேற்கொள்வதனை நியாயப்படுத்த முடியாது.

**மக்கள் நடமாட்டம் தொடர்பான கட்டுப்பாடு**

**1161.** எல்ரீரீஈ இயக்கம் பல வருட காலம் செயற்படுத்தி வந்த அனுமதிப்பத்திர நடைமுறையொன்றுக்கூடாக பொதுமக்கள் வன்னிக்குள் பிரவேசித்தல் மற்றும்

அதிலிருந்து வெளியேறுதல் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் தெளிவான உயர் மட்டக் கொள்கையொன்றைக் கொண்டிருந்தது என்பதனை நம்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே, இந்த அனுமதிப்பத்திர நடைமுறை மூலம் அந்த இயக்கம் மக்களின் நடமாட்ட சுதந்திரத்தின் மீது சட்ட விரோதமான விதத்தில் தலையிட்டிருந்தது. இந்தக் கொள்கை 2009 ஜனவரி மாதம் தொடக்கம் மேலும் இறுக்கமாக்கப்பட்டது என்பதனையும், எல்ரீரீஈ பிரதேசங்களிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனையும் தகவல்கள் எடுத்துக் காட்டுகின்றன. வெளியேறிச் செல்லும் நபர்களை எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்கள் எவ்வாறு தடுக்க வேண்டும் என்பது குறித்து விடுக்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்ககள் தொடர்பாக தெளிவுபடுத்தல்கள் தேவைப்பட்ட போதிலும், பல சிறுவர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான தனிநபர்கள் அங்கிருந்து வெளியேறிச் செல்ல முயன்ற சந்தர்ப்பங்களில் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாகவும், காயப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அல்லது தாக்குதலுக்குஉள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றன. இச்சம்பவங்கள் அவர்களுடைய வாழ்வதற்கான உரிமை மற்றும் உடல் கண்ணியத்துக்கான உரிமை என்பவற்றை மீறும் செயல்களாக இருந்து வந்துள்ளன. இத்தகைய செயல்கள் சர்வதேச மனித நேயச் சட்டத்தை மீறும் விதத்தில் யுத்த நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்காத பொதுமக்கள் மீது நேரடித் தாக்குதல்களை நடத்துவதற்கு இணையானவையாகும். ஒரு நீதிமன்றத்தின் முன் இது நிரூபிக்கப்படுமிடத்து, சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, அத்தகைய செயல்கள் போர்க்குற்றச் செயல்களாக இருந்து வர முடியும்.

**1162.** அத்தகைய சம்பவங்களின் இயல்பு, அளவு மற்றும் நிகழ்தகவு என்பன தொடர்பாக மேலும் விசாரணைகள் நடத்தப்படுவது அவசியமாகும். தப்பிச் செல்ல முயன்ற பொதுமக்கள் மீது எல்ரீரீஈ இயக்கம் நேரடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கும் சந்தர்ப்பங்களில், அத்தகைய துப்பாக்கிப் பிரயோகங்கள், பொதுமக்கள் வெளியேறிச் செல்வதனைத் தடுப்பதற்கான எல்ரீரீஈ இயக்கத்தின் உத்தியோகபூர்வக் கொள்கையின் ஒரு பாகமாக இருந்து வந்துள்ளனவா என்பதனைக் கண்டறியும் பொருட்டு இந்த விசாரணைகள் தேவைப்படுகின்றன. அதே போல, இதில் சம்பந்தப்பட்ட தமது இயக்க உறுப்பினர்களை இச்செயல்களிலிருந்து தடுப்பதற்கு மற்றும் / அல்லது அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு எல்ரீரீஈ இயக்கத்தின் தலைமைத்துவத்தினால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கும் மேலும் விசாரணைகள் தேவைப்படுகின்றன.

**1163.** முனைப்பான விதத்தில் யுத்த நடவடிக்கைகள் இடம்பெற்ற பிரதேசத்திற்குள் தரித்து நிற்குமாறு பொதுமக்களை நிர்ப்பந்திப்பதன் மூலமும், வெளியேறிச் செல்ல முயல்பவர்களை அதைரியப்படுத்தும் ஒரு முயற்சியாக அவர்களை பயமுறுத்தி, அச்சுறுத்துவதன் மூலமும் எல்ரீரீஈ இயக்கம் தனது கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பொதுமக்களை, பாதுகாப்புப் படையினரின் தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டிய சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளை மீறியுள்ளது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்த தகவல்கள், பாதுகாப்புப் படையினர் தம்மை இலக்கு வைப்பார்கள் என்ற விடயத்தை எல்ரீரீஈஇயக்கம் அறிந்திருந்தது அல்லது அதனைத் தெரிந்து கொள்வதற்கான காரணங்கள் இருந்து வந்தன என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. எனினும், இந்த விடயத்தை அறிந்திருந்தும் கூட,பொதுமக்களை இராணுவ இலக்குகளுக்கு அருகிலிருந்து அகற்றுவதற்கு அது எத்தகைய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கவுமில்லை. பொதுமக்களின் நடடமாத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அது அதற்கு மாறான ஒரு செயலைச் செய்திருந்தது. இந்த நிலையில், பொதுமக்கள்,இலங்கை இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல்களை எதிர்கொண்டு வந்த ஒரு பிரதேசத்தில் தரித்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில்

இருந்து வந்தனர். அந்த இடத்தில் போதிய பௌதீகப் பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் இருந்துவராத காரணத்தினால், அவர்கள் தாக்குதல்களினால் எளிதில் பாதிக்கப்படும் நிலை மிக உயர்வாகக் காணப்பட்டது. அந்தவகையில், இந்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில் எல்ரீரீஈ இயக்கம் பொதுமக்களை இராணுவ நடவடிக்கைகளுக்கு - குறிப்பாக இராணுவத்தின் ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றுக்கு - முகங்கொடுக்க வைத்தது என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருவது போல் தெரிகின்றது.

**1164.** வன்னியில் எல்ரீரீஈ இயக்கத்தினால் பொதுமக்களின் நடமாட்டத்தின் மீது எடுத்து வரப்பட்டிருந்த இடையூறுகள், அந்த மக்களுக்கு மத்தியில் அச்ச உணர்வை பரப்பும் ஒரு தாக்கத்தையும் கொண்டிருந்தது என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனத்தில் எடுக்கின்றது. தமது நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலை, அதேவேளையில், தாம் ஆட்டிலரித் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலை என்பவற்றின் காரணமாக, தாம் தொடர்ந்து கடும் மன அதிர்ச்சிகளை எதிர்கொண்டு வந்ததாக சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தார்கள்.

### நிவாரண உதவிகள் மறுக்கப்பட்டமை

1165. ஆயுத மோதல் இடம்பெற்ற காலப் பிரிவு முழுவதிலும் அரசாங்கம், வன்னிக்குள் பிரவேசிக்கும் மனிதநேய நிவாரணப் பொருட்களையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்துப் பொருட்கள் மீதும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வந்தது என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது. எல்ரீரீஈ இயக்கத்தின் போர் முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்திருக்கக் கூடிய பண்டங்கள் மற்றும் பொருட்கள் என்பவற்றின் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொள்ளும் உரித்தினை அரசாங்கம் கொண்டிருக்கும் அதேவேளையில், சுயாதீனமான பக்கச் சார்பற்ற மனிதநேய நிவாரண உதவிப் பொருட்களுக்கு துரிதமாகவும், தடங்கல்கள் ஏதுமில்லாத விதத்திலும் அனுமதி வழங்கி, அவற்றின் விநியோகத்துக்கு வசதி செய்து கொடுப்பதற்கான கடப்பாட்டினை அது கொண்டிருந்தது. உணவு, உணவு அல்லாத மனித நேய உதவிகள், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதற்குப் பதிலாக,அவற்றின் தங்குதடையற்ற விநியோகத்துக்கு அது உதவியிருக்க வேண்டும்.

1166. வன்னியில் மனிதநேய நிவாரணப் பணியாளர்களினதும், மனித நேய செயற்பாடுகளினதும் நடமாட்டச் சுதந்திரத்தின் மீது இலங்கை அரசாங்கம் கணிசமான அளவிலான வரையறைகளை விதித்திருந்தது. இந்த வரையறைகள், தாக்கமான விதத்தில் தமது கருமங்களை மேற்கொள்வதற்கும், தேவையைக் கொண்டிருக்கும் பொதுமக்கள் நிவாரண உதவிகளை அணுகுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மனித நேய நிறுவனங்களும் ஆளணியினரும் கொண்டிருந்த ஆற்றலின் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வந்திருந்தன. அத்தகைய வரையறைகளை வெளிப்படையான இராணுவத் தேவைகளின் அடிப்படையில் மட்டுமே நியாயப்படுத்த முடியும். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம், அரசாங்கம், அத்தகைய நியாயப்படுத்தல்களை முன்வைத்திருக்கவில்லை. இந்த வரையறைகள் பக்கச் சார்பற்ற மனிதநேய நிவாரண உதவிகளுக்கு இடமளித்தல் மற்றும் துரிதமாகவும், தடங்கலில்லாமலும் அவை அனுப்பப்படுவதற்கு வசதி செய்து கொடுத்தல் என்பன தொடர்பான கடப்பாட்டினை மீறும் ஒரு செயலாக இருந்து வருவது போல் தெரிகிறது.

1167. மனிதநேய நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வரும் ஆளணியினருக்கு மதிப்பளித்து, அவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுடைய நடமாட்ட சுதந்திரத்தை கட்டுப்படுத்தாதிருத்தல் என்பன தொடர்பான தனது கடப்பாடுகளுக்கு

மதிப்பளிப்பதற்கு எல்ரீரீஈ இயக்கமும் தவறியுள்ளது என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன.

1168. மனிதநேய நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனத் தொடரணிகளுக்கு அருகில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடமிருக்கும் தகவல்கள், இலங்கை இராணுவமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மனிதநேய நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வரும் ஆளணியினருக்கும், பொருட்களுக்கும் மதிப்பளித்து, பாதுகாக்க வேண்டிய தமது கடப்பாட்டினையும்,பொதுமக்களின் உயிரிழப்புக்கள் அல்லது பொதுச் சொத்துக்களுக்கான சேதம் என்பன போன்ற தற்செயலாக ஏற்படக் கூடிய நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கு அனைத்துச் சாத்தியமான வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டிய கடப்பாட்டினையும் நிறைவேற்றத் தவறியிருக்கின்றன என்பதனையே காட்டுகின்றன.

1169. வன்னிப் பிரதேசத்தில் இருந்து வரும் பொதுமக்களின் துல்லியமான எண்ணிக்கை மற்றும் அவர்களுடைய நிவாரண உதவித் தேவைகள் என்பவற்றை சார்பு ரீதியில் நிர்ணயித்துக் கொள்வதற்கு அதற்கு இடமளிக்கக் கூடிய தகவல் மூலாதாரங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை அணுகக் கூடிய வாய்ப்பினை அரசாங்கம் கொண்டிருந்தது. எனவே, அந்த நிலையில், அம்மக்களின் மனிதநேய நிவாரணச் சேவைகளுக்கான தேவைகளையும் அது அறிந்து கொண்டிருக்க முடியும். இது வன்னியில் பணிபுரிந்துவரும் அரசாங்கச் சுகாதாரத் துறை ஆளணியினர், மனிதநேய நிவாரண நிறுவனங்கள் ஆகிய தரப்புக்கள் முன்வைக்கும் வேண்டுகோள்கள், விமானப் புகைப்படங்கள்,தொடர்ந்து அரசாங்க கட்டுப்பாட்டின் கீழிருந்து வரும் பிரதேசங்களை நோக்கி வந்த நபர்களின் நிலைமைகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. போஷாக்கு மட்டங்கள் குறித்த ஒரு சீரான மாதிரிகள், தேசிய சராசரியிலும் பார்க்க கணிசமான அளவில் குறைவாக இருந்து வந்துள்ளன என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனத்தில் எடுக்கின்றது. 2009 மார்ச் மாதத்துக்கும் மே மாதத்துக்குமிடையில் போஷாக்கின்மை மட்டங்கள் பெருமளவுக்கு சீர்குலைந்திருந்தன. அதேபோல பட்டினி காரணமாக மரணங்கள் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பிதேசங்களில் வசித்து வந்த பொதுமக்களின் உண்மையான மனிதநேய நிவாரணத் தேவைகளை அரசாங்கம் அறிந்திருந்தது அல்லது தெரிந்து கொள்வதற்கான காரணங்கள் இருந்து வந்தன என்பதனை நம்புவதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் நியாயமான காரணங்கள் உள்ளன. அரசாங்கம், மோதல் வலயத்தில் நிவாரணப் பணி உதவிகளை ஏற்பாடு செய்யும் அதன் அரசாங்க அதிபர்களையும் உள்ளிட்டவர்களிலிருந்து அத்தகவல்களைப் பெற்றிருக்க முடியும். எனினும், அது நிவாரணப் பொருட்களின் போக்குவரத்து மற்றும் மனிதநேய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் ஆளணியினரின் நடமாட்டச் சுதந்திரம் என்பவற்றின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இதன் விளைவாக, வன்னியிலிருந்த பொதுமக்கள் அத்தியாவசிய அடிப்படை உணவுப் பொருட்கள் மற்றும் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தது என்ற விடயம் நன்றாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய செயல்கள் மற்றும் விடுபாடுகள் என்பன நீதிமன்றமொன்றில் நிரூபிக்கப்படுமிடத்து, சர்வதேச மனித நேயச் சட்டத்தை மீறும் செயல்களாக இருந்து வர முடியும். சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து அது ஒரு போர் வழிமுறையாக பொதுமக்களை பட்டினி கிடக்கச் செய்தல் என்பதற்கு இணையானதாக கருதப்பட முடியும். அது சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.[1210] அத்தகைய நடத்தை நீதிமன்றமொன்றில் நிரூபிக்கப்படுமிடத்தும், சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்தும்,ஒரு போர்க் குற்றமாக அமைய முடியும்.

[1210] *Database on* customary *international humanitarian law,* Rule 53.

1170. சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகள் தவிர, பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளின் குறைந்தபட்ச மட்டங்களை திருப்திப்படுத்துவதற்கான ஒரு முயற்சியில்[1211] தம்வசமுள்ள அனைத்து வளங்களையும் பயன்படுத்துவதற்கான தமது அடிப்படைக் கடப்பாட்டினை அரசாங்க அதிகாரிகள் நிறைவேற்றத் தவறியிருக்கின்றார்கள் என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கருதுகின்றது.

1171. அரசு பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை நிறைவேற்றி வைப்பதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, இந்த உரிமைகளுக்கு மதிப்பளித்து, பாதுகாப்பதற்கான அதன் கடப்பாட்டின் மீது எதிர்மறையான ஒரு தாக்கத்தை எடுத்து வரக்கூடிய எவையேனும் செயல்கள் அல்லது விடுபாடுகள் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியும் உள்ளது. இதன் தோல்வி போதிய வாழ்க்கைத் தரமொன்றை அனுபவித்தல் மற்றும் சாதித்துக் கொள்ளக் கூடிய ஆகக் கூடிய உடல் மற்றும் உள சுகாதாரத்தை அனுபவித்தல் என்பவற்றில் மட்டுமன்றி மிகவும் தீவிரமான சந்தர்ப்பங்களில், வாழ்வதற்கான உரிமையையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான ஏனைய உரிமைகள் மீதும் பாதிப்புக்களை எடுத்து வர முடியும். இந்த உரிமைகள் கலாசார, பொருளாதார, சமூக உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் உறுப்புரைகள் 12 மற்றும் 13 என்பவற்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

### வடிகட்டும் சோதனைகள் மற்றும் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்திருக்கும் மக்களின் சுதந்திரத்தைப் பறித்தல்

1172. மனிக்பாம் முகாமிலும், ஏனைய மூடப்பட்ட முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்த உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த மக்களின் சுதந்திரம், சர்வதேச சட்டத்தின் கீழ் அனுமதிக்கத்தக்க காலப் பிரிவிலும் பார்க்க கூடிய காலப் பிரிவின் போது பறிக்கப்பட்டிருந்தது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. தமது ஆயுதங்களை ஒப்படைத்திருந்த எல்ரீரீஈ இயக்கப் போராளிகளை ஏனைய பொதுமக்களிடமிருந்து பிரித்து, வேறுபடுத்தி வைப்பதற்கான தேவை இருந்து வந்திருக்க முடியும். அதேவேளையில், அத்தகைய மதிப்பீடுகள் தனிநபர் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அதுதவிர, பாதுகாப்புக் காரணங்களின் அடிப்படையில் சுதந்திரத்தைப் பறிக்கும் ஏதேனும் செயல்களுக்கு சட்ட ஏற்பாடுகள் இருந்து வருதல் வேண்டும். மேலும்,அவை ஒரு இறுதித் தெரிவாக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு தனி நபரும் நேரடி அச்சுறுத்தலொன்றை எடுத்து வருகின்றார் என்பது தொடர்பான தனிப்பட்ட அடிப்படையிலான ஒரு மதிப்பீட்டின் விளைவாகவே அது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்தகைய தீர்மானம் ஒரு நீதிமன்றத்தினால் அல்லது அதே அளவிலான சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை ஆகிய பண்புகளைக் கொண்டிருக்கும் ஒரு விசாரணை மன்றத்தினால் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இந்த அளவுகோல் மற்றும் நடைமுறைகள் என்பவற்றுக்கு மதிப்பளிக்க அரசாங்கம் தவறியிருந்தமையையடுத்து, சுதந்திரம் பறிக்கப்பட்ட செயல், ஒரு தன்னிச்சையான தடுத்து வைத்தலுக்கு இணையானதாக இருந்து வந்தது.

1173. இது தவிர, அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டதற்கு ஊடாக பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களின் நடமாட்ட சுதந்திரத்தின் மீது கண்டிப்பான வரையறைகள் விதிக்கப்பட்டிருந்த நிலை, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் புறம்பான ஒரு மீறல் செயலாகவும் இருந்து வருகின்றது.

[1211] CESCR, General Comment No. 3 (1990) on the nature of States parties' obligations (art. 2 (1) of the Covenant), para.10.

மேலும்,இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்த இந்த முகாம்களில் காணப்பட்ட நிலைமைகள் உணவு, தண்ணீர், வீடமைப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் என்பவற்றையும் உள்ளடக்கிய சுகாதாரத்திற்கான உரிமை மற்றும் போதிய வாழ்க்கைத்தரம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை என்பவற்றின் மீறல்களுக்கு இணையானவையாகும். மிகவும் பலவீனமான நபர்களைப் பொறுத்தவரையில், இந்த அத்துமீறல்கள் இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் விதத்தில் மரணம் ஏற்படக்கூடிய உயரளவிலான ஆபத்து நிலைகளுக்கு வழிகோலியிருந்தன. அத்தகைய நிலவரங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளவாறு கொடூரமான செயல்கள் மற்றும் இழிவான விதத்தில் நடத்துதல் என்பவற்றுக்கும் இணையானவையாக இருந்து வர முடியும்.

1174. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் இருக்கும் தகவல்களின் அடிப்படையில்,உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த நபர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியில் வந்திருந்த காரணத்தினாலும்,அவர்களுடைய தமிழின அடையாளம் காரணமாகவும் சந்தேக நபர்களைப் போல நடத்தப்பட்டதுடன், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள் என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வருகின்றன. இது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் பாரபட்சமாக நடத்துவதற்கு இணையான ஒரு செயலாகும். ஒரு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படுமிடத்து இது மனிதகுலத்திற்கு எதிரான ஓர் அடக்குமுறைக் குற்றச்செயலுக்கு இணையானதாகவும் இருந்துவர முடியும்.

# XVIII. நீதி மற்றும் பொறுப்புக் கூறுதல்

1175. அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனித நேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் மற்றும் சர்வதேச குற்றச் செயல்கள் என்பவற்றை இழைத்திருக்கும் நபர்களை அவற்றுக்குப் பொறுப்புக்கூற வைக்கத் தவறியமை, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனத்தில் எடுக்கும் காலப் பிரிவுக்கும், நீண்ட காலத்துக்கு முன்னரேயே இடம்பெற்று வந்திருப்பதுடன், அது பல வருட காலம் மனித உரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் கமிட்டி மற்றும் விசேட நடைமுறைகள் தொடர்பான ஆணைப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் அமைப்புக்கள் போன்ற ஐநா வின் அமைப்புக்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அரசுசாரா அமைப்புக்கள் என்பவற்றின் அறிக்கைகள், அவதானிப்புக்கள் மற்றும் கூற்றுக்கள் என்பவற்றில் மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டப்பட்டிந்தன. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களும் ''அனைத்து இலங்கையர்கள் தொடர்பாகவும் நீதி, சமத்துவம், பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான நம்பகமான மற்றும் சுயாதீனமான செயல்களை ஆரம்பித்து வைப்பதற்கான அதன் சட்ட ரீதியான கடப்பாடுகளையும்,அர்ப்பணிப்புணர்வையும்'' நிறைவேற்றிவைக்க வேண்டுமென அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தன.[1212]

1176. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் ''சட்டத்தின் ஆட்சியை வலுவுக்கிடத் தவறியமை''குறித்து கவனத்தை ஈர்த்திருந்தது. "அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் விசாரணை செய்யப்பட்டு, தவறிழைத்தவர்களுக்கு எதிராக அவர்களுடைய அரசியல் தொடர்புகள் என்னவாக இருந்து வந்தபோதிலும், வழக்குத் தொடுக்கப்பட்டு, தண்டிக்கப்படுதல் வேண்டும். அது நீதியின் நிருவாகம் தொடர்பாக மக்களுக்கு மத்தியில் ஒரு நம்பிக்கையைத்

[1212] A/HRC/22/ .1/Rev.1: Promoting Reconciliation and Accountability in Sri Lanka, 19 March 2013

தூண்ட முடியும்'' என்ற விடயத்தை அது வலியுறுத்தியிருந்தது. நீதிமன்ற நடைமுறைக்குப் புறம்பான மரண தண்டனைகளை நிகழ்த்தியவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, வழக்குத் தொடுப்பதன் முக்கியத்துவத்தையும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கோடிட்டுக் காட்டியிருந்தது. ''அத்தகைய ஒரு நடவடிக்கை, சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிப்பதனை உறுதிப்படுத்துவது தொடர்பான, வலுவான ஒரு சமிக்ஞையை அனுப்பிவைக்க முடியும். அது மறுபுறத்தில், சுகப்படுத்தல் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்றது.''[1213]

1177. நிபுணர் குழு 2011 மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்த அதன் அறிக்கையில் பின்வரும் முடிவுக் குறிப்பினை முன்வைத்திருந்தது:"மோதல் முடிவடைந்து சுமார் இரண்டு வருட காலத்துக்குப் பின்னர், அரசாங்கத்தின் முயற்சிகள் பொறுப்புக் கூறுதல் தொடர்பான சர்வதேச தர நியமங்களைப் பொறுத்தவரையில் கணிசமான அளவில் தாழ்ந்த மட்டத்தில் இருந்து வருவதுடன், அது இலங்கையின் சட்ட ரீதியான கடமைகளைத் திருப்திப்படுத்துவதற்கும் தவறியுள்ளது." அரசாங்கம் உண்மையான ஒரு விசாரணையை நடத்தியிருக்கவில்லை என்ற முடிவுக்கும் அது வந்திருந்தது. ''அவ்வாறு செய்வதற்கான ஒரு நோக்கம் இருந்து வருவது குறித்த அடையாளங்களையும் அது காட்டியிருக்கவில்லை.'' பொறுப்புக் கூறுதல் தொடர்பான அரசாங்கத்தின் அணுகுமுறை ''உண்மை, நீதி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு என்பவற்றை உத்தரவாதப்படுத்தும் அடிப்படை சர்வதேச நியமங்களுக்குப் பொருந்தக் கூடியதாக இருந்து வரவில்லை''[1214]

1178. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் விசாரணைகளின் போது சேகரிக்கப்பட்ட தகவல்கள், குற்றம் புரிந்துவிட்டு, தண்டனையிலிருந்து விலக்குப் பெறும் உரிமை இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது என்ற விடயத்தையும், அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் மற்றும் சர்வதேச குற்றச் செயல்கள் என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்கள் நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை நீண்ட காலமாக மறுக்கப்பட்டு வந்துள்ளது என்ற விடயத்தையும் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகின்றன. அதற்குப் பதிலாக, அவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொலிசில் அல்லது நீதிமன்றங்களில் தமது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு முயற்சிக்கும் பொழுது அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் ஏன் உடல் ரீதியான துஷ்பிரயோகம்என்பவற்றையும் கூட அனுபவித்து வந்திருப்பதுடன், தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றார்கள். நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் தொடர்பான விசேட ஆணையாளர் இலங்கைக்கான தனது பயணத்தின் போது 2005 ஆம் ஆண்டில் குறிப்பிட்டிருந்ததைப் போல ''அரசாங்க வன்முறைக்கு எதிராக தாக்கமான விதத்தில் வழக்குத் தொடுக்கத் தவறியிருக்கும் நிலை ஆழமாக உணரப்பட்ட ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. தமிழர் ஒருவரை கொலை செய்தமைக்காக - ஒரு சிப்பாய் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் போன்ற - அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட சம்பவங்கள் மிகக் குறைவாக இருந்து வருவது இதற்கான ஒரு உதாரணமாகும்.'' தண்டனையிலிருந்து விலக்குப் பெறும் உரிமையின் ஒரு எதிர்மறைத் தாக்கத்தின்

---

[1213] கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை, பந்திகள் 9.120 மற்றும் 9.213

[1214] Report of the UN Secretary General's Panel of Experts on Accountability in Sri Lanka, 31 March 2011.

விளைவாக “சட்டத்தின் ஆட்சியினால் தமது உயிருக்குப் பாதுகாப்புக் கிடைக்குமா என்ற விடயம் குறித்து பலர் சந்தேகம் கொண்டுள்ளனர்.”[1215]

1179. புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட காலப் பிரிவின் போது, முன்னைய வருடங்களின் போது ஏற்கனவே உதாசீனம் செய்யப்பட்டிருந்த சட்டத்தின் ஆட்சி - குறிப்பாக ஜனாதிபதிக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டமை மற்றும் அதிகாரிகள் தண்டனை விலக்குரிமையைஅனுபவித்தமை என்பவற்றுடன் இணைந்த விதத்தில் - மேலும் சீர்குலைந்தது. உதாரணமாக, 2006 ஆம் ஆண்டின் அவசரகால ஒழுங்கு விதிகள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தன: “எவரேனுமொரு அரசாங்க ஊழியருக்கு எதிராக அல்லது இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கென இலங்கை அரசாங்கத்தினால் திட்டவட்டமான விதத்தில் அதிகாரமளிக்கப்பட்டிருந்த எவரேனுமொரு நபரொருவருக்கு எதிராக அந்த நபர் நல்லெண்ணத்திலும், தனது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும் விதத்திலும் நடந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில்நடவடிக்கை எடுக்கவோ அல்லது வழக்குத்தாக்கல் செய்யவோ முடியாது.”[1216]

1180. நிறுவன ரீதியான பொறுப்புக் கூறும் நிலையை எடுத்து வரும் ஆழமான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு அதியுயர் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகும். நிறுவனக் கட்டமைப்பில் அடிப்படை மாற்றத்தை எடுத்து வருவதற்கான தேவை 2009 பெப்ரவரி 9 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் 10 நிபுணர்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது.[1217]அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்கள்: “மோதல்பிரதேசங்களில் மிகக் கடுமையான துஷ்பிரயோகங்கள் ஏற்பட்டிருக்கும் நிலையிலும், இப்பிரச்சினை ஆழமாக வேரூன்றிய ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை நிபுணர்கள் எடுத்துக்காட்ட விரும்புகின்றார்கள். மோதல்,நாடு முழுவதிலும் தங்குதடையற்ற விதத்தில் இடம்பெற்று வரும் தண்டனை விலக்குரிமை என்ற விடயத்திலிருந்து கவனத்தைத் திசை திருப்புகிறது. பாதிக்கப்பட்டோர்கள் மற்றும் சாட்சிகளுக்கெதிராக பழிவாங்கல் நிலைகள் இடம்பெற முடியும் என்ற அச்சம்,தாக்கமான விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடுப்புக்கள் என்பன இல்லாத நிலையுடன் இணைந்து உடைக்கப்பட வேண்டிய தண்டனை விலக்குரிமை சுழலொன்று தோன்றுவதற்கு வழிகோழியுள்ளது.” மேலும், பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் தோன்றுவதனைத் தடுக்கும்

[1215] நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் தொடர்பான விசேட அறிக்கையாளரின் அறிக்கை பக். 19 – 20.

[1216] அவரசர கால ஒழுங்கு விதிகள் சட்டம் (பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 40), டிசம்பர் 6, 2006.

[1217] இலங்கை: விமர்சனங்கள் ஒடுக்கப்படுதல் மற்றும் வலுவான விதத்தில் நீடித்து வரும் தண்டனை விலக்குரிமை என்பன தொடர்பாக நிபுணர்கள் ஆழமாக கவலை கொண்டுள்ளனர் பெப்ரவரி 9, 2009, மனித உரிமைப் பாதுகாவலர்களின் நிலைமை தொடர்பான விசேட அறிக்கையாளர், கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமையை மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான விசேட ஆணையாளர், பலவந்தமான விதத்தில் அல்லது விருப்பத்துக்கு மாறான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான செயற்குழுவின் தலைவர், தன்னிச்சையான தடுத்துவைப்பு தொடர்பான செயற்குழுவின் தலைவர், ஆக உயர் மட்டத்தில் சாதித்துக் கொள்ளக் கூடிய உடல் மற்றும் உள ஆரோக்கியத் தராதரத்தை அனுபவிப்பதற்கான அனைவருக்குமான உரிமை குறித்த விசேட ஆணையாளர், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோரின் சுயாதீனம் குறித்த விசேட ஆணையாளர், உணவு உரிமை தொடர்பான விசேட ஆணையாளர், நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான, அதிரடியான அல்லது தன்னிச்சையான மரண தண்டனைகள் தொடர்பான விசேட ஆணையாளர், சித்திரவதை ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற செயல்கள், இழிவான விதத்தில் நடத்துதல் மற்றும் தண்டித்தல் என்பன தொடர்பான விசேட ஆணையாளர், போதிய வீடமைப்பு தொடர்பான விசேட ஆணையாளர், பாரபட்சம் காட்டப்படாதிருப்பதற்கான உரிமை தொடர்பான விசேட ஆணையாளர்.

-

பொருட்டு,பொது ஆட்சி முறையில் சீர்திருத்தங்கள் எடுத்து வரப்பட வேண்டும் என்ற விடயத்தை அவர்கள் வலியுறுத்தியிருந்தார்கள்.

1181. கீழே இனங்காணப்பட்டிருக்கும் பல இடையூறுகளை கவனத்தில் எடுப்பதற்கு அனைத்துமடங்கிய நிலைமாற்றக் கால நீதி நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கான தேவை, இந்த அறிக்கையின் மிக முக்கியமான பரிந்துரைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. அது உண்மையைக் கண்டறியும் பொறிமுறைகள், புலன் விசாரணைகள், வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் குற்றமிழைத்த நபர்களுக்குத் தண்டனை வழங்குதல், இழப்பீடுகள்,அத்துமீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதனை தடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

## பொறுப்புக்கூறுதல் தொடர்பான இடையூறுகள்

1182. பொறுப்புக் கூறுதல் விடயம் பல இடையூறுகளை எதிர்கொண்டிருப்பதுடன், அவை மீண்டும் மீண்டும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன: அரசியல் விருப்பின்மை நீதித் துறை மற்றும் அதேபோல மனித உரிமைகள் ஆணைக்குழு, ஏனைய அமைப்புக்கள் என்பவற்றுக்கான நியமனங்கள் தொடர்பான சுயாதீனமான மேற்பார்வையின்மை நீதித்துறை விவகாரங்களில் நிறைவேற்றுத் துறையின் தலையீடு முன்னேற்றமில்லாமல் வழக்குகள் நீண்ட காலம் தேங்கிக் கிடப்பதனால் ஏற்படும் அனாவசியமான தாமதம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சுயாதீனம் இல்லாதிருந்த விசாரணை ஆணைக்குழுக்களின் நியமனம் - பெரும்பாலான அத்தகைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. பொறுப்புக் கூறுதல் தொடர்பான தேசிய அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் என்பவற்றினால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகளை அமுல்படுத்தத் தவறியமை பாதுகாப்புப் படைகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைப்பவர்களை அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்குதல் அதேபோல சட்டத்தரணிகள் மற்றும் நீதித் துறை உத்தியோகத்தர்களை அச்சுறுத்துதல், பழிவாங்குதல் வினைத்திறன்மிக்க சாட்சிகளைப் பாதுகாக்கும் பொறிமுறைகளை இல்லாதொழித்தல். சர்வதேச குற்றங்களை, குற்றச்செயல்களாக்கும் சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்களில்லாமை மற்றும் கட்டளைப் பொறுப்பு அல்லது உயரதிகாரிகளின் பொறுப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பொறுப்புக் கூறும் முறைகளை நிறுவனமயப்படுத்துதல் என்பன மற்றொரு இடையூறாக இருந்து வருகின்றது.

## பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் ஏனையவர்களுக்கு எதிரான பழிவாங்குதல் / சாட்சிகளுக்குப் பாதுகாப்பின்மை

1183. உண்மையைக் கண்டறிதல் மற்றும் நீதித்துறை செயன்முறைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய நிலைமாற்றக் கால நீதிப் பொறிமுறைகள் முன்னெடுக்கப்படும் பொருட்டு, நம்பிக்கை மற்றும் பாதுகாப்பு என்பவற்றுடன் கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்தகையதொரு சூழலில் பாதிக்கப்பட்டவர்களும், ஏனைய சாட்சிகளும் அச்சமின்றி பங்கேற்க முடியும். அத்தகையதொரு சூழ்நிலை இலங்கையில் இதுவரையில் நிலவி வரவில்லை. எனவே, பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றில் ஏதேனுமொரு முன்னேற்றத்தை எடுத்து வருவதற்கான ஒரு முன்னிபந்தனையாக அது உருவாக்கப்படுதல் வேண்டும். அரசாங்கம் 2015 பெப்ரவரி மாதத்தில் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சி பாதுகாப்புச் சட்டமொன்றை நிறைவேற்றிய போதிலும், தேவையான பாதுகாப்பு மற்றும் ஆபத்தற்ற நிலை என்பவற்றை வழங்குவதற்கு எத்தகைய பொறிமுறைகளும் இதுவரையில் உருவாக்கப்படவில்லை.

1184. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கு அதன் விசாரணைகளின் போது,இராணுவம் மற்றும் / அல்லது பொலிஸ் தரப்பினால் துன்புறுத்தப்பட்டமை அல்லது ஒரு சில சந்தர்ப்பங்களில் உடல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்த பெருந்தொகையான மற்றும் ஒரே சீரான விதத்திலான அறிக்கைகள் சாட்சிகளிடமிருந்து கிடைத்துள்ளன. இத்தகைய உரிமை மீறல்கள் தொடர்பாக அறிவிப்பதற்கும், விசாரணைகளில் சாட்சிமளிப்பதற்கும் தாம் கொண்டிருக்கும் அச்ச உணர்வுகளையும் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். 2005 ஜனவரி மாதத்தில் அரசாங்க மாற்றம் ஏற்பட்ட பின்னரும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து கிடைத்து வந்தன.

1185. தமக்கு எழுத்து மூலமும்,தொலைபேசியூடாகவும் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன என்ற விடயத்தை சாட்சிகள், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனர். இராணுவ அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடிக்கடி தமது வீடுகளுக்கு வந்தமை, சோதனைச் சாவடிகளில் அச்சுறுத்தும் விதத்திலான நடத்தையை எதிர்கொண்டமை, வசிப்பிடத்தை மாற்றிக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமை மற்றும் இறுதியில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமை போன்ற விடயங்களை அவர்கள் தெரிவித்திருந்தனர். சாட்சிகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று இல்லாதிருத்தல்,முதன்மை நபர்களின் சர்வதேச சுயாதீனக் குழுவின் மிக முக்கியமான கரிசனைகளில் ஒன்றாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது. 2008 ஏப்ரல் மாதத்தில் அதன் பணியை நிறுத்திக் கொள்வது தொடர்பான தீர்மானத்துக்கான காரணங்களில் ஒன்றாகவும் அது இருந்து வந்தது.[1218] மனித உரிமைகள் கமிட்டியின் முறைப்பாடுகள் நடைமுறை, முறைப்பாடு செய்தவர்கள்நீதிமன்றங்களுக்கூடாக நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்த பொழுது மீண்டும் மீண்டும் பழிவாங்குதல்களை எதிர்கொண்ட தனிப்பட்ட சம்பவங்களின் ஒரு தொடரினை ஆவணப்படுத்தியிருந்தது.

1186. குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு உதவி வழங்கி, பாதுகாக்கும் சட்டத்தை பாராளுமன்றம் 2015 பெப்ரவரி மாதம் நிறைவேற்றியது. இச்சட்டத்தின் ஒரு வரைவு 8 வருடங்களுக்கு முன்னர் முதலில் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்தச் சட்டம் கோட்பாட்டு ரீதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் சாதகமான ஒரு காரணியாக இருந்து வரும் அதேவேளையில், பூர்வாங்க வரைவுகள் தொடர்பாக இலங்கையின் சிவில் சமூகம் மற்றும் சர்வதேச செயற்பாட்டாளர்கள் ஆகியோர் முன்வைத்திருக்கும் கரிசனைகளில் ஒரு சிலவற்றை கவனத்தில் எடுத்துள்ளது. அது இன்னமும் அமுல் செய்யப்படவில்லை. அச்சட்டம் வினைத்திறன்மிக்க ஒரு பாதுகாப்புப் பொறிமுறையாக இருந்து வரும் பொருட்டு அதில் மேலும் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.

1187. விருத்தி செய்யப்பட வேண்டிய மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று, குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட நபரொருவருக்கு அல்லது சாட்சிக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமா என்ற விடயத்தை நிர்ணயிக்கும் பொழுது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய அளவுகோல் தொடர்பாக தெளிவான ஒரு வரைவிக்கணத்தை விருத்தி செய்து கொள்வதாகும். இது எதிர்கொண்டு வரும் இரண்டாவது இடையூறு,இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பாகமாக இருந்து வரும் இரு

[1218] IIGEP's Final Public Statement, 15 April 2008.

பொறிமுறைகளின் சுயாதீன செயற்பாட்டுக்கான உத்தரவாதங்கள் இல்லாதிருந்து வருவதாகும். இந்தக் குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோரின் பாதுகாப்புக்கென ஒரு தேசிய அதிகார சபை உருவாக்கப்பட வேண்டுமென இச்சட்டம் அவசியப்படுத்துகின்றது. எவ்வாறிருப்பினும், இந்தத் தேசிய அதிகார சபைக்கான ஒரு சில முக்கியமான நியமனங்கள் ஜனாதிபதியின் முழுமையான தற்றுணிபின் பேரிலேயே மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இது நிபுணத்துவத்தின் அடிப்படையில் சுயாதீனமான நியமனங்கள் மேற்கொள்ளப்படும நிலை உதாசீனம் செய்யப்படக் கூடிய ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. மேலும், இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கட்டுப்படுத்தாத இயல்பைக் கொண்டுள்ளன. எனவே, பாதுகாப்புத் தொடர்பான பரிந்துரையொன்றைப் பெற்றுக்கொள்ளும் ஒரு நபர் அல்லது முகவரகம் அதனை அமுல் செய்ய வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை. அதனை கவனத்தில் மட்டுமே எடுக்க வேண்டியுள்ளது.

1188. குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு இச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் இரண்டாவது அமைப்பாகும். அதிகாரசபையினால் வழங்கப்படும் வழிகாட்டுதல்களின் பிரகாரம் குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோருக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்து, அமுல்செய்யும் ஆணைப்பத்திரத்தை அது கொண்டுள்ளது. பொலிஸ்மா அதிபரினால் உருவாக்கப்படவிருக்கும் இப்பிரிவு பாதுகாப்பினை வழங்கவேண்டியிருப்பதுடன், ஏதேனும் அச்சுறுத்தல்கள் அல்லது பழிவாங்கல்கள் என்பன தொடர்பான விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறிருப்பினும், இச்சட்டம் இப்பிரிவினை பொலிஸ் படையின் ஏனைய பிரிவுகளிலிருந்து சுயாதீனமாக இயங்கும் ஓர் தன்னாட்சி அமைப்பாக உருவாக்கவில்லை. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக புலன்விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படும் நபர்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இருந்து வரக் கூடிய நிலைமை காணப்படுவதனால், இப்பிரிவு தன்னாட்சி அதிகாரத்தைக் கொண்டிராத நிலை,பாதுகாப்புப் பொறிமுறையின் வினைத்திறன் குறித்து மிகப் பாரதூரமான சந்தேகங்கள் ஏற்படக் கூடிய ஆபத்தை தோற்றுவிக்கிறது. குறிப்பாக தேசிய அதிகாரச் சபையினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளை அமுல் செய்ய வேண்டிய கடப்பாடு இப்பிரிவுக்கு இருந்து வரவில்லை என்ற விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

1189. பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் நிலவி வரும் சம்பவங்களின் போது, ஒரு நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு கட்புல செவிப்புல சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இச்சட்டம் இடமளிக்கின்றது. ஆனால், ஒரு அரசாங்க அதிகாரியின் முன்னிலையில், வெளிநாட்டிலன்றி இலங்கைக்குள்ளேயேயிருக்கும் ‘‘ஒரு தொலைதூர இடத்திலிருந்தே” அத்தகையவர் சாட்சியமளிக்க வேண்டியுள்ளது. மேலும், அத்தகைய சாட்சியம் ‘‘பொருத்தமற்றது’’ என சட்டமா அதிபர் கருதும் பொழுது, நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு அந்த அபிப்பிராயத்துக்கு இணங்கிய விதத்தில் செயற்படுதல் வேண்டும். உதலாகம ஆணைக்குழுவுக்கு முக்கியமான பல சாட்சிகள் வெளிநாட்டிலிருந்து வீடியோ இணைப்புக்கூடாக சாட்சியமளித்தார்கள் என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனத்தில் கொள்கின்றது. ஆனால், அத்தகைய சாட்சிகளின் சான்றுகள் 2008 மே மாதம் வெளிப்படையாகவே நீக்கப்பட்டிருந்தன.

1190. தேவைப்படும் திருத்தங்களுக்கு மேலதிகமாக, இச்சட்டத்தின் அமுலாக்கலுக்கு நிதி வளங்கள் மற்றும் மனித வளங்கள் என்பவற்றுடன் கூடிய

விதத்தில் விரிவான அளவில் வளங்களும் தேவைப்படுகின்றன. அத்துடன் அபாய நிலையில் இருந்து வருபவர்களுக்கு வினைத்திறன்மிக்க விதத்தில் பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான செயற்பாட்டு நடைமுறைகளும் தேவைப்படுகின்றன.

1191. சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் முழுமையாக அமுல் செய்யப்பட்டாலும் கூட, சாட்சியமளிப்பதற்கு ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு ஏனைய வழிமுறைகளும் தேவைப்படுகின்றன. தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல் மற்றும் பயமுறுத்தல் என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் திடசங்கற்பத்துடன் கூடிய படிமுறைகளை மேற்கொள்ளல் வேண்டும். இத்தகைய நிலை பெருந்தொகையான பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஏனைய சாட்சிகள் ஆகியோர் சாட்சியமளிப்பதற்கு முன்வருவதனைத் தடுத்திருப்பது மட்டுமன்றி, துஷ்பிரயோகச் செயல்களை நிகழ்த்தியிருக்கும் நபர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்தி, அவர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கான தமது தொழில் சார் ஆணைப்பத்திரங்களை நீதித்துறை அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோர் நிறைவேற்றி வைப்பதையும் தடுத்து வருகின்றது.

**சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக் கூறுதல் என்பன தொடர்பானமுதன்மையான் நிறுவனங்கள் மீது நிறைவேற்றுத் தரப்பின் தலையீடு / கட்டுப்பாடு**

1192. 2001 அக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தையடுத்து, பல் கட்சி உறுப்பினர்களையும் மற்றும் சுயாதீன உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியலைமைப்புச் சபையொன்று உருவாக்கப்பட்டது. அச்சபை, ஏனையவற்றுக்கு மத்தியில், தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு,இலஞ்சம் மற்றும் ஊழல் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு என்பவற்றையும் உள்ளடக்கிய ஒரு சில ஆணைக்குழுக்களுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கான அல்லது நியமனங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருந்தது. மேலும், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், பிரதம நீதியரசர்,ஏனைய மேன்முறையீட்டு நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் அரசாங்க சேவையில் மூத்த அதிகாரிகளின் நியமனங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தையும் அது கொண்டிருந்தது.[1219]சட்டத்தின் ஆட்சி மற்றும் பொறுப்புக் கூறுதல் ஆகியதுறைகளில் மிக முக்கியமான் ஒரு பாத்திரத்தை வகித்து வரும் நிறுவனங்களுக்கான நியமனங்களை கண்காணிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின சுயாதீனத்தையும்,அதிகாரிகளின் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாக அரசியலமைப்பு சபை உருவாக்கப்பட்டது.

1193. எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பு சபை 2002 ஆம் ஆண்டுக்கும் 2005 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது செயற்பட்டு வந்திருக்கும் அதேவேளையில், சபைக்கான புதிய உறுப்பினர்களை நியமனம் செய்வதில் ஏற்பட்ட அரசியல் இழுபறி நிலை காரணமாக அது அதன் முதலாவது மூன்றாண்டு காலப் பிரிவின் பின்னர் செயற்பாட்டை நிறுத்தியது. அன்று தொடக்கம் ஆணைக்குழுக்களுக்கும்,சிரேஷ்ட அரசாங்க பதவிகளுக்குமான நியமனங்கள் (2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து வந்ததைப் போல) வெளி மேற்பார்வையின்றி ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டு வந்ததுள்ளன. இது சட்டத்தின் ஆட்சி

[1219] Op cit p. 23

தொடர்பான நிறுவனங்கள் மீதான நிறைவேற்று ஜனாதிபதியின் கட்டுப்பாடு இடம்பெறுவதற்கும்,அவை அரசியல் மயமாக்கப்படுவதற்கும் பங்களிப்புச் செய்தது. இந்நடைமுறை அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் மேலும் வேரூன்றியது. இந்த 18 ஆவது திருத்தம் 17 ஆவது திருத்தத்தை செல்லுபடியற்றதாக்கியதுடன், அரசியலமைப்புச் சபையையும் ஒழித்தது.

1194. 2010 ஆம் ஆண்டில் சட்ட மா அதிபர் திணைக்களம் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் எடுத்து வரப்பட்டதனையடுத்து சட்ட மா அதிபரின் சுயாதீனம் மேலும் பாதிப்புக்களை எதிர்கொண்டது. சட்டமா அதிபர் திணைக்களம் 2015 ஜனவர் 18 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் மீண்டும் நீதி அமைச்சுக்கு மாற்றப்பட்ட பொழுது இந்தத் தவறு நிவர்த்திக்கப்பட்டது.

1195. 2015 ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தம் அரசியலமைப்புச்சபையொன்றை மீள ஸ்தாபித்தது. இச்சபைபொருத்தமான விதத்தில் அமுல் செய்யப்படுமிடத்து, முதன்மையான ஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் சுயாதீனத்தை மீள ஸ்தாபிக்க முடியும். இதனை எழுதும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்புச் சபைக்கான ஏழு உறுப்பினர்களின் நியமனங்கள் (சபாநாயகர், பிரதமமந்திரி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள்) உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், சபைக்கான மூன்று சிவில் சமூக பிரதிநிதிகளின் நியமனங்கள், இன்னமும் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லை.

**மனித உரிமைகள் ஆணைக்குழு**

1196. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டில் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் (1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டம்) ஸ்தாபிக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் ''மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படக் கூடிய நிலைமைகள்'' என்பன குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான அதிகாரங்களைக் கொண்டிருந்த நிலையில் பொறுப்புக் கூறுதல் விடயத்தில் அது ஒரு முதன்மையான பாத்திரத்தை வகிக்க வேண்டியிருந்தது. புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

1197. -சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் எடுத்தல், சாட்சியமளிப்பதற்கு அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது ஏனைய பொருட்களை சமர்ப்பிப்பதற்கு சாட்சிகளை அழைத்தல் மற்றும் விசாரணை செய்தல் (உறுப்புரை 18);

1198. – உரிமை மீறலை நிகழ்த்தியவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு எதிராக வழக்குத் தொடுக்குமாறு அல்லது ஏனைய நடைமுறைகளை ஆரம்பித்து வைக்குமாறு பரிந்துரை செய்தல் (15.1.a) ;

1199. சம்பந்தப்பட்ட விடயத்தை பொருத்தமான ஒரு நீதிமன்றத்திடம் அனுப்பி வைத்தல்

1200. –''அத்தகைய மீறல்களைத் தடுத்தல் அல்லது நிவர்த்தி செய்தல்'' என்பதனை கருத்தில் கொண்டு பொருத்தமான அதிகார சபைக்கு அல்லது நபர்களுக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

1201. 2006 ஆம் ஆண்டு வரையில் இந்த ஆணைக்குழு அதன் ஆணைப்பத்திரத்திற்கு இணங்கிய விதத்தில் பல்வேறு நடவடிக்கைகளையும் பொறுப்பேற்றிருந்தது. உதாரணமாக, சட்ட விரோதமான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல்கள் போன்ற சம்பவங்களின் போது அது தலையிட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ 2006 ஆம் ஆண்டில் பாதுகாப்புப் படைகளுக்கு ஒரு பணிப்புரையை வழங்கியிருந்த போதிலும், இந்தப் பணிப்புரைகள் அமுல் செய்யப்பட்டுள்ளன என்பதனை எடுத்துக் காட்டுவதற்கு சிறு அளவிலான தகவல்கள் மட்டுமே இருந்து வருகின்றன.

1202. 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட புலன் விசாரணைகளையும் ஆரம்பித்திருந்தது. உதாரணமாக, 2003 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பான விசேட புலன் விசாரணையைக் குறிப்பிட முடியும் (பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அத்தியாயத்தைப் பார்க்கவும்). மேலும், மோதலுடன் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழு 2006 மார்ச் மாதத்தில் ஒரு விசேட அறிக்கையாளரையும் நியமனம் செய்திருந்தது. அவர் 2006 ஆம் ஆண்டில் திருகோணமலையில் ஐவர் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் அக்கறைப்பற்று பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் நான்கு கொலைச் சம்பவங்களில் குற்றச் செயலை புரிந்திருக்கக் கூடிய நபர்களை இனங்கண்டிருந்தார் (கீழே பார்க்கவும்). அவர் இதுதொடர்பான மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரையும் செய்திருந்தார். அந்த அறிக்கை ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால், 2004 ஜனவரி மாதத்தில் அது ஊடகங்களுக்கு கசியவிடப்படட்து. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் அறிவுக்கு எட்டிய வகையில், ஆவணப்படுத்தப்பட்ட வழக்குகளின் குற்றவியல் விசாரணைகளை முன்னெடுப்பதற்கென தாக்கமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1203. இந்த ஆணைக்குழுவின் நாணயம் மற்றும் சுயாதீனம் என்பன 2006 ஆம் ஆண்டில் மிகவும் நாசகரமான விதத்தில் சீர்குலைந்தந்தன. அரசியலமைப்புச் சபையின் நடைமுறைக்கு வெளியில் ஜனாதிபதி உறுப்பினர்களை நியமனம் செய்த சந்தர்ப்பத்தில் இது இடம்பெற்றது. அதனையடுத்து வந்த ஆணையாளர்களும் இதே அடிப்படையில் மீண்டும் நியமனம் செய்யப்பட்டார்கள். 2007 ஆம் ஆண்டில் மனித உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான தேசிய நிறுவனங்களின் சர்வதேச ஒருங்கிணைப்புக் கமிட்டியின் ஒரு உப கமிட்டி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை ‘‘டீ - தரத்துக்கு’’ தரமிறக்கியது. இந்த சர்வதேச ஒருங்கிணைப்புக் கமிட்டி, தேசிய நிறுவனங்களுக்கான சர்வதேச அத்தாட்சிப்படுத்தலை மேற்பார்வை செய்து வருகின்றது. ஆணைக்குழுவின் சுயாதீனம் தொடர்பான கரிசனைகள் காரணமாக ஓரளவுக்கு இந்த தரமிறக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக்குழுவை தரமிறக்குவது தொடர்பாக முன்வைக்கப்பட்ட காரணங்களில் பின்வரும் காரணமும் குறிப்பிடப்பட்டிருந்தது. “குறிப்பாக, ஆட்கள் காணாமல் போயிருக்கும் 2000 சம்பவங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், ஆணைக்குழுவின் உண்மையான நடைமுறை சமச்சீரானதாக,

விருப்புவெறுப்பற்றதாக மற்றும் அரசியல் சார்பற்றவையாக இருந்து வருகின்றதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.[1220]

1204. பொதுமக்கள் தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்து வந்ததுடன், அதன் ஊழியர்கள் குறிப்பாக மாவட்ட மட்ட ஊழியர்கள் தொடர்ந்தும் தமது கடமைகளைச் செய்து வந்தார்கள். எவ்வாறிருப்பினும், காணாமல் போனவர்களின் உறவினர்களையும் உள்ளடக்கிய பல்வேறு தரப்புக்களிலிருந்தும் கிடைத்த தகவல்கள், மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்படும் நிறுவனங்களுக்கு தம்மை அனுப்பி வைப்பதைத் தவிர, மிகக் குறைந்த மட்டத்திலேயே தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.அந்த நிறுவனங்களுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டாலும் கூட, அவை மிக அரிதாகவே அவற்றுக்கு எதிர்வினையாற்றியுள்ளன. காணாமல் போதல் தொடர்பான ஒரு சில சம்பவங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு மறுத்ததாக கூறப்படுகின்றது (பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான அத்தியாயத்தைப் பார்க்கவும்).

1205. 2009 ஆம் ஆண்டுக்கும் 2013 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பாக, அரசாங்கம் பொதுநலவாய செயலகத்துடன் இணைந்து ஒரு தேசிய விசாரணையை மேற்கொள்ளும் என அது 2013 நவம்பர் மாதத்தில் அறிவித்தது. ஆனால், அதன் பின்னர் அந்த விசாரணை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.[1221]

1206. ஆணைக்குழுவின் பணி எதிர்கொண்டு வரும் மற்றொரு தடங்கல்,ஆணைக்குழு நீதிமன்றங்களுக்கு வழக்குகளை அனுப்பி வைக்கக் கூடிய நடைமுறைகளை இயலச் செய்யும் சட்டவாக்கங்கள் இல்லாதிருத்தலாகும். அத்தகைய சட்டவாக்கம் குறித்து ஆணைக்குழு உறுப்பினர்கள் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்து வந்திருந்த போதிலும், அச்சட்டம் ஒருபோதும் வரையப்படவில்லை. மேலும், தனது கட்டளைகளை வலுவுக்கிடுவதற்கான அதிகாரத்தையும் ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை.

1207. மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் முக்கியமான வகிபாத்திரத்தை நிறைவேற்றி வைப்பதனை இயலச் செய்யும் பொருட்டு, அது புதுப்பிக்கப்பட்டு, பலப்படுத்தப்படுவது அத்தியாவசியமாகும். மனித உரிமைகளை பாதுகாக்கும் - குறிப்பாக, மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும், - அதன் ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றி வைக்கும் ஒரு சுயாதீனமான அமைப்பாக அதன் முக்கியமான பாத்திரத்தை வகித்து வருவதற்கு இது தேவைப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களால்

---

[1220] மனித உரிமைகள் மேம்படுத்தி, பாதுகாப்பதற்கான தேசிய நிறுவனங்களின் சர்வதேச ஒழுங்கிணைப்புக் கமிட்டி, அத்தாட்சிப்படுத்தல் தொடர்பான உப கமிட்டியின் அறிக்கை, பரிந்துரைகள், ஜெனிவா, அக்டோபர் 22 - 26, 2007 ஆணைக்குழுவின் செயலாளர் 2006 ஜூன் 29 தேதியிட்ட ஒரு குறிப்பில் "அரசாங்கத்திடமிருந்து விசேட பணிப்புரைகள் கிடைத்தாலேயொழிய" இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை தற்போதைய நிலையில் நிறுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக கூறியிருந்தார்.

[1221] A/HRC/25/23, Promoting Reconciliation and Accountability in Sri Lanka, 24 February 2014.

நியமனம் செய்யப்பட்ட தற்போதைய ஆணையாளர்களின் ஆணைப்பத்திர அதிகாரங்கள் 2015 இல் முடிவுக்கு வருகின்றன. முழுமையாக செயற்படும் அரசியலமைப்புச் சபையொன்றுக்கூடாக ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் புதிதாக நியமனம் செய்யப்படுதல் வேண்டும். ஆணையாளர்களின் சுயாதீனத்தை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு அந்த நியமனமங்கள் சர்வதேசத் தர நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் அவசியமாகும்.

**விசாரணை ஆணைக்குழுக்கள்**

1208. ஒன்றன் பின் ஒன்றாக வந்த இலங்கை அரசாங்கங்கள் பெருமளவுக்கு சர்வதேச மற்றும் தேசிய அழுத்தங்களுக்கு எதிர்வினையாற்றும் விதத்தில் உயர் மட்ட பிரபல்யத்தைப் பெற்றிருந்த பிரச்சினைகள் மற்றும் சம்பவங்கள் என்பன தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கென தொடரான பல விசாரணை ஆணைக்குழுக்களை அமைத்திருந்தன. 1948 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலப் பிரவின் போது பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் விசாரித்தறிவதற்கென 32 விசாரணை ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் நிதி, வர்த்தக அல்லது நிருவாகப் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஒரு போக்கைக் கொண்டிருந்த போதிலும், அதன் பின்னர் உருவாக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் பெருமளவுக்கு மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சம்பவங்களை விசாரணை செய்வதற்கென நியமனம் செய்யப்பட்டிருந்தன. உதாரணமாக, பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் தொடர்பாக கண்டறிவதற்கென 1990 களில் தொடரான பல ஆணைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்டன. பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான அத்தியாயம்,1991 ஆம் ஆண்டு தொடக்கம், பெருந்தொகையான ஆணைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்டிருந்த நிலையிலும் கூட, காணாமல் போன நபர்களில் பெரும்பாலானவர்களுக்கு என்ன நடந்தது என்ற விடயம் தெளிவுபடுத்தப்படவில்லை என்பதனையும், அத்தகைய சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள் தொடர்ந்து தண்டனை விலக்குரிமையை அனுபவித்து வருகின்றார்கள் என்பதனையும் எடுத்துக் காட்டியிருந்தது.

1209. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனத்திலெடுக்கும் காலப் பிரிவின் போது புதிய பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான கொலைகள் மற்றும்/அல்லது காணாமல் போதல் என்பவற்றை கண்டறிவதற்கென அமைக்கப்பட்டிருந்தன:

- ஆகஸ்ட் 2006 : மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் படுகொலை;
- ஆகஸ்ட் 2006 : காணாமல் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு (மகானாம திலகரத்ன ஆணைக்குழு என அழைக்கப்பட்டது); கடத்தல்கள், காணாமல் போதல்கள், அடையாளம் காணாத சடலங்கள் மற்றும் விளக்கப்படாத கொலைகள் என்பவற்றை விசாரணை செய்வதற்கு;
- நவம்பர் 2006 : 2005 ஆகஸ்ட் 1 ஆந் திகதி தொடக்கம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து, விசாரிப்பதற்கான விசாரணை ஆணைக்குழு. (அது அதன் தலைவரின் பெயரில் உதலாகம ஆணைக்கு என அழைக்கப்பட்டது): 16 கொலைச் சம்பவங்கள் மற்றும் பலவந்தமான விதத்தில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள்தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஆணைப்பத்திரத்தைக்

-

கொண்டிந்தது.[1222] அதன் பணியை மேற்பார்வை செய்வதற்கென முதன்மைநபர்களின் சர்வதேச சுயாதீனக் குழு (IIGEP) நியமனம் செய்யப்பட்டது.

2007 மே - “காணாமல் போனோா் தொடர்பாக கண்டறிவதற்கென - மகானாம திலகரத்ன அவர்களின் தலைமையிலான இரண்டாவது ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது.

1210. இந்த ஆணைக்குழுக்களின் முடிவுகள் மிக அரிதாகவே பிரசுரிக்கப்பட்டிருந்தன. மேலும், அவை தொடர்பாக, குற்றவியல் புலனாய்வுகளுக்கூடாக தாக்கமான விதத்தில் தொடர் நடவடிக்கைகளும் மிகக் குறைந்த மட்டத்திலேயே எடுக்கப்பட்டிருந்தன. இலங்கை தொடர்பான புலன்விசாரணைக் குழு, அதன் புலன் விசாரணைகளின் போது பல விசாரணை

---

1222 2005 ஆண்டு தொடக்கம் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும், விசாரணை செய்வதற்குமென 2006 ஆம் ஆண்டின் வர்த்தமானி 1471/6 மூலம் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பின்வரும் சம்பவங்கள் தொடர்பான விசாரணை செய்வதற்கென நியமனஞ் செய்யப்பட்டது:

1. இலங்கை வெளிநாட்டமைச்சர் கௌரவ ஜனாதிபதி சட்டத்தரணி லக்ஷமன் கதிர்காமர் அவர்களின் படுகொலை.
2. 2006 ஆகஸ்ட் தொடக்கத்தில் இடம்பெற்ற *ActionContre La Faim* என்ற சர்வதேச அரசு சாரா அமைப்பின் 17 நிவாரணப் பணியாளர்களின் கொலை.
3. 2006 ஆகஸ்ட் தொடக்கத்தில் மூதூரில் முஸ்லிம் கிராமவாசிகள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகளில் எடுத்துச் செல்லப்பட்ட மூதூரைச் சேர்ந்த 14 பேர் வெலிகந்தையில் கொலை செய்யப்பட்ட சம்பவம்.
4. 2005 டிசம்பர் 25 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் அவர்களின் படுகொலை.
5. 2006 ஜனவர் 2 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மிய காலப் பிரிவில் திருகோணமலையில் ஐந்து இளைஞர்கள் கொல்லப்பட்டமை.
6. இலங்கை சமாதானச் செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு. கேதீஸ் லோகநாதன் 2006 ஆகஸ்ட் 12 ஆந் திகதி படுகொலை செய்யப்பட்டமை.
7. 2006 ஆகஸ்ட்டில் (செஞ்சோலை) நந்தலாமுட்டங்குளம் என்ற இடத்தில் 51 நபர்கள் கொல்லப்பட்டமை.
8. 2006 ஆகஸ்ட் 26 ஆந் திகதி அல்லைப்பிட்டி பிலிப்நேரி தேவாலயத்தின் அருட்தந்தை நிஹால் ஜிம்பிரவுண் காணாமல் போனமை.
9. 2006 ஜுன் 17 ஆந் திகதி பேசாலை கடற்கரையிலும், பேசாலை தேவாலயத்திலும் 6 மீனவர்களும், மற்றொரு நபரும் கொல்லப்பட்டமை.
10. 2006 மே 13 ஆந் திகதி ஊர்காவற்றுரை பொலிஸ் பிரிவில் 13 நபர்கள் கொல்லப்பட்டமை.
11. 2006 செப்டம்பர் 17 ஆந் திகதி பொத்துவில் பொலிஸ் பிரிவில் ரதல்ல என்ற இடத்தில் 10 முஸ்லிம் கிராமவாசிகள் கொல்லப்பட்டமை.
12. 2006 ஜுன் 15 ஆந் திகதி கெப்பித்திகொல்லாவையில் 68 நபர்கள் கொல்லப்பட்டமை.
13. 2006 ஏப்ரல் 29 ஆந் திகதி அவிசாவலையில் ஐந்து தலையில்லாத சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான சம்பவம்.
14. 2005 மே 29 ஆந் திகதி வெலிகந்தையில் 13 நபர்கள் கொல்லப்பட்டமை.
15. 2006 அக்டோபா் 16 ஆந் திகதி சீகிரிய திகம்பதன என்ற இடத்தில் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் 98 பேர் கொல்லப்பட்டமை.

A ஒரு பின்னைய திகதியில் 16 ஆவது சம்பவம் இதில் சேர்க்கப்பட்டது. 2006 நவம்பர் 10 ஆந் திகதி நடராஜா ரவிராஜ் அவர்களின் படுகொலை.

ஆணைக்குழுக்களின் பிரசுரிக்கப்படாத அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டதுடன், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவை பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டன. அது தொடர்பான விபரங்கள் அடுத்து வரும் அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன.

1211. மேலே எடுத்துக் காட்டதைப் போல, 2006 நவம்பர் மாதத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ உதலாகம ஆணைக்குழுவை நியமனம் செய்தார். மேலும், அந்த ஆணைக்குழுவின் பணிகளை அவதானிப்பதற்கென முதன்மை நபர்களின் சர்வதேச குழுவும் (IIGEP) நியமனம் செய்யப்பட்டது. இந்த ஆணைக்குழுவிடம் 16 சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் 7 சம்பவங்கள் தொடர்பாக மாத்திரமே அது புலன் விசாரணைகளைப் பூர்த்தி செய்திருந்தது. ACF என்ற தொண்டு நிறுவனத்தின் சம்பவம் மற்றும் திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் சம்பவம் (இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் அறிக்கையில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது) என்பவற்றையும் அந்த 7 சம்பவங்கள் உள்ளடக்கியிருந்தன. இந்த 7 சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளும் அதன் பெருந்தொகையான வளங்களை உறிஞ்சிக்கொண்டிருந்தது என அந்த ஆணைக்குழ குறிப்பிட்டிருந்தது.

1212. முதன்மைநபர்களின் சர்வதேச குழு (IIGEP) விசாரணைகளின் போது சமுகமளித்திருந்ததுடன், விசாரணை நடைமுறைகளில் பக்கச்சார்பற்ற தன்மை குறைவாகக் காணப்படும் விடயம் குறித்து மீண்டும் மீண்டும் அது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தது. இந்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்கும் சம்பவங்கள் தொடர்பான புலன்விசாரணைகளை மேற்கொள்வது சாத்தியமற்றது எனக் கருதியதன் காரணமாக, அந்தக் குழு 2008 ஏப்ரல் மாதத்தில் தனது பணிகளை நிறுத்திக் கொள்வதற்கு தீர்மானித்தது. அதற்கு அது முன்வைத்த காரணங்கள் வருமாறு: சட்டமா அதிபரின் பாத்திரம் குறித்து, நலன்களில் முரண்கள் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும், சாட்சிகளுக்கும் வினைத்திறன்மிக்க பாதுகாப்பு போதியளவில் இல்லாதிருந்தமை விசாரணை நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மை குறைவாக இருந்து வந்தமை மற்றும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படாமை அரச அமைப்புக்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்காமை மற்றும் ஆணைக்குழுவுக்கு நிதிசார் சுதந்திரம் குறைவாக இருந்து வந்தமை.

1213. விசாரணை ஆணைக்குழுவின் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான வழக்குகளை நடத்துவதில் சட்டமா அதிபர் முதன்மையான பாத்திரமொன்றை வகித்து வந்தார். பொலிஸ் புலன் விசாரணைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கி, அரச அதிகாரிகளை பிரதிநிதித்துவம் செய்யும் அதேவேளையில், அவர் இப்பாத்திரத்தை வகித்தார். மேலும், சட்டமா அதிபரே இறுதியில் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் சம்பவங்களில், எந்தச் சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் மேலும் குற்றவியல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென்பதனை தீர்மானிக்கிறார். இந்த அக்கறைகளின் முரண் நிலை கரிசனைக்குரிய ஒரு பாரதூரமான விடயமாக நிபுணர் குழுவினரால் எழுப்பப்பட்டிருந்ததுடன், புலன் விசாரணைகளின் சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பற்ற இயல்புஎன்பன தொடர்பான சர்வதேச தர நியமங்களுக்கு அவை பொருந்தாதவையாக இருந்து வருகின்றன என்றும் கருதப்பட்டது.[1223]

[1223] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இலங்கை அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்ட ஆணைக் குழுக்கள் மற்றும் கமிட்டிகள் என்பன குறித்த ஒரு பட்டியல் (2006 – நவம்பர் 2013), டிசம்பர் 2013Authority without accountability: The Crisis of impunity in Sri Lanka, ICJ, November

1214. இந்த முதன்மை நபர்களின் குழுவின் அனுபவம், புலன் விசாரணைப் பொறிமுறைகளின் மீதான எவையேனும் சர்வதேச தரப்புக்கள் சம்பந்தப்படுவதாக இருந்தால், தெளிவாக வரையறுக்கப்பட்ட மற்றும் வலுவூட்டப்பட்ட ஒரு பாத்திரம் அத்தரப்புக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. மேலும், சுயாதீனம் மற்றும் வினைத்திறன் என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு விசாரணை நடைமுறைகளுக்குள் அவை ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அது எடுத்துக்காட்டுகின்றது.

1215. உதலாகம ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை 2009 மே மாதத்தில் ஜனாதிபதியிடம் கையளித்தது. எவ்வாறிருப்பினும், விசாரணை ஆணைக்குழுவை உருவாக்கிய ஜனாதிபதியின் கட்டளையில் அதன் அறிக்கை பிரசுரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வழக்கு நடைமுறைகளை ஆரம்பித்து வைப்பதற்கென சட்டமா அதிபருக்கு வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கை ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

1216. உதலாகம ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத அறிக்கையின் பிரதிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைத்திருந்ததுடன், அது அதிகாரபூர்வமான பிரதி என அது நம்புகின்றது. அந்த அறிக்கையின் பிரகாரம் 16 சம்பவங்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்துவதற்கும், இரண்டரை வருட காலப்பிரிவில் செயற்படுவதற்கும் அது ஆணைப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அந்த ஆணைக்குழு 16 சம்பவங்களில் 7 சம்பவங்கள் தொடர்பாக மாத்திரமே விசாரணைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் இருந்து வந்தது.[1224]‘எஞ்சியிருக்கும் 9 சம்பவங்கள் தொடர்பாக ஆணைக்குழுவினால் அதற்கு ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டிருந்த காலப் பிரிவின் போது விசாரணைகளை நடத்த முடியாதிருந்தது’ என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சிகள் கிடைக்காதிருந்த நிலை மற்றும் போதிய கால அவகாசம் கிடைக்காமை என்பன அதன் பணியைப் பூர்த்தி செய்ய முடியாமை தொடர்பாக அந்த ஆணைக்குழு முன்வைத்திருந்த காரணங்களில் ஒருசிலவாகும். இந்த ஆணைக்குழு முதன்மை நபர்களின் சர்வதேசக்குழுவினால் முன்வைக்கப்பட்டிருந்த ஒரு சில குற்றச்சாட்டுக்களுக்கு சவால் விடுத்திருந்தது. சட்டமா அதிபரின் வகிபங்கு தொடர்பாகவும், அக்குழுவின் குற்றச்சாட்டுக்களுக்கு அது சவால்விடுத்திருந்தது. ஆணைக்குழுவின் அறிக்கை முடிவில் பல பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. சாட்சிகளுக்குப் பாதுகாப்பளிக்கும் பொறிமுறைகளைப் பலப்படுத்துதல், எதிர்காலச் சம்பவங்களில் ‘‘கட்டளை வரிசைப் பொறுப்புக்களை’’ எடுத்து வரும் பொருட்டு ஒழுங்கு விதிகளைத் திருத்துதல் மற்றும் ‘‘அத்தகைய செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கென பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான நிரந்தரமான சுயாதீனமான ஆணைக்குழுவொன்றை’’ ஸ்தாபிப்பதற்கான யோசனை என்பவற்றையும் அவை உள்ளடக்குகின்றன.

2012discusses the impact the Amending Act 16 of 2008 has had on the role the Attorney General plays in COI.

[1224] புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட 7 சம்பவங்கள் பின்வரும் ஒழுங்கில் இருந்து வந்தன: 5, 2, 12, 15, 11, 7, 3. (அதே அறிக்கையில் உள்ள விபரங்களைப் பார்க்கவும்).

## கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்கு குழு (LLRC)

1217. ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களினால் 2011 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, ஒரு புலன் விசாரணை ஆணைக்குழுவாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், 2002 ஆம் ஆண்டின் போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைவதற்கு வழிகோலிய விடயங்கள் மற்றும் சந்தர்ப்ப சூழ்சிலைகள் என்பன தொடர்பாக பரிசீலனை செய்வதற்கான ஆணைப்பத்திரத்தை அது கொண்டிருந்தது. இந்த ஆணைக்குழு 2011 நவம்பர் 15 ஆந் திகதி அதன் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததுடன், அந்த அறிக்கை 2002 தொடக்கம் 2011 வரையான காலப் பிரிவை உள்ளடக்கியிருந்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் அதேபோல நல்லிணக்கம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு என்பவற்றுக்கான படிமுறைகளையும் உள்ளடக்கிய விதத்தில் மிக முக்கியமான பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

1218. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆணைப் பத்திரம் உள்ளடக்கிய காலப் பிரிவு முழுவதிலும் நீதிமன்ற விசாரணைக்குப் புறம்பான பெருந்தொகையான கொலைச் சம்பவங்கள், ஏனைய அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன இடம்பெற்றிருந்ததாகக் கூறப்பட்ட போதிலும், போரின் இறுதிக் கட்டங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அத்தகைய செயல்கள் தொடர்பாக அது வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே குறிப்புக்களை முன்வைத்திருந்தது. எவ்வாறிருப்பினும், அந்த ஆணைக்குழு ''உதலாகம ஆணைக்குழுவின் பரிந்துரைகள் - குறிப்பாக 2006 ஜனவரி மாதத்தில் திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் மரணம் மற்றும் 2006 ஆகஸ்ட் மாதத்தில் ACF தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த 17 நிவாரணப் பணியாளர்களின் மரணம் என்பன தொடர்பான சம்பவங்களில் சம்பந்தப்பட்ட குற்றமிழைத்த நபர்கள் தொடர்பாக மேலும் விசாரணைகளை மேற்கொண்டு, வழக்குத் தொடுப்பது தொடர்பாக முன்வைத்திருந்த பரிந்துரைகளை - அமுல் செய்ய வேண்டுமென'' வலுவாக பரிந்துரைசெய்திருந்தது (பந்தி 5.163). கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையில் ''சட்ட விரோதமான ஆயுதக் குழுக்களின்'' ஆயுதங்களைக் களைய வேண்டுமென்ற அதன் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்ற விடயம் குறித்து கவலை தெரிவித்திருந்ததுடன், ஆயுதக் குழுக்களுக்கெதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பொருத்தமான விதத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்'' என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தது (பந்தி 9.73). ''வினைத்திறன்மிக்க நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஏற்படும்தாமதத்தின் விளைவாக சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றில் வீழ்ச்சி ஏற்பட முடியும். அதன் விளைவாக சட்டத்தின் ஆட்சியில் சரிவு ஏற்படுவதுடன், நல்லிணக்கச் செயன்முறை குறித்த மக்களின் நம்பிக்கையும் இல்லாமல் போக முடியும்'' எனவும் அந்த ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்திருந்தது (பந்தி 8.190).

## பொதுமக்கள் உயிரிழப்புக்கள் தொடர்பான இராணுவ விசாரணை மன்றம்

1219. பொதுமக்கள் உயிரிழப்புக்கள் தொடர்பாக, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளை பரிசீலனை செய்வதற்கென இராணுவ விசாரணை மன்றமொன்றை நிறுவுவது தொடர்பான கட்டளையில் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய 2012 ஜனவரி 2 ஆந் திகதி கையொப்பமிட்டார். "01.01.2009 தொடக்கம் 19.09.2009 வரையில் இராணுவத்தினால் அல்லது அதன் உறுப்பினர்களினால் பொதுமக்கள் செறிந்துவாழும் பிரதேசங்கள் அல்லது மருத்துமனைகள் அல்லது யுத்த சூனிய வலயங்கள் என்பவற்றின் மீது அவர்களுக்கு கெடுதியும் தீங்கும் விளைவிக்கும் உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே எவையேனும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா" என்பதனையும் உள்ளடக்கிய விதத்தில் விடயங்களை விசாரணை செய்வதற்கென இது அமைக்கப்பட்டது. இராணுவ விசாரணை மன்றத்தின் ஆணைப்பத்திரத்தின் இரண்டாவது பாகம் சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் தொடர்பாக பரிசீலனை செய்து, அதில் காட்டப்படும் செயல்களை நிகழ்த்துபவர்கள் என்ற முறையில் இலங்கை இராணுவ உறுப்பினர்களை அடையாளம் காணமுடியுமா என்ற விடயத்தை மதிப்பிடுவதாகும். மேலும், அதில் காட்டப்பட்டிருக்கும் பெண் சடலங்களின் மீது வன்புணர்வு அல்லது பாலியல் வன்முறை மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் இருந்து வருகின்றனவா அல்லது மரணமடைந்திருக்கும் பெண்களின் சடலங்கள் இழிவுபடுத்தப்பட்டுள்ளதற்கான சான்றுகள் உள்ளனவா என்பதனையும் கண்டறிய வேண்டியிருந்தது. இராணுவ விசாரணை மன்றத்தின் முழுமையான முடிவுகள் ஒருபோதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அவை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்குக் கிடைக்கவுமில்லை.

1220. தொடக்கத்திலேயே இராணுவ விசாரணை மன்றத்தின் சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பற்ற நிலை என்பன கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தன. புலன் விசாரணைக்குட்படுத்தப்படும் மோதல்கள் இடம்பெற்று வந்த மாதங்களின் போது ஜெனரல் ஜயசூரிய வன்னிப் பாதுகாப்புத் தலைமையகத்தின் பிரதானியாக இருந்து வந்தார். எனவே, அவர் அந்த நிலையில் களத்தில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்து வந்துள்ளார்.'இராணுவத் தளபதியின் அபிப்பிராயம்' என்ற தலைப்பிலான புலன் விசாரணைகளின் முதலாவது பாகத்தின் முடிவுரைகள் குறித்த தனது அறிக்கையில்[1225]"விசாரணை மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளை கவனத்தில் எடுக்கும்பொழுது,கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும். அத்தகைய ஷெல் தாக்குதல்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் பொதுமக்கள் தப்பிச் செல்வதனைத் தடுப்பதற்கு, அவர்களை தைரியமிழக்கச் செய்யும் ஒரு காரணியாக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது துப்பாக்கிகளை இயக்குவதில்பயிற்றப்படாத நபர்கள் மேற்கொண்டகுறைந்த எல்ரீரீஈ ஆட்டிலரி துப்பாக்கிகளின் தாக்குதல்களினால் தற்செயலாக நிகழ்ந்திருக்க வேண்டும்."

1221. "ஆட்டிலெறிப் படைப் பிரிவுகள் சூட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் திகதி/நேரம், இலக்குகளின் அமைவிடம் முதலியன தொடர்பாக சரியான தகவல்களை வழங்கும் பெருமளவுக்குத் துல்லியமான பதிவேடுகளைப் பராமரித்து வருகின்றன. இராணுவ விசாரணை மன்றத்தில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள்

[1225] இலங்கை இராணுவத்தை குற்றத்திலிருந்து விடுவிக்கும் முடிவுக் குறிப்புக்களின் ஒரு சாராம்சம், அரசாங்கம் 2013 இல் மனித உரிமைகள் கமிட்டியில் சமர்ப்பித்த அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

போர் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆளில்லாத விமானங்கள்,வான்வழிக் கண்காணிப்பு, நீண்ட தூர வேவு பார்த்தல், ரோந்துகள் மற்றும் மனிதப் புலனாய்வு முதலிய செயற்பாடுகளுக்கூடாக அங்கிருக்கும் பொதுமக்களுக்கு எத்தகைய பாதிப்புக்களும் ஏற்படாதிருப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, அனைத்து இலக்குகளும் முழுமையாக சரிபார்த்துக் கொள்ளப்படுகின்றன" எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

1222. "ஆட்டிலெறி மற்றும் காலாட்படைத் தளபதிகள் வழங்கிய சாட்சியத்தின் பிரகாரம்,யுத்த சூனிய வலயங்களின் அயல் பிரதேசங்களிலிருந்து எல்ரீரீஈ பயங்கரவாதிகள் கடுமையான ஆட்டிலெறித் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த போதிலும், அச்சந்தர்ப்பத்தில் சுயமாக விதிக்கப்பட்டிருந்த இத்தகைய கட்டுப்பாடு காரணமாக தாக்குதல்களை நடத்தவில்லை. இதன் விளைவாக இராணுவத்துக்கு பாரியளவிலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன." மேலும்,அந்த அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "... மனித நேய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அனைத்துக் கட்டங்களிலும் இலங்கை இராணுவம் உயரளவில் தொழில்சார் விதத்தில் செயற்பட்டு வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் / சரணடைந்த எல்ரீரீஈஉறுப்பினர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் பொதுமக்கள் மற்றும் ஏனைய நபர்கள் ஆகியோரின் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு மிகவும் விரிவான விதத்தில் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் சர்வதேச ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மிகச் சிறந்த விதத்தில் நடத்தப்பட்டுள்ளனர்."

1223. சர்வதேச சட்டத்தின் மீறல்கள் தொடர்பாக ஒரு நம்பகமான புலன் விசாரணைக்குத் தேவையாக இருக்கும் சுயாதீனம் மற்றும் பக்கச்சார்பற்ற நிலை என்பன தொடர்பான குறைந்தபட்ச தரநியமங்களை இந்த இராணுவ விசாரணை மன்றம் பூர்த்தி செய்திருக்கவில்லை எனத் தோன்றுகின்றது. இந்த நிலையில், இந்த விசாரணை மன்றத்தின் சுயாதீனம் மற்றும் பக்கச்சார்ற்ற நிலை என்பன குறித்து, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கேள்வி எழுப்புகின்றது. அதற்குப் பதிலாக, அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதநேயச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டம் என்பன தொடர்பான பாரதூரமான மீறல்கள் இடம்பெற்றிருப்பதாக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்கென இலங்கை இராணுவப் படைகள் மேற்கொண்டிருக்கும் முயற்சியின் ஒரு பாகமாக இது இருந்து வருவதுபோல் தெரிகிறது. மேலும், எல்ரீரீஈ இயக்கத்தின் மீது பழியைப் போடுவதற்காகவும் அவை செய்யப்பட்டிருப்பது போல் தோன்றுகின்றது.

## நீதிமன்ற வழக்கு நடைமுறைகள்[1226]

1224. யாழ்ப்பாணத்துக்கு அருகில் மிருசுவிலில் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவமொன்று தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றம்[1227] 2015 ஜுலை மாதம் இராணுவ சார்ஜன்ட் ஒருவருக்கு மரண

[1226] நீதித்துறை புலன் விசாரணைகள் தொடர்பான மேலும் பகுப்பாய்வுக்கு பார்க்கவும்IO Report...... June 2009 Justice in Retreat: A report on the independence of the legal profession and the rule of law in Sri Lanka; the International Bar Association Human Rights Institute, May 2009; also Authority without accountability: The Crisis of impunity in Sri Lanka, ICJ, November 2012; Twelve years of Make-believe: Sri Lanka,s Commissions of Inquiry, Amnesty International, June 2009.

[1227] இலங்கையின் சட்டவாக்கத்தின் கீழ், ஒரு வழக்கு மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டுமென பிரதம நீதியரசர் கட்டளையிட முடியும்.

தண்டனை வழங்கியது. இப்படுகொலைச் சம்பவத்தில் ஐந்து வயது ஆண் குழந்தையொன்றையும் உள்ளடக்கிய உள்நாட்டில் இடம்பெயர்ந்திருந்த 9 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இவ்வழக்கில் மேலும் நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். பாதுகாப்புப்படை வீரர் ஒருவர் மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல் செயலொன்றுக்கு குற்றஞ் சாட்டப்பட்டு, தண்டனை வழங்கப்பட்ட மிகவும் அரிதான சம்பவமொன்றாக இது இருந்துவந்தது. மேலும், நீதிமன்றங்களினால் அத்தகைய புலன் விசாரணைகளை முன்னெடுக்கக் கூடிய சாத்தியம் இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் அது எடுத்துக்காட்டியது.

1225. இரண்டாவது வழக்கில் பாதுகாப்புப் படைகளுடன் சம்பந்தப்பட்டிருந்த நான்கு நபர்கள் (இலங்கை இராணுவத்தின் சார்ஜன்ட் ஒருவர் மற்றும் கருணா குழுவின் ஒரு பாகமாக இருந்து வருவதாகக் கருதப்பட்ட எல்ரிரிஈ இயக்கத்தின் முன்னாள் போராளிகள் இருவர்) பிரகீத் எக்னலிகொடவின் காணாமல்போன சம்பவம் தொடர்பாக 2015 ஆகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்டனர். இராணுவ கட்டளைப் பொறுப்பில் அல்லது உயர்மட்டப் பொறுப்பில் இருந்தவர்களையும் உள்ளடக்கும் விதத்தில் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பான நபர்கள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு இந்த வழக்குகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

1226. இந்த வழக்குகள்,மோதலின் முன்னைய காலப் பிரிவில் இருந்துவந்த பல வழக்குகளை குறியீடாகக் காட்டுகின்றன. அவை தொடர்ந்தும் நீதிமன்ற முறைக்குள் தேங்கிக்கிடந்ததுடன், வழமையாக ஒத்திவைக்கப்பட்டு வந்ததுடன், ஒரு நீதிபதியிடமிருந்து மற்றொரு நீதிபதிக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்தன: மேலே குறிப்பிடப்பட்ட படுகொலை சம்பந்தமான வழக்கு 15 வருடங்கள் விசாரணையில் இருந்தது.எக்னலிகொட வழக்கு 6 வருடங்களாக விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அறிக்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான அத்தியாயத்தில் எடுத்து விளக்கப்படும் மற்றொரு வழக்கு, சம்பவம் நடந்து ஐந்து வருடங்களின் பின்னரும் இன்னமும் விசாரணைக்கு எடுக்கப்படாமல் இருந்துவருகின்றது.

1227. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகம் என்பன தொடர்பான பெரும்பாலான வழக்குகளைப் பொறுத்தவரையில், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் அறிவுக்கு எட்டியவகையில், நீதித்துறையினால் குற்றத் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. கொலைச்சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் பொலிஸாரினால் முதலில் மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. அங்கு சுருக்க முறையற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அவற்றின் முடிவில் வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு போதிய சாட்சியங்கள் இருந்துவருவதாக மாஜிஸ்ட்ரேட் நீதவான் கருதுமிடத்து, குற்றப்பத்திரத்தைத் தயாரிப்பதற்கும், உயர்நீதிமன்றத்தில் வழக்கை நடத்துவதற்குமென அது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

---

குற்றச் செயல்களின் இயல்பு காரணமாக நீதியின் நலன்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு தேவையென பிரதம நீதியரசர் கருதும் சந்தர்ப்பங்களில் அத்தகைய வழக்குகளை ஜூரர்கள் இல்லாமல் விசாரணை செய்ய முடியும்.

1228. அத்தகைய வழக்குகள், மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் வழக்கினை ஆரம்பித்துவைக்கும் முதலாவது கட்டத்துக்கு அப்பால் மிக அரிதாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன. குற்றச்சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு விஜயம்செய்தல் அல்லது சில சந்தர்ப்பங்களில் சான்றுகளைப் பதிவுசெய்தல் போன்ற வரையறுக்கப்பட்ட அளவிலான பொலிஸ் விசாரணைகளே முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஆரம்ப கட்டங்களில் சட்டமருத்துவ அதிகாரிகளும் இதில் தலையீடு செய்யமுடியும். பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் சித்திரவதை மற்றும் ஏனைய உயிர்ச்சேதம் விளைவிக்காத சம்பவங்கள் தொடர்பாக தடயச்சான்றுகள் போன்றவற்றை மதிப்பிடுதல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. பாதுகாப்புப்படையினர் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பாக இந்தப் படிமுறைகளுக்கு அப்பால் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மாஜிஸ்ட்ரேட் நீதவான்கள் தயக்கம் காட்டி வருகின்றார்கள் எனச் சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தெரிவித்திருந்தனர். மிக அரிதாகவே இந்தக் கட்டத்துக்கு அப்பால் வழக்குகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. தொடக்கத்தில் பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருக்கக் கூடிய ஒரு சில வழக்குகளிலும் கூட, சட்ட விரோதமான கொலைகள் தொடர்பான அத்தியாயத்தில் எடுத்துக்காட்டப்பட்டதைப் போல, குற்றத் தீர்ப்பு வழங்கப்படாமல் அவர்கள் பெரும்பாலும் விடுவிக்கப்படுகின்றார்கள்.

1229. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில், வழக்குத் தொடுப்பதற்கு முயற்சிக்கும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் வல்லுனர்கள் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பழிவாங்கல் செயல்களும் அத்தகைய வழக்குகளின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்துவருகின்றன. அருட்தந்தை பிரவுண் காணாமல் போன வழக்கு மற்றும் ஏனைய வழக்குகள் தொடர்பாக புலன் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முயற்சித்த மாஜிஸ்ட்ரேட் நீதவானின் சம்பவம் மற்றும் ACF தொண்டு நிறுவனத்தின் 17 பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக புலனாய்வுகள் நடத்தப்பட்டபோது மாஜிஸ்ட்ரேட் நீதவான் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

1230. பலவந்தமான விதத்தில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பபட்ட சம்பவங்கள் தொடர்பான அத்தியாயம் VIII, காணாமல்போன நபர்கள் தொடா்பான புலன் விசாரணைப் பிரிவு மற்றும் தலைமறைவாகி இருக்கும் நபர்களின் அலகு என்பவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பததற்கு நீதிமன்றங்கள் தவறியுள்ளன என்ற விடயத்தை எடுத்துக்காட்டியிருந்தது. மூன்று வலய ஆணைக்குழுக்கள் மற்றும் 1990களில் நாடுதழுவிய ஆணைக்குழு என்பவற்றினால் இனங்காணப்பட்டிருந்த குற்றமிழைத்தவர்களாக கருதப்படும் நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கென சட்டமா அதிபர் அலுவலகத்துக்குள் காணாமல்போன நபர்கள் தொடர்பான புலன் விசாரணைப் பிரிவு மற்றும் தலைமறைவாயிருக்கும் நபர்கள் அலகு என்பன உருவாக்கப்பட்டிருந்தன. இதில் இனங்காணப்பட்ட இடையூறுகளில் ஒன்று புலன் விசாரணைகளில் சம்பந்தப்பட்டிருக்கும் பொலிஸார், தமது சகாக்களுக்கு எதிராக, குறிப்பாக அவற்றில் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய சிரேஷ்ட பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, விசாரணைகளை முன்னெடுக்கும் விடயத்தில் தயக்கம் காட்டி வந்துள்ளமையாகும்.

1231. உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை விசாரணை செய்வதில் அல்லது தீர்ப்புக்களை வழங்குவதில் அல்லது இரண்டிலும் மீண்டும் மீண்டும் இடம்பெற்று வந்த தாமதங்கள்,அரசாங்க அல்லது பாதுகாப்புத்துறை ஆளணியினர் சம்பந்தப்பட்டிருக்கும் வழக்குகள் மிக அரிதாகவே தீர்க்கப்படுகின்றன என்பதனை எடுத்துக்காட்டுகின்றன. முன்னர் எடுத்து

விளக்கப்பட்டதைப் போல, 2009 ஜூன் மாதம் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஓர் அடிப்படை மனித உரிமைகள் மனு தொடர்பாக ஒருபோதும் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

1232. இலங்கை சம்பந்தப்பட்ட பெருந்தொகையான தனிநபர் முறைப்பாடுகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு பல தீர்மானங்களை வழங்கியிருந்தது. 2006 ஆம் ஆண்டில் ஒரு மனுவின் மீது உச்ச நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த ஒரு சித்திரவதைச் சம்பவமும் இதில் உள்ளடங்குகின்றது. அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனு சமர்ப்பிக்கப்பட்டு, ஆறு வருடங்களின் பின்னர் இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இச்சம்பவத்துக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவொன்று பொறுப்பாக இருந்துவந்தது எனக் கூறியிருந்த அதேவேளையில், ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு எதிராக, அவருடைய சம்பந்தம் தொடர்பான வலுவான சாட்சியங்கள் இருந்தபோதும், நீதிமன்றம் அவரை குற்றமற்றவர் என விடுவித்திருந்தது. இரண்டு வருடங்களின் பின்னர், குற்றப் பத்திரிகைகள்தயாரிக்கப்பட்டுவருகின்றன என்ற விதத்தில் அரசாங்கம் வழங்கிய உத்தரவாதங்களுக்கு மத்தியிலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் சட்ட விரோதமான தடுத்துவைத்தல் மற்றும் சித்திரவதை ஆகிய குற்றங்களை இழைத்தவர்கள் எனப்பெயர் குறிக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழு தொடர்பாகவும் இதுவரையில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல்செய்யப்படவில்லை.[1228]

1233. சந்தேகநபர்கள் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்து வரும் பொழுது நீதித் துறையின் பொறுப்புக் கூறல் நிலையை செயற்படுத்துவதில் உள்ள சவால்கள் பெருமளவுக்கு தீவிரமடைவது போல் தெரிகின்றது. அரசியல் கலப்பற்ற நீதித்துறை மற்றும் பொலிஸ் புலன் விசாரணைகள் என்பவற்றுக்கான தேவையை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வலியுறுத்தியிருந்தது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் பல சம்பவங்களில், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த உறுப்பினர்கள் புலன் விசாரணைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளனர் மற்றும் / அல்லது அவற்றில் தலையிட்டுள்ளனர். பாதுகாப்புப்படையினர் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களை ஆவணங்களில் கையொப்பமிடுமாறு அழுத்தம் பிரயோகித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் என அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கையொப்பமிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர் அல்லது பிரேத பரிசோதனைகளை நடத்துவதற்குப் பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரிகளை மாற்றுமாறு அதிகாரிகளிடம் அவர்கள் அழுத்தம் பிரயோகித்திருந்தனர் (கீழே எடுத்து விளக்கப்பட்டிருக்கும் திருகோணமலை ஐவர் தொடர்பான சம்பவத்தைப் பார்க்கவும்).

1234. சட்ட விரோதமான கொலைகள் மற்றும் பலவந்தமான விதத்தில் காணாமல் ஆக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் தொடர்பான புலன் விசாரணைகள் நிறைவேற்றுத் துறையின் தலையீடு காரணமாக களங்கமடைந்திருந்தன. அதன் காரணமாக வழக்குகள் பல்வேறு நீதிப் பிரிவுகளுக்கு மாற்றப்பட்டிருந்தன அல்லது நீதிபதிகள் மாற்றப்பட்டிருந்தனர். பாதுகாப்புப்படையினர் பொறுப்பாக இருந்து

[1228] CCPR/C/95/D/1432/2005 : Communication 1432/2005 ; 23 April 2009 : (See also Communication 1862/2009 for a detailed account of the obstacles faced by an individual complainant in pursuing justice through the courts.

வரவில்லை என்ற விதத்தில் பாதுகாப்பு அமைச்சு பகிரங்க அறிக்கைகளை வெளியிடும் வழக்கம், பக்கச்சார்பற்ற குற்ற விசாரணைகளை முதலிலேயே தடுக்கக் கூடியவையாக இருந்துவருகின்றன.[1229]

1235. பாதுகாப்பு அமைச்சு அதன் Humanitarian Operation Factual Analysis July 2006 to May 2009[1230]என்ற தலைப்பிலான அறிக்கையில் 2005 ஆம் ஆண்டுக்கும் 2010 ஆம் ஆண்டுக்குமிடையில் இலங்கை இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட எட்டு கொலைச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக பாதுகாப்புஅமைச்சு குறிப்பிட்டிருந்தது. அந்த வழக்குகள் தொடர்பான விபரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், இந்த எட்டு வழக்குகளில், மூன்று வழக்குகளில் சந்தேகநபர்கள் நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. ஏனைய வழக்குகள் அந்த அறிக்கை வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலுவையில் இருந்துவந்தன. இராணுவத்தினரைப் பொறுத்தவரையில், ஒருவர் விடுவிக்கப்பட்டதாகவும், ஒருவருக்கு “வேறு தண்டனை” வழங்கப்பட்டதாகவும், ஆறு சம்பவங்கள் தொடர்பாக ஒரு விசாரணை மன்றம் சாட்சிகளைப் பதிவுசெய்துவருகின்றது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம், 2005 ஆம் ஆண்டுக்கும் 2007 ஆம் ஆண்டுக்குமிடையில் இடம்பெற்றிருந்த 8 சம்பவங்களில் 6 சம்பவங்கள் பல வருடங்களின் பின்னர் இடம்பெற்றிருந்தன. அரசாங்கம் 2014 செப்டம்பர் மாதத்தில் மனித உரிமைகள் கமிட்டியிடம் சமர்ப்பித்த தகவல்களும் அதேவிதத்தில் தெளிவற்றவையாக இருந்துவருவதுடன், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு கொலைச்சம்பவம் தொடர்பாக வெற்றிகரமானவிதத்தில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட தனியொரு வழக்கை மட்டுமே குறிப்பிடுகின்றது.[1231]

1236. விசாரணை ஆணைக்குழுக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பல்வேறு புலனாய்வு அறிக்கைகள் மற்றும் பொலிஸ் சான்றுகள் என்பவற்றை இலங்கை தொடர்பான புலன் விசாணைக் குழு மீளாய்வு செய்ததுடன், முக்கியமான சம்பவங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பொலிஸ் அறிக்கைகளிலும், பாதுகாப்புப்படையினரின் வாக்குமூலங்களிலும், சம்பவங்கள் தொடர்பான ஒன்றுக்கொன்று முரணான மற்றும் நம்பகமற்ற விபரங்கள் உள்ளன என்ற விடயத்தை அது குறிப்பிடவிரும்புகின்றது. குற்றம் நிகழ்ந்த இடங்களை உரியவிதத்தில் ஆவணப்படுத்துவதற்கும், சாட்சிகளைப் பதிவுசெய்துகொள்வதற்கும் பொலிஸார் தவறியிருந்த நிலைமை குற்றவியல் புலன் விசாரணைகளை மேலும் பாதித்திருந்தது. மிக முக்கியமான சாட்சிகள் இழக்கப்பட்ட அல்லது அவற்றில் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு ஆவணப்படுத்தியுள்ளது. ஒரு சில சம்பவங்களில் முக்கியமான சாட்சிகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. உதாரணமாக, துப்பாக்கி வேட்டுக்கள் சேகரிக்கப்படவில்லை தொலைபேசி உரையாடல்கள் தொடர்பான பதிவுகள் கேட்டு பெற்றுக்கொள்ளப்படவில்லை. உதலாகம ஆணைக்குழுவின் பிரசுரிக்கப்படாத 2009 ஆம் ஆண்டின் அறிக்கையை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு மீளாய்வு செய்ததுடன், அதில்‘‘உள்ளூர் பொலிஸாரினாலும் அதேபோல குற்றவியல்

[1229] See for example Action contre la Faim (ACF), Their role in the death of their 17 Local Aid Workers, June 2014, Group of experts commissioned by the Ministry of Defence, Sri Lanka.

[1230] Humanitarian Operation Factual Analysis, MOD, Op.cit. p. 78

[1231] SP Reply to the CCPR LOIs Qs 9 and 11, September 2014.

-

புலனாய்வுத் திணைக்களத்தினாலும் நடாத்தப்பட்ட புலன் விசாரணைகள் முழுமையற்றவையாகஇருந்துவந்ததுடன்,மேலோட்டமானவையாகவும் இருந்துவந்தன... பொலிஸார் பூர்வாங்க புலன் விசாரணைகளை நடத்திய விதம் தொழில் வாண்மையற்றதாகவே இருந்துவந்தது.”[1232]

## ஐந்து மாணவர்கள் சட்ட விரோதமாகக் கொல்லப்பட்டமை தொடர்பான நீதித்துறை விசாரணைகள் (திருகோணமலை ஐவர்): தண்டனை விலக்குரிமைக்கான ஓர் உதாரணம்

1237. 2006 ஜனவரி மாதத்தில் திருகோணமலையில் ஐவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் சட்ட விரோதமான கொலைகள் தொடர்பான அத்தியாயத்தில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது. அது அத்தகைய சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் குற்றவியல் நீதியமைப்பு காட்டியிருக்கும் முறைமை சார்ந்த தோல்வியை எடுத்துக் காட்டுகின்றது. குற்றம் நிகழ்ந்த இடத்தைப் பாதுகாப்பதிலும், சம்பந்தப்பட்ட சாட்சிகளைச் சேகரிப்பதிலும் தொடக்கத்திலேயே ஒரு தவறு விடப்பட்டிருந்தது. பின்னர் வாக்குமூலங்களை வழங்கிய பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பெருந்தொகையான உறுப்பினர்கள், தாம் முன்னர் சாட்சியமளித்ததையோ அல்லது துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதையோ மறுத்தார்கள். பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்பட்ட சுடுகலன்கள் உரிய விதத்தில் கைப்பற்றப்பட்டு, அவை தடயவியல் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. அச்சம்பவம் நடந்த இரவில்,ஒரு கிரனைட் தாக்குதலில் ஐந்து பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் படைகள் செய்தியறிக்கையொன்றை வெளியிட்டிருந்தன. அச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம், கொலை செய்யப்பட்டவர்களின் உடலில் காணப்பட்ட காயங்கள் கிரனைட் வெடிப்புக் காரணமாக ஏற்பட்டிருந்தது என பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. அந்த பொலிஸ் உத்தியோகத்தரே அச்சடலங்களை மருத்துவ மனைக்கு எடுத்து வந்திருந்தார். இது பிரேத பரிசோதனை அறிக்கைளின் முடிவுகளுக்கு முற்றிலும் மாறானவையாக இருந்து வருவது போல் தெரிகின்றது. இக்கொலைகள் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கைகளை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவும் மீளாய்வு செய்ததுடன், குறிப்பிட்ட மாணவர்கள் ஐந்து பேரும் பன்முக துப்பாக்கி வேட்டுக் காயங்களினால் மரணித்திருந்தார்கள் என்பதனையும், அவர்களில் மூவர் மீது அருகிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதனையும், அவர்களின் உடல்களில் பாரிய வெளியேற்றக் காயங்கள் இருந்து வந்தன என்பதனையும் அவை சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில்ஆவணப்படுத்தியிருந்தன. பிரேத பரிசோதனைகளை நடத்துவதற்குப் பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரிக்குப் பதிலாக வேறொருவரை நியமனம் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

1238. மருத்துவமனையில் உறவினர்கள் பொலிஸாரினால் மிரட்டப்பட்டதுடன், மரணித்திருப்பவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடும் ஆவணமொன்றில் அவர்கள் கையொப்பமிட்டால் மட்டுமே சடலங்களை விடுவிக்க முடியும் எனவும் பொலிஸார் கூறியிருந்தனர். உறவினர்கள் அனைவரும் அத்தகைய

[1232] ஆகஸ்ட் 1, 2005 தொடக்கம் மே 2009 வரையிலான காலப் பிரிவின் போது இடம்பெற்றிருந்ததாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து, விசாரிப்பதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை.

ஆவணமொன்றில் கையொப்பமிடுவதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். இந்தச் சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தின் பின்னர் கொலையுண்ட மாணவர்களின் குடும்பத்தினருக்கு அச்சுறுத்தல்கள் வரத் தொடங்கின. எழுத்து மூலமான அச்சுறுத்தல்களும் அவர்களுக்குக் கிடைத்திருந்தன. அவர்களுடைய வீடுகள் மீது கற்கள் எறியப்பட்டிருந்தன் இரவு நேரங்களில் அவர்களுடைய வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததுடன், சோதனைச் சாவடிகளிலும் ஏனைய இடங்களிலும் அவர்கள் பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்பட்டனர். மரண விசாரணையின் போது உறவினர்கள் ஒரு சிலர் மட்டுமே சாட்சியமளித்தார்கள். இது தொடர்பாக மௌனம் சாதிப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த குடும்ப உறுப்பினர் ஒருவருடன் அரசாங்க அமைச்சர் ஒருவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, இந்தச் சம்பவம் குறித்து பேசுவதைஅவர் நிறுத்தினால் அவருக்கு பண வெகுமதி ஒன்று வழங்கப்படும் எனவும் கூறியிருந்தார். கொலை செய்யப்பட்ட மாணவர்களின் குடும்பத்தினர் தமது இருப்பிடங்களை மாற்றிக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்ததுடன், இறுதியில் அவர்கள் நாட்டை விட்டும் வெளியேறிச் சென்றார்கள். வெளிநாட்டில் வசித்துவரும் முக்கியமான சாட்சிகளிடம் இது தொடர்பாக வீடியோ மாநாட்டுக்கூடாக சாட்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு விசாரணை ஆணைக்குழுவும்,முதன்மை நபர்களின் சர்வதேச குழுவும் ஏற்பாடுகளைச் செய்திருந்தன. எவ்வாறிருப்பினும், ஒரு சிலர் சாட்சியமளித்த பின்னர் ஜனாதிபதியின் சார்பில் செயற்பட்ட ஜனாதிபதி செயலகம் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த விடயத்தில் தலையிட்டதுடன்,இந்தக் குழுவின் இறுதி அறிக்கையின் பிரகாரம், இது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த சாட்சியங்களை நீக்கியது.

1239. 2006 ஆம் ஆண்டில் 13 விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டதுடன், ஆனால் வெகு விரைவில் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். மீண்டும் அவர்கள் 2013 ஜுலை மாதத்தில் கைது செய்யப்பட்டதுடன், மீண்டும் 2013 அக்டோபர் மாதத்தில் விடுவிக்கப்பட்டார்கள். அப்போதிருந்த விசேட அதிரடிப் படையின் கமாண்டர் குற்றம் நிகழ்ந்த இடத்தில் இனங்காணப்பட்டிருந்தார் எனினும்,கைது செய்யப்பட்ட விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களில் அவர் இருக்கவில்லை. இதற்கு மாறாக, அப்பிரதேசத்தில் அவர் தொடர்ந்து இருந்து வந்ததுடன், 2014 அக்டோபர் மாதத்தில் அவருக்கு பதவி உயர்வும் வழங்கப்பட்டது. வெளிநாட்டிலிருக்கும் சாட்சிகளை அடையாளம் காணும் பொருட்டு வழக்கு விசாரணை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் கூறியது.

1240. முதன்மை நபர்களின் சர்வதேச சுயாதீன குழுவினால் அவதானிக்கப்பட்ட உதலாகம ஆணைக்குழுவும் திருகோணமலையில் ஐவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. உதலாகம ஆணைக்குழுவின் அறிக்கை ‘‘இக்குற்றச் செயலைப் புரிவதில் சீருடையிலிருந்த ஆளணியினரின் தொடர்பு இருந்து வந்தது என்பதனை அனுமானிப்பதற்கு வலுவான காரணங்கள் இருந்து வருகின்றன’’ எனக் குறிப்பிடுகின்றது. கடந்த கால விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகள் குறிப்பாக திருகோணமலை ஐவர் படுகொலை தொடர்பான விசாரணைகள் மற்றும் குற்றமிழைத்தவர்களுக்கெதிரான வழக்குத் தாக்கல் செய்தல் என்பனதொடர்பான பரிந்துரைகள் அமுல் செய்யப்பட வேண்டுமென கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் கேட்டுக் கொண்டிருந்தது (9.120).

## இலங்கையில் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவற்றுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல்

1241. குறிப்பாக மோதலுக்குப் பிற்பட்ட நிலைமைகளில் இடம்பெறும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான பாரதூரமான மீறல்கள் மற்றும் சர்வதேசக் குற்றச் செயல்கள் என்பன தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்வது எப்படி என்பது குறித்த தீர்மானங்கள், உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பவற்றுக்கான பாதிக்கப்பட்டவர்களின் உரிமையை நிலைநாட்டுவதில் மிகவும் நிர்ணயகரமானவையாக இருந்து வருவதுடன், அவை நல்லிணக்கம் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுடன் இணைந்த விதத்தில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அந்த நிலையில், மனித உரிமைகளை, பாதுகாத்து மேம்படுத்தும் விடயத்தில் நாடு ஒரு முன்னோக்கிய பயணத்தை மேற்கொள்ள முடியும்.

1242. குற்றச் செயல்களின் இயல்பு மற்றும் பரிமாணம் என்பவற்றின் பின்புலத்தில் புலன் விசாரணைகளை நடத்துவதும், அவற்றுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதும் பல சவால்களை எடுத்து வரக் கூடிய ஒரு பணியாக இருந்து வருகின்றது. சட்ட ரீதியான தகைமைகள் இதில் முதலில் கரிசனைக்குரிய விடயங்களாக உள்ளன: சர்வதேச குற்றச் செயல்களுக்கு இணையான செயல்களுக்கு எதிராக, சாதாரண குற்றச் செயலின் விடயத்தில் போல வழக்குத் தொடுக்க முடியாது. அதாவது, தண்டனை விலக்குரிமைக்கு எதிராகப் போராடும் குறிக்கோள்களை போதியளவில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக அவை இருந்து வருதல் வேண்டும். மேலும், நிவாரணம் மற்றும் இழப்பீடுகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைகளையும் அது பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அத்தகைய சம்பவங்கள் மீள இடம்பெறமாட்டாது என்ற உத்தரவாதங்களும் தேவைப்படுகின்றன. "சர்வதேச குற்றச் செயல்களை சாதாரண தண்டனைச் சட்டக் கோவை குற்றங்களாகக்கருதி, வழக்குத் தொடுப்பது அக்குற்றச் செயல்கள் தொடர்பான வரைவிலக்கணங்களில் காணப்படும் முறைமை சார்ந்த, கட்டமைப்பு சார்ந்த பரவலான கூறுகளை புறக்கணிப்பதாக இருந்து வருகின்றது" என இலங்கை சட்டத்தரணிகள் அவதானித்துள்ளார்கள்.[1233]

1243. ஒரு சில சர்வதேச குற்றச் செயல்கள் இலங்கையின் சட்டங்களில் ஏற்கவே ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, சித்திரவதைக்கு எதிரான சமவாயம், 1994 இன் சித்திரவதைக்கு எதிரான சமவாய சட்டத்திற்கூடாக இலங்கை உள்நாட்டுச் சட்டங்களுக்குள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.[1234] அதேபோல, சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் போர் நடவடிக்கைகளில் அவர்களைப் பயன்படுத்துதல் என்பன 2006 ஆம் ஆண்டின் சட்டத்தின் மூலம் குற்றச்செயல்களாக்கப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், குறிப்பாக போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் மற்றும் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதல் போன்ற ஏனைய சர்வதேசக் குற்றங்கள் என்பவற்றுக்கு

1233 "A Hybrid Court, Ideas for Sri Lanka", Rhadeena de Alwis and Niran Ankatell, South Asia Centre for Legal Studies.

1234 சித்திரவதைக்கு எதிரான சமவாய கமிட்டி இச்சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் சித்திரவதை தொடர்பான வரைவிலக்கணம், அங்கீகரிக்கப்பட்டிருக்கும் சர்வதேச வரைவிலக்கணத்துக்கு பொருந்தக் கூடிய விதத்தில் திருத்தப்பட வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது. இந்த வரைவிலக்கணம் "கடுமையான வேதனையை எடுத்து வரும்" ஏதேனும் செயலொன்றை மட்டுமே குறிப்பிடுகின்றது. "துன்பம் அனுபவிப்பதனை" என்ற சொல்லை அது தவிர்க்கின்றது: CAT/C/LKA/CO/3-4. டிசம்பர் 8, 2011.

இதுவரையில் உள்நாட்டுச் சட்டங்களின் கீழ் வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை. சர்வதேச குற்றச் செயல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறும் நிலையை போசித்து வளர்ப்பதற்குப் பொருத்தமான ஒரு சட்டகம்,பொறுப்புக் கூறும் முறைகள் மற்றும் குறிப்பாக கட்டளைப் பொறுப்பு அல்லது உயர்மட்ட அதிகாரிகளின் பொறுப்பு போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்குதல் வேண்டும். விசாரணைகளைப் பொறுத்தவரையில் பாரியளவிலான குற்றச் செயல்கள் தொடர்பாக வழக்குத் தொடுக்கும் உத்திகள் கீழ் மட்டத்திலிருந்தவர்கள் அல்லது பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதிலும் பார்க்க, அத்தகைய குற்றச் செயல்களை திட்டமிட்டவர்கள் மற்றும் ஏற்பாடு செய்தவர்கள் ஆகியோர் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். சர்வதேச குற்றச் செயல்கள் பொதுவாக அத்தகைய ஒரு பரிமாணத்தைக் கொண்டிருப்பதுடன், அவற்றை நிகழ்த்துவதற்கு உயர் மட்டத்திலான ஏற்பாட்டொழுங்குகளும் தேவைப்படுகின்றன.

1244. பாரிய அளவிலான குற்றச் செயல்களுக்கெதிராக தாக்கமான விதத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் உத்திகள், கீழ் மட்டத்தில் இருந்த நபர்களின் பொறுப்புக்கள் மீது கவனம் செலுத்துவதிலும் பார்க்க, அத்தகைய குற்றச் செயல்களை முறைசார்ந்த விதத்திலும், முறைசாரா விதத்திலும், நிழல் கட்டளைச் சங்கிலி அடிப்படையிலும் திட்டமிட்டவர்கள் மற்றும் ஏற்பாடு செய்திருந்தவர்கள் ஆகியோர் தொடர்பாக கவனம் செலுத்துகின்றன. அத்தகைய புலன் விசாரணைகளுக்கு குற்றச் சம்பவத்தின் மீளுருவாக்கம் மட்டுமன்றி, இராணுவ அல்லது துணைப் படைகள் மற்றும் அவற்றின் ((முறைசார்ந்த, முறைசாராத) நிறுவனக் கட்டமைப்பு மற்றும் நடைமுறைகள் என்பன தொடர்பான பகுப்பாய்வும் அவசியமாகும் நிகழ்வுகளின் பொதுவான சமூக வரலாற்றுப் பின்புலம், உள்ளூர் பின்புலம் மற்றும் வன்முறையின் இயல்பு, பகிரங்க சாட்சியங்கள் மற்றும் வகைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள். அத்தகைய உத்திகள் குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்ட மாதிரிகள், அவை நிகழ்த்தப்பட்ட கால இடைவெளி,அமைவிடம் மற்றும் இயல்பு என்பவற்றின் மாதிரிகளை அடையாளம் கண்டு கொள்வதற்கு முயற்சிப்பதுடன்,அந்த முயற்சி இக்குற்றச் செயல்கள் ஓரளவுக்கு திட்டமிடப்பட்டு, மத்திய கட்டுப்பாட்டு முறையுடன் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்பதை அனுமானிக்கின்றது. குற்றச் செயல்களை நிகழ்த்திய நபர்களுக்கு அப்பால் பல்வேறு மட்டங்களில் தனித்தனி நபர்களின் குற்றப் பொறுப்பினை நிர்ணயித்துக் கொள்வதற்கு அவை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.

1245. சாதாரண குற்றச் செயல்களைக் கையாள்வதற்கு மிகச் சிறந்த விதத்தில் பொருந்தக் கூடியதாக இருந்து வரும் இலங்கையின் சட்ட முறைமைகள் போன்ற நவீனமான சட்ட முறைமைகளும்கூட, சர்வதேசக் குற்றச் செயல்களை வினைத்திறன்மிக்க விதத்தில் கவனத்தில் எடுப்பதற்கான ஆற்றலைக் கொண்டிராதிருக்க முடியும். பெரும்பாலான உள்நாட்டு விசாரணையாளர்கள் பல்வேறு திறன்கள் மற்றும் பகுப்பாய்வு வடிவங்கள் என்பன குறித்து பயிற்றப்பட்டிருக்கவில்லை. பெரும்பாலான உள்நாட்டு நீதிமன்றங்கள் வளர்ச்சியடைந்து வந்திருக்கும் சர்வதேச குற்றவியல் நியாயாதிக்க குற்றச் செயல்கள் குறித்த பரிச்சயத்தைக் கொண்டிருக்கவில்லை. அவை சர்வதேச சட்டத்தின் கீழ் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பான சிக்கலான குற்ற வழக்கு நடைமுறைகளைக் கையாள்வதிலும் அனுபவத்தைக் கொண்டிருக்கவில்லை. குற்றவியல் நீதித் துறை அதிகாரமிக்க அரசியல்,பாதுகாப்பு மற்றும் இராணுவத்துறை செயற்பாட்டாளர்களின தலையீடு மற்றும் செல்வாக்கு என்பவற்றுக்கு எளிதில் இலக்காகக் கூடிய நிலையிலிருந்து வரும் போருக்குப் பிற்பட்ட மிகவும் நுட்பமான சூழல் ஒன்றில் இது ஒரு பாரிய ஒரு சவாலாக இருந்து வருகின்றது. பெருமளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கும் சூழலொன்றில் வழக்குத் தொடர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் இடையூறுகளை ஏனைய நாடுகள் எடுத்துக்காட்டியுள்ளன. இது

தொடர்பாக பொதுவாக முன்வைக்கப்பட்டு வரும் ஒரு முறைப்பாடு அத்தகைய வழக்குகள் அரசியல் காரணிகள், பழிவாங்குதல் அல்லது வெற்றியீட்டியவர்களின் நீதி என்பவற்றின் மூலம் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதாகும். பாதிக்கப்பட்ட நபர்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்டிருக்கும் குற்றச் செயல்கள் தொடர்பாக - அவர்களுடைய இனம், அரசியல் நம்பிக்கை அல்லது ஏனைய சார்புகள் என்னவாக இருந்து வந்த போதிலும் - பொறுப்புக் கூறலை எடுத்து வருவதற்கான உசிதமான சாதகமான, அனைவரையும் உள்ளடக்கும் சூழலொன்றை உருவாக்குவது இலங்கை தலைமைத்துவத்தின் பொறுப்பாக இருந்து வருகின்றது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. மேலும், இக்குற்றச் செயல்களினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டவர்களை தாக்கமான விதத்தில் உள்ளடக்கக் கூடிய ஒரு கால அட்டவணையுடனும் இது முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

1246. இத்தகைய சந்தர்ப்ப சூழநிலைகளில் இலங்கையில் பொறுப்புக் கூறும் ஒரு பொறிமுறை வெற்றியளிக்க வேண்டுமானால்,அதற்கு உள்நாட்டுப் பொறிமுறையிலும் பார்க்க மேலதிகமான ஒன்று தேவைப்படுகின்றது என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. விசேட கலப்பு நீதிமன்றங்கள், சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகிய தரப்புக்களை ஒருங்கிணைக்கும் விடயத்தில் வெற்றி கண்டிருக்கும் ஏனைய நாடுகள் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் அவற்றின் சிறந்த நடைமுறைகள் என்பவற்றை இலங்கை கவனத்தில் எடுத்தல் வேண்டும். அது இந்தச் செயன்முறையின் சுயாதீனத் தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற நிலை என்பன தொடர்பாக அனைத்து இலங்கையர்களுக்கும் - குறிப்பாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு - நம்பிக்கையை ஊட்டுவதற்கு அத்தியாவசியமானதாகும். குறிப்பாக இலங்கையின் பெருமளவுக்கு அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கும் பின்புலம் மற்றும் உயர் மட்டத்தில் நாடு துருவமயப்படுத்தப்பட்டிருக்கும் நிலை என்பவற்றில் இது முக்கியமாகத் தேவைப்படுகின்றது.

1247. இலங்கைக்குள் பொறுப்புக் கூறும் நிலை தொடர்பான பெரும்பாலான விவாதங்கள் மோதலின் முடிவின் போது நிகழ்த்தப்பட்ட குற்றச் செயல்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கும் நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட வாதங்களாகவே இருந்து வந்துள்ளன. எவ்வாறிருப்பினும், இந்த அறிக்கை எடுத்துக் காட்டியுள்ளதைப் போல,நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச் செயல்களின் அளவு மற்றும் காலப் பிரிவு என்பன ஒரு நீண்ட காலப் பிரிவை உள்ளடக்குகின்றது. குறிப்பாக, இத்தகைய பெரும்பாலான குற்றச் செயல்களின் திட்டமிடப்பட்ட இயல்பு காரணமாக அவை கவனத்தில் எடுக்கப்படுதல் அவசியமாகும். வழக்குத் தொடுக்கும் நடைமுறைகள் அல்லது ஏனைய நிலைமாற்றக் கால நீதிப் பொறிமுறை என்பவற்றை ஒரு சிறிய காலப் பிரிவுக்கு வரையறை செய்வதானது - உதாரணமாக மோதலின் முடிவு அல்லது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆணைப் பத்திரத்தினால் உள்ளடக்கப்படும் காலப் பிரிவுகளுக்கு வரையறுப்பது - இக்குற்றச் செயல்களின் மாதிரிகள், அவற்றை நிகழ்த்தியவர்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட நிறுவனங்கள் ஆகிய தரப்புக்கள் தொடர்பான முழுமையற்ற சித்திரத்தை முன்வைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. எனவே, அத்தகைய ஒரு செயற்பாடு தண்டனை விலக்குரிமை மாதிரிகள் தொடர்பான விடயத்தை முழு அளவில் கவனத்தில் கொள்ளத் தவறுவதுடன், நல்லிணக்கத்தின் மீது ஒரு எதிர்மறையான தாக்கத்தையும் எடுத்து வர முடியும்.

1248. எனவே, குற்றவியல் நீதி முறையை ஏனைய நிலைமாற்றக் கால நீதிச் செயன்முறைகளுடன் - அதாவது உண்மையை கண்டறிதல், இழப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் போன்ற

செயன்முறைகளுடன் - இணைத்துக் கொள்வது அத்தியாவசியமானதாகும். ‘‘தண்டனை விலக்குரிமை இடைவெளியை’’ கவனத்தில் எடுப்பதற்கு இது அவசியமாகும். பாரிய எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்ட நபர்கள், குற்றச் செயல்களை நிகழ்த்தியவர்கள் ஆகியோர் இருந்து வரும் பின்னணியில் அத்தகைய குற்றச் செயல்களை கனத்தில் எடுப்பதற்கு, ஆழமான முறைசார்ந்த மாற்றங்களைத் தொடக்கி வைப்பது அவசியமாகும்.

## இழப்பீடுகள்

1249. இழப்பீடுகள், நிலைமாற்றக் கால நீதிப் பொதிகளின் உள்ளார்ந்த ஒரு பாகமாக இருந்து வருகின்றன. மோதலுக்குப் பிற்பட்ட ஒரு நிலைமையில், பொறுப்புக் கூறுதல் மற்றும் சுகப்படுத்தும் செயன்முறை என்வற்றின் ஒரு பாகமாக இருந்து வரும் இதற்கு, பரந்த வீச்சிலான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அவை பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

1250. *பழைய நிலையை மீண்டும் எடுத்து வருதல்* - “சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான அப்பட்டமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டம் தொடர்பான பாரதூரமான மீறல்கள் என்பன இடம்பெறுவதற்கு முன்னர், பாதிக்கப்பட்ட நபர் இருந்து வந்த நிலைமையை மீண்டும் எடுத்து வருவதற்கான’’ வழிமுறைகள். உதாரணமாக சுதந்திரம், மனித உரிமைகளை அனுபவிக்கும் நிலை, அடையாளம், குடும்ப வாழ்க்கை மற்றும் பிரஜா உரிமை, தனது சொந்த இடத்துக்கு திரும்பிச் செல்லல், தொழிலை மீண்டும் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்தல்

1251. *நட்டஈடு* - ‘‘சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அப்பட்டமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பவற்றின் விளைவாக ஏதேனும் பொருளாதார ரீதியாக மதிப்பிடத்தக்க சேதம் ஏற்பட்டிருத்தல் - உரிமை மீறலின் தீவிரத் தன்மை மற்றும் ஒவ்வொரு சம்பவத்தினதும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பவற்றுக்குப் பொருத்தமான விதத்திலும், விகிதாசாரத்திலும் நட்டஈடு வழங்குதல்.” அதாவது, இழந்த வாய்ப்புக்கள், இழந்த சம்பாத்தியங்கள் மற்றும் தார்மீக ரீதியான பாதிப்பு என்பன இதில் அடங்குகின்றன.

1252. *புனர்வாழ்வளித்தல்* - இது மருத்துவ மற்றும் உளவியல் ஆதரவையும் உள்ளடக்குகின்றது.

1253. முதன்மையாக நட்டஈடு தொடர்பான பிரச்சினையை கவனத்தில் எடுக்கும் பொருட்டு கடந்த பல வருடங்களின் போது இலங்கையின் பல்வேறு அரசாங்கங்களினால் அவ்வச்சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனவே, பாதிக்கப்பட்ட அனைத்துச் சமூகங்களினதும், தனிநபர்களினதும் தேவைகளை கவனத்தில் கொண்டு, முழு வீச்சிலான வழிமுறைகள்அபிவிருத்தி செய்யப்பட்டு, அமுல் செய்யப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இழப்பீடுகள் தொடர்பாக ஒரு தேசிய கொள்கை தேவைப்படுகின்றது.

1254. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் ‘‘மீள் குடியேற்றம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கு வசதி செய்து கொடுப்பதில் நட்டஈட்டு நிவாரணத்தின்’’ வகிபாத்திரத்தைக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், ஆட்கள், சொத்துக்கள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றை புனருத்தாரணம் செய்யும் அதிகார சபை (REPPIA) போன்ற

அமைப்புக்கள், அது யாருக்கு உதவி செய்ய வேண்டுமென அதன் ஆணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ– அதாவது,“பயங்கரவாத வன்செயல்கள் மற்றும் அரசாங்க பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள்” என்பவற்றின் விளைவாக இழப்புக்களை அல்லது சேதங்களை எதிர்கொண்டிருந்தவர்களின் - நட்டஈட்டுத் தேவைகளை முழுமையாக கவனத்தில் எடுக்க முடியாதிருந்து வந்தது. 1990 களின் பிற்பகுதியில் வலய மற்றும் நாடுதழுவிய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளையடுத்து, காணாமல் போன நபர்களின் உறவினர்களுக்கு ஓரளவு நட்டஈடுகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், அத்தகைய நிவாரண உதவிகள் முறையான ஓர் ஒழுங்கில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், காணாமல் போன நபர்களின் ஒரு சில உறவினர்கள், பொருளாதார அனுகூலங்கள் மற்றும் சட்ட ஆவணங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அந்நபர்கள் தொடர்பாக மரணச் சான்றிதழ்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாட்டுக்கு உட்பட வேண்டியவர்களாக இருந்து வந்தார்கள்.

1255. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில், ஆணைக்குழு மேற்கொண்ட களப் பயணங்களின் போது பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் ஆகிய பிரிவினரே “மோதலினால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டதுடன், அவர்களுடைய வாழ்க்கை பாரதூரமான விதத்தில் நிலைகுலைந்திருந்தது. பெரும்பாலான பெண்கள் ஒன்றில் தமது கணவன்மாரை இழந்திருந்தனர் அல்லது கணவன்மார் எங்கிருக்கின்றார்கள் என்பதனை அறியாதிருந்து வருகின்றனர். அத்தகைய கடும் மன அதிர்ச்சி மற்றும் துன்பம் என்பவற்றுக்கு மத்தியிலும் கூட, அவர்கள் சிறு பிள்ளைகள் மற்றும் வயது முதிர்ந்த பெற்றோர் ஆகியோரைக் கொண்ட தமது குடும்பங்களுக்கு ஆதரவளித்து வருகின்றார்கள்” (பந்தி 9.85) எனக் குறிப்பிட்டிருந்தது.

1256. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பின்வரும் விடயத்தை குறிப்பாக வலியுறுத்தியிருந்தது: “பெண்களின் குறிப்பாக, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது குடும்பத் தலைவர்களாக செயற்பட்டு வரும் விதவைகளின்உடனடித் தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படுதல் வேண்டும். இந்த உடனடித் தேவைகள், வாழ்வாதாரத்துக்கான வழிகளை வழங்குவதன் மூலமும், ஏனைய வருமான உருவாக்க வழிமுறைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும் அவர்களுக்கு பொருளாதார உதவி வழங்குவதனையும் உள்ளடக்குகின்றன. அதன் மூலம் அவர்கள் தமது குடும்பங்கள் தற்பொழுது அனுபவித்து வரும் பாரிய பொருளாதார கஷ்டங்களையும், வறுமையையும் குறைத்துக் கொள்ள முடியும்” (பந்திகள் 9.86, 9.87).

1257. மோதலின் முடிவையடுத்து, குறிப்பாக வட மாகாணத்திலிருக்கும் தனியார் காணிகள் பலவற்றை இராணுவம் கைப்பற்றிக் கொண்டிருக்கும் நிலையில், உடனடியாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய பிரச்சினைகளில் ஒன்றாக காணிகளைத் திருப்பிக் கையளித்தல் மற்றும் மீள் குடியேற்றம் என்ற விடயம் இருந்து வருவதாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கஆணைக்குழு எடுத்துக் காட்டியிருந்தது. 1990 ஆம் ஆண்டிலிருந்து வட மாகாணத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் எல்ரீரீஈ இயக்கத்தினால் இடம்பெயரச் செய்யப்பட்ட விடயம் தொடர்பாகவும்,அவர்களுடைய காணிகளை மீளத் திருப்பியளித்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. இடம்பெயர்ந்த “பழைய மற்றும் புதிய” குடித்தொகையினருக்கு காணிகளை திருப்பியளிக்கும்விடயத்தை அங்கீகரிப்பதற்கு இது ஒரு தேசியப் பிரச்சினை என்ற முறையில் ஒரு “இருதரப்பு புரிந்துணர்வு” அவசியமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தையும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது. 2015

ஜனவரி மாதம் தொடக்கம் காணிகளை முன்னைய உரிமையாளர்களிடம் திருப்பியளிக்கும் ஒரு செயன்முறையை புதிய அரசாங்கம் ஆரம்பித்திருந்தது. ஆனால், இது தொடர்பாக இராணுவத்தின் ஒரு சில பிரிவுகளிடம் ஒரு எதிர்ப்பு நிலவி வருகின்றது என்ற விடயமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1258. பாரிய தேவையைக் கொண்டிருக்கும் மற்றொரு துறை பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவியையும், உள சமூக உதவியையும் வழங்குவதாகும். உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பன குறித்த விசேட ஆணையாளர் பப்லோ டிகிரிப் 2015 ஏப்ரல் மாதத்தில் மேற்கொண்ட இலங்கைக்கான தனது முதலாவது விஜயத்தையடுத்து முன்வைத்த அவதானிப்புக்களில் இலங்கையில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உள, சமூக ஆதரவை வழங்குதல் மிக முக்கியமான உடனடித் தேவைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது என்ற விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார். இத்துறை தொடர்பாக உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென அவர் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு, மோதலின் முடிவின் போது உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் கடும் மன அதிர்ச்சி நிலைமைகளை எதிர்கொண்டிருந்த போதிலும், அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மிகச் சிறு அளவிலேயே உள, சமூக உதவிகள் கிடைத்து வந்தன. அத்தகைய உதவி, மோதலின் போது வன்முறையை எதிர்கொண்ட அனைத்து மக்களுக்கும், அவர்கள் எல்ரீரீஈ இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தாலும் சரி, அரசாங்கப் படைகளைச் சேர்ந்தவர்களாக இருந்து வந்தாலும் சரி, வழங்கப்பட வேண்டும். தாம் நேர்காணலுக்கு உட்படுத்திய ஒரு சில பாதிக்கப்பட்ட நபர்களும், உயிர் தப்பியவர்களும் அவர்கள் எதிர்கொண்ட அனுபவங்களினால் இன்னமும் தெளிவாகவே, ஆழமான விதத்தில் மனக்கலக்கமடைந்திருந்த போதிலும், அத்தகைய ஆதரவு அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் விசாரணைக் குழுவினர் அவதானித்திருந்தனர்.

1259. இறுதியாக சுகப்படுத்துதல் மற்றும் பழைய நிலையை திரும்ப எடுத்து வருதல் செயன்முறையின் ஒரு பாகமாக, இரு தரப்புக்களும் செய்த தவறுகளை ஏற்றுக் கொள்வதும் அவசியமாக இருந்து வருகின்றது. அரசாங்கம் 2015 பெப்ரவரி மாதத்தில் சுதந்திர தினத்தன்று வெளியிட்ட ஒரு விசேட சமாதானப் பிரக்ஞையில், அனைத்துத் தரப்புக்களினதும் துன்பங்களை ஏற்றுக் கொள்வதை நோக்கிய ஒரு ஆரம்ப தற்காலிக படிமுறையை துவக்கி வைத்தது. அடுத்து வரும் வருடங்களில் 'நினைவுகூரும் தினமொன்றை' கொண்டாடுவதற்கான யோசனையையும் அது உள்ளடக்கியிருந்தது. ஆனால், பொதுமக்களைப் பாதுகாத்து, அவர்களை மோதல் வலயத்திலிருந்து மீட்டெடுத்ததாக இராணுவம் தொடர்ந்து சொல்லிவரும் கதை மாற்றப்படுதல் வேண்டும். அதேவேளையில், தமிழ் சமூகங்களும்,இலங்கைக்குள் செயற்பட்டு வரும் அமைப்புக்களும், புலம்பெயர் அமைப்புக்களும் எல்ரீரீஈ இயக்கத்தினால் நிகழ்த்தப்பட்ட கொடூரச் செயல்களை ஏற்றுக் கொள்வதும் அவசியமாகும். இத்தகைய ஏற்றுக்கொள்ளல் நிலைமைகள் இல்லாமல் நல்லிணக்கத்தை எடுத்து வருவது சிரமமான ஒரு காரியமாகவே இருந்து வரும்.

1260. சம்பந்தப்பட்ட சட்டத் தொகுப்புக்களின் கீழ் இருந்து வரும் ஏற்பாடுகளின் பிரகாரம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டம் என்பன மதிக்கப்படுவதனையும், அமுல் செய்யப்படுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கடப்பாடு, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு

நிவாரணங்களை வழங்கும் கடமையையும் உள்ளடக்குகின்றது. இக்கடப்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

*(அ)* அத்துமீறல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கென பொருத்தமான சட்ட, நிர்வாக மற்றும் ஏனைய வழிமுறைகளை மேற்கொள்ளல்

*(ஆ)* அத்துமீறல்கள் தொடர்பாக வினைத்திறன்மிக்க விதத்திலும், உரிய நேரத்திலும்,முழுமையாகவும், பக்கச்சார்பற்ற விதத்திலும், புலன் விசாரணைகளை நடத்துதல்மற்றும் பொருத்தமானவிடத்து, உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் அச்செயல்களுக்குப் பொறுப்பாக இருந்து வந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்

*(இ)* மனித உரிமைகள் சட்டம் அல்லது மனித நேயச் சட்டம் என்பவற்றின் மீறல்களினால் தாம் பாதிப்புக்களை எதிர்கொண்டிருப்பதாகக் கூறும் நபர்களுக்கு கீழே எடுத்து விளக்கப்பட்டுள்ளவாறு, அந்த மீறல் செயல் தொடர்பாக இறுதியில் யார் பொறுப்புக்கூற வேண்டியவராக இருந்து வந்தாலும் சரி,நீதியை சமத்துவமான விதத்திலும் வினைத்திறன்மிக்க விதத்திலும் அணுகுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்

*(ஈ)* இழப்பீடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வினைத்திறன்மிக்க நிவாரணங்கள் வழங்கப்படுதல்.[1235]

1261. இந்த அத்தியாயத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இந்த அறிக்கை முழுக்க ஓடும் ஒரு பொது இழை, இக்கடப்பாடுகளை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வந்த இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக தோல்வி கண்டுள்ளன என்பதாகும்.அதாவது, துணைப்படைக் குழுக்களுடன் இணைந்து அரச படைகளினாலும், எல்ரீரீஈ இயக்கத்தினாலும் நிகழ்த்தப்பட்டிருந்த பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து நம்பகமான விசாரணைகளை முன்னெடுப்பதில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டுப் பொறிமுறைகள் ஒட்டுமொத்தமாக தோல்வி கண்டிருக்கும் நிலையாகும். உண்மையை நிலைநிறுத்துவதற்கும், பொறுப்பான நபர்களை அடையாளம் காண்பதற்கும், பொறுப்புக்கூறும் நிலையை உறுதிப்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கும் அப்பொறிமுறைகளால் முடியாது போயிருந்தது. ஒரு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அவை பெரும்பாலும் பாதிக்கப்பட்ட நபர்களின் உயர் அந்தஸ்து காரணமாகவே எடுக்கப்பட்டிருந்தன. குற்றமிழைத்த நபர்கள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களாக இருந்து வந்தசம்பவங்களில், அந்த வழக்குகள் அநேனகமாக நீதிமன்றங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அறிவிக்கப்பட்ட சம்பவங்களில் பாதுகாப்புப் படைகளுடன் சம்பந்தப்பட்ட குற்றமிழைத்தவர்கள் எனக் கூறப்படும் நபர்களில் ஒருவர் அல்லது ஒரு சிலர் கைது செய்யப்பட்டிருந்தாலும்கூட, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படும் நிலைமைகளே காணப்பட்டன.

1262. புதிய அரசாங்கம் 2015 ஜனவரி மாதம் தொடக்கம் ஒரு சில சம்பவங்களில் பொறுப்புக்கூறல் தொடர்பாக நம்பிக்கையூட்டும் சில நடவடிக்கைகளை

[1235] சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அப்பட்டமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனித நேயச் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் என்பவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு நிவாரணம் மற்றும் இழப்பீடு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள், பொதுச் சபை தீர்மானம் 60/147.

மேற்கொண்டுள்ளது. ஆனால், இது இலங்கையில் பல வருட காலம் தொடர்ச்சியாக, ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனை விலக்குரிமை பாரம்பரியம், அத்தகைய சம்பவங்கள் தொடர்பான இலங்கை நீதித்துறையின் முறைமைசார்ந்த பிரச்சினைகள், பரந்த மட்டத்திலான நிறுவன ரீதியான மற்றும் பாதுகாப்புத்துறை சீர்திருத்தங்கள் என்பவற்றின் பின்னணியில் இவை பரிசீலனைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். கடந்த காலப் பிரிவின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பொறிமுறைகள் தோல்வி கண்டிருந்தன என்ற விடயம் இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் ‘‘ஒட்டுமொத்த சமூகமும் அதன் முன்னோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்கு இடமளிக்கும் விதத்தில், கடந்த கால அத்துமீறல்களுக்கு நிவாரணமளிப்பதற்கான ஒரு நீண்ட கால, அனைத்துமடங்கிய கொள்கையை வடிவமைப்பதற்கு துணிச்சலான, தூரநோக்குடன் கூடிய, பங்கேற்பு அணுகுமுறையொன்று தேவைப்படுகின்றது.” [1236]

1263. மனித உரிமைகள் பேரவை 2014 மார்ச் மாதத்தில் நிறைவேற்றிய அதன் 25/1 தீர்மானத்தில், நிலைமாற்றக் கால நீதி தொடர்பான ஒட்டுமொத்த அனுகுமுறையொன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தது. ‘‘தனிப்பட்ட நபர்களுக்கெதிராக வழக்குத் தொடர்தல், இழப்பீடுகள், உண்மையைக் கண்டறிதல், நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள், பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரைவடிகட்டுதல் என்பவற்றையும் உள்ளடக்கிய நீதித்துறை சார்ந்த மற்றும் நீதித்துறை சாராத பரந்த வீச்சிலான வழிமுறைகள்’’ உள்ளடக்கப்பட வேண்டுமென அது கேட்டுக்கொண்டிருந்தது.

1264. கீழே தரப்பட்டிருக்கும் பரிந்துரைகள் இலங்கை அரசாங்கத்திடமும்,சர்வதேச சமூகத்திடமும் முன்வைக்கப்படும் தொடரான பல வழிமுறைகளை எடுத்து விளக்குகின்றன. இது குற்றச் செயல்களை நிகழ்த்தியவர்கள் எனக் கூறப்படும் நபர்கள் பல வருட காலம் அனுபவித்து வந்திருக்கும் தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவசியமாக இருந்து வருகின்றது என அது நம்புகின்றது. எவையேனும் கட்டளைகள், செயல்கள் அல்லது விடுபாடுகள் என்பவற்றுக்குப் பொறுப்பானவர்களும் இதில் அடங்குவார்கள். கவனத்தில் எடுக்கப்பட வேண்டியிருக்கும் சவால்களின் பரிமாணம், துணிச்சல் மற்றும் உறுதியான அரசியல் விருப்பு என்பவற்றையும், சட்டரீதியான பரந்த அளவிலான மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களையும் அவசியப்படுத்துகின்றன. அவற்றுக்கு பரந்தஅளவிலான நிதி மற்றும் மனித வளங்களும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள்ஆகியோரைப் பாதுகாப்பதற்கான வலுவான ஒரு நிகழ்ச்சித்திட்டமும் தேவைப்படுகின்றது. அது சர்வதேச ஆதரவு மற்றும் உதவி என்பற்றின் மூலம் பயனடைய முடியும்.

# XIX. முடிவுரைகளும் பரிந்துரைகளும்

[1236] உண்மை, நீதி, இழிப்பீடு மற்றும் மீண்டும் நிகழாதிருப்பதற்கான உத்தரவாதம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான விசேட அறிக்கையாளர் திரு. பப்லோ டி கீரிப் அவர்களின் அவதானிப்புக்கள், 2014 ஏப்ரல் 6 ஆந் திகதி அவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதலாவது விஜயத்தின் பின்னர் சமர்ப்பித்த முடிவுகள்.

1265. 2002 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பிரிவின் போது இடம்பெற்றிருந்த மனித உரிமை மீறல்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பன தொடர்பாக விரிவான புலன் விசாரணையொன்றை மேற்கொள்ளும் பணி இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட உரிமை மீறல்களின் அளவு, கிடைக்கக் கூடியதாகவிருந்து வரும் தகவல்களின் அளவு, அதேபோல புலன் விசாரணை எதிர்கொண்ட இடையூறுகள் என்பவற்றின் பின்னணியில் அத்தகையதொரு பணியை குறுகிய காலப் பிரிவொன்றுக்குள் மேற்கொள்ளும் பொழுது, பாரிய சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. எவ்வாறிருப்பினும், ஆயுத மோதலின் கடைசிக் கட்டங்களின் போது மட்டுமன்றி, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த காலப் பிரிவின் போதும், அதற்கு முன்னரும் இடம்பெற்றிருந்த சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதநேயச் சட்டம் என்பன தொடர்பான மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற தன்மை, அவற்றின் அளவு மற்றும் தீவிரத் தன்மை என்பன தொடர்பாக இந்த அறிக்கை மேலும் வெளிச்சம் பாய்ச்சுவதற்கு முயற்சிக்கின்றது.

1266. ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களின் போது பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் செறிவான விதத்திலான ஷெல் தாக்குதல்கள், வன்னியில் வசித்து வந்த பொதுமக்களுக்கு பாரிய துன்பத்தையும், அவர்களுக்கு மத்தியில் உயிரிழப்புக்களையும் எடுத்து வந்துள்ளன என்பதனை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது. படுகொலைகள், இரத்தப்பெருக்கு மற்றும் ஒட்டுமொத்தக் குடும்பங்களும் கொல்லப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் எடுத்து வந்த கடும் மன அதிர்ச்சி நிலைமைகள் என்பன தொடர்பாக சாட்சிகள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் திகிலூட்டும் விவரங்களை எடுத்துக் கூறியிருந்தார்கள். அரசாங்கத்தினால் வன்னிக்குள் எடுத்து வருவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்பட்டிருந்த உணவு, தண்ணீர் என்பவற்றின் தட்டுப்பாடு மற்றும் மருத்துவ சிகிச்சை இல்லாத நிலை என்பன அந்த மக்களின் நலனோம்பலில் மேலுமொரு தாக்கத்தை எடுத்து வந்திருந்ததுடன், அது மேலதிக மரணங்களை எடுத்து வந்தது என்பதிலும் சந்தேகமில்லை. வயதுவந்தவர்களும் பிள்ளைகளும் தனது படைகளில் இணைந்து, முன்னரங்க நிலைகளிலிருந்து சண்டையிட வேண்டுமென பலவந்தப்படுத்தியதன் மூலம் எல்ரீரீஈஇயக்கம் இந்த மக்களுக்கு மேலும் துன்பத்தை எடுத்து வந்திருந்தது. எல்ரீரீஈ இயக்கத்தினால் பொதுமக்கள் மோதல் பிரதேசத்தில் பலவந்தமாக தங்கவைக்கப்பட்டிருந்தார்கள் என்ற விடயம் மற்றும் அவர்கள் அங்கிருந்து வெளியேற முயற்சித்தால் பழிவாங்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலை என்பன அவர்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த கடும் துயரங்களை மேலும் தீவிரப்படுத்தியிருந்தன.

1267. ஆயுத மோதலின் பல்வேறு கட்டங்களின் போது இடம்பெற்ற பொதுமக்களின் மரணங்களின் சரியான எண்ணிக்கையை கணக்கிடுவது அல்லது மதிப்பீடு செய்வது அந்தப் பிரதேசங்களை முழுமையாகச் சென்றடைந்து, பாதிக்கப்பட்ட சமூகங்களை - குறிப்பாக, இலங்கையிலிருக்கும் பாதிக்கப்பட்ட சமூகங்களை சந்திக்கும் வரையில் - சாத்தியமில்லை. இருந்தபோதிலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவினால் தொகுக்கப்பட்டிருக்கும் தகவல்களின் அடிப்படையில், தாக்குதல்களின் பரந்துபட்ட இயல்பு எடுத்துக்காட்டுவதைப் போல, பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரதூரமான சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் மீறல்கள் என்பவற்றின் மாதிரிகள், அவை திட்டமிட்டு ஒழுங்கான விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தன என்பதனைக் காட்டும்

காரணிகள், தாக்குதல்களின் பரவலான இயல்பு என்பவற்றுடன் இணைந்த விதத்தில் அநேகமாக சர்வதேச குற்றச்செயல்கள் நிகழ்த்தப்பட்டிருக்கக் கூடிய சாத்தியப்பாடு இருந்து வருகின்றது என்பதனையே,அவையனைத்தும் சுட்டிக் காட்டுகின்றன. இத்தகைய குற்றச்சாட்டுக்கள் உடனடியாக, முழுமையாக, சுயாதீனமாக புலன் விசாரணை செய்யப்படுவதுடன், அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் நீதியின் முன்னால் எடுத்து வரப்படுதல் வேண்டும்.

1268. மோதல் 2009 மே 18 ஆந் திகதி முடிவடைந்த போதிலும், போர் முடிவடைந்த உடனேயே மக்கள் அனுபவித்த துன்பங்கள் முடிவுக்கு வரவில்லை. சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்தும் மேற்பட்ட மக்கள் பல மாத காலம் இராணுவத்தினால் நடத்தப்பட்ட மூடுண்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் தமது சுதந்திரம் பறிக்கப்பட்டவர்களாக தங்க வைக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய எல்ரீரீஈ இயக்க உறுப்பினர்களை வடிகட்டுவதற்கென அந்த முகாம்களில் பாதுகாப்புப் படையினர் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார்கள். (அரசாங்கத்தினால் 'நலன்புரிக் கிராமங்கள் என அழைக்கப்படும்) உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் கண்காணிப்பு, தடுத்து வைத்தல், சித்திரவதை, துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்முறை என்பவற்றையும் உள்ளடக்கிய மேலும் துஷ்பிரயோகங்களை எதிர்கொள்ளக் கூடிய அபாய நிலையில் இருந்து வந்தனர். இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் எல்ரீரீஈ உறுப்பினர்களும், ஏனையவர்களும் இரகசியமான விதத்தில் கொலை செய்யப்பட்டிருந்தார்கள் என நம்பப்படுகின்றது.

1269. ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தின் போது, பிரமாண்டமான அளவிலான அத்துமீறல்கள் இடம்பெற்றிருந்தன. அதேவேளையில், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப் பிரிவின் போது மட்டுமன்றி, பல தசாப்த காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பனவற்றை இந்த அறிக்கை எடுத்து விளக்கியிருந்தது. அவை – சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த – பல்லாயிரக்கணக்கான தனிநபர்கள் மீதும், சமூகங்கள் மீது பாதிப்புக்களை எடுத்து வந்துள்ளன. அரச படைகளினாலும், அதே போல அவற்றுடன் சம்பந்தப்பட்டிருந்த துணைப் படைக் குழுக்களினாலும், தண்டனை குறித்த அச்சமின்றி குறிப்பிட்ட ஒரு மாதிரியில், பரவலான விதத்தில் நிகழ்த்தப்பட்ட நீதிமன்ற விசாரணை நடைமுறைக்குப் புறம்பான கொலைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல், கடத்தல்கள், சட்ட விரோதமான கைதுகள், தன்னிச்சையான தடுப்புக் காவல், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை என்பவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. மேலும், அவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகையான சட்ட விரோதமான கொலைகள், கண்மூடித்தனமான தற்கொலை குண்டு மற்றும் கிளோமோர் தாக்குதல்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. இத்தாக்குதல்களில் பெருந்தொகையான சிவிலியன்கள் கொல்லப்பட்டிருப்பதுடன், மேலும் பலர் அவயங்களை இழந்துள்ளனர். அதே போல எல்ரீரீஈ இயக்கமும், துணைப்படைக் குழுக்களும் சிறுவர்களை ஆட்சேர்ப்புச் செய்து, போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தி வந்துள்ளன.

1270. மிக முக்கியமாக, அத்துமீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வந்திருக்கும் பெருந்தொகையான கட்டமைப்புக்கள் இன்னமும் இருந்து வருவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் மீண்டும் முடக்கி

விடப்படுவதற்கும், அதேபோல பொறுப்புக் கூறுவது தொடர்பான விடயத்தை கவனத்தில் எடுப்பதில் ஏதேனும் முன்னேற்றங்கள் ஏற்படுமாயின், அவற்றை தடுத்து நிறுத்துவதற்கும் அவை தயாராக இருந்து வருகின்றன. உண்மையில், பல தசாப்த காலமாக நிலைத்து வந்திருக்கும் அடக்குமுறை மற்றும் துன்புறுத்தும் மனப்பாங்குகள், நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், அவை மீண்டும் தலை தூக்குவதனை தடுப்பதற்கும் பிராமாண்ட அளவிலான நிறுவன ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. இவற்றில் ஒரு சிலவற்றை மேற்கொள்வதற்கு கால அவகாசம் தேவைப்படலாம். ஆனால், அத்துமீறல்கள் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது என்பதனை எடுத்துக் காட்டும் பொருட்டு அரசாங்க அதிகாரிகளுக்கும், பாதுகாப்புப் படைகளுக்கும் கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கென உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். மேலும், அரசாங்கம் மாற்றத்தை எடுத்து வரும் விடயத்தில் திடசங்கற்பத்துடன் செயற்பட்டு வருகின்றது என்ற செய்தியையும் அவர்களுக்கு அனுப்பி வைக்க முடியும். குற்றச் செயல்களை நிகழ்த்தியிருப்பதாகக் கூறப்படும் நபர்களை பாதுகாப்புப் படைகளிலிருந்து நீக்குவதற்கான வடிகட்டும் செயன்முறையின் ஒரு பாகமாக இது இருந்து வருதல் வேண்டும். துணைப்படைக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுவதுடன், அரசாங்க அதிகாரிகளினாலும், பாதுகாப்புப் படைகளினாலும் இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆதரவின் அளவு, இயல்பு மற்றும் அடையாளம் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக முழுமையான சுயாதீனமான புலன் விசாரணைகள் நடத்தப்படுதல் வேண்டும்.

1271. நீதித் துறையில் மேற்கொள்ளப்படும் அரசியல் தலையீடுகளை முடிவுக்குக் கொண்டு வருவதனையும் உள்ளடக்கிய விதத்தில், சட்டத்தின் ஆட்சியுடன் சம்பந்தப்பட்டிருக்கும் நிறுவனங்களை பலப்படுத்த வேண்டிய தேவை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. அரசியலமைப்பு சபை மீளவும் அமைக்கப்பட்டமை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் பொதுத் துறையின் ஏனைய சிரேஷ்ட பதவிகளுக்கும், பெருமளவுக்கு சுயாதீனமான உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவதற்கான நம்பிக்கையை வழங்குகின்றது. இது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தை மீள எடுத்து வருவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றும், சம்பவங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்கான அதன் அதிகாரங்களை சட்டத்தின் மூலம் அதற்கு வழங்குவதன் மூலம் அதன் ஆணைப்பத்திரத்தை வலுவடையச் செய்யுமென்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. ஆணைக்குழுவின் வினைத்திறன் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மிகவும் பாரதூரமான விதத்தில் சீர்குலைந்துள்ளது. எனினும், அது மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பொறுப்புக் கூறும் விடயத்துக்குப் பங்களிப்புச் செய்தல் என்பன தொடர்பான முதன்மையான ஒரு நிறுவனமாக இன்னமும் இருந்து வருகின்றது.

1272. அரசாங்கத்தின் இலங்கைக்கான புதிய தொலைநோக்கினை சாதித்துக் கொள்வதில் நல்லிணக்கத்தை எடுத்து வருவதும் மற்றும் முறைமை சார்ந்த மனித உரிமை மீறல்கள் மற்றும்வேரூன்றியிருக்கும் தண்டனை குறித்த அச்சமின்றி குற்றம் புரியும் நிலை என்பவற்றுக்கான மூல காரணங்களை கவனத்தில் எடுப்பதும் நிர்ணயகரமாக இருந்து வருகின்றன. உண்மையைக் கூறுதல், நீதி மற்றும் இழப்பீடுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய பொறுப்புக் கூறுதல் அந்த தொலைநோக்கின் ஒரு பாகமாக அமைதல் வேண்டும். சிவிலியன்களுக்கு பாதுகாப்பு வழங்கியதாகவும், மோதல் வலயத்தில் இருந்தவர்களுக்கு

போதியளவிலான நிவாரண உதவிகளை வழங்கியதாகவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கான அடிப்படைத் தேவைகளை பெற்றுக் கொடுத்ததாகவும் முன்னைய அரசாங்கம் சளைக்காமல் கூறி வரும் கதை, இந்த நிகழ்வுகளை நேரில் அனுபவித்து வந்திருக்கும் எண்ணற்ற சாட்சிகளின் விரிவான விவரணங்களுக்கு முற்றிலும் நேர்மாறானதாக இருந்து வருகின்றது. ஆகவே, அது மாற்றப்படுதல் வேண்டும்.

1273. அதே போல, உதாரணமாக, எல்ரீரீஈ இயக்கத்தினால் சிவிலியன்கள் மீதும், சமூகத்தின் மீதும் எடுத்து வரப்பட்டிருக்கும் அழிவு மற்றும் தீங்கு என்பன தமிழ் சமூகத்திற்குள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். எல்ரீரீஈ இயக்கம் இப்போது இருந்து வரவில்லை, அது ஒரு பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவுமில்ல. ஆனால், அந்த இயக்கத்தினால் நிகழ்த்தப்பட்ட அத்துமீறல்களின் - தண்டனை குறித்த எவ்வித அச்சமுமின்றி நிகழ்த்தப்பட்ட அத்துமீறல்களின் - பிதுரார்ஜிதம் இன்னமும் இருந்து வருவதுடன், அதுவும் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். இன்றும் கூட, இலங்கையின் ஒரு சில பாகங்களில் எல்ரீரீஈ இயக்கத்தின் அத்துமீறல்களினால் பாதிக்கப்பட்டிக்கும் நபர்கள் வாழ்ந்து வருவதுடன், முன்னாள் எல்ரீரீஈ இயக்க உறுப்பினரக்ளின் முன்னிலையில் தமக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து பேசுவதற்கு பயப்படுகின்றார்கள்.

1274. உண்மையைக் கண்டறியும் ஒரு பொறிமுறை அல்லது ஆட்கள் காணாமல் போன சம்பவங்கைள கையாள்வதற்கான எதிர்கால நிறுவனமொன்று போன்ற ஏதேனும் பொறிமுறைகளை வடிவமைக்கும் பொழுது, குறிப்பாக, பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோருடன் உண்மையான, தகவல்களை அறிந்த நிலையில்பங்கேற்று கலந்தாலோசனைகளை நடத்தும் செயல்முறை ஒன்றுக்கூடாக அது மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கடந்த கால அத்துமீறல்களை கவனத்தில் எடுப்பதற்கும், எதிர்கால அத்துமீறல்களுக்கான பொறுப்புக் கூறல் நிலைமைக்கு இடமளிப்பதற்குமான முயற்சியில் முன்னேற்றத்தை எட்டுவதற்கான மிக முக்கியமான ஒரு முதற்படி துன்புறுத்தல் குறித்த அச்சமின்றி பாதிக்கப்பட்டவர்களும், ஏனைய சாட்சிகளும் சாட்சியமளிப்பதற்கு முன்வரக் கூடிய சூழ்நிலையொன்றை உருவாக்குவதாகும். பழிவாங்குதல் குறித்த அச்சம், பெருந்தொகையானவர்கள் உண்மை நீதி மற்றும் இழப்பீடுகள் என்பவற்றை கோருவதற்கு முன்வருவதற்கு தடையாக இருந்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், காணாமல் போனவர்களின் உறவினர்கள், காணாமல் போன தமது அன்புக்குரியவர்கள் குறித்த உண்மையைக் கண்டறிவதில் துணிகரமான விதத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தார்கள். அதனை மறுப்பதற்கும், பொறுப்பை தட்டிக் கழிப்பதற்கும்அரசாங்கத்தினால் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளுக்கு மத்தியிலும் அவர்கள் அவ்வாறு துணிச்சலுடன் செயற்பட்டு வந்துள்ளார்கள்.

1275. பகிரங்கமாக சாட்சியமளித்தல் மற்றும் உரையாடல்களை நிகழ்த்துதல் என்பவற்றுக்கு உசிதமான சூழ்நிலையொன்றை உருவாக்கும் பொருட்டு, சுயாதீனமான, வினைத்திறன்மிக்க சாட்சிகளை பாதுகாக்கும் முறையொன்றை கொண்டிருப்பது அவசியமாகும். 2015 ஆம் ஆண்டின் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் இது தொடர்பான ஒரு ஆரம்பத்தைக் குறிக்கும் அதேவேளையில், சர்வதேச தர நியமங்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கு இணையான விதத்தில் அதனை எடுத்து வரும் பொருட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இது புதிய அரசாங்கத்தின் ஒரு முன்னுரிமையாக அமைதல் வேண்டும். அதே நேரத்தில், அத்தகைய சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்கு, பாதுகாப்புப் படையினரும், ஏனையவர்களும் பாதிக்கப்பட்டவர்களை அல்லது அவர்களது

குடும்பத்தவரை மிரட்டுதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தல் என்பவற்றை தடுப்பதற்கான வழிமுறைகள் தேவைப்படுத்துகின்றன.

1276. இலங்கையின் நிறுவனங்களில் பணிபுரியும் அதிக எண்ணிக்கையிலான தனிப்பட்ட அதிகாரிகளின் தொழில்வாண்மை மற்றும் நிபுணத்துவம் என்பற்றுக்கு மத்தியிலும் கூட,நிறுவனங்கள் முழுவதிலும் தண்டனை குறித்த அச்சமின்றி குற்றம் புரியும் நிலை எந்த அளவுக்கு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதனை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு எடுத்துக் காட்டியிருந்தது. விசாரணை ஆணைக்குழுக்கள் பெரும்பாலானவை, பொறுப்புக் கூறும் நிலையை இயலச் செய்வதற்கான வினைத்திறன்மிக்க பொறிமுறைகளை உருவாக்கும் நோக்கத்திலன்றி பரபரப்பை ஏற்படுத்திய சம்பவங்கள் குறித்த விமர்சனங்களை தணிக்கச் செய்யும் நோக்கத்துடனேயே உருவாக்கப்பட்டிருப்பது போல் தெரிகிறது. 1994 மற்றும் 1998 ஆகிய வருடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போன நபர்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுக்கள் இதற்கு விதிவிலக்காகும். அவற்றின் குறைபாடுகளுக்கு மத்தியிலும் கூட,குற்றமிழைத்திருந்ததாகக் கூறப்படும் நபர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பெருந்தொகையான சம்பவங்களை அவை ஆவணப்படுத்தியிருந்தன. எவ்வாறிருப்பினும், குற்றம் இழைத்ததாகக் கூறப்படும் நபர்களில் பெரும்பாலானவர்களுக்கு எதிராக ஒரு போதும் வழக்குத் தொடுக்கப்படவில்லை, ஒரு சிலர் அதற்கு பின்னர் பாதுகாப்புப் படைகளில் பதவி உயர்வுகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர்.

1277. இலங்கையில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அத்துமீறல்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பவற்றுக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்குத் தேவையான பொறிமுறைகள் குறித்து தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும், காரசாரமான விவாதங்கள் இடம்பெற்று வந்துள்ளன. இந்த விவாதங்களில் பெரும்பாலானவை பொறுப்புக் கூறும் நிலையை சாதித்துக் கொள்ளக் கூடிய பொறிமுறைகள் எந்த வகையைச் சேர்ந்தவையாக இருந்து வர முடியும் என்பது குறித்தும்,அவற்றின் வடிவம் குறித்துமே பெருமளவுக்கு கவனம் செலுத்தியுள்ளன. மனித உரிமைகள் பேரவையின் பங்களிப்பு தீர்மானம் 25/1இன் மூலம் கிடைத்த போதிலும், “முழு வீச்சிலான நீதித்துறை மற்றும் நீதித்துறை சாராத வழிமுறைகளை ஒருங்கிணைத்துக் கொள்ளும் நிலைமாற்றக் கால நீதிக்கான அனைத்துமடங்கிய அணுகுமுறையொன்றுக்கானத்” தேவையை அது வலியுறுத்தியிருந்தது. அதாவது, தனிநபர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தல்,இழப்பீடுகள், உண்மையைக் கண்டறிதல்,நிறுவன ரீதியான சீர்த்திருத்தம் மற்றும் அரசாங்க ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோரை வடிகட்டுதல் என்பவற்றையும் அது உள்ளடக்குதல் வேண்டும்.[1237]

1278. ஓர் உள்நாட்டு செயன்முறைக்கூடாக பொறுப்புக் கூறும் நிலை தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்புணர்வு - குறிப்பாக, ஒரு சில அரசியல் கட்சிகள், இராணுவம் மற்றும் சமூகம் என்பவற்றின் ஒரு சில பிரிவுகள் என்பன இதற்கு ஆழமாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கும் பின்புலத்தில் - மிகவும் பாராட்டத்தக்கதாகும். எவ்வாறிருப்பினும், அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக “சுயாதீனமான மற்றும் நம்பகமான புலன் விசாரணையொன்றை” உரிய காலத்தில் நடத்துவதற்கு

1237 A/HRC/RES/25/1, preamble.

இலங்கையின் குற்றவியல் நீதி முறை முழுமையாக இன்னமும் ஆயத்தமாக இருந்து வரவில்லை அல்லது முழுமையாக ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை என இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது அல்லது மனித உரிமைகள் பேரவையினால் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளவாறு “அத்தகைய அத்துமீறல்களுக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக் கூறச் செய்வதற்கு” இன்னமும் தயாராக இருந்து வரவில்லை.[1238] அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நீதி மற்றும் பொறுப்புக் கூறுதல் தொடர்பான அத்தியாயம் இதற்கான சிக்கலான காரணங்களையும், இலங்கையில் பொறுப்புக் கூறும் பொறிமுறையொன்று வெற்றியளிக்க வேண்டுமானால் உள்நாட்டு பொறிமுறையிலும் பார்க்க, வேறுபட்ட ஒரு பொறிமுறை தேவைப்படுகின்றது என்பதனை ஆணையாளர் ஏன் நம்புகின்றார் என்பதனையும் விளக்குகின்றது. கலப்பு விசேட நீதிமன்றங்கள் வெற்றியளித்திருக்கும் ஏனைய நாடுகள் கற்றுக் கொண்டிருக்கும் பாடங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பவற்றிலிருந்தும் இலங்கை கற்றுக் கொள்வது அவசியமாகும். மேலும், அந்த நாடுகள் கலப்பு நீதிமன்றங்களுடன் சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடர்பவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைந்திருந்தன. இலங்கையர்கள் அனைவருக்கும் குறிப்பாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு,இலங்கையில் காணப்படும் அரசியல்மயமாக்கல் மற்றும் பெருமளவுக்கு சமூகங்கள் பிரிந்து நிற்கும் சூழ்நிலை என்பவற்றின் பின்னணியில்,சுயாதீனம் மற்றும் பக்கசார்பற்ற தன்மை குறித்து நம்பிக்கையளிப்பதற்கு அத்தகைய ஒரு பொறிமுறை தேவைப்படுகின்றது. சர்வதேச சமூகம் இத்தகைய முன்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது மிக முக்கியமானதாகும். மேலும், இந்த அபிவிருத்திகளை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டியிருப்பதுடன், திடமான பெறுபேறுகள் கிடைக்காதிருப்பின் சர்வதேச மட்டத்தில் தேவைப்படும் மேலும் நடவடிக்கைகளையும் அது முன்னெடுத்தல் வேண்டும்.

1279. சிவிலியன்கள் மற்றும் மனிதநேய உதவிப் பணியாளர்கள் ஆகியோர் மீதான தாக்குதல்கள் குறித்த பிரச்சினைகள் தொடர்பான இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் முடிவுகள், சில சந்தர்ப்பங்களில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருக்கும் முடிவுகளிலிருந்து வேறுபட்டவையாக இருந்து வந்த போதிலும்,அந்த ஆணைக்குழுவின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றில் பெருந்தொகையானவை இன்றைய சூழலுக்கு பொருத்தமானவையாக இருந்து வருகின்றன என்றும்,இந்த அறிக்கை தொடர்பான ஒரு தொடர் நடவடிக்கையாக அவை கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமென்றும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நம்புகின்றது. குறிப்பாக, தடுத்து வைத்தல், காணாமல் போதல், பல்வேறு சமூகங்களின் நீண்ட கால மனக்குறைகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான முன்மொழிவுகள் என்பவற்றின் போது அவை கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் அந்த ஆணைக்குழு முன்வைத்திருந்த முக்கியமான பல பரிந்துரைகள் மனித உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்குஉதவியிருக்க முடியும். ஆனால், அவை இன்னமும் அமுல் செய்யப்படவில்லை என்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

1280. ஜனவரி மாதத்தில் பதவிக்கு வந்த அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பான வழிமுறைகளை மேற்கொள்ளும் என்ற விடயத்தை இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அங்கீகரிப்பதுடன், 2015 ஆகஸ்ட் மாதத்தில்

[1238] Ibid.

பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் ஒரு மாற்றத்தை எடுத்து வரும் விடயத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது என்ற விடயத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. புதிய அரசாங்கம் இந்த தனித்துவமான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் எடுத்துக் காட்டப்பட்டதைப் போல "ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும், நீதியான, சமத்துவமான, திறந்த பன்முக சமூகமொன்றை" வலியுறுத்துமென மனித உரிமைகள் ஆணையாளர் உண்மையிலேயே நம்புகின்றார். நாட்டின் தற்போதைய நிலவரத்துக்கு சவால் விடுப்பதற்கு துணிச்சல் மற்றும் அரசியல் விருப்பு என்பன தேவைப்படுவதுடன், அனைத்து பிரஜைகளுக்குமான மனித உரிமைகளை முழுமையாக மீளப் பெற்றுக் கொடுத்து, பாதுகாக்கும் பொருட்டும், நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்து வரும் மனக் குறைகளை கவனத்தில் எடுக்கும் பொருட்டும் இவை தேவைப்படுகின்றன.

1281. அந்த தொலைநோக்கை அபிவிருத்தி செய்வதற்கு இந்த அறிக்கை பங்களிப்புச் செய்யுமென்றும், தற்காப்புக்கான காரணங்களை கூறுவதிலும் பார்க்க ஆக்கபூர்வமான விதத்தில் முன்னோக்கிய ஒரு பயணத்தை மேற்கொள்வதற்கான ஒரு வழிமுறையாக அது ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகம் நம்புகின்றது. சாதகமான வளங்கள் மற்றும் மக்களின் பன்முகத் தன்மை என்பவற்றுக்கு முழுமையாக நியாயம் வழங்கக் கூடிய ஒரு தொலை நோக்கு மற்றும் மாற்றத்திற்கான நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றை கொண்ட ஒரு செயன்முறையின் பாகமாக அமுல் செய்யப்பட வேண்டுமென அது நம்பும் பரிந்துரைகளின் தொகுதியொன்றை கீழே முன்வைக்கின்றது. மாற்றத்திற்கு ஆதரவு வழங்கும் நிலையிலும், கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகம் என்பன தொடர்பாக பொறுப்புக் கூறும் நிலையை மேம்படுத்துவதிலும் நீண்ட கால நல்லிணக்கத்தை எடுத்து வருவதிலும் சர்வதேச சமூகமும் ஒரு முக்கியமான வகி பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது.

## பரிந்துரைகள்

### பொது

1. கடந்த 30 வருட காலமாக இடம்பெற்று வந்திருக்கும் மனித உரிமை மீறல்களை கவனத்தில் எடுப்பதற்கும், அவை மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்குமென அனைத்துமடங்கிய நிலைமாற்றக் கால நீதி கொள்கையொன்றை அபிவிருத்தி செய்தல்;
2. இந்த அறிக்கையிலும், ஆணையாரினால் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்னைய அறிக்கைகளிலும் முன்வைக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை அமுல் செய்வதற்கும், அதே போல கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் கடந்த கால விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் என்பவற்றின் இதுவரையில் அமுல் செய்யப்படாதபரிந்துரைகளை அமுல் செய்வதற்குமென திட்டமிடுவதற்கும்,அது தொடர்பாக முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கால அட்டவணையுடன் கூடிய உயர் மட்ட நிறைவேற்றுக் குழுவொன்றை உருவாக்குதல்;
3. மனித உரிமைகள் நிலைமையை கண்காணிப்பதற்கும், ஆணையாளரின் பரிந்துரைகளை அமுல் செய்வது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கும், தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கும் இலங்கையில் முழு நிறைவான அலுவலகமொன்றை ஸ்தாபிக்குமாறு மனித உரிமைகள் தொடர்பான ஆணையாளர் அலுவலகத்துக்கு அழைப்பு விடுத்தல்;
4. குறிப்பாக, உண்மையைக் கண்டறிதல், இழப்பீடுகள் மற்றும் நினைவுச் சின்னங்களை அமைத்தல் என்பவற்றுடன்

கூடிய நிலைமாற்றுக் கால நீதி தொடர்பான உண்மையான கலந்தாலோசனைகளை பொதுமக்களுடனும், பாதிக்கப்பட்டவர்களுடனும், சாட்சி குழுக்களுடனும், சிவில் சமூகத்துடனும், ஏனைய பங்குதாரர்களுடனும் துவக்கி வைத்தல். இவற்றுடன் இணைந்த விதத்தில் தகவல்களை அறிந்த நிலையில் இச்செயன்முறையில் மக்கள் பங்கேற்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு கல்வியூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்; உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பன குறித்த விசேட அறிக்கையாளரை தனது பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளல். அந்த நிலையில், இந்தச் செயன்முறையில் அவரும் இணைந்து, அதற்கு ஆலோசனை வழங்க முடியும்;

5. மனித உரிமை ஆணைக்குழுவின் விசேட நடைமுறைகளுடன் முழுமையான ஒத்துழைப்பினை உறுதிப்படுத்துதல். மோதலுடன் சம்பந்தப்பட்ட பால்நிலை வன்முறை தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி, சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி, நீதிமன்ற நடைமுறைக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சித்திரவதை என்பன தொடர்பான விசேட அறிக்கையாளர்கள், தன்னிச்சையானதடுத்து வைத்தல் தொடர்பான செயல்குழு மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விசேட நடைமுறைகள் தொடர்பான ஆணைப் பத்திரதாரர்கள் ஆகியோரை வெகு விரைவில் இலங்கைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளல்.

**நிறுவன ரீதியான சீர்த்திருத்தங்கள்**

6. முடியுமான விரைவில் அரசியலமைப்புச் சபை முழுமையாக செயற்படுவது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அந்த நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற முதன்மையான நிறுவனங்களுக்கு அதியுயர் சுயாதீனமும், நாணயமும் மிக்க தகுதி வாய்ந்த புதிய உறுப்பினர்களை அதனால் நியமனம் செய்ய முடியும்;

7. நீதிமன்றங்களுக்கு வழக்குகளை அனுப்பி வைப்பதற்கான மனித உரிமை ஆணைக்குழுவின் சுயாதீனத்தையும், அதன் ஆற்றலையும் பலப்படுத்துவதற்கென சட்டவாக்கத்தை மீளாய்வு செய்தல்;

8. உள்நாட்டுச் சட்டங்களில் சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களின் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, சிங்கராசா வழக்கில்[1239] உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மீளாய்வு செய்வதற்கென நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தல் மற்றும் தனிப்பட்ட முறைப்பாடுகளை பரிசீலனை செய்வதற்கென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கமிட்டியின் செயலாற்றலை மீண்டும் ஸ்தாபித்தல்;

9. சித்திரவதை, வன்புணர்ச்சி, பாலியல் வன்முறை மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் என்பன தடை செய்யப்பட்டுள்ளனஎன்ற விடயத்தையும், அவற்றுக்கு நேரடியாக அல்லது கட்டளைத் தளபதியாக அல்லது உயர் மட்ட அதிகாரியாக பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, தண்டனை வழங்கப்படும் என்ற விடயத்தையும் விளக்கி இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளின் அனைத்து பிரிவுகளுக்கும் தெளிவான, பகிரங்கமான, திட்டவட்டமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். உரிய செயன்முறை பின்பற்றப்படுவதற்கு அமைவாக, அத்தகைய செயல்களில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் என சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரின் பணியும், வினைத்திறன்மிக்க புலன் விசாரணை ஒன்று பூர்த்தியடையும்

1239 நல்லரத்தினம் சிங்கராசா எதிர் சட்டமா அதிபர், உச்ச நீதிமன்ற விசேட மேன் முறையீடு (LA) No.182/99, decided on Sept. 15, 2006.

வரையில் உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்படுதல் வேண்டும். சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு எதிரான கண்காணிப்பு, துன்புறுத்தல் மற்றும் பழிவாங்குதல்கள் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்கு கட்டளையிடுதல்;

10. பாதுகாப்புத் துறை சீர்திருத்தத்திற்கென ஒட்டுமொத்த திட்டமொன்றை தயாரித்தல், சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் படைகளின் சிவிலியன் இயல்பு, சுயாதீனம் மற்றும் தொழில்வாண்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு இச்சீர்த்திருத்தங்கள் தேவைப்படுகின்றன, மற்றும் உள்ளக பாதுகாப்பு விவகாரங்களில் இராணுவத்தின் வகி பாத்திரத்தைக் குறைத்தல்;

11. குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு, பல்வேறு புலனாய்வு சேவைகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பாதுகாப்புப் படைகளின் அனைத்துப் பிரிவுகளினதும் வகி பாத்திரங்கள் மற்றும் கட்டளைச் சங்கிலி என்பவற்றை தெளிவுபடுத்துதல்;

12. மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதனை நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வரும் சந்தர்ப்பங்களில், இராணுவ மற்றும் பாதுகாப்புப் படை ஆளிணியினரையும் வேறு எவரேனும் பொதுத் துறை அதிகாரியையும் பதிவியிலிருந்து நீக்குவதற்கென, உரிய செயன்முறைக்கு அமைவான விதத்தில், முழுமையான வடிகட்டும் செயன்முறையொன்றை அபிவிருத்தி செய்தல்;

13. தளபதிகளையும் உள்ளடக்கிய விதத்தில், சம்பந்தப்பட்ட தனிநபர்கள் மனித உரிமை மீறல்களிலோ அல்லது குற்றவியல் செயல்களிலோ எந்தவிதத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பதனை நிரூபித்துக் கொள்வதற்கென வடிகட்டும் செயன்முறையொன்றை மேற்கொள்ளாது, இலங்கை பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த எந்தவொரு உறுப்பினரையும் ஐநா அமைதிப் படைகளுக்கு அனுப்புவதில்லை என்ற விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல். அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பொழுது, இலங்கையின் அமைதிகாக்கும் படையினரினால் எவையேனும் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் இருப்பின், அவை அதிகாரிகளால் முழுமையாக புலன் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்;

14. இராணுவம் நிலைகொண்டிருக்கும் தனியார் காணிகளை மீண்டும் திருப்பி அளிக்கும் விடயத்திற்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் சிவில் விவகாரங்களில் இராணுவத்தின் பங்களிப்பினை முடிவுக்குக் கொண்டு வருதல்;

15. அரசியல் கட்சிகளுடன் இணைந்திருக்கும் குழுக்களை இனங்காண்பதற்கும், அவற்றின் ஆயுதங்களைக்களைவதற்கும் பாதுகாப்புப் படைகள், புலனாய்வு சேவைகள் மற்றும் ஏனைய அரசாங்க அதிகார அமைப்புக்கள் என்பவற்றுடன் அவை கொண்டிருக்கும் பிணைப்புக்களை உடைப்பதற்கும் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்;

16. பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அதன் ஒழுங்குவிதிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் என்பன தொடர்பாக உயர்மட்ட மீளாய்வொன்றினை துவக்கி வைத்தல், அவற்றை இரத்து செய்வதற்கும், சர்வதேச சட்டங்களுடன் முழுமையாக இணங்கிச் செல்லும் புதிய தேசிய பாதுகாப்புச் சட்டகமொன்றை உருவாக்குவதற்கும் இந்த மீளாய்வு அவசியமாகும்;

**நீதி**

17. சாட்சிகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் சுயாதீனம் மற்றும் வினைத்திறன் என்பவற்றுக்கான சிறந்த பாதுகாப்புக்களை ஒருங்கிணைத்துக் கொள்ளும் நோக்கத்துடன், பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச்

சட்டத்தை மீளாய்வு செய்தல். சாட்சிகளை பாதுகாக்கும் அதிகார சபைக்கு நியமனம் செய்யப்படுபவர்கள் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பணியில் அமர்த்தப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் சுயாதீனம் மற்றும் நாணயம் என்பன முழுமையாக வடிகட்டப்பட்டு, அறியப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளல். சர்வதேச உதவியுடன் இணைந்த விதத்தில் சாட்சிகள் பாதுகாப்பு முறைக்கு போதியளவில் வளங்கல் கிடைப்பதனை உறுதிப்படுத்துதல், பிள்ளைகள் மற்றும் பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கான விசேட பாதுகாப்பு பொறிமுறைகளை உறுதிப்படுத்துதல்;

18. போர் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள், இன அழிப்பு மற்றும் ஆட்களை பலவந்தமாக காணாமல் ஆக்கச் செய்தல்என்பவற்றை சட்டவாக்க வரையறைகள் இல்லாமல் குற்றச் செயல்களாக்குவதற்கு சட்டங்களை இயற்றுதல். குறிப்பாக, கட்டளைத் தளபதி அல்லது மேலதிகாரி மட்டங்களிலான பொறுப்புக்களுடன் கூடிய விதத்தில் பல்வேறு வகைகளிலான குற்றவியல் பொறுப்புக்களுக்கான சட்டத்தை உருவாக்குதல்;

19. பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படுதலிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயம், ஜெனிவா சமவாயங்களுக்கான மேலதிக ஏற்பாடுகள் மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டவாக்கம் என்பவற்றை அத்தாட்சிப்படுத்துதல்;

20. சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுனர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்த விதத்தில் அவ்வப்போதைய தேவைகளுக்கென கலப்பு விசேட நீதிமன்றமொன்றை ஸ்தாபிப்பதற்கான திட்டவட்டமான சட்டங்களை நிறைவேற்றுதல், அந்த விசேட நீதிமன்றம் பாலியல் குற்றங்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டிருக்கும் குற்றச் செயல்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் போர் குற்றங்கள் மற்றும் மனிதக்குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் என்பவற்றுக்கு எதிராக வழக்குகளை நடத்துவதற்கான ஆணைப்பத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும். அது அதன் சொந்த சுயாதீனமான புலனாய்வு மற்றும் வழக்குத் தொடுத்தல் அமைப்பையும், வாதி தரப்பு அலுவலகத்தையும், சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக வினைத்திறன் மிக்க விதத்தில் வழக்குகளை நடத்துவதற்கு அதனை இயலச் செய்யும் பொருட்டு அதற்கு வளங்களை பெற்றுக் கொடுத்தல்;

21. மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நிலுவையிலிருந்து வரும் குற்றவியல் புலனாய்வுகள், ஆட்கொணர்வு மனுக்கள் மற்றும் அடிப்படை உரிமை மனுக்கள் என்பன தொடர்பான விரிவான ஒரு வரைபட தயாரிப்பினை மேற்கொள்ளல். அதே போல அனைத்து விசாரணை ஆணைக்குழுக்களினதும் முடிவுகள்திட்டவட்டமான சம்பவங்களை இனங்கண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் விசேட நீதிமன்றமொன்று ஸ்தாபிக்கப்படுமிடத்து, அதற்கு அவற்றை அனுப்பி வைத்தல். காணாமல் போன நபர்கள் தொடர்பாக முறைப்பாடுகளை புலன் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு,குற்றமிழைத்திருக்கும் நபர்களை இனங்கண்டிருக்கும் மற்றும் அவர்களுக்கெதிரான முதற் தோற்ற சான்றுகள் இருந்து வரும் அனைத்துச் சம்பவங்கள் தொடர்பாகவும் வழக்குத் தொடுத்தல் நடைமுறைகளை ஆரம்பித்து வைத்தல்;

22. வலய மற்றும் நாடு தழுவிய ஆணைக்குழுக்களினால் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணை அலகுக்கும், தலைமறைவாகியிருக்கும் நபர்களின் அலகுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் அனைத்துச் சம்பவங்கள் தொடர்பாகவும் கட்டளைச் சங்கிலி மற்றும் கட்டளை பொறுப்புக்களையும் உள்ளடக்கிய விதத்தில் மேலும் புலன் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய நபர்களை

அடையாளம் காணும் பொருட்டு ஒரு மீளாய்வினை மேற்கொள்ளல். நீதி மன்றங்களால் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கும் வழக்குகளும் இதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்;

23. எல்ரீரீஈ இயக்கத்துடன் தொடர்புகளை கொண்டிருந்தார்கள் எனக் கருதப்பட்டிருந்த அல்லது அறியப்பட்டிருந்த 11,000க்கும் மேற்பட்ட நபர்கள் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு புனர் வாழ்வளிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அவர்கள் தற்பொழுது இருக்கும் இடத்தை அறிந்து கொள்வதற்கும், அதன் பின்னர் எவரும் காணாமல் போயிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஒரு மீளாய்வை மேற்கொள்ளல்;

24. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருக்கும் அனைத்து நபர்கள் தொடர்பான சம்பவங்களையும் மீளாய்வு செய்து, ஒன்றில் அவர்களை விடுவித்தல் அல்லது உடனடியாக அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்தல். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் - குறிப்பாக, சித்திரவதையின் மூலம் பெறப்பட்ட குற்ற வாக்குமூலங்களின் அடிப்படையில் - குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு நீண்ட கால சிறைத் தண்டனைகளை அனுபவித்து வரும் அனைத்து நபர்களினதும் வழக்குகளை மீளாய்வு செய்தல்;

**உண்மை/அறிந்து கொள்வதற்கான உரிமை**

25. காணாமல் போன நபர்கள் தொடர்பான தற்போதைய ஜனாதிபதி ஆணைக்குழுவை முடிவுக்குக் கொண்டு வந்து, அது உள்ளடக்கும் சம்பவங்களை, காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன் கலந்தாலோசனை செய்து உருவாக்கப்படும் நம்பகமான, சுயாதீனமான நிறுவனமொன்றுக்கு மாற்றுதல்;

26. தடுப்புக் காவலில் வைத்திருக்கும் அனைத்து நபர்கள் தொடர்பாகவும், சுயாதீனமான விதத்தில் சரிபார்த்துக் கொள்ளக் கூடிய புதிய தரவுத் தளமொன்றை அபிவிருத்தி செய்தல், அதன் மூலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமது குடும்ப உறுப்பினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தொடர்பான தகவல்களை உறவினர்கள் பெற்றுக் கொள்ள முடியும்;

27. அனைத்துத் தடுப்புக் காவல் நிலையங்கள் தொடர்பான விவரங்களை முழுமையாக பிரகடனப்படுத்தும் பட்டியலொன்றை வர்த்தமானியில் பிரசுரித்தல். இன்னமும் எவையேனும் உத்தியோகபூர்வமற்ற அத்தகைய நிலையங்கள் செயற்பட்டு வந்தால், அவற்றை மூடிவிடுதல்;

28. மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள்,காணாமல் போன நபர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பொதுமக்கள் உயிரிழப்புக்கள் தொடர்பான இராணுவ விசாரணை மன்றம் ஆகிய அனைத்து அமைப்புக்களினதும் பிரசுரிக்கப்படாத அறிக்கைகளை பிரசுரித்தல்;

29. மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான தற்போதைய அனைத்து ஆவணங்களையும் - அவை அரசாங்கத்தினால் வைக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது தனியார் நிறுவனங்களினால் வைக்கப்பட்டிருந்தாலும் சரி –பேணிப் பாதுகாப்பதற்கான அனைத்துமடங்கிய பொறிமுறையொன்றை அபிவிருத்தி செய்தல்;

## இழப்பீடுகள்

30. பெண்கள் மற்றும் பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபரினதும் திட்டவட்டமான தேவைகளைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் கலந்தாலோசனை செய்து, ஒரு தேசிய இழப்பீட்டுத் திட்டத்தை அபிவிருத்தி

செய்தல். அத்திட்டத்திற்கென பொருத்தமான விதத்தில் அரச வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதியீட்டத்தை மேற்கொள்ளல்;

31. மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் உள - சமூக ஆதரவினை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்து, பலப்படுத்துதல்;

32. காணாமல் போன நபர்கள் தொடர்பாக மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டிருப்பவர்கள், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கென நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு தடைகள் எவையும் இருந்து வரவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு சட்டங்களை உருவாக்குதல்;

33. காணிப் பகிர்வு, மீள் குடியேற்றம் மற்றும் வாழ்வாதார உதவி என்பவற்றுக்கூடாக பழைய மற்றும் புதிய இடம்பெயர்ந்த மக்களுக்கென நிலையான தீர்வுகளை உறுதிப்படுத்துதல்;

### ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் உறுப்பு நாடுகளுக்கு

34. சர்வதேச தர நியமங்களை பூர்த்தி செய்து வைக்கக் கூடிய நிலைமாற்றக் கால நீதிப் பொறிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்குதல். நிலைமாற்றக் கால நீதிச் செயன்முறைக்கு ஆதரவு வழங்குவதற்கென திட்டவட்டமான, உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கைக்கு உதவி வழங்கும் நன்கொடையாளர்களுக்கு மத்தியில் ஒரு ஒருங்கிணைப்பு பொறிமுறையை ஸ்தாபித்தல்;

35. சமாதான படைகள், இராணுவ பரிமாற்றங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றில் சேர்த்துக் கொள்வதற்கென இனங்காணப்பட்டிருக்கும் இலங்கை பொலிஸ் மற்றும் இராணுவ ஆளணியினர் தொடர்பாக கண்டிப்பான விதத்தில் வடிகட்டும் நடைமுறைகளை பிரயோகித்தல்;

36. சித்திரவதை, போர் குற்றங்கள் அல்லது மனிதக்குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் போன்ற அத்துமீறல்களுக்கு பொறுப்பாக இருந்து வருபவர்கள் எனக் கூறப்படும் நபர்களுக்கு எதிராக புலன் விசாரணைகளை மேற்கொள்வதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் - சாத்தியமானவிடத்து, சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ், புலன் விசாரணைகளை நடத்துவதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் - நடவடிக்கை எடுத்தல்;

37. குறிப்பாக, சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை தொடர்பான துஷ்பிரயோகங்களுக்குஉள்ளாக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கென அவர்கள் மீண்டும் அத்தகைய கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு மீள் நிகழாமை தொடர்பான உத்தரவாதங்கள் வழங்கப்படும் வரையில் தமிழ் மக்களை தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லுமாறு வற்புறுத்தாதிருக்கும் ஒரு கொள்கையை உறுதிப்படுத்துதல்;

38. கணிசமான அளவு தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் நாடுகளில், அத்துமீறல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆட்களுக்கு வழங்கப்பட வேண்டிய உள, சமூக ஆதரவுச் சேவைகள் தொடர்பான ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ளல். மேலும், அத்தகைய சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கென தேவையான நிதிகளை வழங்குதல்;

39. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கூடாக மனித உரிமைகளில் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்களையும், பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பான முன்னேற்றங்களையும் தொடர்ச்சியாக கண்காணித்தல். அதில் போதியளவு முன்னேற்றம் ஏற்படாதிருந்தால், சர்வதேசக் குற்றச் செயல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு மனித உரிமைகள்

-

பேரவை மேலதிக சர்வதேச நடவடிக்கைகளை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

NATIONS UNIES
DROITS DE L'HOMME
HAUT-COMMISSARIAT
UNITED NATIONS
HUMAN RIGHTS
OFFICE OF THE HIGH COMMISSIONER

HAUT-COMMISSARIAT AUX DROITS DE L'HOMME • OFFICE OF THE HIGH COMMISSIONER FOR HUMAN RIGHTS
PALAIS DES NATIONS • 1211 GENEVA 10, SWITZERLAND
www.ohchr.org • TEL: +41 22 917 9000 • FAX: +41 22 917 9008 • E-MAIL: registry@ohchr.org

# மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான புலன் விசாரணை குறிப்பு நியதிகள்

## 1. ஆணைப்பத்திரம் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான கடப்பாடுகள்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 2014 மார்ச் மாதத்தில் நிறைவேற்றிய "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்துதல்" தொடர்பான AHRC/25/1 தீர்மானத்தில் "கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் உள்ளடக்கப்பட்ட காலப் பிரிவின் போது, இலங்கையில் இரு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பாரதூரமான அத்துமீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக விரிவான புலன் விசாரணையொன்றை நடத்தி,சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மற்றும் விசேட நடைமுறை தொடர்பான ஆணைப்பத்திரதாரர்கள் ஆகியோரின் உதவியுடன்,தண்டனையிலிருந்து விலக்குரிமை பெற்றுக் கொள்வதனை தவிர்ப்பதற்கும், பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமென, நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்செயல்கள் தொடர்பான உண்மைகளையும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் கண்டறியுமாறும்" ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

பேரவையின் இருபத்தேழாவது அமர்வில் பிந்திய தகவல்கள் குறித்த வாய்மூலமான ஒரு விளக்கத்தை சமர்ப்பிக்குமாறும்,அதன் 28 ஆவது அமர்வில் புலன் விசாரணைகள் தொடர்பான ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பேரவை ஆணையாளரிடம் கேட்டுக் கொண்டிருந்தது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் இந்த ஆணைப்பத்திரத்தின் பிரகாரம், ஜெனிவாவை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணையை ஸ்தாபித்தார்.

## 2. கால எல்லை

புலன் விசாரணை மேற்கோள்ளப்படும் காலப் பிரிவு, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளடக்கியிருந்த காலப் பிரிவாகும். அதாவது, 2002 பெப்ரவரி 21 ஆந் திகதி தொடக்கம் 2011 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலான காலப் பிரிவாகும். 2011 நவம்பர் 15 ஆந் திகதி கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தது. மேலும், இந்த கால எல்லைக்கு வெளியில் இருந்து வந்தாலும் கூட, நிகழ்வுகள் குறித்த சரியான ஒரு புரிந்துணர்வை வழங்கக் கூடிய அல்லது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்டவையாக இருந்து வரக் கூடிய பல்வேறு பின்புலம் சார்ந்த தகவல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தகவல்கள் என்பவற்றையும் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு கவனத்தில் எடுக்கும்.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

### 3. சட்ட ரீதியான சட்டகம்

இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவின் ஆணைப்பத்திரம்,அது மோதலின் இரு தரப்புக்களினாலும் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் பாரதூரமான அத்துமீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறது. இந்த புலன் விசாரணையை நெறிப்படுத்தும் சட்ட ரீதியான சட்டகம் சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்களின் கீழ் இலங்கை ஏற்றுக் கொண்டிருக்கும் அனைத்துக் கடப்பாடுகள் மற்றும் வழக்காறு சார்ந்த சர்வதேச சட்டத்தின் கீழ் பிரயோகிக்கத்தக்க கடப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இருந்து வரும். அரசு சாராத ஒரு செயற்பாட்டாளர் மனித உரிமைகள் ஒப்பந்தங்களில் முறைசார்ந்த ஒரு தரப்பினராகஇருந்து வர முடியா விட்டாலும் கூட, ஓர் அரசின் நிலப்பரப்பில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் உண்மையான கட்டுப்பாட்டை கொண்டிருக்கும் அரசு சாரா குழுக்கள், அப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் நபர்களின் குறிப்பிட்ட சில மனித உரிமைகள் தொடர்பான கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற விடயம் இப்போது அதிகரித்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த புலன் விசாரணைகளினால் உள்ளடக்கப்பட்ட காலப் பிரிவின் போது உள்நாட்டு ஆயுத மோதலொன்று இடம்பெற்று வந்தது. குறிப்பாக சர்வதேசம் சாராத ஆயுத மோதல்கள் தொடர்பான ஜெனிவா சமவாயத்தின் ஏற்பாடுகளையும் உள்ளடக்கிய சர்வதேச மனிதநேயச் சட்டத்தை பிரயோகிக்க வேண்டிய தேவை இருந்து வந்தது.அரசாங்கம் மற்றும் அரசு சாரா ஆயுதக் குழுக்கள் என்பவற்றின் மோதல் தொடர்பான நடத்தையை அளவிடுவதற்கு இவற்றை பிரயோகிக்க வேண்டியிருந்தது. அந்த வகையில், பிரயோகிக்கப்பட்ட சட்ட ரீதியான சட்டகம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பிரயோகிக்கப்பட்ட அதே சட்டகமாகவே இருந்து வந்தது. மேலும், இந்த புலன் விசாரணையின் ஆணைப்பத்திரத்தின் பிரகாரம், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு புலன் விசாரணைக்குட்படுத்தப்படும் சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பாக குற்றச் செயல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளனவா என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கு சர்வதேச குற்றவியல் சட்டத்தை பிரயோகிக்க வேண்டியிருந்தது.

### 4. நிபுணர்கள்

ஆணையாளர் 2014 ஜுன் மாதத்தில் மூன்று தலை சிறந்த நிபுணர்களை நியமனம் செய்தார். முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி **திரு. மார்ட்டி அட்டிசாரி**, நியூசிலாந்தின் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி **திருமதி சில்வியா காட்ரைட்** மற்றும் பாகிஸ்தானின் முன்னாள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான **திருமதி அஸ்மா ஜெஹாங்கிர்** ஆகியோரே இந்த நிபுணர்கள் ஆவார்கள். இந்த புலன் விசாரணைக்கு ஆதரவும், ஆலோசனையும் வழங்கும் ஒரு வகி பாத்திரத்தை வகிப்பதற்கும், புலன் விசாரணை முழுவதும் சுயாதீனமான விதத்தில் விடயங்களை சரிபார்த்துக் கொள்வதற்கும் இந்த நிபுணர் குழு நியமனம் செய்யப்பட்டிருந்தது.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT
UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

பேரவையின் தீர்மானத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான மரண தண்டனைகள், ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் நபர்கள்,தன்னிச்சையான தடுத்து வைப்புக்கள், பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சித்திரவதை என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் திட்டவட்டமான விசேட நடைமுறைகள் தொடர்பான ஆணைப்பத்திரதாரர்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளும்.

## 5. பணி முறைமைகள்

இரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் அத்துமீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பன தொடர்பான உண்மைகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் நிர்ணயித்துக் கொள்ளும் பொருட்டு, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றின் அறிக்கைகளையும் உள்ளடக்கிய விதத்தில் தற்போது கிடைக்கும் ஆவணங்கள் மற்றும் தகவல்கள் என்பன தொடர்பான ஒரு மேசை மீளாய்வினை மேற்கொள்ளும். மேலும், அது பாதிக்கப்பட்டவர்களின் சான்றுகள், தப்பிப் பிழைத்தவர்கள் கூறும் விபரங்கள் என்பவற்றையும், சாட்சிகள் மற்றும் குற்றச் செயல்களை நிகழ்த்தியதாக கூறப்படும் நபர்கள் ஆகியோரின் சான்றுகளையும் சேகரித்து, அவற்றை ஆவணப்படுத்தும். அதே போல செய்மதிப் படங்கள், அதிகாரபூர்வமான வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள், உத்தியோகபூர்வ ஆவணங்கள் போன்ற சம்பந்தப்பட்ட ஏனைய மூலாதாரங்களிலிருந்தும் தகவல்களை பெற்றுக் கொள்ளும். சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதில் நிருபணம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தர நியமத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு, அது விடயங்கள் மற்றும் விவரங்கள் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கும்.

பேரவையின் தீர்மானத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறு, அது தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முயற்சிக்கும். இலங்கைக்குச் செல்லுமாறும்,அரசாங்க அதிகாரிகளையும், ஏனையவர்களையும் சந்திக்குமாறும், அதே போல சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஆணையாளர் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் தொடர்ந்தும் கேட்டுக் கொள்வார்.

விசேட முகவரகங்கள், அக்கறை கொண்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் கல்விமான்கள், அரசு சாரா அமைப்புக்கள், சன சமூக அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களையும் உள்ளடக்கிய விதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்ச்சியான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை அபிவிருத்தி செய்து கொள்ளவதற்கு இலங்கை தொடர்பான புலன் விசாரணை ஐ நா முயற்சிக்கும்.

எவையேனும் அரச அமைப்புக்கள், தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவிடம் எழுத்து மூலமான தகவல்களை வழங்க முடியும். இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கான சமர்ப்பணங்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்: oisl_submissions@ohchr.org

இப்புலன் விசாரணைக் குழு அதன் பணியை முன்னெடுக்கும் பொழுது, அனைத்துச் சந்தா்ப்பங்களிலும் சுயாதீனம், பக்கச்சாா்பற்ற தன்மை, ஆய்ந்தோய்ந்து பாா்த்துசெயற்படுதல், வெளிப்படைத் தன்மை, நாணயம் மற்றும் "தீங்கிழைக்காமை" போன்ற கோட்பாடுகளினால் வழிநடத்தப்படும்.

**6. சாட்சிகளுக்கான பாதுகாப்பு**

சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்குதல் தொடா்பான கரிசனைகளைக் கவனத்தில் எடுப்பதற்கென இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழு பொருத்தமான படிமுறைகளை மேற்கொள்வதுடன், அதன் பணியின் அனைத்துக் கட்டங்களின் போதும் அத்தகைய நபர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், பணி தொடா்பான நடைமுறைகள் மற்றும் முறைமைகள் என்பவற்றை பின்பற்றும்.

மேலும், இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழுவுடன் தொடா்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் பாதிக்கப்பட்ட நபர்கள், சாட்சிகள் மற்றும் ஏனையவர்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய கடப்பாட்டினை இலங்கை அரசாங்கமும் கொண்டுள்ளது. அத்தகைய தொடா்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் காரணமாக எந்தவொரு நபரும் துன்புறுத்தல், மிரட்டல், பயமுறுத்தல்,மோசமாக நடத்தப்படுதல் அல்லது பழிவாங்குதல் என்பவற்றை அனுபவிக்க மாட்டாா் என்பது தொடா்பாக இலங்கை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படும்.

**7. தகவல்களின் இரகசியத் தன்மை**

தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்கென இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழு தேவையான அனைத்து வழிமுறைகளையும், முன்னெச்சரிக்கைகளையும் மேற்கொள்ளும். அதன் பகிரங்க அறிக்கைகளில் பொருத்தமான விதத்தில் தனிநபர்களின் பெயர்களை வெளிப்படுத்தாதிருப்பதும் இதில் அடங்கும். இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழு அதன் பணியின் முடிவின் போது, அதன் இரகசியமான தகவல்கள் அனைத்தையும் கண்டிப்பான விதத்தில் இரகசியமாக வைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடா்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் தர நியம நடைமுறைகளின் பிரகாரம் அவற்றை பாதுகாத்து வைக்கும்.

**8. நிரூபணம் தொடா்பான தர நியமம்**

உண்மையைக் கண்டறியும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஏனைய அமைப்புக்கள் பின்பற்றி வரும் நடைமுறையுடன் இணைந்த விதத்தில், இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழு அதன் முடிவுகளை "நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்து வரும்" நிரூபண தர நியமத்தின் அடிப்படையில் மேற்கொள்ளும். ஒரு சம்பவம் அல்லது அத்துமீறல்களின் மாதிரி அல்லது இடம்பெற்றிருக்கும் குற்றச் செயல்கள் தொடா்பாக இலங்கை தொடா்பான புலன் விசாரணைக் குழு நம்பகமான தகவல் தொகுப்புக்களைப் பெற்றுக் கொண்டிருந்தால், அவை ஏனைய தகவல்களுடன் பொருந்திச் செல்வதாக இருந்து வருதல் வேண்டும். இந்த நிரூபணம் தொடா்பான தர நியமம் கணிசமான அளவில் உயர்வாக இருந்து வரும், சர்வதேச மனிதநேய அல்லது மனித உரிமைகள் சட்டம் மற்றும்சர்வதேச குற்றச் செயல்கள் என்பன தொடா்பான அத்துமீறல்கள் குறித்து நீதித் துறை புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அது வேண்டுகோள் விடுக்கும்.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

அத்துமீறல்களில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் தனிநபர்களை அடையாளம் காணும் தகவல்களை மதிப்பீடு செய்வது தொடர்பாக, இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு சம்பந்தப்பட்ட தர நியமங்களுக்கு இணங்கியொழுகும். அந்த தர நியமங்கள் ஒரு குற்றச் செயலை நிகழ்த்தியதில் நபரொருவர் சம்பந்தப்பட்டிருப்பதாக நியாயமான விதத்தில் சந்தேகிப்பதற்கு காரணம் இருக்கின்றது என்பதனைக் காட்டும் ஏனைய சந்தர்ப்ப சூழ்நிலைகளுடன் ஒத்துப் போகக் கூடிய நம்பகமான தகவல்கள் தேவைப்படுகின்றன. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு குற்றச் செயல் தொடர்பான குற்றம் குறித்து இறுதித் தீர்ப்புக்களை முன்வைக்க மாட்டாது. அதற்கு பதிலாக, எதிர்காலத்தில் குற்றவியல் புலன் விசாரணைகளுக்கு வழிகோலக் கூடிய விதத்தில் சாத்தியமான சந்தேக நபர்களை இனங்காண்பது தொடர்பான மதிப்பீடுகளை அது மேற்கொள்ளும்.

## 9. இலங்கை அரசாங்கத்துடனான ஒத்துழைப்பு

பேரவை அதன் தீர்மானத்தில், தீர்மானத்தை அமுல் செய்யும் விடயத்தில் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தது. அத்தகைய ஒத்துழைப்பு நாடு முழுவதிலும் நடமாட்டச் சுதந்திரத்தை வழங்குவதுடன், அனைத்து இடங்களுக்கும், நிறுவனங்களுக்கும் தங்குதடையற்ற விதத்தில் செல்வதற்கான வாய்ப்பினையும் வழங்கும். தேசிய, உள்ளூர் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள்,சமூகத் தலைவர்கள், அரசு சாரா அமைப்புக்கள், ஏனைய நிறுவனங்கள் ஆகிய தரப்பினரை சந்திப்பதற்கும், அவர்களுடன் நேர்காணல்களை நடத்துவதற்குமான சுதந்திரம்,இந்த புலன் விசாரணையின் ஆணைப்பத்திரத்தினை பூர்த்தி செய்வதற்கு அவசியமானது எனக் கருதப்படும் எவரேனும் நபரொருவரின் சாட்சியத்தைப் பெற்றுக் கொள்வதற்கென அவரைச் சந்திப்பதற்கும், அவர்களுடன் நேர்காணல் நடத்துவதற்கான சுதந்திரத்தையும் அது கொண்டிருக்கும். ஆவணச் சான்றுகள் மற்றும் பௌதீக சான்றுகள் என்பவற்றின் அனைத்து தகவல்களையும் சுதந்திரமாக அணுகக் கூடிய வாய்ப்பு. “இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழு வேறு அரசாங்கங்களின் ஆள்புலப் பரப்புக்களில் பாதிக்கப்பட்ட நபர்களை, நேர்காணல் நடத்துவதற்கும், சாட்சியங்கள், மூலாதாரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் என்பவற்றை சேகரிப்பதற்கும் இதே நிபந்தனைகளின் கீழ் புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அந்த அரசாங்கங்களிடமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

## 10. சலுகைகள், விலக்குரிமைகள் மற்றும் வசதிகள்

இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவைச் சேர்ந்த நிபுணர்கள் ஐக்கிய நாடுகள் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் தொடர்பான 1948 ஆம் ஆண்டு சமவாயத்தின் உறுப்புரை IV இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அனைத்து சிறப்புரிமைகளையும், விலக்குரிமைகளையும் அனுபவிப்பார்கள். மேலும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவைச் சேர்ந்த மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஊழியர்கள் புலன் விசாரணை நடத்துவதில் சமவாயத்தின் உறுப்புரை

V மற்றும் VII என்பவற்றின் கீழ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் என்பவற்றை அனுபவிப்பார்கள்.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

அனைத்து அரசாங்கங்களுக்கும் இந்தக் கடப்பாடு தொடர்பாக நினைவூட்டப்படுவதுடன், புலன் விசாரணையை சுதந்திரமாக நடத்துவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுவதை அவை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT
UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

HAUT-COMMISSARIAT AUX DROITS DE L'HOMME • OFFICE OF THE HIGH COMMISSIONER FOR HUMAN RIGHTS
PALAIS DES NATIONS • 1211 GENEVA 10, SWITZERLAND
www.ohchr.org • TEL: +41 22 917 9000 • FAX: +41 22 917 9008 • E-MAIL: registry@ohchr.org

# இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணை

**மனித உரிமைகள் பேரவைA/HRC/25/1 தீர்மானத்தின் பிரகாரம் ஆணைப்பத்திரத்தை பெற்றுள்ளது.**

**சமர்ப்பணங்களுக்கான அழைப்பு**
**ஆகஸ்ட் 1, 2014**

## பின்னணி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உலகெங்கிலும் மனித உரிமைகளை பலப்படுத்தி, மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்துவரும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்குள் இருக்கும் அதி உயர் மட்ட அரசுகளுக்கு இடையிலான ஓர் அமைப்பு ஆகும்.

மனித உரிமைகள் பேரவை 2014 மார்ச் மாத்தில் A/HRC/25/1 தீர்மானத்தை நிறைவேற்றியதுடன், அதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் "கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் உள்ளடக்கப்பட்டிருந்த காலப்பிரிவின் போது, இலங்கையில் இரு தரப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் பாரதூரமான அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட, குற்றச் செயல்கள் என்பன தொடர்பாக விரிவான புலன் விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறும்,தண்டனை விலக்குரிமையை தவிர்ப்பதற்கும், பொறுப்புக் கூறும் நிலையை உறுதிப்படுத்துவதற்கும் இழைக்கப்பட்டதாக கூறப்படும் அத்தகைய அத்துமீறல்கள் தொடர்பான உண்மைகள் மற்றும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் என்பவற்றை எடுத்துக்காட்டுமாறும்" வேண்டுகோள் விடுத்திருந்தது. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்கான ஆணைப்பத்திரம் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றையும்,சர்வதேச மனிதநேயச் சட்டம் தொடர்பான மீறல்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது.

இந்த தீர்மானத்தின் பிரகாரம் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் **இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணையை (OISL)** ஸ்தாபித்தார். தீர்மானம்A/HRC/25/1 இன் பிரகாரம் ஆணையாளரினால் நியமனம் செய்யப்பட்டிருக்கும் சுயாதீனமான விசேட நிபுணர்களின் குழு ஒன்று இந்தப் புலன் விசாரணைக்கு தொடர்ந்தும் ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்கி வரும். அக்குழு பின்வருவோரைக் கொண்டிருக்கும்: திரு. மத்தி அத்திசாரி, திருமதிசில்வியா காட்றைட் மற்றும் திருமதி அஸ்மா ஜெஹாங்கீர்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் இந்தப் புலன் விசாரணையின் பெறுபேறுகள் குறித்த விரிவான எழுத்து மூலமான அறிக்கையொன்றை A/HRC/25/1தீர்மானத்தின் பிரகாரம் 2015 மார்ச் மாதத்தில் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பார்.

### இலங்கை தொடர்பான புலன் விசாரணைக் குழுவுக்கான சமர்ப்பணங்கள்

இலங்கையில் 2002 பெப்ரவரி 21 ஆம் திகதி தொடக்கம் 2011 நவம்பர் 15 ஆம் திகதி வரையில் ஆயுதமோதலின் எந்தவொரு தரப்பினராலும் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் பாரதூரமான அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பான தகவல்களை அல்லது ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தனிநபர்கள், அமைப்புக்கள் மற்றும் அரசாங்கங்களாகிய தரப்புக்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

NATIONS UNIES
DROITS DE L'HOMME
HAUT-COMMISSARIAT

UNITED NATIONS
HUMAN RIGHTS
OFFICE OF THE HIGH COMMISSIONER

இச்சமர்ப்பணங்கள் **அக்டோபர் 30, 2014** ஜெனிவா நேரம் நடு இரவுக்குள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இது புலன் விசாரணைக்குழு அதன் அறிக்கையை தயாரிப்பதற்கு முன்னர் சேகரிக்கப்பட்ட அனைத்து தகவல்களையும் பகுப்பாய்வு செய்வதற்கு கால அவகாசத்தை வழங்குவதற்காகும். இந்த அறிக்கையின் வரைவு, மார்ச் மாதத்தில் இது தொடர்பான அறிக்கை மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள காலப்பிரிவுக்காகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் .

**சமர்ப்பணங்களுக்கான நடைமுறைகள்**

சமர்ப்பணங்கள் எழுத்து வடிவில் அனுப்பப்படுதல் வேண்டும் மேலும்,அவை அவற்றை தயாரித்தவரை (தயாரித்தவர்களை) தொடர்பு கொள்வதற்கான விபரங்களையும் உள்ளடக்குதல் வேண்டும். சமர்ப்பணங்களை முன்வைக்கும் அமைப்புக்கள் / தனிநபர்கள் இந்தச் சமர்ப்பணங்கள் - அல்லது அவற்றின் ஒரு பாகம் - இரகசியமானவையாக கருதப்படவேண்டுமா என்ற விடயத்தை திட்டவட்டமாக குறிப்பிடுதல் வேண்டும். சமர்ப்பணம் கிடைத்த பின்னர், அவற்றை தயாரித்திருப்பவர்களின் தனிப்பட்ட விபரங்கள் அல்லது அந்த சமர்ப்பணங்களில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வேறு எவரேனும் நபர்களின் தனிப்பட்ட விபரங்கள் தொடர்பான அந்தரங்கத் தன்மையை பாதுகாப்பதற்கு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் தேவையான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளும்.

சமர்ப்பணங்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இருந்துவரமுடியும். அவை பத்து பக்கங்களுக்கு மேற்பட்டவையாக இருந்துவரக்கூடாது. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுக்கு இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின், அது சமர்ப்பணங்களை தயாரித்தவரை (தயாரித்த்வர்களை) தொடர்பு கொள்ளும்.

சமர்ப்பணங்களுடன் சம்பந்தப்பட்ட எவையேனும் வீடியோ, ஓடியோ அல்லது புகைப்பட ஆதாரங்கள் என்பனமின்னஞ்சலுக்கு ஊடாக அனுப்பப்படக்கூடாது. அவற்றை மாற்றுவழிகளுக்கு ஊடாக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கென இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளவும்.

**சமர்ப்பணங்களுக்கான மின்னஞ்சல் மற்றும் தபால் முகவரிகள்**

மின்னஞ்சல் : OISL_submissions@occhr.org

தபால் மூலம் : OISL
UNOG-OHCHR
8-14 Rue de la Paix
CH-1211 Geneva 10
Switzerland

மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் குறிப்பு நியதிகள் மற்றும் அது தொடர்பான ஏனைய தகவல்கள் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்:

http://www.ohchr.org/EN/ HRBodies /HRC/ pages /OISL .aspx

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT

UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

டிசம்பர் 10,2014

மாண்புமிகு,

உங்களுடன் 2015 செப்டம்பர் 22 ஆம் திகதி இடம்பெற்ற எனது சந்திப்பு தொடர்பாக, மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 25/1 இன் ஆணைப்பத்திரத்துடன் கூடிய மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான புலன் விசாரணை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக இதனை எழுதுகின்றேன்.

மனித உரிமைகள் பேரவையின் இந்த ஆணைப்பத்திரம் தொடர்பாக இங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்காத ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பதை நான் கவனத்தில் கொளகின்றேன். எவ்வாறிருப்பினும், இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவின் ஆணைப்பத்திரம் உள்ளடக்கும் காலப் பிரிவின் போது இடம்பெற்றதாக கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் என்பன தொடர்பான விடயங்களை பகுப்பாய்வு செய்யும் பொழுது கவனத்தில் எடுக்கப்படக்கூடிய சம்பந்தப்பட்ட தகவல்கள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பவற்றை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு நான் ஒரு வாய்ப்பை வழங்க விரும்புகின்றேன்.

சர்வதேச தர நியமங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்கிய விதத்தில் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விருப்புவெறுப்பற்ற விவரணமொன்றை தொகுத்துக் கொள்ளும் பொருட்டு, பெற்றுக்கொள்ளும் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எனது அலுவலகம் விரும்புகின்றது. பாதுகாப்பு அமைச்சின் மனிதநேயச் செயற்பாடு தொடர்பான விடயம் சார்ந்த பகுப்பாய்வு, யூலை 2006 –மே 2009 மற்றும் மனித உரிமைகள் கமிட்டிக்கான அரசாங்கத்தின் ஐந்தாவது பருவகால அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பிரச்சினைகளின் பட்டியலுக்கான இலங்கையின் பதில்கள் என்பவற்றையும், அதேபோல கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த விடயங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருக்கும், பகிரங்கமாக கிடைக்கக் கூடிய தகவல்களை நாங்கள் மீளாய்வு செய்துள்ளோம். இந்த வேண்டுகோளை முன்வைப்பதன் மூலம் சம்பந்தப்பட்ட மேலும் தகவல்களை அல்லது ஆவணங்களை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கான எனது அழைப்பினை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

தேவைப்படும் தகவல்கள் தொடர்பான ஒரு பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. உங்கள் அரசாங்கத்தின் சாதகமான எதிர்வினையையும், இது சம்பந்தப்பட்ட தகவல்களையும்,அதேபோல சம்பந்தப்பட்ட ஏனைய தகவல்களையும் 2015 ஜனவரி 10 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களே, என்னுடைய உயர் மதிப்பு மிக்க உத்தரவாதங்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயிட் ராத் அல்ஹுசைன்
மனித உரிமைகள் ஆணையாளர்

மாண்புமிகு போராசியர் ஜீ. எல். பீரிஸ் அவர்கள்
வெளிவிவகார அமைச்சர்
குடியரசுக் கட்டடம், கொழும்பு - 1
இலங்கை.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT
UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

***இணைப்பு - இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் புலன் விசாரணை (OISL) இலங்கை அரசாங்கத்திடம் இருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள்***
***டிசம்பர் 2014***

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் (எல்ரீரீஈ இயக்கம்)**

1. இந்த முடிவுகள் எந்தப் புலன் விசாரணைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டனவோ தயவுசெய்து அந்தப் புலன் விசாரணைகள் தொடர்பான தகவல்களையும்,*Humanitarian Operation Factual Analysis July 2006 –May 2009* என்ற அறிக்கையின் பின்னிணைப்புக்கள் A –E இல் எல்ரீரீஈ இயக்கம் செய்ததாக கூறப்படும் கொலைகள் மற்றும் ஏனைய அத்துமீறல்கள் ஒவ்வொன்றும் தொடர்பான தகவல்களையும் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். இச்சம்பவங்கள் இலங்கை தொடர்பான புலன் விசாணைக் குழுவின் ஆணைப்பத்திர காலப் பிரிவுடன் சம்பந்தப்பட்டவையாகும் (கீழே உள்ளவாறு):

பின்னிணைப்பு A: சம்பவங்கள் 59-82; 114-136;147-148;157-160 பின்னிணைப்பு B: சம்பவங்கள் 104-137; பின்னிணைப்பு C: சம்பவங்கள் 102-109; பின்னிணைப்பு D : சம்பவங்கள் 20-21;பின்னிணைப்பு E :சம்பவங்கள் 34-49

2. எல்ரீரீஈ இயகத்தினால் சிறுவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பான மற்றும் அந்த இயக்கத்திற்குள் சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பொறுப்பாக இருந்துவந்த கட்டமைப்புக்கள் தொடர்பாக தகவல்கள் எவையேனும் இருப்பின் அவற்றையும், எல்ரீரீஈ இயக்கத்தைச் சேர்ந்த சிறுவர்களை பிரித்தெடுத்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கும் அரசாங்கத்தின் செயன்முறை தொடர்பான தகவல்களையும் தயவுசெய்து வழங்கவும். *'சிறுவர்கள் போராளிகளாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை தொடர்பான முதற்தோற்றச் சான்றுகள் இருந்து வருமிடத்து அவற்றை புலன் விசாரணை செய்து, குற்றம் இழைத்தவர்கள் சட்டத்தின் முன் எடுத்துவரப்படுவதனை உறுதிப்படுத்துமாறு'* கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்திருக்கும் பரிந்துரையின் பிரகாரமும் (9.79), சிறுவர் உரிமை சமவாயத்தின் மேலதிக ஏற்பாட்டினை அரச தரப்பு அத்தாட்சிப்படுத்தியிருக்கும் நிலை மற்றும் ஆயுத மோதலுக்கென சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் அதில் அவர்களை பயன்படுத்துதல், 2006 ஜனவரி 1ஆம் திகதி 16 ஆம் இலக்க தண்டனை சட்டக்கோவை (திருத்தத்தின் பிரகாரம்), ஒரு குற்றச்செயலாக ஆக்கப்பட்டிருக்கும் பின்னணியிலும், எல்ரீரீஈ இயக்கத்தினாலும், அதேபோல துணைப்படைக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிறுவர் ஆட்சேர்ப்பு சம்பவங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கும் குற்றவியல் புலன் விசாரணைகள் தொடர்பான தகவல்களை தயவுசெய்து வழங்கவும். மேலும் 2002 ஆம் ஆண்டிற்கும் 2009 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவின் போது வயது வந்தவர்கள் இராணுவ சேவைக்குக் கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை தொடர்பான எவையேனும் தகவல்கள் இருந்தால் தயவுசெய்து அவற்றையும் வழங்கவும்.

3. *Humanitarian Operation Factual Analysis July 2006 – May 2009* அறிக்கையின் பந்திகள் 191 மற்றும் 195 என்பன தொடர்பாக, எல்ரீரீஈ இயக்கம் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வந்த பிரதேசங்களில் இருந்த பொதுமக்கள் வெளியேறிச் செல்ல முயன்ற பொழுது அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டமை மற்றும் சிவிலியன்களைக் கேடயங்களாக அல்லது பணயக்கைதிகளாக பயன்படுத்தியமை என்பன தொடர்பாக குற்றச்சாட்டுக்கள்

குறித்த புலனாய்வு மதிப்பீடுகள், ஆளில்லா விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட படங்கள், தொடர்பாடல்களை இடைமறித்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் வேறு ஏதேனும் தகவல்கள் இருப்பின் தயவுசெய்து அவற்றையும் வழங்கவும்.

4. எல்ரீரீஈ இயக்கத்தின் அரசியல் மற்றும் இராணுவத் துறைகளின் கட்டமைப்பு, அவர்களின் இராணுவ நடவடிக்கை திட்டமிடல் செயன்முறை, கட்டளை செயல்முறை மற்றும் கனரக ஆயுதங்களின் பாவனை மற்றும் தற்கொலைத்தாக்குதல் உத்தியின் பாவனை என்பன தொடர்பாக பிரயோகிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என்பவற்றை எடுத்து விளக்கக்கூடிய தங்கள் அரசாங்கத்திடம் இருக்கக்கூடிய எவையேனும் மேலதிக ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் பெற்றுத்தரவும்.

5. குறிப்பாக 2009 ஜனவரி மாதத்திற்கும் மே மாதத்திற்கும் இடைப்பட்டக் காலப்பிரிவின் போது பாதுகாக்கப்பட்ட அமைவிடங்களில் அல்லது அவற்றுக்கருகில் எல்ரீரீஈஇயக்கத்தின் ஆயுதங்கள் வைத்திருக்கப்பட்டிருந்தமை அல்லது இராணுவ நிலைகள் இருந்து வந்தமையை எடுத்துக்காட்டும் ஆளில்லா விமானங்களிலிருந்து எடுத்த புகைப்படங்களையும் உள்ளடக்கிய விதத்தில், கிடைக்கும் தகவல்கள் எவையேனும் இருப்பின் அவற்றையும் தயவுசெய்து வழங்கவும்.

*பாதுகாப்புப் படைகள் /போர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட விதம்*

6. *Humanitarian Operation Factual Analysis July 2006 – May 2009* அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருக்கும் தகவல்களுக்கு மேலதிகமாக, இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பிரிவின் போது இராணுவ நடவடிக்கைகள் , ஆயுதங்களின் பயன்பாடு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு என்பன தொடர்பாக போர் நடவடிக்கைகளை திட்டமிடுதல், கொள்கை விதிமுறைகள் மற்றும் பணிப்புரைகள் என்பன தொடர்பாகவும்,நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும் மதிப்பீடுகள் தொடர்பான தகவல்களையும், ஆளில்லா விமானங்களிலிருந்து எடுக்கப்பட்ட படங்களையும் உள்ளடக்கிய ஏனைய ஆவணங்களையும் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட அறிவித்தல்கள் தொடர்பாக, அறிவித்தல்களின் இயல்பு, திகதிகள் மற்றும் அவை வழங்கப்பட்ட சரியான இடங்கள் என்பன குறித்த ஆவணங்களின் பிரதிகளையும் தயவுசெய்து பெற்றுத்தரவும். ‘‘வானொலி மற்றும் ஒலிபெருக்கிகளுக்கூடாக வழங்கப்பட்ட அறிவித்தல்கள், விமானங்களில் இருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களின் பிரதிகள் சர்வதேச முகவரகங்களுக்கு ஊடாக முன்வைக்கப்பட்ட வேண்கோள்கள்’’. மனித உரிமைகள் கமிட்டிக்கான இலங்கையின் ஐந்தாவது பருவகால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ‘‘சிவிலியன்களுக்கான பாதுகாப்பான அமைவிடங்கள்’’ தொடர்பான அறிவித்தல்கள்.

7. பாதுகாப்பு அமைச்சு மட்டத்திலும்,தேசிய பாதுகாப்புச்சபை மட்டத்திலும் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை என்பவற்றின் 2002- 2011 காலப் பிரிவின் போது நிறுவன, கட்டளை, கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் தொடர்பான தகவல்களை தயவுசெய்து வழங்கவும். அத்தகவல்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

- சுயாதீனமான பட்டாளங்களையும் உள்ளடக்கிய விதத்தில் 22 மற்றும் 23 ஆவது படைப் பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் இருந்துவந்த அலகுகள்.

- 53,55,56,57,58 மற்றும் 59 படைப்பிரிவுகள்,அவற்றின் கீழ் இருந்துவந்த அலகுகள் - சுயாதீனமான பட்டாளங்களையும் உள்ளடக்கிய விதத்தில்.
- சுயாதீனமான பட்டாளங்களையும் உள்ளடக்கிய விதத்தில் அதிரடிப்படை 1,2,3 மற்றும் 4மற்றும் அதன் கீழ் இருந்து வந்த அலகுகள்
- கொமாண்டோ படையணி
- விசேட அதிரடிப்படை படையணி
- நீண்ட தூர வேவு பார்க்கும் ரோந்துப் பிரிவுகள்

8. குற்றவியல் புலனாய்வுத்திணைக்களம், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படை என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் பொலிஸ்படைகளின் கட்டளைச்சங்கிலி கட்டமைப்பு, பணிப்புரைகள் மற்றும் செயற்பாட்டு வழிகாட்டுதல்கள் மற்றும் ஆணைப்பத்திரங்கள் என்பன தொடர்பான தகவல்களை தயவுசெய்து வழங்கவும் அதேபோல மோதல் காலப் பிரிவின் போது பொலிசிற்கும் இராணுவத்திற்கும் இடையில் நிலவி வந்த தொடர்புகள் தொடர்பான தகவல்களையும் வழங்கவும்.

*தடுப்புக்காவல்*

9. அவசரகால ஒழுங்குவிதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், அதேபோல ஏனைய சட்டவாக்கங்களின் கீழ் தடுப்புக் காவல் மற்றும் விசாரணை நடைமுறைகள் தொடர்பான தகவல்கள் என்பவற்றை தயவுசெய்து வழங்கவும்.

மோதலின் இறுதி வாரங்கள் தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையில் வட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட (ஆட்களை சோதித்து) வடிகட்டும் செயன்முறைகள், பிரித்து வேறுபடுத்துதல், தடுப்புக் காவல் மற்றும் விசாரணை செயன்முறைகள் தொடர்பான தகவல்களை தயவு செய்து வழங்கவும். மேலும்,தடுப்புக் காவல் கைதிகள் எங்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள் என்பன தொடர்பான தகவல்களையும் வழங்கவும். சித்திரவதை குற்றச்சாட்டுகள் தொடர்பான எவையேனும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின்,அவை தொடர்பான தகவல்களையும், அந்த புலன்விசாரணைகளின் பெறுபேறுகள் தொடர்பான தகவல்களையும் தயவுசெய்து வழங்கவும்.

*புலன் விசாரணைகள்*

10. “கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஷெல் தாக்குதல் தொடர்பான சம்பவங்கள் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்படவில்லை எல்ரீரீஈ இயக்கத்தின் சட்டவிரோதமான நடவடிக்கைகள் காரணமாக பொதுமக்களின் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்க முடியும்….” என்ற முடிவுக்கு வருவதற்கு இராணுவ விசாரணை மன்றத்தினால் பயன்படுத்தப்பட்ட சான்றுகள் தொடர்பான மேலதிக தகவல்களை தயவுசெய்து வழங்கவும். 2014 அக்டோபர் மாதத்தில் மனித உரிமைகள் கமிட்டிக்கு இலங்கை சமர்ப்பித்த பிரச்சினைகளின் பட்டியலுக்கு இலங்கையின் பதில்கள் என்ற ஆவணத்தில் இது குறிப்பிடப்பட்டிருந்தது.

NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT
UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

11. இலங்கை தொடர்பான புலன் விசாரணைக்குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் காலப்பிரிவின்போது, நீதிமன்ற விசாரணை நடைமுறைக்கு புறம்பான மரணதண்டனைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள், வல்லுறவு , சித்திரவதை மற்றும் ஏனைய அத்துமீறல்கள் என்பன தொடர்பாகமுன்னெடுக்கப்பட்ட எவையேனும் புலன் விசாரணைகள் தொடர்பான தகவல்களையும், அவற்றின் பெறுபேறுகள் தொடர்பான தகவல்களையும் தயவுசெய்து வழங்கவும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட (பரிந்துரைகள் 9.120 9.9, 9.37a மற்றும் 9.41) பரிந்துரைகளின் பின்னணியையும் உள்ளடக்கிய விதத்தில்.

12. மேலே சம்பந்தப்பட்ட பந்தி 11 தொடர்பாக, இலங்கையில் ஆகஸ்ட் 1, 2005 தொடக்கம் இடம்பெற்றதாக கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலன் விசாரணை செய்து, விசாரிப்பதற்கெனநியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் (உதலாகமஆணைக்குழு அறிக்கை) இறுதி அறிக்கை தொடர்பான விபரங்களையும்,அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களையும் தயவுசெய்து வழங்கவும்.

13. மேலே பந்தி 11 தொடர்பாக மனித உரிமைகள் கமிட்டியின் ஐந்தாவது பருவகால அறிக்கை குறித்து இலங்கை முன்வைத்த பிரச்சினைகளின் பட்டியலுக்கான பதிலில் பந்தி 46 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படை ஆளணியினர் சம்பந்தப்பட்டிருக்கும் பெண்களுக்கு எதிரான 39 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான தகவல்களையும் தயவுசெய்து வழங்கவும்.

14. பலவந்தமாக காணாமல் ஆக்கச் செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போன நபர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பான தகவல்களை தயவு செய்து வழங்கவும். அதன் முறைமையியல், எவையேனும் பூர்வாங்க முடிவுகள்,புலன் விசாணைக்கென சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள், சாட்சிகளை பாதுகாப்பதற்கான வழிமுறைகள், வழங்கப்பட்ட எவையேனும் நிவாரண அல்லது இழப்பீட்டு வழிமுறைகளின் இயல்பு என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் இத்தகவல்களை வழங்கவும். மேலும், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளவாறு,பலவந்தமாக காணாமல் ஆக்கச்செய்யப்படுவதனை ஒரு குற்றச் செயலாக உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களையும் வழங்கவும்.


National capital
Provincial capital
Town, village
Provincial boundary
Main road
Secondary road
Railroad
Airport
INDIA
Palk Strait
Palk Bay
Gulf of Mannar
Bay of Bengal
Laccadive Sea
INDIAN OCEAN
NORTHERN
NORTH CENTRAL
NORTH WESTERN
CENTRAL
EASTERN
WESTERN
SABARAGAMUWA
UVA
SOUTHERN
Kankesanturai
Point Pedro
Jaffna
Kayts
Elephant Pass
Kilinochchi
Puthukkudiyiruppu
Mullaittivu
Vellankulam
Manjulam
Nedunkeni
Puliyankulam
Pulmoddai
Devipattinam
Rameswaram
Dhanushkodi
Talaimannar
Mannar
Silavatturai
Madhu Road
Vavuniya
Pankulam
Nilaveli
Trincomalee
Kebitigollewa
Medawachchiya
Horuwupotana
Hamillewa
Mutur
Kantalai
Pomparippu
Anuradhapura
Kalpitiya
Maragahewa
Kathiraveli
Puttalam
Kekirawa
Habarane
Galgamuwa
Polonnaruwa
Anamaduwa
Dambula
Valachchenai
Maho
Chenkaladi
Batticaloa
Naula
Ganewatta
Chilaw
Kurunegala
Kuliyapitiya
Maha Oya
Matale
Paddiruppu
Kalmunai
Kehelula
Pannala
Kandy
Mahiyangana
Uhana
Negombo
Kegalla
Amparai
Bibile
Tirrukkovil
Gampaha
Ja-Ela
Nuwara Eliya
Badulla
Colombo
Avissawella
Sri Jayewardenepura Kotte
Pottuvil
Mount Lavinia
Moratuwa
Monaragala
Panadura
Horana
Haputale
Buttala
Ratnapura
Balangoda
Okanda
Kalutara
Pelmadulla
Telulla
Kumana
Beruwala
Matugama
Rakwana
Kataragama
Deniyaya
Embilipitiya
Tissamaharama
Kirinda
Ambalangoda
Udugama
Hambantota
Akuressa
Tangalla
Galle
Matara
Dondra Head
SRI LANKA
The boundaries and names shown and the designations used on this map do not imply official endorsement or acceptance by the United Nations.
Map No. 4172 Rev.3 UNITED NATIONS
March 2008
Department of Field Support
Cartographic Section